v211,31 N62
69.15;1
6724 48

வெளியீடு—8—2—1969]
Issued—8—2—1969]

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, 1968 ஆகஸ்டு 23
Friday, 23rd August 1968

தொகுதி XV எண் 1
Volume XV—No. 1

©
தமிழக அரசு
1969
©
GOVERNMENT OF MADRAS
1969

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
Price, 50 Paise]

PAGES.

*Friday, 23rd August* 1968—cont.

6. Minister's Statement—
Correction to an answer given to a supplementary question ... ... ... ... 41
7. No-Confidence Motion against the Ministry ... 41–42
... ... ... ... ... ... 47–81
8. Papers laid on the Table of the House ... 81

*Saturday, 24th August* 1968.

1. Questions and Answers ... ... ... ... 89–119
2. Adjournment Motion—
Labourers' plight due to closure of Mills in Coimbatore ... ... ... ... ... 119
3. Point of Information—
Holiday for Vinayaka Chathurthi ... ... 119–120
4. Calling Attention—
(i) Closure of 'Vignana Mandirs' ... ... 120–121
(ii) Prohibition for starting evening classes in New College, Madras ... ... 121–123
5. Minister's statement—
Discussion on Hemavathi Project ... ... 123–126
6. Presentation of Report—
Third Report of Committee on Government Assurances ... ... ... ... ... 126
7. No-Confidence Motion against the Ministry—*cont.* ... ... ... ... ... 126–172
8. Announcement—
Business of the House ... ... ... 172
9. Papers laid on the Table of the House ... 173

*Monday, 26th August* 1968.

1. Questions and Answers ... ... ... ... 175–193
2. Adjournment Motion—
Lockout in the Seshasayee Paper Mills ... 193



PAGES

*Monday, 26th August* 1968—cont.

3. Government Motions—
(i) Suspension of Rule 41 (3) ... ... ... 193–194
(ii) Change in the order of business of the House ... ... ... ... ... 260
(iii) Fixation of maximum amount of loan raised by the Electricity Board ... 302–303
(iv) Draft rule amending Schedule to Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952. ... ... ... 303–305
4. Calling Attention—
(i) Plight of retrenched lecturers of Polytechnics ... ... ... ... 194–195
(ii) Reduction of foodgrains quantity to the family card-holders, Ramanathapuram district ... ... ... ... 195–199
(iii) Fire in Kottangadu, Udankudi Panchayat and relief measures ... ... ... 199
5. No-Confidence Motion against the Ministry—*cont.* ... ... ... ... 199–260
6. Government Resolution—
Amendment to Rules under Cotton Transport Act, 1923 ... ... ... ... ... 261–262
7. Government Bills—
(i) Municipal Authorities (Term of Office and Election of Councillors) Amendment Bill, 1968 ... ... ... ... 262–270
(ii) Co-operative Land Mortgage Banks (Amendment) Bill, 1968 (L. A. Bill No. 11 of 1968) ... ... ... ... ... 270–278
(iii) Hackney Carriages (Amendment) Bill, 1968 (L.A. Bill No. 13 of 1968) ... ... 278–281
(iv) Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1968 (L.A. Bill No. 14 of 1968) 281–286
(v) City Municipal Corporation and District Municipalities (Amendment) Bill, 1968 (L.A. Bill No. 15 of 1968) ... ... 286–292
(vi) Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Bill, 1968 (L.A. Bill No. 19 of 1968) ... 293–394
(vii) Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1968 (L.A. Bill No. 20 of 1968) ... ... ... ... 294–302

PAGES

*Monday, 26th August* 1968—cont.

8. Announcement—
   City Municipal Corporation and District Municipalities (Amendment) Bill, 1968 ... 286
9. Papers laid on the Table of the House ... ... 305

*Wednesday, 28th August* 1968.

1. Questions and Answers ... ... ... 311–333
2. Adjournment Motion—
   Lockout in the Lakshmi Mills, Kovilpatti ... 334
3. Government Motion—
   Suspension of Rule 41 (3) ... ... ... 334
4. Calling Attention—
   (i) Declaration of North Arcot and Chingleput Districts as famine areas ... ... 334–336
   (ii) Strike by Lungi Handloom Weavers, Kancheepuram ... ... ... ... 336–337
   (iii) Hardship to agriculturists due to continuous failure of monsoon in Radhapuram sub-taluk ... ... ... ... 337
   (iv) Mysterious fires in towns and rural areas of Tiruchirappalli District ... ... 337–338
5. Personal Explanation—
   Correction in Thiru K. Ramamurthy's speech 338
6. No-Confidence Motion against the Ministry—*cont.* ... ... ... ... ... 339–453
7. Papers laid on the Table of the House .. ... 453–454

*Thursday, 29th August* 1968.

1. Questions and Answers ... ... ... ... 459–518
2. Points of Order—
   (i) Absence of Ministers during question hour 518–519
   (ii) Time for raising Privilege Matters ... 520–521
3. Privilege Matter—
   Premature publication of No-Confidence Motion against the Ministry ... ... ... 519–520



PAGES

*Thursday, 29th August* 1968—cont.

4. Non-official Business—
   (i) Bill—Madras State Marriages Registration Bill, 1968 ... ... ... ... ... 521
   (ii) Resolutions—
      (*a*) Submission of statement of assets and liabilities of Ministers and Members of Assembly ... ... 522–555
      (b) Introduction of Automation equipments in Government Workshops public and private sectors ... 555–566
5. Personal Explanation—
   Correction in Thiru Palanivelrajan's speech 521–522
6. Papers laid on the Table of the House ... 566

*Friday, 30th August* 1968.

1. Questions and Answers ... ... ... 571–588, 590–596
2. Privilege Matters—
   (i) Against Dr. H. V. Hande ... ... ... 588
   (ii) Premature disclosure to the Press by the Public Works Minister about the Delhi talks in regard to Hemavathi Project. 597–603
   (iii) Against the Public Works Minister ... 603–604
   (iv) Against Thiru S. Balasubramanian ... 604–606
   (v) Publication in the daily "Kaditham" 606–608
3. Points of Order—
   (i) Time for adjourning the House on a Non-Official day ... ... ... ... 596–597
   (ii) Expeditious disposal of Call Attention Notices, Adjournment Motions and Questions ... ... ... ... ... ... 610
4. Adjournment Motion—
   Reduction in wages of handloom weavers at Yemaneswaram ... ... ... 608

PAGES

*Friday, 30th August 1968*—cont.


5. Calling Attention—
   Non-payment of salary to teachers in aided schools of Udankudi Panchayat Union Council ... ... ... ... ... 608–610
6. Discussion on Electricity Board Budget, 1968–69*cont.* ... ... ... ... 610–638
7. Papers laid on the Table of the House. ... 638


*Saturday, 31st August 1968.*


1. Questions and Answers ... ... ... 639–703
2. Points of Order—
   (i) Delay in answering questions ... ... 703
   (ii) Change of starred questions into unstarred questions ... ... ... ... ... 703–704
   (iii) Order of taking up questions ... ... 704–705
   (iv) Delay in making statements in respect of Calling Attention Notices. ... ... 706–707
   (v) Passing on chits to Members in the Chamber by the Press Reporters ... ... ... 708–710
   (vi) Raising of Privilege Matter before the corrected copy of the Proceedings is placed in the Legislature Library ... ... 711–712
3. Personal Explanation—
   Expression used by Dr. H. V. Hande against another member ... ...... ... 705
4. Order of taking up questions Ministerwar ... 705–706
5. Privilege Matters—
   (i) Publication in 'Swadesamitran' ... 707–708, 710, 712–713
   (ii) Publication in 'Navamani' and 'Navasakthi' 713–714
   (iii) Publication in 'Jayaberigai' ... ... 714–723
6. Adjournment Motion—
   Drinking water supply to Dindigul town ... 723–724
7. Government Motion—
   Suspension of Rule 41 (3) ... ... ... 724




PAGES

*Saturday, 31st August 1968*—cont.


8. Calling Attention—
   (i) Scarcity of drinking water in Coimbatore district ... ... ... ... ... 724
   (ii) Non-availability of doctors in Primary Health Centres and Hospitals ... ... 725
   (iii) Failure of monsoon and grant of loans to ryots in Radhapuram sub-taluk ... ... 726–728
9. Statement by Leader of the House—
   Supplementary question put by Thiru K. Cheemaichamy about obscene dances ... ... 728
10. Announcements—
   (i) Nomination of Council Members for Committee on Subordinate Legislation 728
   (ii) Bills passed by the Legislative Council ... 729
11. Discussion on Electricity Board Budget, 1968–69—*cont.* ... ... ... ... 730–756
12. Papers laid on the Table of the House ... 756

# தமிழக அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

## தமிழக ஆளுநர் :

**சர்தார் உஜ்ஜல் சிங்.**

---

## அமைச்சரவையினர்.

**1. மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (முதல் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொது, பொது நிர்வாகம்; இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.); இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள்; மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள் துணைக் கலெக்டர்கள் ஆகியோர் குறித்த அலுவல்கள்; நிதி; திட்டமிடுதல்; போலீஸ்; தேர்தல்கள்; மதுவிலக்கு; வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்; உணவு உற்பத்தி.

**2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** (கல்வி, தொழில் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : கல்வி (தொழிற் கல்வி உட்பட), ஆட்சிமொழி, தொழில்கள், ஆலைத்தொழிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, மின்சாரம், வேலைவாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சமய அறக் கட்டளைகளும் சட்டப் பேரவையும்.

**3. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** (பொதுப்பணி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொதுப்பணிகள், சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலைகள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, துறைமுகங்கள்.

**4. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** (உணவு, வருவாய்த் துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : உணவு, வரி வருவாய், வருவாய்த்துறைக் கழகம், மாவட்ட ரெவின்யூ நிறுவனங்கள், வாணிக வரிகள்.

**5. மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** (விவசாய அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம், காடுகள், சிங்கோனா.

**6. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** (அரிசன நல, செய்தி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : அரிசன நலன், செய்தி-விளம்பரத் துறை, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசாங்க அச்சகம், சினிமாப் படங்கள் சட்டம், மகளிர் சிறுவர் நலன்.

**7. மாண்புமிகு திரு. செ. மாதவன்** (சட்டம், கூட்டுறவு அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : சட்டம், கூட்டுறவு, நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவு, சீர்திருத்தப்

பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், பயண அனுமதிச் சீட்டுகள், சீட்டு நிதிகள் சட்டம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், தொழிலாளர்; வீட்டுவசதி.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (சுகாதார அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: பொதுச் சுகாதாரம், மருந்துகள், இடவசதிக் கட்டுப்பாடு, அனாதை இல்லங்கள், இரவலர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, முகம்மதியர் அறக் கட்டளைகள், சரக்குகளின் விலைகள் வழங்கல் குறித்த சட்டம்.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, பஞ்சாயத்துக்கள், பூதான கிராமதான இயக்கம், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், சேரணி, முன்னாள் இராணுவ வீரர்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF MADRAS

## Governor of Madras

SARDAR UJJAL SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU C. N. ANNADURAI (*Chief Minister*): *Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers and Deputy Collectors, Finance, Planning, Police, Elections, Prohibition, Indian Overseas, Refugees and Evacuees and Food production.*

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Industries*): *Minister in-charge of Education (including Technical Education), Official Language, Industries, Textiles, Yarn, Handlooms, Mines and Minerals, Iron and Steel Control, Electricity, Employment and Training, Companies, Religious Endowment and Legislature.*

3. THE HON. THIRU M. KARUNANIDHI (*Minister for Public Works*) : *Minister in-charge of Public Works, Minor Irrigation including S.M.I.P. Works, Highways, Transport, Nationalised Transport and Ports.*

4. THE HON. THIRU K. A. MATHIALAGAN (*Minister for Food and Revenue*) : *Minister in-charge of Food, Revenue, Board of Revenue, District Revenue Establishments and Commercial Taxes.*

5. THE HON. THIRU A. GOVINDASAMY (*Minister for Agriculture*): *Minister in-charge of Agriculture, Animal Husbandry, Fisheries, Forests and Cinchona.*

6. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare and Information*): *Minister in-charge of Harijan Welfare, Information and Publicity, Stationery and Printing, Government Press, Cinematograph Act, Women's and Children's Welfare.*

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Law and Co-operation*) : *Minister in-charge of Law, Co-operation, Courts, Prisons, Registration, Approved Schools and Vigilance Services, Passports, Legislation on Chits, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Weights and Measures, Labour and Housing.*

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Health*): *Minister in-charge of Public Health, Medicine, Accommodation Control, Orphanages, Beggars, Newsprint Control, wakf, Prices and Supplies of Goods Act.*

9. THE HON. THIRU M. MUTHUSWAMY (*Minister for Local Administration*): *Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries, Rural Industries Project, Prosperity Brigade and Ex-servicemen.*



## தமிழக சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் துணைத் தலைவர்

* புலவர் கா. கோவிந்தன்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. வி. எஸ். கோவிந்தராசன்

திரு. பெ. மலைச்சாமி

திரு. ந. தருமலிங்கம்

திரு. எஸ். முருகையன்

திரு. வை. சுவாமிநாதன்

திரு. வி. கே. கோதண்டராமன்

### சட்டப் பேரவைச் செயலாளர்

திரு. கா. து. நடராசன், எம். ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)

திரு. ஜி. இராகவன்.

---

* அரசியலமைப்பு 180 (1) விதியின்படி பேரவைத் தலைவர் பதவி குறித்த பணிகளை மேற்கொண்டுள்ளார்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழக சட்டப் பேரவை

### உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். .. .. | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி.பா. .. .. .. | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். .. .. .. | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்க தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. .. .. .. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். .. .. .. | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. .. .. .. | கடலாடி (செ. வ.). |
| 8 | ஆனந்தன், மு. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. ... .. | ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ.வ.) |
| 10 | அண்ணாமலை, சி. வி. எம். .. .. | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. .. .. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். .. .. | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. .. .. .. | மயிலாப்பூர் (சென்னை நகரம்). |
| 14 | அரசு, அ. பொ. .. .. .. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. .. .. .. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, ஏ.வி.பி. .. .. | எழும்பூர் (சென்னை நகரம்). |
| 19 | ஆதிமூலம், டி.எஸ். .. .. .. | சேரன்மகாதேவி. |
| 20 | பாலன், எம்.சி. .. .. .. | நாகர்கோவில். |
| 21 | பாலகிருஷ்ணன், ஏ.கோ. .... .. | வானூர் (செ.வ.). |
| 22 | பலராமன், இல. .. .. .. | கணியம்பாடி. |
| 23 | பாலசுப்பிரமணியன், செ. .. .. | பெருந்துறை. |
| 24 | பாலசுப்பிரமணியன், எ. .. .. | திண்டுக்கல். |
| 25 | பெள்ளி கௌடர், ஜெ. .. .. .. | கூனூர். |
| 26 | பாரதி மோகன், கோ. .. .. .. | குத்தாலம். |
| 27 | பூபதி, எம். .. ... .. .. | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 28 | பூவராகன், கோ. .. .. .. | விருத்தாசலம். |
| 29 | போஜன், கே. .. .. .. .. | உதகமண்டலம். |
| 30 | சீமைச்சாமி, கரு. .. .. | மானாமதுரை. |
| 31 | சிதம்பரநாத நாடார், எ. .. .. | கொளச்சல். |
| 32 | சின்னராஜு, சி. கே. .. .. .. | திருப்பத்தூர். |
| 33 | சின்னச்சாமி, மு. .. .. .. | ஈரோடு. |
| 34 | சின்னசாமி, வி. .. .. .. | ஏர்க்காடு (ஆ.வா.). |
| 35 | சித்தன், என். எஸ்.வி. .. .. | திருமங்கலம். |
| 36 | தனுஷ்கோடி, பி.எஸ். .. .. | திருவாரூர் (செ.வ.). |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 37 | தருமலிங்கம், ந. .. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 38 | துரைராஜ், சு.ம. .. .. .. | திருவள்ளூர் (செ.வ.) |
| 39 | துரைபாண்டியன், என். .. .. | நாங்குனேரி. |
| 40 | துரைராஜ், பி. .. .. .. .. | சங்கரன்கோவில் (செ.வ.). |
| 41 | துரைசாமி, சு. .. .. .. | திருப்பூர். |
| 42 | துரையரசன், ஆ. .. .. .. | அறந்தாங்கி. |
| 43 | எட்மண்ட் பெர்னாண்டோ, ஜி. ஆர். .. | திருச்செந்தூர். |
| 44 | இளம்வழுதி, இரெ. .. .. .. | கடலூர். |
| 45 | எல்லப்பன், பி. எஸ். .. .. .. | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 46 | கணேசன், எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 47 | கணேசன், எஸ். .. .. .. | செம்பனார்கோவில். |
| 48 | ஜார்ஜ், வ. .. .. .. .. | பத்மநாபபுரம். |
| 49 | ஞானசம்பந்தன், கொ. இரா. .. | நாகப்பட்டினம். |
| 50 | கோமதிசங்கர தீட்சிதர், க. .. .. | அம்பாசமுத்திரம். |
| 51 | கோபால், எம். .. .. .. | குன்றத்தூர் (செ. வ.). |
| 52 | கோவிந்தன், கே. ஆர். .. .. | தாரமங்கலம். |
| 53 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் துணைத் தலைவர்). .. | செய்யாறு. |
| 54 | கோவிந்தராசன், சொ. .. .. | மதுரை சென்ட்ரல். |
| 55 | கோவிந்தராசன், சி. .. .. .. | நெல்லிக்குப்பம். |
| 56 | கோவிந்தராஜன், வி. எஸ். .. .. | புரசவாக்கம் (சென்னை நகரம்). |
| 57 | கோவிந்தராசுலு, கே. .. .. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 58 | கோவிந்தராசன், ஆ. .. .. .. | புவனகிரி. |
| 59 | கோவிந்தசாமி, ஏ. (அமைச்சர்). .. | முகையூர். |
| 60 | ஹபிபுல்லா பேக், டாக்டர் .. .. | ஹார்பர் (சென்னை நகரம்). |
| 61 | ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 62 | இராசரத்தினம், டி. .. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 63 | ஜேம்ஸ், ஜே. .. .. .. .. | திருவட்டார். |
| 64 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. .. | மதுரை-கிழக்கு. |
| 65 | ஜயராஜ், பி. .. .. .. .. | நன்னிலம் (செ. வ.). |
| 66 | ஜயராமன், கி. .. .. .. .. | சேலம்-1. |
| 67 | ஜெயராமன், பி. .. .. .. | பேர்ணாம்பட்டு (செ. வ.) |
| 68 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. .. | ஜெயங்கொண்டம் (செ.வ.). |
| 69 | கனகசபை, பா. .. .. .. | சிதம்பரம். |
| 70 | கந்தசாமி கவுண்டர், செ. .. .. | அரவக்குறிச்சி. |
| 71 | கந்தசாமி, எம். .. .. .. | குளித்தலை. |
| 72 | கந்தசாமி படையாச்சி, மு. .. .. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 73 | கண்ணன், எம். ஆர். .. .. .. | பேசின் பிரிட்ஜ் (சென்னை நகரம்). |
| 74 | கண்ணப்பன், எம். .. .. .. | இணைத்துக்கடவு. |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 75 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 76 | கருணாநிதி, மு. (அமைச்சர்) .. .. | சைதாப்பேட்டை (சென்னை நகரம்). |
| 77 | கருப்பையா, ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 78 | கருப்பையா, ஆர். .. .. .. | அரியலூர். |
| 79 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 80 | காசிராமன், நா. .. .. .. | கும்பகோணம். |
| 81 | கதிரவன், க. மு. .. .. .. | தென்காசி. |
| 82 | கேசவலு, தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 83 | கிட்டப்பா, என். .. .. .. | மாயூரம். |
| 84 | கொளத்தூர் கோதண்டம் .. .. | மதுராந்தகம். |
| 85 | கோதண்டராமன், வி. கே. .. .. | குடியாத்தம். |
| 86 | கோதண்டராமையா, கே. எஸ். .. | உத்தனப்பள்ளி. |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, கு. .. .. .. | பழனி (செ.வ.). |
| 88 | கிருஷ்ணமூர்த்தி, சி. .. .. .. | கொடவாசல். |
| 89 | கிருஷ்ணமூர்த்தி, மு. .. .. .. | பேராவூரணி. |
| 90 | கிருஷ்ணன், அ. .. .. .. .. | மங்களூர் (செ.வ. ) |
| 91 | கிருஷ்ணன், ஈ. ஆர். .. .. .. | சேலம்-2. |
| 92 | கிருட்டிணன், நா. .. .. .. | காஞ்சீபுரம். |
| 93 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. .. .. | அவினாசி. |
| 94 | குமாரசாமி, கே. என். .. .. .. | பல்லடம். |
| 95 | குப்பம்மாள், திருமதி சு. .. .. | போளூர். |
| 96 | மாதவன், செ. (அமைச்சர்) .. .. | திருப்பத்தூர். |
| 97 | மகாதேவன், ப. .. .. .. | கன்யாகுமரி. |
| 98 | மலைச்சாமி, பெ. .. .. .. .. | மேலூர். |
| 99 | மலைக்கண்ணன், வீ. .. .. .. | இளையாங்குடி. |
| 100 | மணி, கே.பி.எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 101 | மணி, எம். எஸ். .. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 102 | மணி, வி. எஸ். எஸ். .. .. .. | ஆத்தூர். |
| 103 | மாணிக்கவாசகம், இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 104 | மணியன், பி.எஸ். .. .. .. | சோழவந்தான். |
| 105 | மாரிமுத்து, அ. .. .. .. .. | ஆடுதுறை. |
| 106 | மாரிமுத்து, ஏ.ஆர். .. .. .. | பட்டுக்கோட்டை. |
| 107 | மாரிமுத்து, மூ. .. .. .. .. | தலைவாசல் (செ.வ.) |
| 108 | மார்டின், டி. .. .. .. .. | சாத்தான்குளம். |
| 109 | மருதாசலம், என். .. .. .. | பேரூர் (செ.வ.). |
| 110 | மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) .. | ஆயிரம்விளக்கு (சென்னை நகரம்). |
| 111 | மெய்யப்பன், சா. .. .. .. | காரைக்குடி. |
| 112 | மேத்தா, எம். .. .. .. .. | பெரியகுளம். |
| 113 | மூக்கையா தேவர், பி.கே. .. .. | உசிலம்பட்டி. |
| 114 | முனுசாமி கௌண்டர், பி.எம். .. | கிருஷ்ணகிரி. |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 115 | முனுசாமி, ரா.ரா. .. .. .. | மேல்மலையனூர். |
| 116 | முனியாண்டி, ஏ. .. .. . | நிலக்கோட்டை (செ.வ.). |
| 117 | முனு. ஆதி .. .. .. .. | திருப்போரூர். |
| 118 | முருகையன், புலவர் க. .. .. | திருவையாறு. |
| 119 | முருகேசன், க. .. .. .. .. | பாலக்கோடு. |
| 120 | முருகையன், எஸ். .. .. .. | கலசபாக்கம். |
| 121 | செஞ்சி முனுசாமி, வெ. .. .. | செஞ்சி. |
| 122 | முத்தையா, கே. கே. .. .. .. | கடலூர். |
| 123 | முத்தையா, மு. .. .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 124 | முத்துலிங்கம், எஸ். .. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 125 | முத்துசாமி, பா. க.சி. .. .. .. | பெண்ணாகரம். |
| 126 | முத்துசாமி, மா. (அமைச்சர்) .. .. | நாமக்கல். |
| 127 | முத்துச்செல்வன், பு.செ. .. .. | முசிறி. |
| 128 | நாச்சிமுத்து, நா. .. .. .. | ஒட்டன்சத்திரம். |
| 129 | நாகலிங்கம், பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.) |
| 130 | நாகசுந்தரம், ஆர். .. .. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 131 | நல்லசிவன், க. ர. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 132 | நல்லசாமி, தோ. மு. .. .. .. | கரூர். |
| 133 | நஞ்சன், சி. .. .. .. .. | கூடலூர் (செ.வ. ). |
| 134 | நரசிம்மன், ஏ. சி. .. .. .. | ஆரணி. |
| 135 | நாராயணன், இரா. .. .. .. | வரகூர். |
| 136 | நடராசன், மு. க. து. .. .. .. | லால்குடி. |
| 137 | நடராஜன், ஜி. .. .. .. .. | காட்பாடி. |
| 138 | நடராசன், ஈ. எம். .. .. .. | அந்தியூர். |
| 139 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர்-அவை முன்னவர்.) | திருவல்லிக்கேணி (சென்னை நகரம்). |
| 140 | பச்சையப்பன், எஸ். பி. .. .. | சங்கராபுரம். |
| 141 | பழனி, சி. .. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 142 | பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம் (செ.வ.). |
| 143 | பழனிவேல் ராஜன் .. .. .. | தேனி. |
| 144 | பன்னீர்செல்வம், எம். .. .. .. | ஆம்பூர் (செ.வ.) |
| 145 | பரமசிவ கவுண்டர், பி. என். .. .. | பொங்களூர். |
| 146 | பரமசிவம், எஸ். .. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 147 | பரிசுத்த நாடார், ஏ. ஒய். எஸ். .. .. | தஞ்சாவூர். |
| 148 | பட்டாபி நாயுடு, ஏ. .. .. .. | காவேரிப்பட்டணம். |
| 149 | பீர் முஹமது, ஹாஜி. ம. மு. .. .. | மேலப்பாளையம். |
| 150 | பெரியசாமி, பெ. .. .. .. | ராசிபுரம். |
| 151 | பெருமாள், ஏ. ஆர். .. .. .. | கரியாப்பட்டி. |
| 152 | பொன்னம்பலம், புலவர் பொ. .. .. | திருமயம். |
| 153 | பொன்னப்ப நாடார், ஆர். .. .. | விளவங்கோடு. |
| 154 | பொன்னுமலை, தி. .. .. .. | பனமரத்துப்பட்டி. |
| 155 | ராஜா, ஏ. எம். .. .. .. .. | பவானி. |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர் (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 156 | ராசகோபால், க. மு. .. .. .. | உத்திரமேரூர். |
| 157 | ராஜமன்னூர், எஸ். ஏ. .. .. .. | வாணியம்பாடி. |
| 158 | இராசாங்கம், மா. .. .. .. | கம்பம். |
| 159 | ராஜாங்கம், என். .. .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 160 | ராஜவேலு, டி. ஏ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 161 | ராமச்சந்திர துரை, ரா. .. .. .. | கந்தர்வக்கோட்டை. |
| 162 | இராமச்சந்திரன், க. ந. .. .. | ஆண்டிமடம். |
| 163 | ராமச்சந்திரன், எம். ஜி. .. .. | பரங்கிமலை. |
| 164 | இராமச்சந்திரன், எஸ். .. .. .. | பண்ருட்டி. |
| 165 | ராமலிங்கம், எஸ். .. .. .. | ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 166 | இராமமூர்த்தி, க. .. .. .. | திண்டிவனம். |
| 167 | இராமன், மு. .. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 168 | ராமன், ஓ. பி. .. .. .. .. | மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 169 | இராமராசன், வ.க. .. .. .. | பவானிசாகர் (செ.வ.) |
| 170 | இராமசாமி, இ. .. .. .. | வால்பாறை (செ.வ.) |
| 171 | ராமசாமி கவுண்டர், கே.எம். .. | கோபிசெட்டிப்பாளையம். |
| 172 | ராமசாமி நாயுடு, எஸ். .. .. | சாத்தூர். |
| 173 | ராமசாமி, எஸ்.ஜே. .. .. .. | அரக்கோணம். |
| 174 | இராசு, ஜே.எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 175 | இரத்தினசபாபதி, மு. .. .. .. | விளாத்திகுளம். |
| 176 | ரெத்தினதேவர், ரா. .. .. | முதுகுளத்தூர். |
| 177 | சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 178 | சகாதேவக் கண்டர், கே. .. .. | தண்டராம்பட்டு. |
| 179 | சாமிநாதன், கே.என். .. .. | வெள்ளக்கோயில். |
| 180 | சங்கரய்யா, என். .. .. .. | மதுரை—மேற்கு. |
| 181 | சந்தானம், பி.எஸ். .. .. | செங்கம் (செ.வ.) |
| 182 | சாரதி, மா.பா. .. .. .. | வேலூர். |
| 183 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை நகரம்) |
| 184 | சீனிவாசன், பெ. .. .. .. | விருதுநகர். |
| 185 | செல்லக் கவுண்டர், அ. .. .. | சேந்தமங்கலம் (ஆ.வா ) |
| 186 | சேனுபதி, அ. .. .. .. .. | காங்கேயம். |
| 187 | சேதுராமன், சி. .. .. .. | சிவகங்கை. |
| 188 | சண்முகம், எம் .. .. .. | விழுப்புரம். |
| 189 | சண்முகசுந்தரம், அ.ப. .. .. | பொள்ளாச்சி. |
| 190 | இளஞ்செழியன், வி. சா. .. .. | விராலிமலை. |
| 191 | சிறைமீட்டான், தொ.க. .. .. | பரமக்குடி (செ.வ.). |
| 192 | சிவஞானம், ம. பொ. .. .. | தியாகராயநகர் (சென்னை நகரம்.) |
| 193 | சிவபெருமாள், க.ந. .. .. .. | ஆத்தூர். |
| 194 | சிவசாமி, மு.ச. .. .. .. | தூத்துக்குடி. |
| 195 | சிவசுப்பிரமணியன், எஸ். .. .. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 196 | சோமசுந்தரம், ந. .. .. .. | வலங்கைமான் (செ.வ.) |
| 197 | சௌந்தரபாண்டியன், நா. .. .. | சாத்தாபுரம். |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 198 | சௌந்தரபாண்டியன், பெ. .. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 199 | சௌந்தரராஜ மூப்பனூர், இரா. .. | பாபநாசம். |
| 200 | சுந்தர பாரதி, சௌடி எஸ். .. | அருப்புக்கோட்டை. |
| 201 | சீனிவாசன், சு. .. .. .. | போடிநாயக்கனூர். |
| 202 | சுவாரெஸ், திருமதி ஏ. .. .. | நியமன உறுப்பினர். |
| 203 | சுப்பராஜா, ஏ.அ. .. .. .. | இராஜபாளையம். |
| 204 | சுப்பையா, ஆ.கு. .. .. .. | கோட்டூர் (செ.வ.) |
| 205 | சுப்பையா, கே.வி. .. .. .. | ஆலங்குடி. |
| 206 | சுப்பையா முதலியார், ஏ.ஆர். .. | கடையநல்லூர். |
| 207 | சுப்பிரமணியம், அ.லெ. .. .. | திருநெல்வேலி. |
| 208 | சுப்பிரமணிய கவுண்டர், எம். .. | தர்மபுரி. |
| 209 | சுப்பிரமணியம், இ.எம். .. .. | திருக்கோவிலூர். |
| 210 | சுரேந்திரன், எம். .. .. .. | மேட்டூர். |
| 211 | சுவாமிநாத ஒடையார், த.சி. .. | மன்னார்குடி. |
| 212 | சுவாமிநாதன், வை. .. .. | திருவெறும்பூர். |
| 213 | தம்பி நாயக்கர், பா. .. .. .. | வடமதுரை. |
| 214 | தங்கப்பன், டி. .. .. .. | இராமநாதபுரம். |
| 215 | தவமணி தேவர், வி. .. .. .. | சேடப்பட்டி. |
| 216 | தீர்த்தகிரி, ந. .. .. .. | ஹரூர் (செ.வ.) |
| 217 | தீர்த்தகிரி கவுண்டர், தி. .. .. | ஊத்தங்கரை. |
| 218 | திம்மராய கவுண்டர், தி. சி. .. .. | நாட்ராம்பள்ளி. |
| 219 | திப்பையா, டி.டி.எஸ். .. .. .. | மேட்டுப்பாளையம். |
| 220 | வடிவேலு, எஸ்.கே. .. .. | தொட்டியம். |
| 221 | வரதராஜன், என். .. .. | வேடசந்தூர். |
| 222 | வேதாசலம், மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம் |
| 223 | வீரமணி, சி. .. .. .. .. | சங்கரி (செ.வ.) |
| 224 | வீராசாமி, ந. .. .. .. | ஆர்க்காடு. |
| 225 | வேலப்பன், சி. வே. .. .. .. | கபிலமலை. |
| 226 | வெள்ளத்துரை, ஏ. .. .. .. | வாசுதேவநல்லூர். |
| 227 | வேலுசாமி, பி. .. .. .. | சிங்காநல்லூர். |
| 228 | வெங்கடாசல தேவர், பெ. .. .. | வேதாரண்யம். |
| 229 | வெங்கடசாமி, பி. .. .. .. | ஹோசூர். |
| 230 | வேழவேந்தன், கா. .. .. .. | கும்மிடிப்பூண்டி. |
| 231 | விஜய ரகுநாத தொண்டமான், ஆர். .. | புதுக்கோட்டை. |
| 232 | விஜயராஜ், தா. .. .. .. | திருவண்ணாமலை. |
| 233 | விநயகம், கே. .. .. .. | திருத்தணி. |
| 234 | விசுவநாதன், செ. கோ. .. .. | செங்கற்பட்டு. |
| 235 | வில்லியம், எம். .. .. .. | இள்ளியூர். |
| 236 | கதிரவன், கா. மு. .. .. .. | தென்காசி |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண். (1) | பெயர். (2) |
|---|---|
| 1 | அண்ணாதுரை, சி. என். (முதலமைச்சர்). |
| 2 | நாராயணசாமி முதலியார், கே. (தலைமை வழக்கறிஞர்). |

# தமிழக சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1968 ஆகஸ்ட் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினுக்கள்-விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினுக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினு எண்கள் 101, 102, 103, 104 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### *Victoria Technical Institute*

* 105 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government have appointed any representatives to the Victoria Technical Institute ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) நிறுவனத்தின் தலைவரையும் அந்த நிறுவனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினரையும் அரசாங்கம் அவ்வப்பொழுது மூன்று ஆண்டு கால அளவுக்கு நியமிக்கிறது. தற்சமயம் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கீழ்க்கண்டவர்கள் அவரவர்களுக்கு நேரே குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து பதவி வகித்து வருகின்றனர் :—

**தலைவர்**

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. நீதிபதி பி.எஸ். கைலாசம் .. | 17-8-1966. |

**உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| 1. திருமதி சரோஜினி வரதப்பன், மைலாப்பூர், சென்னை. | 23-12-1966. |
| 2. திருமதி E. W. பிராகல், கௌரவச் செயலாளர், மகளிர் பணிக்குழு, விக்டோரியா தொழிற் பயிற்சிப் பள்ளி, சென்னை. | 15-1-1967. |
| 3. தொழில் வணிகத்துறை இயக்குநர், சென்னை. | 15-1-1967. |
| 4. கூட்டுறவுச் சங்கப் பதிவாளர், சென்னை .. | 15-1-1967. |
| 5. திருமதி ராஜி ரங்காச்சாரி, சமூகப் பணியாளர், ராயப்பேட்டை, சென்னை-14. | 15-1-1967. |

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, இந்த விக்டோரியா தொழில் நுட்பப் பள்ளிக்கு அரசாங்கம் எதாவது மானியம் கொடுக்கிறதா ? அப்படியென்றால் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இது 1888–லே துவக்கப்பட்டது. நியமிக்கப்பட வேண்டியவர்களில் மூன்றில் ஒரு பகுதியினரை அரசாங்கம் நியமிக்க வேண்டுமென்றிருக்கிறது. மானியம்பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, what are the exact functions of this Institute ? Is it financed by the Central Government also apart from the aid which the State Government is giving ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மத்திய அரசிடமிருந்தோ மாநில அரசிடமிருந்தோ நிதி கிடைப்பதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. இல. பலராமன் :** அரசாங்கப் பிரதிநிதிகளாக நியமிக்கப்படும் போது எந்த விதி முறைகளின்படி அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் ? அதற்கான விதி முறைகள் எதாவது அரசாங்கம் வைத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது பற்றி அரசாங்கத்திடம் விதி முறைகள் இல்லை. விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் 1888–ம் ஆண்டிலே துவக்கப்பட்டது. அதில் மூன்றில் ஒரு பகுதியினர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். அதன்படி அரசாங்கத்தின் சார்பாக இருக்கக்கூடிய பேர்களை அறிவிக்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இப்பொழுது இருக்கிற உறுப்பினர்கள் இன்னும் எத்தனை ஆண்டுகள் அந்தப் பதவிகளில் இருப்பார்கள் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூன்று ஆண்டு காலத்திற்கு இருக்கலாம்.

## தமிழ், இந்தி ஆசிரியர்கள் சம்பளம்

* 106 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் ஆசிரியர்களுக்கும், இந்தி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் சம்பளத்தில் வித்தியாசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, தமிழ் ஆசிரியர்கள் சம்பளத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்ததா? அது பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழ் ஆசிரியர்களும், இந்தி ஆசிரியாகளும் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பது தான் கேள்வி. தமிழ் ஆசிரியர்களைப்பற்றிப் பல்வேறு கோரிக்கைகள் வந்திருக்கின்றன. குறிப்பிட்ட கோரிக்கையைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சொல்லலாம்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், சென்னை மாநிலத்தில் அநேக இந்திப் பண்டிதர்கள் வேலையில்லாமல், ஏற்கனவே அவர்கள் வேலை பார்த்த பள்ளிகளிலே வேலை பார்க்க முடியாமல் இருப்பதனால் அவர்களை வேறு பள்ளிகளில் வேலையில் அமர்த்துவதற்குச் சுற்றறிக்கை எதாவது அரசு அனுப்பியிருக்கிறதா ?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த மாநிலம் முழுவதிலும் இரண்டாயிரத்து நானூற்று சில்லரை இந்தி ஆசிரியர்கள் இருந்தார்கள். நிலையாகவும், தகுதி பெற்றவர்களாகவும் இருந்தவர்கள் ஆயிரத்து எழுநூற்றுச் சில்லரை பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே வாங்கிக் கொண்டிருந்த சம்பளத்தின் அடிப்படையில் அவர்களை அந்தந்தப் பள்ளிகளிலேயே வைத்துக்கொள்ளலாம். அவர்களின் தகுதிக்கு ஏற்ற முறையில் பணிகளை அந்தந்தப் பள்ளிகளிலே தரலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர அறுநூற்றுச் சொச்சம் இந்தி ஆசிரியர்கள் தான் தாற்காலிகமாகவும், அன்க்வாலிபைடாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் நோட்டீஸ் கொடுத்து விலகும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களிலே தகுதி உடையவர்களாக இருந்தால் அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அந்த அடிப்படையிலேதான் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. எஸ். முருகையன் :** எந்த இந்தி ஆசிரியராவது இந்த அரசாங்கத்தால் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நிலையான இந்தி ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால் அவர்களை மீண்டும் எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. தவிர குற்றம் செய்தவர்கள் நீக்கப்பட்டிருந்தால் இதன்கீழ் வராது.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister for Education the number of teachers who have been reinstated from out of the total 2,400 who have been retrenched as Hindi teachers ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த ஆயிரத்து எழுநூற்றுச் சில்லரை இந்தி ஆசிரியர்களை மறுபடியும் எடுத்துக் கொள்ளுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அறுநூற்றுச் சில்லரை ஆசிரியர்கள் தகுதி இல்லாததன் காரணமாகவும், தற்காலிகமாக இருந்ததன் காரணமாகவும் வேலையிலிருந்து நீக்க நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குத் தேவைப்படுகின்ற படிப்பு இருக்குமானால், வேலையில் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. செகண்டரி கிரேட் தகுதி உள்ளவர்களாக இருந்தாலும் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** வார்தா போன்ற வெளி இடங்களில் இந்தி படித்து பி.ஏ., பி.டி. என்று இந்தியில் பட்டம் பெற்றவர்கள் 15, 20 ஆண்டுவரை வேலை செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு முழுத் தகுதி பெறவில்லை என்று காரணம் காட்டி வேலையில்லாமல் போகக் கூடிய நிலைமை இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அவர்களுடைய சர்வீசை எடுத்துக்கொண்டு அவர்களுக்கு விதி விலக்களித்து வேலை கொடுத்து உதவ அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் இல்லை. 15, 20 ஆண்டுகள் வேலையிலிருந்து, பிறகு வேலையிலிருந்து நீக்கப்பட்டிருப்பார்களானால், அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் ஆராயலாம்.

**திரு. ஆர். கருப்பையா :** தமிழ் ஆசிரியர்கள் நிலை முதல் நிலை இரண்டாவது நிலை என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய தகுதி வேறுபாடு அதிகமாக இல்லை. இரண்டு நிலையையும் ஒன்றாக ஆக்குவதற்குச் சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** வேலையிலிருந்து நீக்கப்பட்ட இந்தி ஆசிரியர்கள் கல்வி அமைச்சரைச் சந்திக்கச் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் மூலம் முயற்சி செய்தார்களா ? அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பல இடங்களில் இந்தி ஆசிரியர்கள் வந்து பார்த்து மகஜர்கள் கொடுக்கிறார்கள். கூடுமானவரை வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு அரசு முனைந்து முயற்சி எடுத்துக்கொள்கிறது. நிதி வசதிகளுக்கு ஏற்பவும், வேலைகளுக்கு ஏற்பவும் அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆயிரத்து எழுநூற்றுச் சில்லரை பேர்களுக்கு நிலையாகவும் தகுதி பெற்றவர்களாகவும் இருக்கிறவர்களுக்கு வேலை கொடுக்கிற நிலைமையில் இருக்கிறோம்.

THIRU K. VINAYAKAM : Consequent on the abolition of the teaching of Hindi in our schools, almost all the Hindi Pandits have been thrown out of the job whereas the Government have stated in their order that alternative jobs in the same school will be provided to them. Was any instance brought to the notice of the Government that in one school two Hindi Pandits were made to act as peons or attenders as it was stated that there were no alternative jobs which could be offered in the same school ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தகுதி பெற்றவர்களை அப்படி ஆக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணம் அல்ல. அப்படியிருந்தாலும் அவர்களுடைய கௌரவம் குறையாத அளவிற்கு வேலை கொடுக்க முயற்சி செய்யலாம். இந்தி ஆசிரியர்களில் பி.ஏ. படித்தவர்கள் இருக்கிறார்கள். பி.டி. படித்தவர்கள் இருக்கிறார்கள். தமிழ் படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஆசிரியர்களாகவும், தமிழ் ஆசிரியர்களாகவும் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். சில பள்ளிகளில் அவர்கள் குமாஸ்தாவாகவும், லைப்ரேரியனாகவும் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறபடி பியூனாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் கௌரவக் குறைவாகத்தான் இருக்கும். இதுபற்றிக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் கவனிக்கலாம்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** ஐயா, சென்ற இந்தி எதிர்ப்புச் சமயத்தில் சில தமிழாசிரியர்களுக்கு அரசாங்க உத்தியோகம் தர தடை விதிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, அந்தத் தடை நீக்கப்படுமா ? அவர்களுக்கெல்லாம் அரசாங்க உத்தியோகம் தரப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லையென்றாலும், அவரவர்கள் தங்கள் தங்களுடைய நிலையை எடுத்து விளக்குவார்களானால், அதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று பார்த்து, அதற்குப் பிறகுதான் முடிவு செய்கிறோம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தமிழ் நாட்டில் பயிற்சி பெற்ற தமிழாசிரியர்கள் அத்தனை பேருக்கும் வேலை அளிக்கப்பட்டுவிட்டதா ? வேலை அளிக்கப்படாமல் இருந்தால், எதனால் அளிக்கப்படவில்லை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பயிற்சி பெறுகிறவர்கள் அத்தனை பேருக்கும் வேலை தர முடியும், என்று சொல்லமுடியாது. எல்லாத் துறைகளிலும் இருப்பதைப்போன்று தமிழ் ஆசிரியர்கள் துறையிலும் இருக்கக்கூடும். தமிழ் ஆசிரியர்கள் தேவைப்படுகிறபோது, தகுதி பெற்றவர்கள் விண்ணப்பிக்கும்போது, அந்தத் தகுதியின் அடிப்படையில் அவர்களுடைய பயிற்சி அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**திரு. எஸ். முருகையன் :** தமிழக அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவி ஏற்றதற்குப் பிறகு, இரண்டாயிரம் இந்தி ஆசிரியர்களுக்கு வேலை இடைக்காமல் செய்துவிட்டது என்று ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் தவறான பிரச்சாரம் செய்துகொண்டு வருகிறார்களே, அதற்குத் தமிழக அரசின் சார்பாக " எந்த ஒரு நிரந்தர இந்தி ஆசிரியரும் வேலையை இழக்கவில்லை " என்று ஓர் அறிக்கை விடப்படுமா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கேள்வியிலேயே அதற்கான விடை அமைந்திருக்கிறது. தவறான பிரச்சாரம் செய்வதாகக் குறிப்பிட்டார்கள். அவர்கள் சொல்லுகிறபடி, அது தவறான பிரச்சாரம்தான். நான் முதலில் எடுத்துச் சொல்லியபடி, இரண்டாயிரம் சொச்சம் இந்தி ஆசிரியர்களில் ஆயிரத்து எழுநூற்றுச்சொச்சம் பேர்கள் தகுதி பெற்ற நிலையானவர்கள். அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அறுநூற்று சொச்சம் பேர்களைப் பொறுத்த வரையில், ஏற்கனவே ஆண்டுக்காண்டு அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்துக்கொண்டுவருகிறார்கள். காரணம், அவர்கள் டெம்பரரியானவர்கள். மற்றொன்று, அவர்கள் "அன்க்வாலிபைடு". அத்தகைய இந்தி ஆசிரியர்களை நாம் எடுக்காவிட்டாலும, மூன்று மாத நோட்டீஸ் கொடுத்து, வீட்டுக்கு அனுப்பி, மறுபடியும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையில்தான் தொடர்ந்து இருந்துகொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு மட்டும்தான் நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. அவர்களிலும்கூட, வேறு தகுதி இருந்து, ஏற்றுக்கொள்ள வாய்ப்பு இருந்தால், அவர்களுக்கும் வேலை வாய்ப்புத்தர அரசாங்கம் முயற்சி செய்துதான் வருகிறது என்று நான் முதலில் குறிப்பிட்டேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** வேலையிலிருந்து நீக்கப்பட்ட இந்தி ஆசிரியர்கள் சமீபத்தில் சேலத்தில் மாநாடு போட்டு, கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்களா ? அப்படித் தகுதி இல்லாதவர்கள் என்று கருதப்பட்டவர்ளுக்கு வேறு வேலை கிடைக்கும்வரையில், ஏதாவது உதவி அளிப்பதற்கான எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பல இடங்களில் மாநாடு நடத்தப்பட்டு, மகஜர்கள் அரசாங்கத்திற்கு அனுப்புகிறார்கள். அவற்றை இயக்குநர் ஆராய்ந்துகொண்டு வருகிறார்கள். முதலில் நான் விடை அளித்தபடி, தகுதியின் அடிப்படையில் வேலை கட்டாயம் தரப்படுகிறது. மற்றவர்களுக்கு ஊதியம் தரும் சூழ்நிலையில் நிதி இலாக்காவோ, கல்வி இலாக்காவோ இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, தமிழாசிரியர்கள் யாராவது உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராக வேலை பார்க்கிறார்களா ? அவ்வாறு இல்லாவிட்டால், ஏதாவது ஒரு பள்ளியில் பரீட்சார்த்தமாகத் தமிழாசிரியரைத் தலைமையாசிரியராக நியமிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தலைமை ஆசிரியராக இருப்பவருக்கு என்னென்ன தகுதிகள் விதிக்கப்பட்டிருக்கின்றனவோ, அதற்கு உட்பட்டு வருகின்ற தமிழ் ஆசிரியர்களும் தலைமையாசிரியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். மாநிலத்தில் சில பல பள்ளிகளில் தமிழாசிரியர்கள் தலைமையாசிரியர்களாக இருக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் அதனுடைய விவரம் தெரிவிக்கலாம்.

## ஹோகனக்கல் திட்டம்

* 107. வினா.—**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி ஆற்றைத் தடுத்து ஹோகனக்கல் என்னுமிடத்தில் அணை கட்டும் திட்டம் ஏதேனும் சர்க்கார் பரிசீலனையிலிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க மத்திய சர்க்காரிடம் மாநில சர்க்கார் வற்புறுத்தியிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இத்திட்டம் தாற்காலிகமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இந்த ஹோகனக்கல் திட்டம் மைசூர் அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்புடன் சேர்ந்து நடக்கக்கூடிய திட்டமானபடியால், மைசூர் அரசாங்கம் இதற்கு ஒப்புதல் தெரிவித்துவிட்டதா? நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டம் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுவிடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் விடையிலேயே குறிப்பிட்டேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இரு மாநில அரசாங்கங்களும் செய்துகொள்ளுகிற உடன்படிக்கையின் பேரில்தான் நிறைவேற வேண்டியிருக்கிறது. இதற்கு மத்திய அரசாங்க அமைச்சருடைய ஆலோசனையையும் இந்த அரசு கோரியிருக்கிறது. அதிகாரிகள் மட்டத்தில் கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன. இரு மாநிலங்களைச் சேர்ந்த தலைமைப் பொறியாளர்கள் இருவருக்குமிடையே விவரங்கள் பரிமாறப்பட்டுக்கொண்டு, அவர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடக்கிறது. அதற்குப் பிறகு அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடைபெறவேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற குறிப்பு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, இந்த ஹோகனக்கல் திட்டம் விவசாய மக்களுக்கு எந்த அளவுக்குப் பயன்படும் என்பதையும், அதே சமயத்தில் இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி தேவைப்படுகிறது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது இரண்டு வகையிலும் பயன்படும். மின்சார உற்பத்திக்கும், நீர்ப்பாசன வசதிக்கும் பயன்படுகிற அளவுக்கு இருக்கக்கூடும். நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்று மைசூர் அரசாங்கம் எண்ணுகிறது. நாம் மின்சார உற்பத்தி செய்ய வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறோம். அதுபற்றி முழு புள்ளி விவரங்கள் தராமலிருப்பது பொது நன்மைக்கு நலம் பயக்கும் என்று கருதுகிறேன். பேச்சு வார்த்தைக்குப் பிறகுதான் விவரம் தெரிவிப்பது நலம் என்று கருதுகிறேன்.

DR. H. V. HANDE : Sir, is the Government aware that the Mysore State has still a large source of power in the Sharavathi Project ? They have not completely utilised the waters of the Sharavathi Project and in view of this the Mysore Government may not be very enthusiastic about it. But, for us it is a question of bread and butter, a very important project. In view of this, will the Government tell the Central Water and Power Commission that the Madras Government will take up and execute the whole scheme and that, if Mysore Government wants, the Madras Government will give them power ? Will the Government place their clear-cut programme before this House, because this sort of discussion has been going on for a number of years ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மைசூர் மாநில அதிகாரிகளோடு பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்துக்களையும் நம்முடைய மாநில அதிகாரிகள், பேச்சு வார்த்தையின் போது பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே, அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தும்போது, நமக்கும் சாதகம் ஏற்பட வேண்டும், அவர்களுக்கும் சாதகம் ஏற்பட வேண்டும் என்று பல கூறுகளை எடுத்து தெரிவிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :** தலைவர் அவர்களே, ஹோகனக்கல் மின்சாரத்திட்டம், மின்சார உற்பத்திக்கும், நீர்ப்பாசனத்திற்கும் பயன்படும் வகையில் உருவாக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்,



மேற்படி திட்டம் தருமபுரி மாவட்டத்தை ஒட்டியிருப்பதால், அதிலிருந்து கிடைக்கும் மின்சாரமும், பாசனத்திற்கான நீரும் தருமபுரி மாவட்டத்திற்குப் பயன்படுமா அல்லது சேலம் மாவட்டத்திற்குப் பயன்படுமா என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** விதையே ஊன்றாத நிலையில் பழம் யாருக்கு என்பதைப்பற்றி விவாதிப்பதைப்போல இருக்கிறது. முதலில் திட்டம் உருவாக வேண்டும். அதற்குப் பிறகுதான் தருமபுரிக்குப் பலனளிக்கலாமா , வேறு எங்கெங்கு பரப்பலாம் என்பதைப்பற்றி நாம் யோசிக்கலாம்.

THIRU B. VENKATASWAMY : Is it a fact that if we construct a dam near Hogenakkal and harness the waters, our State will be self-sufficient in electricity ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கிட்டத்தட்ட அதிலே 600 மெகாவாட் மின்சாரம் எடுக்கலாம் என்ற கருத்துத்தெரிவிக்கப்பட்டது. அதுமட்டும் போதாது. வேறு பல வகைகளிலும் மின்சார உற்பத்தியைத் தொடர்ந்து செய்ய வேண்டும். கல்பாக்கம் அணுமின் நிலைய வேலை முடிந்த பிறகும், எண்ணூர் அனல் மின் நிலைய வேலை முடிந்த பிறகும், பற்றுக்குறை இருக்கும் என்ற கருத்துத்தான் மின்சார வாரியத்தின் குறிப்பிலே தெரிவித்திருக்கிறேன். மின்சாரத் தேவை ஒரு கட்டத்தில் முடிந்துவிடும் என்ற நிலை, வளர்ந்து வரும் நாட்டில் டெவலப்பிங் கண்ட்ரியில் ஏற்படாது. என்றைக்கும், எந்தக் கட்டத்தில் வந்தாலும், பற்றுக் குறை என்கிற கட்டம் இருக்கத்தான் செய்யும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ஹோகனக்கல் நீர் மின்சாரத் திட்டம், ஒரு சிறந்த மின்சாரத் திட்டமாகும். இதைப்பற்றி வெகு நாட்களாக—கடந்த பல ஆண்டுகளாகப்—பேசப்பட்டுவந்தும், இது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இதற்குரிய தடைகள் யாவை? மைசூர் அரசு ஏதேனும் கருத்து அறிவித்துள்ளதா ? இப்பொழுது அவர்கள் நிறைவேற்றுகின்ற ஹேமாவதித் திட்டத்திற்கு நாமும் சேர்ந்து ஒப்புதல் அளித்திருக்கும் இந்த நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்தி, ஹோகனக்கல் திட்டத்தைக் கொண்டுவருவதற்குப் பேச்சு வார்த்தை தொடங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1961-ஆம் ஆண்டில்தான் இந்தத் திட்டத்தைப்பற்றிய எண்ணங்கள் எல்லாம் வந்து, அதன் பிறகு பேச்சுவார்த்தை நடைபெற்று, இரு மாநிலங்களும் தங்கள் தங்களுடைய சாதக பாதகங்களை யோசித்துக் கொண்டிருக்கின்றன. நான் முதலில் சொல்லியபடி, இதிலே என்ன என்ன தடைகள் இருக்கின்றன என்பதை எடுத்துச்சொல்வது நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தைக்குக் குந்தகமாக விளைந்தாலும் விளையக்கூடும். ஆகையால், அதுபற்றியெல்லாம் நான் குறிப்பிட விரும்பவில்லை. பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மைசூர் மாநில அரசுக்கும் தமிழக மாநில அரசுக்கும் இடையே உள்ள நல்லுறவின் அடிப்படையில் பல திட்டங்கள் நிறைவேற வழி கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேதான், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் சேர்க்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இதுபற்றிப் பல ஆண்டுகளாகவே பேச்சு வார்த்தை நடந்து வந்தாலும் கூட அதை நிறைவேற்ற உடனடியாக முடியுமா, முடியாதா, எந்தச் சூழ்நிலையில் இருக்கிறது, அதை உடனடியாக நிறைவேற்றுவது மாத்திரம் அல்ல, மிகச் சிறிய அளவில் இருக்கிற திட்டங்களையும் நிறைவேற்ற உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மிக விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்கிற ஆவல் இருந்துதான் வருகிறது. 1961-ஆம் ஆண்டு முதல் இதுபற்றிய பேச்சுவார்த்தை நடக்கிறது. பவர் கமிஷனின் துணை

யுடனும், ஃஸோனல் கவுன்சிலின் ஒத்துழைப்புடனும் இரு மாநிலங்களுக்கும் பயன்தரத்தக்க வகையில் இது சுமுகமாக முடியும் என்ற காரணத்தினால்தான் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** *நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வரும் இந்தத் திட்டத்திற்கு எஸ்டிமேட் போன்ற இதரப் புள்ளிவிவரங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டுவிட்டனவா ? பேச்சுவார்த்தை முடியும் கட்டத்திற்கு வந்துவிட்டது என்ற நம்பிக்கை இருக்கிறதா ?*

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** *இருசாராரும் தங்கள் தங்கள் புள்ளிவிவரங்களை வைத்து இருக்கிறார்கள். இதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்து, இருசாராருக்கிடையே ஒப்பந்தம் ஏற்பட்டு விடுவதற்குத்தான் மத்திய அரசு உதவி புரிய வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.*

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** *இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடனே மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க அரசாங்கம் முன்வருமா ?*

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** *திட்டமே முடியாத நிலையில் இதைப்பற்றிச் சொல்வதற்கில்லை. அனல் மின்சாரத் திட்டத்தில்தான் செலவு அதிகம். நீர் மின்சாரத் திட்டத்தில் உற்பத்திச் செலவு குறைவுதான். ஆகவேதான் இதை அரசு வற்புறுத்தி வருகிறது.*

### மதுரா நதியின் குறுக்கே அணை

* 108 வினா—**திரு. கரு. சீமைச்சாமி :** *மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—*

*(அ) மதுரை மாவட்டம், அய்யம்பாளையத்தில் மதுரா நதியின் குறுக்கே ஒரு அணைக்கட்ட உத்தேசம் உண்டா ?*

*(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) and (இ) *இச் செயற்குறிப்பு ஆய்விலுள்ளது.*

**திரு. என். எஸ். வி. சித்தன் :** *இந்த அணைக்கட்டுத் திட்டத்தைப் பற்றிய விவரத்தை—எவ்வளவு செலவாகும், எத்தனை ஏக்கராக்கள் பயன்படும்—என்பதனைத் தெரிவிப்பார்களா—*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *இந்த அணைக்கட்டுத் திட்டம் நான் ஏற்கனவே இந்த அவையில் தெரிவித்த ஆய்வு செய்யப்பட்ட பத்துத் திட்டங்களில் ஒன்றாகும். இப்போது ஆய்வு செய்யப்பட்ட வகையில் இந்தத் திட்டத்திற்கு 62 லட்சம் ரூபாய் ஆகும். இதற்காக பீலிக்கரடு என்ற இடத்தில் நில ஆர்ஜிதம் செய்கிற செலவையும் சேர்த்துப் பார்த்தால் 86 லட்சம் ரூபாய் ஆகும். ஆயினும் நில ஆர்ஜிதத்திற்கு அந்தப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். ஆகவே செதில்பாறை என்ற இடத்தில் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கலாம் என்ற யோசனை இருக்கிறது.*

DR. H. V. HANDE : Sir, what is the acreage that may come under this project for irrigation purposes and also what is the rough cost for irrigating each acre and whether there is any possibility of this project being taken up in another year or two ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *புதிதாகப் பாசனம் அளிக்கப்பட இருக்கும் பரப்பு 2,250 ஏக்கரா. பாசன உறுதி அளிக்கப்படுவது தற்போதுள்ள பகுதி 2,283 ஏக்கரா. ஏக்கரா ஒன்றுக்கு ஆகும் செலவு 2,755 ரூபாய். உற்பத்திச் செலவு டன் ஒன்றுக்கு 4,419 ரூபாய். அநேகமாக இந்தத்திட்ட வேலை துவங்கப்படும் என்று கருதப்படுகிறது.*



### *Acquisition of wet lands for buildings.*

* 109 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have passed orders permitting the acquisition of wet lands in Kumbakonam taluk of Thanjavur district after 1st April 1967 for the construction of buildings?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் கட்டடங்கள் கட்டுவதற்காக நன்செய் நிலங்களைக் கையகப் படுத்துவதற்காக ஆணைகள் எதையும் 1—4—1967-க்குப் பிறகு அரசாங்கம் பிறப்பிக்கவில்லை.*

**திரு. என். எஸ். வி. சித்தன் :** *தமிழக அரசுப் போக்குவரத்துத் துறைக்குகட்டடம் கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்வதற்கு நஞ்சை நிலங்கள் வாங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ?*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *அப்படி எதுவும் ஆணைகள் பிறப்பிக்கவில்லை என்று சொன்னேன்.*

**திரு. கே. விநாயகம் :** *நில ஆர்ஜிதச் சட்டப்படி நஞ்சை நிலங்களை எந்தக் காரணத்திற்காகவும் அக்வயர் செய்யக்கூடாது என்று இருக்கிறது. அப்படி இருக்கும்போது 1—4—1967-க்குப் பிறகு ஆணை பிறப்பிக்கபடாமல் இருக்கலாம். அதற்கு முந்திய நாட்களில் நஞ்சை நிலங்கள அக்வயர் செய்யப்பட்டிருக்கின்றனவா ?*

(**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** *நிறைய எடுத்திருக்கிறார்கள்.*)

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *அதற்கான முழு விவரங்கள் என்னிடத்தில் இல்லை.*

### திருவோணம் பகுதிக்குப் பாசன வாய்க்கால்

* 110 வினா—**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** *மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தஞ்சை ஜில்லா, திருவோணம் பகுதியிலுள்ள சில கிராமங்களின் பாய்ச்சலுக்காகக் கல்லணைக் கால்வாயிலிருந்து நெய்வேலி வாய்க்கால் என்ற பெயரில் ஒரு வாய்க்கால் பிரிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனை செய்யப்பட்டதா ?*

*(இ) ஆம் எனில், அதன் முடிவுகள் யாவை ?*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

*(இ) இத்திட்டத்திற்கு அதிகச் செலவாகுமாதலால், இதனை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ள இயலாது.*

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** *மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள, விவசாய முன்னேற்றத்திற்கே வழியில்லாத நிலையில் உள்ள என் பகுதி; இந்த நெய்வேலி வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்றினால் பயன்படும். கிட்டத்தட்ட 1,500 ஏக்கரா பாசன வசதிபெறும். ஆகவே இதனை மறு பரிசீலனை செய்ய அரசாங்கம் முனவருமா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *காவேரி மேட்டூர் திட்டத்தின்கீழ் மேலும் பாசன அளவைச் சேர்த்துக்கொள்ளத் தலைமைப்பொறியாளர் இயலாது என்று குறிப்பிட்டிருப்பதாலும், திட்டத்திற்கு ஆகும் செலவை விடப் பயன் குறைவாக இருப்பதாலும் இது தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது.*

### *Mayuram-Madurai Express Buses*

* 111 *Q.*—THIRU K. M. RAMASWAMI GOUNDER : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce an express bus service between Mayuram and Madurai (via) Kumbakonam, Thanjavur and Tiruchirappalli and

(*b*) if so, the stage at which the matter now stands ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, Road-Train buses and double decker buses are introduced at Bangalore, in the Mysore State to facilitate passengers and also to effect economy. So, will this Government come forward to introduce such buses in our State ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : கொடுக்கப்பட்டிருக்கிற கேள்வியோடு தொடர்பு கொள்ளவில்லை.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, இப்போது இல்லாவிட்டாலும் மாயூரத்தில் இருந்து மற்ற இடங்களுக்குப் போக அங்கிருந்து எதிர்காலத்திலாவது பஸ்கள் புறப்படுவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது மாயவரத்தில் இருந்து தஞ்சை, திருச்சிக்குத் துரித பஸ்கள் போய்க்கொண்டிருக்கின்றன. மதுரை போக வேண்டுமென்று விரும்புகிறவர்கள் திருச்சிக்குப்போய் அங்கிருந்து செல்லலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கடுவிசைப் பேருந்து வண்டி, விரைவுப் பேருந்து வண்டி என்று இரண்டு போட்டிருக்கிறதே, இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இரண்டும் ஒன்றுதான்.

### *Imported foodgrains*

* 112 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the quantity of imported foodgrains allotted to this State for the year 1967–68 and the subsidy given by the Centre, therefor ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 1967-ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் முதல் 1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் வரையிலான காலஅளவிற்கு இந்திய அரசு இம்மாநிலத்திற்கு மொத்தம் 49,500 டன் கோதுமையும் 1,07,949 டன் கோதுமைப் பண்டங்களும் ஒதுக்கியுள்ளது. கோதுமையின் வெளியீட்டு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 55 ஆகும். இதில் ரூ. 12 உதவித்தொகையாகும். கோதுமைப் பண்டங்களின் விற்பனையிலும் குவிண்டால் ஒன்றுக்கு இதே அளவு உதவித் தொகை சேர்க்கப்பட்டுள்ளது. இது 31—12—1967 வரை செயலிலிருந்தது.

1—1—1968 முதல் இந்திய அரசு கோதுமை வெளியீட்டு விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 55-லிருந்து ரூ. 67 ஆக உயர்த்தியது. அதன் மூலம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 12 உதவித்தொகையை நிறுத்திவிட்டது. அதன் விளைவாகக் கோதுமைப் பண்டங்கள் குறித்த உதவித்தொகை





வழங்கப்படவில்லை. எனவே இறக்குமதி செய்யப்பட்ட கோதுமைக்கும், இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையிலிருந்து தயாரிக்கப்பட்ட கோதுமைப் பண்டங்களுக்கும் 1—1—1968 முதல் உதவித் தொகை வழங்கப்படுவதில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, is the allotment of the imported foodgrains like wheat and wheat products to our State sufficient to satisfy the local demands of our State and also since the subsidy has been abolished after March this year, is that subsidy to be borne by our State or the consumers are to pay that subsidy which is included in the issue price ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : My hon. Friend has clubbed two or three questions. As for the first part of the question whether it is adequate, it is not adequate. Periodical representations in the Chief Ministers' Conferences and through D.O. letters by the Hon. the Chief Minister have repeatedly been made and as a result of those representations, from July and August we have been getting adequate quantity of wheat. As regards the second part of the question, subsidy is included in the issue price and we take wheat issued from the Food Corporation of India and neither the State Government pay for subsidy nor are they asked to pay it at the counter. As regards the third part of the question, it is not passed on to the consumer.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, மத்திய அரசு கோதுமைக்காக 31—12—1967-ம் தேதிவரை உதவித் தொகை ஒரு குவிண்டாலுக்கு $12\frac{1}{2}$ ரூபாய் வரையில் கொடுத்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரிசியைக் குறைந்த விலைக்குக் கொடுப்பதற்காக, தமிழ் நாட்டுக்கு ரூபாய் 10 கோடி கொடுக்கவேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கேட்டும் அவர்கள் தரவில்லையே என் ? இதுவரையில் கோதுமைக்கு மொத்தத்திலே சப்ஸிடியாக எவ்வளவு வழங்கியிருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் :** கோதுமைக்குக் கடந்த வருடம் 31-ம் தேதி வரையில் சப்ஸிடி வழங்கப்பட்டுக்கொண்டு வந்தது. இதை ஆதாரமாக வைத்துத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரிசிக்காக 10 கோடி ரூபாய் கொடுக்கக்கூடாதா என்று கேட்டார்கள். அது ரொம்ப நியாயமான கோரிக்கை. கடந்த டிசம்பர் வரையிலும், எனக்குச் சரியான புள்ளிவிவரம் அதுபற்றித் தெரியவில்லை, கோதுமைக்காக இந்தியா முழுவதும் 100 கோடி ரூபாய் வரையில் கொடுத்திருக்கிறார்கள். மாநில அரசும்சரி, மத்திய அரசும்சரி, கொடுக்கின்ற உதவித்தொகை கடைசியில் சாதாரண மக்களுக்குப் போய்ச்சேரும் என்ற அளவிலேதான் சப்ஸிடி கொடுக்கிறார்கள். இங்கேயுள்ளவர்கள் நீங்கள் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் 100 கோடி ரூபாய் வரையில் கோதுமைக்காக சப்ஸிடி கொடுத்து, கடந்த டிசம்பர்வரை கொடுத்து நிறுத்திவிட்டது. அதுகூட எங்களுக்குச் சந்தோஷமல்ல. முதலமைச்சர்கள் மாநாட்டில், அது எங்களுக்குச் சாதகமாக இல்லையென்றும், அரிசிதான் நாங்கள் சாப்பிடுகிறோம் என்றாலும், இந்திய நாட்டிலே உள்ள பெரும்பாலான மக்கள் ஏழை எளியவர்கள், பாமர மக்களுக்குத்தான் அந்த சப்ஸிடி போய்ச் சேரும், ஆகவே அந்த சப்ஸிடியை வித்ட்ரா பண்ணுவது தப்பு என்றுதான் நாங்கள் வாதாடினோம். ஒவ்வொரு ஆண்டும் கோதுமைக்காகக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அதைப்போன்று படியரிசித் திட்டத்திற்காக உதவித் தொகை கேட்டபொழுது அதற்கு அவர்கள் இணங்கவில்லை.

**திரு. கே. விநயகம் :** சார், படியரிசித் திட்டத்திற்காக பத்து கோடி ரூபாய் கேட்டிருப்பது—முதலமைச்சர் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்பது, வாங்கிக்கொள்வது—அவர்களுடைய சாமர்த்தியத்தைப் பொறுத்

தது. கோதுமைக்கு சப்ஸிடியாக மத்திய அரசாங்கம் 100 கோடி ரூபாய் கொடுத்தது, இந்தியா தேசம் பூராவுக்குமா அல்லது நம்முடைய ராஜ்யத்திற்கு மட்டுமா? இந்தியா பூராவுக்கும் எவ்வளவு சப்ஸிடி கொடுத்தது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நம்முடைய மாநிலத்திற்கு ரொம்பக் குறைவாகத்தான் கொடுக்கிறார்கள். ஆகையினால் நம்முடைய மாநிலத்திற்குக் குறைந்துதான் வந்திருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துகொள்ள வேண்டியது இதற்குப் பின்னாலே இருக்கிற தத்துவத்தைத்தான். நீங்கள் பார்த்து படியரிசி போட்டுவிட்டீர்களே, நீங்கள்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்திய அரசு பெரும்பாலான மக்கள் சாப்பிடக்கூடிய கோதுமைக்காக இந்தியக் கருவூலத்திலிருந்து 100 கோடி ரூபாய் கொடுத்திருப்பதுதான் இதிலே கவனிக்க வேண்டிய அம்சம்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** இந்தியாவில் வடக்கே உள்ளவர்கள் கோதுமையைச் சாப்பிடுகிறார்கள். தெற்கே இருக்கிறவர்கள் அரிசியைச் சாப்பிடுகிறார்கள். வடக்கே கொடுக்கக் கூடிய உணவுப் பொருள்களை குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் 100 கோடி ரூபாய் சப்ஸிடி கொடுக்கிறபோது தெற்கே உள்ள அரிசி சாப்பிடக்கூடிய மக்களுக்கு, அரிசியைக் குறைந்த விலைக்குக் கொடுக்கக் கூடிய முறையில் அதே மாதிரி உதவித் தொகையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். கிடைக்கவில்லையே, கோதுமைக்காக 100 கோடி ரூபாய் அளவில் கொடுத்து இருப்பதால், இங்கேயும் அரிசிக்காக கொடுப்பதற்கு மீண்டும் நம்முடைய அரசாங்கம் வற்புறுத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் இந்த அரசு திருப்பித் திருப்பி வற்புறுத்திக்கொண்டு வருகிறது. உதவித் தொகையாகக் கொடுக்காவிட்டாலும் கடனாகவாவது கொடுங்கள், பின்பு மாரடோரியம் மாதிரி வட்டியைச் சேர்த்து ஒத்தி வையுங்கள் என்று கேட்டாகி விட்டது. இன்னும் நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற கட்டம் வந்ததாகத் தெரியவில்லை.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** பாராளுமன்றத்திலே மத்திய அமைச்சர் திரு. சிண்டே அவர்கள் வெளிநாடுகளிலிருந்து வாங்கும் பொழுது இந்த உணவுப் பொருள்களை 134 ரூபாய் கொடுத்து வாங்குவதாகச் சொல்லியிருக்கிறார்களே, இந்த நாட்டிலே உள்ள மக்களுக்குப் பாதிகூடக் கொடுக்கக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது பாராளுமன்றத்திலே கேட்கவேண்டிய கேள்வி.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, சென்னை, கோயம்புத்தூருக்கு மாத்திரம் ஒரு படி அரிசி போடுவதால் எட்டு கோடி ரூபாய் வரை கைப்பிடிப்பு ஏற்படுகிறது. ரூபாய் பத்து கோடி மத்திய அரசாங்கம் கொடுத்தால் சென்னை மாநிலம் முழுவதற்கும் படியரிசி போடுவதற்கு முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினர் அவர்களுடைய கணக்கே தவறானது. கடந்த பட்ஜெட்டின் போது கூட நான் விளக்கியிருக்கிறேன். எட்டு கோடி, பத்து கோடி என்று சொல்கிறார்கள். இப்பொழுது வரவு செலவுக் கணக்குகள் தயாராகிவிட்டன. சென்னையிலும், கோயம்புத்தூரிலும் எல்லாம் சேர்ந்து படியரிசித் திட்டத்திற்கு ஏற்படுகிற செலவே $2\frac{1}{2}$ கோடி ரூபாய்தான். ஐந்து கோடி ஆறு கோடி என்பது தவறான கணக்கு. (திரு என். எஸ். வி. சித்தன் : கவர்னர் அவர்கள் ஏழு கோடி என்று சொல்லியிருக்கிறார்களே) சரியாகக் கவனிக்கவில்லை. சென்னையிலும், கோயம்புத்தூரிலும் போடுவதில் $2\frac{1}{2}$ கோடி ரூபாய்தான். வெளியே உள்ளவர்களுக்கும் சப்ஸிடி என்ற முறையில் கொடுக்கப்படுகிறது. அதற்கு வேறு தனியாக ஆகிறது. இந்த வருடம் எட்டு கோடி என்று சொல்வது தோராயம்தான். உண்மையிலேயே நாலு கோடிதான் இந்த வகையிலே செலவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், கோதுமை சாப்பிடக்கூடிய மெஜாரிட்டி மக்களுக்கு மத்திய சர்க்கார் சப்ஸிடி கொடுக்கிறபோது அரிசி சாப்பிடுகிற மைனாரிட்டி மக்களுக்குக் கொடுக்காமல் பாரபட்சம் காட்டுவதால் அதற்காக வழக்குத் தொடுக்க உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மக்கள் மன்றத்தின் சார்பாக உண்மை நிலைமையை முதலமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோதுமைக்குக் கொடுக்கிறீர்களே, அரிசிக்குக் கொடுக்கக்கூடாதா என்று கேட்டார்கள். கோதுமைக்குக் கொடுப்பதையும் நிறுத்திவிட வேண்டாம், அவர்களுக்காவது கொடுக்கலாம் என்று நியாயத்தின் அடிப்படையிலே சொன்னார்கள். மக்களுடைய மன்றத்தின் மத்தியிலே அந்த வழக்கை வைப்பதைத்தான் இந்த அரசு செய்துகொண்டு இருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** மதுரை நகரத்திலும், கோவை நகரத்திலும் ஒரு படி அரிசித் திட்டத்தை........(குறுக்கீடு : மதுரை அல்ல, கோவை நகரத்தில்)—மதுரை என்று கூறினார்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முதல் கேள்வி இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களுக்கு மத்திய அரசு கொடுக்கும் உதவித் தொகையைப் பற்றியது....

**திரு. கே. விநாயகம் :** நீங்கள் டைவர்ஷனுக்கு விட்டு விட்டீர்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முதல் கேள்வியை ஒட்டி தாங்கள் துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** படி அரிசித் திட்டம் இதிலே வந்துவிட்டதே. The Hon. Food Minister was pleased to tell us that the Government was incurring a loss of Rs. $2\frac{1}{2}$ crores. Will he tell us whether this loss, for the doling out to two cities, is for the entire year or only for a part of the year? Will he clarify what would be the loss to be incurred if this is spread for the whole 12 months of a year?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதைப்பற்றிப் பல தடவை சொல்லியிருக்கிறேன். இந்தத் திட்டத்திற்கு கடந்த ஆண்டு மே மாதத்தில் இருந்து மார்ச் 31-ம் தேதி வரை ஆன செலவு $2\frac{1}{2}$ கோடி ரூபாய். வெளியே பேசுவது போலவோ, மன்றத்திலே சிலர் பேசுவது போலவோ ஐந்து கோடி ரூபாய், எட்டு கோடி ரூபாய் என்பது அல்ல. ஆனால் குடும்பக் கார்டு உள்ள எல்லாப் பகுதிகளிலும் நாம் கொள்முதல் செய்கிற விலையைக் காட்டிலும் குறைவான விலைக்குக் கொடுப்பதால் அதனால் ஏற்படக்கூடிய செலவு ஆண்டு ஒன்றுக்கு நான்கு கோடி ரூபாய் வரை ஆகும். ஆகவே, எட்டு கோடி ரூபாய் என்று சொல்லும்போது அதிலே முழு ஆண்டுக்கு மூன்றே முக்கால் கோடிதான் படி அரிசித் திட்டத்திற்காகச் செலவாகும். அதே அளவு நலனைக் குடும்பக் கார்டு இருக்கும் பகுதியிலுள்ள மக்களும் அனுபவிக்கிறார்கள். ஆகவே, பாரபட்சம் எதுவும் இல்லை.

## *Representation by Millers*

* 113—Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether the rice millers in Thanjavur district have represented to the Government to fix the out turn of ADT 27 at 63·5 per cent?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆம்.

THIRU K. VINAYAKAM : In milling this ADT 27 paddy was there any representation by the millers that they could not get more than 63·5 per cent whereas this Government was insisting that they should show an outturn of at least seventy-five per cent per bag ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The Hon. Member's impression is totally incorrect. In fact the Thanjavur District millers were raising a hue and cry that they were not getting as much allowance as before and that the outturn should be reduced. But it is not correct. During October last year, the Collectors were asked to report after a test hulling the outturn in order to fix the outturn for ADT 27 paddy. Various experiments were conducted in various districts. For example, in Tiruchirappalli district two experiments were conducted and the resultant outturn was 62·48 in one mill and 65·5 in another mill. In South Arcot district they conducted similar experiments. There they got an outturn of 64·4 in one mill and 67·7 in another mill. In Thanjavur District also in two mills tests were conducted. In one mill they got 65·9 and in another mill 64·8. The Regional Storage Officer, Thanjavur, conducted experiments and the outturn was 65·9 and 66·5 after drying. In spite of all these results the Thanjavur Collector recommended 64·5. But this was strongly opposed by all other Collectors who said that it would be proper only to have 65·5. Anyhow the Thanjavur millers have promised that they will regularly supply. It was agreed that it should be fixed at 64·5. The Government is confident that the test experiments conducted amply prove that 64·5 per cent outturn is remunerative enough to the miller and so we stick to it.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, தனியார் மில்களில் ஏ.டி.டி. 27 நெல்லில் 63.5 சத விகிதந்தான் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் தஞ்சையில் நடைபெறுகிற கூட்டுறவு மில்களில் இதைவிட அதிகமாகக் கிடைக்கிறது. அப்படி குறைவாகக் கிடைக்கிறது என்றால் அந்தப் புள்ளி விவரத்தைச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலோ, மேல் மன்றத்திலோ ஏற்கனவே கூறியிருக்கிறார்கள். 69, 70, 71 என்று திருவாரூர் அரிசி மில்லில் இருந்து அவுட்டர்ன் கிடைக்கிறது. தனிப்பட்டவர்கள் ஒத்துழைப்பு வேண்டுமென்பதற்காகத்தான் 63.5 சத விகிதம் தான் கிடைக்கும் என்று சொன்னாலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் 70 சத விகிதம் அவுட்டர்ன் கிடைக்கக்கூடிய 11 நவீன அரிசி ஆலைகளை இந்த ஆண்டு துவங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** இப்போது அரிசி மில்களிலே 63.5 சத விகிதந்தான் அவுட்டர்ன் கிடைக்கிறது என்று சொன்னார்கள். இந்த அளவு ஆலைச் சொந்தக்காரர்களுக்கு அனுகூலமாகத்தான் இருக்கிறதென்று தெரிகிறது. அரிசி அறைக்கும்போதும் டெண்டர் கால்ஃபார் பண்ணி தவிட்டுக்கு இவ்வளவு சத விகிதம் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்காது. ஆகவே, அந்த வகையில் உத்தரவிட சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதைப் பற்றி நேற்றும் சொன்னார்கள். தவிட்டிலும் லாபம் இருக்கிறது. மில்காரர்களுக்கு 4 ரூபாயிலிருந்து 6 ரூபாய் வரை





வருவதாக இருந்தாலும் $1\frac{1}{2}$ ரூபாய் என்றுதான் பேசிக்கொள்கிறார்கள். திரு. விநாயகம் அவர்கள் வாதாடுவது நியாயமான வாதம் அல்ல. வியாபாரிகள் என்ற முறையில் இன்னும் கொஞ்சம் அதிகமான லாபம் பெறுவதாக இருந்தாலும் நெருக்கடியான நிலைமையில் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டியிருக்கிறது.

**திரு. சி. கோவிந்தராசன் :** இப்போது சொல்லப்படுகிற அவுட்டர்ன் பற்றிய புள்ளி விவரம் பச்சரிசிக்கும் புழுங்கலரிசிக்கும் ஒரே மாதிரியானது தானா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது புழுங்கல் அரிசியைப் பற்றிய விவரங்கள்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** நவீன ஆலை மூலமாக 70 சத விகிதம் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு முக்கியமான காரணம் ஷெல்லிங்தான் என்று சொல்லுகிறார்கள். அப்படி இருந்தால் சிறு சிறு யூனிட்டுகளைத் தனியார் துறைக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போது ஷெல்லிங் முறைதான் மாநிலத்தில் அதிகமாக ஊக்குவித்து வரப்படுகிறது. மாண்புமிகு சுப்பையா முதலியார் அவர்கள் மிராசுதார்கள், விவசாயிகள் சிறிய ஆலையை வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அந்த யோசனையைப் பற்றிப் பரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதிலே முடிவுக்கு வந்தவுடனே மன்றத்திற்கு அறிவிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas the Government insist that a certain percentage of rice will have to be produced in the hulling process and whereas the hullers have expressed their difficulties after elaborate experimentation in the hulling process, does not the Government run the risk of tempting them to attempt the malpractice of mixing up more husk in the rice if the Government still insist upon this percentage ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Is the hon. Member persuading the millers to adopt such methods ?

THIRU K. VINAYAKAM : Much less. On a point of order, Sir, During question time it is the privilege of the members to put questions to the Ministers concerned and it is the duty of the Ministers to answer. It is not the privilege or duty of the Ministers to question the members. While answering my question the Chief Minister has asked me a question..

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member knows the delicacy of the English language. Certain answers can be in the form of questions....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழிலே கூட, "நீங்கள் வருகிறீர்களா ?" என்று கேட்டால் "வராமலா இருப்பேன் ?" என்று வினா வடிவிலே சொன்னாலும், "வருகிறேன்," என்ற பதிலையே குறிக்கும். "வினாவும் செப்பே வினா எதிர் வரினே" என்று தொல்காப்பிய சூத்திரமே இருக்கிறது.

[1968 ஆகஸ்ட் 23

## Canadian assistance for Agriculture

* 114 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government held any discussion with the Canadian High Commissioner in India in October 1967 in regard to assistance for the development of agriculture in this State; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :**

(அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

## Veterinary Hospital for Tiruttani

* 115 Q.—THIRU K. VINAYAKAM : Will the hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is a proposal to construct a Veterinary Hospital in Tiruttani, Chingleput district ; and

(b) if so, the estimated cost thereof ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) and (இ) : இப்பொழுது திருத்தணியில் கால்நடை மருத்துமனை எதுவும் இல்லை. ஆனுல் கால்நடை மருந்தகம் ஒன்று உள்ளது. இது வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்பொழுது திருத்தணி ஊராட்சி ஒன்றியம் மேற்படி கால்நடை மருந்தகத்திற்காக கட்டிடம் ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை மான்யத்தின் கீழ் ஒவ்வொரு மருந்தகத்திற்காகவும் ஒதுக்கியுள்ள 30,000 ரூபாயையும் இதற்காக ஊராட்சி ஒன்றியம் கொடுக்கும் பங்குத் தொகையாகிய 10,000 ரூபாயையும் பயன்படுத்தி அக் கட்டிடம் கட்டப்பட்டுவருகிறது.

**திரு. கே. விநாயகம் :** திருத்தணியில் இப்போது இருப்பது வில்லேஜ் கீ சென்டர் தான். அது வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. இதற்குப் பணத்தை ஒதுக்கி இடத்தைத் தேர்ந்தெடுத்து கொடுத்த பிறகும் கட்டடம் கட்டப்படாமல் இருப்பதற்கு, அப்படி தாமதமாவதற்கு காரணம் ஏதாவது உண்டா ? அப்படிக் கட்டுவதாக இருந்தால் எந்த வருடத்தில் அது முடியும் ? அதைத் திறந்து வைக்க அக்ரிகல்ச்சரல் மினிஸ்டர் வருவாரா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்போது திருத்தணியில் இருப்பது வெட்டரினரி டிஸ்பன்சரி. டைரக்டர் ஆஃப் அனிமல் ஹஸ்பண்டரி கொடுத்த புள்ளிவிவரத்தை வைத்துச் சொல்கிறேன். இந்த கால்நடை மருந்தகம் கட்டப்பட்டு வருகிறது. அதற்காக அரசாங்கத் தரப்பில் 30,000 ரூபாயும், பஞ்சாயத்து ஒன்றியம் 10,000, ஆக, 40,000 ரூபாயில் கட்டப்பட்டு வருகிறது. அங்கத்தினர் விரும்பினுல் வருவது குறித்து ஆட்சேபணை இல்லை.

## படிப்பு உதவிப்பணம்.

* 116 விஞ—**திரு வி. கே. கோதண்டராமன், திருமதி கே. பி. ஜானகியம்மாள், திரு எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கும் விஷயத்தில் அனுஷ்டிக்கப்படும் கொள்கை என்ன?



1968 ஆகஸ்ட் 23]

(இ) இப்போதும் ஜாதி அடிப்படையில் தான் கொடுக்கப்படுகிறதா ?

(உ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** சபைமுன் இது பற்றிய அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஜாதி, மத, இன பாகுபாடற்ற சர்க்கார், மதச்சார்பற்ற சர்க்கார் என்று சொல்லக்கூடிய இந்த நேரத்தில் ஹரிஜன வகுப்பு, ஆதிவாசி வகுப்பு, குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு, பின்தங்கிய வகுப்பு, மிகவும் பின்தங்கிய வகுப்பு என்று இப்படி ஜாதிவாரியாக பிரித்து உதவித் தொகை கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறதே, இதை நீக்கி பணக்காரர் ஜாதி, ஏழை ஜாதி என்று பண வசதி இல்லாத மாணவர்களுக்கு அவர்களின் வருவாயைக் கணக்கிலெடுத்துக் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இன்றைய அரசாங்கக் கொள்கைப்படி ஆதிவாசிகள், ஹரிஜனங்கள், மிகவும் பின்தங்கிய வகுப்பினர் ஆகியவர்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் ஜாதி ஏற்றத்தாழ்வற்ற வகையில் அவர்கள் உயர்வதற்காக அந்த முறையில் பொருளாதார ஏற்றத்தாழ்வை உத்தேசித்து ஆண்டொன்றுக்கு 300 ரூபாய்க்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும், 2,000 ரூபாய்க்கு கீழ் வருமானம் உள்ளவர்களுக்கும் வருமான அடிப்படையை வைத்துத்தான் மத்திய அரசும் இந்த அரசும் உபகாரச் சம்பளம் கொடுத்து கொண்டு வருகிறது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** உயர்ந்த ஜாதியில் பிறந்தார்கள் என்ற காரணத்திஞல் அவர்களுக்குத் தகுதி இருந்த போதிலும்கூட பல மாணவர்கள் ஸ்காலர்ஷிப் கிடைக்காமல் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே அம்மாதிரிப்பட்ட மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் ஸ்காலர்ஷிப் கிடைப்பதற்கு வழியில்லை என்ருலும் லோன் ஸ்காலர்ஷிப்பாவது கொடுத்து அவர்களுக்கு உதவி செய்ய முன்வருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** உயர்ந்த ஜாதியில் பிறந்தவர்களுக்கும் வருட வருமானம் 300 ரூபாய்க்குள்ளே இருப்பவர்களுக்கு மத்திய அரசு இப்போது உபகாரச் சம்பளம் கொடுத்துக்கொண்டு தான் வருகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மத்திய அரசால் வழங்கப்படக்கூடிய உபகாரச் சம்பளம் ஆண்டு வருமானம், எல்லா ஆதாரங்களிலிருந்தும் ரூ. 300 என்றிருக்கிறது. இந்த 300 ரூபாய் என்றிருப்பதை சிறிது உயர்த்துவதற்கு மத்திய சர்க்காரிடம் நம் சர்க்கார் ஆலோசனை சொல்லுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அது நல்லதொரு யோசனைதான். ஆலோசனை மத்திய அரசிடம் கூறப்பட்டிருக்கிறது.

**திரு. கே. போஜன் :** கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் வழங்கப்படுகிறது. ஆனுல் சர்க்கார் விடுதிகளில் இடம் இல்லாமல் தனியார் விடுதிகளில் தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இந்த ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுப்பதில்லை. ஆகவே அப்படி தனியார் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கும் இந்த ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அரசாங்க அனுமதி பெற்று தனியாரால் நடத்தப்படுகிற விடுதிகளில் இப்போதும் அந்த உபகாரச் சம்பளம் தரப்பட்டுக் கொண்டுதான் வருகிறது. ஆனுல் பல விடுதிகளில் போதுமான இடவசதியில்லாததால் பல மாணவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. சில குறிப்பிட்ட இடங்களில் எல்லாம் மாண

---

[a] 82–88-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

வர்களுக்கு நான்-ரெஸிடென்ஷியல் எமௌண்ட் கொடுக்கப்படுகிறது. சில யிடங்களில் ரெஸிடென்ஷியல் எமௌண்ட் கொடுக்கப்படுகிறது. அந்தந்த கல்லூரி முதல்வர்கள் இந்த மாணவர் இந்தக் கல்லூரியில்தான் படிக்கிறார் என்று ஒப்புக்கொண்டு அதற்கு அத்தாட்சி தருவார்களானால் அப்பேர்ப் பட்ட மாணவர்களுக்கு ரெஸிடென்ஷியல் எமௌண்டு என்ற உபகாரச் சம்பளம் கூட கொடுத்துகொண்டுதான் வருகிறார்கள்.

**திரு. கே. பி. எஸ். மணி :** அமைச்சர் அவர்களின் பதிலிலும், அங்கத்தினர்கள் கேள்விகளிலும் உயர்ந்த ஜாதி, உயர்ந்த ஜாதி என்று சொல்கிறார்கள். அந்தமாதிரி ஒரு ஜாதி இருக்கிறதா ? அரசியலமைப்புச் சட்டப்படி கொடுக்கப்படவேண்டிய சலுகைகள் தான் இப்போது இந்த அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டு வருகிறது. வாழ்க்கையில் அவர்கள் மனிதர்களாக வாழ்வதற்காகத்தான் இந்த ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. அந்தக் கொள்கையைத்தான் இந்த அரசாங்கம் அனுஷ்டிக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** வருமானத்தி லுள்ள ஏற்றத்தாழ்வை அனுசரித்தும், உயர்ந்த வகுப்பு என்ற வகையில் பல்வேறு துறைகளில் பல இனங்களில் பல வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள். சிலர் அத்தகைய வாய்ப்பினை இழந்திருக்கிறார்கள். ஆகவே அப் படிப்பட்ட வாய்ப்பினைப் பெற்றவர்கள், அப்படிப்பட்ட வாய்ப்பினை இழந்தவர்கள் என்ற வகையில்தான் கல்விச் சலுகை போன்ற சலுகைகள் அளிக்கப் பட்டு வருகின்றன.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய என்று இரண்டு வகையாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் சலுகைகளில் ஒரு வித்தியாசமும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க இப்படிப் பிரித்து வைப்பதன் அவசியம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய என்றிருப்பது கூட வருமானத்தை உத்தேசித்துத் தான் இருக்கிறது. நிதி இலாகாவைப் பொறுத்தவரையில் எந்தெந்த அளவிற்குக் கொடுக்க முடியுமோ அவைகளை வகைப்படுத்துகிற வகையில் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய என்று பாகுபாடு படுத்தி அதில் கூட தேர்வு எண்கள் எந்த அளவிற்கு இருக்கின்றன என்று பார்க்கிறார்கள். அந்தத் தகுதி எண்கள் கூட மிகவும் பின்தங்கியவர்களாக இருந்தால் 45 சதவிகிதம், பின்தங்கியவர்களாக இருந்தால் 50 சதவிகிதம் என்றும் மதிப்பிட்டு இந்த உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப் பட்டு வருகின்றன.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் :** இந்த உதவித் தொகை வருட இறுதியில் கொடுக்கப்படுவதால் மாணவர்களுக்கு முதலில் சம்பளம் கட்டுவதற்கும், அல்லது விடுதிப் பணம் கட்டுவதற்கும் கஷ்டமாக இருப்பதால் வருட ஆரம்பத்திலேயே இந்த உதவித் தொகையைக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஹரிஜன மாணவர்களுக்கு மத்திய அரசும் பணம் கொடுக்கிற காரணத்தினால் ஹரிஜன மாணவர்கள், ஆதிவாசி மாணவர்கள் தங்குதடையின்றி யார் விண்ணப்பம் போட்டிருந்தாலும் அவர்களுக்குத் தர முடிகிறது. பின்தங்கிய மாணவர்கள், மிகவும் பின்தங்கிய மாணவர்களுக்கு தேர்வு எண்கள், அவர்கள் எந்த வருமான அடிப்படையில் வருகிறார்கள் என்பதையெல்லாம் பரிசீலிக்கவேண்டியிருக்கிறது. எனவே ஆதிவாசிகள், ஹரிஜனங்களுக்கு உடனே உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டு விடும். அவர்களுக்கு அடையாளச் சீட்டுகள் கல்லூரிகளில் தரப்பட்டு வந்தது. முதல்வர்கள் அந்த ஐடென்டிபிகேஷன் கார்ட்ஸை மதிக்கவில்லை என்ற புகார் வந்தபிறகு அட்ஹாக் எமௌண்டாக முன்பணமாக ரூ. 200 ஆதிவாசி மாணவர்களுக்கும், ஹரிஜன மாணவர்களுக்கும் மட்டும் கொடுக்க வகை செய்யப் பட்டிருக்கிறது.



**திரு. என். ராஜாங்கம் :** சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட ஹாஸ்டல்களில் தங்கியிருப்பவர்களுக்கு மட்டுந்தான் இந்த ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. விடுதியில் இடம் கிடைக்காமல் எங்கேயாவது சாப்பிட்டு படித்தாகவேண்டுமென்று படிக்கிறவர்களுக்கு அது கொடுக்கப்படுவதில்லை. ஆகவே எங்கு தங்கி சாப்பிட்டுப் படித்தாலும் அவர்கள் உண்மையில் படிக்கிறார்கள் என்றால்—உள்ளூரில் இல்லாது வெளியூர்களில் தங்கிப் படிக்கிறார்கள் என்றால்—அவர்களுக்கு இந்த ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுத்தே தீரவேண்டுமென்று அரசாங்கம் ஒரு அறிக்கை பிறப்பிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அரசாங்க அங்கீகாரம் பெறப்படாத விடுதிகளில் தங்குவதற்காக அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது. உள்ளபடியே அவர்கள் ஒழுங்காகப் படிக்கிறார்களா அல்லவா என்பது அரசாங்கக் கண்காணிப்பில் வரமுடியாது. ஒப்புதல் பெற்ற விடுதிகளாக இருந்தால் அந்தக் கண்காணிப்பு இருக்க முடியும். ஒப்புதல் பெறாத விடுதிகளில், எங்கேயாவது தங்கிப் படிப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிப்பட்ட வசதி கிடைக்காதவர் முற்பகல்
களுக்கு நான்-ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் தருவது ஏற்கனவே இருந்து 10-00
வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரம் முடிந்து விட்டது. பேரவையின் அனுமதியோடு இன்னும் சிறிது நேரம் அதற்காக எடுத்துக்கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். அடுத்து கேள்வி எண் 117.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இங்கு கொடுத்திருப்பது எவ்வளவு பெரிய பட்டியல் என்பது தெரியும். ஒரு உப கேள்வி தான் எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள். இன்னொரு உப கேள்வி கேட்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சரி, துணை வினாவைக் கேளுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த ரிப்போர்ட்டிலே ஹாஸ்டலில் தங்கிப் படிக்கக் கூடிய மாணவர்களுக்கு உண்டுறை செலவுக்காக சென்னையிலுள்ளவர்களுக்கு மாதம் 40 ரூபாய் என்றும், மற்ற ஊர்களில் உள்ளவர்களுக்கு மாதம் 35 ரூபாய் என்றும் இருக்கிறது. இது எந்தக் காலத்திலே போட்டதோ தெரியாது. ஆனால் இன்று உண்டுறை செலவுக்கு மாதத்திற்கு 70 ரூபாய், 80 ரூபாய் ஆகிறது. ஆகவே, இதை இரட்டிப்பாக ஆக்கி கையில் கொடுக்காவிட்டாலும் கூட அவர்களுக்குச் சோற்றைப் போட்டு திருப்திப் படுத்தும் அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, இப்பொழுது ஒதுக்கியுள்ளது மிகவும் குறைவாக இருப்பதால் மத்திய சர்க்காருக்கு இந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று மாநில அரசு எழுதியிருக்கிறது.

## பூம்புகார்.

***1 17 வினா—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இலக்கியச் சிறப்பு பெற்ற "பூம்புகார்" நகரத்தை பண்டைய சிறப்புகளை எடுத்துக் காட்டும் வகையில் உல்லாசப் பயணிகள் பார்ப்பதற்குரிய இடமாக மாற்றியமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை.

**திரு. எஸ். கணேசன் :** தலைவரவர்களே, உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பிறகு பூம்புகார் நகரம் புதிய சிறப்புப் பெற்றிருக்கிறது. சிலப்பதிகாரக் காட்சிகளை உருவகப்படுத்தும் சிற்பக் கலைக்கூடம் அமைக்க மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கால்கோள் நடத்தியிருக்கிறார்கள். அதையொட்டி உல்லாசப்பயணிகள் நிறையப்பேர் வந்து பார்த்துச் செல்வதால் அங்கு உல்லாசப்பயணிகள் விடுதி அமைக்க உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** கால்கோள் விழா நடத்தியிருக்கின்ற அந்த எண்ணம் நல்ல முறையிலே வெற்றிகரமாக உருவாக்கப்பட்டு, உலகப்பயணிகள் அதிகமாக வருவதற்குக் கவனத்தை ஈர்க்கின்ற நிலையில் பூம்புகார் இடம் பெற்றால், பிறகு பயணிகள் மாளிகை பற்றி ஆலோசிக்கலாம்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, பண்டைப் பூம்புகார் இருந்த இடத்தை ஆராய்ச்சி செய்ய திரு. மணவாள ராமானுஜம் அவர்களை முந்திய அரசாங்கத்தில் அமைந்தது உண்மையா ? அதுபற்றி இந்த அரசுக்கு ஏதேனும் விவரம் தெரியுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அது இந்தக் கேள்வியோடு தொடர்பு கொண்டது அல்ல.

**திரு. கே. விநாயகம் :** சார், பண்டைய காலத்து பூம்புகார், அதாவது இலக்கியத்திலே பெருமையாகச் சொல்லப்படும் பூம்புகார் இப்பொழுது இல்லை என்றும், அதைக் கடல் விழுங்கி விட்டதாகவும் சொல்லப்படுகிறதே, அப்படியிருந்தால் புதிய பூம்புகார் யாரால் நிறுவப்பட்டது, அதற்கு கால்கோள் விழா ஏன் செய்ய வேண்டும். இதை விளக்க முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பழைய சிறப்புக்குரிய பூம்புகார் நகரம் இங்குதான் இருந்ததாகக் கல்வெட்டுக்களின் மூலமாகத் தெரிகிறது. இதுபற்றித் தனியாகக் கேள்விபோட்டால் சரியான பதிலைத் தரலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஏற்கனவே உள்ள பூம்புகாரையொட்டித்தான் இந்த பூம்புகார் இருக்கிறது. ஒரு பகுதி அழிந்துதான் போய்விட்டது. இப்பொழுதுள்ள பூம்புகாரில் 6 அடிக்குக் கீழே தோண்டிப் பார்த்தால் ரோமானிய நாட்டு நாணயங்கள் கிடைத்ததாலும், ஜாடி ஓடுகள் கிடைத்ததாலும் இது அதன் பகுதிதான்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவரவர்களே, இன்று பூம்புகார் என்று சொல்லப்படும் இந்தப் பகுதிக்கு காவிரிப்பூம்பட்டிணம் என்று ஒரு பெயரும் உண்டு. காவிரிப்பூம்பட்டிணத்தைக் கடல் விழுங்கி விட்டதென்றும், காவிரி கடலிலே கலப்பதாலே புகார் என்று சொல்லப்படுகிறது என்று கூறப்படுகிறதே அது உண்மையா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** உண்மையை ஒத்துக்கொள்கிறேன்.

### கப்பலூர் தியாகராசர் ஆலை.

***118 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு சட்ட–கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கப்பலூர் தியாகராசர் ஆலையில் வேலை செய்பவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன ?

(உ) மற்றுமுள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பது குறித்து நிர்வாகத்தினர் அரசிடம் மனுச் செய்துள்ளனரா ?

(எ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :**

(அ) சுமார் 360 பேர்கள்.

(இ) 56 பேர்கள்.

(உ) இல்லை.

(எ) வினாவிற்கு இடம் இல்லை.

### அறந்தாங்கி துணைப்பதிவாளர் மேல் புகார்.

***119 வினா—திரு. சா. மெய்யப்பன் :** மாண்புமிகு சட்ட–கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி துணைப்பதிவாளர் பேரில் அழியாநிலை தி.மு.க. செயலர் புகார் மனு கொடுத்திருக்கிறாரா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**Dr. H. V. Hande :** Is it a fact that some complaint from some source was made ? Was there any complaint against this officer from any source ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திரு. எம். பெரியசாமி என்பவரிடமிருந்து ஒரு புகார் வரப்பட்டது. அதை மேலதிகாரி விசாரித்து அது போன்ற குற்றச்சாட்டுகள் மேலும் எழாவண்ணம் சப்-ரிஜிஸ்தார் நடந்து கொள்ள வேண்டுமென்று எச்சரித்திருக்கிறார்.

### தொழிலாளர்கள் ஓய்வுபெறும் வயது.

***120 வினா—திரு. எம். பூபதி :** மாண்புமிகு சட்ட–கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாலை, மோட்டார் இன்ஜினீயரிங், சிமெண்டு, ஆஸ்பஸ்டாஸ், டீ, காப்பி, போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களின் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், இம்முறை என்று முதல் அமலுக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

**திரு. எம். பூபதி :** தலைவரவர்களே, இவ்விஷயத்தை மீண்டும் புனராலோசனை செய்ய உத்சேம் உண்டா ? வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வருவதால் கோவையிலே 20,000 பஞ்சாலை, இன்ஜினீயரிங் தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்களே, இனிமேலாவது 58 வயதானவர்களுக்கு "ஓல்ட் ஏஜ் பென்ஷன் ஸ்கீம்" கொண்டுவர உத்தேசம் உண்டா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தக் கேள்வி ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த உத்தேசமுண்டா என்பதைப் பற்றியது. வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். அதுவே அதற்கு விடையாக அமையும்.

**திரு. கே. என். குமாரசாமி :** சார், ஓய்வு பெறும் வயதை 60-க்கு உயர்த்தாவிட்டாலும் அந்த வேலையிலிருந்து போகும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்கு அந்த ஆலைகளில் வேலை கொடுக்க ஏற்பாடு செய்யக்கூடிய நிலைமையை அரசாங்கம் உண்டாக்குமா ? அதாவது வாரிசு முறையை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வாரிசு முறை அமைப்பது அரசியல் அமைப்புக்கு முரணானது என்று இந்தியத் தலைமை நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. எனவே, சட்டத்திலே அதை உருவாக்க முடியாது. இப்பொழுது ஆங்காங்குள்ள தொழிற்சங்கங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டு நடைமுறையில் இருக்கின்றன.

*Post of Secretary to Government.*

*101 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to re-designate the posts of 'Secretary to Government' as 'Secretary to a particular Ministry'?

THE HON. THIRU C. N. ANNADURAI : No, Sir.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவரவர்களே, பல சந்தர்ப்பங்களில் அமைச்சர்களுக்கு விரோதமாகக்கூட நடக்கக்கூடிய நிலைமை உருவாக முடிகிறது. இதை நீக்க "அரசாங்கச் செயலாளர்" என்ற நிலையை மாற்றி "அமைச்சகத்தின் செயலாளர்" என்று அமைக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் கூறும் இடர்ப்பாடுகளைப் பற்றி இந்த அரசுக்கு எந்தவிதமான தகவலும் இல்லை.

*Provision of scooters to Sub-Inspectors*

*102 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have proposed to provide Sub-Inspectors of Police in Tamilnad, with scooters ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :**

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், நம் மாநிலத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கு ஏராளமான கிராமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 10 மைல்களுக்கு அப்பால் போலீஸ் காவல் நிலையம் இருப்பதால் தொடர்ந்து அவர்கள் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. குற்றம் நடந்தவுடன் அந்த இடத்தில் விரைந்து சென்று உடனடியாகக் கவனிப்பதற்கு இந்த அரசு அவர்களுக்கு ஸ்கூட்டர்கள் கொடுக்க முடியாவிட்டாலும் கூட சர்க்கார் நடத்தும் லாட்டரி சீட்டிலே 100 சீட்டுகளை இலவசமாகவோ, அல்லது கடனாகவோ கொடுத்து அவர்கள் யோகக்காரர்களாக இருந்தால் பரிசு விழுந்து அதன் மூலம் இந்த வாகனங்கள் வாங்கிக்கொள்ள இந்த அரசு உதவி செய்யுமா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினரவர்கள் இந்த அதிர்ஷ்டச் சீட்டைக் கொடுத்து அதன் மூலம் லாபம் வரும்படியாகச் செய்து ஸ்கூட்டர்கள் வாங்கிக்கொள்ளச் செய்யலாமா என்று கூறி போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் விஷயத்தில் இவ்வளவு அக்கறை காட்டுவதற்காக அவர்கள் நன்றி தெரிவித்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். இருக்கும் நிலை என்னவென்றால், சர்க்கார் கோட்டாவிலே எவ்வளவு ஸ்கூட்டர்கள், லாம்பரட்டாக்கள் என்று குறியீட்டு எண் இருக்கிறது. அந்த அடிப்படையில் இன்னின்னாருக்குக் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இதிலே சப்-இன்ஸ்பெக்டர்கள் விரும்பினால் கோட்டா எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அவர்களுக்குக் கிடைக்கும்.



**திரு. கரு. ராம, கரியமாணிக்கம் அம்பலம் :** சார், இப்பொழுது போலீஸ் ஸ்டேஷனில் மனுக் கொடுப்பவர்கள், போலீஸ் அதிகாரிகளை டாக்ஸி வைத்து கூட்டிக்கொண்டு வரக்கூடிய நிலை இருக்கிறது. அதைப் போக்க ஸ்கூட்டர் கொடுக்காவிட்டாலும் ஜீப் கொடுத்தாவது அவசரமாகக் கேஸ்களைக் கவனிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பொதுவாகப் பல இலாகாக்களில் ஜீப்புகள் தவறான முறையில் பயன்படுத்தப்படுகின்றன என்ற முறையில் புகார் வந்தவண்ணம் இருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்களின் யோசனைப்படி ஜீப்புகள் வழங்கப்பட்டால் இப்படிப்பட்ட புகார்கள் வர இடம் உண்டு. அந்தக் காரணத்தினாலேயே தர முடியாது என்று சொல்லவில்லை. ஜீப்புகள் விஷயத்திலும், ஸ்கூட்டர்கள் விஷயத்தில் இருப்பதுபோல இவ்வளவுதான் பெற முடியும், தர முடியும் என்ற கட்டுப்பாடுகள் இருக்கின்றன.

*City compensatory allowance to officers*

*103 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Indian Officers' Association in Madras has requested the Government to modify the rules for the grant of city compensatory allowance so as to bring them on a par with Central Government rules ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஆம்.

THIRU T. MARTIN ; May I request the Hon. Chief Minister to state what action the Government has so far taken on that representation ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The Government is satisfied with the action already taken.

*H.R.A. to Government Employees*

*104 *Q.*—THIRU T. MARTIN :<br>THIRU K. CHEEMAICHAMY : } Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether there is any proposal to give house rent allowance to the State Government employees during this fianancial year, on a par with Central Government scale ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :**

(அ) இல்லை, ஐயா.

(இ) இந்த வினா எழவில்லை.

THIRU T. MARTIN : May I request the Hon. Chief Minister to state the extra benefits which will accrue to the State Government employees if the City Compensatory Allowance is determined on the scale allowed by the Central Government ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The question is (*a*) whether there is any proposal to give house rent allowance to the State Government employees during this financial year on a par with

Central Government Scale (*b*) and, if so, the details thereof. The answer is ' No, Sir ' for (*a*) and ' The question does not arise ' for (*b*). I may add to what I have already stated that only the financial implication stands in the way of the realisation of this objective.

DR. H. V. HANDE : Sir, recently there was a non-gazetted Officers' conference and the officers made a number of demands to be met by the State Government. This request by the non-gazetted officers and all the State officials that the house rent allowance must be on a par with the Central Government house rent allowance has been there for a long time. In view of the request that they have been making and in view of the fact that they have extraordinary confidence in this Government, although they are also fully aware of the financial implications, will the Chief Minister give some sort of assurance that the whole matter can be examined so that their representation can be fruitfully met by the Ministry ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The Hon. Member is expected to be aware of the plight of the Government as he is aware of the plight of the non-gazetted officers. Therefore I would request him to plead with the officers to wait for such time till the Government is strong enough to bear this extra burden.

THIRU K. VINAYAKAM : Instead of voicing forth the grievances of the non-gazetted officers on the one side and the expression of inability to redress them due to depletion of finances from the Government side, will the Government take up the matter with the Central Government and ask for more aid towards this item instead of asking for some others which are of no immediate value ? Will the Government take up this issue with the Central Government ?

THE HON. THIRU C. N. ANNADURAI : As in many other issues, this issue also was taken up with the Central Government. The answer has been more or less the same for any issue that has been raised.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அரசினர் தீர்மானம்

### விதி 41 (3)-ஐ தளர்த்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டுக்கு மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஒரே கூட்டத்தில் கொண்டுவருவது சம்பந்தமான விதியைத் தளர்த்த வேண்டுமென்ற் தீர்மானத்தை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, "ஒரே கூட்டத்தில் 2-க்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்று 41 (3) விதியின்கீழ் உள்ள தடையை இன்று தளர்த்த வேண்டும்" என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.





தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது டாக்டர் ஹாண்டே அவர்கள் மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

## 3. கவன ஈர்ப்பு.

### (i) இராமேஸ்வரத்தில் நிலையான கடற்பாலம் இல்லாமை

DR. H. V. HANDE : Sir, I call the attention of the Hon. the Minister for Public Works to a matter of urgent public importance, viz., the absence of a pucca pier in Rameswaram for the disembarking of lakhs of Indian repatriates from Ceylon who are likely to come to India regularly from January 1969.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, 1964 டிசம்பரில் தென் இந்தியாவின் தென்கோடி முனையைப் புயல் தாக்கிய போது முன்பிருந்த தனுஷ்கோடி துறைமுகத்திலுள்ள கடற்பாலமும் இருப்புப்பாதையும் நீரில் அடித்துச் செல்லப்பட்டன. இந்திய—இலங்கைப் படகுப் போக்குவரத்தைத் தொடர்ந்து நடத்த வசதியாயிருக்கும் பொருட்டு மாநில அரசாங்கம் இராமேஸ்வரத்தில் தாற்காலிக மரத்தோணித் துறையை அமைத்தது.

இந்திய–இலங்கைப் படகுப் போக்குவரத்திற்கு நிலையான கடற்பாலம் ஒன்றைக் கட்டுவது பற்றி இந்த அரசாங்கம் ஆலோசித்தது. இராமேஸ்வரத்திற்கு அருகிலுள்ள ரெட்டத்தாழையில் ஓர் இடம் இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த இடத்திற்கு இந்திய அரசும் ஒப்புதல் அளித்தது. கடற்பாலம் கட்டுவதற்கும், பயணச்சாமான் வைப்பதற்கும், சுங்கச்சாவடி அமைப்பதற்கும், மின்சாரம் நீட்டித்தல் முதலியவற்றுக்கும், ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டுத் தொகைக்கான திட்டத்தைத் (கட்டிட) தலைமைப் பொறியாளர் பணிந்தனுப்பினார்.

இதற்கிடையில், இலங்கையிலிருந்து இந்தியர்கள் தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்படுவதனால், அவர்களை இங்கு கொண்டுவந்து சேர்ப்பதற்கான ஏற்பாடுகள் முக்கியமடைந்தன. இலங்கையிலிருந்து தாயகத்திற்கு அனுப்பப்படவிருப்போரின் வருகையால் ஏற்படும் சிக்கலுக்குத் தீர்வுகாண இராமேஸ்வரத்திலுள்ள தாற்காலிக ஏற்பாடுகள் சிறிதும் போதுமானவை அல்ல. தமிழ்நாட்டு அரசாங்க அதிகாரிகளுடன் மத்திய அரசு மறுவாழ்வு அமைச்சு அதிகாரிகள் இது குறித்துக் கலந்து பேசினர். புது டில்லியில் 1968, மே திங்களில் நடைபெற்ற கூட்டத்தில் தனுஷ்கோடியில் இருக்கும் கடற்பாலத்தை மீண்டும் புதுப்பித்து, இராமேஸ்வரத்திலிருந்து பாம்பனுக்குச் செல்லும் சாலையை இணைத்து தனுஷ்கோடியிலிருந்து இராமேஸ்வரத்திற்குச் சாலை அமைப்பதும், தனுஷ்கோடியில் தற்போதுள்ள கட்டிடங்களைச் சீர்படுத்துதலும், அப்பகுதிக்கு நீர் வழங்குவதையும் மின்சாரம் வழங்குவதையும் நீட்டித்தலும் இச்சிக்கலுக்கு விரைந்த தீர்வு காண்பதாகுமென்று அதில் கலந்துகொண்டவர்கள் ஒருமனதாக ஒப்பினர், இலங்கையிலிருந்து திரும்பிவரும் அகதிகளின் உடனடித் தேவைகளை நிறைவு செய்ய இவற்றைச் செய்து முடிக்க வேண்டும். மேற்சொன்ன எல்லாப் பணிகளுக்கும் ஏற்படும் மொத்தச் செலவு சுமார் ரூ. 75 இலட்சம். தனுஷ்கோடியில் உள்ள கடற்பாலத்தைச் சீராக்கும் பணிக்கு மட்டும் ரூ. 17 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. பல பணிகளுக்கு அவசியமான திருத்திய மதிப்பீடுகளைத் தலைமைப் பொறியாளர் தயாரித்தார் ; இவை இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகளுக்கு முறையான ஒப்புதல் கிடைப்பதை எதிர்நோக்கி, இதனை நிறைவேற்றும் பணிகளை மேற்கொண்டு நடத்துமாறு இந்திய அரசு மாநில அரசாங்கத்தை அனுமதித்துள்ளது.

[திரு. மு. கருணாநிதி] [1968 ஆகஸ்ட் 23

மேற்சொன்ன செயற்குறிப்புகளையொட்டி, இராமேஸ்வரம் துறைமுகத்திற்கு அருகிலுள்ள ரெட்டத்தாழையில் நிலையான கடற்பாலம் ஒன்றை கட்டும் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்தும் அவசியம் ஏற்படவில்லை.

DR. H. V. HANDE : There are two aspects involved. First of all to build a pier it takes a long time and it involves extraordinary cost. So, will it be possible for the Government to examine immediately the feasibility of having at least a motorable road of ten miles or eleven miles between Rameswaram and Dhanushkodi? Urgently it can be built without waiting for the sanction of the Centre. That will solve the problem. Will that be done ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *தனுஷ்கோடியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு சாலை அமைக்கும் திட்டத்தைத் துரிதப்படுத்த டெண்டர் வரையிலே கோரப்பட்டது என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.*

### (ii) தீயினால் பாதிக்கப்பட்ட குடிசை வாழ்வோர் நிலை

DR. H. V. HANDE : Sir, I call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance, viz. the living conditions of more than three lakhs of hut dwellers after the series of fires in the slums and the steps to improve their living conditions.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Deputy Speaker, Sir, the call attention notice relates to the living conditions of more than three lakhs of hut dwellers after the series of fires in the slums and the steps to improve their living conditions.

Under the scheme of relief to the victims of fire accidents who are poor and whose monthly pay excluding allowances is Rs. 50 and below or who pay an assessment of Rs. 10, a cash grant of Rs. 60 and clothing grant of Rs. 20 per family were paid for replacement of lost clothes and utensils. After the fire accident the victims in Madras City are paid the cash and clothing grant by the District Collector irrespective of their income. The Government have recently issued orders for constructing fire proof houses at a cost of Rs. 350 each in suitable sites in Pulianthope and Sivashanmugapuram (Teynampet) areas and on an extent of five acres of Corporation land in S. No. 128/1 of Perambur through the Public Works Department. The number of houses estimated to be constructed in these places is as indicated below :—

| | |
|---|---|
| Pulianthope .. .. .. .. .. .. | 1,020 |
| Sivashanmugapuram (Teynampet) .. .. | 140 |
| S. No. 128/1 of Perambur .. .. .. .. | 840 |
| Total .. | 2,000 |

A sum of four lakhs from out of the City Fire Relief Fund has also been ordered to be placed at the disposal of the Chief Engineer (Buildings) who will construct the houses as deposit works.



1968 ஆகஸ்ட் 23] [Thiru K. A. Mathialagan]

There is under consideration of Government in Industries, Labour and Housing Department another proposal of the State Housing Board to construct about five hundred fire proof houses for fire victims in the land set aside for the Mambalam Tank Bund Scheme.

The Government have also decided to constitute a Slum Improvement Committee consisting of representatives from private associations in the Madras City with the Hon. Chief Minister as its Chairman for the purpose of improving the slums in a planned way and particularly to provide alternative accommodation to those slum-dwellers affected by the fires in the City.

DR. H. V. HANDE : Sir, with regard to the number of persons who have lost a lot of property, may I know whether anything can be done for them ? For instance, in Kosapet, they have lost the moulds with which they used to manufacture idols and so to rehabilitate them, will it be possible for this Government to consider that aspect of the matter ? Also, I want to know how much amount has been spent from the Chief Minister's Fund under this head so far and also will the Hon. Minister tell us how much amount is necessary to execute this job fully ?

(No reply.)

DR. H. V. HANDE : Sir, to my supplementary question no reply . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கலாம். ஆனால், அமைச்சர் அவர்கள் விடை அளிக்க வேண்டும் என்பது இல்லை. விடை அளிக்காமலும் இருக்கலாம்.*

DR. H. V. HANDE : Sir, should I take it that there is no answer from the Government ?

(No reply).

### (iii) ஒரு குறிப்பிட்ட கல்லூரிக்கு மட்டும் மனுச் செய்து கொண்ட மாணவருக்கு பிற கல்லூரிகளில் இடம் மறுக்கப்படுதல்

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Industries to a matter of urgent public importance, namely, the hardships caused to a number of students as a result of their applying to only one college and denial of seats to them in other colleges though seats are available there on the plea that they had not applied in those colleges and the need to admit those students in such colleges even though they had not applied earlier.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** *தலைவர் அவர்களே, அரசாங்கக் கல்லூரிகளில் பல்வேறு பாடப்பகுதிகளில் சேருவதற்கான விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய கடைசி நாள் ஒன்றை அக்கல்லூரி முதல்வர்கள் முடிவு செய்கிறார்கள். இதனால், குறிப்பிட்ட அந்த நாளுக்குள் பெறும் விண்ணப்பங்களை அந்தந்தப் பாடப்பகுதி வாரியாக வகைப்படுத்தி, தகுதி வரிசைப்படி பல்வேறு பாடப்பகுதிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கமுடியும்.*

அரசாங்கக் கல்லூரிகளில் பல்வேறு பாடப்பகுதிகளில் உள்ள இருக்கைகளை நிரப்புவதற்கு அடியிற் காணும் நடைமுறை பின்பற்றப்படுகிறது.

(1) குறிப்பிட்ட நாளுக்குள் பெறப்பட்டு பதிவு செய்யப்படுகிற விண்ணப்பங்கள், கல்லூரியில் சேர்ப்பதற்குத் தகுதியானவையென்று தெரிந்தால், அவை தேர்வுப்பட்டியலில் சேர்க்கப்பட்டு இது குறித்து அரசாங்கம் வெளியிட்டுள்ள உத்தரவுகளுக்கிணங்க முடிவு செய்யப்படுகின்றன.

(2) மேலே (1)-ல் குறிப்பிட்டுள்ளவாறு எல்லா விண்ணப்பங்களையும் ஆலோசித்து முடிவு செய்த பின்னர் சில கல்லூரிகளில் எந்த வகுப்பிலேனும் காலியிடங்கள் இருந்தால், கல்லூரிக் கல்வி இயக்குநரின் உத்தரவுக்கிணங்க, காலங்கடந்து வந்த விண்ணப்பங்களைக் கல்லூரி முதல்வர்கள் ஏற்றுக் கொண்டு இக்காலி இடங்களை நிரப்புவதற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இது குறித்து அரசாங்கக் கலைக் கல்லூரி முதல்வர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள உத்தரவுகளின் பொருத்தமான பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) குறித்த காலத்தில் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கல்லூரிகளில் சேர்க்கப்படுவதற்குத் தகுதியானவையென்று தெரிந்தால், அவற்றை உடன்பாடான முறையில் ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்.

(ஆ) மேலே (அ) பிரிவில் கூறியுள்ளவாறு எல்லா விண்ணப்பங்களையும் ஆராய்ந்து அவற்றின் மீது தகுந்த முடிவெடுத்த பின்னரும் காலியிடங்கள் இருந்தால் காலங்கடந்து அனுப்பிய விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்டு விதிகளுக்கிணங்க அந்தக் காலியிடங்களை நிரப்புவது பற்றி ஆராயலாம்.

குறிப்பிட்ட ஒரு மாணவர் விண்ணப்பங்களை அனுப்புவதற்காக முடிவு செய்துள்ள கடைசி நாளுக்குள் அந்தக் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்து கொள்ளாவிட்டாலும் அந்தக் கல்லூரியில் காலியிடங்கள் இருந்து, அவ்வமயம் அவர் அக்கல்லூரிக்கு விண்ணப்பம் செய்து கொண்டால், அக்கல்லூரியில் சேர்த்துக்கொள்ளலாமா என்று ஆராய்வதற்கு தடையேதுமிராதென்று மேற்சொன்னவற்றிலிருந்து நன்கு விளங்கும்.

கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதை இறுதி செய்து முடிப்பதற்கு ஜூலை 31-ம் நாள் கடைசிநாள் என்று பல்கலைக்கழகம் வழக்கமாகக் குறிப்பிடுகிறது. குறிப்பிட்ட ஒரு கல்லூரியில் மேலும் காலியிடங்கள் இருந்தால் அவற்றை நிரப்புவதற்கு பல்கலைக்கழகத்திடமிருந்து கால நீட்டிப்பிற்கான சிறப்பு அனுமதி பொதுவாகப் பெறப்படுகிறது. காலம் கடந்திருப்பினும் மாணவர்களிடமிருந்து வந்த புதிய விண்ணப்பங்கள் இந்த காலியிடங்களை நிரப்புவது குறித்து ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

எனவே, ஒரு கல்லூரிக்கு மட்டும் விண்ணப்பித்துக்கொண்ட மாணவர்களுக்குப் பிற கல்லூரிகளில் இருக்கைகள் கிட்டும்போது அவர்களுக்கு அவற்றை வழங்க மறுப்பதில்லையென்பதும் அக் கல்லூரிகளில் காலியிடங்கள் இருப்பதாக அவர்களுக்குத் தெரியும்போது அவர்கள் அக்கல்லூரிகளுக்கு விண்ணப்பித்துக்கொண்டால் முன்னதாகவே, அதாவது உரிய தேதிக்குள் அக்கல்லூரிகளுக்கு விண்ணப்பம் அனுப்பவில்லையென்ற காரணத்திற்காக அவர்களுக்கு இடம் மறுக்கப்படுவதில்லையென்பதும் மேற்கூறியவற்றிலிருந்து புலனாகும்.

அரசாங்க மானியம் பெறும் கல்லூரிகளைப் பொறுத்தவரை, அக்கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பது குறித்து பின்பற்றப்படும் நடைமுறை கல்லூரிக்குக் கல்லூரி வேறுபடுகிறது. உரிய காலத்திற்குள் பெற்று பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஆராய்ந்து முடிவு செய்த பின்னரும், அக்கல்லூரிகளில் காலியிடங்கள் இருந்து அவற்றில் மாணவர்கள் சேர விரும்பினால், அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனரே தவிர, அந்த இடங்களை அவ்வாண்டில் காலியாக விட்டு வைப்பதில்லை என்பதை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். அக் கல்லூரிகளில் உள்ள காலி இடங்களில்



சேரவிரும்புவோரிடமிருந்து புதிதாக விண்ணப்பங்கள் பெற்று அவை நிரப்பப்படுகின்றன எனக் கல்லூரிக் கல்வி இயக்குனருக்குத் தெரிய வருகிறது.

DR. H. V. HANDE : Sir, from the answer given by the Hon. Minister, there appears to be a slight difference with regard to admissions in Government Colleges and private colleges. Why not the Government give strict orders that the private colleges also should see that students are admitted irrespective of the fact whether they have applied earlier or not. Also, is it not necessary to exercise better control over the private colleges where misgivings and dissatisfaction were expressed that even the students who got good marks were not selected. Will it be possible for the Hon. Minister for Education to pull up those colleges and exercise better control if necessary through the Vice-Chancellor ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலில் அறிக்கையிலே குறிப்பிட்டபடி கல்லூரிகளிலே இடமிருந்து அங்கு போதுமான அளவுக்கு விண்ணப்பங்கள் இல்லாமல் இருக்குமானால், புதிய விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளலாம், ஏற்றுக் கொண்டு அந்த காலி இடங்களை நிரப்பலாம் என்ற உத்தரவு அரசாங்கக் கலைக் கல்லூரிகளுக்கு மட்டுமல்லாமல், மற்ற கலைக்கல்லூரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தனியார் கலைக் கல்லூரிகளிலும் காலி இடங்கள் இருந்தால் புதிய விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அந்த இடங்கள் நிரப்பப்படும். கடைசி தேதிக்குள் போதுமான விண்ணப்பங்கள் வரவில்லை, காலி இடங்கள் இருக்கின்றன என்ற நிலைமை ஏற்பட்டால், அதற்காக பல்கலைக்கழக துணைவேந்தரிடம் அனுமதி பெற்று புதிய விண்ணப்பங்கள் பெறப்பட்டு, காலி இடங்கள் நிரப்பப்படுகின்றன. ஜூலை 31-ம் தேதி கடைசி நாள் என்று வைத்திருந்தாலும், சில இடங்களில் நிலைமைக்கேற்றவாறு ஆகஸ்டு 16-ம் தேதி வரையில் சேர்த்துக்கொள்வதற்கு பல்கலைக்கழகத் துணை வேந்தரிடமிருந்து அனுமதி பெற்று சேர்த்துக்கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இடங்கள் காலி இருந்து, அனுமதி இல்லாத காரணமாக இருந்தால், கடைசி தேதிக்குப் பிறகு விண்ணப்பங்கள் வந்தாலும், கண்டோன் செய்து பல்கலைக்கழகத் துணைவேந்தரின் அனுமதி பெற்று சேர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எந்த ஒரு இடத்தையும் காலியாக விடவேண்டிய அவசியமில்லை. காலி இடங்களை நிரப்புவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளலாம் என்று கல்லூரி இயக்குனர் அவர்கள் தெரிவிக்கப்பட்டிருக்கிறார். காலம் கடந்து விண்ணப்பங்கள் வந்த காரணத்தினால், எந்த இடமும் நிரப்பப்படாமல் விட்டுவைத்திருக்கும் நிலைமை இல்லை. எல்லா காலி இடங்களும் துணைவேந்தர் அனுமதி பெற்று நிரப்பப்பட்டுவிடும். எந்தக் கல்லூரியிலாவது இடம் காலியிருந்து ஏதாவது இடர்பாடான சூழ்நிலை இருக்குமானால், இப்பொழுது கூட விண்ணப்பித்துக்கொண்டால் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் அனுமதி பெற்று சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு வழிவகைகள் செய்யப்படும்.

DR. H. V. HANDE : Sir, now the students have to apply for a number of colleges and for each college the application fee is Rs. 5. If a student applies for six colleges, he has to spend Rs. 30 towards application fees. So, why not this Ministry consider ways and means to see that at least from the next academic year they collect all these applications and pool them together because most of the students are poor and they have got free education. Now the application fee is collected by a number of colleges and if they do not apply for a number of colleges, they are not sure of

their admissions. So, will the Hon. Minister see that the applications are pooled together and that no student pays the application fee for more than one college ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அரசாங்கக் கலைக்கல்லூரிகளைப் பொறுத்த வரையில்தான் அரசாங்கம் சில திட்டவட்டமான முடிவுகளை எடுக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. மற்றைய கல்லூரிகளைப் பொறுத்தவரையில் பல்கலைக் கழகம் தான் அவைகளுக்கு இது குறித்து ஆணையிடவேண்டும். பல்கலைக் கழகம் இதுபற்றி தக்க முடிவு எடுத்துக்கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் விண்ணப்பங்களுக்கான கட்டணம் கல்லூரிக்குக் கல்லூரி வேறுபட்டிருக்கிறது, எல்லாக் கல்லூரிகளிலும் ஒரே குறிப்பிட்ட கட்டணமாக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்திச் சொல்லி யிருக்கிறேன். துணைவேந்தரும் செனட் அவையில் விவாதித்து, ரூ. 3 என்ற அளவுக்குக் கட்டணம் இருக்கவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், சட்டதிட்டப்படி எல்லாக் கல்லூரிகளையும் இதுமாதிரி கட்டுப்படுத்த வாய்ப்பு இல்லாத காரணத்தினால், சில கல்லூரி களில் மட்டும் இன்னும் ரூ. 5 ரூ. 6 என்ற அளவில் கட்டணத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலான கல்லூரிகளில் ரூ. 3
மு. ப. 10-30 என்ற அளவுக்கு வந்துவிட்டது.

மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தின்படி, விண்ணப்பங்களைப் பார்த்து இடங்கள் கொடுக்கும்போது, பல்கலைக்கழகமும், துணை வேந்தரும் தெரிவித்திருக்கிற கருத்து என்னவென்றால், அந்தக் கல்லூரிக ளை நடத்துகிறவர்கள் அப்படிப்பட்ட கருத்துக்கு அவர்கள் ஒப்பம் அளிக்க வில்லை. சில கல்லூரி முதல்வர்கள் என்ன தெரிவிக்கிறார்கள் என்றால் அந்தக் கல்லூரிகள் குறிப்பிட்ட சமூகத்தினருக்கு என்று வைக்கப்பட்டிருந் தால் அங்கே அவர்கள் கருத்துப்படிதான் செய்யவேண்டியிருக்கிறது. அரசு சிபாரிசுதான் செய்யலாமே அல்லாது, திட்டவட்டமாக இப்படித்தான் செய்யவேண்டும் என்று சொல்ல முடியவில்லை. ஆனால் இந்தக் கருத்து துணைவேந்தருக்கும், பல்கலைக்கழகத்திற்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## 4. அவையுரிமைக் கேள்வி.

### அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் பற்றிய செய்தி உரிய காலத்திற்கு முன் வெளியீடு

**திரு. ஆர். என். அரங்கநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 184-ன் கீழ் கீழ்க்கண்ட உரிமைப் பிரச்சினையை அவை முன் வைக்க விரும்புகிறேன்.

" உயர்திரு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அறிவித்ததாக 18-ம் தேதி (18—8—1968) வெளிவந்த "இந்து", "ஸண்டே ஸ்டான்டர்ட்". மற்றும் சில பத்திரிகைகளில், தமிழக மந்திரி சபை மீது சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் போவதாக ஒரு செய்தி வந்துள்ளது. அது மட்டுமல்லாது எந்தெந்தக் காரணங்களுக்காக கொண்டுவரப் போகிறார்கள் என்ற விவரமும் விளக்கப் பட்டிருக்கிறது.

இந்த மன்றத்தின் மரபு, கோட்பாடுகளின்படி மன்றத்தின் அனுமதி பெற்ற பின்புதான் அல்லது மன்றத்திற்கு அறிவித்த பின்புதான் எந்த ஒரு தீர்மானத்தின் விவரமும் பத்திரிகையில் வெளியிடப்படவேண்டும். மன்றத்தின் விதிகளும் இதைத் தெளிவுப்படுத்துகின்றன. ஆகவே, மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு முன்னமே எதிர்கட்சித் தலைவர் அவர்கள் தீர்மானத்தின் விவரங்களைப் பத்திரிகைகளுக்குக் கூறி வெளியிட்டது மன்றத்தின் உரிமைகளுக்கு ஊறு விளைவிப்பதாகும். தவிர, அதனுடைய கண்ணியத்திற்கும், மரபுக்கும், கோட்பாடுக்கும் இழுக்குத் தேடுவதாக உள்ளது".



The Hon. Leader of the Opposition seems to have given notice of the no-confidence motion to the Press even on 17th August 1968. In the evening dailies published on 17th August 1968 and morning dailies of 18th August 1968, not only the fact that the notice of no-confidence motion is going to be brought before the House but also the text and contents of the no-confidence motion giving reasons for bringing in of the motion has been published and it was also specifically published in the Press. According to the programme, practice, usage and convention, no part of the parliamentary proceedings or any other document to be presented to the Hon. Speaker, can be published prematurely by the Press. That is the accepted convention and it was also upheld by a High Court. The High Court of Orissa has given a ruling on this. That High Court has stated that parliamentary proceeding has got an extended cannotation and it includes not only discussion that takes place on the floor of the House but also include questions and answers, adjournment motion and no-confidence motion which were given notice of. Before that was admitted by the Hon. Speaker and conveyed to the House, the member who has given such notice should not make premature publication to the Press.

Precedents in Lok Sabha and Houses of other legislatures reveal that such suitable convention has been accepted and strictly followed by members. I can give one or two instances. In the Lok Sabha on 26th July 1957 a question arose with regard to the publication, by the Press Information Bureau, of an answer before it was given to the House. When that question was taken up by the Lok Sabha, the Hon. Speaker took a serious view of the matter and the Press Information Bureau then apologised and gave an undertaking that such lapses will not be repeated. Then the matter was dropped. In Bombay Legislative Council, a 'Ganathanthra' member has made premature publication of an adjournment motion that a member has given notice of to the House. That question was seriously viewed by the Chairman of that Council. After an apology was given by the Member, that matter was dropped. Similarly in Andhra Pradesh in 1962, a Minister has released a statement, before it was made to the House and the Minister had to apologise before the House. Then the matter was dropped.

So far as our House is concerned, this question was discussed in this House fully as early as 1964 and the House has made it clear that premature publication should not be made of any question or notice of any motion. That was agreed to by all members. Such an occasion arose on 1st August 1966 when the Hon. Minister Thiru V. R. Nedunchezhian, who was then the Leader of the Opposition, brought a no-confidence motion against the ministry headed by Thiru Bhaktavatsalam. Thiru Bhaktavatsalam then raised the very same point which I am now raising and brought a privilege motion against the then Leader of the Opposition, alleging that not only the fact of bringing the no-confidence motion but also the contents of the no-confidence motion was published by

[Thiru R. N. Aranganathan] [1968 ஆகஸ்ட் 23

the Leader of the Opposition. The then Leader of the Opposition stated on the floor of the House that he had not given out the contents nor the reasons for bringing in the no-confidence motion to the Press. The Speaker gave this ruling on 9th August 1966: "Because the Hon. Leader of the Opposition has stated that he has not given out reasons, I am leaving the matter as it is. But I will hereafter treat such files as confidential."—that is what he said.

So, premature publication is a breach of privilege of the House and a breach of convention. Not only is it a convention. This House has made a specific rule on this matter. Rule 68 (a) clearly says that no motion shall be published before it has been admitted by the Speaker. In the first part of his statement the Leader of the Opposition has been cautious. He has said that the Congress Legislature Party has decided to bring in a no-confidence motion. In the latter portion he gives out the actual reasons for the no-confidence motion being brought.

So, I submit to you, Sir, that there is a prima facie case against the Hon. Leader of the Opposition. He has committed a breach of privilege of the House. I submit therefore that it may be referred to the Privileges Committee.

### 5. நடைமுறைக்கேள்வி.

#### (i) அவையுரிமைக் கேள்வி எடுத்துக்கொள்ளப்படவேண்டிய நேரம்.

Dr. H. V. HANDE: On a point of order, Sir. It is my unpleasant task to call your attention to certain provisions in our rules. Rule 186 of our rules clearly says that a matter of privilege must be raised after the questions and before the list of business for the day is entered upon.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்விகள் முடிவுற்று நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட அலுவல்கள் இன்னமும் தொடங்கவில்லை. அந்தக் காரணத்தால் இப்பொழுது இந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்வது சரியே. "கால் அடென்ஷன் நோட்டீஸ்" அவையினுடைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படவில்லை.

Dr. H. V. HANDE: Rule 186 has also a proviso. It says—"Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business."

If it is a matter of breach of privilege committed in this House, it is true that it gains precedence. But this breach of privilege is committed much earlier, long ago. That is now sought to be raised. It should be raised immediately after question hour, even before adjournment motions are raised. I will request the Hon. Speaker to give his considered ruling on this important matter. But call-attention notice has been taken up already.



1968 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிகழ்ச்சி நிரலில்,

I. Questions and Answers.

II. Statement by the Hon. Minister for Food.

என்று இருக்கிறது ஆகவே, இன்னமும் இரண்டாவது நிகழ்ச்சி தொடங்கவே இல்லை.

Dr. H. V. HANDE: Call-attention notice and answers are cyclostyled and circulated to members. Call-attention notice is a regular business. The Hon. Minister has moved a motion to waive the rule. The proceedings have gone in black and white. I do not mind even if the decision by you is postponed. But if a wrong decision is given, it will not be a pleasant affair. I request you, Sir, to postpone the decision. 'Call-attention' is in the regular business.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மன்றத்திலே வைக்கப் பட்டுள்ள நிகழ்ச்சி நிரலிலே என்னென்ன நிகழ்ச்சிகள், எந்தெந்த வரிசையிலே அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த முறையில்தான் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எல்லாம் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறுவதில்லை. கனம் உறுப்பினர் உரிமைப் பிரச்சினை எழுப்புவது சரிதான்.

**திரு. கே. விநாயகம்:** On a point of order, Sir. தலைவர் அவர்களே, நிகழ்ச்சி நிரலிலே குறிப்பிடப்பட்டுள்ளவைகளெல்லாம் சரியான வரிசை தானா? சட்டசபை நிகழ்ச்சி நிரலையே தவறாகச் செய்திருக்க முடியாதா?

Call attention notice is a matter of urgent public importance. So, the question that he has raised is valid.

ரூலிங் கொடுக்க வேண்டுமென்றால் நாளைக்குக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** On a point of order தலைவர் அவர்களே, இங்கேயுள்ள பிரச்சினை என்னவென்றால், வினாக்கள்—விடைகளுக்குப் பிறகு பிரிவிலேஜ் மோஷன், அட்ஜர்ன்மெண்டு மோஷன், அதன் பிறகு காலிங் அட்டென்ஷன் என்ற வரிசை இருக்கின்றது. பிரிவிலேஜ் மோஷனுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். முன்பு சபாநாயகராக இருந்த திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் கூட, "பிரிவிலேஜ் மோஷன்" சபையினுடைய மானத்தையே பாதிக்கக் கூடிய விஷயமாகும், அது உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய விஷயம என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, பிரிவிலேஜ் மோஷன் முதலில் கொண்டு வரப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் சொல்லுகின்றவைகளைக் கேட்கிறேன். இப்போது இருக்கின்ற சட்டமன்ற விதிமுறைகளின்படி,

A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon. List of business என்று சொல்லியிருக்கின்ற நேரத்தில், நிகழ்ச்சி நிரலில் தரப்படுகின்ற நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டுதான் சபையை நடத்திச் செல்ல முடியும். நிகழ்ச்சி நிரலில் எது எது முதலிடம் தரப்பட வேண்டுமென்பதை மாற்ற வேண்டுமென்று விரும்பினால், நாம் முதலில் விதிமுறைகளை மாற்ற வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, 186-வது விதியின்படி, "அவையுரிமைக் கேள்வியை, வினா-விடை நேரத்திற்குப் பின்பு மற்ற அலுவல்கள் தொடங்கப்படுவதற்கு முன்பு பேரவையில் எழுப்ப வேண்டும்" என்று இருக்கிறது. இது அவையினுடைய மற்ற அலுவல்களைவிட முதல் உரிமை பெறும். இது அரசாங்க அதிகாரபூர்வமான தமிழ் மொழிப் பெயர்ப்பு என்று சொல்லிக்கொள்கிறேன். அவையில் மற்ற அலுவல்கள்

தொடங்குவதற்கு முன்பும் வினா-விடை நேரத்திற்கு பின்பும் இடைப்பட்ட நேரத்தில் 41-விதி போன்றவைகள் நடத்தப்பட வேண்டும். இப்பொழுது சபை மற்ற அலுவல்களைத் துவக்கிவிட்டது. எனவே விதி 184-ன் பிரிவின் கீழ் இந்த விஷயத்தை விவாதிக்க முடியாது. அங்கத்தினர்களுக்குத் தரப்பட்டிருப்பது அதிகார பூர்வமான தமிழ் மொழிபெயர்ப்பு விதிகள் அடங்கிய நூல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது தமிழ் மொழிபெயர்ப்பாக கொடுத்தாலும், சட்டமன்ற நிகழ்ச்சிகளை நடத்த ஆங்கில விதிகளைத்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆங்கில விதிகளிலே அப்படித்தான் இருக்கிறது. உறுப்பினர்கள் சொல்லுகின்ற ஒழுங்குமுறைகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்போது இருக்கின்ற சட்டமன்ற விதிகளின்படிதான் நான் சபையை நடத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, சட்டமன்ற விதிகளை மாற்ற வேண்டுமென்று விரும்பினால், சம்பந்தப்பட்ட விதிகளைத் திருத்துவதன் மூலம்தான் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, அப்படியானால் தமிழ் மொழிபெயர்ப்பு தவறு என்று துணைச் சபாநாயகர் தீர்ப்பு அளிக்கிறார்களா?

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த மொழிபெயர்ப்பு சர்க்காருடைய அதிகார பூர்வமான மொழி பெயர்ப்பு, அரசாங்கச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலம் தெரியாதவர்களுடைய வசதிக்காக இது செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தமிழ் மொழிபெயர்ப்பு அதிகாரபூர்வமான முறையில் அவை முன்னாலே வைக்கப்பட்டு அதிலே திருத்தங்கள் எல்லாம் ஏற்பட்டு, மறு பதிப்பு வெளியிட்டு, அவை முன்னாலே வைத்து, அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டம் இன்னும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆங்கிலம் தெரியாதவர்களுடைய வசதிக்காகத்தானே தமிழ் மொழிபெயர்ப்பு வைக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஆங்கிலம் தெரியாதவர்கள் இதை வைத்துத்தான் சபை நடவடிக்கைகளைத் கவனித்து விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள் என்று எண்ணவில்லை. அதிலும் கனம் உறுப்பினர் அவர்கள் அப்படிச் சொல்லுவார் என்று எண்ணவில்லை.

The House has not yet adopted the Tamil translation.

DR. H. V. HANDE : With due respect to the Chair, I submit that so far in the history of the Madras Legislative Assembly, on not even a single occasion a privilege motion has been admitted after the call attention notice. I am talking of convention. If you can point out one single instance, I have no objection and I will accept it. It has not been done so far. It has always been before the adjournment motion. It cannot wait for any other business. That has been the convention.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது, உரிமைப்பிரச்சினை பற்றிய நிகழ்ச்சிகள் எந்த இடத்தில் வரவேண்டுமென்பதைப் பற்றி ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியிருக்கிறார்கள். சட்ட சபை தொடங்கிய நாள் முதல் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பார்த்து நாளைக்கு நான் தீர்ப்பு அளிக்கிறேன்.



### (ii) நம்பிக்கையின்மைத் தீர்மான வாசகத்தில் உள்ள முரண்பாடு.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** 'ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.' தலைவர் அவர்களே, இந்த சபையில் வரப்போகிற நம்பிக்கையில்லாத் தீர்மானம் 20-ம் தேதி அனுமதிக்கப்பட்டது. 20-ம் தேதி அனுமதித்தபோதே சட்டசபை விதிமுறைகளின்படி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் முழு வாசகத்தையும் சபையில் படித்துக் காட்டியிருக்க வேண்டும். வசதிக் குறைவாக இருந்த காரணத்தினால் படிக்கவில்லையென்று நினைக்கிறேன். தீர்மானத்தின் முழு வாசகம் சபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. முன்பு கொடுதத தீர்மானத்தின் வாசகம் ஒருவிதமாகவும் இப்பொழுது மெம்பர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் தீர்மானத்தின் வாசகம் ஒருவிதமாகவும் இருக்கிறது. முதலில் கொடுத்த தீர்மானம்,

That we intend to move a motion expressing want of confidence in the D.M.K. Ministry headed by Hon'ble Thiru C. N. Annadurai.

ஆனால் மேஜை மீது இருக்கும் தீர்மானம்,

This House expresses its want of confidence in the D.M.K. Ministry headed by Hon. Thiru C. N. Annadurai.

என்று இருக்கிறது. நான் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம்,

Whether we are going to discuss the intention of the Leader of the Opposition to move a motion expressing want of confidence or whether we are going to discuss the very motion itself.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே கொடுத்த என்னுடைய தீர்மானம் முதலிலே That we intend to move a motion என்று கொடுக்கப்பட்டது. அதற்கு ஒரு திருத்தத்தையும் இந்தச் சட்டசபை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் கொடுத்த முதல் தீர்மானத்தை,

This House expresses its want of confidence in the D. M. K. Ministry headed by Hon. Thiru C. N. Annadurai.

என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதைத் திருத்தி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சட்டசபைக் காரியதரிசிக்கும் எழுதி அதை அனுமதித்திருக்கிறார்கள். ஆகவே இதை பிரேரேபிக்கிறேன்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இரண்டாவது அயிட்டம், "Statement by the Hon. Minister for Food" முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கனம் உறுப்பினர் அவர்கள் உரிமைப் பிரச்சினை எழுப்பியிருக்கிறார். அது இன்னும் முடிவாகவில்லை. அதன்பிறகு என்னுடைய தீர்ப்பைக் கூறுகிறேன். திரு. அரங்கநாதன் அவர்கள் எழுப்பியிருக்கும் உரிமைப் பிரச்சினைமீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன கூறுகிறார் ?

DR. H. V. HANDE : On a point of order, Sir. The right of the Hon. Leader of the Opposition itself rests on the decision that you are going to give. Unless that decision is given, the hon. Leader of the Opposition has no right to speak. When that decision is postponed, what right has the Leader of the Opposition to get up and speak again ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது, உரிமைப் பிரச்சினை எழுப்பியிருப்பதை சபாநாயகர் அவர்கள் அனுமதித்திருப்பது முறைதானா என்பது கேள்வி. அதைப் பற்றி நான் நாளைக்குக் கூறுகிறேன். இப்போது நான் அதை அனுமதித்திருக்கிறேன். அதைப்பற்றிய தீர்ப்பு நாளைக்குக் கூறுகிறேன்.

DR. H. V. HANDE : There is a possibility of your giving tomorrow one of the two rulings : either it is correct or it is wrong. The Deputy Speaker himself says that there is a possibility of giving one of the two rulings. Suppose, tomorrow's ruling is that it is incorrect, then the entire proceedings will be out of order. Once the proceedings go in print, we will have to read that on the first day there was a ruling by the Deputy Speaker with a little amount of vagueness and later on, it was completely held to be incorrect. Therefore will it not be proper to postpone the subject to tomorrow ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நாளைக்கு, நான் உரிமைப் பிரச்சினை அனுமதித்தது சரிதானா, இல்லையா என்பதைப் பற்றித் தீர்ப்புக் கூறுவதாகச் சொன்னேன். ஒரு வேளை சரியல்ல என்று தீர்ப்பு அளிக்கக்கூடிய நிலை ஏற்பட்டாலும் இனிமேல் இது போல் நடைபெறக்கூடாது என்கிற வகையில் திருத்தத்தை உருவாக்கும் நிலையை மேற்கொள்ளலாம். இப்போது நான் அனுமதித்திருப்பதனால் எதிர்க்கட்சித் தலைவரை விடையிறுக்க அழைக்கிறேன்.

THIRU J. JAMES : Sir, now the matter before the House is that the Chair has given his decision on the point of order. Now, that matter has been raised by some hon. Members of this House. The Chair says that he will go into the matter and give a ruling on that issue. The point is that the Chair concedes that his decision might be right or might be wrong. So, it is better to adjourn the matter.

Another point is....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் சொல்வது தவருக இருக்கும் என்று நானே நினைக்கிறேன் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. நான் என்ன தீர்ப்பு அளிப்பேன் என்பது நாளைக்குத்தான் தெரியும். ஒரு வேளை தவருனது என்று தீர்ப்பு அளிக்க நேரிட்டால் இனிமேல் அதுபோன்ற பிழை ஏற்படாதிருக்க இது ஒரு நல்ல வழிகாட்டியாக அமையும். இப்பொழுது அதை நான் அனுமதித்திருப்பதால் மேற்கொண்டு நாம் தொடரலாம்.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I am rather surprised to see that the Chair has stated that he would give his ruling tomorrow on the point, whether the motion is in the proper order. I have started reading the motion and so, how a privilege matter will......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் அனுமதித்தது சரியா இல்லையா என்பதற்குத்தான் நாளை தீர்ப்பு அளிப்பதாக சொன்னேனே தவிர, உரிமைப் பிரச்சினை பற்றியது அல்ல.

THIRU P. G. KARUTHIRUMAN : I am not bothered about it.





**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** மொழிபெயர்ப்புகளில் சந்தேகம் வருகிறபோது ஒரிஜனலை எடுத்துப் பார்ப்பதுதான் முறை. ஆகவே அதை இப்போதே சொல்லிவிட்டால் பிரச்சினை தீரும்.

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I want a clarification from the Chair. The hon. Member Dr. Hande has raised a point about the Privilege Motion, whether it is in order. Will it not be correct, as soon as the hon. Member stood up to raise the Privilege Motion, for that hon. Member to have raised objection at that time itself instead of waiting for the Privilege Motion to be explained by the hon. Member and then to raise it. I would like to know whether that is in order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த மன்றத்தில் ஒரு உறுப்பினர் உரிமைப் பிரச்சினை எழுப்புகிற நேரத்திலேயே அதற்கான எதிர்ப்பையும் எடுத்திருக்க வேண்டும். கனம் உப்பினர் உரிமைப் பிரச்சினையை எழுப்பி விளக்கிவிட்ட பிறகு—அதன்மீது ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது கூடாது என்று விதிகளில் இருக்கிறது. அந்த விதிகளை உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I raise a point of order.....

திரு. ஹாண்டே அவர்கள் சொல்லி விளக்கிவிட்ட பிறகு, நீங்களும் தீர்ப்புக்கொடுத்த பிறகு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பலாமா என்பது பிரச்சினை.

THE HON. THIRU C. N. ANNADURAI : That is why when I began the sentence I used the words 'I want a clarification from the Chair'.

DR. H. V. HANDE : Sir, the entire House seems to be now suffering from delayed action. What the Hon. Chief Minister has raised is delayed action. The other delayed action is that the hon. the Leader of the Opposition has been allowed to read the motion. After that once again we have gone back to the Privilege Motion. Then the hon. Member, Thiru Balasubramaniam was allowed to raise his point of order....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதுபோன்று முன்னும் இப்பேரவையில் அனுமதிக்கப்பட்டிருக்கிற விவரங்களை நடவடிக்கைப் புத்தகத்தைப் பார்த்து எடுத்துச் சொல்லலாம் என்பதற்காக நாளைக்கு என் தீர்ப்பைத் தருவதாகச் சொன்னேன். அதுபற்றி இப்போதே சொல்லி விடுகிறேன். 1958-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ஆம் தேதி இது போன்று கேள்வி நேரம் முடிந்த பிறகு பேரவைத் தலைவர் அறிவிப்பைக் கொடுத்த பிறகு—உரிமைப் பிரச்சினை அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமான நடவடிக்கைக் குறிப்பைப் படிக்கிறேன்.—

MR. SPEAKER : Under rule 14 (1) of the Madras Assembly Rules, I nominate the following hon. Members.

* * * *

'Notice of adjournment motion *re.* Police Activities on 3rd and 6th January 1958.'

'Privilege Motion'.

அதுபோலவே 1966-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் தேதி இந்தப் பேரவையிலேயே பேரவைத் தலைவரினுல் கவன ஈர்ப்புப் பிரேரணைக்குப்பு பிறகு உரிமைப் பிரச்சினை எழுப்ப அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதுபற்றி இனியும் தொடர்ந்து விவாதிக்க வேண்டியதில்லை. திரு. கருத்திருமன் அவர்களை உரிமைப் பிரச்சினைக்கு விடையிறுக்க அழைக்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, now the latest point of order is that the Hon. the Leader of the Opposition was on his legs and was reading a part of his motion for a couple of minutes. It is not a Call Attention Matter or an adjournment motion but it is a matter which is included in the List of Business for to-day and a translation of it has also been given. That being the case, how can the privilege motion be discussed now ? How can this be allowed ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது எழுப்புவது வேறு ஒரு ஒழுங்குப் பிரச்சினை. இதற்கு ஆதாரமே இல்லை. எதிர்க்கட்சித்தலைவர் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசவேயில்லை. திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்குத்தான் விளக்கம் தந்தார்கள். ஆகவே இதில் ஒழுங்குப் பிரச்சினை எழவில்லை. இப்போது திரு. அரங்கநாதன் அவர்கள் எழுப்பியுள்ள ஒழுங்குப் பிரச்சினைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விடை அளிக்க போகிறார்கள்.

## 4. அவையுரிமைக் கேள்வி—தொடர்ச்சி.

## அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் பற்றிய செய்தி உரிய காலத்திற்குமுன் வெளியீடு.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் உதவிச் சபாநாயகர் அவர்களே, இப்போது எழுப்பப்பட்டிருக்கும்படியான உரிமைப் பிரச்னைபற்றி ஒரு குழப்பமான நிலைதான் இருக்கிறதே தவிர, தெளிவாக இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். உரிமைப் பிரச்சினையின் தகுதிபற்றி மற்றவர்கள் சொன்னார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கட்சித் தீர்மானமாகச் செய்யப்பட்டதை உரிமைப் பிரச்சினையாகக் கொடுப்பதாகச் சொல்வது தவறாகும். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை—இன்ன இன்ன காரியங்களுக்காகக் கொண்டு வரப்போகிறோம் என்று கட்சியில் பேசிக் கொண்டு வருகிறோம். இதன் இரகசியத்தை வெளியிடுகிற நிலை எங்கும்
முற் பகல் 11-00 எழவில்லை. இதுபற்றி 17-ஆம் தேதியே பத்திரிகையில் வந்தது என்றால் அன்றைக்கே உரிமைப் பிரச்சினை எழுப்பியிருக்கலாம். 23-ஆம் தேதி எழுப்புவதும் சரியில்லை. அப்பொழுது நாங்கள் பதில் சொல்லியிருப்போம். பாராளுமன்றத்தில் இது மாதிரி ஒரு உரிமைப் பிரச்சினை வந்தது, ஒரு தீர்மானம் வந்து ஒரு நாளைக்குள் அதாவது 24 மணி நேரம் தள்ளி அந்தப் பிரச்னை வந்த நேரத்தில் அது தள்ளப்பட்டது என்பதை நான் இந்த நேரத்தில் உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதைப் பற்றிய விவரங்கள் பின்னால் வேண்டுமானால் உங்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆகவே இந்தத் தீர்மானம் எந்த விதமான உரிமையையும் சபையினுடைய கௌரவத்தையும் பாதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது அடிப்படையான உரிமை. அது எந்தக் கட்சியையும் பாதிக்கிறது என்று சொன்னால்........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கட்சியைப் பாதிக்கிறது என்று அவர்கள் சொல்லவில்லை, மன்றத்தின் உரிமையைத்தான் பாதிக்கிறது என்று சொன்னார்கள்.





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மன்றத்தின் உரிமை பாதிக்கப்படவில்லை என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் அப்படித் தீர்மானம் செய்யப்பட்டது என்று தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் அரசு செய்த தவறுகள், என்ன என்ன என்பதைப் பொதுப் படையாகத்தான் இப்பொழுது சொல்லியிருக்கிறோம். நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரப்போகிறது என்பது பத்திரிகையிலே வருவதற்கு உரிமை இருக்கிறது. ஆகவே இதிலே உரிமை எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** திரு. அரங்கநாதன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்கு ஆதாரமாக பாராளுமன்ற நிகழ்ச்சிகளையும், சட்டமன்ற நிகழ்ச்சிகளையும் எடுத்து இங்கே குறிப்பிட்டார்கள். இங்கே இருக்கிற உரிமைப் பிரச்சினையை போலவே 1964-ம் ஆண்டு நாங்கள் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தபொழுதும் அப்பொழுது முதல் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுகிற செய்தியை வெளியிடுவது தவறு அல்ல என்று சொன்னார்கள். என்ன என்ன காரணங்கள் என்று பத்திரிகையிலே வெளியிடுவது மரபுக்கு மாறுபட்டது என்று வாதாடினார்கள். அந்த அடிப்படையிலேதான் தீர்ப்பும் வழங்கப்பட்டது No matter shall be published before it has been admitted by the Speaker. என்று திட்டவட்டமாக நம்முடைய விதிகள் (68) (எ) பிரிவிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

No matter shall be published before it has been admitted by the Speaker என்று இருக்கிறது. அவைத் தலைவர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் எந்த விதத் தீர்மானத்தையும் பத்திரிகையிலே வெளியிடக்கூடாது. முன்னால் முதலமைச்சர் அவர்கள் வாதாடி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிறோம் என்ற கருத்தை வெளியிடுவதில் தவறில்லை. ஆனால் காரணங்களை அவையில் வெளியிடுவதற்கு முன்னால் பத்திரிகையிலே வெளியிடுவது தவறு என்று சொன்னார்கள். பத்திரிகையிலே வந்ததற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றும் எங்கள் மனச்சாட்சியின் அடிப்படையிலே, நாங்கள் அவற்றைப் பத்திரிகைக்குச் சொல்லவில்லை என்றும், அதற்குப் பொறுப்பு நாங்கள் அல்ல என்றும் அதற்குப் பொறுப்பாளிகள்மேல் நடவடிக்கை எடுங்கள் என்றும் வாதாடினோம். அது இங்கிருந்து எப்படிப் போயிற்று என்பதை சபாநாயகர் அவர்கள் கண்டுபிடிக்க முடியாத காரணத்தாலே தீர்மானத்தை முன்கூட்டியே வெளியிடுவது தவறு என்ற வகையிலே தீர்ப்பை அப்பொழுதிருந்த சபாநாயகர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 1952-ம் ஆண்டிலே சுசேதா கிருபளானி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பாராளுமன்றத்திலே கொண்டுவருவதற்கு முன்னர் பத்திரிகையிலே வந்தது. அப்பொழுது பிரதமராக ஜவஹர்லால் நேரு அவர்கள் இருந்தார்கள். அந்தத் தீர்மானத்தை சபாநாயகர் அவர்களே அவர்களுடைய அறையிலேயே தள்ளிவிட்டார்கள். பத்திரிகையிலே வெளிவந்த காரணத்தால் ஒரு தீர்ப்புக் கொடுத்தார்கள். எந்த ஒரு தீர்மானமும் அவையில் வருவதற்கு முன்னால் பத்திரிகையிலே வரக்கூடாது என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். இங்கிருந்த சபாநாயகர் அவர்களும் அந்த முறையிலேதான் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சட்ட திட்டத்திலேயும் அப்படிப்பட்ட மரபு தான் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து நல்ல தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் ஏற்கனவே சொன்னதுதான். எங்கள் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரத் தீர்மானம் செய்ததே தவிர, பத்திரிகைக்கு நான் வெளியிடவில்லை. இந்தத் தீர்மானத்தின் டெக்ஸ்டை யாருக்கும் கொடுக்கவில்லை........

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கொடுத்திருந்தால் தவறில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் வாதாடுகிறார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான்சொல்வதைப் புரிந்துகொள்ள வேண்டும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி மற்றவர்கள் எடுத்துக் கொண்டிருக்கலாமே தவிர, சட்டசபையிலே வரக்கூடிய மோஷனை நான் எந்தப் பகுதியிலும், எந்த முறையிலும் கொடுக்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர என்னுடைய கட்சிதான் முடிவு செய்தது......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தீர்மானத்தின் முடிவை எப்பொழுது தெரிவித்தீர்கள் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கட்சிக் கூட்ட முடிவிற்குப் பிறகு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தேதியைச் சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 16, 17 தேதிகளில் தெரிவித்தோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் சொல்ல முடியுமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நேரம் எப்படிச் சொல்ல முடியும் ? ஞாபகம் இல்லை என்றுதான் சொல்ல முடியும். இனிமேல் வேண்டுமானால் எந்த நேரம், என்ன மணி, என்ன நிமிஷம் என்று சொல்லுகிறேன்.

**திரு. ஆர். என். அரங்கநாதன் :** கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் காரணங்களைப் பத்திரிகைகளுக்குச் சொல்லவில்லை என்று கூறுகிறார். ஆனால் எல்லாப் பத்திரிகைகளிலும் என்ன என்ன காரணங்களுக்காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது என்று கருத்திருமன் கூறினார், கருத்திருமன் கூறினார் என்றுதான் வெளிவந்திருக்கிறது. அவர்கள் இதுவரைக்கும் மறுப்புத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. இப்பொழுது உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்ட நேரத்திலேதான் நான் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். அது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றி பத்திரிகை படிக்க எனக்குச் சந்தர்ப்பம் இல்லையென்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நான் திருமணத்திற்குச் சென்ற காரணத்தினாலே பத்திரிகை பார்க்காத நிலைமையும் இருந்தது. இந்த விஷயங்கள் பத்திரிகையிலே வந்ததற்கு நான் பொறுப்பாளியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஒரு கட்சியினுடைய தலைவர் அவசரமாக அலுவல் காரணமாகச் சென்றுவிட்டதனால் இவையெல்லாம் கவனிக்க முடியாமல் இருக்கலாம். தலைவர் இல்லாத நேரத்திலே துணைத் தலைவர் அவற்றையெல்லாம் கவனிப்பார் என்பதற்காகத்தான் துணைத் தலைவர் வைக்கப்படுகிறார். துணைத் தலைவரும் வேறு எதாவது திருமணத்திற்குச் சென்றுவிட்டாரா ? அதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதன்மீது என்னுடைய தீர்ப்பைப்பிறகு வெளியிடுகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உரிமை பிரச்சினையைப் பொறுத்தவரையில் முன்பு கொடுத்திருக்கக் கூடிய தீர்ப்பை அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். ஆகவே, இந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் நாளை தீர்ப்பைச் சொல்கிறேன். அடுத்தபடியாக மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

## 6. அமைச்சர் அறிக்கை

### வினாவிற்கு அளித்த விடையை திருத்தல்.

**THE HON. THIRU K. A. MATHIALAGAN :** Mr. Deputy Speaker, Sir, I wish to make the following correction to the answer given by me to the supplementary question by Thiru V. K. Kothandaraman, M.L.A. to question No. 164 (starred) answered on 7th March 1968 regarding the penalty leviable under the Madras Entertainments Tax Act, 1939 for being found without a counterfoil of a ticket or pass in a cinema house.

To a supplementary question by Thiru V. K. Kothandaraman, M.L.A., I replied from memory that the Madras Entertainments Tax Act, 1939 provides for prosecution and for levy of a penalty up to Rs. 500 on the persons, who are found without a ticket or a pass in any place of entertainment. The provision for levy of penalty upto Rs. 500 as in Section 14 (1) of the Madras Entertainments Tax Act, 1939, relates to offences by the proprietor of the entertainment or any person employed by him for the offences specified in that sub-section. I have now verified that the maximum amount of penalty leviable for being found without a ticket or pass in any place of entertainment as provided under Section 14-A of the Madras Entertainments Tax Act, 1939, is only Rs. 100.

## 7. அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுவதற்கு முன்னால் பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். வள்ளுவருடைய படத்தை நாம் இந்த அவையிலே வைத்திருக்கிறோம். வள்ளுவருடைய வழியில் வந்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிறோம். வள்ளுவர் குறளில் 'இல்லாத பொருளே இல்லை, என்று சொல்லும் அளவுக்கு எல்லாவற்றைப் பற்றியும் கூறியிருக்கிறார் என்று சொல்லுகிறோம். எல்லாவற்றையும் சொல்லிய வள்ளுவர் 1,330 குறள்களைப் பாடியிருக்கிறார். அந்த 1,330 குறள்களிலே உலகத்தில் இருக்கும் அவ்வளவு காரியங்களைப் பற்றியும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற முறையிலே கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட வள்ளுவர், ஒன்றே முக்கால் அடியிலே பல கருத்துக்களைக் கூறிய வள்ளுவர், சொல்லிலே சிக்கனம் காட்டிய அந்த வள்ளுவர், இந்தப் பேச்சுக் கலைக்கு மட்டும் எத்தனை அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார் என்று பார்த்தால்—அவையறிதல், அவையஞ்சாமை, இனியவை கூறல், சொல் வன்மை, பயனில சொல்லாமை, புறங்கூறாமை, வாய்மை என்ற ஏழு அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார். அது மட்டுமல்லாமல், 'அடக்கமுடைமை' என்ற அதிகாரத்திலே—

" யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

என்ற குறளையும் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் புண்ணுக்கும் வடுவுக்கும் உள்ள வித்தியாசம் தெரிகிற வகையில், தீயினால் சுட்ட புண் ஆறிவிடும் ; நாவினால் சுடுவது மாறாது என்ற கோட்பாட்டை—

" தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு."

என்று கூறியிருக்கிறார்.

இவ்வளவையும் கூறுவதற்குக் காரணம் என்ன என்று எண்ணிப் பார்க்க வேண்டும் ; சொல்லிலே சிக்கனம் காட்டுகின்ற வள்ளுவர் இத்தனை அதிகாரங்களைக் கூறியிருக்கிறார். இதனை இந்த மன்ற உறுப்பினர்கள் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இப்போது விவாதத்திற்கு வரப் போகிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது இரு தரப்பு உறுப்பினர்களும் நாவடக்கத்தோடு, சொல்லிலே சூடேற்றிக் கொள்ளாமல், பொருளிலே சூடேற்றிக் கொள்ளும் வகையில் தங்களுடைய வாதங்களை எடுத்துரைக்க வேண்டும். இப்படிப்பட்ட அறிவுரை ஏற்கனவே இந்த மன்றத்திலே ஒரு முறை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

1957-லே இந்த மன்றத்தின் தலைமைப் பீடத்தை அலங்கரித்த பெரியவர் அவர்கள்—

" As a general rule no-confidence motions can be tabled on facts which everybody knows and not on hypothetical grounds. If the Hon. Member is prepared to produce before this House evidence in favour of what he said, then he would be perfectly in order. Otherwise no-confidence motions cannot be taken as a vehicle for making allegations or counter-allegations. I should therefore like all Hon. Members to remember this when they make allegations. Unless there is evidence, it is not advisable to make allegations against any member of the House. It is not fair to make charges because it would be derogatory to the dignity of the House " என்ற அறிவுரையைக் கூறித்தான் அன்று ஆரம்பித்து வைத்தார்கள். இந்த அறிவுரையை மனத்திலே ஏற்று உறுப்பினர்கள் தங்களுடைய வாதங்களைக் கூறுகின்ற நேரத்திலே, புள்ளி விவரங்களை எடுத்துக்கூறுவது என்ற அந்த அளவிலே நின்று ஒருவருக்கொருவர் ஏசுவது என்ற முறையை மேற்கொள்ளாது பேச வேண்டுமென்று பணிவோடுகேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன் மொழிவதற்காக எழுந்தார்.

**5 நடைமுறைக் கேள்வி.—தொடர்ச்சி.**

**(iii) நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை அனுமதித்தல்.**

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் இப்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானம் நம்முடைய சட்ட மன்றத்தின் விதி முறைகளுக்கு முரணானது என்பதோடு மட்டுமல்லாமல், இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதன் மூலம் அவர் அவருடைய உரிமையைத் துஷ்பிரயோகம் செய்கிறார், இந்த சபையின் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவே இதைக் கொண்டுவந்திருக்கிறார் என்று கூற விரும்புகிறேன்.



68-வது விதியின்படி இந்தத் தீர்மானம் எப்படி ஒழுங்கு முறையை மீறுகிறது என்று கூற விரும்புகிறேன். அந்த விதியின்படி இந்தத் தீர்மானத்தையோ, தீர்மானத்தில் இருக்கிற ஒரு பகுதியையோ நிராகரிக்க வேண்டிய உரிமை சபாநாயகருக்கு இருக்கிறது என்று விதி 68, பிரிவு (4)ல் இருக்கிறது—

The Speaker shall decide whether a motion or a part thereof is or is not admissible under these rules and may disallow any motion or a part thereof when in his opinion it is an abuse of the right of moving a motion or is calculated to obstruct or prejudicially affect the procedure of the House or is in contravention of these rules.

என்று விதி முறை இருக்கிறது. இந்த விதி முறையின்படி நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிற தீர்மானத்தின் பல பகுதிகள் ஒழுங்கு முறையை மீறுவதாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். அச்சடிக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தில் இரண்டாவது தீர்மானம்—

Failure of the Government to provide economic and incentive price to the farmers due to wrong procurement policy of Government.

என்று இருக்கிறது. விதி 68, பிரிவு 3 viல்

It shall not revive discussion of a matter which has been discussed in the same session.

என்று இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

**THE HON. THIRU K. A. MATHIALAGAN :** I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர்களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டரைப் பற்றிச் சொல்லி முடித்த பிறகு உங்களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டரை எழுப்பலாம்.

(குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒழுங்குப் பிரச்சினையைப்பற்றிக் கூறி முடிப்பதற்கு அனுமதிக்க வேண்டும். 68-வது விதி, பிரிவு (3)—6-வது பகுதியில்—

It shall not revive discussion of a matter which has been discussed in the same session.

என்று இருக்கிறது. அவர்களுடைய தீர்மானத்தின் (2)-வது பகுதியைப் பற்றி இந்த மன்றத்திலே நேற்றையதினம் நான்கு மணி நேரம், வழக்கத்திற்கு மாறாக பிற்பகல் 2½ மணி வரை சபை நேரத்தை நீட்டித்துவிவாதிக்கப்பட்டது. இரண்டாவது பகுதியின் நிலைமை அப்படியென்றால், மூன்றாவது பகுதியான தீ விபத்து பற்றியும் இந்த மாமன்றத்தின் துணை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது விவாதிக்கப்பட்டிருக்கிறது. நான்காவது பகுதியான டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் தகராறு பற்றி விவாதிக்க வேண்டுமென்று கூறும்போது அது இன்றையதினம் விசாரணையில் இருக்கிறது என்பதை உணர வேண்டும். அதுபற்றியும் நம்முடைய விதியில் இருக்கிறது. விதி 68, (5)-வது பிரிவில்—

No motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any commission or court of enquiry appointed to enquire into, or investigate, any matter shall ordinarily be permitted to be moved.

என்று இருக்கிறது. இந்த விதி முறையின் கீழ் தாங்கள் அதை அனுமதிக்கக் கூடாத பகுதியாக இருக்கிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் 8-வது பகுதியான—

The questionable conduct of the Hon. Minister for Co-operation

என்பதைப் பற்றியும் துணை மானியக் கோரிக்கை விவாதத்தின்போதே விவாதிக்கப்பட்டு பதிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

The rule is that it shall not revive discussion of a matter which has been discussed.

கூட்டுறவு அமைச்சரைப் பற்றி முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் விஸ்தாரமாகப் பேசினார். அது பற்றியும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதனாலேதான் இந்த மன்றத்திலே பட்ஜட் கூட்டத் தொடரிலே நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வருமானால் அந்த 30 நாட்களுக்குப் பிறகுதான் அதை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று விதி இருக்கிறது. அதற்குக் காரணம் பட்ஜெட் நேரத்திலே பல பிரச்சினைகளைப் பற்றிப் பேச முடியும் என்பதுதான். கடந்த சட்ட மன்றத்தில், எதிர்க் கட்சியில் இருந்தபோது நானே ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் பட்ஜெட் கூட்டத் தொடரில் கொண்டு வந்தபோது· அது நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

So this matter has already been discussed.

The questionable conduct of the Hon. Minister for Co-operation

என்ற, கோவாப்பரேஷன் மினிஸ்டர் மேல் அபாண்டமாகக் கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டும் நேற்றைய தினமே விவாதிக்கப்பட்டு முடிந்து விட்டது. கொள்முதலைப் பற்றியும் நேற்றைய தினம் 4 மணி நேரம் விவாதித்து முடிந்து விட்டது. டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் தகராறைப் பொறுத்தவரை கமிஷன் என்குயரியில் இருப்பதால் விவாதிக்கக்கூடாது.

This is in contravention of Rule 68 (5).

ஆகவே, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை அனுமதிப்பது இந்தச் சட்ட மன்றத்தின் விதிகளுக்கு முரணானது. அவர்களுக்கு இருக்கிற புனிதமான உரிமையை நல்ல வகையில் பயன்படுத்தாது துஷ்பிரயோகம் செய்வதற்கே இந்த மன்றத்தை உபயோகப்படுத்துகிறார். மன்றத்தின் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவேதான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை நிராகரித்து என்னுடைய ஒழுங்குப் பிரச்சினையின் மீது தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் ஒரு "மாட்டர் ஆப் பிரிவிலெஜ்" எழுப்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** "பிரிவிலெஜ்" எழுப்ப வேண்டுமென்றால் எந்த உறுப்பினரும் அதை மன்றம் தொடங்குவதற்கு முன்பாகவே அதை அவைத் தலைவருடைய கவனத்திற்கு எழுத்து மூலம் கொடுத்த பிறகுதான் எழுப்ப வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** அவையில் நடைபெறுகிற விவாதத்தின் போது ஏற்படுவதைப் பற்றிய உரிமைப் பிரச்சினைகளுக்கு அப்படிக் கொடுக்கலாம்.

தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தங்களிடம் கொடுத்தோம். தாங்கள் இந்தத் தீர்மானம் தகுதியுடையது, சட்ட விதி முறைகளுக்கு அடங்கியிருக்கிறது, ஆகவே இதை அனுமதிக்கலாம் என்று சொல்லி அதை சபை நடவடிக்கைகளில் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கான எங்கள் உரிமையை நாங்கள் துஷ்பிரயோகம் செய்திருக்கிறோம் என்று உணவு அமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டு சாட்டியிருக்கிறார்கள்.





தாங்கள் தீர்ப்பளித்த பிறகு எங்கள் மீது இப்படிப்பட்டதொரு குற்றச்சாட்டை உணவு அமைச்சர் அவர்கள் செய்திருப்பது எங்கள் உரிமையைப் பாதிக்கிறது. ஆகவே அதை உரிமைக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், நான் முன்பே எழுப்பினேன். இப்போது எதை விவாதிக்கப் போகிறோம் ? முதலில் சர்குலேட் செய்த மோஷனையா அல்லது இப்போது சபை முன்னால் வைக்கப்பட்டுள்ள . . . . . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டரை எழுப்புவதற்கு நேரம் வரவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. The notice *re.* No-confidence Motion has been given to you much earlier and you have perused it and found it in order. You have also circulated it among the Members and you have also given permission to the Hon. the Leader of the Opposition to raise it and he was on his legs. So, is it in order for the Hon. Minister to question your ruling at a later stage ? It is a delayed action.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று வருகிறது. ஆனால் உணவின் மீதான விவாதம் நேற்று முடிந்திருக்கிறது. இந்தத் தீர்மானத்தில் கொடுத்திருக்கிற ஒரு பொருள் பற்றிய விவாதம் நேற்று முடிந்துவிட்ட காரணத்தினால் மீண்டும் இன்று அது வரலாமா என்ற பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். தீர்மானம் கொடுக்கிற நேரத்திற்கு முன் என்றால் நீக்கியிருக்கலாம். இதில் அடங்கியுள்ள இரண்டொரு பிரச்னைகள் பற்றி தீர்மானம் கொடுத்துப் பேசியிருக்கிறார்கள். ஆகவே ஒரு தொடர் கூட்டத்தில் ஒரு பொருள் பற்றி விவாதித்துவிட்டு மீண்டும் அந்தத் தொடர் கூட்டத்தில் அந்தப் பொருள் பற்றி விவாதிக்கக் கூடாது என்று விதியிருப்பதால் இந்த ஒழுங்குப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். அது ஒரு முறைதான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதுவரை ஓரளவு பொறுமையோடு இருந்து விட்டோம். நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்றால் ஒரு பொருள் குறித்து ஆயிரம் தரம் விவாதிக்கப்பட்டிருந்தாலும் மீண்டும் அதைக் கொண்டு வருவதைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும். . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது வேறு. மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது வேறு. அதை மனதில் வைத்துக் கொண்டு பேசவேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற பல பிரச்னைகள் ஏற்கெனவே இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் மறுபடியும் அதை இதில் இணைத்திருப்பது முறைதானா என்பது உணவு அமைச்சர் அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்னை. அதைப் பற்றித் தீர்ப்பளிக்க வேண்டிய முழு உரிமையும் தங்களுக்கு இருக்கிறது என்றாலும் இப்படிப்பட்ட பிரச்னைகளை எல்லாம் எழுப்புவதன் மூலம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் இங்கே விவாதிக்கப்படுவதற்கு நாங்கள் ஏதோ விரும்பவில்லை அல்லது அஞ்சிக் கொண்டிருக்கிறோம் என்ற தவறான கருத்து ஏற்படக்கூடுமாதலால் அதில் முறை தவறியிருப்பதாக அவர்கள் எடுத்துக் காட்டியிருந்தாலும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்படுவதற்கு முழு உரிமையும் அனுமதியும் தருவது எங்களுக்கெல்லாம் உடன்பாடு என்பதை சட்டமன்றத் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்).

**திரு. கோ. பூவராகன் :** இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இரண்டு தினங்களுக்கு முன் கொடுக்கப்பட்டது. இந்த அவையில் கொடுக்கப்பட்டது. உதவி சபாநாயகர் அவர்கள் அதைப் படித்துக் காண்பிக்க வேண்டாம், சர்குலேட் செய்துவிடலாம் என்று சொன்னார்கள் அதற்குப் பிறகுதான் இந்த விவாதம் இன்று வந்தது. விவாதத்தில் என்ன பேசினார்கள், எதைப் பற்றிப் பேசினார்கள் என்பதல்ல. முன்கூட்டிச் சொன்ன கருத்துக்கள் இப்போது வந்துவிட்டது என்று ஒழுங்குப் பிரச்னை இன்று எழுப்புவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. தங்களது முன் அனுமதிக்கு இந்த மன்றத்தில் கொடுத்து அனுமதிக்கப்பட்டவைதான் பத்திரிகையில் வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மேலும் அது சம்பந்தமான ஒழுங்குப் பிரச்னைகளும், ஒழுங்குப் பிரச்னைகளுக்கு ஒழுங்குப் பிரச்னைகளும் எழுப்பிக் கொண்டு போவதின் மூலம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றியிருக்கிற விவாதத்தின் நேரம் உண்மையில் வீணாக்கப்படுகிறது. ஆகவே, விவாதத்தை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொடங்கி வைக்க வேண்டுமென்றும் அதற்கு சபாநாயகர் அவர்கள் அனுமதி வழங்கவேண்டுமென்றும் நான் விரும்புகிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். நமது சட்டமன்ற விதிமுறைகள்படி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிப்பதற்கு அருகதை உடையதல்ல என்று ஒரு விஷயத்தை உணவு அமைச்சர் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அதே சமயத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஏதோ அவர்கள் கொண்டு வந்திருக்கிற பாயின்ட்கள் எல்லாம் பிசுபிசுத்துப் போகும், வாதம் செய்து அவற்றை தூக்கிப் போட்டுவிடலாம் என்று நினைத்து சந்தர்ப்பம் கொடுங்கள் என்று கேட்பது சரியா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் அலட்சியமாகக் கருதவில்லை. பிசுபிசுத்துப் போய்விடும் அல்லது உடனே நிராகரித்து விடவேண்டும் என்பதல்ல. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது ஜனநாயகத்தில் உள்ள பல பணிகளில் ஒன்று. அது இரண்டு சாராருக்கும் வாய்ப்பளிக்கக் கூடியது. அது, எந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள் என்று பொதுமக்கள் அறிந்துகொள்ளவும் ஒரு சிறந்த வாய்ப்பாகும். ஆகவே இதை நான் அலட்சியமாகக் கருதவில்லை. இதில் குறிப்பிட்டிருப்பது முறையாக இருக்கிறதா, முறையாக இல்லையா என்பதைப் பற்றி நாம் விவாதித்துக் கொண்டிருப்பது பொது மக்கள் மனதில் ஒரு தவறான எண்ணத்தை உண்டாக்கக் கூடும். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர எதிர்தரப்பினர், முனைந்தார்கள், ஆளும் கட்சியில் உள்ளவர்கள் அதை எப்படியாவது தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்று துடியாகத் துடித்தார்கள் என்ற தவறான எண்ணம் ஏற்படக்கூடும் என்பதற்காகத்தான் நான் குறுக்கிட்டு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்படுவது இப்போது தேவைதான் என்ற என் கருத்தைத் தெரிவித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டு விதமான ஒழுங்கு பிரச்னைகளை எழுப்பினார்கள். திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் இது வடிவத்தில் வேறுபட்டிருக்கிறது என்று சொன்னார்கள். வடிவத்தில் வேறுபட்டிருந்தாலும் டெக்னிக்கல் க்ரௌண்ட்ஸில் தள்ளக் கூடாது என்பதற்காக ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஒரு தொடர் கூட்டத்தில் ஒரு பொருள் பற்றி இரண்டு முறை விவாதிக்கலாமா என்பதைப் பற்றிச் சொல்கிறேன். ஒரு பொருள் பற்றி இரண்டு முறை விவாதிக்கக் கூடாது. ஆனால் விவாதித்த அந்த ஒரு பொருள் இத் தீர்மானத்திற்கான காரணங்களில் ஒன்றாகத்தான் வருகிறது. ஆகவே, ஒரே பொருள் ஒரு தொடர் கூட்டத்தில் இரண்டு முறை விவாதிப்பது என்ற குற்றத்திற்கு உள்ளாகாத நிலையில் இத் தீர்மானம் அமைகிறது. ஆகவே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதை முன்மொழிந்து பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** தீர்மானத்திலுள்ள 11 பிரச்னைகளில் ஒருசில பிரச்னைகள்பற்றி உணவு அமைச்சர் அவர்கள் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து விட்டார்கள். அது விஷயமாக நேற்று முன்தினம் விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருந்தபோதிலும் மீண்டும் அவைமீது பேசுவதற்கு எங்களுக்கு ஆட்சேபணையில்லை என்று முதல் அமைச்சர்கள் அவர்கள் கூறினார்கள். அதில் மிக முக்கியமான பிரச்னை டிரான்ஸ்போர்ட் சம்பந்தப்பட்ட பிரச்னை.........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது ஒழுங்குப் பிரச்சினையா ? ஒழுங்குப் பிரச்சினை என்றால் என்ன ஒழுங்குப் பிரச்சினை ? இது ஒழுங்குப் பிரச்சினை இல்லை. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கேள்வி நேரத்திலேயும் சரி, பேசக் கூடிய நேரத்திலேயும் சரி. . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தலைவர் நிற்கும் நேரத்தில் நீங்கள் உட்கார்ந்துவிட வேண்டும். நீங்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறீர்களா அல்லது யோசனை சொல்லப்போகிறீர்களா ? யோசனை சொல்வதற்கு இடமில்லை. ஏதாவது ஒழுங்கு மீறியிருந்தால் அதைச் சொல்ல வேண்டும். இந்த விவாதத்திலே உறுப்பினர்கள் கலந்துகொள்ளக் கூடிய நேரத்தில் ஏற்கனவே பேசப்பட்ட பொருள்களில் அதிகமாகக் கவனத்தைச் செலுத்தாமல் பேசப்படாத பொருள்களில் கவனம் செலுத்துமாறு தீர்மானத்தைக் கொடுத்திருக்கும் எதிர்க் கட்சியினரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். கனம் உணவு அமைச்சரவர்கள் கொண்டுவந்த சட்டசபை விதி சம்பந்தமான ஒழுங்குப் பிரச்சனைமீது சபாநாயகரவர்கள் தெளிவான தீர்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். விவாதிக்கப்பட்ட விஷயங்கள் இதில் வருவதால் தலைவரவர்களின் திட்டவட்டமான தீர்ப்பை அளிக்க வேண்டும். முதலமைச்சரவர்கள் கூறியபடி இதை சபாநாயகர் அனுமதிப்பது பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால், உணவு அமைச்சரவர்கள் கூறிய விதி சரியா, இல்லையா என்று தீர்ப்புச் சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இங்கு எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை மீது தீர்ப்பு அளித்தாகிவிட்டது. ஒரே தீர்மானம் இரண்டு முறை வரக் கூடாது. ஒரு முறை வந்த தீர்மானம் இரண்டாவது முறை வரக் கூடாது. ஆனால் அது வேறு, இது வேறு. அதன் கருத்து இந்தத் தீர்மானத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஒரே தீர்மானம் இரண்டு முறை வரவில்லை. எனவே, மீண்டும் மீண்டும் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களை பேசும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

## 7. அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்—தொடர்ச்சி.

**Thiru P. G. KARUTHIRUMAN :** Mr. Deputy Speaker, Sir, I move—

" This House expresses its want of confidence in the D.M.K. Ministry headed by Hon. Thiru C. N. Annadurai for the following reasons :—

(1) Unsettled industrial and labour policy which has led to stagnation resulting in unprecedented unemployment among the skilled and unskilled labourers, failure to attract enterpreneurs to invest in new industries due to labour unrest such as strikes and lockouts.

(2) Failure of the Government to provide economic and incentive price to the farmers due to wrong procurement policy of Government

[Thiru P. G. Karuthiruman] [1968 ஆகஸ்ட் 23

(3) Fire accidents in slums on a large scale in many parts of the State leading to the sufferings of the poor people and the failure of the Government to prevent such recurrence and the failure of the Government to detect the culprits who are responsible for the offence and the failure of the Government to construct and provide fire proof houses as promised in spite of huge amount of money having been collected from public as donations.

(4) The fast deteriorating situation in law and order resulting in the flouting of the established authorities and the growing tendency amongst the very people who are responsible for law and order taking a partisan attitude. Failure of the Government to tackle the dispute between students and State Transport workers resulting in a large scale fight between them resulting in great sufferings to students, preventing them from pursuing their studies. The indiscriminate shooting resorted to by the police in different parts of the State.

(5) The orgy of violence unleashed by the Police on 1st August 1968 on the peaceful Youth Congress Marchers who were unprotected and unoffensive resulting in untold casualities like breaking their limbs and heads of persons numbering over 500.

(6) Failure of the Government to render proper accounts regarding the collections for Second World Tamil Conference made by Governmental authorities using pressure and coercion and the failure to have the accounts audited by a competent authority, namely, Accountant and Auditor General.

(7) Failure of the Government to check the ruling partymen from interfering in day-to-day administration thus resulting in partisan favourtism and nepotism which has led to gross inefficiency of the Government machinery.

(8) The questionable conduct of the Hon. Minister for Co-operation in using the Governmental agencies in collecting huge sums of money from the public and co-operative institutions by coercive methods for the purpose of putting up a hospital in his native village which does not deserve to have a hospital of this size under ordinary circumstances.

(9) Failure of the Government to check the growth of fissiparous tendencies like the formation of a " Sena " like Tamil Sena which may lead ultimately to the disintegration of the country.

(10) The irreligious attitude taken by Government in ordering the removal of the pictures of gods, goddesses, and saints from Government buildings which has wounded the feelings of the people at large and the Government servants.

(11) And the failure of the Government to enforce prohibition policy strictly allowing numerous illicit distillations and the failure to detect and book the offenders under the prohibition law."

THIRU S. RAMALINGAM : Sir I second it.



1968 ஆகஸ்ட் 23]

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உதவி சபாநாயகரவர்களே, இந்த மன்றத்திலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வருவதற்கு முன்னாலேயே அநேகமாகப் பலவிதமான பிரச்சினைகளையெல்லாம் கிளப்பினார்கள். ஒன்று மட்டும் உங்களுக்கு முதலில் ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் எனப்படுவது 6 மாதத்திற்கு ஒரு முறைதான் கொண்டு வர முடியும். ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தால் அடுத்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர 6 மாதகாலம் வேண்டும். அந்த 6 மாதங்களுக்குள்ளாக எத்தனையோ பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டிருந்தாலும், சர்க்காரிடமிருந்து தெளிவான முறையில் பதில் வராதிருந்தால், அதனால் மக்களுக்குத் திருப்தி கிடைக்காமல் இருந்தால் நம்பிக்கை இல்லை என்னும்படியான தீர்மானம் கொண்டு வரப்படுகிறது. பிரச்சினைகளெல்லாம் பலப்பல சந்தர்ப்பங்களில் விவாதிக்கப்பட்டிருக்கலாம். அப்படியிருந்தாலும் சர்க்காரின் தரப்பிலிருந்து வரும் பதில்கள் திருப்தியாக இல்லை, தெளிவாக இல்லை, பூரணமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்ற காரணத்தால் மீண்டும் மீண்டும் கொண்டு வரப்படுகிறதே தவிர, ஏதோ அவையின் காலத்தையும், நேரத்தையும் வீணாக்குகின்ற எண்ணத்தில் கொண்டு வரப்படவில்லை. இருந்தாலும் கூட அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சரொருவர் குறிப்பிட்டிருந்தாலும், முதலமைச்சரவர்கள் "நாங்கள் பூரணமாக இதை விவாதிக்க ஏற்றுக்கொள்ளுகிறோம்" என்று கூறிய அந்தத் தன்மைக்கு என்னுடைய பூரணமான பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பூரணமாக ஏற்றுக்கொள்வதுதான் அமைச்சர்களின் நிலையாக இருக்க வேண்டுமே தவிர, இந்தப் பகுதியை எடுத்து விடுங்கள், அந்தப் பகுதியை எடுத்து விடுங்கள் என்று சொன்னால் அது சரியாக இருக்க முடியாது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் எந்த நிலையிலே கொண்டுவரப்படுகிறது என்றால், இதை பல்வேறு கட்சிகளில் எந்தெந்தக் கட்சியினர் ஏற்றுக் கொள்ளுகிறார்கள், நாங்கள் எடுத்துக்கொள்ளும் பிரச்சினைகளுக்கு ஆதரவாக இருக்கிறார்களா, அல்லது சர்க்காருக்கு ஆதரவாக இருக்கிறார்களா என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகத் தான். தேர்தல் காலத்தில் **கூட்டணி** என்ற முறையில் சேர்ந்து தேர்தல் அட்ஜஸ்ட்மெண்ட் என்று சொன்னார்கள். கொள்கையிலே வேறுவிதமாக இருக்கலாம் என்றால் எந்தவிதமாக வேறுபட்டிருக்கிறார்கள், சர்க்காருக்கு எந்தவிதமாக ஆதரவாக இருக்கிறார்கள், மக்களின் பிரச்சினைகளை எப்படிக் கொண்டு வருகிறார்கள் என்பதைப் பார்க்கத் தான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக்கொண்டு வர எங்கள் கட்சி தீர்மானம் செய்தது. இப்பொழுது ஆளுங்கட்சியாக இருக்கக்கூடியவர்கள் முன்பு எதிர்கட்சியாக இருந்த காலத்தில், காங்கிரஸ் கட்சியானது சரியாகச் செயல்படவில்லை, மத்திய சர்க்காருடன் போராடவில்லை என்னும்படியான பெரும் குற்றச்சாட்டுகளைச் சூட்டினார்கள். தேர்தலோடு மட்டுமல்ல, பிறகு ஆளுங் கட்சியாக வந்த பிறகும் கூடச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மேலும், காங்கிரஸ் கட்சி அரசாண்ட காலத்தில் டெல்லிக்குக் காவடி தூக்கிச் சென்றார்கள், நாங்கள் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு பெறக்கூடிய சக்தியை மக்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி ஆண்ட காலத்திலே, 10, 15 ஆண்டு காலத்திலே என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லவும், இவர்கள் வந்தபிறகு என்ன செய்திருக்கிறார்கள், என்ன சாதித்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவும் இந்தத் தீர்மானத்தில் வாய்ப்பாக இருக்கு மென்றுதான் இதைக் கொண்டுவந்திருக்கிறோம்.

முதல் பகுதி, தொழில்-தொழிலாளர் நலன் பற்றியது. இது சம்பந்தமாக காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் சரியாகச் செய்யவில்லை, காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் செய்த தவறுகள் என்றெல்லாம் சொல்கிறார்களே, அந்தத் தவறுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் செய்த மாபெரும் தவறு என்னவென்றால், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனை 166 கோடியிலே உருவாக்கியது மன்னிக்க முடியாத தவறு. அடுத்தாக, இருக்கும்படியான இண்டக்ரல் கோச் பாக்டரியை பெரம்பூரிலே 20 கோடி ரூபாய் செலவிலே ஏற்படுத்தியது தவிர்க்கக் கூடிய ஒரு தவறு. நந்தம்பாக்கத்திலே இருக்கக்கூடிய சர்ஜிக்

கல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் பாக்டரியை 4 கோடி ரூபாய் செலவிலே ஏற்படுத்தியது அதைவிடப் பெரிய தவறு. இந்துஸ்தான் டெலிப்ரிண்டர்ஸ் 82 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தியது மிகப் பெரிய தவறு. இந்துஸ்தான் போட்டோ பிலிம் யூனிட்டை 10 கோடியில் ஏற்படுத்தியது மிகப் பெரிய தவறு. ஹை ப்ரெஷர் பாயிலர் பிளாண்டை திருவெரும்பூரிலே 23 கோடி ரூபாய் செலவிலே ஏற்படுத்தியது மிகப் பெரிய தவறு. ஹெவி வெஹிக்கிள்ஸ் பாக்டரி, ஆவடியில் 18 கோடி செலவில் ஏற்படுத்தியது மிகப் பெரிய தவறு. ஆர்டினன்ஸ்ஸ் பாக்டரி 13 கோடி ரூபாயிலே திருச்சியிலே ஏற்படுத்தியது மிகப் பெரிய தவறு. மெட்ராஸ் ரெஃபைனரீஸஸுக்கு ரூ. 44 கோடி. மெட்ராஸ் ஃபெர்டிலைசர்ஸஸுக்கு ரூ. 55 கோடி. ஆகவே, இது மாதிரி 10 பெரிய அளவு மூலதனங்கள் உள்ள மத்திய சர்க்காரினுடைய. . . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் படித்துக் காட்டிய இந்தப் பட்டியலில் இருக்கிற தொழில்கள் எல்லாம் மாநில அரசினுடைய நிதியிலிருந்து நடத்தப்படுகிற தொழில்களா ? மத்திய அரசினுடைய நிதியிலிருந்து நடத்தப்படுகிற தொழில்களா ? ஐந்தாண்டுத் திட்டங்கள் அடிப்படையிலே வந்த தொழில்களா ? அல்லது ஐந்தாண்டுத் திட்டங்கள் அமலிலில்லாத நேரத்திலே வந்த தொழில்களா ? எத்தனை வருஷ காலத்தில் அந்த பட்டியல் பூர்த்தியாகி இருக்கிறது என்பதை அவர்கள் விளக்குவார்களா ? அது மட்டுமல்லாமல், எங்களுடைய சாதனைகளை யெல்லாம் முதலிலே சொல்லிவிட்டு, நீங்கள் இதையெல்லாம் செய்தீர்களா என்று கேட்பேன் என்றார். 20 வருஷக் காலத்தில் செய்த சாதனைப் பட்டியலை எங்களுடைய 1½ வருஷப் பட்டியலோடு ஒப்பிடுகிறாரே இது முறைதானா என்பதை அவர் யோசித்துப் பார்க்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** முதலமைச்சர் அவர்கள் பேச்சுத்திறமை உள்ளவர்கள் (ஆரவாரம்).

பேச்சுத் திறமையோடு மட்டும் அல்ல, கழுவின மீனிலே நழுவின மீனைப் போல உள்ளவர்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் ? காங்கிரஸினுடைய சர்க்கார் தமிழ்நாட்டிலே ஆட்சியிலே இருந்தது. ஆனால் ஒன்றும் சரியாகச் செயல்படவில்லையென்று சொன்னார்கள். ஆகவே, ஒன்றுமே செய்யவில்லையென்பதற்காகத் தான் நாங்கள் செய்தவைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மத்திய சர்க்கார் திட்டங்களா என்று கேட்டார்கள். மத்திய சர்க்காரிடமிருந்து நீங்களா வாங்கினீர்கள் ? இந்தத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு நீங்களா பணம் வாங்கினீர்கள் ? இதை ஏற்றுக்கொண்டதற்கு என்னுடைய நன்றி. ஆக, காங்கிரஸ் சர்க்கார் இங்கே இருந்த காலத்திலே அவர்கள் அங்கே போய் வாங்கிக் கொண்டு வந்த தொழில்களே தவிர இவர்கள் ஒன்றும் வாங்கிவிடவில்லை. காங்கிரஸ் சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்கவில்லை, நாங்கள் வந்தால் வாங்கிவிடுவோம் என்றார்கள். என்ன வாங்கினார்கள் ? பிற மாநிலங்களுக்கு குறைவில்லாமல் சிறந்த முறையிலே அதிகமாக வேண்டுமென்று உரிமையோடு போராடியதால் இந்தத் தொழில்கள் எல்லாம் இங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** "நாங்கள் இருந்தபொழுது மத்திய அரசோடு போராடித் தான் இவைகளை யெல்லாம் நாங்கள் பெற்றோம்" எனறு அவர்கள் சொல்கிறார்கள். அவர்களே மத்திய அரசோடு போராடித் தான் பெற முடிந்தது என்பதை ஒப்புக்கொண்டது உண்மையிலே நிலைமை எவ்வளவு மோசமாக இருந்தது என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

தைரியம் இருந்தால் பாருங்கள் என்றார்கள். 4-வது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகும்போது மத்திய அரசிடம் அவைகளைப் பற்றிப் பேச வேண்டுமே தவிர, 4-வது திட்டம் உருவாகாதிருக்கிற நேரத்தில் நாங்கள் மாநில அரசாங்கத்தின் சார்ப்பில் இவைகள் வேண்டுமென்றால் நான்காவது திட்டம் வரட்டும் என்ற பதிலைச் சொல்வார்கள். அது பொருத்தமான பதில் என்பதை அறிந்துகொள்ளத்தக்க அளவு நான் அறிவுள்ளவனாக இருக்கிறேன்.





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, தயவு செய்து முதலமைச்சர் அவர்களை இது மாதிரி குறுக்கீடு செய்ய வேண்டாமென்று நான் முதலிலே கேட்டுக்கொள்கிறேன். இதற்கு நான் பயந்து விடுபவன் அல்ல. 20 வருஷம் செய்யாததை நாங்கள் செய்வோம் என்று சொன்னார்கள். 20 வருஷங்களிலே சாதிக்க முடியாததை 20 மாதங்களிலே சாதிக்க முடியும், சாதித்து விட்டோம், விடலாம் என்றெல்லாம் பேசினார்களே, 45 இலட்சம் டன்னை 1½ வருஷத்திலே சாதித்த அந்த நந்தனார் பெருமையை எல்லாம் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள்மேல் குற்றம் சாட்டுவதற்காகச் சொல்லவில்லை. பொது மக்களுடைய வாக்குகளைப் பெற்று அவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் ஆட்சி நடத்தட்டும், வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. அந்த அந்தச் சமயங்களிலே இருக்கிற அரசியல் காரணங்களுக்காகத்தான் அவர்கள் இதுமாதிரி சாதித்து இருக்கக்கூடும். காங்கிரஸ் ஆட்சியிலே அவர்கள் அதிகமான குற்றச்சாட்டுகளைக் கூறினார்கள்.

சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலே நமது தமிழகம் 10-வது, 12-வது ஸ்தானத்தில் தொழில் வளத்தில் இருந்தது. 15 வருஷ காங்கிரஸ் ஆட்சியின் சாதனை என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டதற்கு நான் பதிலாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், 2-வது மாநிலமாக 15 வருஷத்திற்குப் பின்னாலே இது ஆக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெருமை காங்கிரஸ் கட்சியின் நிர்வாகத்தைச் சேர்ந்தது என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அப்பொழுது ஒரு நிலைமை இருந்தது, அப்பொழுது நிலையான ஒரு கொள்கை இருந்தது, அப்பொழுது ஒரு தொழில் கொள்கை இருந்தது. அப்பொழுது தொழில்கள் மிகவும் நல்ல முறையிலே, நிம்மதியாக நடந்து கொண்டிருந்தன. ஆனால், அப்பொழுது முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் ? நாங்கள் இருந்தால் இன்னும் அதிகமாகப் பெற்றிருப்போம், மக்கள் உங்களை ஆட்சி பீடத்திலிருந்து விரட்டட்டும் என்று சொன்னார்கள். இப்பொழுது என்ன நிலைமை இருக்கிறது ? நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை விட்டு விடுங்கள். இந்த 3 ஐந்தாண்டுத் திட்டங்களில் நடந்து கொண்டிருந்த தொழில்களை உருப்படியாக வைத்துக் கொண்டிருக்கிறார்களா ? தொழில்கள் நல்ல முறையிலே நடந்து கொண்டிருக்கின்றனவா ? அங்கே குழப்படியான ஒரு நிலைமை தான் இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எத்தனை மில்கள் மூடப்பட்டன ? 4 மில்கள் மூடப்பட்டன. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சாதனை இதில் பெரிய சாதனை. காங்கிரஸ்காரர்கள் காலத்திலே 4 மில்கள் மூடப்பட்டன. இவர்கள் 1967-ம் வருஷம் வந்ததற்குப் பிறகு 24 மில்கள் மூடப்பட்டன. பெரும் சாதனை! இது எந்தக் காங்கிரஸ் சர்க்காராலும் முடியாது! இந்தப் பிரச்சினையை நாங்கள் எளிதாகத் தீர்த்து விடுவோம், இந்தப் பிரச்சினையை எங்களிடத்திலேயே விட்டு விடுங்கள் என்று சொல்லுகிறார்கள். காரணம் என்ன ? தெளிவான கொள்கை கிடையாது. நடத்துபவர்களுக்குத் தெளிவான பாதுகாப்பு கிடையாது. சர்க்கார் எப்பொழுது தலையிட வேண்டுமோ அப்பொழுது தலையிடுவதில்லை. அவர்கள் கட்சி நோக்கத்துடன் திராவிட முன்னேற்றக் கழக தொழிற் சங்கத்திற்கு வலியூட்ட வேண்டுமென்பதற்காக இப்பொழுது அரசியலைப பிரயோஜனப்படுத்துகிறார்களே தவிர, அவர்கள் நல்ல நிலைமையிலேயே இயங்க வேண்டுமென்ற நிலையிலே இல்லை.

சென்னையிலும் சுற்றுப்புறத்திலும் எத்தனையோ பாக்டரிகள் மூடப்பட்டிருக்கின்றன. விம்கோ பாக்டரி, மெட்டல் பாக்ஸ் பாக்டரி என்று . . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தவறான தகவல்களைக் கொடுத்துக் கொண்டே போவதால் குறுக்கிட வேண்டியிருக்கிறது. இப்பொழுது விம்கோ பாக்டரி மூடப்பட்டிருக்கிறது. மெட்டல் பாக்ஸ் பாக்டரி மூடப்பட்டிருக்கிறது என்றார்கள். இவைகள் எல்லாம் நன்றாக வேலை செய்து கொண்டிருக்கின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இவர்கள் வந்த பிறகு மூடப்பட்ட இவைகள் அப்பொழுது மூடப்பட்டனவா என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளுவேன். Best and Company, Cromptons, Lucos. TVS. Insulators.

Indian Oxygen அதோடு மற்றும் சென்னைக்கு வெளியிலே Textools, Seshaayee Dalmia Cements இவைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்க வேண்டுமென்று நினைத்தபொழுது யாரோ பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஏற்பட்ட நிலைமைகளை அவர் கேட்டுக்கொள்ளாமல் விட்டிருக்கிறார்கள். டால்மியா சிமெண்டிலே இப்பொழுது ஒன்றும் வேலை நிறுத்தம் இல்லை. வேலை நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முன்பிருந்த நிலையை நான் சொல்லுகிறேன். எங்களுடைய ஆட்சிக் காலத்திலே மூடப்பட்டது போலவும் இவர்களுடைய ஆட்சிக்காலத்திலே திறக்கப்பட்டதுபோலவும் " திறக்கப்பட்டிருக்கிறது " என்று சொன்னால் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** டால்மியா சிமெண்டெல்லாம் மூடப்பட்டிருக்கிறது என்று இன்றையதினம் அவர் பேசி, பத்திரிகையிலே அது வருமானால், "என்ன எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மூடப்படாத தொழிற்சாலைகளை எல்லாம் கூட மூடப்பட்டதாகச் சொல்லுகிறாரே" என்ற நிலையை பொதுமக்கள் பெற்றுவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேனே தவிர, மொத்தமாக இதையெல்லாம் கேட்டுவிட்டு கடைசியிலே பதில் சொல்வது ஒன்றும் கடினமானது அல்ல. ஆனால், என்னுடைய நண்பர், 15 வருஷம் பாராளுமன்றத்திலே பழக்கம் உள்ளவர், இப்படிப் பேசினாரே என்று வெளியே உள்ளவர்கள் எண்ணினால் அது எனக்கு வெட்கமாக இருக்கும். அதற்காகத்தான் இதைச் சொன்னேன்.

(ஆளும் கட்சித் தரப்பில் பலத்த ஆரவாரம்.)

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதே மாதிரி நான் மிகவும் அவமானப்படுகிறேன். (எதிர்க் கட்சித் தரப்பில் ஆரவாரம்). 15 மாதத்தில் எல்லாவற்றையும் சாதித்துவிடுவேன் என்று சொல்லி சாதிக்காமல விட்டார் என்ற குற்றச்சாட்டுக்கு அவர் ஆளாக வேண்டாமென்பது தான் என்னுடைய எண்ணம். நாங்கள் செய்ததில் தவறு இருந்தால் ஏற்றுக்கொள்ளுகிறேன். அதிலே ஒன்றும் தவறு இல்லை.

தொழிலாளர்களுடைய நிலைமையை எடுத்துப் பார்ப்போமானால் சரியான நிலைமை இல்லை. அதற்கு இந்த அரசாங்கம் தான் காரணம் என்று சொல்ல நான் ஆசைப்படுகிறேன். காங்கிரஸ்காரன் காலத்தில் நடந்தது என்ன ? 1965-ம் வருஷம் வேலை நிறுத்தம் 135. 4 இலட்சம் நாட்கள் சேதப்படுத்தப்பட்டன. 1966-ம் வருஷத்தில் 176. 7 இலட்சம் நாட்கள் சேதப்படுத்தப்பட்டன. 1967-ம் வருஷத்தில் இவர்கள் வந்ததற்குப் பின்னாலே 305 வேலை நிறுத்தங்கள் நடத்தப்பட்டன. 11 இலட்சம் வேலை நாட்கள் இழக்கப்பட்டன. ஆகவே தான் நாங்கள் நல்ல சூழ்நிலையிலே இருக்கிறோம் என்று சொல்கிறீர்களே, இதுதான் அபிவிருத்தி என்னும்படியான நிலையா என்பதைக் கேட்க விரும்புகிறோம்.

அதோடுமட்டுமல்ல, சர்க்கார் அவர்களுடைய உத்தியோக பூர்வமான ஏற்பாடு செய்யப்பட்ட, தீர்மானம் செய்யப்பட்ட கொள்கைகளை அமுல் நடத்த முடியாத நிலை இருக்கிறது. நேற்றோ, அதற்கு முன்தினமோ முதல் அமைச்சர் அவர்கள் "உங்கள் ஆட்சிக் காலத்தில் நன்றாக நடந்ததா, 'இந்து' பத்திரிகையில் ஸ்ட்ரைக் நடைபெறவில்லையா" என்றெல்லாம் குறிப்பிட்டு கேட்டார். இன்று அவர்கள் ஆட்சியில் "இந்து" பத்திரிகை ஆபீஸ் இழுத்து மூடப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? சர்க்காருக்கு தெளிவான, உறுதியான கொள்கை இல்லாதது தான் அடிப்படை காரணம். அங்கே இப்பொழுது இருக்கும்படியான நிலை என்னவென்றால் ஒரு தொழிற் சங்கத்திற்கும், இன்னொரு சங்கத்திற்கும் போட்டி நடந்து கொண்டிருக்கிறது. இவர்களைச் சார்ந்திருக்கிற தொழிற் சங்கம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் அங்கே வேலைநிறுத்தம் செய்யும்படியான நிலை இருக்கிறது. வேலை நிறுத்தம் மட்டுமல்ல. ஒரு நல்ல பத்திரிகை நடத்தக்கூடிய காரியாலயத்தில் நிலைமை எப்படி இருக்





கிறது என்றால், கண்ணாடிகளை உடைப்பது, மெஷின்களை உடைப்பது, இதையெல்லாம் எப்படி அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள், பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது தான் இப்பொழுது பிரச்னை. கமிஷனர் ஆப் லேபர் அங்கு போய்ப்பார்த்து தீர்மானித்ததற்கு பின்னர் 10,15 நாட்களுக்கு பின்னர், ஏற்கனவே சொல்லியபடி எல்லாம் சரியான முறையில் அமுல் நடத்தப்படுகிறது, தொழிலாளர்கள் நலன்கள் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்று அவர் ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே, ஸ்ட்ரைக் அல்லது மூடுவிழாக்கள் நடந்தால் எப்படி நிலைமை இருக்கிறது ? முதலாளிகளும் தொழிலாளிகளும் இரண்டு பேர்களும் சேர்ந்து பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். முதலாளிகள் மட்டும் தான் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும், தொழிலாளர்கள் கடமையை மறுக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கக் கூடாது. லேபர் கமிஷனர் ஏற்கனவே தீர்மானம் செய்தபடிக்கு மானேஜ்மெண்டார் ஏற்றுக்கொண்டு, ரூ. 6 லட்சம் வரைக்கும் ஒரு வருஷ பாக்கியைக் கொடுத்ததற்குப் பின்னாலே, அங்கு இருக்கும்படியான தொழிலாளர்கள் நன்றாக நடக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்ட பிறகு நிலைமை சரியில்லை என்றால் என் நன்றாக நடக்கவில்லை என்று சர்க்கார் உடனே தலையிட்டுக் கேட்காமல் இருந்து கொண்டிருக்கிறது. மானேஜ்மெண்டார், பல தடவை சர்க்காருக்கு எழுதிவிட்டார்கள், ஞாபகப்படுத்திவிட்டார்கள். ஒரு சமயம் "இந்து" பத்திரிகை இப்படித்தான் நடக்க வேண்டும், நிலைமை இப்படித்தான் இருக்க வேண்டும் சமுகமான சூழ்நிலை ஏற்படக் கூடாது . . . . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சர்க்காருக்கு அவர்கள் பல தடவை எழுதிவிட்டார்கள் என்று சொல்வது தவறு. கடைசியில் லாக் அவுட் செய்கின்ற நேரத்தில், என்னென்ன ஒழுங்கீனங்கள் நடந்திருக்கின்றன என்று சொல்லி "ஆகவே, நாங்கள் லாக் அவுட் செய்கிறோம்" என்று தான் தெரிவித்திருக்கிறார்கள். உடனே நாங்கள் தலையிட்டுத் தீர்த்து வைக்க வேண்டுமென்று அவர்கள் எழுதியிருப்பதாகச் சொல்லியதை தொழில் அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்கள். "இந்து" பத்திரிகை லாக் அவுட் செய்யப்பட்டிருக்கிறது, இது அரசினுடைய திறமைக் குறைவுக்கு ஒரு எடுத்துக் காட்டு என்ற முறையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பம்பாயில் இந்துஸ்தான் டைம்ஸ், டைம்ஸ் ஆஃப் இந்தியா, எக்ஸ்பிரஸ் ஆகிய பத்திரிகைகளும் மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே, அங்கெல்லாம் உள்ள சர்க்கார் திறமைக் குறைவான சர்க்கார் தான் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேச விரும்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் எதிர்ப்பார்த்ததை முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுதே சொல்லிவிட்டார்கள். இது மாதிரி தப்பித்துக் கொள்ள வேண்டாம் என்று முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். "இங்கே ஒரு தவறு நடக்கிறது" என்று சொன்னால் "அங்கேயும் தவறு நடக்கிறது" என்று எதிர் குற்றச்சாட்டு சொல்வது அதற்குப் பதிலாகாது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அம்மாதிரி வேறு இடங்களில் நடைபெற்றிருக்கின்ற சம்பவங்களை எடுத்துச் சொல்லி, இங்கு நடந்திருக்கின்ற சம்பவங்கள் அசாதாரணமானவை அல்ல என்பதை எடுத்துக் காட்டுவதற்கு முழு உரிமை இருக்கிறது. இது தப்பித்துக்கொள்வது அல்ல. உங்களைச் சிக்கவைப்பது. அதிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால், நாங்கள் அதைச் சொல்ல வேண்டாம் என்று எடுத்துக் சொல்லலாம். சர்க்கார் நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்பதை விளக்கி, சில ஆலைகள் அல்லது சில பத்திரிகாலயங்கள் மூடப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டி, திறமையான சர்க்கார் நடக்கின்ற இடங்களில் இப்படிப்பட்ட நிறுவனங்கள் மூடப்படவில்லை, ஆகவே, திறமை இல்லை என்று நிரூபிக்க வேண்டும். பல இடங்களில் இப்படிப்பட்ட காரியங்கள் நடப்பது, பொதுவாகத் தொழிலாளர்கள், முதலாளிகள் இவர்களிடையே இருக்கிற ஒரு தொடர்பின் காரணமாக இவைகள் நடக்கின்றன என்றுதான் எடுத்துக் காட்டாக இருக்குமே தவிர, சர்க்கார் திறமைக் குறைவு அதற்கு எடுத்துக் காட்டு ஆகாது.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இவர்கள் ஆட்சி நடந்தபொழுது "தினமணி" பத்திரிகையில் இது போன்ற தகராறு ஏற்பட்ட நேரத்தில், ஆந்திராவுக்குச் சென்று அவர்கள் பத்திரிகையை ஆரம்பித்தார்கள். அரசு செய்தது தவறு என்பதை உணர்ந்து, இரண்டாவது முறையாக "தினமணி" பத்திரிகை மீண்டும் இங்கே துவக்கப்பட்டது. அப்பொழுது இம்மாதிரி குற்றச்சாட்டு இருந்ததை கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். ஆகவே, இப்பொழுது இதைப் பற்றி பிரமாதமாகக் கூறுவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ, மாதவன் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று ஒரு தகவலை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சட்டப்படி குளோஷர், லாக் அவுட், ஸ்ட்ரைக் என்று பலவிதம் இருக்கிறது. அவர்கள் எல்லாவற்றையும் புரிந்துகொண்டு நிலைமையை விளக்கினால் பரவாயில்லை. இவைகளெல்லாம் குளோஷரில் வராது, மூடுவிழாக்களில் வராது. "இண்டியன் எக்ஸ்பிரஸ்" தான் மூடு விழா நடத்தியது. இங்கு நடப்பதெல்லாம் "ஸ்ட்ரைக்" அண்டு "லாக் அவுட்" தான். அரசாங்கம் எந்த அளவுக்குப் பொறுப்பு என்பதை விளக்க வேண்டும். "இந்து" பத்திரிகை பற்றிச் சொன்னார்கள். அது சம்பந்தமாக ஒரு தகவலைக் குறிப்பிட விரும்புகிறேன். இவ்வளவு சீக்கிரமாக எதிர்க் கட்சி, தொழிலாளர்களைக் கைவிடுவது நல்லது அல்ல என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய சர்க்கார் ஏற்படுத்திய வேஜ் போர்டு ரெக்கமன்டேஷனை இம்ப்ளிமெண்ட் பண்ணவேண்டுமென்பதுதான் பிரச்னை. இது இவர்களாலே உருவாக்கப்பட்ட ஒரு பிரச்னை. டெல்லியில் உள்ள ஆட்சியில் உருவாக்கப்பட்ட பிரச்னை. எங்களுடைய ஆட்சிதான் மற்ற மாநிலங்களைவிட மிகச் சிறந்த முறையிலே இந்தப் பத்திரிகைத் தொழிலாளர்களுடைய பிரச்னையைத் தீர்த்து வைத்திருக்கிறது என்று நான் சொல்லவில்லை. அவர்களுடைய கட்சியைச் சார்ந்த அமைச்சரே பாராளுமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். உடனே இட்லி சாப்பிட்டு விட்டு சொல்கிறார் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லலாம். நாங்களும் அவர்களுக்கு இட்லி கொடுக்கவில்லை. அவர்களும் இட்லி சாப்பிடவில்லை. பத்திரிகைத் தொழிலாளர்களுடைய பிரச்னையை மிகத் திறமையான முறையில், நல்ல முறையில் தீர்த்துவைத்திருக்கிறோம் என்று டெல்லி அமைச்சர்தான் சொல்லியிருக்கிறார். "இந்து" ஆபீஸ் பொறுத்த வரையிலே, ஏதோ சர்க்கார் தலையிட்டு லேபர் கமிஷனர் உத்தரவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி உத்தரவு போடுவதற்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. வேஜ் போர்டு ரெக்கமன்டேஷனை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னதில், முதலில் ஒத்துக்கொள்ளாமல், இறுதியாக ஒத்துக் கொண்டார்கள். அதை நிறைவேற்றுவதிலே, இண்டர்ப்ரடேஷன் ஆஃப் வேஜ் போர்டு ரெகமென்டேஷன்ஸ், அவைகளை எந்த அளவுக்கு இண்டர்ப்ரட் பண்ண வேண்டும் என்பதில் தகராறு வந்தது. "அதைப்பற்றி நாங்கள் ஒரு அறிக்கை தயாரிக்கிறோம், அறிக்கை தயாரித்து இத்தனை நாட்களுக்குள் தருகிறோம். அந்த அறிக்கையை வைத்து அரசாங்கம் அதை நிறைவேற்றுவதற்கு முன்வரவேண்டும்" என்று முதலாளிகள் தரப்பில், நிர்வாகத்தினர் தரப்பில் சொல்லப்பட்டது. இதுவரையில் அந்த அறிக்கை தரப்படவில்லை. இண்டர்ப்ரடேஷன் பற்றிய தகராறு நீடித்துக் கொண்டிருக்கிறது. இதற்கிடையிலே ஒரு தொழிலாளி வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். அது இந்தப் பிரச்னையை இன்னும் அதிகப்படுத்தி விட்டது. அதற்குப் பின்னாலே கூட அரசாங்கம் எதுவும் செய்யவில்லை. தொழிலாளர்களும் எதுவும் செய்யவில்லை. தொழிலாளர்கள் மீது அவர்கள் செய்ததாகப் பல குற்றங்கள் சாட்டப்பட்டு, நிர்வாகத்தினர் சார்பிலே "இந்து" பத்திரிகாலயம் இழுத்து மூடப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் மூடியது என்பது இல்லை.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்து சில பிரச்னைகளை இங்கே கிளப்புகிறேன் அதற்கு விளக்கங்கள் தேவையாக இருக்கலாம் அரசாங்கம் உத்தரவு போடவில்லை என்றால் கமிஷனர் ஆஃப் லேபர் போயிருக்கிறார். தீர்மானம் செய்திருக்கிறார். சர்க்கார் உத்தரவு போடவில்லை என்று சொன்னால் அமைச்சரா அங்கே போய் உட்கார்ந்து கொண்டிருப்பார்கள் நாங்கள் உத்தரவு போடவில்லை, அதிகாரி போட்டார் என்று சொல்வதில் அர்த்தம் கிடையாது. அப்படிச் சொல்லி சர்க்கார் தப்பித்துக்கொள்வது விந்தையாக இருக்கிறது. இது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. சர்க்கார் அதிகாரிகள் எதைச் செய்தாலும் அதற்குப் பூரணமான பொறுப்பு அமைச்சர்களுக்கும் அமைச்சரவைக்கும் உண்டு என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

லாக் அவுட் என்று சொன்னார்கள். எனக்கு இதைப்பற்றி அதிகமாக விஷயம் தெரியவில்லை என்று அறிவுரை சொல்லியதற்கு நன்றி. 27 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன, மூடுவிழாக்கள் நடந்திருக்கின்றன. முதல் அமைச்சர் அவர்கள் திருச்சியில் இருக்கும்படியான சமயத்தில் சொன்னார். எல்லோரையும் கூப்பிட்டு "மில் திறக்கும்வரையில் நாங்கள் ஊதியம் கொடுப்போம்" என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மறுபடியும் சொல்கிறேன். ஒரு பிரச்னையில் அமைச்சர் அவர்கள் பதில் அளித்த பிறகு, அதை ஏற்றுக்கொள்வது தான் முறை. திருப்பித் திருப்பி அதையே சொல்லிக் கொண்டிருப்பது முறையல்ல. மில்கள் திறக்கப்படும் வரையில் வேலையிழந்த தொழிலாளர்களுக்குப் பணம் தரப்படும் என்ற முறையில் எந்த வாக்குறுதியும் கொடுக்கப்படவில்லை. வேலை இழந்து தவித்துக் கொண்டிருக்கும் தொழிலாளிகளுக்கு நிவாரணம் அளிக்கும் ஒரு முறையை வகுத்துக்கொள்ளும் ரீதியில், வேலையிலுள்ள தொழிலாளிகள் ஒரு பகுதி, பொதுமக்கள் ஒரு பகுதி, முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு பகுதி என்று இப்படிப் பணம் திரட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று தான் பேசப்பட்டது. அதன்படி ஒரு முறை பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேலை இழந்தவர்களுக்கு நாங்கள் நிவாரணம் தருகிறோம் என்று சட்டமறிந்த எந்த முதல் அமைச்சரும் சொல்லியிருக்க முடியாது என்பதை சட்டம் அறிந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். ஏனென்றால், நம் சட்டதிட்டப்படி வேலை இழந்தவர்களுக்கு நிவாரணம் தருவதற்கு அன்-எம்ப்ளாய்மெண்டு இன்ஷூரன்ஸ், அன்-எம்ப்ளாய்மெண்டு டோல் என்று நம்மிடத்தில் சட்டபூர்வமாக ஒன்றுமில்லை. நான் சொல்லாத ஒன்றை வைத்துக் கொண்டு, நீங்கள் அப்படிச் சொன்னீர்கள், இப்படிச் சொன்னீர்கள், சொன்னதை நிறைவேற்றவில்லை என்றெல்லாம் கேட்பது பத்திரிகைகளிலே வேண்டுமானால் தலைப்பு வரலாம். "தொழிலாளர்களுக்குப் பணம் கொடுப்பதாகச் சொல்லி முதல் அமைச்சர் தரவில்லை" என்று பத்திரிகையில் வேண்டுமானால் வரலாம். அதிலே எதிர்கட்சித் தலைவர் அவர்கள் திருப்தி அடைகிறார் என்றால், நான் அந்த சந்தோஷத்தில் குறுக்கிட விரும்பவில்லை. என்னுடைய நிலையை விளக்கிக்கொள்ள வேண்டும். அதற்காகத் தான் சொல்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. பத்திரிகையில் வருவதை வைத்துக் கொண்டுதான் நாங்கள் பேசவேண்டியிருக்கிறது. அவர்கள் பத்திரிகையில் வருகிறது, "உணவு அமைச்சர் பறக்கிறார்கள்" ஏழை மக்கள் பிரச்னைகளைத் தீர்க்க என்று வருகிறது. ஆகா, என்று மக்கள் . . . . நண் பகல் 1-30

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பத்திரிகையில் வருவதைப் புரிந்து கொள்ளவில்லை என்பதற்கு நண்பர் குறிப்பிட்டதே உதாரணம். ஏதோ பறக்கிறார்கள் என்றவுடனே, வானத்தைப் பார்த்துப் பறக்கிறாரா, பறக்கிறாரா என்று பார்த்துவிட்டு, பறக்கவில்லையே என்று சொல்வது வாதத்திற்கு உதவாது. பறக்கிறார் என்றால், விமானத்தில் போகிறார் என்றுதான் பொருள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பத்திரிகையில் வருவது முக்கால்வாசி தவறு என்பதற்கு அவர்கள் சொல்வதே போதும். அவர்களுடைய விளக்கத்தைப் பாராட்டுகிறேன். ஆனால், நான் ஏதோ விளம்பரம் தேடுவதற்காகச் சொல்வதாகச் சொன்னார்கள். அதற்கு அவசியம் இல்லை. எனக்கு ஏதோ பி. பி-ப்ளஸ் என்றெல்லாம் மார்க் கொடுத்தார்கள். நண்பர் என்ற முறையில் அவர்கள் எதை வேண்டுமானாலும் கொடுக்கட்டும். கொடுக்கல், வாங்கல், நட்புக் குறையவில்லை. பிரச்சினைகளைப் பற்றிச் சொல்லும்போது, பத்திரிகையில் வந்த நிலையில் மக்கள் நினைக்கிறார்கள்—ஒருவன் காஞ்சீபுரத்திற்குப் போனால், வரதராஜப் பெருமானைக் கும்பிட்டுவிட்டு, நன்றாகச் சாப்பிட்டுவிட்டு, பட்டைக்கறை வேட்டி கட்டிக்கொண்டு, "கஞ்சி வரதப்பா" என்றார். பக்கத்தில் இருந்து, பசியால் வாடும் ஏழை, "எங்கு வரதப்பா" என்றான். சாப்பிட்டவனுக்கு, பக்தி ; சாமியின் மேல் ஆசை ; பட்டினி கிடப்பவனுக்கு கஞ்சியின் மேல் ஆசை. ஆகவேதான் சொல்கிறேன். பத்திரிகைச் செய்தி மக்களிடம் ஒரு ஆவலைத் தூண்டிவிடுகிறது.

இன்றைக்கு 27 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. எந்தப் பிரச்சினையானாலும், மத்திய சர்க்காரைக் கை காட்டுகிறார்கள். விலைவாசி ஏற்றம் என்றால், மத்திய சர்க்காரைக் கை காட்டுகிறார்கள். ஐந்து கோடி ரூபாய்க்கு நூலை வாங்கி வைத்துவிட்டால் பிரச்சினை தீரும் என்கிறார்கள். நூலை வாங்கி வைத்துவிட்டால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடுமா? பிற்பாடு 10 கோடிக்கு வாங்கி வையுங்கள் என்பார்கள். அந்த நூலெல்லாம் எங்கே போய்க் கொண்டு இருந்தது? அதை ஆராய வேண்டும்.

மகராஷ்ட்ரா, குஜராத் போன்ற மாநிலங்களுக்கு நம்முடைய துணிகள் போய்க் கொண்டு இருந்தன. இப்பொழுது இவர்களுடைய கொள்கை காரணமாக, வட நாட்டார் என்று வெறுப்பு காட்டும் காரணத்தால்; வட நாட்டிலிருந்து தனியாக நாம் பிரிந்து போக வேண்டும் என்று ஒரு சிலர் பேசுவதன் காரணமாக, அவர்கள், இந்த மாநிலப் பொருளே வேண்டாம் என்று நிறுத்திவிட்டார்கள். அதுவும் தேக்கத்திற்கு ஒரு காரணம் . . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எங்கள் பேரில் எவ்வளவு குற்றச்சாட்டுகள் வேண்டுமானாலும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட்டட்டும். ஆனால், இரண்டு மாநிலங்களுக்கு இடையே கசப்பு வரும் முறையில் பேசுவது முறையாகாது. வடநாட்டாரிடத்தில் காட்டும் வெறுப்புக் காரணமாக அவர்கள் வாங்க மாட்டேன் என்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதுவும் தவறு. இப்பொழுது மகராஷ்ட்ரத்திலே, நம்முடைய நூல் ஏற்றுமதியாகாததற்குக் காரணம் அவர்களே இப்பொழுது நூல் ஆலைகளை வைத்து, நூற்பு, நெசவு இரண்டையும் கலந்து செய்கிறார்கள். ஆகவேதான் ஏற்றுமதி ஆகவில்லை. நம்மிடம் உள்ள வெறுப்பினால் அல்ல. அவர்களுக்கு வெறுப்பு இருப்பதாகக் குறிப்பிட்டுக்கொண்டு அதற்குக் காரணம் நாங்கள் வட நாட்டிடம் காட்டும் வெறுப்பு என்று சொல்லி இரண்டையும் ஒன்றுபடுத்துவது பொருத்தமற்றது. இரு மாநிலங்களுக்கும் இடையே கசப்புணர்ச்சியை உண்டாக்கும் வகையில் பேசுவது பொறுப்புள்ள எதிர்க் கட்சித் தலைவருக்குச் சரியில்லை. ஆகவே, அந்த அளவில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று மாநிலத்தின் நன்மையை உத்தேசித்துக் குறிப்பிடுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்களையும் நான் வேண்டிக் கொள்ளுகிறேன், மத்திய சர்க்கார், மத்திய சர்க்கார், உங்கள் சர்க்கார் உங்கள் சர்க்கார், என்று சொல்லி வெறுப்பை உண்டாக்க வேண்டாம் என்று. உங்கள் கட்சி, உங்கள் தலைவர், என்றெல்லாம் சொல்லி வெறுப்புணர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிடுகிறேன்.

இவர்களுடைய பொன்மொழிகளிலிருந்தே எடுத்துக் காட்டுகிறேன். "விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், எங்கோ கைகாட்டப்படுகிறதே தவிர, இந்த ஆட்சியில் இன்னது செய்கிறோம்" என்று கூற முடியவில்லையே" என்று அண்ணா அவர்களே கூறியிருக்கிறார்கள்.



**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** விலைவாசி ஏற்றத்திற்கு நாங்கள் வேறு இடத்திற்கு கைகாட்டாமல், எங்களால் கட்டுப்படுத்தக் கூடிய விலைவாசிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** "எடுத்துக் கொண்டு இருக்கிறோம்" என்றால் நிச்சயமாகக் குறைந்திருக்க வேண்டும். அதற்கான அறிகுறியைக் காணோமே.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** விலைவாசிகள் குறைந்திருக்கின்றன என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு விலைவாசிகள் எப்படி ஏறியிருக்கின்றன என்பதைப்பற்றி தமிழ் நாடு காங்கிரஸ் சர்குலர் அனுப்பி, சேகரித்த விவரங்களை வெளியிடவில்லை என்பதே விலைவாசிகள் இறங்கியிருக்கின்றன என்கிற தகவல்கள் கிடைத்ததால்தான் என்று கருதுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** விலைவாசிகள் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் வேறு சமய சந்தர்ப்பங்கள் காரணம். உங்கள் சாதனையால் அல்ல. வேளாண்மை நன்றாக இருந்தது என்றால் அதுவும் உங்கள் சாதனையால் இல்லை. நல்ல மழை பெய்தது, வட நாட்டில் நல்ல வெள்ளாமை இருந்தது, பருப்பு அதிகமாக வந்தது, விலை குறைந்தது. உங்களாலா மழை பெய்கிறது? இப்பொழுது மழையே பெய்ய வில்லை, அதற்கு என்ன செய்கிறீர்கள்? ஆகவே இப்பொழுது இருக்கும் பிரச்சினை, விலைவாசி ஏற்றம் இல்லை என்றால், டி.ஏ. அதிமாகக் கொடுக்க வேண்டியது இல்லையே. இன்றைக்கு இருக்கும் நிலை என்ன? 15 வருஷ காங்கிரஸ் ஆட்சியில் இரண்டாவதாக வரிசையில் இருந்த தமிழகம் இன்றைக்கு 10-வது அல்லது 11-வது ஆகப் போய்விட்டது. இதற்குக் காரணம் இப்பொழுது இருக்கும் இவர்கள் சர்க்காருடைய இன்டஸ்ட்ரியல் பாலிஸி தான். இன்டஸ்ட்ரியல் பாலிஸி சரியாகக் கிடையாது. லேபர், தொழிலாளர்கள் நலன்களைக் காப்பதாகச் சொல்கிறார்களே தவிர, பூரணமாகச் செய்வது கிடையாது . . . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இரண்டாவதாக இருந்தது தமிழகம், இப்பொழுது 11-வது வரிசையில் போய்விட்டது என்று எதிர்க் கட்சித் தலைவர் சொல்வதற்கு எந்த நிபுணருடைய ஆதாரத்தைக் காட்டுகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பட்டியலைக் கொடுக்கத் தயார். பின்னால் எவ்வளவு புள்ளி விவரம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** 11-வது, 13-வது என்கிற எண்ணிக்கையை விட்டுவிடுவோம். 6-வது, 8-வது என்றாலும் சரி. அந்த அளவிற்குப் போய்விட்டது என்று சொல்வதற்கு எந்த நிபுணருடைய அறிக்கையிலிருந்து ஆதாரம் காட்டுகிறார்கள்?

**திரு பி. ஜி. கருத்திருமன் :** அந்த நிபுணரைக் காட்டத் தயாராக இருக்கிறேன். 1966-ல் இரண்டாவதாக இருந்த மாநிலம், இப்பொழுது மிகவும் பின்னாலே நிற்பதாக நிலைமை இருக்கிறது. நாளைக்குப் புள்ளி விவரத்தைக் காட்டத் தயாராக இருக்கிறேன். எத்தனையாவது, எவ்வளவாவது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். குஜராத், மகராஷ்ட்ரா இவைகளெல்லாம் பின்னால் இருந்தன. தொழில் மந்தம் என்றாலும், அவை இப்பொழுது முன்னால் நிற்கின்றன.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, குஜராத், மகராஷ்ட்ரா போன்ற மாநிலங்கள் என்றைக்கும் பிற்பட்டு இருக்கவில்லையே.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்களுக்கு **நேரம் வரும்போது** பேசட்டும்.

---

** பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1968 ஆகஸ்ட் 23

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** * * விவரங்கள் சரியாக இருக்க வேண்டுமே என்பதற்காகச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** * * என்கிற வார்த்தை அவ்வளவு ரசமான வார்த்தை இல்லை. பஜனை கோவில் போன்ற இடங்களில் சொல்ல வேண்டிய வார்த்தை. பக்க பலமாக இருக்கிறார், ஆதரவு காட்டுகிறார் . . . . (திரு. விநாயகம் : பின் பாட்டு) பின் பாட்டுப்பாடுகிறார் என்று நம்முடைய விநாயகம் பழக்கத்தின் காரணமாகச் சொல்லுகிறார், அப்படி ஏதாவது ஒன்றைச் சொல்லலாம். * * * அதைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த வார்த்தையை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தாளம் இல்லை என்றால், இசையே இல்லை. தாளக்கட்டு அவசியம். தாளம் தவறினால் . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** தாளம் இல்லையென்றால் இசையில்லை என்பது சரிதான். ஆனால் * * * என்று சொல்லும்போது, அது எந்த நேரத்தில், எப்படிப்பட்ட நிலையில் உபயோகிக்கிறார்கள் என்பதைப் பொருத்திருக்கிறது என்பதும் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியும். அதை நல்ல முறையில் சொல்லவில்லை என்றால் அதைத் திரும்பப் பெற்றுவிடுவது நல்லது.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, it is not an unparliamentary word.

ஆகவே, இனிமேல் வேண்டுமானால் அந்த வார்த்தையை உபயோகிக்காமல் இருந்துவிடுகிறேன். அது பார்லிமெண்டரி வார்த்தை அல்ல என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும். நான் அந்தச் சொல்லை திரும்பப்பெற்றுக் கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு சொல் பார்லிமெண்டரி வார்த்தையா, அன்பார்லிமெண்டரி வார்த்தையா என்பதை முடிவு செய்வது பேரவைத் தலைவரைப் பொருத்த விஷயம். நீங்கள் அதை முடிவு செய்யக் கூடாது.

**திரு. கே. விநாயகம் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் * * என்ற சொல் சரியா, அல்லவா என்பதுபற்றித் தாங்கள் முடிவு சொன்னீர்கள். ஆங்கிலத்திலே, ஆங்கிலப் பாராளுமன்றத்திலே "you are playing tho second fiddle" என்று சொல்கிறார்கள். It is also an honourable way of expressing that you are supporting the party in power. என்றுதான் அர்த்தம். அப்படிச் சொல்வதில் தவறு எதுவும் இல்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நீங்கள் ஆதரவு அளிக்கிறீர்கள் என்று, "ஆதரவு" என்று சொல் இருக்கும்போது, * * என்ற சொல்லை வேண்டுமென்றே தருவித்ததுபோல இருக்கிறது. கேலிச் சொல்லாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் அதை உபயோகித்திருக்கிறார் என்று கருத வேண்டியிருக்கிறது. அந்தச் சொல்லை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவர் "திரும்பப் பெற முடியாது" என்று கூறிவிட்டார். அவர் அதைத் திரும்பப் பெற முடியாது என்று சொன்னால் வலியுறுத்த நான் விரும்பவில்லை. * * என்பது தரக்குறைவான தன்மையைக் காட்டுகிறது. ஆகவே இப்பொழுதாவது அந்தச் சொல்லைத் திரும்பப் பெற்றுக்கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

** பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1968 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருக்குறளில்,

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய்கவர்ந் தற்று"

என்ற பாடலில் திருவள்ளுவர், எந்தச் சொல்லைச் சொல்லலாம், எதைச் சொல்லக்கூடாது என்று அழகாகக் கூறியுள்ளார். மேலும், நல்ல சொல் இருக்கும் போது, கெட்ட சொல்லை ஏன் பயன்படுத்த வேண்டும்? வேறு ஒரு சொல் இல்லையென்றால், அந்தச் சொல்லை உபயோகிக்கலாம், வேறு சொற்கள் இருக்கின்றனவே அவற்றைப் பயன்படுத்தலாம். மேலும் இன்னொரு குறள்,

" நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை"

என்று நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இனிய சொற்களையே உபயோகிக்க வேண்டும். நீங்கள் கம்ப ராமாயணத்தைக் கற்றுத் தேர்ந்தவர்கள். அப்படி எல்லாம் தெரிந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய வாயிலிருந்து இத்தகைய சொல் வருவதை நான் விரும்பவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இனிமேல் வேண்டுமானால் அந்த வார்த்தையை உபயோகிக்காமல் விட்டுவிடுகிறேன். அந்த வார்த்தையைத் திரும்பப் பெற வேண்டியதில்லை. இனிமேல் அந்த வார்த்தையை விட்டுவிடலாம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தச் சொல்லை திரும்பப் பெற்றுக் கொண்டால், பத்திரிகைகளில் திரும்பப் பெற்றுக் கொண்டார் என்று செய்திவரும் என்று கூச்சப்படுகிறார் என்று கருதுகிறேன். பத்திரிகைகளில், நான் கேட்டுக் கொண்டதும் வரும், நீங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள மறுத்ததும் வரும். பொதுமக்கள் எது சரி என்பதை உணர்ந்துகொள்ளுவார்கள். குறைந்த பட்சம் சபை நடவடிக்கைகளில் பதிவாகாமல் அந்த சொல் இருப்பதற்காகவாவது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக்கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபை நடவடிக்கைகளில் பதிவாகாமல் விட்டுவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ** என்ற சொற்கள் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. பத்திரிகையாளர்களும் அந்தச் சொல்லைப் பிரசுரிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அடுத்தபடியாக, இந்தச் சர்க்கார் கொள்முதல் கொள்கையில் தவறான கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதை விளக்க விரும்புகிறேன். கொள்முதல் தேவைதான், திரு. காமராஜ் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் சந்தித்துக் கொண்டபோது, திரு. காமராஜ் அவர்கள் " நீங்கள் தைரியமாக இந்தக் காரியத்தைச் செய்யுங்கள். என்னுடைய ஆதரவு உங்களுக்கு இருக்கிறது" என்று கூறினார். இது மக்களுடைய பிரச்சினை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** திரு. காமராஜ் அவர்களும், நானும் பேசிக்கொண்டதிலே ஒரு பகுதியைத்தான் சொன்னார். முழுப் பேச்சின் அளவும் அவர் குறிப்பிடவில்லை. திரு. காமராஜ்

** பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

அவர்கள், கொள்முதல் விஷயத்தில் சர்க்கார் அனுசரிக்கும் கொள்கை சரியானது என்றார். கொடுக்கும் விலை நியாயமானது என்றும் கூறினார். அதுமட்டுமல்ல. இன்னும் அதிக அளவில் கொள்முதல் செய்ய வேண்டுமென்றால் என்னைக் கேளுங்கள் என்று கூறினார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மிக்க நன்றி. இந்த விலைதான் நியாயம் என்று சொன்னார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஒரு குவுண்டாலுக்கு இதே 45 ரூபாய் நியாயமான விலை என்று நானும் மூன்று வருடங்களுக்கு முன்னால் சொல்லியிருக்கிறேன். இப்போது இருக்கும் பிரச்சினை என்னவென்றால், இப்போதிருக்கும் நிலைமையைப் பார்க்க வேண்டும். விலைவாசிகள் எல்லாம் ஏறியிருக்கின்றன.

(குறுக்கீடு) ஆறு மாதங்களுக்குள் எவ்வளவோ மாறிவிடுகின்றன. இன்றைய தினம் செக்கோஸ்லோவிகியாவில் ரஷ்யப் படைகள் போய் புகுந்து விட்டன. ஆகவே, நிலைமைகள் அடிக்கடி மாறிக் கொண்டே வருகின்றன. ஆகவே, விவசாயிகளுக்குக் கொடுக்கும் படியான விலை, அவர்களுக்கும் ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுக்கும் முறையில் அமைய வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது மட்டுமல்ல, கடந்த பதினைந்து வருடங்களாக கொள்முதல் விலை கட்டுபடியாகக் கூடிய விலையில் இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிறோம். விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடியவர்கள்.

“ சுழன்றும் ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை ”

என்று வள்ளுவப் பெருந்தகை உழவனைப் பெருமைப்படுத்திக் கூறியுள்ளார். உழவன் மானத்தோடு வாழ வேண்டும், கௌரவத்துடன் வாழ வேண்டும், சிறப்பாக வாழ வேண்டும், அவனால்தான் எந்த ஆட்சியும் நிலைக்கும். அவனுடைய மனம் நொந்தால் ஆட்சி கவிழ்ந்துவிடும். இதற்குச் சரித்திரம் சான்றாக இருக்கிறது. கொள்முதலுக்குக் கொடுக்கப்படும் விலை போதாது என்று நான் கேட்கும் போது, இவர் ஏதோ பணக்காரர்களுக்குத்தான் விலை கேட்கிறார் என்று குற்றம் சாட்டுகிறார்கள். நான் கேட்பதிலே விவசாயத் தோழர்களுக்கும் நன்மை இருக்கிறது. பணக்காரர்களிடம் இருந்த நிலங்களை நிலச்சீர்திருத்தம் என்ற பெயரால் பிரித்துவிட்டனர். நிலச் சீர்திருத்தத்தில் எல்லாவற்றையும் குறைத்துவிட்டனர். விலைவாசியேறும் நிலைமையில், விவசாயத் தோழர்களுக்கு, தானியம் மூலமாகத்தான் கூலி கொடுக்கப்படுகிறது. நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் தானியமாகத்தான் கூலி கொடுக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறான தகவல்களையே கொடுத்துக் கொண்டு போவதால் குறுக்கிடுவதற்கான நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அடிக்கடி குறுக்கிடுவதற்கான நிலைமையில் என்னுடைய உடல் நிலைமை சரியாக இல்லை. விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய முறையில் கொள்முதல் விலை இருக்க வேண்டுமென்பது பொதுத் தத்துவம், நியாயம். அதே நேரத்தில் கொள்முதல் விலையை அதிகப்படுத்திக் கொண்டே போனால், வாங்கி உண்பவர்களுடைய விலை ஏறிக் கொண்டே போகும். வாங்கி உண்பவர்கள் எந்த அளவுக்கு வேண்டுமானாலும், இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் என்று வாங்கிச் சாப்பிட்டாலும் பரவாயில்லை, கொள்முதலுக்கு மட்டும் அதிகமான விலை—கட்டுப்படியாகக் கூடிய விலை—கொடுக்க வேண்டுமென்பது சரியான காரணமாகாது.



இரண்டாவது, பெரும்பாலான இடங்களில் விவசாயத் தோழர்களுக்குக் கூலியாகத் தானியம் கொடுக்கிறார்கள் என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். போன வாரத்திலே, விவசாயக் கூலிகளுக்குத் தானியமாக கொடுப்பதாக ஒப்புக்கொண்ட தஞ்சாவூர் மிராசுதார்கள், இப்போது தானியம் தர மறுக்கிறார்கள். தானியத்திற்கு ஈடாக பணம்தான் தருவேன், தானியம் கொடுக்க மாட்டேன் என்று மிராசுதார்கள் கூறுகிறார்கள். தானியம் கொடுப்பதாக எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். எல்லோரும் விவசாயக் கூலிகளுக்குத் தானியம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது தவறான கருத்து.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நூற்றுக்கு முக்கால் பங்கு அறுவடை போன்ற காரியங்களில் தானியமே கொடுக்கிறார்கள். நடவு, களையெடுத்தல் போன்ற காரியங்களுக்குக் கூலி கொடுக்கிறார்கள். தஞ்சாவூரில் தவறு செய்திருந்தால் திருத்திக்கொள்ளட்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கூலி ஒரு ரூபாயும் 6 லிட்டர் தானியமும் தரப்பட வேண்டுமென்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தம். 6 லிட்டர் தானியம் எங்களிடத்தில் இல்லை, அதற்கு வேண்டிய விலையை பணமாகக் கொடுக்கிறோம். என்று மிராசுதார்கள் சொன்னார்கள். 6 லிட்டர் தானியத்திற்கு என்ன விலை நிர்ணயிப்பது என்பதில் விவாதம் ஏற்பட்டு முடிவில் சமரச ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டது. விவசாயக் கூலிக்காகத் தானியமும் கொடுக்கிறார்கள் என்பது சரியான நிலைமை அல்ல, தவறான கருத்துத்தான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஏன் தானியம் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் ? நீங்கள் போய் கொள்முதல் செய்வதால்தான் அப்படிச் சொல்லுகிறார்கள். அவர்களுடைய விளைச்சலில் அவர்களுடைய தேவை போக மீதியிருப்பதை கொள்முதல் செய்தால் தானியம் கொடுப்பார்கள். விளைகிற விளைச்சலில் நூற்றுக்கு நாற்பது பங்குதான் மிராசுதார்களுக்குக் கிடைக்கின்றது. மீதி அறுபது பங்கு உழுகின்ற குடியானவர்களுக்குப் போகின்றது. தங்களுக்குக் கிடைக்கக் கூடிய நாற்பது பங்கு விளைச்சலில் தங்களுடைய தேவைபோக மீதியைத்தான் கொள்முதலுக்குக் கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். மேலும், அவர்களுக்குக் கொடுக்கப்படும் விலை கட்டுப்படியாகக் கூடிய விலை அல்ல என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இன்றைக்கு மற்ற மாநிலங்களில் என்ன விலை கொடுக்கிறார்கள் என்பதை முதல் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன். ஆந்திராவில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு மட்ட ரகத்திற்கு 46 ரூபாய் கொடுக்கிறார்கள். அதற்கு அடுத்த ரகத்திற்கு 56 ரூபாய் கொடுக்கிறார்கள். உயர்ந்த ரகத்திற்கு 70 ரூபாய் கொடுக்கிறார்கள். இடதுசாரி கம்யூனிஸ்டுகள் ஆளுகிற கேரள மாநிலத்தில் குவிண்டாலுக்கு 60 ரூபாய் கொடுக்கிறார்கள். மேற்கு வங்காளத்தில் 60 ரூபாய் கொடுக்கப்படுகிறது. குஜராத்தில் 46 இல் இருந்து 91 வரை கொடுக்கப்படுகிறது. ஆகவே உற்பத்தி செய்கிறவர்களை நஷ்டப்படுத்திப் பயன் இல்லை. வாங்கி உண்பவர்களுக்குத் திட்டவட்டமாகச் சொல்லிவிட வேண்டும். விவசாயிகளுக்கு நியாயமான, கட்டுப்படியாகக் கூடிய விலை கொடுங்கள் என்று சொல்ல வேண்டும்.

உணவு தானியத்திற்கு கட்டுபடியாகக் கூடிய நியாயமான விலையை நீங்களே நிர்ணயித்து அமுல் படுத்துங்கள். வெளி மார்க்கெட்டில் ஒரு விலை, கொள்முதலுக்கு ஒரு விலை என்பது எதற்காக ? இன்றைக்கு வெளி மார்க்கெட்டு என்று இருப்பதனால்தானே—கொள்முதலுக்கு அளந்தது போக பாக்கி

யுள்ள தானியத்தை தங்கள் செலவுக்குப் போக எஞ்சியுள்ளதை வெளிச் சந்தையில் விற்றுக் கொண்டால்தான் ஓரளவு சமாளிக்க முடியும் என்று எண்ணி—தானியமாகக் கூலி கொடுக்கத் தயங்குகிறார்கள்— நமக்கு ஒரு விலை, வெளிச்சந்தையில் ஒரு விலை என்பது இல்லாமல், நியாயமான கட்டுபடியாகக் கூடிய ஒரே விலையை நிர்ணயித்து நீங்கள் அமுல்படுத்துங்களேன். விலை வீழ்ச்சி இருப்பதும் கெடுதல்; விலைவாசி ஏற்றமும் கெடுதல், விலைவாசி ஏற்றம் பணவீக்கத்தில் கொண்டுபோய் விடும். விலை வீழ்ச்சி—விவசாயிகளிடையே உற்சாகத்தைக் குறைக்கும். உற்பத்திப் பெருக்குக்குச் சாதகமாக இருக்காது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நண்பர் அவர்கள் பேசுகின்ற போது சிறிது நேரத்திற்கு முன்புதான் கொள்முதல் செய்துவிடுவதனாலே மிராசுதாரர்களிடம் தானியம் ஏது, கூலியைத் தானியமாகக் கொடுங்கள் என்றால் எப்படிக் கொடுக்க முடியும் என்றார்கள். இப்போது வெளிச் சந்தையில் அதிகம் விலைக்கு விற்றுக்கொள்ளுகிறார்கள் என்பதாக ஒன்றுக்கொன்று முரணாகச் சொல்கிறார்கள். இவை அச்சேறி வருகிறபோது அவரே திரும்பப் படிக்கையில் ஏதடா இப்படி இரண்டு நிமிடத்திற்குள் முன்பின்னாகப் பேசியிருக்கிறோமே என்று வருத்தப்படக் கூடும். கொள்முதலைப் பொருத்த அளவில் ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் வைத்திருப்பவர்களிடம் கொள்முதல் செய்வதில்லை. அதற்கு மேல் நிலம் உள்ளவர்களிடத்திலும் உள்ள மொத்த தானியத்தையும் கொள்முதல் செய்வதில்லை. எங்களைப் பொருத்த வரையில் 20 சதவீதம்தான் மொத்தத்தில் கொள்முதல் செய்கிறோம், 8 லட்சம் டன்தான் செய்கிறோம். மிச்சமுள்ள தானியங்கள் உற்பத்தியாளர்களிடமே விடப்படுகின்றது. மொத்த உற்பத்தியையும் கொள்முதல் செய்யுங்கள் என்று கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் கோரி வந்த போதிலும் நாங்கள் கொள்முதல் செய்வது 20 சதவீதம்தான். தங்களிடம் உள்ள மீதி தானியத்தை வெளிச்சந்தையில் விற்றுகொள்ளும் உரிமை பெற்றிருக்கிறார்கள். மொத்த உற்பத்தி அனைத்தையும் நாங்களே கொள்முதல் செய்கிறோம் என்றால் நண்பர் சொல்லுகிற முதல் குற்றச்சாட்டு உண்மையாக இருக்கலாம். அதுவும் ஸ்டாச்சுட்டரி ரேஷன் ஏரியா என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்கு சப்ளை செய்வதற்காக உற்பத்தியாளரிடம் இருந்து அவர்களுடைய மொத்த உற்பத்தியில் 20 சதவீதம் கொள்முதல் செய்கிறோமே தவிர நெல்லை வாங்க வேண்டும். வியாபாரம் செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு அதில் ஈடுபடவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் சொல்லக்கூடிய கருத்துக்களை திட்டவட்டமாகத்தான் சொல்லி வருகிறேன். உங்களுடைய கொள்முதல் கொள்கையே தவறானது. வேண்டியவர்களிடம் ஒருவிதமாகவும், வேண்டாதவர்களிடம் ஒருவிதமாகவும் கொள்முதல் செய்து வருகிறீர்கள். இவ்வளவு நிலத்திற்கும் குறைவாக உள்ளவர்களிடம் கொள்முதல் செய்வதில்லை என்று சொன்னீர்களே தவிர அவர்களிடமும் கொள்முதல் செய்யப்படுகிறது என்பதற்கு ஒரு மாவட்டம் இல்லை—எல்லா மாவட்டங்களில் இருந்தும் எனக்கு ஆதார பூர்வமாக எழுத்து மூலமாக வந்துள்ள புகார்கள் இருக்கின்றன. அவற்றை முடிவில் உதவி சபாநாயகர் மூலமாக முதல் அமைச்சரிடம் கொடுக்க விரும்புகிறேன். யாராக இருந்தால் என்ன ? குத்துமதிப்பாக எல்லோருக்கும் ஒரே விதமாக ஏக்கருக்கு 5 க்விண்டால் கொடுக்க வேண்டும் என்று சட்டத்தையே இயற்றுங்கள் என்று நான் சொல்லி வருகிறேன். எனக்கு மிராசுதார்களை ஆதரிக்க வேண்டுமென்ற கொள்கை இல்லை. எல்லோரிடத்திலும் ஒரே விதமாக — பார பட்சம் இல்லாமல் நியாயமான முறையில் கொள்முதல் செய்யப்பட வேண்டும். கொள்முதல் விலையை நியாயமான முறையில், கட்டுபடியாகக் கூடிய முறையில் நிர்ணயித்தாக வேண்டும். விலையை உயர்த்த வேண்டும் என்று கம்யூனிஸ்டுக் கட்சியினர்கள்கூடச் சொல்கிறார்கள். என்ன விலை வைப்பது நியாயமாக இருக்கும் என்று சொல்ல அவர்களுக்குத் தைரியம் இல்லை. நான் தைரியமாகச் சொல்கிறேன். க்விண்டால் 60 ரூபாய்க்குக் குறைந்திருக்கக் கூடாது.





**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** கம்யூனிஸ்டுகளும் விலையை உயர்த்த வேண்டும் என்று சொல்வதாகச் சொல்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் நெல்லின் விலையை உயர்த்தக் கூடாது என்றே அறிவித்திருக்கிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்படிச் சொன்னது வலது சாரிக் கம்யூனிஸ்டுகளோ என்னவோ அவர்களுக்குள்ளேயே தான் இரண்டு கட்சியாயிற்றே. ஆக கொள்முதல் வேண்டாம் என்ற கொள்கை எங்களுக்கு இல்லை. நியாயமான விலை கொடுக்க இந்த அரசாங்கம் தவறிவிட்டது.

மூன்றாவதாக என்னுடைய புகார் தீ விபத்துக்கள் பற்றியது. இந்த மர்மமான தீ விபத்துக்கள் இன்னமும் பரவலாக நடைபெற்று வருகின்றன. கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் நடந்த போது ஒரு போலீஸ் அதிகாரி இது காங்கிரஸ்காரர்களின் செயல் என்று தோன்றும்படி இரண்டு காங்கிரஸ்காரர்களைக் கைது செய்து வைத்திருப்பதாகச் சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அதுபற்றி நாங்கள் ஒத்திவைப்புப் பிரேரணைக் கொண்டுவந்தபோது—அவர்கள் காங்கிரஸ்காரர்கள் அல்ல என்று மறுத்தார்கள். அவர் அப்படிச் சொல்லி விட்டபோதிலும் கூட சில சமூக விரோதமான சக்திகள் வீணாக அந்தப் பழியை எங்கள் கட்சியின் மேல் சுமத்தி வந்தன. இந்தத் தீ விபத்துக்களினால் எத்தனையோ ஆயிரக்கணக்கான ரூபாய் சேதம் ஏற்பட்டு வருகிறது. சட்டம், அமைதி, பாதுகாப்பு எங்கே என்று கேட்கிறேன். உங்கள் ஆட்சியில் ஏழைகள் குடிசையில் வாழ்வதற்குக் கூட பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எதிர்க்கட்சித் தலைவருக்கு ஏழைக்குப் பரிந்து பேச சந்தர்ப்பம் கிடைத்ததற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தீ விபத்துக்களுக்காக இந்த அரசும், அரசைச் சார்ந்தவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைப் போலவே வருத்தப்படுகிறோம். தீ விபத்து ஏற்படுத்துவதற்கும் சட்டம், அமைதி குலைந்திருப்பது என்பதற்கும் என்ன பொருத்தம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. போன மாதத்தில் பம்பாய் நகரில் நான்கைந்து மாடிக் கட்டிடம் தீ விபத்தினால் எரிந்து போயிற்றே, பல லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டமாகிவிட்டதே, அதனால் அங்கே சட்டம், அமைதி குலைந்துவிட்டது என்று அர்த்தமா ? பதில் சொல்ல வேண்டாம், எண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தீ விபத்து ஒரு பகுதிதான், மற்றவற்றையும் எடுத்துச் சொல்வதற்குள் முதல் அமைச்சர் அவர்கள் அவசரப்பட வேண்டாம். முதல் அமைச்சர் அவர்கள் இப்படிச் சொல்வது—கொட்டைப் பாக்கு என்ன விலை என்று கேட்டால் பட்டுக்கோட்டைக்கு வழி சொன்னாலும் என்பது போலச் சொல்லக் கூடாது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இது ரொம்பநாளாக இருந்து வருகிற பழமொழி. இரண்டுக்கும் நடுவில் ஒன்றைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். பட்டுக்கோட்டையில் கொட்டைப்பாக்கு மலிவாக இருக்கும் என்ற வார்த்தையைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டையில் கொட்டைப் பாக்கு வியாபாரம் செய்தது எனக்குத் தெரியாது. அதற்காக என் நன்றி அறிதலைச் சொல்லிக்கொள்கிறேன். தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க நிதி திரட்டப்பட்டது. ஐந்து லட்சம், ஆறு லட்சம் வரும் என்று எதிர்பார்த்தோம். முப்பத்தெட்டு, முப்பத்தொன்பது லட்சம் வந்திருக்கிறது. இவ்வளவு வந்தும் ஏழை மக்களுக்குக் குடிசை கட்டித் தரவில்லை.

மு.ப. 12-30 **மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஒரேடியாகத் தவறான கருத்தைச் சொல்லக் கூடாது. வசூலிக்கப்பட்ட பணத்தில் ஏற்கனவே 1,200 அல்லது 1,300 வீடுகள், சரியான எண்ணிக்கை எனக்கு ஞாபகம் இல்லை. மயிலாப்பூர் பகுதியில் கட்டப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஸ்டேட் ஹவுஸிங் போர்டிலே வீடுகள் கட்டப்பட்டு பலர் குடியேற்றப் பட்டிருக்கிறார்கள். காலையிலே உணவு அமைச்சர் படித்துக் காட்டிய புள்ளிவிவரங்களின் படி இரண்டாயிரம் வீடுகள் கட்டப்படுகின்ற தருவாயில் இருக்கின்றன. இன்னமும் பணம் இருக்கிறது, ஆனால் பணத்தைக் கொண்டு போதுமான அளவுக்கு வீடுகள் கட்டுவதற்கு இடம் இல்லாததால்தான் இந்த அளவோடு இருக்கிறோமே தவிர, பணத்தை எடுத்துக் கொண்டால் ஐயாயிரம் வீடுகள் கட்டக்கூட வசதி இருக்கிறது. இந்த நிதிக்குத் தருகிறேன் என்று சொன்னவர்களிலே கூடச் சிலர் இன்னும் தரவில்லை. எதிர்க் கட்சித் தலைவரும் நானும் தருவதாகச் சொல்லியிருக்கிறோம். நானும் தரவில்லை, எதிர்க் கட்சித் தலைவரும் தரவில்லை. ஆகவே பணம் இல்லை என்பதல்ல, போதுமான இடம் இல்லை என்பதுதான் பிரச்சினை. புறம்போக்கு நிலங்கள் குறைவாக இருக்கின்றன. கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான இடங்களும் குறைவாக இருக்கின்றன. சென்னை நகரத்திலே தனிப்பட்டவர்களின் இடங்களிலேதான் குடிசைகள் ஏராளமாக அமைந்திருக்கின்றன. அவற்றைக் கைப்பற்றுவதற்கு சட்டம் குறுக்கே நிற்கிறது. ஆதலால்தான் கட்டப்படவில்லையே தவிர பணப் பற்றுக்குறையல்ல. நானும் கூட அவ்வளவு ஆர்வத்தோடு நிதி திரட்டுவதிலே முயற்சியெடுத்துக் கொள்ளவில்லை. நிரம்பப் பணத்தை வைத்துக் கொண்டு இடம் இல்லாமல் என்ன செய்வது என்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் இதை இரண்டு காரணங்களுக்காகச் சொல்லியிருக்கலாம். அவர்கள் அரசியல் காரணத்திற்காகச் சொல்லியிருந்தால் நான் அவர்களுடைய சாமர்த்தியத்தைப் பாராட்டுகிறேன். பார், பார், நாங்கள் சொல்லித்தான் வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்கள் என்று சொல்கின்ற லாபத்தை அவர்கள் எடுத்துக் கொண்டால் எங்களுக்கு அதனால் நஷ்டம் ஒன்றுமில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாளைக்கு நீங்களும், காங்கிரஸ்காரர்கள் சொல்லி இவ்வளவு வீடுகள் கட்டியிருக்கிறோம் என்று பெருமைப் பட்டுக் கொள்ளலாம், இது எல்லோருக்கும் பெருமை தரக்கூடிய விஷயந்தான். இதைப்பற்றி கேள்விகள் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. அவர்கள் பதில் சொல்வதற்கும் உரிமை இருக்கிறது. சர்க்காரின்மேல் தவறான எண்ணம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறோம். அவற்றைச் சுட்டிக்காட்டுவதற்கு எதிர்க் கட்சியினராகிய நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே சேர்ந்த பணத்தை சீக்கிரத்திலே செலவழித்து வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும்.

சென்னையிலே மட்டுமா இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன? திருச்சியிலே நூற்றுக்கணக்கான குடிசைகள் எரிந்திருக்கின்றன. என்னுடைய நண்பர், எம். எல். ஏ. ஒருவருக்கு ஒரு மிரட்டல் கடிதம், இந்த நேரத்திலே பற்றி எரியும்





என்று வந்திருக்கிறது. இந்த [illegible] [illegible] போலீஸ் காரர்கள் கண்டு பிடிக்கக்கூடாது: கண்டு பிடிக்க முடியவில்லை. [illegible] ஒழுங்கு சரியாக பாதுகாக்கப்படவில்லை. கேட்டால் முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள், தனிப்பிரிவு ஒன்று அமைக்கிறேன் என்று சொல்லுவார்கள். நான் கேள்விப் பட்டிருக்கிறேன், அந்தக் காலத்திலே ஆராய்ச்சி மணி இருந்தது, அந்த மணியை அடித்தவுடன் அரசன் வந்து எல்லாவிதமான பிரச்சினைகளையும் தீர்ப்பான் என்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததைவிட நல்ல முறையில் நடக்கிறது என்று சொல்லிக்கொள்கிறார்கள். அதனால்தான் மணி அடிக்கிறது. அடிக்கடி மணி அடிக்கிறது. எத்தனை தரம் மணி அடிக்கிறது, பையர் என்ஜின் மணி. தீ விபத்துகள் ஏற்பட்டால் உடனே அணைப்பதற்கு தண்ணீர் கிடையாது. முன்பு ஏற்பட்ட தீ விபத்துக்களைப்பற்றிய கிருஷ்ணசாமி ரிப்போர்ட் என்ன ஆயிற்று? கேட்டால் முதலமைச்சர் அவர்கள் ஹைகோர்ட்டில் கேஸ் இருக்கிறது என்று சொல்வார்கள். யார் வைத்தார்கள், அதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை என்று சொல்லக்கூடிய முறையில் பொறுப்பற்ற தன்மை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நண்பர் பொறுப்பற்ற தன்மை என்று குறிப்பிட்டதால் நான் குறுக்கிட வேண்டியிருக்கிறது. அதுபற்றிய வழக்கு வழக்குமன்றத்திலே இருக்கும்பொழுது அதை வைப்பதுதான் பொற்றுப்பற்ற தன்மையாகும். அதை இங்கே வைப்பதினாலே எங்களுக்கு ஒன்றும் சங்கடம் வந்துவிடாது. இன்னும் சொல்லப் போனால் அறிக்கையிலே அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்பட்டிருக்கலாம் என்று யூகிப்பதற்கு இடம் இருக்கக்கூடும். வழக்கு மன்றத்திலே ஒரு வழக்கு இருப்பதால் தான் வைக்கவில்லை ; ஆகவே அதைப் பொறுப்பற்ற தன்மை என்று சொல்ல வேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஊதிக் கெடுத்தான் தாசன் என்று சொல்வார்கள். அதைப் பார்த்தால், அப்படி இருக்கலாம் என்று எல்லாம் மிரட்டுகிறார்கள். மக்களுக்குத் துரோகம் செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்க ஒரு முடிவு எடுத்துத்தான் ஆகவேண்டும். யாராக இருந்தாலும் அந்தப் பழியை ஏற்றுத்தான் ஆகவேண்டும். அவர்கள் தவறு செய்யவில்லையென்றால் வேண்டுமானால் அவர்கள் கோர்ட்டுக்குப் போய் நிரூபிக்கலாம் . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நண்பர் மன ஆறுதலுக்காக நான் சொல்வேன். எந்த ஒரு அரசியல் கட்சியும் காங்கிரஸ் கட்சி உட்பட திட்டமிட்டுச் செய்த காரியம் அல்ல என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் விளக்கத்திற்கு நன்றி.

**திரு. கே. விநயகம் :** தீ விபத்துக்கான காரணங்களைச் சொல்கிற பொழுது குழாயடியில் கிழவி சொன்னதாக ஒரு கதை சொன்னார்களே அதுகூடத் தப்புத்தானா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் சொன்னதும் உண்மைதான். அந்த மூதாட்டி சொன்னதும் உண்மைதான். அப்படிப்பட்ட கருத்து குடிசை இழந்தவர்களிடையே இருந்ததும் உண்மைதான். காங்கிரஸ் கட்சி அல்லது வேறு எந்தக் கட்சியும் திட்டமிட்டுச் செய்த சதியல்ல என்றுதான் சொன்னேன். தீ விபத்து ஏற்பட்ட இடங்களில் அந்தந்த பகுதியிலே உள்ளவர்கள் அரசியல் காழ்ப்புக் காரணமாக நடந்திருக்கிறது என்று சொல்வதற்கு ஆதாரம் இருக்கிறது என்று சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தி.மு.க ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னால் கட்சிக்காரர்கள் தலையீட்டின் காரணமாகப் பல குறைபாடுகள் நடந்து இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். போலீஸை எடுத்துக் கொண்டால் எத்தனையோ பேர்கள் விண்ணப்பங்கள் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுத்தால் விசாரிப்பது கிடையாது. மற்றவர்களின் மேல் அதிருப்தியை உண்டாக்குவதற்கு, பழியைத் தீர்ப்பதற்காக அவர்கள் கொடுக்கக்கூடிய விண்ணப்பங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் ஸ்பெஸிபிக் இன்ஸ்டன்ஸஸ் கொடுங்கள், நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். ஒவ்வொரு தாலுகாவிலும் அந்தந்த இடங்களிலும் நடந்திருக்கிறவை பற்றி என்னிடத்திலே இருக்கின்ற விண்ணப்பங்களை முதலமைச்சரிடம் கொடுத்தால் அவர்கள் பார்த்து பதில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். போலீஸ்காரர்களுக்கு உங்கள் கட்சிக்காரர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறீர்களா என்று விநயகம் அவர்கள் கேட்டார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் இல்லை யென்று சொன்னார்கள். முதலமைச்சர் ஒரு இடத்திலே பேசியதாக ஞாபகம். கதர் சட்டைக்காரரைக் கண்டு காக்கிச் சட்டைக்காரன் பயந்தான், இனிமேலே காக்கிச் சட்டைக்காரனுக்கு கதர் சட்டைக்காரன் பயப்பட வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். ஏனென்றால் " குறிப்பினால் உணரும் கொள்கையான் "........................

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஞாபகம் என்ற அளவோடு அவர்கள் நிறுத்தியிருக்கலாம். கதர்ச்சட்டையைக் கண்டு காக்கிச் சட்டை பயந்து கொண்டிருந்த காலமல்ல இது ; காக்கிச் சட்டைக்காரர்கள் எந்தச் சட்டையாக இருந்தாலும் அதைப் பற்றிக் கவனிக்காமல் அவர்களுடைய கண்களுக்குக் குற்றம்தான் தெரிய வேண்டுமே தவிர, போட்டிருக்கிற சட்டையை அவர்கள் பார்க்கக்கூடாது என்று சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நன்றி. பத்திரிகையிலே வேறு ஒருவர் பெயர் குறிப்பிடப்பட்டது, நான் அதைப் பிறகு சொல்கிறேன். போலீஸ்காரர்கள் சரியாகத் தங்கள் பணிகளைப் பார்க்கிறார்களா ? போன மார்ச் மாதம் மாணவர்களுக்கும், பஸ் தொழிலாளர்களுக்கும் இடையே நடந்த மோதல் விரும்பத்தக்கதல்ல. எந்தச் சர்க்காரும்................

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பஸ் தொழிலாளர்கள் மாணவர்கள் தகராறு பற்றி பிரச்சினை தற்போது " கோர்ட் ஆப் என்குயரி"யில் இருப்பதால் அது " சப்-ஜுடிஸ் " ஆகும். ஆகையால் அது சம்பந்தமாகப் பேசுவது . . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அது ஜுடீஷியல் வழக்காக இல்லை. விசாரணையில்தான் இருக்கிறது. சர்க்கார் கூட....................

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, வெறும் என்குயரியில் இருந்தால் கூட, கமிஷன் என்குயரியில் இருந்தால் கூட அதைப்பற்றி பேசக் கூடாது என்றிருக்கிறது.

' No motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any commission or court of enquiry appointed to enquire into, or investigate, any matter shall ordinarily be permitted to be moved .'





என்று விதி இருக்கிறது. இந்தத் தீர்மானத்தை அனுமதித்திருந்தாலும் கூட, டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் தகராறு, உடையார் பாளையம் விவகாரம் ஆகியவை வராமல் பார்த்துக் கொள்வது விதிமுறையைக் காப்பாற்றுவதாக இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என் குயரியில் இருக்கும்படியான விஷயத்தைப் பற்றிப் பேசத் தயாராயில்லை. அவர்களுக்குள்ளே மோதல் ஏற்பட்டு அடிபட்டபோது....................

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மோதல் ஏற்பட்டு என்று குறிப்பிட்டு விட்டு விடுங்கள். விளக்கங்கள் கூறவேண்டாம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதைப் பற்றிய விளக்கங்களைக் கூறுவது விசாரணைக்கு ஊறு விளைவிப்பதாகும். அது அந்த விசாரணைக் குழுவை அவமதிக்கும் குற்றத்தின் கீழ் வரும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்குயரி இருக்கும்போது அதைப் பற்றிப் பேசவேண்டாம் என்று சொல்கிறார்கள். என்குயரி இருக்கும்போது வழக்குப் போட்டார்களே, அது சரியா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நாங்கள் செய்த தவறையே நீங்களும் செய்யவேண்டாமென்று கூட எடுத்துக்கொள்ளலாம். தொடரப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறவேண்டுமென்று ஹைகோர்ட் கூறியதால் அவை திரும்பப் பெறப்பட்டன. அதனால், நீங்களும் அதே தவறைச்செய்யவேண்டுமென்று விரும்புவது அவ்வளவு சரியல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையுடன் தவறு செய்துவிட்டோம் என்று ஏற்றுக் கொள்ளும்போது, அவ்வளவு பெரியவரே ஏற்றுக் கொள்ளும்போது நான் மேலே இதைப் பற்றிப் பேச வேண்டாம் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, சில இடங்களில் துப்பாக்கிச் சூடுகள் நடந்திருக்கின்றன. துப்பாக்கிச் சூடுகள் எந்தெந்த இடங்களில் நடந்திருக்கின்றன என்று நான் கூறவில்லை. " நாங்கள் ஆட்சியில் இருப்போமானால் துப்பாக்கியால் சுடுவோமா, சுட்டாலும் சாவார்களா ? அது பூமாலையாக அல்லவா வந்து விழும்," என்று கூறி அப்போது துப்பாக்கிச் சூடு நடந்த சமயத்தில் " அத்தான், பொத்தான், செத்தான்", என்றெல்லாம் போஸ்டர்கள் போட்டார்கள். இப்போது இந்த தர்மப் பிரபுக்களுடைய ஆட்சியிலே சூடே நடைபெறவில்லை. யாருமே சாகவில்லை என்பதற்காக அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன் ! இதைப்பற்றிக் கேட்டால் நீங்கள்தானே சட்டம் அமைதி ஒழுங்காக காக்கப்படவில்லை என்று கூறினீர்கள் என்று திரும்பக் கேட்பார்கள். வயிற்றுவலியுடன் குடல் உபாதை கொண்ட ஒருவனுக்கு ரண சிகிச்சை செய்துதான் ஆகவேண்டும். வெறுமனே மருந்து சாப்பிட்டால் குணமாகாது. தலைவலிக்காக ஒருவன் டாக்டரிடம் சென்றால், அதற்கும் ரண சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினால் எப்படிப் பொருத்தமாகும். எந்த இடத்தில் எந்தக் காரியத்தைச் செய்வது என்று பார்க்கவேண்டும். கம்பர் சொல்கிறார்—

" நல்லவை தீயவை நாடி வளர்க்கிறார்
எல்லையில்..................

அருமையான வைத்தியனாக எது நல்லது, எது கெட்டது என்று அறிந்து எந்தக் காரியத்தை எந்தச் சமயத்தில் எதைச் செய்யவேண்டுமென்று செயல்படும் நல்ல மருத்துவனைப் போல் அமைச்சர்கள் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார். அப்படிப் பார்க்கும் போது இந்த அமைச்சர்களுக்கு நல்லவர்கள் என்ற அத்தாட்சியை

வழங்கமுடியாத நிலையில் இருக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதுவரைக்கும் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, ஆஸ்பத்திரியில் பூரண சிகிச்சை பெறாமல் ராஜேந்திரன் என்பவன் ஆஸ்பத்திரியில் இறந்த பிறகு......

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இன்னும் 15 வருடங்களைச் சேர்த்துக் கொண்டாலும், நீங்கள் கட்டிக்கொண்ட பாவ மூட்டையில் கால் அளவு கூட வராது. அதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம். " நல்லவர்கள் " என்று அத்தாட்சி கொடுக்கமுடியாது என்று கூறுவதற்காக வருந்துவதாகக் கூறினார். என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் நேற்றுத்தான் எல்லா அமைச்சர்களும் நல்லவர்கள் என்று சொன்னதாக நினைவு. அப்படிச் சொன்னார்களா இல்லையா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நல்லவர்கள் என்றால் பூராவும் நல்லவர்களாகவோ, கெட்டவர்கள் என்றால் பூராவும் கெட்டவர்களாகவோ இருக்க முடியாது. நல்லவர்கள் அல்ல, கெட்டவர்கள் என்பதற்காக அவர்களிடம் யாருமே போகாமல் இருப்பதில்லை. நல்ல காரியங்களைச் செய்யும் போது நல்லவர்கள் என்று கூறுகிறோம். நன்மையல்லாத காரியங்களைச் செய்யும்போது கெட்டவர்கள் என்கிறோம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஒரு வேளை நல்லவர் என்றும் ஒரு வேளை நல்லவர் அல்ல என்றும், இப்படி மாறி மாறிச் சொல்லுகின்ற வார்த்தையில் அவ்வளவு பொருள் இருக்காது என்றுதான் வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் முதலமைச்சர் அவர்கள் மாறி மாறிச் சொல்லியதை விட இதுவரை நான் என் வாழ்க்கையில் சொல்லவில்லை. அவர்கள் மாறி மாறிப் பேசியதற்கு பொருள் இருக்குமானால் நான் கூறுவதிலேயும் பொருள் இருக்கும். நான் அவர்களுடைய வார்த்தையிலே சிக்கிக் கொள்ள மாட்டேன். தவறு செய்கின்ற காலத்தில் தவறு என்று கண்டிப்போம். நல்ல காரியங்களைச் செய்யும்போது நல்லவர்கள் என்று பாராட்டுவோம். அதுதான் மனிதப் பண்பு. தமிழர்கள் பண்பு.

ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி நடந்த ஊர்வலத்தின்போது நடந்த அக்கிரமமான, அநீதியான தடியடிப் பிரயோகம் இருக்கிறதே அதைப்போன்ற ஒரு நிகழ்ச்சி சுதந்திரப் போராட்ட காலத்திலே கூட நடைபெறவில்லை என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். அந்நிய ஆட்சி இருந்த காலத்தில் கூட மிருகத்தனமாக தாக்குதல் நடைபெறவில்லை. மாணவர்கள், குழந்தைகள் அன்று தாக்கப்படவில்லை. எல்லாவற்றிற்கும் அனுதாபத்தைத் தெரிவிக்கிற முதலமைச்சர் அவர்கள் 4-ம் தேதி என்ன சொன்னார்கள். நான் தடியடிப் பிரயோகம் நடந்த இடத்தைப் போய்ப் பார்த்தேன். அநியாயமான, அக்கிரமமான தாக்குதலில் ஈடுபட்டார்கள். முதலமைச்சர் அவர்களைப் பத்திரிக்கையாளர்கள் சந்தித்து அது பற்றிக் கேட்டபோது, " எத்தனையோ பிரசிங்கிகள் எவ்வளவோ சொல்லிவிட்டார்கள் ;, இன்று ஒரு கற்பனைப் பிரசங்கி வந்திருக்கிறார் ................. " என்று என்னைப் பற்றிக் கூறியிருக்கிறார். நான் பிரசங்கிதான். முதலமைச்சர் அவர்கள் எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது அத்தகைய பிரசங்கியாகத்தான் இருந்தாரா என்று தெரிய ஆவலாக இருக்கிறது. அவர்கள் சார்பில் கொடுக்கப்படுகிற புள்ளிவிவரங்களைப் பார்த்தால் ஒன்றுக்கொன்று முரண்பாடாக செய்திகள், சம்பந்தம் இல்லாத





செய்திகளாக இருக்கின்றன. ஜனநாயகத்திலே, ஊர்வலம் நடத்த உரிமை இருக்கிறது, கண்டனம் செய்வதற்கு உரிமை இருக்கிறது. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு உரிமை இருக்கிறது. அது ஜனநாயகத்தின் அடிப்படை, ஜீவாதார உரிமை. அந்த ஊர்வலத்திலே மோட்டார் சைக்கிள் கொளுத்தப்பட்டது, குறிப்பிட்ட பாதையை விட்டு விலகிச் சென்றார்கள் என்றெல்லாம் கூறினார்கள்.

நான் அந்த இடத்திற்குச் சென்று பார்த்தேன் எந்தப் பாதையைக் குறிப்பிட்டிருக்கிறார்களோ அதே பாதையில்தான் அடிபட்டிருக்கிறார்கள். யார் திட்டம் இட்டுச் செய்தது என்பது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். தெரியுமோ, தெரியாதோ, காந்தி-இர்வின் பாலத்தைத் தாண்டிப் போன பிறகு தினத்தந்தி ஆபீஸைத் தாக்குவதற்காக நினைத்துக்கொண்டு போனார்களாம், போனவுடன் அடித்தார்களாம். சோடா பாட்டில்களை எடுத்துக் கொண்டு போனார்கள் என்றால் மடியில் கட்டிக் கொண்டு போயிருக்க வேண்டும். அப்படியானால் போலீஸ் அதைக் கண்டுபிடித்து என் அவற்றை எடுத்துக்கொள்ளவில்லை. போலீஸின் வேலை என்ன. எச்சரிக்கை கொடுக்காமல் அடித்திருக்கிறார்கள். அப்படி அடிப்பதற்கு முன்னால் எச்சரிக்கை கொடுக்கவேண்டும். கண்ணீர் புகையிருந்தால் அதை உபயோகப்படுத்தியிருக்கவேண்டும். பின்னர் நிலைமையைப் பார்த்து முழங்காலுக்குக் கீழே அடிக்கவேண்டும். பிறகுதான் மேலே அடிக்கவேண்டும். ஆனால் நூற்றுக்கணக்கான பேர்கள் மண்டையில் அடிபட்டிருக்கிறார்கள். அடிபடுவதை தடுக்கப்போன சமயத்தில் கையைக் காட்டியபோது கைகள் ஒடிக்கப்பட்டிருக்கின்றன. நூறு பேர்கள் அடிபட்டிருக்கிறார்கள் என்று ஒருவர் சொல்லுகிறார். இன்னொருவர் முன்னூறு பேர்கள் அடிபட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார் என்று சொன்னார்கள். சிகிச்சைக்கு வந்தவர்கள் 200 பேர்கள் இருக்கிறார்கள். வெளியே 200 பேர்கள் இருக்கிறார்கள். வெளி ஊர்களிலிருந்து வந்தவர்களும் அடிபட்டிருக்கிறார்கள். குழந்தைகள் அடிபட்டிருக்கிறார்கள். ஒரு குழந்தையைப் போட்டு மிதித்திருக்கிறார்கள். 200, 300 சைக்கிள்களை பூமியில போட்டு அடித்திருக்கிறார்கள் அவை ஊர்வலப் பாதையிலேயே அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவும் நடந்த பிறகு சட்டம் அமைதி ஒழுங்காக இருக்கிறது என்று சொல்கிறார்கள். எந்த போலீஸ் அதிகாரி மோடார்சைக்கிளுக்கு தீ வைத்தாரோ அவரை காட்டுவதற்கு நாங்கள் தயாராயிருக்கிறோம். அதற்காகத் நான் நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டோம். அதை நூற்றுக்கணக்கான பேர்கள் சொல்லியிருக்கிறார்கள். மராமத்து அமைச்சர் அவர்களின் பத்திரிகையில் லாரி கொளுத்தப்பட்டது என்று எழுதியிருக்கிறார்கள். இதைவிட அபாண்டம் என்ன இருக்கிறது. முரசொலியில் முதல் அமைச்சர் அவர்களின் சிலைமீது காலணி வீசப்பட்டது என்றும் எழுதப்பட்டிருக்கிறது. காங்கிரஸ்காரர் யாராவது அப்படிச் செய்ய நினைத்திருந்தால் அவர்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அந்தப் பரம்பரையில் நாங்கள் வரவில்லை. அதை நிரூபிக்க முடியுமா ? முதல் அமைச்சர் அவர்கள் மீது என்ன கோபமோ தெரியாது. அதை என் அப்படி நுழைத்தார்கள் என்று தெரியவில்லை. எங்கள் அரும்பெரும் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் மௌன ஊர்வலம் நடைபெற்றபோது முதல் அமைச்சர் அவர்களின் சிலை பக்கத்தில் நின்று கொண்டு அமைதி காக்கப்படவேண்டும் என்று செய்தால் ஒரு பத்திரிகை எழுதுகிறது, அவரது சிலைக்கு ஆபத்து வந்துவிடுமோ என்றுதான் அப்படிப் பார்த்துக் கொண்டாராம் என்று. தனக்கு சிலை வைக்கப்படவில்லையே என்ற அவர்களின் மேலுள்ள கோபத்தில் இப்படி எழுதியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். (ஆரவாரம்).

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மௌண்ட் ரோடில் இருக்கிற முதல் அமைச்சர் அவர்களின் சிலை வழியாக போகிற ஊர்வலத்தினர் சிலையின் பக்கத்தில் போனவுடன் முக்காடு போட்டுக்கொள்ள வேண்டிய

அவசியம் என்ன? அந்தச் சிலையைச் சுற்றி கருப்புத் துண்டுகளை போட்டு விட்டுப்போக வேண்டிய அவசியம் என்ன? அப்போது முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் நோய்வாய்பட்டு வீட்டில் வைத்திய சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார்கள். அப்போது தலையில் முக்காடு போட்டுக்கொண்டு, சுமங்கலிப் பெண்கள் கூட தலையில் முக்காடு போட்டுக்கொண்டு போனது நாகரீகமா, அது தமிழ்நாட்டுப் பண்பாடா என்பதை பொறுப்பு மிகுந்த, பண்பாட்டை வளர்க்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மிக மிக நன்றி. முதல் அமைச்சர் அவர்கள் நீடூழி வாழவேண்டுமென்றுதான் நாங்கள் நினைக்கிறோம். நீங்கள் நேர்மை உள்ளவர்கள், நாணயம் உள்ளவர்கள், ஆனால் உங்களைச் சுற்றியுள்ளவர்களின் பேச்சைக் கேட்காதீர்கள் என்று எழுதியிருக்கிறார்கள். அவர்களின் பேச்சைக் கேட்டு நடந்தால் உங்கள் ஆட்சியை அடியோடு கவிழ்த்து விடுவார்கள் என்று எழுதியிருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படியானால் அடுத்த திராவிட முன்னேற்றக் கழகம் ஊர்வலம் நடத்தி காமராஜ் சிலையின் அருகில் சென்று, ஐயா, காமராஜ் அவர்களே, தாங்கள் நல்லவர்கள், ஆனால் உங்கள் பக்கத்தில் உள்ளவர்கள் உங்களை கவிழ்த்துவிடப்போகிறார்கள் என்பதற்கு அடையாளமாக இதே காரியத்தைச் செய்ய கருத்திருமன் அவர்கள் ஒத்துக்கொள்வார்களா? (ஆரவாரம்).

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** காமராஜ் அவர்கள் இந்தியப் பிரதமராகவோ அல்லது இம்மாநில முதல் அமைச்சராகவோ இருந்து இவர்கள் செய்யும்படியான காரியங்களை செய்தால் செய்யுங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. (ஆரவாரம்) கருப்புக் கொடி காட்டுவது ஜனநாயக முறைதான். அமைதிக்குப் பாதகம் ஏற்படும் வகையில் எதுவும் செய்யவில்லை என்று தான் நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். நான் பூர்ணமாக அதைப்பற்றி விசாரித்தேன். முதல் அமைச்சர் அவர்களே, நீங்கள் நல்லவர்கள், ஆனால் உங்கள் பக்கத்தில் உள்ளவர்கள் ஆலோசனைக்கேட்டு ஏமாந்துவிடாதீர்கள் என்ற கருத்தைத் தெரிவிப்பதற்காக செய்தது அது என்று ஒரு பத்திரிகை எழுதியிருந்தது. காலணியை வீசினார்கள் என்று எழுதியிருக்கிறார்களே, இது நல்லதொரு பண்பாடா. எதற்கும் தமிழை வைத்து, தமிழைக் காட்டி தமிழர்கள் பண்பாடு என்கிறார்களே, இது தமிழர் பண்பாடா என்று கேட்கிறேன். காலணி வீசப்பட்டது என்று சொல்வது பண்பாடா, லாரி கொளுத்தப்பட்டது என்று சொல்வது பண்பாடா . . . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்த ஊர்வலத்தின் போது முக்காடு போட்டுக்கொண்டு போனதும், கருப்புத் துண்டுகள் வீசியதெல்லாம் நான் ரொம்ப நல்லவன், மற்றவர்கள் அதற்கு விரோதமாக நடக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதற்காக என்றதொரு விளக்கத்தை அளித்தார்கள். பொதுவாக முக்காடு போட்டுக்கொண்டு போவதும், கருப்புத் துண்டு வீசுவதும் ஒரு இழப்பு நேரத்தில், ஒரு அனுதாப ஊர்வலத்தில் கருப்புத் துணியைக் குத்திக்கொண்டு செல்வார்கள். ஒருவர் இறந்துவிட்டு கொண்டு போகிறபோது பல பண்டங்களை கீழே போட்டுக்கொண்டு போவார்கள். அதேபோல் கருப்புத் துண்டுகள் வீசப்பட்டன, எனக்கு மற்றவர்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக என்ற சமாதானத்தை அவர்கள் சொல்வது என் மனம் புண்படக்கூடாது என்பதற்காக இருக்கலாம். ஆனால் கருப்புத் துண்டுகள் வீசுவது, முக்காடு போட்டுச் செல்வது என்பது அனுதாபத்தைத் தெரிவிப்பதற்குத்தான். அந்த அனுதாபத்தை அவர்கள் தெரிவிப்பதாக சொன்னால் கூட என்னைப் பொறுத்தவரையில் நான் வருத்தப்பட்டுக்கொள்ள மாட்டேன் நான் இறக்கிற நேரத்தில் இவர்கள் எல்லாம் கூட அனுதாபம் தெரிவிப்பார்கள் என்பது முன்னாலே எனக்குத் தெரிந்திருப்பது கொஞ்சம் மகிழ்ச்சிக்குரியதுதான்.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அரசியல் என்றால் நாகரீகம் இருக்க வேண்டுமே தவிர மனம் புண்ணாகும்படி நடக்கக்கூடாது என்பதற்காகத் தான் சொல்கிறேன். காமராஜ் அவர்கள் வந்து நின்றது அவர்களது சிலையைப் பாதுகாப்பதற்காக என்று சொல்வது நல்ல பண்பாடா என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கருப்புத் துண்டுகள் வீசுவதும், முக்காடு போட்டுக்கொண்டு போவதும் அனுதாபம் காரணமாகச் செய்யப்படுவது என்பது நம் சம்பிரதாயமாகும், அது நாடு முழுவதிலும் எந்தக் காலத்திலும் இருந்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது அப்படி அல்ல, நீங்கள் ரொம்ப நல்லவர்தான், ஆனால் உங்கள் கூட இருக்கிறவர்கள் உங்களைக் கெடுக்கிறார்கள், உங்களை கவிழ்த்துவிடப் போகிறார்கள் என்பதைத் தான் அது தெரிவிக்கிறது என்று சொன்னார்கள். உள்ளபடியே அவர்கள் நெஞ்சில் கை வைத்து நாம் சட்டமன்றத்தில் இருக்கிறோம் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு கருப்புத் துண்டுகள் போடுவதும், முக்காடு இட்டுக் கொண்டு ஊர்வலம் போவதும் சரியானதுதானா, முறையானதுதானா, நாகரீகமானதுதானா, பண்பாடு நிறைந்ததுதானா என்பதை அவர்கள் தெரிவிக்க வேண்டும். தவறாகச் சிலர் செய்துவிட்டார்கள் என்பதற்காக சமாதானத்தை இவர் தேடிக்கொண்டிருப்பது அது அவர்களுக்கும் நல்லதல்ல, இவர்களுக்கும் நல்லதல்ல. அந்தச் சிலை எதிரில் அப்படிச் செய்ய வேண்டுமென்று கருதித்தான் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதற்கு முன்னாலே நீங்கள் தயாராக கருப்புத் துணியோடு வாருங்கள், என்ன செய்யவேண்டுமென்பது அந்த நேரத்தில் தான் அறிவிக்கப்படும், முன் கூட்டியே அதைக் கேட்காதீர்கள், எல்லோரும் கருப்புத் துணியை எடுத்து கொண்டு வாருங்கள் என்ற அறிக்கையை முதலில் கொடுத்துவிட்டு முக்காடு இட்டுக்கொண்டு செல்லுங்கள், கருப்புத் துண்டுகளை கீழே வீசுங்கள் என்று அந்த இடத்திற்கு வந்தவுடன் அவர்கள் கட்டளைகள் பிறப்பித்து அந்தச் சிலையைச் சுற்றி கருப்புத் துண்டுகள் வீசப்பட்டன. சாதாரணமாக ஒரு பிண ஊர்வலம் நடைபெற்று அதற்குப் பிறகு அந்தப் பாதை வழி போனால் என்னென்ன சின்னங்கள் வெளியே தெரியுமோ அவை அத்தனையும் தெரியவேண்டும் என்பதற்காக செய்ததே தவிர நண்பர் சொல்கிறபடி என்னிடத்தில் ஒரு பெரிய மதிப்பு வைத்து என் கூட இருக்கிறவர்கள் என்னைக் கெடுத்துவிடுகிறார்கள் என்ற ஒரு எண்ணத்தை உண்டாக்குவதற்காகத் தான் அப்படிச் செய்யப்பட்டது என்பதை பள்ளியில் படிக்கக்கூடிய பிள்ளை கூட நம்புவதற்கு தயாராயிருக்க மாட்டான். அதிலும் நான் நல்லவன் என்று ஒப்புக்கொள்வார்களானால் நான் என்னைச் சேர்ந்திருக்கிறவர்கள் தவறு செய்யாமல் பார்த்துக்கொண்டால்தான் நல்லவன் என்ற பெயர் பொருந்தும். அவர்கள் என்னை தவறான பாதைக்கு இழுத்துக்கொண்டு போனால் எனக்கு நல்லவன் என்ற பெயர் பொருந்தாது. ஆகவே அந்த வாதம் சரியல்ல.

ஆனால் அந்தக் காரியத்திலே ஈடுபட்டது தமிழ்நாடு காங்கிரஸ் பி.ப.
கமிட்டி அல்ல, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் அதிகாரம் பெற்ற 1-00
தலைவர்கள் அல்ல. ஆனால் அதைச் செய்தவர்களைக் கண்டிப்பதற்குத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்த தலைவர்களுக்குத் துணிவு இல்லை. துணிவு இல்லாததற்குக் காரணம், காங்கிரஸ் கட்சியில் தீவிரமாகப் பிரச்சாரம் செய்ய இன்றைய காங்கிரஸ் தலைவர்கள் தங்களைத் தாங்களே நம்புவதைவிட அவர்களை நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த அவல நிலைக்கு வந்ததால்தான் இன்றையதினம் சமாதானம் தேடிக்கொண்டிருக்கிறார்களே தவிர, உண்மையான, நேர்மையான காங்கிரஸ் தலைவர்களாலே அந்தச் சிலைக்குக் கறுப்புக் கொடி போட்டதற்கு நிச்சயமாக சமாதானத்தைத் தேடிக் கொள்ளவே முடியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் ஏற்கனவே சொன்னேன், கறுப்புக் கொடி காட்டுவது ஜனநாயக முறைப்படி ஏற்றுக்கொண்ட ஒரு நிலை.

[1968 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கறுப்புக்கொடி காட்டியதற்கு அல்ல, கறுப்புக்கொடி போட்டதற்குத்தான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கஷ்டம் என்று நினைத்தால் அந்த மன்னிப்பை நான் கோருகிறேன். அது ஜனநாயக முறைப்படி அல்ல என்று கருதினால், நீங்கள் மனம் புண்பட்டால் அதை ஏற்றுக்கொள்ள . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உள்ளபடி முதலிலேயே சொன்னபடி, அவர்கள் பல ஊர்வலங்களுக்குச் சென்றிருப்பார்கள், பெரியவர்கள் இறந்துபோனால் அந்த ஊர்வலங்களுக்குச் சென்றிருப்பார்கள். அப்பொழுதெல்லாம் சட்டையிலே கறுப்புத் துணியைக் குத்திக்கொண்டோ, அல்லது கையிலே கறுப்புப் பட்டைகளை அணிந்துகொண்டோ செல்வது வழக்கம். கறுப்புக் கொடி காட்டுவதற்கும், கறுப்புத் துணி அணிந்து கொள்வதற்கும் வித்தியாசம் உண்டு. கறுப்புத் துண்டு போடப்பட்டது உள்ளபடியே அவர்கள் சொல்லுகின்றபடி ஜனநாயகத்திற்காகச் செய்யப்பட்டது அல்ல, என்னிடத்திலே மதிப்பு வைத்து செய்யப்பட்டது அல்ல. ஊர்வலத்தை நடத்தியவர்களின் தொண்டர்களும், தோழர்களும் நான் இறந்துபட்டதாகக் கருதிக்கொண்டு போடப்பட்டது. அதிலே நான் மனம் புண்பட்டிருந்தால் அதற்காக அவர்கள் மன்னிப்பு கேட்டுக் கொள்ளுகிறேன் என்று சொன்னார்கள். அவர்களுடைய மனம் எனக்கு நன்றாகத் தெரியும், நான் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறேன் என்றாலும் கூட வருத்தப்படக் கூடியவர். அவருடைய மனப்பான்மை எனக்கு நன்றாகத் தெரியும். எனவே அவர்கள் அவ்வாறு கருத மாட்டார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலுள்ள பொறுப்புள்ள எந்தத் தலைவரும் அவ்வாறு கருதமாட்டார்கள். ஆனால் ஊர்வலத்தை நடத்தியவர்கள் தான் அப்படிப்பட்ட மனப்பான்மையிலே செய்திருப்பார்கள் என்பதில் எனக்கு அழுத்தம் திருத்தமான நம்பிக்கை உண்டு. எனக் கிருந்த வருத்தமெல்லாம், அவர்களால் அதைக் கட்டுப்படுத்த முடிய வில்லையே என்பதுதான். பிறகு, இப்பொழுது மௌன ஊர்வலம் சென்றார்கள். அது எவ்வளவு கண்ணியமான முறையில், எவ்வளவு அமைதியான முறையில் இருந்தது என்பதைப்பற்றி நாடே போற்றியது. அப்பொழுது என்னுடைய சில வரும்பொழுது, "நீ எவ்வளவு நல்லவன், ஆனால் உன்னைச் சூழ்ந்திருப்பவர்கள்தான் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று கூறி காமராஜ் அவர்களோ, சுப்பிரமணியம் அவர்களோ, பக்தவத்சலம் அவர்களோ, விநாயகம் அவர்களோ, கருத்திருமன் அவர்களோ கறுப்புத் துணியைப் போட்டார்களா, போடவில்லை. காரணம் அதனுடைய முழுப்பொருள் அவர்களுக்குத் தெரியும். நடந்தது, நடந்து விட்டது, நாம் என்ன செய்யலாம், அவர்களையும் விட்டு விட்டால் பிரச்சாரத்திற்கு என்ன வழி என்ற காரணத்தால்தான் சொல்கிறார்கள். அதிலே சம்பந்தப்பட்டவர்கள் சிலர் கழகத்திலே இருந்த நேரத்தில் ரசக்குறைவான காரியங்களைச் செய்த பொழுது நான் அவர்களைக் கண்டித்திருக்கிறேன். நேருவுக்குக் கறுப்புக்கொடி காட்ட வேண்டுமென்ற நேரத்தில், நேருவின் மீது செருப்பு வீசுவதைப்போல் படம் போட்டு ஒரு பத்திரிகையிலே அச்சடித்து விட்டார்கள், அதைக் கேள்விப்பட்டவுடன் அத்தனை பிரதிகளையும் கொளுத்திவிட வேண்டும், வெளியே விடக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன். அப்படி நீங்கள் கண்டித்திருந்தால், நண்பர் அவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்பதைவிட அது மிகவும் கண்ணியமானதாக இருக்கும். இல்லை, அனுதாபத்தைக் காட்டும் வகையில் கறுப்புத் துண்டுகளைப் போட்டோம் என்று சொன்னால் அதற்காக நான் புண்பட வேண்டியதில்லை, ஏனென்றால் இறந்தபிறகு எல்லாப் புண்ணும் ஆறிவிடும். இறந்த பிறகு யார் எதைச் செய்தாலும் உயிரோடு இருப்பவர்களுக்கும் தோன்றும், நாம் இறந்த பிறகும் இப்படித்தான் என்று. அந்த ஊர்வலத்தை நடத்தியவர்கள் எழுதிய ஒரு பாட்டைக் கூட கண்டித்தேன், "பாதக் குறடு எடுத்து பன்னூறு முறை அடிப்பேன்" என்று பண்டித நேருவுக்கு எழுதப்பட்ட பாட்டு அது. எங்களுக்குள் தகராறு ஆரம்பித்ததே அதிலிருந்துதான். எனவே, யாருக்காக வாதாடக் கூடாதோ அவர்களுக்காக வாதாடிச் சொல்வதாலே தவறான முறைகள் வளருமோ என்றுதான் கவலைப்படுகிறேன்.



1968 ஆகஸ்ட் 23]

**திரு. கே. விநாயகம் :** "ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஃபர்தர் கிளாரிபிகேஷன்" சார், நமது முதன்மந்திரியின் மனம் புண்படும்படி யாரும் நடந்து கொள்ளவும் கூடாது, செய்யவும் கூடாது, அதுதான் எண்ணமும் கூட. யாரோ ஒருவர், எங்களுடன் இருப்பவர் அப்பொழுது இதுமாதிரியெல்லாம் படம் போட்டார், அதை நானே தடுத்தேன், அதைக் கொளுத்தச் சொன்னேன் என்று சொல்கிறார்கள். அப்படியெல்லாம் கண்ணியமான உள்ளம் படைத்த தலைவராக இருக்கின்றாரே, ஆனால் ஊர்வலம் வந்தபொழுது நேருவின்மீது செருப்புகளை வீசினார்களே, கறுப்புத் துணிகளை எல்லாம் வீசினார்களே, அப்பொழுது அந்த நிகழ்ச்சிகளைக் கண்டிக்கவில்லையே, ஏன் ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நண்பர் அவர்களுக்கு முழு விவரமும் தெரியாது என்று கருதுகிறேன். அந்த ஊர்வலம் நடைபெறும் முன்னாள் இரவே என்னைக் கொட்டடியில் அடைத்து விட்டார்கள். பிறகு போலீஸ் அதிகாரி ஒருவர் வந்து, இப்படியெல்லாம் நடந்துவிட்டது என்று சொன்னார். "நான் இப்பொழுது வெளியே இல்லையே, வெளியே நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இருக்கிறார்கள், அவர்களிடத்தில் சொல்லி, இப்படிப்பட்ட முறைகள் கண்டித்து நிறுத்தப்பட வேண்டியவைகளாகும் என்று கூறி அறிக்கை விடுமாறு கூறுங்கள்" என்று சொல்லியனுப்பினேன். அதன்படி அறிக்கை வெளியிடப்பட்டது. நான் விடுதலை பெற்று வந்தவுடன், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்பவர்களை என்னுடைய தம்பிகள் என்று ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று கூறி அதைக் கண்டித்திருக்கிறேன். அவ்வாறு கண்டிப்பதால் என்னுடைய கட்சியின் மதிப்பு குறைந்து விடும் என்றோ, அல்லது வலிவு இழந்து விடும் என்றோ நம்பிக்கையுடையவன் அல்ல நான். தவறுகள் செய்வார்கள் என்று தெரிந்தால் அதைக் கண்டித்திருப்பேன். அதையே செய்ய வேண்டுமென்றால், என்னை விட்டு விடுங்கள், நான் போய் விடுகிறேன் என்று சொல்வேனே தவிர அதற்கு உடந்தையாக என்றும் இருந்தது இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஏதேனும் தவறுகள் நடந்தால் அவற்றைக் கண்டிப்பதற்கு எங்களுக்கும் பூரணமாகப் பொறுப்பும் பங்கும் இருக்கிறது. சுதந்திரப் போராட்ட காலத்திலே தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் இமாலயத் தவறு செய்து விட்டேன் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் செய்த காரியங்களுக்கு வருந்துகிறேன் என்று கூறி உண்ணாவிரதமும் இருந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தவறுகள் ஏற்பட்டால் அதை ஏற்றுக்கொள்வதிலே பெருமையாக இருக்கிறோம். ஆனால் அது தவறா, இல்லையா என்பதைப் பொறுத்திருக்கிறது. இப்பொழுது நடந்திருக்கும் அந்த ஊர்வல நிகழ்ச்சிகளின்போது நான் ஊரில் இல்லை, ஊருக்கு வந்த பிறகு சொல்லப்பட்டது. கறுப்புத் துணி பற்றிச் சொன்னார்கள். செக்ரட்டேரியட்டிலே கெஜட் பதிவு பெறாத ஊழியர்கள் கறுப்பு பாட்ஜ் அணிந்து கொண்டு வருவதில்லையா ?

அன்று ஊர்வலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் எப்படி நேர்ந்தன ? இப்பொழுது ஒரு சந்தேகம் தோன்றுகிறது, முன்னாலே இப்படி நடந்த சம்பவத்தை வைத்துக்கொண்டு பின்னால் இப்படி 500 பேர்களை அடித்தார்களோ என்ற சந்தேகம் தோன்றுகிறது. சிலையருகே நடந்த தகவல்கள் எல்லாம் தெரிந்ததும், அமைதியாகச் சென்று கொண்டிருக்கும் கூட்டத்தில் தடியடி நடத்தினார்களா என்று எண்ணத் தோன்றுகிறது. இல்லாவிட்டால் ஏன் தடியடிப் பிரயோகம் செய்ய வேண்டும், அதற்கு என்ன காரணம் ? தினத்தந்தி ஆபீஸ் பக்கம் ஊர்வலம் திரும்பியதால் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது என்று சொல்லப்படுகிறது. தினத்தந்தி ஆபீசிற்கும், ஊர்வலம் செல்லும் பாதைக்கும் $1\frac{1}{2}$ பர்லாங் தூரம் இடைவெளி இருக்கிறது. தினத்தந்தி ஆபீஸை நோக்கி ஊர்வலம் சென்றது என்றால் தினத்தந்தி ஆபீஸிற்கும், காந்தி-இர்வின் பாலத்திற்கும் இடையிலே அல்லவா தடியடி நடந்திருக்க வேண்டும். ஆனால் எங்கே நடந்திருக்கிறது ?

அந்த ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான பேர்கள், வாலிபர்கள், இளைஞர்கள், ஊர்வலத்திலே கலந்துகொண்டவர்கள் மட்டும் அல்ல, வெளியூர்களிலேயிருந்து வந்தவர்கள், பார்க்க வந்தவர்கள், அடிப்பட்டிருக்கிறார்கள். நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் அந்தச் சம்பவம் நடந்தபொழுது முதலமைச்சர் அவர்களின் உடல்நிலை சரியாயில்லை, அதன்பிறகாவது அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருப்பவர்களைச் சென்று பார்த்தார்களா, என் அப்படிச் செய்யவில்லை என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு நிலையிலே நீங்கள் இருந்திருந்தால் நாங்கள் பார்த்திருக்கலாம் (குறுக்கீடு.) ஆகவே, ஆகஸ்டு 1-ம் தேதி நடந்தது அசௌகரியமான, அரசாங்கத்தின் தவறான ஏதோ இனிமேல் இப்படி முடியாத நிலைமையில் இருக்கும்படியான ஒரு உள் நோக்கத்தோடு செய்து விட்டார்களோ என்று ஒரு சந்தேகம் தோன்றுகிறது. போலீஸ் கமிஷனர் முன்னால் ஒரு நிலை, இப்பொழுது ஒரு நிலை என்ற நிலை இருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதை நான் பார்த்தேன். எங்கள் ஊர் கௌண்டர், அவருடைய இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் பார்க்கும்போது எனக்கு அவமானமாக இருக்கிறது. நான் கற்பனையிலே பேசுகிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள். போலீஸிலே உள்ளவர்கள் எல்லாம் கற்பனை இல்லாதவர்களா ? முதலமைச்சர் அவர்களை தவறான தகவலை சட்டசபையிலே தெரிவிக்க வைத்து, பிறகு அவர் வருத்தம் தெரிவிக்கக் கூடிய நிலையிலே அவரை ஆளாக்கியவர்கள் அல்லவா ? தேனி தொகுதியிலே இந்த நிகழ்ச்சி நடந்தது. திரு. வரதராஜன் என்பவரை கைது செய்தது. திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.எ. அவர்கள் போய் பேசினார்கள். பேசின உடனே, அந்த தவறு நடந்த உடனே கைது செய்து கொண்டு போய் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை நான் சொன்னேன். செய்தியை சொன்ன உடனே போலீஸ் அதிகாரி கொடுத்த குறிப்புக்களை வைத்துக்கொண்டு இது மாதிரி நடைபெறவே இல்லை ; "கருத்திருமன் உடனே தேனிக்குப் போய் பார்க்கட்டும், நடந்தது என்ன என்று சொல்லட்டும்" என்று சொன்னார்கள். பிறகு, பூரணமான விவரம் இருக்கிறது என்று சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் அன்றே சொன்னார்கள். விசாரணை செய்கிறேன் என்று. முதலமைச்சர் அவர்கள் திரும்பவும் சொன்ன வுடனே, அவர் சொல்வதுபோல் நடந்திருக்குமோ என்ற சந்தேகம் எனக்குத் தோன்றியது. அவர் கொடுத்த புள்ளி விவரத்தைப் பார்த்த உடனே நான் கொஞ்சம் அசந்து போனேன். அப்படி இருந்தால் அந்த விஷயத்தைப் பேசுவதில்லையென்று சொன்னேன். அப்படி இருந்தால் அந்த சவாலை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னேன். தெளிவாக நவம்பர் மாதத்திலே "தவறான புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டன ; அதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன்" என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை கௌரவக் குறைவு என்று சொல்லவில்லை. நானே தவறு செய்தாலும் வருத்தம் தெரிவிக்க வேண்டும். ஆக, இப்படி தகவல் கொடுக்கிற போலீஸ்காரர்கள் தான் இருக்கிறார்கள். ஆகவே, உங்களுடைய போலீஸ்காரர்களை நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே அதிகாரிகளுக்கு உங்கள்மேல் விசுவாசம் ஏற்பட்டிருக்கும். விசுவாசம் இருக்கட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. விசுவாசம் உள்ளவர்களாகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் ஜனநாயகத்தில் எந்தக் கட்சி வேண்டுமானாலும் ஆட்சிக்கு வரலாம் அதே சமயத்தில் இன்னொன்றையும், இன்றையதினம் எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் ஆளும் கட்சியாக வருவார்கள் என்பதை, உணரவேண்டும். நாட்டினுடைய நலனுக்காக அவர்கள் இருக்கவேண்டும். ஆனால், கட்சியை வளர்ப்பதற்கு அவர்கள் இருக்கக் கூடாது ; கட்சிப் பூசல்களுக்காக அவர்கள் இருக்கக் கூடாது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இப்பொழுது துரதிருஷ்டவசமாக பல இடங்களிலே நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்ப்போமானால் பொதுமக்களுக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உங்களிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு வந்த புகார்களை முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறேன். இந்த $1\frac{1}{2}$ வருஷ காலத்தில் ஃபைல்கள் எல்லாம் விரைவாக அனுப்பப்படவில்லை. அமைச்சர்கள் அறையிலே ஃபைல்கள் எல்லாம் தீர்க்கப்படவில்லை. மாதக்கணக்காக அது கிடக்கிறது. அவைகள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆர்வம். சட்டசபை மெம்பர்கள் எழுதி அனுப்பினால் அவர்களுக்குப் பதிலே வருவதில்லை என்ற புகார் அதிகமாக இருக்கிறது. அதோடு கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் செக்கரட்டேரியட்டுக்குப் போய் அவர்களுக்குக் கொடுக்கும் உபத்திரவம் அதிகமாக இருக்கிறது. எங்களுக்கும் கொஞ்சம் உபத்திரவம் இருந்தது ; இல்லையென்று சொல்லவில்லை. எங்களை விட 10 பங்கு அதிகமாக அவர்களுக்கு இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



சர்க்காரினுடைய அதிகாரிகளை, அவர்களுடைய கட்சியினுடைய செல்வாக்குப் பெருவதற்குப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்னும்படியான குற்றச்சாட்டு சொல்லும்படியான நிலையிலே அவர்கள் தவறு செய்கிறார்கள். கூட்டுறவு அமைச்சருடைய பகுதியிலே ஆஸ்பத்திரி ஒன்று வைக்க பணம் சேகரிக்கிறார்கள். ஆஸ்பத்திரி வைத்தால் யாரும் ஆட்சேபணை சொல்லமுடியாது. எல்லா இடத்திலும் ஆஸ்பத்திரி இருக்க வேண்டியது தான். மாகாணம் பூராவுக்கும் ஏன் வசூல் செய்கிறார்கள் ? அந்த ஜில்லாவிலே வசூல் செய்யட்டும். ஆனால், எல்லா பகுதியிலுள்ள இந்த கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் அதனுடைய "காமன் குட் ஃபண்டிலிருந்து" சிங்கம்புணரியில் கட்டப்போகும் ஆஸ்பத்திரிக்கு கொடுக்க வேண்டுமென்று போடப்பட்ட உத்தரவை "சர்க்குலரை" அருமை நண்பர் பூவராகன் அவர்கள் படித்தார்கள். இதை அமைச்சர் அவர்கள் பிறப்பிக்கவில்லையென்று தட்டிக் கழித்து விட முடியாது. அதனாலே இந்த ஆஸ்பத்திரி வேண்டாம், பள்ளிக்கூடம் வேண்டாம் என்ற நிலை இல்லை. ஆஸ்பத்திரியும் பள்ளிக்கூடமும் வேண்டியதுதான். காங்கிரஸ் சர்க்கார் இருந்த காலத்திலே ஒரு சர்க்குலரே இருந்தது. என்னவென்றால், பஞ்சாயத்து யூனியனிலேயுள்ள பணத்திலிருந்து பள்ளிக்கூடம் கட்டுவதற்குப் பணம் செலவழிக்கக் கூடாது என்று. அது ரூ. 10,000 மாக இருந்தாலும் சர்க்காரிடத்திலே அனுமதி பெற வேண்டுமென்ற நிலை தான் இருந்தது. ஆனால், இப்பொழுது அமைச்சர் பதவியிலே இருக்கும்படியான நேரத்திலே அதிகாரிகள் எல்லாம் இதிலே ஈடுபட்டு, மாநிலம் முழுவதும் இருக்கிற ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் வசூல் செய்வது சாதாரணமானது அல்ல. அவருடைய ஊர் என்ற காரணமாகத்தான் அப்படி நடக்கிறது என்று நினைக்கிறேன். 100 படுக்கை உள்ள ஆஸ்பத்திரி எந்த இடத்திலே இருக்க வேண்டுமென்பதற்கெல்லாம் விதி முறைகள் இருக்கின்றன. 10,000-க்கும் குறைவாகத்தான் அந்தப் பகுதியில் ஜனத்தொகை இருக்கிறது என்று நினைக்கிறேன். அந்த இடத்திற்கு ஆஸ்பத்திரி தேவையில்லையென்று நான் சொல்லவில்லை. தேவையானதுதான். இன்னும் 200 வேண்டுமானாலும் கட்டிக்கொள்ளட்டும். ஆனால் வசூல் செய்கிற முறை மிகவும் ஆட்சேபணைச் செய்யக் கூடியதாக இருக்கிறது. பதவியை துஷ்பிரயோகம் செய்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. ஏனென்றால் வசூல் அந்த அந்தப் பகுதியிலே தான் இருக்க வேண்டுமே தவிர மாநிலம் முழுவதற்குமாக கூடாது. என்னுடைய ஊரிலே வேண்டுமானால் நன்கொடை வாங்கும் போது, என் பேரிலே இருக்கிற நல்லெண்ணத்திலே முதலமைச்சர் கூடக் கொடுப்பார் என்று எண்ணுகிறேன். (மாண்புமிகு முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை குறுக்கீடு) கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறார். அதுவும் தவறுதான். இது மாதிரி தவறான முறையில் பதவியை உபயோகித்து வசூல் செய்ய முயற்சி எடுத்திருக்கிறார்கள். ஆகவே, பொது மக்களுக்கு இருக்கும்படியான இந்த இக்கட்டான நிலையை அவர்கள் போக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதவியை துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்கள். வெளி நாட்டிலே இந்த மாதிரி ஜனநாயக நாட்டிலே ஏற்பட்டிருக்குமானால் அதனுடைய பலன் என்ன ஆகும் ? அந்த அமைச்சர் தன்னுடைய பதவியை ராஜிநாமா பண்ணி விட்டுப் போய்விடுவார்கள். ஆனால், இங்கே இவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சொல்ல வேண்டாமென்று சொல்லவில்லை.

ஆகையால், எங்களுடைய குற்றச்சாட்டுகள் எல்லாம் இங்கு நேரடியாக கொடுத்த குற்றச்சாட்டு தான். இதைப்போல் இன்னும் எத்தனையோ இருக்கின்றன.

சில சமயத்திலே பதவியை உபயோகித்துப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்கிறார்கள். இப்பொழுது ஆட்சிக்கு வந்த உடன் உங்களுடைய கட்சிப் பத்திரிகைகளுக்கு எல்லாம் விளம்பரம் கொடுக்கிறீர்கள். முன்பு 30,000 தான் சர்க்குலேஷன் என்று சொன்னார்கள்—முரசொலிக்கு. அமைச்சரவர்கள் சொன்ன சமயத்திலே இலட்சம் சர்க்குலேஷன் ஆகிறது, அதற்காகத் தான் கொடுத்தோம் என்று சொன்னார்கள். 2 இலட்சம் போகட்டும்; வேண்டாமென்று சொல்லவில்லை. கட்சிப் பத்திரிகையாக இருக்கும் சமயத்திலே சர்க்காரினுடைய விளம்பரத்தை ஒழுங்காகக் கொடுப்பதில்லை. நவசக்தி எத்தனை என்று பார்க்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** முரசொலிப் பத்திரிகையைப்பற்றி நான் கூறும்போது இலட்சம் மக்கள் படிக்கின்ற பத்திரிகை என்றுதான் கூறினேன். இலட்சம் மக்கள் படிக்கின்ற பத்திரிகை என்று கூறியது குறிப்பிலேகூட இருக்கிறது; பார்த்துக் கொள்ளலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இலட்சம் பத்திரிகை இல்லையென்று ஒத்துக்கொள்ளுகிறார்கள், இலட்சம் பேர்கள் தான் படிக்கிறார்கள். ஆனால் நவசக்தி நீண்டகாலமாக நடைபெறுகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நவசக்தி நீண்டகாலமாக நடைபெறுகிறது. முரசொலியை விட அதிக அளவு என்றார்கள். நவசக்தியை ஆரம்பித்தது எப்போது? முரசொலியை ஆரம்பித்தது எப்போது?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நவசக்தியாக இருந்தாலும் சரி, முரசொலியாக இருந்தாலும் சரி, நாங்கள் கேட்பது சர்க்காரினுடைய விளம்பரங்களைக் கொடுப்பதற்கு ஒரு விதி முறை இருக்க வேண்டும். சுதேசமித்திரன் எவ்வளவு நாட்களாக ஓடுகின்ற பத்திரிகை, சர்க்கார் செய்தது தவறு என்று ஒரு தலையங்கம் எழுதியது அந்தப் பத்திரிகை அவ்வளவு தான், தீர்ந்துபோய்விட்டது, அவுட். சுதேசமித்திரனுக்கு விளம்பரம் கொடுப்பது கிடையாது. அந்தப் பத்திரிகையை நானும் வாங்கிப் படித்துக் கொண்டிருக்கிறேன். இதிலேதான் சுயநலம் இருக்கிறது என்று நான் சொல்கிறேன். சில பத்திரிகைக்கு விளம்பரம் கொடுக்கிறார்கள், சில பத்திரிகைக்குக் கொடுப்பதில்லை. சுதேசமித்திரன் பத்திரிகைக்கு நான் வாதாடவேண்டிய அவசியம் கிடையாது. நான் வாதாடி அந்த பத்திரிகை வளரவேண்டுமென்பதும் கிடையாது. எவ்வளவோ பத்திரிகைகள் இருக்கின்றன. எத்தனை வருஷங்களாக பத்திரிகை வெளிவந்து கொண்டிருக்கிறது, அதனுடைய தரம் என்ன, அது தேசிய பத்திரிகையா, எப்படி இருக்கிறது என்ற முறையில் ஆராய்ந்து பார்த்து விளம்பரங்களை கொடுக்கவேண்டும். அந்த நிலையில் எடுத்துக்கொண்டு பார்த்தால், திராவிட முன்னேற்றக் கட்சி ஆட்சிக்கு வந்த பிற்பாடு அவர்களுடைய கட்சியைச் சார்ந்த பத்திரிகைகள் மட்டுமல்ல, அவர்களுடைய ஆட்சியை ஆதரிக்கும் படியான பத்திரிகைகளுக்கு சலுகை கொடுப்பது, அதே சமயத்தில் அவர்களுடைய ஆட்சியைக் கண்டித்தால், அந்தப் பத்திரிகைக்கு சலுகையை எடுத்து விடுவது என்ற நிலை தான் இருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய நிறுவனத்தில் ஸ்டிரைக் என்று சொன்னால், அதற்கு ஆதரவு கொடுத்து, தகுந்த மாதிரி அட்ஜஸ்ட்மெண்டு செய்வது, வேண்டாததாக இருந்தால், தீர்த்து விட வேண்டும் என்று அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கக்கூடாது. அந்த நிலை ஜனநாயகம் வளர்வதற்கு ஊறாக இருக்கும் என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். ஜனநாயகம் வளரவேண்டுமென்றால், பத்திரிகைகள் நன்றாக நடக்கவேண்டும். பத்திரிகைகளுக்கு அபிப்பிராயத்தைச் சொல்வதற்கு உரிமை இருக்கவேண்டும். சர்க்கார் தலையீடு அதிகமாக இருப்பது அவர்களுக்கே நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, எத்தனையோ நிதி வசூல்கள் செய்யப்படுகின்றன. மாதம் தவறினாலும் தவறும், வசூல் செய்வது தவறுவதில்லை. உலகத் தமிழ் மாநாடு நடத்தினீர்கள். சில சமயங்களில் நீங்கள் சொல்லும்படியான நிலை எப்படி இருக்கிறது என்றால், "இது வரைக்கும் ஒன்றுமே நடைபெறவில்லை, இப்பொழுது நாங்கள் வந்து தான் நடந்துகொண்டிருக்கிறது" என்று தவறான கருத்துக்களை சொல்லிக் கொண்டு வருகிறீர்கள். மில்களை தி.மு.க. ஆட்சி தான் தேசியமாக்கியது என்று சொல்கிறீர்கள். நாங்கள் தேசியமாக்கியதை நீங்கள் விஸ்தரிக்கிறீர்கள். காங்கிரஸ் செய்ததை நாங்கள் விஸ்தரிக்கிறோம் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். அதை விட்டு விட்டு, "நாங்கள் தான் தேசியமாக்கினோம்" என்று பிரசாரம் செய்தால் அது சரியல்ல. சென்னை நகரில் நாங்கள் போக்குவரத்தைத் தேசியமாக்கவில்லையா? கன்யாகுமரியில் பூராவுமாக தேசியமாக்கவில்லையா? (திரு. டி. எஸ். ஆதிமூலம்: சர்க்கார் நடத்துகிறது என்று சொல்லுங்கள். தேசியமாக்குவது என்பது அபத்தமான வார்த்தை). நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளுங்கள். "காங்கிரஸ் கட்சி ஒன்றுமே செய்யவில்லை, நாங்கள் தான் தேசியமாக்கினோம், தமிழுக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் நாங்கள் கொடுக்கிறோம்" என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். 1956-ம் வருடம் டிசம்பர் மாதம் 24-ம் தேதி தமிழ் தான் தமிழ் நாட்டினுடைய ஆட்சி மொழி என்ற சட்டத்தைச் செய்தவர்கள் நாங்கள் தான். அதைத் தான் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதற்கு மேல் "அபிவிருத்தி செய்கிறோம்" என்று நீங்கள் சொல்லுங்கள். ஆட்சேபணை கிடையாது. உங்களுக்கு வேகம் இருக்கிறது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். (குறுக்கீடு) தவறான கருத்துக்களைச் சொல்லி மக்களை நீங்கள் ஏமாற்றுகிறீர்கள் என்று தான் நான் சொல்லிக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு பத்திரிகைக்கு பேட்டி கொடுத்தபொழுது மதுரை போன்ற இடங்களுக்குக் கூட படி அரிசித் திட்டத்தை விஸ்தரிப்பதாக இருக்கிறோம் என்று சொன்னார்கள். பிறகு அது மறுக்கப்பட்டிருக்கிறது. தவறான கருத்தை மக்களிடையே தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நமது அருமை நண்பர் திரு. ஆசைத்தம்பி அவர்கள் "நான் லண்டனுக்குச் சென்றேன். அங்கு படி அரிசித் திட்டத்தைப் பற்றிச் சொன்னேன், ரொம்பப் பிரமாதமாக இருக்கிறது என்று சொன்னார்கள்" என்றெல்லாம் சொல்லிக்கொள்கிறார். இது தான் வேலை. தலையை மட்டும் தான் காட்டியிருக்கிறார்கள், வாலை விட்டுவிட்டார்கள். படி அரிசித் திட்டம் போட்டது சரி. அதனால் எத்தனை நஷ்டம் வந்தது என்று அவர்கள் வெள்ளைக்காரரிடம் சொல்லவில்லையே? அதனால் எத்தனை ரூபாய் நஷ்டம் என்பதையும் சொல்லியிருக்கவேண்டும். லண்டன் டைம்ஸில் 1967-ம் வருஷம் ஜூன் மாதம் படி அரிசித் திட்டத்தைப்பற்றி தி.மு.க. ஆட்சியைப் பற்றி ஒரு தலையகம் எழுதியிருக்கிறார்கள். நினைத்ததைச் செய்யமுடியவில்லை. திக்குத் தெரியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், என்று லண்டன் டைம்ஸில் 1967-ம் வருடம் ஜூன் மாதம் விமர்சனம் செய்திருக்கிறார்கள். நான் சொல்லும்படியான பிரச்னை இல்லை இது. நாங்கள் உங்கள் பேரில் குற்றம் சாட்டுவது என்பது கிடையாது. வெளி உலகில் இருப்பவர்கள் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். பெருமை அடித்துக்கொள்கிறீர்கள், "நாங்கள் வந்தவுடன் தான் கோடிக்கணக்கான ரூபாய் வசூல் செய்தோம், தஞ்சாவூரில் ரூ. 15 லட்சம் வசூல் செய்தோம்" என்றெல்லாம் சொல்லிக்கொள்கிறீர்கள். எவ்வளவு லட்சமோ எனக்குத் தெரியாது. உலகத்தமிழ் மாநாட்டிற்கு முதலில் அழைத்தது யார்? மாஜி முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள். திரு. பக்தவத்சலம் அவர்கள் கூப்பிட்டு, அதை நீங்கள் நடத்தினீர்கள். ஆனால் அவருக்கு அந்தப் பெருமை கிடையாது. "நாங்கள் நடத்தினோம், நாங்கள் அழைத்தோம், நாங்கள் வசூல் செய்தோம்" என்று நீங்கள் பிரசாரம் செய்து கொள்கிறீர்கள். பணம் வசூல் செய்தது தவறில்லை. ஆனால், பணம் வசூல் செய்தால் அதற்குச் சரியான கணக்குகள் கொடுக்கப்படவேண்டும். ஒரு பெர்மிட் கொடுக்கவேண்டுமென்றால், உலகத் தமிழ் மாநாட்டிற்கு ரூ. 100 டிக்கட் வாங்கவேண்டும் என்று சொல்லி எங்கள் ஊரில் வசூலித்

திருக்கிறார்கள். பணம் கலெக்ட் செய்யட்டும். ஆனால் வசூலித்த பணம் கணக்கிற்கு வந்ததா? கணக்கு சரிவர வைக்கப்பட்டிருக்கிறதா? ஆடிட் நடத்தப்பட்டதா? ரசீது இருக்கிறதா? சம்பந்தப்பட்டவர்கள் ஏன் பணத்தைக் கையாடல் செய்திருக்கக்கூடாது என்பதைத்தான் நான் குற்றச்சாட்டாக சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கம்பர் விழாவின்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நிதி வசூல் செய்யவில்லையா? அவர் எப்படி வசூல் செய்யலாம்? அதற்கு அவர்களுக்கு எப்படி உரிமை இருக்கிறது?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதைப்பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். கமிட்டி தீர்மானம் போட்டது, அதை நான் ஏற்றுக்கொண்டேன் என்று தான் நான் சொல்லுகிறேன். அப்படி நான் வசூல் பண்ணவேண்டாம் என்று சர்க்கார் தீர்மானம் செய்யட்டும். சர்க்காரே போய் வசூல் செய்து கொள்ளட்டும். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. கமிட்டி அனுமதித்தது. நான் வசூல் செய்தேன். ரசீது கொடுத்திருக்கிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் வந்தபொழுது கூட, அவரிடம் கமிட்டியை விட்டுச் சொல்லச் சொல்லியிருக்கிறேன். இதில் ஒன்றும் ரகசியமில்லை. கமிட்டி நான் வசூல் செய்யவேண்டும் என்று தீர்மானித்து நான் ஏற்றுக்கொண்டேன். ஒருவர் தானம் கொடுக்கிறேன் என்றால், வேண்டாம் என்று மறுப்பதற்கு யாருக்கு உரிமை இருக்கிறது. தவறான பாதையிலே நான் போயிருந்தால் அதற்கான பூரண பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். தவறான கணக்கு என்று நிரூபிக்கப்பட்டால் சரியான கணக்குக்குமேல் வசூலித்த ரூபாயைத் திருப்பிக் கொடுப்பார்களா? என்னைப் பொறுத்த வரையில், தவறாக நடந்திருக்கிறது என்று நிரூபிக்கப்பட்டால் நான் அந்த அவமானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. பிச்சை எடுத்தாவது பணத்தைத் திருப்பித் தந்து விடுவேன். ரூ. 25,000 அல்ல, இரண்டு லட்சம் வசூல் செய்ய எனக்குச் சக்தி இருக்கிறது, என்னிடம் நேர்மை இருக்கிறது. நியாயம் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உலகத் தமிழ்நாட்டுக்கு நாங்கள் வசூல் செய்து கொடுத்தோம் என்றால் உங்களுக்குப் பெருமை குறைந்தா போய் விடும். அது உங்கள் பெருந்தன்மையைத் தான் காட்டும். அனாவசியமாக குற்றச் சாட்டைச் சாட்டாதீர்கள். எனக்குப் பொறுப்பு இருக்கிறது. நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். உங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களும். உலகத் தமிழ் மாநாட்டிற்கு பணம் வசூலித்தவர்கள் இன்னும் வெகுவான பொறுப்பை ஏற்கும்படியான நிலை தான் இருக்கும். பணம் மிகவும் முக்கியம். நாணயம் மிகவும் முக்கியம், வரவு செலவு மிகவும் முக்கியம். பொது மக்களிடமிருந்து ஒரு நயா பைசா வசூல் செய்தாலும் கூட அதை முறையானபடி வசூல் செய்யவேண்டும். முறையானபடி தணிக்கை செய்யவேண்டும், முறையானபடி கணக்கு வைக்கவேண்டும். இந்த நிலையிலே நிச்சயம் உலகத் தமிழ் மாநாடு சம்பந்தமாக வசூல் செய்தது பற்றிய கணக்கை பூரணமாக இந்த மன்றத்தின் முன்னால் வைக்க வேண்டும். அதற்கான பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

உதவி சபாநாயகர் அவர்களே, நாளைக்கு என்னுடைய பேச்சை தொடர்வதற்கு அனுமதிக்கவேண்டும். சுமார் 15 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இத்துடன் இன்று நிறுத்திக்கொள்கிறேன். (சில உறுப்பினர்கள் : இப்பொழுதே தொடர்ந்து பேசி முடித்து விடுங்கள்) இன்னும் முடியவில்லை. இரண்டு, மூன்று விஷயங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கொஞ்ச நேரம் எடுத்துக் கொண்டாலும், இப்பொழுதே தொடர்ந்து பேசி முடித்து விடுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுது இருக்கும்படியான இன்னொரு பிரச்னை என்னவென்றால், பிரதேச உணர்ச்சிகளை தூண்டி விடும்படியான ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. மதுரையில் தமிழ் சேனை என்று ஒரு சேனை ஆரம்பிக்கப்பட்டது. முதல் அமைச்சர் அவர்கள்





வெளி நாட்டிற்குச் செல்லுகிற சமயத்தில் "இதை நான் ஆதரிக்கவில்லை" என்று சொன்னார்கள். அதே சமயத்தில் மதிப்பிற்குரிய அருமை நண்பர் நமது பொதுப்பணித் துறை அமைச்சர் "அது இருந்தால் பாதகம் இல்லை" என்று சொன்னார்கள். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எங்கே சொல்லியிருக்கிறேன் என்பதை தயவு செய்து அறிவிக்கவேண்டும்). சொன்னதாகத் தான் தெரிகிறது. இல்லை என்று சொன்னால் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஐயா, அமைச்சர் இல்லை, மறுக்கிறேன் என்று சொன்னால் நான் வாபஸ் பெற்றுக்கொள்ளுகிறேன். ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படியிருந்தாலும் கூட, அமைச்சர்கள் வெளியே சொன்ன பேச்சுக்களைப் பற்றி இந்த அவையிலே பேசுவது என்பது கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்த விஷயத்தை அதோடு விட்டு விடலாம். அப்படிப் பேசவில்லையென்றால் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் கேட்பது என்னவென்றால் தமிழ் சேனையைக் கலைப்பதற்கு ஏன் முதல் அமைச்சர் அவர்கள் உத்தரவிடக்கூடாது? (குறுக்கீடு : வெண்புறா சேனை). அது தான் பறந்து போய் விட்டது என்று சொல்லிவிட்டாரே? அமைச்சர்கள் மதுரைக்குச் சென்ற சமயத்தில் அவர்களுக்கு கருப்புக் கொடி காட்டினால், அந்த நிலையில் அமைச்சர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கு போலீஸ் இல்லையா? "நாங்கள் பாதுகாப்பு கொடுக்கிறோம்" என்று சொல்லி தமிழ் சேனையில் உள்ளவர்கள் ஏன் வரவேண்டும்? அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கு போலீஸ் ஏன் வரவேண்டும். அந்த சமயத்தில் ஏன் சிலர் அடிபடவேண்டும்? கலியாணத்திற்குப் போனவர்களுக்குக் கருப்புக் கொடி (குறுக்கீடு) கலியாண வீட்டில் காட்டியிருக்கமாட்டார்கள், வெளியிலே வீதியிலே காட்டியிருப்பார்கள். கலியாண வீட்டுக்காரருக்கு ஊரெல்லாம் சொந்தமா? அது மாதிரி ஒரு நிலை இருக்கக்கூடாது.

கடைசியாக இந்தச் சர்க்கார் ஒரு உத்திரவு போட்டிருக்கிறது. அதாவது, சர்க்கார் அலுவலகங்களிலிருந்து கடவுளர் படங்களை நீக்க வேண்டும் என்பதாகும். அது மட்டுமல்ல, அதற்கு என்ன விளக்கம் கொடுக்கிறார்கள்? தெரியாமல் வந்துவிட்டது என்கிறார்கள். நீக்குவது பற்றி சர்க்கார் தெரிவிக்கலாம். நாங்கள் நாத்திக வாதிகள், அந்த நாத்திக அடிப்படையில் தான் செய்கிறோம் என்று சொல்லலாம். ஆத்திகத்திற்கும் எங்களுக்கும் பொருத்தமில்லை என்று தெரிவித்து விட்டார்கள் என்றால் சரியாக இருக்கும். அப்பொழுது இதற்கு மட்டுந்தானா? சர்ச்சுகளுக்கும், மாஸ்க், பள்ளிவாசல்களுக்கும் என்ன? இதையெல்லாம் சர்க்கார் அதிகாரிகள் அமைச்சர்கள் முன் வந்து தவறு என்று சொல்வார்களா? சொல்லுகிற சமயத்தில் சொல்லுவார்கள். தேர்தலுக்கு முன்னால், ரகசியத்தைச் சொல்லுவார்கள். எங்களுக்குச் சொல்லவில்லையா, அப்படிச் சொல்லுவார்கள். முதல் அமைச்சர் என்ன பதில் சொல்லுவார்கள் என்று ஊகிக்கிறேன். "ஐயா, கான்ஸ்டிட்யூஷன், ஸெக்குலா ஸ்டேட் என்று சொல்லுகிறதே, ஆகவே தான் மதச் சார்பற்ற சர்க்காராக நடக்கிறது" என்று. மதச் சார்பற்ற சர்க்கார் என்று சொல்லலாம். ஆனாலும், அந்த கான்ஸ்டிட்யூஷன்லேயே ஒரு புரொடெக்ஷனும் இருக்கிறது, ரிலிஜன் சம்மந்தமாக. எந்த விதமான பாதகமும் ஏற்படக்கூடாது. மதத்தை அவரவர் இஷ்டம் போலச் செய்துகொள்ளலாம் என்றும் இருக்கிறது. கடவுளர் படங்களை அகற்றுவதுமக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இவர்கள் சொல்லலாம், மக்களுடைய வாக்குகள் பெற்று வந்திருக்கிறோம், ஆகவே தான் செய்கிறோம் என்று. ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இரண்ணியன், இரண்ணியாட்சன் என்ற அரக்கர்கள், பெரும் பலம் படைத்தவர்கள், நானே கடவுள், என்னையே கும்பிடுங்கள் என்றார்கள். நாராயணனுக்குப் பொறுக்கவில்லை. பிரகலாதன் தோன்றினான். இவர்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் வாக்கு பெற்றுவிட்டோம், சக்தி பெற்றுவிட்டோம் என்று. ஆனால் இரண்ணியன், இரண்ணியாட்சன் போன்ற அரக்கர்களும், நாங்களே கடவுள்,

பிற்பகல் 1-30

வேறு கடவுள் கிடையாது என்று தான் சொன்னார்கள். ஆகவே, எச்சரிக்கை செய்கிறேன். இந்த சக்தியோடு பிரகலாதனும் கூடவே தோன்றியிருப்பான் என்று சொல்ல விரும்புகிறேன்.

இத்தனை விஷயங்களையும் எடுத்துச்சொல்லியாகிவிட்டது. இவற்றிற்கெல்லாம் நேரிடையாக அமைச்சர் பதில் கொடுக்க வேண்டும்.

தென்காசி தேர்தல்பற்றிச் சொன்னார்கள். 23,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம் என்கிறீர்கள். நாங்கள் தென்காசியில் தோற்றுவிட்டோம். தோல்வியை ஏற்றுக்கொள்கிறேன். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், நீங்கள் வெற்றிபடைந்த முறைகள், வெட்கப்படவேண்டிய முறைகள், எப்படி வெற்றி பெற்றீர்கள், யார் யார் பின்னால் என்ன என்ன செய்தார்கள் என்பதெல்லாம் தெரியும்.

* *

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தென்காசி தேர்தல் வழக்கு மன்றத்திற்கு எடுத்துச் சென்று இருக்கிறார்கள். அதைப் பற்றி இங்கே பேசுவது, நடக்கக்கூடிய வழக்குக்கு ஏதாவது தொடர்பு ஏற்படுத்தக்கூடிய நிலையை ஏற்படுத்தக்கூடும். ஆகவே, அதைப்பற்றி பேசவேண்டாம். என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சருடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

* *

என்னிடம் ஒவ்வொரு ஜில்லாவைப்பற்றியும் தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. கொள்முதலில் நடந்த தவறுகள் என்னென்ன. திராவிட முன்னேற்றக் கட்சியைச் சார்ந்தவர்கள் எத்தனை செயல்களிலே தவறாக நடந்துகொண்டிருக்கிறார்கள், போலீஸ்காரன் செய்திருக்கும் அக்கிரமங்கள் எவ்வளவு, கரப்ஷன், ஊழல்கள் எவ்வளவு என்பதையெல்லாம் பற்றியிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி என்னுடைய நண்பர்கள் புள்ளிவிவரங்களுடன் பேசுவார்கள். என்னிடம் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டன. அவற்றில் இங்கே 200, 300 பொருக்கியெடுக்கப்பட்டு இருக்கின்றன. இது கோயம்புத்தூர் ஜில்லா, இவ் வட ஆற்காடு ஜில்லா, இது சென்னைப்பட்டணம், இது தஞ்சாவூர், பிறகு ராம்நாட், இந்த மாதிரி எல்லா மாவட்டங்களிலிருந்தும், விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம், உதவி சபாநாயகர் அவர்களே, தங்களிடம் கொடுக்கிறேன். (விண்ணப்பக் கட்டுகள் பேரவைத் துணைத் தலைவரிடம் கொடுக்கப்பட்டன.)

இந்த தஸ்தாவேஜுகளை அச்சடித்து பொது மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று உங்களிடம் கொடுக்கிறேன்.

ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் செயலற்ற சர்க்கார்; திறமையற்ற சர்க்கார், நேர்மையற்ற சர்க்கார், என்கிற குற்றச்சாட்டுக்களைச் சாட்டி, என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** "தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துச் சொன்னவைகளில், கடைசியில் சொன்னார்கள், சர்க்கார் அலுவலகங்களிலிருந்து கடவுளர் படங்களை நீக்குவது பற்றியும், எங்களுடைய நாத்திகக் கொள்கையைத் திணிக்கிறோம் என்றும். எங்களுக்கும் இரண்ணியன், இரண்ணியாட்சன் போன்ற அரக்கர் கதிதான் ஏற்படப் போகிறது என்று சாபமும் கொடுத்தார்கள். இரண்ணியன், இரண்ணியாட்சன் இவர்கள் பற்றி அவர்கள் சொன்ன கதை எனக்கும் தெரியும். ஆத்திகக்தைப் பரப்புவதோ, நாத்திகத்தைப் புகுத்துவதோ படங்களை மாட்டுவதிலோ அகற்றுவதிலோ இல்லை. படங்களை மாட்டி வைப்பது, நீக்குவது என்கிற பிரச்சினைக்கும், ஆத்திகம், நாத்திகம் என்பதற்கும் சம்பந்தம் இல்லை. இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதிலிருந்து, ஆத்திகர்கள் மனம் புண்படும் வகையில், அவர்களுக்கு குந்தகம் ஏற்படும் வகையில், அவர்களுடைய மத நம்பிக்கைக்கு ஊறு ஏற்படும் வகையில் இந்த அரசு எந்த விதமான காரியமும் செய்தது இல்லை. அது மட்டுமல்ல, ஆத்திகக் காரியங்களுக்கு இந்தச் சர்க்கார், பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிற முறையில், உதவிகளையும், பணிகளையும் செய்துகொண்டு வந்திருக்கிறது. பல திருவிழாக்களிலும், மகாமகம் போன்றவைகளிலும் இந்த அரசு எந்த அளவிற்கு ஆத்திகர்களுக்குத் துணையாக இருந்திருக்கிறது என்பதை நாடு அறியும், நல்லவர்கள் அறிவார்கள். ஆகையினால், கடவுளர் படங்களை நீக்குவது பற்றிய உத்தரவிற்கும், ஆத்திகம், நாத்திகம் இவற்றிற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

** பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





நாங்களே அழிக்கப்போகிறோம் என்று கூடச் சொல்லவில்லை. எங்களுக்கே பிள்ளைகள் பிறந்து, அழிப்பார்கள் என்று குறிப்பிட்டார்கள். பிள்ளைகள் செய்வது போன்ற முக்தி வேறு இல்லை என்று ஆத்திகம் சொல்கிறது. ஆகவே, இப்படி, அப்படி ஆக்கிவிடுவார்கள் என்று சொல்லுவதன் மூலமாக, தவறான பிரசாரத்தை கையாள்வது நாட்டு மக்களிடத்தில் பலன் தராது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை நாளைக் காலை 9-00 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

175. Notification issued with G.O. Ms. No. 2634, Home, dated the 19th September 1967 in regard to the collection of quarterly tax at reduced rate in respect of certain tourist luxury coaches. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931.]

176. Notification issued with G.O. Ms. No. 23, Legislative Assembly, dated the 11th April 1968 in regard to an amendment to the Madras Legislature Travelling Allowance Rules, 1955, published at pages 131-138 of theRules Supplement to Part II of the Fort St. George Gazette, dated the 27th July 1955, as subsequently amended. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Payment of Salaries Act, 1951 (Madras Act XX of 1951).]

### B. Reports, Notifications and other Papers.

*55. Notification issued with G.O. Ms. No. 510, Revenue, dated the 2nd March 1968 in regard to exemption from payment of stamp duty in respect of the mortgage deed to be executed by the Jawans and Ex-servicemen Families Welfare Association, Vellore, in favour of the Committee for the Administration of the Post-war Services Reconstruction Fund for obtaining a loan of Rs. 80,000 under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

* Placed on the table of the House on 22nd August 1968.

# APPENDIX.

[*Vide* Answer to starred question No. 116 at pages 16–17]

## STATEMENT.

### *Harijan Welfare State Scholarship.*

Harijan Welfare State Scholarships are granted to students belonging to Scheduled Castes, Scheduled Tribes, Denotified Tribes, Backward Classes and Most Backward Classes. Scholarships are granted to them for both pre-Metric and post-Metric courses. The scholarship consists of tutiton fees, if any, cost of books (fixed), special fees, boarding and lodging charges and examination fees. Converts from Scheduled Castes, Scheduled Tribes and Denotified Tribes are eligible for the State Scholarships while converts from Backward Classes and Most Backward Classes are not eligible. The income limit fixed for the award of State Scholarship is Rs. 2,000 per annum, from all sources. For this purpose the income of the parent or gruadian of the student during the previous financial year ending 31st March will be taken into account. Fluctuation of income will not be taken into account for renewal of scholarships. The salaries drawn by the members of Legislative Assembly and Council and Harijan members of Parliament will not be treated as income for the purpose. No mark limit has been prescribed for students belonging to Scheduled Castes, Scheduled Tribes and Denotified Tribes for the award of post-Metric scholarship. But Backward Class students should get 50 percent and above marks and Most Backward Class students should get 45 per cent and above marks to become eligible for the award of scholarship.

Two failures are allowed in the case of State Scholarship holders pursuing M.B.B.S., B.D.S. and B.E. (Integ.) courses. In respect of other post-Matric Courses one failure is allowed. Failures which do not extend the length of the course and by which the students are not detained in the same class will not be taken into account as failures. Pupils who forfeit scholarship on account of failures will, however, be considered eligible when they apply afresh after securing promotion to the next higher class subsequently. No scholarship will be given to the students who change their course of studies without completing one stage of education and the students who change their courses of studies without the approval of the Director of Harijan Welfare are not eligible for scholar ship from Harijan Welfare Department.

Boarding and logding charges are granted to Scheduled Castes, Scheduled tribes and Denotified Tribes studying in post-Matric and pre-Matric classes at the rates prescribed by the Government or the actual rates whichever is less. Backeward Class students in Form III and below are not eligible for any scholarhip. Backward Class students studying in Forms IV to VI (or Standards IX to XI) are eligible only for non-residential scholarships (i.e.) fees, if any, books and special fees. Students in college classes are eligible for both non-residential scholarships and



residential scholarships. In the case of residential scholarship to the Backward Class students studying in post-Matric courses, the boarding and lodging charges will be granted at the rate of Rs. 40 per mensem in the City and Rs. 35 per mensem in the mufassal. But the students belonging to the Maruthuvar and Vannan communities (which are included in the list of Most Backward Classes) will be granted boarding and lodging charges on a par with Scheduled Caste students for collegiate classes. From the year 1967–68 onwards the students belonging to Parvatharajakulam (Pattanavan, Sembadavan) community (Most Backward Class) will also be eligible for the above concession.

### *Government of India Scholarship*

The Government of India scholarships are awarded to students belonging to Scheduled Castes and Scheduled Tribes, Denotified Tribes, Nomadic and Semi-Nomadic Tribes. Apart from this, scholarships are also granted to lower income group students purely on income basis. The Government of India scholarships are given for the study of all recognised post-Matriculation courses in the recognised institutions. The scholarship includes maintenance charges, fees and expenses on approved study tours and typing/printing of thesis.

Students belonging to Scheduled Castes will be paid full scholarship but in the case of Scheduled Castes, Denotified Tribes, Nomadic and Semi-Nomadic Tribes the scholarship will be paid to the students according to the following means tests :—

| | |
|---|---|
| (*a*) In the case of students whose parents/guardians income from all sources does not exceed Rs. 300 per mensem.<br>(*b*) In case of students who are employed and have to support a family, the total income from all sources of the family including their own earning does not exceed Rs. 360 per mensem.<br>(*c*) In case of students who are employed on monthly income upto Rs. 60 per mensem and have not to support a family. | Full scholarship. |
| (*d*) In case of students whose parents/guardians income from all sources exceeds Rs. 300 per mensem but does not exceed Rs. 400 per mensem. (But in the case of two or more children of the parents/guardians falling under this income group being selected, the eldest will be awarded two-thirds maintenance allowance while others will get the full amount). | Two-thirds maintenance charges and full fees. |

| Category | Provision |
| --- | --- |
| (*e*) In case of students whose parents/guardians income from all sources exceeds Rs. 400 but does not exceed Rs. 500 per mensem, provided that the number of children receiving post-Matriculation education is more than one.<br>(*f*) In case of students who are employed and have to support a family, the total income from all sources of the family including their own earning exceeds Rs. 360 per mensem but does not exceed Rs. 475 per mensem.<br>(*g*) In case of students who are employed on a monthly income exceeding Rs. 60 per mensem but not exceeding Rs. 175 per memsem and have not to support a family. | Half maintenance charges and full fees. |
| (*h*) If the income of the parents/guardians from all sources exceeds Rs. 500 per mensem.<br>(*i*) If the student is the only child receiving post-Metric education of parents/guardians whose income from all sources exceeds Rs. 400.<br>(*j*) In the case of students who are employed and have to support a family if the total income from all sources of the family including their own earning exceeds Rs. 474 per mensem.<br>(*k*) If the student is employed on a monthly income exceeding Rs. 175 per mensem and has not to support a family. | No scholarship. |

One failure is allowed to Scheduled Castes and Scheduled Tribes students pursuing Medical and Engineering courses. No failure is allowed with respect of any other course.

No income limit is fixed for the award of scholarship to Scheduled Tribes. In the case of Scheduled Castes the limit ranges between Rs. 300 per mensem to Rs. 500 per mensem. In respect of Lower Income Groups students the income limit fixed is Rs. 2,000 per annum, in respect of courses other than Medical, Engineering, Veterinary and Agricultural where the limit is Rs. 2,400 per annum.

Converts from Scheduled Castes are not eligible for the award of Government of India Scholarship because according to the Constitution (Scheduled Castes) Order, 1950, as subsequently amended, no person who professess a religion different from Hinduism or



Sikh shall be deemed to be a member of Scheduled Caste. But Scheduled Tribes are eligible irrespective of the religion to which they belong.

### இணைப்பு.

### விவர அறிக்கை.

### தமிழக அரசு அரிசன நலத்துறை உபகாரச் சம்பளங்கள்

அரிசன வகுப்பு, ஆதிவாசி வகுப்பு, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு; பின்தங்கிய வகுப்பு, மிகப் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்புக்கு முந்திய படிப்புக்கும் மெட்ரிக் மேற்படிப்புக்கும் அரிசன நலத்துறையின் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன. இந்த உபகாரச் சம்பளத்தில கல்விக் கட்டணம் இருப்பின் அது, புத்தகச் செலவு (நிச்சயித்த தொகை), சிறப்புக் கட்டணங்கள், உண்டுறைச் செலவுகள், தேர்வுக் கட்டணங்கள் ஆகியவைகளும் அடங்கும். அரிசன, ஆதிவாசி வகுப்பிலிருந்தும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரிலிருந்தும், மதம் மாறிய மாணவர்கள் அரசு உபகாரச் சம்பளம் பெற தகுதியுடையவர்களாவர். ஆனால் பின்தங்கிய வகுப்பிலிருந்தும் மிகப் பின்தங்கிய வகுப்பிலிருந்தும் மதம் மாறிய மாணவர்களுக்கு இந்த உபகாரச் சம்பளம் வழங்கப்படுவதில்லை. உபகாரச் சம்பளம் வழங்குவதற்கான நிச்சயிக்கப்பட்ட வருமான வரம்பு எல்லா ஆதாரங்களிலிருந்தும் ஆண்டுக்கு ரூ. 2,000 ஆகும். இதற்கென அந்த மாணவரின் தந்தை அல்லது காப்பாளருக்கு மார்ச் 21-ம் தேதியுடன் முடிவடைந்த முந்திய நிதி ஆண்டில் கிடைத்த வருமானக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். வருமானத்திலேற்படும் எற்ற இறக்கம் உபகாரச் சம்பளங்களைப் புதுப்பிப்பதற்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. இது குறித்து சட்டசபை சட்டமன்ற உறுப்பினர் பெறும் சம்பளங்களும் பாராளுமன்ற அரிசன உறுப்பினர் பெறும் சம்பளமும் வருமானமாகக் கொள்ளப்படமாட்டா. மெட்ரிக் மேற்படிப்புக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதற்காக அரிசன, ஆதிவாசி வகுப்பு மாணவர்களுக்கும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் தேர்வு மதிப்பெண்கள் இவ்வளவு பெறவேண்டுமென்று வரம்பு நிச்சயிக்கப்படவில்லை. ஆனால், உபகாரச் சம்பளம் பெறும் தகுதி பெறுவதற்குப் பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் 50 சத வீத மதிப்பெண்ணும் அதற்கு மேலும் பெறவேண்டும். மிகப் பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் 45 சதவீத மதிப்பெண்ணும் அதற்கு மேலும் பெறவேண்டும்.

எம்.பி.பி.எஸ்,, பி.டி.எஸ். (B.D.S.) பி.ஈ. (இணைப்பு), படிப்பு படித்து வந்து மாநில அரசாங்க உபகாரச் சம்பளம் பெற்று வரும் மாணவர்கள், இரண்டு முறை தேர்வுகளில் தவறுவது அனுமதிக்கப்படுகிறது. பிற மெட்ரிக் மேற்படிப்பு சம்பந்தமாக ஒரு முறை தான் தேர்வில் தவறுவது அனுமதிக்கப்படுகிறது. ஒரு மாணவர் தேர்வில் தவறுவதன் விளைவாக பாட முறையின் கால அளவு நீடிக்கப்படாவிட்டாலும், அம் மாணவர் அதே வகுப்பில் நிறுத்திவிடப்பட்டாலும், தேர்வில் தவறியதாகக் கருதப்படமாட்டாது. தேர்வில் தவறியதனல் உபகாரச் சம்பளத்தை இழக்கும் மாணவர்கள், அடுத்து வரும் தேர்வுகளில் தேறி அடுத்த உயர் வகுப்புக்குச் சென்று புதிதாக விண்ணப்பிக்கும்போது உபகாரச் சம்பளம் பெறத் தகுதி யுடையவராவர். கல்வியின் ஒரு நிலையை முடிக்காமல் பாட முறையை மாற்றிக்கொள்ளும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்படமாட்டாது. அரிசன நலத் துறை நெறியாளரின் ஒப்புதலின்றிப் பாடமுறையை மாற்றிக்கொள்ளும் மாணவர்களுக்கும் அரிசன நலத் துறையிலிருந்து உபகாரச் சம்பளம் கிடைக்காது.

உண்டுறை வசதிகளுக்காக ஆகும் செலவுகள், மெட்ரிக் மேற்படிப்பும் மெட்ரிக் முன்படிப்பும் படிக்கும் அரிசன, ஆதிவாசி வகுப்பு மாணவர்களுக்கும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் அரசு நிச்சயித்துள்ள செலவு வீதம் அல்லது உண்மையில் ஆகும் செலவு, இதில் எது குறைவோ அந்த வீதத்தில் உபகாரச் சம்பளம் அளிக்கப்படும்.

மூன்றும் படிவத்திலும் அதற்குக் கீழுள்ள வகுப்பிலும் படிக்கும் பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் எதுவும் வழங்கப் படுவதில்லை. நான்காம் படிவம் முதல் 6-ம் படிவம் வரையில் (அல்லது 9-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரை) படிக்கும் பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் தங்கிப் பயில்வதற்கு அல்லாத உபகாரச் சம்பளம் மட்டும் (அதாவது) பள்ளிச் சம்பளம் இருந்தால் அது, புத்தகச் செலவு, சிறப்புக் கட்டணம் ஆகிய இவற்றைப் பெறத் தகுதி பெற்றவர்களாவர். கல்லூரி வகுப்புகளிலுள்ள மாணவர்கள், தங்கிப் பயில்வதற்கு அல்லாத உபகாரச் சம்பளமும் தங்கிப் பயில்வதற்கான சம்பளமும் பெறத் தகுதியுடையவர்களாவர். மெட்ரிக் மேற்படிப்பு படிக்கும் பின்னிலை வகுப்பு மாணவர்களுக்கு அளிக்கப்படும் தங்கிப் பயில்வதற்கான உபகாரச் சம்பளம் குறித்து (உண்டுறைச் செலவுகள்) சென்னை மாநகரில் இருப்பவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40 வீதத்திலும், வெளியூர்களில் இருப்பவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 35 வீதத்திலும் வழங்கப் பெறும். முடிதிருத்தும் தொழிலாளர், சலவைத் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த (மிகப் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் இந்த வகுப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன) மாணவர்களுக்கு கல்லூரிப் படிப்பிற்கென அரிசன மாணவர்களுக்குக் கொடுப்பது போன்ற அதே வீதங்களில் உண்டுறைச் செலவுகள் வழங்கப் படுகின்றன. 1967-68-ம் ஆண்டு முதற்கொண்டு பர்வதராஜகுல (பட்டணவான், செம்படவன்) வகுப்பைச் சேர்ந்த (மிகப் பின்தங்கிய வகுப்பு) மாணவர்களும் மேற்சொன்ன சலுகை பெறத் தகுதி பெறுவர்.

## இந்திய அரசு உபகாரச் சம்பளம்.

அரிசன, ஆதிவாசி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர், நாடோடிகள், ஓரளவு நாடோடிகள் ஆகிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இந்திய அரசின் உபகாரச் சம்பளம் வழங்கப்படுகிறது. இத்துடன் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு குறைந்த வருமானம் உடைய பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கும் உபகாரச் சம்பளம் வழங்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் ஏற்கப்பட்ட மெட்ரிக் மேற்படிப்பு வகுப்புகளுக்கும் இந்திய அரசின் உபகாரச் சம்பளம் வழங்கப்படுகிறது. இந்த உபகாரச் சம்பளத்தில் உண்டுறைச் செலவுகள், கல்லூரிச் சம்பளம், ஏற்பளிக்கப்பட்ட கல்விப் பயணங்களுக்காகவும், ஆய்வுக் கட்டுரைகளை தட்டச்சு செய்வதற்கும் அச்சி அடிப்பதற்கும் ஆகும் செலவுகள் ஆகியவை அடங்கும்.

ஆதிவாசி மாணவர்களுக்கு முழு உபகாரச் சம்பளம் வழங்கப்படும். ஆனால், அரிசன வகுப்பு குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு, நாடோடி வகுப்பு, ஓரளவு நாடோடி வகுப்பு ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட அடிப்படையில் உதவிச் சம்பளம் வழங்கப் படும் :—

| | |
|---|---|
| (அ) எந்த மாணவர்களுடைய தந்தையாரின் காப்பாளரின் வருமானம் எல்லா ஆதாரங்களிலிருந்தும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 300-க்கு மேற்படாதுள்ளதோ அந்த மாணவர்களுக்கு<br>(இ) வேலையில் இருந்து கொண்டு ஒரு குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியுள்ள மாணவர்கள் சம்பந்தமாக அவரது ஊதியம் உட்பட அந்தக் குடும்பத்தின் வருமானம் எல்லா ஆதாரங்களிலிருந்தும் மாதம் ஒன்றுக்கு மொத்தம் ரூ. 360-க்கு மேற்படாவிட்டால். | முழு உபகாரச் சம்பளம். |



| | |
|---|---|
| (உ) மாத வருமானம் ரூ. 60 வரையில் உள்ள ஒரு வேலையில் அமர்ந்துள்ள மாணவராகவும், குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிராதவராகவும் உள்ள மாணவர்களுக்கு. | முழு உபகாரச் சம்பளம். |
| (எ) எந்த மாணவர்களுடைய தந்தையாரின்/காப்பாளரின் வருமானம் எல்லா ஆதாரங்களிலிருந்தும் மாதம் ஒன்றுக்கு ரூ. 300-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 400-க்கு மேற்படாதுள்ளதோ அந்த மாணவர்களுக்கு. (ஆனால், இந்த வருமானத் தொகுதியைச் சேர்ந்த தந்தையாரின்/காப்பாளரின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் தெரிந்தெடுக்கப்பட்டால் அவைகளில் மூத்த குழந்தைக்கு பராமரிப்பும், 2/3 பாகம் பராமரிப்புப் படியும், மற்ற குழந்தைகளுக்கு முழுத் தொகையும் வழங்கப்படும்). | 2/3 பாகம் பராமரிப்புச் செலவும், முழுச் சம்பளமும். |
| (ஐ) எந்த மாணவர்களின் தந்தையின்/காப்பாளரின் வருமானம் எல்லா ஆதாரங்களிலிருந்தும் ரூ. 400-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 500-க்கு மேற்படாதிருக்கிறதோ அந்த மாணவர்களுக்கு (ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் மெட்ரிக் மேற்படிப்பு படித்துக் கொண்டிருக்க வேண்டும்).<br>(ஒ) வேலையில் அமர்ந்து ஒரு குடும்பத்தைக் காக்கவேண்டிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு. அவர்களின் சொந்த ஊதியம் உட்பட அக் குடும்பத்தின் வருமானம் எல்லா ஆதாரங்களிலிருந்தும் மாதம் ஒன்றுக்கு ரூ. 360-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 475-க்கு மேற்படாதிருந்தால் (மாதம் ஒன்றுக்கு ரூ. 60-க்கு மேற்பட்டு ரூ. 175-க்கு மேற்படாத மாத சம்பளத்தில் வேலைக்கமர்த்தப்பட்டு ஒரு குடும்பத்தைக் காக்கவேண்டியிராத மாணவர்களுக்கு). | பாதி பராமரிப்புச் செலவும், முழு சம்பளமும். |
| (ஓ) தந்தையாரின்/காப்பாளரின் வருமானம் எல்லா ஆதாரங்களிலிருந்தும் மாதம் ஒன்றுக்கு ரூ. 500-க்கு மேற்பட்டால்.<br>(ஃ) தந்தையாரின்/காப்பாளரின் வருமானம் எல்லா ஆதாரங்களிலிருந்தும் ரூ. 400-க்கு மேற்பட்டு | |

| | |
|---|---|
| இருந்து மாணவர் ஒருவர் மட்டும் மெட்ரிக் மேற்படிப்பு படித்துக் கொண்டிருக்கும் குழந்தையாக இருந்தால். | உபகாரச் சம்பளம் கிடையாது. |
| (க) வேலையில் அமர்ந்து ஒரு குடும்பத்தைக் காக்கும் பொறுப்புள்ள மாணவனாக இருந்து அந்த மாணவரின் ஊதியம் உட்பட அக் குடும்பத்தின் மொத்த வருமானம் எல்லா ஆதாரங்களிலிருந்தும் மாதம் ஒன்றுக்கு ரூ. 474-க்கு மேற்பட்டிருந்தால். (ச) மாதம் ஒன்றுக்கு ரூ. 175-க்கு மேற்பட்ட மாத வருமானத்தில் ஒரு மாணவன் வேலைக்கமர்ந்திருந்து, ஒரு குடும்பத்தைக்காக்கும் பொறுப்பின்றி இருந்தால். | உபகாரச் சம்பளம் எதுவுமில்லை. |

மருத்துவம், பொறியியல் படிப்பில் சேர்ந்துள்ள அரிசன, ஆதிவாசி மாணவர்கள் ஒரு முறை தேர்வில் தவறினாலும் பரவாயில்லை. பிற எந்தப் படிப்பு சம்பந்தமாகவும் தேர்வில் தவறுவது அனுமதிக்கப்படுவதில்லை. ஆதிவாசி மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதற்கு வருமான வரம்பு எதுவும் நிச்சயிக்கப்படுவதில்லை. அரிசன வகுப்பு மாணவர்கள் சம்பந்தப்பட்டவரையில், இந்த வருமான வரம்பு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 முதல் ரூ. 50 வரையில் நிச்சயிக்கப்பட்டுள்ளது. குறைந்த வருமானத் தொகுதியைச் சேர்ந்த மாணவர்கள் சம்பந்தமான வருமான வரம்பு மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம், வேளாண்மை ஆகிய படிப்புகள் தவிர மற்றவற்றிற்கு ஆண்டுக்கு வருமான வரம்பு ரூ. 2,000 என்றும், மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம், வேளாண்மை ஆகிய படிப்புகளுக்கு வருமான வரம்பு ஆண்டுக்கு ரூ. 2,400 என்றும் நிச்சயிக்கப்பட்டுள்ளது. அரிசன வகுப்பிலிருந்து மதம் மாறிய மாணவர்களுக்கு இந்திய அரசின் உபகாரச் சம்பளம் வழங்கப்படுவதில்லை. ஏனெனில், பிற்பட்டுத் திருத்தப்பட்டுள்ள 1950-ம் ஆண்டு அரசியலமைப்பு (அரிசனங்கள்) ஆணையில் இந்து சமயம் அல்லது சீக்கிய சமயம் ஆகியவை அல்லாத ஒரு சமயத்தைச் சார்ந்த எவரும் அரிசன வகுப்பைச் சேர்ந்ததாகக் கொள்ளமாட்டார். ஆனால் ஆதிவாசிகள் எந்த சமயத்தைச் சேர்ந்தவர்களாயினும் அந்த மாணவர்கள் உபகாரச் சம்பளம் பெறத் தகுதியுடையவர்களாவர்.

# தமிழ்க சட்டப் பேரவை

---

### சனிக்கிழமை, 1968 ஆகஸ்ட் 24

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்–விடைகள்

### * வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*Jalakanteswarar Temple, Vellore*

* S.N. *Q.* 1.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Hon. the Minister for Education and Industries has received any petition from the citizens of Vellore for the installation of idols in the "Jalakanteswarar Temple" in Vellore Fort;

(*b*) the reason why permission has not been granted so far; and

(*c*) will immediate permission be granted before the day fixed by them for installing the idol in the temple?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:**

(அ) ஆம்.

(இ) அண்டு (உ) இக் கோவில் இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆளுகையின்கீழ், பாதுகாக்கப்பட்ட தேசிய நினைவுச் சின்னமாக இருப்பதால், இந்திய அரசு ஒத்துக்கொண்டாலன்றி கோவிலில் விக்கிரகத்தை வைப்பதற்கு அனுமதி வழங்க இயலாது. இக் கோவில் இனியும் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக இராதென அறிவிக்குமாறு இந்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. அதற்கு இந்திய அரசு இதுவரை இணக்கம் தெரிவிக்கவில்லை.

DR. H. V. HANDE: Sir, have the Government noted that the Centre did not take sufficient care to preserve the Kalyana Mantapam in the Jalakanteswarar Temple at Vellore Fort and that Government had also acted against the tenor of the Ancient Monuments Preservation Act? If so, will the Government get the temple released from the Central administration to its fold as was done in the case of 140 temples and monuments? If this is done, the State Government can also take necessary measures to restore worship in the temple once again.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதுபற்றிய பிரச்சினை இரண்டு மூன்று ஆண்டுகளாக இருந்து வருகிறது. இந்தக் கோவிலை மறுபடியும் புதுப்பித்து கடவுள் சிலை வைத்து வழிபட வேண்டுமென்ற கோரிக்கை வேலூரிலுள்ள ஒரு சிலரால் வைக்கப்பட்டது. முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் மாநில அரசு இந்தக் கோவிலைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசின் பழம்பொருள் காப்புச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென்று எழுதிக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் அது வரலாற்றுச் சின்னங்கள் இருப்பதன் காரணமாகவும், கலைச்சிறப்பான பொருள்கள் இருப்பதன் காரணமாகவும்,

தொல்பொருள் சிறப்புத் தன்மையும் உடையதாக இருக்கிற காரணத்தாலும், அது நேஷனல் இம்பார்டன்ஸ் என்ற அளவிற்குத்தான் இருக்க வேண்டுமென்று அட்வைசரி கமிட்டி கூறிவிட்ட காரணத்தாலும் அது இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தின் கீழே இருக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். நாங்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோவிலுக்கும், தஞ்சையிலுள்ள பெருஉடையார் கோவிலுக்கும் விலக்கு அளித்தால் அதை மாநில அரசு பாதுகாக்க முடியும் என்றும், முன்பெல்லாம் மாநில அளவில் தொல்பொருள் ஆராய்ச்சிகள் கிடையாது, இப்பொழுது மாநில அளவில் தொல்பொருள் ஆராய்ச்சி இருக்கிற காரணத்தால், அதைக் காப்பாற்ற முடியும் என்று சொல்லப்பட்டது. சில இடங்களில் மாநில அரசு காப்பாற்றி வருகிறது. சில முக்கியமான இடங்களில் மத்திய அரசு காப்பாற்றி வருகிறது. ஆகையால் இந்த இடத்தை மாநில அரசு காப்பாற்றக்கூடிய வகையில் விலக்கு அளிக்கவேண்டுமென்று எழுதினேன். இப்பொழுது மத்திய கல்வி அமைச்சராக இருக்கும் டாக்டர் திருகுணசென் அவர்கள் அதே பதிலைத்தான் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கோட்டைக்குள் இந்து கோவிலும், மசூதியும் இருக்கின்றன. அந்த கோவிலையும் கோட்டையிலுள்ள மசூதியையும் இந்த இரண்டையும் பாதுகாக்கும் பொறுப்பை அவர்களே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது 600 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. இருந்தாலும் 300 வருடங்களாக வழிபாடு நடக்கவில்லையாகையால் அதைப் புதுப்பிக்கக்கூடிய முறையில் மத்திய அரசின் பாதுக்காக்கப்படும் சின்னங்கள் பட்டியலிலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென்று மாநில அரசு எழுதியது. விலக்கு அளிப்பதற்கில்லை என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். மாநில அரசு அதற்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று, மாநில அளவிலே உள்ள தொல்பொருள் ஆராய்ச்சி நிலையம் அதைப் பாதுகாக்கும் என்று எழுதி இருக்கிறது. மத்திய அரசு தஞ்சைக் கோவிலையும், வேலூர் கோவிலையும் போதுமான அளவிற்குப் பாதுகாக்கவில்லை. மாநில அரசு எடுத்துக்கொள்வதற்கும் இணங்கவில்லை. எனவே இதுபற்றி மறுபடியும் எழுதவேண்டுமா என்பதுபற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** வேலூர் கோட்டையிலுள்ள கோவில், ஒரு கோவில் மட்டுமல்ல வரலாற்றுச் சின்னமாகவும் கருதப்படுகிறது. வரலாற்றுச் சின்னங்கள் அவை எவ்வாறு இருக்கின்றனவோ அதுபோலவே பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுதான் வழக்கம். அப்படியிருக்க அங்கே மறுபடியும் சிலை வைப்பது, பூஜை நடத்துவது முறையாகாது என்பதை சர்க்கார் அறியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஒரு சிலர் தங்களுடைய விருப்பத்தைத் தெரிவித்தார்கள். அந்த விருப்பம் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சையில் உள்ள கோவிலையும் இந்தக் கோவிலையும் இந்திய அரசின் தொல்பொருள் பாதுகாப்பு விதியிலிருந்து விலக்கு அளிக்க் வேண்டுமென்று எழுதியிருக்கிறது. இவைகள் இந்திய அரசின் கீழேதான் இருக்கின்றன. சில இடங்களில் மாநில அரசினாலும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதைப்போலவே வேலூர் கோவிலையும் தஞ்சைக் கோவிலையும் செய்யலாம் என்று சிபார்சு செய்ததற்கு மத்திய அரசு நான் சொன்ன காரணங்களைக் காட்டி எழுதியிருக்கிறார்கள். இப்போது சிலை வைக்கவேண்டுமென்றும்,* அக்டோபர் 15-ம் தேதிக்குள் வைக்காவிட்டால் நாங்களே வைப்போம் என்ற கருத்தை சிலர் தெரிவித்திருக்கிறார்கள். மாநில அரசு மத்திய அரசின் சட்டதிட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலைமையையும் கவனிக்கவேண்டியிருக்கிறது. மாநில அரசு கருத்து தெரிவித்ததற்குப் பிறகும் மத்திய அரசு இணங்காமல் இருக்கிறார்கள். மறுபடியும் அவர்களை இணங்கச் செய்ய வேண்டும்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** வேலூர் கோட்டை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னம் என்றாலும், மற்ற சின்னங்களைப் போல் மக்கள் அணி அணியாகப் போய்ப்பார்க்கிற நிலையை மத்திய அரசு





செய்யவில்லை. இது கோவிலாக பயன்படுத்துவதற்கோ, சரித்திரச் சின்னமாகப் பயன்படுத்துவதற்கோ மத்திய அரசு பொறுப்பு எடுக்காததால், அந்த இடத்தின் சரித்திரத்திற்கே இழுக்கு தரக்கூடிய முறையில் அது பாலைவனமாகக் காட்சி அளிக்கிறது. மக்கள் வழிபட விரும்புகிறார்கள் என்பது நமது அரசுக்குத் தெரியுமா ? அதை மத்திய அரசுக்கு நினைவுபடுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அவர்களுடைய கருத்தைத்தான் மாநில அரசு மத்தியஅரசுக்கு சிபார்சு செய்தது இந்த அரசு செய்யவேண்டியதைச் செய்தது. மத்திய அரசு அதற்கு இணங்கவில்லை. முறையாக மாநில அரசு பாதுகாக்கமுடியும் என்ற அளவிலே தங்களிடம் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலும் அந்த முயற்சியை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சிலை வைத்து பூஜை நடத்தினால் எந்தவிதமான மாச்சரியமும் ஏற்படாது என்று மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவர்களுடைய விருப்பத்தை தெரிவித்திருக்கிறோம். கோவிலுக்குப் பக்கத்தில் மசூதி இருக்கிறது. அதற்கு வழிபடக்கூடிய நிலையை ஏற்படுத்தினால் இதற்கும் கொடுக்க வேண்டியிருக்கும் என்ற ஐயப்பாட்டை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நேஷனல் இம்பார்டன்ஸ் என்ற முறையில் அட்வைசரி கமிட்டி அதை வேண்டாமென்று சொல்லியிருக்கிறது. இரண்டு தரப்பினரும் சுமுகமான முறையிலே ஒப்புக்கொண்டு வருவார்களேயானால் அவர்களுடைய நம்பிக்கைக்குத் தகுந்தபடி நடந்துகொள்ளலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சென்ற காலத்திலே மகாராஜாக்கள் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக ஆண்டவன் கோவிலை கட்டிக்கொண்டார்கள். இந்தக் கோட்டையையும் கோவிலையும் அப்படித்தான் கட்டியிருக்கிறார்கள். வேலூருக்குப் பக்கத்திலே விரிஞ்சிபுரம் என்ற கோவில். இதற்கும் அதற்கும் அண்டர் கிரௌண்ட், சுரங்கப்பாதை ஒன்று இன்றைக்கும் இருக்கிறது. அங்கே இருக்கும் கோவிலைப் புதுப்பிப்பதைவிட, மீண்டும் அந்தச் சுரங்கத்தை செப்பனிடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எந்த ஒரு சீர்திருத்தம் செய்வதாக இருந்தாலும் மத்திய அரசின் அனுமதியுடன்தான் செய்யவேண்டும். தஞ்சைக் கோவிலைப் பொறுத்தவரை நாங்கள் செய்கிறோம் என்று சொன்னபோது, அவர்கள் நாங்களேதான் செய்வோம், பணத்தைக் கொடுத்துவிடுங்கள் நாங்கள் செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அப்படி எந்தச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றாலும் மத்திய அரசின் அனுமதியோடு செய்யவேண்டும். கோவில்கள் எல்லாம் எதிரிகள் வந்தால் பதுங்கிக் கொள்வதற்காகக் கட்டப்பட்டதாக ஆதாரம் இல்லை. வைக்கப் பட்ட கோவில்கள் அரசர்களைப் பாதுகாப்பதற்கும் பயன்பட்டிருக்கின்றது. ஆனால் அதே நோக்கத்தில் கட்டப்படவில்லை.

**Dr. H. V. HANDE :** Sir, not having an idol and worship there has hurt the feelings of lakhs and lakhs of Hindus all over the country. It is the fundamental right of the Hindus to worship in temples as much as it is the fundamental right of the Muslims to worship in mosques and the Christians to worship in churches. In view of this, will the Government take very serious notice of the attitude of the Central Government and see that the installation

of idol and commencement of worship are done early and will the Government tell us when exactly worship will commence in the light of the discussion with the Centre ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலில் சொல்லியபடி இந்திய அரசாங்கம் அதனுடைய சட்டத்தின்கீழ் இதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. 300 ஆண்டுக் காலமாக வழிபாடு இல்லாமல் அது இருந்து வந்திருக்கிறது. அந்தக் கோவிலுக்குத்தான் இந்துக்கள் சென்று வழிபடவேண்டும் என்ற நிலை இல்லாமல் வேலூரில் இந்துக்களுக்கு பல கோவில்கள் இருப்பதாலும், அங்கு அவர்கள் சென்று வழிபாடு செய்துகொண்டிருப்பதாலும், அவர்களுக்கு அந்த உரிமை பாதிக்கப்படவில்லை என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு ஆஸ்திகப் பிரமுகரான திரு. கிருபானந்த வாரியார் அவர்கள், அந்தக் கோவில் பாதுகாப்புக்காக ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் நிதியைத் திரட்டி வைத்துக்கொண்டு, அந்தக் கோவிலைப் புதுப்பிக்கவேண்டும் என்ற ஆர்வத்தோடு இருக்கிறார்கள். ஆஸ்திக மக்களுடைய ஆர்வத்தைப் பூர்த்தி செய்ய தமிழக அரசு மேலும் துரிதமான நடவடிக்கை எடுக்குமா ? அந்தக் கோவிலில் நல்ல கலைச்சிறப்பு மிக்க சிற்பங்கள் இருப்பதால், அதைக் குறித்து தக்க விளம்பரம் செய்து, அந்தக் கோவிலை தமிழ் நாடு பூராவிலுமுள்ள மக்கள் வந்து பார்ப்பதற்கான மேல் நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, திரு. கிருபானந்தவாரியார் அவர்கள் தலைமையில் அமைந்த குழுவின் விண்ணப்பத்தின் பேரில், முன்பே மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு அவர்கள் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. அதற்குப் பிறகு, மறுபடியும் அவர்கள் மகசர்கள் கொடுத்தார்கள். அதன் பிறகு மறுபடியும் மத்திய அரசுக்கு எழுதப்பட்டது. மறுபடியும் அவர்களால் இணக்கம் தெரிவிக்கப்படவில்லை. வரலாற்றுச் சிறப்பும் கலைச் சிறப்பும் கொண்ட தொல்பொருள் ஆராய்ச்சிக் கூடமாக இருப்பதாலும், அதை பலரும், பல நாட்டாரும், பல மதத்தினரும் வந்து பார்ப்பதற்கு இருக்கிற காரணத்தாலும், அதை மாற்றுவதற்கில்லை என்று அவர்கள் இணக்கத்தைத் தர மீண்டும் மறுத்து வருகிறார்கள்.

**திரு. எஸ். முருகையன் :** இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க வேலூர் கோட்டையில் உள்ள கோவிலுக்கு ஒரு நாளைக்கு ஆயிரம் பேருக்குமேல் சென்று, கண்டு களித்துக்கொண்டு வருகிறார்கள், எல்லா மதத்தினரும் சென்று பார்க்கிறார்கள். ஏனென்றால், அது கலையழகு மிகவும் பொருந்தியதாக இருக்கிறது. அந்தக் கோவிலில் விக்ரகம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதற்குக் காரணமே அங்குள்ள ஒருசிலர் ஏராளமாகப் பணம் வசூல் செய்து, அதிலே ஏற்பட்ட தகராறு காரணமாகத்தான் உடனடியாக அங்கு சிலை நிறுவவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. எவ்வளவு பணம் வசூலித்திருக்கிறார்களோ அந்தப் பணத்தை உடனடியாக அரசாங்கம் கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அது பற்றிய பிரச்சினை இப்பொழுது எழவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, whereas North Arcot happens to be very famous for its wonders of the world and one such wonder is the temple without God and whereas instead of depending upon this kind of lifeless correspondence between the State and the Centre with their respective stand, the State requesting and the Centre not conceding our request, will the Minister take steps to invite the Central Minister for Education or whoever else the concerned Minister may be, to pay a visit and conduct a tour along



with the legislators who are interested in it and convince the Central Minister that it is desirable to instal the idol and thus allay the fears that are entertained by the Members of this House ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு கேள்விதான் போடலாம் என்பது முறை. தொடர்ந்து கேள்விகள் போட முடியாது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலே தெரிவித்தபடி, இந்த அரசு செய்யவேண்டிய பணிகளைச் செய்திருக்கிறது. மத்திய அரசுதான் முடிவு கட்ட வேண்டும். அந்தக் குழுவினர் மத்திய கல்வி அமைச்சரைச் சந்தித்து, அதைப் பார்வையிடவேண்டும் என்று அவர்கள் விரும்புவார்களானால், அதற்கான ஏற்பாட்டை மாநில அரசு செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடவுள் இல்லாத கோவில் என்பது ஒரு 'ஒண்டர்' ஆக இருக்கிறது' என்று சொன்னார்கள். அதுவே 'ஒன் ஆப் ஃதி ஒண்டர்ஸ் ஆஃப்தி ஒரல்டு' என்பதாக இருக்கும் என்று சொன்னார்கள். அந்த அதிசயத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாற்ற விரும்புகிறார்களா அல்லது அந்த அதிசயத்தை நிலைநாட்ட விரும்புகிறாரா என்று தெரியவில்லை. ஆகவே அது ஒரு அதிசயமாகவே இருக்க வேண்டுமென்றால், அதுவும் ஒரு அதிசயமாகக் கருதப்படும்.

**திரு. கே. சகாதேவக் கவுண்டர் :** கஜானாவில் பணம் செலுத்தப்படுவது ஒரு புறமிருக்க, மீண்டும் அந்தக் கோவிலைத் திறப்பது பற்றி மறுபடியும் முயற்சி செய்து, எப்படியும் அந்தக் கோவிலைத் திறப்பதற்கான வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, திரு. கிருபானந்த வாரியார் அவர்களால் ஒரு லட்ச ரூபாய்க்குமேல் நிதி சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அந்த நிதியை எப்படி வைத்துக்கொள்ளுவது, யார் வைத்துக் கொள்ளுவது என்பதெல்லாம் அந்தக் குழுவில்தான் முடிவு செய்து, அதை அவர்கள்தான் தக்க வகையில் செலவழிப்பார்கள். அந்தக் குழுவினருடைய விண்ணப்பம் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இரு முறை அனுப்பிவைக்கப்பட்டும், அவர்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை என்று முன்பே சொன்னேன். மத்திய கல்வி அமைச்சரை அந்தக் குழுவினர் சந்தித்து, தக்க முடிவு எடுத்துக்கொள்ளப்படுமானால், அதன்பேரில் இந்த அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க முன்வரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒத்திவைக்கப்பட்ட கேள்விகள் 88 முதல் 92 வரை இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்.

### *Mettur Dam*

* 88 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have decided to deplete the Mettur Dam to supply water for the purpose of irrigation ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விளைந்து வருகிற பயிர்களை இயன்ற அளவுக்குப் பாதுகாக்கும் பொருட்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரை 15—2—1968 முதல் 19—2—1968 வரை 22·05 அடியிலிருந்து 14·55 அடி மட்டத்திற்குக் குறைத்து விட்டு சுமார் 205·4 கோடி கன அடி நீர் விடப்பட்டது. காவேரி—வெண்ணாறு—கல்லணைக் கால்வாய் இவற்றிடையே முறைத்திட்டத்தை மேற்கொள்வதன் மூலம் நீர் விடப்பட்டது.

## அரசாங்க எஸ்டேட்டிலுள்ள வீடுகள்.

*** 89 வினா.—திரு. கரு. சீமைச்சாமி**
**திரு. கொளத்தூர் கோதண்டம்**
**திரு. ஏ. எம். ராஜா :** } மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மவுண்ட் ரோட்டில் உள்ள சர்க்கார் எஸ்டேட்டில் சர்க்கார் உத்தியோகம் பார்க்காதவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவா ?

(இ) ஆம் என்றால் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு, மு. கருணாநிதி :** (அ) சென்னை மவுண்ட் ரோட்டில் உள்ள அரசாங்க எஸ்டேட்டில் அரசாங்க உத்தியோகம் பார்க்காதவர்களுக்கு அதாவது பொதுமக்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கப்படுவதில்லை. ஆனால் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்காக 11 குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

(இ) இது பற்றிய பட்டியல் [a] சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு, கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, அக்காமடேஷன் கண்ட்ரோலர் மூலம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படுவதில்லை. ஆகவே, அரசினர் தோட்டத்தில் உள்ள கோஷன் பிளாக்கிலும், பாண்டு லேன்ஸிலும் உள்ள வீடுகளாவது இனிமேல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுமா ? அந்த இரண்டு பகுதிகளும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கென்றே ஒதுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிற 11 குடியிருப்புகள்தான் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பவை. மேலாக எதுவும் யோசிப்பதற்கில்லை.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, இன்று நகரத்தில் வீட்டு வாடகை உயர்ந்திருக்கிறது. அந்த அளவிற்கு கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்கும் வீடுகளுக்கும் வாடகை உயர்த்தப்பட்டிருக்கின்றதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தாங்க முடியாத அளவுக்கு எதுவும் வாடகை உயர்த்தப்படவில்லை.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்த அடிப்படையில் கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன ? அதற்கு என்ன யோக்கியதாம்சங்கள் ருக்க வேண்டும் என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. இதற்கென்று தனி யோக்கியதாம்சங்கள் தேவை இல்லை. தகுதி என்கிற அளவில் பார்ப்பதானால், அவர்கள் அநேகமாக சென்னையிலேயே தங்கி அலுவல்கள் பார்ப்பவர்களாக இருப்பார்களானால், அப்படிப்பட்டவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படுகின்றன.

**திரு. மு. ச. சிவசாமி :** முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எவருக்காவது கோஷன் ப்ளாக்கில் கிச்சன் பகுதியில் இடம் இன்னும் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இரண்டு பேருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே திருமதி ருக்மணி அம்மாள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் திரு. வரதராஜுலு நாயுடு அவர்களின் துணைவியார் ஆவார்கள். ஆகவே, அவர்கள் வாழ்க்கைக்காலம் முழுவதுமோ அல்லது அவர்கள் விரும்புகிற காலம் வரையிலுமோ அந்த இடத்தில் அவர்கள் குடியிருக்கலாம் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. திரு. ராஜாராம் நாயுடு, எம். எல். சி. அவர்களுக்கு 31—12—1968 வரையில் குடியிருக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

[a] 174-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



## பொட்டப்பட்டிக்கு அண்மையில் அணைக்கட்டு

***90 வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பொட்டப்பட்டிக்கு அண்மையில் அணை கட்டும் திட்டம் தீட்டப்பெற்றது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதுவரை அரசாங்கம் அவ்வணை கட்டும் திட்டத்தை நிறைவேற்றாததற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) இச் செயற்குறிப்பு குறித்து தொடக்க ஆய்வு நடத்தப்பட்டது.

(இ) கீழ்க்கண்ட காரணங்களால் இச்செயற்குறிப்பு குறித்து மேலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(1) ஆற்றின் கீழ் உள்ள 10,535 ஏக்கருக்குப் பாசனமளிக்க 210·7 கோடி கன அடி நீர் தேவையாயிருக்க, அடி நிலப்பகுதியில் சராசரி 124·8 கோடி கன அடி நீர் மட்டும் கிடைக்கிறது. தற்போதைய பாசனத்துக்குக்கூட நீர் பற்றாக்குறையாக இருப்பதால், புதிய பரப்பளவிற்குப் பாசன வசதியளிப்பதென்பது இயலாத செயலாகும். (2) மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் சாலை 3 பர்லாங்குத் தொலைவிற்குப் பாதிக்கப்படும். எனவே, அச்சாலையை வேறு திசையில் திருப்பிவிட வேண்டும். (3) விலை மதிப்புள்ள 868 ஏக்கர் தென்னை, மா, புளியந்தோப்புகள் நீரில் மூழ்கிவிடும். அவற்றைக் கையகப்படுத்த வேண்டும். (4) லக்கரைப்பட்டி என்ற ஒரு சிற்றூரும், அடுத்துள்ள பல ஏரிகளும் நீர்த்தேக்கத்தால் மூழ்கடிக்கப்பட்டு விடும். (5) கீழ்ப்பகுதி குடியானவர்களும் இச் செயற்குறிப்புக்கு மறுப்பு தெரிவிக்கிறார்கள்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு 1961-இல் ஆய்வு செய்யப்பட்டது. அமைச்சர் அவர்கள் பல காரணங்களைத் தந்தார்கள். என்றாலும் இந்தத் திட்டத்தினால் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் சில பகுதிகள் நன்மை பெறும் என்று கருதுவதால், மீண்டும் மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினருடைய கேள்விக்கு ஆதரவாக, தொடக்க ஆய்வு என்றுதான் தரப்பட்டிருக்கிறது. மீண்டும் ஆய்வு நடத்த வசதி இருக்கிறது. ஆகவே, இதுபற்றி மீண்டும் புனராலோசனை செய்யப்படும்.

## *Nagapattinam-Tuticorin Express Buses*

* 91 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the express buses are run between Nagapattinam and Tuticorin by the Government State Transport Department ;

(*b*) if so, from what date ; and

(*c*) the fare charged and how it compares with those charged by private operators ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) 10—8—1967 முதற்கொண்டு.

(உ) ஒரு கல் தொலைவிற்கு 5 காசு வீதம் கட்டணம் விதித்து வசூலிக்கப்படுகிறது. இந்த வழித்தடத்தின் முழுப் பயணக் கட்டணம் ரூ. 12·10. இந்த வழித்தடம் முழுவதிலும் தனியார் பேருந்து எதும் ஓட்டப்படுவதில்லை. எனவே, இருவகைப் பேருந்துகளுக்கும் கட்டண விவரம் ஒப்பிட்டுக் கூறுவதற்கு இடமில்லை.

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, இந்த வழித்தடத்தில் தனியார் துறையில் விரைவுப் பேருந்து ஓட்டுவதில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியில்லையென்றாலும்கூட, மத்தியிலே நின்று, மாறி மாறிப் போகின்ற பஸ்களின் கட்டணங்களை ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தாலும் நம்முடைய கட்டணம் அதிகமாக இருக்கிறது அல்லவா ? அதைக் குறைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிச் சேர்த்துப் பார்த்தாலும் நம்முடைய கட்டணம் குறைவுதான் . தனியார் துறையினர் ஒரு கிலோவுக்கு 3 காசு வசூலிக்கிறார்கள். நம்முடைய விரைவுப் பேருந்து வண்டிகளில் ஒரு கல் தொலைவிற்கு 5 காசு வசூலிக்கப்படுகிறது. எனவே, இரண்டும் சமமாகத்தான் இருக்கும்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, தற்போது நாகப்பட்டினத்திலிருந்து புறப்படும் பஸ் நாகூரிலிருந்து புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து உத்திரவிடுமா ? நாகூரும் முனிசிபல் பகுதியைச் சேர்ந்ததுதான்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாகப்பட்டினத்திலுள்ளவர்கள் இந்த யோசனைக்கு மறுப்பு அளிக்க மாட்டார்கள் என்று கனம் உறுப்பினர் அவர்கள் உறுதியளிப்பார்களானால் அதுபற்றி கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நாகப்பட்டினத்திற்கும் தூத்துக்குடிக்கும் இடையில் ஓடும் பஸ்ஸைப்பற்றியது இந்த வினா. உறுப்பினர்கள் அதையொட்டி கேள்விகள் கேட்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்திற்கும் தூத்துக்குடிக்கும் இடையில் ஓடும் எக்ஸ்பிரஸ் பஸ்களை அதிராம்பட்டினம் வழியாக விட வேண்டுமென்று பொதுமக்கள் விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறார்களே, அதுபற்றி அரசாங்கத்தின் முடிவு என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தற்போது அந்த எக்ஸ்பிரஸ் பஸ்கள் ஓடும் தூரம் 242 மைல்களாக இருக்கின்றன. இன்னும் அதிகமாகச் சுற்றிக்கொண்டு போக வேண்டுமென்று சொன்னால், " விரைவு வண்டி " என்ற பெயரையே அது இழந்துவிடக்கூடும்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, தூத்துக்குடிக்கும் வேலூருக்கும் ஏதாவது பஸ் விட வேண்டுமென்ற உத்தேசம் உண்டா ? விரைவு வண்டிகளில் பஸ் புறப்படும் நேரம் வரை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று தனி இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்று அரசு உத்திரவிட்டிருக்கிறதா ? தற்போது வேலூரிலிருந்து மதுரைக்குச் செல்லும் பஸ்ஸை தூத்துக்குடி வரையில் விஸ்தரிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தற்போது அதுபற்றிய திட்டம் ஒன்றும் இல்லை.



## திருநெல்வேலி-கன்னியாகுமரி சாலை

*** 92 வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கன்னியாகுமரி நெடுஞ்சாலையை அகலப்படுத்தி சிமெண்ட் ரோடு போடுவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவ்வித செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி, கன்னியாகுமரி, நாகர்கோயில் ரோடுகளில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் ஓடுகின்ற சில பகுதிகளில் மிகவும் ஆபத்தான வளைவுகள் இருப்பதால், அரசினர் அதைச் சீர்படுத்தி நேர்வழியாகச் செய்யும் திட்டம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேள்வி திருநெல்வேலி—கன்னியாகுமரி நெடுஞ்சாலையை அகலப்படுத்தி, சிமெண்ட் கான்க்ரீட் போடுவதைப் பற்றியது. ரோடுகளில் சில பகுதிகளில் ஆபத்தான வளைவுகள் இருக்கின்றன என்று உறுப்பினர் கூறினார். வளைவாக இருக்கின்ற பகுதிகளைச் சீர்படுத்தி, நேர்வழியாக மாற்ற இடையிலுள்ள சில நிலச் சொந்தக்காரர்களின் அனுமதி தேவை. நிலச்சொந்தக்காரர்களின் அனுமதி கிடைத்தால், அதையெல்லாம் ஆராய்ந்து கனம் உறுப்பினர் கூறிய யோசனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**Dr. H. V. HANDE :** Sir, does this not come under National Highway 7—from Madras to Kanyakumari—and if so, does this Government get some funds from the Centre for maintaining this road and what are the steps taken by this Government to properly maintain this road because there are a number of patches and potholes here and there. So, will this Government in consultation with the Central Government see that it is properly maintained because it is a National Highway ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தச் சாலைகளுக்கான பராமரிப்புச் செலவுகளைப் பொறுத்து இந்த அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. சிமெண்ட் கான்க்ரீட் ரோடுகள் அமைப்பது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதன்மை ஸ்தானம் பெறவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இதற்கு முதன்மை ஸ்தானம் அளிக்கப்படவில்லை. நெடுஞ்சாலைகளைப் பொறுத்த வரையில் மத்திய அரசு, மாநில அரசு ஒரு முறையான கொள்கையை வகுத்திருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, தூத்துக்குடி ஒரு பெரிய துறைமுகமாக விஸ்தரிக்கப்படுகின்ற காரணத்தினால், இந்தச் சாலையை விஸ்தரிக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுமா ? அதற்கான வழிவகை இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய அபிப்பிராயத்தை அடிப்படையாக வைத்து இந்த அரசு தூத்துக்குடி துறைமுகத்தைச் சுற்றியுள்ள சாலைகளை விரிவுபடுத்துவதன் அவசியத்தை மத்திய அரசுக்கு தெரியப்படுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது வினாக்கள் 121, 122, 123, 124 தள்ளிவைக்கப்படுகின்றன.

### மாலை நேர சட்ட வகுப்புக்கு விரிவுரையாளர்கள்

* 125 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சட்டக்கல்லூரியில் முறையான வகுப்புகளில் கற்பிக்கும் விரிவுரையாளர்கள், மாலை நேரப் படிப்பிற்கும் வகுப்புக்கள் எடுக்கின்றனரா?

(இ) அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) சட்டப் படிப்பு மாலை வகுப்புகள் தற்காலிகத் திட்டத்தின் கீழ் நடத்தப்படுகின்றன. எனவே, முறையான அடிப்படையில் அவற்றிற்கென விரிவுரையாளர்களை நியமிப்பது தேவையில்லையெனக் கருதப்படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியில் மாலை நேரப் படிப்புக்காக எத்தனை விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் ? அவர்களுக்கு அதிக அளவில் ஊதியம் கொடுக்கப்படுகிறதா ? முறையான வகுப்புகளை அவர்கள் எடுப்பதால், மாலை நேர வகுப்புகளின்போது அவர்களுடைய சிரத்தை குறையும் அல்லவா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த மாலை நேர வகுப்புகளில் அவர்களுடைய கவனம் குறையாது என்ற காரணத்தினால்தான் அவர்கள் மாலை நேர வகுப்புகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அந்த வகையில் பரிசீலனைகள் நடைபெற்றன. பி.ஜி. எல். கோர்ஸ் இந்த ஆண்டில் தொடங்கப்படுகிற காரணத்தினால் மாலை நேர வகுப்புகளுக்குத் தனியாக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. மாலைநேர வகுப்புகளை நிரந்தரமாக ஆக்கும் சமயத்தில் தனியாக நியமிப்பது பற்றி கவனத்தில் கொள்ளப்படும். தற்போது மாலை நேரக் கல்லூரி ஒரு பரீட்சார்த்த அடிப்படையில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கல்லூரியிலே உள்ள விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் இசைந்து, மாலை நேர வகுப்புகளில் சொல்லிக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். இதனால் பகல் நேர வகுப்புகளுக்கு எந்தவிதமான குறைபாடும் ஏற்படவில்லை.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** தலைவர் அவர்களே, மாலை நேரக் கல்லூரியில் உள்ள விரிவுரையாளர்களில் முழு நேர விரிவுரையாளர்கள் எத்தனை பேர் ? பகுதி நேர விரிவுரையாளர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 2 பேர் முழு நேர பேராசிரியர்களாகவும், 3 பேர் பகுதிநேர பேராசிரியர்களாகவும் பணியாற்றுகிறார்கள். 2 பகுதி நேர விரிவுரையாளர்களும் பணியாற்றுகிறார்கள் முழுநேரம் பணியாற்றுபவருக்கு 225 ரூபாய் தனி ஊதியம் தரப்படுகிறது. பகுதிநேர பணியாளருக்கு 150 ரூபாய் தனி ஊதியம் தரப்படுகிறது.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, மாலை நேர வகுப்பில் மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிப்பதால், இவர்களுக்கு தனியாக விரிவுரையாளர்களையும் பேராசிரியர்களையும் நியமிப்பதில் அரசுக்கு எந்தவிதமான சங்கடமாவது இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இது சங்கடத்தைப் பொறுத்தது அல்ல. இருக்கிற நிலைமையைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று தான் தற்காலிகமாக மாலை நேர கல்லூரி வைக்கப்பட்டிருக்கிறது. இது நிரந்தரமாக ஆக்கப்படும் நிலையில் இதுபற்றி யோசிக்கப்படும்.

**திரு எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியில் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் பகலிலே பணியாற்றிவிட்டு, மாலை நேர வகுப்புகளிலே பணியாற்றினால் அவர்களுக்கு ஓவர்டைம் வேஜஸ் கொடுக்கப்படுமா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியிலே அவர்களுக்கு இருக்கின்ற நேரம் மற்றக் கல்லூரிகளோடு ஒப்பிட்டு வரையறை செய்யப்பட்டிருக்கிறது. 15 மாத காலத்திற்கு வாரத்திற்கு 2 பீரியேடுகள் வீதம் வகுப்புகள் எடுக்கும் விரிவுரையாளர்களுக்கு தனி ஊதியமாக 150 ரூபாயும், 15 மாத காலத்திற்கு வாரத்திற்கு 4 பீரியேடுகள் வீதம் வகுப்புகள் எடுக்கும் விரிவுரையாளர்களுக்கு தனி ஊதியமாக ரூ. 225-ம் அளிக்கப்படுகிறது.

Thiru K. VINAYAKAM: Apart from having these post diploma courses which have been Introduced recently, will the Government take steps to introduce research courses in law like M. L. in Civil and Criminal law in the Law College, Madras ? At present in the University, there is post-graduate teaching for M. L. only in the subject of international law ? There is no scope for civil and criminal law teaching there. Will the Government therefore introduce these course in Law College ? மு.ப. 9-30

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்பேர்ப்பட்ட முயற்சி இருக்கிறதா என்ற விவரக் குறிப்பு இல்லை. கனம் உறுப்பினர் சொன்ன கருத்தை அடிப்படையாக வைத்து விவரங்களை ஆராய விரும்புகிறேன்.

Thiru B. VENKATASAMI: May I know the number of candidates studying in the first and second year law course in the evening classes ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனிக் கேள்வி போட வேண்டும்.

Dr. H. V. HANDE: The Principal of this college is getting Rs. 200 extra for looking after the evening classes. But it is the lecturers who have to teach and look after the work and not the Principal. In view of that and in view of the fact that there is great demand and rush for these evening courses and in view of the fact that there is an impression among students that evening courses are given a step-motherly treatment, will the Government see that these lecturers are paid something extra so that they can take more interest and the students will also have the comfort that they are looked after well ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாலைக் கல்லூரியை நிர்வகிக்கின்ற முதல்வருக்கு 200 ரூபாய் கொடுக்கப்படுகிறது. மற்ற லெச்சரர்களுக்குக் கொடுப்பதுபற்றி எந்தக் கோரிக்கையும் அவர்களிடத்தில் இருந்து வரவில்லை. ஏதேனும் வருமானால் அதுபற்றி ஆராயப்படும்.

### கீழ்த்திசைக் கல்லூரி, பூம்புகார்.

*126 வினா.—**திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, பூம்புகார் நகரில் நடந்துவரும் கீழ்த்திசைக் கல்லூரியில் 1966-67-ம் ஆண்டு வரவு—செலவுக் கணக்குகள் அரசாங்கத் துறையின் மூலம் தணிக்கை செய்யப்பட்டுள்ளதா ?

(இ) 1967-68-ம் ஆண்டில் செப்டம்பர் மாத முடிவு வரை அந்தக் கல்லூரியின் மொத்த வரவு—செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை. மேலையூர் பூம்புகாரிலுள்ள இந்தியக் கீழ்த்திசைக் கல்லூரியின் 1966-67-ம் ஆண்டின் கணக்குகள் தனிப்பட்ட தணிக்கையாளர் ஒருவரால் தணிக்கை செய்யப்பட்டன.

(இ) 1967–68-ம் ஆண்டு செப்டம்பர் வரை இக் கல்லூரியின் மொத்த வரவு செலவு விவரங்கள் வருமாறு :—

| | ரூபாய். |
|---|---|
| வரவு .. .. .. | 2,38,894·51 |
| செலவு .. .. | 63,324·82 |

**திரு கொ. இர. ஞானசம்பந்தன் :** அங்கு பணிபுரியும் டீச்சிங் ஸ்டாப்புகளுக்கு சம்பளம் தரப்படவில்லை என்பது போன்ற பல புகார்கள் தெரிவிக்கப்படுகிறதே, அவை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் இல்லை. குறைபாடுகள் எழுதப்பட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

**திரு. மு. ச. சிவசாமி :** கீழ்திசைக் கல்லூரியில் கற்றுக் கொடுக்கிற பாட திட்டங்களின் விவரம் என்ன என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. எஸ். கணேசன் :** கிழ்த்திசைக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெறுகிற மாணவர்களுக்கு எதிர்காலத்தில் எந்த விதமான வேலை வாய்ப்பும் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அதைக் கலைக் கல்லூரியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறதா, அதை அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தக் கல்லூரி அண்மையில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் படித்துப் பட்டம் பெற்று மாணவர்கள் வெளியே வந்து வேலை கிடைக்கிறதா, இல்லை திண்டாடும் நிலை இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. இருந்தும் இதில் கலைக் கல்லூரியும் சேர்க்கப்படவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. இந்தக் கல்லூரிக்கு உதவி செய்கிற தேவாலயங்கள், மடங்கள் இங்கிருந்தும் இதற்கு உதவி தருவதாக வாக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதை அறநிலைய பாதுகாப்பு ஆணையாளர் பரிசீலித்து வருகிறார். அதற்கு வழிவகை இருக்குமானால் முடிவு எடுக்கப்படும்.

### பள்ளம்பாறையில் சிமெண்டு தொழிற்சாலை.

***127 வினு.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள சாத்தான்குளம் அருகில் பள்ளம் பாறை கிராமப் பகுதியில் சிமெண்ட் தயாரிப்புக்கான மூலப் பொருள்கள் ஏராளமாக இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(உ) அங்கே ஒரு சிமெண்ட் ஆலை நிறுவும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) நெல்லை மாவட்டத்தில் நாங்குனேரி தாலுகாவிலுள்ள பள்ளம்பாறை சாத்தான் குளம் ஆகிய பிரதேசங்களில் ஏராளமான கங்கார் ரக சுண்ணும்புக் கற்படிவங்கள் இருக்கின்றன. அவற்றின் அளவு 7·7 மில்லியன் டன்கள் என மதிப்பிடப்படுகிறது. அரசாங்க புவி அமைப்பு இயல் ஆராய்ச்சி இலாகா செய்த பரிசோதனைகள் மூலம் இவை குறைந்த பட்ச சுண்ணும்புச் சத்தும் அதிகப் பட்ச மணற்கலப்பும் கொண்டவை எனத் தெரிகிறது. இவை சிமெண்ட் செய்ய ஏற்றவையல்ல.

(உ) அதுமாதிரி உத்தேசம் எதுவும் இல்லை.



**திரு. டி. மார்டின் :** திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகு இந்த ஆராய்ச்சியை நடத்தினார்களா ? அதற்கு முன்பே நடத்தப் பட்ட ஆராய்ச்சியை வைத்து இந்தப் பதிலைக் கூறினார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆராய்ச்சி என்பது நீண்ட நெடுங்காலமாக நடைபெற்று வருவது. புதையியல் ஆராய்ச்சி நீண்ட நெடுங்காலமாக பிரிட்டிஷ் காலத்தில் இருந்து நடைபெற்று வருகிறது. அந்தப் பகுதியில் சுண்ணும்புக்கல் கிடைத்தாலும், அதில் மணற்சத்து அதிகமாக இருப்பதனால் அதை வைத்து சிமெண்டு செய்கிற தொழிற்சாலையைத் துவக்க முடியாது என்பதான ஆராய்ச்சி முன்பு இருந்தே செய்யப் பட்டு வந்திருப்பதுதான். அரசியல் வாதிகள் ஆராய்ச்சி செய்ய முடியாது. ஆராய்ச்சி வல்லுநர்கள்தான் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** சிமெண்டு தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருள்கள் தமிழ்நாட்டில் எந்த எந்த இடங்களில் கிடைக்கிறது என்கிற ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா ? எந்த எந்த இடங்களில் கிடைக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது 7 இடங்களிலே பெரிய அளவில் சிமெண்டுத் தொழிற்சாலைக்குத் தேவையான அளவு சுண்ணும்புக் கற்கள் கிடைக்கின்றன. திருநெல்வேலியில் சங்கரிநகர், சேலத்தில் சங்கரிதுர்க்கம், திருச்சியில் டால்மியாபுரம், கோயம்பத்தூரில் மதுக்கரை, இராமநாதபுரத்தில் ராஜபாளையம், திருச்சி கரூர் பக்கத்தில் இருக்கிற பகுதி, இராமநாதபுரத்தைச் சேர்ந்த சோழபுரம் முதலியன. இவை தவிர சிறிய அளவில் கிடைக்கிற 9 இடங்களில் சிறிய சிமெண்டு தொழிற்சாலை வைக்கலாம் என்று அறியப்பட்டிருக்கிறது. நான்கு இடங்களில் வைக்க முயற்சியும் எடுக்கப்பட்டிருக்கிறது.

61448

**திரு. பெ. சீனிவாசன் :** சிமெண்டு தொழிற்சாலை ஆரம்பிக்கிறபோது அந்தப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்படாதிருக்க அரசாங்கம் கவனம் செலுத்துகிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சிமெண்டு தொழிற்சாலை அமைகிற இடம் பெரும்பாலும் பாறையும், கரடுமாக உள்ள சுண்ணும்புக்கல் கிடைக்கிற பகுதிதான். அங்கே போய்ப் பார்த்தால், பாறைகளை வெட்டி சுரங்கமாக அமைத்து சுண்ணும்புக் கல் எடுப்பதைப் பார்க்கலாம். இதுபோன்ற பாறைப் பகுதிகளில், கரடுமுரடான பகுதிகளில் விவசாயம் நடப்பதாகத் தெரியவில்லை. ஆகவே பா[illegible].

**திரு. கே. போஜன் :** தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் சிமெண்டு தொழிற்சாலைகள் மொத்தம் எவ்வளவு டன் உற்பத்தியாகின்றது என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** திருநெல்வேலி சங்கரி நகரில் 4,62,680 டன்கள். சேலம் சங்கரிதுர்க்கத்தில் 3,67,620 டன்கள், திருச்சி டால்மியாபுரத்தில் 4,41,960 டன்கள். கோயம்புத்தூர் மதுக்கரையில் 4,01,910 டன்கள். இராமநாதபுரம் ராஜபாளையத்தில் 1,97,510 டன்கள். கரூருக்குப் பக்கத்தில் உள்ள பகுதியில் 4 லட்சம் டன்கள். இப்போது அரசினர் சார்பாக சோழபுரத்தில் ஆரம்பிக்க இருக்கிற இடத்தில் 4 லட்சம் டன்கள் திறனுடையதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இந்த வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

### ஆசிரியர்களின் ஒய்வூதிய விதிகள்.

***128 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார் பாடசாலைகளில் வேலை செய்யும் உபாத்தியாயர்களுக்கும் ஸ்தல ஸ்தாபன பாடசாலைகளில் வேலை செய்யும் உபாத்தியாயர்களுக்கும் பென்ஷன் கொடுக்கும் விஷயத்தில் கடைப்பிடிக்கும் விதிகளில் வேறுபாடு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சர்க்கார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், தமிழக விரிவாக்கப்பட்ட ஒய்வூதிய விதிகள் (1960), தமிழக குடும்ப ஒய்வூதிய விதிகள் (1964) இவைகளுக்கு உட்பட்வர்களாவார்கள். ஆனுல் ஸ்தல ஸ்தாபன பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களோ, தமிழக ஆசிரியர்களின் பிற்கால சேமிப்பு நிதி — இன்ஷூரன்ஸ்—ஒய்வூதிய விதி (1958) களுக்கு உட்படுகிருர்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், ஒரே கல்வி, ஒரே தகுதி, ஒரே திறமை அப்பேர்ப்பட்ட ஆசிரியர்களுக்கு ஒய்வு பெறக்கூடிய நேரத்திலே இப்படி மாறுபட்ட தன்மையிலே ஒய்வூதியம் கொடுப்பதற்குச் சட்டம் இருக்கின்ற நிலைமை பாகுபடுத்தக்கூடிய நிலைமையல்லவா ? ஆகவே பாகுபடுத்தாத தன்மையிலே சர்க்கார் பள்ளிகளிலே பணியாற்றுகிறவர்களாக இருந்தாலும், ஸ்தல ஸ்தாபன பள்ளிகளிலே பணியாற்றுகிறவர்களாக இருந்தாலும், தனியார் துறையிலே ஈடுபட்டிருக்கின்றவர்களாக இருந்தாலும், எல்லோருக்கும் ஒரே மாதிரியாகக் கொடுப்பதற்குச் சட்டத்தைத் திருத்தியமைக்க சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஒரே கல்வி, ஒரே தகுதி, ஒரே திறமை இருந்தாலும்கூட, அவர்கள் தனித்தனி நிர்வாகத்தின் கீழேயும், தனித்தனி விதிமுறைகளின் கீழேயும் வேலைக்கு அமர்த்தப்பட்டு இருக்கிருர்கள். அரசாங்கப் பள்ளிகளிலே பணியாற்றுகின்றவர்களுக்கு சிலபல விதிமுறைகளும், ஸ்தல ஸ்தாபனப் பள்ளிகளிலே பணியாற்றுகின்றவர்களுக்கு சில பல விதிமுறைகளும் அதே போல தனியார் துறையில் உள்ளவர்களுக்கு தனியாகவும் இருந்து வருகிறது. சர்க்கார் பள்ளிகளையும் ஸ்தல ஸ்தாபன பள்ளிகளையும் ஒன்ருக இணைக்கக் கூடிய நிலைமை ஏற்படுகின்ற நிலைமை பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. இண்டக்ரேஷன் புகுத்தப்படுகின்ற நிலைமை இருக்கிற காரணத்தால் அப்பொழுது இவைபற்றி யெல்லாம் பரிசீலனை செய்யலாம். அதைச் செய்து விட்டதற்குப் பிறகு தனியார் துறையிலே உள்ளவர்களுக்கு என்ன என்ன செய்யலாம் என்பதைப் பற்றி மெள்ள மெள்ள யோசிக்கலாம். அதற்கு முன்பு இந்த இண்டக்ரேஷன் பணியை முடித்துக்கொண்டு, பிறகு அதைப் பற்றி எப்படி ஒரே சீராக அமைக்கலாம் என்பது பற்றி யோசிக்கலாம்.

**திரு. வை. சுவாமிநாதன் :** அரசாங்கப் பள்ளிகளிலே உள்ளவர்களுடைய ஒய்வு பெறுகின்ற வயதும், மேனேஜ்மெண்ட் பள்ளிகளிலே வேலை பார்க்கின்றவர்களுடைய ஒய்வு பெறுகின்ற வயதும் வேறுபடுகிறது. அதை ஒரே மாதிரியாக்க சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அரசாங்கப் பள்ளிகளிலே உள்ளவர்களுக்கு ஒய்வுபெறும் வயது 58 ஆக இருக்கிறது ; தனியார் பள்ளிகளிலே உள்ளவர்களுடைய ஒய்வுபெறும் வயது 60 ஆக இருக்கிறது. சிலர் 60 வயதை 58 ஆக ஆக்கவேண்டுமென்பதற்கு விருப்பம் தெரிவிக்க மறுக்கிருர்கள், 58 வயதை 60 ஆக உயர்த்த வேண்டுமென்று சொல்கின்றபொழுது சிலர் வரவேற்கிருர்கள். ஆனுல் அதையே புதிதாக ஆசிரியர்களாக வருகிறவர்கள் விரும்பவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்து வருகின்றன. அதனுல்தான் வயதைப் பற்றி எந்த விதமான மாற்றமும் இப்பொழுது செய்வதற்கில்லை.

**திருமதி. கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, ஸ்தல ஸ்தாபன பள்ளிகளிலே, குறிப்பாக ஆரம்பப் பள்ளிகளிலே 20, 30, 40 வருடங்கள் வரை பணியாற்றிவிட்டு ஒய்வு பெறுகின்றபொழுது பெறுகின்ற தொகை 20 ரூபாய் என்ற அளவிலே இருப்பதால் அதை வைத்துக் கொண்டு அவர்கள் கஷ்டப்படுகின்ற நிலைமை இருக்கிறது. இன்றைக்குள்ள விலைவாசிகளுக்குத் தகுந்தாற்போல் அவர்களுக்கு அதிகமாகக் கொடுக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஒய்வூதியம் 6, 7, 8 என்ற அளவிலேதான் பெற்றுக்கொண் டிருந்தார்கள். இப்பொழுது 20 ரூபாயாவது குறைந்தபட்சம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான்



கொடுக்கப்பட்டு வருகிறது. தனியார் பள்ளிகளிலே அப்படிச் செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. ரொம்பவும் முடியாதவர்களாக இருந்தால், அவர்களுக்காக நிதி திரட்டி, அவர்களைக் காப்பாற்ற யாருமே இல்லையென்ருல் அவர்களுடைய குடும்ப நிலைமையைப் பார்த்து அவர்களுக்கு ரூ. 50, 60 என்ற வகையிலே அளிக்கலாம் என்ற முறையிலே அதற்காக விண்ணப்பங்கள் வந்து 16, 17 லட்ச ரூபாய் வரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக மாநில அளவிலே ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. ரூ. 20 அளவிலே காலந்தள்ள முடியாதவர்கள் இருக்கிருர்கள் என்ருல் அவர்கள் இதற்காக விண்ணப்பங்கள் செய்யலாம். அவர்களுக்குக் கொடுக்கலாம், ஆனுல் எல்லோருக்கும் உயர்த்துகின்ற யோசனை இப்பொழுது இல்லை.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** இப்பொழுது அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு இலவச மருத்துவ உதவி இருக்கிறது, ஆனுல் தனியார் பள்ளிகளிலே உள்ளவர்களுக்கு இல்லையே, இந்த வேறுபாடு நீக்கப்படுமா

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த விண்ணப்பத்தை அவர்கள் கொடுத்திருக்கிருர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி நிலைமையைப் பொறுத்து அது கவனிக்கப்படும் என்று கூறியிருக்கிருர்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, தனியார் துறையிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் ஸ்தல ஸ்தாபன பள்ளிகளிலே பணியாற்றக் கூடிய நிலைமை ஏற்பட்டால் அவர்கள் முன்னுலே செய்த சர்வீஸையும் சேர்த்துக்கொள்ளக் கூடிய முறையில் இல்லாததால் அவர்கள் பாதிக்கப்படுகிருர்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்து அதை மாற்றியமைக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அது விலகிச் செல்லுகின்ற இடத்திலிருந்து அவர்கள் விருப்பப்படி விலகி, ஏற்றுக்கொள்ளக் கூடிய இடத்திலும் அவர்களின் விருப்பப்படி ஏற்றுக்கொள்வார்களானுல் அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்று அண்மையிலே விதிமுறைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனுல் ராஜிநாமா செய்துவிட்டு அவர்கள் விரும்புகிறபடி வேறு பள்ளியிலே சேர்ந்து கொண்டால் அப்படி முடியாது. விலகிச் செல்கின்ற இடத்திலும் அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் விலகி, சேருகின்ற இடத்திலும் அவர்களுடைய இணக்கத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்டால் அவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

**திரு. எஸ். அக்னிராசு :** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலே வேலை பார்த்து பிறகு அரசாங்கப் பள்ளிகளிலே வேலை பார்த்து ஒய்வு பெறும் ஆசிரியர்களுக்கு பென்ஷன் சரியாக வழங்கப்படவில்லை என்று புகார்கள் இருக்கின்றன. ஆகவே அவர்களுக்கு இவ்வளவு பென்ஷன் வழங்க வேண்டுமென்று உத்திரவிட ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு எவ்வளவு பென்ஷன் வழங்க வேண்டுமென்று வரையறை செய்வதில் சில பல சங்கடங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஆசிரியர்கள் அதுபற்றி விண்ணப்பம் செய்தால் நியாயமான அளவுக்கு ஒய்வூதியம் தருவதற்கு முயற்சி எடுப்பார்கள்.

THIRU K. VINAYAKAM : Usually the pension drawn by the teachers depends upon the salary which they draw and whereas these teachers are employed by different agencies—Government, local bodies and private management—and whereas the salaries given to them by the respective employers vary, will the Government make the scales of pay uniform irrespective of the agency which employs them so that the pension drawn by them could also be uniform ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே' ஏறத்தாழ சம்பளத்தைப் பொறுத்த வரையில் எந்தத் துறையிலே இருக்கிறவர்களாக இருந்தாலும் விகிதம் அரசாங்கத்தினுடைய அளவிலே தான் வைக்கப்பட்டு இருக்கிறது. சில பேர்களுக்கு பிராவிடல்ட் பண்ட் இன்ஷூரன்ஸ் திட்டம், ஓய்வுகால ஊதியம் இவை யெல்லாம் தனித்தனியாக இருக்கின்றன. அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு பிராவிடண்ட் பண்ட் இல்லை, வேறு சில முறைகள் இருக்கின்றன. இவை யெல்லாம் கவனிக்கக்கூடிய முறையில்தான் இண்டக்ரேஷன் என்ற அளவிலே சம்பளம், சர்வீஸ் கண்டிஷன்ஸ் முதலியவைபற்றி சீராக்குவதற்கு முயற்சி செய்யலாம்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்களிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்து அனுப்பினால் அரசு அதைக் கவனிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அனுப்பிவைத்தால் அது பற்றிச் சட்டப்படி ஆராயலாம்.

DR. H. V. HANDE : Sir, teachers are the most neglected lot of persons and only recently they have begun to draw this minimum pension of twenty rupees. I am quite sure that the teachers will be grateful to the Ministry for the assurance that was given by the Minister that there is a possibility of bringing the pension of local authority school teachers on a par with the pension of Government school teachers. That assurance has been given. Will the Minister be able to tell us whether the Government have taken stock of the entire local authority schools and the number of teachers in them, and the extra amount that is likely to be spent by the Government if the pension of the local authority school teachers is brought on a par with the pension of the Government school teachers ? Have the Government examined these aspects ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னபடி இவையெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. அதைப்பற்றி ஆராய்ந்து முடிவு தரவேண்டுமென்று கேட்டிருக்கிறேன். எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கலாம், எவ்வளவு நிதி வேண்டியிருக்கும் என்ற கணக்கு விவரங்கள் இப்பொழுது இல்லை. ஒரே சீராக்க வேண்டுமென்ற அடிப்படை நோக்கத்தின் காரணமாகத்தான் தனியார் பள்ளிகளையும் அரசினர் பள்ளிகளையும் ஒன்றுக்க என்ன என்ன செய்யலாம் என்பதற்கான முயற்சிகளில் ஈடுபடக்கூடிய விதத்தில் இரு தரப்பினரையும் கூப்பிட்டுப் பேச வேண்டியிருக்கிறது. அங்கங்கே வேலை பார்க்கின்றவர்களின் சங்கடங்களை அந்தந்தப் பிரதிநிதிகளின் மூலம் தெரிந்து கொள்ள வேண்டிய அடிப்படையில் கேட்கவேண்டியிருக்கிறது. இதுபற்றி ஆராயப்பட்டுக்கொண்டு வருகிறது.

*Cadastral survey.*

* 129 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :—

(*a*) whether the Government proposes to carry out cadastral survey of our State, if so, when ; and

(*b*) the scope of the survey ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** (அ) **அ**ண்டு (இ) : இம் மாநிலம் முழுவதையும் படிப்படியான திட்டத்தின் கீழ் மறுநில அளவை செய்வதற்கு 1963-ல் அரசு ஒப்புதல் வழங்கியது. ஆனால், நில அளவைத் துறைக்கான செலவு பெருகிக்கொண்டேயிருந்த காரணத்தினால் கீழ்க்கண்ட பகுதிகளில் மட்டும் மறுநில அளவை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மெட்ரிக் முறையின் கீழ் நில அளவை மேற்கொள்ளப்பட்ட நீலகிரி மாவட்டம், தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூர் வட்டம் வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவண்ணாமலை, வேலூர் வட்டங்கள் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கோடைக்கானல் வட்டம் ஆகிய பகுதிகளிலும் ஏற்கனவே அடி ராத்தல் முறையின்கீழ் நில அளவை மேற்கொள்ளப்பட்ட கோயம்புத்தூர் மாவட்டத்தின் கீழ் பவானித் திட்டத்திலடங்கிய பவானி, கோபிச் செட்டிப்பாளையம், ஈரோடு, தாராபுரம் ஆகிய நான்கு வட்டங்களிலும் மேற்கூறியவாறு மறுநில அளவை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளைப் பொறுத்த வரை, பழைய ஏற்பாடு முற்றிலும் பயன்படாத நிலை வருமானால் கலெக்டர் அல்லது மாவட்ட வருவாய் அதிகாரியும் நில அளவைத் துறை துணை இயக்குனரும் அறிவிப்பதன் பேரில், அது குறித்து கூடுதல் செலவு எதும் ஏற்படாதென்றும் அத்தகைய கிராமத்தை மறு நில அளவை செய்ய வருவாய்த் துறை வாரியம் ஆணை பிறப்பிக்கும். தமிழ்நாட்டு ஜமீன் ஒழிப்புச் சட்டம், இனும் ஒழிப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் உள்ள பகுதிகள் அண்மையிலே நில அளவை செய்யப்பட்டன. இந்தப் பகுதிகளுக்குரிய பதிவேடுகளும் அடி ராத்தல் முறையில் மறு அளவை செய்யப்பட்ட பகுதிகளுக்குரிய பதிவேடுகளும், அளவை மாற்றுகைப் பட்டியல் துணைகொண்டு ஒரு வகை அளவையிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றும் முறையின் மெட்ரிக் யூனிட்டு அளவைக்கு மாற்றப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, my question was entirely different whereas the Hon. Minister has given a different answer and of course I can understand it. It has been supplied by the Department. My question was with regard to the cadastral survey of the State. The word ' cadastral ' means the extent of the land, the value of the land and the owner of the land. All these details should be provided by the Revenue Department and that kind of survey, are the Government going to undertake ? What the Hon. Minister replied related to the general re-survey. A lot of difficulty arises when a dispute *re.* land is taken up in a court of law. So, will that kind of survey be taken up by the Government?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : That is a long process and also the Hon. Member need not rely entirely on the meaning of the word ' cadastral ' in the Oxford Dictionary as it doesnot convey the real meaning, and he must have some experience with regard to survey. Till now it was done by F.P. system. Cadastral survey actually means the initial survey and where the lands have not already been surveyed, we are making a survey in a diagonal form. What I have meant in my answer is that it can be taken up only as a phased programme. In fact in every 30 years there is a re-survey and the last re-survey was done in 1935 and after that there was no re-survey at all. Now we have to adopt new methods of survey and the Board of Revenue has actually worked out the cost of re-survey. If we have to carry out a re-survey of the entire State, it would cost Rs. 4·42 crores and it may spread over a period of 18 years. Now we have taken it up in cases where it is so absolutely necessary, and we have pointed out to the District Revenue Officers and the Collectors that where the old frame work has been completely broken, the new method should be adopted. Now we are doing it in the Nilgiris district and Kodaikanal. So, we can take it up in a phased programme.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கன்னியாகுமரி ஜில்லாவிலே இப்போது ரி-சர்வே முடிந்து விட்டது. இப்போது முன்னே இருந்த ரெவின்யூ ரெக்கார்டுகளை எல்லாம் டிஸ்ட்ராய் செய்யவேண்டுமென்று போர்டு ஆப் ரெவின்யூவில் இருந்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்த மாதிரி ரெக்கார்டுகளை டிஸ்ட்ராய் செய்தால் பேராபத்து ஏற்பட்டுவிடும். ஆகவே, அந்த உத்தரவை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைக் கருத்தில் எடுத்துக் கொள்ளளொம்.

THIRU K. VINAYAKAM : Sir, with due deference to the Hon. Minister for Food, may I draw your attention to the fact that the word 'cadastral' means what I stated. Of course, it is a foreign word and I depend upon the dictionary for its elucidation and it is not correct when the Hon. Minister says that 'cadastral' means initial survey. So, will the Hon. Minister take steps to find out from the files or whatever records he has in his possession and rectify the mistake in regard to this matter ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The answer is very clear. The word 'cadastral' is applicable to lands which have not been surveyed. The present method is done by diagonal and offset system and the old system has become obsolete.

### எண்ணமங்கலம் பால் பண்ணைத் திட்டம்.

***130 வின.—திரு. ஈ. எம். நடராசன்:** மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தாலூகா, எண்ணமங்கலம் கிராமத்தில் பால் பண்ணைத் திட்டத்திற்காக பாரஸ்டு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதா ?

(இ) இப்பொழுது அந்தப் பால் பண்ணைத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) அண்டு இ) கோயம்புத்தூர் மாவட்டம், பவானி வட்டம், எண்ணமங்கலம் கிராமத்தில் பால் பண்ணை ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

**திரு. ஈ. எம். நடராசன் :** பால் பண்ணைக்காக அந்த இடத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனல் அந்த இடத்தில் தற்போது பால் பண்ணை செயல்படவில்லை. அந்த இடத்திலே தற்போது எள், சோளம் போன்ற பயிர்களை வைத்துக்கொண்டிருக்கிருர்கள். அதைத் தடுத்து அந்த இடத்தில் பால் பண்ணை வைத்து நடத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

### டோரிஸ் படகுகள்.

***131 வின.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டோரிஸ் திட்டத்தின் அடிப்படையில் நடப்பு ஆண்டில் அரசு ஏதேனும் விசைப்படகை பிரான்சு நாட்டிலிருந்து பெற்றுக்கொண்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** (அ), அண்டு (இ) பிரான்ஸ் நாட்டுச் சட்டமன்றத்தின் உறுப்பினர் திரு. எம். க்ளேவியன் அவர்கள் தலைமையில் வந்துள்ள நான்கு பிரெஞ்சு மீனவர்கள் குழு ஒன்று கருவிகளுடன் பொருந்திய இரு டோரிஸ் படகுகளைத் தமிழ்நாட்டுக் கடற்கரையில் கட்புல விளக்கத்திற்காக (Demonstration) தங்கள் சொந்தச் செலவில் கொண்டு வந்தது. இந்தப் படகுகள் 8 மீட்டர் நீளம் உள்ளவை. ஒரு படகிற்கான செலவு ஏறத்தாழ ரூ. 16,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மீன்கள் நீரில் எந்த இடத்தில் உள்ளன என்பதைக் காட்டக்கூடிய மீன் கருவி அதில் பொருத்தப்பட்டுள்ளது. அவற்றில் 4 பரித்திறன் கொண்ட பொறி உள்ளது. கரையிலிருந்து 5 முதல் 30 மைல் வரையிலும்சென்று 270 அடிவரை ஆழமுள்ள இடங்களில் மீன் பிடிக்க அவை உதவும். வீசுவலை போட்டு மீன் பிடிக்க அவை உதவுகின்றன. இப் படகுகளை விட்டு வைக்க துறைமுக வசதிகள் தேவையில்லை. இவற்றைக் கரையில் கட்டி வைக்க இயலும். பிரெஞ்சு நாட்டுக் குழுவின் உதவியுடன் முன்னேடி முறையில் மீன்பிடி வேலைகள் 1968-ம் வருடம் பிப்ரவரி மாதம் 1-ம் தேதி முதல் துவக்கப்பட்டன. மீனளத்துறை சோதனைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கென இந்த இரண்டு படகுகளையும் விட்டு விட்டு பிரெஞ்சு குழு 1968-ம் வ்ருடம் மார்ச் மாதம் 15-ம் தேதியன்று சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றது. முதற்கண் மூன்று திங்கள்கட்கு ரூ. 6,301 செலவில் இந்த இரண்டு டோரிஸ் படகுகளின் உதவியுடன் முன்னேடி முறையில் மீன்பிடி வேலைகளைத் தொடர்ந்து நிறைவேற்ற அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இந்தப் படகுகள் எந்தெந்தக் கடல் பகுதிகளில் மீன் பிடிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** சென்னையை அடுத்துள்ள கடற்கரையோரப் பகுதிகளில்தான் மீன்பிடித் தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### கடற்பாசி உரம்.

***132 வின.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு கடற்பாசியை உரமாக உபயோகப்படுத்துவதற்கான ஆராய்ச்சி செய்யும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) அண்டு (இ) 1954-55-ம் ஆண்டில் ஆடுதுறை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நடத்திய சோதனைகளின் விளைவாக, கடற்பாசி உரம் வழங்கப்பட்ட நிலங்களில் கிட்டியுள்ள விளைச்சல் மிக்க குறைவானதே என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அதை மேலும் நல்ல முறையில் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது உண்மையா ? இல்லையென்று சொன்னல் இனிமேலாவது அப்படி ஆராய்ச்சி செய்வதற்கான உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கடற்பாசியைச் சுத்த நீரில் கழுவி உரம் தயாரிப்பதால் ஓரளவு நன்மைதான் ஏற்படுகிறது. கடல் நீரிலிருந்து எடுக்கப்பட்ட பாசியைச் சுத்த நீரில் கழுவாமல் அப்படி உபயோகித்தால் போதுமான பலன் ஏற்படவில்லை. குறுவை, தாளடி ஆகிய இரண்டு சாகுபடிகளில் அதைப் பயன்படுத்திப் பார்த்ததில் எதிர்பார்த்த பலன் கிடைக்காத காரணத்தால் அது கைவிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வின நேரம் முடிவுற்ற போதிலும் அவையின் அனுமதியோடு மேலும் சிறிது நேரம் எடுத்துக் கொள்கிறேன், மு.ப. 10-00

[1968 ஆகஸ்ட் 24

**திரு. கே. விநயகம் :** கடல் பாசியை நிலத்திற்குத் தகுந்தாற்போல் உரமாக மாற்றமுடியவில்லையென்றாலும் முன்பொரு முறை முதல் அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது கடல் பாசியைக் கொண்டு அல்வா செய்து விற்று பணம் எடுக்க முடியும் என்று சொன்னதாக நினைவு. அப்போது நானும், நீங்களும் கூட இருந்தீர்கள். அந்த முயற்சியை இப்போது எடுத்துக்கொள்ள முடியுமா, இது பயன்படவில்லையென்றால்?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இது நிலம் பற்றியது. அங்கத்தினர் அவர்களுக்கு அல்வா செய்து சாப்பிட விருப்பம் இருந்தால் வீட்டில் முயற்சி செய்து பார்க்கலாம்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** விவசாயத்திற்கு ஃபிஷ் மீல், மீன் உரம் கிடைப்பது மிகவும் கடினமாயிருக்கிறது. அதை விவசாயிகளுக்கு நல்ல முறையில் நிரம்பக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** செய்யப்பட்டுத்தான் வருகிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** ப்ரேஸீலியா என்ற கடல்பாசியிலிருந்து அகரகர் என்ற பொருளிலிருந்து அல்வா தயார் செய்யமுடியுமென்பதை தமிழக அரசு அறிந்து தூத்துக்குடியில் அதற்கான ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருப்பது தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஜெல்லிதான் தயாரிக்கப்படுகிறது.

## *Publications Officer*

*133 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Harijan Welfare and information be pleased to state—

(*a*) whether the post of Publications Officer has been abolished; and

(*b*) if so, the reasons therefor ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** ஜில்லாக்களில் மக்களுக்கு அரசாங்கச் சாதனைகளை விளம்பரம் செய்வது தேவையில்லை என்ற காரணத்தால் இந்த அதிகாரி நிறுத்தப்பட்டாரா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஏற்கனவே வெளியீட்டு அலுவலராக இருந்த ஒருவர் 1967-ம் வருடம் டிசம்பர் மாதம் 8-ம் தேதி 55 வயது பூர்த்தியானதால் மேற்படி பதவியிலிருந்து அவர் ஓய்வு பெற்றார். இப்போது அரசாங்க வெளியீடுகள் ஒன்றும் பிரசுரிக்காத காரணத்தினால் அந்தப் பதவி காலியாக வைக்கப்பட்டிருக்கிறதே தவிர அதை நிரந்தரமாக எடுத்து விடவில்லை.

## அனந்தபுரத்தில் பத்திரப்பதிவாளர் அலுவலகம்.

***134 வின.—திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி வட்டத்தில் உள்ள அனந்தபுரம் என்ற ஊரில் ஒரு பத்திரப் பதிவாளர் அலுவலகம் திறக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.



1968 ஆகஸ்ட் 24]

## மதுரை சிறப்பங்காடியில் உணவுப் பொட்டலங்கள் விற்பனை:

***135 வின—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை சூபர் மார்க்கெட்டில் உணவுப் பொட்டலங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ம் தேதி முதல் தினந்தோறும் தயிர்சாதமும், சாம்பார் சாதமும், சில தினங்களில் தேங்காய் சாதம், வெண்பொங்கல், எலுமிச்சம்பழ சாதம், புளியோதரை, வெஜடபிள் பிரியாணியும் பொட்டலம் ஒன்று 25 பைசா வீதம் விற்கப்படுகின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இப்படிப்பட்ட உணவுப் பொட்டலங்கள் விற்பதால் சிறப்பங்காடிக்கு லாபம் கிடைத்திருக்கிறதா ? அப்படி லாபம் கிடைத்திருக்கிறதென்றால் அதை ஏனைய சிறப்பங்காடிகளுக்கும் விஸ்தரிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எல்லா சூப்பர் மார்க்கெட்டிலும் இதுபோன்ற முறை இருக்கலாமா என்பது அவர்கள் அப்போதைக்கப்போது தேவை ஏற்படுவதை உத்தேசித்து முடிவு செய்கிறார்கள்.

**திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் :** இந்த உணவுப் பொட்டலங்களின் விலை என்னவென்று அறிவிக்கலாமா ?

**மாண்புமிரு திரு. செ. மாதவன் :** 25 காசு என்று சொன்னேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இந்தமாதிரி ருசியான சாதனங்களை மலிவு விலையில் தயார் செய்து சட்டசபையாளர்களுக்கு சட்டசபை நடக்கும் காலத்தில் கொடுக்க கூட்டுறவுத் துறையில் ஏற்பாடு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சட்டசபை உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்தி அந்தக் கூட்டுறவு அமைப்பின்மூலம் ஒரு சிறந்த உணவு விடுதி நடத்த வேண்டுமென்று நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கை இருந்து வருகிறது. இன்றைய சட்டசபை அங்கத்தினர்களாவது அந்த முயற்சியை ஏற்க முன்வந்தால் இந்த அரசு ஆவன செய்யும்.

**திரு. எம். எஸ். மணி :** திருச்சியில் உள்ள சிறப்பங்காடியில் கடந்த ஒரு ஆண்டாக இப்படிப்பட்ட உணவுப் பொட்டலங்கள் நல்ல முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதில் லாபமும் வந்திருக்கிறது என்பதை அரசு உணருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அங்கத்தினர் அதில் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பார் என்று தெரிகிறது.

**திரு. கே. பி. எஸ். மணி :** கூட்டுறவு முறையில் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். கடந்த கால அரசு காலத்தில் அங்கத்தினர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டுறவு உணவுச்சாலையை ஏற்படுத்தி மூன்று மாத காலம் அதை நடத்தி, பின்னர் வாங்கியிருந்த வெஸல்களை எல்லாம் விற்றுவிட்டு 6,000 ரூபாய் கடனில் போனது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அம்மாதிரி நிலை வரும் என்பதால் அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடாமல் இருப்பது நல்லது என்பதை யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் எதிர்க்கட்சியில் இருந்தபோது சரியான சாப்பாடு கிடைக்கவில்லை என்று அன்றைய சபை துணைத் தலைவர் அவர்களிடம் விவாதித்தேன். அவர்கள் இந்தத் தகவலைச் சொன்னார்கள். கூட்டுறவு முறையில் நடத்தியது சரிவர வரவில்லை என்று. ஒருமுறை

ரிவர வரவில்லை என்பதற்காக எப்போதுமே அப்படித்தான் இருக்கும் என்பதில்லை. கனம் உறுப்பினர் அவர்கள் முன் நின்று நடத்தினால் மிக நல்ல முறையில் நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

### உர விற்பனை கூட்டுறவு கிடங்குகளில் சோதனை

*136 வினா.—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், திருப்பூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள கூட்டுறவு உர விநியோகம் செய்யப்படும் ஸ்டோர்களில் 1967-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ம் தேதிக்குப் பின்னர் 1967-ம் வருடம் ஜூன் மாதம் 15-ம் தேதி முடிய சோதனைகள் (Inspections) நடந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், எத்தனை முறை ?

(உ) இந்த சோதனைகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) ஒரு முறை.

(உ) கோயம்புத்தூர் மாவட்ட அதிகாரி (கலெக்டர்) கூட்டுறவுச் சங்கங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தவறுதல்களுக்கு விளக்கம் கேட்டதோடு, 1967-ம் வருடம் ஜூன் மாதம் 16-ம் தேதி முதல் அச்சங்கங்களுக்கு உரம் வழங்குதலையும் நிறுத்தினார். சங்கங்கள் விளக்கங்களைக் கொடுத்தன. திருப்பூர் கூட்டுறவுச் சங்க உதவிப் பதிவாளரின் வேண்டுகோளின்படி, சங்கங்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டன. பிறகு, உரவிநியோகப் பொறுப்பும் சங்கங்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டது.

**திரு. சு. துரைசாமி :** அந்த உர விநியோகம் செய்தவர்கள் தொடர்ந்து இதற்கு முன்னால் இப்படிப்பட்ட தவறுகளை செய்திருக்கிறார்கள். அப்படி தொடர்ந்து தவறு செய்யக்கூடியவர்களுக்கு நாம் அனுமதி வழங்காமல் இருப்பது நன்றாகயிருக்கும் என்பதை உணர்ந்து அதில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நடவடிக்கைகள் எடுத்து, எச்சரிக்கை செய்யப்பட்டு முதலில் நிறுத்தப்பட்டது. மீண்டும், அவர்கள் நல்லமுறையில் நடத்துவார்கள் என்ற எண்ணம் அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஏற்பட்டிருக்கிறது. தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசீலித்து தேவையானால் ரத்து செய்வார்.

### நிதி ஒதுக்கம்.

*121 வினா.—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார், மாவட்டங்களுக்கு சில நிதிகளைப் பிரித்துக் கொடுக்கும் போது (குறிப்பாக கல்விக்கும், விவசாயக் கடன், விவசாய முன்னேற்றம் முதலியன) அவைகள் எந்த அடிப்படையில் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன ?

(இ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சமமாக பங்கிட்டுத்தரும் உத்தேசம் உண்டா ?

THE HON. THIRU C. N. ANNADURAI: (*a*) Government normally allocate funds only on a Statewide basis. The distribution of such funds among the various districts is done by the Chief Controlling Officers, who are generally the Heads of Departments with reference to the requirements of programmes actually under execution.

(*b*) No Sir.



DR. H. V. HANDE: While distributing these amounts within a district, will the Government take into consideration the needs of each district and will the amount be distributed according to needs of each district ? If so, may I know what is the criteria on which needs are assessed and what is the criteria by which the head of a department allocates the money to each district ?

THE HON. THIRU C. N. ANNADURAI: No need can be ignored. The only question is allocating priorities for these needs. The district head of administration takes into consideration the needs of the particular district and passes on his proposal toGovernment and Government examines them. They allot certain priorities and according to that, finances are distributed.

THIRU B. VENKATASAMI: Some taluks like my taluk, Hosur taluk, have been neglected by the previous Government.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டுகள் இருக்கக்கூடாது. கேள்வியைக் கேளுங்கள்.

THIRU B. VENKATASAMI: We are having only 138 pumpsets throughout the whole taluk (which is the biggest taluk in the whole State) where 10,000 pumpsets could be installed. Will the Government come forward to allot more funds and have a 'master plan' for such places ?

THE HON. THIRU C. N. ANNADURAI: I am in entire agreement with the Hon. Member's request provided my finances permit.

**திரு. கே. போஜன் :** இவ்விதம் மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கும் போது அபிவிருத்தி அடையாத பின்தங்கிய மாவட்டங்களுக்கு முதல் இடம் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஆங்கிலத்தில் முன்னால் கேட்ட கேள்வியின் தமிழ் மொழிபெயர்ப்பு இது. ஆகவே அதே பதில் இதற்கும் பொருந்தும்.

**திரு. தோ. மு. நல்லசாமி :** தேவை இருக்கலாம். ஆனால் அதை சரியான முறையில் உபயோகிக்க முடியாத சூழ்நிலையில் அப்படி ஒதுக்கப்படும் தொகையை வேறு மாவட்டத்திற்கு ஒதுக்குவதில் என்ன தவறு இருக்கமுடியும் ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அப்படி சில மாவட்டங்களுக்கு என்று நிதி ஒதுக்கி அங்கு செலவிடப்படாமல் அது திரும்பி வருகிற அனுபவம் மிகவும் குறைவாக இருக்கிறது. அப்படிக் கிடைக்குமானால் நண்பர் சொன்ன கருத்து கவனத்தில் வைக்கப்படும்.

THIRU K. VINAYAKAM: Sir, instead of allocating the finances among the districts according to the needs felt by the people, will the Government recast the entire system and distribute on the basis of the population of the district, just as our State also is clamouring with the Centre that their finances should be distributed on the population basis ?

THE HON. THIRU C. N. ANNADURAI: The information that the Hon. Member has got is not fully correct. The finances that are to be distributed to the States are not to be allocated on population basis alone. Eighty per cent, seventy-five per cent or ninety per

per cent—the percentage has not yet been fixed—is to be on population basis. Backwardness is another consideration, developmental activities is another consideration, and metropolition needs is another consideration Therefore that analogy does not hold good here. As for the fact that the allocation instead of being based on needs should be based on population, I can inform the hon. Member that needs and population have got a corollary.

### மறுவாழ்வு இயக்குநர்

*122 வினா.—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு நடப்பு ஆண்டில் வரவிருக்கும் தமிழர்களை குடியேற்றுவதற்குத் தேவைப்படும் விளை நிலங்களின் பரப்பைக் கணக்கிட விசேஷ அதிகாரி ( Special Officer ) ஒருவர் சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ளாரா ?

(இ) ஆம் எனில் அவர் அறிக்கை ஏதேனும் அரசுக்கு கொடுத்துள்ளாரா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான வேலைகளைக் கவனிப்பதற்காக "மறுவாழ்வு இயக்குநர்" ஒருவரை அரசாங்கம் நியமித்துள்ளது.

(இ) இயக்குநர் தமது அலுவல்களுடன் இலங்கையில் இருந்து தாயகம் திரும்புகிறவர்களை நிலக்குடியேற்றத் திட்டங்களின் கீழ்ப் பல்வேறு மாவட்டங்களில் குடியமர்த்துவதற்கான வழி வகைகளை ஆராய்ந்து வருகிறார்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவரவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் தமிழர்களில் அநேகம் பேர் பனைமரத்தொழிலில் அனுபவம் பெற்றவர்களாகவும், மீன்பிடி தொழிலில் அனுபவம் பெற்றவர்களாகவும் இருப்பார்கள். நஞ்சை நிலங்களுக்கோ, இரப்பர் தோட்டங்களுக்கோ அவர்களின் அனுபவத்தைப் பயன்படுத்த முடியாத அளவுக்கு இருந்தால், அவர்கள் சார்ந்துள்ள வேலைகளைச் செய்யும்படியாக வாய்ப்புள்ள மாவட்டங்களிலேயே அவர்களைக் குடியேற்றுவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் இந்த அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இலங்கையிலிருந்து இங்கே திரும்புபவர்கள் பல்வேறு வகையான தொழில்களிலே பயிற்சி பெற்றுத் திரும்புகிறார்கள். சிலர் தோட்டத் தொழிலில் அனுபவம் பெற்றவர்களாகவும், சிலர் விவசாயத்திலே அனுபவம் பெற்றவர்களாகவும், சிலர் நம்முடைய நண்பர் சொன்னபடி பனைமரத் தொழிலில் பயிற்சி பெற்றவர்களாகவும் இருப்பார்கள். அவர்களிலே சிலர் சிறு கடை வைத்து வியாபாரம் செய்யக்கூடியவர்களாகவும் இருப்பார்கள். யார் யார் எந்தெந்தத் தொழிலிலே பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்று தெரிகிறதோ அவர்களை அந்தந்தத் தொழிலில் ஈடுபடுத்துவதற்குத்தான் முதல் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அப்படி அந்தத் தொழிலுக்கு வாய்ப்பில்லாத நேரத்தில் மாற்றுத்தொழிலுக்கு வழிவகுக்கப்பட வேண்டும்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, முன்பு கிழக்கு பாகிஸ்தான் அகதிகளை அந்தமான் போன்ற தீவுகளுக்குக் குடியேற்ற மத்திய சர்க்கார் தனி நிதியையும், உதவியையும், சலுகைகளையும் கொடுத்தது. அதுபோல இந்த இலங்கை அகதிகள் விஷயத்திலும் கொடுக்க முன் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** இதற்காக மாநில அரசு தனி அதிகாரியை அந்தமான் தீவுக்கு அனுப்பி வைத்தது. அவர்கள், பத்தாயிரம், பதினையாயிரம் ஏக்கர் நிலம் இவர்கள் பயன்படுத்தக்கூடிய



அளவுக்கு இருக்கிறது என்று மத்திய சர்க்காருக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதனை இலங்கை அகதிகளுக்கு அளிக்கக்கூடும் என்ற அளவுக்கு இருக்கிறேன்.

**திரு. சா. மெய்யப்பன் :** தலைவரவர்களே, இதுவரை இலங்கையிலிருந்து எத்தனை பேர் வந்திருக்கிறார்கள், அவர்கள் குடியேற எங்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பண்டாரநாயகா—சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இன்னும் வரவில்லை. அக்டோபர் மாத இறுதியில் அவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, இலங்கையிலிருந்து வருபவர்களில் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக உள்ளார்கள். இவர்களுக்காக ஆகும் செலவை மத்திய சர்க்கார் பொறுப்பேற்றுள்ளதா ? அல்லது மாநில சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மாநில அரசுக்கு ஒரு பங்கு இருக்கிறது. ஆனால் பெரும்பகுதி மத்திய சர்க்காரிலிருந்து இனாமாகவோ, கடனாகவோ, அல்லது நீண்ட கால தவணையுள்ள கடனாகவோ பெற வேண்டுமென்பது திட்டமாகும். எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாகப் போயிருக்கிறார்கள் என்பதை பூகோளப்பட அமைப்பைப் பார்த்தாலே தெரியும். இலங்கையை அடுத்துள்ள பகுதிகளிலிருந்து அதிகம் பேர் போயிருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்புபவர்களின் புனர் வாழ்வு சம்பந்தமாக இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அவர்கள் 14 அம்சத் திட்டம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்த அம்சங்கள் என்ன, அதை அரசு ஒப்புக்கொண்டு விட்டதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்தத் திட்ட விவரம் என்னிடத்தில் இல்லை. ஒவ்வொரு மாவட்டக் கலெக்டரும் திட்டங்களை அனுப்பியுள்ளார்கள். அவைகள் பரிசீலனையில் உள்ளன.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவரவர்களே, பண்டாரநாயகா—சாஸ்திரி ஒப்பந்தத்தை அடிப்படையாக வைத்து நம்முடைய நாட்டிற்கு வருபவர்கள் மட்டும் இலங்கை அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்படுவார்களா, அல்லது அதற்கு முன்னாலேயே திருப்பி அனுப்பப்பட்டு வந்தவர்களும் அகதிகள் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படுவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதற்கு முன்னாலே வந்திருப்பவர்கள் திரும்பி வந்தவர்கள் என்ற பட்டியலில் வருவார்கள். அகதிகள் பட்டியலில் வர மாட்டார்கள்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இலங்கையிலிருந்து திரும்பும் அகதிகளில் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, நெல்லையிலே ஒரு நூற்பாலை ஏற்படுத்தி வேலை தரும் உத்தேசமுண்டா ? மாஞ்சோலை, நாகர்கோயில் பகுதிகளில் தேயிலைத் தோட்டம் அமைக்கலாம் என்று கலெக்டர் அவர்கள் அறிக்கை அனுப்பியுள்ளார், அது ஏற்றுக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதைக் கவனத்தில் வைத்துக்கொள்ளும் நேரத்தில் நூற்பாலைகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியையும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

DR. H. V. HANDE : Has this Government any idea of the number of repatriates who are likely to come during the year 1969? In the previous Ministry when the Burma repatriates came, the

administrati n did not give help in a quick manner. There was a lot of red-tapism. In view of the large number of repatriates that are going to come . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டு இருக்கக் கூடாது. கேள்வியாகக் கேளுங்கள்.*

DR. H. V. HANDE : It is not an insinuation ; it is a statement of fact.

Will this Government see that whatever help is given is given quickly and immediately, without much of red-tapism ? What is the number of repatriates that is likely to come in 1969 and what are the steps take by this Government to see that they are properly rehabilitated ?

THE HON. THIRU C. N. ANNADURAI : We are expecting the first consignment to the extent of nearly 35,000. Spread over so many years we expect some lakhs of people to return. The measures that have already been taken can be enumerated in this way. Transit camps are being organised and roads are being laid so that the transport of the repatriates from one place to another can be quickened and can be done in an easy manner. After they reach thetransitcamps,they will not be allowed to stay there for more days than is necessary. The officers there will take into consideration their needs, the places where they want to go, the profession to which they have been accustomed and the repatriates will be sent accordingly. Therefore I hope that the Committee will be quick in that process and see to it that they are rehabilitated in a quick manner.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** *தலைவரவர்களே, ஏற்கனவே இலங்கையிலிருந்து வந்திருக்கும் அகதிகளுக்கு இதுநாள் வரை அரசாங்கத்தால் விவசாயத்திற்கு நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியிருந்தால் எந்தத் தகுதியின் அடிப்படையில், எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது.*

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** *அதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் தகவல் தரப்படும்.*

**மதுவிலக்கு அமல் செய்வதால் ஏற்படும் இழப்பு**

*123 வினா.—**திரு. செ. பாலசுப்பிரமணியன், திரு. கே. வினாயகம், திரு வி. கே. கோதண்டராமன் :** *மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகம் மது விலக்கைப் பூரணமாக அமல் செய்வதால் அந்த நஷ்டத்தைச் சரி செய்யும் அளவு தமிழகத்திற்கு அதிக நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென மத்திய சர்க்காரிடம் இம்மாநில சர்க்கார் வலியுறுத்தியதா ?*

*(இ) ஆமெனில், மத்திய சர்க்காரின் பதில் என்ன ?*

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** *சார், இந்திய அரசியலமைப்பின் "டைரகடிவ் பிரின்ஸிபில்ஸ் ஆஃப் தி கான்ஸ்டிடியூஷன்" படி மதுவிலக்கு அமல் நடத்த வேண்டியது முக்கியமானது. அது ராஜ்ய அரசாங்கத்தின் கடமையாக இருப்பதோடு மத்திய அரசுக்கும் அதில் பங்கிருப்பதால் இதுமாதிரி தமிழ்நாட்டிலே முழுக்க முழுக்க மதுவிலக்கை அமல்படுத்துவதால் அதற்கான ஈட்டுத்தொகை கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** *இதுபற்றி பொதுப்படையாக இந்திய அரசைச் சேர்ந்த அமைச்சர்களுடன் பேசிக்கொண்டிருந்த பொழுது குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள், மதுவிலக்கை நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே கொண்டுவந்து அதனால் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடுசெய்யும் அளவுக்கு வேறு வரிகள் மூலம் கிடைப்பதாலே இப்பொழுது நாங்கள் எதுவும் செய்வதற்கில்லை என்று கருத்து தெரிவித்தார்கள். அவ்வாறு தெரிவித்தது நியாயம் என்று சொல்லவில்லை. ஆனால் அண்மையிலே இந்தியாவினுடைய நிதி அமைச்சர், மது விலக்கு செய்வதன் மூலம் எந்த அரசுக்காவது நஷ்டம் ஏற்படுமானால் அந்த நஷ்டத்திலே ஒரு அளவுக்கு நாங்கள் ஈடு கொடுக்க இருக்கிறோம் என்று அறிவித்தார்கள். அது சென்னைக்கும் பொருந்துமா என்று கேட்டதற்கு சென்னைக்கு அது பொருந்தாது, இப்பொழுது மதுவிலக்கு செய்து அந்த மதுவிலக்கினாலே ஏதாவதுநஷ்டம் வந்தால் அதற்கு ஈடு கொடுக்கப்படும் என்றார்கள். அவர் சொன்னதிலே இருந்து நான் இப்பொழுது செப்டம்பர் மாதத்திலே மது விலக்கை ரத்து செய்து விட்டு, கள்ளுக் கடைகளைத் திறந்துவிட்டு அதற்குப் பிறகு மறுபடியும் அக்டோபர் மாதத்திலே மது விலக்கை கொண்டுவந்து, செப்டம்பர் மாதத்திலே இவ்வளவு இலாபம் வந்தது ; அக்டோபரிலே மது விலக்கை கொண்டு வந்ததால் நஷ்டம் வந்தது என்று சொன்னால் ஒரு சமயம் அவர்கள் கவனிப்பார்கள் போல இருக்கிறது. நான், அந்த இரண்டு மாத பாவத்தைக் கூட செய்யத் தயாராக இல்லை என்பதாலே அந்த முறையைப் பின்பற்றவில்லை.*

THIRU K. VINAYAKAM : Sir, does the Hon. Chief Minister agree with the views expressed by the Central Finance Minister that only such of those States which will introduce Prohibition from now on or at a later date will be compensated for the loss and if not, will he take further steps to press upon the Central Government to allot at least some amount so as to compensate our losses ?

The HON. THIRU C. N. ANNADURAI : As a matter of fact, the Finance Minister of India and myself did not sit around a table and discuss the matter. He issued a press statement and I issued another press statement and the matter ends there. As regards the query from the hon. Member, why we should not press the Central Government and get something, if we can get the assistance of the hon. Members opposite, my hands would be strengthened and I can put pressure on the Central Government. Therefore, I would request the Hon. Members opposite, especially the Leader of the Opposition to bring in a Resolution before this House and get it passed unanimously so that I can take it to the Central Government and plead on behalf of the whole State and I will try to get something.

(THIRU P. G. KARUTHIRUMAN rose.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *திரு. கோதண்டராமன்.*

THIRU K. VINAYAKAM : When the hon. the Leader of the Opposit on gets up, he must be given first priority.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *நான் அவரை உட்காரச் சொல்லவில்லையே.*

THIRU K. VINAYAKAM : But you are showing gestures and signs....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *ரூலிங் கொடுக்கவில்லை. அவரே ஒப்புக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்.*

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** *உதவி சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இந்த மதுவிலக்கிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னால் செய்கிறேன் என்று சொன்னார். எதிர்க்கட்சித் தலைவர் இந்த மதுவிலக்கை பூரணமாக ஒத்துக்கொள்ளவும் தயாராகவும் இருக்கிறார் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்தாலும் கூட மதுவிலக்கை மிகவும் வெற்றிகரமாக பூரணமாக, கண்டிப்பாக நடத்துவதற்கு இந்த சர்க்கார் முன்வருவார்களா ?*

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** *இப்பொழுது எழுந்திருக்கிற பிரச்சினை மதுவிலக்கினாலே ஏற்படுகிற நஷ்டத்திற்கு மத்திய அரசு ஏதாவது ஈட்டுத்தொகை தருவதற்கு நாம் வற்புறுத்தலாமா என்பது. என்னுடைய கரங்களுக்கு அதிகமான வலிவு ஏற்படுகின்ற முறையில் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினால் மத்திய அரசிலேயிருந்து ஏதாவது நஷ்டத்திற்காக தொகை, ஈட்டுத் தொகை பெறலாம் என்று சொன்னதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதை எப்பொழுது செய்வது என்பதை அவர்கள் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். சரியான முறையில் அமலாக்கப்படுகிறது என்பதற்கு இப்பொழுது இருப்பதைவிட இன்னும் விவரம் காட்ட வேண்டுமென்று அவர்கள் சொன்ன யோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்கு எந்த மாதிரி குழு அமைக்க வேண்டுமென்று அவர் விரும்பினாலும் அந்த மாதிரி குழுவை அமைக்கத் தயாராக இருக்கிறேன்.*

**திரு. வி. கே. கோதண்டராமன் :** *சார், இந்த மதுவிலக்கு அமலிலே வந்த பிறகுதான் இந்த சமூகத்திலே என்ன என்ன செய்யக் கூடாது என்று இருக்கிறதோ அவ்வளவும் வந்திருக்கிறது என்பது மாத்திரம் அல்ல, சாதாரண மக்கள் மிகப் பெரிய அளவுக்கு கொடுமைப்படுவது அதிகமாகியிருக்கிறது. அந்தக் காரணத்தினாலே அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா முதலமைச்சராக இருந்த மைசூர் இராஜ்யம் முதற்கொண்டு அத்தனை இராஜ்யத்திலும் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, சாதாரண ஏழை மக்களை அந்தக் கொடுமையிலிருந்து நீக்குவதற்காக வேண்டியும் இலங்கையிலிருந்து பர்மாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதை முன்னிட்டாவது இந்த மதுவிலக்கை ரத்து செய்ய உத்தேசம் உண்டா ?*

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** *நண்பர் சொன்ன காரணங்களையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த முடிவையும் நான் ஆதரிக்கவில்லை.*

DR. H. V. HANDE : Sir, I agree atleast with the first part of the question put by the hon. Member, Thiru Kothandaraman. In view of the fact that prohibition has produced a tremendous amount of irritation among the public and that most of the people are unnecessarily tortured and beaten......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *கேள்வி நேரத்திலே எந்த விதமான ஸ்டேட்மெண்ட்டோ, எந்த விதமான குற்றச்சாட்டோ, எந்த விதமான யோசனையோ சொல்லக் கூடாது. அமைச்சரிடத்திலேயிருந்து செய்தி கேட்பதற்காகத்தான் கேள்வி கேட்கவேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன.*





DR. H. V. HANDE : Sir, let us take up the List of supplementary questions put to-day and we will find that a lot of ideas have been put in those questions which have been admitted by the Chair. If my question is uncomfortable to the Chair, he can say that it is an uncomfortable question and so he is ruling it out of order.

THE HON. THIRU C. N. ANNADURAI : I would respectfully point out to the hon. Member that no question is uncomfortable to the Chair because the Chair is not responsible for any of the answers.

But the hon. Member can say it in this way—if the Ministry feels uncomfortable, the Chair can intervene —but I may say for the information of the hon. Member that I feel least uncomfortable when questions are put especially by the hon. Member Dr. Hande.

DR. H. V. HANDE : When I used the words ' uncomfortable to the Chair ' I meant the Ministry. I have to put questions only through the Chair to the Ministry. Now I shall frame the question....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *சபாநாயகருக்கு எந்த விதமான சங்கடமும் இல்லை. ஆனால் நம்முடைய விதிமுறைகள் அப்படி சொல்லக் கூடாது என்று இருக்கிறதே தவிர எனக்கு எந்த விதமான சங்கடமும் இல்லை. விதிமுறைகள், கேள்வி நேரத்திலே எந்த விதமான ஸ்டேட்மெண்டும் இருக்கக் கூடாது, எந்த விதமான குற்றச்சாட்டும் இருக்கக் கூடாது, எந்த விதமான யோசனையும் சொல்லக் கூடாது என்று இருக்கிறது. அந்த விதிமுறைகளை பின்பற்ற வேண்டுமென்று உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I may also add that it is the duty of the Chair to safeguard the whole House and not the Ministers alone.

DR. H. V. HANDE : Now coming back to the question proper, are the Government aware of the fact that a large number of people are physically put into inconvenience because of the incapable and inefficient way with which the Prohibition policy is enforced? A number of people who have been given varnish licences are using them for the purpose of drinks and this is going on for the last several years and that is a legacy inherited from the previous Government. Whatever it is, are the Government aware of the fact that a large number of people drink alcohol regularly and they pay the regular mamool to the police stations and so they are let off....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *கேள்வியைப் பாருங்கள். கேள்வி, "நாம் இந்த மதுவிலக்கை அமல் செய்வதனாலே மத்திய சர்க்காரிடமிருந்து நிதி கேட்பதற்கு மாநில அரசு முயலுமா" என்பது தான். மதுவிலக்கைப் பற்றி எல்லோருமே கேள்வி கேட்கலாம்—நீங்கள் ஒரு கேள்வி கேட்டால். ஆனால் இந்த கேள்வியில் அதற்கு இடம் இல்லை கேள்வி என்னவோ, அதை ஒட்டிக் கேளுங்கள்.*

DR. H. V. HANDE : Therefore, does this Government really feel that it is necessary to ask money from the Centre to enforce its Prohibition policy because of the fact that the prohibition policy has not met with the success which we all wanted it to meet with ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, shortcomings in the implementation of the prohibition policy is no argument for abolishing prohibition. I admit that there are shortcomings not only in regard to the implementation of the prohibition policy but also in regard to so many other things. Our aim should be to perfect its implementation and not to give up prohibition because of shortcomings.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய அழுத்தமான கொள்கைக்கு இப்பொழுது இருக்கக்கூடிய கஷ்டம் மத்திய சர்க்காரினுடைய சட்டம், விதி முறைகள். சட்டத்தினுடைய போக்கு, அமல் நடத்துவதற்கு கஷ்டம் ஏற்படுகிறது. நம்முடைய சர்க்காருக்கு முழு அதிகாரத்தை மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த சர்க்கார் எடுக்குமா ?

(விடை இல்லை.)

முற் பகல் 10-30 **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. எஸ். இராமச்சந்திரன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** நான் என்னுடைய கேள்வியை விளக்க விரும்புகிறேன். இதை அமல் நடத்துவதில் இருக்கக்கூடிய கஷ்டம் என்னவென்றால், சென்டிரல் ஆக்ட் அதற்கு இடைஞ்சலாக இருந்து கொண்டிருக்கிறது.. .. .. ..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் திரு. இராமச்சந்திரன் அவர்களைக் கூப்பிட்டு விட்டேன். அவர் கேள்வி கேட்ட பிறகு வேண்டுமானால், உங்களுக்கு இடம் கொடுக்கலாம். இப்பொழுது நீங்கள் உட்காருங்கள்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** நமது நாட்டில் மதுவிலக்குக் கொள்கையை பூரணமாக அமல் படுத்துவதிலே எவ்வளவு வருவாயை இழக்கிறோம் என்பதை முதலமைச்சர் தெரிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதனால் எவ்வளவு பொருள் இழக்கிறோம் என்ற கணக்கு கூட எனக்கு அவ்வளவு முக்கியமாகத் தெரியவில்லை. அதனால், எவ்வளவு பண்பாட்டை வளர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் முக்கியமாகத் தெரிகிறது. நாமெல்லாம் வாலிபர்களாக இருந்தபொழுது, சிறுவர்களாக இருந்தபொழுது வீதி முழுவதும், வீடு முழுவதிலும் குடித்து விட்டவர்கள் செய்யும் அமளிகளும், குளறுபடிகளும் குடும்பங்களை சிதைக்க வைக்கும்படியான நிலைமை இருந்தது. இன்றைய தினம் அந்த நிலைமை நீக்கப்பட்டிருப்பது பொருளாதாரத் துறையில் எத்தனை ரூபாய் என்று கணக்கு எடுத்தால் தெரியாது. மக்களுக்கு அதனால் கிடைத்த மன நிம்மதிக்கு கோடானு கோடி என்று கணக்குச் சொல்லலாம்.

*Special allowence to Police Personnel.*

* 124 *Q.*—THIRU N. KASIRAMAN,<br>THIRU N. S. V. CHITHAN : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the police constables and others belonging to the Police Department were given a special allowance of Rs. 2 per month in view of the appreciation of the service rendered by them during the Anti-Hindi agitation of 1965 and subsequently



(*b*) whether this special allowance was stopped immediately after the present Government assumed office ; and

(*c*) whether the Government have decided to recover the amount that had been paid as special allowance from the personnel belonging to the Police Department at the rate of Rs. 11 per month ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானம்

### மூடப்பட்ட கோவை ஆலைத் தொழிலாளர் வெளி மாநிலங்களுக்குச் சென்றதும் தாக்கப்பட்டு திரும்பியதும்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. கே. என். குமாரசாமி அவர்கள் "அண்மையில் கோவை பகுதியில் இருந்து சென்ற மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்கள் வெளி மாநிலங்களில், வேலைக்காகச் சென்று தாக்கப்பட்டு, உடைமைகள் கைப்பற்றப்பட்டு, தமிழ் நாட்டிற்கே திரும்பி வருகின்றனர்" என்ற அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்கவேண்டுமென்று பேரவையின் விதி 42-ன் கீழ் ஓர் அறிவிக்கை கொடுத்திருக்கிறார். இது அரசினரின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்டது. மேலும் மூடப்பட்ட ஆலைகளின் பிரச்சினைபற்றி இங்கே விவாதிப்பது முறையற்றது. எனவே, இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். முதல் அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்விக்குப் பதில் அளித்தார். இது முக்கியமான பிரச்சினையாக இருந்தும், மூலக்கேள்வி போட்ட எனக்கு ஒரு துணைக்கேள்வி போடுவதற்கு தாங்கள் அனுமதிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல. உறுப்பினர்கள் பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்திருந்து எதை வேண்டுமானாலும் பேசுவது கூடாது என்று பல தடவை சொல்லியிருக்கிறேன். இது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை. பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்து எதை வேண்டுமானாலும் சொல்வதற்கு இந்தச் சபை இடம் கொடுக்காது.

## 3. தகவல் கோரல்

### விநாயக சதுர்த்திக்கு விடுமுறை

THIRU K. VINAYAKAM : On a point of information, Sir, Tuesday happens to be the birthday of Lord Vinayaka. That day used to be generally declared a holiday under the Negotiable Instruments Act. Is it going to be done now or is the Government going to declare all offices closed ? Even if the Government does not close down all offices on that day, what about this House ? Are we going to sit on that day ? What is your decision, Sir ? I believe the Hon. Chairman of the Legislative Council has declared a holiday for the Council for that day. If we have a sitting in the evening of that day, they want to have a holiday. We are mostly

[Thiru K. Vinayakam] [1968 ஆகஸ்ட் 24

Hindus and we believe still in Gods. in spite of this Government. We still have religious qualities. May I know your decision in this regard ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அரசாங்க அலுவலகங்களுக்கு விடுமுறையா, இல்லையா என்பதைப்பற்றி முடிவு செய்வது இந்த அவையினுடைய பொறுப்பு அல்ல. இரண்டாவது, சபைக்கு விடுமுறை வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி முடிவு செய்வதற்கு அலுவல் ஆய்வுக் குழு இருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழுவில் அதைப்பற்றி முடிவு செய்யலாமே தவிர இந்த மன்றம் அதைப்பற்றி முடிவு செய்யத் தேவையில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அன்றையதினம் விடுமுறை உண்டா என்பதைப்பற்றி இன்னும் ஒரு மணி நேரத்தில் நான் கருத்து அறிந்து தெரிவிக்கிறேன்.

**4. கவன ஈர்ப்பு**

**(i) விஞ்ஞான மந்திர்கள் மூடப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை**

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் கிராமப்புற மக்கள் மத்தியில் விஞ்ஞான அறிவையும் நவீன விவசாயத் தொழில் முறையையும் புகுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த "விஞ்ஞான மந்திர்"களை தற்போதிருக்கும் அரசு மூடியிருப்பதால் விவசாயிகள், கிராமப்புற மக்கள் ஆகியோருக்கு ஏற்பட்டுள்ள நிலைபற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விஞ்ஞான மந்திர்கள் தமிழகத்தில் 6 இடங்களில் செயல்பட்டன. (1) ஆரியக்கவுண்டன்பட்டி (சேலம்), (2) பெரியநாயக்கன்பாளையம் (கோவை), (3) எஸ். வி. நகரம் (வட ஆர்க்காடு), (4) தே. கல்லுப்பட்டி (மதுரை), (5) வளவனூர் (தென் ஆர்க்காடு), (6) குருக்கத்தி (தஞ்சை).

மத்திய அரசால் இவை ஆரம்பிக்கப்பட்டு சில ஆண்டுகளுக்குப் பின் 1963-ம் ஆண்டு இவை மாநில அரசுக்கு மாற்றப்பட்டு கல்வித்துறை நிர்வாகத்தில் வந்தன. 1966-ல் இவை உள்ளாட்சித் துறைக்கு மாற்றப்பட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பின்னர் மத்திய அரசு இந்த விஞ்ஞான மந்திர்கட்குக் கொடுத்து வந்த உதவித் தொகையை நிறுத்திவிட்டது.

இந்த விஞ்ஞான மந்திர்களின் நோக்கங்கள் உயர்ந்தவையாக இருந்த போதிலும் இவை (effective-ஆக) திறம்பட்ட முறையில் செயல்படவில்லை. இவை செயல்படும் முறையை ஆராய R.D. and L.A -யைச் சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று சமீபத்தில் விஞ்ஞான மந்திர்களை எல்லாம் பார்வையிட்டு அதன் அறிக்கையைக் கொடுத்தது. எல்லா இடங்களிலும் இம்மந்திர்கள் செயல்படும் முறையில் குறைகள் காணப்பட்டன. இவற்றின் முக்கிய வேலையான மண்வள சோதனை (Soil Test) இரத்த, மூத்திர சோதனை (Blood, Urine and Pathological analysis) இவற்றைச் செய்ய பூரண வசதிகள் இல்லை எனவும் காணப்பட்டது. இதிலுள்ள அதிகாரிகள் எம்.எஸ்.ஸி. படித்தவர்கள். ஆனால், இவர்களுக்குத் தளவாடங்கள் இல்லாத குறையாலும், இவர்களுடன் தொடர்ந்து வேலை செய்யும் அலுவலர்கள் (follow up work) இல்லாததாலும் இவர்கள் வேலை பயன்படவில்லை. விஞ்ஞான மந்திர்கள் எடுபட்டதால் கிராமத்துக்கு பெரு நஷ்டம் ஏற்படாது. மண்வள சோதனைகளை விவசாய இலாகாவே இப்போது செய்கிறது. அதற்காகத் தனியாக நிறுவனம் தேவையில்லை. தவிர, Rural Extension Training Centre (R.E.T C.)களும் இந்த வேலையைச் செய்ய முற்படும். Identification of pest and diseases விவசாயப் பயிர் நோய்களைக் கண்டுபிடித்து ஆவன செய்யும் வேலையை விவசாய இலாகாவும் கிராம சேவக்குகளும் செய்து வருகிறார்கள். விஞ்ஞான



1968 ஆகஸ்ட் 24] [திரு. செ. மாதவன்]

மந்திர்களில் உள்ள தளவாடங்கள் R.E T.C.-க்களுக்குத்தான் போகின்றன. சிறந்த முறையில் பயன்படாத இந்த நிறுவனங்களை மூடுவதால் கிராம மக்களுக்குத் தொந்திரவு எதும் வராது. மத்திய அரசால் ஆரம்பிக்கப்பட்டு, பிறகு மாநில அரசுக்கு வந்த இந்த நிறுவனங்களுக்கு உதவித் தொகையையும் மத்திய அரசு இப்போது நிறுத்தி விட்டதால் இவை மூடவேண்டியது பற்றி ஆலோசித்தலில் தவறில்லை.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஆன் எ பாயிண்டு ஆப் இன்பர்மேஷன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயிண்டு ஆப் இன்பர்மேஷனுக்கு இதில் ஒன்றும் இடமில்லை. அமைச்சர் அவர்கள் ஸ்டேட்மெண்டு படித்திருக்கிறார்கள். எந்த உறுப்பினர் 41-வது விதியின் கீழ் அறிவிக்கை கொடுத்திருந்தாரோ அவர் ஒரு கேள்வி கேட்க இடம் கொடுக்கலாம். மற்றவர்கள கேள்வி கேட்க விதி இடம் கொடுக்கவில்லை.

**திரு. கே. பி. எஸ். மணி :** விஞ்ஞான மந்திர் என்றால் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. அதற்காகத்தான் கேட்டேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** "மந்திர்" என்றால் ஆலயம் என்று பொருள் என்ற விவரத்தைத் தங்கள் மூலம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த ஆசிய ஜோதி, அமரர் நேரு அவர்கள் மிகவும் உயர்ந்த நோக்கத்தோடு இந்த விஞ்ஞான மந்திர்களை ஏற்படுத்தினார்கள். இது பொதுவாக ஒரு இலாக்காவிடம் இருப்பதைவிட, மேலும் பயனுள்ள வகையில் செயல்படுவதற்கு, இந்த விஞ்ஞான மந்திர்களை மண்வளப் பாதுகாப்புக்காக ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விஞ்ஞான மந்திர்கள் மத்திய அரசினால் துவக்கப்பட்டன என்பது உண்மை. அவர்கள் கொஞ்சம் பண உதவியும் செய்து கொண்டுவந்தார்கள். அமரருடைய வாரிசுகளே அந்த உதவியை நிறுத்திவிட்டார்கள். அதற்குப் பின்னாலே நாம் அதை எப்படிச் செய்வது என்பது ஆராயப்பட்டது. இந்த மந்திர்கள் செய்துவந்த செயல்களையெல்லாம் நம்முடைய இலாகாக்களே செய்துவருகின்றன என்ற காரணத்தினால், இதிலிருக்கக்கூடிய எக்விப்மெண்டஸ், தளவாடங்களை அந்தந்த இலாகாவுக்கே கொடுத்து, இந்தத் திட்டங்களை மற்ற இலாகாக்களே மேற்கொண்டு செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

**(ii) சென்னை புதுக்கல்லூரியில் மாலை வகுப்புகள் தொடங்கத் தடை.**

**Dr. H. V. HANDE :** I call the attention of the Hon.Minister for Education to a matter of urgent public importance, namely, the order of the University prohibiting New College, Madras from starting evening college classes, even though the college has already accepted a number of applications for the same.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, இவ்வறிவிப்பில் விவரித்துள்ள பொருள் சட்டப்படி நிறுவியுள்ள சென்னைப் பல்கலைக்கழகம் மட்டுமே முடிவு செய்ய வேண்டிய ஒன்றாகும். பல்கலைக்கழகத்திடமிருந்து இது பற்றித் தெரிந்து கொண்ட விவரம் வருமாறு.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 ஆகஸ்ட் 24

இவ்வாண்டில் அதாவது 1968-69-ம் ஆண்டில் பட்டப் படிப்பு வகுப்புகளில் சேருவோரின் எண்ணிக்கையைப் பெருமளவில் அதிகப்படுத்துவதற்கு இக் கல்லூரிக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு :—

| பட்டப்படிப்பு வகுப்பு. | 1967–68-ல் அனுமதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் அனுமதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பி. ஏ. சரித்திரம் முதன்மை .. .. .. | 35 | 80 |
| ,, பொருளாதாரம் முதன்மை .. .. | 60 | 100 |
| பி. எஸ். ஸி. கணக்கு முதன்மை .. .. | 60 | 80 |
| ,, பௌதிகம் முதன்மை .. | 32 | 64 |
| ,, ரசாயனம் முதன்மை .. | 48 | 96 |
| ,, தாவர இயல் முதன்மை .. | 24 | 32 |
| ,, விலங்கியல் முதன்மை .. | 32 | 40 |
| பி. காம் .. .. .. .. .. | .. | 85 |
| | 291 | 577 |

இக் கல்லூரியில் புகுமுக வகுப்பில் 10 பிரிவுகளும், முதலாம் ஆண்டு எம் பி.பி.எஸ். வகுப்பில் ஒரு பிரிவும் உள்ளன. இவற்றில் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 865. இது தவிர, இக் கல்லூரி, புகுமுக வகுப்பில் மாலை வகுப்புக்களும் நடத்துகிறது. இவற்றில் மொத்தம் 320 மாணவர்கள் பயிலுகின்றனர்.

மாலைக் கல்லூரியில் பட்டப் படிப்பு ஒன்றைத் தொடங்குவதற்கு இக் கல்லூரி செய்து கொண்ட வேண்டுகோளைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு கருதிப் பார்த்து, அதன் பேரில், பட்டப் படிப்பில் சேருவோர் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கும் பி. காம். வகுப்பு தொடங்குவதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறதை முன்னிட்டு, பட்டப் படிப்பில் மாலை வகுப்புகள் தொடங்குவதற்கு அனுமதி வழங்குவதற்கு இயலாது என்றும் இத்தகைய வேண்டுகோள் பின்னொரு தேதியில் மீண்டும் விடுக்கப் படலாமென்றும் கல்லூரி முதல்வருக்கு அறிவிப்பதென்று தீர்மானித்தது.

இக் கல்லூரி தனது 26—10—1968 தேதியிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட பாட முறைகளை மாலைக் கல்லூரியில் இணைக்க வேண்டுமென்று பல்கலைக் கழகத்திற்கு எழுதிக் கேட்டுக் கொண்டது.

பி.ஏ. சரித்திரம் 35 ; பி.ஏ. பொருளாதாரம் 60 ; பி.எஸ்.ஸி. கணக்கு 60 ; பௌதிகம் 32 ; ரசாயனம் 48 ; தாவர இயல் 24 ; விலங்கியல் 32—மொத்தம் 291.

ஏற்கெனவே உள்ள ஆசிரியர்களிடையே வேலையைப் பிரித்துக் கொடுப்பது, இதற்கென கூடுதலாக நியமிக்கப்படக் கூடிய ஆசிரியர்கள் எத்தனை பேர் என்பது பற்றி இக்கடிதத்தில் திட்டவட்டமான விவரம் எதுவுமில்லை. மேலே தெரிவிக்கப்பட்டவாறு அனுமதித்துள்ள கூடுதல் எண்ணிக்கைக்கும் இக் கல்லூரிக் கடிதத்தில் குறிப்பிட்டவாறு பெருவாரியான எண்ணிக்கையுடைய பாடமுறைகளில் மாலை வகுப்புகள் தொடங்குவதற்கும் போதிய ஆசிரியர்களைக் கல்லூரி நியமிக்குமா என்பது நிச்சயமில்லை என்று பல்கலைக்கழகம் தீர ஆலோசித்துப் பார்த்து முடிவு செய்தது.

ஆகவே, அடுத்த கல்வி ஆண்டில் மாலை நேர பட்ட வகுப்புகளைத் தொடங்குவதற்காக விண்ணப்பித்துக் கொள்ளும்படி அக் கல்லூரிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அப்போது இவ்வாண்டில் அனுமதிக்கப் பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள பெருமளவு அதிகரிப்பையும் அடுத்த ஆண்டும் தொடர்ந்து மேல் வகுப்புகளில் படிக்கக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையையும் கருத்தில் கொண்டு, மேற்சொன்ன ஒவ்வொரு பாடமுறையிலும் அனுமதிக்கப்படக்கூடிய மாணவர்களின்



1968 ஆகஸ்ட் 24] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

எண்ணிக்கையையும் நியமிக்கப்படும் ஆசிரியர்கள் அவர்களுக்குத் தேவையான கல்வித் தகுதிகளையும் காட்டுகிற முழு விவரமும் அத்துடன் கொடுக்கப்பட வேண்டும்.

எனவே, இக் கல்லூரியில் மாலை நேர பட்டப் படிப்பு வகுப்புகளைத் தொடங்குவதற்கான அதன் வேண்டுகோளைப் பல்கலைக்கழக நிர்வாகக்குழு ஒப்புக் கொள்ள இயலவில்லை. நிர்வாகக் குழுவின் கருத்துப்படி, பட்டப் படிப்பு வகுப்புகளில் மாலைக் கல்லூரி தொடங்குவதற்கு அனுமதி வழங்க இயலாது என்று போதிய காலம் முன்கூட்டியே இக் கல்லூரிக்குத் தகவல் அனுப்பப்பட்டது. எனவே, அக்கல்லூரி மாலை நேர பட்டப் படிப்பு வகுப்புகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கோ அல்லது மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதாக உறுதியளிப்பதற்கோ இடமில்லை. ஏற்கெனவே கூடுதல் எண்ணிக்கையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்குத் தேவையான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்டார்களா என்பதைப் பல்கலைக் கழக நிர்வாகக்குழு இன்னும் உறுதியாகத் தெரிந்துக்கொள்ள வேண்டியுள்ளது. இதுபற்றி 1968 ஆகஸ்டு 31-க்குள் முழு அறிக்கை ஒன்றை அனுப்புமாறு பல்கலைக் கழக நிர்வாகக் குழு கேட்டுள்ளது.

DR. H. V. HANDE : Sir, from the statement given by the Minister for Industries it looks as though that, because there is not enough staff, the boys have not been given an opportunity to study. The students who have put in an application to the New College have not put in any application to the Government Arts College or the Theagaraya College. They are practically stranded. For one year they are going to waste their time if some scheme is not evolved by the Government. Of course the matter is within the Vice-Chancellor's jurisdiction. Will the Government recommend to the Vice-Chancellor to give instructions to the Government Arts College and the Theagaraya College to employ additional teachers, because a number of Lecturers are without jobs, and give these boys a chance to study ? Will the Government take the responsibility for the future of these boys and, if so, what measures the Government are going to take ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலிலே இந்த ஆண்டு 291 என்பதிலிருந்து 577 என்ற அளவில் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. புகுமுக வகுப்பில் இருந்தவர்கள் என்னிடத்திலும் அறிக்கை கொடுத்தார்கள். பல்கலைக் கழக துணைவேந்தர் இதிலே ஏற்கெனவே உத்தரவாதம் அளிக்கவில்லை. ஆகவே, அப்படிப் பட்டவர்களை தியாகராயா கல்லூரியில் சேர்த்துக்கொள்ள வசதி ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்று தெரிவித்தார்கள். யார் யார் அப்படி விண்ணப்பித்துக் கொள்கிறார்களோ, அவர்களுக்குத் தியாகராயா கல்லூரியில் இடம் அளிக்க ஏற்பாடு இருக்கிறது.

## 5. அமைச்சரின் விளக்க உரை

### ஹேமாவதி நீர்த் தேக்கத் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகள்

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, 82-வது விதியின் கீழ் பேரவையின் கவனத்தை ஈர்த்து ஒரு முக்கிய பொருள் பற்றி இந்த அறிக்கையை அதன் முன்பு வைக்க விழைகிறேன்.

தமிழகத்தின் தலையாய பாசன ஆதாரம் காவேரி, 1924-ம் ஆண்டு மைசூருக்கும் தமிழ்நாட்டிற்கும் காவேரி பாசனம் சம்பந்தமான ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அது சம்பந்தப்பட்ட சில முக்கிய கூறுகள்—மேட்டூர் நீர் தேக்கத் திட்டத்தை நிறைவேற்றவும் தமிழகத்

திற்கு நிலையாக உரித்தான நீர்ப்போக்கின் அளவு (limit flows) கணக்கிடப் படும். அவ்வாறு கணக்கிடப்பட்ட அளவு நீரை காவிரி ஆற்றின் வழி விடுத்தபின்னரே மைசூர் அரசு கிருஷ்ணராஜசாகரில் நீரைத் தேக்கலாம் எனவும், மைசூர் மாநிலத்திற்கு சில பாசன வாய்ப்புக்களும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் தமிழக பாசனத்திற்கு நிலையாக உரித்தான நீர்ப் போக்கின் அளவு சிறிதேனும் குன்றாதவாறு, மைசூர் பாசன வாய்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் 1974-வது ஆண்டு வரை செயல்திறன் உடையதாக இருக்கும்.

கிருஷ்ணராஜசாகர் பாசனத்திற்கான 1 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கர்களும் அப்போது மைசூரில் நிலவி வந்த ஒவ்வொரு பழைய பாசனக் காலின் கீழும் 1910-ம் ஆண்டு பாசனம் பெற்ற நிலப்பரப்பு அளவில் மூன்றில் ஒரு பங்கு கூடுதலாகவும், பாசனம் பெற ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றிற்கும் கூடுதலாக, 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்து 10 (iv)-ன் படி காவிரி, அதன் உப நதிகள் இவற்றின் கீழ் புதிதாக பாசன வசதியை பெருக்கிக் கொள்ள மைசூருக்கு வழங்கப்பட்ட உரிமைக்கு 1,10,000 ஏக்கர்கள் அப்பொழுதைய உச்சவரம்பு என விதிக்கப் பட்டுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின் ஷரத்து 10 (vii) பிரிவின்படி மேலே குறிப்பிட்ட பாசனப் பெருக்கத்தை 1892-வது ஆண்டு ஒப்பந்தத்தின் "ஏ" ஷெடியூலில் குறிக்கப்பட்ட காவிரி அதன் உப நதிகள் இவற்றின் மேல் மாத்திரமே அணைகள் கட்டி, நீரைத்தேக்கி, பாசனத்தைப் பெருக்க மைசூர் அரசு ஒப்புக் கொண்டுள்ளது. அவ்வாறு கட்டப்படும் நீர் தேக்கங்களின் மொத்த நிகர கொள்ளளவு (effective capacity) 45 ஆயிரம் மில்லியன் கன அடி எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒப்பந்தத்தின் அனுபந்தம் 1-ல் கண்டுள்ள கிருஷ்ணராஜசாகர் தேக்க செயல்முறை விதிகளின்படி (Rules of Regulation) தமிழகத்திற்கு உரித்தான நீர்ப் போக்கு அளவு குறைவின்றி பாதிக்கப்படாதவாறே, மைசூர் கட்டும் நீர்த் தேக்கங்களில் நீரைத் தேக்கிச் செயல்பட வேண்டும் எனவும் விதிக்கப் பட்டுள்ளது.

அண்மையில் மைசூர் மாநிலம் கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்தின் உள்வாய்ப் பகுதியில் காவிரி ஆற்றின் ஒரு உபநதியான ஹேமாவதியில் ஓர் அணை கட்டி நீரைத் தேக்கத் திட்டம் வகுத்துள்ளது. மைசூர் அரசு ஒப்பந்த ஷரத்துக்களின் 10 (iv), (vii) கீழ் ஏற்படத்தக்க, நீர்த் தேக்கங்களில் ஒன்றாக ஹேமாவதி திட்டத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் இந்நீர்த்தேக்கம் கட்டுவதால் ஒப்பந்தம் குந்தகப்படக்கூடிய சூழ் நிலைகள் உருவாகும் எனவும், குறிப்பாக, தமிழகத்திற்கு உரிய நீர்ப் போக்கின் அளவு தொடர்ந்து அனுப்பப்பெற இயலுமா எனவும் மத்திய அரசுக்குத் தமிழக அரசின் சார்பில் அச்சம் தெரிவிக்கப்பட்டது. இந்த அச்சம் தீர்க்கத் தொடர்ந்து 1924-ம் ஆண்டு ஒப்பந்த விதிமுறைகள் முற்றிலும் தொடர்ந்து பின்பற்றப்படுவதற்கும் அதற்கேற்ற உறுதி மொழி கள், விதி முறைகள், நடைமுறை ஏற்பாடுகள், தேக்கும் செயல்முறை கள் இவைகள் அனைத்தும் ஹேமாவதித் திட்டம் ஏற்கப்படுமுன் னர் தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் மத்திய அரசை கோரியது.

இந்த அடிப்படையில்தான் இரு நாட்கள் (19, 20—8—1968) டெல்லியில் மத்திய நீர்—மின்சாரக் குழுத்தலைவர் அவர்களுடன் இரு மாநில செய லாளர்கள், பொறியியல் வல்லுநர்கள், ஆகியோர் கலந்து அதிகாரிகள் நிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இந்த பேச்சு வார்த்தை களின் போக்கினை நான் தொடர்ந்து அவ்வப்போதைக்கப்போதே அறிந்து கூர்ந்து கவனித்து வந்தேன். அதனைத் தொடர்ந்து மத்திய பாசன மின்சார அமைச்சர் திரு கே. எல். ராவ் அவர்களும், மைசூர் மாநில முதலமைச்சர் திரு வீரேந்திர பட்டீல் அவர்களும், நானும் இது குறித்து, சந்தித்துப் பேசினோம். இவற்றின் பயனாக 1924-ம் ஆண்டு ஒப்பந்தப்படி தமிழகத் திற்கு உரித்தான நீர்ப்போக்கு அளவு சிறிதேனும் குறைவின்றித்



தொடர்ந்து அனுப்புவதற்கு மைசூர் அரசு உறுதி அளித்துள்ளது. அந்த உறுதி நிறைவேற்றப்படும் வகையில், விதிமுறைகள் செயல்முறை, நிர்வாக நடைமுறை ஏற்பாடுகள் ஆகியவை பற்றி விரிவான விவாதம் நடத்தப் பட்டிருக்கிறது.

1924-வது ஆண்டு ஒப்பந்தத்திற்கு ஏற்பவும், உட்பட்டும், நீர் அளவைகள் ஏற்படுத்தல், அவற்றினை ஆய்ந்து கணக்கிடுதல், புதுத் தேக்கத்தில் எப் பொழுது, எவ்வாறு, இந்த உறுதி நிறைவேறும் வகையில், நீரைத் தேக்குவது என்பதற்கான விதிமுறைகள், அவ்விதிகள் செயல்முறையில் நிறைவேற்றப்படவும், நிறைவேற்றப்படுகின்றனவா எனக் கண்காணிப்பதற் கும் தேவையான ஏற்பாடுகள், பதிவு முறைகள், இவை குறித்து வரைவு கள் தயாரிக்கப்பட்டு, தொடர்ந்து இரு அரசுகளும் பரிசீலித்து முடிவு மேற்கொள்ளப்பெறும். டெல்லியில் நடந்துள்ள பேச்சு வார்த்தைகள் குறித்து தமிழக முதலமைச்சர் அவர்களுடன் கலந்து அரசின் சார்பில் மேற்கொண்டு (மத்திய அரசுக்கு) கருத்து அறிவிக்கப்படும் என்று டெல்லி பேச்சுவார்த்தையின் இறுதியில் தெரிவித்து விட்டு வந்திருக்கிறேன்.

திரு. பி ஜி. கருத்திருமன் எழுந்தார்..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விதி 82-ன் கீழ் அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையின்மீது எந்தவிதமான விளக்கமோ, விவா தமோ கூடாது. விளக்கம் கேட்பதற்கோ, விவாதிப்பதற்கோ விதி இடம் தரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இது நடை முறை சம்பந்தமானது. விதி 57-ன் கீழ் நான் ஒரு தீர்மானம் கொடுத்து, அந்தத் தீர்மானத்தைத் தாங்கள் அனுமதித்து, இது சம்பந்தமான விவாதத்திற்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டு இந்தச் சட்டசபைக் கூட்டத் தொடரிலே நடைபெறும் என்று தெரிவித்தீர்கள். அதை எப்பொழுது எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அலுவல் ஆய்வுக் குழுவில் இது பற்றிய விவரம் வந்தபோது, திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் தெரிவித் தார்கள். அப்போது, நான் டெல்லி சென்று வந்ததும் அதுபற்றி விவர மாக அறிக்கை ஒன்றை அளிக்கிறேன் என்று கூறினேன். அதற்கேற்ற வாறுதான் இந்த விவரம் இப்போது அவையில் அளிக்கப்பட்டது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** விவகாரம் எனக்கும், சபாநாய கருக்குமே தவிர, எனக்கும் அமைச்சருக்கும் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சபாநாயகருடைய அறை யிலே எந்தவிதமான பேச்சு வார்த்தை நடந்தாலும் அதைப்பற்றி இந்த அவையிலே கேட்பது முறையாகாது.

THIRU S. BALASUBRAMANIAN: You have given intimation that it has been admitted and that it will be taken up in this session.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எப்போது எடுத்துக்கொள் வது என்பது பிரச்சினை அல்ல. உங்களுடைய தீர்மானத்தை நான் அனு மதித்திருக்கிறேன். எப்போது அவைக்குக் கொண்டுவருவது என்பது சபாநாயகருக்கு உள்ள உரிமை. எப்போது கொண்டுவரப் போகிறீர்கள் என்று கேட்பதைக் கூட அவையிலே கேட்கக்கூடாது. சபாநாயகருடைய அறையிலேதான் கேட்க வேண்டும். அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று பேச்சுவார்த்தை முடித்து, இன்றுதான் அறிக்கை அளித்திருக் கிறார்கள்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** எப்போது எடுத்துக்கொள்ளவேண்டும் என்றுதான் கேட்டேன்.

[1968 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எப்போது, என்பதைக்கூட பேரவைத் தலைவருடைய அறையிலேதான் கேட்க வேண்டும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** அமைச்சர் அவர்கள் கூறுவதிலிருந்து அது வராது என்று தெரிகிறது.

THE HON. THIRU C. N. ANNADURAI: Even though the Deputy Speaker has given the assurance that there will be a discussion on this matter, if the Deputy Speaker thinks that, in view of the statement read out by the Minister, a further discussion is unnecessary, is it not within his right to refuse a discussion on the matter ?

THIRU S. BALASUBRAMANIAN: It is very well within his right and he can disallow a discussion. I am not standing in the way.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** விதி 41-ன் கீழ் நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் ஒருவர், "நான் கொடுத்த தீர்மானம் என்ன ஆயிற்று" என்று கேட்பதைக்கூட அவையிலே கேட்கக்கூடாது. சபாநாயகருடைய அறையிலேதான் அதைப்பற்றிக் கேட்கலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** நான் பல முறை கேட்டும் வராததாலே இந்த அவையிலே கேட்கிறேன்.

### 6. அறிக்கை அளித்தல்

#### அரசினர் உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, அரசினர் உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை, குழுவின் தலைவர் திரு. கே. விநாயகம் அவர்கள் இந்தப் பேரவைக்கு அளிப்பார்கள்.

THIRU K. VINAYAKAM: Mr. Deputy Speaker, Sir, I present the Third Report (Fourth Assembly) of the Committee on Government Assurances for the year 1968-69.

### 7. அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறும். இப்பொழுது திரு. கா. மு. கதிரவன் அவர்கள் பேசுவார்கள்.

***திரு. கா. மு. கதிரவன் :** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசின்மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தத் தீர்மானத்தின் மீது அவர் விளக்கங்களைக் கொடுத்தபொழுது, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் அவ்வப்போது அதற்குரிய பதில்களை அளித்திருக்கிறார்கள். இருந்தாலும், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுகின்ற வாய்ப்பை இந்த அவை எனக்கு அளித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





தமிழக அரசு இன்றையதினம் வரையிலும் செய்திருக்கின்ற நன்மைகளை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்திருந்தாலும், அதை மறைக்கவும், திசையைத் திருப்பவும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பொதுவாக இந்தத் தமிழக அரசு ஏற்பட்டதற்குப் பின்னால், தமிழகத்திலே மூன்று இடைத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒன்று பாராளுமன்றத்திற்கும், மற்ற இரண்டு இடங்கள் சட்டமன்றத்திற்கும் தேர்தல்கள் நடந்து, திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது. ஆகவே, தமிழக மக்கள் புதிய தமிழக அரசின்மீது நம்பிக்கை இருக்கிறது என்ற எண்ணத்தை வெளிப்படையாக தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சி நண்பர்கள் எங்களுக்கு நம்பிக்கை இல்லையென்று கூறுகிறார்கள்.

நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது "ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவோம்" என்று தன்னுடைய பேச்சைத் தொடங்கி வைத்தார். ஆகவே, அவர்கள், ஆட்சியில் குறைபாடுகள், குற்றங்கள் இருக்கின்றன, அவற்றைக் கண்டிக்கவும், நீக்குவதற்கும் ஆக நாங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிறோம் என்று சொல்லவில்லை. ஆறு மாதத்திற்கு ஒருமுறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரலாம் என்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பு வீணாகப் போய்விடக்கூடாதே, அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரலாம் என்ற எண்ணத்தில்தான் எதிர்க்கட்சித் தலைவர் பேச்சைத் தோடங்கி வைத்தாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

எந்தெந்தக் குற்றச்சாட்டுகளை தமிழக அரசின் மீது கொண்டு வந்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, முதலாவது குற்றச்சாட்டு தொழில் பிரச்சினையைப் பற்றியதாகும். இந்தச் சட்டசபையில் எதிர்க்கட்சி நண்பர்களுக்கு இந்த அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு எப்படி உரிமையிருக்கிறதோ, அடிக்கடி வெளிநடப்பு செய்வதற்கு எப்படி உரிமையிருக்கிறதோ அந்த முறையில்தான் தொழிலாளர்களுக்கும் வேலை நிறுத்தங்கள் செய்வதற்கு உரிமை இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிலே தொழிலாளர்களுக்குப் பல உரிமைகள் இருந்தபோதிலும் மறுக்கப்பட்டன. அதனால் தொழிலாளர்கள் காங்கிரஸ் ஆட்சியில் மௌனமாக இருந்தார்கள். காங்கிரஸ் ஆட்சியின்போது ஏதாவது ஓரிடத்தில் வேலை நிறுத்தம் ஏற்பட்டால், ஆட்சியாளர்கள் முதலாளிகளின் பக்கம் சாய்ந்திருந்ததால், தொழிலாளர்கள்பயப்பட்டுக்கொண்டிருந்தார்கள், ஒடுங்கிக் கிடந்தார்கள். இன்றைய தினம் இந்த அரசு தொழிலாளர் நல அரசாக இருக்கின்ற காரணத்தினால் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை தொழிலாளர்கள் முதலாளிகளிடத்தில் வைக்கிறார்கள். தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு முதலாளிகள் செவிசாய்க்க மறுக்கிறார்கள். அதன் பொருட்டு தகராறுகள் ஏற்படுகின்ற காரணத்தினால் வேலை நிறுத்தங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இதை ஒரு பிரச்சினையாக எடுத்துக் கொள்ள முடியாது. வேலை நிறுத்தங்களைப் பொறுத்தவரையில் இந்தியாவினுடைய பல்வேறு பகுதிகளிலும் இம்மாதிரியான நிலைமைதான் இருந்து வருகிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, "எங்கள் ஆட்சிக் காலத்தில்தான் பல திட்டங்களை நிறைவேற்றினோம். ஆடுதுறை விதை திரு. சுப்பிரமணியம் அவர்களால்தான் அமல்படுத்தப் பட்டது. பல தொழில்கள் ஏற்பட்டன" என்று பெருமைப்பட்டுக் கூறிக் கொண்டே போனார்கள். அதே திரு. சுப்பிரமணியம் அவர்கள், மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே இந்த நாட்டு விவசாயிகளை, "கள்ள மார்க்கெட்காரரர்கள், பதுக்கல்காரரர்கள்" என்றும் கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய ஐந்தாண்டுத் திட்டம் ஒரு சிலரை முதலாளிகளாக ஆக்கியிருக்கிறது. இன்றைய தினம் வேலையில்லாத் திண்டாட்டமும் சீர்கேடான நிலைமைகளும் இந்த நாட்டிலே இருக்குமானால் அவற்றிற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்தான் காரணமாக இருக்கக்கூடும்என்பது திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஒப்புக்கொண்டதாகும்.

மு.ப. 11-00 **திரு பி. ஜி. கருத்திருமன்:** திரு. சுப்பிரமணியம் அவர்கள் எந்த இடத்தில் எப்போது கூறினார்கள் என்கிற விவரத்தைக் கொடுத்தால் நல்லதாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதன் முறையாக ஒரு உறுப்பினர் இந்த மன்றத்தில் பேசுகின்றபோது இடைமறிக்காமல் இருக்க வேண்டும் என்பது ஒரு மரபு. அந்த நல்ல மரபை நாம் மேற்கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** முதல் அமைச்சர் அவர்கள் நேற்று என்ன பாடுபடுத்தினார்கள்? பேசாமல் இருந்தாலும், 'நான் சொன்னேன், சும்மா உட்கார்ந்திருந்தார்கள்' என்று பொதுக்கூட்டத்தில் சொல்லிக்கொள்வார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** முதன்முறையாகப் பேசுகின்ற பேச்சை maiden speech என கூறுவார்கள். ஆனால், அவருடைய பேச்சை It is an old Dame's speech என்று அவர்கள் கருதலாம். (சிரிப்பு).

**திரு. கா. மு. கதிரவன்:** அவர்கள் மட்டும் அல்ல. திரு. சஞ்சீவய்யா அவர்கள் கூட, சுதந்திரத்திற்கு முன் பரம தரித்திரர்களாக இருந்தவர்கள் இன்று லட்சாதிபதியாகியிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். ஏன், அடிக்கடி திரு. காமராஜர் அவர்கள் கூட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இருபதாயிரம் கோடி செலவழித்தும் பலன் ஏழைகளுக்குப் போய்ச் சேரவில்லை என்று பொதுக் கூட்டங்களில் கூறியிருக்கிறார்கள். இவை எல்லாம் எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரியாதவை அல்ல. இருந்தும், இந்த அரசைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அவற்றை மறைக்கிறார்கள்.

அடுத்து, தமிழர் படையைப் பற்றிக் கூறினார்கள். அந்தப் படையின் பொருளாளரே சமீபத்தில் ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார்கள். 'இந்தத் தமிழர் படை கேடயமாக இருக்குமே தவிர ஒரு வாளாக இயங்காது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட படையை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குற்றம் சாட்டினார்கள். இன்றையதினம் பல வகையில் தவறான வழியில் செல்கின்ற வேறு படைகள் இருக்கின்றன. அவற்றையும் அவர் கண்டித்திருந்தால் உண்மையில் அவரைப் பாராட்டியிருக்கலாம். வெண்புறச் சேனை என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதைச் சேர்ந்த ஒருவர் மாண்புமிகு கருணாநிதி அவர்களுக்கு ஒரு கடிதம் ஒன்றைஅனுப்பி இருந்தார்கள். அந்தக் கடிதத்தில் "உங்களைச் சுட்டுக் கொல்வேன்" என்று எழுதப்பட்டிருந்தது. அந்தச் சேனையின் செயலை எதிர்க் கட்சித் தலைவர் கண்டிக்க முன்வரவில்லை. பம்பாயில் கூட சிவசேனை என்று ஒரு படை அமைக்கப்பட்டிருக்கிறது. அதைச் சேர்ந்தவர்கள் பலர் அங்குள்ள தமிழர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். "இந்தத் தேதிக்குள் பம்பாயிலிருந்து வெளியேறாவிட்டால் உங்களைச் சுட்டுக் கொல்வோம்" என்பதாக. அந்த சிவசேனைக்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் மறைமுகமாக ஆதரவு கொடுக்கிறார்கள். அந்தச் சிவசேனையின் தலைவராக இருக்கக் கூடியவர் ஆரம்பித்து வைத்த பத்திரிகையையே ஆரம்பித்து வைத்தவர் மத்திய அமைச்சராக இருக்கிற திரு. சவான் அவர்கள்தான். இந்தச் சேனைக்கு காங்கிரஸ்காரர்களின் நேரடி ஆதரவு இல்லை என்றாலும் மறைமுகமான ஆதரவு இருக்கிறது. அதைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ளவில்லை. ஏதோ, சாதாரணமாகச் செயல்படுகின்ற தமிழர் படையை—நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக் வைத்துப் பேச முன்வந்தது வருந்துவதற்குரியதாகும்.

அடுத்து, மதுவிலக்கைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு முதல் அமைச்சர் அவர்களே பதில் அளித்துவிட்டார்கள். இருந்தாலும் மதுவிலக்கு சரியாக இயங்கவில்லை என்கிற குற்றச்சாட்டை நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே அவர்கள் சேர்த்திருப்பது விந்தையாக இருக்கிறது. அகில இந்திய அடிப்படையில் சென்னையில் நடைபெற்ற மதுவிலக்கு மகாநாட்டில் திருமதி சுசிலா நாயர் பேசுகின்றபோது, "அண்ணாதுரை அவர்கள் மதுவிலக்குக் கொள்கையை நடத்துகின்ற முறையைப் பார்த்து காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் வெட்கித் தலை குனிய வேண்டியிருக்கிறது" என்று கூறினார்கள். இதைவிட இந்த அரசு அந்தக் கொள்கையை செயல்படுத்துகிற தன்மை பற்றி வேறு யாரும் சொல்ல முடியாது. இன்றைக்கு அண்ணா அவர்களது ஆட்சியில்தான் தமிழகத்தில் மது விலக்குச் சட்டம் தீவிரமாகவும், நல்ல முறையிலும் செயல்பட்டு வருகிறதே தவிர வேறு எந்தப் பகுதியிலும் நடைபெறவில்லை என்பதைத் துணிவாகக் கூறலாம்.



அதுவும் இன்றையதினம் மது விலக்குக் கொள்கையை உருவாக்கிய மகாத்மா காந்தி அடிகள் சமாதியான இடத்திலே—டெல்லியிலே மது விலக்குச் சட்டம் தளர்த்தப்பட்டுவிட்டது. அதைப்பற்றி திரு. வினோபாஜி அவர்களே கூறியிருக்கிறார்கள். "மகாத்மா காந்தியின் சமாதி உள்ள டெல்லியில்தான் கங்கையைப் போல, யமுனையைப்போல பீரும் பிராந்தியும் பெருக்கெடுத்து ஓடுகிறது" என்று குறிப்பிட்டிருப்பதற்கு காங்கிரஸ்காரர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். ஆனால் இந்த மாநிலத்திலே மது விலக்கு சரியான முறையில் அமல் நடத்தப்படவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே சேர்த்திருப்பது குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகத்தானே தவிர வேறு இல்லை. கடந்த 1½ ஆண்டுகளாக தமிழக அரசு செய்திருக்கிற சாதனைகளைப் பார்க்கிறபோது இந்த அரசின் மீது இவ்வளவு பெரிய அபாண்டமான குற்றச்சாட்டுகளைக் கொண்டுவந்திருக்கிறார்களே, மனச்சாட்சியோடு கொண்டுவந்திருக்கிறார்களா என்று எண்ணத் தோன்றுகிறது. நமது மாநிலத்திற்கு சென்னை ராஜ்யம் என்று வழங்கிவந்த பெயரை தமிழ் நாடு எனப்பெயர் சூட்டிய தமிழக அரசை இந்த அளவு குற்றம் சாட்ட மனம் துணிந்தது என்றால் வருந்தத்தான் வேண்டும்.

சமீபத்தில் மத்திய சர்க்காரிடத்தில் இந்த அமைச்சர்களும் காவடி தூக்கினார்கள் என்று கூறினார்கள். இப்போதுதான் நமது மதிப்பிற்குரிய கருணாநிதி அவர்கள் டெல்லிக்குச் சென்று நம்முடைய காரியத்தை சாதித்து வந்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் அமைச்சர்கள் டெல்லிக்குச் சென்று வாதாடி வெற்றி பெற்றிருக்கிறார்களா, நிமிர்ந்து நின்று பேசியிருக்கிறார்களா என்பது எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரியாதது அல்ல. இப்போது எப்படி நமது அமைச்சர்கள் டெல்லிக்குச் சென்று நிமிர்ந்து நின்று பேசுகிறார்கள், எதிர்த்து வாதாடுகிறார்கள், தங்கள் காரியத்தைச் சாதித்து வருகிறார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். டெல்லி அமைச்சர்களையே இவர்கள் மயக்கிவிடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிற குற்றச்சாட்டுகளுக்கே இடமில்லை. அந்தத் தீர்மானத்தை அவர் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். திரும்பப் பெற்றுக் கொள்கிற எண்ணத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லி அவைக்கு நன்றி கூறி பணிவுடன் விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியின் சார்பில் இந்த அரசின் மீது கொண்டுவந்திருக்கிற நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை ஒட்டி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையில் வைக்க விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதில் இருந்து சட்டம் அமைதி குலைந்துவிட்டது, குறிப்பாக ஜனநாயகம் படுகொலை செய்யப்படுகிறது என்கிற குற்றச்சாட்டை நான் வைக்கிறேன். மேலும் ஒரு கட்சி ஆட்சிதான் இருக்க வேண்டும் என்று மற்ற கட்சிகளுடன் துணை கொண்டு—ஆட்சிபீடம் ஏறிய திராவிட முன்னேற்றக் கழகம் பதவியேறிய நாள்முதல் சர்வாதிகார மனப்பான்மையில் செயல்படுகிறது. சாதாரண மக்களுடைய பிரச்னைகளுக்கு வழிகாணவில்லை. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. பலாத்காரத்தினையே நம்பி—எதிர்க்கட்சியை அழிக்கின்ற போக்கினை இந்த ஆட்சி பெற்றிருக்கிறது என்கிற குற்றம் சாட்டுகிறேன்.

மேலும் சென்ற ஆண்டு சென்னையிலே தீச் சம்பவங்கள் ஏற்பட்டபோது — அந்தத் தீ விபத்து ஏற்பட்ட இடங்களுக்கு முதல் அமைச்சர் அவர்கள் சென்றார்கள். அவரிடத்தில் ஒரு மூதாட்டி "நான் உங்களுக்கு வோட்டுப் போட்டேன். இதோ தீ வைக்கிறார்கள்" என்று சொன்னார்கள் என்று இந்த மன்றத்திலேயே சொன்னார். ஆனால் அதே நேரத்தில் இன்று என்ன பேசப்படுகிறது ? சென்னை பாராளுமன்ற உப தேர்தலுக்கு பொதுப் பணித்துறை அமைச்சரின் மருமகன் திரு. மாறனை நிறுத்தி, அவர் ஜெயிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆங்காங்குள்ள குடிசைகள் திட்டமிட்டே தீ வைக்கப்பட்டன. "பாருங்கள் காங்கிரஸ்காரர்கள் எரிக்கிறார்கள். நாங்கள் கட்டித் தருகிறோம்" என்று சொல்லி வெற்றி பெற கழகத்தைச் சேர்ந்தவர்களே தீ வைத்தார்கள் என்று அங்காடிகளில் பேசிக்கொள்கிறார்கள். பேருந்துகளில் பேசிக்கொள்கிறார்கள். படித்த வட்டாரங்களிலும் பேசிக்கொள்கிறார்கள். இந்த விதமாகத் தீ வைத்து, குடிசைகளைத் திரும்பக் கட்டிக் கொடுத்துவிட்டால், கட்டிக் கொடுத்துவிட்டார்கள் என்ற எண்ணத்தின் மூலம் குடிசை வாழ் மக்களுடைய நன்மதிப்பைப் பெற முடியும். ஆட்சி கையிலிருக்கிற காரணத்தாலே காங்கிரஸ்காரர்கள் இதைச் செய்தார்கள் என்றுசொல்லிவிட்டால் மக்கள் அவர்களைத் துரோகிகள் என்று நினைத்துக்கொள்வார்கள், மக்கள் நம்பிக்கையை அவர்கள் இழந்துவிடுவார்கள் என்ற நினைப்பிலேதான் சென்னை பாராளுமன்றத் தேர்தலை மையமாக வைத்துச் செய்த சதியென்றும் கூறுகிறார்கள். இந்த சதிக்கு ஆதாரமும் இருக்கிறது, ஆதாரமும் கூற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாடோடி மன்னன் என்று ஒரு சினிமா வந்தது. நாடோடியாக இருந்தவன் திடீரென்று மன்னனாக வந்தவுடன் அவசரம் அவசரமாக உத்தரவுகளை அள்ளி வீசினான், நிலமில்லாதவர்களுக்கு நிலம், வீடு இல்லாதவர்களுக்கு வீடு என்று. இந்த இரண்டு உத்திரவுகளையும் போட்டுவிட்ட பிறகு கூட்டத்திலிருந்து ஒரு குரல் கேட்கும்; குடிசைகள் என்ற குரல், உடனே கொளுத்தப்படும் என்று இருக்கும். நாடோடியாக இருந்தவன் திடீரென்று மன்னனாக வந்தவுடன் குடிசைகளைப் பற்றிய உத்தரவு கொளுத்தப்படும் என்ற உத்திரவு. திடீரென்று வந்த தி. மு. க. ஆட்சிக்கும் குடிசைகள் எரிவதற்கும் தொடர்பு இருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்தில் கூறிக்கொண்டு ஆகவே இந்த அரசின் மேல் நம்பிக்கை இழக்கத்தான் செய்வார்கள் மக்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இந்த ஆண்டிலே திடீரென்று தீ விபத்துக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் ஜூன் மாதம் 23-ம் தேதி, நாட்டிலே கயமைத்தனம் பெருகிய காரணத்தால் அரசியல் விரோதம் காரணமாக தீ வைத்து விளையாடுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அரசியல் காரணத்திற்காகக் குடிசைகளிலே தீ வைக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். 19-6-68-ம் தேதி பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகச் செய்கிறார்கள் என்று சொன்னார்கள், தீயும் கையுமாய் திரியும் தீயவனே எங்கள் மீது கோபம் இருந்தால், எங்கள் மீது எரிச்சல் இருந்தால், எங்களுடைய ஆட்சியின் மீது கோபம் இருந்தால், எங்களுடைய வீட்டை இடித்துத் தள்ளுவதற்கு கடப்பாரையோடு வா என்று கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே நல்லெண்ணம் படைத்தவர்கள் யாராக இருந்தாலும் தீ வைப்பதை வெறுப்பார்கள், கண்டிப்பார்கள். என்னைப் பொறுத்தவரையில் இன்னும் அதிகமாகக் கண்டிப்பேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் காழ்ப்புக் காரணமாகத் தீ வைக்கிறார்கள் என்றால் அந்தத் தீயவன்தான் யார் ? அந்தத் தீயவனின் முகமூடியை இவர்கள் எப்பொழுதுதான் கிழித்தெறியப் போகிறார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்தேன். ஆனால், 2-7-68-ல் தமிழகத்தில் உலவி வருகின்ற தினத்தந்தி பத்திரிகை—உண்மையிலேயே அதை எதிர்கட்சிக்காரர்கள் நடத்தவில்லை—தேர்தலுக்கு முன் பல கட்சிகளிலே இருந்துவிட்டு கடைசியாக தி.மு.க. வில் சரணடைந்து, 1967-ம் வருடத்தில்நடந்த தேர்தலில் இந்தச் சட்டமன்றத்திற்கு வந்துள்ள திரு. ஆதித்தன் நடத்துகின்ற பத்திரிகை. அந்தப் பத்திரிகையிலே அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வதைப் பார்த்தால் கவனக் குறைவாக இருந்ததன் காரணமாக ஏற்பட்ட தீ விபத்துக்களினால்





பலர் தண்டிக்கப்பட்டார்கள் என்று இருக்கிறது. கிரே நகரைச் சேர்ந்த மீனாட்சி—இரண்டு மாதம் தண்டனை ; வியாசர்பாடியைச் சேர்ந்த சரஸ்வதி—இரண்டு மாதம் தண்டனை ; அயனாவரம் வெங்கடேசபுரத்தைச் சேர்ந்த ஆயி அம்மாள் 25 ரூபாய் அபராதம் ; வியாசர்பாடி டிகாஸ்டர் ரோடைச் சேர்ந்த குப்பம்மாள்—25 ரூபாய் அபராதம். தலைவர் அவர்களே, இங்குதான் இருக்கிறது சதியின் உண்மை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். உண்மையிலே அரசியல் காழ்ப்பு காரணமாக இந்த மீனாட்சியும், சரஸ்வதியும், ஆயி அம்மாளும், குப்பம்மாளுமா தீ வைத்தார்கள் ? காழ்ப்பு உணர்ச்சியின் காரணமாக நடந்த தீ என்று ருசுப்படுத்த முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாடோடி மன்னன் படத்திலே குடிசை என்று வந்ததும் கொளுத்த வேண்டும் என்று வந்ததாக. . .

**திரு. டி. மார்டின் :** கொளுத்தப்படும் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கொளுத்தப்படும் என்று வந்ததாக சொன்னார்கள். அந்த வசனத்தை எழுதியவரே அவர்கள் கட்சியின் தளபதியாக இருப்பவர்தான்.

**திரு. டி. மார்டின் :** எந்தக் கட்சியில் இருக்கிறார் என்பதல்ல. திடீரென்று வந்த ஆட்சியில் திடீரென்று ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நாடோடியாக இருந்தவன் மன்னனாக வந்தான் என்ற நாடோடி மன்னன் கதையைக் காட்டி, நாடோடிகளாக இருந்தவர்கள் நாடாள வந்தார்கள் என்று அவர்கள் சொல்வதிலிருந்து அவர்கள் ராஜ பரம்பரையில் வந்தவர்கள் என்று நாடு ஏற்றுக்கொள்ளும் என்று கருதுவார்களானால் அது தவறு என்று கருதுகிறேன். அதிலே கூட நாடோடியாக இருந்துவிட்டு, நாடாள வரவில்லை, அதிலே வருகின்ற இருவரும் ஒரே உருவ அமைப்புக் கொண்டிருந்ததால் வருகிறார், நாடோடியாக இருந்ததால் நாடாள வரவில்லை. படம் பார்த்தால் மட்டும் போதாது., புரிந்துகொள்ளவும் வேண்டும்.

**திரு. டி. மார்டின் :** புரிந்துகொண்டுதான் சொல்கிறேன். எல்லோருக்கும் ஆளுவதற்கு அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறது என்பதை அறிந்துதான் கூறுகிறேன்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** அப்படி இருக்கிற பொழுது நாடோடியாக இருந்தவர்கள் நாடாள வந்தார்கள் என்றால் அப்படித்தான் இருக்கும் என்று படத்தில் வந்ததைக் காட்டிச் சொல்லுவது பண்பான பேச்சாகத் தோன்றுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. டி. மார்டின் :** தீ பிடித்ததைப் பற்றி ஒரு மூதாட்டி கூறியதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறபொழுது படத்தில் வந்ததைச் சொல்வதற்கு என் இடம் இல்லை என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** நான் அறிந்துகொள்ள விரும்புவது, படத்திலே நாடோடியாக இருந்தவன் நாடாள வந்தான் என்று வருவதைக் காட்டி நாடோடிகளாக இருந்தவர்கள் நாடாள வந்தார்கள் என்று எங்களை மனதிலே வைத்துக்கொண்டு பொதுப்படையாகப் பேசுவது பண்பான பேச்சுத்தானா என்பதுதான்.

**திரு. டி. மார்டின் :** படத்திலே வரக்கூடிய ஒரு காட்சியை இந்த அவையில் சொல்வதின் நோக்கம், அந்தப் படத்தில் வரும் காட்சியின் முக்கியமான நோக்கம் என்னவென்றால், நாடோடியாக இருந்து மன்னனாக வந்தவுடன் குடிசைகள் கொளுத்தப்படும் என்று சொன்னான்......

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கதைக்குள்ளே போக விரும்பவில்லை. படத்தில் வருவதைக் காட்டி நாடோடியாக இருந்தவர்கள் நாடாள வந்தால் இப்படித்தான் நடக்கும் என்று பொதுப்படையான கருத்தை, எங்களை மனதிலே வைத்துக்கொண்டு, பேசுவது சரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. டி. மார்டின் :** நான் முதலமைச்சர் அவர்களை நாடோடி என்று குறிப்பிடவில்லை. நாடோடி மன்னன் படத்தில் அந்த விதமான காட்சி வந்தது . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** தாங்கள் பேசியதை மறுபடியும் ஒய்வாகப் பார்த்துக்கொள்ளுங்கள். நாடோடிகளாக இருந்தவர்களுக்கு நாடாள வருவது பெருமை, நாடாண்டவர்கள் நாடோடிகளாவது பெருமையல்ல.

**திரு. டி. மார்டின் :** மீண்டும் நாடாள வரலாம் என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சக்கிர தசை அடித்தால் அப்படி வரக்கூடும். நாங்கள் நாடாள வருவது பெருமைக்குரியதே தவிர கேவலமானதல்ல. அவையிலே பேசும்பொழுது பண்பற்ற முறையிலே பேசக் கூடாது. திரு மார்டின் அவர்கள் சட்டமன்ற பேச்சாளராக விளங்க வேண்டியது அவசியம்தான். ஆனால் இப்பொழுது கையாளுகிற முறைகளால் அப்படி விளங்க முடியாது. இந்த முறைகளை மாற்றிக் கொள்வார்களானால், எந்தப் பக்கத்தில் இருந்தாலும் விளங்க முடியும். இந்த முறை அல்ப சந்தோஷத்தைத்தான் கொடுக்கும். பேசிவிட்டு வெளியே போனவுடன் முதுகைத் தட்டிக் கொடுக்கலாம். பார்த்தாயா நாடோடி என்று சொன்னேன் என்று திருப்திப்படலாம். ஆனால் அந்தத் திருப்தி நீண்ட திருப்தியைத் தராது.

**திரு. டி. மார்டின் :** அவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் தீ வைப்பும் சம்பந்தமாக எந்த விதமாகப் பேசிக்கொள்கிறார்கள் என்பதைப் பற்றித்தான் இந்த அவையிலே குறிப்பிட்டேன்.

மேலும், எதிர்க் கட்சியை அழித்துவிட வேண்டுமென்ற நோக்கத்திற்காக அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்தத் தீ வைப்புகள் நடைபெறுகின்றன என்று கூறிய நேரத்தில், இந்த விதமாகப் பெண்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். கவனக் குறைவின் காரணமாகத் தீப் பிடித்தது என்பதை நான் முன்பே சுட்டிக் காட்டினேன். அதற்கு ஆதாரமாக தினத்தந்தியில் 2-7-68-ல் செய்தியும் வந்திருக்கிறது. என் இந்த விதமாகக் கூறுகிறார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத் தீ வைக்கப்பட்டது என்றால் அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காரர்களை அல்லவா கோர்ட்டில் கொண்டு போய் நிறுத்தியிருக்க வேண்டும். குற்றவாளிக் கூண்டில் சாதாரணப் பெண்களையல்லவா நிறுத்தியிருக்கிறார்கள். அப்படியானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத்தான் இது நடைபெற்றது என்று கூறியது எதிர்க் கட்சியே இருக்கக் கூடாது என்ற நினைப்பில் கூறியதாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

மேலும், மாநிலத்தில் அரசின் உத்தியோகங்களை வழங்குவதில் அமைச்சர்களுடைய உறவினர்களுக்குச் சலுகை காட்டப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். சென்னையிலுள்ள சங்கீத நாடக அகாடமியின் முதல்வராக சிறிமைப் பின்னணிப் பாடகராக இருக்கின்ற சிதம்பரம் ஜெயராமனை நியமித்திருக்கிறார்கள். அதற்குப் பல ஆயிரக்கணக்கான ரூபாய் ஆனரோரியமாகக் கொடுக்கப்படுகிறது. அவர் கர்நாடக சங்கீதத்தில் அனுபவம் பெற்றவராக இருக்கலாம். அதே நேரத்தில் செம்மங்குடி சீனிவாச அய்யர், மகாதேவ அய்யர், எம். எஸ். சுப்புலட்சுமி, சீர்காழி கோவிந்தராஜன் போன்ற பெரிய கர்நாடக சங்கீத வித்துவான்கள் இருக்கிற நேரத்தில், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு அத்தான் உறவினர் என்ற முறையில் சிதம்பரம் ஜெயராமன் அவர்களுக்கு முதல்வர் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அமைச்சர்களுடைய உறவினர்கள் ஒரு பதவியைப் பெறுவதற்கான தகுதியைப் பெற்றிருப்பார்களேயானாலும் கூட, அமைச்சருக்கு உறவினர் என்ற காரணத்தால் பதவி கொடுக்கக் கூடாது என்பது சட்டமா என்று அறிய விரும்புகிறேன்.



**திரு. டி. மார்டின் :** அவரை விடத் திறமையானவர்கள், செம்மங்குடி சீனிவாச அய்யர், சித்தூர் சுப்பிரமணியம், சாத்தூர் சுப்பிரமணிய அய்யர், மதுரை சோமு, எம்.எல். வசந்தகுமாரி, எம்.எஸ். சுப்புலட்சுமி போன்ற கர்நாடக சங்கீத வித்துவான்கள் இருக்கும்போது சிதம்பரம் ஜெயராமன் அவர்களுக்கு அந்தப் பதவியைக் கொடுத்தது அமைச்சர் அவர்களுடைய உறவினர் என்ற காரணத்திற்காக என்பதல்லாமல் வேறு என்ன ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** நண்பர் அவர்களுக்குப் படத்தைப் பார்த்துப் புரிந்துக் கொள்ளத் தெரியவில்லை என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். சங்கீத வித்துவான்களின் வரிசை முறை கூட அவருக்குத் தெரியவில்லை என்பதற்காகத் நான் வருந்துகிறேன். அவர்கள் குறிப்பிட்ட ஒவ்வொருவரும் சிதம்பரம் ஜெயராமன் அவர்கள் சிறந்த இசைவாணர் என்பதை ஒத்துக்கொள்ளக் கூடியவர்கள். அவருடைய தரம் முதன்மையானது என்பதை நம்முடைய நண்பர் அவர்கள் இசைத் துறையில் பயிற்சி பெற்றவர்களைக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். மற்றும், இன்னாரை நியமிக்கக் கூடாதா என்று கேட்டு சில பெயர்களைச் சொன்னார்கள். அவர்களிலே சிலர் கூட பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் உறவினர் பட்டியலிலேதான் வருவார்கள்.

**திரு. டி. மார்டின் :** இந்த அமைச்சரவையிலுள்ள ஒரு அமைச்சருடைய நெருங்கிய உறவினர் என்ற காரணத்தால் கொடுக்கப்பட்டது என்று சங்கீத வித்வான்கள் பேசிக் கொள்கிறார்கள், மக்கள் மத்தியிலும் பேசப்படுகிறது. ஆகவே, அதை இந்த அவையில் எடுத்துக் கூறினேன். இதற்கு முன்பு இங்கு முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் மலேயா தமிழ்ச் சங்கத்திற்குத் தமிழ் பேரவை டி. ராஜன் அவர்களையும், தமிழறிந்த மாண்புமிகு நெடுஞ்செழியன் அவர்களையும் அன்று அழைத்துச் சென்ற நேரத்தில், இந்த மாமன்றத்திலே இன்று அமைச்சராக இருக்கக்கூடிய ஒருவர், அன்று கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசுகையில், "திரு பக்தவத்சலம் அவர்கள் இந்த மாநில முதலமைச்சரா அல்லது தொண்டைமண்டல துளுவவேளாள சைவ முதலியார் சங்கத்திற்குத் தலைவரா ?" என்று கேட்டார்கள். அப்போது அதைக் குற்றம் என்று சொன்னவர்கள் இன்று அவர்களுடைய ஆட்சியில் இந்த விதமான தவறுகளைச் செய்யலாமா என்றுதான் கேட்கிறேன். இந்த விதமான தவறுகளைச் செய்யலாமா என்றுதான் கேட்கிறேன். குறிப்பாக, போலீஸ் துறையை எடுத்துக் கொண்டால், ஆளும் கட்சியில் உள்ளவர்கள் அன்றாட நிகழ்ச்சியில் தலையிடுகிறார்கள். புதுக்கோட்டையில் பழைய எம்.எல்.ஏ.-வாக இருந்த தியாகராஜ காடுவெட்டி சப்-இன்பெக்டரைத் தாக்கிய வழக்கு, அவனியாபுரத்தில் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு போலீஸ் வழக்குத் தொடர்ந்த நேரத்தில் கழகத்தாரால் வழக்கைப் பதிவு செய்யக்கூடாது என்று அதிலே தலையிட்ட வழக்கு......

**மாண்புமிகு திரு. சி.என். அண்ணாதுரை:** கழகத்தார் என்று சொல்லுகின்றபோது, எடுத்துக்காட்டப்பட்ட இரண்டு நிகழ்ச்சிகளிலே, காடுவெட்டி தியாகராஜன் அந்த மாதிரி நடந்து கொண்டார் என்பதற்காக வழக்குப் பதிவாகி, விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கிறார். அதோடு மட்டுமல்லாமல் அவர் சார்ந்திருந்த புதுக்கோட்டை திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நீக்கி வைக்கப்பட்டும் இருக்கிறார்.

**திரு. டி. மார்டின் :** திருச்செந்தூரிலே கறுப்புக் கொடி காட்டுவதற்காக அமைதியாக இருந்த இளைஞர்களை . . .

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** நண்பர் அவர்கள் நான் சொன்னதை ஏற்றுக் கொள்ளுகிறாரா இல்லையா என்பதைப் பற்றிச் சொல்லிவிட்டு மேலே செல்லுவதுதான் முறையாக இருக்கும்.

**திரு. டி. மார்டின் :** சட்ட மன்ற உறுப்பினர் இந்த மன்றத்திலே பேசுகின்றபோது எதை அவர் கூற வேண்டுமென்று விரும்புகிறாரோ அதைக் கூறுவது அவர் விருப்பமே தவிர வேறு யாரோ ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காகக் கருத்தை மாற்றிப் பேசுவது என்பது முறையாகாது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவர் ஒரு தவறான தகவலைக் கொடுக்கிறபோது அமைச்சர்கள் விளக்கத்தைக் கொடுத்தால் அதை அவர் ஏற்றுக் கொள்ளுகிறாரா இல்லையா என்று கூறவேண்டும். அதை ஏற்றுக் கொள்ளத்தான வேண்டுமென்று நான் கூறவில்லை. அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று வேண்டுமானாலும் கூறலாம். இரண்டையுமே சொல்லாமல் அந்த இடத்திலேயே நிறுத்திவிட்டு மேலே போவது சரியல்ல.

**திரு. டி. மார்டின் :** அந்த இரண்டு சம்பவங்களையும் நான் குறிப்பிட்டதற்குக் காரணம் கழகத்தவர்கள் போலீஸ் நிர்வாகத்திலே தலையிடுகிறார்கள் என்பதைக் கூறுவதற்காகத்தான். அவ்வாறு கூறுவதற்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்தக் காரியத்திலே ஈடுபட்டவர் மீது வழக்குத் தொடரப்பட்டு தண்டிக்கப்பட்டார், கழகத்தில் இருந்து நீக்கி வைக்கப்பட்டார் என்று குறிப்பிட்டேன். அந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் கூறவில்லை. அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அவர் கூறுவாரானால் அதைப் படிக்கின்ற பொதுமக்கள் முதலமைச்சர் சொன்ன விளக்கத்தையும், உறுப்பினர் அவர்கள் கூறுவதையும் வைத்து நிலைமையைப் புரிந்து கொள்ளுவார்கள்.

**திரு. டி. மார்டின் :** திருச்செந்தூரிலே . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நண்பர் அவர்கள் வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள். வழக்கு மன்றத்தில் நிறைய வெற்றி பெறவேண்டும். இப்படி வழக்கு மன்றத்தில் ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லி, எதிர்த்தரப்பில் இருக்கின்றவர்கள் அதிலுள்ள குறையைச் சொல்லுகின்றபோது அதைப் பற்றிப் பேசாமல் மேலே போனால், "சரக்கு இல்லை" அதனால்தான் மேலே போய்விட்டார் என்று தான் எடுத்துக் கொள்ளுவார்கள்.

**திரு. டி. மார்டின் :** வழக்குமன்றத்தில் வாதி தரப்பிலும், பிரதிவாதி தரப்பிலும் வாதங்கள் நடத்தப்பட்ட பிறகு தீர்ப்பளிக்க வேண்டியவர் நீதிபதி. எதிர்க்கட்சியின் சார்பில் நான் கூறுகிறேன், முதலமைச்சர் அவர்கள் அவர்களுடைய கட்சியை எடுத்துக் கூறிவிட்டார்கள். தீர்ப்பளிக்க வேண்டியவர்கள் பொதுமக்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** தீர்ப்பளிக்க வேண்டியவர்கள் பொதுமக்கள் என்ற முறையில் நான் சொன்ன விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லுங்கள். அது கூடத் திருப்தியளிக்கும். எதுவுமே நடக்காதது மாதிரி மேலே பேசிக் கொண்டு போவதுதான், பொதுமக்கள் "திருப்பித் திருப்பி முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கொடுக்கிறார்கள், அவ்வாறு விளக்கத்தைக் கொடுத்த பிறகும் உறுப்பினர் ஒன்று மறுக்கிறேன், அல்லது ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று கூடச் சொல்லாமல் மேலே போய் கொண்டிருக்கிறாரே, முதலமைச்சர் கொடுத்த விளக்கத்தினால் திகைத்துப் போனாரா அல்லது தடுமாறிப் போனாரா" என்றெல்லாம் எண்ணிக் கொள்வார்கள்.

**திரு. டி. மார்டின் :** பொதுமக்கள் பார்வைக்கு அதை விட்டு விட்டுச் செல்லுகிறேன்.

நெல்லை மாவட்டத்திலே திருச்செந்தூரிலே கறுப்புக்கொடி காட்டுவதற்காக நின்று கொண்டிருந்த பொதுமக்களை, இளைஞர்களை, கழக வட்டச் செயலாளர் உட்பட அங்கு வந்து வேல், கம்பு, அரிவாள் ஆகியவற்றால் தாக்கினார்கள். தாக்குண்டவர்கள் போலீசில் ரிப்போர்ட் செய்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதற்கு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்லுவார்கள்? எஃப் ஐ.ஆர்.



இருக்கிறது, அடிபட்டவர்கள் இருக்கிறார்கள். ஆஸ்பத்திரிக்குச் சென்றவர்கள் இருக்கிறார்கள். குத்துக்காயம் பட்டவர்கள் இருக்கிறார்கள். இதன் மீது கொடுக்கப்பட்ட புகார் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதற்கு முதலமைச்சர் அவர்கள் நியாயமான பதிலைத் தர வேண்டும். நான் சொன்னதைப் போன்று இன்று ஆட்சியிலுள்ளவர்களைச் சேர்ந்தவர்கள் போலீஸ்துறையின் அன்றாட நிகழ்ச்சிகளிலே தலையிட்டு இந்த விதமான காரியங்களைச் செய்கிறார்கள். ஸ்ரீவைகுண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்னுடைய பக்கத்து தொகுதியைச் சேர்ந்த ராதாபுரத்தில் பேசுகிறபோது, "இந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரிடம் நீங்கள் எதுவும் சொல்லவேண்டாம், கழக வட்டச் செயலாளரிடம் எது வேண்டுமானாலும் கூறுங்கள்" என்று கூறியதன் காரணமாக வட்டச் செயலாளரால்தான் எல்லாக் காரியங்களையும் நடைபெறச் செய்ய முடியும் என்ற எண்ணம் ஏற்பட்டு பல லட்சம் மக்களுக்குப் பிரதிநிதியாக இருக்கக்கூடியவரை உதாசீனம் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை ஆட்சியாளர்களுக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மணி அடிக்கப்பட்டது)

முற்பகல் 11-30

எனக்குக் கொடுத்த நேரத்தில் முதல் அமைச்சர் அவர்களின் குறுக்கீட்டால் சிறிது காலதாமதம் ஏற்பட்டது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் : திரு. வி. எஸ். கோவிந்தராஜன் :** மற்றவர்களுக்குத் தருவதைவிட எட்டு நிமிடங்கள் அதிகமாக உங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** இடையிடையே குறுக்கீடுகள் இருந்தன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. வி. எஸ். கோவிந்தராஜன்) :** அதற்காகத்தான் உங்களுக்கு அதிக நேரம் ஒதுக்கப்பட்டது.

**திரு. இரெ. இளம்வழுதி :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1967 பெப்ரவரி மாதம் பொது மக்களின் நம்பிக்கையை இழந்து அதற்குப் பிறகு தென் சென்னையில் பாராளுமன்ற இடைத்தேர்தலில் மறுபடியும் மக்களின் நம்பிக்கையை இழந்து, மறுபடியும் சங்கரியில் நடந்த இடைத் தேர்தலில் மக்களின் நம்பிக்கையை இழந்து, கடைசியாக தென்காசி இடைத் தேர்தலில் மக்களின் நம்பிக்கையை இழந்து இருக்கிற ஒரு கட்சி, இன்று மக்களின் நம்பிக்கையை பெருவாரியாகப் பெற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் மீது இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதைக் கண்டு நான் உள்ளபடியே ஆச்சரியப்படுகிறேன். ஏனென்றால் அவர்களுடைய பெருந்தலைவர் கடந்த ஒரு ஆண்டு காலமாக அடிக்கடி சொல்லி வருகிறார். திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் முழுமையாக ஐந்து ஆண்டு காலம் ஆளவேண்டும், அவர்கள் இடையில் ஓடிவிடக் கூடாது என்றும் அப்படி ஓடுவதற்கு நான் விடமாட்டேன் என்றும் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். ஆனால் அவர் கட்சியைச் சார்ந்தவர்கள் இப்போது இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்று கதிரவன் எழுந்ததும் காரிருள் அகலும் என்று கருதினோம். ஆனால் அப்படியில்லை. அதற்கு மாறாக காங்கிரஸ்காரர்கள் இந்த அரசின் மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து 11 குற்றச்சாட்டுக்களைச் சாட்டியிருக்கிறார்கள்.

அந்தக் குற்றச்சாட்டுகளில் முக்கியமாக அவர்கள் கருதுவது சட்டமும் ஒழுங்கும் இங்கு சீரழிந்து வருகிறது என்ற குற்றச்சாட்டைச் சாட்டியிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் முன்பு இருந்த அரசாங்கத்தின்போது நல்லமுறையில் சட்டம், அமைதி, ஒழுங்கு இருந்தது என்றும் அப்போது தமிழ்நாடு வெகு அமைதியாக இருந்தது என்றும் சொன்னார்கள். அவரது பார்வைக்கு நான் ஒரு உண்மையை எடுத்து வைக்க விரும்புகிறேன். முன்னால் காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோதுதான் முதுகுளத்தூரில் ஒரு பெரிய

கலவரம் ஏற்பட்டது. பல நாட்கள் அங்கு சட்டமே இயங்கவில்லை. பல பேர்கள் உயிருக்கு அஞ்சி வாழ்ந்தார்கள். பொதுமக்கள் பயமில்லாமல் தெருக்களில் நடமாட முடியவில்லை. அந்த நிலைமைதான் சட்டம், ஒழுங்கு இல்லாததொரு நிலைமை. அதுமட்டுமல்லாமல் 1965-ல் தமிழ்நாட்டில் இருந்த நிலைமை சட்டம் ஒழுங்கு அவற்றை சிறிது கூட கவனிக்காமல் பயங்கரமானதொரு சூழ்நிலை அப்போது நிலவி வந்தது. அந்த நேரத்தில் எந்த இடத்தில் எந்த நிலையில் யார் கைது செய்யப்படுவார்களோ என்ற பயமும், யார் யார் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுமோ என்ற பயமும், யார் யாரை எந்தக் குண்டர்கள் தாக்குவார்களோ என்ற பயமும் இருந்தது. அப்போது சட்டம் ஸ்தம்பித்து இருந்தது. காங்கிரஸ்காரர்கள் சரியானமுறையில் ஆட்சி புரியாமல் அவர்கள் கட்சிக்கொள்கைக்காக குண்டர்களையும் மற்றவர்களையும் ஏவி நாட்டில் அராஜகத்தை அவிழ்த்து விட்டிருந்தார்கள். அப்போதுதான் சட்டம், ஒழுங்கு இல்லையே தவிர கடந்த 1½ ஆண்டுகளாக சட்டமும் ஒழுங்கும் எந்த முறையில் இருந்து வருகிறது என்பதை அனைவரும் அறிவார்கள்.

அதே நேரத்தில் சட்டம், ஒழுங்கு நிலவவில்லை என்று சொல்கிறார்களே, இங்கு ஏதாவது வரி கொடா இயக்கம் நடைபெறுகிறதா ? அல்லது திட்டமிட்ட கலவரங்கள் நடைபெறுகின்றனவா ? அல்லது சட்ட மறுப்பு இயக்கம் பொதுஜன ரீதியில் நடக்கிறதா ? அல்லது மக்களின் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டிருக்கிறதா ? அல்லது மக்களுடைய வாழ்க்கை சட்டரீதியாக அமைக்கப்பட்ட அரசாங்கக் கொள்கைக்கு முரணானதாக இருக்கிறதா என்றால் இல்லை. ஆனால் காங்கிரஸ்காரர்கள் சென்ற ஓராண்டு காலமாகத் திட்டமிட்டுச் சொல்லி வருகிறார்கள். இந்த ஆட்சியில் சட்டமும், ஒழுங்கும் கெட்டு வருகிறது என்று. ஒரு வருடத்திற்கு முன்பு சொன்னார்கள். இந்த ஆட்சியில் பெண்கள் நிர்ப்பயமாக நடமாட முடியவில்லை, ஆகவே சட்டம், ஒழுங்கு இங்கு பாதுகாக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அங்கு ஒரு காரியம், இங்கு ஒரு காரியம் என்று காட்டி ஓரிருவருக்குள் சண்டை என்றாலும், யாரையாவது கைது செய்தாலும, யார் யாரை யாவது குத்திவிட்டாலும், சிறிய கலவரங்கள் ஏற்பட்டாலும், கொள்ளை அல்லது திருட்டு இருந்தாலும் அவைகளை எல்லாம் அதோ பாருங்கள் இங்கே சட்டம் கெட்டுவிட்டது, இதோ பாருங்கள் இங்கே சட்டம் கெட்டு விட்டது என்று சுட்டிச் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் அவைகள் மட்டும் போதுமா ? அவை அத்தனையும் அன்றாடக் காரியங்களில் வரக்கூடியவை, அதாவது சாதாரணமாக வரக்கூடிய காரியங்கள். அவைகளை வைத்துக்கொண்டு காங்கிரஸ்காரர்கள் சட்டம், ஒழுங்கு கெட்டு விட்டது என்று சொல்வது கொஞ்சம் கூட நியாயமே இல்லை.

நண்பர் மார்டின் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், சென்னை நகரில் திட்டமிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தீ இட்டார்கள் தேர்தலுக்காக, என்று. அவர்களுக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். அப்படித் தீ இட்ட தீயவர்களில் ஒருவனை கைப்பிடியாகப் பிடித்து, அவன் கைது செய்யப்பட்டு பிறகு வழக்கு மன்றத்தில் தண்டிக்கப்பட்டிருக்கிறான். அந்த நபர் யார் ? பொதுமக்களில் ஒருவனா ? தீய சக்திகளில் ஒருவனா ? என்றால் அரசியல் ரீதியாகப் பார்த்தால் அவன் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவன். அப்படி காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஒரு நபர் தண்டிக்கப்பட்டிருக்கிறான் என்றால் அந்தக் காரியங்களில் காங்கிரஸ்காரர்களுக்கு சம்பந்தம் இருக்கிறது. நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி திட்டமிட்டு செய்த செயலாக நான் கருதவில்லை, எந்த ஒரு அரசியல் கட்சியும் திட்டமிட்டு செய்ததாக நான் கருதவில்லை என்றார்கள். அப்படி அவர்கள் சொன்ன ஒரே காரணத்தால் காங்கிரஸ்காரர்கள் தப்பித்துக் கொள்ளமுடியாது. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இளைஞர் காங்கிரஸ்காரர்கள் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த வழக்கு ஹைகோர்ட்டில் விசாரணையில் இருக்கிற காரணத்தினால் உறுப்பினர் அவர்கள் தயவு செய்து அந்தத் தீர்ப்பிற்குப் பாதகம் இல்லாத முறையில் அதைப் பற்றிக்கூற வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அதைச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னபோது எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு இந்த உணர்வு வந்திருந்தால் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்போம்.

**திரு. இரெ. இளம்வழுதி :** இந்தப் பிரச்னை வழக்கு மன்றத்தில் இருப்பது எனக்குத் தெரியும். நான் வழக்கின் தாரதம்மியத்தைப் பற்றிப் பேசவில் . வழக்கின் விவகாரங்களைப் பற்றி விமர்சிக்கவில்லை. ஆனால் இருக்கிற உண்மையை எடுத்துச் சொல்கிறேன். அந்த வழக்கில் அகப்பட்ட ஒரு குற்றவாளி காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவன். அதை இல்லை என்று மறுக்க முடியுமா ? அப்படி இல்லை என்றால் எங்களுக்கும் இதற்கும் காத தூரம் என்று ஓடிவிடலாம். ஆனால் நிலைமை அப்படியில்லை. காங்கிரஸ்காரர்களாக இருப்பவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதை அறிந்துகொள்ளாமல் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் தேர்தலுக்காக இதைத் திட்டமிட்டுச் செய்தார்கள் என்று சொல்லுவதில் கொஞ்சம் கூட அர்த்தமே இல்லை. அதை ஒரு பொறுப்பான வாதமாக ஏற்றுக் கொள்ள முடியாது. கடந்த ஒரு ஆண்டு காலத்திற்கு மேலாக தமிழ்நாட்டில் நடைபெறுகிற ஆட்சி நிம்மதியாக, நிதானமாக நல்ல முறையில் நடைபெறுகிறது என்பதைக் கண்டு மனம்பொறுக்காத காங்கிரஸ்காரர்கள் அந்த உண்மையை மறைத்துக் காரியங்கள் ஆற்றுகிறார்கள். பல இடங்களில் அவர்கள் கலவரங்களைத் தூண்டுகிறார்கள். வித்தை விதைத்துவிட்டு மறுநாள் காலையிலேயே அது முளைத்துவிட்டதா என்று பார்க்கிறார்கள்.

கடலூருக்கு மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களும், விவசாய அமைச்சர் திரு கோவிந்தசாமி அவர்களும் வந்திருந்தபோது காங்கிரஸ்காரர்கள் கருப்புக் கொடி காட்டினார்கள. கருப்புக் கொடி காட்டுவது என்பது ஜனநாயகத்தில் அவர்களுக்குள்ள உரிமை. அதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் கருப்புக் கொடி காட்டும்போது அந்த காங்கிரஸ் நண்பர்கள் கருப்புத் துணியைக் கட்டி மட்டுந்தான் எடுத்து வந்தார்களா ? சில கழிகளில் கருப்புத் துணிகள் இருந்தன. சிலர் வெறும் கழிகளை வைத்துக்கொண்டிருந்தார்கள். அப்படி வெறும் கழிகளையும் வைத்துக்கொண்டு அவர்கள் லைனாக நின்று கொண்டிருந்தார்கள். கருப்புக் கொடி காட்டும்போது சிலர் கருப்புக் கொடிகாட்டினார்கள். மற்றவர்கள் கழியையும் கம்பையும் எடுத்துக்கொண்டு அமைச்சர்களின் கார்களை நோக்கி ஓட, போலீஸார் வந்து தடுத்து நிறுத்தினார்கள். அதைக் கண்டு காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள், சட்டமும் அமைதியும் ஒழிந்துவிட்டதே என்று. எங்களைத் தடுக்கிறார்களே இது நியாயமா என்றார்கள் சிலர். அப்படி அவர்களைத் தடுக்காமல் இருந்தால் அங்கு அமைதியும், ஒழுங்கும், சட்டமும் காக்கப்படுமா ? மந்திரிகள் வருகிறார்கள், அவர்களைத் தாக்குவதுதான் காங்கிரஸின் திட்டமா ? கருப்புக் கொடி காட்டுவது என்பது அவர்களின் எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டுவதற்கு. இதை எடுத்துச் சொல்லும்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்கள் சொன்னார்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கும் இந்தக் கருப்புக் கொடி நிகழ்ச்சிக்கும் சம்பந்தம் இல்லை என்று. பிறகு யார் செய்வது ? காங்கிரஸ்காரர்கள் இல்லையா ? அவர்களைக் கட்டுப்படுத்த சக்தி இல்லையா ? கட்டுப்படுத்த முடியாமல் கட்சி நடக்கிறதா ? என் கட்டுப்பாடு இல்லாத அளவுக்குத் தொண்டர்கள் இருக்கிறார்கள் ? இவ்வாறு இருந்துவிட்டு, பாருங்கள், பாருங்கள், சட்டமும், அமைதியும் கெட்டு விட்டது என்று சொல்லுகிறார்கள். அதே போல பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் தங்கியிருந்த இடத்தில் பல காங்கிரஸ்காரர்கள் தடிகளை எடுத்துக்கொண்டு தாக்கச் சென்றார்கள். கல்வி அமைச்சர் அவர்களையும் தாக்கச் சென்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளைத் தாங்களாகவே வருவிக்கிறார்கள். அதனால் கலகம் வராதா, அதை வைத்துக்கொண்டு பிரச்சாரம் செய்ய முடியாதா என்றெல்லாம் ஆசைப்படுகிறார்கள்.

போலீஸ் துப்பாக்கிச் சூடு, தடியடி போன்ற காரியங்கள் அன்றுட நிகழ்ச்சிகளில் வருவது. கடந்த ஒரு வார காலத்திற்குள் பக்கத்திலே இருக்கிற காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களில் நடைபெற்ற இரண்டு நிகழ்ச்சிகளைக் கூற ஆசைப்படுகிறேன். மராட்டிய மாநிலத்தில் அம்ரோட்டி என்ற இடத்தில் இரண்டு, மூன்று துப்பாக்கிப் பிரயோகம் நடந்து 6 பேர் இறந்திருக்கிறார்கள். மாணவர்கள் கிளர்ச்சியில் இந்தத் தகராறு நடந்திருக்கிறது. அதே மராட்டிய மாநிலத்தில் பம்பாய் சிவசேனை அட்டகாசத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் சினிமாக் கொட்டகை தாக்கப்பட்ட செய்தி வந்தது. ஆந்திர மாநிலத்தில் ஆகஸ்டு 19-இல் ஔரங்காபாத் அருகில் பார்பன் நகரில் மாணவர் தகராறில் போலீஸ் லத்தி சார்ஜ் செய்துள்ளது. அங்கு ஊரடங்கு உத்திரவு வந்திருக்கிறது. ஆந்திர மாநிலத்தில் உஸ்மானியாவில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். அடுத்தபடியாக டெல்லி நேரடியாக ஆட்சி புரிகின்ற உத்திரப் பிரதேசத்தில் போன வாரம் கோண்டா என்ற ஊரில் ஒரு பெண்ணை நிர்வாணமாக அழைத்து வந்ததால் போலீஸாருக்கும் கிராமத்தாருக்கும் தகராறு ஏற்பட்டிருக்கிறது. இப்படி ஆந்திராவில், மராட்டியத்தில், மத்திய சர்க்காரில் நடைபெற்றிருக்கிறதே, இதைப் பற்றி இவர்கள் என்ன கருதுகிறார்கள்? நான் குறிப்பிட்டது கடந்த 7 நாட்களுக்குள் ஏற்பட்ட சம்பவங்கள், 10, 15 ஆண்டுகளுக்கு முன் நடந்ததைக் குறிப்பிடவில்லை. இவைகளெல்லாம் சாதாரண, அன்றுட நிகழ்ச்சிகளில் வரும் சம்பவங்கள். இந்த சாதாரண சம்பவங்களையே பெரிய பிரச்னைகளாக ஆக்கி, அதைக் கொண்டு அரசியல் லாப வேட்டை அடைய நினைக்கிறார்கள். அதற்குத் தான் நாட்டு மக்கள் கடைசியாகத் தென்காசியில் தீர்ப்பு வழங்கிவிட்டார்கள். இதை நான் கூறுவதன் நோக்கம், முக்கியமான காங்கிரஸ்காரர்கள் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களைப் போன்றவர்கள், முன்னேற்றக் கழகம் ஆட்சிக்குவந்தால் பெண்கள் பயமில்லாமல் நடமாட முடியாது என்றுசொன்னார்கள். ஆனால் தென்காசித்தேர்தலில்ஏராளமான பெண்கள், ஆண்களை விடத் தீவிரமாக வாக்குச் சாவடிக்குச் சென்று நம்முடைய முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராகிய கதிரவனுக்கு ஓட்டளித்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். இப்படியிருக்கும் நிலையில் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகளை யார ஒப்புக்கொள்ளுவார்கள் இப்பொழுது இங்கு காங்கிரஸ்காரர்கள், அவர்களின் தலைவர் திரு கருத்திருமன் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானம் தேவையற்றது, பொறுப்பற்றது, நியாயமற்றது, ஆதாரம் இல்லாதது என்று கூறிக் கொண்டு இந்தத் தீர்மானம் இங்கு நிராகரிக்கப்படும் என்ற நம்பிக்கையில் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பொறுப்பற்றது என்று சொல்லுவது பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கு உகந்ததா என்று தாங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். பொறுப்போடுதான் எதிர்க் கட்சி என்ற முறையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம், பொறுப்பற்ற தன்மையிலே கொண்டுவரவில்லை. எனவே பொறுப்பற்றது என்ற வார்த்தையை சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்** (திரு. வி. எஸ. கோவிந்தராஜன்) : நேற்றுகூட எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்பொழுது பொறுப்பற்றது என்ற வார்த்தையை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு முதலமைச்சரவர்கள் விளக்கமும் தந்திருக்கிறார்கள்.

**திரு. இரெ. இளம்வழுதி :** அதைப் பற்றி நீங்கள் ரூலிங் கொடுத்து விட்டீர்கள். இன்னும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கூறி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன். முன்னேற்றக் கழகத்தினர் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பாளையங்கோட்டையில் திருநெல்வேலி நகர காங்கிரஸ் தலைவர் மீது 406 ஐ.பி.எஸ்ஸில் இருந்த வழக்கை அன்றிருந்த காங்கிரஸ் அரசாங்கம் உடனடியாக வாபஸ் பெற்றது. கூட்டுறவுச் சங்கத்தில் கையாடல் செய்ததாக இருந்த வழக்கை அன்றிருந்த அரசாங்கம் வாபஸ் பெற்றிருக்கிறது என்பதை மட்டும் இந்த அவையில் சமர்ப்பிக்கிறேன்.





**திரு பி. வேலுசாமி :** தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியானது இந்த நம்பிக்கையின்மைத் தீர்மானத்தைக் கொண்டுவரும்பொழுது நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். எனது கட்சியைச் சேர்ந்தவர்களோ, அல்லது எஸ். எஸ். பி யைச் சேர்ந்தவர்களோ, இடது சாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களோ, வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களோ இப்படி ஒரு தீர்மானம் கொண்டுவந்திருந்தால் அதற்குப் பொருள் இருக்கும் என்று கருதுகிறேன். காரணம், தொழிலாளிகள் சம்பந்தப்பட்டவரையில் 1948-ஆம் வருஷத்திலிருந்து போன 1967 வரையிலும் காங்கிரஸ் கட்சியானது தமிழகத்தை அரசாண்டுகொண்டிருந்தது. அப்படி அரசாண்டு கொண்டிருக்கும்பொழுது 1948-ஆம் ஆண்டு தமிழக சர்க்கார், அன்றிருந்த காங்கிரஸ் சர்க்கார் கோயம்புத்தூரில் வேலை செய்து கொண்டிருந் தொழிலாளர்கள் 11,000 பேர்களைச் வேலையை விட்டு நீக்கினார்கள். ஒரு நபர் அல்ல. இரு நபர் அல்ல, 11,000 பேர்களைச் சட்டபூர்வமாக வேலையை விட்டு வெளியே போங்கள் என்று சொன்னார்கள். அன்றிருந்த பஞ்சாலை நிலைமை வேறு, இன்றிருப்பது போல் அன்று இல்லை. இன்று தொழிலில் பல நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாலை நடத்துவது முடியாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அன்று, 1948-ஆம் வருஷத்திலே யுத்த பிற்கால சேமிப்பு நிதி என்று வைத்திருந்தார்கள். அதை மூலதனத்தோடு சேர்த்து, முதலீட்டு மூலதனத்தோடு சேர்த்து 100 ரூபாய் பங்கு போட்டிருப்பவர்களுக்கு 50 ரூபாய் வட்டியாகக் கொடுத்த காலமாக இருந்தது 1948-இல். அப்படி மில்களில் ஏராளமான அளவில் லாபம் வந்துகொண்டிருந்த காலம், மில்கள் எதைக் கொடுத்தாலும் தாங்கும் சக்தி படைத்திருந்த காலம், அந்தக் காலத்திலே, அந்த 11,000 பேர்கள் வேலையின்றி தெருவிலே விடப்பட்டனர். அது மட்டுமின்றி அன்று ஆயிரம் பேர்களுக்கு அவர்கள் மேல் கேஸ் தொடுக்கப்பட்டது. ஒன்றும் அறியாத சாதாரண தொழிலாளிகள் கூலி கேட்ட ஒரே காரணத்திற்காக ஆயிரம் பேர்களின்மேல் கேஸ்கள் போடப்பட்டு வழக்குகள் நடந்தன. அன்று 11,000 பேர்களைத் தெருவிலே விட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்று பஞ்சாலை நெருக்கடிக்கும், இன்றிருக்கும் நிலைமைக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது என்றும் அதனால்தான் இப்படி வந்துவிட்டது என்று சொல்லும அளவிற்கு இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இன்றிருக்கும் சர்க்கார் வாஸ்தவத்திலேயே,சோஷலிசத்தை நோக்கி வேகமாகச் செல்ல வில்லை என்ற குறைபாடும், இவர்கள் இன்னும் இருக்கின்ற தீவிரத்தை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணமும் உண்டு. ஆனால்; தொழில் களிலே தொழிலாளர்களுக்கு அன்றிருப்பதற்கும், இன்றிருப்பதற்கும், பாகுபடுத்திப் பார்த்தால் அன்றிருந்த பஞ்சாலை நிலைமையையும் இன்றிருக் கும் பஞ்சாலை நிலைமையையும் கூர்ந்து கவனித்தால் அன்று மொத்த மாகக் கோவையில் 32 பஞ்சாலைகள் இருந்தன. அதில் 40,000 தொழி லாளர்கள் வேலை செய்தார்கள். இன்று அதே இடத்தில் 84 பஞ்சாலை களாக உயர்ந்திருக்கின்றன. ஆனால் அதில் வேலை செய்த தொழிலாளர் களின் எண்ணிக்கை நாற்பதாயிரமாகவே இருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது, வேலை வாய்ப்பு உ திகப்படுத்த பெரு முயற்சிகள் நடந்ததாகச் சொல்லப்படுகிறதே, அப்படி வேலைவாய்ப்பை அதிகப்படுத்த எப்பொழுது முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது, அவ்வாறு சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறது. என்ன நடந்தது தேசத்திலே, பஞ்சாலைத்தொழிலாளிகள் கூலி கேட்பதற்கு, தங்களின் உரிமையைக் கேட்பதற்கு, கஷ்டங்களைச் சொல்லுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்காமல் அன்று அவர்களுக்கு அதிகபட்சமான வேலையைக் கொடுத்து, அதற்குத் தகுந்த கூலியைக் கொடுக்காமல் அங்கிருக்கும் முதலாளிகள் பெரும் லாபம் சம்பாதிப்பது கான வாய்ப்பை சர்க்கார் உண்டாக்கி, ஏராளமான தொழில்களிலே லாபத்தை அதிகமாகப் பெறும் நிலையை உண்டாக்கினார்கள்.

அன்றையதினம் வேலை வாய்ப்பு ஏற்படுவதற்கு காங்கிரஸ் சர்க்கார் வாஸ்தவமாக முயற்சி எடுத்துக்கொண்டிருப்பார்களானால், அன்றையதினம் பஞ்சாலைகள் இருந்த எண்ணிக்கையையும், இன்றையதினம் இருப் பதையும் கணக்கெடுத்துப் பார்த்து, அன்றையதினம் இருந்த தொழிலாளிகளையும் இன்றையதினம் உள்ள தொழிலாளிகளையும் கணக்கெடுத்துப் பார்த்தால் கிட்டத்தட்ட 84,000 பேர்களுக்கு வேலை

கொடுத்திருக்க முடியும். ஆனால், அப்படிக் கொடுக்காமல், நவீன இயந்திரங்களைப் புகுத்தி வேலை வாய்ப்பு அற்ற நிலைமையை காங்கிரஸ் கட்சியானது அன்றைக்கு ஏற்படுத்தியது. இதன் மூலமாக என்ன நடந்தது என்று சொன்னால் பெரும் முதலாளிகள், சாதாரணமாகக் கொள்ளை இலாபம் பெருகின்ற முதலாளிகள் ஆகியவர்களை எந்த அளவிற்குக் கொண்டு சொல்ல வேண்டுமோ அந்த அளவிற்குக் கொண்டு சென்று அவர்களைக் கட்டுப்படுத்தாமல் முழுச் சலுகை வழங்கி இங்கே இருக்கிற குத்தகை முதலாளிகள் மொனுப்பலி காப்பிடலிஸ்ட்ஸ் வளர்வதற்கு முயற்சி செய்திருக்கிறதே யொழிய சாதாரண பாமர மகன், ஏழை மகன் தொழிலாளி இவர்களுக்கு வாழ்வளிப்பதற்காக அன்றைக்கு இருந்த சர்க்கார் முயற்சி செய்யாத காரணத்தால் அவர்கள் விட்டுவிட்டுப் போனதை இன்றைக்கு இருக்கிற சர்க்கார் அனுபவித்துக் கொண்டிருக்கிறது என்று நான் சொல்லுவேன்.

ஒரு சில விஷயங்களிலே இன்றைக்கு இருக்கிற சர்க்காரோடு வாஸ்தவமாக மாறுபட்ட கருத்தும் எனக்கு உண்டு. இன்றைக்குக் கோவையிலே கிட்டத்தட்ட 24 பஞ்சாலைகள் மூடி இருக்கின்றன. அந்த 24 பஞ்சாலைகளிலே 12, 13 பஞ்சாலைகளுக்குப் பொருளாதாரக் கஷ்டம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஒரு சில மில்களை நடத்துவதற்கான சௌகரியங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். உதாரணமாக ரங்க விலாஸ் ஆலை இருக்கிறது. அவர்கள் ஒரே ஒரு ஆலையை ஆரம்பித்துப் பல ஆலைகளை உண்டாக்கினார்கள். உண்டாக்கக்கூடிய பஞ்சாலை முதலாளிகளுக்கு இன்றைக்கும் ஏராளமான பொருளாதார சௌகரியங்கள் இருக்கின்றன. இன்றைக்கு இருக்கிற சர்க்கார் கொஞ்சம் வேறு துறையிலே முயற்சிப்பார்களானால் வாஸ்தவமாகவே அந்த ஆலைகள் மூடி இருப்பதற்கான நிலைமைகள் ஏற்பட்டிருக்காது. அதைச் செய்யத் தவறிவிட்டார்கள் என்பதே எனது கருத்து.ஆகையினால் இன்றைக்கு இருக்கிற சர்க்கார் முதலாளி தரப்பிலும் இல்லை; தொழிலாளி தரப்பிலும் இல்லை. நடுநிலையில் பிரச்னைகளை அணுகுகிறார்கள். எந்தப் பிரச்னைகளிலும் தொழிலாளிக்குக் கொஞ்சம் அதிகமான நியாயம் கொடுக்க வேண்டும். ஏனென்றால், முதலாளிகள் என்றைக்கு வேண்டுமானாலும் அவர்கள் பக்கத்தில் கொஞ்சம் அதிகமான நியாயம் எடுத்துக்கொள்வார்கள். சாதாரண ஏழைகளுக்குத்தான் நியாயம் கிடைப்பது கொஞ்சம் கஷ்டம். . முழுமையாக அவர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் வேலையில்லாத கஷ்டங்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். வாஸ்தவமாகவே வேலையில்லாத் திண்டாட்டம் வந்திருக்கிறது. வந்திருக்கிறபோது ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நாட்டிலே முதலாளிகள் முழுப் பணத்தையும் ஈடுபடுத்தி பாக்டரி நடத்துகிறார்களா? இருபது ஆண்டுக் காலத்திலே பெரிய பாக்டரிகள் ஏற்படுத்தப்பட்டன. அந்த பெரிய பாக்டரிகளை முழுவதும் மூலதனம் இட்டும் யாரும் இதுவரையிலே நடத்தவில்லை. உதாரணமாக சேஷசாயி பேப்பர் மில் இருக்கிறது. அதை நடத்துகின்ற முதலாளி அவர்களுக்கு ரூ. 8 இலட்சம் தான் அதிலே பங்கு. ஆனால் அந்த பாக்டரியினுடைய மொத்த மூலதனம் ரூ. 3 கோடி. ரூ. 3 கோடி மூலதனம் இருக்கிற அந்த ஆலைக்கு ரூ. 8 இலட்சம் பங்கு போட்டவர்தான் மானேஜிங் டைரக்டர். அடுத்தாற்போல் மெட்ராஸ் அலுமினியம் பாக்டரி. அந்த அலுமினியம் பாக்டரியினுடைய முதலாளிக்கு ரூ. 30 இலட்சம்தான் ஷேர் காப்பிட்டல். ஆனால் அந்த ஆலையினுடைய மூலதனம் ரூ. 10 கோடி. ரூ. 10 கோடி போட்ட ஆலையினுடைய முதலாளி யார் என்று சொன்னால், ரூ. 30 இலட்சம் போட்டவர். ரூ. 30 இலட்சம் போட்டவர்கள் அங்கே முதலாளியாக இருக்கிறார்கள். ஏதோ கொடுமை செய்யப்படுகிறது, முதலாளியை இப்படி நடத்துகிறார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அந்த முதலாளிக்குச் சர்க்கார் பணம் இல்லாமல் இன்னும் சொல்லப்போனால் முதலாளிகள் என்ன மூலதனம் போட்டிருக்கிறார்களோ அந்த மூலதனத்தைக் காட்டிலும் 4 மடங்கு, 5 மடங்கு, 7 மடங்கு மத்திய சர்க்கார், மாநில சர்க்காரினுடைய நிதியைப்





பெற்றுத்தான் அங்கே தொழில்களை எல்லாம் நடத்த முடியும்—நடத்துகிறார்கள். மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் எங்கெங்கோ உலக நாடுகளிடமெல்லாம் கெஞ்சிக் கேட்டுப் பெற்ற கடன்களை மில் முதலாளிகளுக்கும் பாக்டரி முதலாளிகளுக்கும் கொடுத்திருப்பதன் மூலம் பெற்ற இலாபத்தை எவ்வளவு மோசமாக, இழிவாக பயன்படுத்த வேண்டுமோ அவ்வளவு மோசமாகப் பயன்படுத்தியதால்தான் நாடு நலிந்து, சீரழிந்து. சின்னபின்னப்படுத்தப்பட்டுவிட்டது என்பதுதான் என்னுடைய கருத்து ஆகையால் வாஸ்தவமாக அன்றைக்கு இருந்த சர்க்கார் தொழில்களை ஆரம்பிக்கின்றபொழுது அந்தத் தொழில்களுக்கான உபதொழில்களை ஆரம்பிக்க முயற்சித்திருப்பார்களானால் இன்றைக்கு நன்றாக இருந்திருக்கலாம். ஐரோப்பா தேசத்திலேயுள்ள ஜெர்மனி நாட்டைப் போன்றோ அல்லது இங்கிலாந்தைப் போன்றோ ஆட்டோமேஷன் புகுத்தி, நவீன இயந்திரங்களைப் புகுத்தி, இங்கே வேலையில்லாத நிலைமைகளை அதிகப்படுத்துவதற்குத் தான் சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டது இதுவரையிலும். அமைச்சர் அவர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். கொஞ்சம் முன்னாலேயே அவருக்கு ஒரு தகவல் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். கோயம்புத்தூரிலே பம்ப் செட் பட்டறைகள் ஏராளமாக இருக்கின்றன. சிறு சிறு பட்டறைகள். அந்தப் பட்டறைகளுக்கு இன்னும் இரண்டு ஆண்டுகளிலே நிச்சயமாக நெருக்கடி வரப்போகிறது. காரணம் என்ன? கிர்லோஸ்கர் கம்பெனி என்ற ஒன்று மைசூரிலே இருக்கிறது. அது ஒரு நாளைக்கு 250 மோட்டார்களை உற்பத்தி செய்கிறது. அதனால் அங்கே இருக்கிற மோட்டார்கள் எல்லாம் இங்கே வருகின்றன. அந்தத் தொழிலுக்கு மோல்டு செக்ஷன் என்று ஒன்று சொல்வார்கள். அதை இங்கெல்லாம் மண்ணிலே உண்டாக்கவேண்டும். அங்கே அவர்கள் நவீன இயந்திரத்தைப் புகுத்தியதன் காரணமாக ஒரு நாளைக்கு 250 மோட்டார்களை உற்பத்தி செய்கிறார்கள். ஆனால், இங்கே சிறு சிறு பட்டறைகள் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் ஒரு நாளைக்கு 4 மோட்டார்கள், 5 மோட்டார்கள், 10 மோட்டார்கள் என்று உற்பத்தி செய்கிறார்கள். ஆக, அங்கே செய்யப்பட்ட மோட்டார்கள் மார்க்கெட்டுக்கு வருகின்றபொழுது இங்கே சாதாரணமாக இருக்கின்ற சிறு தொழில்கள் எல்லாம் அழிந்துபோவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது.

தமிழ்நாட்டில் சிறு தொழில்கள் வளர்வதற்கு வாய்ப்பில்லாமல் இருப்பதால், சிறு தொழில்கள் வளர்வதற்கான வாய்ப்பு உண்டாக்காமல் அங்கே மானோப்பலி காப்பிட்டலிஸ்ட்ஸ் செயல்படுவதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து போயிருக்கிறது. சிறு தொழில்கள் வளராததே வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம் ஆயிற்று. சென்ற சர்க்கார் செய்துவிட்டுப்போன தவறுகளை மாற்றி, ஒரு புதிய நிலைமைய, புதிய நிலைமைக்கொப்ப சமூக நிலையை உண்டாக்கி, சிறு தொழில்களுக்கு வாய்ப்பும் தொழிலாளிகள் பக்கத்திலே வேலை வாய்ப்புக்களை அதிகப்படுத்தியும் அதே நேரத்தில் படித்த வாலிபர்கள் பல இடங்களிலே நாட்டிலே வேலையில்லாமலிருப்பதால் அவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்பைத் தருவதற்குச் சிறு சிறு பட்டறைகள் உண்டாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக ஒரு கொல்லன் பட்டறையிலே 5 மண் வெட்டிகளோ 10 பிக் ஆக்ஸ்களோ செய்துவிடலாம்—ஒரு நாளைக்கு. ஆனால் டாட்டா தொழிற்சாலையிலே மண் வெட்டிகும் பிக் ஆக்ஸ்களும் தயாரிக்கப்பட்டு இங்கே வருகிறது. இது தேவைதானா? இதுபோன்று பல பொருள்கள் சிறு தொழில்களில் தயாரிக்கப்பட வேண்டியவை முழுமையாகக் குத்தகை முதலாளிகளால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால் மனாப்பலி காப்பிடலிஸ்ட்ஸ் வளர்ந்து அதன்பொருட்டு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. அத்துடன் நவீன இயந்திரங்கள் கொண்டுவந்ததன் காரணமாக நாட்டிலே பஞ்சமும், பட்டினியும் ஏழை எளிய மக்கள் இறக்கமற்ற நிலையிலே நடத்தப்படுகின்ற நிலைமையும்......

(மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

**திரு. க. இராமமூர்த்தி** : மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே ந.ப.
இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற நான் இந்தப் 12-00
தீர்மானத்தின் விளைவாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறு,

பிலிருந்து விலகிவிடும் என்றோ அல்லது அவர்கள் விலகி விட்ட இடத்தில் நாங்கள் உட்கார்ந்துவிட வேண்டும் என்பதற்காகவோ பேசவில்லை. அந்த எண்ணத்தில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை. ஜனநாயக அடிப்படையில் இந்த மன்றத்திலே அவ்வப்பொழுது ஆட்சி செய்கின்ற தவறுகளை நாம் சுட்டிக்காட்டுகிறோம். அதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தைவிட மிக அதிகமான அளவிலே தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அந்தத் தவறுகளைக் குறிப்பிட்டுப் பேசுவதற்கான ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்ற சூழ்நிலையிலே தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1½ ஆண்டு தி.மு.க. ஆட்சிக்குப் பிறகு அப்படிப்பட்ட தவிர்க்க முடியாத நிலைமை இன்றையதினம் நாட்டில் ஏற்பட்டுவிட்டது. அதனால் தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறது.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிரதன் அவர்கள் சொன்னார்கள். 6 மாதங்களுக்கு ஒரு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர முடியும் என்று அதிகாரம் இருப்பதை உபயோகப்படுத்துவதற்காக காங்கிரஸ்காரர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு மிக அவசியமான காரணங்கள் இருந்தபொழுதுகூட, நாங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவில்லை. எங்களுடைய தலைவர் அவர்கள், பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள் சொன்னார், தி.மு.க.வை பொறுத்தவரையிலே அவர்கள் புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள், ஆகவே சற்று பொறுத்திருந்து பார்க்கலாம் என்று சொன்னதை சிரமேற்கொண்டு, அவசியம் ஏற்பட்டபொழுதுகூட நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவில்லை. இந்த அவையில் காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற திரு. ஜெயராஜ் அவர்களுடைய கால் வெட்டப்பட்ட பொழுது, அந்த நிகழ்ச்சி நடந்தபொழுது நாங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கலாம். அடுத்து, இந்த நாட்டின் மாபெருந்தலைவர் தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் அமைச்சராக இருந்தவர், இன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருப்பவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பல்வேறு இடங்களுக்கு அரசியல் கூட்டங்களுக்காக, அரசியல் நிகழ்ச்சிகளுக்காக சென்றபொழுது, அவர் அந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாதபடி கல் எறிதல் நடப்பதும், அதைப் போலீசார் தடுக்காத நிலையும் ஏற்பட்டது. அதைப்பற்றி இந்த அவையிலே கேட்டோம். மாணவர்கள் பதட்டமாகஇருக்கிறார்களே, இவர்கள் என் அங்கே போகிறார்கள் என்று பொறுப்பைத் தட்டிக் கழித்தபொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கலாம். போலீசாரை பக்கத்தில் வைத்துககொண்டு, மத்திய சர்க்காருக்குச் சொந்தமான ரெயில்களைக் கொளுத்தியபொழுது, இந்த சர்க்காரின் கீழே வேலை செய்கின்ற போலீசார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நிகழ்ச்சி நடந்தபொழுது நாங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்க முடியும். இன்னும் சொல்லப் போனால், இந்த ஆண்டு துவக்கத்தில் நடைபெற்ற மாணவர்கள், பஸ் தொழிலாளர்கள் மோதலின் பொழுது சென்னை நகரத்தில் நிலவிய அலங்கோலமான நிலைமையை வைத்து நாங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கலாம். ஆனால், நாங்கள் பொறுப்புள்ளவர்கள் என்ற காரணத்தினால், இப்படிச் சில நிகழ்ச்சிகளை மட்டும் வைத்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரக்கூடாது, அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் சந்தர்ப்பம் கொடுப்போம் என்பதற்காகத் தான் நாங்கள் காத்திருந்தோம். பொறுத்திருந்தோம். ஆனால், எங்கள் பொறுமைக்கும் எல்லை உண்டு என்ற அளவிலே தான் இன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, சில நிகழ்ச்சிகளை மட்டும் குறிப்பிட்டு விட்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

ஒரு முக்கியமான பிரச்னை என்னவென்றால், இன்றையதினம் சென்னை நகரத்தில் மட்டுமல்ல, தமிழ் நாடு பூராவிலும் தீ விபத்துக்கள் நடைபெற்று வருகின்றன. இவை விபத்துக்களா அல்லது திட்டமிட்டவையா என்பது





பற்றி இன்றைக்கு ஒரு பெரிய பிரச்னை உண்டாகியிருக்கிறது. இதைப்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். யார் தீ வைத்தார்கள் என்பது ஒரு புறம் இருக்க, இந்தத்தீவிபத்து நிகழ்ச்சிகள் அல்லது விபத்துக்கள் எப்படி ஏற்படுகின்றன என்பதைப் பற்றி, கடந்த இரண்டு ஆண்டு காலமாக இன்னும் அதைப்பற்றிய விவரங்கள் அறியமுடியவில்லை. அதைப்பற்றி ஒரு தீர்மானமான முடிவுக்கும் வரமுடியவில்லை. அதைப் பற்றி சொல்ல வேண்டுமானால் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திரு. ஜெயராஜ் அவர்கள் கால் வெட்டப்பட்ட பொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கலாம் என்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கும், இந்த அரசுக்கும் எந்த வகையில் தொடர்பு என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அரசுக்கு எந்த வகையிலே பொறுப்பு என்று கேட்டால், திரு. ஜெயராஜ் அவர்களுடைய கால் வெட்டப்படுவதற்கு முன்னாலேயே இந்த அவையிலேயே "எனக்கு இடைஞ்சல் நேர இருக்கிறது. எனது சட்டமன்ற உறுப்பினர் பதவிக்குரிய வேலையை நான் சரிவர ஆற்ற முடியவில்லை. எனக்கு எதிரிகள் அதிகமாக இருக்கிறார்கள். எனக்குப் பாதுகாப்பு தரவேண்டும்" என்று கூட சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர் ஊருக்குச் சென்ற பொழுது இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது. யாரால் நடைபெற்றது என்பது பற்றி இப்பொழுது பேசவில்லை. முன்பே பாதுகாப்புக் கோரிய ஒருவருடைய கால் அங்கே வெட்டப்பட்டது. அந்த அளவுக்கு ஆட்சி பொறுப்பு இல்லாமல் இருந்துவிட்டது.

நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களைப் பொறுத்தவரையிலும் 1967-ல் நடைபெற்ற தேர்தலின் விளைவாக ஏற்பட்ட தோல்விக்குப் பின்பு, அதற்குப் பின் தென் சென்னையில் ஏற்பட்ட தோல்விக்குப் பின்பு, அதற்குப் பிறகு சங்கரியிலும், தொடர்ந்து தென் காசியிலும் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு நீங்கள் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களே, என் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் குறிப்பிட்டார்கள் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தோல்விக்குப் பிறகு இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களே என்று அவர் சொல்லவில்லை. சொல்லாத ஒன்றைச் சொன்னதாக வற்புறுத்திப் பேசுவது நல்லது அல்ல.

**திரு. க. இராமமூர்த்தி :** அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள் என்ற உள்ளர்த்தத்தை அடக்கிச் சொன்னார்கள். அந்த வார்த்தைகளை உபயோகப்படுத்தவில்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். தேர்தலைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த அவையிலே தான் இந்தச் சர்க்காரைப் பொறுத்தவரையில் அது தி.மு.க. சர்க்காராக இருக்கிறதே தவிர, தேர்தலைப் பொறுத்துவரையில் காங்கிரஸ் அல்லாதவர்கள் என்ற நிலையிலே அவர்கள் வோட்டுப் பெற்று வெற்றிபெற்று வந்தார்களே தவிர, தனிப்பட்ட முறையில், தி.மு.க. என்ற முறையில் அவர்கள் வெற்றி பெற்று வரவில்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். தி.மு.க. என்பதற்காக அவர்கள் வெற்றிபெற்று இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கவில்லை. கூட்டணி சார்பிலே வெற்றிபெற்று, கூட்டணி ஆதரவோடு வெற்றிபெற்றுத் தான் இங்கே வந்திருக்கிறார்கள். ஆனாலும், அந்தக் கூட்டணியில் இருக்கிற, சுதந்திராக் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி இன்னும் மற்ற கட்சிகளும் தி.மு.க.வினரோடு பல்வேறு வகையிலே கொள்கைகளிலே வேறுபடுகிறார்கள். மாறுபடுகிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெளிவாக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாங்களாவது பல்வேறுபட்ட கொள்கையைக் கொண்டவர்கள் ஒன்றாக இருக்கிறோம். ஒரே கொள்கையுடையவர்கள் பல்வேறாக பிரிந்து பிரிந்திருக்கிறார்களே, அது தங்களுக்குத் தெரியுமா ?

**திரு. க. இராமமூர்த்தி** : நான் கூட்டணியைப் பற்றி விவாதிக்கவில்லை. நான் சொல்லவந்ததெல்லாம், இது தனியாக தி.மு.க. பெற்ற வெற்றியல்ல, கூட்டணியினுடைய வெற்றி தான், அதைத் தி.மு.க. தனியாக தான் பெற்ற வெற்றி என்று உபயோகப்படுத்திக்கொள்கிறது என்பதைத் தான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த தீ விபத்துக்களினால் மாத்திரம் மக்களுடைய நிலைமை எப்படி இருந்துகொண்டிருக்கிறது என்றால், அதைப்பற்றி பல பத்திரிகை குறிப்புக்கள் என்னிடம் இருக்கின்றன. வேண்டுமானால், அரசாங்கத்திற்குக் கொடுக்கத்தயாராக இருக்கிறேன். ஆகஸ்டு 5-ம் தேதி வெளியிடப்பட்ட ஒரு பத்திரிகை குறிப்பிலே

The scare is so great in Gandhimedu here (Thanjavur) that residents suspect every stranger. They detained a taxi yesterday for three hours and the police had to intervene and releaseit",

என்று இருக்கிறது இது மக்களுடைய நிலைமை. அதைப் போலவே திருச்சியில் நடந்த தீவிபத்துக்களைப்பற்றி ஒரு புள்ளிவிவரம் பத்திரிகையிலே வந்திருக்கிறது.

It was stated that there had been 85 fires in the town during 1967, of which 56 were between April and August. During the current year since April last, 60 fires had been reported.

இது திருச்சி மாவட்டத்தில் இருக்கிற நிலைமை. அதோடுமட்டுமல்ல. சென்னையிலே இருக்கிற நிலைமையைப் பற்றி இங்கு இருக்கிற சர்க்கார் உத்தியோகஸ்தர் போர்டு மெம்பர் அவர்கள் கொடுத்த குறிப்பு ஒன்று பத்திரிகையிலே வெளி வந்திருக்கிறது. அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், நிலைமை எப்படி இருக்கிறது என்றால்,

The Board Member will later submit his relief proposals to the Government. The citizens are greatly perturbed over the fires and all of them are agreed that these are not the accidental fires that one meets with at the height of summer.

என்பதாக 1968-ம் வருடம் ஜூன் மாதம் 18-ம் தேதி இந்துப்பத்திரிகைக் குறிப்பிலே வந்திருக்கிறது. இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். தீவிபத்துக்களெல்லாம் திட்டமிட்ட தீவிபத்துக்களா என்பது பற்றி ஜூன் மாதம் 16-ம் தேதி இந்துப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

To-day's fires, eye-witnesses said, were on the same pattern as the 'mystery fires' reported last year. For instance, in Pulianthope area, when fire service personnel were battling with the flames at the first spot where it was noticed, they could see fires breaking out at three different corners separated by some distance from the original fire.

அதற்கும் மேலாகத்தீவிபத்துக்கள் எப்படி நடைபெறுகின்றன என்பது பற்றி நாட்டிலே பல்வேறுவகையான விவாதங்கள் நடைபெறுகின்றன. அதிலே ஒரு சாராரின் விவாதத்தை இங்கே காண்கிறோம். அதுவும் இந்து பத்திரிகையில் வந்திருக்கிறது. 1968-ம் வருடம் ஜூன் மாதம் 19-ம் தேதி இந்து பத்திரிகையில் வந்திருக்கிறது. ஒரு கட்சி இன்னொரு கட்சிக்குக் கொடுக்கும் மறுப்பு அறிக்கை அது.

Mr. M. R. Venkataraman, Secretary, Tamilnad State Committee of the Communist Party of India (Marxist), has issued a statement refuting the allegation of Mr. Sa. Ganesan, Swatantra Party Leader, that the Communist Party was involved in the City fires.



இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் விபத்துக்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்படுகின்றன, எப்படிப்பட்ட சந்தேகங்கள் யார் யார் மனதிலே உண்டாகின்றன, தீவிபத்துக்களுக்கு அரசியல் காரணங்கள் இருக்கின்றனவா என்ற சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இந்தத் தீ விபத்துக்களை நல்ல முறையில் தடுத்திருக்கிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்குமானால், நாட்டில் அமைதி இருந்திருக்கும் என்பதைத்தெளிவுபடுத்திச் சொல்ல நான் விரும்புகிறேன்.

அடுத்து, இந்த நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் பல்வேறு குறிப்புகள் என்னிடம் இருக்கின்றன. நான் அவற்றை மட்டும் படித்துவிட்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

நான் இப்பொழுது உடையார்ப்பாளையம் நிகழ்ச்சி பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. இளம்வழுதியவர்கள் "உங்கள் கட்சிக்காரர்கள் கட்டுப்பாடு இல்லாமல் கலவரம் செய்கிறார்கள்" என்று சொன்னார்கள். நான் குறிப்பிட விரும்புகிறேன், உடையார்பாளையத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகச்செயலாளர் ஒரு அறிக்கையைத் துண்டுப் பிரசுரமாக வெளியிட்டிருக்கிறார்கள். மூன்று பேர் போதுமா, முப்பது பேர்கள் வேண்டுமா என்று கேட்டிருக்கிறார்கள். கலவரத்தை நாட்டில் யார் தூண்டுகிறார்கள் என்று கேட்கிறேன். அதோடு உடையார்பாளைய நிகழ்ச்சி பற்றி நிறுத்திக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இளைஞர் காங்கிரஸ் நிகழ்ச்சி பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இளைஞர் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் ஆகஸ்ட் 1-ம் தேதி நடைபெற்ற கண்டனக் கூட்ட, ஊர்வலத்தில், போலீசார் புகுந்து அடித்து, நொறுக்கி இருக்கிறார்கள். மண்டையிலேயே பெரும்பாலோருக்குஅடிக்கப்பட்டிருக்கிறது. திட்டமிட்டுச் செய்யப் பட்டிருக்கிறது. இந்த ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கியவர்கள், ஏதாவது நிலைமைகள் மோசமாகப் போகுமேயானால், நீங்கள் உட்கார்ந்து விடுங்கள், குழப்பம் ஏற்படுமேயானால், உட்கார்ந்து விடுங்கள் என்று இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் எல்லோருக்கும் கட்டளை இடப்பட்டிருந்தது. அவர்கள் அப்படி உட்கார்ந்து விட்டதாலேயே மண்டையில் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். எவ்வளவோ அமைதியாக நடத்த வேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டு இருந்தும் கூட போலீசார் புகுந்து தாக்கியிருக்கிறார்கள்.

அதே போல, அவனியாபுரம் என்ற ஊரில் ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பொறுப்பில் இருப்பவர்கள், திராவிட முன்னேற்றக் கழக யூனிட் செக்ரடரி, அவனியாபுரம், வெங்கிட்டு என்பவர் அவரே போலீஸ் நிலையத்திற்குச் சென்று மதுவிலக்குச் சம்பந்தமாக போலீஸிலே, கேரோ செய்து இருக்கிறார்கள்.

அதே மாதிரி, நாச்சலூர் என்ற இடத்தில் ஒரு அரிசனச் சிறுவன். . . (சிவப்பு விளக்கு போடப்பட்டது) எனக்கு இன்னமும் டைம்......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராசன்):** தங்கள் தலைவர் குறிப்பிட்டபடி தங்களுக்குக் கொடுக்கப்பட்டது 15 நிமிஷம்.

**திரு. க. இராமமூர்த்தி** : எனக்குக் கொடுக்கப்பட்டது 15 நிமிஷம் இல்லையா ?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராசன்) :** ஆமாம், 15 நிமிஷங்கள்தான். பேசிய வேகத்தில் நேரம் போனது தெரியவில்லை உங்களுக்கு.

**திரு. க. இராமமூர்த்தி** : இன்னும் ஒரு நிமிஷத்தில் முடித்துவிடுகிறேன். இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடந்திருக்கின்றன. அவற்றை பற்றிய குறிப்புகள் என்னிடம் இருக்கின்றன. சேலம் ஜில்லா சிறையில் ஒருவர் இறந்திருக்கிறார். அவரைச் செங்கல்பட்டில் அடித்து, காயங்களோடு

சேலம் மத்திய சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே இறந்திருக்கிறார். இந்த நிகழ்ச்சி நடந்தது 1968-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 8-ம் தேதியன்று. ஆனால் அதைப் பற்றி நாட்டிற்குத் தெரியாமல் மறைத்து வைத்திருக்கிறார்கள்.

மொழிக் கொள்கை ஒரு தெளிவில்லாத கொள்கையாக இருக்கிறது. தமிழிலே படிக்கிறவர்கள், ஆங்கிலத்திலே பரீட்சை எழுதுவோம் என்கிறார்கள். அதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி தந்திருப்பதாக, மதுரை வைஸ்-சான்ஸ்லர், திரு. மீனாட்சிசுந்தரனார் பத்திரிகைகளுக்கு அறிவித்திருக்கிறார்கள். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்களும், திரும்பிச் சென்று இருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், இந்தச் சர்க்காரைப் பொறுத்த வரையில், மாணவர்கள் கல்வி சம்பந்தப்பட்டவரையில், அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள். அதற்கு இதுவும் ஒரு பெரிய எடுத்துக்காட்டாக இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஒரு தலைமுறை மாணவர்களே பாதிக்கப்படும் அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய கட்சிக்காரர்கள் நிர்வாகத்தில் ஈடுபட்டால் என்னிடத்தில் சொல்லுங்கள் என்ற அளவில் முதல் அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள் என்றால், அப்படிச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது, அந்த அளவிற்குப் பொதுமக்களும் அதிகாரிகளும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார்கள் என்பது புலனாகிறது.

பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றியும் குறிப்புகள் இருந்தாலும், நேரம் இல்லை என்பதால், முடிக்க விரும்புகிறேன். இந்த ஆட்சியைப் பொருத்த வரையில், கடந்த காலத்தில் சொல்வது உண்டு, கர்சன் ஆட்சியில், அதையே இன்றைய ஆட்சியைப் பொருத்தவரையிலும் சொல்லலாம். அந்தக் காலத்தில் நடந்த அடக்கு முறையைப் பார்த்து,

Every rule has an end and Curzon's rule will have an end and it had an end.

என்று அன்றைக்குச் சொல்லுவார்கள். அதே போல, இந்தத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எச்சரிக்கை விடுகிறேன்,

Everything will have an end and your rule to› will have an end.

என்று. இன்னும் 1972-க்குள்ளாகவே, நடுவிலேயே அந்த நிலை, இந்த அடக்குமுறைகள் நீடிக்குமானால், நிச்சயமாக உண்டாகும் என்று சொல்லி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையின் அலுவல் ஆய்வுக் குழுவில் அந்த அந்த கட்சித்தலைவர்கள் குறிப்பிட்டபடி ஒவ்வொருவருக்கும இவ்வளவு நேரம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி, நேரம் கொடுக்கப்படுகிறது. அந்த நேரத்திற்கும் மேல் மன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கொண்டால் பின்னால் பேசுகிறவர்களுக்கு அந்த அளவில் குறைக்க வேண்டியிருக்கும். ஆகவே உறுப்பினர்கள் கொடுக்கப்பட்ட நேரத்திலேயே தங்களுடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் அரசியல் நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்கிற காரணத்தால் அது நிராகரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். பெற்ற தோல்வியினால் ஏற்பட்ட வயிற்றெரிச்சல் தீராமல் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் வயிற்றெரிச்சல் வாழ்க. அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா காங்கிரஸ் அல்லாத அரசுகளைக் கவிழ்க்க வேண்டும் என்று பகிரங்கமாகப் பேசினார்கள். ராஜ





பாளையம் காங்கிரஸ் மகாநாட்டில் மொரார்ஜி அவர்கள் சட்டம் அமைதி கெட்டுவிட்டது என்ற கூப்பாட்டை ஆரம்பித்தார்கள் அதற்குப் பின்னால் டி.டி.கே. அவர்கள், தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று கூறினார்கள் இவர்கள் கவர்னர்களை வைத்துக்கொண்டு, காங்கிரஸ் அல்லாத அரசுகளை கவிழ்க்க ஆயாராம், கயா ராம்களை வைத்துக்கொண்டு ஐந்து காங்கிரஸ் அல்லாத அரசுகளைக் கலைக்கச் செய்து, நேரிடையாக கவர்னர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்துவிட்டார்கள். இப்பொழுது தமிழ் நாட்டிலும், கேரளாவிலும் குறி வைத்து, அங்கேயிருக்கும் காங்கிரஸ் அந்த அரசை . . . . .

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். தலைவர் அவர்களே, கேரளாவில் இருக்கும் காங்கிரஸ் நடவடிக்கைகளைப் பற்றி இந்த சபையில் பேசுவது முறைதானா என்பதைக் கேட்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒவ்வொரு அரசையும் பற்றி·

**திரு. க. இராமமூர்த்தி :** இங்கே பிரதிநிதிகளைக் கொண்டிராத ஒரு கட்சியை . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். என்னுடைய ரூலிங், மத்திய அரசைப் பற்றியோ வேறுமாநில அரசுகளைப்பற்றியோ பேசக்கூடாது, தவறு என்று ஒன்றும் இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது பற்றிப்பல முறைகள் உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** பாயுன்ட் ஆப் ஆர்டர் எழுப்ப உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உரிமை இருக்கிறது. ஆனால் அது முறையாக இருக்கவேண்டும் என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து எதைவேண்டுமானாலும் பேசலாம் என்று பேசுவது முறையாகாது என்பதை இதற்கு முன்னாலேயே பல தடவைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, அந்த முறையைத் தயவு செய்து கைவிட்டுவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், தலைவர் அவர்களே, கேரளத்தில் இருக்கிற காங்கிரஸ் பற்றி, இந்த அவையில் அங்கம் வகிக்காத ஒரு கட்சியைப் பற்றி, இங்கே பேசுவது முறையா என்பதை கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் எழுப்பிய அந்த பாயின்ட் ஆப் ஆர்டரின் பேரில் தீர்ப்புக் கொடுத்துவிட்டேன். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எதற்கு வேண்டுமானாலும் எழுந்து விடுவது சரியல்ல. நீங்கள் குறிப்பிட்டதில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்று தீர்ப்பளித்த பிறகு அதற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறோம். அதன் பேரில் தாங்கள் தீர்ப்புக் கூறுகிறீர்கள். எதற்கு வேண்டுமானாலும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்திருக்கக் கூடாது என்று சொன்னால் அது எங்களுடைய உரிமையைப் பாதிப்பதாக இருக்கும். தாங்கள் அப்படிச் சொல்வது சரியானதாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று ஒழுங்குப் பிரச்னை எழுப்புவது மெம்பர்களுக்கு உள்ள உரிமை. ஆனால் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது ஒழுங்குமுறையானதாக இருக்க வேண்டும். எதற்கு வேண்டுமானாலும் ஒழுங்குப் பிரச்னை எழுப்புவது

என்பது ஒழுங்காகாது. ஒழுங்குப் பிரச்னைக்கு இடமளிக்காதவற்றையெல்லாம் ஒழுங்குப் பிரச்னை என்று சொல்லி உறுப்பினர்கள் எழுந்திருக்கிறார்கள். சபாநாயகர் தீர்ப்பு அளித்துவிட்ட பிறகு மீண்டும் மீண்டும் ஒழுங்குப் பிரச்னை என்று எழுந்திருப்பது, சபையின் நடவடிக்கையைத் தடைப்படுத்துவதற்காகவே உறுப்பினர் ஒழுங்குப் பிரச்னையை எழுப்புகிறார் என்று முடிவு செய்ய நேரிடும். ஒழுங்குப் பிரச்னை ஒழுங்குமுறையானதாக இருக்க வேண்டுமென்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** முறையான ஒழுங்குப் பிரச்னை என்று விதிகளிலே எதுவும் இல்லை.

* * * *

**திரு. வி.எஸ். கோவிந்தராஜன் :** பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கிளாரிபிகேஷனுக்கு இடம் இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்கள் ** என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார். அவர் அதைத் திரும்பத் பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அதைத் தாங்கள் சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** முறையற்றது என்று . . . (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கனம் உறுப்பினர் அவர்கள் சட்டம் படித்தவர்கள். விதிமுறைகளை நன்றாகப் படித்திருக்கிறார்கள். எழுந்திருக்கும்பொழுது, எதற்காக எழுந்திருக்கிறோம் என்று சொல்ல வேண்டும். ஒரே சமயத்தில் எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று கொண்டால் மன்றத்தின் நடவடிக்கைகள் நடைபெறா. தலைவர் ஒருவரால் மட்டும் மன்றத்தின் மரபைக் காத்துவிட முடியாது. எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து ஒத்துழைத்தால்தான் மன்றத்தின் மரபு, கண்ணியம் காக்கப்பட முடியும். மன்றத்தின் தலைவருக்குக் கொடுக்கும் இழுக்கு மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற இழுக்காகத் தான் எடுத்துக்கொள்ளப்படும். மன்றத்தின் தலைவருக்கு, அவர் கொடுக்கும் தீர்ப்புக்கு உட்பட மறுக்கிறார் என்றால், அவருக்கு மட்டுமல்ல, இந்த மன்றத்திற்கே இழுக்கு உண்டாகிறது. நான் ஒரு தீர்ப்பு கொடுத்துவிட்டால் அதற்குக் கட்டுப்பட வேண்டுமென்பதுதான் மரபு. என்னைப் பொறுத்தவரையில் கனம் உறுப்பினர் அவர்களின் கூற்றை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையில் இல்லை. ஆகவே, உறுப்பினர் அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் தங்களுடையதீர்ப்பு முறையற்றது என்று சொல்லவில்லை. முறையற்ற பாயிண்ட் ஆஃப் ஆர்டர் கிளப்புகிறார்கள் என்று நீங்கள் சொல்வது சரியல்ல என்றுதான் கூறினேன். உங்களுடைய தீர்ப்பை ஏற்கவில்லை என்று சொல்லவில்லை. முறையற்ற பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று, எழுகின்றபோதே சொன்னால், யாரும் பேசமுடியாது, "முறையற்ற பாயிண்ட் ஆஃப் ஆர்டர் கிளப்புகிறார்கள்" என்று தாங்கள் சொன்னதைத் தான் முறையல்ல என்று கூறினேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஓர் உறுப்பினர் ஒரு முறை எழுந்து அது முறையற்றது என்று தீர்ப்பளித்துவிட்ட பிறகு மீண்டும் அதை விளக்கிப் பேசி, பாயிண்ட் ஆஃப் ஆர்டர், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று இரண்டு மூன்று முறைகள் எழுப்பினால் அது எப்படி முறையான ஒழுங்கு முறையாகும் ? விளக்குச் சுடுகிறது" என்று சொன்னால், "தொட்டுத் தொட்டுப் பார்த்தால்தான் தெரியும்" என்று சொல்லலாமா?

** பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



முறையற்ற முறையில் ஒழுங்குப் பிரச்னைகளை எழுப்புவதற்கு, உறுப்பினர் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதற்கான வழிவகை வகுக்கும்படியான நிலைமை இருக்கிறது. நீங்கள் ஒழுங்குப் பிரச்னையை எழுப்பவேண்டாமென்று சொல்லவில்லை. ஒரே விஷயத்தைப் பற்றி பலமுறை மீண்டும் மீண்டும் அதையே ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்புவது சரிதானா, முறைதானா ?

**திரு. கோ. பூவராகன்,** திரு. வி. கே. கோதண்டராமன், திரு. வி.டி. அண்ணாமலை ஆகியோர் எழுந்தார்கள்.

**திரு. வி. டி. அண்ணாமலை :** உறுப்பினர் அந்த வார்த்தையை வாபஸ் வாங்கிக்கொண்டாரா, என்ன ?

**திரு. கோ. பூவராகன் :** தலைவர் அவர்களே, தாங்கள் தீர்ப்பு அளித்து விட்ட பிறகு, அமைச்சர் அவர்கள் எழுந்து குறுக்கிட்டு, விளக்கம் கூறி அந்தச் சொல்லை நீக்க வேண்டும் என்று கூறுவது சரியல்ல. இப்படி எல்லாவற்றையும் நீக்கவேண்டுமென்று அமைச்சர்கள் எழுந்து சொல்லிக் கொண்டே போனால், தலைவருடைய தீர்ப்பு சட்டசபை நடவடிக்கை முழுமையுமே நீக்க வேண்டி வரும். இதுபற்றி தங்களுடைய தீர்ப்பு என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களுடைய தீர்ப்பை நீக்க வேண்டுமென்று சொல்லவில்லை. தலைவர் அவர்களின் தீர்ப்பையொட்டி, திரு. கா. ராமமூர்த்தி அவர்கள் கூறிய கருத்தைத்தான் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று சொன்னேன். இது சபாநாயகரை மட்டுமல்ல, சபையையே அவமதிக்கக் கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** தலைவர் அவர்கள் தீர்ப்புக் கூறிய பிறகு . . (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பூவராகன் அவர்கள் இந்த மன்றத்தில் அமைச்சராக இருந்தவர்கள். இந்த மன்றத்தின் மரபைக் காக்க வேண்டுமென்பதில் அவருக்கும் அக்கறை இருக்க வேண்டும். ஓர் உறுப்பினர் சட்டசபை விதிமுறைகளுக்கு மாறாக மன்றத்தில் நடந்துகொண்டால் அதைச் சுட்டிகாட்ட அவையிலுள்ள அத்தனை பேருக்கும் உரிமை இருக்கிறது. அதேபோல அமைச்சர்களுக்கும் சுட்டிக்காட்ட உரிமை இருக்கிறது. திரு. ராமமூர்த்தி அவர்கள் எழுப்பியது ஒழுங்குப் பிரச்சினை அல்லவென்று சொல்லியபிறகு, * * * * என்று உறுப்பினர் கூறுவது சரியல்ல. திரு. பூவராகன் அவர்கள் விஷயத்தில், தலைவர் தீர்ப்பளித்துவிட்ட பிறகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டுவது சரியா என்பது விவகாரம். இந்த மன்றத்திலுள்ள அனைவருக்கும் சுட்டிக் காட்டும் உரிமை இருக்கிறது. ஆகவே, உறுப்பினர் கூறியது இந்த மன்ற நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்தால் அதை நீக்க வேண்டுமென்று சுட்டிக் காட்டுவது சரியானதுதான். அதை உறுப்பினர்கள்மட்டும்தான் சுட்டிக் காட்ட வேண்டும் என்பது முறையல்ல.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், எங்களுடைய கட்சித் தலைவர் பேச ஆரம்பிப்பதற்கு முன்னாலே ஒவ்வொரு அங்கத்தினரும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னீர்கள். இப்போது 8 நிமிஷங்கள் வீணாகிப் போய்விட்டன. இப்படியே அடிக்கடி குறுக்கிட்டுக் கொண்டிருந்தால், இனிமேல், காங்கிரஸ் அங்கத்தினர்கள் பேசக் கூடிய நேரத்தில் நாங்களும் இதேமாதிரி தலையிடுவோம். அதற்கும் தாங்கள் அனுமதி கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஓர் உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் மற்ற உறுப்பினர்களுக்கு என்ன உரிமைகள் இருக்கின்றன என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. பேசும் நேரத்தில் வீணாகக்

* பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

குறுக்கிடுவதற்கு விதிமுறைகள் இடமளிக்கவில்லை. எங்கள் கட்சித் தலைவர் பேசும் நேரம் வீணாகிவிடுகிறது. வீணாகிவிட்ட நேரத்தைக் கொடுங்கள் என்று கேட்கலாம். ஆனால் அவர்கள் குறுக்கிட்டால், நாங்களும் அவர்களுடைய பேச்சின்போது குறுக்கிடுவோம் என்று சொல்வது முறையல்ல.

(ஓர் உறுப்பினர் எழுந்தார்.)

**திரு. க. ராமமூர்த்தி :** அவர்கள் சொல்லிய பகுதியை திரும்பப்பெறுவது நலம். திரும்பப் பெறவில்லையானால் நான் அவைக் குறிப்பிலிருந்து . . . . .

**திரு. க. ராமமூர்த்தி :** நான் தங்களுடைய தீர்ப்பை முறையற்றது என்றோ, சரியல்ல என்றோ சொல்லவில்லை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவை நிகழ்ச்சிக் குறிப்பில் அப்படியிருந்தால் அதை நீக்க வேண்டும். திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

**திரு. க. ராமமூர்த்தி :** எழுந்து நின்றார்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எதற்காக நிற்கிறீர்கள் ?

**திரு. க. ராமமூர்த்தி :** "அப்படியிருந்தால்" என்று சொல்கிறீர்கள். என்னை உங்களுடைய அறைக்கு அழைத்துக் காட்டிவிட்டு நீக்கினால் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பி.ப. 12-30 ***திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, வீணாகிவிட்ட நேரத்தை எடுத்துக்கொள்ளலாம் என்பதற்கு நன்றி.

பதினோரு அம்சங்கள் கொண்டு இந்தத் தீர்மானத்தில் நான் மையமாகப் பார்ப்பது இரண்டு அல்லது மூன்று தான். குறிப்பாக தொழிலாளர்களிடையே அமைதி யின்மை, தொழில் தகராறு — அரசுக்கு தொழில் துறை சம்பந்தப் பட்டவரை நிரந்தரமான கொள்கை இல்லாத தனாலே ஊக்கம் இழந்த நிலை — மூலதனம் வராத நிலை — இவை பற்றி ஒன்று. அடுத்து நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்கிற விஷயம் — ஆக வசதி வாய்ந்தவர்களுக்கு மேலும் வசதி தரப் படவேண்டும், முதலாளிகளுக்கு மேலும் ஊக்கம் தரப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் தான் இந்த அம்சங்கள் இருக்கின்றன. மற்றவை எல்லாம் வெறும் மசாலாவாகத்தான் வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். (திரு. கே. விநாயகம்:—மசாலா என்றால்) அவர் ஹோட்டல் நடத்துகிறார். மசாலா என்றால் நன்றாகத் தெரிந்திருக்கும்.

வருகிற மாதம் 19-ம் தேதி இந்தியா முழுவதும் 25 லட்சம் சிப்பந்திகள் வேலை நிறுத்தம் செய்யப் போகிறார்கள். இங்கே வேறு யாரோ முதலாளி என்றல்ல. இந்திய சர்க்காரே தான் முதலாளி. திரும்பத் திரும்ப சிப்பந்திகளும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி விட்டார்கள். ஆனால் மத்திய ஆட்சி முதலாளி மனப்பான்மையில் அதை ஏற்கவில்லை. சிப்பந்திகளை வேலை நிறுத்தத்திற்குப் போகும்படி செய்கிறது. இங்கு தொழில் அமைதி இல்லை என்பதற்காக இந்த அரசின் பேரில் காங்கிரஸ் கட்சி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவருமானால் இந்த ஒரு காரணத்திற்கே மத்திய காங்கிரஸ் ஆட்சிமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் அல்ல அவர்கள் பதவியை விட்டே இறங்கிவிட வேண்டுமென்று நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இந்தத் தீர்மானத்திலே தொழில் மந்தம் ஏற்பட்டிருப்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன? விவரம் என்ன வைத்திருக்கிறார்கள் ? இது தமிழ்நாட்டில் மட்டும் ஏற்பட்டிருக்கும் தொழில் மந்தமா ? இந்தியா முழுவதிலும் ஏற்பட்டிருக்கும் தொழில் மந்தமா ?

** பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



இதற்கு யார் பொறுப்பு ? என்ன காரணம் என்பதை நாம் கவனிக்க வேண்டும். தமிழகத்தில் 21 நூற்பாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. மேலும் மூடப்படும். குஜராத்தில் 13 நெசவாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. மேலும் மூடப்படும். மத்திய அரசின் பொறுப்பிலேயே நடைபெறுகிற உருக்காலைகள் இருக்கின்றன. அவற்றில் நூறு கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. உற்பத்தி செய்கின்ற பொருள்களைக் கூட மார்க்கெட் பண்ண முடியவில்லை. உற்பத்தியாகி இருக்கிற தண்டவாளங்களை சோவியத் யூனியனுக்குக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இந்தத் தொழில் மந்தத்திற்கு யார் காரணம் ? ஏன் ஏற்பட்டது ? இந்த நாட்டுப் பொருளாதாரம் முழுவதுமே கடனை நம்பி இருக்கக்கூடிய காரணத்தினால் அந்நிய உதவியையே நம்பி இருக்க வேண்டிய காரணத்தினால் இன்றைக்கு என்ன நிலைமை இருக்கிறது ? முதலாளிகளுக்கு உலகம் முழுவதும் நெருக்கடி நிலைமை இருக்கிறது.—நேரம் இல்லை. விளக்கவும் விரும்பவில்லை — சமீபத்தில் நடந்த மகாநாட்டில் இந்தியப் பிரதமர் என்ன சொன்னார், கீழ்த்திசை நாடுகளில் தொழில் வளர்ச்சிக்கு உதவி அளிக்கிறோம் என மேற்கத்திய நாடுகள் எவ்வளவு உதவி செய்திருக்கிறார்களோ அதைப்போல $1\frac{1}{2}$ மடங்குக்கு மேல் இங்கு இருந்து எடுத்துச் சென்றிருக்கிறார்கள் என்றார். பின்தங்கிய நாடுகளுக்கு உதவி என்று அவர்கள் அளிப்பதைப் போல $1\frac{1}{2}$ மடங்குக்கு எடுத்துப் போய்விட்டார்கள். விலைவாசித் தந்திரத்தைப் பயன்படுத்தி இங்கே உற்பத்தியாகிற சீனியை கிலோ 28 காசு என்று வாங்குவது — அங்கிருந்து வரக்கூடிய பொருள்களின் விலையை செங்குத்தாக உயர்த்துவது — இப்படி ஏராளமாக எடுத்துச் சென்றுவிட்டார்கள். இங்கே உள்ள வெளிநாட்டு தொழில் ஸ்தாபனங்களின் மூலம் 390 கோடிக்கும் அதிகமாக லாபங்கள் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். ராயல்டி என்ற வகையில் 181 கோடிக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அதற்கு மேல் டெக்னிகல் அசிஸ்டெண்டு — சர்விஸ் சார்ஜ் என்ற முறையில் 400 கோடிக்கும் அதிகமாக எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அடுத்து வருகிற சரக்கு அவர்கள் கப்பலிலேயே வரவேண்டும், ஏற்றுமதியாவதும் அவர்கள் கப்பலிலேயே வரவேண்டும் என்ற உடன்பாட்டின்படி இந்தப் போக்குவரத்து இனத்தில் பல நூறு கோடி ரூபாய் போயிருக்கிறது. இந்த ஓட்டை இருக்கும் வரையில் தொழில் மந்தம் ஏற்படாது என்ன செய்யும் ? சின்னஞ்சிறு நாடு — சிலோனில் கூட 25 ரூபாய்க்கு மேல் வெளியே அனுப்பக் கூடாது என்ற தடை இருக்கிறது. ஆனால் இங்கே உள்ள நிலை என்ன ?

கிராமப்புறங்களை எடுத்துக் கொண்டால் விவசாயிகள், சாதாரண வர்க்கத்தினர் பயங்கரமான லேவாதேவிக்கு உட்பட்டு சாகிறார்கள். நூறு ரூபாய்க்கு மாதம் 8, 10 வட்டி வாங்குகிற லேவாதேவிக்காரர்கள் இருக்கிற போது எப்படி மூலதனம் தொழில் துறையில் சுரக்கும் ? லேவாதேவிக்கே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது உள்ள வரை மூலதனம் தொழில்துறைக்கு வராது. இந்த நிலை தான் தொழில் மந்தம், நம்முடைய மாநிலத்தில் கொஞ்சம் கூடுதலாக வந்திருப்பது வாஸ்தவம். மகாராஷ்டிரம், குஜராத், வங்காளம், தமிழகம் என்பதாக — மட்டத்தில் கொஞ்சம் உச்சத்தில் இருக்கிறோம். தொழிலதிபர்கள் வசதியுள்ள இடத்தில் தான் தொழில் துறையில் மூலதனமிட வருவார்கள். தமிழகத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். யார் கிழக்கு ராமநாதபுரத்தில் தொழிலைத் துவக்க முன் வருவார்கள் ? கோவைக்குத் தான் போவார்கள். அதனால் கிழக்கு ராமநாதபுரம் தமிழகத்தின் பகுதி அல்ல என்றில்லை. சட்டென்று லாபம் கிடைக்கும் பகுதிக்குத் தான் போவார்கள். அதே நிலைதான் இந்தியாவில், பத்து வருடம், பதினைந்து வருடமாக நீடித்துக் கொண்டிருக்கிறது. தொழில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. என்ன காரணம் ? மக்கள் தலையில் தங்கள் பளுவைச் சுமத்த முதலாளிகள் விரும்புகிறார்கள். ஆலைகளை மூடுவது — வேலையில்லை வீட்டுக்கு என்று அனுப்புவது — வேலை பளுவை அதிகப்படுத்துவது — அத்துக் கூலிக்காரர்களை — மாதச் சம்பள அடிப்படையில் அன்றி நாளைக்கு ஒரு ரூபாய், ஒண்ணரை ரூபாய் என்று — அத்துக் கூலிக்காரர்களை அமர்த்துவது — கோவையில் மட்டும் பத்தாயிரத்திற்கும் அதிகமாக அத்துக் கூலிக்காரர்கள் இருக்கிறார்கள் —

பழி வாங்குவது—இவை எல்லாம் தான் தொழில் மந்தத்திற்குக் காரணம். அதற்கு மேல் பிராவிடன்ட் பண்டு நிதியை சாப்பிடுகிறார்கள். ஈ.எஸ். நிதியைச் சாப்பிடுகிறார்கள். மின்சாரக் கட்டணம் கொடுக்காமல் இருக்கிறார்கள். இவ்வளவு தவறுகள் செய்கிற முதலாளிகளின் தன்மையையும், ஒன்றிரண்டு தவறுதல் செய்துவிடுகிற தொழிலாளர்களின் தன்மையையும் சமமாகப—பார்ப்பது என்கிற நிலை இந்த அரசுக்கு வரக்கூடாது.

அடுத்து, சில விவரங்களை வைத்துப் பார்க்க வேண்டும், புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. 1966–67-வது வருஷங்களில் அகில இந்திய அடிப்படையில் உயர்ந்த மனித நாட்களின் இழப்பு 21·4 சத விகிதம். அதில் தமிழகத்தின் பங்கு 3·4 நாட்கள். காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் நாம் கொடுத்த ஈவு 4·3 சத விகிதம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இப்படி மனித நாட்கள் இழப்பு எவ்வளவு என்கிற விவரம் வைத்துப் பேச வேண்டும். விவரம் இல்லாமல் பேசக் கூடாது. நேற்று இந்துப் பத்திரிகையில் 16-ஆம் தேதி காலை 8½ மணிக்கு சங்க உப தலைவரை அழைத்து வெளியே போ என்று சொல்கிறார்கள். விசாரணை உண்டா, கிடையாது. நோட்டீஸ், உண்டா கிடையாது. இன்றைக்கு தொழில் மந்தம் ஏன் ஏற்படுகிறது ?

இண்டரிம் வேஜ் போர்ட் சிபார்சை அமல் நடத்த வேண்டும். முதலாளிகள் முடியாது என்று தொழில் ஸ்தாபனத்தை மூடுகிறார்கள். இதன் மூலம் வேலை நாட்கள் இழப்பு 44·2 சத விகிதம். இது ஒரு காரணம். இயந்திரத் தொழிற்சாலைக்கு மினிமம் வேஜ் ஆக்ட்டை அமல் படுத்த வேண்டும். குறைந்த பட்ச ஊதியம் தான் கேட்கப்படுகிறது. இது 48-ஆம் ஆண்டே நிறைவேற்றப்பட்ட சட்டம், இதைக் கேட்கிறபோது பனியன் தொழிற்சாலைகள் தொழிலாளர்களை வெளியே தள்ளுகிறார்கள். இதன் மூலம் 21·3 சத விகிதம் வேலை இழப்பு நாட்கள். இந்த இரண்டுமாகச் சேர்ந்து 66–67-ல் 67·2 சத விகிதம் வேலை இழப்பு நாட்கள் ஏற்பட்டிருக்கின்றன. முதலாளிகள் சட்டப்படி நடந்திருந்தால் இந்த வேலை இழப்பு நாட்கள் குறைந்திருக்கும். அடுத்து, இந்தத் தொழில் தகராறுகளுக்குக்கூட என்ன காரணம் என்பது பற்றி சர்க்காரின் அறிக்கையே இருக்கிறது. "Single largest factor of contribution" என்று இருக்கிறது. தனிப் பெரும் காரணமாக இருப்பது பழி வாங்குவது என்பது தான், சொல்கின்ற காரணங்களில் 35 சத வீதம், 40 சதவீதம் காரணங்கள் இதைப் பற்றியது ஆகத்தான் இருக்கின்றன. பெஸ்ட் அன் கம்பெனியில் செகரட்டரியைப் பழிவாங்குவது, இந்துவின் வைஸ் பிரசிடெண்டைப் பழிவாங்குவது, இப்படி நூற்றுக்கணக்கானவர்களைப் பழி வாங்குவது, சங்கத் தலைவர்களைப் பழிவாங்குவதுதான் காரணமாக இருக்கிறது. இதுபற்றி அறிக்கைகளே இருக்கின்றன. இதையெல்லாம் மறைத்துவிட்டுப் பேசினால் யார் யாரை ஏமாற்ற முடியும், நடக்காது.

நிர்வாகத்தில் தலையீடு சம்பந்தமாகக் கூப்பாடு இருந்துகொண்டு இருக்கிறது. கட்சிக்காரர்கள் எங்கே எந்த இடத்தில் தலையிடுகிறார்கள் என்ற விவரங்களோடு பேசினால் பேசலாம். பொதுநலனை முன்னிட்டு எம்.எல்.ஏ.க்கள் தலையிட வேண்டியிருக்கிறது. 10 கம்பெனிகளுக்குச் சொந்தக்காரரான எச்.வி.ஆர். அய்யங்கார் அல்லது ராஜா சர். முத்தையா செட்டியார் ஆக இருந்தால் இங்கே வராமலே, காரிடாரில் வராண்டாவில் திரியாமலே காரியங்களை நிர்வாகத்திலே நடத்த முடியும். ஆனால் விவசாயி, தொழிலாளி, நடுத்தரக் குடிமகன் அப்படிச் செய்ய முடியாது. சட்ட மன்ற உறுப்பினர் கடமையைச் செய்துதான் ஆகவேண்டும். ஆனால் சொந்த நன்மைக்காக வந்தால் அனுமதிக்க வேண்டாம் கட்சியின் நன்மைக்காக வந்தால் அனுமதிக்க வேண்டாம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேல் மட்டத்திலே உள்ளவர்கள் இப்படித்தான் எழுப்பிக்கொண்டிருப்பார்கள், அவர்களுக்கு இடம் அளிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிகார வர்க்கத்தைப் பற்றிப் பலமுறைகள் திருப்பித் திருப்பிப் பேசியிருக்கிறேன். எந்த மாநிலமாக இருந்தாலும் இப்படித்



தான் இருக்கிறது. நாங்கள் என்ன முடிவு எடுத்திருக்கிறோம் என்றால் 'agitation and administration must go hand in hand' என்ற முறையிலே இருக்க வேண்டும். நிர்வாகத்தை நடத்த மக்கள் கிளர்ச்சி செய்ய அதே நேரத்திலே அமைச்சர்கள் கொஞ்சம் கொஞ்சமாக இடம் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சி செய்து கொடுக்க வேண்டும். அதுதான் அனுபவப்பூர்வமானது, அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் இருக்கிற விஷயங்களையெல்லாம் என்னுடைய கட்சிக்காரர்களுக்கு விட்டுவிட்டு ஒன்றே ஒன்றைமட்டும் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். கடவுளர் படம்பற்றி நேற்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதுகூட defensive and apologetic-ஆகத்தான் இருந்தது. சர்க்கார் என்பது ஆஸ்திகமும் அல்ல, நாஸ்திகமும் அல்ல. 'It has nobody to be burnt or a soul to be damned' எரிவதற்கு உடலும் கிடையாது, நரகலோகம் இருந்தால், அங்கே அனுப்புவதற்கு ஆத்மாவும் கிடையாது. மதச் சார்பற்ற அரசு என்றால் சர்வ மதப் பிரச்சார அரசு என்றுதான் புரிந்திருக்கிறார்கள். அகில இந்திய ரேடியோவைத் திருப்பினால் தெரியும். இதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அரசைப் பொறுத்தமட்டில் இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. இருக்கிறது என்று சொன்னால், மதம் இல்லை என்று மறுப்பவனுக்கு உள்ள உரிமையையும் அனுமதிக்க வேண்டும். அலுவலகத்திலோ அல்லது எங்கேயோ கடவுள் படம் இருப்பதற்கு இடம் அளிக்கக் கூடாது. சர்க்கார் சிப்பந்திகள் விரும்பினால் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்வது சரியல்ல. அவர்கள் விரும்பினால் கூட வைத்துக் கொள்ளக் கூடாது என்று கொள்கை ரீதியாக, கோட்பாடாகச் சொல்லிவிட வேண்டும். அகில இந்திய ரேடியோவில் ஆஸ்திகத்திற்குப் பாதி, நாஸ்திகத்திற்குப் பாதி என்று நேரம் கொடுப்பார்களா ? முன்பின் முரணான நிலையில் உள்ளவர்கள் பேசுவதற்கு விடுவார்களா ? இப்பொழுது எப்படி என்றால் முகம்மதியர்களுக்கு இவ்வளவு, கிறிஸ்தவர்களுக்கு இவ்வளவு என்று பங்கு போட்டு சர்வ மதப் பிரச்சாரம் செய்வது தான் நடைபெற்று வருகிறது. படங்களை அகற்ற வேண்டுமென்று சொன்னால் எதிர்ப்பு உண்டாக்கப்படும். ஆனால் அந்த எதிர்ப்பை கண்டு அஞ்சத் தேவையில்லை. அந்த எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டும். பாக்கி உள்ளவற்றை என் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் அவசியமில்லாதது, நேரத்தைப் போக்கக் கொண்டுவரப்படுவது, ஒரு அரசியல் நோக்கத்தோடு கொண்டுவரப்படுகிறது, அதை முறியடிக்க வேண்டும், அதை முறியடிக்க இந்த வரிசையில் இருந்தாலும் நாங்கள் ஆதரவு கொடுப்போம் என்பதை அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொண்டு, முடிந்தால் அவர்களே அதை வாபஸ் பெற்றுக்கொள்வது நல்லது என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. ரெத்தின தேவர் :** தலைவர் அவர்களே, காங்கிரஸ்காரர்கள் கொண்டுவந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தொகுதியிலே ஏற்கெனவே காங்கிரஸ்காரர்கள் ஆட்சியிலே நடந்த சில தவறுகளைக் கூறிக் கொள்வேன். 1957-வது ஆண்டிலே.....

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. The subject before this House is the No-Confidence Motion tabled by the hon. the Leader of the Opposition against the present Ministry. So, any speech that is made on the floor of this House should pertain to this Ministry and its activities and not with regard to the days of Adam and Eve. The hon. Member should not waste the time of the House over all those things and I am worried about the time-factor. If we are going to sit for 20 days, we will talk about those things.

THE HON. THIRU C. N. ANNADURAI: I am glad that the hon. Member wants to be quite logical in our approach to this problem. How did he accommodate the Leader of the Opposition yesterday when he talked about the Neyveli Project and the Perambur Coach Factory and also other things which have no bearing at all to the No-Confidence Motion. (Thiru K. Vinayakam. You should have questioned him at that time.) I might not have questioned him but the hon. Member should have raised objection at that time itself as he is doing now with regard to the other hon. Member that it is irrelevant. But the hon. Member kept quiet at that time (Thiru K. Vinayakam: It pays me). So your logic is what pays you. It is a very bad logic.

**திரு. ரா. ரெத்தின தேவர் :** தலைவர் அவர்களே, நேற்று எதிர்க் கட்சி தலைவர் அவர்கள் பேசும்பொழுது எண்ணூரில் ராஜேந்திரன் என்ற பையனை அடித்தார்கள். பாவம் சும்மா விடுமா என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலே நடந்த காரியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. கீழத்தூவலில் 1957-வது ஆண்டிலே ஜனநாயக சோஷலிசம் பேசக் கூடிய திரு. காமராஜர் உள்பட, இன்றைக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருக்கின்ற சுப்பிரமணியம் உள்பட, அங்கே எம்.எஸ்.பி., எஸ்.ஏ.பி. இவற்றைக் கொண்டு . . .

**திரு. பி.ஜி. கருத்திருமன் :** வெளியே இருக்கிறவர்களைப்பற்றியெல்லாம் காமராஜர், சுப்பிரமணியம் உள்பட என்று பேசுகிறார்கள், அது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த மன்றத்திலே அவர்கள் அமைச்சர்களாக இருந்ததால்தான் குறிப்பிடுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த அரசு என்று குறிப்பிட்டால் பொருத்தமாக இருக்கும், அரசை நடத்திச் சென்றவர்களின் பெயர்கள் வேண்டாம்.

**திரு. ரா. ரெத்தின தேவர் :** அவர்கள் நிர்வாகத்திலே இருந்த பொழுது காங்கிரஸ்காரர்கள் மாபெரும் தலைவர் காமராஜ் என்று கூறுகிறார்களே நான் சொல்கிறேன். அங்கே எம்.எஸ்.பி., எஸ்.ஏ.பி. படைகளை வைத்து அந்தக் கிராம ஜனங்களைப் பள்ளியிலே கொண்டுவந்து அடித்து, நிரபராதிகளான ஐந்து ஆண்களைக் கண்மாயில் வைத்துக் கையையும் காலையும் கட்டிப்போட்டுச் சுட்டார்கள். அதுதான் ஜனநாயக சோஷலிசமா ? அதுதான் ஜனநாயக சோஷலிசம் என்று சொல்லிக்கொண்டு வருகிற தலைவர் செய்யவேண்டிய வேலையா ?

அடுத்தபடியாக, கீரந்தை கிராமத்தில் நாலைந்து பேரைச் சுட்டு வைக்கோல் போரிலே வைத்து மண்ணெண்ணெய் ஊற்றித் தீயை வைத்துக் கொளுத்தினார்கள். அப்போது நீதி விசாரணை வேண்டுமென்று கேட்ட போது சாக்குப்போக்கு சொல்லிவிட்டார்கள். இதுதான் அவர்களுடைய ஜனநாயக சோஷலிசமா ? உழத்துமடை என்ற கிராமத்தில் போலீஸ் லாரி வாய்க்கால் வரப்பில் சிக்கிவிட்டது. அப்போது கிராம ஜனங்களைக் கூப்பிட்டு லாரியைத் தள்ளிவிடுங்கள் என்று கூறி அந்த லாரி வெளியே வந்தவுடன், அந்த லாரியை அப்புறப்படுத்திவிட்டுச் சென்ற ஜனங்களைப் பின்புறமிருந்து எம்.எஸ்.பி. போலீசார் சுட்டார்கள். அருங்குளம் என்ற கிராமத்தில் எம்.எஸ்.பி. போலீஸ் 9 மாத கர்ப்பிணியான அங்கம்மாள் என்ற பெண்ணைத் தூக்கி எறிந்தார்கள். காங்கிரஸ் பெருந் தலைவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து செய்த சதியின் காரணமாக, வேண்டுமென்றே அந்தப் பிராந்திய மக்களை வஞ்சிக்கவேண்டுமென்ற முறையில் திட்டமிட்டு இந்த மாதிரி அக்கிரமமான காரியங்களைச் செய்தார்கள். எங்களுடைய மாபெரும் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள்மீதும், அவரைச்



சேர்ந்தவர்கள் மீதும் பயங்கரமான வழக்குகளை எல்லாம் போட்டு, அந்தப் பகுதியிலேயே வழக்கு மன்றங்கள் இருந்தும் அங்கே விசாரிக்காமல், புதுக்கோட்டையில் ஸ்பெஷல் கோர்ட் ஆரம்பித்து, பத்து மாத காலம் எங்களுடைய தலைவரையும் மற்றவர்களையும் சிறையில் அடைத்தார்கள். காங்கிரஸ்காரர்கள் செய்த இந்த அக்கிரமங்களைக் கண்டு மனமுடைந்துதான் எங்களுடைய தலைவர் மறைந்தார். காங்கிரஸ்காரர்கள் சதி செய்து எங்களுடைய தலைவரைக் கொன்று விட்டார்கள் என்றுதான் கூற வேண்டும். அப்போது ஆறு மாத காலத்திற்குப் போலீசாரின் அட்டூழியங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக எங்களுடைய வீடுகளில் இல்லாமல் வாய்க்கால் ஓரங்களிலும் மற்ற இடங்களிலும் ஒளிந்திருந்தோம். முதுகளத்தூர் பகுதியிலே முத்துராமலிங்கத் தேவரின் சக்தி வளரக்கூடாது என்ற அரசியல் நோக்கத்தோடு திட்டமிட்டுச் செய்த காரியமே தவிர வேறு ஒன்றுமில்லை. அவரை நீங்கள் கொன்றுவிட்டாலும் அவருடைய ஆத்மா ஒரு நாளும் உங்களைச் சும்மா விடாது. இப்போது அந்த முத்துராமலிங்கத் தேவருடைய சிலைக்கு காங்கிரஸ் தலைவர்கள் மாலை போடப் போகிறார்களாம். இது நியாயமா என்று கேட்கிறேன்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் பேசும்போது, "ராஜேந்திரனைக் கொன்ற பாவம் சும்மா விடாது" என்று கூறினார்கள். நீங்கள் செய்த பாவமெல்லாம் உங்களைச் சும்மா விடுமா ? ஐந்து பேருடைய கண்ணைக்கட்டி, கையைக் கட்டி வைத்துக் கொன்று அவர்களுடைய மனைவிமார்களின் தாலியை இழக்கச் செய்த பாவம் உங்களைச் சும்மா விடுமா ? முத்துராமலிங்கத் தேவரைக் கொன்ற பாவம் விடுமா ? காங்கிரஸ் பெரும் தலைவர்கள் காமராஜ், சி. சுப்பிரமணியம் ஆகியோர் திட்டமிட்டுச் செய்த காரியங்கள்தான் அவை என்று கூற விரும்புகிறேன். "வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினையறுப்பான்" என்றொரு பழமொழி உண்டு. நீங்கள் உங்கள் ஆட்சியின்போது வினையைத்தான் விதைத்தீர்கள், அதை நீங்கள் அறுத்துத்தான் ஆக வேண்டும்.

புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு முத்துராமலிங்கத் தேவருடைய ஆத்மா சாந்தியடையும் வகையில் பல காரியங்களைச் செய்திருக்கிறது. பதின்மூன்று குடும்பங்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் நல்ல காரியத்தைச் செய்திருக்கிறது. அதற்காக நான் புதிய அரசைப் பாராட்டுகிறேன். எனக்கு அதிகமாகப் பேசிப் பழக்கமில்லை. ஒரே ஒரு விஷயத்தைக் கூறி முடித்துக் கொள்கிறேன். காங்கிரஸ்காரர்கள் எப்போதும் செய்கிற காரியம், அவரைப் பிடித்தால், இவரைப் பிடித்தால் காரியம் செய்து கொள்ளலாம் என்ற வகையில் திட்டம் போடுபவர்கள். அந்த முறையில் அவர்கள் தாங்கள் செய்த தவறுகளில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக கழகத் தோழர்கள் யாரையாவது பிடித்துக்கொண்டு வருவார்கள். அப்படிப் பட்டவர்களுக்குக் கண்டிப்பாக இடம் கொடுக்காதீர்கள். இந்த அரசு என்னதான் நல்ல காரியங்களைச் செய்தாலும் காங்கிரஸ்காரர்கள் "கை பட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம்" என்ற முறையிலேதான் பேசிக்கொண்டிருப்பார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்துவிட்டதை ஏதோ அவர்களுடைய வீட்டைப் பிடித்துக்கொண்டதுபோல் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்தில் அத்தனை பேருக்கும் ஆட்சிக்கு வர உரிமை இருக்கிறது என்பதை அவர்கள் உணரவில்லை. இத்துடன் என் பேச்சை நிறுத்திக்கொண்டு, ** ** ** விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. பி.ஜி. கருத்திருமன் :** ** ** இந்த மாமன்றத்தின் முன் இருக்கும் ஒரு தீர்மானத்தைப்பற்றி அவ்வாறு கூறுவது உகந்தது அல்ல. அது ஒழுங்கு முறையை ஒட்டியது அல்ல. இதுபற்றிச் சபாநாயகர் அவர்களுடைய தீர்ப்பை அறிய விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** அதை அவர் திரும்பப் பெறவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் தலைவர்தான் கூறியிருக்கிறாரே. தீர்ப்புக் கொடுக்கும்வரை பொறுமையாக இருங்கள். ** ** ** என்று சொல்லப்பட்ட வார்த்தைகள் சபையில்

** பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது

சொல்லக்கூடிய வார்த்தைகள் அல்ல. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சொற்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. ரத்தின தேவர் :** அந்தத் தீர்மானத்தை இந்த அரசு மதிக்கவேண்டியதில்லை என்று கூறுகிறேன்.

***திரு ஆலடி அருணா :** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து எனது கருத்துக்களை இந்த மாமன்றத்தின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தமிழக அரசின்மீது நம்பிக்கை இல்லை என்பதற்கு 11 காரணங்களைத் தனது தீர்மானத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த அரசுமீது நம்பிக்கை இருக்கிறது, இந்த அரசுக்குத் தமிழகத்தில் பெரும்பான்மையான மக்கள் பின்னணியாக இருக்கிறார்கள் என்பதற்கு இதுகாறும், 1967 பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடந்து முடிந்த இடைத் தேர்தல்களில் அளித்த தீர்ப்புகள் தெளிவான முடிவுகளாக விளங்குகின்றன. தென் சென்னை இடைத் தேர்தல், சங்ககிரி இடைத் தேர்தல், அண்மையில் முடிவுற்று மகத்தான வெற்றியை ஆளும் கட்சிக்கு ஈட்டித் தந்த தென்காசி இடைத் தேர்தல் ஆகியவை இந்த நாட்டு மக்கள் இந்த அரசுக்குப் பின்னணியில் பலமாக இருக்கிறார்கள் என்பதற்குத் தெளிவான ஜனநாயகத் தீர்ப்புகளாகும். இத்தனைக்கும் பிறகு எதிர்க்கட்சியின் சார்பில் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், அவர்களுக்கு இருக்கிற உரிமையை இங்கே அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு எந்த விதக் காரணமும் அதற்கு இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

இந்த தீர்மானத்திலே 11 காரணங்களை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் காரணங்கள் அத்தனையும் நியாயமற்றவை, குறிப்பிட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவை, ஆதாரம் அற்றவை, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, ஆளும் கட்சிக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்பதற்காக உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகள் என்பதை நான் முதற்கண் எடுத்துச் சொல்ல விழைகிறேன்.

அவர்களுடைய முதல் குற்றச்சாட்டு நாட்டிலே தொழில் தேக்கம், மந்தம் ஏற்பட்டிருக்கிறது, வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது, கதவடைப்புகள் இருக்கின்றன என்ற கருத்துப்படக் கூறியிருக்கிறார்கள். அதற்கு இன்றையதினம் மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளையும், வாடிக் கிடக்கின்ற தொழிலாளர்களையும் கவனத்திற்குக் கொண்டுவருகிறார்கள்.

கோவை மாவட்டத்திலும் பிற மாவட்டங்களிலும் நூற்பாலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பது உண்மை. அதனால் 13,000 தொழிலாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குப் பலியாகியிருக்கிறார்கள் என்பது உண்மை. இந்த 28 ஆலைகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் மூடப்பட்டனவா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.
பி.ப. 1-00] காங்கிரஸ் ஆட்சியின்போது பத்து ஆலைகள் மூடப்பட்டு இருந்தன. பிறகு 18 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இந்த ஆலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன என்பது உண்மை என்று சொல்லும்போது, இந்த ஆலைகள் மூடப்படக்கூடிய அளவிற்கு என்ன நேர்ந்துவிட்டது, இதற்குப் பொறுப்பாளி யார், யாரால் இந்தத் தீது ஏற்பட்டது, யாருடைய திட்டங்களினால் இந்தப் பாதகம் ஏற்பட்டது என்று பார்க்கவேண்டும். தமிழக அரசின் இன்னின்ன திட்டங்களினால் இந்த ஆலைகள் மூடப்பட்டன அல்லது தமிழக அரசு மேற்கொண்ட இந்தக் கொள்கைகளினால் இந்த ஆலைகள் மூடப்பட்டன என்று காங்கிரஸ் தரப்பிலிருந்து வாதம் சொல்லியிருப்பார்களேயானால் அதில் நியாயம் இருந்திருக்கமுடியும். இந்த ஆலைகள் மூடப்பட்டதற்கு ஆலை



உரிமையாளர்கள் சார்பில் இந்தியத் துணைக் கண்டத்துப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களிடம் ஒரு விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த விண்ணப்பத்தில், இந்தத் தொழில் வீழ்ச்சியுறுவதற்கும், இந்தத் தொழிலில் மந்த நிலை ஏற்படுவதற்கும், இந்த ஆலைகள் மூடப்படுவதற்குமான காரணங்களை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் முழுக்க முழுக்க மத்திய அரசுதான் பொறுப்பாளி என்பதை அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 1963-ம் ஆண்டு நூலுக்கு விதிக்கப்பட்டிருந்த எக்ஸைஸ் ட்யூட்டி ரூ. 13 லட்சம். அந்த 13 லட்சம் ரூபாய் என்றிருந்ததை இன்று மத்திய அரசு 36 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. அந்தத் தொழிலுக்கு இவ்வளவு பளுவான வரியை விதித்தது மத்திய அரசு என்பதை எதிர்க்கட்சி நண்பர்கள் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதைவிட முக்கியமானது என்னவென்றால் அமெரிக்கா பொதுச் சட்டம் 480-ன் கீழ் தரக் குறைவான பஞ்சை விற்க அந்தப் பஞ்சை எல்லாம் ஆலை முதலாளிகளும் வாங்கியே தீரவேண்டுமென்று மத்திய அரசு நிர்ப்பந்தித்திருக்கிறது. 'allotment of unwanted quantity of American cotton of inferior quality under P.L. 480 under exorbitant prices is another strain on the industry' என்று அந்த ஆலை முதலாளிகள் சொல்லியிருக்கிறார்கள். இந்த உடன்பாட்டைச் செய்தது மத்திய அரசாங்கம். இந்தப் பளுவினை ஏற்றியது மத்திய அரசு. இத்தனையையும் மத்திய அரசு செய்ததினால் ஆலைத் தொழிலில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆலைகள் மூடப்படுவதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்று ஆயிரத்தெட்டு முறை சொல்லியும்கூட எதிர்த் தரப்பில் உள்ளவர்கள் அதை ஏற்க மனம் படைத்தவர்களாக இல்லை. இருந்தாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கித் தொழிலாளர்களை வாழ வைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு, நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த ஆலைகளைத் திறந்தாகவேண்டுமென்பதற்காக இன்றையதினம் வரையில் தன் முழு அதிகாரத்தையும், தன் முழுத் திறமையையும் பயன்படுத்தி வருகிறார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பத்து ஆலைகள் மூடப்பட்டிருந்தன. அப்போதிருந்த காங்கிரஸ் ஆட்சி அதைத் திறப்பதற்காக என்ன முயற்சிகளைச் செய்தார்கள் என்ன நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டார்கள் என்று அறிய விரும்புகிறேன். அப்போது சுமார் 25 லட்சம் ரூபாய் காரண்டி கொடுத்தார்கள். ஆனால் இன்றைய தினம் இந்த அரசு $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு காரண்டி கொடுத்திருக்கிறது. விற்பனை வரி விலக்குக் கொடுத்திருக்கிறது. ரிபேட் முறையை வைத்திருக்கிறது. இந்த அரசுப் பல முறைகளில் அந்தத் தொழிலாளர்களை வாழ வைப்பதற்காக அந்தப் பிரச்னையை அணுகியிருக்கிறார்கள். அவர்கள் கூறுகின்ற குற்றச்சாட்டுகள் நியாயமற்றவை, ஆதாரமற்றவை என்பதற்காகத்தான் இந்த விளக்கங்களை அளிக்கிறேன். எதிர்கட்சித் தலைவர் அவர்கள் எந்தப் பிரச்னையைப்பற்றி பேசுவதாயிருந்தாலும் இறுதியில் சுற்றி வளைத்து விவசாயிகளுக்கு அதிக விலை கொடுக்கவேண்டும் என்பதை அவர்கள் தாரக மந்திரமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குத் தரமான விலையைக் கொடுக்க வேண்டுமென்பதில் தமிழக அரசு மாறுபட்ட கருத்தைக் கொள்ளவில்லை. ஆனால் அதிக விலை கொடுப்பதால்மட்டும் அந்தப் பிரச்னையைத் தீர்த்துவிடமுடியாது. உரிய காலத்தில் உரங்கள் கொடுக்கவேண்டும். உரிய காலத்தில் தண்ணீர் கொடுக்கப்படவேண்டும். இவற்றையெல்லாம் தமிழக அரசு மிகச்சிறப்பான முறையில் இன்றையதினம் அளித்து வருகிறது. விலையை உயர்த்த வேண்டும் என்பதில் அக்கறை காட்டும் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசு உரத்தின் மேலுள்ள விலையை எந்தளவிற்கு உயர்த்தியிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் எடுத்துச் சொன்னதில்லை. மத்திய அரசை, உரத்தின் விலையை உயர்த்தாதே என்று எந்தச் சந்தர்ப்பத்திலாவது கேட்டிருக்கிறார்களா? இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால், 1—4—1967-க்கு முன்னால் அம்மோனியம் சல்பேட்டின் விலை 366 ரூபாயாக இருந்தது. இன்றைய தினம் அதன் விலை ரூ. 458. அம்மோனியம் நைட்ரேட்டின் விலை அன்று 455 ரூபாயாக இருந்தது, இன்று 515 ரூபாயாக இருக்கிறது. யூரியாவிற்கு, முன்னால் ரூ. 610 ஆக இருந்தது, இன்று 780 ரூபாயாக இருக்கிறது.

இந்த அளவிற்கு உரங்களின் விலையை மத்திய அரசு ஏற்றியிருக்கிறது. இதையெல்லாம் கவனிக்காமல் விவசாயிகளுக்காக இந்த மன்றத்தில் நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** மன்னிக்கவேண்டும். மத்திய சர்க்கார் விலையை ஏற்றியிருக்கிறார்கள் என்றால் எல்லா மாநிலங்களுக்கும்தான். வேறு மாநிலங்கள் நெல் விலையை உயர்த்தியிருக்கிறார்கள்.

**திரு. ஆலடி அருணா:** மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். அதைவிடக் குறைவாகத் தான் இன்றையதினம் விவசாயிகளுக்கு உரம் கொடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு இந்த அரசு பக்கபலமாக இருக்கிறது என்பதை விவசாயிகள் உணர்ந்துதான் அவர்கள் இந்த அரசுடன் ஒத்துழைக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சியில் இருந்ததைவிட இப்போது கொள்முதலுக்கு அதிகமான நெல்லைக் கொடுத்திருக்கிறார்கள். இது விவசாயப் பெருங்குடி மக்கள் அரசுக்கு அளித்திருக்கும் ஒரு வெற்றிச் சின்னம்.

இப்போது பொதுவாக காங்கிரஸ் நண்பர்கள் ஆழ்வார்களைப் போலவும், அடியார்களைப்போலவும், நாயன்மார்களைப் போலவும் கடவுளுக்காகப் பரிந்து பேச முன்வந்து விட்டார்கள். அதற்கான விளக்கங்களை நம் முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், திராவிட முன்னேற்றக் கழகமும் சரி, இந்த அரசும் சரி, எந்த மதத்தினரின் உணர்ச்சியையும் புண்படுத்த விரும்பவில்லை என்பது மட்டுமல்லாமல், அவர்களின் உணர்ச்சிகளை மதிக்கவும் விரும்புகிறது. அப்படி மதிக்கிற அடிப்படையில் தான் கும்பகோணம் மகாமகத்திற்காக ஆறு லட்சம் ரூபாய் செலவில் தனி ரோடு போடப்பட்டது. நம் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் கும்பகோணத்தில் பத்து நாட்கள் தங்கியிருந்து 15 லட்சம் பக்தர்களுக்கு நல்ல வசதிகளை இந்த அரசு செய்து கொடுத்தது. நபிநாயகத்தின் பிறந்த தின விழாவிற்கு இந்த அரசு விடுமுறை அளித்திருக்கிறது. கோவில் கோபுரங்களின் புனரமைப்பிற்கு இந்த அரசு எதிராக இருந்ததில்லை. ஆனால் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிப்பது வேறு, உணர்ச்சிகளை ஏற்றுக்கொள்வது என்பது வேறு. இந்த அரசு எந்த மதத்தையும் தனக்குச் சாதகப்படுத்திக் கொள்ளவில்லை என்பதன் அடையாளம்தான் அந்த ஆணையின் நோக்கம். அப்படிக் குற்றஞ்சாட்டுகிற நண்பர்கள் நாத்திகம் என்ற ஒரு பத்திரிகையை நடத்துகிறார்கள். அந்தப் பத்திரிகைக்குப் பெருமதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள்கூட நிதி திரட்டிக் கொடுத்திருக்கிறார். நாத்திகப் பத்திரிகை நடத்துகிறவர்கள் ஆத்திகப் பூசாரிகளைப்போல் பேசுவது எந்த அடிப்படையில் நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. (ஆரவாரம்).

இன்னும் சொல்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்று. வட்டச் செயலாளர்கள் வருகிறார்கள், மாவட்டச் செயலாளர்கள் வருகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். வந்தால் என்ன, அது பஞ்சமா பாதகமா? அவர்கள் வந்து பொதுப் பிரச்னைகள்பற்றிப் பேசக் கூடாதா, சொல்லக்கூடாதா ? காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகாரிகளைச் சந்தித்து தங்கள் கருத்துக்களைச் சொன்னால் அதிகாரிகள் அவர்களை வெறுத்து ஒதுக்கி வைத்திருந்தார்கள். அவர்களைத் தரக்குறைவாக மதித்தார்கள். அப்படி மதிக்கக்கூடிய அளவிற்கு இந்த அதிகாரிகளிடம் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் பகை மூட்டி வைத்திருந்தார்கள். ஆனால் எந்த அதிகாரிகள் அப்படி ஒதுக்கினார்களோ, அல்லது எந்த அதிகாரிகள் அப்படி வெறுத்தார்களோ அவர்கள் இன்று நம்மிடம் கனிவோடு பேசுவது கண்டு காங்கிரஸ்காரர்களுக்கும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நேற்று புறக்கணிக்கப்பட்டவர்களைப் பார்த்து இன்று புன்முறுவல் பூக்கிறார்களே என்று அவர்களுக்கு ஆத்திரமாக வருகிறது; அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவேதான் நாங்கள் நிர்வாகத்தில் தலையிடுகிறோம் என்று சொல்கிறார்கள். அமைச்சரவையில்



இப்போது இடம் பெற்றிருக்கிற தலைவர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது எண்ணற்ற குற்றச்சாட்டுகளை அப்போதிருந்த அரசின்மீது சாட்டியிருக்கிறார்கள், எண்ணற்ற ஆதாரங்களோடு. அவற்றையெல்லாம் மீண்டும் புரட்டி அவர்களைத் தலை குனிய வைக்க நான் ஆசைப்படவில்லை. அதற்கு மாறாக இன்று அவர்கள் கட்சியின் தளபதியாக இருப்பவர் பத்துப் பதினைந்து தினங்களுக்கு முன்னால் அவரது பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள். அதைமட்டும் காங்கிரஸ் நண்பர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்று தமிழ்நாட்டில் பத்து பதினைந்து பேர்கள் பழைய காங்கிரஸ்காரர்கள் என்ற பெயரால் காங்கிரஸின் முட்டியை உடைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் மந்திரி சபையில் பதவி வகித்தவர்கள். ஊழல்களுக்கு இவர்கள்தான் அஸ்திவாரம். சம்பந்திக்குப் பதவி, சட்டகருக்கு உதவி, ஜாதிக்காரர்களுக்குச் சலுகை, தன் குடும்பத்தாருக்குப் செல்வாக்கு என்று தேடிக்கொண்டவர்கள் என்று இப்படிக் குற்றஞ்சாட்டுவது நான் அல்ல. இப்படிச் சொல்வது உங்கள் கட்சி தளபதிதான். இதை எதிர்த்து எந்த காங்கிரஸ்காரராவது துணிந்து பேசியிருக்கிறாரா? ஆனால் கழக அரசு மிகவும் நேர்மையுடன் நடக்கிறது. இந்த அரசு ஜனநாயக முறைகளைக் கடைப்பிடித்து, நேர்மையைக் கடைப்பிடித்து, மக்கள் குரலை மதித்து நடந்து வருகிறது. எதிர்காலத்திலும் அப்படி நடக்க இருக்கிறது. எனவே, இந்த அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தது மனச்சாட்சிக்கு ஏற்றதாக இருக்காது * * * என்பதைக் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** * * * * என்று கூறலாமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * * * என்ற வார்த்தையை நீக்கிவிடவேண்டும்.

**திரு. பி.ஜி. கருத்திருமன் :** அதை எழுந்து சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * * என்ற வார்த்தையை திரு. ஆலடி அருணா அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்வது நல்லது.

**திரு. ஆலடி அருணா :** திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதை சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கி விடவேண்டும்.

THE HON. THIRU C. N. ANNADURAI : Some time ago I announced that I will make an announcement about this ' Vinayaka Chathu thi '. I will make that announcement now. A holiday for ' Vinayaka Chathurthi ' is declared for this year also on a representation made by the Tamilnad Secretariat Association. This day will be a holiday for all Government offic(s in the State and *not* for industrial establishments and factories under Government control.

***திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தலைவரவர்களே, இன்று நண்பர் கருத்திருமன் அவர்கள் கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பேரில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அந்தக்கட்சியில் 15 ஆண்டுகளாக நானும் ஒரு ஊழியனாகயிருந்து அதில் நம்பிக்கையிழந்துதான் இன்று நான் இந்த வரிசையில் உட்காரக் கூடிய பாக்கியம் பெற்றிருக்கிறேன். நம்பிக்கையை ஏன் இழந்தது

---

**பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

என்றால், அந்தக் கட்சியின் கொள்கைகள் சரியானதாக இருக்கலாம்; ஆனால் அதை நடத்திச் செல்லக்கூடிய தலைவர்களின் போக்குச் சரியாக இல்லாத காரணத்தினால்தான் அதற்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நேற்று அசோக்மேத்தா அவர்கள் ராஜினாமா செய்தது உறுதி செய்கிறது. எனவே, என்ன காரணத்தினால் நாம் நம்பிக்கை இழந்தோம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனென்றால் இப்பொழுது போடப்பட்டிருக்கும் குறிப்பில் கொடுக்கப்பட்டிருப்பதெல்லாம் மத்திய சர்க்காரை அனுசரித்துச் செய்யக்கூடிய திட்டங்கள். மத்திய சர்க்காருடைய ஒத்துழைப்பு இல்லை என்பதை எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் சொன்னார்கள். ஆனால், அதைவிட்டு, ஒன்றரை வருஷ காலத்தில், இந்த அரசு ஏற்பட்ட பிற்பாடு என்னென்ன நல்ல காரியங்கள் செய்தது என்பதை எண்ணிப் பார்க்கும்படி அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கல்வி சம்பந்தப்பட்ட மட்டில், தொழிற்கல்வி, ஆர்ட்ஸ் காலேஜ் ஆகியவற்றில் எல்லாம் தேர்தல் நடந்தது, அதாவது செலக்ஷன் நடந்தது. அதில் மதிப்பிற்குரிய திரு. மாதவன் அவர்களின் சகோதரிக்குக்கூட இடம் கிடைக்கவில்லை, இதிலிருந்து எவ்வளவு ஒழுங்காக, எவ்வளவு நேர்மையாக நீதி முறைப்படி இன்று அந்த செலக்ஷன் நடந்திருக்கிறது என்பது தெரிகிறது. அதில் ஒரு குறைபாடும் இல்லை. நம்முடைய காலத்தில் பல குறைகள் இருந்திருக்கின்றன. ஆனால் இப்பொழுது கல்வி இலாக்காவின் செலக்ஷனைப்பற்றி எல்லோரும் பெருமையாகப் பேசுகிறார்கள்.

மொழிக்கொள்கையைப்பற்றி எடுத்துக்கொண்டாலும், இன்று திட்டமாக இரு மொழிக்கொள்கை என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய பொறுப்பில் இருந்தபொழுது மொழிக்கொள்கைபற்றி அலசிப் பார்த்தால் திட்டமான கொள்கையில்லாமல் இருந்தது. அதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பொதுப்பணித் துறையைப் பொறுத்தமட்டில் இன்றைய தினம் திட்டங்களைச் சீர்தூக்கி முடிவு செய்கிறார்கள். மஞ்சளார் திட்டம் கொண்டு வந்தோம். அன்று இதே சட்டசபையில் பம்பையார் திட்டம் ஒதுக்கப்பட்டு பரம்பிக்குளம் திட்டம் உருவாக்கப்பட்டது. அப்பொழுது சட்டசபையிலிருந்து மதிப்பிற்குரிய இராமநாததபுரம் சமஸ்தான சேதுபதி அவர்கள் சொன்னபோது அவ்வாறு உருவாக்கத் தயாரில்லை என்று சொல்லி புறக்கணிக்கப்பட்டது. மதிப்பிற்குரிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் அதைத் தங்கள் மாவட்டத்திற்குக் கொண்டுபோனார்கள். அவர்கள் மாவட்டத்திற்குக் கொண்டுபோகக்கூடாது என்று சொல்லவில்லை. இருக்கும் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து எந்த இடத்திலே கஷ்டம் இருக்கிறது, எந்த இடத்திலே உள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று பார்த்து முடிவு ஏற்பட்டிருந்தால் இத்தகைய வீழ்ச்சிக்கு நாம் வந்திருக்க மாட்டோம். இப்பொழுது பொதுப்பணித் துறையில் சீர் தூக்கிப் பார்த்து 10 திட்டங்களைச் சொல்லியிருக்கின்றார்கள். இன்றுவரை ஒருவரும் குறை சொல்லவில்லை.

அடுத்தபடியாக பஸ்களை எடுத்துக்கொள்வோம். இப்பொழுது தேசியமயமாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. கொள்கைகளை நீங்கள் கொண்டு வந்திருக்கலாம், ஆனால் அதை நீங்கள் அமல் நடத்தவில்லை. அமல் நடத்துவதுதான் முக்கியமாக இருக்க வேண்டும். அப்படி அமல் நடத்தினால்தான் சாதாரண மக்கள் போக்குவரத்தில் குறைந்த கட்டணத்தில் சென்றுவர வாய்ப்பாக இருக்கும். எனவே, இப்பொழுதிருப்பதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விவசாயத்தைப் பாருங்கள். கருத்தரங்குகள் வைத்திருக்கிறார்கள். இதனால் அதிகாரிகள் பயப்படுகிறார்கள். கருத்தரங்குகள் வந்தால் மக்களின் கஷ்டங்கள் நேரிடையாகத் தெரியும் என்ற எண்ணம் வந்து



விட்டது. இப்படி அதிகாரிகளை ஊக்குவிப்பதற்கு, அவர்களை ஞாபகப் படுத்துவதற்கு அந்தக் கருத்தரங்குகள் வைக்கப்படுகின்றன. விவசாய இலாகாவிலே உள்ள கால்நடை நிர்வாகம் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டிருக்கிறது. நம்முடைய காலத்தில் ஏற்பட்ட ஒழுங்கீனங்களைத் திருத்தி செவ்வனே செய்ய வேண்டுமென்று இப்பொழுது திருத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, தொழிலாளர் கூட்டுறவு அதற்காக ஒரு தனிக் கமிட்டி போட்டு இன்று செயல்படுத்த கூட்டுறவு அமைச்சரவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதைவிட நான் பெருமையாகச் சொல்வேன், நம்முடைய காலத்தில், காங்கிரஸ்காரர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட ஊழல்களை, கூட்டுறவு ஊழல்களை இந்த ஆட்சி வெளிபடுத்தியவுடன் பல கூட்டுறவுத் தலைவர்கள் துர்மரணம்கூட அடைந்திருப்பதைக் கேட்கும்போது வருத்தப்பட வேண்டியிருக்கிறது. ஏனென்றால் ஊழல் மலிந்து விட்டதை அப்பொழுதிருந்த சர்க்கார் கவனித்திருந்தால் மக்களுக்குப் பிரயோசனப்பட்டு இருக்கலாம். இந்தச் சர்க்கார் வந்த பிறகு அந்த ஊழல்களுக்குச் சரியான நடவடிக்கை எடுத்தவுடன் 6, 7 தலைவர்கள் துர்மரணம் அடைந்திருக்கிறார்கள். இப்பொழுது கடைய நல்லூர் என்ற ஊரில் 13 சொஸைட்டிகளில் 18 இலட்சம் ரூபாய் கையாடல் செய்ததற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பலமுனைகளில் அவர்களுக்கு நெருக்கடி வந்தும், நீதி, நேர்மை நிலைக்க வேண்டுமென்று எண்ணி இந்த அரசு வேலை செய்துகொண்டு வருகிறது. இதை நம்பி நாம் பொறுப்பைக் கொடுக்க வேண்டும்.

அரிசன இலாகாவில் மனை விநியோகத்தை எடுத்துக்கொள்வோம். அந்தப் பணம் செயல்பட முடியவில்லை. நஞ்சையில் இன்று மனைகள் எடுத்துக்கொடுக்கக்கூடாது என்று ஒரு திட்டம் செய்தவுடன் அந்தப் பணத்தை சரண்டர் செய்யவில்லை. அந்த அமைச்சரவர்கள் அரிசன மக்களுக்குக் கிணறு வெட்ட வேண்டுமென்று திட்டம் போட்டு. பல கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இது நேர்மையான, ஒழுங்கான நிர்வாகம் என்பதை இதிலிருந்து கவனப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்தப் பரிபாலனத்தில், வேண்டாத கட்சிப் பூசலை உண்டாக்கக்கூடிய ஏரியாக் கமிட்டிகளை நீக்கிவிட வேண்டுமென்றுகூட மசோதா வந்து கொண்டிருக்கிறது. அதைச் செவ்வனே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஒழுக்கத்திற்கு ஒரு உதாரணம் மதுவிலக்கு. காந்தியின் கொள்கைகளை முழு அளவில் இன்று அமல் நடத்தவேண்டுமென்று துடிக்கிறார்கள். ஆனால் மத்திய சர்க்காருடைய சட்டம் இதற்கு இடம் கொடுக்கவில்லை. அந்தச் சட்டப்படி லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. அந்தச் சட்டத்தை மாற்றி, சென்ட்ரல் ஆக்டை ஸ்டேட் ஆக்டாகச் செய்து விட்டால் நன்றாக, ஒழுங்காக மதுவிலக்கை அமல் நடத்த முடியும். இதைச் செய்ய நாம் எல்லோரும் ஒன்றாக இருந்தால் நாட்டில் ஒழுங்கு ஏற்பட வழியேற்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து ஆட்சியினால்தான் கிராமப்பகுதிகள் நன்றாக இருக்க முடியும். அதற்கு ஆர்.டி.எல்.எ. டிபார்ட்மெண்ட் இருந்துகொண்டிருக்கிறது, ஆனால் வருந்தக்கூடிய நிலைமையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இன்று ஊழல் அதிகமாக வந்திருக்கிறது. அதை நீக்கவேண்டுமென்று ஒரு கமிட்டி. போட்டார்கள். தைரியத்துடன் அதை அமல் நடத்துங்கள். நீங்கள் அதிகாரிகளினுடைய எண்ணத்தை ஒரு பக்கம் வைத்துவிட்டு, மக்களுடைய எண்ணத்தைத் தெரிந்து செயல் படுத்தினால் சாதாரண மக்கள், கிராமத்திலுள்ள மக்கள் நன்மை அடைவார்கள். (மணி அடிக்கப்பட்டது).

[திரு. எ. ஆர். சுப்பையா முதலியார்] [1968 ஆகஸ்டு 24

ஒரே ஒரு வேண்டுகோள். அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் பல பகுதிகளுக்கு வருகின்றீர்கள். அப்பொழுது தனிப்பட்டவர் களுடைய பங்களாவில் இருக்க வேண்டாம், சாதாரண மக்கள் தொடர்பு கொள்வதற்குக்கூட அச்சப்படுகிறார்கள்.

1½ வருஷத்தில் நீங்கள் செய்ததை நான் சொன்னேன். இன்னும் சொல்ல வேண்டியது நிறைய இருக்கிறது. சரிவரச் செயல்படுவதற்கு எதிரில் உள்ளவர்கள் ஊக்கம் கொடுங்கள். 6 மாதத்திற்கு ஒரு தடவை நீங்கள் கொண்டுவந்தால், அதை விவாதிப்பதால் நல்லதுதான் ஏற்படுகிறது. என்னென்ன நல்ல காரியங்களை அரசு செய்திருக்கிறது என்பதை மக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பிருக்கிறது. ஆனால், நீங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்தாமல் வாபஸ் பெற்றுக் கொண்டால் நல்லது என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். நான்தான் கடைசிப் பேச்சாளன் என்று நினைக்கிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கடைசிப் பேச்சாளன் அல்ல. 2-00 மணிக்குள்ளே இன்னும் 4 பேர்கள் பேசவேண்டும். 10 நிமிஷங்கள் தான் வரும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** எங்கள் கட்சித் தலைவர் இந்த அவைமுன் வைத்திருக்கின்ற, நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இயங்குகின்ற மந்திரி சபைமீது, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஒட்டி எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனக்கு முன்னதாக உரையாற்றிய நண்பர் திரு. எ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் 2 ஆண்டுக்கு முன்னாலே இதே மாதிரி காங்கிரஸ் அரசுமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்த அவையில் வந்தபொழுது, அந்தத் தீர்மானத்தை எதிர்த்து அன்றிருந்த காங்கிரஸ் கட்சியை ஆதரித்து, ஒரு சொற்பொழி வாற்றியிருக்கிறார்கள். ஆகவே, அந்தச் சொற்பொழிவையும் இன்று அன்னார் ஆற்றிய சொற்பொழிவையும் எடுத்துப் பார்த்தால் எந்தச் சொற்பொழிவில் அதிக கருத்துக்கள் அடங்கி யிருக்கின்றன என்று தெரியும். ஆகவே, இன்றிருந்த அரசுமீது சுமத்துகின்ற பழிகள் உண்மையிலே குற்றச்சாட்டுகள் என்பதனை அறிவதற்கு ஆதாரமாக அது இருக்கும் என்று கூறிக்கொள் கிறேன்.

அடுத்ததாக, இன்று இந்த அவையின்முன் இருக்கிற பிரச்சினை, காங்கிரஸ் கட்சி கொண்டுவந்திருக்கிற 11 அம்சங்கள் அடங்கிய குற்றச்சாட்டு. இதற்கு முன்னதாகப் பேசிய ஆளும் கட்சி நண்பர்களானாலும்சரி, ஒருவேளை அவர்களோடு தோழமை கொண்டிருக்கிற நண்பர்களானாலும்சரி, அந்தக் குற்றச்சாட்டுகளில் கூறி இருப்பதை, உண்மை அல்ல, உண்மைக்கு விரோதமானவை என்று கூறினதாகத் தெரியவில்லை. ஏதோ மத்திய அரசு, கேரள அரசு, அந்த அரசு, என்று கூறிக்கொண்டு போனார்களே தவிர, அந்தக் குற்றச்சாட்டுக்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. இங்கு இருக்கிற குற்றச் சாட்டுகள் 11. தலைவர் கூறியதுபோல் எனக்கு சமயம் இல்லை, ஆகவே, ஒன்றை மாத்திரம் கூற விரும்புகிறேன்.

இன்று இந்த நாட்டில் இருக்கிற மக்கள், விவசாயிகளானாலும் சரி, மாணவர்களானாலும் சரி, தொழிலாளர்களானாலும் சரி, யாவரும் இந்த அரசுமீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்து விட்டார்கள் என்பதுதான் எங்கள் குற்றச்சாட்டு. இதிலே ஒரு பகுதியை எடுத்துக்கொள்கிறேன். கடந்த மார்ச்



1968 ஆகஸ்ட் 24] [திரு. ஜே. ஜேம்ஸ்]

மாதம் பஸ் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் நடந்த கலவரங்களைப் பற்றி நாம் அறிவோம். அன்று பஸ் தொழிலா ளர்கள் நமது பொதுப் பணி அமைச்சர் அவர்களை இந்தக் கோட்டையில் சந்தித்து, அவர்கள் கோரிக்கைகளை அன்னாரிடம் கூறியபோது அமைச்சர் அவர்கள் கூறிய வாக்கியத்தை நாம் அறிவோம். அவர்கள் கூறினார்கள், " தோழர்களே, உங்கள்மீது நான் கண்ணீர் புகையைத்தானே . . .

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர். அவர் பேசுகிற பிரச்சினை தற்பொழுது நீதி விசாரணையில் இருக்கிறது. அப்படி இருக்கும்பொழுது அதைப்பற்றிப் பேசுவது " சப் ஜுடிஸ் " இல்லையா ?

THIRU J. JAMES : I am not going into the merits of the case. I am only referring to the Hon. Minister's statement on that occasion. So it will not be *sub-judice*. அப்பொழுது நமது மதிப்பிற்குரிய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். "தோழர்களே, உங்கள் மீது கண்ணீர்ப் புகைதானே வீசப்பட்டது; ஆனால் மாணவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தேனே" என்று . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மிகத் தவறான கருத்தை, உண்மைக்கு மாறான, அன்னார் கற்பனையிலிருந்த கருத்தை நண்பர் அவர்கள் பேசினார்கள். உங்கள்மீது கண்ணீர்ப் புகை மாத்திரம் தான் நடந்தது அவர்கள்மீது தடியடி பிரயோகம் செய்தேனே" என்று நான் சொன்னதாகச் சொன்னது முழுதவறு. வடிகட்டிய உண்மைக்கு மாறான செய்தி.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அமைச்சர் அவர்கள் கூறியதை அவைமுன் கூறினால் அவை தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நான் கூறியது தவறு என்று அமைச்சர் கூறினது . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் தொழிலாளர்களிடத்திலே பேசும்பொழுது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏக்களும் இருந்தார்கள். மேலவை உறுப்பினர் திரு. எத்திராஜ் போன்றவர் களும் அங்கு அருகிலே இருந்தார்கள். வேறு கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கு அருகிலே இருந்தார் கள். " எங்கள் மீது கண்ணீர் புகை விட்டார்களே" என்று தொழிலாளர்கள் ஆத்திரத்தோடு கேட்டபோது, " அப்படிப்பட்ட நிகழ்ச்சி எங்கெங்கே நடைபெற்றதோ அங்கெல்லாம் போலீஸார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ; மாணவர்கள் மீது தடியடி நடத்தினார்கள் " என்று செய்தி அளவிலே சொன்னேனே தவிர, " உங்கள் மீது கண்ணீர் புகைதான் ; மாணவர்கள்மீது தடியடி " என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகின்ற பிரச்சாரத்திற்கு நண்பர் அவர்கள் வலிவேற்ற முயலுவாரேயானால் அதிலே தோல்வியுறுவார் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். ஆதரிக்கிறேன், இந்த சட்டமன்றத்தில் அந்த கருத்தைத்தான் நான் கூறினேன். ஆகவே, இந்த நிலையில் அந்த மாணவர்கள், தொழிலாளர்கள் இந்த அமைச்சரவையை ஆதரிப்பார்களா ? அதை நம்புவார்களா ? இந்த மாநிலத்திலுள்ள மாணவர்கள் இந்த மந்திரிசபை மீது நம்பிக்கை வைத்திருக்கவில்லை என்பதற்கு ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். இன்று ஆங்காங்கே கல்லூரிகளில் யூனியன் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் தோற்கடிக்கப்பட்டு வருகின்றதையும்,

அதற்கு மாறாக காங்கிரஸ் ஆதரவாளர்கள் வெற்றி பெற்றதையும் இதற்கு எடுத்துக் காட்டாக கூறிக்கொள்கிறேன். அதற்கு அடுத்ததாக தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 2 நிமிடங்கள் ஆகி விட்டன.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டார்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்கு நேரம் கொடுக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அடுத்ததாக, எனக்கு முன்னதாக சொற்பொழிவாற்றிய நமது கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் பாலசுப்பிரமணியன் அவர்கள் "இன்று மத்திய ஆட்சியில் உள்ள நிறுவனங்களில் எல்லாம் 19-ஆம் தேதி 25 இலட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போகிறார்கள். நமது ஆட்சியில் தொழிலாளர்கள் அமைதியாக இருக்கிறார்கள் ; தொழிலாளர்களுக்கு இந்த அரசு எவ்வளவு நன்மைகள் செய்து கொண்டிருக்கிறது" என்ற கருத்தோடு பேசினார்கள். இந்த அரசின் தொழிலாளர் கொள்கையை ஆமோதிக்கின்றார்கள் என்ற அளவில் தான் அன்னார் உரையாற்றினார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று 27 மில்கள் நமது மாநிலத்தில் அடைக்கப்பட்டிருக்கின்றன. ஆலைகளானாலும் சரி, மற்ற நிறுவனங்களானாலும் சரி இவைகளையெல்லாம் சேர்த்து இன்று மொத்தம் 1,25,000 தொழிலாளர்கள் இன்று வேலை வாய்ப்பு இழந்து தெருவிலே திரிகின்றதை இந்த அரசு கவனிக்கவில்லை. அவர்களுக்கு எதுவும் செய்வதாகத் தெரியவில்லை என்பதை நாம் அறிவோம்.

பொதுவாக, இந்த அரசு கழிந்த 18 மாதங்களில் தொழிலாளர்களுக்காக யாதொரு நன்மையும் செய்யவில்லை என்று நான் தைரியமாகக் குறை கூற விரும்புகிறேன். அதோடு மட்டும் அல்ல ; இந்த அரசின் தொழிலாளர் கொள்கை என்ன என்று சொன்னால், எங்கள் பகுதியில் ஒரு மீன் இனம் இருக்கிறது. அதன் வால் மீனைப் போலவும், தலை பாம்பைப் போலவும் இருக்கும். "விலாங்கு" அதன் பெயர். அந்த மீன் என்ன செய்யும் என்று சொன்னால் குளத்திலோ, ஆற்றிலோ, பாம்பைக் கண்டால் தலையையும் , மீனைக் கண்டால் வாலையும் சமயத்திற்கேற்றாற்போல் காட்டி அவைகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளும். அது போல் இந்த அரசு முதலாளிகளைக் கண்டால் முதலாளிகள் அரசு என்றும், தொழிலாளிகளைக் கண்டால் தொழிலாளி அரசு என்றும் கூறி தப்பித்துக்கொள்ள முயலுகிறது. ஆனால் இரு சாராரின் நம்பிக்கையையும் இழந்து விடுகிறது. ஆகவே தான் இந்த மாநிலத்தில் "இண்டஸ்ட்ரியல் அன்ரெஸ்ட் ", தொழிலாளர் பிரச்சினைகள் கூடிக்கொண்டே வருகிறது. எனது நண்பர் ஏதோ மத்திய அரசினரைக் காட்டி, அங்கு தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்ய இருக்கிறார்கள் என்று கூறினார்கள். இந்த அரசு 18 மாத காலமாக தொழிலாளர்களுக்கு எதைச் செய்திருக்கிறது. நான் கவர்னர் உரையின் மீது விவாதம் நடந்தபொழுதும், பட்ஜெட் விவாதத்தின் பொழுதும் கூறினேன். எங்கள் பகுதியிலே உள்ள ரப்பர் பிளாண்டேஷனை அரசாங்கமே நடத்திக்கொண்டிருக்கிறது. அங்கே ஏகதேசம் 2,000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். அவர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்களுக்கு சட்டப்படி வழங்கவேண்டிய நன்மைகள் ஒன்றும் வழங்கப்படவில்லை. மத்திய சர்க்காருடைய சிபாரிசின்படி சம்பளம் கூட





கொடுக்கப்படவில்லை. எத்தனையோ பிரயாசைகளுக்குப் பிறகு கடைசியாக 18—3—1968-ல் இந்த அரசு ஒரு உத்தரவு பிறப்பித்தார்கள். அந்த ஆணையின்படி இந்தத் தொழிலாளர்களுக்கு எல்லா நன்மைகளும் கொடுக்கப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருந்தும், தொழிலாளர்களுக்கு இன்னும் ஒரு காசு கூட கொடுக்கப்படவில்லை. அந்த ஆர்டர் அப்படியே டெட்லெட்டராக இருக்கிறது. தொழிலாளர்கள் 2—9—1968-லிருந்து வேலை நிறுத்தம் செய்வதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அந்த பகுதியிலிருக்கிற கம்யூனிஸ்ட் தொழிற்சங்கமும் ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்திருக்கிறது. நோட்டீஸ் கொடுத்ததுமட்டுமல்ல. கம்யூனிஸ்டு தொழிற்சங்கம் 16—8—1968 முதல் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை இவ்வாறு இருக்க, இந்த நாட்டில் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் இந்த அரசின் மீது எவ்வளவோ குற்றச்சாட்டுகளைக் கூறி வருகிறார்கள். அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறுகிறார்கள். வெளியிலே கம்யூனிஸ்டு தொழிலாளர்கள் இந்த அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள், உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆனால் இங்கே அரசுக்கு ஆதரவு தரும் முறையில் பேசுகிறார்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதில் பிரயோசனமில்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த அரசை வைத்து கட்சியை வளர்க்கின்ற ஒரு அரசாக இந்த அரசு செயல்படுகிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். உதாரணமாக, எங்களுடைய மாவட்டத்தில் 9 பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் அத்தனை பேர்களும் ஒரே அடியாக ஒரே நாளில் அந்த ஜில்லாவைவிட்டு மாற்றப்பட்டிருக்கிறார்கள். நான் சட்டசபையில் இதைப்பற்றிக் கேட்டேன். அமைச்சர் அவர்கள் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆர்டர் என்று சொன்னார்கள். அதற்குப் பின்னாலே என்ன நடந்தது என்று சொன்னால், எங்கள் பகுதியிலுள்ள கழகத் தோழர்கள் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களிடமிருந்து வாக்குறுதித் கேட்டார்கள். "நாங்கள் இனிமேல் காங்கிரஸுக்காக வேலை செய்யமாட்டோம். கழகத்திற்காக வேலை செய்வோம்" என்ற வாக்குறுதியை அவர்களிடம் பெற்று, திரும்பவும் நான்கு பேர்கள் அங்கேயே மாற்றப்பட்டுவிட்டார்கள்.

இன்னொன்று, எங்கள் பகுதியிலே உணவு தானியம் விநியோக கார்டு லிஸ்டத்தில் நடந்துகொண்டிருக்கிறது. அங்கு கூட கழகத் தோழர்கள் சென்று அதிகாரிகளை மிரட்டி, அந்த டெப்போக்களை கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றிக்கொடுக்கவேண்டும் என்ற முறையில் நிர்வாகத்தில் தலையிட்டிருக்கிறார்கள். இம்மாதிரி கழகத் தோழர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே தான் கூறுகின்றேன், அவசியம் இல்லாத முறையிலே அரசாங்க அலுவல்களில் கட்சியினர் தலையிட்டு கட்சியை வளர்ப்பதற்கான நிலை இருந்து கொண்டிருக்கிறது. மக்களை வளர்ப்பதற்குப் பதிலாக கட்சியை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் ஆகவே தான் நான் இந்தக் குற்றச்சாட்டைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு உணவு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். உணவு விநியோகம் செய்வதிலே எங்கே 1,000 கிராம் என்பதை 800 கிராம் என்ற அளவிலே குறைத்துக்கொடுக்கிறார்கள். எங்கே, எப்பொழுது, யார் கொடுக்கிறார்கள் என்ற மூன்று கேள்விகளைக் கேட்டார்கள். வினாவிடை சமயத்தில் நான் அதற்கு பதில் கொடுக்க முடியாத நிலையில் இருந்தேன். ஆனால் இப்பொழுது சொல்லுகிறேன். சபாநாயகர் அவர்கள் மூலமாக கம்யூனிஸ்டு கட்சி பப்ளிஷ் செய்த ஒரு இதழைக்

கொடுக்கிறேன். அதில் முழு விவரமும் இருக்கிறது. கம்யூனிஸ்டு கட்சி இந்த நிலையைக் கண்டித்து இந்த அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தி, உண்ணாவிரதம் இருந்து, இந்த அரசாங்கத்திற்கு மக்களுடைய நிலையை விளக்கியிருக்கிறார்கள். இந்த பிரசுரத்தை உணவு அமைச்சர் அவர்களுக்கு சபாநாயகர் அவர்கள் மூலமாக அளிக்கிறேன். உணவு அமைச்சர் அவர்கள் சபையில் இல்லாத காரணத்தினால் இதை அவரிடம் கூறிக்கொள்ளும் சூழ்நிலை இல்லை.

ஆகவே, இந்த மாநிலத்திலுள்ள அனைத்து மக்களும், தொழிலாளர்களும், மாணவர்களும், விவசாயிகளும், அத்தனை பேர்களும் இந்த அரசின் மீது நம்பிக்கையை இழந்திருக்கிறார்கள். இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை ஆதரித்து எனது சொற்பொழிவை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த மன்றத்தின் நேரத்தை இன்னொரு ½ மணி நேரம் எடுத்துக்கொண்டு, திரு அக்னிராஜு அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

*** திரு. எஸ். அக்னிராஜு :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லி 11 குற்றச்சாட்டுக்களைக் கூறி, அன்றாடம் நடக்கக்கூடிய பிரச்சினைகளைக் கையிலே ஒரு பூதக்கண்ணாடியை வைத்துக்கொண்டு பார்த்து, பெரிய அளவிலே அவைகளுக்கு ஒரு தோற்றம் அளித்து, அவைகளைப் பிரமாதமாக்கி அந்த அடிப்படையிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த 11 அம்சங்களிலே முதல்படியாக எடுத்துக்கொண்டிருப்பது சட்டம், அமைதி இல்லை என்பது. சட்டம், அமைதி, ஒழுங்கு இல்லை என்று சொல்லி, அதன் மூலம் ஒரு கொந்தளிப்பையும், குழப்பத்தையும் உண்டு பண்ணி, தமிழ் நாடு பூராவிலும் ஒரு ஒழுங்கான, முறையான பிரசாரத்தை உண்டு பண்ணி, அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய முடிவை தென்காசித் தேர்தலில் அனுபவித்து இருந்தும், சட்டமன்றத்தில் அந்தப் பிரச்னைகளைக் கொண்டு வந்து அதன் மூலம் ஒரு குழப்பத்தை உண்டு பண்ணி, அந்தக் குழப்பத்தினால் சட்டம், அமைதி கெட்டுவிட்டது என்று பத்திரிகைகளில் விளம்பரம் ஏற்பட்டு, அதன் மூலம் பிரசாரத்தை ஏற்படுத்தலாம் என்று மறைமுகக் கணக்குப் போட்டு, அந்தக் கணக்கின்படி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஒரு பொருளை ஒருவன் திருடிக்கொண்டு ஓடும்பொழுது, மற்றவன் அவனைத் துரத்திச் செல்லுகின்ற நேரத்தில் தெருவிலே போகின்ற ஒருவனுடைய முகத்தைக்காட்டி, அதோ, திருடன் ஓடுகிறான் என்று சொல்லி வேறு ஒருவனுடைய உருவத்தைக்காட்டிவிட்டு, உண்மைத் திருடன் ஓடுவதைப்போல, இவர்களே சட்டம், ஒழுங்கு இவைகளைப் கெடுக்கின்ற முக்கியமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவிட்டு, சட்டம், ஒழுங்கு, அமைதி இல்லை, அமைதியைக் காக்கவேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். நடைமுறையில் ஆட்சி செய்கின்ற தி.மு.க. நண்பர்களைப் பார்த்து, அமைச்சர்களைப் பார்த்து சுட்டிக்காட்டிவிட்டு ஓடுகிறார்கள். சட்டம் அமைதி, ஒழுங்கு கெட்டுப்போய் விட்டது என்று சொல்லுகிற நேரத்தில், தொழிலாளர்கள் அதிகமாகப் போராடுகிறார்கள். தொழிலாளர்களுக்கு அதிகமாகப் பாதுகாப்பு இருக்கிறது. தொழில் அதிபர்களுக்கு நல்லபடியான பாதுகாப்பு இல்லை என்று சொல்லுகிறார்கள். தொழிலாளர்கள் 20 வருஷ கால காங்கிரஸ் ஆட்சியில் அடக்கி, ஒடுக்கப்பட்டு அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளெல்லாம் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சில தொழிலாளர்களுக்கு மட்டும், ஐ. என்.டி. யு. ஸி., என்ற தொழிற் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்குமட்டும் நியாயம் வழங்கவேண்டும் என்ற முறையிலே ஏற்பாடு



செய்து, அதனாலே ஒடுக்கப்பட்ட மற்ற தொழிலாளாளர்கள் இன்று நமது அரசாங்கம் வந்திருக்கிறது இது தொழிலாளர்களுடைய அரசாங்கம், பாட்டாளி வர்க்கத்தினரின் அரசாங்கம், நம்முடைய உரிமைகளை இவர்களிடம் கேட்கவேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள், போராடுகிறார்கள்.

தொழில் தகராறு வேறு, தொழில் அமைதி வேறு. தொழில் தகராறு அதிகமாக வந்திருக்கிறது. ஆனால் தொழில் அமைதி குலைக்கப்பட்டிருக்கிறதா என்றால், குலைக்கப்படவில்லை. கடந்த மார்ச்சு மாதத்தில் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு புள்ளி விவரம் கொடுத்தார்கள். 1966, 1967-ம் ஆண்டுகளில் எத்தனை வேலை நிறுத்தங்கள், எத்தனை போராட்டங்கள், எத்தனை வேலையிழப்பு நாட்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற புள்ளி விவரம் கொடுக்கிறபொழுது, பஞ்சாலைகளைப் பொறுத்த அளவிலே 1966-ல் 104 வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1967-ல் 167 வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். 1966-ஐக் காட்டிலும் 1967-ல் தொழிலாளர்களுடைய போராட்டம் பஞ்சாலைகளைப் பொறுத்த வரையிலே அதிகம் என்று ஒத்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் என்ஜினியரிங் டிபார்ட்மெண்டில் 1966-ஐக் காட்டிலும் 1967-ல் தொழிலாளர்கள் அதிகமாக போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், அதிகமாக வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு நாட்கள் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை. பஞ்சாலைகளைப் பொறுத்த அளவிலே 1966-ல் 5.67,737 வேலை நாட்கள் இருந்திருக்கின்றன. 1967-ல் வேலை நாட்கள் 3,50,007 என்ற அளவில் குறைவாகத்தான் இருக்கிறதே தவிர, அதிகமாக இல்லை. தொழில் தகராறு அதிகமாக இருக்கிறது. ஆனால் தொழில் அமைதி ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தான் இந்தப் புள்ளி விவரம் காட்டுகிறது. நேற்று கூட மெயில் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. இந்திய உப கண்டத்தில் மத்திய சர்க்கார் ஒரு கமிட்டி போட்டார்கள். அந்தக் கமிட்டி "மேன் டேஸ் லாஸ்டு" பற்றி 1966, 1967-ம் ஆண்டுக்கான புள்ளி விவரங்களைக் கொடுக்கும் பொழுது இந்தியாவில் மொத்தமாக எடுத்துக்கொண்டால் 9,28,000 நாட்கள் 1966-ல் இருந்தன என்றும், 1967-ல் 14,36,000 நாட்களாக வேலை நாட்கள் அதிகரித்திருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றும் பத்திரிக்கையில் படித்தேன். இது மத்திய சர்க்கார், காங்கிரஸ் சர்க்கார், அவர்களுடைய ஆட்சியில் தான், மத்திய சர்க்கார் எந்தெந்த நிறுவனங்களை நடத்துகிறார்களோ அங்கேயெல்லாம் தொழில் அமைதி இல்லாத நிலைமை இருக்கிறது. நம்முடைய தமிழக அரசைப் பொறுத்த வரையில், எந்த விதமான தொழில் அமைதிக்குக் குந்தகம் விளையும் காரியமும் ஏற்படவில்லை.

பஞ்சாலையைப் பற்றிச் சொல்லும்போது, அவைகளின் முழு நிர்வாகப் பொறுப்பும் மத்திய சர்க்காருக்கு உட்பட்டதாக இருக்கிறது. இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் அண்ட் ரெகுலேஷன் ஆக்ட், 1951, பிரகாரம், அந்தச் சட்டத்தின் கீழ் பஞ்சாலைத் தொழில் ஒரு ஷெட்யூல்ட் இண்டஸ்ட்ரி என்று கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழக அரசுக்கு பஞ்சாலைகளைப் பொறுத்த வரையில் நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய அளவில் எந்த விதமான பொறுப்பும் கிடையாது. அவர்களுக்கும் இந்த ஆலைகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. மத்திய சர்க்காருடைய 1951-வது ஆக்ட் படி அவைகள் மத்திய சர்க்காரின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றன. செக்ஷன் 50 பிரகாரம், ஒரு பஞ்சாலை மூடப்பட்டால், உடனேயே, என்ன நடந்திருக்கிறது, என்ன செய்யவேண்டும் என்கிற விவரம் அறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். செக்ஷன் 15 பிரகாரம் அங்கே ஒரு கமிட்டியை அமைக்க அவர்களுக்குத்தான் உரிமை இருக்கிறது. செக்ஷன் 18-எ

பிரகாரம் மூடப்பட்ட பஞ்சாலையைத் திறக்க உரிமை இருக்கிறதும் அவர்களுக்குத்தான். மத்திய சர்க்கார் சட்டத்தைக் கையில் வைத்துக்கொண்டு, மாநில சர்க்காரைக் குறைச் சொல்வது எவ்வளவு பொறுத்தமற்றது என்பதைக்காங்கிரஸ் நண்பர்கள் உணரவேண்டும். பஞ்சாலைகள் சம்பந்தமாக மத்திய சர்க்காரே தலையிட்டு தீர்க்கவேண்டும். தமிழக அரசை நடத்தும் அறிஞர் அண்ணா அவர்கள் தொழிலாளர்களுக்காகக் காட்டிய பொறுப்பை உணர்ந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமே யல்லாது, குறை சொல்லக்கூடாது. அறிஞர் அண்ணா அவர்கள் எந்த எந்த நேரத்தில் இடம் கிடைத்ததோ அப்பொழுதெல்லாம் எப்பொழுதெல்லாம் வசதி கிடைத்ததோ அப்பொழுதெல்லாம், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பஞ்சாலை அதிபர்கள். ஆரம்பிக்கும் போது எத்தனை கோடிபோட்டார்கள் ? இப்பொழுது எத்தனை வைத்திருக்கிறார்கள் ? இடைக்காலத்தில், இந்த 10, 20 ஆண்டுகளில் எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது ? கிடைத்த லாபத்தை, மூலதனத்தை அதிகரிக்க அதே தொழிலில் போட்டு, பஞ்சாலையை நடத்தியிருக்கிறார்களா ? இல்லை, அவர்களே, லாபத்தையெல்லாம் வேறு தொழில்களில் போட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அதே தொழிலில் போடவில்லை, கோவையில் உள்ள ஆலைகளைப் பொறுத்த வரையில், கிடைத்த லாபத்தை அதே தொழிலில் போட்டு அதை வளர்க்கத் தவறியிருக்கிறார்கள். காரணம் என்ன என்றால், வருஷம் ஆக ஆக தொழிலாளிகளுக்கு அதிகப்படியாக சம்பளம் கொடுக்கவேண்டும் என்று கருதி, போனஸ் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று கருதி, பஞ்சாலையிலிருந்து வரக்கூடிய லாபத்தை வேறு தொழில்களில் போட்டிருக்கிறார்கள் ஒவ்வொரு முதலாளிக்கும், ஊட்டியில், கொடைக்கானலில், குற்றாலத்தில் பங்களாக்கள் இருக்கின்றன. கிடைத்த லாபத்தை அதே தொழிலில் மூலதனமாகப் போட்டிருந்தால், நிச்சயமாகத் தொழில் வளர்ச்சியடைய வாய்ப்பு இருந்திருக்கும். பஞ்சாலைகளில் உள்ள மெஷின்களெல்லாம் தேய்ந்து போய்விட்டிருக்கின்றன. அதிக மூலதனத்தைக் கொண்டு " மாடர்னைஸ் " செய்திருக்கலாம்.

ஒரு காலத்தில் கைத்தறித் துணிக்கு தேக்கம் இருந்தது. இப்பொழுது டெரிலின், டெரிகாட் துணிகள் வந்துவிட்டன. பஞ்சாலைகளில் நெருக்கடி வந்துவிட்டது. தேவையற்ற மெசின்களை அகற்றிவிட்டு, அல்லது " மாடர்னைஸ் " செய்து, நவீன இயந்திரங்கள் மூலம், தயாரித்து மார்க்கெட்டில் நல்ல விலையைப் பெற முடியும். அதைச் செய்யக் கட்டுப்படுத்த நம்முடைய தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை. தொழில் அமைதி கெடவில்லை என்றாலும், வேலை இழக்கும் நிலையில் இருக்கிறது. ஆகவே, திராவிட முன்னேற்றக்கழக தமிழகஅரசு எந்தெந்தக் காரியங்களை எந்த எந்த நேரங்களில் செய்ய வேண்டுமோ அந்த வகைகளில் செய்து கொண்டு வருகிறது. எங்கெல்லாம் தொழிலாளிகளுக்குக் குறைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் லேபர் அட்வைசரி க்ரூப் என்று புதுக் குழுக்களை அமைத்திருக்கிறார்கள். மின்சார வாரியத்தில் தொழிலாளிகள் பாதிக்கப்படும் போது, தொழிலாளிகளுக்காக அவர்களுடைய தலைவர் வாதாட லேபர் கோர்ட் உத்தரவு தந்திருக்கிறது. முன்னால் இருந்த அரசு தொழிலாளர் தலைவர் வாதாடக் கூடாது என்று ஒரு ஸ்டே போட்டார்கள். தமிழக அரசு இன்றைக்கு, அப்படி அவர்கள் வாதாடும் உரிமை சட்டத்தில் இருப்பது போலவே இருக்கவேண்டும் என்று அந்த ஸ்டேயை ரத்து செய்திருக்கிறது.

ஆகவே, எந்த எந்த இடங்களில் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றனவோ, அவற்றை மாற்றி அமைத்து தொழிலாளிகள் அரசு, பாட்டாளிகள் அரசு என்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த நிலையைக் கெடுக்க, இந்தத் தொழில் அமைதியைக் கெடுக்க, இந்த நல்ல சூழ்நிலையைக் கெடுக்க, இப்படி முறைகேடான வகையில், கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சபை ஏற்றுக் கொள்ளவேண்டாம் என்று கூறி முடிக்கிறேன்.





*திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, இந்த அவையிலே காங்கிரஸ் கட்சிக்காரர்கள் நம்முடைய அமைச்சரவையின் மீது கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களையும், சர்க்காருக்குச் சில ஆலோசனைகளையும் கூறிக்கொள்ள இந்த வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து ஆரம்பிக்கிறேன். ஏற்கனவே பேசும்போது, காங்கிரஸ் உறுப்பினர் திரு. விநாயகம் என்று நினைக்கிறேன் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்த அமைச்சரவை மீது இருக்கும்போது, ஏன் காங்கிரஸ் அரசாங்கத்தைப் பற்றிப் பேச வேண்டும் என்று கேட்டார்கள். அதற்குக் காரணம், காங்கிரஸ் 20 வருஷ காலம் ஆட்சியிலிருந்த போது, அவர்கள் செய்த நலன்களையும், இப்பொழுது பொறுப்பேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் செய்து வரும் நன்மைகளையும் ஒப்பிட்டுக் கூறுவதில் எந்தவிதமான தவறும் இல்லை என்றே கருதுகிறேன்.

ஒரு நாட்டில் மக்களுக்கு வேண்டியது உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், இந்த மூன்றையும் ஏற்படுத்திக் கொள்ள வேலை வாய்ப்பு இவைகள்தான். அந்த முறையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை, அண்ணா அவர்கள் தலைமையில், அமைத்து எல்லா நன்மைகளையும் செய்து வருகிறார்கள். உணவுப் பிரச்சினையில் வெகு விரைவாகத் தீர்வு கண்டு, மக்களுக்கு நன்மை செய்திருக்கிறார்கள். கடந்த காலத்தில், 1966 நவம்பர், டிசம்பர் மாதங்களில், உணவு நிலை மிக மோசமாக இருந்து, தாய்மார்களெல்லாம், ரேஷன் கடைகளில் வெளியிலே கடுமையான வெய்யிலிலே காத்து நின்று கொண்டிருந்து விட்டு, அரிசி கிடைக்காமல் வீடு திரும்பும் நிலை இருந்தது. அந்த நிலையை நம்முடைய இந்த அரசு பதவி ஏற்றுக்கொண்ட சிறிது நாட்களிலேயே போக்கி, நல்ல முறையில் தீர்த்துவைத்து, மக்களுக்கு உணவு கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதே சமயத்திலே காங்கிரஸ்காரர்கள் கூறினார்கள், நாங்கள் ஒரு லட்சம் டன் அரிசி இருப்பு வைத்திருந்தோம் என்று. அப்படி ஒரு லட்சம் டன் வைத்திருந்தும் கூட மக்களுக்கு வினியோகிக்காமல் வைத்துக் கொண்டே இருந்திருக்கிறார்கள். மக்களைப் பட்டினி போட்டிருக்கிறார்கள். அதைப் பற்றித்தான் நேற்று பேசிய ஆசைத்தம்பி, அவர்களைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி வைத்துத் தண்டிக்கவேண்டும் என்று கூறினார். அவர்களை நாம் தண்டிக்க வேண்டாம். அவர்கள் செய்த குற்றத்திற்கு மாநில மக்களே பெரிய தண்டனையை, அவர்களுக்கு 1967 பெப்ரவரியில் அளித்திருக்கிறார்கள். அதுவே அவர்களுக்குப் போதும், அநேக ஆண்டுகளுக்கு, என்று நினைக்கிறேன். இந்த உணவு வினியோகத்தில், நீலகிரியில் ஒரு நெல் விளைவிக்காத மாவட்டத்தில், நல்ல முறையில் வினியோகிக்க ஏற்பாடு செய்து உதவியதற்கு நீலகிரி மக்கள் என்றைக்கும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள். அதே நேரத்திலே, ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற திட்டத்தை குடும்பக்கார்டு இருக்கும் இடங்களிலெல்லாம் கொண்டுவரத் திட்டம் இட்டிருக்கிறார்கள். சென்னையிலும், கோவையிலும் இப்பொழுது அமல் நடத்திவருகிறார்கள். நேற்று உணவு அமைச்சர் கூறியதில் இருந்து, ஒரு படி அரிசி, மற்ற இடங்களில் ரூ. 1.17 என்றும், நீலகிரியில் ரூ. 1.22 என்றும் இருப்பதாகத் தெரிகிறது. நீலகிரி மாவட்டத்தில் சுமார் 6 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் பெரும்பாலோர் தோட்டத் தொழிலாளிகள். ஏழைகள். ஆகவே, இந்த ஒரு படி'ரிசித் திட்டத்தை, தொழிலாளிகள் நலனைக் கருதி, நீலகிரி மாவட்டத்தில் அமல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதனால் ஏழைத் தொழிலாளர்கள் நலன் பெறுவார்கள். நல்ல பலன் கிடைக்கும், என்கிற என்னுடைய யோசனையைக் கூறிக் கொண்டு, படியரிசித் திட்டத்தை விஸ்தரிக்கும்போது, நீலகிரிக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக உடைவிஷயம். இப்போது உற்பத்தி அதிகமாகிவிட்ட காரணத்தினால் ஒரு மந்த நிலைமை ஏற்பட்டு, அதனால் மில்களை மூடும் படியான நிலைமை இருக்கிறது. நேற்று பேசிய உறுப்பினர்கள், இந்த அரசுதான் எல்லா மில்களையும் மூடிவிட்டது என்ற கருத்தில் பேசினார்கள்.

மில்கள் ஏன் மூடப்பட்டன என்றால், முன்பு 42 மில்கள்தான் இருந்தன. தற்போது 84 மில்கள் என்ற அளவில் இருக்கின்றன. ஆகவே, உற்பத்தி அதிகமாகிவிட்ட காரணத்தினால் உற்பத்திப் பொருள்கள் உடனடியாக விற்பனையாகாத மந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது 84 மில்கள் ஆகியும்கூட தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புகள் சரியாகக் கிடைக்கவில்லை. உற்பத்திப் பொருள்கள் செலாவணியாகாவிட்டால் மந்த நிலைமைதான் ஏற்படும். உற்பத்திப் பொருள்களுக்கு டிமாண்ட் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் உற்பத்திப் பொருள்கள் உடனுக்குடன் செலாவணியாகும். முன்பிருந்த அரசாங்கம் தொழிற்சாலை விஸ்தரிப்புக்கு பதிலாக அதிகமான அளவில் லைசென்ஸுகள் வழங்கி, அதிக மில்களை ஏற்படுத்தியதுதான் மந்த நிலைமைக்குக் காரணம், அத்துடன் மத்திய சர்க்கார் விதித்திருக்கும் எக்சைஸ் வரியும் மந்த நிலைக்கு ஒரு காரணம். இந்த பிரச்சினையைத் தீர்ப்பதில் மாநில அரசு தன் முழு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதைத் தீர்ப்பதில் மத்திய அரசுதான் முன்வரவேண்டும். அதோடு மில் சொந்தக்காரர்களும் இதில் பங்கேற்க வேண்டும். தனிப்பட்ட மானேஜிங் ஏஜென்சியுள்ள கம்பெனிகளில் நஷ்டம் வந்திருக்கவில்லை. மில் சொந்தக்காரர்களும் நஷ்டத்தில் ஓரளவு பங்கேற்று பணம் போட்டு, வேலையிழந்த மக்களுக்கு வேலைவாய்ப்புத் தேடித்தரும் முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டுவசதிப் பிரச்சினை. நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு தரிசு நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் போன்றவற்றில் குடிசை போட்டுக்கொண்டிருந்த அரிஜன மக்களுக்கு, ஆயிரக்கணக்கில் வீட்டு மனைகளை வழங்கி இடவசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். மேலும், தொழிற்சாலைகளை அதிகமாக ஏற்படுத்தவில்லையென்று காங்கிரஸ்காரர்கள் கூறினார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்கவாறு பதிலளித்தார்கள். இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படையில்தான் தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டியிருந்தது. அம்மாதிரி தொழிற்சாலை ஏற்படுவதற்கும் மத்திய அரசாங்கத்தின் உதவியும், கடன் அளிக்கும் உதவியும் மிகமிகத் தேவை. தற்போதைய நிலையில் மத்திய சர்க்கார் காங்கிரஸ் அல்லாத அமைச்சரவை உள்ள மாநிலங்களை மாற்றுக் கருத்தோடுதான் பார்க்கிறார்கள் (மணியடிக்கப்பட்டது). நமது மாநிலத்தில் சேலத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று நாம் எழுச்சிநாளைக் கூட கொண்டாடினோம். சேலம் இரும்புத் தொழிற்சாலை ஏற்பட வேண்டுமானால் நாம் அனைவரும் ஒன்றுகூடி மத்திய சர்க்காருடன் போராட வேண்டும். அதற்கு இங்குள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் யாவரும் நம்முடன் சேர்ந்து போராட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இம்மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று கூறுகிறார்கள். சட்டம், ஒழுங்கு போன்றவற்றை நிலைநிறுத்துவதிலே நாட்டிலுள்ள பொதுமக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் பங்கு உண்டு. பொதுமக்கள் நல்ல முறையில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாத்து நடந்தால் நல்ல முறையில் இருக்கும். ஒரு கட்சிக்காக, அரசியலுக்காக வேண்டி சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று கூறுகிறார்கள். போலீஸார் நடவடிக்கை எடுத்தால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று கூறுகிறார்கள். ஆகஸ்டு 1-ம் தேதியன்று 500, 600 பேர்கள்மீது வேண்டுமென்றே போலீசார் தடியடி நடத்தினார்கள் என்றால், அடுத்து, 4-ம் தேதியன்று நடந்த ஊர்வலத்தில் ஏன் போலீஸ் தடியடி நடத்தவில்லை ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆகஸ்ட் 1-ம் தேதி தடியடி ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்பதை உறுப்பினர் விளக்குவாரா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் தொடர்ந்துபேசி சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.





**திரு. கே. போஜன் :** திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை மக்களுடைய நலனுக்காகப் பாடுபட்டு வருகிறது. ஆகையால் இந்த மக்களுடைய நலனுக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாக இருந்து, மேலும் நல்ல முறையில் ஆட்சியை நடத்தி வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, காங்கிரஸ்காரர்கள் கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது எனக்கு நம்பிக்கையில்லையென்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். கணேசன் :** சால்புநிறை சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, அருமைக் காங்கிரஸ் கட்சி நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து அவர்களுடைய குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். மக்களுடைய நம்பிக்கையை படிப்படியாக இழந்து, இப்போது முற்றும் இழந்துவிட்ட நிலையில் இருக்கிற காங்கிரஸ் நண்பர்கள், மக்களுடைய நம்பிக்கையை மேலும் மேலும் பெற்று வருகிற திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். இப்போது இங்கு கொடுக்கப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் அத்தனையும் பொது இடங்களில் மக்கள் முன்னால் பல மாதங்களாகச் சொல்லிவந்த குற்றச்சாட்டுகள் ஆகும். பொதுமக்களின் மத்தியில் அவை எடுபடாத காரணத்தாலோ, அதைக் கேட்பதற்கு மக்கள் தயாராக இல்லாத காரணத்தாலோ என்னவோ அதே குற்றச்சாட்டுகளை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் இங்கு கொண்டுவந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு அடக்குமுறைகளை ஏவிக் கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டுகளைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அவர்களுடைய கடந்தகால வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கிறபோது எவ்வளவு கொடுமையாளர்களாக, எவ்வளவு வன்கணாளர்களாக, எவ்வளவு ஈவிரக்கமற்றவர்களாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வரும்.

கடந்த ஆட்சியில் பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் இரணியன், சிவராமன் போன்ற தோழர்களைக் கட்டி வைத்து இம்சித்தது அவர்களுக்குத் தெரியும். படிப்படியாக எத்தனையோ கொலைகளைச் செய்துவிட்டு அவர்கள் இப்போது, தாங்கள் சத்தியசீலர்களாகவும், ஜீவ காருண்யம் உள்ளவர்களாகவும் காட்சியளிப்பது மக்களுக்குத் தெரியாதா என்ன ?

1965ம் ஆண்டில் மாணவர்கள் போராட்டம் நடத்தியபோது, எவ்வளவு மிருகத்தனமாக நடந்துகொண்டார்கள், எவ்வளவு கருணையற்ற உள்ளத்தோடு இளம் மாணவர்களைச் சுட்டுக் குவித்திருக்கிறார்கள் என்று மக்களுக்குத் தெரியும். நான் காங்கிரஸ் நண்பர்களுக்கு பச்சையாக ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சியில் சுட்டுக் குவித்த அளவுக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசு கைது செய்யவில்லை. காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் காட்டியிருக்கும் பிணங்களின் எண்ணிக்கையின் அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு யாரையும் சிறைப்படுத்தவில்லை. அப்படி கொடுமையாக நடந்துகொண்ட காங்கிரஸ் நண்பர்கள்தான் இன்று, தமிழக அரசு அடக்குமுறைகளை ஏவிக்கொண்டிருக்கிறது என்று வற்புறுத்தி வற்புறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு அம்சத்தையும் எடுத்துப் பேசவேண்டி வருகிறது. தங்களுக்கு மாணவர்கள்பால் அளவுக்குமீறி அனுதாபம் இருப்பதுபோலவும், மாணவர்களுக்குப் பரிவு காட்டுவதுபோலவும் நடந்துகொண்டு, தமிழக அரசு போக்குவரத்து ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே எழுந்த சச்சரவைத் தங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டு, மாணவர்களைத் தங்கள் பக்கம் இழுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பேசிக் கொண்டு வருகிறார்கள். கடந்த 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதியன்று பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் ஊர்வலமாக வந்து கோட்டைக்கு முன்னால் நின்றுகொண்டு, அமைச்சர் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்ட நேரத்தில், அப்போது முதலமைச்சராயிருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள், மாணவர்

[திரு. எல். கணேசன்] [1968 ஆகஸ்ட் 24

பி.ப. 2 00 களைப் பார்க்க முடியாது என்று மறுத்துவிட்டார்கள். மறுத்தது மட்டும் அல்ல, கொஞ்சங்கூட இரக்கம் காட்டாமல் "மாணவர்கள் வேலைநிறுத்தம்தானே செய்வார்கள், நான் பள்ளிகளை இழுத்து மூடிவிடுகிறேன்" என்றார்கள். இதைக் காங்கிரஸ் நண்பர்கள் உணரா விட்டாலும் மாணவர் உலகம் தெளிவாக உணர்ந்து ஏற்றுக்கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் மாணவர்களை அழைத்து அவர்களுடைய பிரச்சினைகள் என்ன குறைபாடுகள் என்ன என்பதை விசாரித்து தெளிந்தே செயல்பட்டு வருகிறார்கள். இதே சட்டமன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் மொழிபற்றிய தீர்மானத்தைக் கொண்டுவந்தபோது மாணவர்களுக்காகவா இதை நிறைவேற்றுவது என்று காங்கிரஸ்காரர்கள் கேட்டார்கள். "ஆம் அவர்களுக்காகத்தான். அவர்கள் யார் நம் இரத்தத்தின் இரத்தம் அல்லவா" என்று கேட்டார்கள். மாணவர்களுடைய கோரிக்கையை இன்றைய தமிழக அரசுதான் நிறைவேற்றித் தந்திருக்கிறது என்பதை மாணவர்கள் நன்றாக அறிவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் கணேசன் அவர்கள் தொடர்ந்து 26—8—1968 அன்று பேசுவார்கள். பேரவையை ஒத்தி வைக்கும் முன் ஓர் அறிவிப்பு.

## 8. அறிவிப்பு

### அவை அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்று 24—8—1968 அன்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி இந்த அவையின் அலுவல்கள் கீழ்க்கண்டபடி நடக்கும்:—

| | | |
|---|---|---|
| 25— 8—1968 .. | ஞாயிறு .. | விடுமுறை. |
| 26— 8—1968 .. | திங்கள் முற்பகல். .. | நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின் மீது விவாதம். |
| | பிற்பகல் .. | அரசினர் மசோதாக்கள், தீர்மானங்கள். |
| 27— 8—1968 .. | செவ்வாய் .. | விடுமுறை |
| 28— 8—1968 .. | புதன் முற்பகல் .. | நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின் மீது விவாதம். |
| | பிற்பகல்— (4 மணி) .. | கடைசி நாள். |
| 29— 8—1968 | வியாழன் .. | தனியார் அலுவல்கள். |
| 30— 8—1968 } | வெள்ளி .. | மின்சாரவாரியத்தின் 1968–69-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம். |
| 31— 8—1968 } | சனி | |

பி.ப. 2-04 இப்பேரவையின் கூட்டம் 31—8—1968-ஆம் நாளுடன் முடிவுறும்.

இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீட்டும் 26—8—1968 அன்று காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

ப



## 9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders

*177. Notification issued with G.O. Ms. No. 1692, Agriculture (Co-operation), dated the 23rd May 1968 in regard to the extension of certain provisions of the Madras Money Lenders Act, 1957 (Madras Act XXVI of 1957) in Avadi and Ambattur Townships and certain panchayat towns (newly formed) in Chingleput district. (*Laid on the Table of the House under section* 22 (3) *of the Madras Money Lenders Act*, 1957 (*Madras Act XXVI of* 1957).

178. Notification issued with G.O. Ms. No. 1707, Revenue, dated the 29th September 1967 in regard to the ryotwari settlement of inam estates in South Arcot district. (*Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act* 26 *of* 1963).

179. Notification issued with G.O. Ms. No. 283, Home, dated the 5th February 1968 in regard to exemption from payment of Motor vehicles tax to vehicles belonging to the Co-operative for Amercian Relief Everywhere. Incorporated, Madras. (*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 ( *Madras Act III of* 1931).

### B. Reports, Notifications and Other Papers.

Nil.

56. Notification issued with G.O. Ms. No. 790, Industries, Labour and Housing (Labour), dated the 28th February 1968 in regard to certain amendments to the Madras Payment of Wages Rules, 1937, published at pages 356–359 of the Part I of the *Fort St. George Gazette*, dated the 23rd February 1937 as subsequently amended.

* Laid on the Table of the House on 23rd August 1968

[1968 ஆகஸ்ட் 24

## இணைப்பு

[94-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினா எண் 89-க்கான விடையைக் காண்க.]

சட்டப்பேரவை உறுப்பினர்களுக்காக, மவுண்ட் சாலையிலுள்ள அரசாங்க எஸ்டேட்டில் ஒதுக்கியுள்ள குடியிருப்பு இல்லங்கள் :—

1. (கோஷன் தொகுதி IV ) எண் 4 'Q' தொகுதி.
2. (கோஷன் தொகுதி V) எண் 5 'Q' தொகுதி.
3. (கோஷன் தொகுதி VI) எண் 6 'Q' தொகுதி.
4. (கோஷன் தொகுதி VII) எண் 7 'Q' தொகுதி.
5. (கோஷன் தொகுதி VIII) எண் 8 'Q' தொகுதி.
6. (கோஷன் தொகுதி XIII) எண் 13 'Q' தொகுதி.
7. (பேண்ட் லைன் எண் 9) எண் 9 'S' தொகுதி.
8. (பேண்ட் லைன் எண் 13) எண் 13 'S' தொகுதி.
9. (பேண்ட் பள்ளிக் கட்டிடங்கள்) (எண் 15 'S' தொகுதி).
10. கிச்சன் தொகுதி (மேற்கு) (எண் 1 'V' தொகுதி).
11. கிச்சன் தொகுதி (கிழக்கு) (எண் 2 'V' தொகுதி).

*Quarters at the Government House Estate, Mount Road, reserved for allotment to the Members of the Legislature.*

1. No. 4 'Q' Block (Goschen Block IV).
2. No. 5 'Q' Block (Goschen Block V).
3. No. 6 'Q' Block (Goschen Block VI).
4. No. 7 'Q' Block (Goschen Block VII).
5. No. 8 'Q' Block (Goschen Block VIII).
6. No. 13 'Q' Block (Goschen Block XIII).
7. No. 9 'S' Block (Band Lines No. 9).
8. No. 13 'S' Block (Band Lines No. 13).
9. No. 15 'S' Block (Band School Buildings).
10. (No. 1 'V' Block) Kitchen Block (West).
11. (No. 2 'V' Block) Kitchen Block (East).

# தமிழக சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1968 ஆகஸ்ட் 26

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண்கள் 54, 55, 137-லிருந்து 148 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### புதுச் சிறப்பு அங்காடிகள்

*149 வினா.—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம், சூலூர், சோமனூர் போன்ற நகரங்களில் சிந்தாமணி மார்க்கெட் (கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்) ஏற்படுத்துவதற்கு அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றால் எப்பொழுது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :**

(அ) இதைப்பற்றிய செயற்குறிப்பு ஒன்றும் தற்சமயம் அரசின் கவனத்தில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு முறையிலே சூப்பர் மார்க்கெட்ஸ் எந்த அடிப்படையிலே ஆரம்பிக்கப்படுகின்றன ? லட்சம் பேர்கள் ஜனத்தொகை கொண்ட ஊர்களில் ஆரம்பிக்கப்படுவதாகத் தெரிகிறது. அப்படியானால் திருப்பூரிலே லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அங்கு ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறப்பு அங்காடிகள் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெறுகிறோம். எந்தெந்த ஊர்களுக்கு அனுமதி கேட்கிறோமோ அவற்றைப் பரிசீலனை செய்து ஒப்புதல் அளிக்கிறார்கள். அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இடங்களில் ஆரம்பிக்கப்படுகின்றன. நாம் அனுப்பிய திட்டங்களில் தர்மபுரியில்தான் 28 ஆயிரம் ஜனத்தொகை இருக்கிறதென்று சொல்லி, அங்கு தேவையில்லை என்று மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை. ஆகையால் அங்கு ஆரம்பிக்கப் படவில்லை. எந்த ஒரு ஊரிலே சிறப்பு அங்காடி ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்கிறோமோ, அந்த ஊரிலே சிறப்பு அங்காடி வைக்க முடியுமா என்று ஆராய்ந்ததற்குப் பிறகுதான் அதை வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய முடியும்.

**THIRU K. VINAYAKAM :** Whereas it is popularly believed that super-markets are nothing but white elephants, what is the experience of this Government after they have come to power ? Is the super-market at Madras working at a loss or at a profit and what is the amount of loss or profit ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறப்பு அங்காடியைப் பற்றி அதே கருத்து ஏற்கனவே கனம் அங்கத்தினர் அவர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருக்கிற அங்காடிகள் பல லாபத்தோடு நடை

பெற்று வருகின்றன. லாபம் இல்லாமல் இருக்கிற சிறப்பு அங்காடிகள் என்ன காரணத்தால் லாபகரமாக நடைபெறவில்லை என்று ஆராயப்பட்டு அவற்றையும் லாபத்தோடு நடத்த முடியும் என்பதற்கு முறைகள் கண்டு பிடிக்கபபட்டு லாபத்தோடு நடத்த முடியும் என்ற எண்ணத்தில் அரசு இருக்கிறது. இப்போதுள்ள சிறப்பு அங்காடிகளை பயன் உள்ளவைகளாக நடத்த முடியும் என்று அரசாங்கம் நம்புகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** எந்தெந்த நகரங்களில் சிறப்பு அங்காடிகள் வேண்டுமென்று மத்திய அரசை இந்த அரசு கோரினார்கள் ? எது எதற்கு அனுமதி கொடுத்திருக்கிருர்கள் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆறு சிறப்பு அங்காடிகள் நடத்த வேண்டுமென்று முடிவு செய்தோம். கடலூர், தஞ்சை, நாகர்கோவில், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தூத்துக்குடி, தர்மபுரி ஆகிய இடங்களில் ஆரம்பிக்க அனுமதி கேட்கப்பட்டது. அவற்றிலே தர்மபுரியிலே ஜனத் தொகை போதாது என்று சொல்லிவிட்டார்கள். மற்ற இடங்களில் நாகர்கோவில், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பெரு நகரங்களில் ஏழைத் தொழிலாளர்களுக்கு மலிவான விலையில் பொருள்கள் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் சிறப்பு அங்காடிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. அப்படியிருக்கும் போது எந்த அடிப்படையில் அவற்றை ஆரம்பிக்க வேண்டுமென்று மாநில அரசு சிபார்சு செய்கிறது ? எந்த அடிப்படையில் மத்திய அரசு அவற்றிற்கு அனுமதி தருகிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் முதலிலே கூறியபடி சிறப்பு அங்காடிகளைப் பெரிய அளவிலே நடத்துவதற்கு அதிலே போடப்படுகின்ற முதலின் அடிப்படையில் வியாபாரம் நடக்குமா என்பதையும் ஜனத் தொகை அடிப்படையையும் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலே சிபார்சு செய்கிறோம். அவற்றை மத்திய அரசு பரிசீலனை செய்து ஒப்புதல் அளிக்கிறார்கள். ஒரு நகரத்தைத் தவிர மற்ற இடங்களுக்கு ஒப்புதல் அளித்தார்கள். அவர்கள் இதற்குப் பண உதவி செய்கின்ற காரணத்தால் அவர்களுடைய அனுமதியின் பேரில்தான் நடைபெறுகிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** பல்லடம் போன்ற இடங்களைச் சுற்றியிருக்கிற பகுதிகளில் விவசாயிகள் ஏராளமாக இருக்கிற காரணத்தால் அவர்களுக்குக் குறைந்த விலையில் பொருள்களைக் கொடுக்கக் கூடிய அளவில் சிறப்பு அங்காடிகள் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலாளர்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் சிறப்பு அங்காடிகள்தான் இருக்க வேண்டுமென்பதல்ல. சிறிய சிறிய டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸ் வைத்து நடத்த முன்வந்தால், அதைப் பரிசீலிப்பதற்கு அரசு தயாராய் இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நாகர்கோவிலில் சிறப்பு அங்டிகாடி ஏற்படுத்துவதற்கு பூர்வாங்கமான நடவடிக்கைகள் எடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது நீண்ட நெடுங்காலமாக முயற்சியிலேதான் இருந்து வருகிறது ; எப்போது முற்றுப்பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுபற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. ஆனால், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் எல்லா ஏற்பாடுகளையும் சமைத்துவிட்டு திறப்பு விழா செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இதிலிருந்து அது திறப்பு விழா செய்யக்கூடிய கட்டத்தில் இருக்கிறது என்று நினைக்கிறேன்.





### பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

* 150 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு சட்ட–கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் (Multipurpose Co-operative Societies) எண்ணிக்கை என்ன ?

(இ) வாணிபச் சங்கங்களின் (Marketing Societies) எண்ணிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :**

(அ) 8,911 (எட்டாயிரத்து தொள்ளாயிரத்து பதினொன்று).

(இ) 133 (நூற்று முப்பத்தி மூன்று).

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றுக் இணைப்பதால் என்ன பயனை அரசு எதிர்பார்க்கிறது ? இந்தக் கொள்கையினை எல்லாச் சங்கங்களும் ஏற்றுக் கொண்டுள்ளனவா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள், மல்டி-பர்பஸ் கோவாபரேடிவ் சொஸைடீஸ், இவைகளெல்லாம் அங்கேயுள்ள ஜனத்தொகையில் மூவாயிரம் பேருக்காவது பயன்படவேண்டும். இரண்டாயிரம் ஏக்கரா நிலங்களுக்காவது பயன்படவேண்டும். ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்ச ரூபாயாவது கடன் கொடுக்கவேண்டும் ஆண்டொன்றுக்கு நிகர இலாபம் 3,200 ரூபாயாவது வரவேண்டும் என்ற அடிப்படையிலேதான் தோற்றுவிக்கப்படுகின்றன. ஆங்காங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இவற்றை நடத்தி வருகின்றார்கள். இவைகளெல்லாம் 'வயபிள் யூனிட்ஸ்' ஆக இருக்க வேண்டும். அங்கே இருக்கக்கூடிய அங்கத்தினர்களுக்குக் கொடுக்கக் கூடிய பணத்திற்கும், நடைமுறைச் செலவுக்கும் ஒத்துவரக்கூடிய அளவில், 'வயபிள் யூனிட்' உண்டாக்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசாங்கம் முடிவு செய்து, சரியாக நடைபெறாத இரண்டு மூன்று சொஸைட்டிகளையும், 'வயபிள் யூனிட்ஸ்'ஸாக இல்லாத கூட்டுறவு சங்கங்களையும் இணைத்து, 'வயபிள் யூனிட்டாக' நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அது அவர்களுக்கும் நல்லது. நஷ்டம் இல்லாமல் நடப்பதற்கும் உதவியாக இருக்கும்.

### *Post of Director of Town Planning.*

* 151 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) Whether the present post of Director of Town Planning is borne on the I.A.S. Cadre ;

(*b*) if so, from what date ; and

(*c*) whether there is any proposal to appoint a non-I.A.S. technical officer to this post ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) முதல் (உ) வரை இல்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த டவுன் பிளா ... னிங் துறை, பெரும்பாலும் பொறியியல் வல்லுனர்கள் இருந்து ப... யாற்றக் கூடிய துறையாகும். அதனுடைய தலைவராக அந்தத் துறையிலேயிருந்து அனுபவம் பெற்ற பொறியியல் வல்லுனரையே போடுவதற்குப் பதிலாக ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டிருப்பதனால் அவருடைய திறமையும் வீணாக்கப்படுகிறது, கீழே இருக்கின்றவர்களுடைய வாய்ப்பும் கெடுகிறது, ஆகவே இதை மறுபரிசீலனை செய்ய சர்க்கார் உத்தேசிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினரின் கருத்து பரிசீலிக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த டவுன் பிளானிங் ஆபீசுக்கு முனிசிபாலிட்டியிலிருந்தோ, மற்ற இடங்களிலிருந்தோ, ஏதாவது பிளானிங் சம்பந்தப்பட்ட தீர்மானங்களைப் போட்டு அனுப்பினால் வருஷக் கணக்கிலே ஊறுகாய்ப் பானையிலே போட்ட மாதிரி......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** குற்றச்சாட்டெல்லாம் வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** குற்றச்சாட்டு அல்ல. உடனுக்குடனே அதன் பேரில் ஒன்று 'உண்டு' அல்லது 'இல்லை' என்ற அளவிற்கு எந்த பதிலையும் எதிர்பார்க்க முடியாத அளவுக்கு உள்ளது. இது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, உடனுக்குடனே துரித நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒரு டவுன் பிளானிங் ஸ்கீமை அப்ரூவ் செய்ய வேண்டுமென்றால், அது பல கட்டங்களைத் தாண்ட வேண்டியிருக்கிறது. அந்தக் கட்டங்களைத் தாண்டுவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. ஆனால், நான் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, கோவை போன்ற இடங்களில் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தத் திட்டத்தில் காலதாமதம் இருக்கிறது என்பதை கனம் உறுப்பினர் குறிப்பாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : In the matter of promotion in this department, are the Government aware of the fact that when the vacancy of a Deputy Director of Town Planning arose, one who was far junior and who did not deserve promotion, had been promoted in spite of the fact that there were many senior Assistant Directors who deserved promotion on questions of merit ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : This supplementary question does not arise from the main question. My hon. Friend may put a separate question.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தக் கருச்சிதைவுக்கான நவீன சாதனங்களைப் பற்றியோ, மற்றவற்றைப் பற்றியோ இந்திய அரசு மாநில அரசிடம் ஏதேனும் யோசனை கேட்டதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது, இனி எடுத்துக் கொள்ளப்பட இருக்கிற மூலக் கேள்விக்குரியது.

### கரு உறிஞ்சும் குழாய்

*152 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருச் சிதைவுக்காக உபயோகப்படுத்த புதிதாக ரஷ்யாவில் கண்டு பிடித்துள்ள நவீன 'கரு உறிஞ்சும் குழாய்'. நமது மாநிலத்திற்கு உபயோகப் படுத்தும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :**

(அ) இப்பொழுது இல்லை.

(இ) எழாது.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது நடைமுறையில் அனுஷ்டித்து வரக்கூடிய மற்ற சிகிச்சையைவிட இந்த சிகிச்சை மிகவும் இலேசாகவும் எளிதாகவும் இருப்பதாகத் தெரிகிறது. இதில் ஏன் இதுவரையில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவில்லை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினருடைய அனுபவத்தை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

### *M.C. Raja Hostel*

*54 *Q.*—THIRU G. GOMATHYASANKARA DIKSHIDAR AND THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state—

(*a*) whether there has been unrest among the inmates of the Government M.C. Raja Hostel, Madras ;

(*b*) if so, the reasons therefor ; and

(*c*) the action taken thereon ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :**

(அ) ஆம்.

(இ) சென்னையிலுள்ள அரிசன நலத்துறையைச் சேர்ந்த எம். சி. ராஜா அரசாங்கக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அரிசி உணவின் அளவு போதாதெனக் கருதினர். நாளொன்றுக்கு அளவிடப்படாத முழு அளவு சாப்பாடு இருவேளைகளிலும் கிடைக்கும் வகையில் தங்களுக்கான அரிசி உணவின் அளவு அதிகரிக்கப்படவேண்டுமென அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

(உ) இம் மாணவர் விடுதிக்கு அனுமதிக்கப்பட்ட உணவுப் பொருளின் பங்கீட்டு அளவு தனிப்பட்ட அடிப்படையில் தக்கவாறு உயர்த்தப் பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Last year there was a lot of trouble in these hostels because they were not getting good quality of food. Have their views been pointed out ? Has the position changed ? Are the students satisfied now ? Has the administrative set-up been changed in these places ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அவர்கள் கேட்டதற்குப் பிறகு மாறுதல் செய்யப்பட்டு, இரு வேளை அரிசி உணவும் ஒரு வேளை கோதுமை உணவும் தரப்பட்டு வருகிறது. அதில் இதுவரை எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை.

**திரு. ஏ. கே. பாலகிருஷ்ணன் :** அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, உணவு விஷயமாகச் சில குழப்பம் வந்தது என்று சொன்னார்கள். ஆனால், எங்களுக்கு தந்த தகவல்கள் எல்லாம், ஜன்னலிலே "அண்ணா வாழ்க" என்று எழுதிய காரணத்தால் குழப்பம் வந்தது என்று சொல்லுகிறார்களே, அந்தத் தகவல் அமைச்சர் அவர்களுக்கு வந்ததா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அந்தக் குழப்பம் ஏற்பட்டதற்குக் காரணம், வேறு. உணவுப் பங்கீடு மிகக் குறைவாகயிருக்கிறது என்ற காரணத்தையொட்டித்தான் அவர்கள் கேட்டுக்கொண்டனர். எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்தப் பங்கீட்டினை அதிகமாக்கித் தந்துள்ளார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்பொழுது ஏராளமான ஏழை மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்க முன்வருகிறார்கள். அப்படி வரக்கூடிய நேரத்தில், ஹாஸ்டலில் இடம் கிடைக்காத காரணத்தினால் மிகவும்

சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஹாஸ்டலில் தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களினுடைய தொகை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால், மேலும் அதிகப்படுத்தப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அரசாங்கத்தின் நிதி நிலைமையை அனுசரித்து, அந்தத் தொகையை இப்பொழுது உயர்த்துவதற்கில்லை. இருந்தாலும் கூடுமானவரை பத்து சதவீதம் அதிகமாக ஒவ்வொரு விடுதியிலும் சேர்த்துக்கொள்ளுவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

### வானொலியில் மகளிர் பகுதி

*55 வினா.—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல—செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வானொலியில் ஒரு குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே மகளிர் பகுதி இடம் பெற்றுள்ளதை மாற்றி தினமும் மகளிர் பகுதி இடம் பெற மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசு சிபார்சு செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 137, 138, 139, 140 ஆகிய எண்களுள்ள கேள்விகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன.

இப்பொழுது 141 என்னுள்ள கேள்வி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### *Aluminium industry*

* 141 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state with reference to question No. 45 answered on the floor of the Assembly on 22nd June 1967—

(*a*) whether it is a fact that the aluminium industry was originally proposed to be started in the public sector ; and

(*b*) if so, how this was dropped subsequently ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :**

(அ) ஆம்.

(இ) இந்தத் தொழிற்சாலை மத்திய அரசின் ஆலோசனையின்பேரில் தனியார் துறைக்கு விடப்பட்டது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தத் தொழிலுக்குரிய மூலதனம் பெரும்பாலும் மாநில சர்க்காராலும் மத்திய சர்க்காராலும் போடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், மின்சாரவாரியம், குறைந்த விலையில்—யூனிட்டுக்கு ஒரு பைசா என்ற அளவில்—மின்சாரம் வழங்கி வருகிறது. இதுபற்றி பதில் சொல்லுபோது, பொதுத் துறையில் ஆரம்பிப்பதற்குத் தகவல் ஒன்றும் இல்லை என்று ஏற்கனவே சொன்னார்கள். அது எவ்வாறு பொதுத் துறையில் ஆரம்பிக்காமல் விடப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1955-ம் ஆண்டில், அலுமினியத் தொழிற்சாலை நிறுவுவது பற்றி மாநில அரசு மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 1955-ம் ஆண்டில் அலுமினியக் கமிட்டி என்று தனிக் குழு ஒன்றை இந்திய அரசு அமைத்து, அதுபற்றிய விவரங்களை ஆராயும்படியாக அந்தக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர்கள் பல இடங்களைப் பார்த்து, மேட்டூரையும் பார்த்துவிட்டு, மேட்டூரைத் தேர்ந்தெடுத்து, அங்கு ஒரு



அலுமினியத் தொழிற்சாலை வைக்கலாம் என்ற அறிக்கையினை அந்தக் குழு வெளியிட்டது. அதற்குப் பிறகு, அதைப் பொதுத் துறையில் நிறுவுவதாக மத்திய அரசு எண்ணத்தை வெளியிட்டு, இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் மூலமாகவோ அல்லது கம்பெனி ஆக்டின் கீழ் வருகின்ற தொழிற்சாலையாகவோ ஆரம்பிக்கலாம் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தது. பிறகு, 1958-ம் ஆண்டு மே மாதம் 3, 4 நாட்களில், தேசிய வளர்ச்சிக் குழு (நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில்) ஆராயும்போது, நிதிப் பற்றாக்குறையின் காரணமாக இந்தத் திட்டத்தையும் இதனோடு சேர்ந்த வேறு 11 திட்டங்களையும் நிறுத்திவிடுவது என்று அவர்கள் முடிவு செய்து, அப்பொழுது அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள நிதிப் பற்றாக்குறை காரணமாக இருக்கிறது என்று சொல்லி, அதைத் தள்ளி வைத்தார்கள். இந்தத் தொழிற்சாலையை பொதுத் துறையில் எடுத்துக்கொள்ளுகிறார்களா என்பது மாநில அரசுக்குத் தெரியாது. ஆனால், நிதிப் பற்றாக்குறை காரணமாக மத்திய அரசு ஏற்று நடத்துவதற்கில்லை என்றும், தனியார் யாராவது நடத்த முன் வந்தால் அவர்களுக்கு விட்டு விடலாம் என்றும் மத்திய அரசு கருத்து தெரிவித்தது. அதன் பேரில், மாநில அரசு, கோயம்புத்தூரைச் சேர்ந்த திரு. வெங்கடசாமி நாயுடு அவர்களை அணுகி, இந்தத் தொழிற்சாலையை நடத்துகிறீர்களா என்று கேட்கும்போது, போதுமான நிதி வசதி தங்களிடத்தில் முழுவதும் இல்லை என்றும், வசதி செய்து கொடுத்தால் ஆரம்பிப்பதற்கு முடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையில், எம்.ஐ.சி-இல் 1 கோடி 50 லட்ச ரூபாய் அதற்குக் கடன் வசதி செய்யப்பட்டு, மீதியை திரு. வெங்கடசாமி நாயுடு அவர்களும் மற்றவர்களும் சேர்ந்து நடத்துவது என்ற ஒப்பந்தத்தின் பேரில், எப்படியேனும் அந்தத் தொழிற்சாலை இங்கு வரவேண்டும், காலங் கடத்தக்கூடாது, மத்திய அரசும் அதற்கு நிதி ஒதுக்கவில்லை, அந்தப் பொறுப்பு முழுவதையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ளவும் இயலாது என்ற நிலையில், எந்த உடன்பாட்டின் அடிப்படையிலாவது தொழிற்சாலையொன்றை நிறுவ வேண்டும் என்ற நிலையில், 1 கோடி 50 லட்சம் ரூபாய் எம்.ஐ.சி. அதற்குக் கடன் கொடுத்தது. மாநில அரசு, 5,000 ரூபாய் தான் பங்கு எடுத்திருக்கிறது. அதாவது, 50 பங்குகள் எடுத்தால்தான் ஒரு டைரக்டர் அதில் அமையமுடியும். ஆகவே, குறைந்தது ரூ. 5,000 அளிக்கவேண்டும். அந்தத் தொகையை மாநில அரசு போட்டிருக்கிறது. குறைந்த செலவில் தண்ணீர் வழங்குவது, குறைந்த செலவில் மின்சாரம் வழங்குவது, சேர்வராயன்மலை பாக்ஸைட் குத்தகையை அந்தக் கம்பெனிக்கு விடுவது என்ற உடன்பாட்டின்பேரில் அந்தத் தொழிற்சாலை அங்கே நிறுவப்பட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவித் தலைவர் அவர்களே, இந்த அலுமினியம் தொழிற்சாலையை ஏன் பொதுத் துறையிலே ஆரம்பிக்கவில்லை என்று கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. தனியார் துறையிலே அது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பொதுத் துறையிலே ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் நல்ல முறையிலே லாபத்திலே நடைபெறவில்லை என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பொதுத் துறையிலே ஆரம்பிக்கப்படுகின்ற அத்தனையும் நஷ்டத்திலே இருக்கின்றன என்ற முடிவிற்கு வந்துவிடுவதற்கில்லை, அதேபோல் தனியார் துறையிலே இருக்கின்ற அனைத்தும் லாபத்திலே நடத்தப்படுகின்றன என்ற முடிவிற்கும் வந்துவிடுவதற்கில்லை. பொதுத் துறையிலே ஆரம்பிக்கலாம் என்ற அளவிலே இருந்த இந்தத் தொழிற்சாலை நிதிப் பற்றாக்குறையின் காரணமாக தனியார் துறையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பொதுத்துறை தனியார்த் துறை என்ற பிரச்னை இதிலே இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** இந்த அலுமினியத் தொழிற்சாலையில் மொத்த மூலதனத்தில் 3 சத விதம்தான் அவர்கள் போட்டிருக்கிறார்கள். மாநில அரசும் மத்திய அரசும் அதிகமாக போட்டிருக்கின்றன. லாபம் வருகின்ற இந்தத் தொழிற்சாலையை முன்னாள் அமைச்சர் ஒருவருக்கு வேண்டியவருக்கு........(மணியடிக்கப்பட்டது).

[1968 ஆகஸ்ட் 26

THIRU K. VINAYAKAM: We object to this kind of question.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** என் அதற்குள் அவசரப்படுகிறீர்கள், நான் கவனித்துக்கொண்டிருக்கிறேன், என்ன சொல்லுகிறேன் என்பதை முதலிலே கேட்டுக்கொள்ளுங்கள். காப்பாற்றுவதற்கு நான் இருக்கிறேன். கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு இருக்கக்கூடாது, ஆகவே அதை நீக்கிவிட்டு கேள்வி போடுங்கள்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தனியார் துறையிலே இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு முன்னாலே இருந்த அரசு சாதகமாக இருந்தது என்று பரவலாகப் பேசப்படுகிறதே அது உண்மைதானா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பொதுத் துறையிலே ஆரம்பிக்கப்படவேண்டுமென்றுதான் முயற்சியெடுக்கப்பட்டது. நிதி வசதியைப் பொறுத்தவரையில் முழுதையும் போடுவதற்கு மாநில அரசுக்கு நிதி வசதியில்லை, மத்திய அரசுக்கும் நிதி வசதியில்லை என்ற காரணத்தால் இந்தத் திட்டத்தோடு சேர்ந்த மொத்தம் 12 திட்டங்களை நிறுத்திவிட்டார்கள். அந்த அடிப்படையிலேதான் தனியார் துறையிலே யாராவது முன் வந்தால் செய்யலாம் என்று சொன்னார்கள். மாநில அரசு அதிகம் தரவில்லை, 5,000 ரூபாய் என்ற அளவிலேதான் பங்கு எடுத்திருக்கிறது. எம்.ஐ.சி யிலிருந்து 1 கோடியே 50 லட்சம் ரூபாய் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி 3 சத வீதம் மட்டும் அவர்கள் தரவில்லை. அப்படி அவ்வளவுதான் தந்திருக்கிறார்கள் என்றால் மாநில அரசே எம்.ஐ.சி. தொகையின் மூலம் முழுவதையும் போட்டு நடத்தியிருக்க முடியும். மொத்த மூலதனம் எவ்வளவு என்று தெரியவில்லை. அவர்கள் போட்டு இருப்பதற்கு ஈடான அளவிலே எம்.ஐ.சியும் கொடுத்திருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** சர்க்கார் துறையிலே இல்லாமல் இந்த அலுமினியத் தொழிற்சாலை தனியார் துறையிலே நடப்பதன் மூலம் தொழிலாளர்களுடைய நியாயமான உரிமைகள் மதிக்கப்படாமல் அங்குள்ள தொழிலாளர்களைப் பழி வாங்குகிற முறையிலே பலாத்காரமாக அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இத்தகைய நிலைமையிலே அதிகப்படியான மூலதனம் சர்க்கார் போட்டிருப்பதாலே அதைப் பரிசீலனை செய்து தொழிலாளர்களின் உரிமை பறி போகாமல் இருப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தொழிலாளர்களுடைய உரிமைகள் காப்பாற்றப்படவேண்டியது தனியார் துறையாக இருந்தாலும் சரி, பொதுத் துறையாக இருந்தாலும் சரி, ஒரே அளவுக்குத்தான் வைத்துக் காப்பாற்றப்படவேண்டும். தொழிலாளர்களின் உரிமைகள் காப்பாற்றப்படவில்லை. குறிப்பிட்ட சூழ்நிலையில் என்றால் அதற்குச் சட்டப்படி முறைப்படி தொழிலாளர் இலாகாவும் மற்றவர்களும் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்துகொண்டு வருகிறார்கள். நியாயமான முறையில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்கவில்லையென்றால் அரசாங்கம் அதைக் கவனித்துக்கொண்டு வருகிறது. எந்த வகையிலே அவர்களுடைய உரிமைகள் புறக்கணிக்கப்பட்டாலும் அதிலே தலையிட்டு அவர்களை வற்புறுத்திச் சொல்கின்ற நிலைமையை அரசு பெற்றிருக்கிறது. அவர்களுடைய நலன்கள் காப்பாற்றப்படுவதிலே அரசு தக்க கவனம் செலுத்தும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** சர்க்காருக்குப் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தாலே தனியார் துறையில் விடப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எம். ஐ. சி. ஸ்தாபனமும் சர்க்காருடைய தொடர்பு உடையதுதான். அந்த ஸ்தாபனம் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. அந்த திரு. வெங்கடசாமி எவ்வளவு தொகை போட்டார்கள். அந்த வெங்கடசாமியைத் தவிர வேறு யாராவது அதை நடத்த முன் வந்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1968 ஆகஸ்ட் 26]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மொத்தம் எவ்வளவு போடப்பட்டது என்ற விவரம் இல்லை, தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம். இதை ஆரம்பிக்கவேண்டுமென்று பலரை அணுகியும் யாரும் முன் வராமல் முன் வந்தவர் அவர்தான். மாநில அரசு அவரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் முன் வந்தார்கள். அவர்கள் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டுமென்றும், போதிய லாபத்தைப் பெறமுடியவில்லையென்றும் இன்னும் கணக்கைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிற மூலப்பொருள்களில் மின்சாரம் முக்கியமாக இருப்பதால் அதிகமான அளவுக்கு மின்சாரம் பயன்படுத்தப்படுகிற நிலைமையிலே இன்னும் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இன்னும் குறைப்பது மற்ற தொழில்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது சரியில்லை என்று அரசு சொல்கிறது. அதற்காக இரண்டு தரப்பினரையும் வைத்து அடுத்த திங்களில் பேச இருக்கிறேன். அவர்களுக்கு ஏற்கெனவே கன்செஷன்ஸ் தரப்பட்டு அவர்கள் நடத்தி வருகிறார்கள்.

### புதுக் கல்லூரிகள் துவக்கம்.

* 142 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1968-69-ம் ஆண்டில் மேலூர் அல்லது நத்தத்தில் அரசினர் கலைக் கல்லூரி ஒன்று துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** இந்தப் பகுதி பொருளாதார வளர்ச்சி குன்றிய பகுதியாக இருக்கிறது. கல்லூரி வைப்பதற்காக அரசு குறிப்பிட்டிருக்கிற 5 லட்சத்திற்குப் பதிலாக 2 லட்சத்தைப் பெற்றுக்கொண்டு அங்கு கல்லூரி ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 5 லட்சத்திற்குக் குறைந்த அளவுக்குச் சலுகைகள் காட்டுவதாக இல்லை. பல இடங்களிலே இதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 5 இலட்சத்தை திரட்டி கல்லூரிக்குக் கொடுக்கிறார்கள் என்றாலும் அதற்கு மேலே செலவழித்தால்தான் முதல் தரமான கல்லூரியாக அதை ஆக்க முடியும். அதற்கு மேலே 8, 9 லட்சம் ரூபாய் வரையிலும் கட்டடங்கள் கட்டுவதற்காகவும், ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்காகவும் ஏற்படுகிறது, அதற்கு மேலே பி.ஏ., பி.எஸ்.ஸி. வகுப்புகள் வைப்பதற்கும் செலவு ஏற்படுகிறது, ஆக மொத்தம் அதற்கு மேலே 20, 25 லட்ச ரூபா வரையில் அரசுக்குச் செலவாகிறது. அது 5 லட்சத்தோடு முடிந்துவிடக் கூடியதில்லை. ஆகவே, 5 லட்சம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். எவ்வளவு பிற்பட்ட பகுதியாக இருந்தாலும் 5 லட்சத்தைக் கொடுக்கவேண்டுமென்ற ஆர்வத்தோடு நிதி திரட்டிக் கொடுத்திருக்கிற காரணத்தால் இந்த ஆண்டு 4 கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. ஐந்து லட்சம் ரூபாயைத் திரட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்தால் முயற்சி திருவினையாக்கும் என்ற அளவிலே திரட்டித் தரலாம். அதற்குப் பிறகு அந்தக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யலாம்.

### பண அஞ்சல் மூலம் ஓய்வூதியம் அனுப்புதல்.

*143 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

ஓய்வூதியம் (Pension) பெறும் ஆசிரியர்களுக்கு பண விடைத்தாள் (M.O.) மூலம் பணத்தை அனுப்பி வைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** இந்த ஓய்வூதியத்தைப் பெறுகிறவர்கள் அதைப் பெறுவதற்காக 5 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை செலவு செய்யவேண்டியிருக்கிற காரணத்தாலே ஓய்வூதியத்திலிருந்து அதைப் பணவிடைத் தாள் மூலம் அனுப்புவதற்காகத் தேவைப்படும் கட்டணத்தைக் கழித்துக் கொண்டு மீதிப் பணத்தை அவர்களுக்கு அனுப்ப அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்தை ஓய்வூதியம் பெறுகின்ற ஆசிரியர்களே தெரிவிப்பார்களானால் நாம் யோசிக்கலாம். ஓய்வூதியத்தோடு பண விடைத் தாளுக்காக ஆகின்ற செலவையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் ஏராளமான செலவாகும். ஆகவே பண விடைத்தாள் மூலமாக அனுப்புவதற்கில்லையென்று நிதி இலாகாவினர் சொல்கிறார்கள். ஆனால் பண விடைத் தாளின் மூலம் அனுப்புகின்ற செலவைக் கழித்துக்கொண்டு அனுப்பலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போன்று அதைப் பெறுகின்ற ஆசிரியர்கள் தெரிவிப்பார்களானால் அது பற்றிக் கவனிக்கலாம்.

மு.ப. 9-30 **திரு. வி. கே. கோதண்டராமன் :** ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சி இருந்த போது சிறிது காலம் எம். ஓ. மூலம் அனுப்பப்பட்டு அதற்குப் பிறகு நிறுத்தப்பட்டது உண்மையா ? அதற்கான காரணங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : With regard to demand of teachers, during the time of district boards, their pay used to be sent through money orders and teachers found it convenient. At present the pay is distributed through pay-masters. The present arrangement is found to be unsatisfactory. Teachers are not in favour of it. In the circumstances, will the Government try to investigate and arrange to send payments through money-orders ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முன்பு இப்படி அனுப்பப்பட்டது பற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. அவர்கள் விண்ணப்பம் செய்து கொண்டு வருகிறார்கள். அது ஆய்வில் இருந்து வருகிறது. ஒரு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் அந்த விண்ணப்பம் அவர்களிடம் இருந்து வருமானால் மீண்டும் அதை நிதித்துறை பரிசீலனை செய்ய வாய்ப்பு ஏற்படும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்கு ப்ராவிடண்ட் பண்ட் கொடுப்பதில் கிட்டத்தட்ட மூன்று நான்கு வருடங்களாகின்றன. அதைப் பெறுவதற்குள்ளே சில ஆசிரியர்கள் இறந்து விடுகிறார்கள். அந்த ப்ராவிடண்ட் பண்டை ஒரு குறுகிய கால அளவிற்குள் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ப்ராவிடண்ட் பண்ட் பணத்தை அவர்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் காலத்தாழ்வு ஏற்படாத வகையில் தரவேண்டுமென்ற பொதுவான ஒரு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முறையில் யாருக்காவது அப்படிப்பட்ட காலத்தாழ்வு ஏற்பட்டிருக்குமானால், சிலபல விளக்கங்கள் பெறுவதன் காரணமாக காலத்தாழ்வு ஏற்பட்டிருக்கலாம் அல்லது போதிய விளக்கங்கள் ஆசிரியர்கள் தர முடியாததினால் ஏற்படக்கூடும். எந்தெந்த இடங்களில் அப்படி காலத்தாழ்வு ஏற்படுகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தனியாக அது ஆராயப்படக் கூடும். அப்படி ப்ராவிடண்ட் பண்ட் தொகை வருவதற்குள் யாராவது திடீரென்று இறந்துவிடும் நிலைமை ஏற்பட்டால் உரியவர்களுக்கு அந்த ப்ராவிடண்ட் பண்ட் தொகை தருகிற முறைதான் இருந்து வருகிறது.



**திரு. டி. மார்டின் :** எம். ஓ. கமிஷனை ஓய்வு ஊதியத்திலிருந்து கழித்து அனுப்பினால் அவர்களுக்கு ஒரு வேளை வருத்தமாக இருக்கலாம். ஆனால் எம். ஓ. கமிஷனை மாநில அரசே ஏற்றுக்கொண்டு அந்த ஓய்வு ஊதியத்தை ஆசிரியர்களுக்கு அனுப்பினால் அவர்கள் அதை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வார்கள் என்ற காரணத்தினால் எம். ஓ. மூலம் அனுப்புவதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் எம். ஓ. கமிஷனை அரசு ஏற்றுக்கொண்டால் அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும் என்பதில் ஐயப்பாடு எதுவும் இல்லை. எம்.ஓ. கமிஷனை அரசு ஏற்றுக்கொள்ள முன் வந்தால் ஏராளமான செலவாகும் என்ற காரணத்தினால் இப்போதுள்ள நிலை நீடிக்கவேண்டுமென்ற கருத்தை நிதித் துறை தெரிவித்திருக்கிறது. முன்பு பரிசீலனையில் இருந்தது இப்போது நெருங்கி வந்திருக்கிறது. மீண்டும் அது பற்றிய விண்ணப்பங்கள் வருமானால் யோசிக்கலாம் என்று கூறினேன். அதோடு பென்ஷன் பெறும் எல்லோருக்கும் இந்த முறை கையாளப்படவேண்டும் என்ற நிலை வந்தால் அரசுக்கு ஏராளமான செலவு ஆகும் என்ற காரணத்தை நிதித்துறை சுட்டிக்காட்டியிருக்கிறது. இதைப் பற்றிவிண்ண ப்பம் மூலம் தெரிவித்தால் அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

## *Electricity from Neyveli Lignite Corporation*

* 144 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(*a*) whether a Committee of Directors of the Neyveli Lignite Corporation has requested the Madras State Electricity Board for a minimum guarantee on power off-take by the latter from Neyveli: and

(*b*) if so, the reaction by the Madras State Electricity Board on this request ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :**

(அ) ஆம்.

(இ) நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பரேஷன் அளிக்க முன் வந்துள்ள உபரி மின்சக்தி முழுவதையும் பெற்றுக்கொள்வதெனத் தமிழ் நாடு மின்சார வாரியம் ஒப்புக்கொண்டுள்ளது.

Thiru K. VINAYAKAM : Is it a fact that at present our Electricity Board is purchasing power from neighbouring States. Is it because it is not in a position to get power from Neyveli Lignite Corporation ? Will the Government give instructions to the Board that they should purchase power from outside our State only after satisfying all their needs from the Neyveli Lignite Corporation ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரத்தை அவர்கள் சொந்தத் தேவை போக உபரியாகவுள்ள மின்சாரம் முழுவதையும் நாம் ஏற்றுக்கொள்வது என்ற முடிவை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரம் நம் மாநிலத்தை நம்பியிருப்பதால், அதன் வளர்ச்சியில் நாம் அக்கறை கொண்டிருப்பதால் பேசின் பிரிட்ஜ், சமயநல்லூர் போன்றவற்றில் நிறுத்தி விட்டு அதில் வாங்கிக்கொள்ளவேண்டுமென்ற அடிப்படையில் சென்ற ஆண்டு செப்டம்பரில் 36 மெகாவாட்ஸ் வாங்கினால் போதும் என்று எண்ணினோம். ஆனால் 110 மெகா வாட்ஸ் வாங்கப்பட்டது. அதே போல் அக்டோபரில் 40 போதும், 110 வாங்கப்பட்டது. நவம்பரில் 50 போதும், 110 வாங்கப்பட்டது, டிஸம்பரில் 100 போதும், 110 வாங்கப்பட்டது, ஜனவரியில் 125 வேண்டும், ஆனால் 110 தான் தரப்பட்டது, பெப்ரவரியில்

140-க்கு 130, மார்ச்சில் 180-க்கு 140 தான் கிடைத்தது. இந்த அடிப்படையில் முழுவதும் எடுத்துக்கொள்வது என்ற அடிப்படையில் இருக்கிறது. கார்ப்பரேஷனுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாத அளவிற்கு பாதுகாத்துக் கொள்ள இந்த அரசு முயன்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொருள் குறித்து வருகிற மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தின் போது விரிவாகப் பேச வாய்ப்பிருப்பதால் அடுத்த வினாவிற்குப் போகிறேன்.

## *Lease of Agricultural lands in Nilgiris district*

*145 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the amount realised by Government by way of lease of agricultural lands to cultivators in the Nilgiris district during the years 1966-67 and 1967-68 ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 1966-67-ல் ரூ. 1,014.16-ம், 1967-68-ல் ரூ. 1,015·71-ம் அரசாங்கத்துக்குக் கிடைத்தன.

**திரு. ஏ. எம். ராஜா :** நீலகிரி மாவட்டத்தில் காப்பி, தேயிலைத் தோட்ட முதலாளிகளுக்கு 50-ல் இருந்து 99 ஆண்டுகள் வரை நீண்ட காலத்திற்கு மிகக் குறைந்த தொகையில் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன. இப்போது வாழ்க்கைப் புள்ளியும், விலைவாசியும் ஏறியிருக்கின்றன. ஆகவே, இந்த நிலைமைக்கேற்ப அந்தக் குத்தகையை ஏற்ற அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது சம்பந்தமாக விரிவான மாறுதல்களைச் செய்ய அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** நீலகிரி மாவட்டத்தில் பெரிய முதலாளிகளுக்கு குத்தகைக்கு நிலங்களை விடுவதை விட ஓரளவு மத்தியதர குடும்பங்களாகப் பார்த்து குத்தகைக்கு நிலங்களை விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் ஏதாவது செய்துகொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** குத்தகைக்கு விடுவது என்பதை விட பெரும்பாலான இடங்களில் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே குத்தகையால் ஏக்கருக்கு 3,000, 4,000 ரூபாய் வருவதற்குப் பதிலாக பெனல்டி என்று 20 மடங்கு போட்டாலும் மிகக் குறைவாகத் தான் வருகிறது. இத்தகைய விசித்திரமான நிலை இருந்து வருகிறது. இவைகளை எல்லாம் சீராக்குவதற்கு, ஒருமுகப்படுத்துவதற்கு இது சம்பந்தமாக ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீலகிரி மாவட்டக் கலெக்டர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அதையொட்டி இது சம்பந்தமாக நல்ல முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. மா பா. சாரதி :** நீலகிரி மாவட்டத்தில் நம் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு ஏக்கர் இருக்கின்றன ? அதிலிருந்து வரும் மொத்த வருமானம் ஆண்டுக்கு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அரசுக்குச் சொந்தமான நிலம் என்றால், பெரும்பாலான ஏக்கர்கள் பட்டா செய்யப்படாமலும், சிலபல குத்தகைக்கு விடப்பட்டும் இருக்கின்றன.

**திரு. ஜெ பெள்ளி கௌடர் :** நீலகிரி மாவட்டத்தில் சர்க்காருக்கு சம்பந்தப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. அதை விவசாயிகள் ஆக்கிரமித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களிடம் அபராதம் விதித்து வசூல் செய்கிறார்கள். அதையே குத்தகைக்கு விட்டால் ஏராளமான வருமானம் சர்க்காருக்கு வரும். ஆகவே, அவைகளை குத்தகைக்கு விடும் திட்டத்தை பரிசீலிக்க அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆக்கிரமிப்புக்களை அகற்றும் பொது அங்கிருந்து பெரிய எதிர்ப்பெல்லாம் வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பெரிய மாறுதல்களை இது சம்பந்தமாக ஏற்படுத்த





வேண்டுமென்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். பொது மக்களுடைய போதரவும், சட்டமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் இருந்தால் இதைத் துரிதப்படுத்த செளரியமாக இருக்கும்.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, நீலகிரி ஜில்லாவில் எரிமாடு என்ற பிரதேசத்தில் இருக்கிற விவசாயிகள் அந்தப் பிரதேசத்தில் இருக்கிற நிலத்தைத் தங்களுக்குக் குத்தகைக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுள்ளதைப்பற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைப்பற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** நீலகிரி மாவட்டத்திலே குத்தகைக்கு விடப்படுகின்ற நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு குத்தகை வாங்கப்படுகிறது ? உருளைக் கிழங்கு, காப்பி, தேயிலை போன்ற பணப் பயிர்கள் பயிரிடுவதால் வருவாயை அதிகரிக்க எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அங்கு ஏக்கர் ஒன்றுக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று குத்தகைக்கு விடப்பட்டிருந்த நிலங்களுக்கு 1966-ம் ஆண்டோடு ஒப்பந்தம் தீர்ந்துவிடுகிறபடியால் புதிதாகப் புதுப்பிக்கக்கூடிய நேரத்தில் எத்தனை ஏக்கர் யார் யாருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. மு. ச. சிவசாமி :** நீலகிரி மாவட்டத்தில் 100 வருஷ காலத்திற்கு குத்தகைக்கு காப்பி, தேயிலை தோட்டங்களைப் பயிர் செய்வதற்கு விடப்பட்டது முடியும் தருவாயில் இருக்கிறது. ஆகவே, அது முடிந்தவுடன் அந்த நிலங்கள் பகிரங்க ஏலத்தில் விடப்படுமா அல்லது ஏற்கெனவே வைத்திருந்தவர்களுக்கே விடப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது கொள்கை பற்றிய கேள்வி. இந்தக் கேள்வியோடு சம்பந்தப்பட்டதல்ல.

**திரு. சு. துரைசாமி :** அந்த நிலங்களைக் குத்தகைக்கு எடுத்திருக்கிற சில பேர் சொந்தமாக விவசாயம் செய்யாமல் வேறு ஒருவருக்கு அதிகமான குத்தகைக்கு விட்டு விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுபற்றிய விவரம் இல்லை. குறிப்பாக கனம் அங்கத்தினர் அதைப் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

## *Surplus lands under the Land Reforms Act.*

* 146 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the extent of lands declared as surplus under the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 and the steps taken to distribute these lands to the landless tillers ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் கீழ் இதுவரை 25,147 ஏக்கர் பரப்பு உபரியென அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 6,230 ஏக்கர் தடை ஆணை விதிக்கப்பட்ட நிலங்களும், பயிர் வளர்ந்து வரும் நிலங்களும் அடங்கும். மீதியுள்ள 18,917 ஏக்கர் பரப்பினை

[1968 ஆகஸ்ட் 26

அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இந்த நிலங்கள் ஒப்படை செய்யப்படு கிறவரை தகுதியுள்ளவர்களுக்கு 17,212 ஏக்கர் பரப்புள்ள நிலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** நிலமற்ற உழவர்களுக்கு இந்த நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளதா ? மேலும், பெரிய நிலச்சுவான்தார்கள் தங்களுடைய உறவினர் பெயரில் எழுதி வைத்திருப்பதாகவும் சட்டத்தில் ஓட்டை இருப்பதாகவும் சொல்லப்படுகிறதே. அதுபற்றி அரசு ஆராய்ந்ததா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதைத்தான் மூலக் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே சொன்னேன். இதைத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட அன்றே " இது உச்ச வரம்புச் சட்டமல்ல, மிச்ச வரம்பு சட்டம் " என்று கூறினார்கள். 25,147 ஏக்கர்தான் இவ்வளவு பெரிய சட்டத்திலே இருந்து கிடைக்கிற நிலைமை. அதிலும் நம் கையில் இருப்பது 18,917 ஏக்கர்தான். ஸ்டே ஆர்டர் போட்டோ மற்றபடியோ போய்விட்டது 6,230 ஏக்கர். இந்த பதினெட்டாயிரம் ஏக்கராவைக் கூட நிலமற்றவர்களுக்கு வழங்குவதில் சில விதிமுறைகள் இருக்கின்றன. ஆதரைஸ்டு ஆபீசர்ஸ் என்று இருக்கிறார்கள். நோட்டீஸ் கொடுக்க வேண்டும். ஆட்சேபணை வருகிறதா என்று பார்க்கவேண்டும். அதற்காக ஏற்படக்கூடிய கால தாமதத்தினால் நிலம் தரிசாகக் கிடக்கக்கூடாது என்ற காரணத்தால் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு குத்தகைக்கு கொடுத்ததில் ரூ. 11,88,000 வந்திருக்கிறது. அந்த நிலைமைகள் மாறி இப்போது அந்த நிலங்களை ஒப்படைச் செய்யும் முயற்சி இறுதிக் கட்டத்தில் இருக்கிறது. வெகு விரைவாக இந்த நிலங்கள் ஒப்படை செய்து கொடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ராமலிங்கம் :** மாவட்ட வாரியாக எவ்வளவு என்று கூறமுடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :**

| | ஏக்கர். |
|---|---|
| சென்னை .. .. .. .. .. .. | 2,228 |
| கடலூர் .. .. .. .. .. .. .. | 2,255 |
| தஞ்சாவூர் .. .. .. .. .. .. | 2,155 |
| நாகப்பட்டினம் .. .. .. .. .. .. | 2,231 |
| மாயவரம் .. .. .. .. .. .. | 2,938 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. .. .. | 1,510 |
| கோயம்புத்தூர் .. .. .. .. .. | 1,251 |
| மதுரை .. .. .. .. .. .. | 4,720 |
| திருநெல்வேலி .. .. .. .. .. | 5,429 |

**திரு. எல். கணேசன் :** உச்ச வரம்புச் சட்டம் வரப் போவதைத் தெரிந்து கொண்டு நிலத்தை அவர்களுக்குள்ளாகவே பிரித்துக் கொண்ட காரணத்தால் அந்த நிலங்களை எல்லாம் கைப்பற்ற அரசாங்கம் புதிய சட்டம் கொண்டு வர முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது கொள்கை பற்றிய கேள்வி. கேள்வி நேரத்தில் இதைப் பற்றிப் பதில் அளிக்கமுடியாது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மதுரை மாவட்டம் கீழையூர் பகுதியில் 9 விவசாயிகளுக்கு நிலம் பிரித்து குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குண்டான குத்தகைச் சீட்டையும், கட்டிய பணத்திற்கான ரசீதையும் ஆண்டுதோறும் அதிகாரிகள் கைப்பற்றிக் கொண்டு போகிறார்கள். அவர்கள் குத்தகையைப் புதுப்பிப்பது என்ற பெயரால் இந்த ஆண்டு வேறு ஒருவருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அந்த நிலத்தில் ஏற்கனவே விவசாயம் செய்து வந்த விவசாயிகளுக்கே அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுதான் நியாயமானது. அது பற்றிய விவரம் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர் :** அமைச்சர் அவர்கள், இந்த உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் கைப்பற்றிய நிலங்களில் இருந்து 11,88,000 ரூபாய் வந்ததாகச் சொன்னார்கள்.........,

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நம்மிடத்தில் இருந்த 18,000 ஏக்கரைக் குத்தகைக்கு விட்டதில் பதினோரு லட்சம் வந்தது என்று சொன்னேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர் :** அந்தத் தொகை இது வரை வந்த வரவா ? அல்லது ஒவ்வொரு ஆண்டும் வருகின்ற வரவா ? இதுவரை நிலச் சீர்திருத்த உச்ச வரம்புச் சட்டத்தை அமல் நடத்துவதற்கு ஆன செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு வருஷத்திய கணக்குதான். போன வருஷத்திற்கான. கணக்கு வர வேண்டியிருக்கிறது. இந்த பதினெட்டாயிரம் ஏக்கராவை பட்டா செய்து கொடுப்பதற்கான முயற்சிகள் துரிதமாக நடை பெற்று வருகின்றன.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தஞ்சை மாவட்டத்திலேதான் ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களைச் சொந்தமாகக் கொண்ட நிலப் பிரபுக்கள் இருக்கிறார்கள். அவ்வாறு அதிகமாக இருக்கக்கூடிய நிலங்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் கொண்டு வரப்பட்ட உச்ச வரம்புச் சட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே மீண்டும் உச்ச வரம்புபற்றிய ஒரு சட்டத்தைக் கொண்டு வர அரசாங்கம் ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த உச்ச வரம்புச் சட்டம் முன்னால் இருந்த சர்க்காரால் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத்தை ஆராய்ச்சி பண்ணிய அமெரிக்க நிபுணர்கள் கூட இதை வெறும் காகிதச் சட்டம் (பேப்பர் லெஜிஸ்லேஷன்) என்றுதான் வன்மையாகக் கண்டனம் செய்தார்கள். இந்தச் சட்டத்தினால் யாரும் சிக்கிக் கொள்ளாத வகையில் சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைந்து தப்பித்துக்கொள்ள கூடிய அளவுக்கு இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. இதையெல்லாம் நன்றாக யோசித்துத்தான் மாற்றுச் சட்டம் எதையும் செய்ய முடியும். சில பேர் அநியாயமாக நடந்து கொண்டால் கூட அதற்கும் சட்டத்தில் ஒரு புகலிடம் இருக்கிறது. எல்லாம் மிகவும் பந்தோபஸ்தாக நடைபெற்று இருக்கிறது. கொள்கையளவிலே அரசாங்கம் இதிலே அக்கறை கொண்டிருக்கிறது. இதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவரவர்களே, முன்னாள் அமைச்சர் பழையக் கோட்டைக்காரர் நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் அவர்கள் 12,000 ஏக்கர்களுக்கு மேல் சொந்தக்காரர் என்று சொல்லப்படுகிறதே, அவருடைய நிலங்களில் எவ்வளவு நிலத்தை இந்த அரசு உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்களுடைய நிலங்களில் எவ்வளவு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதற்கு எனக்கு இந்த மன்றத்திலே விவரம் கிடையாது. சட்டத்திலே மேய்ச்சல் காடுகள், தென்னந்தோப்புகள், இப்படியெல்லாம் சில விதிவிலக்குகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கோவை மாவட்டத்தில் காங்கேயம் பகுதி முழுவதும் மேய்ச்சல் காடுகளாகத்தான் இருக்கின்றன என்பதாலே விதிவிலக்கிலே வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம். அதுகூட கூடாது என்ற முறையிலே சட்டமன்றத்திலே பேசப்பட்டது. முன்னுள் அமைச்சர் பட்டயக்காரர் அவர்களிடத்திலே பேசிக்கொண்டிருந்தபொழுது , " எனக்கு 30 ஏக்கரா தான் இருக்கிறது. என் மனைவி பேரிலே 30 ஏக்கரா இருக்கிறது. நான் சாதாரண விவசாயி " என்றுதான் சொல்லு கிருர்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், உச்சவரம்புச் சட்டம் வருவதற்கு முன்னுலேயே, அது வருகிறது வருகிறது என்று சொல்லி அவரவர் களுடைய பண்ணையாட்கள், நாய்கள் மற்றும்........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் அந்தச் சொல்லைத் திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** நாயக்கர்கள் என்று சொல்லுவதற்கு நாய்கள் என்று சொல்லிவிட்டேன் என்று சொல்லிக்கொள்கிறேன். அவரவர்களுடைய பண்ணைக்காரர்கள், நாயக்கர்கள், சொந்தக்காரர்கள் என்று இப்படி பல பேர்கள் பெயரிலே நிலங்களை மாற்றிப் பதிவு செய்து கொண்டார்கள் என்று சொல்லப்படுகிறதே, அவை உண்மைதானு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவை மிக அப்பட்டமான உண்மையாகத்தான் இருக்க வேண்டும். நிலத்திலே உழைப்பவர்களுக்கும். குடியானவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்பதற்காக புனிதமான நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட சட்டம் "மலையைக் கிள்ளி எலியைப் பிடித்தார்கள் " என்ற மாதிரி முடிந்திருப்பதைப் பார்த்தால் தவறுகள் நடந்திருக்கும் என்பதை ஊகிக்க இடம் உண்டு.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே' கனம் உறுப்பினர் கேள்வி கேட்ட சமயத்திலே பழைய கோட்டைக் பட்டயக்காரருக்கு 12,000 ஏக்கரா நிலம் இருப்பதாகச் சொன்னுர்கள். ஆனால், சர்க்காரிடத்திலே ரெவின்யூ ரெக்கார்டுகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள், தனிப்பட்ட முறையில் தன்னிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது 30 ஏக்கரா இருப்பதாக கூறினுர் என்று சொல்கிருர். ஆகவே, அந்தப் பிரச்சினையைப்பற்றி சட்டமன்றத்திலே புகார் சொல்வதை விட, ரெவின்யூ ரெக்கார்டுபடி எவ்வளவு இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தக் கேள்விக்கு மன்றத் திலே தகவல் இல்லையே தவிர, பழைய மந்திரி அவர்கள் நேரிலே பேசிக்கொண்டிருந்தபொழுது " என்னிடத்தில் 30 ஏக்கராதான் இருக் கிறது. உங்களையெல்லாம் விட நான் சின்ன விவசாயி " என்று சொல்லிக்கொண்டிருந்தார். எதற்காக அந்தக் கருத்தைச் சொல்கிருரோ தெரியவில்லை. ஆனுல், சட்டப்படி எல்லாம் ஒழுங்காக இருக்கிறது என்பது தான் உண்மை.

*Madras Veterinary College.*

*147 *Q.*—Thiru A. M. RAJA: Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether it is a fact that the Flaying course for butchering was not conducted in the Madras Veterinary College during the years 1966-67 and 1967-68 for want of candidates ; and



(*b*) whether there is a lecturer for conducting the above course ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஊன் விற்பவர்களுக்கான தோல் உரிப்பது குறித்த பாடமுறை 1966-67-ல் சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படவில்லை. 1967-68-ம் ஆண்டுககான பாடமுறை 31—10—1967 முதற்கொண்டு தொடங்கப்பட்டது.

(இ) ஆம்.

**கோவை விவசாயக் கல்லூரி.**

*148 விஞ.—**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைசசர் தயவுசெய்து கீழககண்ட விஞக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1967-68-ல் கோவை அரசினர் விவசாயக் கல்லூரியில் பதவி ஓய்வு பெறும் காலத்திற்கப்புறமும் பதவி நீடிப்பு செய்யப்பட்ட பேராசிரியர்கள் யார் யார் ?

(இ) இப்பதவி நீடிப்புகளுக்கான தனித்தனிக் காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) எவருமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Madras Panchayats Act*

*153 Q.—Thiru A. M. RAJA: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to amend the Madras Panchayats Act, 1958 ; and

(*b*) if so, when ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) இயன்ற அளவுக்கு விரைவில் திருத்தப்படும்.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய தலைவரையும், ஊராட்சி மன்றத் தலைவரையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையை இந்தச் சட்டதிருத்தத்தில் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** சட்டத்தைத் திருத்த முயற்சி மேற்கொளளும் பொழுது கனம் அங்கத்தினர் அவர்களுடைய கருத்தும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவரவர்களே, பொது மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையில்லாத காரணத்தால ஆள் தூக்குகின்ற நிலைமையும் ஒருவரையொருவர் கொலை செய்யும் சூழலும் இருப்பதை அரசு அறியுமா? எனவே, அதற்குப் பரிகாரம் தேடும் முறையில் பொது மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கான சூழலை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஏற்கனவே உறுப்பினர் கேட்ட கேள்விக்கு இதற்கான விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

[1968 ஆகஸ்ட் 29

## ஊராட்சித் தலைவர்களின் அதிகாரம்

* 154 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து தலைவர்களுக்குக் கூடுதலாக அதிகாரம் வழங்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) and (இ) ஊராட்சித் தலைவர்களுக்குக் கூடுதலாக அதிகாரம் வழங்கும் உத்தேசம் தற்போது ஏதும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, ஊராட்சித் தலைவர்கள் அதன் முன்னேற்றத்திற்குத் தேவையான பொருள்களை ஆணையாளரிடமிருந்து வாங்குவது பெரிதும் சிரமமாக இருக்கிறது என்ற குறைபாடு வந்ததா ? இவைகளை நீக்குவதற்கு வழி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஒவ்வொரு ஊருக்கும் ஒரு ஆணையரை நியமிப்பது என்பது இயலாத காரியம். ஆணையரிடமிருந்து பொருள்களை வாங்குவதில் சிரமம் இருப்பதாகத் தனிப்பட்ட முறையிலே எந்த குற்றச் சாட்டும் வந்ததாகத் தெரியவில்லை. எங்கேயாவது அப்படியிருந்தால் அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அந்தச் சுமையைப் போக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. பு. செ. முத்துச்செல்வன் :** துணைத் தலைவரவர்களே, பேரூராட்சித் தலைவர்களுக்கு அதிக அதிகாரம் இல்லாமல், நிர்வாக அதிகாரிகள் தன்னிச்சையாக நடந்து கொள்ளும் நிலையிருப்பதால் அந்த நிலையை மாற்றிப் பேரூராட்சிகளில் உள்ள " பைல் " கள் அதன் தலைவரின் ஒப்புதலைப் பெற வேண்டுமென்ற அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அத்துடன் நிர்வாக அதிகாரியின் " பர்சனல் ஃபைலை"த் தலைவருடைய பொறுப்பிலே விட உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பேரூராட்சித் தலைவர்களுக்கென சில அதிகாரங்களும், நிர்வாக அதிகாரிகளுக்கென சில வேலை முறைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவரவர்கள் தங்கள் தங்களுக்குரிய கடமைகளை ஆற்றும் நேரத்தில் சிக்கல்கள் வருவது இல்லை. ஒருவருடைய கடமையில் இன்னொருவர் தலையிடும்பொழுதுதான் சிக்கல்கள் வருகின்றன. அரசாங்கத்திற்கு அனுப்பக்கூடியவைகளை ஊராட்சித் தலைவர் மூலம் அனுப்ப வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. அரசாங்கத்திலிருந்து அனுப்பப்படும் எல்லாத் தபால்களும் ஊராட்சி மன்றத்தின் தலைவர் மூலமாக நிர்வாக அதிகாரிக்குச் செல்ல வேண்டுமென்பது தற்போதைய விதிமுறைகள் ஆகும்.

**திரு. நா. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, நகரப்பஞ்சாயத்துத் தலைவர்களும், பல கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களும் ஆணைச்சீட்டு வழங்குவதன் பெயராலே அவர்களுக்கு மரியாதைக் குறைவும், கண்ணியக்குறைவும் ஏற்படுகின்றது. எனவே, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு வரும் பழியைப் போக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கண்ணியக்குறைவை உண்டாக்கும் முறையில் எந்தச் சட்டமும் இருப்பதாகத் தெரியவில்லை. அதுபற்றிய பிரச்சினை எழவில்லை.



1968 ஆகஸ்ட் 26]

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** தலைவரவர்களே, மத்திய சர்க்காரிடம் உள்ள அதிகாரங்களை மாநில அரசுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திவரும் இந்த அரசுக்கு முதலில் இந்த அரசிடம் குவிந்திருக்கும் அதிகாரங்களை ஸ்தல ஸ்தாபனங்களிடம் பகிர்ந்து கொடுக்க முன்வரும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மத்திய அரசிடமிருந்து இந்த அரசுக்குக் கிடைக்க வேண்டிய அதிகாரங்கள் . கிடைத்தால் குவிந்திருப்பதாகச் சொல்ல முடியும். அந்த நிலை வரும்பொழுது நிச்சயமாகப் பகிர்ந்து கொடுப்பதிலே எந்தவிதமான சங்கடமும் ஏற்படாது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. To my knowledge the heads of the panchayats are known as presidents. May I know when they became ' chairman ' as is now printed in the question list ? முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக் கேள்வியிலே பஞ்சாயத்துத் தலைவர் என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. " சேர்மன் " என்று தவறுகத்தான் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### பள்ளிப் பாளையம் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை கதவடைப்பும் தொழிலாளர் நிலையும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், " சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையம் சேஷசாயி பேப்பர் மில் திடீரென்று 23—8—1968 தேதி முதல் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளதைப் பற்றியும் அதை எதிர்த்து கிளர்ச்சி செய்த தொழிலாளர்களை கடுமையாகத் தாக்கியும் தொழிற்சங்க ஊழியர்களை கைது செய்துள்ளதைப்பற்றியும் அதனால் 3,000 பேர்களுக்கு மேல் வேலையில்லாமல் கஷ்டப்படுவதைப்பற்றியும் விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்க வேண்டும் " என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

தொழில் தகராறுகளைத் தீர்க்க வேறு வழிவகைகள் இருக்கிற காரணத்தாலும், கதவடைப்புச் செய்வது, வேலை நிறுத்தம் ஆகியவற்றைப்பற்றி இங்கே ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்று சட்ட மன்ற விதிகள் இருப்பதாலும் இதற்கு, நான் அனுமதி தர மறுக்கிறேன்.

## 3. அரசினர் தீர்மானம்.

### விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, இரண்டிற்கு மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஒரே கூட்டத்தில் கொண்டுவருவது சம்பந்தமான விதியைத் தளர்த்த வேண்டுமென்ற தீர்மானத்தை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

[1968 ஆகஸ்ட் 26

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, "ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்று 41 (3) விதியின்கீழ் உள்ள தடையை இன்று தளர்த்த வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### 4. கவன ஈர்ப்பு.

#### (i) பல்தொழிற் பள்ளிகளிலிருந்து விலக்கப்பட்ட ஆசிரியர்களின் நிலை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் கல்வி, தொழிலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Sir, I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely the plight of the Lecturers in Polytechnics who have been retrenched much against their conditions of service.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே 1957 நவம்பர் 14-ம் தேதிக்கு முன்பு பல்தொழிற் பள்ளிகள தொழில் வணிகத் துறை இயக்குநர் ஆளுகையில் இருந்து வந்தன. அரசாங்கப் பல்தொழிற் பள்ளிகளில் உள்ள சில பதவிகள் அப்போது தமிழகத் தொழிற் பணியிலும், தமிழகத் தொழில் சார்நிலைப் பணியிலும் சேர்க்கப்பட்டிருந்தன. சில பதவிகள் எந்த விதிகளின் கீழும் வரவில்லை. 1957 நவம்பர் 14-ம் நாளிலிருந்து தொழில் நுட்பக் கல்வித் துறை அமைக்கப்பட்டதன் விளைவாக மேற்சொன்ன துறையின் எல்லாப் பதவிகளுக்கும் தனித்தனிப் பணி விதிகளை இயற்றும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிர்பார்த்தவாறு இவ்விதிகளை உரிய காலத்தில் இறுதி செய்ய இயலவில்லை. ஆகவே, பல்தொழிற் பள்ளிகளில் உள்ள பல்வேறு பதவிகளுக்காகத் தனி விதிகள் இயற்ற முடிவு செய்யப்பட்டது. பெரும்பான்மையான பதவிகள் தமிழக அரசின் அலுவலர் தேர்வுக் கழகத்தின் ஆளுகையில் கொண்டு வரப்பட்டன. இதற்கெனத் தனி விதிகள் இயற்றப்படுகிற வரையில், (விரிவுரையாளர்கள் உட்பட) பல்தொழிற் பள்ளிகளில் உள்ள எல்லாப் பதவிகளுக்கும் அவசர கால விதித் துறைகளின் கீழ் தொடர்ந்து நியமனங்கள் செய்யப்பட்டு வந்தன.

கல்லூரிக் கல்வித்துறை பின்பற்றி வரும் நடைமுறையை ஒட்டி, அவசர கால விதித்துறைகளின் கீழ் நியமிக்கப்பட்டவர்களின் பணிகள் 1967-68 கல்வி ஆண்டின் முடிவில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நீக்கப்பட்டன. ஆனால் அவர்கள் அனைவரும் 1968-69 கல்வி ஆண்டின் தொடக்கத்தில் மீண்டும் நியமிக்கப்பட்டனர். 1968-ம் ஆண்டு கோடை விடுமுறையின் போதும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டது. தமிழக அரசு அலுவலர் தேர்வுக் கழகத்தால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே, அவர்கள் முறையாகப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பெரும்பான்மையான தாற்காலிகப் பதவிகளுக்குத் தனி விதிகள் இப்போது இயற்றப்பட்டுள்ளன. அவ்விதிகளை ஒட்டி, தாற்காலி நியமனங்களை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கபபட்டு வருகிறது.



1968 ஆகஸ்ட் 26]

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** பாலிடெக்னிக் பள்ளிகளிலே அதிகமான மாணவர்கள் சேராததனாலே பல ஆண்டுகாலமாக சர்வீஸிலிருந்த உபாத்தியாயர்கள் இன்கிரிமெண்ட் பெற்றும் அவர்கள் வேலையிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள். மறுபடியும் அவர்களை சேர்த்து அவர்களுடைய இன்கிரிமெண்டை கவனியாமல் "பேசிக் பேயைத்" தான் அவர்களுக்கு இப்பொழுது அளித்து வருகிறார்கள். ஆகையால், அவர்களுக்கு நியாயம் கொடுக்க வேண்டும். மேலும், அவர்கள் எங்கு வேலை பார்த்தார்களோ அங்கே குடும்பத்தையும் நடத்தி வருகிறார்கள். ஆகவே, அவர்கள் எங்கு வேலை பார்த்தார்களோ அங்கேயே அவர்களுக்கு வேலை கொடுக்கும் முயற்சியை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாணவர்கள் குறைந்து விட்டதன் காரணமாக தொழிற் பயிற்சி பள்ளிகளிலிருந்து யாரும் வேலை நீக்கம் செய்யப்படவில்லை. ஆனால், சர்வீஸ் கமிஷனால், தாற்காலிக ஆசிரியர்களைத் தொடர்ந்து வைக்கக் கூடாது என்றும் பள்ளி இறுதி ஆண்டிலே நீக்கப்பட்டு மறுபடியும் சேர்க்கப்படலாம் என்றும் சொல்லப்பட்டது. அந்த அடிப்படையிலே தான் பள்ளி இறுதி ஆண்டின்போது அவர்கள் நீக்கப்பட்டார்கள். நீக்கப்பட்டார்களே தவிர, கோடை விடுமுறை சம்பளம் முழுவதும் தரப்பட்டது—முறைபடி. கோடை விடுமுறை முடிந்ததும் மறுபடியம் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். சம்பளத்தைப் பொறுத்தவரையிலும் அவர்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. தாற்காலிகமாக இருப்பவர்களை முறைப் படுத்துவதற்கு இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படை வருகின்றபோது இனிமேல் இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்பட வழி இருக்காது.

#### (ii) இராமநாதபுரம் மாவட்டத்தில் குடும்பக் கார்டு மூலம் அளித்து வந்த உணவுப் பொருள்களின் அளவைக் குறைத்ததால் மக்களின் நிலை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, திரு ஏ. அ. சுப்பாராஜா அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ்,

"இராமநாதபுரம் ஜில்லாவில் குடும்பக் கார்டுகளுக்கு ஏற்கனவே அளித்து வந்த 1 யூனிட்டுக்கு 1,200 கிராம், 1,000 கிராமாகக் குறைக்கப்பட்டதை முன்னிட்டு கஷ்டப்படுகின்ற மக்களின் நிலைபற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், சட்டபூர்வப் பங்கீட்டுப் பகுதிகளில் நபர் ஒன்றுக்கு வாரமொன்றுக்கு 1,400 கிராம் அரிசி வழங்கப்படுகிறது. சட்டபூர்வமற்ற பங்கீட்டுப் பகுதிகளில் அதிகபட்சம் ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு 1,200 கிராம் அரிசி வழங்கப்படுகிறது. ஆனால் மாவட்ட ஆட்சியாளர்கள் அவ்வப்போது மக்கள் தேவைக் கேற்றபடியும் வெளிச்சந்தையில் அரிசி கிடைக்கும் நிலைமையைக் கவனத்திற் கொண்டும் வழங்கப்படும் அளவை மாற்றுகின்றனர். மேலும் அவர்கள் உணவுப் பொருள்கள் கையிருப்பு அளவை மனதில் கொண்டு கார்டுகளுக்கு வழங்கும் அரிசி, கோதுமை இவற்றின் அளவை கூட்டியோ, குறைத்தோ வழங்கலாம். எனவே சட்டபூர்வமற்ற பங்கீடு முறை அமுலிலுள்ள எல்லா இடங்களிலும் ஒரே அளவு உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதில்லை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சில பகுதிகள் கிறபற்றுகுறை பகுதிகள். இம் மாவட்டத்தில் 10 நகரங்களிலும், 10 பேரூர்களிலும் சில கடற்கரை பகுதிகளிலும் குடும்பக்கார்டு மூலம் அரிசி வழங்கப்படுகிறது.

நகரங்களிலும் பேரூர்களிலும் 1,200 கிராம் அரிசியும் கடற்கரை பகுதிகளில் 800 கிராம் அரிசியும் நபர் ஒன்றுக்கு வாரமொன்றுக்கு வழங்கப்பட்டு வந்தது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் 28—7—1968-ந் தேதி முதல் நகரங்களிலும் பேரூர்களிலும் வழங்கப்படும் அரிசியின் அளவை 1,200 கிராமிலிருந்து 1,000 கிராமாக குறைத்துள்ளார். ஆனால் குறைக்கப்பட்ட அளவுக்கு அதிகமாகவே கோதுமை, மைலோ ஆகியவை வழங்கப்படுகின்றன. எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் குடும்பக் கார்டுகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்களின் மொத்த அளவு கூடியே இருக்கிறது; இதனால் மக்களுக்கு எவ்வித துன்பமும் ஏற்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் 1967-ம் ஆண்டு பொது விநியோக முறையின் கீழ் தமிழ்நாட்டில் 6,11,479 டன் அரிசி வழங்கப்பட்டது. கடந்த ஆண்டில் ஜனவரி முதல் ஜூலை முடிய ஏழு மாதங்களில் 3,24,045 டன் அரிசி வழங்கப்பட்டது. இதே காலத்திற்கு, அதாவது ஜனவரி 1968 முதல் ஜூலை 1968 வரை இவ்வாண்டில் 4,23,199 டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. 1967-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரையில் 3,24,000 டன் அரிசி வழங்கப்பட்டது. 1968-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரையில் 4,2?,000 டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் புள்ளி விவரத்தை இப்போது நான் காட்டுவதற்குக் காரணம் இந்த அரசாங்கம் ஏதோ மிகவும் குறைத்துவிட்டது, எத்தனையோ ரேஷன் கடைகளிலே கொடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறதே அதற்குப் பதிலாக கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு இந்த ஆறு மாதத்திலே ஒரு இலட்சம் டன்னுக்கு மேலாக அரிசி விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்கும் இந்த மாமன்றத்தின் மூலம் தமிழகத்திற்கும் தெரிவிப்பதற்குத்தான்.

கோதுமை மற்றும் கோதுமைப் பொருள்களும் கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு அதிகமாகவே விநியோகிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூலை முடிய ஏழு மாதத்தில் 30,000 டன் கோதுமையும், 48,489 டன் கோதுமைப் பொருள்களும் வழங்கப்பட்டன. ஆனால் இவ்வாண்டு ஜனவரி முதல் ஜூலை வரை 26,090 டன் கோதுமையும் 63,821 டன் கோதுமைப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இத்துடன் மே மாதம் முதற்கொண்டு மாதமொன்றுக்கு 6,000 டன் மைலோவும் விநியோகிக்கப்பட்டுள்ளது. எனவே மாவட்ட ஆட்சியாளர்கள் உணவுப் பொருள்கள் கையிருப்பு அளவை மனதில் கொண்டு கார்டுகளுக்கு வழங்கும் அரிசி, கோதுமை இவற்றின் அளவை கூட்டியோ குறைத்தோ வழங்கி வரலாம். ஆனால் கார்டுகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்களின் மொத்த அளவில் எவ்வித மாற்றமும் இல்லை. பார்க்கப்போனால் கார்டுகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்களின் அளவு இவ்வாண்டு கணிசமாக அதிகரித்துள்ளது.

அதே நேரத்தில் ஒரு பெரிய தவறான எண்ணம் வெளியே பரப்பப் படுகிறது ரேஷன் குறைந்துவிடும் என்று. சட்டபூர்வமான ரேஷனுக்கு அரசாங்கம் முழுதும் பொறுப்பேற்றிருக்கிறது. கோவை, சென்னை ஆகிய நகரங்களில், சட்டப்பூர்வமான ரேஷன் இருக்கும் இடங்களில், ஸ்டாசூடரி ரேஷனிங் ஏரியாவில் எந்தவிதமான மாறுதலும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் வெளி மார்கெட்டிலே கள்ளமார்க்கெட்காரர்கள், பதுக்கல்காரர்கள் அதிகரித்து விடாமல் இருப்பதற்கும், விலையை ஸ்திரப்படுத்துவதற்கும், ஒரளவுக்கு நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கும் ஏற்பட்டுத்தப்பட்ட ஒரு பெரிய திட்டம்





இது. அரிசி, கோதுமை இவற்றின் அளவை மாறுதல் செய்கின்ற பொறுப்பு மாவட்ட கலெக்டர்களிடம் இருக்கிறது. அதுவும் உண்மையாகவே நெருக்கடியான இந்த இரண்டு, மூன்று மாதங்களில் தமிழகத்து மக்கள் ரொம்பவும் சிக்கனமாகவும், மிகுந்த கடமை உணர்ச்சியுடனும் நடந்துகொண்டு அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டும்......

Dr. H. V. HANDE : On a point of order, Sir, In a call attention notice, the Member who calls attention is not allowed to deviate from the text of the notice. Is the Minister who reads a statement at liberty to deviate from the statement ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : In reply to a call attention notice, a Minister can make even an oral statement or read from a prepared statement. The hon. Member is not familiar with the procedure because he is new to the House. The hon. Minister has got the power to make remarks supplementing the prepared statement or he can give even the whole answer orally. Whatever it is, it is only to help us.

Dr. H. V. HANDE : The member who calls attention is not given the opportunity.

(Deputy Speaker sounded the gong).

The Hon. Thiru K. A. MATHIALAGAN : The subject is about my statement.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டு பேர்களும் எழுந்து பேசிக்கொண்டிருந்தால் எப்படி முறை ? அமைச்சர் அவர்கள் பதில் கொடுக்கும்பொழுது விளக்கம் கொடுக்கிறார்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஆன் ஏ பாயிண்டு ஆப் ஆர்டர். எனக்கு அமைச்சர் அவர்கள் பதில் கொடுக்கிறார்கள். தலைவர் அவர்கள் பதில் கொடுக்கவேண்டும். I asked you to give the ruling. But he gave the ruling. Therefore I started replying to him.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் ரூலிங் கொடுக்கவில்லை. நிலைமையை விளக்குகிறார். அமைச்சர் அவர்களுக்கு எழுத்து மூலமும், வாய்மொழி மூலமும் பதில் கொடுப்பதற்கு உரிமை இருக்கிறது.

Dr. H. V. HANDE : My point is that we should also be given the freedom. நாங்கள் காலிங் அடென்ஷன் நோடீஸ் கொடுக்கும்பொழுது நாங்கள் கொடுத்தபடி அப்படியே கம்ப்ளீட்டாக எடுத்துக் கொள்வதில்லை. அதிலே நிறைய பாய்ண்ட்ஸ் விட்டுப்போய்விடுகின்றன. அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்படும் உரிமைகளும், சலுகைகளும் மற்ற உறுப்பினர்களுககும் கொடுக்கலாம் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதிலே ஒன்றும் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. அதற்கு விதிமுறைகளை மாற்றினால் தான் சரியாக இருக்கும்.

The Hon. Thiru K. A. MATHIALAGAN : I have no power to give a ruling like the Hon. Deputy Speaker. I just wanted to explain because Dr. Hande had been a Member of the other House till recently. He is more concerned with points of order

than with the subject. I am making a very important statement which involves the feeding of millions of people and he is not very serious about it. He is more serious about raising the point of order.

Dr. H. V. HANDE: The Hon. Minister is making an imputation This is a very important subject. If it is a frivolous subject, I would not even listen to what he is saying. I am really shocked to be told that I am frivolous. He must have gone off the track. நான் என்ன சொல்கிறேன் என்றால் எங்களுக்கு நிறைய விஷயம் இருக்கிறது. நாங்களும் கேட்பதற்கு உரிமை கொடுக்க வேண்டும். அமைச்சர் அவர்களுக்கு கொஞ்சம் கோபம் வந்துவிட்டது....

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் அறிந்துகொள்வதற்காகத் தான் விளக்கம் கொடுக்கிறோம். நான் தங்களைப் பார்த்துக்கொண்டே சொல்கிறேன். அதனால் தான் அவர்கள் கேட்கிறார்கள். நான் கீழே குனிந்தபடியே மனதில் நினைத்ததை படித்துக்கொண்டே போகலாம். அமைச்சர் அவர்களுக்குப் படிப்பதற்கும் உரிமை இருக்கிறது, வாய்மொழி யாக விளக்கம் கொடுப்பதற்கும் உரிமை இருக்கிறது. காலிங் அடென்ஷன் நோடீஸ் ஆகட்டும், மற்றவைகள் ஆகட்டும், அப்படித் தான். இவ்வளவு நேரம் இதைப்பற்றி விவாதித்திருக்க வேண்டியதில்லை.

நிலைமை என்னவென்றால், ஸ்டாசூடரி ரேஷன் பொறுத்தவரையில் எந்தவிதமான மாறுதல்களும் ஏற்படப்போவதில்லை. குடும்பக் கார்டு அமுலிலுள்ள இடங்களில் ஓரளவுக்கு அடிகுவேட் குவான்டிடி கொடுத்துக் கொண்டு வருகிறோம். வெளியில் விலை ஏறாமல் இருப்பதற்காகத் தான் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அதுவும் $1\frac{1}{4}$ கோடி மக்களுக்குக் கொடுத்துக்கொண்டு தான் வருகிறோம். அதுவும் இந்த மாதங்கள் கொஞ்சம் நெருக்கடியான மாதங்கள், மக்கள் சிக்கனமாக இருந்து ஒத்துழைக்கவேண்டும். மேட்டூர் அணைக்கட்டிலிருந்து கொஞ்ச நாட்கள் தாமதமாகத் தான் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. நடவும் கொஞ்சம் காலதாமதமாக நடப்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடியான மாதங் களில் நிலைமையை கொஞ்சம் நாம் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அதே மாதிரி வட ஆற்காடு மாவட்டத்திலும் பருவ நிலை சரியாக இல்லை என்று பல கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. உணவுப் பொருள்களை பயன்படுத்துகிறவர்கள் கொஞ்சம் சிக்கனமாகவும் ஜாக்கிரதையாகவும் இருந்து, ஒத்துழைக்கவேண்டும். ரேஷன் அளவில் எந்தவிதமான மாறுதலும் செய்யப்படவில்லை. எங்கும் ரேஷன் அளவு குறைக்கப்படவில்லை. இந்த காரியங்களை மாவட்டங்கள் தோறும் சரியாகவும், சீராகவும் நடத்தி, விநியோகம் சரிவர நடை பெற்றுக்கொண்டு வருகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

* **திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, 1,200 கிராம் கொடுக்கப்பட்டது. அதில் 200 கிராம் குறைக்கப்பட்டது. எங்கள் இராஜபாளையம் பகுதி மிகவும் வரட்சியான பிரதேசம். வெளி மார் கெட்டில் அரிசியினுடைய விலை அதிகமாக இருக்கிறது. 200 கிராம கோதுமை, சோளம், மைதா கொடுக்கிறார்கள். ஆனால், கொடுக்கிற பொருளின் விலையையும், தரத்தையும் எங்கள் பக்கத்தில் உள்ள நிலைமை யைக் கொஞ்சம் பார்க்கவேண்டும். சோளம் ரொம்ப மோசமாக உப யோகப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது......

**மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதி லைப் பற்றி ஏதாவது விளக்கம் வேண்டுமானால் கேளுங்கள். மற்றபடி பேசிக்கொண்டு போகக்கூடாது.



**திரு. ஏ. அ. சுப்பராஜா:** அதைச் சார்ந்த விஷயத்தைத் தான் சொல்கிறேன். அவுட்டர் மார்கெட்டில் விலை குறைவாகவும், நமது நியாயவிலைக் கடையில் விலை ஜாஸ்தியாகவும் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. கோதுமை சோளம், மைதா கொடுப்பது ஓரளவுக்கு நல்லது தான். நல்ல தரம் உள்ள கோதுமை, சோளம் கொடுக்கவேண்டும். விலை குறைவானதும் தரமானதுமான பொருள்களைக் கொடுக்கவேண்டு மென்பதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனையை ஏற்கனவே கவனித்து, அதற்கான நட வடிக்கை எடுத்து, கூடுமானவரையில் தரமான பொருள்களை சீராக விநியோகிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும், அதில் ஏதேனும் குற்றங் குறைகள் இருந்தால், அதை நிவர்த் திப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

### (iii) நெல்லை மாவட்டம் உடன்குடி, கொட்டங்காடு பகுதியில் தீ விபத்தும் நிவாரண நடவடிக்கைகளும்.

**திரு. டி. மார்டின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, நெல்லை மாவட்டத்தில் சாத்தானகுளம் தொகுதியிலுள்ள உடன் குடிப் பஞ்சாயத்தில் கொட்டங்காடு பகுதியில் 1968 ஜூன் மாதம் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் 300-க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்தும் பெரும் பொருட்சேதம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டவர்கள் பெருந்துன்பம் அனுபவிக் கின்ற காரணத்தினால் தீ நிவாரண நடவடிக்கைகள் உடனடியாக எடுக்க வேண்டிய அவசியம்பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

The Hon. Thiru K. A. MATHIALAGAN: Sir, there was a fire accident on 9th July 1968 in Kottangadu and Muthukrishnapuram hamlet of Udangudy village, Tiruchendur taluk in Tirunelveli district. The Collector has incurred an expenditure of a sum of Rs. 8,400 towards relief measures for the victims in anticipation of sanction of the Board of Revenue. The Board has since sanctioned the above expenditure and ratified the Collector's action.

### 5. அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நம்பிக்கையில்லாத் தீர் மானத்தின் மீது விவாதம் தொடரும். உறுப்பினர் திரு. எல். கணேசன தன்னுடைய உரையைத் தொடர்ந்து பேசுவார்கள்.

**திரு. எல். கணேசன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய முந்தைய நாள் உரையின் தொடர்ச்சியாக, இன்று சில கருத்துக்களை சொல்ல முன்வருகிறேன். சாத்தான் வேதம் ஓதுகிறது என்பார்கள். அதுபோல காங்கிரஸ் நண்பர்கள் இப்பொழுது அடக்கு முறையைப் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். கருப்புக் கொடி காட்டும் சாக்கில், கலாட்டா, கலவரம் செய்கிறார்கள். அப்படி கருப்புக் கொடி காட்டுவது ஜனநாயக உரிமை என்கிறார்கள். அதையும் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளுகிறது. ஆனாலும், அவர்கள் மிகவும் கயனித்தன்மையில் நடந்து கொள்ளுகிறார்கள். உதாரணமாக, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் எங்கள் பேராவூரணிக்கு வந்து, ஓய்வு விடுதியில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும்போது, காங்கிரஸ் தொண்டர்கள் கருப்புக் கொடி பிடிக்கிறோம் என்ற போர்வையில், கதவைத் திறந்துகொண்டு அமைச்சரைத் தாக்க முற்பட்டார்கள். அந்த வகையான ஜனநாயகத்தை எப்படி அனுமதிக்க முடியும். குழப்பத்தை

உண்டாக்கவேண்டும், கலாட்டா செய்யவேண்டும் என்கிற அடிப்படையில், பேசிவருகிறார்கள். இடத்திற்கு இடம் நேரத்திற்கு நேரம் பச்சோந்தி போல் மாறிமாறி பேசிவருகிறார்கள். கிராமங்களில் உழவர்களிடம் போய், நீங்கள் உற்பத்தியாக்கும் நெல்லுக்குக் குறைந்த விலைதான் கொடுக்கிறார்கள் " என்கிறார்கள். ஆனால், இந்த காங்கிரஸ் நண்பர்கள்......

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** " பச்சோந்தி போல் " என்று கூறுவது பார்லிமெண்டரியா என்பதற்கு தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பச்சோந்தி போல் என்பதில் தப்பு ஒன்றும் இல்லை.

**திரு. எல். கணேசன் :** அதே சமயத்தில், நகர்ப் புறங்களில் வரும்போது, " எங்கே படியரிசித் திட்டம், படியரிசித் திட்டம்," என்கிறார்கள். அங்கே கிராமத்தில் அவர்களுடைய நெல்லில் விலையை உயர்த்த வேண்டும் என்று சொல்லும்போது, அரிசியின் விலையும் உயரத்தான் செய்யும் என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் நம்முடைய அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் பேசிவருகிறார்கள், என்று குற்றம் சாட்டமாட்டேன். ஆனால் அவர்கள் அப்படிப்பட்ட நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே படியரிசித் திட்டம் கொடுப்போம். ஆனால், படியரிசித் திட்டத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்க அவர்களுக்கு அருகதை இருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். " கொடுங்கள் " என்று கேட்க அவர்களுக்கு யோக்கியதை இருக்கிறதா என்பதைப் பார்த்தால், நிச்சயமாக, தெளிவாகச் சொல்வேன், இல்லை. அவர்கள் காலத்தில் ஆறு அவுன்ஸ் அளந்து போட்டார்கள். ஆறு அவுன்ஸ் ஆட்சி என்று பெயர் எடுத்தவர்கள். பசிக்கிறது என்று மக்கள் கேட்ட நேரத்தில், அதைப் போக்க அரிசிப் பற்றுக்குறையை நீக்க வழி கண்டு பிடிக்காமல், "வாரத்திற்கு ஒரு நாள் பட்டினி போடுங்கள் " என்று அலட்சியமாகப் பேசியவர்கள், அதோடு மட்டுமல்லாமல், " அரிசி கிடைக்கவில்லை " என்றால், பரவாயில்லை, எலி நிரம்ப இருக்கிறது, அதைச் சாப்பிடுங்கள் " என்று சொன்னவர்கள் நம் அருமைக் காங்கிரஸ் நண்பர்கள். இன்றைக்கு தமிழக அரசு, படி அரிசி போடுகிறோம் என்று வந்தவுடன், " படியரிசி," " படியரிசி " என்று கேட்கிறார்கள். கொடுக்க ஏற்றுக் கொண்டோம், முடியவில்லை ; நிலைமைகளைச் சொல்லுகிறோம். படியரிசி கொடுக்கவில்லை என்கிறார்களே அருமை காங்கிரஸ் நண்பர்கள், காஷ்மீருக்கு மானியம் கொடுக்கும் மத்திய சர்க்கார், தமிழக அரசு கேட்கும் மானியத்தைக் கொடுத்தால், படியரிசித் திட்டத்தை விரிவு படுத்தலாம். அதைச் செய்ய அவர்கள் தயாராக இல்லை. அறிஞர் அண்ணா அவர்கள், " நீங்கள் பெறவேண்டிய வட்டியைத் தள்ளி வாங்கிக் கொள்ளுங்கள் " என்று கேட்டால், அதைக் கூட, முடியாது என்று சொல்கிறார்கள். படி அரிசித் திட்டத்தை விரிவாக்க வேண்டும். எங்கள் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும், நிதி நெருக்கடியாக இருக்கிறது. எனவே, உங்களுக்குக் கொடுக்கவேண்டிய வட்டியைத் தள்ளிக் கொடுக்கிறோம் என்றால், அதைக் கூட மத்திய சர்க்கார் கேட்கமாட்டேன் என்கிறது. எப்படி மத்திய சர்க்கார் நிதிகள் கொடுக்கிறது. இப்பொழுது, மத்திய சர்க்கார், வட்டிக் கடை நடத்துவது போல, வெளி நாடுகளிலிருந்து கடன்களை வாங்கி, அதே பணத்தை மாநிலங்களுக்குக் கொடுத்து வாங்குகிறது. அந்தத் தொகைக்கு வட்டியைத் தள்ளி வாங்கிக் கொள்ளுங்கள் என்றால் அதைக் கூடச் செய்யத் தயாராக இல்லை நம்முடைய மத்திய சர்க்கார். மொரார்ஜி தேசாய் என்ன சொல்லுகிறார் ? உங்கள் மாநிலத்தில் படியரிசி போட்டால் என்ன, போடாவிட்டால் என்ன. வேறு செயல்படும் திட்டங்களை உருவாக்கினால் என்ன, உருவாக்காவிட்டால் என்ன, எனக்குத் தேவை என்னுடைய வட்டி, வட்டி என்று சொல்கிறார்கள். ஷேக்ஸ்பியர் நாடகத்தில், மார்செண்ட் ஆப் வெனிஸ் நாடகத்தில் வரும் ஷைலக், அந்தோனி செத்தாலும் பரவாயில்லை, அவனுடைய இதயத்திலிருந்து ஒரு பவுண்ட் தசையைக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியது போல, தமிழ்





நாடு எக்கேடு கெட்டுப் போனால் என்ன, எனக்கு வேண்டியது வட்டி, வட்டி என்கிறார் மொரார்ஜி தேசாய். ஷைலக்குக்கும் இவருக்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. காங்கிரஸ் நண்பர்கள், எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார்மீது பழி போடுகிறீர்கள், என்று குறை சொல்கிறார்கள். ஆனால் இம்மாதிரியான ஓரவஞ்சனையான போக்குகளை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. நம் அருமை காங்கிரஸ் நண்பர்கள் இதற்கெல்லாம் நன்றி தெரிவிக்காவிட்டாலும் கூட, தமிழக அரசினிடம் நம்பிக்கையாவது காட்டவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உணவுத் துறை, விவசாயத் துறை சம்பந்தப்பட்ட வரையில், தமிழக அரசு விரைந்து செயல் பட்டிருக்கிறது. அது சம்பந்தமான புள்ளி விவரங்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழக அரசு உணவுத் துறையில், முக்கியமாக அதிக விளைச்சல் தரும் நெல் ரகங்களை விரிவாக்கி உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் செய்திருக்கிறார்கள். பாசன வசதிகளைப் பெருக்கி, அதன் மூலமாக உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் செய்திருக்கிறார்கள். 1966–67-ல் அதிக விளைச்சல் ரக நெல் 5·28 லட்சம் எக்கரில் தான் போட்டிருந்தது. ஆனால், 1967–68 முதல் பருவத்திலேயே 8·65 லட்சம் எக்கராவில் போடப்பட்டிருக்கிறது. 1968–69-ல் 22 லட்சம் எக்கரில் பயிரிட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அதே போல ஒரு போக நிலங்களை, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில், ஒரே போகமாக இருந்த நிலங்களை இருபோக நிலங்களாக மாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு 6 லட்சம் எக்கராக்களை இருபோகம் ஆக்கும் முயற்சியில் தமிழக அரசு வெற்றி கண்டிருக்கிறது? இன்னும் சாத்தனூரில் 5,700 எக்கரும் கிருஷ்ணகிரியில் 10,270 எக்கரும், மஞ்சளாற்றுப் பகுதியில் 1,000 எக்கரும், சென்ற ஆண்டு இருபோகமாக்கும் திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறது. விவசாயிகளின் நன்மையைக் குறித்து, திருநெல்வேலி மாவட்டத்தில் ராமநதி, கடனா திட்டத்திற்காக தொடக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. வைகைக் கால்வாய் திட்டம் ரூ. 39·5 லட்சம் அளவில் உருவாக்கப்பட்டுள்ளது. கல்லணை, காவிரிக் கால்வாய்களில் 64·48 லட்சம் ரூபாய் அளவில் வேலைகள் செய்யப் படுகின்றன. நான் அந்தப் பகுதியிலிருந்து வருகிறவன். 4,000 க்யூசெக்ஸ் தண்ணீர் விடக்கூடிய அளவில் திட்டம் இருந்தும், வாய்க்கால் தூர்ந்து சென்ற ஆண்டு வரை 3,500 க்யூசெக்ஸ்தான் விடப்பட்டது. இப்பொழுது, படிந்து இருந்த வண்டலை எட்டு மைல் அளவிற்கு எடுத்ததன் காரணமாக, 3,800 க்யூசெக்ஸ் தண்ணீரை விடக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

அப்படி எல்லா வகைகளிலும் தமிழக அரசு நிச்சயமாக விவசாயிகளுக்கு நன்மைகளைச் செய்து வருகிறது. என்னுடைய தொகுதியில் 2,000 எக்கரா புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்காகப் பொதுப்பணித் துறை அமைச்சருக்கும், தமிழக அரசுக்கும் அந்தப் பகுதி மக்கள் நெஞ்சார நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

கழிவு நீர் கண்ணாறு சம்பந்தப்பட்டவரையில், பம்பிங் மூலமாக 22 லட்சம் எக்கராவைப் பாசனத்திற்கு கொண்டு வர ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இந்த வகைகளிலெல்லாம் விவசாயிகளுக்கு நன்மைகளைச் செய்து வருகிறார்கள்.

புஞ்சை நிலங்களுக்குத் தீர்வையை ரத்து செய்திருக்கிறது தமிழக அரசு. விவசாயிகளிடம் அனுதாபம் காரணமாக, சென்ற ஆண்டு, இரண்டாம் போகத்திற்கு தீர்வையை ரத்து செய்திருக்கிறது. இப்படி எத்தனையோ நன்மைகளை விவசாயிகளுக்கு செய்து, உற்பத்தியைப் பெருக்கி வரும் நேரத்தில், அருமை காங்கிரஸ் நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும், ஏதோ இவர்கள் விவசாயிகளுக்கு நன்மைகள் செய்துவிடுபவர்கள் போலவும், கொள் முதல் விலையைக் கூட்டிக் கொடுக்கவில்லை சர்க்கார் என்றும் குறை சொல்லுகிறார்கள். கொள்முதல் விலையைக் கூட்டினால் யாருக்கு லாபம் கொள்முதலில் 20 சத விகிதம் தான் வருகிறது. மீதம் 80

சத விகிதம் அவர்களிடமே தான் இருக்கிறது. அதே நேரத்தில் அது யாரைப் பாதிக்கிறது? குறைத்துக் கொடுப்பதாகவே வைத்துக் கொண்டாலும் கூட, அது யாரைப் பாதிக்கும்? விவசாயிகளைப் பாதிக்கவில்லை. ஏன்? 90 சதவிகிதம் விவசாயிகள் தங்களுக்கு இருக்கும் கடன்களை அடைக்க, வேறு செலவினங்களை சமாளிக்க, அறுவடை ஆனவுடனேயே, களத்து மேட்டிலேயே, தங்களுடைய நெல்லை விற்று விடுகிறார்கள். அவர்கள் சேமித்து வைக்கவில்லை. அப்படிப் பட்ட நிலையில், பெரும் நிலப் பிரபுக்களுக்குத்தான் அது சாதகமாக இருக்கும். அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் பெரும் நிலப் பிரபுக்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் இதையே வற்புறுத்தி வற்புறுத்திச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். நண்பர் திரு. க. ராமமூர்த்தி அவர்கள் என்று நினைக்கிறேன், ஒரு அருமையான வாசகத்தை ஆங்கிலத்திலே,

மு.ப. 10-30 "There will be an end for everything and therefore there will be an end for D.M.K. rule" என்று சொன்னார்கள். அதையே நான் திருப்பி, Whether the end of D.M.K. is in the distant future, or in the distant, distant future, is debatable but one thing is there. It is irrefutable that the Congress had already its end. Therefore if there is end, there is no beginning. The Congress is dead and buried, buried several fathoms deep. The Congress, as far as our State is concerned, is dead and gone and gone for ever. என்று சொல்லி இது வாதத்தினுடைய மறு பகுதி என்ற காரணத்தால் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று கருதி விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு 1964 அக்டோபரிலும், 1966 ஆகஸ்டிலும் ஆக இரண்டு முறைகள் இந்த அவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து விவாதித்ததை மேற்கோளாக வைத்து ஓரிரு கருத்துக்களை மன்றத்தின்முன் வைக்கிறேன். எனக்கு முன்பு பேசிய அருமை நண்பர்கள் காங்கிரஸின் பேரில் ஒரு சில குற்றச்சாட்டுகளைக் கூறியதற்கு முதன் முதலில் பதிலைக் கூறிக்கொள்கிறேன். ஆளும் கட்சி நண்பர்கள் பேசும்போது, "காங்கிரஸ் செத்துவிட்டது, இனி பிழைக்காது" என்று அருமையான ஆங்கிலத்திலே ஒப்பாரி வைக்கிற மாதிரி கூறினார்கள். ஒருவேளை இந்த ஒப்பாரியைக் கண்டு பொதுமக்கள் என்ன நினைப்பார்களோ, எங்களைப் பொறுத்தவரையில் அனுதாபப்படுகிறோம், பரிதாபப்படுகிறோம் என்றுதான் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பண்பாட்டிற்கு உறைவிடமாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த மாதிரியாக இந்த மன்றத்தில் பேசுகிறார்கள் என்று சொன்னால், வெளியிலே எந்த முறையில் பேசுவார்கள் என்பதை நான் கூறத் தேவையில்லை. விவாதத்துக்குரிய விஷயங்களை மீண்டும் மீண்டும் கிளப்புவதோ, தூண்டுவதோ உசிதமல்ல என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை தொடர்கிறேன்.

படி அரிசி திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும், எல்லோருக்கும் படி அரிசி போடப்பட வேண்டும் என்பதைப் பற்றி நாங்கள் பேசும் நேரத்தில், "படி அரிசித் திட்டத்தைப்பற்றிப் பேச இந்தக் காங்கிரஸ்காரர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது?" என்று கண்டித்துப் பேசுகிறார்கள். எங்களுக்கு அதைப்பற்றிப் பேச என்ன அருகதை இருக்கிறதென்றால், நாங்கள் பொது மக்களின் வாக்குகளைப் பெற்று, பொதுமக்களுக்காகப் பேசுவதற்காக இங்கு சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் நீங்கள் பெற்றிருக்கின்ற வாக்குகளைவிட அதிகமாகப் பெற்றிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான், **லட்சக்கணக்கான மக்களின் வாசகங்களைப் பெற்றதன் அடிப்படையில்தான்** படி அரிசி எல்லோருக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று கூறுகிறோம்.

படி அரிசித் திட்டத்திற்காக ஏறக்குறைய 8 கோடி ரூபாய் செலவாகிறது இந்த நிதி பொதுமக்களின் நிதியிலிருந்து செலவழிக்கப்படுகிறது. ஆகவேதான் எல்லா மக்களின் சௌகரியங்களுக்காகவும், எல்லா மக்களுக்





கும் படி அரிசி அளிப்பதுதான் நியாயமானது, தர்மமானது என்று கூறி, எல்லா மக்களுக்கும் படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டுமென்று மனிதாபிமான உணர்ச்சியின் பேரில்தான் நாங்கள் கேட்க நேரிடுகிறது. எங்கள் ஜில்லாவில் விலைவாசி உயர்ந்திருக்கிறது. எங்கள் பகுதி முதலிடம் கொடுக்க வேண்டிய பகுதி. ஆயினும், எங்கள் ஜில்லாவில் 1 படி அரிசி 1 ரூபாய் 82 காசுக்குப் போடுகிறோம் என்று சொன்னால், ஏன் அந்தப் பகுதியில் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று போடக்கூடாது என்றுதான் கேட்க விரும்புகிறேன். எங்கள் பகுதியில் சுமார் பத்து லட்சம் மக்கள்தான் வாழ்கிறார்கள். ஏன் அவர்களுக்குப் படி அரிசி போடக் கூடாது? ஒரு வேளை காங்கிரஸ்காரர்கள் அதிகமாக இந்தப் பகுதியில் வெற்றிபெற்று வந்துவிட்டார்கள் என்று காரணமா? அப்படி காரணம் என்றால், மக்களின் தீர்ப்பு கூறுவதற்கு இன்னும் சந்தர்ப்பங்கள் வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நண்பர் ஷைலாக்கை, திரு. மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு ஒப்பிட்டுப் பேசினார். திரு. மொரார்ஜி தேசாய் வட்டிக்கடை நடத்துவதைப் போலவும், ஷைலாக்கைப் போல் ஒரு பவுண்ட் பிளஷ் கேட்பதைப் போலவும் ஒப்பிட்டுப் பேசினார்கள். மத்திய அரசு வட்டி வாங்குவதைக் குறிப்பிடும் நேரத்தில், மாநில அரசு வட்டி வாங்குவதையும் சித்தரித்தால் பொருத்தமாக இருக்காது என்று மட்டும்தான் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு வட்டியைத் தள்ளிப்போட வேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்ளும் நேரத்தில், நாம் முனிசிபாலிட்டிகளுக்கு, விவசாயிகளுக்குத் தரும் கடனுக்கான வட்டியைக் குறைத்துத் தருவதில்லை, வட்டியைத் தள்ளிப்போடுவதில்லை. இன்று இருக்கும்படியான சமஷ்டி அரசாங்கத்திலே கடன் வாங்குவது, வட்டி தருவது என்பதெல்லாம் இன்றியமையாதவை என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எந்த அரசாங்கமானாலும், கடன் இல்லாமல் அன்றாட காரியங்களை நடத்த முடியாது. ஆகவே, நல்ல முறையிலே இதைக் குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்யய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூறிய குற்றச்சாட்டுகளுக்குப் பதில் கூறவேண்டியது என்னுடைய கடமையாகும். நேற்றைய தினம் பேசிய மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஆலடி அருணாசலம் அவர்கள் "மனச்சாட்சியிருந்தால், திராவிட முன்னேற்றக் கழக அரசுமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருப்பீர்களா? என்று கேட்டார். மனச்சாட்சி அத்தனையும் மொத்தமாக குத்தகையாக வைத்துக்கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மந்திரி சபையிலே உள்ளவர்கள் ஒருமித்த கருத்து கொண்டவர்களாக இருக்கிறார்களா என்பதை நண்பர் அவர்கள் தன்னுடைய நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கேட்டுக்கொள்ள வேண்டும். சீனியர் மந்திரிகள் ஓய்வுபெற்று புதியவர்கள் நியமிக்கப்படும் என்ற கருத்து வெளியிட்ட நேரத்தில் இரு மந்திரிகள் தங்களுடைய மாறுபாடான கருத்துக்களைத் தெரிவித்து பத்திரிகைகளில் அறிக்கை விட்டார்களே அது ஒருமித்த கருத்தா? ஒருவேளை இதையெல்லாம் கட்சி விவகாரம் என்று பதில் கூறிக்கொள்ளலாம். கட்சி விவகாரத்தைப் பற்றியெல்லாம் பல காரியங்கள் கோர்ட்டிலே இருக்கின்றன. விசாரணையில் இருக்கிற காரணத்தால் விவரமாகச் சித்தரிப்பதற்கு நான் தயாராக இல்லை. 'Something is rotten some where, என்று சொல்வார்கள். இந்த மாதிரியான குற்றச்சாட்டுக்களை கவனிப்போடு மூளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொழிலாளர் பிரச்சினையைப் பற்றியும், தொழில் கொள்கையைப் பற்றியும் எனக்குமுன் பேசியவர்கள் எடுத்துக்கூறினார்கள். இன்றையதினம் "இந்து" பத்திரிகையின் நிறுவனத்திலே கதவடைப்பு ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி முதலாளிகளுக்காக வக்காலத்து வாங்கியிருக்கிறார்களே என்று இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கூறினார். முதலாளிகளின் பக்கத்தில் காங்கிரஸ் இல்லை. ஆனால் எப்பொழுதும் நியாயத்தின் பக்கத்தில்தான் காங்கிரஸ் இருக்கிறது என்பதை அன்னாருக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். இந்து பத்திரிகை கதவடைப்பை ஏன் இந்த அரசு தீர்த்துவைக்கக் கூடாது, தொழிலாளர்களையும் முதலாளி

களையும் அழைத்துப் பேசி ஏன் தீர்வுகாணக்கூடாது என்று பொது மக்கள் ஆவலாக இருக்கிறார்கள். ஏனெனில் இந்து பத்திரிகை ஆங்கில ஏடுகளிலே ஒரு தலைசிறந்த ஏடாக இருக்கிறது என்ற காரணத்தால் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு ஒரு தடவை இம் மாதிரி ஏற்பட்டது. முதலாளிகள் உடன்பாடு காண்பதற்குத் தயாராக இல்லையென்று அப்பொழுது கூறப்பட்டது. மத்திய சம்பளக் கமிஷன் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டுமென்பது ஒரு காரணம். அரசாங்கம் முதலாளிகளையும், தொழிலாளர்களையும் கூப்பிட்டுப் பேசி தீர்வு காண்பதற்குத் துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் இந்த அரசாங்கத்திற்கும் பொறுப்பு உண்டு. இந்த அரசானது சரியான முறையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவில்லையென்று பகிரங்கமாக குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, லாட்டரி நடத்துவதைப் பற்றி முதுபெரும் அறிஞரும், ஆளும் கட்சியின் கூட்டுக் கட்சியின் தலைவருமான திரு. ராஜாஜி அவர்கள் "இந்த லாட்டரித் திட்டம் முறையற்றது, இது நியாயமானது அல்ல, இதைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டும்" என்று கூறியிருக்கிறார். ராஜாஜி அவர்கள் கூறுவதை நீங்கள் ஒத்துக்கொள்ளுகிறீர்களா ? அவர் உங்கள் கூட்டுக் கட்சியின் தலைவர் அல்லவா? அதற்குப் பதில் என்ன சொல்லப் போகிறீர்கள் ? லாட்டரி நடத்துவது ஏழை எளிய மக்களை ஏமாற்றுவதற்கான முறையாக இருக்கும் திட்டம் என்பதை இந்த அவைமுன் வைக்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி அதிகமாக எடுத்துக் கூற விரும்பவில்லை. உருப்படியான, நிலையான எகனமிக் பாலிசி இல்லாத காரணத்தால் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது, தாண்டவமாடுகிறது. உடனடியாக இதற்குப் பரிகாரம் காண வேண்டும்.

எங்கள் காலத்திலே 19 லைசென்ஸ்கள் வழங்கியிருக்கிறோம் என்று கூறுகிறார்கள். உங்களுடைய காலத்திலே எத்தனை தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டது என்பதைப் புள்ளிவிவரமாக கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் அரசாங்க நிர்வாகத்திலே இருக்கிற கற்றறிந்த வாலிபர்களுக்கும், உத்தியோகத்திலே இருக்கின்றவர்களுக்கும் வேலை வாய்ப்பு வசதிகள் கிடைக்கவில்லை. ரெவின்யூ டிபார்டுமெண்டிலே, என்ஜினியரிங் டிபார்ட்மெண்டிலே பீல்டுமேன் போன்றவர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். மேலும், வேலையிழந்த 600 இந்தி ஆசிரியர்களுக்கு இன்னும் வேலை வாய்ப்பு தேடித் தரவில்லை. கல்வி அமைச்சர் அவர்கள் வேலை கொடுக்கவில்லை. என்ஜினியரிங் டிபார்ட்மெண்டில் பீல்டுமேன் வேலையிழந்திருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் அவர்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். வேலையிழந்தவர்களுடைய பட்டியலை எங்கள் கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். ஆகவே, இந்தக் குற்றச் சாட்டுக்களுக்குப் பகிரங்கமாக பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த குற்றச்சாட்டு பொலிடிகல் சபரர்களுக்கு அரசியல் தியாகிகளுக்குப் பென்ஷன் வழங்குவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது என்பதாகும். அதுமாதிரி ஓய்வுபெறுகின்றவர்களுக்குப் பென்ஷன் வழங்குவதிலும் காலதாமதமாகிறது என்று சொன்னார்கள். காரணம் பைல்கள் அப்படி அப்படியே தூங்கிக்கொண்டிருக்கின்றன. அதைத் துரிதப்படுத்த வேண்டும். **Administrative delays** இருக்கின்றன. துரிதமாக அவற்றைப் பார்த்து அனுப்ப ஒரு காலக்கெடு நிர்ணயிக்கப்பட வேண்டும். அது இல்லாத காரணத்தினால் இன்று அவர்கள் பல கஷ்டங்களுக்கும், துயரங்களுக்கும் ஆளாகி வாடி வதங்குகிறார்கள் ; **bureaucracy is triumphant.**

அடுத்தபடியாக, நமது ஐ.ஜி. அவர்கள் மதுரையில் ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாகக் காங்கிரஸ்காரர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதாகத் தேர்தலுக்குச் சற்று முன்பு அந்த அறிக்கையை வெளியிட்டார்கள். அந்த மாதிரி உன்னத நிலையில் உள்ள



அதிகாரிகள் அறிக்கைவிடுவது பொருத்தமா ? அதை இவர்கள் கண்டித்து இருக்கிறார்களா ? அப்படி ஏன் வெளியிடப்பட்டது என்பதற்கு அவர்களிடத்தில் விளக்கமாவது கோரிப்பெறப்பட்டிருக்கிறதா ? அதற்குத் தக்க சமாதானம் கூறவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இத்தகைய முறையில் அதிகாரிகள் ஸ்டேட்மெண்ட் விடுவது அரசாங்கத்தின் மீதே பாதகமான விளைவை ஏற்படுத்தும் என்கிற குற்றச் சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஐ. ஜி. அவர்கள் அறிக்கை வெளியிட்டது முறைதானா என்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். காங்கிரஸ் அரசாண்ட காலத்தில் அப்போதிருந்த போலீஸ் கமிஷனர், ஐ.ஜி. போன்றவர்கள் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அறிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். அப்போது வெளியிடப்பட்ட அந்த அறிக்கைகளையும், இப்போது வெளியிடப்பட்டுள்ளதையும் பார்த்தால் நிறைய வேறுபாடுகள், முரண்பாடுகள் இல்லை என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** முன்பு நடந்ததை முதல் அமைச்சர் அவர்கள் இப்போது எடுத்துக் கூறுகிறார்கள். இது ஆங்கிலத்தில் சொல்வார்களே, **Pot calling the kettle black** அந்த அடிப்படையில் தான் இது ஒரு சமாதானமாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தவறான பழமொழியைப் பயன்படுத்துகிறார்கள். **Pot calling the kettle black** என்பது இவர்கள் இப்போது சொல்வதற்குத்தான் பொருத்தமாக இருக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஒரு வேளை நான் **Pot calling the kettle black** என்று சொன்னதை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையானாலும் சாத்தான் வேதத்தை ஓதுகிறது என்பதாக அந்தக் கட்சியில் சொன்னார்களே, அது இதற்குப் பொருத்தமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அரசியல் கட்சிகளுக்கிடையே இதுபோல மேலதிகாரிகள் எந்தவிதமான அறிக்கையும் வெளியிடக் கூடாது என்கிற உடன்பாடு செய்துகொள்ள காங்கிரஸ் கட்சி தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இடைமறிப்பதற்கு மன்னிக்கவேண்டும் ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சியில் உயர்தர அதிகாரிகள் இதுபோன்ற அறிக்கை வெளியிடுவதற்குத் துணிவு இல்லை. இப்போது திராவிட முன்னேற்றக் கட்சி வந்த பிறகு எந்த அளவுக்கு கட்சி சார்பாக வெளியிடுகிறார்களோ அப்படி வெளியிட்டது இல்லை என்பதை எனக்குத் தெரிந்த ஞாபகத்தில் கூறுகிறேன். இனிமேலாவது அது தடுக்கப்படவேண்டும் என்கிற உடன்பாட்டைக் காண வேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சி ஆதரவு கொடுக்கும் என்பதை என் கட்சியின் சார்பில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** காங்கிரஸ் கட்சி அகில இந்திய ரீதியில் அரசாள்கிறது. இனி எந்த இடத்தில் ஆட்சி நடந்தாலும் நிலைமை விளக்கத்திற்கோ, கருத்து விளக்கத்திற்கோ அதிகாரிகள் அறிக்கை விடுவதில்லை என்பதற்குக் காங்கிரஸ் கட்சி சம்மதித்தால் உட்கார்ந்து பேசலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதுதான் இப்போது இருக்கிற தகராறு எல்லாம். நல்லவேளை அகில உலகத்திற்கும் அவர் போகாமல் இருந்தது பற்றிச் சந்தோஷம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அகில உலகத்திற்கும் அவர் கட்சி போகவேண்டுமென்றுதான் விருப்பம். இப்போதைக்கு இதுவரை இருக்கலாம். இந்தியாவில் பல்வேறு இடங்களில் காங்கிரஸ் கட்சி அர

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 ஆகஸ்ட் 26

சான்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அந்த நிலை இல்லை ஆகவே என்னைப் பொறுத்தவரையில் நானே சொல்லிவிடலாம். ஆனால் திரு. கருத்திருமன் அவர்கள் அகில இந்திய காங்கிரசைக்கணக்கில் வைத்துக்கொண்டுதான் சொல்லவேண்டும். (சிரிப்பு).

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அடுத்தபடியாக இன்னொரு விஷயத்தைப்பற்றி நான் கூற விரும்புகிறேன். முன்பு நமது மதிப்பிற்குரிய உணவு அமைச்சராக இருக்கிற திரு. மதியழகன் அவர்கள் 1964-ம் ஆண்டு அக்டோபரில் இந்த மன்றத்திலே கூறிய சில கருத்துக்களை நான் தங்கள் மேலான கவனத்திற்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர்கள் பேசிய போது கூறியிருக்கிறார்கள், "சோறு கேட்டவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது" என்றார்கள்.

உங்களது ஆட்சியில் துப்பாக்கிப் பிரயோகம் நின்றுவிட்டதா ? துப்பாக்கிப் பிரயோகத்தை அப்படியே விட்டுவிட்டோம் என்று சொல்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

இன்னும் அன்றைக்கு திரு. மதியழகன் அவர்கள் தடியடியைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் பார்க்கவேண்டும். இந்த மாதிரி நிகழ்ச்சிகள் தங்களுடைய சிறப்பான ஆட்சியில் நடக்கவில்லையா? ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி நடந்தவற்றுக்கு என்ன சமாதானம் கூறப் போகிறீர்கள் என்று வருத்தத்தோடு எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, அன்றைக்கு முதல் அமைச்சராக இருந்தவர்களைப் பார்த்து திரு. மதியழகன் அவர்கள் கேட்டார்கள். "தலைமைப் பொறியாளராக இருந்த சுராஜுதீன் மீது வழக்கைப் பதிவு செய்து சார்ஜ் ஷீட் ஏன் போடவில்லை ? எத்தனை மாதங்களாகிறது" என்றார்கள்.

இன்றைக்கு சித்தாறு-பட்டணங்கால் பகுதியில் நடைபெற்ற ஊழல்களுக்கு சில என்ஜினியர்களைக் காவலில் வைத்து $1\frac{1}{2}$ வருஷங்களாகிறதே, ஏன் இன்னமும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை, ஏன் விசாரணையைத் தொடங்கவில்லை என்பதை மக்கள் சார்பாகக் கேட்பதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து, திரு. மதியழகன் அவர்கள் பேசும்போது "மகாதேவன் ஐ.ஜியா அருள் ஐ.ஜியா, அருள் அவர்களை அங்கே கொண்டு போவானேன். அருள் அவர்கள் ஏன் இந்த லஞ்ச ஊழல் குற்றங்களை விசாரிப்பதற்குப் போடக் கூடாது? ஏதாவது உங்கள் மீது குற்றம் கண்டுபிடித்துவிடுவார் என்கிற பயமா? அவரை ஏன் போடவில்லை?" என்று கேட்டார்கள். இன்றைக்கு அவர்கள் தங்கள் ஆட்சியைவிட்டே டெல்லிக்குப் போய் இருக்கிறார்கள். இதில் என்ன இருக்கிறதோ, எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்தியப் பேரரசினுடைய துப்பறியும் பிரிவில் மிக உயர்ந்த பதவிக்குச் சென்றிருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அவர் தம்முடைய விருப்பத்தின்படித் தானே சென்றார் ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தன்னுடைய விருப்பத்தின் பேரிலும், இந்த அமைச்சரவையின் வாழ்த்துக்களுடனும், நாட்டு மக்களுடைய நல்லெண்ணத்துடனும் அவர் சென்றிருக்கிறார்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மிக்க நன்றி. அடுத்தபடியாக அட்வகேட் ஜெனரலாக திரு. மோகன் குமாரமங்கலத்தை நியமித்ததுபற்றி, பப்ளிக் பிராசிக்யூடராக திரு. வி. பி. ராமன் அவர்களை நியமித்ததுபற்றி அவை மிகவும் முறை தவறியவை என்று வாதிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு இவர்களது ஆட்சியில் திரு. நாராயணசாமி முதலியாரை நியமித்திருக்கிறார்களே, இவர்களுடைய கட்சிக்காக வாதிட்டவர் என்பதனாலா இந்தப் பதவியைப் பரிசாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று கேட்கிறேன்.

1968 ஆகஸ்ட் 26]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் துண்டு துண்டாகப் பல விவரங்களை எடுத்துப் பேசுகிறார்கள். அதில் ஒன்றும் சரியானது அல்ல.

அப்போது நான் கூறியது மகாதேவனுக்கு ஐ.ஜி. பதவி கொடுத்து, அடிஷனல் ஐ.ஜி. என்று அருளை ஏன் போட்டார்கள் என்பதுதான்.

அடுத்து, அட்வகேட் ஜெனரலாக திரு. மோகன் குமாரமங்கலத்தைப் போட்டதுபற்றி எங்களுக்கு ஆட்சேபனை கிடையாது. நான் அப்போது எழுப்பிய ஆட்சேபனை எல்லாம், வழக்கமாக ஹைகோர்ட்டில் இருந்து பானல் ஆப் நேம்ஸ் வர, அதில் இருந்து எடுப்பது என்கிறமுறையைப் பின்பற்றாமல் இங்கிருந்தே இவர்களே தீர்மானித்து பெயரை அனுப்பினது முறையா என்பதுதான். அவர்கள் பெயரை அனுப்பியிருந்து இவர்கள் பொறுக்கியிருந்தால் அந்தக் குற்றச்சாட்டுக்கே இடமிருந்திருக்காது. அதைச் சொல்லி, இதைச் சொல்வது விவாதத்திற்குப் பயன்படுமே தவிர சாரம் உடையதாக ஆகாது.

**மாண்மிபுகு திரு. சி. என். அண்ணாதுரை :** அட்வகேட் ஜெனரலாக திரு. நாராயணசாமி முதலியார் அவர்களை நியமித்தது அவர்கள் இந்தக் கட்சிக்காகப் பல முறைகள் வாதாடியிருக்கிறார்கள் பல வழ்க்குகளிலே, அதற்குப் பரிசா என்று கேட்டார்கள். அப்படியானால் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திரு. வி. பி. ராமன் அவர்களை நியமித்தது, அவர்கள் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களுக்கு வாதாடியதற்காகப் பரிசாக இருந்தால், இது அவர்களுக்குப் பரிசாக இருக்கலாம். உண்மையிலேயே அது திரு. வி. பி. ராமனுக்குப் பரிசல்ல, இது இவர்களுக்குப் பரிசல்ல. இரண்டு பேர்களுமே வழக்குகளுக்குத் தனியாகப் பணம் வாங்கிக்கொண்டார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** விளக்கத்திற்கு நன்றி. இப்பொழுது முதலமைச்சராக இருக்கிற பெரியார் அவர்களே கூறியிருக்கிறார்கள், பெரியார் என்றால் ராமசாமிப் பெரியார் அல்ல, வக்கீல்கள் பீஸ் வாங்குவது சாதாரணம் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** முன்பு திரு. மதியழகன் அவர்கள் பேசியபொழுது, இது சரியான எதிர்க்கட்சிக்காரர் பேசுகிற பேச்சா என்று முன்னாள் முதலமைச்சர் சொன்னார்கள். நாட்டுடைய எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் அதே மாதிரித்தான் பேசுகிறார்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் சொன்னதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அதற்காக நான் பாராட்டுகிறேன் ஆனால், அவர்கள் செய்த தவறை நீங்களும் செய்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** காலம் கடந்தாகிலும் அவர் செய்தது தவறு என்று சொன்னதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அவர் செய்தது தவறு என்று நான் என்னைப் பொறுத்தவரையில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தவறு செயவது மனித இயல்பு. இவர்கள் 100-க்கு 80 செய்கிறார்கள் என்றால் அவர் செய்தது 100-க்கு 10 தான் இருக்கும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கணக்குப் போட்டு அவர்களுடைய தலைவரை அவர்கள் காப்பாற்ற முயன்றதற்காக நன்றி.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அட்வகேட் ஜெனரல் நியமித்தால் அவர்தான் சாதாரணமாக ஆஜராவது என்பது சட்டத்திலே உள்ள சம்பிரதாயமாக இருக்கிறது. ஆனால் மெடிக்கல் காலேஜ் அட்மிஷன் சம்பந்தமாக அட்வகேட் ஜெனரல், அவர்களைப்பற்றி நன்றாகத் தெரிந்திருக்கிறார்கள். அவர்களைப் போடாமல் வேறு வழக்கறிஞரை குறிப்

பாக பாரிஸ்டரை நியமனம் செய்து பணமும் கொடுத்திருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே சிக்கனம், சிக்கனம் என்று சொல்கிறோம். மறு பக்கத்திலே ஊதாரித்தனமான செலவும் இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். திரு. கோகுலகிருஷ்ணன் என்பவரை பப்ளிக் பிராஸிகியூட்டராக நியமித்திருக்கிறார்கள். இப்படி அரசாங்க வேலைகளிலே பாரபட்சம் நடக்கிறது, இது சரியா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே 3 உறுப்பினர்கள் தான் இருந்தார்கள். 4 உறுப்பினர்களாக நியமித்துக் கொள்வதற்கு ஆட்சேபனை தெரிவித்தார்கள். அதைப் பற்றிக் கூற விரும்பவில்லை. தென்காசி உபதேர்தலுக்கு முன்பே 2 பேர்களை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மெம்பர்களாக நியமித்திருப்பது உள்நோக்கம் கற்பிப்பதாக நான் கருதுகிறேன். இது மாதிரித்தான் நடந்துகொண்டு வருகிறது. . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினர்களைப் போடுவதற்கும் தென்காசித் தேர்தலுக்கும் சம்பந்மில்லை. அவர்களுடைய கட்சிக்காரர்கள் தேர்தலிலே இதைப் போன்று எடுத்துச் சொல்லி அந்த இரண்டு உறுப்பினர்களுடைய வகுப்பார்களின் வாக்குகளை எங்களுக்கு வாங்கிக் கொடுத்திருந்தால் அதற்காக. நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இன்னொரு முக்கியமான விஷயத்தைப்பற்றியும் கூற விரும்புகிறேன். முன்பு எஸ்.எஸ்.எல்.ஸி. கேள்வித்தாள் எல்லாம் வெளியானதுபற்றி இந்த மன்றத்திலே பல ஆட்சேபனைகள் எல்லாம் எழுப்பப்பட்டன. கடந்த தடவை பி.யு.சி. கேள்வித் தாள்கள் இந்த யுனிவர்சிடி ஆரம்பித்து 112 ஆண்டுகளாக இல்லாத முறையில் வெளியாகிவிட்டது. அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எஸ்.எஸ்.எல்.சி.-யைப் பொறுத்தவரையிலும் அது அரசாங்க இலாகாவைச் சேர்ந்தது. சென்ற ஆண்டு வந்தது, இந்த ஆண்டு வெளிவராமல் இருக்கக்கூடிய முறையில் அதற்கு இடம் கொடுக்காமல் வேண்டிய தற்காப்பு முறைகள், நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன. பி.யு.சி.யைப் பொறுத்த வரையில் முழுப் பொறுப்பும் பல்கலைக் கழகத்திடம் இருக்கிறது. வெளிவந்த குறிப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதுபற்றித் துணைவேந்தர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பல்கலைக் கழகத் துணைவேந்தர் கொடுத்த குறிப்புகளிலிருந்து இரண்டு பேர்கள் இது சம்பந்தமாக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அது பற்றி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அப்படியானால் ரீ-எக்ஸாமினேஷன் ஏன் வைக்கவில்லை ? வைத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். மற்ற இடங்களிலே உள்ளவர்கள் இங்கே இப்படி ஆகிவிட்டதால் மெட்ராஸ் யுனிவர்சிடியை சேர்ந்தவர்கள் அதிகமாக மதிப்பெண்கள் வாங்கிவிட்டார்கள் என்ற ஆட்சேபனை எழுப்பக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எலக்ட்ரிஸிடி போர்டிலே ஒரு நியமனம் நடந்திருக்கிறது. செங்கற்பட்டிலே சூப்பரன்டெண்டெண்டிங் எஞ்சினியர் பேரிலே பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அவர்கள் சூப்பரன்டெண்டெண்டிங் எஞ்சினியராக இருந்தபொழுது காஞ்சிபுரத்திலே தங்குவதற்குப் பதிலாக, அடிக்கடி சென்னைக்கு வருவதாகவும் தாக்கீது வந்தது. அதோடு அவர் அதிகமாக டிரவாலிங் அலவன்ஸ் வாங்கியதன் காரணமாக, ஸீலிங் லிமிட். ஒன்று வைக்கப்பட்டதாகத் தெரிகிறது. விழுப்புரம், பாண்டிச்சேரி போன்ற பல இடங்களில் பல நாச நஷ்டங்களுக்கும் அவர் காரணமாக இருந்தார் என்றும், தாமல் பகுதியிலே ஒரு டிரான்ஸ்பார்மர் எரிந்ததாகவும், அதேமாதிரி காஞ்சிபுரத்திலே எரிந்ததாகவும், அவர் கீழே இருந்த டெபுடி சீப் அக்கவுண்டண்ட் 15 ஆயிரம் ரூபாய் கையாடல் செய்ததாகவும் பல குற்றங்கள் இருக்கின்றன. அவர்களைவிட சீனியராக ஒரு உத்தியோ



கஸ்தர் இருந்தும் அவரை ஈரோட்டிலே போட்டுவிட்டு, அவரை இங்கே போட்டு இருக்கிறார்கள். இதுபோன்ற பாரபட்சமாக நடந்தவை பல இருக்கின்றன. இதற்காக நான் காலத்தை அதிகமாக எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவரைப்பற்றி இருக்கிற குற்றச்சாட்டுக்களெல்லாம் முறைப்படி விசாரிக்கப்படும். அதனாலேயே பதவி உயர்வு கொடுக்கக் கூடாது என்று நியதியில்லை. அவர்களைவிட சீனியராக இருந்தவரைத் தள்ளிவிடவில்லை. அவர்களை ஈரோட்டிலே போட்டுப் பதவி உயர்வு தரப்பட்டு இருக்கிறது. இவருக்கு அது தரப்படவில்லை. ஆகவே இதிலே ஒன்றும் முறைகேடு இல்லை.

**திரு ஆர். பொன்னப்ப நாடார் :** புரகிபிஷன்பற்றி அரசாங்கத்தின் கொள்கை சிறப்பாக இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பினார்கள் நான் விளக்கத்தை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அந்த விளக்கத்தை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்பது தெரியாமலே மேலே போனால் சரியாக இருக்காது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அப்படி நியமித்ததற்கு முன்னாலேயே விசாரணை முடிவு செய்திருக்கப்பட வேண்டும் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எந்த அதிகாரியின்மீது எந்தக் குற்றச்சாட்டு வந்தாலும், அவர் விலகிப்போனதற்குப் பிறகுகூட, கேட்க சர்க்காருக்கு உரிமை இருக்கிறது. அந்த முறைப்படி குற்றச்சாட்டுகள் கவனிக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மதுவிலக்கு சம்பந்தமாக வழக்குகள் அதிகமாகக் கண்டுபிடிக்கவில்லை. இன்னும் தீவிரமாக இதை அமலாக்க வேண்டும். நாட்டிலே அரிஷ்டம், அசுவம் போன்றவற்றை யெல்லாம் உடனடியாகத் தடை செய்து கொள்ளக் கூடிய முறையில் இந்திய அரசோடு கடிதப் போக்குவரத்துக் கொள்ள வேண்டும். அவையெல்லாம் மெடிஸனல் பிரிபரேஷன்ஸ் என்ற சர்ச்சைக்குரிய விஷயத்தைப்பற்றி நான் வாதாட விரும்பவில்லை. இதன் காரணமாகப் பல குடும்பங்களின் வாழ்க்கை பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இது ஒரு பெரிய ஆபத்து என்ற முறையிலே பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்களுடைய ஜில்லாவைப் பொறுத்தவரை உள்ள ஓரிரு பிரச்சினைகளைப் பற்றிக் கூற விரும்புகிறேன். எங்களுடைய ஜில்லா மூற் பகல்
வைச் சேர்ந்தவர்களிடம் இந்த அரசாங்கம் பாரபட்சமாக நடந்துகொள்கிறது 11-00
என்று கூற விரும்புகிறேன். சென்னையில் கண்டக்டர்களுக்கான தேர்வு நடந்தபோது எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு இடம் கொடுக்கவில்லை. இதைப்பற்றிப் பல முறை இந்த மன்றத்தின் முன் எடுத்துக் கூறியிருக்கிறேன். அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஒருவன் எந்த இடத்தில் பிறந்தவனாக இருந்தாலும், எந்த மதத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் பாகுபாடு எதுவும் காட்டக் கூடாது என்று இருக்கிறது. அந்தப் பகுதி வாலிபர்களுக்கு வேலை தேடித் தருவதில் அரசாங்கம் அக்கறை செலுத்தவில்லை என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

1956-ம் ஆண்டிலே ஹெல்த் அசிஸ்டெண்ட்ஸ் ஆக நியமனம் செய்யப்பட்டவர்களை ரெகுலரைஸ் செய்யவேண்டுமென்று நான் பல முறை கடிதம் எழுதியும் அவர்கள் ரெகுலரைஸ் செய்யப்படவில்லை. அவர்கள் ரெகுலரைஸ் செய்யப்படுவார்கள் என்ற பதில் எனக்கு வந்தது. ஆனால் 8-8-1968-ல் பப்ளிக் ஹெல்த் டைரக்டரிடமிருந்து அனுப்பப்பட்ட உத்தரவில் அவர்கள் மறுபடியும் பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலமாக நியமனம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஏழு வருஷம்,

பத்து வருஷம் வரை சர்விசில் இருந்தவர்களைத் தற்போது சர்விஸ் கமிஷன் மூலமாக வரவேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு வயது விதிவிலக்கு எல்லாம் அளிக்க வேண்டியிருக்கும். ஆகவே, அவர்கள் எல்லாம் பாதிக்கப்படாத அளவுக்கு, "புல்லி குவாலிபைட்" ஆக இருக்கின்ற அவர்கள் பாதிக்கப்படாத அளவுக்குக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கழிந்த வருஷத்தில் எங்கள் பகுதியில் 25,000 எக்கருக்கு மேல் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குத் தண்ணீரைப் பேச்சிப்பாறையில் இருந்து பம்ப் செய்யவேண்டு மென்ற கருத்து அக்ரிகல்சுரல் செமினாரில் பேசப்பட்டது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாமென்று அமைச்சர் அவர்களும் கூறினார்கள். ஆனால் அதிலே காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாகப் பயிர்கள் தீய்ந்துவிட்டன. அதன் காரணமாக விவசாயிகள் மிகவும் மன வேதனைக்குள்ளாகியிருக்கிறார்கள். இந்த மாதிரிப் பல தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

பல விஷயங்கள் இருந்தாலும், ஒரே ஒரு விஷயத்தை மட்டும் தங்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். உடையார் பாளையத்திலே போலீஸ் ஃபயரிங் நடந்தது. நான் விசாரணைக்குட்பட்ட கருத்தைச் சொல்லவில்லை. உடையார்பாளையத்தில் ஆகஸ்டு 7-ம் தேதி துப்பாக்கிச் சூடு நடந்தது. 7-ம் தேதி இரவில் நடந்த விஷயத்தைப்பற்றி டர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் இல்லை. சாட்சி சொன்னவர்கள்மீது போலீசார் அத்துமீறி நடந்து கொண்டார்கள். நீதிபதி மேன்மைதங்கிய ராம பிரசாத் ராவ் அவர்கள் இப்படிக் கூறியிருக்கிறார்கள்—

"The Public Prosecutor wanted to cross-examine the witness on the evidence given by him on the post-shooting incident.

The Commission rejected this request and observed, 'As I have already made it clear, it is beyond my scope. As it was injudicious to shut my eyes and ears to such evidence as was volunteered, I had to record the same. I advise the Public Prosecutor to inform the concerned authorities about this, as this evidence and such other evidence that may be forthcoming in this behalf from witnesses do not form part of the record of this Commission.' என்று கூறியிருக்கிறார். 'I rule out the cross-examination on this' என்ற பதத்தை உபயோகித்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு அடக்கு முறை நடந்திருக்கிறது. அதைக் காணாமலோ, கேட்காமலோ இருக்க முடியாது என்று சொல்லக் கூடிய அளவில் நடந்திருக்கிறது. ஆகவே, டர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸை மாற்றியமைக்க வேண்டுமென்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொரு காரியத்தைப்பற்றியும் நான் தங்களிடம் கூறவேண்டுமென்று விரும்புகிறேன். திரு. எச். வி. ஆர். அய்யங்கார் அவர்கள் "unresponsive democracy and the citizen" என்ற தலைப்பிலே "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் 22. ஆகஸ்டு 1968-ல் ஒரு நல்ல கட்டுரையை வரைந்திருக்கிறார்கள். அமெரிக்க நாட்டில் நடக்கும் காரியங்களையும், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் நடக்கும் காரியங்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு முதலமைச்சருக்கு—இந்த மாநிலம் அல்ல — பொதுவாக ஒரு முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள், இன்னொரு அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். பல மாதங்கள் ஆகியும் "பெற்றுக் கொண்டேன்" என்று அக்னாலெட்ஜ்மெண்ட் கூட வரவில்லை என்று வேதனையோடு கூறியிருக்கிறார்கள். அதே போன்று நமமுடைய அரசாங்கத்தைப் பொறுத்து பல காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உதாரணமாக, கார்ப்பரேஷனில் ஹெல்த் இன்ஸ்பெக்டராக ஒருவர் இருந்தார். அவருடைய பதவிக்காலம் முடியப் போகிறது. அவருக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்க வேண்டுமென்று





கார்ப்பரேஷனில் இருந்து கமிஷனர் அவர்களால் சிபாரிசு செய்யப்பட்டு செகரடேரியட்டுக்கு அனுப்பினார்கள். அவர் ஓய்வு பெற்ற பிறகுகூட எக்ஸ்டென்ஷன் கோரி அனுப்பியதற்கு எந்த விதமான பதிலும் வரவில்லை. Files are slumbering in the Secretariat என்று தான் நான் கூற விரும்புகிறேன். இந்த மாதிரிக் காரியங்களில் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அய்யங்காரிடமிருந்து கார்ப்பரேஷனுக்குப் போகிறார். அய்யங்கார் இன்ன மாநிலத்திலே என்று குறிப்பிடவில்லை என்பதை அவரே ஒப்புக்கொண்டார். அப்படி இருக்கின்றபோது இந்த அமைச்சரவையைப்பற்றி விவாதிக்கின்ற நேரத்தில் அதை மேற்கோளாகக் காட்டியிருக்கத் தேவையில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நாங்கள் பல கடிதங்கள் எழுதியும் பதில் வரவில்லை. அதற்காகத்தான் நான் அந்த மேற்கோளைக் காட்டினேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்களுடைய கடிதங்களுக்குப் பதில் வருவதில்லை என்பதை மேற்கோள் இல்லாமல் சொன்னால்கூட மதிப்பளிக்கத் தயாராக இருக்கிறோம். அவரிடத்தில் இருக்கும் மதிப்புக் குறைவு என்று எண்ணி; அய்யங்காருடைய மேற்கோளைக் காட்டத் தேவையில்லை. திரு. பொன்னப்ப நாடாரிடத்தில் நிரம்ப மதிப்பு உண்டு.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அதற்கு மிக்க மகிழ்ச்சி. இந்த அரசாங்கம் பல தவறுகளைச் செய்திருக்கிறது. பல குற்றச்சாட்டுகளை எங்கள் கட்சியின் சார்பில் கூற இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதில்லை. மக்கள் மன்றத்திலே தேர்தலுக்கு முன்னால் பல வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறிக்கொண்டு நான் எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியானது பல குற்றச்சாட்டுகளை இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மூலம் புகுத்தியிருக்கிறது. அதிலே, முதல் முதலாகச் சொன்னது பல நூற்றுக் கணக்கான கோடி ரூபாய்களைப் போட்டு முன்னேற்றத்திற்கான காரியங்களைக் காங்கிரஸ் செய்ததாகக் கூறினார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இனிப் பேசுகின்ற உறுப்பினர்கள் 10 நிமிடத்திற்குமேல் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** காலம் குறைவாக இருப்பதால் நான் கூற வேண்டியவற்றைச் சுருக்கமாகக் கூறுகிறேன். மத்திய அரசாங்கத்தில் போக்குவரத்து மந்திரியாக இருக்கின்ற திரு. வி.கே.ஆர்.வி. ராவ் அவர்கள் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். "இதுவரை போட்ட திட்டங்கள் எல்லாம் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. 1975-வது ஆண்டிலேகூட மக்களுடைய இன்றியமையாத வாழ்க்கைத் தரத்தை உயர்த்தச் செய்வதுகூட முடியாத நிலைமையில் திட்டம் மட்டமாக இருக்கிறது" என்று அவர்கள் கூறியிருப்பதையே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தற்போது எச். வி. ஆர். அய்யங்கார் கூறிய ஒன்றைப்பற்றிக் கூறினார்கள். அவர்கள் அடிக்கடி தொழில் துறையில் தோல்வி அடைந்து கொண்டிருப்பதைப் பற்றி ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டும்.

"எங்கள் காலத்தில் 4 மில்கள்தான் மூடப்பட்டிருந்தன, தற்போது 24 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன" என்று சொன்னார்கள். இதிலே நான் ஒன்றைக் கூறுகிறேன். அவ்வாறு மூடப்படுவதற்கு ஆரம்பம் உங்கள் காலத்திலேதான் ஆரம்பித்தது. நான்கில் ஆரம்பித்து அது அதிகமாயிற்று. ஆனால் தற்போது இறங்குமுகத்தில் உள்ளது. ஒரு

காலில் தொழு நோய் ஏற்பட்டு அழுக ஆரம்பித்துவிட்டால் என்ன நிலைமை ஏற்படும் என்று சிந்தித்துப் பாருங்கள். உங்கள் காலத்தில் ஆரம்பித்த தொழு நோய் வளர்ந்துகொண்டே போகிறது.

1961-ல் 60 கவுண்ட்சுக்கு மேற்பட்ட நூலுக்கு 5 பைசா கலால் வரி. இன்றைக்கு 90 பைசா. 1,700 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. இதற்கெல்லாம் யார் பொறுப்பு? மாநில அரசாங்கத்தை இதற்கெல்லாம் குறை கூறுவது மிகத் தவறு. உங்களுடைய தவருல்தான் எவ்வளவோ தொழில்கள் நடைபெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. இருக்கின்ற குறைகளைப் பற்றிச் சொல்லுவதில் தவறு இல்லை. இதற்கெல்லாம் காரணமாக உங்கள் கட்சி ஆட்சி நடந்து கொள்ளும்போது, மாநில அரசாங்கத்தைக் குறை கூறுவதில் பயன் இல்லை. இப்படிப் பல தவறுகளை நீங்கள் செய்த காரணத்தால்தான் மக்கள் உங்களை வெளியேற்றினார்கள். ஆகவே, நீங்கள் கொஞ்ச நாள் பொறுத்திருக்கவேண்டும். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் கம்பர் கருத்தில் திளைத்தவர் கள். அதிலிருந்து ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

ராமாயணத்தில் ராமனைக் கூப்பிட்டு கைகேயி, 'நீ காட்டுக்குப் போ, பரதன் நாட்டை ஆள வேண்டும், உன் தகப்பனார் எனக்கு வரம் கொடுத்திருக்கிறார்' என்று சொன்னாள். ராமன் என்ன மாட்டேன் என்று சொன்னான். உடனே காட்டுக்குப் போனான்.

"மன்னவன் பணியென்றாகில் நும் பணி மறுப்பனோ
என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ"

என்று சந்தோஷமாகப் போனான். அதை வாயளவில்மட்டும் சொல்ல வில்லை. உண்மையிலேயே அதை மன நிறைவோடுதான் சொன்னான்.

"ஒப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்ற தம்மா"

என்கிறார். அவன் சந்தோஷமாக 14 ஆண்டுகள் காட்டுக்குப் போனான். ஆகவே நீங்கள் சற்றுப் பொறுத்திருங்கள். அவர்கள் தவறுதான் செய்யட்டுமே. ராமனின் தம்பியாவது ஆட்சி வேண்டுமென்று நினைத் தானா ?

"தாய் உரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்து சிந்தனை முகத்தில் தேக்கிப் போயினை"

என்கிறார். அவன் தம்பி என்ன சொன்னான்.

"கானாள நிலமகளைக் கைவிட்டுப் போனானைக் காத்துப் பின்னே
போனானு மொருதம்பி போனவர்கள் வருமவதி போயிற்றென்னா
ஆனாத உயர்விட வென்று அமைவானுமொரு தம்பி அயலே நானாது
யானாஇவ் வரசாள்வென் என்னே இவ்வரசாட்சி"

என்று சொன்னானும். இவ்வளவு தூரம் கம்பனும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறான். இதைப் படித்துவிட்டும் இவ்வளவு தூரம் ஆசைப்பட வேண்டாம் என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். சிறிது பொறுங்கள். உங்கள் தவறுகளுக்கு மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள். ஆகவே கொஞ் சம் பொறுத்திருங்கள் என்றுதான் சொல்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னைப்பற்றிக் குறிப்பிட்டதால் நான் சொல்கிறேன். அவர்கள் ஒன்றோடொன்று சேர்ந்தவர்கள். நேர் விரோத மான அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அல்ல அவர்கள்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** கொஞ்சம் பொறுத்திருங்கள். ராமன் காட்டுக்குப்போனது இருதயப் பூர்வமாக, மன மகிழ்ச்சியோடுதான் போனான். ஒரு தவறும் செய்யாத ராமன் காட்டுக்குப் போனான். இவ்வளவு தவறுகளையும் செய்துவிட்டு நீங்கள் இவர்களைப் போகச் சொல் கிறீர்கள். (ஆரவாரம்.) மக்கள் கொடுத்துள்ள தீர்ப்புக்கு மதிப்பளி யுங்கள். நல்லதனமாக, நிதானமாக இருங்கள்.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நல்லதனம் என்று சொல்கிறார்கள். மக்கள் தீர்ப்புக்கொடுத்ததை எதை நாங்கள் நல்லதனமாக செய்யவில்லை ? ஆகவே, "நல்லதனமாக" என்ற வார்த்தையைச் சொல்லலாமா ?

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** இவ்வளவு சீக்கிரத்தில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்க வேண்டாம் என்று சொல்கிறேன்.

**திரு. பி ஜி. கருத்திருமன் :** அவர்கள் ஆளும் கட்சிக்கு அனுசரணை யாக இருப்பதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை. ஆனால் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு எங்களுக்கு உரிமையிருக்கிறது. சர்க்காரைத் திருத்த எங்களுக்கு உரிமை இருக் கிறது. அது அடிப்படை ஜனநாயக உரிமை.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** எல்லோருக்கும் அந்த உரிமை இருக்கிறது. அந்த உரிமை யாருக்கும் மறுக்கவில்லை. எல்லோருக்கும் தான் அந்த உரிமை இருக்கிறது. நீங்கள் செய்த தவறுகளை அவர்கள் மீது என் சுமத்துகிறீர்கள் என்றுதான் கேட்கிறேன். ஆட்சியாளர்களும் ஆட்சியைச் செவ்வனே, நேர்மையோடு நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆட்சியாளர்களுக்கு இன்றியமையாதனவை, வன்கண், குடிகாத்தல் கற்றறிதல், ஆள்வினை என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். செய்கிற காரியங்களில் துணிவு, நேர்மை, ஆண்மை வேண்டுமென்று கூறியிருக்கிறார் வள்ளுவர். ஆரம்பத்திலேயே தவறுகளைக் கண்டிப்போ மானால் மேற்கொண்டு பெரிய தவறுகள் நிகழமாட்டா. தகராறுகளை முளையிலேயே கிள்ளி எறிந்திருந்தால் இந்த பஸ் தொழிலாளர்-மாணவர் தொந்தரவுகள் இருக்காது. தவறுகளுக்கு இடம் கொடுப்போமானால் ஆட்சி நடத்த முடியாதபடி தொல்லைகள் ஏற்படும். இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு நிகழ்ச்சி நடந்ததாகப் பத்திரிகையில் பார்த்தேன். ஒரு பஸ்ஸை சில மாணவர்கள் நிறுத்தி திசையைத் திருப்பி அவர்கள் வேண்டுமென்ற இடங்களுக்குப் போனதாகவும், அதைத் தடுக்கமுடியாத நிலை இருந்ததாகவும் பத்திரிகையில் படித்தேன். இப்படித் திசை திருப்பிப் போனால் எங்கு போய் முடியும் என்று சொல்ல முடியாது. பூந்தாழங் குடியில் நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தில் இறங்கி அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் தடுக்க வேண்டும். தயவுதாட்சண்யம் காட்டாது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் என் தொகுதிபற்றிய ஒரு விஷயத்தைக் குறிப்பிடா மல் இருக்க முடியாது. வலைஞர்கள் என்போர், திருட்டு, கொள்ளை, வழிப் பறி இவற்றைத் தொழிலாகக் கொண்ட ஒரு கூட்டம் எங்கள் பகுதியில் இருக்கிறது. அவர்களைப்பற்றிய புகார்கள், அவர்கள்செய்துள்ள தவறு கள் இவைபற்றி முதல் அமைச்சர் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ரெஜிஸ்டேர்ட் தபால்மூலம் அனுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றி போலீஸார் ஒழுங்காகக் கவனிக்க வில்லை என்பதோடு அல்லாமல் அவர்கள் நேர்மையாக நடக்கவில்லை. இரண்டு வாரங்களுக்கு முன்னால் ஒரு குடியானவன் தோட்டத்தில் என் செடிகளைப் பிடுங்கி அங்குள்ளவர்கள் துரத்தியிருக்கிறார்கள். ஒரு பெண் மட்டும் மாட்டிக்கொண்டாள். மணியக்காரர் ரிப்போர்ட்டுடன் என் செடி யோடு போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைக்கப்பட்டாள். ஆனால் தன்னை அடித்ததாக ஒரு புகாரை வாங்கிக்கொண்டு பூமிச் சொந்தக்காரர்களாகிய தகப்பனையும், மகனையும் லாக்கப்பில் போட்டு விட்டார்கள். பின்னர் அதுபற்றி மேல் அதிகாரிகளிடம் சொல்லி, நானும் அதில் தலையிட்டு, அவர்களை லாக்கப்பில் இருந்து விடுவிக்க வேண்டியிருந்தது. கடைசி யாகச் செய்தார்கள். ஆனால் இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படாமல் தடுத்திருக்க வேண்டும். அடுத்தபடியாக, ஒட்டன் சத்திரம் என்ற இடத் தில் பத்திரங்கள் விற்பவர் ஒருவரையும், லேவாதேவிக்காரர் ஒருவ ரையும் அரசாங்கக் கடனுக்காகப் பணம் கொடுக்கவில்லை யென்பதற்காக அவர்கள் லைசென்ஸ் கான்ஸல் செய்யப்பட்டது. அப்படிச் செய்தது தவறு

என்று பின்னால் ஹைகோர்ட் தீர்ப்பு வழங்கியது. ஆக இப்படி கசக்கிப் பிழியப்படுவது நிறுத்தப்படவேண்டும். உலகத் தமிழ் மாநாட்டின் போதும் அளவில்லாமல் கசக்கிப் பிழியப்பட்டது. அப்படிச் செய்தால் நேர்மையானவர்கள் கஷ்டப்பட வேண்டி வரும். ஆகவே அம்மாதிரி காரியங்களுக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது.

அடுத்தபடியாக, வேண்டாத பிரச்னைகளில் நுழையாதிருக்க வேண்டும். கடவுள்களின் படங்கள் எடுத்ததுபற்றி ஒரு வார்த்தை. கடவுள்களின் படங்கள் இருப்பதால் நம் நாட்டிற்கு ஒரு ஆபத்தும் வந்துவிடாது. அப்படி எதாவது செய்வது என்றாலும் சட்டமன்றப் பிரதிநிதிகளின் அபிப்பிராயத்தைக் கேட்டுச் செய்வதில் தப்பு இல்லை. அதனால் ஒருவித ஆபத்தும் வந்துவிடாது. ஆக, இம்மாதிரி வேண்டாத காரியங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

எங்களைப் போன்றவர்கள் கேட்கிற கேள்விகள்கூட ஒழுங்காகச் சட்டமன்றத்தில் வருவதில்லை. எல்லோரையும் சமமாகப் பாவித்து நேர்மையுடன் நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

***திரு. க. ந. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, காங்கிரஸ்காரர்கள் இந்த அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து 11 காரணங்களைக் கூறியிருக்கிறார்கள். தமிழக அரசின்மீது மக்கள் வைத்திருக்கிற நம்பிக்கைக்குப் பல எடுத்துக் காட்டுகள் எடுத்துக் காட்டப்பட்டும், இப்போது அவர்கள் எதிர்க் கட்சியில் அமர்ந்துவிட்டதால் இப்படியாவது சொல்லி மக்கள் மனதைக் கவர வேண்டுமென்று பார்க்கிறார்கள். டாக்டர் ஜான்சன் அவர்கள் ஒரு முறை இங்கிலாந்த் பேரறிவாளர்கள் மத்தியில் 1½ மணி நேரம் பேசி முடிந்த பின்னர் கேட்டார்கள், இந்தச் சொற்பொழிவிலிருந்து என்ன தெரிந்துகொண்டீர்கள்? என்று. அவர்கள் ஒன்றும் புரியாமல் பேந்தப் பேந்தப் முழித்தார்கள். அப்போது ஜான்சன் அவர்கள் சொன்னார்கள் I can give explanation but I cannot give understanding என்று சொன்னார்.

அதாவது "நான் விளக்கம் தர முடியுமே தவிர புரிந்து கொள்ளும் புத்தியைத் தர முடியாது" என்றாராம். அதேபோல் இந்த 1½ ஆண்டு ஆட்சியில் முதல் அமைச்சர் அவர்கள் பல விளக்கங்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். விளங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்குக் காங்கிரஸ்காரர்கள் இல்லை என்று நான் சொல்லவில்லை. அவர்கள் அமைச்சர்களாக இருந்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், பல முறை சட்டசபைகளிலும், பார்லிமெண்டிலும் பதவி வகித்தவர்கள். அவர்களுக்கு விளங்கவில்லை என்று சொல்ல முடியாது, விளங்கியும் விளங்காததுபோல் இருக்கிறார்கள். கடுகு கீழே இருப்பது தெரிகிறது. ஆனால் யானையின் காலிலே போய் மோதிக்கொள்கிறார்கள். என் ஐயா மோதிக்கொள்ளுகிறீர்கள் என்று கேட்டால், எனக்கு வெள்ளெழுத்து என்று சொல்கிறார்கள், யானை தெரியவில்லை, கடுகு தெரிகிறது என்று சொல்லுகிறார்கள். எங்கேயோ ஒரு குறை இருப்பதை மட்டும் சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மக்கள் கவரப்பட்டிருக்கிறார்கள். அறிஞர் அண்ணாவின் ஆட்சி சீரும் சிறப்பும் பெற்றிருக்கிறது என்பதைக் கண்டு இந்தத் தீர்மானத்தை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

முப்பது ஆண்டு காலமாக தீர்க்கப்படாத மொழிப் பிரச்சினையில், அறிஞர் அண்ணா அவர்கள் இந்த ஆண்டுத் தொடக்கத்தில் ஒரு நாள் இது தான் கடைசியாகக் கையெழுத்திடும் நாள் என்று கூறி இந்தியை ஒழித்த நாளைப் பார்த்தோம். இருமொழித் திட்டம் என்பதை வற்புறுத்தி ஆணைச்ள் சொர்க இந்தியிலே இருப்பதை நாங்கள் ஏற்க மாட்டோம், அதனால் போர்க் கலைப் பயிற்சியை நிறுத்தி வைத்திருக்கிறோம் என்று கூறி காங்கிரஸ் ஆட்சியில் செய்யாததைத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செய்ததைப் பார்த்தோம்.





அடுத்தபடியாக, 11 கோடி ரூபாய் கல்வித் துறைக்காகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு அதிகமாகச் செலவு செய்கிறது. 1967-68-ல் தமிழக அரசு ஒன்பது தனியார் கல்லூரிகளையும், இரண்டு அரசாங்கக் கல்லூரிகளையும் தொடங்கியிருக்கிறது. 1968-69-ல் தனியார் கல்லூரிகள் எட்டும், அரசாங்கக் கல்லூரிகள் நாலும் தொடங்கப்பட்டு இருக்கிறது. ஆக மொத்தம் 23 கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த அரசானது எஸ்.எஸ்.எல்.சி தேர்வு முறையில் பெரிய மாற்றம் ஏற்படச் செய்து, எல்லா 'எக்ஸாமினர்களையும் வரவழைத்து ஒரேயிடத்தில் குழுமியிருக்கச் செய்து, திருத்தச் செய்து, எந்தவிதமான தவறும் இல்லாமல், அனைத்துக் கட்சிகளும் பாராட்டும் முறையில் செய்தது. புதிய திட்டத்தை உருவாக்கி, மொழித் துறையிலே தமிழுக்கு முதலிடம், ஆங்கிலத்திற்கு இரண்டாவது இடம் என்ற அளவில் செய்திருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, அதில் எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் சிறப்பளிக்காமல், பாவேந்தர் பாரதிதாசன், பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை ஆகியோருக்கும் சிலை அமைத்துத் தந்திருக்கிறார்கள் என்றால் அது அண்ணா அவர்களின் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

முன்பு தியாகிகளுக்கு அரசாங்க உதவிப் பணம் கொடுத்து வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொடுக்கத் தவறிய சிலருக்கும் சேர்த்து அரசாங்க உதவிப் பணத்தை அளித்து வருகிறார்கள். இது அறிஞர் அண்ணா அவர்களுக்கும் அவரைச் சார்ந்த அரசுக்கும் உள்ள பெருந்தன்மையை எடுத்துக்காட்டும் வகையில் இருக்கிறது.

சென்ற முறை 1,500 ரூபாய் வருமானம் உள்ளவர்களின் குழந்தைகளுக்கு மட்டும் சலுகை அளிக்கப்பட்டது. ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் வந்த பிறகு இன்னும் 500 ரூபாயை அதிகப்படுத்தி 2,000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு, அவர்கள் எந்த இனத்தை, எந்த மதத்தை, எந்த சாதியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் அவ்வளவு பேர்களின் வீட்டுக் குழந்தைகளுக்கும் கல்விச் சலுகை அளித்திருப்பது பாராட்டத் தக்கது.

சென்ற முறை இருந்த அரசாங்கம், இருபதாண்டு காலமாக 'சிட்டி காம்பன்ஸேட்டரி அலவன்ஸ்' அதாவது நகர ஈட்டுப்படி கொடுக்கத் தவறியிருந்தார்கள். நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் அந்த நகர ஈட்டுப்படியைக் கொடுத்து ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள், சென்னையிலுள்ள 20 லட்சம் பேர்களுக்குக் கிடைக்கும்படியாகச் செய்திருக்கிறார்கள்.

பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் சென்ற ஆண்டு இருந்ததைக் காட்டிலும் இந்த ஆண்டு இடத்தை அதிகப்படுத்தி மாணவர்களை அதிகமாகச் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மாணவர்களும் சேர்ந்துள்ளார்கள்.

செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகத் தேர்ச்சி பெற்று ஹையர் கிரேடு போஸ்டிலே இருந்தாலும், அவர்கள் படிப்பைக் கருதி அவர்களுக்கு 'செகண்டரி கிரேடு' சம்பளம் கொடுத்து வர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதனால் சென்ற ஆண்டு 5,000 பேரும், இந்த ஆண்டு 3,000 பேரும் ஆக மொத்தம் 8,000 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள். இந்த அரசு அவர்களுக்கு உறுதுணையாக இருப்பது இதிலிருந்து தெரிகிறது.

இதுவரையில் 4 டிவிஷனில் இன்ஸ்பெக்டர்கள், அதாவது கோட்டக் கல்வி ஆய்வாளர்கள் மட்டும் பதவி வகித்து வந்தார்கள். அதை நீக்கி தற்போது 10 சீஃப் எஜுகேஷனல் ஆபீசர்கள் என்று ஆக்கி, பெரிய மாவட்டங்களில் கல்வி அதிகாரியை நியமித்து வேலைப் பளுவை அதிகமாக்காமல் செய்து கல்வியின் தரத்தை உயர்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

எட்டாவது வகுப்பு வரையுள்ள மாணவர்கள் இரண்டு லட்சம் பேருக்கு இலவச புத்தகங்கள் சென்னை மாநகராட்சி மன்றத்தினர் வழங்கியிருக்கிறார்கள். இதனால் மாணவர்கள் தமிழக அரசைப் பாராட்டி வருகிறார்கள். திருவெறும்பூர் ஒன்றியத்திலே மதிய உணவுச் சாலையை நிறுவி 4 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பள்ளிகளுக்கு மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. 'கேர்' நிறுவனத்தார் எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் உள்ள பள்ளிகளுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

தொழில் துறையை எடுத்துக் கொண்டால், எத்தனையோ சிறப்புக்களை நம்முடைய ஆட்சியினர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அரிசி ஆலைகளை எட்டிலிருந்து பதின்மூன்று வரை தொடங்கியிருக்கிறார்கள். வேலூரில் பழம் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. நிறைய அளவில் 250 டன் வெங்காயம் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். உரம்கூட சுமார் 14 000 டன் கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்பட்டது. அமைச்சரவர்கள் கூட ஒரு முறை, சென்ற ஆண்டு நமக்கு உரம் கிடைக்கவில்லை, ஆனால் இப்பொழுது உரம் வைக்க இடம் இல்லை என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு விவசாயிகளுக்கு உதவி செய்கிறது. 160 கோடி கடன் தொகையை எல். என். பேங்கு மூலமாகவும், மற்ற கூட்டுறவு வங்கி மூலமும் வழங்க நம்முடைய அரசு பல வகைகளில் ஏற்பாடு செய்து இருக்கிறது. ஆகவே, எல்லா வகைகளிலும் தமிழக அரசு பல நல்ல காரியங்களைச் செய்திருப்பதால் நற்பெயரும், செல்வாக்கும் அடைந்திருப்பதைப் பார்த்து, இனிமேலும் சும்மா இருக்கக்கூடாது என்று எண்ணி அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இந்த வேலையைச் செய்திருக்கிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் பெருமிதத்தோடு இதை ஏற்றுக்கொள்வார்களா இல்லையா என்று கேட்டதற்கு நேற்று ஒரு உறுப்பினர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதைப் பார்க்கும்பொழுது நான் ஒரு நிகழ்ச்சியை எண்ணத் தோன்றுகிறது. ஐஸக் நியூட்டன் அவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்பொழுது வந்து யாரும் தன்னைத் தொந்தரவு செய்யக் கூடாது என்பதற்காக கதவைத் தாளிட்டுக்கொள்வார். ஆனால் அவர் அன்போடு வளர்த்து வரும் இரண்டு பூனைக்குட்டிகள் மட்டும் வந்து செல்வதற்கு ஏற்பாடு செய்து பெரிய பூனை நுழைவதற்கு பெரிய ஓட்டை ஒன்றும், சிறிய பூனை நுழைவதற்கு சிறிய ஓட்டை ஒன்றும் போட்டிருந்தார். அதைப் பற்றி நண்பர் ஒருவர் அவருடன் பேசிக்கொண்டிருந்தபொழுது, "ஏன் ஐயா, இரண்டு ஓட்டைகள் இருக்கின்றன" என்று கேட்டார். அதற்கு ஐஸக் நியூட்டன் அவர்கள், என்னிடம் இரண்டு பூனைகள் இருக்கின்றன. பெரிய பூனையான தாய்ப்பூனை நுழைவதற்கு பெரிய ஓட்டையும், சிறிய பூனையான குட்டிப்பூனை நுழைவதற்கு சிறு ஓட்டையும் போட்டிருக்கிறேன் என்று சொன்னார். அதற்கு அந்த நண்பர். என்னையா புவி ஈர்ப்பைக் கண்டுபிடித்த வித்தகன், முதல்வன் என்றெல்லாம் பாராட்டப்படும் நீங்கள் இந்தச் சாதாரண உண்மையைக் கூடத் தெரிந்து கொள்ளவில்லை, ஒரேயொரு பெரிய ஓட்டை மட்டும் இருந்தால் அதில பெரிய பூனையும் சிறிய பூனையும் வர முடியாதா? என்று கேட்டார்கள். அதைக் கேட்ட நியூட்டன் அவர்கள் 'ப்யூர் இன்னொன்ஸ் ஸார், (உண்மையிலேயே அறியாமை) என்று சொன்னாராம். பெரிய மேதையாக இருந்தாலும் தான் செய்த சிறு தவறையும் ஒத்துக்கொண்டு இருக்கிறார் நியூட்டன். காங்கிரஸ்காரர்கள் யார் என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஆகையால், தவறுகள் செய்தால் எதிர்க்கட்சித் துணைத் தலைவராகயிருந்தால் ஏற்றுக்கொண்டிருப்பார்கள். ஆனால் நேற்று ஒரு நண்பர் ஏற்றுக்கொள்ளவில்லை, மறுத்து விட்டார். காங்கிரஸ், தவறைக்கூடத் திருத்திக்கொள்ளாத காரணத்தால்தான் தரக்குறைவான நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** "தரக்குறைவான நிலையில்" என்பதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்.





**திரு. க. ந. இராமச்சந்திரன் :** " தரக்குறைவான நிலையில் " என்பதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அவர்கள் " நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின் " என்று இலக்கியத்தில் வருவதற்கு இலக்கணமாகத் திகழ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர்கள் இந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

***திரு. எஸ். ராமலிங்கம் :** தலைவரவர்களே, இப்பொழுது எனது கட்சித் தலைவரவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள், 49 பேர்களே இருக்கின்ற கட்சியினர் இப்படி ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறீர்களே, நாங்கள் 138 பேர்கள் இருக்கிறோமே, எங்களை அசைக்க முடியுமா என்று கொஞ்சம் ஏளனமாகக் கூடப்பேசக்கூடும். உங்களுக்கிருக்கும் பலம் எங்களுக்குத் தெரிகிறது. இந்த சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் நீங்கள் உட்கார்ந்த பிறகு உங்கள் பலம் தெரிகிறது, உங்கள் பலம் மட்டும் அல்ல, உங்களுக்குத் துணையாக இருக்கக்கூடிய இதர கட்சிகள் உங்களுக்காக வக்காலத்து வாங்குவதும், உங்கள் புகழ் பாடுவதும் தெரிகிறது. நீங்கள் பேசும் பொழுதாவது, காங்கிரஸைக் குறை சொன்னீர்கள், இதை இதைச் செய்யவில்லை என்று சொல்லிவிட்டு நீங்கள் செய்பவைகளைச் சொல்கிறீர்கள். ஆனால், லெஃப்ட் கம்யூனிஸ்ட் போன்றவர்கள் எங்களைப் பார்த்து " நீங்கள் இவ்வளவு தவறு செய்து விட்டீர்கள் " என்று சொல்லி உங்களுக்காக வக்காலத்து வாங்குவதைப் பார்க்கும்பொழுது எங்களுக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. நாங்கள் 49 பேர்கள் என்றாலும் 64 இலட்சம் வாக்குகளைப் பெற்று அவர்களின் சார்பில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம். நீங்கள் 61 இலட்சம் வாக்குகளைத்தான் பெற்றிருக்கிறீர்கள்.

எங்கள் தலைவர் சொன்ன குற்றச்சாட்டிலே மிக முக்கியமானது இப்
பொழுது தொழில் துறையிலே மந்தம், தொழில் துறையிலே தகராறு, மு.ப. 11-30
ஆலைகள் ஏராளமாக மூடப்பட்டன என்பது. 27 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால், அவர் சொல்லி 3, 4 நாட்களிலே இப்பொழுது 3, 4 ஆலைகள் மூடப்பட்டு வருகின்றன. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஆலைகள் மூடப்பட்டு வருகின்றன. நமது கல்வி, தொழில் அமைச்சர் அவர்கள், பெரிய ஆலைகள் மட்டும் அல்ல ; சிறிய சிறிய கைத்தொழில்களும் 200-க்கு மேற்பட்டு மூடப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆலைகள் மூடுவதாலே அதைச் சேர்ந்த முதலாளிகள் மீது அக்கறை காட்டாவிட்டாலும் கூட, அதனைச் சார்ந்துள்ள அத்தனை தொழிலாளர்களைப் பற்றி நாம் அக்கறை காட்ட வேண்டும். இந்த அரசு அவர்களுக்கு ஏதாவது வழி செய்திருக்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள், நான் அவர்களோடு இரவும் பகலுமாகப்பேச்சு வார்த்தை நடத்துகிறேன் ; அவர்கள் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறார்கள் ", என்று சொன்னார்கள். (குறுக்கீடு) கண்ணீரும் கம்பலையுமாக இருப்பதைப் போக்க நீங்கள் என்ன செய்தீர்கள் என்று தான் கேட்க விரும்புகிறேன். நீங்கள் " மெட்டீரியலாக " என்ன செய்தீர்கள் ? அவர்களுக்கு உருப்படியாக என்ன செய்தீர்கள் ?—செய்கின்றீர்கள் ? வடக்கை நோக்கிக் கையைக் காட்டினால் நன்றாக இருக்காது என்பதைத் தான் சொல்ல விரும்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் இப்பொழுது நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகிறது. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு ஒரு உறுப்படியான திட்டமோ, அல்லது சர்வே எடுப்போ, எதையுமே நீங்கள் செய்யவில்லை. இந்த வேலையில்லாத் திண்டாட்டம் குறிப்பாக பிற்பட்ட வகுப்பு மக்களையும் அரிஜன மக்களையும் அதிகமாகப் பாதிக்கின்றது. ஆகவே, அவர்களது பழிச்சொல்லுக்கு நீங்கள் ஆளாகித்தான் தீர வேண்டும் ; அவர்களுக்கு நீங்கள் பதில் சொல்லித்தான் தீர வேண்டுமென்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பக்கம் இருந்தாலும் கூட ஏற்கனவே வேலையிலே உள்ளவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுகிற ஒரு அவல நிலையம் இருக்கிறது. மின்சார வாரியத்திலே முதலிலே 80 என்று நினைக்கிறேன். 80 சூப்பர்வைசர்களை நீக்கி விட்டார்கள். அடுத்து, 100 சூப்பர்வைசர்களுக்கு "நோட்டீஸ்" வருகின்ற நிலை இருக்கிறது.

அடுத்து, அரிஜன நல இலாகாவிலே, ஹாஸ்டலிலே இருக்கிற வார்டன்கள். திருச்சி ஜில்லாவைப் பொறுத்த வரையிலே 34, 35 வார்டன்களுக்கு இப்பொழுது சீட்டு கிழிக்கின்ற நிலை இருக்கிறது. மாநில அளவில் 50, 60 சேரும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அந்த இலாகாவில் மாணவ விடுதிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற வார்டன்கள் ஆசிரியர் பயிற்சிப் பெற்றவர்களாகத் தான் இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் கடந்த முறை இருந்த சர்க்கார் அந்த விதியை மீறி தங்களது கட்சிக்காரர்களுக்கு ஏதாவது ஒரு வேலை தர வேண்டுமென்பதற்காக ஆசிரியர்கள் பயிற்சி பெறாதவர்களுக்கு வார்டன்கள் பதவியைக் கொடுத்திருந்தார்கள். அந்த விதியை அனுசரித்து இப்பொழுது அந்தப் பதவியிலிருப்பவர்களை எடுக்க வேண்டுமென்ற ஒரு சிக்கல் ஏற்பட்டது. ஏற்கனவே பழைய அரசாங்கம் தவறு செய்திருந்தாலும் 6, 7 ஆண்டு காலமாக பணிபுரிந்த வார்டன்களுக்கு மீண்டும் நாம் வேலை கொடுக்க வேண்டுமென்று தான் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ராமலிங்கம் :** அம்மையாருடைய விளக்கத்தைக் கேட்கும் போது உண்மையிலே எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எந்தச் சர்க்காராக இருந்தாலும் அரசு தொடர்ச்சியாக இருக்கக்கூடியது. அது காங்கிரஸ் சர்க்காராக இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழக சர்க்காராக இருந்தாலும் இனிமேல் வருகின்ற சர்க்காராக இருந்தாலும் பழி அரசியல்வாதிகள் மீது இருக்கலாமே தவிர, சர்க்கார் ஊழியர்கள் பழி வாங்கப்படக் கூடாது ; அவர்களுக்கு மனைவி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் மனைவியைக் காப்பாற்ற, பிள்ளைகளைக் காப்பாற்ற உண்மையிலே தாய்மையுள்ள அம்மையார் அவர்கள் பொறுப்பேற்க வேண்டுமே தவிர, அவர்கள் தவறு செய்து விட்டார்கள் நாங்கள் ஒன்றும் தவறு செய்யவில்லை என்று சொல்வது சரியில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, நான் தனித்து அமைச்சர்களைப் பற்றிச் சொல்லாமல், பொதுவாக (பாலிஸி மாட்டர்ஸ்) கொள்கையைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். வறுமையை ஒழிக்கப் போவதாக அந்தக் காலத்திலே நீங்கள் எல்லோரும் சொன்னீர்கள். தேர்தல் சமயத்திலே கூட, என்னுடைய தொகுதியிலும் மற்ற பகுதிகளிலும் "தாய்க்குச் சோறில்லை, குழந்தைக்குப் பாலில்லை, ஆனால் விழுந்து சாகக் கிணறுண்டு" என்று படம் அச்சடித்து ஒட்டினார்கள். அந்தப் படத்திலிருந்த அம்மையார் நல்ல கொழு கொழு என்று இருந்தார்கள். அவர்கள் வாட்டத்திலே இருக்கிற மாதிரி தெரியவில்லை. அதை ஏதோ சினிமா, நாடகத்திலே உள்ள ஒரு சீனைக் கத்தரித்துப் போட்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். பாமர மக்கள், கிராம மக்கள் அதைப் பார்த்தவுடனே, ஏதோ இந்தக் காங்கிரஸ்காரர்கள் இரக்கம் இல்லாதவர்கள் ; அவர்களைப் போக்கினால் இவர்கள் நம்மைக் காக்க வந்தவர்கள் ; இவர்கள் கடவுள்கள் ; கடவுளினுடைய அவதாரமாக இப்பொழுது வந்திருக்கிறார்கள் என்று உங்களை நம்பித்தான் அவர்கள் ஓட்டுப் போட்டார்கள். ஆனால், இப்பொழுதுள்ள நிலையை உங்களைப் பார்த்து கேட்க விரும்புகிறேன். "தாய்க்குச் சோறில்லை, குழந்தைக்குப் பாலில்லை, ஆனால் விழுந்து சாகக் கிணறுண்டு" என்று சொன்னீர்கள் அப்பொழுது. (ஒரு படத்தை அமைச்சர்கள் பக்கம் காட்டி) இந்தப் படத்தைப் பாருங்கள். சென்னையிலேயிருக்கிற மவுண்ட் ரோடிலே இபபொழுதும் பார்க்கலாம். அந்தத் தாய் எப்படி சோர்ந்திருக்கிறார்கள் ; குழந்தை எப்படி இருக்கிறது என்பதை நீங்களே பாருங்கள், உங்களுடைய ஆட்சியிலே. எனவே இந்தக் காட்சியைக் காண்கின்ற நேரத்தில். . .





**மாண்புமிகு சி. என். அண்ணாதுரை :** 1½ வருஷத்திலே இதைக் கேட்க வேண்டுமென்ற உணர்ச்சி வந்ததே, 20 வருட ஆட்சியில் இதைப் போல் அளவிட முடியாத கோரங்கள் தாண்டவமாடிய போது நண்பர் அவர்களுடைய வாய் பேசாமல் இருந்ததன் காரணம் என்ன ?

**திரு. எஸ். ராமலிங்கம் :** நாங்கள் செய்த பாவத்தின் பலனை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். அந்தப் பாவத்திற்குப் பிராயச்சித்தமாக நாங்கள் எதிர் வரிசையிலே உட்கார்ந்திருக்கிறோம். அந்தப் பாவத்தைப் போக்குவதற்கு........

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** செய்த பாவத்திற்கு இப்பொழுது அவர்கள் அனுபவித்துக் கொண்டிருப்பதாக நண்பர் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் அப்படிக் கூட அதை எடுக்க வில்லை. அவர்களுக்கே அப்படி உள்ளம் உறுத்துகிறாற் போல இருக்கிறது. நான் சொன்னது, 15 மாதத்திற்குள், அல்லது 16 மாதத்திற்குள், அல்லது 1½ வருடத்திற்குள் ஏதோ ஒரு குழந்தைக்குப் பால் இல்லை என்று கேட்கத் தோன்றுகிறதே, 20 வருடங்களாக நாட்டிலே இப்படிப்பட்ட கோரங்கள் ஆணவத்தோடு தாண்டவமாடிக் கொண்டிருந்தபோது நண்பர் அவர்கள் அவருடைய கமிட்டிக் கூட்டத்திலாகிலும், அல்லது பொது மேடையிலோ அல்லது சட்டமன்றத்திற்கு அவர் வந்த பிறகோ அதைப்பற்றி முறையீடு செய்து கொண்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். ராமலிங்கம் :** எங்களது கட்சிக் கூட்டத்திலே நான் சொல்லி இருக்கிறேன். சட்டமன்றத்திலேகூட நான் பேசுகின்ற....

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் மிகவும் பரிதாபப்படுகிறேன். கட்சிக் கூட்டத்திலே சொல்லியும் கட்சி அதனை கவனிக்காததற்கு நான் பரிதாபப்படுகிறேன். (ஆளும் கட்சித் தரப்பில் பலத்த ஆரவாரம்).

**திரு. எஸ். ராமலிங்கம் :** எனவே, ஏற்கனவே நடந்த கதைகளை நாம் சொல்லிக்கொண்டிருப்பதிலே உண்மையிலே பிரயோஜனம் இல்லை. "நாங்கள் சாக்கடையிலே நெளிகின்ற புழுவோடு புழுவாக, இரத்தத்தோடு இரத்தமாக, சதையோடு சதையாக இருக்கிறோம்" என்று பிரசாரம் செய்தீர்கள். அந்த உணர்ச்சியை பொதுமக்களிடத்திலே ஏற்படுத்தினார்கள். நாங்கள் சாதாரண ஆட்களாக இருந்தாலும் கூட, அந்தச் சாக்கடையிலே நெளிகின்ற புழுக்களாக என்னைப்போன்றவர்கள் இருந்தாலும் கூட ஒரு பத்திரிகையில் மிகப் பெரிய உருவத்தைப் போட்டு, "சேட்" மாதிரியெல்லாம் படம் போட்டுப் பணக்காரர்களைப் போல சித்தரித்துக் காட்டினார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புறேன். "பராசக்தி" என்று நினைக்கிறேன். அதிலே "எச்சிலை தனிலே எறியும் சோற்றுக்கு பிச்சைக்காரர் சண்டை ரோட்டிலே" என்று 1951-52-லே வெளி வந்த அந்தப் படத்தில் சித்தரித்துக் காட்டினார்கள். அவர்கள் வந்த பிறகு ரோட்டிலே பிச்சையெடுப்பதே இருக்காது, எச்சிலை தனிலே எறியும் சோற்றுக்குச் சண்டை இருக்காது என்பதற்கு உடனடியாக என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** 15 வருடங்கள் எங்களுக்கு வாய்ப்பு கொடுங்கள் ; அந்த நிலைமைகளை யெல்லாம் மாற்றிக் காட்டுகிறோமா என்பதை அப்பொழுது கேளுங்கள்.

**திரு. எஸ். ராமலிங்கம் :** தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். மறுநாளே இருக்காது என்ற நிலை வேண்டுமென்று நான் கேட்கவில்லை. "நாயோடு போராடுகிற பிச்சைக்காரர்கள் உடனே போயிருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. நீங்கள் விளக்குப் போட்டீர்களே, விளக்கு முக்கியமா ? இந்த எச்சிலை

சோற்றுக்குப் போராடுவதைப் போக்குவது முக்கியமா ? இதனை நீக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** இந்த விளக்குக்கு செலவழித்த பணத்தைக் கொண்டு அவர் சொன்ன காரியத்தை முடித்து விடுவதாக இருந்தால் அதைச சுலபத்திலே செய்து விடலாம். இந்த விளக்குக்கு ஆகிற செலவுக்கும் நண்பர் சொல்லுகிற பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது.

**திரு. எஸ். ராமலிங்கம் :** விளக்குக்கு ஆகின்ற செலவை வைத்துக் கொண்டு ஒரு வரைவு தேட வேண்டுமென்று தான் சொல்கிறேன். நாங்கள் 5 ஆண்டுத திட்டம் போட்டோம். அத்தனையும் நிறைவேறியா விட்டது ? நான் கேட்கிறேன், வறுமையை ஒட்டுவதற்கும், பஞ்சத்தைப் போக்குவதற்கும், ஏழை எளிய மக்களுக்கு, நிலம் இல்லாதவர்களுக்கு, நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கு அல்லது குத்தகைக்குக் கொடுப்பதற்கு அவர்கள் ஏதாவது உருப்படியான நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்களா ? நாங்கள் ஆட்சியில் இருக்கும்பொழுது வீடு கட்டுவதற்குத் திட்டம் போட்டோம். குறிப்பாக அரிஜனங்களுக்கு மனைக்கட்டு இல்லை. நாங்கள் அதற்காக ஒரு கமிட்டி போட்டு, ஆய்வு நடத்திஞேம். காங்கிரஸ்காரர்கள் என்ன செய்தார்கள் என்று எங்களைக் கேலி செய்கிறார்கள், என்ன சாதித்தார்கள் என்று கேட்கிறார்கள். அதே நேரத்தில் இப்பொழுது அமைச்சர் அம்மையார் அவர்கள் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதாவது, நஞ்சை நிலத்தை எடுக்காதீர்கள், எடுக்கக்கூடாது, நஞ்சை நிலத்தை வீடுகள் கட்டுவதற்கு எடுக்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். அப்படியென்றால், திருச்சி, தஞ்சையிலே உள்ளவர்கள் . . . . . . . .

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, தவருன விவரத்தை வைத்துக்கொண்டு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள். நஞ்சை நிலத்தை எடுக்கக்கூடாது என்று உத்தரவு போடவில்லை. நஞ்சை நிலம் அதிக விலையாக இருக்கிற காரணத்தினால், கூடுமானவரையில் விலை குறைவாக இருக்கிற நிலங்களை எடுக்கவேண்டும், அதுவும் புஞ்சை நிலம் கிடைக்காவிட்டால் தான் நஞ்சைக்குப் போகவேண்டும், கூடுமானவரையில் புஞ்சைப் பகுதியை எடுக்க வேண்டும், மேட்டுப் பகுதியாகப் பார்த்து எடுக்க வேண்டும் என்று தான் உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ராமலிங்கம் :** அதனால் தான் சட்டம் குறுக்கே நிற்கிறது; கோர்ட்டு குறுக்கே நிற்கிறது. இடத்தை எடுப்பதிலே அர்ஜன்ஸி கிளாஸ் போட்டு எப்படியாவது எடுத்துத் தான் தீரவேண்டும் என்று உத்தரவிட்டாலொழிய, நிலம் எங்கு வந்து சேரப்போகிறது ? விலை குறைந்த நிலத்தைப் பார்க்கவேண்டும், அதுவும் புஞ்சையாகப் பார்க்கவேண்டும், குறைந்த விலையிலுள்ள நஞ்சையாகப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தால், உண்மையிலேயே ஒரு இன்ச் நிலம் கூட அரிஜனங்களுக்குக் கிடைக்காது . . . . . .(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 10 நிமிடங்களுக்கு மேலேயே ஆகிவிட்டது). சீக்கிரமாகவே முடித்து விடுகிறேன். அடுத்தபடியாக, இப்பொழுது அரிஜனங்களைப் பொறுத்தவரையில் பாதுகாப்புகொஞ்சம் குறைவாகத் தான் இருக்கிறது. ஆளும் கட்சி தரப்பிலும் அரிஜன எம்.எல்.ஏக்கல் இருக்கிறார்கள். முன்பு இருந்ததைவிட அவர்களுக்கு பாதுகாப்பு அதிகமாக இருக்கிறதா, குறைந்திருக்கிறதா என்பதை அவர்களே பார்த்து, மனச்சாட்சியோடு சொல்லட்டும். என்னிடம் அது பற்றி ஏராளமான மனுக்கள் வந்திருக்கின்றன. ஜெயராஜ் விஷயத்திலிருந்து நச்சலூரில் ஒரு அரிஜனனுக்குத் தீவைப்பு விஷயம் வரையில், அப்படிப்பட்ட கொடூரமான குற்றச்சாட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன நிலைமையை இப்படி நீங்கள் அனுமதிப்பது சரியல்ல என்ற குற்றச் சாட்டைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஆந்திராவில் காங்கிரஸ் ஆட்சியில் ஒரு அரிஜன் உயிரோடு தீ வைத்து கொளுத்தப் பட்டான் என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா ?

**திரு. எஸ். ராமலிங்கம் :** நான் ஆந்திர நாட்டவன் அல்ல. நான் தமிழன்.

கடைசியாக இந்தக் கார் வாங்குகின்ற விஷயம் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் சற்று எண்ணிப் பார்க்கவேண்டும் நானும் 7 வருஷங்களாக இருக்கிறேன். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி போன்ற மிகப் பெரிய பொறுப்புள்ள பதவி வகித்திருக்கிறேன். என்னுடைய தொகுதி மக்களுக்கு என்ன குறையோ தெரியவில்லை. எனக்கு இன்னும் கார் வாங்கிக்கொடுக்கவில்லை. பொது மக்கள் உங்களுக்குக் கார் வாங்கித் தருவது பற்றி நான் ஒன்றும் கோளாறு சொல்லவில்லை. நீங்கள் தொகுதி மக்களோடு நல்ல தொடர்பு வைத்திருக்கிறவர்கள். ஆனால், எல்லோருக்கும் கார் கிடைக்கிறதா என்பது தான் கேள்வி. எல்லோருக்கும் கார் கிடைப்பதில்லை. அரிஜன எம்.எல்.ஏ-க்குக் கிடைக்கவில்லையே. மந்திரிகளோடு தொடர்பு வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கும் அவர்கள் காரிலே போகிறவர்களுக்குத் தான் அந்த மாதிரி கார் கிடைக்கிறது, உங்கள் கட்சியிலுள்ள அரிஜன எம்.எல்.ஏக்களுக்கு கார் கிடைக்கவில்லை என்று தொகுதியிலுள்ள அரிஜன மக்கள் . . . . . . . . . .

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஓ. பி. ராமன் அவர்களுக்கு ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு, புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் தலைமை தாங்கி கார் வாங்குவதற்கு ஒரு நிதி சேர்த்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ராமலிங்கம் :** ஒரு எம்.எல்.ஏ-க்குக் கொடுத்திருக்கிறீர்கள் மற்றும் . . . . . .

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பேர்ணம்பட்டு உறுப்பினர் திரு. ஜெயராமன் அவர்களுக்கும் கார் வாங்கிக் கொடுப்பதற்கு நிதி வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. எஸ். ராமலிங்கம் :** இம்மாதிரி அவல நிலையை ஏற்படுத்தி விடக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** எலக்டிரிஸிடி போர்டில் கடந்த ஆண்டில் 80 சூபர்வைஸர்களுக்கும், இந்த ஆண்டு 100 சூபர்வைஸர்களுக்கும் வேலை இல்லை என்று சொல்லி, வீட்டிற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். எலெக்டிரிஸிடி போர்டிலிருந்து வந்திருக்கிற தகவல் என்னவென்றால் குந்தா மின் திட்டத்தில் 1967-68-ல் இதுவரையிலே 33 சூபர்வைஸர்கள் வேலையிலிருந்து எடுக்கப்பட்டு, மீண்டும் அவர்களை இப்பொழுது வேலையிலே அமர்த்திக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**திரு. என். சங்கரய்யா :** உதவி சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் தரப்பில் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து, மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பின்வருமாறு கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்பொழுது மற்ற கட்சிகளின் நிலை இதிலே அம்பலம் ஆகிவிடும் என்று சொன்னார்கள். இதிலே அம்பலம் ஆவதற்கு ஒன்றும் கிடையாது. ஏற்கனவே காங்கிரஸ் கட்சித்தேர்தலுக்கு முன்பாக 1967-ம் ஆண்டுத் தேர்தலுக்கு முன்பாக சகோதரக் கட்சிகளிடையே தேர்தல் உடன்பாடு ஏற்படக் கூடாது என்று பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அவர்களுடைய முயற்சிகள், தந்திரங்கள் தோல்வியடைந்து விட்டன. இப்பொழுது அதில்

ஏதாவது ஒரு பிளவு உண்டு பண்ணவேண்டும் என்று கருதிக்கொண்டிருந்தால், அதற்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது. என்னுடைய கட்சி சம்பந்தப்பட்டமட்டில் இந்த மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, இங்கே ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சி ஆட்சி இயங்குகிறது. இந்த மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற காங்கிரஸ் அல்லாத அரசு ஜனநாயக ரீதியில் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் செய்யக்கூடிய நல்ல காரியங்கள் அனைத்தையும் எங்கள் கட்சி ஆதரிக்கும். அதே போல என்னுடைய கட்சி அபிப்பிராயத்திலே, இந்த மாநில மக்கள் ஜனநாயக ரீதியிலே முன்னேறுவதற்குச் செய்யப்படக்கூடிய காரியங்களை நாங்கள் எங்களுடைய சுயேச்சையான முறையில் வற்புறுத்துவோம். மேலும் எங்களைப் பொறுத்த வரையில் ஆக்கபூர்வமான விமர்சனங்களை அளிப்போம். இது தான் எங்களுடைய கட்சி நிலை. எந்த விதமான குழப்பத்திற்கும், வேறு தவறான முறையில் புரிந்துகொள்வதற்கும் இடமில்லை என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நான் கூறிக்கொள்ள விரும்புவது என்னவென்றால்' இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த நேரம் அவர்களுக்கும், அவர்களுடைய கட்சிக்கும் அவ்வளவு சரியான நேரல் இல்லை என்று கருதுகிறேன். தென்காசி உப தேர்தலைப் பொறுத்த வரையில், காங்கிரஸ் கட்சியில் தலைமை மாற்றப்பட்டிருக்கிறது, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைமை மாற்றப்பட்டு ஒரு புதிய நோக்கத்தோடு, புதிய ரத்தம் செலுத்தப்பட்டு, தேர்தல் பிரச்சாரஇயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. நான் கூட வெள்ளத்துரை அவர்களோடு பேசினேன். 20,000 வோட்டு வித்தியாசத்தில் காங்கிரஸ் ஜெயிக்கும் தென்காசி உப தேர்தலில் என்று ஒரு ஊழியர் கூட்டத்தில் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதாகக் கூறப்பட்டது. கடைசியில், தென்காசி உப தேர்தலில் ஒட்டைக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பதைப் போல தேர்தலின் முடிவு அமைந்து விட்டது. காங்கிரஸ் கட்சி எந்த விதமான நம்பிக்கையும் அளிக்கக்கூடியது அல்ல என்று உண்மையிலேயே தமிழ் நாட்டு மக்கள் காங்கிரஸ் கட்சியின் பேரில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கும் இந்த நேரத்தில், காங்கிரஸ் கட்சியினர் சட்டமன்றத்தில் இந்த ஆட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது அவ்வளவு பொருத்தமல்ல.

அடுத்தபடியாக, இன்னொன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சட்டமும் அமைதியும் குலைந்து விட்டது என்ற ஒரு குற்றச்சாட்டைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு குற்றச்சாட்டைக் கொண்டு வந்திருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியில் தான் இப்பொழுது சட்டமும் அமதியும் பாதுகாக்கப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இன்று ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு நெறிமுறை வேண்டும், காங்கிரஸ்காரர்கள் ஒருவரை ஒருவர் தாக்கக்கூடாது, ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பத்திரிகையில் எழுதக்கூடாது என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். முதலில் காங்கிரஸ்காரர்களிடையேதான் சட்டமும், அமைதியும் பாதுகாக்கப்படவேண்டும்.

'I am not here to preside over a disorderly party' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கட்டுப்பாடற்ற ஒரு கட்சிக்குத் தலைமை வகிக்க நான் தயாராக இல்லை என்று கூறியிருக்கிறார். இப்படித் துர்பாக்கியமான நிலையிலே அந்தக் கட்சி இருக்கிறது. அவர்களுக்கு அண்மையில் உப தேர்தலில் தோல்வி ஏற்பட்டிருக்கிறது. தோல்விக்கு என்ன காரணம், தோல்வி என் ஏற்பட்டது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். குறுக்கு வழிகளைப் கடைப்பிடித்ததினால் தான் தோல்வி ஏற்பட்டது.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் " நாங்கள் பிரிட்டிஷ் அரசை ஆதரித்தவர்கள் அல்ல " என்று காங்கிரஸ் கட்சியினுடைய பெருமையைச் சொல்லிக்கொண்டார். ஆனால், நான் அவர்களைக்



கேட்க விரும்புகிறேன். பிரிட்டிஷ் அரசை ஆதரித்த மன்னர்களை, ராஜாக்களை பெருமளவில் ஏன் அவர்கள் கட்சியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் ? இந்த நாட்டில் மன்னர்களையும் ராஜாக்களையும் பெரும் அளவில் சேர்த்துக் கொண்டிருக்கக்கூடிய கட்சி காங்கிரஸ் கட்சி தானே தவிர, மற்ற கட்சி அல்ல. தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களாகவும், அமைச்சர்களாகவும் ராஜாக்கள் இருந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; பெரும் எண்ணிக்கை ஜமீன்தார்கள், மிராசுதார்கள் உள்ள கட்சி காங்கிரஸ் கட்சி தான். மேலும், பிரிட்டிஷ் காமன்வெல்த்தை விட்டு இந்தியா வெளியேற வேண்டும் என்ற தீர்மானம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்பட்டபொழுது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து வெளியே போகக் கூடாது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலேயேதான் இருப்போம் என்று சொன்ன காங்கிரஸ்காரர்களுக்கு இன்றைக்கு மற்ற கட்சிகளைப் பற்றி- குறை கூறுவதற்கு எந்தவிதமான வக்கும் கிடையாது, உரிமையும் கிடையாது.

அதுமட்டுமல்ல, 1947-ல் பிரிட்டிஷ்காரர்களுடைய மூலதனம் ரூ. 200 கோடியாக இருந்தது, இன்றைக்கு ரூ. 800 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படி பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு ஆதரவு காட்டியது காங்கிரஸ் கட்சியே தவிர, வேறு கட்சி அல்ல. பாரதியார்

" உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் "

என்று சொல்லியிருக்கிறார். ஆனால், காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை இன்று அதற்கு மாறாக இருக்கிறது.

" உழவுக்கும் தொழிலுக்கும் நிந்தனை செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை வந்தனை செய்வோம் "

என்ற அளவிலேதான் காங்கிரஸ் கட்சியின் கொள்கை இருக்கிறது.

அதே சமயத்தில்தான், மொரார்ஜி தேசாய் அவர்கள், இடது சாரி கம்யூனிஸ்டுகளும், திராவிட முன்னேற்றக் கழகமும், ஒருமித்துக் கருத்துக் கொண்டிருக்கும் பாங்குகளை தேசியம் ஆக்குவது என்பதை மறுத்திருக்கிறார்கள். அதனால் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் டெபாசிட்டில் இருப்பது இன்றைக்குப் பொது நன்மைகளுக்காகப் பயன்படுத்தாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இதனால் பொதுமக்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் காங்கிரஸ் நண்பர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சொல்லுகிறார்கள், தவறான உணவுக் கொள்கை, விலை கூடுதல் வேண்டும் என்று கேட்கிறார்கள். கோடிக்கணக்கான மக்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள்களைக் கொடுக்க வேண்டும் என்றால், கொள்முதல் செய்தாக வேண்டியிருக்கிறது. நண்பர் மதியழகன் சொல்லுகிறார்கள், ஒரு எக்கருக்கு விலக்கு அளித்திருக்கிறோம் என்று. எங்களுடைய குறையெல்லாம், 10 எக்கருக்கு மேல் இருப்பவர்களிடமிருந்து பூரணமாகக் கொள்முதல் செய்யப்படவில்லை என்பதுதான். அதுவே எங்களுடைய வாதம். நண்பர் கருத்திருமன் உயர்ந்த விலை வேண்டும் என்கிறார்கள். யாருக்காக ? சாதாரண விவசாயிகள் அறுவடையானவுடனேயே தங்கள் தானியத்தை விற்று விடுகிறார்கள். உயர்ந்த விலை யாருக்காக ? நெல்லைக் தேக்கி வைக்கும் சக்தி படைத்த பெரிய முதலாளிகள், காலிடவிஸ்ட், முதலாளிகள் இவர்களுக்காகத்தான். இப்படிப்பட்டவர்களுக்காகத்தான் காங்கிரஸ் வக்காலத்து வாங்கிக் கொண்டு, 1½ வருஷமாகப் போராடுகிறது. அதன் காரணமாகத் தமிழக விவசாயிகள் இவர்களுக்கு எவ்வாறு ஆதரவு கொடுப்பார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். சற்று ஆத்ம சிந்தனை செய்ய வேண்டும்.

தென்காசியில் ஏன் தோற்றார்கள் ? மிராசுதாரர்களைக் காப்பாற்ற வக்காலத்து வாங்கிக் கொண்டார்கள் என்கிற ஒரே காரணத்திற்காகத் தோற்றுவிட்டார்கள். அது மட்டுமல்லாமல், கேள்வி நேரத்தில் இன்று காலையில் விவரங்கள் கொடுக்கப்பட்டன. நில உடமை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் ஒரு சில ஆயிரக்கணக்கான எக்கர்களே வந்தன. பாக்கியெல்லாம் சட்டத்திலே வரவில்லை என்று சொல்லப்பட்டது. என் நிலப்

பிரபுக்கள் இல்லையா ? நிலங்கள் குவிந்து கிடக்கவில்லையா ? அவ்வளவு ஓட்டைகள் நிறைந்த சட்டம் அது. அமெரிக்க நிபுணர் திரு லாஜன்ஸ்கி கூடச் சொன்னார்கள் இந்த நிலச் சட்டம் பெரிய ஓட்டைகள் நிறைந்த சட்டம் என்று.

பூந்தாழங்குடியில் விவசாயிகளுக்கு எதிராகப் போடப்பட்ட வழக்கை வாபஸ் வாங்கவேண்டும் என்று கோரி சர்க்காருக்கு அனுப்பிய மனுவில், சட்டமன்றக் கட்சித் தலைவர்களெல்லாம் கையெழுத்துப் போட்டு அனுப்ப வேண்டும் என்று காங்கிரஸ் கட்சித் தலைவரிடம் கேட்டபோது வருத்தத்தோடு சொல்கிறேன், அவர்கள் கையெழுத்திட மறுத்துவிட்டார்கள். காங்கிரஸ் கட்சித் தலைவரைத் தவிர மற்ற கட்சித் தலைவர்கள் எல்லோரும் கையெழுத்துப் போட்டார்கள். அதிலிருந்து என்ன தெரிகிறது? சட்டமன்றக் காங்கிரஸ் கட்சி விவசாயத் தொழிலாளிகளைத் தண்டிக்க வேண்டும், அந்த 110 பேர்களையும் சிறையிலே போட வேண்டும் என்கிறார்கள். இந்தப் போக்கை அரிசன விவசாயிகள், தொழிலாளிகள் நன்றாகப் புரிந்து கொள்வார்கள்.

சிந்தனை செய்து பாருங்கள். இந்தக் காங்கிரஸ்காரர்கள் தொழிலாளர்களுடைய உரிமைகளைக் கொடுக்க மறுக்கிறார்கள். இந்துப் பத்திரிகை தகராறு எப்படி வந்தது? சங்கத்தின் ஒரு உபதலைவரை வெளியே போடா என்று விசாரணையில்லாமல் தள்ளிவிட்டார்கள். அந்த முதலாளிகள் மமதை பிடித்தவர்கள். செல்வம் இருப்பதால், மாநில சர்க்கார் சொல்வதைக்கூட கேட்கத் தயாராக இல்லை. இந்துப் பத்திரிகை முதலாளிகள் பிடிவாதம் தொழிலாளிகளுக்கு விரோதம் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. அது ஜனநாயகத்திற்கு விரோதம். அந்த இந்துப் பத்திரிகை முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு காங்கிரஸ் கட்சி பேசுகிறது என்றால், தமிழகத் தொழிலாளிகள் காங்கிரசிலே கொஞ்சநஞ்சம் ஆதரவு காட்டுபவர்கள் கூட, அவர்களிடமிருந்து விலகக் கூடிய நிலைமை தான் ஏற்படும் என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

வேலை நிறுத்தம் என்று சொல்லுகிறார்கள். மத்திய சர்க்காரிலே அகில இந்திய ரேடியோ ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்கிறார்களே, ஏன் ? மத்திய சர்க்காரால் நடத்தப்படுகிற ஸ்தாபனத்தில் ஏன் வேலை நிறுத்தம் நடக்கிறது? அப்படியானால் அதற்கு என்ன அர்த்தம். அது அவர்களுடைய கொள்கைக்குத் தோல்வி.முதலாளி, தொழிலாளி என்று இருக்கும் வரையில், இந்த வர்க்கப் போராட்டம் இருந்தே தீரும். ஜனநாயகத்தில், தொழிலாளிகளுடைய உரிமைகளைப் காப்பாற்ற முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அதுதான் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்ய வேண்டும் என்று தொடர்ச்சியாக வற்புறுத்தி வருகிறோம். நண்பர் விநயகம் சொன்னார்கள், இன்றைக்குத் தமிழ் நாட்டில் இந்த அரசாங்கத்தின் பேரில் முதலாளிகளுக்கு நம்பிக்கையில்லை என்று குறிப்பிட்டார்கள். அப்படி யென்றால், என்ன அர்த்தம் ? முதலாளிகளுக்கு அவர்கள் மேல்தான், காங்கிரஸ்மேல்தான், நம்பிக்கை என்று அர்த்தம். ஆகவே, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, தொழிலாளிகளுக்கு, பொது மக்களுக்கு காங்கிரஸ் மீது நம்பிக்கையில்லை என்று அர்த்தம். அதற்கு நாம் என்ன செய்வது? அதனுடைய விளைவு தான் 1967இன் முடிவு.

மொரார்ஜி தேசாய் அவர்கள் ராஜபாளையத்தில் பேசினார்கள். ஒரு இந்திய உதவி பிரதம மந்திரி இப்படியா பேசுவது ? திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தில் போலீஸ் இயந்திரத்தைக் கட்சிக்குச் சாதகமாக உபயோகிக்கிறார்கள் என்று எச்சரித்திருந்தார்கள். தென்காசி உபதேர்தல் சமயத்திலா அப்படிச் சொல்வது ? இவர்கள் எந்த பாரம்பரயத்தைச் சேர்ந்தவர்கள் ? சட்ட பூர்வமாக கேரளத்தில் இயங்கிய அரசாங்கத்தை, பல சேனைகளை வைத்து விடுதலை இயக்கத்தைக் கிளப்பி அமைதியாகத் தீ வைத்து, பள்ளிக்கூடங்களுக்குத் தீ வைத்து, விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் பெரும்பான்மைக் கட்சியாக அரசு செலுத்திய கட்சியைக் கவிழ்க்க செயல்பட்ட பாரம்பரியத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியா இந்த வகையில் பேசுவது, சட்டம் அமைதியைக் குலைத்த நீங்களா சட்டம் அமைதி சீர்குலைந்து விட்டது என்று பேசுவது ?





மாணவர்களை பஸ் தொழிலாளிகளுக்கு எதிராகத் தூண்டி விட்டார்கள். உண்மையிலேயே இவர்கள் தொழிலாளிகளுக்கு எவ்வளவு விரோதமாக, எதிராக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளட்டும்.

இன்னொன்று ஆச்சரியமாக இருக்கிறது. அந்தக் குற்றச் சாட்டு, " இர்ரிலிஜியஸ் " என்று சொல்லப் பட்டிருக்கிறது. கேட்க விரும்புகிறேன். வேறு ஒரு மதத்தைச் சேர்ந்த ஜனதிபதி இருக்கிறார். அவருடைய அறையில் காளி படத்தை வைக்க வேண்டும் என்று இவர்கள் கூறுவார்களா ? சிறுபான்மை மதத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி இருக்கும் இடத்தில் வேறு மதப் படங்களை வைக்க வேண்டும் என்றால், யார் "தீர்மானிக்க வேண்டும் ? அகில இந்திய காங்கிரஸ் என்ன சொல்கிறது. ஸெக்குலர் ஸ்டேட் என்று சொல்லுகிறது. அப்படிச் சொல்பவர்கள் இதை எப்படிச் சொல்லுகிறார்கள்? இல்லையென்றால், சொல்லிவிடுங்கள், நாங்களும் ஜனசங்கத்தைப் போன்று, மத அடிப்படையில் செயல் படுகிறோம் என்று. செக்குலர் ஸ்டேட் என்று சொல்லாதீர்கள். செக்குலர் ஸ்டேட் என்று சொன்னால் மதத்திற்கும் அரசாங்கத்திற்கும் சம்மந்தம் இல்லை. ஆனால் ஏன் இந்த முயற்சியில் ஈடுபடுகிறார்கள். ஏன் மத வெறியைத் தூண்டிவிடுகிறாகள்? வேறு சரக்கில்லை (பலத்த ஆரவாரம்) ஜனநாயக ரீதியில், தொழிலரளிகள் நன்மைக்காக, விவசாயிகள் நன்மைக்காக, இந்த அரசாங்கத்தோடு பேச அவர்களிடம் சரக்கில்லை. ஆகவே தான் நிலப் பிரபுக்களுக்காக பேசுகிறாகள், மதவெறியைத் தூண்டிவிடுகிறார்கள்

மற்றொன்று, தீப்பிடிக்காத வீடுகள் எங்கே என்று கேட்கிறார்கள். ஆந்திர அரசினால் எவ்வளவு தீப்பிடிக்காத வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன ? அங்கேயும் பல தீ விபத்துக்கள் வந்தன. இந்தியாவிலேயே வேறுவேறு மாநிலங்களில் தீப்பிடிக்காத வீடுகளை எவ்வளவு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள் ? நண்பகல் 12-00

THIRU K. VINAYAKAM : On a point of Order, Sir.

**திரு. என். சங்கரய்யா :** அது மட்டுமல்ல . . . .

THIRU K. VINAYAKAM : When I am raising a point of Order, the Hon. Member should sit. Why is he not sitting ?

(திரு. என். சங்கரய்யா அவர்கள் உட்கார்ந்தார்.)

THIRU K. VINAYAKAM : The matter before us is no-confidence motion tabled by the Leader of the Opposition. I would like to know from my Hon. Friend whether he is talking on the no-confidence motion or is he delivering a lecture on the floor of Parliament ? It is irrelevant. Why should we subject ourselves to such inhuman treatment ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சங்கரய்யா தொடர்ந்து பேசுவார்கள்.

**திரு. என். சங்கரய்யா :** நண்பர் விநயகம் அவர்கள் மிகவும் கோபத்துடன் கேட்கிறார், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீதுதானா பேசப்படுகிறது என்று. நான் என்ன சொல்லிக்கொள்கிறேன் என்றால், காங்கிரஸ்மீது, காங்கிரஸ்காரர்களின்மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை, இந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (ஆரவாரம்). ஆகவே எந்த வழியில் பார்த்தாலும் காங்கிரஸ்காரர்களுக்கு இந்த அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு எந்தவகையிலும் பொருத்தமல்ல என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மதுவிலக்கைப்பற்றி எங்களுடைய கட்சியினுடைய கொள்கை என்ன என்பதைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். நாங்கள் எல்லாம் கூட்டுக் கட்சிகளாக, ரத கஜ துரக பதாதிகளாக வேலைசெய்கிறோம்

என்று காங்கிரஸ்காரர்கள் கூறுகின்றனர். எங்களுடைய கட்சி அகில இந்திய அடிப்படையில் இருக்கிறது. தொழிலாளர் மக்களுக்கும், விவசாய மக்களுக்கும் பாடுபட வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் வேலை செய்கிறதே தவிர, வேறு எந்த சக்திக்கும் எங்கள் கட்சி வேலை செய்யவில்லை. ஆனால் அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சி பெரிய பெரிய முதலாளிகளுக்கும், ராஜாக்களுக்கும், நிலப் பிரபுகளுக்கும் வேலை செய்கிறது. ஆகவேதான், உங்களுடைய கட்சியின் கொள்கைகளை மாற்றிக் கொண்டால்தான மக்களை உங்கள் பக்கத்தில் இழுக்க முடியும். இன்றைக்கு மதுவிலக்குப் பிரச்சினையே எடுத்துக் கொண்டால், தேர்தலுக்கு உடன்பட்டு வந்த கட்சிகளிடையே அபிப்பிராயபேதங்கள் இருக்கலாம். நாங்கள், "மதுவிலக்கு நாடு முழுவதிலும் நல்ல முறையில் அமலாக வில்லை. ஆகவே, அதைப்பற்றி புனராலோசனை செய்ய வேண்டும்" என்று எங்கள் கட்சியின் சார்பாகக் கூறுகிறோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், மதுவிலக்கை அமல்படுத்த மேலும் மேலும் ஆர்வத்தோடு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறது. ஆகவே, உடன்பாடு கட்சிகளுக்கிடையே இயல்பாக இருக்கக்கூடிய வித்தியாசங்கள் இருக்கக்கூடும். இந்த மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை எங்களுடைய கட்சி ஜனநாயக ரீதியில் ஆதரிக்கிறது. கூட்டுக் கட்சி என்ற அடிப்படையில் ஜனநாயக ரீதியில் ஆதரவு கொடுக்கிறது. நீங்கள் குஜராத்தில் கூட்டு சேர்ந்தவர்களைக் கைவிட்டதைப்போல நாங்கள் கைவிடமாட்டோம். உங்களுக்கு வேண்டுமானால் பஞ்சாபில் ஜனசங்க பரிஷித்துடன் சேர்ந்து ஜில் மந்திரிசபையை ஆதரிப்பீர்கள். வேண்டாமென்றால், மந்திரிசபையைக் கவிழ்த்துவிடுவீர்கள், உங்களுக்கு வேண்டுமென்றால் கேரளாவில் முஸ்லீம்லீக்கோடு சேர்ந்து மந்திரிசபையை ஏற்படுத்துவீர்கள், உங்களுக்கு வேண்டாமென்றால் மந்திரிசபையைக் கவிழ்ப்பீர்கள் (ஆரவாரம்). ஆகவேதான் கடைசியாக உங்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கு பேசியவர்கள் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றியும், அதில் காங்கிரஸ்காரர்கள் எடுத்துக் கொண்ட பங்கைப்பற்றியும் பேசி, காங்கிரஸ்காரர்கள் மட்டும்தான் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள் என்ற கருத்தில் பேசினார்கள். நானும் 1942 முதல் 1944-வரை ஆகஸ்டு போராட்டத்தில் கலந்து கொண்டு, சுதந்திரத்திற்காகப் போராடி வேலூர் சிறைச்சாலையிலும், தஞ்சாவூர் சிறைச்சாலையிலும் இருந்தவன். நான் சிறையில் இருந்த காலத்தில், சுதந்திரத்திற்காகப் போராடிய காங்கிரஸ்காரர்களில் பலரை இங்கு நான் பார்க்க முடியவில்லை. திரு கோமதி சங்கர தீட்சிதர் அவர்களை மட்டும்தான் இங்கு பார்க்கிறேன். இங்கிருக்கும் காங்கிரஸ்காரர்களில் பலரை நான் சிறையில் பார்த்ததுகூட இல்லை. எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கலாம். ஆனால் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் பத்துப் பேராக இருந்தாலும், அதில் நான்கு பே சிறையில் இருந்தவர்கள். காங்கிரஸ் கட்சி சட்டசபை உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் எத்தனை பேர் சிறையில் இருந்தவர்கள் என்பதைப் புள்ளிவிவரத்துடன் கூற நான் தயாராக இருக்கிறேன். இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி, கட்சி பெருமையைப் பார்க்காமல், பெருமையை விட்டுவிட்டு, போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் காங்கிரஸ் கட்சியானது ராஜா சகளுக்கும், மிட்டா-மிராசுதார்களுக்கும், பெரிய முதலாளிகளுக்கும்தான் உறுதுணையாக இருந்து வந்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "இது நேர்மையற்ற ச க்கார், நியாயமற்ற சர்க்கார்" என்று குறிப்பிட்டார்கள். பாரதியார் அவர்கள்,

"நெஞ்சில் உரமு மின்றி
நேர்மைத் திரமு மின்றி,
வஞ்சனை சொல்வா ரடீ !—கிளியே !
வாய்ச்சொல்லில் வீர ரடி !"

என்று கூறியபடி, காங்கிரஸ்காரர்கள் வாய்ச்சொல்லில்தான் வீரர்களாக இருக்கிறார்கள். செயலில் திறனற்று இருக்கிறார்கள். அதே அளவில்தான் இன்றைக்குத் தமிழ்நாடு காங்கிரஸ்கட்சி முதலாளிகளுக்கும், நிலப்பிரபுக்களுக்கும், பிற்போக்குச் சக்திகளுக்கும் உடந்தையாக இருக்கின்ற காரணத்தி



னால், அது இந்த அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீரமானம் கொண்டு வருவது எந்தவிதத்திலும் பொருத்தமல்ல. காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய பிற்போக்குக் கொள்கையை மாற்றிக் கொள்ளாத வரையில், அவர்கள் மக்கள் நம்பிக்கையைப் பெற மாட்டார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் கட்சியின் சார்பாக நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், காங்கிரஸ்காரர்கள் கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று கூறி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன் (ஆரவாரம்).

***திரு. சு. துரைசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க இயலாமைக்கு வருத்தப்படுகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், எனக்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் உறுப்பினர்களும், "திராவிட முன்னேற்றக் கழக அரசின் தொழிலாளர் கொள்கை என்ன ? தொழில் கொள்கை இல்லை" என்பதைப் பற்றியே பேசினார்கள். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை இந்த மன்றத்தின் மூலமாக கேட்டுக் கொள்வதெல்லாம், கடந்த இருபதாண்டுக் காலமாக ஆண்ட காங்கிரஸ் கட்சிக்குத் தொழில் கொள்கை என்ன ? அதை இந்த மன்றத்தில் தாக்கல் செய்வீர்களா என்பதுதான். திராவிட முன்னேற்றக் கழக அரசு, "இதுதான் தொழிலாளர்கள் பற்றிய கொள்கை" என்று எதையும் வரையறுத்துக் கூறவில்லையென்று காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு முதல் ஆண்டு நம்முடைய தொழிலாளர் அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்தார்கள். அதைக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்கூட பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்குத் தமிழகத்திலே உள்ள தொழில்கள் இருபதாண்டுக் காலமாக காங்கிரஸ் ஆட்சியில் ஏற்பட்டது என்றும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் தொழில்கள் பாதிக்கப்பட்டு விட்டன என்றும் பலமுறை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேசிவருகிறார்கள். நானும்கூட சென்ற ஆண்டு தொழில் மானியக் கோரிக்கையின்மீது ஒரு கருத்தைக் குறிப்பிட்டேன். அதற்கு எதிர்க் கட்சித் தரப்பிலிருந்து இன்னும் பதில் வரவில்லை.

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் தேதி திரு நடேசன் அவர்கள் தொழில்கள் பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் தொழில் வளர்ச்சி 9 சதவீதம் என்றும், அதில் தமிழ்நாட்டில் 4·8, 4·9 சதவீதம்தான் ஏற்பட்டிருக்கிறது என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சியில் ஏக இந்தியாவுக்கும் 9 சதவீதம் என்னும் அளவில் தமிழ்நாட்டிற்கு 4·8, 4·9 சதவீதம் என்று இருந்ததே தவிர அதிகமாகவில்லை. அப்படித் தொழிற்சாலைகள் ஏற்பட்டதற்கும் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கப்பட்ட நாளிலிருந்து, "தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டு வருகிறது, வடக்கேயுள்ள மாநிலங்கள் 200 கோடி ரூபாய் 300 கோடி ரூபாய் அளவில் திட்டம் போட்டு தொழில்களை உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள், திட்டத்தின் பணம் முழுவதும் வட நாட்டில்தான் செலவழிக்கப்படுகின்றது" என்று சொல்லிக் கொண்டு வந்ததன் காரணமாகத்தான் தமிழகத்தில் இந்த அளவுக்காவது தொழிற்சாலைகள் ஏற்பட்டன என்பதை நாட்டு மக்களின் மத்தியிலே கேட்டுப் பார்த்தால் விளங்கும். தமிழ்நாட்டிற்கு ஏதாகிலும் தொழிற்சாலைகள் ஏற்பட்டது என்றால், அது உங்களுடைய திறமையாலும், ஆற்றலாலும், ஏற்பட்டது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், கோயம்புத்தூரில் பஞ்சாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் பஞ்சாலைகள் மூடப்பட்டன என்றால் அதற்குப் பொறுப்பு இந்த மாநில அரசு அல்ல. மத்திய அரசாங்கத்தாலேதான் அவை மூடப்படும் நிலைமை ஏற்பட்டன. ஒரு கிலோவுக்கு 1 ரூபாய் 20 பைசா என்றிருந்த வரியை

ஒரு கிலோவுக்கு 6 ரூபாய் 20 பைசா என்று உயர்த்தியதன் காரணமே தவிர, வேறு காரணம் கிடையாது. காங்கிரஸ் உறுப்பினர்கள் இதையெல்லாம் மறந்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது குற்றச்சாட்டைச் சுமத்த வேண்டுமென்பதற்காக இவ்வாறு சொல்லிக் கொண்டு வருகிருர்கள். எந்த அடிப்படையில் நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்கள் என்று காங்கிரஸ் உறுப்பினர்களைக் கேட்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் செய்திருக்கின்ற பயனுள்ள காரியங்கள் எல்லாவற்றையும் என்னுல் குறிப்பிட முடியாவிட்டாலும், இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழநாட்டிலுள்ள நெய்வேலிச் சுரங்கத்தில் வேலை செய்யும் சுமார் 15 ஆயிரம் தொழிலாளர்களுக்குத் தங்களுடைய ஊதியத்தில் பத்துப் பதினைந்து ரூபாய் சேர்த்துக் கொடுத்து, உயர்வான சம்பளத்தைப் பெற்றுத் தந்தார்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மேலும் மின்சார வாரியத்தின் பத்தாண்டுக்காலத்திற்கு மேலாக சம்பளம், பதவி உயர்வு, வேலை நிரந்தரம் இல்லாமலிருந்த 50 ஆயிரம் தொழிலாளர்களுக்கு 16—12—1967-ல் இருந்து பதவி உயர்வும், சம்பள அதிகரிப்பும் வேலை நிரந்தரமும் கிடைத்திருக்கின்றன. அதேபோல வால்பாறையை எடுத்துக் கொண்டால் ஒரு கிலோ தேயிலை கொய்வதற்கு 4½ பைசா கூலி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருவதற்கு முன்னே பெற்று வந்தார்கள். ஆனுல் இன்றைக்கு 6½ பைசா கூலி பெறுகிருர்கள். இப்படி நூற்றுக்கு 50 உயர்வு பெற்றிருக்கிருர்கள். ஆக இன்றைக்குத் தொழிலாளர் சமூகம் இந்த அரசை வாழ்த்துகிறது.

அதே நேரத்தில் இந்த மன்றத்தில் எடுத்துப் பேசினுர்கள். கோவையில் மில்களை மூடிவிட்டார்களே என்று. காங்கிரஸ் கட்சி உடுப்பினர்கள் தயவு செய்து பதில் சொல்ல வேண்டும். அவர்களது காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கிற எத்தனை இடங்களில் எத்தனை மில்கள் மூடப்பட்டிருக்கின்றன ? குஜராத்தில் நெசவு ஆலைகளே மூடப்பட்டிருக்கின்றனவே, இதற்கு காங்கிரஸ் கட்சிதான் பொறுப்பாளியா ? வேலை இழந்த தொழிலாளர்களுக்கு காங்கிரஸ் ஆட்சி நடக்கிற எந்த இடத்திலாவது உதவித் தொகை அளிக்கப்படுகிறதா ? மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக—இந்தியாவில் எந்த மாநிலத்திலுமே இல்லாத வகையில்—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெறுகிற நம்முடைய மாநிலத்திலே தான் 40 ரூபாய் என்று உதவி அளிக்கப்படுகிறது.

இன்னொரு குற்றச்சாட்டைச் சொன்னுர்கள். ஏராளமான மனித சக்திகள் வீணடிக்கப்படுகிறது என்ருர்கள். புள்ளிவிவரங்களை எடுத்துப் பார்க்க வேண்டும். 1965-ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இருந்தபோது வீணடிக்கப்பட்ட மனித சக்தி—மணியில்—4,59,401 ஆக இருந்தது. அது 1966-ஆம் ஆண்டு 7,54;612 ஆக உயர்ந்தது. அவாகளது ஆட்சியிலே 1965-66க்குள் அதிகரித்த வேலை இழப்பு மணிகள் 2,95,211 ஆகும். திராவிட முன்னேற்றக் கழகம் வந்த பிறகு இது 50 சதவிகிதம் குறைவாகியிருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் இருந்த காலத்தில் டிராம்வே மூடப்பட்டது. சூளையில் இருந்த மில் மூடப்பட்டது. இதன் காரணமாகப் பல ஆயிரக் கண்க்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். இவை எல்லாம் இன்றுவரை திறக்கப்படவில்லை. இதற்குக் காங்கிரஸ் உறுப்பினர்கள் என்ன பதில் சொல்லுகிருர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

அதுபோல திராவிட முன்னேற்றக் கழகம் வருவதற்கு முன்னுல் 1965-இல் இந்த ராஜ்யத்தில் ஏற்பட்ட தொழிற் தகராறு 6,139 ஆக இருந்தது. 1966-இல் 7,750 ஆக உயர்ந்தது. அவர்களது ஆட்சியிலேயே ஓராண்டுக் காலத்திற்குள் அதிகரித்த தொழில் தகராறு 1,041 ஆகும். திராவிட முன்னேற்றக் கழகம் வந்த பிறகு 1967-இல் அதிகரித்த தொழில் தகராறு 293 தான். காங்கிரஸ் ஆட்சியில் வளர்ந்த தொழில் தகராறின் எண்ணிக்கை எங்களது ஆட்சியில் குறைந்தேதான் இருக்கிறது





இன்று எதிர்தரப்பில் இருக்கிறவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒட்டுமொத்தமாக நாட்டில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற தொழில் மந்தத்திற்குக் காரணம் காங்கிரஸ் கட்சியின் கொள்கைதானே தவிர வேறு இல்லை. வேலை வாய்ப்புத்தமிழ் நாட்டில் மட்டுமா குறைந்துவிட்டது ? இந்தியா எங்குமே படர்ந்திருக்கிறது. அதற்குக் காரணம் ஐந்தாண்டுத் திட்டம் முறையாகத் துவக்கப்படவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் துவக்கப்படாததற்குக் காரணமே மத்திய ஆட்சியில் உள்ள காங்கிரஸ்காரர்கள் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் குறிப்பிட்டார்கள், நாங்கள் ஒரு படி அரிசி என் கேட்கக் கூடாது, 64 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை நாங்கள் பெறவில்லையா என்ருர். பணிவோடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். பொதுத் தேர்தலுக்குப் பிறகு மூன்று இடைத் தேர்தல்கள் வந்துவிட்டன. தென்சென்னை பாராளுமன்றத் தொகுதி சங்ககிரி தொகுதி, தென்காசி தொகுதி தேர்தல்கள் வந்தன. மூன்றிலுமே பொதுத் தேர்தலில் கிடைத்த ஓட்டுகளைக்கூடப் பெறமுடியாமல் காங்கிரஸ்காரர்கள் தோல்வி அடைந்திருக்கிருர்கள். அங்கிருக்கிற மக்கள் எல்லாம் தவறிப்போய் காங்கிரசுக்கு 67-இல் ஓட்டைப் போட்டுவிட்டோம் என்று ஓட்டைக் குறைத்துத் தோல்வியைத் தந்திருக்கிருர்கள். அப்படி மக்களது முழு நம்பிக்கையையும் பெற்றிருப்பது திராவிட முன்னேற்றக் கழகமாகும். இது நீடூழி வாழ வேண்டுமென்று சொல்லி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று கோரி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீரமானத்தை முழுமனதுடன் ஆதரித்து என்னுடைய கருத்துக்களை வைக்க விரும்புகிறேன்.

1947 விடுதலைக்குப் பிறகு தொடர்ந்து தமிழகத்தில் 20 ஆண்டுகளாகப் பதவியில் இருந்த காங்கிரஸ் கட்சி—உலகத்தில் வேறு எந்தக் கட்சியும் சாதிக்க முடியாத மகத்தான காரியங்களைச் சாதித்திருக்கிறது. இதனை தமிழகத்திற்கு வருகிற அகில இந்தியத் தலைவர்களும், அகில உலகத் தலைவர்களும் போற்றியிருக்கிருர்கள்.

இருந்தும் காங்கிரஸ் கட்சி பொதுத்தேர்தலில் தோற்றது என்ருல் அதற்குக் காரணம் தொடர்ந்து 20 ஆண்டுகளாகப் பதவியில் இருந்ததனுல் மக்களிடம் ஏற்பட்ட சலிப்புணர்ச்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மலிவான வாக்குறுதிகள், கவர்ச்சியான பேச்சு ஆகியவையாகும். 1967 தேர்தலின்போது மக்கள், தங்கள் பிரச்னைகளுக்கெல்லாம் "சஞ்சீவி" மருந்தாகத் தி.மு.க. ஆட்சி திகழும் என எதிர்பார்த்து வாக்களித்தனர். ஆனுல் இன்று சட்டிக்குப் பயந்து அடுப்பிலே விழுந்த நிலையாக மக்கள் மனம் புழுங்கி இருக்கின்ருர்கள். 1967 தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பதவிக்கு வந்தார்கள் என்ருலும் இந்தப் 18 மாதங்களிலேயே மக்கள் இவர்களுடைய ஆட்சியில் அதிருப்தி கொண்டிருக்கிருர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவர்களது ஆட்சி ஏற்பட்ட பிறகு வரிகள் குறையவில்லை, வசதிகள் பெருகவில்லை. ஒருசிலருக்குத் தவிர, வேதனைகள் தீரவில்லை. இதனை உணர்ந்தே தமிழக மக்களின் சார்பாக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவது காங்கிரஸ் கட்சியின் கடமை என்று கொண்டு வந்திருக்கிறோம். பொதுவாக கடந்த 18 மாதங்களாக பெருகி வரும் ஊழல்களையும் நிர்வாகத்தில் உள்ள நேர்மையற்ற போக்கினையும் மெத்த உருக்கத்தோடு உற்றுக் கவனித்த பின்னர் ஆரஅமர யோசித்துப் பார்த்த பின்னரே இதைக் கொண்டு வந்திருக்கிறோம். காங்கிரஸ் கட்சியின் சார்பில் 49 உறுப்பினர்கள் தானே இருக்கிருர்கள், நாங்கள் 139 பேர்கள் இருக்கிறோம் என்று ஆளும் கட்சியினர் அலட்சியம் காட்டவேண்டாம். எங்கள் 49 பேர்களுக்குப் பின்னுலே ஆர்ப்பரித்து எழுந்துள்ள ஜன சமுதாயம் இருக்கிறது, அதற்கு நாங்கள் தலைமை தாங்கிப் பேசுகிறோம். என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.***

---

* பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

தயவுசெய்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகத்தை நான் விமர்சனம் செய்கின்ற நேரத்தில் யாரும் குறுக்கிட வேண்டாம். உங்கள் இதயக் கதவுகளைத் திறந்து வைத்து, மனச் சாட்சியை யோசிக்க அனுமதி யுங்கள் என்று கூறி என் உரையைத் தொடங்குகிறேன்.

என்னுடைய முதல் குற்றச்சாட்டு பதவி ஒரு சிலருக்காகத் துஷ்பிர யோகம் செய்யப்படுகிறது என்பதாகும். அதற்கு ஒரு உதாரணம், பம்பா யில் உள்ள ஒரு தனிப்பட்டவரின் வணிக நிறுவனத்தின் சார்பில் வெளி யிடப்படுகிற வணிக மலருக்கு விளம்பரம் கொடுக்குமாறு இங்குள்ளவர் களைக் கோரி அந்த நிறுவனத்தினர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை அடுத்த முதல் பக்கத்தில் விளம்பாம் செய்வதற்கு 1,500 ரூபாய், இரண்டாவது பக்கம் என்றால் 1,000 ரூபாய், உள்ளே ஒவ்வொரு பக்கத்திற்கும் 750 ரூபாய் என்பதாக விளம்பர விகிதம் இருக்கிறது. அதை அடுத்து ஒரு சிபாரிசுக் கடிதம். தலைப்பில் தமிழக அரசின் முத்திரை இருக்கிறது. தங்கக் கோபுரச் சின்னம் தாங்கிய அந்தக் கடிதத் தில் தமிழக அமைச்சர் ஒருவர் "அந்த வணிக மலரில் விளம்பரம் கொடுக்க நான் சிபார்சு செய்கிறேன். அதில் விளம்பரம் செய்வதனால் தொழில் வளம் பெருகும்." என்று எழுதி கையெழுத்திட்டிருக்கிற கடிதம் இருக்கிறது. ஒரு தனிப்பட்டவரால் வணிக மலர் வியாபார நோக்கத்தோடு வெளியிடப்படுகிறது. தமிழக அமைச்சர் ஒருவர் அதற்கு ஏன் சிபார்சு கொடுக்கிறார் ? அந்தக் கடிதத்தில் அமைச்சர் ஏன் கையெழுத்துப் போட்டார் ?அறிந்துதான் போட்டாரா ? வெளியிடத்து நிர்ப் பந்தமா ? உள்ளிடத்து நிர்ப்பந்தமா ? இது மாதிரியான ஒரு கடிதத்தை ஒரு தொழிலதிபர் என்னிடம் காட்டிப் பொதுவாக விளம்பரம் பெறு வதற்குத் துணை செய்பவர்களுக்கு வியாபாரக் கழிவு கொடுப்பதுண்டு என்று சொன்னபோது அது மாதிரி இது இல்லை என்று மார்தட்டிச் சொல்வதற்கு என்னிடம் ஆதாரம் இல்லையே என்று வேதனைப்பட்டேன். அந்தக் கடிதத்தை இந்த அமைச்சரவையிலே நான் பெரிதும் மதிக்கின்ற அடக்கமே உருவான, பொறுமையே உருவான ஒரு அமைச்சர் கொடுத்திருக் கிறார் என்றால் என்ன நினைக்க முடியும் ? என்ன ஆதாரம் இருக்கிறது என்று யாரும் கேட்க வேண்டாம். அமைச்சர் அவர்கள் கையெழுத்துப் போட்டுக்கொடுத்த கடிதமே என்னிடம் இருக்கிறது. உதவி சபாநாயகர் அவர்களின் அனுமதியோடு அதை இங்கே படிக்கிறேன்.

It gives me great pleasure in recommending to you this special publication entitled " Industrial Madras " devoted to the problems and prospects of industries in Madras. It will review the progress made by various industries in Madras and thus will contribute a great deal towards the development of industries in Madras. This is a project which deserves to be supported and I hope you will extend them all possible co-operation for its success என்று இருக் கிறது. ஆகவே ஒரு தனிப்பட்ட நிறுவனம் லாப நோக்கத்தோடு செயல் படுவதற்கு பதவி துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

அடுத்து நான் சாட்டுகின்ற குற்றச்சாட்டு குறுக்கு வழியிலே சிலர் பணம் சம்பாதிப்பதற்கு அரசாங்க நிர்வாகம் பயன்படுத்தப்படுகிறது என்ப தாகும். அண்மையில் முதலமைச்சர் அவர்களுடைய 60-ஆவது பிறந்த நாள் கொண்டாடப்பட இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் நீடூழிகாலம் வாழ வேண்டும் என்பதிலேயும் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டும் என்பதிலேயும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் அதன்மூலம் பெருத்த வருவாயைத் திரட்டுவதற்கும் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதற்காக அதிகாரங்கள் அத்தனையும் துஷ்பிரயோ கம் செய்யப்படுகின்றன. முதலமைச்சர் பிறந்த நாள் விழா மலருக்காக விளம்பரம் கேட்டு மலரை வெளியிடும் மேலவை உறுப்பினர், எல்லாக் கூட்டுறவு வங்கிகளுக்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தில்

I have decided என்று இருக்கிறது. It is decided என்று கூட இல்லை. I have decided என்று எழுத ஆரம்பித்த அவர் . . . . .



............to publish a quality souvenir on the occasion of the sixtieth birthday of the Madras Chief Minister. I look forward with confidence to your kind patronage and support by way of advertisements in the souvenir and it is earnestly requested that your esteemed order may please be sent in the enclosed form

என்று எழுதியிருக்கிறார்கள். விளம்பர விகிதம் பக்கம் ஒன்றுக்கு ரூ. 500 என்றும், இரண்டு கலருக்கு ரூ. 1,000 என்றும் கொடுக்கப் பட்டிருக்கிறது.

இத்துடன் இன்னொரு கடிதம் வருகிறது. அந்தக் கடிதத்தை டெபுடி ரிஜிஸ்திரார், மதுரை (அவர் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை) எழுது கிறார், உதவித் தலைவரின் அனுமதியுடன் படிக்கிறேன்.

I enclose herewith a pamphlet regarding a quality souvenir to be issued on the occasion of the sixtieth birthday of the Hon. Madras Chief Minister Thiru C. N. Annadurai. I request you to give an advertisement to the souvenir to be issued so as to popularise the activities of your bank. In this connection you may incur an expenditure for the advertisement of Rs. 500 which may be met out of General funds. Please intimate the date of remittance to me after remitting the amount.

கொடுக்கலாம் என்று சொல்லியிருந்தாலும் கூட பாதகமில்லை. இறுதியாக உத்தரவு போடப்பட்டிருக்கிறது. Please intimate the date of remittance to me after remitting the amount என்று இருக்கிறது. கொடுத்து விட்டுத் தகவல் வேறு கொடுங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலேதான் எனக்கு ஒரு திருக்குறள் ஞாபகத்திற்கு வருகிறது.

" வேலோடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு."

மலர் வெளிவர இருப்பது முதல் அமைச்சருக்குத் தெரியாமல் இருக்க முடியாது ; அதேபோல் இந்த உத்தரவுகளெல்லாம் சட்டக் கூட்டுறவு அமைச்சருக்குத் தெரியாது என்று யாரும் சொல்ல முடியாது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுவரை பொறுமையாகப் பேசினார்கள். திடீரென்று இங்கே பாய்கிறார்கள். சட்ட அமைச்சருக்குத் தெரியும் என்று ஆதாரத்தோடு சொன்னால் அதற்கு நான் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். கோவாப்ரேடிவ் சொஸைடீஸ் ஆக்டிலே எந்த எந்த காரியங்களுக்கு என்ன என்ன செய்யலாம் என்று இருக்கிறது. அவற்றிற்கு நான் பின்னாலே விளக்கம் சொல்லலாம் என்று இருக்கிறேன். ஆகவே, சட்ட அமைச்சருக்குத் தெரியும் என்றால் ஆதாரத்தோடு சொல்ல வேண்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** கூட்டுறவு அமைச்சருக்குத் தெரியாமல் இது நடந்திருக்க முடியாது. அவர்களுக்குத் தெரியாமல் அதிகாரிகள் கடிதம் எழுதியிருக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திருப்பித் திருப்பி அதையே சொல்கிறார்கள். சட்டத்திலே டெபுடி ரிஜிஸ்திரார், ரிஜிஸ்திரார் அவர்கள் எல்லாம் எது எதற்காகச் செய்யலாம் என்பதற்கு இருக்கிறது. சட்ட அமைச்சருக்குத் தெரிந்தது என்றால் எப்படி என்று சொல்ல வேண்டும், இங்கிருந்து உத்தரவு போயிருக்கிறதா அல்லது எப்படி என்று சொன்னால் சொல்ல முடியும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நான் சொல்ல விரும்புவது அதிகா ரத்தை துஷ்பிரயோகம் செய்திருக்கிறார் என்பதுதான்........

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தாங்கள் இதற்குத் தீர்ப்பு வழங்க வேண்டும். சட்ட அமைச்சருக்குத் தெரிந்துதான்

[திரு. செ. மாதவன்] [1968 ஆகஸ்ட் 26

இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள், அரசாங்கம் வேறு, அதிகாரிகள் வேறு, அரசாங்கம் குறுக்கிட்டு இருப்பதாகச் சொல்கிறார்கள் என்றால் அதற்கு ஆதாரம் கொடுக்க வேண்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அந்த அதிகாரி இந்த அரசாங்கத்திலே தான் பணிபுரிகிறார். அதிகாரிகள் செய்வதற்கு அரசாங்கமே பொறுப்பு. இதைவிட வேறு என்ன வேண்டும்? தமிழகத்திலே கூட்டுறவு நிறுவனங்கள் எத்தனையோ நஷ்டத்திலே நடந்து கொண்டிருக்கின்றன. அதிலே இருக்கிற ஜெனரல் பண்டிலிருந்து அந்த நிறுவனததின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் தான் அந்தப் பணத்தைப் பயன்படுத்த வேண்டும். இந்த நாட்டிலே பாடுபட்டு உழைக்கும் பாட்டாளிகள் உணவுக்காகவும் உடைக்காகவும் ஜீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டு, வாழ்வதா இல்லையா என்ற நிலையில் ரத்தக் கண்ணீர் விடுகின்றார்களே அவர்களுடைய வட்டிப் பணத்திலிருந்து சேர்க்கப்பட்டது இந்தப் பொது நிதி. அதிகாரம் உங்கள் கையிலிருக்கிறது என்பதற்காக அந்த நிதியைச் சூறையாட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கூட்டுறவுச் சட்டத்திலே காமன் குட் பண்டிலிருந்து என்ன என்ன செய்யலாம், எதற்குப் பயன்படுத்தலாம் என்று இருக்கிறது. அதற்கு முரணாக யாராவது நடந்தார்களா என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஜெனரல் பண்டிலிருந்து எது எதற்குப் பயன்படுத்தலாம் என்பது எனக்கும் தெரியும். தனிப்பட்ட ஒருவருடைய பிறந்த நாள் விழா மலருக்காக........

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு இரக்கமாகத் தெரியலாம். ஆனால் முதலமைச்சரவர்களை நாங்கள் உன்னதமான தலைவராகக் கருதுகிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஒரு சிலருக்காக அந்த நிதி பயன்படுத்தப்படுகிறது.

உலகத் தமிழ் மாநாட்டு வசூலைப் பற்றியும் மாநாடு கணக்குப் பற்றியும் விளக்கம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிங்கம்புணரி மருத்துவமனைக்கான வசூல் பற்றிய விவரங்கள் இப்போது வந்துள்ளன. இதைப் பற்றி முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள் அன்றைக்கு விளக்கமாகப் பேசினார்கள். மருத்துவ மனை நிதிக்காக 1968-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியன்று ஒரு எம். எல். ஏ. தலைமையிலே மதுரையிலே ஒரு நடன நிகழ்ச்சி நடந்தது. அந்த நிகழ்ச்சி சம்பந்தப்பட்ட வசூலுக்கான ரசீதுகூட என்னிடம் இருக்கிறது, உதவித் தலைவரின் அனுமதியோடு அதைப் படிக்க விரும்புகிறேன். சிங்கம்புணரி அரசினர் மருத்துவ மனை நிதிக்காக நிகழ்ச்சி. நடனம் குமாரி ஜெய லலிதா. தலைவர் எம். ஜி. ராமச்சந்திரன் என்று எல்லாம் இருக்கிறது. தேதியில்லை; இடமுமில்லை. இந்த ரசீது யாருக்கு என்றால் மெஸர்ஸ் பன்ஸிலால் அன்ட் கம்பெனி, மெட்ராஸ்-1 அவர்களுக்கு. 1968-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி போட்டு ரசீது கொடுத்திருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சி 15-8-1968-ம் தேதியே முடிந்துவிட்டது. அதற்கு 20-ம் தேதியன்று ரசீது கொடுத்திருக்கிறார்கள், ரசீது எண் : 2604 என்று இருக்கிறது. இது போன்று இன்னொரு ரசீதில் தேதியே போடவில்லை, என்றைக்கு நிகழ்ச்சி நடக்குமென்றே தெரியவில்லை. ரசீது எண் : 2606. மருத்துவ மனை என்ற பெயரால் இது போன்று நடந்து முடிந்த நடன நிகழ்ச்சிக்குப் பணம் வசூல் செய்வது நிறுத்தப்படுமா அல்லது 1972 வரை தொடர்ந்து நடைபெறுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதற்கு என்று ஒரு குழு போட்டு இருக்கிறது. அவர்களைக் கேட்க வேண்டும். இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? அந்தக் குழு தொடர்ந்து பணியாற்றிக் கொண்டு இருக்கிறது. வேண்டுமானால் அவரிடமும் அனுப்பி வைக்கிறேன்



1968 ஆகஸ்ட் 26]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இப்படிச் செய்தால் மக்கள் தான் பெரிதும் கஷ்டப்படுவார்கள் என்று சொல்லிக் கொண்டு, மக்கள் எதைச் செய்தாலும் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள். மக்கள் சக்தி திரண்டெழுந்து ஒரு சூறாவளியாக வந்தால் அதிலே சிக்கிய துரும்பாக நீங்கள் மாற வேண்டிவரும் என்று எச்சரித்து கொண்டு இந்த ஆட்சியில் ஒழுங்கு இல்லை. நேர்மையில்லை, நம்பிக்கையில்லை. எனவே இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை. இல்லை, இல்லை என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையிலே கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது என்று சொன்னவுடன் பெரும் ஆச்சரியப்பட்டேன். ஏனென்றால் காங்கிரஸ் கட்சியினர் எந்த முகத்தோடு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரப் போகிறார்கள் என்று பெரும் ஆச்சரியமாக இருந்தது. சென்ற தடவை நானும் இந்தச் சட்டமன்றத்தில் அவர்கள் என்ன என்ன செய்தார்கள், வெளியே என்ன என்ன செய்தார்கள் என்று எல்லாம் பார்த்து அனுபவப்பட்டிருக்கிறேன், இப்பொழுது இருக்கிற அரசாங்கம் என்ன என்ன நன்மைகள் செய்கிறது, இவர்கள் மீது அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிறார்களே என்று எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

துப்பாக்கிச் சூடு பற்றிச் சொன்னார்கள். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட எந்த அரசாங்கமும் துப்பாக்கிச் சூடு இல்லாமல் நடத்த முடியாது. சரித்திரத்திலேயே இல்லாத காரியம் அது. ஆனால் எப்படிச் சுடுகிறார்கள், எப்படிச் சுடப்பட்டார்கள் தவறாகப் பயன்படுத்தினார்களா என்பது தான் பிரச்சினை. காங்கிரஸ் ஆட்சியிலே நடந்த ஒரு சில துப்பாக்கிச் சூடுகளைப்பற்றி இங்கே நான் கூற விரும்புகிறேன்.

கீழத்தூவலில் சென்ற காங்கிரஸ் ஆட்சியின்போது நடந்த துப்பாக்கிச் பிற்பகல்
சூடு எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அங்கு நடந்தது என்ன? 12-30
அங்கு ஐந்துபேர்களை கையைக்கட்டி, வாயைக் கட்டி உட்கார வைத்து சுட்டுத் தள்ளினார்கள். அது எந்த ஆட்சியில் என்று கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல; கீரந்தையில் பல பேரைச் சுட்டு அதை மறைப்பதற்காக வைக்கோர் போரில் போட்டு தீ வைத்துக் கொளுத்தினார்கள். அது எந்த ஆட்சியில்? அதுமட்டுமல்ல; உளுத்திமடை என்ற ஊரில் போலீஸ் லாரியைத் தள்ளுங்கள் என்று பொதுமக்களைக் கூப்பிட்டுக்கொண்டு தள்ளவைத்து தள்ளி முடித்த பின் "ஓடுங்கள், சுடப் போகிறோம்" என்று சொல்லி சுட்டுத் தள்ளினார்கள். அது எந்த ஆட்சியில் என்று கேட்க விரும்புகிறேன். அதுமட்டுல்ல; அருங்குளத்தில் அங்கம்மாள் என்ற நிறை கர்ப்பிணியைத் துரத்திக் கொண்டு வரும்போது அந்தப் பெண் எம்.எஸ்.பி., போலீசாரிடம் அடைக்கலம் புகுந்த நேரத்தில் வெளியே தள்ளிக் கொலை செய்து, நெருப்பை வைத்து அதிலே தூக்கிப் போட்டார்களே, அது எந்த ஆட்சியில் நடந்தது என்று கேட்க விரும்புகிறேன். "இப்படிப் பட்டவர்கள் இன்று துப்பாக்கிச்சூட்டைப் பற்றிப் பேச என்ன உரிமை இருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

தேர்தல்களைப் பற்றி யெல்லாம் பேசுகிறார்கள். தேர்தல் எப்படி நடந்தது என்று நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இதற்கு முன்பு நடந்த தேர்தல்களை எடுத்துக் கொண்டால், சாத்தூர் தொகுதியை எடுத்துக் கொண்டால், தேர்தல் நடந்து முடிந்தவுடன் எத்தனை பேர் மீது பொய்க் கேசுகள் போடப்பட்டிருக்கின்றன, எவ்வளவு பேர் கஷ்டப்படுத்தப்பட்டார்கள் என்பதெல்லாம் நமக்கு நன்றாகத் தெரியும். காங்கிரசுக்கு ஓட்டுப்போடாத மக்கள் இருக்கும் பகுதிகளில் உள்ள குடிதண்ணீர்க் கேணிகளிலே மண்ணெண்ணெயை ஊற்றினார்கள். கிணற்றிலே நரகலைத் தூக்கிப் போட்டார்கள். இதெல்லாம் எந்த ஆட்சியில் நடந்தது? அவர்கள் எப்படித் தேர்தலை நடத்தினார்கள் என்பது நமக்கெல்லாம் தெரியும். அதுமட்டுமல்லாமல் அங்கிருக்கக்கூடிய மக்களின் மிளகாய்ச் செடிகளையெல்லாம் பிடுங்கிக் கொண்டு சென்று விடுவார்கள். தேர்தல் முடிந்தால் மிளகாய்ச் செடிகள் எல்லாம்

போய்விடும். சாத்தூர் தொகுதியில், அவ்வாறு பிடுங்கியவர்கள் மீது கேஸ் போட்டால், கேஸ் போட்டவர்கள் மீது கேஸ் போடுவார்கள். இதுதான் சட்டத்தை நிலைநாட்டிய போக்கா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். சாத்தூர் தொகுதியில் தேர்தலின்போது எத்தனை பெண்கள் அன்று கற்பழிக்கப்பட்டார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலே தேர்தல் வருகிறது என்றால் எல்லோருக்கும் பயம். போன தேர்தலுக்கு முன்பு அப்போது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் ஒரு பொய்யான கேசை என் மீது போலீஸ் அதிகாரியை விட்டுப் போடச் சொன்னார். போலீஸ் அதிகாரி சாட்சி கிடைக்காதே என்று கூறினார். என்னுடைய அரசியல் விரோதி ஒருவரைக் கூப்பிட்டு, இவர் சாட்சி தயார் செய்து கொடுப்பார் கேசைப் போடுங்கள் என்று போலீஸ் அதிகாரியிடம் கூறினார். இரண்டாயிரம், மூவாயிரம் கொடுக்கிறோம் என்று சொல்லியும் சாட்சி கிடைக்கவில்லை. தேர்தலில் நான் நிற்கக்கூடாது என்பதற்காக அப்படிச் செய்தார்கள். அப்போது சட்டமும் ஒழுங்கும் நிலைநிறுத்தப்பட்டதா என்று கேட்க விரும்புகிறேன்.

இந்த அரசாங்கத்தின்மீது பல குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டிருக்கின்றன. ஏதோ வெறுமனே குற்றச்சாட்டுக்களாகக் கூறப்பட்டிருக்கின்றனவே தவிர, இந்த அரசாங்கம் பெரிதாக எந்தவித தவறையும் செய்ததாகக் கூறுவதற்கில்லை.

இந்த அரசாங்கம் சமீபத்திலே அரசாங்க அலுவலகங்களில் சாமிபடத்தை அகற்றிவிட வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறது. அதைப பற்றி இந்த மன்றத்தில் பலர் பேசினார்கள். அது பொதுமக்களையும், ஆசிரியர்களையும் மனம் புண்படச்செய்கிறது. அரசாங்கத்தில் இருக்கும் பெரும்பகுதி உத்தியோகஸ்தர்களும் அதை விரும்பவில்லை. அந்த உத்தரவை நிச்சயமாகக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்று பேசப்படுகிறது, நிர்வாகத்திலே தலையீடு எப்படி வந்தது என்பதைச் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியிலே அதிகாரிகளை அப்படிப் பழக்கிய காரணத்தால் காங்கிரஸ்காரர்கள், மாற்றுக் கட்சிக்காரர்கள் என்று பார்க்கவேண்டிய நிலையை ஏற்படுத்தியது உங்களுடைய ஆட்சியிலேதான். நீங்கள் பழக்கி வைத்த பழக்கந்தான் நிர்வாகத்தில் தலையிடுவது என்பது. இப்போது அது புதிதாக வந்துவிட்டது என்று சொல்லுவதில் அர்த்தம் இல்லையென்று கூறிக்கொள்ளுகிறேன்.

முன்பெல்லாம் குற்றம் செய்தவர்கள் தப்பித்துக் கொள்ளுவதற்காக பாண்டிச்சேரிக்குப் போவார்கள்—தப்பித்துக் கொள்ளுவதற்காக. பாண்டிச்சேரி இந்தியாவுடன் சேர்ந்த பிறகு அப்படிக் குற்றம் செய்தவர்கள் எல்லாம் காங்கிரசில் நுழைந்து கொண்டிருந்தார்கள். பிளாக் மார்க்கட்காரன் கதர் கொடியின் கீழ் வந்து நின்று கொண்டான். காந்தியின் படத்தையும், நேருவின் படத்தையும் வைத்துக் கொண்டான். சென்ற தடவை சட்ட மன்றத்தில் கதர்க் கொடியின் கீழ் கள்ள மார்க்கட் வியாபாரம் செய்ததைட் டற்றி விஸ்தாரமாக எடுத்துக் கூறியிருக்கிறேன். காங்கிரஸ் ஒழிந்த பிறகு அதை விட்டுவிட்டார்கள். இந்த அரசாங்கம் அமைச்சரவை உஷாராக இருக்கவேண்டுமென்பதற்காக கூறுகிறேன்—அப்படிப்பட்டவர்கள் கறுப்பு சிகப்பு கொடியைப் போட ஆரம்பிக்கிறார்கள். அந்த நிலை ஏற்பட விடக்கூடாது என்று அமைச்சர்களைக் கேட்டுக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தை அளித்ததற்காக நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

***திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவர் அவர்களே, இந்த அவையில் பிரதான எதிர்க்கட்சியாக விளங்குகின்ற காங்கிரஸ் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முழு மனதோடு எதிர்க்கிறேன். அப்படி எதிர்ப்பதை ஒரு புனித கடமையாகவும், பொது நலத் தொண்டாகவும் கருதுகின்றேன் என்பதை உறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் எதிர்ப்பதற்குக் காரணம் உண்டு. காங்கிரஸ் என்பதற்காக வெறுப்புக் கொண்டு எதிர்க்கின்ற அரசியல் வாழ்வு எனக்கு இல்லை. காங்கிரஸ் திரும்பவும் ஆளும் கட்சியாக வரக்கூடாது என்ற கட்சிக்





காழ்ப்பினால் அல்ல. என் வாழ்நாளில் 28 ஆண்டு காலம்—அந்தக் காலம் மிகக் கஷ்டமானது, அபாயகரமானது, பயங்கரமானது—ஒரு ஏழை குடியில் சேர்ந்தவனாக காங்கிரசுக்காக உழைத்து, உதிரத்தைக் கொடுத்த நான் காங்கிரசின் தீர்மானத்தை எதிர்க்கின்றபோது வருத்தமாகத் தான் இருக்கிறது. அதே நேரத்தில் ஒன்று சொல்லுகிறேன்—கெட்டுப்போன ஒரு பொருளை நீக்கினாலொழிய நாட்டில் சுகாதாரம் நிலைக்காது என்ற உண்மையைச் சிந்திக்க வேண்டியவனாக இருக்கிறேன். காங்கிரசை விட்டு வெளியேறிய பிறகும் 13 ஆண்டுகாலம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராகத் தேர்தலிலே காங்கிரசுக்கு ஆதரவு கொடுத்து வந்தேன். இங்குள்ள காங்கிரஸ் அங்கத்தினர்களிலே பெரும்பாலோர் இளைஞர்கள். என்னுடைய நண்பர்கள் நான் சொல்லுகிற வார்த்தைகளைக் கருத்தில் கொள்ளவேண்டும். என்னிடம் அதிகாரம் இல்லை, அந்தஸ்து இல்லை என்றாலும்கூட, உங்களுக்கு முன்னோடியாக இருந்து பாடுபட்டு, காங்கிரசை வளர்த்தவர்களில் ஒருவன் என்ற முறையில் நன்றாக என் கருத்துக்களை நீங்கள் கவனிக்க வேண்டும். எந்த ஆட்சிக்கு எதிராக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும் போதும் எதிர்க்கிறேன். கொண்டு வந்துள்ளவர்கள் யார்? அவர்கள் ஆட்சியின்போது இருந்த நிலை என்ன என்று பார்க்கும்போதும் எதிர்க்கிறேன். மூன்றாவதாக, கொண்டு வரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தில் கொடுக்கப்பட்டுள்ள 11 அம்சங்களின் பட்டியலை முற்றும் படித்த பிறகும் எதிர்க்கிறேன்.

இந்த அம்சங்களையெல்லாம் பார்க்கின்றபோது, காங்கிரஸ் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருகிறது என்றால், அது அந்தக் கட்சியின் மனப்பான்மையைப் பிரதிபலிப்பதாக இருக்கிறதே தவிர, நாட்டு மக்களுடைய மனப்பான்மையைக் கொஞ்சம் கூட பிரதிபலிக்கவில்லை என்பதை உறுதியாகக் காண முடிகிறது. காங்கிரஸ் அன்பர்களைக் கேட்கிறேன், "கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தோற்றது ஒரு அசந்தர்ப்பமாக இருக்கலாம், மக்கள் கொண்ட சிந்தனையற்ற கோபாவேசத்தின் விளைவாகவும் இருக்கலாம்", என்று நீங்கள் சொல்வது போல் அப்படியே இருக்கட்டும். பொதுத் தேர்தலுக்குப் பிறகுதான் தென் சென்னைப் பாராளுமன்றத் தொகுதியில் துணைத் தேர்தல் நடந்தது, அது, ஆறு எம்.எல்.ஏ. தொகுதிகள் அடங்கியது. தலைநகரிலேயே சிந்திக்கும் திறனுடையவர்கள் மிகுதியாக வாழ்கின்ற பகுதி.

அந்தத் தென் பகுதியில், ஆறு எம்.எல்.ஏ. தொகுதிகளிலும் சென்ற பொதுத் தேர்தலைவிட கூடுதல் வாக்குகளைப் பெற்று காங்கிரஸைத் தோற்கடித்துள்ளது தி.மு.க. இது பொதுமக்கள் தீர்ப்பென்றால், அந்தத் தீர்ப்பைப் பிரதிபலிக்கிறதா இந்தத் தீர்மானம்? என்று நான் கேட்கிறேன். சங்ககிரியில் மறுபடியும் தேர்தல் வந்தது. அதிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் பொதுத் தேர்தலைவிட சுமார் 2,000 வோட்டுகள் குறைவாக. தென்காசியில் துணைத்தேர்தல் வந்தது. பொதுத் தேர்தலில் கிடைத்ததைவிட 23,000-க்கு அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்கிறது திராவிட முன்னேற்ற கழகம். இவை மட்டுமல்ல. மேலவையில் பிரதான பெருங்கட்சியாக இருந்தது காங்கிரஸ் கட்சி. ஆசிரியர்கள் தொகுதி, பட்டாதாரிகள் தொகுதி—சாமான்யப்பட்டவர்கள் தொகுதி அல்ல; படித்த ஞானம் உள்ள ஆசிரியர் தொகுதிகள்—உள்ளாட்சித் தொகுதி இவற்றிலெல்லாம் காங்கிரசுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே போட்டி ஏற்பட்டு, பல இடங்களை திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றி, முதல் கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சியை பின்னால் தள்ளிவிட்டதொரு நிலையை நாம் இன்று பார்க்கிறோம். பொதுத் தேர்தல் முடிந்து இன்னும் அதிகக் காலம் ஆகவில்லை. 16 மாதங்களே ஆகியிருக்கின்றன. இந்த இடைக்காலத்தில் காங்கிரசின் வளர்ச்சி இன்னும் குன்றி வருவதைத் தான் நாம் காண்கிறோம். பொதுத் தேர்தல் சமயத்தில் இருந்ததை விட, காங்கிரசின்பால் பொது மக்களின் நம்பிக்கையின்மை வளர்ந்து வருவதைத்தான் நாம் காண்கிறோம். அப்படி மக்களின் நம்பிக்கையை இழந்துகொண்டு வருகிற ஒரு கட்சி கொண்டு வந்திருக்கக்கூடிய

[திரு. ம. பொ. சிவஞானம்] [1968 ஆகஸ்ட் 26

ஒரு தீர்மானத்தை நான் ஆதரிப்பேனானால், அது தர்மத்திற்குப் பொருந்தியதாகாது என்பதால் இத் தீர்மானத்தை நான் முழு மனதோடு எதிர்க்கிறேன். (ஆரவாரம்.)

இத் தீர்மானத்திலுள்ள குற்றப் பட்டியலைப் பார்க்கிறேன். இந்தத் தீர்மானப் பட்டியலில் என்னென்ன இருக்கிறது என்பதை விட, என்னென்ன இருந்திருக்கவேண்டும், அவற்றை ஏன் சேர்க்கவில்லை என்று நான் கேட்கிறேன்.

"ஏன் எல்லா ஊர்களுக்கும் ஒரு படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்கவில்லை? ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தீர்களே, அது என்னவாயிற்று?" என்று வெளியே பிரசாரம் செய்கிறார்கள். அதைப்பற்றி கூட்டங்கள் போட்டு ஊர்வலங்கள் விட்டு என்னையும் சேர்த்து குறை சொல்லுகிறார்கள். "இந்தத் தோழமைக் கட்சிகளெல்லாம் மக்களைப் பற்றிய கவலையற்ற கட்சிகள்" என்கிறார்கள். அப்படி எல்லாம் சொல்லும்போது அந்த மூன்று படித் திட்டம்பற்றிய கோரிக்கையை ஏன் உங்கள் பட்டியலில் சேர்க்க வில்லை என்று கேட்கிறேன். அதை வைத்து மன்றத்தை மயக்க முடியாது என்பதால் அதை சேர்க்கவில்லையா என்று கேட்கிறேன்.

"திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பெண்கள் வீதிகளிலே நடமாட முடியவில்லை" என்று ராஜபாளையம் மாநாட்டில் முன்னாள் மத்திய அமைச்சர் ஒருவர் பேசினார். அதை நம்பி அகில இந்திய காங்கிரஸ் பெரும் தலைவர் சென்னையில் நடந்த காங்கிரஸ் பெண் ஊழியர்கள் கூட்டத்தில், "நீங்கள் எல்லோரும் திரோபதைகளாக மாறுங்கள்" என்று கூறியுள்ளார்—கண்ணகியின் கதை தெரியாத காரணத்தினால். அந்தக் குற்றச்சாட்டு ஏன் இத்தீர்மானத்தில் இடம் பெறவில்லை? பெண்கள் நடமாட முடியவில்லை என்று கூட்டந்தோறும் பேசுவதை இனிமேலாவது நிறுத்தினால் நான் சிறிது ஆறுதல் அடைவேன், காங்கிரசின் திருந்திய மனப்பான்மையைக் கண்டு.

ஜனவரி 23-ம் தேதி அன்று ஒரு தீர்மானம், மொழித் தீர்மானம் நிறைவேறியது, இந்த மன்றத்திலே. அதை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் "மிகப் பெரிய அரசியல் மோசடி" என்று வர்ணித்தார்கள். அப்படி "அரசியல் மோசடி" என்று சொல்லப்பட்ட குற்றச்சாட்டை இந்தப் பட்டியலில் ஏன் சேர்க்கவில்லை? வெளியே ஒரு கொள்கை, இங்கு உள்ளே ஒரு கொள்கையா என்று கேட்கிறேன்.

இந்திதான் இந்தியாவின் பொது மொழி என்பது அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் கொள்கை. அதன் கிளைதான் இங்குள்ள காங்கிரஸ். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இந்திதான் இந்தியாவின் பொது மொழி என்பதை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியை பள்ளிகளிலிருந்து எடுத்தது மட்டுமல்ல; என்.ஸி.ஸி. இந்தி கட்டளைச் சொற்களைக்கூட எடுத்து விட வேண்டுமென்று கூறுகிறது. இந்தி பொதுமொழியாக இல்லாவிடில், இந்த நாட்டின் ஒற்றுமை சிதறிவிடும்—ஒருமைப்பாடு சிதைந்துவிடும் என்ற கொள்கையில் உங்களுக்கு உறுதி இருந்தால், ஏன் அதை இந்தத் தீர்மானத்தில் சேர்க்கவில்லை? அகில இந்திய காங்கிரஸ் தலைமை இதைக் கவனித்துக்கொண்டிருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, பொதுத் தேர்தலுக்குப் பின் காங்கிரஸ்காரர்கள் என்னசொன்னார்கள்? 42 சத வீதம் வாக்குகளை நாங்கள் பெற்றிருக்கிறோம்; ஆகவே, அந்த மக்களின் பிரதிநிதிகளாக நாங்கள் இந்த மன்றத்தில் பேசிக் கொண்டிருப்போம் என்றார்கள். அந்த 42 சத வீதமும் இப்போது குறைந்து கொண்டு வருவதைப் பார்க்கிறோம்.

இதுபோன்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவதில், எதிர்க் கட்சிக்கு சில நியாயங்கள் இருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்பூசல்—பிளவு இருந்தால் அதை விளம்பரப்படுத்தலாம் என்ற ராஜதந்திரமாகலாம். ஆனால், அப்படி ஒன்றும் பிளவு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பிளவு வரும் என்றும் நான் நினைக்கவில்லை.



1968 ஆகஸ்ட் 26] [திரு. ம. பொ. சிவஞானம்]

ஆளும் கட்சிக்கும் தோழமைக் கட்சிகளுக்கும் இடையே பூசல் இருக்கிறது; அது பெருகிவருகிறது; அதை விளம்பரப்படுத்திக் காட்ட இது பயன்படும்; அவர்கள் நம் பக்கம் சேர்ந்து வோட் போட்டால் மக்களின் மனம் மாறும் என்று நினைக்கக்கூடிய ராஜதந்திரமாக இருக்கலாம். அப்படி ஒன்றுமில்லை என்று திரு. சங்கரய்யா அவர்கள் சந்தேகத்திற்கு இடமின்றி எடுத்துக் காட்டி விட்டார்கள். நானும் காட்டிக் கொண்டிருக்கிறேன்; சுதந்திராக் கட்சியினரும் காட்டிவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினிடம் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்று சொல்வதோடு மட்டுமல்லாமல், அந்நிலையில் என்ன மாறுதல் ஏற்பட்டாலும் அது காங்கிரஸ் மீது நம்பிக்கை தெரிவிப்பதற்குக் போதாது.

வேலை நிறுத்தம் பற்றி இந்தக்குற்றப் பட்டியலில் கூறப்பட்டிருக்கிறது. அது எதைக் காட்டுகிறது? அகில இந்தியாவின் ஆளும் கட்சியாக நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை மறந்து விட்டிருக்கிறீர்கள். பெருவாரியான தொழில் அதிபர்கள் உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதை மறந்து விட்டிருக்கிறீர்கள். உழவர் புரட்சி என்கிறீர்கள், பெரும் நிலப்பிரபுக்கள் உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதை மறந்து விட்டிருக்கிறீர்கள். பெரும் முதலாளிகள் உங்கள் கட்சியைச் சரர்ந்தவர்கள் என்பதை மறந்து விட்டிருக்கிறீர்கள். காங்கிரஸ் கட்சிக்கு, 86 ஆண்டு சரித்திரம் இருக்கிறது. உங்கள் பழம் சரித்திரத்தைப் பற்றி நீங்கள் பெருமைப்பட்டுக்கொள்ள நியாயம் இருக்கிறது' அதை உருவாக்கியவர்களில் அதிகம் பேர்கள் காங்கிரசிலே இல்லை என்றாலும்.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் உழவர்களைத் தூண்டிவிட்டதுண்டு, தொழிலாளர்களைத் தூண்டிவிட்டதுண்டு. தூண்டியவர்களில் நானும் ஒருவனாக இருந்தவன்தான். அன்று காந்தியடிகள் வெண்டல் வில்கியிடம் சொன்னார்கள். "சுதந்திரம் கிடைத்தவுடன் நீங்கள் உழவர்களுக்குச் செய்யப் போகும் நன்மை என்ன" என்று கேட்டார் வில்கி. "உழுகிற நிலம் உழவர்களுக்கே" சொந்தமாகும் என்றார் காந்தி அடிகள். "நஷ்டயீடு இல்லாமலா?" என்றார் வில்கி. இந்த நாடு பிற்போக்கான நாடு, எங்களால் முடியாது, குழப்பம் வந்தால் அதைச் சமாளித்து விடலாம்; புத்திசாலிகள், கிளர்ச்சி இல்லாமல் செய்துவிடுவார்கள் என்றார்.

இருபது ஆண்டுகளாக உழவர்கள் உங்களை நம்பி, எதிர்பார்த்து ஏமாந்தார்கள். தி.மு.க. ஆட்சியிலே, உழவர்கள் கிளர்ச்சி இருக்கலாம், தொழிலாளர்கள் கிளர்ச்சி இருக்கலாம், வேலை நிறுத்தங்கள் கூடுதலாக இருக்கலாம், ஆங்காங்கு ஆர்பாட்டங்கள் இருக்கலாம். இருபது ஆண்டுகளாக உங்கள் ஆட்சியில் எதிர்பார்த்து, ஏமாந்து மக்கள் அதிருப்தி அடைந்ததன் எதிரொலிதான் அது என்பதை ஏற்க நீங்கள் ஏன் மறுக்கிறீர்கள்? நீங்கள் செய்த தீவினையால் திராவிட முன்னேற்றக் கழக அரசு இப்போது கஷ்டப்படுகிறது.

நான் காங்கிரஸ்காரர்களை கரம் கூப்பி வேண்டுகிறேன்; சாந்தி, சமாதான நெறியில் உங்களுக்கு நம்பிக்கை இருக்குமானால், தற்போதைய கிளர்ச்சிகள் வலுப்பட்டு உள்நாட்டுக் குழப்பம் ஏற்படாத வகையில் இந்த ஆட்சிக்கு நிபந்தனையில்லாமல் நீங்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். அதன் மூலம் உழவர்கள், தொழிலாளாகள் இவர்களின் அதிருப்தியை நீக்கவேண்டும். ஆனால், அதற்கு மாறுபட்ட நிலையில், அதற்கு மாறுபட்ட போக்கில்தானே காங்கிரஸ் கட்சி போய்க் கொண்டிருக்கிறது? தொழிலாளர் எழுச்சியும், உழவர்கள் எழுச்சியும் புதியதொரு சமூகத்தை அமைக்கும் ஆர்வததில் பிறந்தவை. அதை திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, மாணவர்-பஸ் தொழிலாளர் தகராறு பற்றிக் கூறப்படுவதைப் பார்க்கிறோம். இதில் உள்ளே புக நான் விரும்பவில்லை; காரணம், இது நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது. இதை ஏதோ ஒரு கட்சி தூண்டி விட்டது அல்லது இது ஆட்சியின் பலஹீனம் என்று சொல்லும் அளவுக்கு நான் போகவில்லை. உண்மை என்னவென்றால், 200 ஆண்டுகளாகயிருந்த பிரிட்டிஷார் ஆட்சியும், சுதந்திரம்

அடைந்தபின் உள்ள இருபது ஆண்டு காலத்தில் நடந்த காங்கிரஸ் ஆட்சியும் படித்தவர்களைத் தனி ஜாதியாகவும், உயர்ந்த ஜாதியாகவும் செய்து விட்டன. படிக்காதவர்கள் தாழ்ந்த ஜாதியினராகக் கருதப்படும் நிலைமை தோற்றுவிக்கப்பட்டது. இருவேறு பிரிவினருக்கும் இடையில் ஒரு நீண்ட இடைவெளி ஏற்பட்டது. இப்படிப்பட்ட நேரத்தில் தான் விவேகமும், வீரமும் பிறந்து வளர்ந்த சமுதாயத்தில்தான்–தொழிலாளர்களால் ஒரு மாணவனுக்குத் தொல்லை என்றால், எல்லா மாணவர்களும் ஒன்றுபடுவது. ஒரு தொழிலாளிக்கு மாணவர்களால் தொல்லையென்றால் எல்லாத் தொழிலாளர்களும் ஒன்றுபடுவது என்ற நிலை உருவானது. இது, இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. இருநூறு ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே சமுதாயத்தின் அழுகலிலிருந்து ஏற்பட்ட முடைநாற்றம் இது. அகில இந்திய ரீதியில் ஆட்சி புரியும் கட்சி என்று சொல்லிக்கொள்பவர்கள், பல கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்து கல்வித் திட்டம் வகுத்தவர்கள், டாக்டர் இராதாகிருஷ்ணனைத் தலைவராக வைத்து பரிசீலனை நடத்தியவர்கள் கோத்தாரியின் தலைமையில் குழு அமைத்து திட்டம் வகுத்தவர்கள்–ஏன், படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் இடையில் உள்ள இடைவெளியை நீக்கவில்லை ? நீக்காததன் விளைவைத் தான் இப்பொழுது தி.மு.க.வினர் அனுபவிக்கிறார்கள். இருபதாண்டுக் காலத்தில் காங்கிரசால் ஏற்பட்ட பாபம் ஒன்றரை ஆண்டுக்காலத்தில் நீக்கப்பட வேண்டுமென்று எதிர்ப்பார்ப்பது விந்தையாக இருக்கிறது.

தியாகிகளுக்கு உதவிப் பணம் கொடுக்காததுபற்றி இந்த ஆட்சியைக் குறைகூறியதைக் கேட்டு நான் சிரித்தேன். உடம்பெல்லாம் வாயாகக் கொண்டு சிரித்தேன். ஏனென்றால், அவர்களில் நான் ஒருவன் என்ற காரணத்தால் சிரித்தேன். இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியிலே உங்களால் தீர்க்க முடியாமல் போனதை ஒன்றரை ஆண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தீர்த்துக் கொடுக்க வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பதைக் கண்டு சிரித்தேன். நீங்கள் இவ்வாறு கேட்பதைப் பார்த்து, முன்பு உங்களுடைய சதையோடு சதையாக, இரத்தத்தோடு இரத்தமாக இருந்த தியாகிகளே சிரிப்பார்கள். முன்பு 7 ஏக்கரா, 8 ஏக்கரா நிலம் தியாகிகளுக்கு இனாமாகக் கொடுக்கப்பட்டது. தியாகி நிலம் 7 ஏக்கரா எனக்கும் கிடைத்தது. 1952-ல் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக வந்தபொழுது, “இனி தியாகிகளுக்கு நிலம் கொடுக்க முடியாது ; வாங்கியதையும் திருப்பிக் கொடுக்க வேண்டும்” என்று அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையைப் பத்திரிகையிலே பார்த்தவுடனேயே, நான் பெற்ற தியாகி நிலத்தைத் திருப்பிக் கொடுத்து கலெக்டரிடம் சேர்ப்பித்துவிட்டேன். அதுபோல எத்தனை பேர்கள் அனுப்பினார்கள் என்று எனக்குத் தெரியாது. இருபதாண்டு காலமாக உங்களால் தியாகிகளைத் திருப்திப்படுத்த முடியவில்லையென்றால், ஒன்றரை ஆண்டு தி.மு.க. ஆட்சிக்காலத்தில் செய்யவில்லை என்று நீங்கள் கூறுவதை அந்தத் தியாக பரம்பரையினரே ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

அடுத்து, தீ விபத்தைப்பற்றிச் சொல்லப்படுகிறது. இதைப்பற்றி நான் ஒரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். இது விஷயத்தில் ஆட்சி இன்னும் விரைவாக, வேகமாகச் செயல்பட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். குற்றவாளிகள் யார் என்று தெரிந்தாலும் உடனே பிடிக்க இயலாதபடி சட்டத்தின் கட்டுக்கோப்புகள் இருப்பதை நான் உணர்கிறேன். தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீப் பிடிக்காத வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு எண்ணியிருக்கிறது. அதை வரவேற்கிறேன். முன்பு வெள்ளப் பெருக்கெடுத்தால் ஆயிரமாயிரம் குடிசைகள் அடித்துச் செல்லப்படும். அப்பொழுதிருந்த முதலமைச்சரிடம் நான் கூறினேன், “பள்ளத்திலே தண்ணீர் தேங்கியதால் வந்த விபத்து இது ; அந்தப் பள்ளத்திலேயே திரும்பவும் குடிசைகள் போட்டால் மறுபடியும் வெள்ளம் வந்தால் திரும்பவும் அடித்துத்தான் செல்லப்படும், ஆகவே, அவ்வாறு பாதிக்காத முறையில் கட்டலாம்” என்று சொன்னேன். அதற்கு அவர்கள், “வாயாலேயே சொல்லி விடுவது சுலபம், கையாலே செய்வதுதான் கஷ்டம்” என்று கூறி, “போடுங்கள் ஓலைக் குடிசையை”





என்று உத்தரவிட்டார்கள். ஆனால், தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீ தீண்டாத அளவுக்கு இருக்கும் வகையில் மாற்று வீடுகள் கட்டிக் கொடுக்கும் அளவுக்கு இந்த மந்திரிசபை முன்னேறி இருக்கிறது. இந்த ஆட்சியை நான் நம்பவில்லையென்றால், எனக்கு அறிவு இருக்கிறது என்பதை உலகம் ஒத்துக்கொள்ளாது. தீ விபத்து நேர்ந்த நேரத்தில், கோரக்குரலில், “தீ, தீ” என்று மக்கள் சோர்ந்து ஒலித்ததைப் பார்த்த அமைச்சர்கள், மீண்டும் எரிந்து போகும் வீடாகக் கட்டிக் கொடுப்பதில் பயன் இல்லை ; தீப் பிடிக்காத வீடுகள் தான் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று எண்ணினார்கள். அவ்வாறு சர்க்கார் நிலங்களில் கட்டிக்கொடுத்தார்கள். ஆனால், தனியார் நிலக்காரர்கள் என்ன செய்வார்களோ என்று அஞ்சுகிறது ஆட்சி. ஏனென்றால், அவர்களெல்லாம் இன்று காங்கிரஸ் பக்கம் இருக்கிறார்கள். தீப் பிடிக்காத வீடு வேண்டுமென்று காங்கிரஸ் கேட்பதை ஒப்புக்கொள்ளுகின்றேன். இதைத் தாமதப்படுத்தாமல் இருக்க வேண்டுமானால்; தனியார்த் துறை நிலங்களை சர்க்கார் கைப்பற்ற வேண்டுமென்பது என் கோரிக்கை. இதை காங்கிரஸ்காரர்களும் வற்புறுத்த வேண்டும். இல்லாவிட்டால், அரசு கைப்பற்றியவுடன் நீங்கள் நில உடமையாளர்களைச் சேர்த்துக்கொண்டு ஊர்வலம் நடத்துவீர்கள்.

அடுத்தபடியாக சட்டம், ஒழுங்கு........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரமாகிவிட்டது

**திரு. ம. பொ. சிவஞானம் :** என் கட்சியின் சார்பாக நான் ஒருவனே இருக்கிறேன். மூன்று கோடி மக்களின் நல்வாழ்வுக்காக 42 ஆண்டுகள் பாடுபட்டவன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அவருக்குக் கொஞ்ச நேரம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. கோதண்டராமன் அவர்களின் தியாகத்தைப் பாராட்டுகிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** சட்டம், ஒழுங்கு குலைந்துவிட்டது என்று நண்பர்கள் சொல்லுகிறார்கள். அதை எந்தச் சர்க்காரிலும் சொல்லலாம். ஏன், கேரளத்திலே கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடக்கிறது ; அங்கும் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாக காங்கிரசால் சொல்லப்படுகிறது. நமது மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி புரிகிறது; இங்கும் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாகக் காங்கிரசால் சொல்லப்படுகிறது. சுதந்திராக் கட்சி உள்ள ஒரிஸ்ஸா மாநிலத்திலும் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாகச் காங்கிரசால் சொல்லப்படுகிறது. காங்கிரசல்லாத கட்சிகளும், காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலும் சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டதாகப் பட்டியல் போட்டுக் காண்பிக்கின்றன. பொதுவாக, நாடு முழுவதும் சட்டம், ஒழுங்கு கெட்டுவருகிறது. நாம் விரும்பிய போக்கில் சட்டம், ஒழுங்கை அமல் நடத்திச் செல்ல முடியவில்லை. கட்சிக்குக் கட்சி ஊர்வலம் நடத்தியும் கூட்டங்கள் போட்டும் ஆளுக்கு ஆள் அறிவை வளர்த்துள்ளன. கட்சிக்குக் கட்சி, மக்களிடையே விவேகத்தை வளர்த்துள்ளன. காங்கிரசல்லாத மாநிலங்களால் அவர்கள் கொள்கைகளை நிறைவேற்ற—அவர்கள் ஆட்சியால் முடியவில்லை. இதற்குக் காரணமான மத்திய சர்க்காரின் மீது நானும் குற்றம் சாட்ட ஆசைப்படுகிறேன். உங்கள் 11 குற்றச்சாட்டுகளோடு இதையும் 12-வது குற்றச்சாட்டாக சேர்த்துக்கொள்ளுங்கள். இது சுதந்திர சர்க்கார் போலவும், இதனால் முடியாதது ஒன்றுமில்லை என்பது போலவும், இது செய்ய முடிந்ததைக் கூட செய்யாமல் போனது போலவும் நினைத்துக்கொண்டு வேறு சிக்கலே இல்லாதது போலவும் நினைத்துக்கொண்டு காங்கிரஸ்காரர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். “உங்களால் முடியாததற்கெல்லாம் மத்திய சர்க்கார் மீது பழி போடுகிறீர்கள்” என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். ஏன் அப்படி எண்ண வேண்டும் ? மத்திய சர்க்கார் மீது பழி இல்லை என்றால், அதை எடுத்து விளக்குங்களேன் ? பழி இருந்தால் நீங்களும் சேர்ந்துக்கொண்டு

சொல்லுங்கள் என்று நான் வேண்டுகிறேன். மத்திய சர்க்காரின் அதிகாரப்போக்கு, ஆதிக்க வெறி மாகாணங்களை ஜில்லா போர்டுகளாக மாற்றியுள்ளன.

சிலவற்றில் குறை இருக்கும், சிலவற்றில் குற்றம் இருக்கும். குறை வேறு, குற்றம் வேறு. குறையைக் கண்டித்தல் வேண்டும், குற்றத்திற்குத் தண்டித்தல் வேண்டும். காங்கிரஸ்காரர்கள் குறைகளையெல்லாம் குற்றங்களைப் போல கூறியிருக்கிறார்கள்.

மத்திய சர்க்காரிடம் குவிந்து கிடக்கும் அதிகாரங்களை, போக்குவரத்து—பாதுகாப்பு—அயல்நாட்டு உறவு இம்மூன்றைத் தவிர மற்ற அதிகாரங்களை, மாகாணங்களுக்கு மாற்றிவிட்டால், ஒரு ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவதற்கும் இந்த இராஜ்யம் சக்தியுடையதாக இருக்கும் என்பதை 3 கோடி தமிழ் மக்களுக்கு இந்த மன்றத்திலிருந்து கொண்டு பறையறைந்து அறிவிக்கிறேன்.

இங்கொரு கல்வி இலாகா, டில்லியில் ஒரு கல்வி இலாகா; இங்கொரு உள்துறை இலாகா, அங்கொரு உள்துறை இலாகா; இங்கொரு மராமத்து இலாக்கா, அங்கொரு மராமத்து இலாக்கா; இங்கொரு சுகாதார இலாக்கா, அங்கொரு சுகாதார இலாக்கா என்று எல்லாம் இங்கொன்றும் அங்கொன்றுமாக இருக்கின்றன. இங்கிருப்பவைகளுக்கு அங்கிருப்பவை எஜமான இலாகாக்களைப்போன்று இருந்துகொண்டு, அவற்றிடம் அங்கீகார முத்திரை வாங்குவதற்காக, ஃபைல்கள் 1,500 மைல்கள் யாத்திரை செய்ய வேண்டியிருக்கிறது. இதனால், ஊதாரித்தனமும் ஏற்படுகிறது. ஏன் ஒரே கல்வி இலாக்கா, ஒரே உள்துறை இலாக்கா, ஒரே சுகாதார இலாக்கா என்றிருந்தால் என்ன முழுகிவிடுமா? இந்தியா வலிமை பொருந்தியதாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். யாருக்கு எதிராக வலிமை பொருந்தியிருக்க வேண்டும்? பக்கத்து நாடுகளிலுள்ள பகைவனுக்கு எதிராக வலிமை பொருந்தியதாக இருக்க வேண்டும். அதை விட்டு, இங்குள்ள உள்துறை இலாக்காவிற்கு எதிராகவா மத்திய உள்துறை வலிமை பொருந்தியதாக இருக்க வேண்டும்? இங்கிருக்கிறது சுகாதார இலாக்காவிற்கு எதிராகவா மத்திய சுகாதார இலாக்கா வலிமை பொருந்தியதாக இருக்க வேண்டும்? ஆகவே, என்னுடைய காங்கிரஸ் நண்பர்களே, இன்னும் இருக்கின்ற 3½ ஆண்டு காலத்திலேனும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குக் கை கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் 63 ஆண்டு வயதில் நான் உங்களுடன் 42 ஆண்டுகள் சேர்ந்து உழைத்தவன். இன்று துரதிருஷ்டவசமாக உங்களால் புறக்கணிக்கப்பட்டவன் என்று நான் சொல்லவில்லை, உங்களைப் புறக்கணிக்கும் நிலையில் இருக்கிறேன். என்றாலும், நான் கூறுகின்ற இந்த நியாயத்தை எடுத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"வாராது போல வந்த மாமணியைத் தோற்போமா?" என்றபடி, தமிழ்நாடு தனி இராஜ்யம் ஆக வேண்டுமென்று காலமெல்லாம் பாடுபட்டு தமிழரசுக் கழகத்தின் மூலம் போராடினேன், 1956-இல் தமிழகம் தனி இராஜ்யமானது. ஆனால், 1966-வரை தமிழினத்தின் தனி உரிமை காக்கப்படவில்லை. தமிழ் வாழவில்லை. தமிழுக்கு வளர்ச்சி இல்லை. காங்கிரஸ் தோழர்களே, உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், மொழிவழி ராஜ்யம் கேட்டு, அதற்காகக் காலமெல்லாம் பாடுபட்ட நான், 1956 முதல் 1966 வரை 10 ஆண்டுகாலம் தமிழ் ராஜ்யம் அமைந்திருந்தும் கூட தமிழுக்கு வாழ்வு இல்லை; தமிழ் வளர வழியில்லை என்ற நிலை இருந்தது. ஆட்சி மாறியவுடன் அந்த நிலைமை மாறியது.

அண்ணாவினுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி—இன்னும் சொல்வேன், இதை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்றுகூட நான் ஒத்துக் கொள்ளவில்லை—கூட்டணி ஆட்சியாகவும் இயங்குகிறது என்றே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மந்திரி பதவியில்



பங்கு வாங்கினால்தான் கூட்டணி ஆட்சி என்று நான் நினைப்பவன் அல்ல. மந்திரி சபையில் பங்கு வாங்கிய இடங்களில்கூட எங்களைப் போன்று உறவு உறுதியாக இல்லை. அமைச்சரவையில் பங்கு பெறாத இங்கு உறவு உறுதியாக இருக்கிறது. இனி உங்களுக்கு இடம் இல்லை, அது நீங்கள் செய்த பாவம் என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு மு. சின்னசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த மன்றத்திலே கொடுத்திருக்கும் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது, அந்த தீர்மானத்தை இந்த மாமன்றம் நிராகரிக்க வேண்டுமென்ற கருத்தோடு ஒருசில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்கிறேன். முதல் முறையாக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக்கொண்டு வந்த காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கும் குறிப்பாக எதிர் கட்சித் தலைவர் அவர்களுக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில், காங்கிரஸ் கட்சி மறந்தும்கூட திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது எங்களுக்கு நீங்கள் செய்த காரியத்தைக் கண்டு நம்பிக்கையிருக்கிறது என்று சொல்லக் கூடாது என்பதிலே நான் நம்பிக்கை கொண்டவன். காரணம், 20 ஆண்டு அரசியல் வாழ்விலே எத்தனை பாவங்கள் செய்ய வேண்டுமோ, அத்தனைப் பாவங்களைச் செய்திருக்கின்ற கட்சி, பாவமே செய்யாத ஒரு அரசுக்கு ஆதரவு கொடுத்தால் அந்தப் பாவமும் எங்கள் மீது வந்துவிடுமோ என்ற அச்சத்தினால், காங்கிரஸ் கட்சிக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது நம்பிக்கையிருக்கிறது என்று அவர்களுடைய திருநாளில் சொல்லாமல் இருப்பதற்கு நான் என்னுடைய நன்றியை துவக்கத்திலே சொல்லிக் கொள்வேன்.

அடுத்து, குறிப்பாக, முன்னாள் அமைச்சர் அவர்கள், தமிழகத்திலே பிற்பட்ட மாவட்டமாகிய முகவை மாவட்டத்தில் ஒரு மருத்துவ மனைக் கட்டுவதற்கு வசூல் செய்கிற முறை சரியில்லை என்று ஒரு பிரச்சினையை எழுப்பி, இது அரசியல் சம்பந்தப்பட்டது என்றார்கள், அந்த உயர்ந்த நண்பருக்கு ஒரு செய்தியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய அரசிலே எங்களுடைய அமைச்சர் பிற்பட்ட மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்தில் நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒருமருத்துவமனை கட்டுவதற்கு உள்ளதை—வாதத்திற்கு ஒப்புக் கொண்டு பேசுகிறேன். அப்படி ஈடுபட்டிருந்தாலும் தவறு இல்லை. ஆனால், உங்களுடைய ஆட்சியில் உங்களுடைய சார்பாக இருந்த முன்னாள் கூட்டுறவு அமைச்சர், தன்னுடைய சொந்த இலாபத்தையே நோக்கமாகக் கொண்டு கால்நடைப் பணிக்குத் தமிழகத்தின் பொது சொத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சம் எடுத்திருக்கின்றார்கள் என்று அரசுப் பதிவேட்டிலுள்ள சாட்சியம் கூறுகிறது என்கின்ற செய்தியை தெரிவிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவச்சலம் அவர்களுடைய தொகுதியிலே, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் ஏற்கனவே ரூபாய் 1 இலட்சம் அரசிடமிருந்து கடன் வாங்கிய பிறகு 1967-ம் வருடம் பிப்ரவரி மாதம் 6-ம் தேதி பொதுத் தேர்தல் நடைபெற இரண்டு வாரங்கள் இருக்கிறபோது ரூபாய் 1,65,000 தன்னுடைய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து அந்த பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்திற்குக் கடனாக கொடுத்து மறைமுகமாகத் தேர்தல் வேலைக்கு ஈடுபடுத்தப்பட்டிருப்பதற்கு இன்று அரசினுடைய தஸ்தாவேஜிலே சாட்சியம் இருக்கிறது என்கின்ற சம்பவங்களை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதனை அடுத்து கோபி வட்டாரத்தில், மதிப்பிற்குறிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய சொந்த வட்டத்தில் கல்லூரி ஒன்றை மாண்புமிகு நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்கள். அந்தக் கல்லூரிக்காக பல ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து, தூக்கநாய்க்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், பவானி ஊராட்சி ஒன்றியம், இவைகளிடமிருந்து ரூபாய் 25,000 ரூபாய் 50,000, ரூபாய் 1,00,000 என்று நன்கொடை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை முழுமனதோடு வரவேற்ற மதிப்பிற்குரிய

எதிர்கட்சித் தலைவர், பிற்பட்ட மாவட்டமாகிய முகவை மாவட்டத்தில் மருத்துவமனை ஏற்படுத்துவதை எந்த மனசாட்சியோடு கண்டிக்கிறார் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அது மாத்திரம் அல்ல, இன்று நாட்டிலே துரதிருஷ்டவசமான வாதம் கிளப்பப்பட்டிருக்கிறது. குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் சார்பாக, மகாத்மா காந்தியடிகளின் சார்பாக பொன்னான மதுவிலக்கை ஏற்றுக்கொண்டு, இந்த அரசின் மீது, அது ஏதோ சரியாக மதுவிலக்கை அமுல் படுத்தவில்லையென்று மிகத் துணிச்சலாக ஒரு அம்சத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது இந்தக் குற்றச்சாட்டைக் கூறுகின்ற காங்கிரஸ் கட்சிக்கு ஒரே ஒரு சம்பவத்தை நான் சாட்சிமாக வைக்கின்றேன். இந்த மாமன்றத்தில் புதுக்கோட்டையிலே திராவிட முன்னேற்றக் கழக நண்பர் ஒருவர் மீது நீதி மன்றத்திலே மதுவிலக்கை மீறியதாகக் குற்றம் சாட்டிய பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் அத்தொண்டனை, ஊழியனை கழகத்திலிருந்து நீக்கி வைத்திருக்கின்றது. காங்கிரஸ் கட்சியிலே இன்று வெண்புரு சேனைக்குத் தளபதியாக இருக்கும், சுவரொட்டிகள் எழுதுகின்ற, அறிஞர் அண்ணாவிடம் பாடம் கற்ற, நண்பர் ஒருவர் நீதி மன்றத்திலே காங்கிரஸ் கட்சியின் சட்டதிட்டங்களின்படி அவர் காங்கிரஸ் கட்சியிலே இருப்பதற்கு தகுதியற்றவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டதற்குப் பிறகு அவருடைய தலைமையில் நீங்கள் ஊர்வலத்தை நடத்தி வருகிறீர்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அது இப்பொழுது நீதி மன்றத்திலே விசாரணையிலே இருக்கிற காரியம். அதைப்பற்றி நண்பர் அவர்கள் குறிப்பிடாமல் இருந்தால் சாலச்சிறந்ததாக இருக்கும். அந்த டிக்ரீ மீது ஸ்டே செய்து அது விசாரணையிலே இருக்கிறது. ஆகவே, அது சப்ஜூடிஸாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நீதி மன்றத்திலே இருப்பதைப் பற்றி பேசுவதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. நீதி மன்றத்திலே என்ன தீர்ப்பைக் கொடுத்தார்கள் என்பதைத் தான் அவர்கள் சொன்னார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இது எக்ஸ்பார்ட்டி தீர்ப்பு. அமைச்சர் அவர்கள் வழக்கறிஞராக இருப்பதால், இதைப்பற்றிச் பேச வேண்டாமென்பதை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எக்ஸ்பார்ட்டி தீர்ப்பு வழங்கியிருக்கிறது என்றார்கள். அந்த வழக்கிலிருந்தவர் கோர்ட்டை அவமதித்து, கோர்ட்டுக்குப் போகாமல் இருந்தால யார் மீது குற்றம்?

**திரு. மு. சின்னசாமி :** தலைவர் அவர்களே, நான் நீதிமன்ற விஷயங்களிலே தலையிட விரும்பவில்லை. உங்களுடைய கொள்கையிலே தலையிட விரும்புகிறேன். பொதுப்படையிலே ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துவதற்கு உங்களுக்கு உரிமை இருக்குமானால் உங்களுடைய கட்சியின் சட்டதிட்டங்களுக்கு விரோதமாக ஒரு நபரை உங்களுடைய அமைப்பிற்கு தலைமை தாங்குவதற்கு எந்த அரசியல் நாகரீகம் இடம் தருகிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. நீதி மன்றத்திலே அவர் நல்லவரா கெட்டவரா என்று சொன்னதைத் தெரிந்து கொள்வது என்னுடைய ஆவல் அல்ல, என்பதை ஆற்றலுக்கும் அடக்கத்திற்கும் சான்றாக விளங்குகிற எதிர்கட்சித் துணைத்தலைவர் அவர்களுக்குக் காணிக்கையாக ஆக்குகிறேன். அடுத்து, 20 ஆண்டு காங்கிரஸ் கட்சி சாதித்திருக்கிறதே, ‘நீ என்ன சாதித்து விட்டாய்’ என்று கேட்பவர்களுக்கு ஒன்றைக் தெரிவித்துக்கொள்வேன். தலைவர் அவர்களே, தமிழகத்திலே, 1,35,000 ஆரம்ப ஆசிரியர்கள் இருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே ஜூன் மாதம் வந்துவிட்டால் இப்பொழுது எங்கே மாறுவோம், குழந்தைகளைக் கூட்டிப் கொண்டு எங்கே போவோம் என்று தடுமாறிக் கொண்டிருந்த சம்பவத்தையும், திராவிட முன்னேற்றக் கழக





அரசு ஏற்பட்ட பிறகு அந்த ஆசிரியர் துறையிலே இருந்து அமைச்சரவையிலே அங்கம் வகிக்கின்ற மாண்புமிகு முத்துசாமி அவர்கள் சொன்ன ஒரு உத்தரவின் காரணமாக இன்று 1,35,000 ஆரம்ப ஆசிரியர்கள் தமிழகத்திலே நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே காங்கிரஸ் கட்சியின் நம்பிக்கையில்லை என்ற வாதம் ஆரம்ப ஆசிரியர்கள் உள்ளத்திற்கு, அவருடைய உண்மையான சேவைக்கு உங்களுடைய கருத்து புறம்பானதாக இருக்கும் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அது மாத்திரம் அல்ல. மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி தான் பிரம்ம தேவனின் வாரிசு போல் உழவர்களுக்கு பேசுவதற்குதான் தான் இருப்பது போல் மிக அதிகமாக பேசுகிறார்கள். நான் அவருடைய திறமையை குறைத்து எப்போதுமே மதிப்பிடுவதில்லை. அதே எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு, நான் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே ஒன்றைச் சொல்ல வேண்டும், இந்த நாட்டிலே விவசாயிகளுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு கொள்முதலிலே ஒரு பாலிசி வகுத்திருக்கிறது. அது, படிப்படியாக வாங்குவது என்று. நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்று சொல்லும்படியான நிலையிலே 5 எக்கர் விவசாயிகளுக்கு ஒரு எக்கருக்கு 4 மூட்டை என்று சொன்னால், 30 எக்கர் விவசாயிகளுக்கும் எக்கருக்கு 4 மூட்டை. வாங்க வேண்டுமென்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இதை நான் கணக்கிட்டு பேச ஆசைப்படுகிறேன். ஒரு எக்கரும் அதற்குக் கீழ்ப்பட்ட விவசாயிகளிடமிருந்து திராவிட முன்னேற்றக் கழக அரசு வசூல் செய்வதில்லை. ஒரு எக்கரிலிருந்து 3 எக்கர் வரைக்கும் எக்கருக்கு 4 மூட்டைகள் ; 3 எக்கரிலிருந்து 5 எக்கர் வரைக்கும் எக்கருக்கு 6 மூட்டைகள். 5 எக்கரிலிருந்து 10 எக்கர் வரைக்கும் எக்கருக்கு 8 மூட்டைகள். 10 எக்கருக்கு மேல் அதிகப்படியாக வசூல் செய்வது. இந்தக் கணக்கு தான் சரியானது நியாயமானது என்று உழவனிடமே கொள்முதல் செய்கின்றதனாலே அந்த உழவன் நம்பிக்கொண்டிருந்தான். உங்களுடைய வாதம் என்னவென்றால் 30 எக்கர் விவசாயிகளுக்கும் 120 மூட்டை, 5 எக்கர் விவசாயிகளுக்கும் 40 மூட்டை என்பது. அந்த நிலை வந்தால் உழுகின்ற விவசாயிகளுக்கு அநீதியும் நிலத்திலே இறங்காத விவசாயிகளுக்கு சாதகமும் ஏற்படும் என்பது இன்று நாட்டில் உள்ளவர்கள் அல்ல ; அவருடைய சொந்த வட்டத்திலே இருக்கிற, கோபி வட்டத்திலே இருக்கிற விவசாயிகளுடைய கருத்தாகும் இந்த நிலையில் அவர்களுக்குச் சந்தேகம் இருக்குமானால் அது நல்லதல்ல என்பதை அடக்கத்தோடு கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது கொள்முதல் பிரச்சினையை வைத்து, நெல்லின் விலையை ஏற்ற வேண்டுமென்று அவருடைய பதவியை ராஜிநாமா செய்யட்டும், அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய அனுமதியோடு என்னுடைய பதவியை ராஜிநாமா செய்யத் தயாராக இருக்கின்றேன், மறு தேர்தலுக்குத் தயாராக இருக்கிறாரா என்று நான் கேட்கிறேன். நான் நாட்டு மக்களிடம் நம்பிக்கை கொண்டவன், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டவன், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட கட்சியைச் சார்ந்தவன் இந்தப் பிரச்னையை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்கவேண்டும். ஏற்பதற்குத் துணை புரிய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, தொழில் கொள்கை பற்றி இங்கே எவ்வளவோ வேகத்தில் பேசினார்கள். இந்த மன்றத்தில் காங்கிரஸ் அமைச்சரவையிலே தொழில் அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள், இன்று டெல்லியில் திட்டக் குழுவிலே இருக்கிறார்கள். **29—7—1967**-ல் அவர்கள் தி.மு.க. அரசுக்குக் கொடுத்த நற்சான்றிதழ் என்னவென்றால், “தி.மு.க. அரசின் தொழில் கொள்கை சரியான வழியில் முறைப்படி அமைந்துள்ளது, மாநிலத்தில் முன்னேற்றத்திற்குப் பாதகமான முறையிலே நான் எதையும் காணவில்லை” என்று திட்டக் குழுவின் உறுப்பினர் திரு. ஆர். வெங்கட்டராமன் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, எங்களுக்கு எங்கேயிருந்து கிடைக்கவேண்டுமோ, அந்த

இடத்திலிருந்து, அறிவுள்ள இடத்திலிருந்து, அனுபவமுள்ள இடத்திலிருந்து, மனச்சாட்சியுள்ள இடத்திலிருந்து இந்த அரசுக்கு நற்சான்றிதழ் கிடைத்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பூரணமாக ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, விடைபெறுகிறேன்

**திரு. க. ர. நல்லசிவன் :** பெருமதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தவர்கள் நாட்டின் எல்லையைப் பாதுகாக்கத் தவறியவர்கள். 20 ஆண்டு காலமாக தங்களுடைய கையில் ஆட்சிப் பொறுப்பை வைத்துக்கொண்டு, வருமானத்தில் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வை ஒழிக்கத் தவறியவர்கள். அதுமாத்திரமல்ல. இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய லஞ்ச, லாவண்ய ஊழல்கள் இருப்பதற்குக் காரணம் இவர்கள் ஆட்சிதான். அவர்கள் காலத்தில்தான் இந்த லஞ்சம் அப்படி வளர்ந்து தொல்லை கொடுத்துகொண்டிருக்கிறது. 20 ஆண்டு ஆட்சிக்காலத்தில் லஞ்ச ஊழல்கள் வளர்ந்திருக்கின்றன. அதைவிட ஒரு பெரிய விஷயம் என்னவென்று சொன்னால், நாட்டு மக்களிடத்திலே சுயநம்பிக்கை என்று ஒன்று இருக்கிறதே, அதை ஒழித்து, நசுக்கி விட்டார்கள். சுயநம்பிக்கையில்லாமல், இன்றைக்கு வேலையின்றி நடுத் தெருவில் நிற்கிறார்கள் மக்கள், கடந்த 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியின் விளைவாக. வேலையில்லாத் திண்டாட்டம் அவர்கள் ஆட்சியின் விளைவு தான். அதனால், உணர்ச்சி வசப்பட்டு, மாணவர்களும், தொழிலாளர்களும் சில நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால் ஆளும் கட்சிக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியை உதாரணத்திற்குக் கூட எந்தக் காரணத்தைக் கொண்டும் கொள்ளவே கூடாது. காங்கிரஸ் கட்சியை எந்தக் காரணத்தைக் கொண்டும் பின்பற்றக்கூடாது. அப்படி பின்பற்றினால் அதன் விளைவு சரியானதாக இருக்காது. மக்கள் அவர்களுக்கு ஒருநீண்ட கால சந்தர்ப்பத்தைக் கொடுத்தார்கள். ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டு காலமல்ல. 20 ஆண்டுகள் அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுத்தார்கள். அப்படியிருக்கும்பொழுது 1½ ஆண்டுகாலமாக ஆட்சியிலிருக்கிற தி. மு. க. வின் மீது இவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். ராமன் சீதையைக் கொண்டுபோய் அக்கினியில் வைத்துப் பரிசோதித்தது மாதிரி, இவர்கள் 1½ ஆண்டு காலமாகவே ஆட்சி நடத்திவரும் தி.மு.க.வின் மீது நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் கொண்டுவருகிறார்கள். மகத்தான தோல்வி அடைந்த பின்பும் கூட, காங்கிரஸ்காரர்கள் தங்களை மாற்றிக்கொள்ளவில்லை. அப்படி மாற்றிக்கொள்ளாததுமட்டுமல்ல. பெரிய குற்றச்சாட்டுகளை விட்டு தங்களை விடுவித்துக்கொள்வதற்கு என்ன வழி என்பதைப்பற்றி யோசிக்காமல், தங்கள் மீது இருந்த குற்றச்சாட்டுகளையே 1½ ஆண்டு காலமாக ஆட்சி நடத்துகிறவர்கள் மீது திரும்பி, குற்றம் சாட்டி நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு ஆண்டு காலமாவது பொறுத்திருந்து பார்த்து, ஒரு சந்தர்ப்பம் அளித்துவிட்டு, அதற்குப் பிறகு நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருந்தால் அது ஒரு பொருத்தமான நடவடிக்கையாக இருந்திருக்கும். நாட்டு மக்களும் கொஞ்சம் திரும்பிப் பார்ப்பார்கள். இம்மாதிரி அவசரப் பட்டுக்கொண்டு வருவது அவர்களுடைய ஆத்திரத்தைக் கொட்டித் தீர்ப்பதற்குத்தான் பயன்படுமே தவிர, நிச்சயம் நம்பிக்கையுள்ள மக்கள் அவர்கள் இதைச் சொன்னால் ஏற்கமாட்டார்கள், ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

ஆட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடிய தி.மு.க.வினருக்கு ஒரு விஷயத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது என்னவென்றால், இந்தியா பூராவிலும் 9 மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு அவைகளில் உயிரோடு இருப்பதெல்லாம் 4, 5 மாநிலங்களில் தான். அதுவும், காங்கிரஸ் அல்லாத ஒரே கட்சி ஆட்சி நடத்தக்கூடிய மாநிலம் நம்முடைய மாநிலம் தான். எவ்வளவோ அதிகாரங்கள் மத்திய அரசினிடம் இருந்துகொண்டிருக்கிறது என்றாலும், தங்களைப் பொறுத்தவரையில் தங்





களுடைய கொள்கையை ஸ்திரப்படுத்திக்கொண்டு, கண்டிப்பான முறையிலே அதை வளர்க்கவேண்டும், அதை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட முறையில் காரியங்கள் ஆற்றுவதன் மூலம் தான், நாட்டு மக்களுக்கு காங்கிரஸ் அல்லாத கட்சியின் மீது நம்பிக்கை ஊட்ட முடியும். அப்படிச் செய்ய தவறிவிட்டால், எந்தக் கட்சியும் ஜனங்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருக்க முடியாது என்பதை அழுத்தந் திருத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன். எந்தக் கட்சியினிடமும் ஜனங்களுக்கு நம்பிக்கை பிறக்காது போய்விடும். அதற்குப் பதிலாக மக்களுடைய நம்பிக்கையை இழந்தவர்கள் மறுபடியும் ஆட்சி செலுத்துவதற்கு வந்துவிடக்கூடிய ஒரு அபாயம், ஆபத்து ஏற்பட்டு விடும். இங்கே எனது நண்பர்கள் அமைச்சர்களாக உட்கார்ந்துக்கொண்டிருக்கிறார்கள். ஸ்தலஸ்தாபனங்களுக்கு உள்ளது போலத் தான் மாநில அரசுக்கும் அதிகாரங்கள் இருக்கின்றன. இருப்பினும், அமைச்சர்கள் தங்களுடைய சாதனையின் மூலம், தங்கள் கொள்கையின் மூலம், அதனால் ஏற்படுகின்ற வலுவான சக்தியின் மூலம், மத்திய அரசில் பதவிகளை பெறவேண்டும். நான் இதை மனப்பூர்வமாகச் சொல்லிக்கொள்கிறேன். ஏதோ உங்களைப் பாராட்டிப் பேசவேண்டுமென்பதற்காக மட்டும் சொல்லவில்லை. உங்களுடைய பெருமைகளை ஆற்றலை, நான் எடுத்துச் சொல்லாவிட்டால், என்னைவிட ஒரு துரோகி உங்களுக்கு இருந்திருக்க முடியாது. (குறுக்கீடு) அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதுபற்றி எனக்கு கவலை கிடையாது. அவர்கள் எவ்வளவோ குற்றங்குறைகளைச் சொல்வார்கள், அதைப்பற்றி நான் என்ன சொல்வது? அதைப்பற்றி நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. நான் கூறுவது என்னவென்றால், எதிர்க் காலத்தை மனத்தில் கொண்டு, தயவுசெய்து சிறந்த முறையில் காரியங்களை ஆற்றுங்கள். அப்படி நல்ல காரியங்களைச் செய்வதன் மூலம் நம்முடைய மாநில முதல் அமைச்சர் இங்கே முதல் அமைச்சராக இருப்பது மட்டும் போதாது. வருகின்ற காலத்தில் இந்திய நாட்டின் பிரதம அமைச்சராக ஆகவேண்டும். அது தான் என்னுடைய ஆசை. (ஆரவாரம்) நான் இதை மனப்பூர்வமாகச் சொல்கிறேன். தி. மு. க. நாட்டுப் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டார்கள். மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். நாட்டுப் பற்றை உண்டு பண்ணுவதற்குத்தேவையான காரியங்களை நீங்கள் தயவு செய்து செய்ய வேண்டும். அதிலே எந்தவிதமான தயக்கமும் காட்டவேண்டியதில்லை. பிரிவினையை பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தால், அதற்கு உண்மையாக இருக்க வேண்டும். பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டவுடன், இந்திய நாடு ஒன்று என்று ஒப்புக்கொண்டதற்குப் பிற்பாடு, நாட்டுப்பற்றை, வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

“ இந்திய நாடு இது என்னுடைய நாடு
என்று தினம் தினம் நீ அதைப் பாடு
வந்தவர் போனவர் யாரையும் நம்பி
வாடிய காலங்கள் ஓடியது தம்பி
இந்த தினம் முதல் இந்திய நாடு
என்னுடைய நாடு என்ற எண்ணத்தைக் கூடு ”

என்று ஒரு கவிஞன் எழுதியிருக்கிறான். இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பு தமிழரின் கையில் வரவேண்டும். அதற்குப் பெறுமை உண்டு. அதற்கு மக்கள் ஆதரவு உண்டு. அப்படி அதற்கு மக்கள் ஆதரவைப் பெறும்படியான முறையில் நீங்கள் செயலில் ஈடுபட வேண்டும். அதற்கு ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். தேசீய வீரம் இருக்கிறதே, தேசீய உணர்ச்சி இருக்கிறதே அதை உண்டுபண்ணினால், பல பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியும். மாணவர்கள், பஸ் தொழிலாளர்கள் மோதல் ஏற்பட்டது. தீ விபத்துக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. பலவிதமான குற்றச் சாட்டுகள் சொல்லப்படுகின்றன. இதற்கெல்லாம் காரணம், ஒரு ஒட்டு மொத்தமான கட்டுப்பாட்டு உணர்ச்சி இந்த தேசத்தில் இல்லாதது தான். அத்தகைய கட்டுப்பாட்டு உணர்ச்சியை உண்டுபண்ணவேண்டும் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த அரசானது தங்களுடைய கொள்கையை சரியாக. வளர்த்துக்கொள்ளவில்லை. தயவு செய்து சொல்கிறேன், திட்டவட்டமான முறையில், இந்த அரசு தங்களுடைய கொள்கைகளைத் தெளிவாக வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்படி இல்லாததினுல் தான் பல்வேறு சங்கடங்கள், சிக்கல்கள் உண்டாகின்றன. உதாரணத்திற்குச் சொல்லப் போனுல், நிலச் சீர்திருத்தத்தை எடுத்துக்கொண்டால், அதைப்பற்றி தங்கள் கருத்து என்ன என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துவிட வேண்டும். தொழிலாளர் கொள்கையா, இது இப்படித் தான் அப்படி கிடையாது, தேசீய ஒருமைப்பாடா அதைப்பற்றி தங்களுடைய கருத்து இது தான் என்று தெளிவாக ஒரு முறை வகுத்துக்கொள்ள வேண்டும். 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் கட்சியினர் சாதித்தது என்ன தெரியுமா ? பேசினுர்கள், பேசினுர்கள், பேசிக்கொண்டே இருந்தார்கள், பேசிக் கொண்டே எல்லாவற்றையும் கோட்டைவிட்டுவிட்டார்கள். அந்தக் காரியங்களை நாம் செய்யக்கூடாது. காங்கிரஸ் அல்லாதவர்கள் பேசுவதற்குப் பதிலாக, காரியங்களைச் சாதிக்கவேண்டும். தீரம் மிக்க முறையில் காரியங்களைச் செய்யவேண்டும்.

உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். சர்க்கார் அலுவலகங்களிலிருந்து கடவுளர் படங்களை நீக்க உத்தரவிட்டது நல்ல காரியம் தான். அதில் என் தயக்கம் காட்டவேண்டும். அதற்கு எதிர்ப்பு வரத்தான் வரும். எண்ணித் துணிக கருமம், என்று சொன்னுர் வள்ளுவர் பெருந்தகை. அந்தக் கருத்தையொட்டி, ஒரு காரியத்தை நாம் செய்து முடித்துவிட்ட பிற்பாடு, நியாயமானது தான் என்ற முறையில் ஒரு உத்தரவு பிறபித்தபிற்பாடு, நிச்சயம் அதன் மீது நிற்கவேண்டும். அதில் தயக்கம் எதுவும் காட்டக்கூடாது. அதனுல் அரசைவிட்டு வெளியெற்றவேண்டிய அவசியம் வந்தால்கூட, தயக்கம் காட்டக் கூடாது. பதவி பெரியதல்ல. உறுதிதான் முக்கியம், கொள்கை தான் முக்கியம். பதவியைவிட்டு விலக நேர்ந்தால்கூட, அந்தத் தீர்மானத்தின் மீதே நிற்கவேண்டும். அப்பொழுது தான் நாம் என்றென்றைக்கும் நிலைத்து இருக்க முடியும், இல்லாவிட்டால் நிலையாக இருக்க முடியாது. ஆகவே, அதற்கிணங்க திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கொள்கையில் தீவிரமாக இருக்கவேண்டும் என்று இந்த அரசாங்கத்தைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொள்ளுகிறேன். சில சமயங்களில் கஷ்டமாக இருக்கலாம். ஆனுல் நல்லதற்காகட்டும், கெட்டதற்காகட்டும், அவர்களை உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். நம்மையும் அறியாமலேயே அவர்களுடைய பழக்க வழக்கங்கள் நம்மிடம் புகுந்துவிடும். அவர்களுடைய உதாரணமே வேண்டாம். இந்தத் தீர்மானம் ஒரு வகையில் நல்ல வழிகாட்டியாக அமையும் என்று நினைக்கிறேன். இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோற்றுவிடப் .போகிறது. நாங்களெல்லாம் அதற்குச்சாதகமாக ஒட்டுப் போடப்போவதில்லை. அவர்கள் மட்டுமே தனித்து ஓட்டுப் போடப் போகிறுர்கள். வெகு ஜாக்கிரதையாக இதை ஒரு அறைகூவல் என்று வைத்துக் கொண்டு, செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

***திரு. ரா. ராமச்சந்திர துரை :** உதவி சபாநாயகர் அவர்களே, எங்களுடைய கட்சி சார்பில் கொண்டு வரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன். எங்கள் கட்சி உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள், கிளப்பிய பிரச்சினைக்கு என்னுடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல் அமைச்சர் மறுத்துப் பதில் கூறினுர்கள். இன்றைய தினம் பேசிய அருமை நண்பர் திரு. சின்னசாமி அவர்கள் கட்சியைச் சேர்ந்த புதுக்கோட்டை, தியாசராஜ காடுவெட்டியார் அவர்களைக் கட்சியிலிருந்து ஸஸ்பெண்ட் செய்திருப்பதாகப் பேசினுர்கள். ஆனுல், 25—8—1968 அதாவது நேற்றையதினம் நடந்த திராவிட முன்னேற்றக் கழக பொதுக் கூட்டத்திலே புதுக்கோட்டையில், திரு. C. வீரைய்யா வட்டச் செயளாலர் அவர்கள் தலைமையில், தியாகராஜ காடுவெட்டியார் பேசுகிறுர்கள். அதற்கு இதோ நோட்டீஸ் இருக்கிறது. ஒருவரை ஸஸ்பெண்ட் செய்த பிறகு, அவரே திராவிட முன்னேற்றக்கழகத்தின்



சார்பிலே ஒரு கூட்டத்திலே பேசுவதற்கு அனுமதி உண்டா ? அதைப் பற்றி அவர்கள் பதில் சொல்லும்போது விளக்கம் கூற வேண்டுகிறேன். (குறுக்கீடு) அதற்கான ரிகார்டு இருக்கிறது என்பதால் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அது கட்சி நடவடிக்கை ; கட்சி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கும். பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுகிறுர்கள் என்ருல் அதில் தவறு இல்லை. பொதுக் கூட்டத்தில் பேசுகிறுர் என்பதாலேயே அவர் கட்சியில் இருக்கிறுர் என்பதையும் நிரூபிக்க முடியாது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** உதவி சபாநாயகர் அவர்களே, எங்களுடைய கட்சியில், ஒருவர் இப்படி ஸஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறுர் என்ருல், கூடுமானவரையில் கட்சிக் கூட்டத்தில் பேசுவதற்கு இடம் கொடுப்பதில்லை. ஒருகால் திராவிட முன்னேற்றக் கழகத்தில், கட்சியைவிட்டு விலகினுலும், கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்று விதி செய்திருக்கிறுர்களோ என்னவோ.

அடுத்து, உலகத் தமிழ்நாடு பிரச்சினைகளைப் பற்றிப் பேசினுர்கள். எங்களுடைய குற்றச்சாட்டு, உலகத் தமிழ்நாட்டு சம்மந்தமாக வசூல் பற்றி பேப்பரில் வந்திருக்கிறது. திருச்சியில் 33 லட்சம் ரூபாய், தஞ்சையில் 26 லட்சம் ரூபாய் என்று இப்படி மாவட்டவாரியாகப் பத்திரிகையில் வந்தது. ஆக மொத்தம் ரூ. 2½ கோடி என்று பத்திரிகையில் வந்திருக்கிறது. சென்ற பட்ஜெட் தொடர் கூட்டத்தில் கூட பொதுப் பணித்துறை அமைச்சர் ரூ. 21 லட்சம் வசூலானதாகவும், ரூ. 17 லட்சம் செலவானதாகவும், மீதம் ரூ. 4 லட்சம் இருப்பதாகவும் கூறினுர்கள். எங்களுடைய குற்றச்சாட்டு, தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் அறிக்கை விட்டதற்குப் பிறகு, மாண்புமிகு முதல் அமைச்சர் அறிக்கை விட்டதில், மொத்தம் ரூ. 56 லட்சம் என்று கூறினுர்கள். முடிவாக பத்திரிகையில் ரூ. 18 லட்சம் என்று இருந்தது. ஆகவே, இரண்டு அமைச்சர்களுடைய கணக்குகளுக்கும் வேறுபாடுகள் இருந்தால் யார் சொல்வது உண்மை ? கிட்டத்தட்ட ஓராண்டு ஆகியும் பத்திரிகையில் வந்த கணக்கைப்பற்றி மறுத்தோ, ஒத்துக்கொண்டோ அறிக்கை கொடுக்காததால், அதை ஒரு குற்றச்சாட்டாக எடுத்து வைக்க வேண்டிய நிலையில் இருக்கிறேம்.

உலகத் தமிழ் மாநாடு நேரத்தில், ரூ. 10,000 என்ற அளவில் கார் பர்மிட்டுகள் கொடுத்திருக்கிறுர்கள். அதற்காக ஒரு சீட்டும் கொடுத்திருக்கிறுர்கள். இதோ இருக்கிறது சீட்டு. இப்படிப்பட்ட ரூ. 10,000 சீட்டு கிட்டத்தட்ட 60, 65 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறுர்கள். அவர்கள் கொடுத்தது 55, 60 பர்மிட்டுகள். மீதமுள்ள சீட்டுகளுக்கு பர்மிட்டுகள் கொடுக்கப்படவில்லை. ரூ. 10,000 பெற்றுக்கொண்டும் பர்மிட் கொடுக்கப்படவில்லை. பர்மிட் கொடுக்கப்படாதவர்களுக்கு திரும்ப ரூ. 10,000 கொடுக்கப்பட்டதா என்ருல், அதுவும் கிடையாது. பர்மிட் கொடுக்கப்படாத நபர்கள் தங்களுடைய நிலங்களை விற்று கொடுத்திருக்கிறுர்கள். சேட்டுகளிடம் வட்டிக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறுர்கள். பற்றுக்குறைக்கு பர்மிட் வழங்கப்பட்ட 4 மாதத்தில் பர்மிட்டுகள் ரத்து செய்யப் பட்டிருக்கின்றன. பர்மிட்டுகள் ரத்து செய்யப்பட்டதால் கிராம மக்கள் பஸ்கள் கிடைக்காமல் போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் அவதிப் படுகிறுர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த சீட்டில் கார் பர்மிட்டுக்காக என்று இருக்கிறதா ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** கார் பர்மிட் என்று இல்லை. ஆனுலும் ஆதார பூர்வமாகத்தான் சொல்லுகிறேன். கார் பர்மிட் என்று வாங்கிய வரைக் கொண்டு வந்து என்னுல் காட்ட முடியும். ஆதாரத்தோடுதான் கூறுகிறேன். இம்மாதிரியான காரியங்கள் நடந்திருப்பதால், இப்படிப் பட்ட தவருன நிகழ்ச்சிகள் நடந்திருப்பதால், தென்காசியிலும் பெற்ற 23 ஆயிரம் வாக்குகளிலும் என் தவறுகள் நடந்திருக்கக் கூடாது என்று எண்ணக் கூடிய அளவில் இருக்கிறது என்று பொது மக்களும் பேசிக்கொள்ளுகிறுர்கள்.

[திரு ரா. ராமச்சந்திர துரை] [1968 ஆகஸ்ட் 26

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தில், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. கருணாநிதி 12-ம் தேதி புறப்பட்டு, 13-ம் தேதி உத்தியோக பூர்வமாக நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கிறார்கள் என்று சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு நிகழ்ச்சி நிரல் வந்தது. 13-ம் தேதி இரவே புறப்பட்டு சென்னைக்கு வருவதாக அனுப்பிய நிகழ்ச்சி நிரலில் இருந்தது. ஆனால் 13-ம் தேதி அங்கேயே இருந்து, கட்சி சார்பான கூட்டங்களில், கும்பகோணத்தில் பங்கெடுத்துக்கொண்டு, 13-ம் தேதி இரவு தங்கிவிட்டு, 14-ம் தேதி தஞ்சையில் கழகச் செயலாளர் தேர்தலில் பங்குகொண்டு, அவர் தன்னுடைய அதிகாரத்தைப் பிரயோகித்து, அவருடைய ஆதரவில் முன்னேறிய பஸ் ஓனருடைய 20 பஸ்களை எடுத்துக்கொண்டு மாவட்டச் செயலாளர் பதவித் தேர்தல் வேலையை நடத்திவிட்டு வந்திருக்கிறார். அரசாங்க அதிகாரத்தைப் பயன்படுத்தி, கட்சி வேலையைச் செய்திருக்கிறார் என்கிற காரணத்தால் இந்த, அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லை என்று கூறுகிறோம்.

**திரு. து. ப. அழகமுத்து :** அவர்கள் கட்சிப் பொறுப்பில் இருப்பவர் ; அவர் தேர்தலில் நின்றிருக்கிறார். அதில் என்ன தவறு ? அரசாங்கத்தில் படி க்ளெயிம் பண்ணியிருக்கிறார்களா என்பதைத் தெரிந்து கொண்டு பேசவேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அரசாங்கப்படி பெறுமல் இருந்தால் மகிழ்ச்சியுடன் திரும்பிப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அமைச்சர்கள் அரசாங்க நிகழ்ச்சிக்களோடு, காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டங்களிலும் கலந்து கொண்டு இருப்பதை முன்பு அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வந்தபோது, அமைச்சர்கள் அப்படிக் கலந்து கொள்ளலாம் என்று முன்பே காங்கிரஸ் அமைச்சர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த அரசு கூடுமான வரையில் அதைத் தவிர்க்க முயற்சித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், அப்படிப் பட்ட பழக்கம் முன்பே இருந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பஸ் முதலாளிகளுடைய வண்டிகளை உபயோகப்படுத்தியதாகச் சொன்னார்கள். அதை நிருபிக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அந்த விஷயத்தை இந்த சபையில் நிரூபிக்க தயாராக இருக்கிறேன். 20 எஸ். எம். டி. பஸ்கள் உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. ஆதார பூர்வமாகக் காட்ட முடியும்.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, காங்கிரசுக்கு எதிராக அந்த 20 பஸ்களும் பயன் படுத்தப் பட்டனவா ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** காங்கிரசுக்கு எதிராக இல்லை. ஆனால், அவர்களுடைய கட்சிக் கூட்டத்திற்கு, அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி உபயோகித்தார்கள் என்பதுதான் குற்றச் சாட்டு. ஸார், எனக்கு குறிப்பிட்டிருப்பது 10 நிமிஷ காலம் தான். அதிலே இப்படி குறுக்கிட்டுப் பேசுவதற்கு எத்தனைபேர்கள் குறுக்கிடுகிறார்களோ, அத்தனைக்கும், இரண்டு, இரண்டு நிமிஷம் கூட்டிக்கொடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, திருச்சியிலே மாவட்டச் செயலாளர் தேர்தல் நடந்ததாக இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்தது. ஜெயங்கொண்ட
பி.ப. 1-30 புரத்தில் நடந்த தேர்தல் ஹைகோர்ட்டுக்குச் சென்று, ஸ்டே ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். அமீனா வாரண்டை 9 மணிக்குக் கொண்டு சென்ற நேரத்தில் உள்ளே விடாமல் 6 மணிவரை வெளியே நிறுத்தி வைத்து, பிறகு அமீனா அழைத்துக்கொண்டு உள்ளே போய் அடித்திருக்கிறார்கள். இதை நான் ஆதாரபூர்வமாக நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அதே அமீனாவை வேண்டுமானாலும் கொண்டுவந்து இந்த மன்றத்தில் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். (மணியடிக்கப் பட்டது.)



1968 ஆகஸ்ட் 26]

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கனம் உறுப்பினர் அவர்கள் அமீனாவை அடித்ததாகக் கூறுகிறார். அமீனாவை அடித்ததாக ஏதாவது வழக்குப் போட்டு, அந்த வழக்கின் அடிப்படையில் பேசுகிறார்களா ? அல்லது ஏதாவது தகவலின் அடிப்படையில் பேசுகிறீர்களா ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அந்த அமீனாவையே இங்கு கொண்டு வந்து நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அடிப்பட்ட அமீனாவை ஏதாவது காவல் நிலையத்திற்கு அழைத்துக்கொண்டு போய் வழக்காவது போட்டிருந்தால் கனம் உறுப்பினர் நன்மை செய்தவராக ஆகியிருப்பார் அமீனாவை இங்கே அழைத்து வந்தால் என்ன பயன் ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** என்னைக் கேட்பதைவிட தாங்களே அதைச் செய்திருக்கலாம். (எதிர்க்கட்சித்தரப்பில் ஆரவாரம்) அடுத்தபடியாக, ஒரு மாவட்டத்தில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பப்ளிக் பிராசிக்யூடர் இருக்கிறார். அவர் பப்ளிக் பிராசிகியூடராக நியமிக்கப்படுவதற்கு முன்பு அவருடைய சொத்து விவரம் என்ன, இப்போது எவ்வளவு என்பதை பார்க்கும்போது, அவர் ஒரு அம்பாசிடர் கார் வாங்கியிருக்கிறார். வீடு கட்டுவதற்கு நாற்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள ஒரு பிளாட் வாங்கியிருக்கிறார், சீரமங்கலம் என்ற கிராமத்தில் 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நிலம் வாங்கியிருக்கிறார். இந்த பதினைந்து மாத காலத்திற்குள் இப்படிப்பட்ட சொத்துக்கள் எப்படி அவருக்கு வந்தன ? அவர் மட்டுமல்ல இன்னும் ஏராளமானவர்கள் இப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள். $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்திற்குமுன் எப்படி இருந்தார்கள் ? தற்போது எப்படி இருக்கிறார்கள் என்பதைக் காணும்போது, அவர்கள் அரசியல் நிர்வாகத்தில் தலையிட்டு, தவறான காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்று கருத வேண்டியிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கனம் உறுப்பினர் அவர்களுக்கு நேரமாகி விட்டது. இன்னும் ஒரே ஒரு நிமிஷம்தான் இருக்கிறது. சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அடுத்தபடியாக மதுவிலக்குப் பிரச்சினை. முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் ரொம்ப தீவிரமாக இருக்கிறார்கள். அதனால் அவர்கள்மீது எங்களுடைய கட்சியின் நம்பிக்கையும் ஆதரவும் என்றைக்கும் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆளும் கட்சி உறுப்பினர்கள்—ஆரவாரம்) அந்தப் பிரச்னையை நான் ஆதரிக்கிறேன். ஆனால் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் அவர்களிடத்திலே சில தவறுகள் இயற்கையின் கோளாறு காரணமாகத்தான் ஏற்படுகின்றன. இன்று ரோடுகளிலே காண்கிற நேரத்தில் சில கட்சித் தோழர்கள் பகிரங்கமாகக் குடித்துவிட்டு போலீஸ்காரர்களுக்கு எதிராகச் செல்லுகிறார்கள்.* *

* * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த மன்றத்தில் இடம் பெறுகின்ற உறுப்பினர்,** என்று சொல்லிய சொல் சரிதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மன்றத்தினுடைய மரபையும், மாண்பையும் நாம் காக்க வேண்டும். ஆகவே, உறுப்பினர் அவர்கள் தான் கூறிய சொல்லைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அந்தச் சொல்லைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். நான் மன்றத்தில் என்று சொல்லவில்லை. இந்தக் கட்டடத்திற்குள் . . . (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மன்றம் நடைபெறுகின்ற காலத்தில் மன்றம் என்பது "சென்னை புனிதர் ஜார்ஜ் கோட்டையில் உள்ள தமிழக அரசு அமைச்சகக் கட்டிடங்கள், பேரவை மண்டபம், பேரவையைச் சார்ந்த

---

* பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

அலுவலகங்கள். அமைச்சர்களின் அறைகள், நூலகம், சிற்றுண்டி விடுதி, ஓய்வு அறைகள், உறுப்பினர்களின் பழைய விடுதியில் குழுக் கூட்டம் நடைபெறும் அறை, மவுண்ட் சாலை, அரசாங்க மனையில் அமைந்துள்ள நூலகம் பேரவைத் தலைவரால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பிற இடங்கள் அல்லது கட்டிடங்கள், அக்கட்டிடங்களைச் சேர்ந்த படிக்கட்டுகள், தாழ்வாரங்கள், பேரவையிலிருந்து மேற்சொன்ன கட்டடங்களுக்குச் செல்வதற்கான வழிகள் ஆகியவை அடங்கும். இப்பொருள் விளக்கம் பேரவைக் கூட்டங்கள் நடக்கும்போதும் அல்லது அதன் குழுக்கள் அல்லது துணைக் குழுக்களின் கூட்டங்கள் நடக்கும்போதும் அக்கூட்டங்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பும் பின்புமே பொருந்தும்" என்று விதிமுறை இருக்கிறது.**

இப்படி உறுப்பினர்கள் பேசிக்கொண்டுபோனால், சட்டமன்ற உறுப்பினர்களின் நிலை கீழாகத்தான் போய்விடும். இதையெல்லாம் உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேனே தவிர**

என்று சொல்லவில்லை (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கனம் உறுப்பினர் கூறிய சொற்றொடரை பேரவை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று ஆணையிடுகின்றேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தவறைத் தவறு என்று ஏற்றுக்கொள்பவன் அதற்கு என்றைக்கும் மறுப்பவன் அல்ல நான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுடைய நேரமும் முடிந்துவிட்டது (மணியடித்து அடுத்த உறுப்பினர் திரு. பீர் முஹம்மது அழைக்கப்பட்டார்

***ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, முன்னாலே பேசிய உறுப்பினர்,**

என்று குறிப்பிட்டார். அது இந்தச் சட்டமன்றத்தினுடைய மாண்புக்கு இழுக்குத் தேடித்தரும் வாசகம் என்பதால், அதை சட்டசபைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் துறை அமைச்சர் என்ற முறையில் நான் கூறிக்கொள்கிறேன். அப்படி யாராவது குடித்துவிட்டு வருகிறார் என்று புலன் தருவாரானால், குடித்தவர் மீது கண்டிப்பாகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதை பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று ஏற்கனவேயே ஆணையிட்டுவிட்டேன்.

***ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லை என்று கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்ததற்காக நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கருத்தோடும், திருவோடும் பேசுவதில் மன்னர் என்று காங்கிரஸ் அன்பர்களால் கருதப்படக்கூடியவர். ஆனால் நம்முடைய அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லையென்று தீர்மானத்தின்மீது அவர்கள் விளக்கிப் பேசுகின்ற நேரத்தில் அவருடைய பேச்சு கருத்தும் இல்லாமல், திருவும் இல்லாமல், இருக்கின்ற காட்சியைக் கண்டு நான் வியந்தேன். கருத்தும் திருவும் அற்ற பேச்சாக இருப்பதற்குக் காரணம், உள்ளத்தினில் ஒளியில்லை, அதனால் வாக்கினில் ஒளியில்லை. நாடு விடுதலை பெற்றதுமுதல் கடந்த இருபது

**பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



ஆண்டுகளாக தொடர்ந்து ஆட்சி நடத்தியதைவிட, கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்தில் நம் நாட்டு மக்களால் பாராட்டப்பட வேண்டிய அளவுக்கு இந்த ஆட்சி, இயன்ற நல்ல காரியங்களையெல்லாம் செய்துகொண்டு வருகிறது. மக்களும் இந்த ஆட்சியை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஆட்சிமீது நம்பிக்கையில்லையென்று காங்கிரஸ்காரர்கள் தீர்மானம் கொண்டுவருவது உள்ளத்திலே ஒளியில்லை என்ற உண்மையைத்தான் எடுத்துக்காட்டுகிறது.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆளும்கட்சியினர் தென்காசித் தேர்தலிலே வெற்றிபெற்று வந்திருக்கும் திரு. கதிரவன் அவர்களைக் கொண்டே முதன் முதலிலே எதிர்த்துப் பேசவைத்திருக்கும் அந்த ராஜதந்திரத்தை நான் பாராட்டுகிறேன். தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கும் நேரத்தில், நாட்டில் சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள். சட்டம், ஒழுங்கு எங்கு காக்கப்படவில்லை ? தமிழ்நாட்டிலே ஆட்சிக்கு உட்பட்ட எல்லையிலா ? அல்லது தமிழ்நாட்டுக்கு வெளியிலா என்பதை எண்ணிப் பார்க்கும்போது உண்மையிலேயே வேதனைப்படுகிறேன். எந்த எந்த மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி செய்துகொண்ருக்கிறதோ அந்தந்த மாநிலங்களில் எல்லாம் சட்டம் இல்லை, ஒழுங்கு இல்லை, காங்கிரஸ் ஆட்சி செய்யும் மாநிலங்களில் சட்டமும் அமைதியும், ஒழுங்கும் இல்லையென்பதை நாட்டிலே வருகின்ற ஏடுகள் எடுத்துக்காட்டுகின்றன. நாகபூர், ஜாம்ஷெட்பூர், ரூர்கேலா, ஹைதராபாத், ஜபல்பூர், மங்களூர் போன்ற இடங்களில் வாழும் மைனாரிடி மக்களின் புனித ரத்தத்தைச் சிந்தச் செய்கின்ற நிலைமைகள் யாருடைய ஆட்சியில் நடைபெறுகின்றன என்று பார்த்தால் காங்கிஸார் ஆட்சி செய்யும் மாநிலங்களில் தான் நடைபெறுகின்றன. சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். யாருடைய ஆட்சியில் பாதுகாக்கப்படவில்லை ? அம்மணி அம்மாள் என்ற பெண்ணினுடைய புருஷன் பொன்மலையில் இருந்த தொழிலாளி—ஊதிய உயர்வு கேட்டதற்காக சுடப்பட்டாரே அப்போது சட்டம், அமைதி அந்த ஆட்சியில் நடைபெற்றதா என்று கேட்கிறேன்.

இன்று பாட்டாளிகளின் கூட்டாளி என்று பரிந்து பேசுகின்ற காங்கிரஸ்காரர்கள், அவர்களுடைய ஆட்சிக்காலத்திலே சேலத்து வெஞ்சிறையில் பூட்டிய கதவைத் திறந்துவிடாது 27 பேர்களைச் சுட்டுக்கொன்றார்களே, உயிர் போனவர்களுடைய பிரேதத்தை வெளியே தூக்கிவிட்டெறிந்தார்களே, அது தான் இந்த நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் காக்கின்ற முறையா என்று கேட்கிறேன்.

இலக்கிய வளமுள்ள மொழி, இலக்கண வரம்புள்ள மொழி, தேனினும் இனிய மொழி, எங்கள் தென்மொழி, இன்பக் தமிழ்மொழி, எங்கள் தாய்மொழி—இதனை இந்தி மொழி ஆதிக்கம் புரிவதா எனக் கிளர்ந்தெழுந்த மாணவர்கள் மொழிப்போராட்டம் நடத்திய நேரத்தில் திருப்பத்தூரில், திருப்பூரில், வால் பாறையில், பொள்ளாச்சியில், சிதம்பரத்தில் பாளையங்கோட்டையில், நாகர்கோயிலில், திருநெல்வேலியில் இதுபோன்று இன்னும் பலபல இடங்களில் மாணவ மணிகளை 156 பேர்களுக்கும் அதிகமான மாணவர்களைச் சுட்டுக்கொன்றார்களே; அந்த நேரத்தில் இந்த நாட்டில் சட்டமும், ஒழுங்கும், அமைதியும் காக்கப்பட்டதா என்று நான் கேட்கிறேன்.

தேசியத் தந்தை காந்தி அடிகள் விடுதலை அடைந்தவுடனேயே காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிடவேண்டுமென்று கூறினார்கள். அன்றைக்கு எனக்கு அதன் காரணம் புரியவில்லை. ஒரு நல்லாட்சி ஏற்படுகிற காலத்தில் சட்டமும், அமைதியும், ஒழுங்கும் கெட்டுவிட்டது என்பதாக பின்னால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்தக் காங்கிரஸ்காரர்கள் கொண்டுவரக் கூடும், கொண்டுவருகிற நிலை ஏற்படும், அதற்கு இடம் இருக்கக் கூடாது என்கிற தூர நோக்கத்துடனேயே தான் தேசீயத் தந்தை காந்தி அடிகள் காங்கிரஸைக் கலைத்து விடவேண்டும் என்று சொன்னார்களோ என்று நான் நினைக்கிறேன்.

தென்னை மரத்தில் தேள் கொட்டினால், பனை மரத்தில் நெறிகட்டும் என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறேன். அது சாத்தியமா என்று எண்ணிக் கொண்டிருந்தது உண்டு. பழைய காங்கிரஸ்காரர்களது ஆட்சியில் அது சாத்தியம் என்பதை நானே அவர்களால் வெண்சிறையில் அடைக்கப்பட்ட போது அறிந்தேன். வடக்கே ஏற்பட்ட பாகிஸ்தான் படையெடுப்பின்போது எல்லைப்புறப்போரில் தமிழகம் ஆற்றவேண்டிய தேசியப் பணியை எடுத்து 15 கூட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரால் பேச கேட்டுக்கொள்ளப்பட்டு 3 கூட்டங்களில் பேசி முடிந்த பின்னர் பாதுகாப்புக்கைதியாக நானும், மறுமலர்ச்சி ஆசிரியர் யூசப்பும், துணை ஆசிரியர் ஹனிபும் மாணவமணி ஷாவுல் ஹமீதும் ஆள்தூக்கும்சட்டத்தின் பெயரால் கைது செய்யப்பட்டு வெண்சிறையில் தள்ளப்பட்டதை கடந்த கால காங்கிரஸ் ஆட்சியில் தான் இந்த நாட்டில் கண்டிருக்கிறோம். கால் நூற்றாண்டு காலம் பேச்சிலும் எழுத்திலும், சட்ட விரோதமான ஒரு வார்த்தையும் பேசவில்லை எழுத வில்லை என்ற நிலையிலும், தேசீயப் பணியில்தான் ஈடுபட்டிருந்தோம் என்ற சூழலிலும், அரசியல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளப்பட்டோம். அதே காங்கிரஸ்காரர்கள் தான் கூறுகிறார்கள் சட்டமும், ஒழுங்கும், அமைதியும் பாதுகாக்கப்படவில்லை என்று. யாருடைய ஆட்சியில் சட்டமும், ஒழுங்கும் பாதுகாக்கப்படவில்லை என்று காங்கிரஸாரை நான் கேட்கின்றேன்.

இந்த நாட்டிலே பல்வேறு தீ வைக்கின்ற தீய நிகழ்ச்சிகள் நடை பெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் தீவைக்கும் தீய செயலைச் செய்பவர் யார் என்று எனக்குத் தெரியும் என்று சொன்னதில் இருந்து—தீ வைக்கின்ற நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து இந்த ஆட்சிக்கு ஒரு தீய நோக்கத்தை மக்களுக்கு மத்தியில் ஏற்படுத்தவேண்டுமென்று அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்களே வைக்கிறார் களோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது. அத்துடன் இந்தச் சம்பவம் குறித்து ஆட்சியினரைக் குறைகூறி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்திருப்பதும் மக்களிடத்தில் காங்கிரஸாரைப்பற்றிய ஐயத்தை இன்னும் உறுதிப்படுத்தியுள்ளது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் யாரிடத்து ? தமிழனுடைய பண்பாட் டைக் காத்து வருகிற அரசினிடத்து நம்பிக்கையில்லாத் தீர்மானமா, தமிழ்மொழியின் சிறப்பைப் பாதுகாத்து வருகின்ற அரசினிடத்து நம்பிக்கை யில்லாத் தீர்மானமா ? இருமொழித் திட்டத்தைக் கொண்டுவந்து ஈடு இணையற்ற முறையில் ஒரு தீர்மானத்தையே இந்த அவையில் நிறை வேற்றிய அரசினிடத்து நம்பிக்கையில்லாத் தீர்மானமா ? நம்முடைய தமிழ் மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்ட பல்லாண்டாகக் கூறிக்கொண்டிருந்த காட்சியை மாற்றி—இதற்குத் தமிழ்நாடு எனப்பெயர் சூட்டிய ஆட்சியினிடத்து நம்பிக்கை இல்லாத் தீர்மானமா ? இல்லை. தமிழ்மீதே நம்பிக்கை இல்லாத தீர்மானம், தமிழ்நாட்டின் மீதே நம் பிக்கை இல்லாத தீர்மானம், தமிழ் மக்கள் மீதே நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்று கூறுகிறேன்.

அடுத்து என் உரையை முடிப்பதுற்குள்ளாக ஒரே ஒரு கவிதையைப் படிக்க தங்கள் அனுமதி கோருகிறேன்.

பத்தொன்பது வருடமிந்த நாட்டை ஆண்டும்
பணவீக்கம் விலையேற்றம் இரண்டையுமே
அணைபோட்டுத் தடுக்கின்ற ஆற்றலின்றி
அரசாண்டு முடிந்துவிட்ட காங்கிரஸாரே
மக்களிங்கே உங்களாலே மகிழ்ந்ததுண்டா ?
மனிதரென மக்களைநீர் மதித்ததுண்டா ?

சிக்கனமாய் அளவோடு செலவு செய்து
சேகரித்த வரிப்பணத்தை மீத்ததுண்டா ?

தக்கதொரு திட்டத்தை ஆய்ந்து தீட்டி
தண்டமிகு செலவுகளைத் தவிர்த்ததுண்டா ?

எக்கணமும் ஆள்தூக்கும் தடுப்புக்காவல்
என்கின்ற சட்டத்தை வெறுத்ததுண்டா ?





கையூட்டும் முறைகளையும் ஒழித்ததுண்டா ?

கருஞ்சந்தைக் காரரை நீர் தடுத்ததுண்டா ?

மொய்வாங்கித் தேர்தலுக்காய்ப் பணத்தை சேர்க்க
முதலாளியிடம் வீட்டேற மறந்ததுண்டா ?
அய்யய்யோ பசி என்றே அலறும் மக்கள்
அரைவயிற்றுக் கஞ்சியேனும் குடித்ததுண்டா ?

கைநீட்டிக் கேட்கின்ற உரிமைக் கெல்லாம்
புகைக்கும் துப்பாக்கி ரவையைக் கொண்டே
கண்ணீரும் செந்நீரும் பெருகி விட்டீர்.

இந்த ஒரு நிலையில் ஆட்சி பீடத்தில் இருந்து ஆண்டுவிட்ட நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் நல்லாட்சி நடத்துகின்ற நேரத்தில் நம் பிக்கை இல்லாத் தீர்மானம் என்கிற மத்தாப்பூக் கொளுத்துவதன் மூலம் இருண்டு விட்ட உங்கள் அரசியல் வாழ்வில் ஒரு ஒளியைப் பெறலாம் என்று எண்ணினீர்களானால்—நிச்சயமாக அது நிரந்தரமான தொரு ஒளியைத் தராது என்று கூறுவேன்.

இந்த நாட்டு மக்களுடைய வயிற்றை அமெரிக்காவுக்கு அடகு வைத்து, இந்த நாட்டு மக்களுடைய மானத்தைச் சீனர்க்குக் காவு கொடுத்து, இந்த நாட்டுமக்களுடைய பண்பாட்டை பிரிட்டனிடத்து பலியிட்டு, உலக நாடுகளின் நட்பை ரஷ்யாவிடம் பணயம் வைத்துள்ள காங்கிரஸ்காரர்கள் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் சார்பில் எதிர்க்கின்றேன் என்று கூறி அமர்கிறேன். நன்றி.

* **திரு. ந. வீராசாமி :** சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த இருபது வருட காலமாக நாட்டை ஆண்ட காங்கிரஸ்காரர்களின் மீது நம்பிக்கை இல்லை என்று பொதுமக்கள் அவர்களைத் தோற்கடித்து நீங்கள் எதிர்க்கட்சியாக இருக்கத்தான் லாயக்கு என்று எதிர்க்கட்சியில் உட்கார வைத்ததற்குப் பிறகு இன்றைக்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர் மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது கொண்டுவந்ததன் மூலம் காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கட்சியினராக இருக்கக் கூட லாயக்கில்லை என்பதை நிரூபித்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் சொல்லியிருக்கிற வாசகங்களைப் பார்க்கிறபோது அடுத்த பொதுத் தேர்தலிலே அவர்கள் எதிர்க்கட்சியினராகக்கூட வர முடியாதே என்று நான் பரிதாபப்படுகிறேன்.

எதற்காக இந்த ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை ? அண்ணல் காந்தி அடிகள் சொன்னாரே, இந்த நாட்டில் அமைச்சர்கள் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கக் கூடாது என்று. அந்த நிலையை உருவாக்கி ஒவ் வொரு அமைச்சரும் தங்கள் தங்கள் சம்பளத்தை 500 ஆகக் குறைத்துக் கொண்டு பணியாற்றி வருகிறார்களே அதற்காக நம்பிக்கை இல்லை என்று சொல்கிறார்களா என்று கேட்கிறேன்.

அதேபோல் இந்த அரசுக்கு 1·6 கோடி நஷ்டம் ஏற்பட்டால்கூட பரவாயில்லை என்று எண்ணி ஏழைகள் செலுத்திக்கொண்டிருந்த புஞ்சை வரியை நீக்கியதோடு அல்லாமல் இந்த நாட்டில் உள்ள 60 லட்சம் பட்டாதாரர்களில் 45 லட்சம் பட்டாதாரர்கள் நன்மை அடையத் தக்க வகையில் புஞ்சை நிலங்களுக்கு வரியில்லை என்று வரிவிலக்குக் கொடுத் திருக்கிறார்களே, அதற்காக நம்பிக்கை இல்லை என்று சொல்கிறார்களா என்று கேட்கிறேன்.

அதேபோல இந்த நாட்டிலே காங்கிரஸ் ஆட்சியில் வரிசை வரிசையாக கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள், முதியோர்கள் அரிசி இல்லை அரிசி இல்லை என்று அரிசிக்காக அவல நிலையில் நின்றார்களே—அந்த நிலையைப் போக்கி தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் அரிசி கிடைக்கிறது, மலிவான விலையில் கிடைக்கிறது, ஒரு கோடிக்கும் மேலான குடும்பங்கள் குடும்பக் கார்டு முறையில் நன்மை அடைகிறது என்று செய்தார்களே அதற்காக நம்பிக்கை இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

அதுபோல ஒருபோக நிலத்தை இருபோக நிலமாக மாற்ற பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து விவசாய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்களே, அதற்காக நம்பிக்கை இல்லையா என்று கேட்கிறேன்.

அதுபோல் காங்கிரஸ் ஆட்சியில் எங்கு பார்த்தாலும் விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை. கள்ளச் சந்தைக்கு உரம் போய்விடுகிறது, கிடைப்பதும் நல்ல உரம் இல்லை, கலப்பட உரத்தையே கொடுக்கிறார்கள் என்று சொன்னார்களே, அந்த நிலைமாறி இன்று விவசாயிகளுக்குத் தேவையான உரம், நல்ல உரம், காலாகாலத்தில் கிடைக்கும்படியாகச் செய்திருக்கிறார்களே, அதற்காக நம்பிக்கை இல்லை என்று சொல்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

அதோடு இந்த அரசு வந்ததற்குப் பிறகு பஸ்களைத் தேசியமயமாக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். காங்கிரஸ்காரர்களுக்குக் கோபம் வருகிறது. இதுவரையிலும் காங்கிரஸ் ஆட்சியிலே எந்த அளவுக்குப் பஸ் கட்டணங்கள் இருந்தனவோ அவற்றைக் குறைத்திருக்கிறோம். உதாரணமாகக் காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 2 ரூபாய் கட்டணம் இருந்தது, இன்றைய தினம் ரூ. 1·46 காசுகள் கட்டணம் இருக்கிறது. இந்த அளவுக்குக் கட்டணத்தைக் குறைத்திருக்கிறோமே அதற்காகத்தான் நம்பிக்கையில்லையென்று சொல்கிறார்களா ?

இந்த நாட்டிலே உள்ள விலைவாசி பற்றி எல்லோருக்கும் தெரியும். காங்கிரஸ் ஆட்டியிலே ஒரு வீசை மிளகாய் 10 ரூபாய், ஒரு வீசை எண்ணெய் 7 ரூபாய், ஒரு படி பருப்பு, கடலைப் பருப்பு என்றால் 4 ரூபாய், ஆனால் இன்றைய தினம் விலைவாசிகளின் நிலைமை என்னவென்றால் மிளகாய் 3½ ரூபாய், எண்ணெய் 3 ரூபாய், பருப்பு 2 ரூபாய். இந்த அளவுக்கு விலையைக் குறைத்ததற்காகத்தான் நம்பிக்கை இல்லையென்று சொல்கிறார்களா ? காமராஜ் போன்றவர்கள் வெளியிலே பேசிவருவதைப் பற்றி செய்தி பார்க்கிறோம். விலை திடீரென்று இறங்கியிருக்கிறது, இது இந்த நாட்டுக்கே ஆபத்து என்று கூறியிருக்கிறார்கள், இப்படிப்பட்ட காங்கிரஸ்காரர்கள் நம்பிக்கையில்லை என்று சொல்வது வேதனையாக இருக்கிறது. முன்னாள் அமைச்சர் ஆக இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்கள், விலைவாசிகள் ஏறுவது இந்த நாட்டினுடைய வளர்ச்சியைக் காட்டுகிறது என்று சொன்னார்கள். அந்த நிலைமையைப் போக்கி, ஏழைகளை வாழ வழி வகுத்துக்கொண்டிருக்கிறதே இந்த அரசு அதற்காக நம்பிக்கையில்லை என்று சொல்லுகிறார்களா ?

நாம் பிறந்த நாடு தமிழ்நாடு. பேசுகின்ற மொழி தமிழ் மொழி, இந்த நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்று முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, மற்ற மற்ற கட்சிகளும் மட்டுமல்ல, காங்கிரஸ்காரராக இருந்த சங்கரலிங்க நாடார் அவர்களும் சொன்னார்கள். அதற்காக அவர்கள் உண்ணாவிரதம் இருந்து செத்தார்கள், அதற்குப் பிறகும் காங்கிரஸ் அரசு இந்த நாட்டிற்குத தமிழ்நாடு என்று பெயர் வைக்கவில்லை. இப்பொழுது எல்லோருடைய ஆதரவோடும் "தமிழ்நாடு" என்று பெயர் வைக்கத்தீர்மானம் நிறைவேற்றி இந்திய அரசுக்கு அனுப்பினார்களே அதற்காக நம்பிக்கையில்லை என்று சொல்கிறார்களா ? மனதிலே கைவைத்து அவர்கள் சொல்ல வேண்டும், எதற்காக நம்பிக்கை இல்லையென்று ?

நெல் கொள்முதல் பற்றிச் சொல்லும்பொழுது தவறான விலையைப் பின்பற்றுகிறார்கள் என்று சொல்கிறார்கள். இன்றைய அவைத் தலைவராக வீற்றிருக்கின்ற புலவர் அவர்களும், சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த திரு. சீமைச்சாமி அவர்களும் கடந்த ஐந்தாண்டுக் காலமாக இதே சட்டமன்றத்திலே பலமுறை கொள்முதல் விலையைக் கூட்டவேண்டுமென்றும் போதாது என்றும் சொன்னார்கள். அப்பொழுது முன்னால் முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அரசாங்கம் கொள்முதலில் நியாயமான விலையைத்தான் கொடுக்கிறது, போனஸ் கொடுக்கிறோம் எனறெல்லாம் சொன்னார்கள். பல இடங்களிலே போனஸ் போய்ச் சேரக்கூட இல்லை. கேட்டது நியாயம் இல்லை என்று சொல்லிவிட்டால் அதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அதற்காகக கட்டண விகிதங்களையெல்லாம் சொல்லி, கூலி





களை எல்லாம் சொல்லி, விலையைக் குறிப்பிடுகிற நிலையையும் சொல்லி விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது, இதற்கு மேலே அவர்கள் விலை அதிகமாக வேண்டுமென்றால் அவர்களுக்கு விவசாயத்தைப் பற்றித் தெரியாது, விவசாயம் புரிந்துகொள்ளாதவர்கள் அவர்கள் என்று எல்லாம் 1963-ம் வருடம் மார்ச் மாதம் 8-ம் தேதியன்று முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எப்பொழுது பார்த்தாலும் இதே பிரச்னையைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தொழில் மானியமாக இருந்தாலும், கல்வி மானியமாக இருந்தாலும், கவர்னர் உரைமீது விவாதமாக இருந்தாலும் அவருக்குத் தெரிந்த ஒரே ஒரு பிரச்னை விலையைக் கூட்டித்தா என்பதுதான். விலையைக் கூட்டித்தா என்று சொல்கிற எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நானும் ஒரு விவசாயி என்று சொல்கிறார்கள். அவர் விவசாயி என்பதை ஏற்றுக்கொள்ளலாம். அவரே சொல்லியிருக்கிறார், என்னுடைய குடும்பத்தில் 5 பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று. அந்த 5 பிள்ளைகளும் விவசாயத்தால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்களா ? அவர்களுடைய குடும்பம் நசித்துவிட்டிருக்கிறதா ? என்னுடைய மகன் ஒருவர் டாக்டர், ஒருவர் எஞ்சினியர், ஒருவர் பி.எஸ்ஸி. அக்ரிகல்சரில் இடம் வாங்கியிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார். இப்படி அவர்களுடைய தரம் உயர, கல்வி வசதி பெருக எங்கேயிருந்து வந்தது பணம் ? விவசாயத்திலிருந்து லாபம் வரவில்லையென்று சொன்னால், கொள்முதல் விலை போதாது என்று சொன்னால் இந்த நிலையை அவர்கள் பெற்று இருப்பார்களா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சட்டம் கெட்டுவிட்டது, அமைதி கெட்டுவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். ஒன்றும் தேதி ஊர்வலத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். திறந்த வெளியில் அன்று அடிப்பட்டார்கள் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்திலே விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராடிய காரணத்தாலே ஆயிரக் கணக்கானவர்களைச் சிறையிலே அடைத்தார்கள். வெளியிலே தாக்கப்பட்டதைப் பற்றி இன்று குறிப்பிட்டார்கள். அன்று 4 சுவர்களுக்கு மத்தியிலே சிறைச்சாலையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை கான்விக்ட் வார்டர்களைக் கொண்டு அடிஅடியென்று அடித்தார்கள். எத்தனையோ பேர்களுடைய உடல்களிலே இன்னும் அந்தக் காயங்கள் மாறவில்லை. நல்ல பலசாலியான திடகாத்திரமான தோழர் உள்ளே சென்றார். ஆனால் அவர் திரும்பி வருகின்ற வேளையில் காங்கிரஸ் ஆட்சியிலே அவரைப் பிணமாக இந்த நாட்டிலே வாழமுடியாதவராக அனுப்பினார்கள். அப்படியா சட்டம் இன்றைக்குக் கெட்டுப்போய் விட்டது, அப்படியா இன்றைக்கு அமைதி கெட்டுப்போயிருக்கிறது.

அன்றாட நிர்வாகத்திலே தலையிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். காங்கிரஸ் கட்சியை விட எந்தக் கட்சியினரும் அவ்வளவு தலையிட முடியாது. மின்சார இலாகாவில் அன்றாடம் அடித்த கொள்ளை எவ்வளவு ? எருக்கஞ்சேரி நிலம் வாங்கிய விவகாரம் என்ன ? காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பலராமன், ஜானகிராமன் இவர்கள் ஏற்கனவே இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்தவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்லவா ? காங்கிரஸ் அதிகாரத்தைக் காட்டி, தாங்கள் வைத்துக்கொண்டிருக்கிற பதவிகளைக் காட்டி, ஏழைகள் கொடுக்கின்ற வரிப் பணத்தை, அரசாங்கப் பணத்தைக் கொண்டு, ரூ. 30,000 பெறுமானமுள்ள நிலத்தை 4 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கு மின்சார இலாகாவிற்கு விற்று இதனால் மின்சார வாரியத்திற்கு நஷ்டத்தை உண்டுபண்ணினார்களே, அதைவிடவா உதாரணம் வேண்டும். அதிகாரத்தை அவர்கள்தான் துஷ்பிரயோகம் செய்கிறார்கள்.

கூட்டுறவு இலாக்கா அமைச்சர் உத்திரவு கொடுத்தார்கள், ஆஸ்பத்திரி கட்டவேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள். அதற்குக் கூட்டுறவு இலாக்காவில் நன்கொடை வசூலிக்கப்பட்டது என்று இந்த சட்டமன்றத்தில் முன்பு தவறான முறையில் பேசப்பட்டது. இதற்கு முன்னால் இந்தச் சட்டமன்றத்தில் துணைத்தலைவராக இருந்தவர், அவர் பதவிகளையெல்லாம்

எப்படி துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்? ஒரு கூட்டுறவு நிறுவனத்திலே தலைவராக இருந்து சொந்த லாபத்திற்காக எப்படிப் பல காரியங்களைச் செய்திருக்கிறார்? உதாரணத்திற்கு

Dear Bhaktha,

I have arranged a car for Rs. 10,000. You better draw money from stores and go over here tomorrow morning by Cochin Express.

THIRU K. VINAYAKAM : The Speaker's and Deputy Speaker's action should not be questioned or even discussed on the floor of the House. Is this in order ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டப்பேரவைத் தலைவர் அல்லது துணைப் பேரவைத் தலைவராக இருந்தவர் அப்பதவியில் இல்லாத நேரத்திலே அவர் செய்ததைப் பற்றிச் சொல்லலாம், ஏற்கனவே இது பற்றிச் சொல்லப்பட்டு சட்டமன்ற நிகழ்ச்சிகளிலே எல்லாம் இருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** திரு. ஆதித்தன் தலைவராக இருந்தார், இப்பொழுது எம்.எல்.ஏ.வாகத் தான் இருக்கிறார். அவரைப் பற்றிப் பேசும் பொழுது பேசக்கூடாது என்று நீங்களே சொன்னீர்கள். இப்பொழுது....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தலைவராகவோ அல்லது துணைத் தலைவராகவோ இருந்தவரைப்பற்றிக் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. அந்தப் பதவியிலே இருந்ததற்குப் பிறகு உள்ள நிகழ்ச்சியைச் சொல்லலாம்.

**திரு. டி. மார்டின் :** இப்படிக் குற்றம் சாட்டப்படும் நிகழ்ச்சி அந்த நபர் துணைத் தலைவராக பணியாற்றியபொழுது செய்யப்பட்டதா அல்லது மற்ற நேரத்திலே செய்யப்பட்டதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது இந்த மன்றத்தில் ஏற்கனவே ஒரு முறை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. நம்முடைய சட்ட மன்ற நிகழ்ச்சிகளில் இடம் பெற்ற ஒன்றைத்தான் உறுப்பினர் அவர்கள் படிக்கிறார்கள்.

**திரு. டி. மார்டின் :** அவர் இந்த மன்றத்திலே துணைச் சபாநாயகராக இருந்தபோது அவர் இந்தக் குற்றத்தைச் செய்து இந்தச் சட்ட மன்றத்தில் பேசப்பட்டதா அல்லது துணைச் சபாநாயகர் பதவியை இழந்துவிட்ட
2-00 பி.ப. பிறகுதான் குற்றம் செய்யப்பட்டு அது பற்றிப் பேசப்பட்டதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** துணைச் சபாநாயகர் பதவியை இழந்த பிறகுதான்.

**திரு. ந. வீராசாமி :** தொடர்ந்து எழுதியிருக்கிறார்—

You better ask M. Janakiraman to issue a cheque and get money at once. I am waiting for you. Come at once.

Yours,
B. B. Naidu.

என்று கடிதம் எழுதிப் பணம் வாங்கியிருக்கிறார்.

இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் இந்தச் சட்ட மன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இது தன்னுடைய பதவியை வைத்து, தலைவராக இருக்கிற நிலைமையை எடுத்துச் சொல்லி வங்கியிலே கொடுத்தனுப்பப்பட்ட கடிதம். அது இந்தச் சட்டமன்ற ஏடுகளிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட தவறுகளைச் செய்தவர்கள், ஒழுங்கீனங்களைச் செய்தவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். அதுமட்டுமல்ல. நண்பர் மார்டின் அவர்கள் பேசு



கின்ற நேரத்தில் சிதம்பரம் ஜெயராமன் அவர்களுக்குப்பதவி கொடுத்ததைப் பற்றி இந்த மன்றத்தில் குறிப்பிட்டார்கள். இதே சட்டமன்றத்தில், கக்கன் அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்தில், அவருடைய மகன் எப்படி பதவி பெற்றார் என்பதைப் பற்றி 1964 அக்டோபர் மாதம் 24-ம் தேதி பேசப்பட்டிருக்கிறது. அமைச்சர் கக்கன் அவர்களுடைய மகன் பி.ஏ. தான் படித்திருக்கிறார். இருந்தாலும் அவருக்குக் கிடைக்க முடியாத பதவி, டெபுடி ரெஜிஸ்டிரார் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. மந்திரியுடைய மகன் என்ற காரணத்தால்தானே கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட தவறுகளெல்லாம் செய்தவர்கள் இப்படி ஆட்சி நடத்தியவர்கள் காங்கிரஸ்காரர்கள். இப்படிப்பட்டவர்கள் இந்த ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை என்று கொண்டு வருகின்ற தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கோ. பூவராகன் :** முன்னால் அமைச்சராக இருந்த திரு. கக்கனுடைய மகனுக்கு ஏதோ பதவி கொடுத்ததாகச் சொன்னார்கள். அவர் முறைப்படி மெட்றாஸ் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்விலே தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டவர். சர்வீஸ் கமிஷனைப் பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்கக் கூடாது என்று விதிகள் இருக்கின்றன. இதைப் பற்றி முன்னர் மன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சியாக இருந்தபோது கூறினார்கள். இன்னும் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் போலவே அவர்கள் பேசுகிறார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் ஒரு மரபைக் கடைபிடிக்க வேண்டும். அப்போது, இந்தக் குற்றச்சாட்டு கூறப்பட்டபோது, அதற்கு என்ன பதில் அளிக்கப்பட்டது என்பதையும் சேர்த்துக் கூறியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

**திரு. டி. மார்டின் :** நான் திரு. சிதம்பரம் ஜெயராமன் அவர்களுக்கு சங்கீத நாடக அகாடமியில் டைரக்டராக உத்தியோகம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். பொதுப்பணித் துறை அமைச்சருக்கு அத்தான் என்ற முறையின் காரணமாகத் தான் கொடுக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டேன். அந்த அப்பாயின்ட்மென்ட் சர்வீஸ் கமிஷன் அப்பாயின்ட்மென்ட் அல்ல. சர்க்காரால் போடப்பட்ட உத்தியோகத்தைப் பற்றிக் குறிப்பிட்டேனே தவிர, சர்விஸ் கமிஷன் அப்பாயின்ட்மென்டைப் பற்றிக் கூறவில்லை என்று கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உத்தியோகம் கொடுத்தார்கள் என்ற அளவோடு விட்டுவிட்டால் சரி. அமைச்சருடைய உறவினர் என்று நோக்கம் கற்பிப்பது சரியல்ல.

இப்போது கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் கொடுப்பார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, திரு. சித்தன் அவர்கள் நான் இங்கே இல்லாதபோது, வெளியே சென்றிருந்த போது ஒரு குற்றச்சாட்டை சுமத்தி இங்கே பேசினார். அதற்கு விளக்கம் தருவது நல்லது என்ற காரணத்தால் விளக்கம் தர முற்படுகிறேன். அவர் பேசுகையில் பதவி ஒரு சிலருக்காக துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதாகும். அதற்கு ஒரு உதாரணம் பம்பாயில் உள்ள ஒரு தனிப்பட்டவரின் வணிக நிறுவனத்தின் சார்பில் வெளியிடப்படுகின்ற வணிக மலராகும். அவர்கள் அந்த வணிக மலருக்கு விளம்பரம் கொடுக்குமாறு இங்குள்ளவர்களைக் கோரி கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை அடுத்து முதல் பக்கத்தில் விளம்பரம் செய்வதற்கு 1,500 ரூபாய், இரண்டாவது பக்கம் என்றால் 1,000 ரூபாய், உள்ளே ஒவ்வொரு பக்கத்திற்கும் 750 ரூபாய் என்பதாக விளம்பர விகிதம் இருக்கிறது. அதை அடுத்து ஒரு சிபார்சுக் கடிதம். தலைப்பில் தமிழக அரசின் முத்திரை இருக்கிறது. தமிழக அரசின் முத்திரை தாங்கிய கடிதத்தில் தமிழக அமைச்சர் ஒருவர் 'அந்த வணிக மலரில் விளம்பரம் கொடுக்க நான் சிபார்சு செய்கிறேன். அதில் விளம்பரம் செய்வதனால் தொழில் வளம் பெருகும்' என்று எழுதி கையெழுத்திட்டிருக்கிற கடிதம் இருக்கிறது. ஒரு தனிப்பட்டவரால்

வணிக மலர் வியாபார நோக்கத்தோடு வெளியிடப்படுகிறது. தமிழக அமைச்சர் ஒருவர் அதற்குச் சிபார்சு கொடுக்கிறார்? அதைப் பார்த்தவுடன் நான் வேதனைப்பட்டேன்" என்று கூறுகிறார்.

பம்பாயிலிருந்து வெளியீட்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு அம்மையார் வந்திருந்தார், பெயர் கூட ஞாபகம் இல்லை. பல்வேறு மாநிலங்களைப் பொருத்து, மகாராஷ்டிரம், பீகார், ஒரிஸ்ஸா, போன்ற மாநிலங்களைப் பொருத்து, இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் என்ற முறையில் ஆங்காங்கு ஏற்பட்டிருக்கின்ற தொழில்கள், தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புக் கூறுகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் ஒரு புஸ்தகமாக எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அதே போன்று 'இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் இன் மெட்ராஸ் ஸ்டேட்' என்ற முறையில் தொழில் வளர்ச்சி மலர் ஒன்றை வெளியிடுவதைப் பற்றிச் சொன்னார். அவர்கள் நோக்கத்தைக் குறிப்பிட்டு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

With the aim of reviewing the progress made by the various industries in Madras, we have decided to bring out a research publication devoted to the problems and prospects of industries in Madras entitled "Industrial Madras".

Industiral Madras will depict a true picture of the tremendous progress made by the State. It will provide a forum to the industrialists on the one hand and the Government on the other hand to express their views on the various problems facing the industries in Madras.

Industrial Madras will discuss in detail the industrial aspirations of this State. More, it will provide a forum to the various entrepreneurs to voice their aspirations and hopes. It will give an opportunity to prominent writers to impart the benefit of their expert knowledge in the betterment of this State. And articles by eminent industrialists and economists of India will review the progress for this period as well as suggest remedial steps for giving a further fillip to industry.

*Synopsis of the Contents.*

A review of the industrial progress made by various industries with special reference to its problems and prospects by leading industrialists, economists, etc.

Survey of production, distribution, export-import and management of industrial managements.

A review of the political situation in the state with a special supplement on men who rule over Madras.

A special supplement tracing the overall progress made by the State as compared to other States. Government's policies, projects and its results.

Places of tourist interest in Madras with mangnificent display of photographs of important tourist places.

இந்த நோக்கங்களின் அடிப்படையிலே நூலைக்கொண்டு வருவதாகக் கூறினார்கள். அந்த அடிப்படையிலே வேறு பல மாநிலங்களைப் பொருத்து கொண்டு வரப்பட்டுள்ள மலர்களையும் காண்பித்தார்கள்.





அந்த வகையில் அந்தந்த மாநில முதலமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். நான் அவர்கள் கொடுத்த கடிதங்களிலிருந்தும் கொஞ்சம் "மாடிபிகேஷன்" செய்து மிகவும் ஜாக்கிரதையாக எழுதியிருக்கிறேன். முதலில் நான் கடிதம் தர மறுத்தேன். பிறகு மற்ற மாநில முதலமைச்சர்களும், தொழில் அமைச்சர்களும் கொடுத்த கடிதங்களைப் பார்த்த பிறகும், அதன் நோக்கம் நல்ல முறையில் இருக்கிறது என்ற காரணத்தாலுந்தான் மிகவும் ஜாக்கிரதையாக சொற்களைப் பயன்படுத்தி எழுதியிருக்கிறேன். அந்த அடிப்படையிலே இதற்கு முன்னாலே எழுதி இருக்கிறார்கள்—

WHO'S WHO in Madras Industries.

This publication will be distributed amongst the industrial establishments, Government Offices, leading people from the industries and citizens from all over India.

Thus from the above you will note that *Industrial Madras* will have a wide circulation and it is the ideal media to advertise as it has a Cause—the development of industries.

அதிலே அட்வர்டைஸ் பண்ணுவது மூலம் அந்தந்த இண்டஸ்ட்ரிஸ் பிராஸ்பர் அடைய முடியும் என்ற நோக்கத்தைச் சேர்த்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் நகல் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுக்குக் கிடைத்திருப்பதும், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். நிலைமையை விளக்க அது ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்ததால் அவருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் எப்போதுமே சொற்களை பயன் படுத்துவதிலே கொஞ்சம் ஜாக்கிரதையாக இருப்பவன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கடிதத்தில்,

It gives me great pleasure in recommending to you this special publication entitled "Industrial Madras" devoted to the problems and prospects of industries in Madras. It will review the progress made by various industries in Madras and thus will contribute a great deal towards the development of industries in Madras. This is a project which deserves to be supported and I hope you will extend them all possible co-operation for its success.

என்றுதான் சொன்னேனே தவிர, அட்வர்டைஸ்மெண்ட் கொடுத்து விடுங்கள் என்று சொல்லவில்லை. கொடுப்பதும் கொடுக்காததும் அந்தந்தத் தொழிலதிபர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. அந்த புத்தகம் இனமாக வழங்கப்படுகிறதே தவிர, கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. அந்த நோக்கம் சரியாக இருக்கிறது என்ற நிலையிலேதான் கடிதம் கொடுத்தேன்.

தொழில் வளம் பெருகுவதற்கு விளம்பரம் கொடுத்தால் உதவியாக இருக்கும், அதனால் பயன் ஏற்படும் என்ற நிலையில்தான் அந்தப்புத்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. "அந்த வணிக மலரில் விளம்பரம் கொடுக்க நான் சிபார்சு செய்கிறேன். அதில் விளம்பரம் செய்வதனால் தொழில் வளம் பெருகும்" என்று எழுதிக் கொடுத்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வாசகம் எந்த இடத்திலும் இல்லை.

'It is an ideal medium to advertise as its cause is the development of industry.'

இண்டஸ்ட்ரீஸ் வளர விளம்பரம் செய்வது பயனுள்ளதாக இருக்கும் என்று கருதி அவர்கள் விளம்பரம் கேட்டிருக்கிறார்கள். விளம்பரம் கொடுக்க வேண்டும் என்பது அல்ல நோக்கம், மற்ற மாநிலங்கள் பயன்படுத்திக் கொள்வது போல் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நோக்கத்தில் தரப்பட்டதுதான் அது. அந்தக் கம்பனிக்கு அட்வர்டைஸ்மெண்ட் கொடுங்கள் என்று எந்தவிதமான சிபார்சும் இல்லை. எந்த

பத்திரிகையாளுலும் சரி உங்கள் வியாபாரம் பெருகவேண்டு மென்றுல் எங்கள் ஏட்டில் விளம்பரம் செய்யுங்கள் என்றுதான் சொல்வார்கள். மதருஸ் இன்பர்மேஷன் என்று போட்டு வருகிறேம். அதில் விளம்பரங் கள் செய்யுங்கள் என்றுதான் நாம் சொல்கிறேம். அந்த முறையில் அவர்களும் கேட்டிருக்கலாம். என் நோக்கம் அவர்களுக்கு விளம்பரம் தேடித்தருவதல்ல நமது தொழில் வளர்ச்சியை பெருக்குவதுதான்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அமைச்சர் அவர்களின் விளக்கங் களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மையார் வந்தார்கள் என்று சொன்ஞர்கள். மலரின் தன்மையைப் பற்றி என்ன சொல்லியிருக்கிருர்கள் என்றும் சொன்ஞர்கள். பொதுவாக மலர் வெளியிடுபவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். அமைச்சர் அவர்கள் சிபார்சு செய்திருக்கிருர்கள். சாதாரண கடிதத்தில் அல்ல அதை எழுதியிருப்பது. கடிதத் தலைப்பில்........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விளக்கங்கள் கேளுங்கள். அமைச்சர் அவர்களின் அறிக்கைக்குப் பிறகு எந்தவிதமான கேள்வியும் கூடாது. உங்களைப் பற்றிக் குறிப்பிட்டு நீங்கள் அதுபற்றி ஏதாவது விளக்கங்கள் கேட்க வேண்டுமென்றுல் கேட்கலாம். இதை ஒரு விவாத மாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றியும் குறிப் பிடுகிறேன். அது என் சொந்தக் கடிதம் அல்ல. அரசாங்க அமைச்சர் என்ற முறையில் கடிதம் எழுதியிருக்கிறேன். அதுதான் முறை. வேறு மாநில முதல் அமைச்சர்களாஞலும் சரி, தொழில் அமைச்சர் களாஞலும் சரி 'Chief Minister of the State or the Industries Minister of the State.' என்ற எம்ப்ளத்தோடுதான்போகும். நாம் இந்துப் பத்திரிகை, எல்லாப் பத்திரிகைகளுக்கும் விளம்பரம் தருகிறேம். எக்ஸி பிஷனில் விளம்பரங்கள் தருகிறேம். அதன் மூலம் கருத்துக்கள், மற்றவை பரப்பப்படுகின்றன. அமைச்சர் என்ற முறையில் எம்ப்ளம் பொறித்த காகிதத்தில் எழுதுவதில் தவறு இல்லை. அதில் குற்றம் ஒன்றுமில்லை. அது முறைதான்.

2-14 பி.ப **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த அளவில் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்று மீண்டும் மாலை 4 மணி அளவில் அவை கூடும்.

பின்னர் அவை ஒற்றிவைக்கப்பட்டது.

(இடைவேளைக்குப்பின்—மாலை 4-00மணி .)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அரசினர் மசோதாக்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.**

**(2) முவை அலுவல் வரிசையில் மாற்றம்.**

THE HON. THIRU A. GOVINDASWAMY : Mr. Deputy Speaker, Sir, I move—

" That under Rule 21 (3) of the Legislative Assembly Rules Item IV in the Agenda, viz., *Government Resolutions* be taken up before Item III—*Government Bills.*"

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.





**6. அரசினர் தனித் தீர்மானங்கள்.**

பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகள் திருத்தம்.

THE HON. THIRU A. GOVINDASWAMY : Mr. Deputy Speaker, Sir, I move—

" That the following draft of a rule to be issued by the State Government under Section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), amending the rules issued under the said section, be approved as required by section 8 of the said Act.

*Draft Rule.*

In exercise of the powers conferred by section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), the Governor of Madras hereby makes the following amendments to the rule issued with the late Food and Agriculture Department G.O. Ms. No. 2295, dated the 7th December 1950, published as Notification No. 51 at pages 575 to 583 of Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 26th December 1950, as subsequently amended.

*Amendments.*

In rule 10,—

(*a*) in clause (*iii*) for the words " Annas eight ", the words " Paise fifty " shall be susbstituted.

(*b*) in clause (iv) for the words " Annas four ", the words " Paise Twenty-five " shall be substituted ;

In the Annexure,—

(*a*) in Form ' A '—

(i) for paragraph 1, the following paragraph shall be subtituted, namely ;—

" I/We, the undersigned, hereby beg to apply for a general single licence under the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), available for the period————1—— for the importation by rail/road/river/sea of not exceeding ———2——— bales/maunds of————[State here whether ginned cotton, unginned cotton (Kapas), cotton waste or cotton seeds] into the protected area known as ————3———— notified in the Government Notification, Development Department, No. 278, dated the 19th September 1928, as subsequently amended at ————4————from ————5————station through ———————————— (mention here the route by which the cotton is to be transported from one non-protected area to another non-protected area under licence in Form GG) for the purpose of maufacture in licensee mill or mills onlr/export by the licensee to ————6————. I/We so beg to apply for a certified copy of the licence (as required by the said Act)".

(i) In paragraph 3,—

(A) after sub-paragraph (2), the following sub-paragraph shall be inserted, namely :—

" (2-A) to show the licence at the police station either in the protected area or non-protected area, whichever is nearer to the

point of entry, and also at the police station either in the protected area or non-protected area, whichever is nearer to the border at the time of leaving the protected area."

1. Specify the period.
2. Specify the number of bales.
3. Speeify the name of the place.
4. Specify the name of the place.
5. Specify the name of the place.
6. Specify the name of the place.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு. நிறைவேற்றப்பட்டது.

THE HON, THIRU A. GOVINDASWAMY: MR, Deput Speaker, Sir, I move—

That the following *draft of a rule to be issued by the State Government under Section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), amending the rules issued under the said section, be approved by section 8 of the said Act."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### 7. அரசினர் மசோதாக்கள்.

(i) தமிழ் நாடு 1968-ம் ஆண்டு நகராட்சி அதிகார மன்றங்கள் (பதவிக்காலம்—மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்) திருத்த மசோதா.

*THE HON. THIRU S. MADHAVAN: Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Amendment Bill, [a] 1968 be taken into consideration."

நமது மாநிலத்தில் உள்ள நகராட்சி மன்றங்கள் அனைத்திற்கும் இயன்ற விரைவில் தேர்தல்கள் நடத்த அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது என்பதையும் அதன் தொடர்பான முன்னோடி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருக்கலாம்.

நடைபெறப்போகும் தேர்தலுக்காகத் தயாரித்து வைத்துள்ள நகராட்சி வாக்காளர் பட்டியல்கள் 1967, மார்ச் திங்களில் சட்ட மன்றப் பேரவைத் தேர்தல்களுக்காகத் தயாரிக்கப்பட்டவையாகும், அதாவது, தகுதி பெறும் தேதியான 1-1-1966 தேதி அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பட்டியல்களாகும். வாக்காளர் பட்டியல்கள் நாளது தேதி வரை திருத்தப்பட்டவையல்ல. எனவே நகராட்சித் தேர்தல்களுக்கும் சென்னை மாநகராட்சித் தேர்தல்களுக்கும் தனித் தனி வாக்காளர் பட்டியல்கள் தயாரிப்பதற்காகத் தனிச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. 1968, ஏப்ரலில் இச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்பொழுது முதல் இப் பட்டியல்களை திருத்தியமைக்கும் பணி நகராட்சி அதிகாரிகளின் நாட்டத்தில் இருந்து வந்திருக்கின்றது. 1968 அக்டோபர் இறுதியில் அல்லது நவம்பர் மத்தியில்தான் தொடக்கப் பட்டியல்கள் அச்சிட்டு வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு, தொடக்கப்பட்டியல்கள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து சரியாக

a Printed as Appendix on pages 306-309

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 6th August 1968.



100 நாட்கள் தேவைப்படும். எனவே, அடுத்த ஆண்டு அதாவது 1969-ம் ஆண்டில் தொடக்கத்திற்கு முன்னர் தேர்தலைகளை நடத்த இயலாது. ஜனவரித் திங்களில் பொங்கல் விடுமுறை நாட்கள் வருகின்றன. அப்பொழுது இம்மாநிலத்தில் அறுவடைப் பணிகள் முழுமூரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும். எனவே, தேர்தல்களை 1969, பிப்ரவரிக்கு ஒத்திப் போடுவது தேவையாகும். அதுவே விரும்பத் தக்கதும் ஆகும். இவ்வாறு செய்வதானால் தற்போதுள்ள மன்ற உறுப்பினர்களின் பதவிக் கால அளவை 1-11-1968-க்கு மேற்பட்டு நீட்டிக்க வேண்டும். தமிழ்நாடு 1963-ம் ஆண்டு நகராட்சி அதிகார மன்றங்கள் (பதவிக்கால அளவு—மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1963) 3-வது பிரிவைச் சேர்ந்த (C) பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ் நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்கால அளவை 1-11-1968 நண்பகல் வரை மட்டுமே நீட்டிக்க முடியும். மேற்படி சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (C) பகுதியின் வரம்பு நிபந்தனையைத் திருத்துவதன் வாயிலாகவே நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்கால அளவை நீட்டிக்க முடியும். இத்தகைய சூழ்நிலைகளில், நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்கால அளவை 1-11-1968 நண்பகலுக்கு மேற்பட்டும் நீட்டிப்பது அரசாங்கத்திற்கு வசதியாயிருக்கும் பொருட்டு மேற் கூறிய வரம்பு நிபந்தனையைத் திருத்தக் கருதியுள்ளது.

1963-ம் ஆண்டுச் சட்டத்தின் 3-வது பிரிவின் (F) பகுதியிலும், 4-வது பிரிவிலும் கண்டுள்ள விதித்துறைகள் நடைப்பெறப் போகும் தேர்தல்களுக்குப் பொருந்தவில்லையாதலாலும், அவை பயனற்றுப்போன படியாலும், அவற்றை நீக்கிவிடுவதற்கும் இந்த வாய்ப்பு பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

மேற்படி சட்டத்தில், இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு என்று விதித்துள்ள 5-வது பிரிவைப் போன்ற விதித்துறை அதிகாரத்தை மீறியதாகும் என்று தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே, இச்சட்டத்தின் மேற்படி 5-வது பிரிவை நீக்கிவிடவும், அதன் விளைவாக சட்டத்தின் 6-வது பிரிவில் திருத்தங்கள் செய்யவும் கருதியுள்ளது.

இந்த மசோதாவைப் பேரவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் வேண்டுகின்றேன்.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, I want a little more clarification from the Hon. Minister with regard to Section 5 providing for removal of difficulties. It is proposed to omit this section in view of the decision of the Supreme Court in *Messrs. Jalan Trading Company* v. *Mill Mazdoor Sabha*. I want to know what exactly is the decision of the Supreme Court and why this section is proposed to be omitted.

One more point. The Municipal Electoral Rolls could have actually been prepared and kept ready in the month of April itself and also finalised in the month of May or June. But due to some lapse in the administrative set-up, the work has slowed down. Of course, it is stated in the Statement of Objects and Reasons appended to the Bill that the question of revising the electoral rolls has been engaging the attention of the Municipal authorities but why exactly it is still in the process of revision. Why was it not completed before June ? Will the Hon. Minister take this aspect of the matter into consideration and pull up the concerned Department so that this inordinate and unreasonable delay could be avoided in future.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இன்று கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா நகராட்சிகளுக்கான பதவிக் காலத்தை இரண்டாண்டுக்காலம் நீட்டிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் தரு கின்ற மசோதாவாக வருகிறது. நகராட்சிகளின் பதவிக்காலம் 3 ஆண்டு கள் என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறது. அதற்குமாறாக, இன்னும் இரண்டாண்டுகள் நீடிக்க அரசுக்கு அதிகாரம் தருவது என்ற நிலை ஏற்படும்பொழுது, அந்த அதிகாரம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால் மறுதேர்தல் நடக்காமலேயே, பதவிக்காலம் எவ்வளவு ஆண்டோ அதை விட அதிகமாக மூன்றிலே இரண்டு பாகம் என்னும் அளவுக்கு, அதிகமாக பதவிக்காலத்தை அனுபவிக்கும் நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலை ஏற்படும்பொழுது தேர்தல் நடக்காமலேயே போகின்ற நிலை ஏற்படுகிறது. சட்டமன்றத்திற்கு 5 ஆண்டு பதவிக்காலம் என்றும், உள்ளாட்சித் துறைகளுக்கு 3 ஆண்டு பதவிக்காலம் என்றும் வைக்கப் பட்டிருக்கிறது. ஏனென்றால் உள்ளாட்சித் துறையிலே, அவர்கள் மக்கள் மத்தியிலே போய் அவ்வப்பொழுது கவனித்து அந்தப் பகுதிக் கான சீர்திருத்தங்களைச் செய்யவும், நன்றாகக் கவனிக்கவும், வாய்ப்பு ஏற்பட வேண்டுமென்ற முறையிலே, எவ்வளவு சீக்கிரம் மக்களை சந்திக்க வேண்டுமோ அவ்வளவு சிக்கிரம் சந்திக்க, தேர்தலின் போது அந்த நிலை ஏற்பட்டால் நகராட்சி மன்றங்கள் ஒழுங்காகச் செயல்படும் என்பதற்காக 3 ஆண்டுக் காலம் என்று வரையறை வகுக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஊராட்சி மன்றங்களுக்கு 5 ஆண்டுகள் ; ஊராட்சி ஒன்றியங்களுக்கு 5 ஆண்டுகள் உண்டு, நகராட்சி களுக்கு மட்டும் தான் 3 ஆண்டுகள் பதவிக்காலம்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஊராட்சி ஒன்றியங்களுக்கு 5 ஆண்டுக்காலம் இருக்கிறது. ஆகவே, இதை 5 ஆண்டுக்காலமாக ஆக்குகிறோம் என்ற நிலைமை ஏற்பட்டால் அதற்குப்பிறகு நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை இருக்கிற 3 ஆண்டுக்காலத்தை நீடிப்பது என்பது அரசினுடைய நிலைமை அல்ல. தவிர்க்க முடியாமல் ஓர் ஆண்டு நீடிக்கப்பட்டது. அதைவிட தவிர்க்க முடியாத நிலைமைகள் ஏற்பட்டால் இன்னும் ஓர் ஆண்டுக்காலம் நீடிக்கப்பட வேண்டுமென்பதுதான் இன்றைய தினம் மசோதாவில் இருக் கிறது. அமைச்சர் அவர்கள் சொல்லும்போது பஞ்சாயத்து ஒன்றியங் களுக்கு அந்த நிலைமை இருக்கிறது ; ஆகவே இதையும் நீடிக்சலாம் என்ற நிலைமை ஏற்பட்டால்.........

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** மன்னிக்கவும். உள்ளாட்சி மன்றங்கள் அத்தனைக்கும் 5 ஆண்டுகள் என்று சொன்னதற்குத்தான் விளக்கம் தந்தேன். அதற்கு 5 ஆண்டுக்காலம் எனபதனாலே இதனையும் நீடிக்கிறோம் என்ற வாதத்தை நான் இங்கே வைக்க விரும்பவில்லை என்பதை கனம் உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னுடைய வார்த்தைகள் இந்த மசோதாவைப் பற்றியதாக இருக்க வேண்டுமென்ற அளவிலே சொன்னேன் அந்த பஞ்சாயத்து ஒன்றியங்களைச் சார்ந்திருக்கிற அளவிலே கூறினேனே தவிர, அந்த அர்த்தத்திலே நான் சொல்லவில்லை என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே, இந்த ஓர் ஆண்டுக்காலம் அதிகப்படுவதை வரவேற்கின்றேன். அதற்குப் பிறகு இன்னும் தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள் ஏற்படுமானால் இன்னும் ஓர் ஆண்டுக் காலம் நீட்டிப்பதற்கு அதற்கான அதிகாரத்தை அரசு கேட் பதிலே கூடத் தவறு இல்லை. ஆனால் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுமானால் அந்த நிலைமைகள் என்ன என்பதை இந்த அவைக்கு சட்டபூர்வமாக இயங்குகின்ற இந்தச் சட்டமன்றத்திற்குச் சொல்லி "தேவை தான், ஆகவே நீட்டிக்க வேண்டும் ஒரு ஆண்டுக்கு" என்று இந்த அவை கருதுமானால் 3 மாதத்திற்கு ஒரு முறை இந்த மன்றத்தினுடைய அனுமதியை, ஒப்புதலைப் பெற்று, அதற்குப் பிறகு நீட்டிப்பது என்ற நிலைமை ஏற்படுமானால் அரசுக்கும் உடனடியாகத்தேர்தலை நடத்தவேண்டு



மென்ற கட்டாயமும் கடமையுணர்ச்சியும் ஏற்படும். இப்பொழுது கடமை யுணர்ச்சி இருக்கிறது. ஆனால் அப்பொழுது விரைவாகச் செயல்படுத்து கின்ற ஒரு நிலைமை ஏற்படும். அப்பொழுது ஜனநாயகத்திற்கு உகந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிற நிலைமைகளைப்பற்றி இந்த மசோதாவிலே சொல்லப்பட்டிருக்கிறது.

It is not therefore possible to hold the elections before the beginning of next year. The month of January has Pongal holidays and harvest will be in full swing in the State. It is therefore necessary and desirable to postpone elections to the month of February 1969. என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், ஜனவரி மாதத்திலே பொங்கல் இருக்கிறது. பிப்ரவரி மாதம், மார்ச் மாதங்களிலே சாதாரணமாகத் தேர்தல் நடத்தப்படுகிறது. மார்ச் மாதம் நகராட்சி மன்றங்களைப் பொறுத்த வரையிலே வசூல் வேலையைப் பார்க்க வேண்டிய ஒரு பொறுப்பு இருக்கிறது. அது மிக முக்கியமான வேலை. அந்த நகராட்சி மன்றங்கள் அதற்கான வரிகளை வசூலிக்கின்ற நேரத்திலே தேர்தலை வைத்துக் கொண்டால், அந்த நேரத்திலே தேர்தலை நடத்த வேண்டுமென்பதை நாம் ஒப்புக் கொள்ளுவோமானால் அதனால் பின்னாலே வரி வசூல் பாதிக்கும் என்ற நிலைமை அரசினுடைய கவனத்திற்கு வருகின்றபோது மறுபடியும் 3 மாதங்கள் தேர்தல் நடைபெறாமல் நிறுத்தப்படுகிற நிலைமை ஏற்படும். அந்த நிலைமைகள் ஏற்படக் கூடாது என்பதற்காக தேர்தலை நடத்தினால் அதனால் வரி வசூல் செய்கின்ற வேலை பாதிக்கப்படும். நகராட்சிகள் சென்ற முறை இதே அளவிலே தேர்தலை வைத்துக் கொண்ட காரணத் தாலே வரி வசூல் வேலை பெரும் அளவுக்கு முடங்கியிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக் கிறேன். அந்த நேரத்திலே அதுவே நீடிக்க நேர்ந்தது. நடை பெறுகின்ற தேர்தல் ஒரு வெப்பமில்லாத அளவிற்கு அமையவேண்டும். ஆகவே, அந்த விதிகளைப் பொறுத்தவரையிலும் ஓர் ஆண்டுக்குப் பிறகு அதுபற்றிய காரணங்களுக்காக மேலும் இந்தக் காலத்தை நீட்டிப்பது என்ற நிலைமை ஏற்படுமானால் ஒவ்வொரு 3 மாதத்திற்கும் இந்த சட்டமன்றத்தினுடைய அனுமதியை, ஒப்புதலைப் பெற்று அதற்குப் பிறகு நீட்டிப்பது என்ற நிலைமை ஏற்படுமானால் ஜனநாயகம் வலுப்படும், இந்த மசோதாவினுடைய எண்ணத்திற்கு உகந்த முறையிலே மாற்றிக் கொள்ளுகின்ற ஒரு நிலைமை ஏற்படும் என்று சொல்லி, ஆகவே அரசு இதை கவனத்திலே கொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த மசோதாவை பொறுத்தவரையிலே சென்னைக் கார்ப்ப ரேஷன் பற்றிய சில வாசகங்கள், 3, 4 ஆகிய பிரிவுகள். கார்ப்பரேஷன் சம்பந்தப்படுத்தி விட்டுவிடுவது என்பதற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே பார்த்தால் இன்னும் 3-வது செக்ஷனிலே சில வார்த்தைகளை விட்டுவிட வேண்டியதாக இருக்கிறது. 2-வது செக்ஷனிலே சிலவற்றை விட்டுவிட வேண்டியதாக இருக்கிறது. நான் அவற்றை என்னுடைய திருத்தத்திலே கொடுத்திருந்தாலும் கூட அவை களைத் திருத்தத்திலே கொண்டு வர முடியாது. காரணம், இந்த அவைமுன் வைத்திருக்கின்ற மசோதாவில் அதுபற்றிக் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, இதை என்னுடைய யோசனையாகச்சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது நண்பர் இராமமூர்த்தி அவர்கள் ஒருசில விஷயங்கள் எடுத்துச் சொன்னார்கள். 1967-ம் வருஷத்திலே நடக்கவேண்டிய தேர்தல் அது. அப்பொழுது பொதுத் தேர்தல் இருந்ததாலே அதை அந்தக் காங்கிரஸ் காரர்கள் இருந்த காலத்திலேயே மாற்றிவிட்டார்கள். இன்றைக்கு

இதை நீடிக்கும்பொழுது சொல்வது அவர்கள் இப்பொழுது இந்த அதிகாரத்தைக் கொடுத்து விட்டால் அவர்கள் மாற்றிவைத்துக்கொண்டே போவார்கள் என்று சொல்லுகின்றார்கள். எக்ஸ்ப்ளநேட்டரி நோட்டிஸிலே மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். சமீப காலத்திலே உள்ள வாக்காளர்களினுடைய பட்டியலை எடுத்துத் தேர்தல் நடத்த வேண்டுமென்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது இருக்க கூடியவர், புதிதாக அந்த வயதை அடைந்தவர்களை எல்லாம் சேர்க்காமல் ஒரு தேர்தலை நாம் நடத்துவோமானால் பூரணமாக ஒரு தேர்தலை நடத்தி, நல்லமுறையிலே வாக்கெடுப்பு பெற்ற நகர மன்றம் வராது என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

இந்த எக்ஸ்ப்ளனேஷன் மிகவும் ரீசனபிளாக இருக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். மாற்ற வேண்டுமென்று சொல்கிறார், ஒரு நேரத்திலே அதைமாற்றக் கூடாது, அதிகாரம் கொடுக்கக்கூடாது என்று சொல்கிறார். பில் கலெக்டர்ஸ் கலெக்ட் பண்ணும்போது சங்கடம் ஏற்படும் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கும் அந்த தேர்தலுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. தேர்தலை நடத்திக் கொண்டிருப்பவர்கள் அவர்கள் அல்ல என்பதை இங்கே நான் சொல்லிக் கொண்டு இராமமூர்த்தி அவர்கள் விளக்கத்தைத் தெளிவாகத் தெரிய விரும்புகிறேன். இன்னும் கூட ஒரு வருஷம் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று எண்ணுகிறாரோ என்னவோ தெரியவில்லை. நானும் நகரசபைத் தலைவராக இருக்கிறேன். இன்னும் ஒரு வருஷம் கூட இருக்கலாம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த மசோதாவிலே நிரம்ப கருத்துக்களைச் சொன்னார்கள். இன்று அந்த பட்டியல் தயாரிப்பதைப் பற்றி அவருடைய கருத்துக்களை நம்முடைய அரசாங்கமும் நிர்வாகமும் கவனத்திலே கொண்டு பட்டியலையெல்லாம் மிக விரைவிலே நல்ல முறையிலே தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, இப்பொழுது 5-வது பிரிவை, பிரின்சிபல் ஆக்டிலே செக்ஷன் 5 (எ)—எடுத்துவிட வேண்டுமென்று கேட்டார்கள். அந்தத் தீர்ப்பை பற்றிய விளக்கம் கூற வேண்டுமென்று சொன்னார்கள்.

இதுவரை ஒவ்வொரு சட்டத்திலும் ஒரு "பவர்" இருந்தது. ஒரு சட்டத்தை அமுல் படுத்துவதிலே ஏதாவது ஒரு கஷ்டம் வந்தால் அந்த கஷ்டத்தைப் போக்குவதற்கும் விதிகளை இந்த அரசாங்கம் பிறப்பிக்கலாம் என்று தொன்றுதொட்டு இருந்து வருகிறது. சுப்ரீம் கோர்ட், உயர்நீதி மன்றம் சட்டமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை அரசாங்கமே நடைமுறையில் எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற ஒரு தீர்ப்பு சொல்லி இருக்கிற காரணத்தாலே அந்தத் தீர்ப்பை ஒட்டி நாம் இப்பொழுது இருக்கக்கூடிய மசோதாக்களில் ஏற்கனவே அப்படி இருக்கக் கூடிய பிரிவுகளை எடுத்து வருகிறோம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராமமூர்த்தி அவர்கள், "ஜனநாயகமா ? என்ன உரிமை இருக்கிறது ?" என்றெல்லாம் சொன்னார்கள். எந்தக் காலத்திற்கு நாம் தேர்தலை ஒத்தி வைக்கலாம் என்பதை முதலிலே அவர்கள் சொன்னார்கள். நம்முடைய நகராட்சித் தலைவர் அவர்களும் இதற்கு விளக்கமாகப் பதில் சொல்லிவிட்டார்கள். ஏதோ நாங்கள் கொண்டு வந்தோம் என்று நினைத்துவிட்டுப் பேசினார்கள் என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அவர்கள் கொண்டு வந்த சட்டத்திலே செய்திருக்கிற திருத்தம். இப்பொழுது ஓர் ஆண்டு எடுக்கப்பட்டு வருகிறது. அதுவும் ஏற்கனவே உள்ள ஆக்டிலே எப்படி நோட்டிஃபிகேஷன் செய்து கொஞ்சம் கொஞ்சமாகச் செய்யலாம் என்று இருக்கிறதோ அப்படித் தான் இது வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



வெளியிலே உள்ள தலைவர்கள் எப்படி நீங்கள் செப்டம்பரிலேதேர்தலை நடத்துவீர்கள், தேர்தலை நடத்தாதீர்கள் ; இல்லாவிட்டால் நாங்கள் போராட்டம் நடத்துவோம் என்று சொல்லிக் கொண்டிருந்த போது விரைவிலே நடத்தாததன் மூலம் இந்த அரசாங்கம் ஜனநாயகத்தை என்ன பண்ணுகிறது என்று நண்பர் அவர்கள் கேள்வி கேட்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. வெளியே உள்ள தலைவர்களுக்கு நம்முடைய கனம் அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் நல்ல பதில் கொடுத்துவிட்டார்கள் என்று நான் நம்புகிறேன். அரசாங்கத்தைப் பொறுத்த அளவிலே ஜனநாயக உணர்ச்சியை நாங்கள் மதிக்கிறோம், உரிமைகளை நாங்கள் பறிக்கவில்லை. ஜனநாயகத்தில் மக்களுக்குள்ள உரிமைகளைக்கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். எவ்வளவு விரைவில் தேர்தல் நடத்த முடியுமோ அவ்வளவு விரைவிலே தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் விரும்புகிறோம் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மசோதாவில் பெரிய கருத்து ஒன்றுமில்லை. நடைமுறைச் சிக்கலை அகற்றுவதற்குத் தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அடுத்து திரு. இராமமூர்த்தி அவர்கள் ஏதோ திருத்தம் கொடுக்கவில்லை, கருத்தை மட்டும் தெரிவிப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் கருத்து கார்பரேஷனை விட்டுவிட வேண்டும் என்று சொல்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அதற்கு அவர்கள் முறைப்படி திருத்தம் கொண்டுவர வேண்டும். அவர்கள் பிரின்ஸிபல் ஆக்டைத் திருத்த வேண்டும் என்கின்ற முறையில் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். முறைப்படி அந்தத் திருத்தம் செல்லாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொண்டு, அந்தத் திருத்தத்தை அவர்கள் வாபஸ் பெற்றுக்கொண்டு இந்த மசோதாவை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நகராட்சி அதிகார மன்றங்கள் (பதவிக் காலம—மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்) திருத்த மசோதா ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**பிரிவு 2.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"இரண்டாவது பிரிவு மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்"

THIRU K. RAMAMOORTHY : Sir, I have given notice of the following amendment standing in my name :—

"2. Amendment of section 3 Madras Act 22 of 1963 :—

(1) in the proviso to clause (*c*) *after the words one year* add "and if on any account it becomes necessary to extend the period further, such period shall extend to another one year, during such period, the period of office shall be extended by every three months with the sanction of both Houses of the Legislature."

I may also add, with your permission, that the words "two years shall be substituted" occurring after the words "one year" shall be omitted."

[திரு. க. இராமமூர்த்தி] [1968 ஆகஸ்ட் 26

இந்தத் திருத்தத்தைப் பொறுத்த வரையிலே அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். நன்றி. செப்டம்பரில் தேர்தல்களை வைத்துக் கொள்வதுபற்றி எங்களுடைய தலைவர்கள் சொன்னதைப் பற்றியும் சொன்னார்கள் . . . .

THE HON. THIRU S. MADHAVAN : I have already raised a point of Order, Sir. You can give your ruling on the same. The Hon. Member has given an amendment to the principal Act. Is it in order ? He can give amendment only to the provisions of the Bill before the Assembly.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னுடைய திருத்தம் இங்கே இருக்கிற மசோதாவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"I have given an amendment to Clause 2. namely, 2. Amendment of Section 3 of Madras Act 22 of 1963. '

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் கூறிய கருத்தை ஒட்டி, தாங்கள் கொடுத்திருக்கிற திருத்தம் இப்பொழுது வந்திருக்கிற மசோதாவிற்கு அப்பாற்பட்ட திருத்தமாகும். ஆகவே, அந்தத் திருத்தத்தை நான் நிராகரிக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது உங்களுடைய திருத்தம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. இரண்டாவது பிரிவுக்கு வேறு திருத்தம் இல்லை. தலைவர் தீர்ப்புக் கூறியதற்குப் பிற்பாடு, உறுப்பினர் அவர்களுக்கு பேசுவதற்குப் உரிமை இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களுடைய தீர்ப்பை ஏற்கவில்லை என்றோ, அல்லது அதன் மீது பேச வேண்டும் என்றோ நான் பேசவில்லை. என்னுடைய திருத்தத்தைப் பொறுத்த வரையிலே நான் கிளாஸ் இரண்டுக்கு திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் மூலச் சட்டத்திற்கு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அது இந்தத் திருத்த மசோதாவுக்கு உரிய திருத்தம் இல்லை. ஆகவே, அது முறையற்றது என்று நான் நிராகரிக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னுடைய திருத்தம் என்னவென்றால், Amendment of Section 3 of Madras Act 22 of 1963 என்று இந்த மசோதாவுக்குத் தான் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது கிளாஸுக்குத் தான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அது ஏன் முறை யில்லை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டாவது பிரிவுக்குக் கொடுத்திருக்கும்படியான திருத்தம் மூலச் சட்டத்திற்கு உரிய திருத்தம். அந்தத் திருத்தம் இந்தத் திருத்த மசோதாவிற்கு அப்பாற்பட்ட திருத்தம். ஆகவே நான், அது முறையற்றது.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் அமெண்டுமெண்டு கொடுத்திருக்கிற பேப்பர் வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதில் தெளிவாகச் சொல்லி யிருக்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் தீர்ப்புக் கொடுத்துவிட்ட பிறகு, உறுப்பினர் அவர்கள் மீண்டும் அதைப்பற்றி பேசிக் கொண்டிருப்பது முறைதானா ?



1968 ஆகஸ்ட் 26]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் தீர்ப்பை எதிர்த்துப் பேசவில்லை. தீர்ப்பின் மீது விளக்கம் கோருகிறார்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் திருத்தம் கொடுத்திருக்கிற வாசகம் இதுதான் :

"An amendment to Clause 2 of the Bill to amend the Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Act, 1963.'

என்று சொல்லி இருக்கிறேன். ஆகவே, இந்த மசோதாவுக்குத் தான் திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் திருத்தம் கொடுத்தது, இப்பொழுது வந்திருக்கிறது திருத்த மசோதாவிற்குத் தான் திருத்தம் கொடுத் திருக்கிறீர்கள். ஆனால், அந்தத் திருத்தம் இப்பொழுது வந்திருக்கிற திருத்த மசோதாவிற்கு அப்பாற்பட்டது. ஆகவே தான்; நான் அதை அனுமதிக்க மறுக்கிறேன்.

DR. H. V. HANDE : Though I do not agree with the text of Thiru Ramamoorthy's amendment, I have my own misgivings on one point. I want clarification on the same. The Government have the right to bring an amendment to a principal Act and an amending Bill is brought forward. But has not the House that right ? Is there no right for members to bring amendment to principal Act ? Is that right only for the Government ? This is a matter which involves the right of the House. I want a clarification on the same.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் விளக்கம் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஒரு மசோதா தயார் பண்ணி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மசோதாவில் வேறு ஒரு ஆக்டை ரெஃபர் செய்யலாம். இந்த மசோதாவிற்கு உறுப்பினர் அவர்கள் திருத்தம் கொடுத்தால் தான் பொருத்தமாக அதை விவாதிக்க முடியும். ரூலில் இருக்கிறது. "ரெலவண்ட் டு தி பில்" என்று இருக்கிறது. பிரின்சிபல் ஆக்டில் செக்ஷன் இரண்டில் என்னவெல்லாம் இருக்கிறதோ அதையெல்லாம் திருத்துவதற்கு உரிமை உண்டு என்று அவர்கள் சொல்கிறார்கள். "கார்ப்பரேஷன்" என்ற வார்த்தையை உபயோகப்படுத்தி யிருக்கிறார்கள். அந்த வார்த்தை இந்த பில்லில் இல்லை. பில் ரெஃபர் பண்ணுகிற செக்ஷனில் இருக்கிறது. அவர்கள் வேண்டுமென்றால் புதியதாக ஒரு திருத்தத்தைக் கொடுத்து, அந்தச் சட்டத்திற்குத் திருத்தம் கொடுக்கலாம். அவர்களுடைய நோக்கம் நிறைவேற வேண்டுமென்றால், அவர்களுக்கு உரிமை கொடுக்க வேண்டுமென்று சொன்னால், இப்பொழுது கூடத் தயாராக இருக்கிறேன். கிளாஸ் ஒன்றில் ஒரு ப்ரொவிஸோ சேர்த்து

"provided this will not apply to Corporation".

என்று ஒரு எளிதான திருத்தத்தை உறுப்பினர் அவர்கள் கொடுத்து விட்டால், இந்த சர்ச்சையே இருக்காது. இப்பொழுது கூட உறுப்பினர் அவர்கள் அம்மாதிரி கொடுப்பதற்கு எங்கள் தரப்பில் ஆட்சேபணை இல்லை. உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய திருத்தம் பிரின்சிபல் ஆக்டினுடைய வார்த்தைகளை மாற்றுவதாக இருக்கிறது என்ற முறையில் தான் அதை ஒத்துக்கொள்ள முடியாது. அதை ஒத்துக்கொண்டால் இந்த மசோதாவின் தாத்பரியமே மறைந்துவிடும். நாம் கன்வென்ஷனைப் பின்பற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினார்கள். அமைச்சர் ஒரு மசோதாவைக் கொண்டுவந்தால், திருத்தம் கொடுப்பதற்கு மன்ற உறுப்பினர்களுக்கு

வாய்ப்பு இருக்கிறதா, உரிமை இருக்கிறதா என்றால், நிச்சயம் உரிமை இருக்கிறது. ஆனால், கொடுக்கிற திருத்தம், விவாதத்திற்கு வந்திருக்கக் கூடிய மசோதாவுக்கு உரிய திருத்தமாக இருக்க வேண்டும். மூலச் சட்டத்திற்கான திருத்தமாக அது இருக்கக் கூடாது. மசோதாவிற்கு அப்பாற்பட்ட முறையில் கொடுக்கிற திருத்தம் முறையானது அல்ல என்று நிராகரிக்கப்படும்.

"Amendments which are beyond the scope of the amending Bill are out of order."

என்பது தான் விதிமுறை. மூலச் சட்டத்திற்கு உரிய திருத்தமாக கொண்டுவரப்பட்டிருப்பதாலும், இந்தத் திருத்த மசோதாவிற்கு உரிய திருத்தமாக இல்லாத காரணத்தினாலும், நான் இந்தத் திருத்தத்தை நிராகரிக்கிறேன்.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

நெடுந் தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு இவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN: I move—

"That the Bill be passed".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (ii) தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 11/1968.)

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1968-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதாவை[a] ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என நான் வேண்டுகிறேன்.

1968-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாளன்று தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் சாற்றிய 1968-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இம் மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1934-ம் ஆண்டு நில அடைமான வங்கிகள் சட்டத்தைத் திருத்துவது குறித்து இரண்டாண்டுகளுக்கு மேலாகவே அரசாங்கம் ஆலோசித்து வந்துள்ளது. இயங்காச் சொத்துக்கள் அடைமானமாக ஈடுவைத்து வேளாண்மை மேம்பாட்டுக் காரியங்களுக்காக நீண்டகாலக் கடன்களை நில அடைமான வங்கிகள் வழங்குகின்றன. நிலங்களை மீட்டுப் பண்படுத்தல், கிணறுகள் தோண்டுதல், தேயிலைத் தோட்டங்கள், ரப்பர் தோட்டங்கள் இவற்றை மேம்பாடு செய்தல் முதலியவை பற்றிய சிறப்புத் திட்டங்களுக்கு நிதி வழங்குவது நில அடைமான வங்கிகளின் அலுவலாகும எனவே, கடன்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு அவற்றை வழங்குவதில் கால தாமதம் ஏற்படுவதைக் குறைக்கவும், உழவர்களுக்கு உரிய காலத்தில் கடன் கிடைப்பதை உறுதிப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியம் என்று கருதப்பட்டது. மேலும், அந்த வங்கிகள் வழங்கும் பெரிய கடன் தொகைகளுக்குப் பாதுகாப்பான ஈட்டினைப் பெற வேண்டியதுடன், கடன்களை விரைவில் வசூலிக்க வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும், அவசியமாகும். நில அடைமான வங்கிகளின் கடன் வழங்கும் திட்டம் குறித்து தமிழ்நாடு 1934-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் சட்டத்தின் விதித்துறைகள் பொருந்தும். ஆனால் உழவர்கள் விரைவில் கடன்களைப் பெறுவதற்கான வசதிகளுக்கும், கொடுத்த கடன்களை வங்கிகள்,

---

[a] 1968 ஆகஸ்டு 6-ம் தேதியிட்ட தமிழகச் சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



விரைவாகவும் தடையில்லாமலும், வசூலிப்பது இயலும். வகையிலும் கடன்களுக்கு ஈடாகக் காட்டப்பட்டுள்ள இயங்காச் சொத்துக்கள் மீது முன் கூட்டியே பொறுப்பேற்பதற்கு உரிய வசதிகளுக்கும் இச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், வில்லங்கங்கள் குறித்து 23 ஆண்டு கால அளவுக்குரிய விவரங்கள் சரி பார்க்கப்படுவதால் ஏராளமான காலம் விரயமாகின்றது. இந்த நடைமுறையின் விளைவாகக் கடன் விண்ணப்பங்கள் குறித்து விரைவாக முடிவு எடுக்க இயலாமற் போகின்றது. இந்தக் குறைபாட்டை நீக்கவும் தக்கவாறு வகை செய்வது அவசியமாகியுள்ளது. வேளாண்மை விளை பொருள் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தைக் கருதி, இது அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாகிவிட்டது. மேலும், கிணறுகளை வெட்டவும், விசையேற்றங்களை அமைக்கவும் வழங்கப்படும் எல்லாப் புதிய கடன்களும் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு நில அடைமான வங்கிகளால் வழங்கப்பட வேண்டுமேயன்றி அரசாங்கத்தால் வழங்கப்படமாட்டாது என்று அரசாங்கம் கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. இக் காரணத்தாலும் இது சிறப்பாக முக்கியத்துவம் பெற்றுவிட்டது.

இந்த நோக்கங்களை எய்தும் பொருட்டு, இப்போது கொண்டுவரப் பட்டுள்ள திருத்த மசோதா கீழ்க்கண்டவற்றிற்கு வகை செய்கிறது:—

(1) மேற்படி சட்டத்தில் நிலுவைகளை வசூலிக்க வகை செய்துள்ள ஏனைய முறைகளுக்குக் கூடுதலாக வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை நிலவரி நிலுவைத் தொகைகளைப் போலவே வசூலிப்பதற்கென, தமிழ்நாடு கூட்டுறவு நிலஅடைமான வங்கிகள் சட்டத்தில் குறிப்பான ஒரு விதித் துறையைச் சேர்ப்பதன் மூலம், நில அடைமான வங்கிகள் தங்களுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகைகளை விரைவாக வசூலிக்க வகை செய்தல், இது காரியத்திற்காக, 1864-ம் ஆண்டு தமிழ்நாடு நில வரிச் சட்டத்தின் கீழ் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு வழங்கப்படும்.

(2) நிலவரி குறித்து அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய தொகைகள் நீங்கலாக மற்றெல்லா தொகைகள் குறித்தும், அவசரச் சட்டம் சாற்றிய நாளுக்குப் பிறகு, அதாவது 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் தேதிக்குப் பிறகு வங்கிகள் சார்பாக எழுதிக் கொடுக்கப்பட்ட எல்லா அடைமானங்கள் பற்றியும், அடைமானம் வைப்பவர் ஈடாகக் காட்டியுள்ள சொத்தின் மீது நில அடைமான வங்கிக்கு முதல் பொறுப்பு ஏற்படுத்தல்.

(3) கடன்களுக்கு ஈடாகக் காட்டப் படுகிற இயங்கச் சொத்துக் குறித்து உரிமைப் பத்திரங்களையும் தற்போதைய வில்லங்களையும் சரி பார்ப்பதற்கு ஏற்படுகிற கால விரயத்தைத் தவிர்த்தல். இதற்காக வில்லங்கங்கள்— குறித்து 23 ஆண்டுகளுக்குரிய விவரங்களைச் சரி பார்ப்பதற்குப் பதிலாக, 13 ஆண்டுகளுக்குரிய விவரங்களை மட்டும் சரி பார்ப்பது போதுமானது என்ற குறிப்பான விதித் துறையை இயற்ற வேண்டும்.

(4) அவசரத்தை முன்னிட்டும், சட்டமன்றம் அவை கூடாதிருந்த காரணத்தாலும், தமிழ்நாடு 1968-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4–1968 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் தேதியன்று சாற்றப்பட்டது. மேலே குறிப்பிட்ட நோக்கங்களை எய்துவதற்கான விதித் துறைகள் அந்த அவசரச் சட்டத்தில் அடங்கியுள்ளன. இந்தியக் குடியரசுத் தலைவரிடமிருந்து அவசியமான கட்டளைகளைப் பெற்ற பிறகு அந்த அவசரச் சட்டம் சாற்றப்பட்டது. கிணறுகளைத் தோண்டவும் விசையேற்றங்களை நிறுவவும் நீண்டகாலக் கடன்களை வழங்குவதற்கான பெரியதொரு திட்டத்தை விரைவில் செயல்படுத்த வகை செய்யும் பொருட்டு அந்த அவசரச் சட்டம்

கொண்டுவரப்பட்டது. அந்த அவசரச் சட்டத்தை நீக்கி விட்டு, அதற்குப் பதிலாகச் சட்டமன்றச் சட்டம் ஒன்றை இயற்றுவதே தற்போதைய மசோதாவின் நோக்கமாகும்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பூரணமாக வரவேற்று ஏற்றுக்கொள்ளும் போது, ஒன்றை மட்டும் நினைவுபடுத்திப் பேச விரும்புகிறேன். இந்த மசோதாவைப் பொருத்த வரையில், நில அடமான வங்கி கொடுக்கிற கடன்கள் எல்லாக் கடன்களையும் விட முதலிடம் வகிக்கும் என்ற நிலை ஏற்படுகிறது. இந்த மசோதா சட்டம் ஆகும்போது, சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. இந்த வங்கிகளின் கடன் வாங்கியிருப்பவர்களுக்கும், வங்கிக்கும் கூட ஏற்படுகிறது. என்னுடைய சொந்த ஊரிலேயே திண்டிவனத்தில் ஏற்பட்டது. வீடு அடமான வங்கியில் ஒருவர் ரூ. 5,000 கடன் வாங்கினார். அதற்குப் பிறகு அதே வீட்டின் பேரில் "ஃபர்தர் இம்ப்ரூவ்மெண்ட்" என்று சொல்லி, இன்னொரு—ரூ. 5,000 கடன் வாங்கினார். இந்த முதல் கடன் தொகைக்கும், இரண்டாவது கடன் தொகைக்கும் இடையிலே மற்றொருவர் தனிப்பட்ட முறையில் வீட்டின் மீது கடன் கொடுத்தார். அவர் பின்னால் அந்தச் சொத்தை கோர்ட் மூலம் அட்டாச் பண்ணி விட்டார். ஆகவே, முதல் கடனுக்குப் பிறகு கோர்ட் மூலமாக சொத்து அட்டாச் செய்யப்பட்டு விட்டது. இரண்டாவது கடன் வாங்குகிறபோது, கோர்ட் மூலமாக அட்டாச் செய்வது ரூ. 11,000-க்கு என்பது தெளிவாக்கப்படவில்லை. இரண்டாவது கடன் கொடுக்கும்போது, வில்லங்கக் குறிப்பில் கோர்ட் மூலமாக அட்டாச் செய்யப்பட்டது என்ற ஒரு சூழ்நிலை, கடன்காரராகவோ அல்லது வில்லங்கத்திலோ கொடுக்கப்படவில்லை. வில்லங்கத்தில் காட்டப்படாததால், இரண்டாவது ரூ. 5,000 நில அடமான வங்கி கொடுத்தது. இந்த நிலையில் இரண்டாவது கடன் வாங்கும்போது வாங்கியவர் நில அடமான வங்கியை ஏமாற்றி இருக்கிறார். இந்தச் சட்டத்தின்படி பார்த்தால், கோர்ட் மூலமாக அட்டாச் செய்யப்பட்ட தொகைக்குப் பிறகு கொடுக்கப்பட்ட தொகைக்கு உத்தரவாதம், பாதுகாப்பு இல்லை. இதற்கு ஒரு பாதுகாப்புத் தர வேண்டும். இன்னும் சில நேரங்களில் சட்ட பூர்வமான தொகைகள் விட்டுப் போகும் நிலையும் ஏற்படுகிறது. அதுவும் எங்கள் ஊரில் நடந்தது. இந்த நிலைகளைத் தவிர்க்க திருத்தம் தந்திருக்கிறேன். நான் குறிப்பிட்ட "அனுமதி தீர்க்கப்பட வேண்டும். இரண்டாவது கடன் கொடுக்கும்போது, கோர்ட் மூலமாக அட்டாச் செய்யப்பட்டது வில்லங்கத்தில் கொண்டுவரப்படாமல் இருக்கும் நிலை இருந்தால், வங்கி ஏமாற்றப்படும். அது வில்லங்கத்தில் கொண்டு வரப்படும் நிலை இருந்தால் வங்கி தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும். அந்த முறையில் இந்த மசோதா பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஆகவே, என்னுடைய திருத்தத்தைக் கவனிக்க வேண்டும் என்று சொல்லி முடிக்கிறேன்.

**திரு. வி. டி. அண்ணாமலை:** தலைவா அவர்களே, நம்முடைய அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதா மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனென்றால், தமிழகத்தில் இருக்கின்ற 75 சத விகித விவசாயிகளுக்கு கடன் கொடுப்பது என்றால், நகர்ப்புற வங்கிகளும் முன் வருவதில்லை. பணக்காரர்களும் முன் வருவதில்லை. நில அடைமான-வங்கி கொடுக்கும் பணம் பூராவும் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட "டிபஞ்சர்" மூலம் கொடுக்கப்படும் பணம். சர்க்காருடைய ஆதரவின் பேரில் டிபஞ்சர்கள் வெளியிடப்படுகின்றன. அந்தப் பணம் பாதுகாக்கப்படவேண்டும். தமிழக அரசு ஏழைகள், பணக்காரர்கள், வங்கிகள், ஸ்தல ஸ்தாபனங்கள் இவைகள் எல்லோருக்கும் உதவ டிபஞ்சர்களுக்கு ஆதரவு கொடுகிறார்கள். தற்போது ஒரு தாலூகாவிற்கு ஒரு நில அடைமான வங்கி இருக்கிறது. அதில் சுமார் இரு நூறுக்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்படுகின்ற பணம் அந்த ஒரே நில அடைமான வங்கியிலிருந்துதான் கொடுக்கப்படுகிறது. அந்தப் பணம் துரிதமாக திரும்ப வசூலிக்கப்பட வேண்டும். சர்க்காருடைய ரெவின்யூச் சட்டத்தின் கீழ் ரெவின்யூ தீர்வை, கிஸ்தி வசூலிப்பது போல் கடன் தொகை வசூலிக்கப்பட வேண்டும். கிஸ்தியைப் போல் வசூலிக்க இந்தச் சட்டத்திற்கு வழிவகை செய்ய வேண்டும். நில அடைமான





வங்கியில் மே மாதம் 1-ம் தேதி வரையிலும் தவணை உண்டு. நவம்பர் மாதம் 1-ம் தேதி வரையும் தவணை உண்டு. தவணைக் கடன் கொடுக்காதவர்களுக்குத்தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது.

இரண்டாவதாக இதற்கு முன்னால் நில அடைமான வங்கியில் கடன் கேட்டால் 24 வருடத்திற்கு வில்லங்க சர்டிபிகேட் கொடுக்கப்படவேண்டும் என்று கூறினார்கள். தற்போது அது 13 வருஷமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்குச் சௌகர்யம் ஏற்படுகிறது. இந்த மசோதா துரிதத்திலே கடன் பெறுவதற்கான வழிவகை செய்கிறது என்று கூறி வரவேற்கிறேன். இந்த மசோதா மிக மிக அவசியம். இது நம்முடைய சட்ட மன்றத்திலே நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக கவர்னருடைய ஆர்டினன்ஸ் மூலம் பாதுகாப்பைத் தேடிக் கொடுத்த மசோதா என்ற முறையில் வரவேற்கிறேன். கிராமங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குக் கேட்டபோது கடன் கொடுப்பதற்குப் பொருத்தமான ஒரு மசோதா என்று கூறி அதை வரவேற்று, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. எம். முனுசாமி கௌண்டர் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா மிகவும் வரவேற்கக்கூடிய மசோதா என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். தற்போது விவசாயிகளுக்கு எங்குமே கடன் கொடுக்காத நிலைமை இருக்கும்போது, நம்முடைய சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டுவருவதைப் பற்றித் பாராட்டத்தான் வேண்டும். ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மசோதாவில் விவசாயிகளுக்குப் பணம் போய்ச் சேருவதற்கு ஒரு கால வரையறை மட்டும் செய்ய வேண்டும். விவசாயிகள் விண்ணப்பம் செய்து கொண்டு, விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு, சூபர்வைசர்கள் சென்று பார்த்து வர குறைந்தது ஆறு மாத காலமாகின்றது. அதைத் தடுப்பதற்கு ஏதாவது வழிவகை செய்தால் நலமாக இருக்கும்.

கடந்த பத்து தினங்களுக்கு முன்னால் இம்மாதம் 17-ம் தேதியன்று மாநில ஆளுநர் அவர்கள் கிருஷ்ணகிரிக்கு விஜயம் செய்தார்கள். அவர் வருவதை முன்னிட்டு, சுமார் 6 லட்சம் ரூபாய் வரை விவசாயிகளுச்குக் கடன் வசதி உடனடியாகச் செய்து தரப்பட்டது. பதினைந்து தினங்களில் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, கடன் வசதி அளிக்கப்பட்டது. ஏதோ கவர்னர் அவர்கள் வருகிறார் என்பதற்காக உடனடியாகச் செய்து கொடுத்தார்களே தவிர, உண்மையிலேயே விவசாயிகளுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற எண்ணம் இல்லை. நானும் ஒரு வங்கியில் டைரக்டராகப் பணியாற்றி வருகிறேன். என்ற முறையில் இதை எடுத்துக் காட்ட முற்படுகிறேன். கிராமத்தில் விவசாயிகளுக்கு சூப்பர்வைசர்கள் கொடுக்கக்கூடிய தொல்லைகளை நீக்கி, குறைந்தது இரண்டு மாத காலத்திற்குள் பணம் கிடைக்க வழி செய்ய வேண்டும். விவசாயிகள் போடக்கூடிய லோன்கள் சரியில்லை, அது சரியில்லை என்று சொல்லியாவது மனுக்களை ரிஜக்ட் செய்து விடவேண்டும். அப்படியும் செய்யாமல், ஒன்றும் சொல்லாமல் நீண்ட நாட்களுக்கு தாமதப்படுத்துகிறார்கள். மேலும், விவசாயிகளின் எல்லாப் பத்திரங்களையும் வாங்கி வைத்துக்கொண்டு,—கடைசியில் ஒரு நாளைக்கு "முடியாது" என்று சொல்லி விடுகிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்குச் சேர வேண்டிய கடன்தொகை கூடிய விரைவில் கிடைப்பதற்கான வழி வகை செய்யவேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவினுடைய அவசியத்தைப் பற்றியும், இது நல்லதொரு மசோதா என்பதையும் குறிப்பிட்டு அங்கத்தினர்கள் பாராட்டி வரவேற்றதை நான் நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறையில் விவசாயிகளுக்காகச் செய்யக்கூடிய மசோதா இது. இந்த மசோதாவைப் பாராட்டிப் பேச ஆரம்பித்து முதலில் பேசிய உறுப்பினர், கடைசியில் மசோதாவில் ஒரு திருத்தம் சேர்க்கவேண்டுமென்று கூறினார். கனம் அங்கத்தினர் கூறிய திருத்தம் சேர்க்கப்பட்டால், எதற்காக இந்த மசோதாவைப் பாராட்டினார்களோ அவையனைத்தும் போய்விடும். குறிப்பாக ஒரு மசோதாவில் திருத்தம் கொடுக்கும்போது அந்த மசோதாவை எதிர்க்க வேண்டுமென்று கொடுப்பது பொருத்தம் அல்ல

"Subject to the secured debts incurred prior to the loan by the Mortgage Bank". அப்படி ஒரு சங்கடம் இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் முதல் பிரையாரிட்டி சட்டத்தின் மூலமாகக் கொடுக்க ஆசைப்படுகிறோம். முன்னாலே கொடுத்திருந்தவர்களுக்கு பாதகமோ, சிரமமோ, கோர்ட் அட்டாச்மெண்மெண்டோ இருந்தாலும் சரி அதை நிவர்த்திக்க வேண்டுமென்பதற்காகத் தான் முதல் பிரையாரிட்டி கொடுத்திருக்கிறோம். மற்ற மாநிலங்களின் சட்டங்களை எடுத்துப் பார்த்தால் இது இன்னும் கொஞ்சம் தீவிரமாக இருக்கிறது. சட்டத்திலே கடன் கொடுப்பதற்கு முன்னாலே 13 ஆண்டுகள் வில்லங்க சர்டிபிகேட் பெறுவிட்டாலும், வில்லங்கம் இருக்கிறதா என்று துணைப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்று பட்டியல் தயாரிக்கப்பட வேண்டுமென்று செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு பாதுகாப்பு என்ற முறையில்தான் போட்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களில் இந்த முறையில் இல்லையென்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் சொன்னது போல், Subj*et to t*e secure*l de*ts incurred pri*r t* the loan ஆக இருந்தால் பிரயோஜனம் இல்லை, சட்டம் செய்தும் பயன் இல்லை. அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தம் இதற்கு மாறாக அமைந்திருக்கிறது. குறிப்பிட்ட சங்கடங்கள் ஏற்படாத அளவுக்கு 13 ஆண்டுகளுக்கு வெரிஃபை செய்யவேண்டும் என்று செய்யப்பட்டிருக்கிறது. நண்பர் முனுசாமி அவர்கள் இந்தச் சட்டத்தை வரவேற்று, கடன் தருவதிலே கால தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். நீண்டகால அனுபவப் பட்டவர்கள் ஏதாவது செய்யுங்கள் என்று சொன்ன நேரத்தில் எனக்கு வருத்தம் இல்லை. இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு இந்தச் சட்டத்தை அமல் நடத்தும் வண்ணம், இதில் இருக்கக்கூடிய சங்கடங்களை எந்த அளவுக்குப் போக்க வேண்டுமோ அந்த அளவுக்கு சட்ட ஆய்வு செய்து மாற்றுத் தொகுப்புகளை வங்கிகளுக்குத் தொகுத்துக் கொடுத்திருக்கிறது. அதற்கு ஒரு பாராட்டுக்கூட அவருடைய உள்ளத்திலிருந்து வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் பாராட்டு வரவில்லை. இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு எதத னையோ ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதை அவர்களே உணர்வார்கள்.

காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும், ஒரு விவசாயி கடன் பெறுவதற்குள்ள சங்கடங்கள் நிவர்த்திக்கப்பட வேண்டும் என்று கருதியே அரசாங்கம் அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறது. இந்தக் கருத்தை கனம் உறுப்பினர் அவர்கள் இப்போதாவது வலியுறுத்தினரே, அதற்காக என் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உத்தரவு போட்டுவிட்டோம் என்று பேசாமல் இருக்காது நானும், கூட்டுறவுத்துறை அதிகாரிகளும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள் எல்லோரையும் கூட்டிவைத்து உங்களுக்குள்ள சங்கடங்களை எல்லாம் சொல்லுங்கள், என்று கேட்டு அவ்வப்போது அந்தச் சங்கடங்களை நீக்கி ஆணைகள் பிறப்பிக்கிறோம். ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். திருச்சி மாவட்டத்தில் ஒருவர் ஒருநாள் கடனுக்கு விண்ணப்பம் அளித்தார், அந்த நாளிலேயே அது பரிசீலிக்கப்பட்டு, அன்றைக்கே கடன் வழங்கப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டினார்கள். இதுகூட மந்திரிக்கு எடுத்துக்காட்டாகக் காண்பிக்கப்பட்டது என்று சொல்லிவிடலாம். அது உண்மையாகக் கூடஇருக்கலாம். ஆயினும் அரசாங்கத்தின் நோக்கத்தை இதில் இருந்து புரிந்துகொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சிக்கல்கள் இருக்கின்றன என்றால் அதுவும் வங்கியின் நன்மையை உத்தேசித்தே தயங்குகிறார்கள். மைனர் சொத்து என்றால் தயக்கம் ஏற்படுகிறது. அதுபற்றிக்கூட எப்படி விதியை அமைக்கலாம் என்று அரசாங்கம் யோசித்து வருகிறது. சங்கடத்தைத் தீர்க்கவேண்டும், காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதில் நமது முனுசாமி அவர்கள் யோசனை தெரிவித்தார்களானால் அதையும் அரசாங்கம் உடனடியாகப் பரிசீலித்து காலதாமதத்தை, சங்கடத்தைத் தவிர்க்க முழு முயற்சி எடுத்துக்கொள்ளும்.



இன்றைக்கு ஒரு விவசாயி வில்லங்க சர்டிபிகேட் வாங்குவதற்கு ஓட வேண்டும், பதிவு செய்வதற்குப் போகவேண்டும் என்று இருந்த நிலைமையை எல்லாம் மாற்றிவிட்டோம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் டெபுடி ரிஜிஸ்திரார் என்று போட்டிருக்கிறோம். விண்ணப்பம் கொடுத்துவிட்டால் அவர் போய் வில்லங்கங்கள் இருக்கின்றனவா என்று பார்க்கிறார். துணைப்பதிவாளரிடம் சென்று பதிவு செய்து வருகிறார்கள். இன்னும் கர்ணம் போன்றவர்களிடம் ரெவின்யூ இலாக்கா தஸ்தாவேஜி தேவை என்றாலும் அவர்களே ரெவின்யூத் துறை இன்ஸ்பெக்டர் ரேங்கில் அதிகாரிகளைப் போட்டு பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். இதுபற்றி கூட்டுறவுத்துறை, ரெவின்யூத்துறை அதிகாரிகளைப்போட்டு ஒரு குழு அமைத்து மாதத்திற்கு ஒரு தடவையாவது கூடி இதில் உள்ள சங்கடங்களை நிவர்த்தி செய்து விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். முன்பு விவசாயிகளே செய்துவந்த வேலைகளை இன்றைக்கு கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரியே செய்துகொள்கிறார். இன்னமும் ஏதாவது சங்கடங்கள் இருக்கின்றன என்றால் அதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அவற்றையும் நீக்குவதற்கு முயற்சி செய்கிறேன். ஆகவே இதை வரவேற்றுப் பேசிய அத்தனை உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி இதனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1968-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதா ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**பிரிவு 3.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 3 மசோதாவிற்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU K. RAMAMOORTHY : I move the amendment standing in my name :—

In sub-clause 2, after the words "have priority over all other claims against the property secured by such mortgage" the following words may be added "subject to the secured debts incurred prior to the loan by the Mortgage Bank".

THIRU P. M. MUNISWAMY GOUNDER : I second the amendment.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக விளக்கம் சொன்னார்கள். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதில் அவருக்கு இருக்கிற இரண்டு சங்கடங்களை நான் உணர்கிறேன். ஒன்று, இது எதிர்கட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது அதை ஏற்றுக்கொள்வதா என்கிற சங்கடம் ஒரு பக்கம். அடுத்து மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட இது பரவாயில்லை என்று அவரே சொல்லுகிறபோது இதுபற்றி அவருக்கே முழுமையான திருப்தி ஏற்படவில்லை என்று தெரிகிறது. இதுபற்றி எழும் ஒரு சிக்கலை நான் தெளிவாகச் சொன்னேன். நில அடைமான வங்கியிலோ, கட்டிட அடைமான வங்கியிலோ முதல் கடன் வாங்கியிருக்கலாம். அவர்கள் 13 ஆண்டுகள் வில்லங்கத்தை எடுக்கிறார்கள். அதற்குப் பிறகு இன்னொரு கடனுக்கு வரலாம். இதற்கிடையில் கோர்ட் மூலமாக செய்யப்படுகிற அட்டாச்மெண்டுகள், டிகிரிகள் இந்த வில்லங்கத்தில் வருவதில்லை. கோர்ட் மூலமாக டிகிரி செய்யப்படுகிற உண்மையான கடன்கள், அட்டாச்மெண்டுகள் வில்லங்கத்தில் வராத போது அவை நிராகரிக்கப்படுவது என்பது சரியல்ல. நியாயமும் இல்லை. சில

செல்வாக்கு உள்ளவர்கள் கூட்டுறவு ஸ்தாபனத்தை என்ன என்ன வகையில் எல்லாம் தவருகப் பயன்படுத்திக்கொள்கிருர்கள் என்பது நமக்குத் தெரியும். ஆகவே இவற்றை [illegible] ஒருவர் கூட்டுறவு வங்கியில் கடன் [illegible] இடமளித்துவிடக்கூடாது. இந்த மசோதா [illegible] [illegible] [illegible] [illegible] என்று கேட்கலாம். கூட்டுறவு இயக்கம் எந்த எந்த வகையில் எல்லாம் தவருகப் போயிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். ஆகவே மசோதா கொண்டு வருகிற போதே அதற்கு இடமில்லாதபடி செய்யவேண்டும். ஆகவே தான் அமைச்சர் அவர்கள் என் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், இதற்குத் தனியாகவே ஏற்பாடு செய்வதாக உத்தரவாதத்தையாவது தெரிவிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

பிற்பகல் 5 ...

**திரு. ஜி. எஸ். சுந்தரபாண்டி :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது பேசும் பொழுது ஒரு விளக்கத்தை அறிந்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். இந்த மசோதா நல்ல நோக்கத்தோடுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதிலே யாருக்கும் ஐயமில்லை. ஏழை விவசாயிகளுக்குக் கடன் சீக்கிரமாகக் கிடைப்பதற்காக மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. அத நேரத்திலே ஒரு நில அடைமான வங்கியானது கடன் கொடுக்கக் கூடிய நேரத்திலே அதற்கு முன்பு 13 வருடக் கலாத்திற்கு அந்த விவசாயி அந்த நிலத்தை அடைமானம் வைத்திருக்கிருரா என்று பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. 13 வருட காலத்திலே செக்யூரிட்டி டெட்ஸ் இருந்தால் அது தெரிந்த பிறகு கூட அந்த நில அடைமான பாங்கி அந்த நபருக்குக் கடன் கொடுக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்படித் தெரிந்த பிறகும் வங்கி கடன் கொடுத்தால் என்ன செய்வது? இந்த வங்கிக்கு பிரையாரிடி இருக்கிறது. 13 வருடத்திலே கடன் கொடுத்தவரைவிட அதற்குப் பிறகு நில அடமான வங்கி கடன் கொடுத்தால் அதற்கு முதலிலே பிரையாரிடி ஏற்படுகிறது. இந்த மசோதா ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு ஒரு வருட காலத்திலே கடன் பெறுகிருர் என்று வைத்துக்கொள்வோம், அதற்குப் பிறகு அதே நபர் அதே நிலத்தைக் காட்டி நில அடைமான வங்கியின் மூலம் கடன் பெறுகிருர் என்று வைத்துக்கொள்வோம். பின்னுல் பெற்ற கடனுக்கு வசூல் செய்ய பிரையாரிட்டி இருக்கிறது என்ருல் முதலிலே கொடுத்த கடனுக்கு என்ன செக்யூரிட்டி இருக்கிறது. டி. பி. ஆக்டை வைத்துப் பார்க்கும் பொழுது முதலிலே யார் டெப்ட் இருக்கிறதோ அவர்களுக்குத்தான் வசூல் செய்ய பிரையாரிடி உண்டு என்று விதி இருக்கிறது. ஆனுல் இப்பொழுது நில அடைமான வங்கி கொடுக்க கடனுக்கு பிரையாரிடி கொடுக்கப்படுகிறது. ஒரு விவசாயி வேண்டுமென்றே நினைக்கால் ஒரு இடத்திலே நிலத்தை வைத்துவிட்டு மற்றொரு முறை வங்கியிலே கடன் பெறலாம். ஆனுல் வங்கியிலே கடன்பெற்றுவிட்டு வேறு கடன் அதே நிலத்தை வைத்துப் பெற முயற்சி செய்யும்பொழுது அதற்குமேல் கடன் அவர்கள் கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே அந்த விவசாயி பணம் ஏதாவது தேட முற்பட்டால் தன்னுடைய நிலத்தை வைத்து அடைமானம் பெறவே முடியாது. பிறகு நில அடைமான பாங்கியில் வைத்து பெறலாம். பிரையாரிடி இல்லாத நிலைமை ஏற்பட்டுவிட்டால் மற்றவர்கள் எப்படி பணம் கொடுப்பது என்ற நிலைமை எல்லாம் ஏற்படும். இதற்கு என்ன ஒரு பரிகாரம் இந்த அரசு எப்படி காணப்போகிறது என்று தெரிய விரும்புகிறேன். அன்பர் அவர்கள் கொடுத்துள்ள திருத்தத்திலே

"subject to the secured debts incurred prior to the loan by the Mortgage Bank" என்று கொடுத்திருப்பதால் அந்த முறையிலே ஏதாவது பரிகாரம் காணமுடியுமா என்று பார்க்க வேண்டும். கடன் கொடுக்கிறவர்களுக்கும் பரிகாரம் இருக்கும், விவசாயிகளுக்கும் பரிகாரம் இருக்கும், அவர்கள் ஏமாற்ற முடியாத நிலைமை ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு வாய்ப்பு அளிப்பதற்காக நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நான் முன்னுரையில் கூறியபடி இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தையே அது முறியடிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாதாரணமாக டி. பி. ஆக்டில் கூறியுள்ளபடி முன்னுலே வாங்கப்பட்ட கடன்தான் முன்னுலே பெறப்படும் என்ற கொள்கைதான் இருக்கிறது. அதை மாற்றவேண்டும். கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்றுதான் சட்டத்தில் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. 13 வருடத்திலே பார்த்தால் கூட அதனுலே சட்டப் பயன் கிடைக்குமா என்பது சந்தேகமே. ஏனென்ருல் எண்டார்ஸ்மெண்ட் போட்டுக்கொண்டே போய் விடலாம். லிமிட்டேஷன் ஆக்ட் பிரகாரம் 12 வருடங்கள் என்று இருப்பதால் ஒரு வருடம் கூட்டி வைத்து 13 ஆண்டுகளுக்கு என்று வைத்து இருக்கிருேம். அதைக்கூட மூன்று ஆண்டுகளாக எத்தனை தடவைகள் வேண்டுமானுலும் கூட்டிக்கொள்வதற்கு இடம் இருக்கிறது. முன்னுலே உள்ள கடனைப் பார்த்து அதற்குமேல் கடன் கொடுக்கலாம் என்ருல் இந்தச் சட்டமே தேவையில்லை. மற்ற மாநிலங்களிலே முன்னுலே கடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதைப பார்க்காது கடன் கொடுக்கலாம் என்ற முறை இருக்கிறது. நாம் அப்படி பிளாங்கெட் பவராகக் கொடுத்து விடக்கூடாது என்ற அளவிலே 13 வருடம் பார்க்க வேண்டுமென்று புதிதாகப் போட்டு இருக்கிருேம். அப்படி இருந்தால்கூட சிக்கலான நிலைமை வரக்கூடும் என்று அவர்கள் சொன்னுர்கள். அப்படிப் பார்த்துவிட்ட பிறகும் இரண்டு பேரும் சேர்ந்து கன்ஸ்பைர் செய்து கடன் வாங்கிவிட்டால் என்ன செய்வது என்று கேட்டார்கள். நாம் சட்டத்திலே அதைத் தடுக்க முடியாது. அதைப் போட்டால் சட்டத்தின் நோக்கததை அது மாற்றி விடும். அவர்கள் சொன்னுர்கள், 13 வருடம் ஏதாவது வில்லங்கம் இருக்கிறதா என்று பார்த்த பிறகும்கூட அவர்கள் கொடுத்தார்கள் என்ருல் அந்த குறிப்பிட்ட அதிகாரியின் மேல் நடவடிக்கை எடுக்க அல்லது அவரிடமிருந்து ரெக்கவரி செய்ய சி. எல். எம். முயற்சி செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். ஒவ்வொரு லேண்ட் மார்ட்கேஜ் பாங்கும் கடன கொடுபபதற்கு சில தடைகள் இருக்கின்றன. லேண்ட் ரிக்கார்ட்ஸ் சரியாக இல்லை, ரெவின்யூ ரிக்கார்ட்ஸ் சரியாக இல்லை. பட்டா யார்மேல் இருக்கவேண்டுமோ அவர்கள்மேல் இருப்பதில்லை. அப்படியே இருந்தாலும், patta is not a title of the land என்று சொல்லியிருக்கிருர்கள். பர்ஸ்ட் பிரையாரிடி என்று சொல்லி விட்டால் கொஞ்சம் பார்த்துவிட்டு கடன் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற அளவிலே தான திருத்தத்தைக் கொண்டுவருகிருேம். இந்தத் திருத்தத்திற்கு கொடுத்திருக்கிற திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் அது நோக்கத்தையே முறியடித்துவிடும். இன்னும் சில சங்கடங்கள் இருக்கின்றன. இருந்தாலும் விவசாயிகளின் நன்மையை உத்தேசித்து கூட்டுறவு ஸ்தாபனங்கள் அவர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நிர்வாக முறையிலே அந்தச் சங்கடங்களை எந்த அளவுக்கு நிவர்த்திக்கலாம் என்பதைப் பார்த்துச் செய்யலாம் என்று சொல்லிக் கொண்டு அவர்கள் கொடுத்திருக்கிற இந்தத் திருத்ததை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. RAMAMOORTHY : In view of the assurance of the Hon. Minister, I do not press my amendment.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. இராமமூர்த்தி அவர்கள் அவை அனுமதியுடன் திருததத்தை திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். திரு. மெய்யப்பன் அவர்கள் இடத்தில் இல்லாததால் அவருடைய திருத்தம் முன்மொழியப்படவில்லை.

மூன்ருவது பிரிவு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

திரு. மெய்யப்பன் இடத்தில் இல்லாததால் நான்காவது பிரிவிற்கு அவருடைய திருத்தம் முன்மொழியப்படவில்லை.

[பேரவைத் துணைத் தலைவர்] [1968 ஆகஸ்ட் 26

நான்காவது பிரிவு, ஐந்தாவது பிரிவு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு இவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Madras Co-operative Land Mortgage Banks (Amendment) Bill, 1968 (L.A. Bill No. 11 of 1968) be passed."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(iii) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 13/1968).

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1968-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) மசோதா a சட்டப் பேரவை மசோதா எண். 13/1968) ஆய்வுக்கு எடுத்து கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1911-ம் ஆண்டு வாடகை வண்டிச் சட்டத்தின் (தமிழ்நாட்டுச் சட்டம் 5/1911) 19-வது பிரிவின் (3) உட்பிரிவு மேற்சொன்ன சட்டத்தின் 9-வது பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்பட்டவாறு, சைகிள் ரிக்ஷா வலவருக்கு வழங்கப்படும் உரிமத்துக்கான கட்டணம் 40 காசு என விதிக்கிறது. மேற்சொன்ன உரிமக் கட்டணத்தைச் செலுத்துவதில் சைகிள் ரிக்ஷா வலவர்கள் அடையும் துயரத்தைக் குறைப்பதன் பொருட்டு, அரசாங்கம் தமிழ்நாடு 1911-ம் ஆண்டு வாடகை வண்டிச் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 5/1911) 19-வது பிரிவைத் திருத்தியமைப்பதன் மூலமாக, தற்போதுள்ள நாற்பது காசு என்கிற உரிமக் கட்டணத்தை முப்பது காசாகக் குறைப்பதென முடிவு செய்துள்ளது. மேற்சொன்ன நோக்கத்தை நிறைவேற்ற இம்மசோதா முனைகிறது.

இதனை ஏற்குமாறு பேரவையை வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சரவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது.

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, while I wholeheartedly welcome this Bill, I wish to point out certain difficulties of the rickshaw-pullers. Madras City is, as you know, full of rickshaw-pullers especially cycle-rickshaw-pullers who recently went in procession to the Secretariat to represent their grievances before the concerned Minister. Now, I wish to take this opportunity to point out their difficulties which must be sympathetically considered by the Government. Of course, this particular Bill gives them great relief but they have got their problems. For instance, they have got a problem with regard to their owners and it is impossible for them to make both ends meet. Actually many of the cycle-rickshaw-pullers are suffering from T.B., Bronchial Asthma and other diseases which I do not want to mention now and so I request this Government to consider measures for giving some relief to them. An

19—8—1968 தேதியிட்ட தமிழக சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1968 ஆகஸ்ட் 26] [Dr. H. V. Hande]

insurance scheme or some other scheme by which their longevity of life could be ensured and also a scheme giving them security of job should be brought forward by the Government.

Then, another grievance of the rickshaw-pullers is with regard to the Policemen. They give a lot of trouble to them and this has been mentioned for a number of years and my hon. Friend, Thiru Vinayakam, also knows it. They have been regularly paying mamools to the policemen and the Government must see that their hardships are mitigated. My hon. Friend, Thiru Kannan, who represents my neighbouring constituency, also knows about it and he has also ventilated their grievances. Though these matters do not come under this Bill, I have mentioned them so that their interests might be looked after to a certain extent by the Government. Of course, the Government have reduced the existing licence fee to thirty paise and it is a great step in the right direction but I also request the Hon. Minister to consider the problems mentioned by me sympathetically.

THIRU K. VINAYAKAM : Sir, while I wholeheartedly welcome this Bill to amend the Madras Hackney Carriages Act, 1911, I want to mention a few difficulties of the rickshaw-pullers and hope the Government will consider them. In cities like Madras and Madurai, this cheap mode of conveyance is made use of by the lower middle class and middle class people. There is also a controversy, whether these cycle-rickshaws should be abolished or retained and the previous Government also spent some time over this problem. Sometime ago the Police had stated that there should be a limit to the number of rickshaws plying in the city, I believe about 1,000. Then there was some agitation and subsequently it was stipulated that the rickshaw-pullers had to apply for a licence and a yellow colour was prescribed for the legalised rickshaws. Gradually unlicensed rickshaws in large numbers also came into operation and there was also so much agitation on that score. The Police Department had a big problem to tackle it. After my representation to the previous Government, a compromise was arrived at and the unlicensed rickshaws had to be painted by green colour. If we allow the unlicensed rickshaws with yellow colours to ply in the City, it would create an anomoly and I hope the Government will do the needful in the matter. In this connection, I also suggest that every rickshaw should have a uniform colour, yellow or green only and it should be given a licence and there should be only legalised rickshaws.

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வரவேற்று, ஏழைத் தொழிலாளிக்கு உதவக்கூடிய நல்ல செயல் என்றும் குறிப்பிட்டார்கள். அதற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ரிக்ஷா இழுக்கும் தொழிலாளர்களுக்குப் பல குறைகள் இருக்கின்றன என்பதை அனைவரும் உணர்ந்திருக்கிறோம். அவர்களும் மனுக் கொடுத்து பல கோரிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்கள். சமீபத்தில்கூட அமைச்சர்களைச் சந்தித்து மனுக்களைக் கொடுத்தார்கள். ஏற்கெனவேயும் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கைகளைப் பார்த்தவுடன், மற்றக்

கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்கு முன்னதாக குறைந்தபட்சம் கட்டணத் தொகையாவது உடனடியாகக் குறைக்க வேண்டுமென்று குறிப்பை அனுப்பினர்கள். அந்தக் குறிப்பை ஏற்றுத்தான் உடனடியாக இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ரிக்ஷா தொழிலாளர்களுடைய மற்ற குறைகள் பற்றியெல்லாம் கனம் அங்கத்தினர்கள் சொன்னதைக் கருத்தில்கொண்டு பரிசீலிக்கப்படும் எனபதைத் தெரிவித்து இநத மசோதாவை ஏற்றுககொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1968-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 13/1968) ஆய்வுககு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**பிரிவு 2.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 2 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்.

THIRU K. RAMAMOORTHY : Sir, I do not propose to move my amendments.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. இராமமூர்த்தியின் திருத்தம் முன்மொழியப்படவில்லையாதலால் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, I move the following amendment—

In the proposed sub-section (3) (i) for the words "thirty paise" substitute the words "one paisa."

DR. H. V. HANDE : Sir, I second it.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** ஐயா, என்னுடைய திருத்தத்திலே 30 பைசா என்று இருப்பதற்குப் பதிலாக 1 பைசா என்று ஆக்க வேண்டுமென்று கொடுத்திருக்கிறேன். ஆரம்பத்தில் அந்தக் கட்டணத் தொகை 25 பைசாவாக இருந்தது, பின்னர் 40 பைசாவாக உயர்த்தப்பட்டது தற்போது 30 பைசாவாகக குறைக்கப்படுகிறது. அவர்கள் ஏழைத் தொழிலாளிகள் என்ற முறையில் கட்டணம் இல்லாமல அப்ளிகேஷன் போட்டாலே லைசன்ஸ் கொடுத்துவிடுவது என்ற முறையைக் கொள்ளவேண்டும். அதனால்தான் பெயருக்கு 1 பைசா என்று இருக்கட்டும் என்ற திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். சர்க்காருக்கும் இந்த முப்பது பைசா ஒரு பெரிய தொகையல்லை. அவர்களும் பெரிதாக இதைக் கருத முடியாது. ஒரு நாளைக்கு பீடி பிடிக்கிற செலவு தான். எனினும் அவர்களுக்குக் கட்டணம் இல்லாமல் அப்ளிகேஷன் போட்டாலே லைசென்ஸ் கொடுக்கும் முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்களுடைய நல்ல இதயத்தைப் பாராட்டுகிறேன். உணர்ச்சிக்கு மதிப்பளிக்கிறேன். ஒரு பைசா என்று போடுவதை விட கனம் அங்கத்தினர் ராமமூர்த்தி அவர்கள் சொன்னது போல் ஒன்றுமே வாங்காமல் லைசன்ஸ் கொடுக்கலாம். தொழிலாளிக்கு உதவ வேண்டுமென்ற கருத்தை அரசாங்கத் தரப்பில் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், இப்போதைக்கு அந்தக் கட்டணத்தை இநத அளவுக்குக் குறைத்தால்



போதும் என்று அரசாங்கம் கருதுகிறது. ஆகவே, கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, I do not press my amendment.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு சுந்தரபாரதி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டதாகக் கருதப்படுகிறது.

இரண்டாம் பிரிவு, நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

'That the Madras Hackney Carriages (Amendment) Bill, 1968 (L.A. Bill No. 13 of 1968) be passed'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (iv) 1968-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 14/1948).

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, "1968-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) மசோதா a சட்டப் பேரவை மசோதா எண். 14/1968) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று வேண்டுகிறேன்.

1968-ம் ஆண்டு எப்ரல் 4-ம் நாளில் தமிழ் நாட்டு ஆளுநர் அவர்கள் சாற்றிய 1968-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) அவசரச் சட்டத்திற்கு (தமிழ்நாட்டு அவசரச் சட்டம் 1/1968) பதிலாக இம் மசோதா அமைத்துக் கொள்ளப்படுவதெற்கென நான் அதைக் கொண்டு வந்துள்ளேன். பேருந்து வழித் தடங்களை நாட்டுடைமையாக்குவது என்னும் அரசாங்கக் கொள்கையை செயல் படுத்துவதில் உள்ள சில இடர்ப்பாடுகளை நீக்கும் பொருட்டு 1939-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தை (மத்திய சட்டம் 4/1939) இம் மாநிலத்திற்குப் பொருந்தும் வகையில் திருத்துவதே மேற்படி அவசரச் சட்டத்தின் நோக்கமாகும்.

வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, ஒரு பேருந்து அனுமதிச் சீட்டை வழங்குவதற்கான அல்லது புதிப்பிப்பதற்கான விண்ணப்பத்தை ஆலோசித்துப் பார்க்கையில், மேற்படி சட்டத்தின் 68-C பிரிவின்கீழ் ஒரு திட்டம் வெளியிடப்படுவதைக் கருதிப் பார்க்க வேண்டுமென்று 1939-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் (மத்திய சட்டம் 4/1939) குறிப்பான விதித்துறை எதுவும் இந்த அவசரச் சட்டம் சாற்றப்படுவதற்கு முன்பு கண்டிருக்கவில்லை. 68-C பிரிவின்கீழ் அரசாங்கப் போக்குவரத்து நிறுவனம் தயாரிக்கும் ஒரு திட்டத்தை 47 (1) (C) பிரிவின் கீழ் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாமா என்பது குறித்தும் நீதித்துறை கருத்துக்கள் வேறுபடுகின்றன. பேருந்துப் போக்குவரத்துப் பணி குறித்து 68-C பிரிவின்கீழ் ஒரு திட்டம் வெளியிடப்படுவதை வட்டாரப் போக்குவரத்து அதிகாரி ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டாக வேண்டுமென்கிற விதித்துறைக்கு வகை செய்து, மேற்படி சட்டத்தின் 47-வது 58-வது பிரிவுகளை அவசரச் சட்டத்தின் 2, 3 -வது பிரிவுகள் திருத்துகின்றன.

---

19—8—1968 தேதியிட்ட தமிழக சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[திரு. செ. மாதவன்] [1968 ஆகஸ்ட் 26

திரு. சஞ்சீவி நாயுடு என்பவருக்கும் தமிழக அரசுப் போக்குவரத்து நிறுவனத்திற்குமிடையே நடந்த வழக்கில் (ரிட் மனு எண். 2303/1967) மேற்படி சட்டத்தின் 68 A (b) (i) பிரிவினையொட்டி, அரசாங்கப் போக்குவரத்து நிறுவனம் மாநில அரசாங்கமாகுமென்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. அரசாங்கப் போக்குவரத்து நிறுவனத்தின் அதிகாரங்களை மாநில அரசாங்கம், இது குறித்து வெளியிடப்படும் ஓர் அறிவிப்பில் அது குறிப்பிடக்கூடிய ஓர் அதிகாரி அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிக்குப் பிரித்துக் கொடுக்க அதற்கு அதிகாரம் அளிக்கும் வகையில், மேற்படி சட்டத்தின் IV-A அத்தியாயத்தில் விதித்துறை ஒன்றைச் செய்வது அவசியமென்று கருதப்பட்டது. அந்த அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு, அந்த அதிகாரம் மேற்சொன்னபடி பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். மேற்சொன்ன நோக்கங்களை எய்தும் பொருட்டு 68-A பிரிவைத் திருத்தும் வகையிலும் 1939-ம் ஆண்டு 4-வது மத்திய சட்டத்தில் 68— HH என்ற புதிய பிரிவு சேர்க்கப்படும் வகையிலும் மேற்படி அவசரச் சட்டத்தின் 4, 5–வது பிரிவுகளின் விதித்துறைகள் இயற்றப்பட்டுள்ளன.

மேற்படி சட்டத்தின் IV–A அத்தியாயத்தின் விதித்துறைகளின்படி 68D பிரிவின்கீழ் மாநில அரசாங்கம் திட்டத்தை ஏற்ற பிறகுதான், அரசாங்க போக்குவரத்து நிறுவனம் ஓர் அனுமதிச் சீட்டைப் பெற உரிமையுடையதாகும். 68C பிரிவின்கீழ் வெளியான திட்டத்தில் கண்டுள்ள வழித்தடங்கள் சம்பந்தமாக ஒரு தாற்காலிக அனுமதிச் சீட்டிற்கு விண்ணப்பித்துக்கொள்ள அரசாங்கப் போக்குவரத்து நிறுவனத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமென்றும், அத்தகைய தாற்காலிக அனுமதிச் சீட்டை அரசாங்க போக்குவரத்து நிறுவனத்திற்கு வழங்க வட்டாரப் போக்குவரத்து அதிகாரி கடமைப்பட்டவராவார் என்றும் முடிவு செய்யப்பட்டது. தாற்காலிக அனுமதிச்சீட்டு குறிப்பிட்ட கால அளவு வரை மட்டுமே செல்திறன் உடையதாகும். இது காரியத்திற்காக, 68 CC என்னும் புதிய பிரிவு அவசரச் சட்டத்தின் 5-வது பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.

அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டுள்ள மூலச்சட்டத்தின் கீழ் பேருந்து அனுமதிச் சீட்டுகளை வழங்குவதற்கென அல்லது புதுப்பிப்பதற்கென செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களை குறித்து முடிவெடுக்க அவசரச் சட்டத்தின் 7-வது பிரிவில் ஒரு துணை விதித்துறையும் சேர்க்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே நான் கூறியுள்ளபடி, மேற்படி அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இம்மசோதா கொண்டுவரப்படுகிறது.

இதை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சரவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானம் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது ".

**Dr. H. V. HANDE :** With regard to this Bill, I wish to pinpoint one thing. I think this Ordinance came into existence on the 4th. I got it by post on 5th. Our Assembly Budget session came to an end on 31st March. I am not quite sure about the date. We were not informed during the Budget session about this. Suddenly the Assembly is prorogued after Budget session and this Ordinance is thrust on us. This has been going on for a number of years. I wish the Hon. Minister pulls up the concerned department. When did the High Court judgement come ? I believe it must have been in the month of March or April. I am not sure. It is stated in this Bill that the Madras High Court had held recently that the



1968 ஆகஸ்ட் 26] [ Dr. H. V. Hande ]

State Trnasport undertaking with reference to section 68-A (b) (i) of the Act is the State Government. When was it so held ? I do not know the date. It must have been in March or April. After the High Court judgement, the concerned department should have immediately woked up from its slumber and they should have seen to the whole thing and got the Bill ready since the Assembly was in session. We could then have considered that Bill, had it been brought forward. But that was not done. One or two days afterwards, after the Assembly Budget session was over, the Assembly was prorogued and the Ordi ance is thrust on us. I am not going into other aspects of the matter. There might have been administrative delays. What I want to say is as far as possible and as far as feasible, let us not be insulted in this manner. This kind of bringing in a measure through Ordinance has been going on for quite a long time. At least hereafter let us not be victims of this sort of insult. Let not the August Assembly be insulted in this manner. I am sure the Hon. Minister will take these arguments in the right spirit and see that such thing is not repeated.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் இது நடைமுறை சௌகரியங்களுக்காக, தேவைகளுக்காக கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதா. அந்த அளவில் இதை வரவேற்கிற நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அது இந்த மசோதாவில் இருக்கிற மிகப் பெரிய குறை என்று கூடச் சொல்வேன். நீதி மன்றங்களில் நடந்து கொண்டிருக்கிற வழக்குகளுக்கு இந்தச் சட்டம் எப்படிப் பொருந்தும் என்பதைத் தெளிவு படுத்தியிருக்கிறது. ஏற்கெனவே நீதிமன்றங்களில் நடந்துகொண்டிருக்கிற வழக்குகள், இந்த மசோதா சட்டமாக்கப்படுமானால் இந்தச் சட்டப்படி அந்த வழக்குகள் தீர்க்கப்படும் என்ற ஒரு க்ளாஸ் இதில் இருக்கிறது. இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் ஒரேமாதிரியான சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்ந்தவர்கள் இருவர் இருந்து, ஒருவரது வழக்கு இந்த அவசரச் சட்டம் வருவதற்கு முன்னால் தீர்க்கப்பட்டிருக்குமானால் அது ஏற்கனவே உள்ள சட்டத்தின் கீழ் தீர்க்கப்படும் நிலைமையும், இன்னொருவர் அதே சமயத்தில் வழக்கு தொடர்ந்திருந்து அது தீர்க்கப்படாத ஒரு காரணத்தினால் இந்த அவசரச் சட்டம் மூலம் இந்தச் சட்டப்படி தீர்க்கப்பட வேண்டிய ஒரு நிலையும் ஏற்படும். ஆகவே நீதி மன்றங்களில் நடந்து கொண்டிருக்கிற வழக்குகள் பொறுத்தவரையில் இரண்டு பேர்களுக்கு இரண்டு விதம் என்றில்லாமல் எல்லோருக்கும் ஒரே மாதிரியான நியாயம், நீதியை இந்தச் சட்டம் வழங்குவதாக இல்லை. 7-வது க்ளாஸ் ஒரு சாருக்கு ஒரு சலுகை, இன்னொரு சாருக்கு அச்சலுகை இல்லை என்ற நிலையை ஏற்படுத்துகிறது. அரசியல் சட்டப்படி எல்லோருக்கும் ஒருமாதிரியான நீதி, ஒரு மாதிரியான சட்டம் என்பது பாதிக்கப்படும் அளவில் இருக்கிறது. ஆகவே இந்த அரசாங்கம் இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் மறுபடியும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த மசோதாவை உறுப்பினர்கள் எல்லோரும் வரவேற்றிருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் உணர்ச்சியோடு பேசினார்கள். அவர்கள் எப்போதும் உணர்ச்சியோடுதான் பேசுவார்கள். இன்றும் அப்படித்தான் பேசினார்கள். அவர்கள் சொன்ன வார்த்தைகளை எல்லாம் நான் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவரது உணர்ச்சியை நான் மதிக்கிறேன். இந்தச் சட்டங்கள் எல்லாம் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு மன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை எல்லாம் கேட்டு சட்டமாக்கப்பட்

[திரு. செ. மாதவன்] [1968 ஆகஸ்ட் 26

வேண்டுமென்ற நல்ல ஜனநாயக பண்புள்ள கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அந்தக் கருத்து இந்த மசோதாவிற்குப் பொருந்தாது என்பதை விளக்க ஆசைப்படுகிறேன். உயர்நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கியவுடனே இந்தச் சட்டம் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு நானே தனிப்பட்ட கவனம் செலுத்தி பரிசீலித்தேன். இது மத்திய சட்டம். அவர்கள் அனுமதியில்லாமல் கொண்டு வரமுடியாது. அதில் காலதாமதம் ஏற்பட்டது. சட்டமன்றத்தில் கொண்டுவரலாம் என்று முயற்சித்தேன். அந்த முயற்சியில் தோல்வி அடைந்து சட்டமன்றம் முடிந்ததற்குப் பின்னால்
பி. ப. 5 30 நானே நேரடியாகச் சென்று அங்குள்ள அமைச்சர்களை, பல துறை அமைச்சர்களை நேரடியாகச் சந்தித்து வாதம் செய்து கடைசியில் அனுமதி பெற வேண்டியிருந்தது.

மத்திய அரசாங்கத்தோடு கலந்து செய்ய வேண்டுமென்ற ஒரு காரணத்திற்காகத்தான் சட்டமன்றத்தில் கொண்டுவராமல், சட்டமன்றம் முடிந்து, தீர்ப்புக்கு முன்னாலே வர வேண்டுமென்ற காரணத்தால் அவசரச் சட்டமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்று ஏற்றுக் கொண்டோம். அது தானே தவிர, இந்த மன்றத்தை அவமதிப்பு செய்ய வேண்டுமென்ற கருத்து இல்லை என்று உறுதி கூறிக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, திரு. இராமமூர்த்தி அவர்கள் எப்போதும்போல் ஆரம்பித்தார்கள். மசோதாவின் உட்கருத்தையே ஆலோசனை செய்யச் சொன்னார்கள். அரசியல் அமைப்புக்கு முரண் என்று சொன்னார்கள். வழக்கறிஞர் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் கொண்டு வரப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு "புரொவிஷன்" இருக்கத்தான் செய்யும். அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரண்பாடு இல்லை. அவர்கள் ஒரு வாதம் வைத்தார்கள். எப்படி, இன்றைக்கு நீதிமன்றத்தில் இருக்கக் கூடிய வழக்குகளுக்கு மட்டும் செல்லும் என்று சொல்லிவிட்டால் அதற்கு முன்னாலே வழக்காடிச் சென்றவர்களுக்கு வருத்தமாக இருக்காதா என்று சொன்னார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய வழக்குகளுக்கு மட்டும் இந்தச் சட்டம் பொருந்தாது என்று சொல்லிவிட்டு, நான் இன்று வழக்கு போட விரும்புகிறேன், எனக்கு இந்தச் சட்டம் பொருந்தும் என்று வாதாடினால் அது நீட்டிக்கொண்டே போகும். உயர்நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்குகளுக்கும் பொருந்தும் என்பது நிர்வாக வசதிக்காகப் போடப்பட்ட ஒரு பிரிவு ஆகும். அதில் எந்தவிதமான தவறும் இல்லை என்று சொல்லிக் கொண்டு இந்த மசோதாவை ஏகமனதாக ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அவை முன்னுள்ள கேள்வி "1968-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5, 6 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**பிரிவு 7.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 7 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU K. RAMAMOORTHY : Sir, I move—

At the end, the words "as amended by this Act" be deleted.

THIRU P. M. MUNUSWAMY GOUNDER: I second the amendment.



1968 ஆகஸ்ட் 26]

**திரு. க. இராமமூர்த்தி** : தலைவரவர்களே, மிகத் தெளிவாக, என்ன காரணத்திற்காக இது கொண்டு வரப்படுகிறது என்பதை முன்னால் சொன்னேன். இன்னொன்று சொல்லி திருத்தத்தை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். என்னுடைய திருத்தமே இந்தச் சட்டத்திற்கு "ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்", ஏற்கனவே இருந்து கொண்டிருந்து வழக்குகளுக்காக அமல்படுத்திக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே ஒரு சந்தேகம் தோன்றுகிறது. ஏதோ ஒருசில குறிப்பிட்ட வழக்குகள் இப்படித்தான் தீர்க்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே கொண்டுவரப்பட்டதோ என்ற எண்ணம் கூட இருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவுதான் இதிலே மற்ற வாதங்கள் சொல்லப்பட்டாலும் கூட ஒரே நேரத்திலே வழக்குகள் பதிவு செய்த இருவருக்கு இரு வேறான தீர்ப்புகள் கொடுக்கும் நிலைமை இந்தச் சட்டம் நிறைவேற்றினால் ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று சொன்னேன். அமைச்சரவர்கள் வழக்கறிஞர். இரண்டு வழக்கறிஞர்கள் ஒன்றாகச் சிந்திப்பதோ ஒரேமாதிரி நினைப்பதோ இல்லை, ஆதலால் மாறுபட்ட கருத்தைச் சொல்கிறார்கள். அது மட்டும் அல்ல. எல்லோருக்கும் ஒரே நியாயம் ஒரே சட்டம் கூட இல்லை. "காமன் லா" கூட இல்லை. அமைச்சரவர்கள் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, நான் முன்னாலே குறிப்பிட்டபடி ஒரு செக்ஷனுக்கு திருத்தம் கொடுக்க வேண்டுமானால் அது திருத்தமாக இருக்க வேண்டுமே தவிர அந்த செக்ஷனுக்கு எதிராக இருக்கக்கூடாது என்று ஒரு "கன்வென்ஷன்" இருக்கிறது. 7-வது பிரிவை தோற்கடிக்க வேண்டுமென்று அவர்கள் கட்சித் தரப்பில் சொல்லலாம். அதற்காக அந்தச் செக்ஷனுக்கு எதிராகக் கொண்டுவருவது விதிமுறைக்கு ஒத்துவராது. அவர்கள் கூறுகின்ற திருத்தத்தை ஒத்துக்கொண்டால் 7-வது பிரிவே தேவையில்லை என்று ஆகிறது. அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரண் என்று சொல்கிறார்கள். எபபடி முரண் என்று சொல்ல வேண்டும். "ஃபண்டமென்டல் ரைட்" இருக்கிறது. அதற்குப் பின்னாலே திருத்தம் சொல்லி, "ரீசனபிள் ரெஸ்டிரிக்ஷன்ஸ்" என்று சொல்கிறது. அவர்கள் ரிட் மனுதாரர்களுக்குப் பரிந்து பேச மாட்டார்கள் என்ற நம்பிக்கையிருக்கிறது. நாங்கள் கொண்டு வந்திருப்பது எந்த மனுதாரருக்கும் எதிராக அல்ல. 68 எஃப் இருக்கிறது. ஒருபுறம் தேசியமயமாக்கும் திட்டம் கொண்டு வந்தவுடன் அது பரிசீலிக்கப்படுகிறது. முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம். ஒரு ஆர். டீ. ஏ. மனுவை பரிசீலனைக்கு ஏற்கலாம் என்று ஒரு நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. இன்னொரு உயர்நீதிமன்றம் மாறுபட்ட கருத்தைச் சொல்லி, அது தேவை இல்லை, பரிசீலிக்க தேவையில்லை, ஆரம்ப பரிசீலனை இருக்கலாம், அது கூடத் தேவை இல்லை, ஒரு அரசாங்கம் தேசிய மயமாக்கும் கொள்கையைச் சொன்னால் அதை ஆர்.டீ.ஏ. கவனத்தில் கொண்டு நாட்டுடமையாக்கும் திட்டத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று இன்னொரு உயர்நீதி மன்றம் சொல்லியிருக்கிறது. சட்டமாகக் கொண்டுவந்தவுடன் ஆர்.டி.ஏ. தேசியமயமாக்கும் திட்டத்தைக் கவனத்தில் கொண்டு தான் மனுக்களைப் பரிசீலிக்க வேண்டும். அரசாங்கத்தின் திட்டத்திற்குத் தான் முதலிடம் கொடுக்க வேண்டும் என்று ஒரு கொள்கைப் பிரச்சினையாகத் தான் கொண்டிருக்கிறோம். கொள்கையை எதிர்த்து நண்பர் இராமமூர்த்தி அவர்கள் நம்பிக்கைக்கு ஊறு விளைவிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இடையிலே உள்ள இடர்ப்பாடுகள், டெக்னிக்கல் கிரவுண்டைப் பயன்படுத்தி தேசியமயமாக்கும் திட்டத்தை தோல்வியடைய செய்ய சிலர் முயற்சிக்கலாம். அதை உடைக்கத்தான் இந்தச் சட்டம். அவ்வாறு தோல்வியடையத் துணைபோக மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் இதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**திரு. க. இராமமூர்த்தி** : தலைவரவர்களே, இந்தத் தேசியமயக் கொள்கையை நாங்கள் பரிபூர்ணமாக ஏற்றுக்கொண்டிருப்பதால் இந்தத் திருத்தத்தை வலியுறுத்தவில்லை. இதைக் கொண்டு வந்த நோக்கமே

இருக்கின்ற நிலைமைகளை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவது தான். விளைவுகளை அரசுதான் ஏற்கப்போகிறது. நான் இந்தத் திருத்தத்தை வலியுறுத்தவில்லை.

திரு. க. இராமமூர்த்தி அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

7-வது பிரிவு, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

8-வது பிரிவு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு இவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

"That the Bill be passed".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### 8. அறிவிப்பு

சென்னை மாநகராட்சி மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. 1968-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### 7. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(v) 1968-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 15/1968).

THE HON. THIRU S. MADHAVAN: Mr. Deputy Speaker, Sir, I move—

That the Madras City Municipal Corporation and District Municipalities (Amendment) Bill * 1968 (L.A. Bill No. 15 of 1968), be taken into consideration.

MR. DEPUTY SPEAKER: The motion is before the House for discussion.

DR. H. V. HANDE: Sir, this is a Bill that is brought forward to extend the term of office of the Corporation Councillors. I am very sorry to tell the House that I stoutly oppose this Bill for the following reasons.

The administration of the Corporation has been very, very unsatisfactory for the past several years and it is my misfortune to highlight this point and say stoutly that there is no point in extending the term of office of the councillors. The people of Madras are so much disappointed, frustrated and, if I may use the word, disgusted that they even go to the extent of saying that the Corporation councillors need not be there and that the whole thing can be

*Published in the *Fort St. George Gazette* Extraordinary dated 19th August 1968.



under an administrative set-up under the administration of the Minister for Local Administration or somebody else. My object is only to spotlight the attention of the Government on the fact that the people are very dissatisfied with the administration of the Corporation for the several years. When a Bill was brought forward for removing the supersession of the Corporation in the Legislative Council, my distinguished colleague Dr. A. L. Mudaliar explained in the House that the administration by the Corporation could be toned up only if the Corporation was converted into a limb of the Government and the services of the Corporation provincialised. That he has very clearly stated in the Legislative Council. I do not know the reason why it was not put into practice. Formerly the Madras Public Service Commission was given the power of recruiting the staff of the Corporation. Subsequently a legislation to take away the power of recruitment from the purview of the Service Commission was introduced. One of the greatest sources of corruption in the Corporation is recruitment of staff and a large staff is employed there. When the recruitment of staff was brought within the purview of the Service Commission, what was the basis for it? Was it a political act or was it because of the Ministry's dissatisfaction with the working of the Corporation? Why this Government is trying to undo what the previous Government did is a question to be answered. In the Corporation we have got a Central Committee which is in complete control of employment. Whether any pressure was exercised by the Central Committee to dispossess the Service Commission of its power of recruitment is a question which needs clarification. I may also point out that in the cities of Delhi, Bombay and Calcutta, the Public Service Commission recruits the personnel for the Corporation and public utility services like electricity and transport undertakings. I know on authority that in these metropolitan cities the power is completely vested in the Service Commission. If the purpose of the Government is to dispossess the Service Commission, why should the Government fill up the post of the Fourth Member of the Commission? After this Government came to power, they appointed the Fourth Member. If the Fourth Member was appointed for this purpose only, cannot that post be retrenched?

What is the position about the Administration report of the Corporation for the years 1966–67 and 1967–68? Could they not be placed on the table of the House? Is it a fact that a clerk selected by the Commission was not appointed by the Corporation? That case is before the High Court. If persons selected by the Commission are not appointed, what confidence the Government and the public will have in the Corporation? Is it not a colossal waste that in 1967 they have appointed a Member and not utilised his services? In fact I wanted from the department two Government orders, G.O.Ms. No. 302 and G.O. Ms. No. 32. They refused to give them. I brought a privilege motion. There is absolutely no protection when Legislative Members seek information. If I have copies of the Orders, I can pass them on to the Minister or place them on the table.

There is a very serious fall in cleanliness and public heal h of the City is terribly ruined. Mosquitoes, flies and potholes have become rampant. The speed with which execution of works was taking place has slowed do ,n considerably. I have been wondering for a number of years what exactly the reason is. The important reason is that the administrative units must be made smaller. Unless this is done, there will be no proper administrative control. We have one hundred divisions and these are divided into circles and each circle has a health officer. In the month of May we got an order that these zones are expanded. If my information is correct, normally one health officer has got a population of ten tho.isand in his jurisdiction. In each zo e we have got ten divisions and in each division we have 10,000 or 15,000 population. A lakh and a half population was previously looked after by one H alth Officer.The zones were spread over twenty divisions from 1st May 1966 and the officers have been divided into five for conservancy and five for public health. The lorry p osition is terribly bad. Without lorries and equipment, he has to look aftr twenty divisions. This invloves extensive touring in each division. When a Health Officer is going in one particular division taking a particular route, news spread to the staff in the other areas and they take things easy. I cite this example to bring home the fact that increasing the size of the zone does not lead to touring up the administration. What are the reasons which prompted the Corporation to bring twenty divisions under one zone ? Is it to help a few Health Officers and Engineers ? It is a very serious question that I ask before the House. If conservancy is not done in a scientific manner, what about the spread of infections ? Can the engineers control the spread of infection ? Do they have any idea that cholera, scabbies, etc. spread like wild fire ? Is it not necesary that the Health Officers must be made responsible for these things? This is a very important point to which I want to draw the attention of the Minister.

Finally, I want to say only one thing and that is with regard to the way in which each division is administered. To whichever division I go, there are two sets of people the Congress and the Dravida Munnetra Kazhagam and these two sets of people work for themselves. To whichever street I go, if there is a Congress Councillor, he will not look into the D. M. K. interest. In my own constituency there are 6 Congress Councillors and 3 D.M.K. Councillors. I do not say this without any basis; I can give the names of the streets and prove my statement. Why should such an attitude be taken up ? In my own Division No. 48 there is a Congress Councillor" A number of people have got a dhoby khana. That dhoby khana has been wiped out. It has become a political issue. I request the Government to find out whether a solution cannot be evolved for putting an end to these party bickerings. As far as administrattion is concerned, why should not each street be properly attended to on its own merits ? This is a most important point which I want to bring to the notice of the Government.



Finally, my only feeling is that if the present state of affairs are allowed to continue in this way, and if the upkeep of the Madras City is to be maintained in this way people may even lose their faith in the democratic institutions. It is the refore, I say that unless a thorough change is bro ght about and the Government exercise sufficient control over the administrati n of the Madras Corporation, it is not possible to make the people place their faith in these institutions. In this connection, I want to point out that a number of schemes and a number of experiment have been carried out by the Corporation without the sanction of the Government. For instance, for every employment, the Corporation, is expected to get the sacntion of the Government in advance but now only after it becomes an accomplised fact, that the concerned papers are sent to the Government for sanction and the Government sanction it. This is a serious thing and it must be put an end to. The Government must exercise control over the Corporation in regard to such matters and by saying this I am not throwing or linging mud on the Corporation. I am only saying this in the nterests of lakhs and lakhs of people who are residing in theMadras City and also in the interests of the future of the Ruling Party. Unless this is done and properly looked into, very serious misgivings will crop up in the minds of the people. Therefore, I regret to say that this Bill which aims at ext rd ng the term of these people does not satisfy the feelings of the people.

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை எதிர்க்கவேண்டுமென்று நம்முடைய ஹாண்டே அவர்கள் ஆரம்பித்தார்கள். நான் கூட இந்த மசோதாவை அவர் உண்மையாக எதிர்க்கிறார்களோ என்று சந்தேகப்பட்டேன். இந்த மசோதாவை எதிர்க்கிறேன் என்று சொல்லி, மாநகராட்சியில் நல்ல முறையில் நிர்வாகம் நடைபெற வேண்டும், நகர மக்களுக்கு நல்ல வசதிகளைத் செய்து தரவேண்டும் என்ற ஆர்வத்தில் பல யோசனைகளை இவ்வளவு உணர்ச்சியோடு சொன்னார்கள் என்று நினைக்கிறேன். நான் அதை முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். மாநகராட்சி சிறந்த முறையில் நிர்வாகத்தை நடத்த வேண்டும். எல்லா மக்களுக்கும் அதிக வசதிகள் பெறுவதற்கு வழிவகைகள் செய்துதர வேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் அவர்கள் இல்லாததை மட்டும் சொன்னார்கள். அதே நேரத்தில் இந்த மாநகராட்சி சிறந்த முறையில் சேவை செய்வதையும் எடுத்துச் சொல்லி, பாராட்டியிருந்தால், அவர்கள் உற்சாகத்தோடு வேலை செய்வார்கள். நான் பல இடங்களில் பார்த்திருக்கின்றேன். குளிர்ந்த குடி தண்ணீர் கொடுக்கக் கூடிய அளவுக்கு கூட சில வார்டுகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சுகாதாரப் பிரச்னை ஒரு பெரிய பிரச்னை. சுகாதாரப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு எவ்வளவு பணம் தேவை, அதற்கு அரசாங்க உதவி எவ்வளவு தேவை என்பதையெல்லாம் கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்வார்கள். ஆகவேதான், மாநகராட்சி ஏதாவது செய்ய முடியாதிருந்தால். அதற்கு முக்கிய காரணம் நிதி வசதி இல்லை என்பது தான். நிர்வாகத்திலே தவறு இருந்தால் அதை நாம் கண்டிக்க வேண்டும். நிர்வாகத்திலே தவறுகளைத் தவிர்க்க வேண்டியது மாநகராட்சிப் பொறுப்பிலுள்ளவர்களது கடமை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். கனம் அங்கத்தினர் கூறிய நல்ல கருத்துக்களையெல்லாம் ஏற்றுக் கொண்டால், நிர்வாகம் சரியான முறையில் நடைபெறும் என்பதில் யாருக்கும் கொஞ்சம் கூட சந்தேகம் இல்லை. ஆனால், நிர்வாகம் சரியில்லை. ஆகவே பதவியிலுள்ளவர்களை பதவியைவிட்டு உடனே போகச் சொல்லிவிடவேண்டும் என்று சொல்வது நல்லது அல்ல. தேர்தல் நடத்துவது வேறு, நிர்வாகத்தில் குறை இருப்பது வேறு. அந்தக் குறைகளை நாம் எப்பொழுதும் போக்க்

[திரு. செ. மாதவன்] [1968 ஆகஸ்ட் 26

மாட்டார்களல்லவா. குறிப்பிட்ட குறைகள் ஏதேனும் இருந்தால் கூட, அதை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அமைச்சர் அவர்கள் உடனே அதைப் பற்றி கவனிப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே, உறுப்பினர் அவர்கள் இப்படிப்பட்ட மசோதாவை எதிர்க்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அடுத்தபடியாக, சர்வீஸ் கண்டிஷன்ஸ் பற்றி பேசினார்கள். அது தான் எனக்கு வியப்பாக இருக்கிறது. சட்டம் கொண்டுவந்தபொழுது அவர் மேல் சபையில் அங்கத்தினராக இருந்தார்கள். சட்டம் ஏன் கொண்டுவரப் பட்டது, சட்டத்தின் பின்னாலுள்ள நோக்கம் என்ன என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சட்டம் தோற்றுவிக்கப்பட்ட காலத்தில் வெள்ளைக் காரன் சர்வாதிகார ஆட்சி இருந்த காலத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கு உள்ள உரிமையைப் பறிக்கக்கூடாது என்று அந்த அதிகாரத்தைக் கொடுத் திருந்தும், ஜனநாயகத்தில் அந்த உரிமை பறிக்கப்பட்டது உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அரசியல் நோக்கமும் நன்றாகத் தெரியும். அதை நாம் இப்பொழுது நிவர்த்திசெய்கிறோம். ஜனநாயகப் பண்பை நாம் நிலை நாட்டுகின்றோம். வெள்ளையர் ஆட்சியில் கொடுக்கப் பட்ட உரிமையை நாம் பறிக்கக்கூடாது என்ற ஒரு நல்ல கருத்து அதில் இருக்கிறது.

உள்ளாட்சி மன்றத் துறையிலுள்ள அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படு வதற்கு ஒரு முறை வேண்டும் என்பதை அவர் அந்த கருத்தாகச் சொன்னார்கள். நான் அதை முழுவதும் ஏற்றுக்கொள்கிறேன். அந்தக் கருத்து பொதுவாக இருக்கவேண்டுமே ஒழிய, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலுள்ள மாநகராட்சிக்கு மட்டும் வேண்டும் என்று சொன்னார்களே, அந்தக் கருத்தை மட்டும் நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை பணிவோடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். முனிசிபல் சர் வீஸ், லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் சர்வீஸிலுள்ள எல்லா அலுவலர்களை யும் எப்படி தேர்ந்தெடுக்க வேண்டும், அதற்கென்று ஒரு முறை வேண்டும். நம்முடைய பப்ளிக் சர்வீஸ் கமிஷனே தேர்ந்தெடுப்பதா அல்லது தனியாக ஒரு சர்வீஸ் கமிஷன் ஏற்படுத்துவதா என்ற கருத்துக்களெல்லாம் பல ஆண்டுகளாக இருந்துகொண்டு வருகிறது என்பது அங்கத்தினர் அவர் களுக்கு நன்றாகத் தெரியும். அது ஒரு பொதுவான பிரச்னை. பொது வான பிரச்னையை நாம் எப்பொழுதும் பரிசீலித்துக்கொள்ளலாம். இது ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக மட்டும் கொண்டு வரப்பட்ட மசோதா என்பதை மட்டும் நான் எடுத்துக்காட்டி, ஆகவே, சட்டத்தை இவ்வாறு திருத்துவது நம்முடைய கடமை என்பதையும் ஞாபகப்படுத்த விரும்பு கிறேன்.

ஏற்கனவே சட்டம் கொண்டு வந்துவிட்டார்கள். சட்டம் கொண்டுவந்த பிற்பாடு, ரெக்ரூட் செய்யப்பட்டவர்களின் கதி என்ன. அவர்கள் என்ன ஆவது என்பதைப்பற்றி குறிப்பிட்டார்கள். நியாயம் தான். சட்டத்திற்கு உட்பட்டு அவர்கள் செயல்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது ரெக்ரூட் செய்யப் பட்டிருக்கக் கூடிய நபர்களுக்கு மாநகராட்சியில் எந்த அளவுக்கு இடம் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் ஆலோசனை கூறி இருக்கிறது. சட்ட முறையிலே அதில் எதுவும் செய்ய முடியாது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அப்படி நீங்கள் ஒரு முடிவு எடுத்துவிட்டால் எதற்காக நான்காவது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மெம்பரைப் போட்டீர்கள் என்றும் அவர்கள் கேட்டார்கள். அதையும் அரசாங்கம் பரிசீலித்தது. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவரை அழைத்து, அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினோம். உண்மையிலே தங்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கிறது, ஆகவே, அதைக் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் நான்காவது அங்கத்தினர் தங்களுக்குத் தேவை என்று அவர் வற்புறுத்தினார். அந்தக் கூற்றிலே உள்ள உண்மையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதன் காரண மாக நான்காவது அங்கத்தினரை பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குக் கொடுத் திருக்கிறோம்.



1968 ஆகஸ்ட் 26] [திரு. செ. மாதவன்]

அது மாத்திரமல்ல, 96-வது பிரிவை நாங்கள் அப்படியே விட்டுவைத் திருக்கிறோம். எந்த அலுவலர் பிரிவை அரசாங்கத்தினுடைய சர்வீஸாக சிவில் சர்வீஸ் என்ற முறையில் கொண்டுவரலாம் என்ற அதிகாரத்தையும் தேக்கி வைத்திருக்கிறோம். எப்பொழுதாவது ஒரு சந்தர்ப்பம் வரு மானால், உதாரணமாக, சில அதிகாரிகள் கிடைக்காமல் போனால், பின்னால் டிரான்ஸ்பர் செய்யவேண்டுமென்று ஒரு நிலை ஏற்பட்டால், அதற்கு அவர்கள் 'கேட்டகரி'யை மட்டும் சிவில்சர்வீஸ் என்று எடுத்துக்கொள்ளலாம் என்ற அதிகாரம் அரசாங்கத்திற்கு 96-வது பிரிவிலே இருக்கிறது. ஆகவே, ஜனநாயக உரிமையை அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பதற்காகத் தான் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம். உரிமையைக் கொடுப்பது வேறு, உரிமையை எப்படி செயல்படுவது வேறு. தகராறுகள் வருகின்றன என்ற காரணத்தினால் மன்றத்தின் உரிமைகளைப் பறிப்பது அவ்வளவு அழகல்ல என்று தான் அரசாங்கம் கருதுகிறது. அதை கனம் அங்கத் தினர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக் கிறது. நிச்சயம் அவர்கள் கூறிய கருத்துக்களை, டிரான்ஸ்பர் செய்ய வேண்டுமென்றால் எப்படி செய்யவேண்டும், முனிசிபாலிடிக்கு முனிசி பாலிடி டிரான்ஸ்பர் செய்யவேண்டும், கார்பரேஷனுக்கும், முனிசிபாலிடிக் கும் டிரான்ஸ்பர் செய்யவேண்டும் என்ற இப்படி பல கருத்துக்களெல்லாம் இருக்கின்றன. மாவட்ட நகராட்சி சட்டம் திருத்தப்படும்பொழுது இந்த பொதுவான கருத்துக்களையெல்லாம் பரிசீலனை செய்யலாம். அப்படி பரிசீலனை செய்வதற்கு அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. இப்பொழுது நாம் அதைப்பற்றி பரிசீலிக்கத் தேவையில்லை என்று பணி வன்புடன் தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவை முன்னுள்ள கேள்வி : "1968ம் ஆண்டு சென்னை 10 நகராட்சி—மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 2 மசோதாவிற்கு உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்."

THIRU K, RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

'In the proviso to new sub-section (7-A) proposed under section 44-A, for the words "or reduced by such" substitute the words "to a".'

THIRU K. VINAYAKAM : Sir, I second it.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக ஆகிறார்கள். அவர்களுடைய பதவிக் காலம் முடி வடைவதற்கு முன்பாக அல்லது முடிவு அடைந்த பிறகு மூன்று மாதங் களுக்கு அவர்களுடைய பதவிக் காலத்தைக் குறைக்கவோ அல்லது அதிகரிக் கவோ வேண்டிய அதிகாரத்தை இந்தப் பிரிவு சர்க்காருக்கு அளிக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்கள் அவர்களுடைய பதவிக்காலம் முழுமையும் செயல்படுவதற்கு ஒரு உத்திர வாதம் அளிக்கப்படவேண்டும். அப்படி உத்திரவாதம் அளித்தால்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு ஒரு மதிப்பும், மரியாதையும் ஏற் படும். ஒரு குறிப்பிட்ட காரணத்திற்கு ஒரு பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்பாகவே, 3 மாத காலம் அவர் களுடைய பதவிக் காலத்தைக் குறைப்பது அவ்வளவு நல்லது அல்ல.

என்ற காரணத்திற்காகத்தான் நான் என்னுடைய திருத்தத்தைக்கொண்டு வந்திருக்கிறேன். ஏற்கனவே இருக்கிற சட்டத்தில் இப்படி இருக்கிறது என்பதாக வாதாடலாம். ஆனால், சட்டம் திருத்தப்படுகிற நேரத்தில், திருத்தங்கள் அவை முன் வருகிற நேரத்தில், அதுபற்றிய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற அளவிலே எனது கருத்தை வலியுறுத்திச் சொல்லி, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

பி ப. 6-00 **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களே ஒத்துக்கொண்டபடி, ஏற்கனவே இருக்கும் கருத்துதான். புதிய கருத்து ஒன்றும் இல்லை. " as a whole " என்று போட்டிருக்கிறது. ஏற்கனவே இருக்கும் கருத்து. திடீரென்று அதை மாற்றினால், எல்லாப் பிரிவுகளையும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே, உறுப்பினர் தம் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னுடைய நோக்கம், இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான். அமைச்சர் அந்த நோக்கத்தை ஒத்துக்கொள்வதால், இந்த மசோதா சட்டமாக்கப் பட்டாலும் அங்கத்தினர்களுடைய பதவிக்காலம் குறைக்கப்பட மாட்டாது இந்த அரசினால் என்கிற காரணத்தால் என் திருத்தத்தை வலியுறுத்த வில்லை.

திருத்தம், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### பிரிவு 3.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தைக் கொண்டு வரமுடியாது என்று நினைக்கிறேன். ஆனால் என்னுடைய கருத்து, திருத்தங்கள் கொடுக்க போதிய நேரம் இல்லாததால் அவசரம் அவசரமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, எங்களுக்குக் கிடைக்கும் நேரம் போதவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்காகத்தான், கடைசி நேரம் வரையிலும் கூட திருத்தங்கள் கொடுக்கலாம் என்ற உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த மசோதாவை பூரணமாகப் படித்துத் தான் திருத்தங்கள் கொடுக்க முடியும். தலைவருக்கும் சங்கடங்கள் தெரி கின்றன. தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் சொன்னேன் குற்றச்சாட்டாகச், சொல்லவில்லை. இந்த அளவில் முடித்துக்கொண்டு, என்னுடைய திருத்தத்தை முன் மொழியவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு இவை பேரவையின் முடி விற்கு, விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. TH'RU S. MADHAVAN: Sir, I move—

" That the Bill be passed ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.



## (vi) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு பொதுப் பொறுப்பு கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்த மசோதா (சட்டபேரவை மசோதா எண் 19/1968.)

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்த மசோதா[a] ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1961-ம் ஆண்டு பொதுப்பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) (தமிழ்நாட்டுச் சட்டம் 57/1961) சட்டத்தின் 2-வது, 38-வது பிரிவுகளைப் பின்வரும் காரணங்களுக்காக திருத்த இம்மசோதா முற்படுகிறது.

மேற்சொன்ன சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (28) பகுதியின் (2) உட்பிரிவு, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் " தர எக்கர் " என்னும் சொற்றொடருக்கு விளக்கம் தருகிறது. மேற்சொன்ன சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (28) பகுதியின் III-வது விளக்கத்தில் விவரித்துள்ள திட்டங்களைத் தவிர மற்றப் பாசன வாயில்களிலிருந்து பாசனம் பெறுகிற சில நன்செய் நிலங்களும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இத்தகைய நன்செய் நிலங்களைத் தர எக்கர்களாக மாற்றுவதற்கு தற்போது எந்தவிதமான அளவுகோலும் இல்லை. எனவே, இத்தகைய நிலங்களைத் தர எக்கர் களாக மாற்றுவதற்குரிய அளவுகோலுக்கு வகை செய்வதற்கென மேற் சொன்ன சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (28) பகுதியில் தக்க விதித்துறை இயற்றுவது அவசியமெனக் கருதப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கப் பதிவாளர், குத்தகைக்காரர் பண்ணைச் சங்கத்தின் துணை விதிகளில் சொல்லியுள்ள நடைமுறையில் பின்பற்றிய பிறகு, மேற்சொன்ன சங்கத்தின் உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் செய்து கொள்கிற விண்ணப்பத்தின் மீதோ அல்லது பதிவாளர் தாமாகவோ மேற்சொன்ன சங்கத்தின் துணை விதிகளைத் திருத்துவதற்கு மேற்படி சட்டத்தின் 38-வது பிரிவு அவருக்கு அதிகாரமளிக்கிறது. இவ்விதித் துறையின் கீழ், பதிவாளர் தாமாகவே துணை விதிகளைத் திருத்துவதற்கு அவருக்குள்ள அதிகாரங்களுக்குத் தடை எதுமில்லை. ஆனால், தமிழ்நாடு 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 53/1961) 12-வது பிரிவின்கீழ், பதிவான ஒரு சங்கத்தின் செயல் பகுதியை மாற்றுவது அல்லது அச்சங்கம் ஆற்றுகிற பணிகளை மேம்பாடு செய்வது அல்லது மேற்சொன்ன விதிகளில் குறிப்பிடக் கூடிய வேறொரு காரியத்திற்காக மட்டுமே துணை விதிகளைத் திருத்தும்படி உத்தரவு இடுவதற்குப் பதிவாளருக்கு அதிகாரம் உண்டு. மேற்சொன்ன 53/1961 எண் தமிழ்நாட்டுச் சட்டத்தின் 12-வது பிரிவில் கண்டுள்ள விதித்துறைக்கிணங்க பதிவாளர் தாமாகவே துணை விதிகளைத் திருத்தும் அதிகாரங்களைக் கட்டுப் படுத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது. அவ்வண்ணமே, இம்மசோதாவின் 2-வது பகுதி மேற்சொன்ன சட்டத்தின் 38-வது பிரிவைத் திருத்த முற்படுகிறது.

இவை கூறி இப்பிரேரணையை ஏற்குமாறு பேரவையை வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன

---

[a] 1968 ஆகஸ்ட் 6-ம் தேதியிட்ட தமிழக சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[1968 ஆகஸ்ட் 26

நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு இவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, "இந்த மசோதா நிறைவேற்றப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (vii) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 25/1968).

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் (திருத்த) மசோதாவினை[a] ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்" என முன் மொழிகின்றேன்.

உள்ளூரில் உள்ள கோவில்கள் குறித்து எழும் சிக்கல்களில் நடவடிக்கை எடுப்பதற்காக அவ்வூர்களிலேயே நிறுவன அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காகவும் திறமை, சிக்கனம், திருந்திய முறைமை, விரைவுடைமை முதலியவற்றின் ஆக்கங் கருதியும் தமிழ்நாடு 1926-ம் ஆண்டு இந்து சமயக் கட்டளைகள் சட்டத்தின் கீழ், "கோயிற் குழுக்கள்" (தமிழ்நாடு சட்டம் 2/1927) நிறுவப்பட்டன. இந்து சமயக் கட்டளைகள் வாரியத்தின் மேற்பார்வையில் இவை இயங்கி வந்தன. இக்கோவிற் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவோ பிழைபட அவை இயங்கும்போது அவற்றைத் திருத்தவோ வாரியத்திற்கு அதிகாரமளிக்கிற திட்டவட்டமான விதித்துறைகள் எதுவும் அச்சட்டத்தில் இல்லை. ஊதியம் பெறாத மதிப்பியல் உறுப்பினர்களே "கோயிற்குழுக்களில்" இருந்தனர். இந்த கோயிற் குழுக்கள் சரிவர இயங்காததால் அவை கலைக்கப்பட்டு, மாவட்டங்களிலே வசதியான இடங்களில், உதவி ஆணையர்கள் நியமிக்கப்பட்டனர். தமது அதிகார வரம்பிற்குள் உள்ள கோயில்களை எளிதில் கண்காணிப்பதற்கேற்ற இடங்களில் இவ்வுதவி ஆணையர்கள் நியமிக்கப்பட்டனர். 1926-ம் ஆண்டு இந்து சமயக் கட்டளைகள் சட்டம் தமிழ்நாடு 1951-ஆம் ஆண்டு இந்து சமய—அறக் கட்டளைகள் சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 19/1951) ரத்து செய்யப்பட்டது. அச் சட்டத்தின்படி இந்து சமய—அறக்கட்டளைகள் (நிர்வாக) துறை, மாநிலப் பணியின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன்படி, வட்டாரக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அந்தந்த உதவி ஆணையர்கள் வட்டாரக் குழுவின் தலைவராக்கப்பட்டனர். தமிழ்நாடு 1951-ம் ஆண்டு 19-வது சட்டத்தை ரத்து செய்த தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தினும் (தமிழ்நாடு சட்டம் 22/1959) இவ்வட்டாரக் குழுக்கள் தொடர்ந்து நீடிக்கப்பட்டன. 1959-ம் ஆண்டு 22 வது சட்டத்தின்கீழ், சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளர் வட்டாரக் குழுவின் செயலாளராக்கப்பட்டுள்ளார். வட்டாரக் குழுவின் விவாதங்களில் பங்குகொள்ள அவருக்கு உரிமையுண்டு. ஆனால் குழுக் கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை அவருக்கு இல்லை.

வட்டாரக் குழுக்களின் பணி ஆறுதல் அளிப்பதாக இல்லை எனறும், அவற்றினால் பயன் எதுமில்லை எனறும் சொல்லப்படுகிறது. அரசாங்கம இதை உன்னிப்பாக ஆராய்ந்தது. வட்டாரக் குழுக்கள் எந்த நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டனவோ அவற்றை நிறைவேற்றத் தவறிவிட்டன என்று அரசாங்கம் கருதுகிறது. எனவே, வட்டாரக் குழுக்களை நீக்கி விட வேண்டும் என்றும், அவை தற்போது செலுத்தி வருகிற அதிகாரங்கள்

---

a 1968 ஆகஸ்ட் 6-ம தேதியிட்ட தமிழகச் சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1968 ஆகஸ்ட் 26] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

உதவி ஆணையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கிணங்க, மேற்படி சட்டத்தைத் தக்கவாறு திருத்தும் கருத்தும் உள்ளது. இச்சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்யவும் இத்தருணம் பயன்படுத்திக் கொள்ளப்படும். இம் மசோதாவின் முக்கிய விதித் துறைகளைச் சுருக்கமாக ஈண்டு குறிப்பிட நான் விழைகிறேன்.

தற்போதுள்ள 24 (1) பிரிவின்கீழ், ஒரு சமய நிறுவனத்திற்குள் அல்லது வழிபாட்டு இடம் முதலியவற்றிற்குள் நுழைய ஓர் அதிகாரிக்கு அதிகாரமளிக்க, துணை ஆணையாளருக்கோ அல்லது உதவி ஆணையாளருக்கோ அதிகாரம் கிடையாது. ஆணையாளருக்கும் வட்டாரக் குழு உறுப்பினர்களுக்குந்தான் அந்த அதிகாரம் உண்டு. இந்து சமய—அறக் கட்டளைகள் (ஆட்சி) துறையின் ஆளுகையின் கீழ் தற்போது 9,756 சமய நிறுவனங்கள் உள்ளன. ஒரு சமய நிறுவனத்தை உடனடியாகப் பார்வையிடுவது அவசியம் என்று கருதப்படும்போது, துணை ஆணையாளருக்கோ அல்லது உதவி ஆணையாளருக்கோ அந்தச் சமய நிறுவனத்தை உரிய காலத்தில் பார்வையிடுவது இயலாமற் போகலாம். எனவே, அவ்வாறு ஓர் அலுவலர் நுழைவதற்கு துணை ஆணையரும் உதவி ஆணையரும் ஆணை பிறப்பிக்கும் வகையில் அதிகாரமளிக்கக் கருதப்பட்டுள்ளது. இது குறித்து அவசியமான திருத்தங்கள் இம்மசோதாவின் 9-வது பகுதியில் அடங்கியுள்ளன.

26 (1) பிரிவு, அறங்காவலர்களின் தகவின்மைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. மாநில அல்லது மத்திய அரசாங்கங்களின அல்லது உள்ளாட்சி மன்றத்தின் பணியிலிருந்து தள்ளப்பட்ட அல்லது வேலையிலிருந்து அகற்றப்பட்டவர்கள் சமய நிறுவனங்களின் அறங்காவலர்களாக நியமிக்கப்படக்கூடாதென வகை செய்வதற்கான விதித்துறை ஒன்று இருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. இச் சட்டத்தின் 26 (1) பிரிவில் இம்மசோதாவின் 11-வது பகுதி ஏற்ற முறையில் திருத்தம் செய்கிறது.

47 (3) பிரிவின்படி, குலமுறையாக வராத அறங்காவலர் ஒருவரின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும். இப் பதவிக்காலம் மிக நீண்டதெனக் கருதப்படுகிறது. எனவே, கோவில் நிர்வாகத்தைச் சீரிய முறையில் மேம்படுத்த இந்த அறங்காவலரின் பதவிக் காலத்தை மூன்றாண்டுகளாக வரையறுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், தற்போதுள்ள அறங்காவலர்கள், அவர்களின் முழுப் பதவிக்காலமாக 5 ஆண்டுகளுக்கும் தொடர்ந்து நீடிப்பர். இது குறித்து, இம்மசோதாவின் 19-வது பகுதியில் அவசியமான திருத்தம் அடங்கியுள்ளது.

பரம்பரை அறங்காவலர் அல்லது அறங்காவலர்கள் இல்லாத சமய நிறுவனங்களைப் பொறுத்த வரையில் அறங்காவலர்களை நியமிப்பதற்கு ஆணையருக்குள்ள அதிகாரங்களைப் போன்றே தற்போதைய 49 (1) பிரிவு வட்டாரக் குழுவிற்கும் அதிகாரம் அளிக்கிறது. பரம்பரை அறங்காவலர் அல்லது அறங்காவலர்கள் உள்ள சமய நிறுவனங்களைப் பொறுத்த வரையில் 47 (2) பிரிவின்கீழ் ஆணையருக்குள்ள அதிகாரங்களுக்கு நிகராக வட்டாரக் குழுவிற்கு, பரம்பரையாக வராத அறங்காவலர்களை நியமிக்க அதிகாரம் இல்லை. தமிழ்நாடு 1951-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின்படி, பரம்பரை அறங்காவலர் அல்லது அறங்காவலர்களை உடைய நிறுவனங்களைப் பொறுத்தவரையில் கூட அறங்காவலர்களை நியமிக்கும் அதிகாரம் வட்டாரக் குழுவிற்கிருந்தது. இப்போது வட்டாரக் குழுக்களைக் கலைத்துவிடக் கருதியுள்ளதால், பரம்பரை அறங்காவலர் அல்லது அறங்காவலர்கள் உள்ள சமய நிறுவனங்களிலும், பரம்பரையல்லாத அறங்காவலர்களை நியமிப்பதற்கு, 47 (2) பிரிவின்கீழ் ஆணையருக்குள்ள அதே அதிகாரங்களை உதவி ஆணையரும் பெற்றிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. அவ்வண்ணமே 49-வது பிரிவைத் தக்கவாறு திருத்த வேண்டுமெனக் கருதப்படுகிறது. இம்மசோதாவின் 20-வது பகுதி இதற்கு வகை செய்கிறது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 ஆகஸ்ட் 26

53-வது பிரிவு அறங்காவலர்களைச் சிறிது காலம் பணியிலிருந்து தள்ளி வைப்பது, நீக்குவது அல்லது விலக்குவது பற்றிய அதிகாரத்தை விவரிக்கிறது. அறங்காவலர்கள், நன்கொடை, தணிக்கைக் கட்டணம் முதலியவற்றைச் செலுத்தத் தவறுவது காரணமாக, அவர்களிடமிருந்து வசூலிக்கவேண்டிய நிலுவைத் தொகைகள் பெருமளவில் உள்ளன. அத்தகைய நன்கொடைகளையும், தணிக்கைக் கட்டணங்களையும் நிலவரிப் பாக்கியைப் போலவே அறங்காவலர்களிடமிருந்து வசூலிப்பதற்கு 94-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. என்றாலும், நிர்வாகத்தை மேலும் திறமையாக நடத்தும் பொருட்டும் உரிய காலத்திற்குள் அத்தகைய நிலுவைத் தொகைகள் செலுத்தப்படுவதற்கு வசதியாயிருக்கும் முறையிலும் நன்கொடையையும் தணிக்கைக் கட்டணத்தையும் அறங்காவலர்கள் வேண்டுமென்று கட்டத் தவறுவதைக் காரணமாகக் கொண்டு அவர்களை வேலையிலிருந்து தள்ளி வைக்கவேண்டும், நீக்க வேண்டும் அல்லது விலக்க வேண்டும் என்று கருதியுள்ளது. மேற்சொன்ன சட்டத்தின் 53-வது பிரிவைத் தக்கவாறு திருத்துவதற்கு இம்மசோதாவின் 22-வது பகுதி வகை செய்கிறது.

இச்சட்டத்தின் விதித் துறைகளைச் செயலுக்கு கொண்டு வருவதில் ஏற்படும் இடையூறு எதையேனும் நீக்குவதற்கு அரசாங்கம் அச்சட்டத்தின் கீழ் ஆணைகள் பிறப்பிப்பதற்கான அதிகாரத்தை 122-வது பிரிவு வழங்குகிறது. மெஸர்ஸ் ஜலான் டிரேடிங் கம்பெனிக்கும் (Messrs. Jalan Trading Company) மில்மஜ்தூர் சபாவுக்கும் (Mill Mazdoor Sabha) (1967 இந்திய உச்ச நீதி மன்ற ஏடு 189) இடையே உள்ள வழக்கில் உச்ச நீதி மன்றம் "சட்டத்தின் விதித் துறைகளைத் திருத்தியமைப்பதன் வாயிலாக ஐயம் அல்லது இடையூறு அகற்றுவதற்கான அதிகாரம் சட்டமியற்றும் அதிகாரத்தைச் செலுத்துவதற்கொப்பாகும். இதனை நிர்வாக அதிகாரி ஒருவருக்குப் பிரித்துக் கொடுக்க இயலாது" என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. இதற்கிணங்க, 122-வது பிரிவை எடுத்து விடுவதெனக் கருதப்பட்டுள்ளது.

எல்லா வட்டாரக் குழுக்களும் கலைக்கப்பட வேண்டும்; இத் திருத்தச் சட்டம் செயலுக்கு வரத் தொடங்கும் நாள்முதல் வட்டாரக் குழுக்களின் உறுப்பினர்கள் பதவி இழப்பர் என்பதை இம்மசோதாவின் 36-வது பகுதி நன்கு தெளிவுபடுத்துகிறது.

இதுவரை இம் மசோதாவின் நோக்கங்களைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டேன். இம்மன்றத் தீர்மானத்தைப் பேரவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

* **திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட்டாரக் குழுக்களைக் கலைப்பதற்காகக் கொண்டுவந்த திருத்தம் வரவேற்கக் கூடியது. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களையுடையவர்களும், சாகுபடி செய்யாதவர்களும் இந்தக் குழுக்களில் இருந்துகொண்டு குழு அங்கத்தினர்களுடைய சொந்த நலத்திற்காக இருந்துவந்த காரணத்தினால் நிச்சயமாக அதைக் கலைப்பதற்கு அரசு ஏற்றுக்கொண்ட முடிவு வரவேற்கத் தக்கது. அந்த ஊழல் நிறைந்த இலாகாதான் இப்போது ஒழுங்குபடுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அதனுடைய அதிகாரங்கள் முழுவதையும் உதவிக் கமிஷனரிடம் அளிப்பதன் மூலம் இன்னும் ஏராளமான சிக்கல்களும், சிரமங்களும் ஏற்படும். அமைச்சர்களும் அரசும் இதைக் கவனிக்க வேண்டும். எந்த நோக்கத்திற்காகக் குழுவைக் கலைத்தோமோ அந்த நோக்கம் நிறைவேறும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு தனி அதிகாரியின் கீழ் அதிகாரங்கள் செயல்படும்பொழுது அதற்கு ஒரு 'செக்' இருக்க வேண்டும். அப்போதுதான் அதிகாரிகள் முறையாக, ஜனநாயக முறையில் செயல்பட முடியும். ஆகவே, அந்தக் கமிட்டி இருந்த இடத்திலே ஒரு அட்வைசரி கமிட்டியை நிறுவ வேண்டும். உதவிக் கமிஷனரின் எல்லைக்குள் இருக்கிற சட்டசபை அங்கத்தினர்கள் உட்பட ஒரு அட்வைசரி கமிட்டியை நிறுவ வேண்டும். அப்படி அட்வைசரி கமிட்டிகளை



1968 ஆகஸ்ட் 26] [திரு. கொ. இர. ஞானசம்பந்தன்]

ஏற்படுத்தினால் இதன் லட்சியம் சரியான முறையில் உபயோககரமாக அமையும் என்பதை என்னுடைய ஆலோசனையாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, டிரஸ்டிகளைப் பொறுத்த வரையில்,—மாயூரத்திலிருப்பவர்கள் திருநெல்வேலியில் டிரஸ்டிகளாக இருக்கிறார்கள்—ஆங்காங்குள்ளவர்களே டிரஸ்டிகளாக இருக்க வேண்டுமென்பதை அமல்படுத்த வேண்டும். இதன் காரணமாக இன்று அறநிலையப் பாதுகாப்பின்கீழ் இருக்கக்கூடிய சொத்துக்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்படும், ஜனநாயக ரீதியில் நிர்வகிக்கப்படும். இதுவும் மிக முக்கியமான அவசியமான நடவடிக்கையாகும். அரசாங்கத்தின் நோக்கமும் நிறைவேறும். ஆட்சி மாறிவிட்டது, ஆட்சியின் கொள்கை மாறிவிட்டது, அமைச்சர்களின் மனப்போக்கு மாறிவிட்டது, ஆனால் அதிகாரவர்க்கத்தின் அதிகாரவர்க்கத் தன்மை குறுக்கிடுகிறது என்பது கடந்த ஒன்றரை ஆண்டுக்கால அனுபவம். அட்வைசரி கமிட்டிகளை அமைக்க வேண்டும் என்ற என் யோசனையை அரசு ஏற்றுககொள்ள வேண்டும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சர்க்காருடைய திருத்த மசோதாவை நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். ஏரியா கமிட்டி என்று சொல்லும்போது அதனுடைய உள் விவகாரம் பலருக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். இந்தக் கமிட்டிகளின் காட்டு தர்பார்களையெல்லாம் அனுபவித்திருந்தால்தான் சர்க்கார் செய்திருக்கக்கூடிய சட்டங்களின் அருமை தெரியும். என்னுடைய பகுதியிலும் அவை இருக்கின்றன. இதனுடைய நாடகங்களையெல்லாம் அறிந்தவன் என்ற முறையில்தான் கூறுகிறேன். ஏரியா கமிட்டி தங்களுக்கு வேண்டியவர்களையும், தங்கள் சொற்படி நடப்பவர்களையும் அங்கத்தினர்களாக வைத்துக்கொண்டு காரியங்களைச் செய்து வருகிறார்கள். இவர்கள் சொல்வதுதான் சட்டம். ஆண்டவன் கூட இருக்கிறாரோ இல்லையோ, இவர்கள்தான் ஆண்டவனைப்போல் இருந்து வருகிறார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த அமைச்சர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இவர்கள் உயிரோடு இருக்கும் ஆண்டவர்கள் ஆவார்கள் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் நான் மாலை போடக் கூடத் தயாராக இருக்கிறேன். ஆனால் சட்டசபைக்குள் மாலை போட முடியாது.

அடுத்தபடியாக, நண்பர் சொன்னதுபோல, அதிகாரங்களை அமல் நடத்தும்போது சில சிரமங்கள் ஏற்படலாம். முன்பு தங்களுக்கு வேண்டியவர்களாகப் பார்த்து கமிட்டி போட்டுக்கொண்டார்கள். அவர்கள் உண்மைக்கு நேர் விரோதமாக இருந்தவர்கள். முன்பெல்லாம் அப்படி நடந்தது. அதிகாரிகளுக்கு வழி காட்டக்கூடிய முறையில் இந்தச் சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒன்று செய்திருக்கிறார்கள். டிரஸ்டிகளின் காலத்தை ஐந்தாண்டு இருக்கக் கூடாது என்பதாக மூன்றாண்டு என்று குறைத்திருக்கிறார்கள். இது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு நபர் மூன்று ஆண்டு காலம் தொடர்ந்து டிரஸ்டியாக இருந்தால் அடுத்த மூன்று ஆண்டு காலத்திற்கு அவர் இருக்கக் கூடாது. அப்புறம் வேண்டுமானால் வரலாம். இப்படி ஒரு பதவிக் காலம் இருந்தவர் தொடர்ந்து அடுத்த பதவிக் காலம் வராதிருக்க சட்டத்தைத் திருத்த வேண்டும். அப்போதுதான் தொடர்ந்து ஒருவரால் எந்தவிதமான தவறுதலையும் செய்ய முடியாது.

அதற்கடுத்தபடியாக, இதற்குச் சம்பந்தம் இல்லாதுபோனாலும் ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மத சம்பந்தமான நிறுவனங்களுக்கு கோடானுகோடி சொத்து இருக்கிறது. அதை எப்படியாவது இந்த நாட்டிற்குப் பயன்படக் கூடிய வழியில் செலவிட ஏதாவது செய்ய வேண்டும். அப்படிச் செய்வது ஒரு மகத்தான காரியமாக இருக்கும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. எம். முனுசாமி கௌண்டர் :** அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற திருத்த மசோதாவின் பேரில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இது ஒரு முக்கியமான பிரச்னை. எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து அறிந்தே காங்கிரஸ் அரசு எரியாக் கமிட்டிகளை நியமித்தது. முக்கியமாக ஜனநாயக ரீதியில் செயல்படுகிறபோது அதிகார வர்க்கத்தினிடத்தில் அதிகாரங்களைக் குவிய விடக் கூடாது என்றே செய்யப்பட்டது. அதிகாரிகளிடத்தில் எல்லா அதிகாரங்களையும் கொடுத்துவிட்டு ஜனங்களிடத்தில் எந்த விதமான பவரும் இல்லாமல் போய்விட்டால் எந்த நிலைமை இருக்கும் என்பதைப் பஞ்சாயத்தில் இருந்து அறிகிறோம் பஞ்சாயத்து சரியாக நடக்கவில்லை என்று பஞ்சாயத்தைக் கலைத்துவிட்டால் எந்த நிலை ஏற்படும் என்பதை யோசித்துப் பாருங்கள். இதையெல்லாம் வைத்தே எரியாக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. யோக்கியமாக உள்ளவர்களை, எந்த எந்தப் பகுதியில் உள்ளவர்களை எந்த எந்தப் பகுதியில் நியமிக்கலாம் என்று பார்த்தே போடப்பட்டது. அவர்கள் ஒன்றும் செய்துவிடுவதற்கில்லை. அங்கங்கே உள்ள இன்ஸ்பெக்டர்கள் சிபார்சுபடியே நடக்கிறது. ஒருவருடைய விண்ணப்பத்தைத் தள்ளுவது என்றால் கூட காரணம் காட்ட வேண்டும். அவர்கள் ஹைகோர்ட் வரை போவதையும் பார்க்கிறோம். பட்ஜெட் என்றால் கூட எரியாக் கமிட்டியினர் அதிகாரிகள் அமைத்ததை அப்படியேதான் ஏற்கிறார்கள். இருந்தாலும் அதிகாரிகள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாதிருப்பதற்கு இந்தக் கமிட்டிகள் ஓரளவு பயன்பட்டன. அதை எடுத்துவிடுகிறபோது அந்த இடத்தில் எப்படி அதிகாரிகளின் நடவடிக்கையை ஜனநாயக முறையில் கண்காணிப்பது என்பதையும் யோசிக்க வேண்டும். அடுத்து திரு நல்லசிவம் அவர்கள் சொன்னதுபோல 3 வருடத்திற்கு ஒரு முறை என்பதை வருடத்திற்கு ஒரு முறை என்றுகூட வைக்கலாம். புதிய புதிய அங்கத்தினர்கள் வருவதனால் பல நன்மைகள் ஏற்படக் கூடும். பலர் வேலைகளையும் தெரிந்துகொள்ள முடியும். தமிழகத்தில்தான் அதிகமான கோவில்கள் இருக்கின்றன. அவற்றை நல்ல முறையில் பரிபாலிப்பது நம் கடமை. ஆகவே, திரு நல்லசிவம் அவர்கள் சொன்னதுபோல் ஒரு நாண்-அபிஷியல் கமிட்டியாவது—சட்டசபை அங்கத்தினர்களைக்கொண்டோ அல்லது அமைச்சர் அவர்கள் எப்படித் தீர்மானிக்கிறார்களோ அப்படி அமைப்பதுதான் நன்றாக இருக்கும். இல்லையென்றால் கோவில் நிர்வாகங்கள் சீரழிந்துவிடும். லஞ்ச ஊழல்கள் அதிகமாகிவிடும். அப்படி விடக் கூடாது என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதா மீது பேசுகின்றபோது பொதுவாக இந்த மசோதாவை ஒத்துக்கொண்டாலும் காங்கிரஸ்காரர்களால் நியமிக்கப்பட்ட எரியாக் கமிட்டிகளை எடுத்துவிட்டாலும் அதற்குப் பதிலாக ஒரு அட்வைசரி கமிட்டியையாவது போட வேண்டும் என்றார்கள். ஆக, காங்கிரஸ் செய்ததைக் குறை சொல்ல வேண்டுமென்று சொல்லியிருந்தாலும்கூட அதிகாரம் ஓரிடத்தில் குவியக் கூடாது என்பதை ஒப்புக்கொண்டார்கள். அது மிக மிக அவசியம். அதற்கு உரிய வகையில் இந்த மசோதாவில் விதி முறைகளை வகுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு பதவிக் காலம் தர்மகர்த்தாவாக இருந்தவர்கள் அடுத்த பதவிக் காலத்திற்குத் தொடர்ந்து இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். இந்தக் கருத்தை வலியுறுத்துவது, சட்டமன்ற அங்கத்தினர்களும் கூட ஒரு முறை இருந்தால் அடுத்த முறை இருக்கக் கூடாது என்கிற நிலையை வலியுறுத்தும். இந்த மனப்போக்கு நல்லதல்ல. ஜனநாயக
மு.ப. 6-30 முறையில் நல்லவிதமாகப் பணியாற்ற வகை செய்ய வேண்டும். அதிகாரங்களை ஓரிடத்தில் குவியவிடக்கூடாது என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த திருத்தச் சட்ட மசோதாவை வரவேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் ஞானசம்பந்தம் அவர்களும், நல்லசிவன் அவர்களும், அரைகுறையாக வரவேற்று ராமமூர்த்தி அவர்களும் பேசியிருக்கிறார்கள். இதை வரவேற்க





லாமா வேண்டாமா என்ற எண்ணத்தோடு திரு முனுசாமி அவர்கள் ஓரளவுக்கு அவர்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மொத்தமாகப் பார்க்கிறபோது நல் ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குழு அமைக்கப்பட்ட பிறகு ஏற்பட்ட சூழ்நிலைகளைப் பார்க்கின்றபொழுது, ஏற்பட்ட அனுபவங்களை பார்க்கிறபொழுது சில பல திருத்தங்கள் கொண்டுவர வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த மன்றத்தின் வாயிலாக, சில பல அனுபவங்கள் மூலம் சில பல புதிய முறைகள் வகுத்துத் தர வேண்டியவர்களாக இருக்கிறோம். 1926-ஆம ஆண்டிலே இந்தச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தக் குழுவை வைத்துப் பார்த்தார்கள். அதன் காரணமாகப் பல்வேறு சங்கடங்கள் ஏற்பட்டன. அதற்குப் பிறகு துணை ஆணையரை அந்தக் குழுவிற்குத் தலைவராக வைத்தார்கள். அதற்குப் பிறகு தலைவராக இல்லாமல் செயலாளராக ஆக்கிவிட்டு, அவர் கூட்டத்திலே கலந்துகொள்ளக்கூடிய உரிமையை அவருக்குத் தந்துவிட்டு, வாக்களிக்கக்கூடிய உரிமையைத் தராமல் இருந்தார்கள். 1926-ஆம் ஆண்டுச் சட்டத்திலிருந்து 1959-ஆம் ஆண்டுச் சட்டம் வரை பார்த்தால், சட்டம் இயற்றப்பட்ட நோக்கத்திற்காக எதுவும் நடைமுறையில் இல்லாதது தெரியவந்து அதன் காரணமாக அதை ஆராய வேண்டியிருக்கிறது. நானும் எரியா கமிட்டியினுடைய நடவடிக்கைகளை எல்லாம் பார்க்கிறபொழுது எப்பொழுது எப்பொழுது கூடியிருக்கிறார்கள், என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தாலும் கூட, டிரஸ்டிகள் நியமிப்பதற்குத்தான் போட்டி போட்டுக்கொண்டு முயற்சி செய்துவிட்டு டிரஸ்டிகள் போட்ட பிறகு எழுந்து போகின்ற அளவுக்கு நிலைமையும் பிறகு கூடாத நிலைமையும்தான் இருக்கிறது. இதிலே பல்வேறு பணிகள் கொடுக்கப்பட்டன. அதிலே ஒரு பணிதான் டிரஸ்டிகள் நியமிக்கின்ற பணி. அந்த ஒரு பணியை மட்டும் கவனித்துக்கொண்டும் அதற்காக சண்டை போட்டுக்கொண்டும் இருந்திருக்கிறதேயொழிய மற்றப் பணிகளைச் கவனிக்கவில்லை. ஆந்திராவிலே இந்து அறநிலைய இலாகாவினர் எரியாக் கமிட்டியை எடுத்துவிட்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக எடுத்துவிட்டு, அந்த அதிகாரத்தை இந்த வகையிலே தந்திருக்கிறார்கள். அவர்கள் சொன்னபடி உத்தியோகப்பற்றற்றவர்களைப் போட்டால் பதவியை துஷ்பிரயோகம் செய்வார்கள் என்றோ அல்லது நம்பிக்கை இல்லையென்றோ அல்ல. இங்கேயும் தமிழகத்திலே மூன்றே முக்கால் கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் பிரதிநிதிகளாக 234 பேர்களை அவர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே நாமும் அவநம்பிக்கை கொண்டால் நம்மை நாமே அவநம்பிக்கை கொள்வதாகத்தான் முடியும். ஆனால் செயல் முறையிலே பல கோளாறுகள் இருக்கின்றதன் காரணமாக இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. அதிலே தலையிட்டு வட்டாரக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், அப்படி முடிவதில்லை. தகுதியற்ற நிலைமைக்குக் காரணமான குற்றங்களைச் செய்வார்களானால் ஆணையர் மூலமாக இந்தச் சட்டத்தின்படி அவரை நீக்கலாம் என்ற அளவுக்குத்தான் இருக்கிறோமே தவிர பணத்தை வாங்கவோ அவர்கள் எடுத்துள்ள சொத்துக்களையெல்லாம் கையகப்படுத்தவோ இடம் இல்லை. இந்தக் குழுவை மாற்றியமைக்க வேண்டுமென்பதற்குக் காரணம் செம்மைப்படுத்துவதற்காகத்தான். அதிகாரிகளிடம் அதிகாரத்தைக் கொடுத்தால் அதிகாரிகள் வரம்பு மீறிப் போவார்கள் என்பதும் அல்ல. இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் உள்ள வருமானம் உள்ள கோயில்களில் துணை ஆணையர் மூலமாக ஆணையர்தான் கவனிக்கிறார். 3 லட்சம், 8 லட்சம், 30 லட்சம், 40 லட்சம் என்ற அளவுக்கு வருமானம் வரக்கூடிய பெரிய பெரிய கோயில்கள், திருச்செந்தூர், மதுரை, பழனி, அழகர்கோவில், இவையெல்லாம் வட்டாரக் குழு என்ற ஒன்று நியமிக்கப்படாமல் முறைப்படுத்தப்பட்டு ஆணையர் மூலமாக நடைபெற்று வருகின்றன. தர்மகர்த்தாவாக இருப்பவர்களுக்கும் கோயில் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து இருக்கிறவர்களுக்கும் சொந்தம் இருக்கக் கூடாது, தர்மகர்த்தாவின் சொந்தக்காரர்கள் அல்லது வேண்டியவர்கள் பணியாளர்களாக இருக்கக் கூடாது. பெரிய கோயில்களைப் பொறுத்த வரையில் துணை ஆணையர் அனுப்பி ஆணையர் அவர்களை நியமிக்கிறார். வட்டாரக் குழுவிற்குப் பதிலாக 20 ஆயிரம்

ரூபாய் வருமானத்திற்குக் குறைந்த கோயில்களிலும் துணை ஆணையரே அவர்களை நியமித்துக்கொள்ளலாம் என்று செய்கிறோம். இதிலே தவறு இருக்குமானால் ஆணையருக்கு அதைப் பற்றி விண்ணப்பித்துக்கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. அவற்றை இந்த அரசாங்கத்தின் மூலமும் முறைப்படி இலாகாவின் மூலமும் தெரிவிப்பதற்கு இடம் இருக்கிறது. அதன் மூலம், திரு நல்லசிவன் அவர்கள் கூறியபடி, சட்டமன்ற உறுப்பினர்கள் தவறுகளை எழுப்பவும் அமைச்சரிடத்திலே சொல்லவும், யாராவது தவறு செய்வார்களானால் மற்ற கோயில்களைப் போன்று இவற்றிலும் நடவடிக்கை எடுக்க வழிவகை தேடப்படுகிறது. ஆந்திராவிலும் அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்து அங்கேயும் அந்தக் குழுவை எடுத்து செம்மைப் படுத்தியிருக்கிறார்கள். அதே போன்று இங்கேயும் செம்மைப்படுத்தக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய முறையிலும், சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைப்பற்றியெல்லாம் இங்கே விவாதிக்கின்ற முறையிலும் அமைச்சருடைய கவனத்திற்கு அவ்வப்பொழுது அவர்கள் கொண்டுவருவதற்கும் வாய்ப்பாக இருக்கும். திரு ஞானசம்பந்தம் அவர்கள் வட்டாரக் குழுவிற்குப் பதிலாக ஆலோசனைக் குழுவாக இருக்கலாம் என்று சொன்னார்கள். மாநில அளவிலே இருக்கலாம் என்றும் அங்கங்கே உள்ள உறுப்பினர்கள் அதிலே உறுப்பினர்களாக இருக்கலாம் என்றும் சொன்னார்கள். வட்டாரக் குழுதான் ஸ்டாச்சுடரி கமிட்டியாக உரிமைகளோடு இருந்தது, மற்றக் குழுக்களுக்கு இப்படிப்பட்ட அதிகாரங்கள் இல்லை, இந்தக் குழுவிற்குத்தான் அதிகாரங்கள் இருந்தன. அதன் காரணத்தால் தலையிட முடியாத நிலைமை இருந்தது. அதனால் ஏற்பட்ட சிக்கலைத்தான் இப்பொழுது நீக்க முயல்கிறோம். மாநில அளவிலே ஒரு குழு இருப்பதற்குப் பதிலாக அந்தந்த மாவட்டங்களிலே அங்கங்கே உள்ள நிலைமைகளைத் தெரிந்தவர்கள் அறிந்தவர்கள் இவர்கள் இருந்து ஒரு குழு அமைத்து அவ்வப்பொழுது கூடி ஒரு தீர்மானம் நிறைவேற்றி மாநிலக் குழுவிற்கு அனுப்பலாம், அதற்குப் பிறகு அந்தக் குழு முடிவெடுக்கலாம். அதிலே சட்டமன்ற அங்கத்தினர்கள் உறுப்பினர்களாக இருந்தால் அவர்கள் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவும், செம்மைப்படுத்தவும் முறைப்படி ஆலோசனைகள் கூறவும் வாய்ப்பு இருக்கும். ஆண்டு ஒன்றுக்கு 2 மணி நேரம் கூடி முடிவெடுப்பதன் மூலம் 9 ஆயிரத்து சில்லறை மாநில அளவிலே உள்ள விஷயங்களை தீர்த்துவிட முடியாது. ஆகவே மாவட்ட அளவிலே குழு ஏற்படுத்தலாம். குழு ஏற்படுத்தலாம் என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், மாநில அளவோடு இல்லாமல் மாவட்ட அளவிலேயும் இருந்தால்தான் அவ்வப்பொழுது ஏற்படுகின்ற சங்கடங்களை அறிந்து பொதுமக்களின் கருத்தையறிந்து நடவடிக்கை மேற்கொள்ளுகின்ற வாய்ப்பு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கும். ஆகவே ஆலோசனைக் குழு அதைப் பற்றிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லசிவம் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஏராளமான சொத்துக்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று. அவற்றையெல்லாம் நாட்டு மக்களுக்குப் பயன்படுத்துவதற்கு வழிவகைகள் செய்யலாம். அன்புப் பணி, அறப் பணி, அறிவுப் பணி, அருட்பணி ஆகிய எல்லாப் பணிகளுமே ஆண்டவனுக்கே செய்கின்ற பணிகள்தான் என்றும், அன்பும், சிவமும் இரண்டும் என்பார் அறியாதார், அன்பும், சிவமும் ஒன்று என்பதை யாரும் அறிகிலார் என்று சொல்லி வைத்திருக்கிறார்கள்.

'அன்பே சிவம்', 'அறிவே தெய்வம்' என்றெல்லாம் சொல்லி வைத்திருக்கிறார்கள். அன்புப் பணி, அறப் பணி நடைபெறுவதெல்லாம் ஆண்டவனுக்குச் செய்கிற பணியாக—நாமல்ல, பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணிக்காகத்தான் ஏராளமான நஞ்சை நிலங்கள், புஞ்சை நிலங்கள், சத்திரங்கள், சாவடிகள், மண்டபங்கள், பலவற்றைக் கட்டி வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பொருள்களையும், மற்றவற்றையும் கொண்டு திக்கற்றவர்கள், கண்ணற்றவர்கள், கை காலற்றவர்கள், வயிறு மட்டுமே கொண்டு மற்றப்படி கை, கால்கள் இல்லாமலோ, கண் இல்லாமலோ, காது இல்லாமலோ இருக்கின்றவர்களுக்கு மூன்று வேளை சோறு தேவை என்ற நிலையில் இருக்கின்றவர்களுக்கு உதவி புரிய வேண்டுமென்ற முறையிலேதான் இந்த அறப் பணிகளை எல்லாம் செய்து வைத்திருக்கிறார்



கள். இவை எல்லாம் தடியர்கள் சாப்பிடுவதற்காக ஏற்பட்டவை அல்ல. நோக்கம் நிறைவேற முடியாத வகையில் காரியங்கள் நடப்பதையும் பார்த்திருக்கிறேன். இருக்கிற பெரிய வடையை 32 பேர் இருந்தால் அத்தனை பங்காக ஆக்கிக் கொடுப்பது, நான்கு பேர் இருந்தால் நான்கு பேர் பிட்டு எடுத்துக்கொள்வது, 6 பேர் இருந்தால் அந்த ஆறு பேர் எடுத்துக் கொள்வது என்ற நிலையில் நோக்கங்கள் இருந்தன. இப்படிப் பிடுகிறார்களே என்று கூறக்கூடிய அளவு குறைபாடுகள் இருந்தாலும் கூட, நல்ல நோக்கங்களும் இருக்கின்றன. பல கோயில்களிலே பெரும்பாலான சொத்துக்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட சொத்துக்கள்கூட ஒரு சிலரால் கையகப்படுத்தப்பட்டு அனுபவித்துக்கொண்டு வருகின்ற நிலை இருக்கிறது. திரு நல்லசிவம் அவர்கள் கூட அந்த அடிப்படையிலே திருத்தம் செய்யப்பட வேண்டுமென்று கூறினார்கள். அந்தந்த கோயிலிலிருந்து வருகின்ற வருமானத்தை அந்தந்தக் கோயில்களுக்கு நியாயப்படி, சாஸ்திரப்படி, சம்பிரதாயப்படி, அறக் கட்டளைகளின்படி செலவழிக்க வேண்டியவற்றை எல்லாம் செலவழித்தது போக, கோயிலைச் செப்பனிடுவதற்காகவும் மற்றவற்றுக்குமாக செலவழித்தது போக மிச்சப்படுகிற தொகையை பொது நிதிக்குக் கொண்டுவந்து கொண்டுவந்த பணத்தைக் குறிப்பிட்ட சில வகைகளுக்குச் செலவு செய்வதற்குத் துணை ஆணையருக்கு அதிகாரம் கொடுக்கும் திருத்தச் சட்டத்தை முன்பு கொண்டுவந்தேன். அதை இந்த மன்றம் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு நிறைவேற்றித் தந்திருக்கிறது. அந்த வகையில் அறநிலையப் பணிகள், மருத்துவப் பணிகள், கல்விப் பணிகள் செய்ய வாய்ப்பு இருக்கிறது. தற்போது கோயில்களுடைய சொத்துக்களை பல தனிப்பட்டவர்கள் கையகப்படுத்திக்கொண்டிருக்கின்ற நிலைமைகளும் நாட்டில் இருக்கின்றன. இராமலிங்க அடிகள் தேடி வைத்த சொத்தையே சில பேர் தனியாகப் பிடுங்கி வைத்துக்கொண்டு தங்களுக்கு உரிமையானதாக வைத்துக்கொண்டிருப்பதை நான்வடலூர் சென்றிருந்தபோது பார்த்தேன். கிட்டத்தட்ட 48 ஏக்கா நிலத்தைத் திருடி தங்களுக்குச் சொந்தம் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இராமலிங்க அடிகள் சொத்தையே இப்படித் திருடி வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் முறைப்படி பொது நன்மைக்குப் பயன்படுத்த வேண்டும். கோயில்களில் ஆண்டவன் பெயரால் பணிகள் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்ற முறையில் இயக்குநருக்கு தக்க அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் ஆங்காங்கு இருக்கிற … தக்கவாறு தஞ்சை மாவட்டம், மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், என்று அந்தந்த மாவட்டங்களின் நிலைமைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு வசதி ஏற்படும். ஆகவே, அந்தக் கருத்தை நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருவர் ஐந்தாண்டுவரை இருக்கலாம் என்பதை மூன்றாண்டு என்று மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் நல்லசிவம் அவர்கள் கூறினார்கள். தகராறு பிடித்தவர்கள், முறைகேடாக நடப்ப…ர்கள், இருப்பார்களேயானால், அவர்களை நீக்காமல் நிறுத்திவிடுவதற்கு வகை இருக்கிறது. சில ஊர்களில் நல்லவர்கள் நல்ல முறையில் பணி செய்யக் கூடியவர்கள் தொடர்ந்து பத்துப் பதினைந்… தொடர்ந்து நல்ல முறையிலே பணி செய்யக்கூடியவர்… இருப்பார்கள். நாம் மூன்றாண்டு என்று செய்தால் அப்படிப்பட்ட நல்லவர்கள் இருக்க முடியாத நிலை ஏற்பட்டு விடலாம். இருக்கின்றவர்களால் ஏதேனும் நெருக்கடி ஏற்பட்டால், அவர்களை அப்புறப்படுத்துவதற்கு வழிவகைகள் இருக்கின்றன.

நண்பர் ஞானசம்பந்தம் அவர்கள் மேலும் சில தகவின்மைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் இந்தத் திருத்தச் சட்டத்தின் கீழே வராது. திருத்தச் சட்டத்தைப் பற்றிக் குறிப்பாகத் திருத்தம் தராலாமே தவிர, பொதுவான விஷயங்களைப் பற்றி இதிலே திருத்தம் தர முடியாது. அடிப்படைச் சட்டத்திற்கு இப்போது திருத்தங்களைக் கொண்டுவர முடியாது. அவர் சொன்ன கருத்துக்களை வைத்து என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவை எல்லாம் எடுத்துக்கொள்ளப்படும். இந்த வகையில் பல கருத்துக்களைச்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 ஆகஸ்ட் 26

சொல்லி ஆதரவு தந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து இந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1968-ம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 20/1968) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்ற பட்டன.

**திரு. கோ. இர. ஞானசம்பந்தன் :** அமைச்சர் அவர்கள் நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்களின் கருத்தை எற்றுக்கொண்டு கன்சல் டேட்டிவ் கமிட்டி ஏற்படுத்த வாக்குறுதி அளித்திருக்கின்ற காரணத்தால் நான் என்னுடைய திருத்தங்களை முன்மொழியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசம்பந்தன் அவர்கள் கொடுத்துள்ள திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படும்.

22-வது பிரிவுக்குத் திருத்தம் கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லாததால் அது அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டதாகக் கருதப்படும்.

பிரிவுகள் 5 முதல் 36 வரை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே தமிழ் நாடு 1968-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 20/1968) நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### 3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (iii) மின்சார வாரியம் வாங்கக்கூடிய அதிக அளவு கடன் நிச்சயப்படுத்தப்படுதல்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1948-ம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 54/1948) 65-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் அரசினர் மேற்படி பிரிவின் (i) உட்பிரிவின் கீழ் தமிழக மின்சார வாரியம் யாதொரு சமயத்தில் வாங்கக்கூடிய அதிக அளவுக் கடன் ரூபாய் ஐம்பத்தைந்து கோடியாகும் என்று தமிழ்நாடு அரசு நிச்சயிக்க உத்தேசித்திருப்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, இப்போது உச்ச அளவு 40 கோடி என்று இருக் கிறது. அடுத்து வரக்கூடிய ஆண்டுகளில் மின்சார வாரியத்திற்காகப் பல் வேறு கடன்களை எழுப்ப வேண்டியிருப்பதால் 55 கோடி அளவுக்கு உச்ச அளவை உயர்த்தி வாங்க வேண்டிய கடனை வாங்கி மின்சாரப் பணிகளை ஆற்றப் பயன்படும் என்ற காரணத்தால் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1968 ஆகஸ்ட் 26]

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை வரவேற்றுப் பேசுகின்ற நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அளவு சென்ற ஆண்டு 30 கோடியாக இருந்த அளவு 40 கோடி. அளவுக்கு உயர்ந்து, அந்த அளவுக்குக் கடன் பெறும் வகையில் திருத்தம் செய்தோம். மறுபடியும் இப்போது 40 கோடி ஆக இருக்கின்ற அளவை 55 கோடியாக உயர்த்த வேண்டுமென்ற அளவிலே கோரிக்கை வந்திருக் கிறது. கடன் வாங்குவது கேவலம் என்றும், எற்கனவே இருந்த சர்க்கார் கடன்கார சர்க்காராக இருந்தது என்றும் இவர்கள் சொல்லிக்கொண்டிருந் தார்கள். இவர்கள் அரசுப் பொறுப்பை ஏற்ற பிறகு கடன் வாங்குவது எவ்வளவு அவசியம், தேவை என்பதையும், அதன் மூலம் செய்யப்படு கின்ற பணிகளின் காரணமாக நாட்டில் முன்னேற்றம் ஏற்படுகிறது என் பதையும் அவர்கள் உணர்ந்துகொள்ளுகின்ற அளவுக்கு இந்த ஆண்டு இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது.

அந்த அளவில் இந்தக் கடன்கள் மின்சார வாரியத்திற்கு கேட்கப்படு கின்றன. மிகச் சிறப்பாக இயங்குகிற மின்சாரவாரியத்திற்குத் தரப்படுகிற இந்த உச்சவரம்பு நல்லமுறையில் பயன் படுத்தப்பட்டு மின்சார வாரியம் இப்போது செய்துகொண்டிருக்கிற பணிகளோடு தனக்குத் தேவையான மற்றப் பொருள்களை, பல்ப் போன்றவைகளை உற்பத்தி செய்வதற்கும் இந்த பணத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### (iv) தமிழ்நாடு 1952-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (பயணிகள்—சரக்கு கள் மீது வரி விதித்தல்) சட்டத்தின் விவர அட்டவணையைத் திருத்த வரைவு விதிகள்.

The HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

The following draft of a rule proposed to be made by the Governor of Madras under sub-section (2) of section 4 of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 (Madras Act XVI of 1952), amending the Schedule to the said Act, be approved.

*Draft Rule.*

In the Schedule to the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods), Act, 1952, after sub-rule (3) of rule 1, the following sub-rule shall be added, namely :—

(4) The composition f e payble under section 4 in respect of transport vehicles which are normally kept in Kerala State and permitted to ply in Madras State under Short Term Licences issued under the arrangements between the two States, shall be as follows :—

| *Class of vehicles.* (1) | *For a period not exceeding Seven days.* (2) | *For a period exceeding seven days but not exceeding ten days.* (3) |
|---|---|---|
| | RS. P. | RS. P. |
| 1 Stage Carriages used as contract carriages. | 2 80 per seat. | 8 40 per seat. |
| 2 Goods vehicles or public carriers. | 12 50 per vehicle. | 37 50 per vehicle. |

**திரு. பி. எம். முனுசாமி கௌண்டர் :** கேரளத்திலிருந்து சென்னைக்கு வருவதற்கு மட்டுமின்றி மற்ற மாகாணங்களுக்குப் போவதற்கும் தொடர்ந்தாற்போல் இந்தச்சட்டத்தில் கொண்டுவந்திருந்தால் நன்றாகயிருந்திருக்கும் பக்கத்தில் ஆந்திரா, மைசூர், கேரளா ஆகிய மாகாணங்கள் இருக்கின்றன. இது கேரளாவிற்கு மட்டும் பொருந்துவதாக இருக்கிறது, லாரி, ஸ்டேஜ் காரியேஜுலக்கு. மற்ற மாகாணங்களுக்கும் சேர்ததுத் தொடர்ந்தாற்போல் கொண்டுவந்திருந்தால் மிகவும் நன்றாகயிருந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** இது ஒவ்வொரு மாநிலத்திற்கும் இடையே ஏற்படக்கூடிய பிரச்னை. அப்போதைக்கப்போது அந்தந்த மாநிலங்களுக்கிடையே பேச்சு வார்த்தை நடத்தி இது போன்ற விதிகள் பிறப்பிக்கிறோம். மற்ற மாநிலங்களோடு சில பிரச்னைகள் இப்படித் தீர்க்கப்பட்டிருக்கின்றன. எப்போது தேவைப்படுகிறதோ அப்போது பரிசீலிக்கப்படும்.

*தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

The HON. THIRU S. MADHAVAN: Sir, I move—"The following draft of an amendment to the rules in Schedule V to the Madras City Municipal Corporation Act, 1919 (Madras Act IV of 1919), proposed to be made with effect on and from the 1st July 1966, by the Governor of Madras under sub-section (3) of section 347 of the said Act be approved.

*Draft.*

In exercise of the powers conferred by sub-section (3) of section 347 of the Madras City Municipal Corporation Act, 1919 (Madras Act IV of 1919), the Governor of Madras hereby makes with effect on and from the 1st July 1966, the following rule altering Schedule V to the said Act.

*Rule.*

In Schedule V to the Madras City Municipal Corporation Act, 1919 (Madras Act IV of 1919) after rule 5, the following rules shall be inserted, namely :—

" 5-A. Expenditure on the payment of the election expenses including the cost of the preparation and revision of the electoral rolls, the conduct of elections to the Corporation Council and the maintenance of the election establishment is obligatory subject to special directions that the State Government may issue, by notification.

*Explanation.*—The cost of maintenance of the election establishment shall include the pay, leave allowances and pension, if any, of the officers and servants of the Government or of any other authority employed in the preparation and revision of the electoral roll and in the conduct of the elections.

5-B. The State Government shall determine every year the amount of the election expenses referred to in rule 5-A and their determination shall be final and binding on the Corporation Coun-



cil. Such amount shall have priority over all other charges except charges for the service of authorized loans and the expenses specified in sub-section (1) of section 43. "

*தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சிகள் இந்தளவில் முடிவுற்றுப் பேரவை 28-8-1968 காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*

### 9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders. பிற்பகல் 0 55

180. Notification issued with G.O. Ms. No. 1650, Agriculture dated the 18th May 1968, in regard to the cancellation of certain notifications specified in the schedule of the notification. (*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).

181. Notification issued with G.O. Ms. No. 235, Home, dated the 31st January 1968, in regard to exemption from payment of motor vehicles tax to all the transport vehicles belonging to the Government of Andhra Pradesh plying in Madras. (*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act* III *of* 1931).

182. Notification issued with Roc. No. 29432/67-F6, dated the 20th March 1967, in regard to extension of certain provisions of the Madras District Municipalities Act, 1920, relating to building regulations to Vellalore Town Panchayat of Coimbatore district. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

### B. Reports, notifications and other papers.

*57. The Third Report (Fourth Assembly) of the Committee on Government Assurances.

* Laid on the table of the House on the 4th August 1968

APPENDIX.

[*Vide* footnote on page 262.]

NOTIFICATION.

In exercise of the powers conferred by section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), the Governor of Madras hereby makes the following amendments to the rules published with Food and Agriculture Department Notification No. 51, dated the 26th December 1950 at pages 575-583 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 26th December 1950.

AMENDMENTS.

In the said rules—

1. in rule 3, for the heading and sub-rule (i), the following heading and sub-rule shall be substituted, namely :—

3. *Annual Licence—Licence for import of cotton for manufacture, export or sale to manufacturing concerns*:

(i) Annual General Licence shall be issued in Form B hereto annexed and subject to the conditions stated therein for import by rail, road, river or sea :

(*a*) of cotton to manufacturers for manufacture in the mill or mills situated within the protected areas and for exporters carrying on business within the protected area for export to any port or ports in or outside India provided, such port or ports are not in a protected area ; and

(*b*) of full pressed cotton bales to merchants carrying on business within the protected area for sale to manufacturing concerns.

2. for rule 10, the following rule shall be substituted, namely :—

10. (i) The Licensing Authority may insist on the inspection of any consignment of cotton by an Officer of the Agricultural Department either before grant of the licence for the import of the consignment into the protected area or after the consignment reaches the destination except in respect of fully pressed cotton bales imported by manufacturing mills who shall, however, make available for inspection by an Officer of the Agricultural Department, all records and accounts of utilisation of the imported goodst by the concerned mills.

(ii) The fee for the grant of licence for such imported Cotton shall be levied on the following scale :—

| *Licence for* | *Fees prescribed.* |
|---|---|
| (*a*) Seed Cotton (Kapas) .. .. | 10 paise per 35 kg. |
| (*b*) Lint (loose or pressed) .. .. | 25 paise per 40 kg. |
| (*c*) Cotton seed .. .. | 10 paise per 35 kg. |
| (*d*) Cotton waste .. .. | 25 paise per 40 kg. |
| (*e*) Annual General Licence issued to Cotton Spinning and Weaving Mills for importing full pressed bales for use in the mills to merchants for importing full pressed bales for sale to manufacturing concerns and to Cotton Seed Oil Mills for importing cotton seed for crushing; | Rs. 300 per licence. |



Provided, that the levy of the above fees for the grant of licence shall be subject to a minimum of Rs. 50 in respect of each lot imported in each licence provided further that the manufacturing mill which has taken an annual general licence shall be exempt from any further levy of fee :

Provided also that the other Government Departments of the Madras State Madras Government institutions and Madras State Khadi and Village Industries Board shall be exempted from paying the licence fee under this rule.

3. after rule 10, as so renumbered, the following rule shall be added, namely :—

(11) *Penalty*.—Any contravention of these rules or of the conditions of any licence granted hereunder, not otherwise punishable under the said Act, shall be punishable on conviction by a Magistrate with fine which may extend to ten thousand rupees

FORMS 'B' & 'C'.

4. in the Annexure for Forms A and B, the following forms shall be substituted, namely :—

FORM B.

*Annual General Licence.*

[*See* rule 3 (i).]

*No.* [1] *of* 19

Under the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), Licence is hereby granted authorising.................. ......................[2] .................. to import by rail road, river or sea bales/quintals of...............[3].......... ............ to ...............[4]........................ in the protected area knwon as................[5]............ for the purpose of manufacture/sale to manufacturing concerns, export to any port or ports in or outside India, provided it or they

is or are not in a protected area, from the 1st day of February 19 to 31st day of January 19 , subject to the following conditions :—

(*a*) In the case of consignment to be despatched by rail, a certified copy of the Licence should be tendered with each consignment at the despatching station and should accompany the railway invoice to the station of delivery and should be then forwarded to the Railway Authority concerned to the Railway, Audit Office for being forwarded to the Director, Regional Office Cotton Development, Ballard Estate, Bombay-1;

(*b*) In the case of consignment to be despatched by road river or sea, a certified copy of the licence should be tendered with each consignment and should be delivered to the Officer in charge of...... ..............................[6]............ ........................... on arrival of the consignment for being forwarded to the Director, Regional Office, Cotton Development, Ballard Estate, Bombay-1 ;

(*c*) Cotton imported under this Licence shall not be used except for the purpose stated above, save under instructions from the Licensing Authority ; and

(*d*) The licensee shall maintain an account of the bales of cotton imported and sold under this licence and shall on demand, show the bales and accounts for inspection to the Director of Agriculture or an Officer subordinate to him.

(Signed)

Dated : Licensing Authority.

*Instructions.*

1 Here enter the Licence number

2 Here insert the name of the person or the concern

3 Here enter kapas, ginned cotton cotton seed, cotton waste or full pressed cotton bales for which Licence is granted

4 Here insert the place of destination

5 Here enter the name of the notified area

6 Here enter the name of the Police Station

FORM C.

*Certified copy of the Annual GeneralLicence.*

[*See* rule 3 (i).]

Licence No. 19 Copy No.

Under the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), Licence is hereby granted authorising................ .................... to import by rail, road, river or sea bales/



quintals of...........................to..................in the protected area known as.................................. for the purpose of manufacture/..........................sale to manufacturing concerns export to any port or ports in or outside India provided it or they is or are not in a protected area from the 1st day of February 19 to 31st day of January 19 .. subject to the following conditions :—

(*a*) In the case of consignment to be depatched by rail, a certified copy of the Licence should be tendered with each consignment at the despatching station and should accompany the railway invoice to the station of delivery and should be then forwarded to the Railway Authority concerned to the Railway Audit Office for being forwarded to the Director, Regional Office, Cotton Development, Ballard Estate, Bombay-1 ;

(*b*) In the case of consignment to be despatched by road, river or sea, a certified copy of the Licence should be tendered with each consignment and should be delivered to the Officer in-charge of the..........................................on arrival of the consignment for being forwarded to the Director, Regional Office, Cotton Development Ballard Estate, Bombay-1;

(*c*) Cotton imported under this Licence shall not be used except for the purpose stated above, save under instructions from the Licensing Authority ; and

(*d*) The licensee shall maintain an account of the bales of cotton imported and sold under this licence and shall on demand, show the bales and accounts for inspection to the Director of Agriculture or an Officer subordinate to him.

(Signed)

Dated : Licensing Authority.

Certified that the above is true copy of the original licence.

(Signed)

Licensing Authority.

Licence No.

Name of the consignor

No. of bales.

Description of cotton.

Dated : Signature of the consignor.

Signature of the Station Master or of the Officer in-charge of at............

# தமிழக சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1968 ஆகஸ்ட் 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**1. வினாக்கள்-விடைகள்.**

**வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** 155, 156, 157, 158 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Silk filatures.*

* 159 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state--

(*a*) whether this Government is receiving any Central Government subsidies to cover the continued loss in the working of silk filatures ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) and (இ) தமிழகத்தில் பட்டு இழை சுற்றும் தொழிற்சாலை எதுவும் இல்லை. எனவே இவ்வினா எழவில்லை.

THIRU K. VINAYAKAM : Is it a fact that we are continuously incurring loss in running these silk filature industries ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட தொழிற்சாலையே தமிழகத்தில் இல்லை.

*Functional Industrial Estate at Adyar*

* 160 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(*a*) whether the Government propose to set up a Functional Industrial Estate for Instrument Industry at Adyar, Madras and

(*b*) if so, the cost of the scheme ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம், ஐயா.

(இ) இந்தத் திட்டத்தின் மதிப்பீடு மூலதனச் செலவு ரூ. 15·06 இலட்சமும் நடைமுறைச் செலவு ரூ. 1·847 இலட்சமும் ஆகும்.

THIRU K. VINAYAKAM : Is the State Government getting any aid from the Centre in running this institution, Sir ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தத் தொழிற்பேட்டை நடத்துவதில் இந்திய சர்க்காருடைய உதவி எதுவும் இல்லை. மாநில சர்க்கார்தான் நடத்துகிறது. வணிகம் செய்வதற்

கான கருவிகள், இன்றியமையாத் தேவையாகவுள்ள ஸொஃபிஸ்டிகேடெட் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் என்ற வகையில் உள்ளவை பற்ருக்குறையாக இருப்பதால், அவற்றை உற்பத்தி செய்வதற்காக இந்தத் தொழிற்பேட்டை நிறுவப்படுகிறது.

*Students and language*

* 161 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Hon. Minister for Public Works has advised the student community to leave the language issue to the Government ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

THIRU K. VINAYAKAM: What was the necessity for the agitation launched by the students regarding this language issue and how does this Government propose to solve this tangle ? Does the Government expect the students to agitate again if they are not satisfied with the stand taken by the Government ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நாட்டினுடைய மொழிப் பிரச்சினைக்கும் மாணவர்களுக்கும் தொடர்பு இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஏனென்ருல், அவர்கள் எதிர்காலக் குடிமக்களாகின்ற காரணத்திஞலே அந்தப் பிரச்சினையில் அவர்கள் கவனம் செலுத்துகிருர்கள். மொழிப் பிரச்சினை என்னும்போது, பயிற்சி மொழி பிரச்சினை ஒன்ருக இருக்கிறது ; ஆட்சி மொழிப் பிரச்சினை வேருென்ருக இருக்கிறது. ஆட்சி மொழிப் பிரச்சினையைப் பொறுத்து கருத்துக்களைக் கூறும் அளவுக்கு மாணவர்கள் உணர்ச்சி வயப்பட வேண்டாம், பெரியவர்கள்—எல்டர்ஸ்—பார்த்துக்கொள்ளுவார்கள். அரசாங்கம் இதற்கு பொறுப் பேற்றுக் கொள்ளும், ஆகவே மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரை கூறிஞர்கள். கூடுமானவரை மாணவர்கள் தங்களுடைய படிப்பைப் பொறுத்த வரையிலும் இருக்கும் கருத்துக்களை மட்டும் எடுத்துச் சொல்லி, ஆட்சி மொழிப் பிரச்சினை போன்ற மற்றவைகளையெல்லாம், பல்வேறு அரசியல் கட்சிகள்—ஆளும் கட்சி, எதிர்கட்சிகள் ஆராய்ந்து தக்க முடிவு செய்வார்கள், அவர்களிடத்திலே இந்தப் பிரச்சினையை விட்டுவிட வேண்டும், எந்த வகையிலும் மாணவர்களுடைய படிப்பு பாழாகக் கூடாது என்பது அந்தக் கருத்தினுடைய முக்கிய நோக்கமாகும்.

DR. H. V. HANDE: Are the Government aware that the students are disappointed because English is being taken away from them by the introduction of the Tamil medium? Are the Government also aware that there is a feeling among students that all the thnigs for which they fought are now completely set at nought because of the present policy of the Government and they are very bitter about it ? If so, may I know what steps the Government are taking to see that the students are satisfied and to establish a good standard of English and even if necessary by introducing the English medium in all the Collges ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முன்பே இதுபற்றி நான் விடை இறுத்திருக்கிறேன். ஆகவே, பயிற்சிமொழி தமிழாக இருக்க வேண்டும் என்கிற கோரிக்கை, மாணவர்கள் கிளர்ச்சி செய்தபோது வைத்த கோரிக்கைகளில் ஒன்ருக இருந்தது. இப்போது கூட, கலைக் கல்லூரியில் ஆங்கிலம்





பயிற்சிமொழியாக இருந்ததை மாற்றி கலையியல் படிப்புக்கு தமிழ் பயிற்சி மொழியாக்கப்பட்டிருக்கிறது. ஒரு சில மாணவர்கள், வேறு வகைகளிலே அதற்குரிய மார்க்குகள் இல்லாமல் விடப்பட்டு, இதற்கு வந்து சேர்ந்ததற்குப் பிறகு ஆங்கிலம் இருக்கவேண்டுமென்று கேட்டார்கள். ஆனுல், அதே கலைக்கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் பலர் வேறு விதமாக எழுதி விண்ணப்பம் தந்திருக்கிருர்கள். கல்லூரியில் சேரும்போதே, தமிழில் பயிற்சிபெறுவதை நாங்கள் விரும்பித்தான் ஏற்றுக்கொண்டிருக்கிருேம். தமிழில் பயிற்சிபெறும் நிலைமைதான் இருக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிருர்கள். ஆகவே தமிழ் மூலம் பயிற்சி பெறுவதை யாரும் விரும்பவில்லை என்ற நிலைமை இல்லை. 56,000 இடங்களில் 12,000 சில்லரை இடங்களைத் தவிர 44,000 இடங்கள் ஆங்கிலத்தின் மூலம் பயிலுவதற்காக இருக்கின்றன. ஆகவே, ஆங்கிலத்தின் மூலம் கல்வி பெறுவதற்கு வாய்ப்பு அறவே மறுக்கப்படவில்லை. மாணவர்களுடைய விருப்பம், பாடமொழி தமிழில் மாறவேண்டும் என்பதுதான். இப்போது கூட, ஒரு சில மாணவர்கள் ஆங்கிலத்தில் பயிற்சிபெற விரும்பினுலும், பெருமபாலான மாணவர்கள் தமிழிலேயே பயிலுவதற்கு விரும்பி, அதை ஏற்றுக் கொண்டிருப்பதாக விண்ணப்பம் எழுதித் தந்திருக் கிருர்கள்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தித்திணிப்பின் காரணமாக இரண்டாந்தரக் குடிமக்களாக்கப்பட்டு விடுவோம் என்ற காரணத்திற்காக மாணவர்கள் குமுறிஞர்களே, அந்தக் குமுறலை அடக்குவதற்காகத்தான் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அவ்வாறு சொன்ஞர்கள் என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாணவர்கள் குமுறலை அடக்குவதற்காக என்று இல்லை. இந்தப் பிரச்சினையில் பெரியவர்கள் எல்லோரும் கவனம் செலுத்தி வருகிருர்கள். நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், கல்வித் துறை வல்லுனர்களும், பொதுத் துறையில் இருக்கும் பலரும தங்கள் தங்கள் கருத்தை எடுத்துச் சொல்லிவருகிருர்கள். இரண்டாந்தரக் குடிமக்களாகப் படுகின்ற சூழ்நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் மாநில அளவில் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் கூடி, அது பற்றி கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிருர்கள். அப்பொழுது, இரண்டாந் தரக் குடிமக்களாக புறக்கணிக்கப்படக்கூடிய நிலை இருக்காது என்று அவர்கள் சொல்லிவிட்டாலும், மறைமுகமாக அத்தகைய சூழ்நிலை ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டை நாம் சாட்டிக் கொண்டு வருகிருேம். மாணவர்கள் அதற்காகக் கிளர்ச்சி செய்யும்பொழுது, பெரியவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கெண்டிருக்கிற காரணத்தால் மாணவர்கள் தங்களுடைய சக்தியையும், நேரத்தையும் பாழ்படுத்தி, பள்ளிப் படிப்பையும் வீணுக்கிக்கொள்ளவேண்டாம் என்ற அடிப்படையில், இதில் பெரியவர்களும் அரசாங்கமும் கவனம் செலுத்திக்கொண்டு வருகின்ற காரணத்தால் மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடவேண்டாம் என்ற அறிவுரையினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்ளே, இப்பொழுது சாதாரணக் மாக மாணவர்கள் ஆங்கிலத்தை போதனு மொழியாக ஏற்றுக் கொள்வதைத்தான் விரும்புகிருர்கள் என்பதை ஒத்துக்கொள்கிருேம். பெரும்பான்மையான மாணவர்கள் ஆங்கிலத்தைப் போதனு மொழியாக ஏற்க விரும்புகிருர்கள். ஆகவே, மாணவர்கள் விருப்பத்திற்கு மாருக தமிழை போதனு மொழியாகத் திணிப்பதை இந்த அரசாங்கம் மாற்றி, ஆங்கிலத்தைப் போதனு மொழியாக்கி எல்லா மாணவர்களுக்கும் அமுல் படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். ஆங்கிலத்தில் படிக்க 44,000 இடங்கள் புகுமுக வகுப்பில் இருக்கின்றன. கோத்தாரி கமிஷன்

ரிப்போர்ட்டின் படியும், அமைச்சர்கள் மாநாட்டின் தீர்மானத்தின்படியும், இந்த ஆண்டு ஜனவரி 23-ம் தேதி இந்தச் சட்டமன்றத்தின் தீர்மானத்திற்கிணங்கவும், மெல்ல மெல்ல, படிப்படியாக தமிழைக் கொண்டுவரவேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில்தான் 12,500 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களுடைய விருப்பத்தைக் கேட்டால் எல்லாவற்றையும் கெமிஸ்ட்ரிக்கு மாற்றவேண்டும் என்று கூறுவார்கள். ஜியாலஜி, பாட்டனி, இவைகளுக்கு இடம் அதிகமாக வேண்டும் என்று தெரிவிப்பார்கள். அவ்வாறு செய்தால் மற்றத் துறைகளுக்கு வழிவகை இல்லாமல்போகும். எதற்கு அதிகமான அளவுகதுப் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் காணப்படுகிறதோ அதற்கு கூடுதலான இடங்கள் ஓரளவுக்கு ஒதுக்கப்படுகின்றன. என்றாலும் "வரலாறு" செக்ஷனை எடுத்துவிட முடியாது. அதையும் மாற்றித் தரவேண்டும் என்று கேட்கக் கூடும். ஏற்படுத்தியிருக்கிற வசதிகள் முழுவதையும் கல்லூரிகளில் பயன்படுத்தித்தான் வரவேண்டும். இப்போது இருக்கும் கல்லூரிகளில் சில பிரிவுகளில் அதிக இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. ஆனால் வேறு சில பிரிவுகளுக்குச் சேருவதில் பல இடர்பாடு களும் தொல்லைகளும் இருக்கின்றன. சில கல்லூரிகளில் பாலிடிக்ஸ் பிரிவில் சேருவதில் அவ்வளவு தொல்லை இல்லை. இன்னும் சில இடங்கள் காலியாக இருக்கின்றன. சில பிரிவுகளுக்குக் கிராக்கி இருக்கிறது. இதில் ஒன்றும் கம்பெல்ஷன், கட்டாயம் இல்லை. இருக்கிற இடங்களைப் பொறுத்து தருகிறோம். கடைசிப் தருணத்தில் சிலர் விடுபடவேண்டிய நிலை ஏற்படுகிறது.

**திரு. எம். சண்முகம் :** தலைவர் அவர்களே, இந்தி தமிழகத்தில் புகுத்தப்படுவதன் மூலம் மாணவ சமுதாயத்தினுடைய எதிர் காலம் மிகவும் பாதிக்கப்படும் என்பதை அவர்கள் உணர்ந்து, முந்திய காங்கிரஸ் ஆட்சியாளர்களிடம் தெரிவித்திருந்தும், அதை அவர்கள் நிறைவேற்றாமல் விட்டுவிட்டதன் காரணமாக மறுபடியும் இந்த ஆட்சியினரிடம் கோரிக்கைவிட முன் வந்தது என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுமாதிரி பீதி மாணவர்களிடத்தில் ஏற்பட்டது. அந்த பீதியின் அடிப்படையில் கிளர்ச்சிகள் செய்து படிப்பைப் பாழாக்கிக் கொள்ளக்கூடாது என்ற காரணத்தால், இந்த அரசே கவனம் செலுத்திவருகிறது. அரசியல் கட்சிகளில் உள்ளவர்களும் கவனம் செலுத்துகிறார்கள். பெரியவர்கள் எல்லோரும் கவனம் செலுத்துகிறார்கள். ஆகவே அந்தப் பிரச்சினையைப் பெரியவர் களிடத்திலும் அரசாங்கத்தினிடமும் விட்டுவிட வேண்டும். தமிழக மாணவர்கள் பாதிக்கப்பட்டுவிடுவார்களோ என்ற பீதி அவர்களிடம் இருக்கிறது. என்றாலும், இந்தத் தலைமுறையினர், வருங்கால தலைமுறை மிக செம்மையாக, அமைதியாக வாழவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் மிக அக்கறையோடு பாடுபட்டு வருகிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையிலே பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

Thiru K. VINAYAKAM : Sir, whereas there was a fear entertained by the students that if they read Hindi, they would become second-rate citizens in the country and whereas because of that fear they developed an antipathy against that language and switched over to the mother-tongue, but now the students are feeling that if they continue to read only through the Tamil medium and neglected English and allowed it to go to the background, they would become third-rate citizens. Because of this fear entertained by them at present, will the Government have some re-thinking in the matter and go back to the same old system, viz., having English as the medium of instruction and provide for Tamil being learnt as a language subject ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தமிழைப் பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும் கொண்டு வருகிற சூழ்நிலையிலே தமிழ் புகுத்தப்பட்டிருக்கிறது. ஆங்கிலம் அறவே நீக்கப்படவில்லை. 3-வது வகுப்பிலிருந்து கடைசிவரை ஆங்கிலம் பயில ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, மொழி அறிவு கெட்டுவிடாது. அப்படிப்பட்ட நிலை ஜப்பானிலும் இத்தாலியிலும் நிலவவில்லை. பெரும்பாலும் ஆங்கிலத்தை தெரிந்துகொள்ளவும், தமிழைப் புரிந்துகொள்ளவும் பாட மொழிகளைக் கொண்டு வருகிறோம். அவர்களுக்கு ஆங்கில அறிவு அறவே இல்லை என்று சொல்ல முடியாது. அகில இந்திய ரீதியில் எடுத்துக்கொண்டாலும் மற்ற மாநிலங்களை விடத் தரம் உயர்ந்துதான் இருக்கிறது. பத்தாவது படித்தவர்கள் ஆங்கிலம் படிக்க, எழுத, புரிந்து கொள்ள, பேச, புரிந்துகொள்ள, தமிழிலே படிக்க, எழுத, பேச புரிந்து கொள்ளக்கூடிய அத்தகைய ஆற்றல் பெற வேண்டு மென்ற நிலையிலே பாடத்திட்டங்களை அமைக்க வேண்டுமென்று இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இரண்டு மொழியிலும் அறிவு பெற்றவர்கள் ஆங்கிலத்திலே தெரிந்து கொண்டு ஆங்கிலம் தெரியாத தமிழ் மக்களுக்குத் தெரியப் படுத்த வைக்க வேண்டும். அகில இந்திய ரீதியில் ஏற்பட்டாலும் தமிழ் மாணவர்கள் பெற்றிருக்கிற ஆங்கில அறிவை வைத்துக் கொண்டு முதன்மையாக நிற்க வழி இருக்கிறது.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இப்பொழுது ஆரம்பத்திலே இடம் கிடைக்காத காரணத்தினால் தமிழ் மீடியத்தில் சேர்ந்து கொண்டு பிறகு ஆங்கில மீடியத்திற்குப் போக வேண்டுமென்று அபிப்பிராயப்படும் மாணவர்களை அவ்வாறு மாற்ற உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படி மாற்றிக்கொள்ள வழியில்லை என்பதைத்தான் சொன்னேன்.

## *Sholayar Dam*

* 162 Q.—Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state the actual expenditure incurred till August 1967 for the construction of Sholayar Dam by the Public Works Department, and estimated cost and the probable date of completion ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சோலையாறு அணை கட்டுவதற்கு 1967 ஆகஸ்ட் வரையில் பொதுப்பணித்துறை இதுவரையில் ரூ. 489 லட்சம் செலவிட்டுள்ளது. இப்பணிக்கு 966 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டது. இந்த அணைக்கட்டு 1969-70-ல் கட்டி முடிக்கப்படக்கூடும்.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவரவர்களே, இந்த சோலையாறு அணைக்கு ஆரம்ப மதிப்பீடு எவ்வளவு ? ரிவைஸ்ட் எஸ்டிமேட் எவ்வளவு ? அணை முடியும்பொழுது எவ்வளவு செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சோலையாறு மதிப்பீட்டுச் செலவு ஆரம்பத்தில் ரூ. 450 இலட்சமாக இருந்தது. இப்பொழுது ரூ. 966 லட்சமாக ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, இந்த சோலையாறு அணை கட்டி முடிக்கப்பட்ட பிற்பாடு எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் பாயும் என்பதையும், பல்லடம் வட்டத்தில் எவ்வளவு ஏக்கருக்குத் தண்ணீர் பாயும் என்பதையும் அறியலாமா ?

[1968 ஆகஸ்ட் 28

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** சோலேயாறு, பெரியாறு வடிநிலங்களிலிருந்து கோளக்குடிக்குப் பயன்படுத்தும் விவரத்தின் படி 2,800 கோடி கன அடிநீர பயன்படுத்தும் நீராக இருக்கும். 240,000 ஏக்கரில் பெரும்பாலும் புன்செய் பயிருக்குப பாசனம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும். பல்லடத்தைப் பொறுத்த வரை தனியாக இல்லே.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தலேவரவர்களே, சோலேயாறு அணையின் முடிவை எதிர்பார்த்துத்தான் பவர் ஹவுஸ் நெம்பர் 1 கட்டப்பட்டு தயாராக இருக்கிறது. அது சும்மாயிருக்கும் நிலேயில், சோலேயாறு அணைத் திட்டத்தைத் துரிதப்படுத்த அரசாங்கமும் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி:** திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு மத்திய அரசிலிருந்து அங்கீகாரம் நமக்குக் கிடைக்கவில்லே. திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் விரைவில் கிடைத்து, 1969-70-இல் கட்டி முடிக்கப்படும் என்று அறிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ப. சண்முகசுந்தரம் :** தலேவரவர்களே, சோலேயாறு அணே பெரிதாகக் கட்டப்பட இருப்பது நீராறு தண்ணீர்த் தேக்கத்திற்காகத்தான் என்று நாங்கள் அறிகிருேம். ஆகையால் நீராறு அணையை விரைவில் தொடங்க ஏற்பாடுகளே அமைச்சரவர்கள் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** அது நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களுடையவும், கேரள மாநில முதலமைச்சர் அவர்களுடையவும் பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு யோசித்து முடிவு கட்டப்பட வேண்டிய விஷயம்.

**திரு. எம். பூபதி :** சோலேயாறு அணையிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்குத் தினசரிக் கூலியாகக் கொடுக்கப்படுகிறதா? வாரக்கூலியாகக் கொடுக்கப்படுகிறதா? அல்லது மாதாந்திரக் கூலியாகக் கொடுக்கப்படுகிறதா? அங்கு வேலே செய்பவர் களுக்கு கலெக்டர் நிர்ணயிக்கும் சம்பளம் கொடுக்கப்படுகிறதா அல்லது குறைவாகக் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** தொடக்கக் கேள்வியோடு இது தொடர்பு கொண்டது அல்ல. தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் அளிக்க முடியும்.

**திரு. க.ர. நல்லசிவன் :** தலேவரவர்களே, நீராறு சம்பந்தமாகக் கேரள முதலமைச்சரவர்களும், நம்முடைய முதலமைச்சாவர்களும் எப்பொழுது பேச்சு வார்த்தை நடத்த உத்தேசித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் பற்றி கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருக் கிறது.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** தலேவரவர்களே, சோலேயாறு அணேக்கட்டு கட்ட இவ்வளவு காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ? இந்தச் சோலேயாறு அணேக்கட்டிலே உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பயன்படுத்த முன்கூட்டியே பவர் ஹவுஸ் கட்டப்பட்டு விட்டது. எனவே, ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது ? இந்த அணேக்கட்டை அமைச்சரவர்கள் நேரடியாகப் பார்வை யிட்டிருக்கிருர்களா ?



1968 ஆகஸ்ட் 28]

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** நேடியாகப் பார்வை யிடப்பட்டிருக்கிறது. செலவு மதிப்பீடு திருத்தியமைக்கப்பட்டதன் காரணமாகத்தான் இதற்கு இவ்வளவு தாமதமாகிவிட்டது. அதற்கு இன்னும் அங்கீகாரம் பெறவில்லே. அமைச்சரவர்கள் இதைப் பார்த்திருக்கிருர்கள். சர்க்கார் காரியங்களுக்குச் செல்லும் பொழுது சர்க்கார் செலவிலேயே சென்றிருக்கிருர்கள்.

### துரித பஸ் கண்டக்டர்கள்

* 163 வினு.—**திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு போக்குவரத்து துரித வண்டிகளில் கண்டக்டராகப் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் எஸ். எஸ். எல். சி. வரையில் படித்திருக்க வேண்டும் அல்லது வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்கிற திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அமலாக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** (அ) இல்லே.

(இ) வினு எழவில்லே.

**திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** தலேவரவர்களே, இது அரசின் பரிசீலனையிலாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** கண்டக்டர்களுக்காக இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தகுதிகளே மாற்றுவதற்கான பரிசீலனே அரசாங்கத்தின் செயற்குறிப்பில் இல்லே.

**மாண்புமிகு திரு. பேரவைத் துணைத் தலேவர் :** அடுத்து வினு எண் 164, 165 இரண்டையும் ஒன்முக எடுத்துக்கொள்ளலாம்.

### கூவம் ஆறு

* 164 வினு—**என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா ?

சென்னே நகரில் கூவம் ஆற்றில் படகுப் போக்குவரத்தினே நடத்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** ஆம். சென்னே மாநகரில் கூவம் ஆற்றினேச் சுத்தமாகவும், படகுப்போக்கு வரத்திற்கு ஏற்றதாகவும் அமைக்க, ரூபாய் 118·50 லட்சம் மதிப்பிட்டுச் செலவாகும் திட்டமொன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது, இருநிலேகளில் நிறைவேற்றப்படும் இத்திட்டத்தின் கீழ், ஆற்றில் மின்விசைப் படகுகளேப் பயன்படுத்தி மக்கள் போக்குவரத்துக்கும் பண்டப்போக்குவரத்துக்கும் ஏற்பாடு செய்வதோடு, மேலும் இந்நீர் வழியில் படகு வீடுகளும் , உல்லாசப் படகுகளும் செல்வதற்கு வழிவகை செய்யலாம். இவை பற்றிய குறிப்பான செயற் குறிப்புகள் இத்திட்டம் நிறைவேறிவரும் தருணத்தில் வகுக்கப்படும்.

* 165 Q.—THIRU K. VINAYAKAM AND THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to eradicate the dirty smell emanating from the Cooum river ; and

(*b*) whether it is proposed to flush the Cooum water into the sea ?

[1968 ஆகஸ்ட் 28

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம், சென்னை மாநகரின் கழிவு நீர் பெருமளவில் கூவம் ஆற்றில் கலப்பதன் காரணமாகவே கூவம் ஆற்றிலிருந்து கெட்ட வாடை வீசிகின்றது. எனவே சென்னை மாநகருக்காக விரிவான கழிவுநீர் ஏற்பாட்டுத் திட்டங்களை அரசு வகுத்துள்ளது. இத்திட்டங்களை நிறைவேற்றினால் ஆற்றில் கழிவு நீர் கலப்பது தடுக்கப்பட்டு அதன் பலனாக ஆற்றிலிருந்து வீசும் கெட்ட வாடையும் அறவே அற்றுப் போய்விடும்.

(ஆ) சென்னை மாநகரின் எல்லைகளுக்குள் கூவம் ஆற்றினைச் சீராக்கி செவ்விய முறையிலே மேநிலைப் படுத்துவதற்கான திட்டமொன்றிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கூவம் ஆற்றின் சங்கமுகத்தில் இவ் வேலைத் திட்டத்தின் கீழ் தக்க ஏற்பாடுகளைச் செய்து கூவம் ஆற்றை கடல் நீரோட்டமுள்ளதாகச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, கூவம் ஆற்றில் படகுப் போக்குவரத்துக்கான வேலையில் இதுவரையில் எந்த அளவில் முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறது ? இதுவரையில் எவ்வளவு பணம் செலவாகியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இத்திட்டத்தின்கீழ் தற்போது நிறைவேற்றப்பட்ட பணிகள்—நிறைவேற்றப்பட்டுவரும் பணிகள்—

(1) நேப்பியர் பாலத்திலிருந்து இடது கரையமைத்தல், மண் நிரப்புதல் ஆகிய பணிகள் முடிவடைந்தன.

(2) வலப்புறம் கரையமைக்கும் பணியும் தற்போது நிறைவேறி வருகின்றது. மேலும், மணல், சிமெண்ட் ஆகியவற்றாலான தடுப்புக் கற்கள் செய்வதற்கான மேடை முதலியன அமைக்கப்பெற்றுள்ளன.

(3) கூவத்தின் சங்க முகத்தில் நிறுவுவதற்கான மணல் உறிஞ்சும் பொறியை தருவிப்பதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆற்றின் கரையோரத்திலிருந்து பெறக்கூடியதான நிலங்களின் விவரங்கள் அடங்கிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1968 ஜூலை 31 வரை ஒரு லட்சத்து 58 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

**திரு. கே. விநயகம் :** தலைவரவர்களே, கூவம் ஆற்றிலே படகுவிட வேண்டுமென்பது பின்னாலே வரவேண்டிய சௌகரியமாகும். இப்பொழுதுள்ள கஷ்டம் இந்த நாற்றம் அடிக்கும் காற்றுதான். இதைத் தடுக்க வேண்டுமென்றால் அதில் கழிவு நீரெல்லாம் விழாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேறும் ? பெரும்பாலும் செண்ட்ரல் ஜெயிலிலிருந்துதான் அதிகப்படியான கழிவு நீர் வருகிறது என்று கருதப்படுகிறது. எனவே, அதற்காக செண்ட்ரல் ஜெயிலை வேறு எங்கேயாவது மாற்றுவதற்கு உத்தேசம் உண்டா ? அல்லது செண்ட்ரல் ஜெயிலில் 'பிளாஷ் அவுட்' வைக்க ஏற்பாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அது பற்றி நான் விவரமான பதில் அளிக்க விரும்புகிறேன். சென்னை மாநகரில் கூவம் ஆற்றிலும், பக்கிங்ஹாம் கால்வாயிலும் கழிவுநீர் சேருவதைத் தடுப்பதற்காக மண்டல அடிப்படையில் விரிவான கழிவுநீர் அகற்று ஏற்பாடு வேலைத் திட்டம் ஒன்று அரசு வகுத்துள்ளது. அதற்காக சென்னை மாநகரம் 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஜார்ஜ் டவுன், பூங்கா நகர், இராயபுரம், தண்டையார்பேட்டை ஆகிய பகுதிகள் முதல் மண்டலமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கழிவுநீர் அகற்று ஏற்பாடு வேலைத் திட்டத்திற்கு மதிப்பீட்டு செலவு ரூ. 250 இலட்சமாகும். அந்த வேலை 1970-ம் ஆண்டுக்குள் முடிவடைந்துவிடும் என்று கணிக்கப் பெற்றிருக்கிறது.

சேத்துப்பட்டு, நுங்கம்பாக்கம், எழும்பூர், கீழ்ப்பாக்கம், புரசைவாக்கம், பெரம்பூர் ஆகிய பகுதிகள் இரண்டாவது மண்டலமாகும். இதற்கு மதிப்பீட்டுச் செலவு ரூ. 165 இலட்சம். தூய்மைப் படுத்தும் இயந்திரம் நிறுவும் பணி தவிர ஏனைய பணிகள் நான்காம் திட்டக் காலத்தில் முடிக்கப்படும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.



1968 ஆகஸ்ட் 28]

கோடம்பாக்கம், தியாகராயநகர்ப் பகுதிகள் மூன்றாம் மண்டலமாகும். ரூ. 135 இலட்சம் செலவாகும். தூய்மைப்படுத்தும் பணி தவிர இத்திட்டம் நான்காம் திட்ட காலத்திலேயே முடிவுறும்.

தென் சென்னையிலுள்ள மற்ற இடங்களுக்கும், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், அடையாறு ஆகிய இடங்களுக்கும் இத்திட்டம் பயன்பெறும். இது நான்காவது மண்டலமாகும். ரூ. 278.836 இலட்சம் செலவில் திருத்தப்பட்டுள்ள திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பணிகள் நடந்து வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் விநயகம் அவர்கள் கேட்டது போல பெரிய மருத்துவமனை, சேப்பாக்கம் கட்டிடங்கள், மத்திய சிறைச்சாலை, மெய்க்காப்பாளர் காலனி ஆகிய இவற்றிலிருந்து கழிவு நீரைக் கூவம் ஆற்றில் விடாமலிருப்பதற்கும் அதனால் ஆறு அசுத்தம் ஆகாமலிருப்பதற்கும் தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுச் சுகாதார தலைமைப் பொறியாளரைக் கேட்டுக்கொண்டு அரசு அதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** தலைவர் அவர்களே, இந்தக் கூவம் ஆற்றைச் சீர்திருத்தும் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் ? பொது நலத் துறையிலே இந்திய அரசும் ஈடுபட்டிருப்பதனால் இந்திய அரசிடமிருந்து ஏதேனும் உதவித் தொகை கேட்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தத் திட்டத்திற்கு நான் ஏற்கெனவே அறிவித்தபடி ரூ. 118·50 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு இந்திய அரசிடம் சென்ற அரசும் பணம் கேட்டு அவர்கள் அதற்கு உரிய தொகையைத் தருவதற்கு இயலாது என்று பதில் அளித்துவிட்ட காரணத்தினால் மாநில அளவிலே இந்தத் திட்டத்தை இப்பொழுது அரசு ஏற்றிருக்கிறது.

**திரு. கே. விநயகம் :** சார், கூவம் ஆற்று நாற்றத்தை அகற்றி, பிறகு அதை ஆழப்படுத்தி அதிலே, போதிய அளவுக்கு தண்ணீர் விட்டு, உல்லாசப் படகுகள் விட்டு, காதலர்கள் பாட்டு பாடிக்கொண்டு போவதற்கு 1972-க்குள்ளேயே ஒரு வேளை நம்முடைய ஆயுளிலேயே முடியுமா, அல்லது நீடித்துப் போகுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த உல்லாச கீதத்தை விநயகம் அவர்களே கூடப் பாடிச் செல்லலாம் என்று கருதுகிறேன்.

*One rupee a measure of rice*

* 166 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the First Member of the Board of Revenue who was requested to examine and report regarding the possibility of selling one Madras measure of rice per rupee has submitted his report to the Government, and

(*b*) if so, the action taken thereon ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) உணவுப் பொருள் பங்கீட்டு முறை சட்டப்படிச் செயல்படுகின்ற பகுதிகளான சென்னை மாநகரிலும் கோயம்புத்தூரிலும் "ரூபாய்க்கு ஒரு படி" அரிசி வழங்கும் திட்டம் 1967ம் ஆண்டு மே மாதம் 15-ம் தேதி முதற்கொண்டு செயல்படுத்தப்பட்டது. இத் திட்டம் சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் 1967-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம்தேதி முதற்கொண்டு நீடிக்கப்பட்டது.

அத்துடன் சென்னை மாநகரிலும், கோயம்புத்தூர் நகரத்திலும் அந்த சுற்று எல்லைக்குள் இருக்கிற கல்லூரிகளிலே இருக்கிற உணவு விடுதிகள், அரசாங்கக் கல்லூரிகள், தனிப்பட்டவர்களுடைய கல்லூரிகள், அரிஜன நல

இலாகாவாலே நடத்தப்படுகிற உணவு விடுதிகள், வேறு அற நிலையங்களாலே நடத்தப்படுகிற "ஆர்ஃபனேஜ்" போன்றவைகள், அத்தோடு இரண்டு ஊர்களிலும் உள்ள ஆஸ்பத்திரிகள் ஆகியவைகளுக்காக வழங்குகிற அரிசியும் ஒரு ரூபாய்க்கு ஒரு படி என்ற உத்தரவு 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்டது. 1967-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியிலிருந்து சென்னையிலே இருக்கிற சுற்றுப்புற நகரங்களுக்கும் இது விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM: Sir, has the Member of the Board of Revenue gone into the issue of selling one-rupee-a-measure of rice to the entire State or to the limited area which the Hon. Minister has now mentioned and also what is the entire loss that the Government would incur if it is extended to the entire State ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது இப்பொழுது தேவை இல்லை ; ஸ்டாச்சுட்டரி ரேஷன்களுக்கு மட்டும் கொடுக்கலாம் என்பதும் போர்டு மெம்பர் அவர்கள் சொல்லியதிலே ஒரு திட்டம். அந்தத் திட்டத்தை அவர்கள் கொடுத்த அதே நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் நகரத்திலே நடைபெற்ற மே தின விழாவிலே மே 15-ம் தேதி முதற்கொண்டு சென்னை நகரிலும் கோயம்புத்தூர் நகரிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடப்படும் என்று ஒரு அறிவிப்பு செய்தார்கள். அந்த அறிவிப்பின் அடிப்படையில் அவர்களால் மற்றைய பதில் விவரங்கள் எல்லாம் அளிக்கப்பட்டு 15-ம் தேதி முதற்கொண்டு இந்தத் திட்டம் அமுலுக்கு வந்தது.

DR. H. V. HANDE: Sir, what were the terms of reference that were given to the Member of the Board of Revenue and what actually he was asked to find out and what are the details of his report. Also, was the Member of the Board of Revenue for the introduction of the scheme *re.* to the issue of rice for one-rupee a-measure in the statutory rationed areas or did he feel that it was economically not a feasible proposition. Will the Hon. Minister give us some more details contained in the report of the Member of the Board of Revenue ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: The Government need not place the report on the table of the House. It is an elaborate report and all reports are not expected to be placed on the table of the House. But I can categorically say that he has made many suggestions and one suggestion is that we should confine the supply of one-measure of rice to the statutory rationed areas alone.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன்னாலே ஒரு கூட்டத்திலே பேசிய உணவு அமைச்சர் அவர்கள் இன்னும் 47 இடங்களுக்கு படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்கப் போவதாகப் பேசியதாக பத்திரிகையிலே பார்த்தேன். அப்படி விஸ்தரிக்கப்போகிற இடங்கள் எது எது ? எப்பொழுது முதற்கொண்டு விஸ்தரிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பத்திரிகையிலே எப்படிப் பார்த்தார்கள் என்று தெரியவில்லை. அது பத்திரிகைக்காரர்கள் தவறு அல்லது அவர்கள் பார்த்தது தவறு என்று தெரியவில்லை. நான் அப்பொழுது சொன்னதைச் சொல்லிவிடுகிறேன். சென்னை நகரிலும் கோயம்புத்தூர் நகரத்திலும் மட்டும் அல்லாமல் தாம்பரம் முதற்கொண்டு வில்லிவாக்கம், திருவொற்றியூர் ஆகிய 47 புற நகரங்களிலும் இது ஏற்கெனவே விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அதை "விஸ்தரிக்கப்போவதாக" பத்திரிகையிலே வந்ததாகத் தெரிகிறது.



எனக்குக் கூட, அதைப் பார்த்ததாகக் கவனம். தாம்பரம் முதற்கொண்டு திருவான்மியூர், ஆவடி, எண்ணூர், வில்லிவாக்கம், திருவொற்றியூர் இப்படி 47 புற நகரங்களுக்கும், அதாவது செங்கற்பட்டு மாவட்டத்திலே ¼ பகுதிக்கு, 6 இலட்சம் மக்களுக்கு இன்றைக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கப்படுகிறது.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, திருச்சியில் குடும்பக் கார்டுகளுக்கு 1,200 கிராம் கொடுக்கப்பட்டது. பிறகு 1,000 கிராமாக அது குறைக்கப்பட்டது. இப்பொழுது 800 கிராமாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பழையபடி 1,200 கிராம் கொடுக்க திட்டம் உள்ளதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது பற்றிய விரிவான விவரம் மாண்புமிகு ராஜபாளையம் உறுப்பினர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்த நேரத்தில் இந்த மன்றத்திலே இரண்டு நாட்களுக்கு முன்னாலே சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, கோவில்பட்டி வட்டாரத்தில் பல நகரங்களிலும் 800 கிராம் 400 கிராமாகக் குறைக்கப்பட்டதோடு மட்டும் அல்லாமல் மோசமான சோளத்தை ஏற்றுக்கொண்டால்தான் அரிசி கிடைக்கும் என்ற நிர்ப்பந்தமான நிலை இருக்கிறது. அதை நிறுத்த அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படிப்பட்ட தகவல் எதுவும் இல்லை. அதை பிரசாரத்திற்கு வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தலாம். கோவில்பட்டி தாலுகாவைப் பொறுத்தவரையிலும் உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். எந்த அளவுக்கு அந்த தாலுகாவிலே விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் தெளிவாக அறிவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 167. திரு. கே. எம். இராமசாமி கவுண்டர், மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் . . .

THIRU K. VINAYAKAM: Sir, one more question . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது மாதிரி "பிரிசிடெண்ட்" வேண்டாம். ஏற்கெனவே, நீங்கள் இதுமாதிரி பேச அனுமதி கொடுத்திருக்கிறேன். கேள்விக்கு நேரம் குறைவாக இருக்கிறது. நீங்கள் 40 நிமிஷம் பேச வேண்டுமென்று வேறு கேட்கிறீர்கள்.

### *Misuse of sugar in Madurai*

* 167 Q.—THIRU K. M. RAMASWAMI GOUNDER: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether any sugar racket has been unearthed by the Civil Supplies Authority at Madurai; and

(*b*) if so, the details thereof ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: (*a*) and (*b*) No, Sir. However, there were cases of misuse of sugar by bulk consumers and sugar retailers which were detected in the normal course of check and dealt with. The cases involving misuse of sugar by bulk consumers are detailed below :—

Thirumathi K. Valliammal, a bulk consumer and lessee of the canteen in the Government Erskine Hospital, Madurai, had not utilised the stock of sugar viz., 86¾ kilograms taken delivery of by her on 8th November 1967 from the Central Warehousing Godown,

Palanganatham, for the purpose specified in the permit. The supply of sugar was intended for the preparation of foodstuff in the canteen, Government Erskine Hospital, Madurai.

She disposed of the sugar for clandestine use. The sugar permit issued to her in B.C. 504/67-8 (H), was suspended pending investigation for the violation of conditions. The Special Tahsildar (F.C. No. I), Madurai preferred a complaint to the Sub-Inspector of Police, B-5 Police Station, Madurai-2. The matter is still pending investigation:—

A case of black marketing was booked against four persons on 6th October 1967. The following sugar standing permit holders disposed of the quantity of sugar noted against each to one Thiru C. Muthusamy Nadar of Madurai at higher rates.

| | Quintal. | Kilogram. |
|---|---|---|
| Thiru M. Siddarthan .. .. .. | 1 | 12½ |
| Thiru R. Balakrishnan .. .. .. | 0 | 80 |
| Thiru A. S. Khadar Batcha .. .. | 1 | 00 |
| Thiru D. Paulraj .. .. .. | 2 | .. |

The above quantity of sugar was taken delivery of by them on 6th October 1967 from the Central Warehousing Godown, Palanganatham and disposed in the godown itself. The sugar in question was seized and kept in the godown. The matter is pending investigation.

As regards the misuse of sugar by retailers, the Collector, Madurai, has reported that a dozen person (retailers) have either been punished by fines ranging from Rs. 25 to Rs. 100 or by cancellation of their permits for the various irregularities committed in the retail sale of sugar. Again in the case of a branch of the Madurai District Co-operative Supply and Marketing Society Branch at Mahalipatti, it was found on verification that the salesmen were making use of 42 bogus sugar cards and misusing the sugar obtained with these cards. Cards were seized and cancelled and the Secretary was informed of the malpractice and asked to remove them from service. The salesmen concerned have been suspended from service and disciplinary action by the Secretary is pending against them.

முற்பகல் 9-30

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** சார், கட்டுப்பாடு மிகத் தீவிரமாக இருப்பதால், இப்படிப்பட்ட மால்ப்ராக்டிஸ் எல்லாம் அதிகம் நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது உற்பத்தியும் அதிகமாக இருப்பதால், சர்க்கரை ஸ்டாக் நல்ல நிலையில் இருப்பதால், கட்டுப்பாடு இல்லாமல் செய்வதற்குச் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சர்க்கரைக் கட்டுப்பாட்டை விதிப்பதும், தளர்த்துவதும், டெல்லி சர்க்காருடைய உரிமைகளில் ஒன்ருக இருக்கிறது. இந்தச் சர்க்காரைப் பொருத்தவரையில், கட்டுப்பாடு இருந்தால் தான் ஏழை எளிய சாதாரண மக்கள் இந்த விலையில் வாங்கக்கூடிய வசதியிருக்கும் என்று நினைப்பதால், இந்த நிலையில் கட்டுப்பாட்டைத் தளர்த்துவது ஆபத்தாக முடியும் என்று நினைக்கிறது. ஒழுங்கீனத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும் சம்பந்தம் இல்லை. கட்டுப்பாட்டை எடுத்தால் விலை கட்டாயமாக ஏறிவிடும்.





**திரு. என். எஸ்.வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைத் தலைவருக்கு மதுரை நகரத்தில் சர்க்கரை மொத்த விநியோக லைசென்ஸ் கொடுத்திருப்பது உண்மையா? அதைப் பற்றிப் பொது மக்களிடமிருந்து புகார் வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இரண்டையும் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், ஷுகர் விநியோகத்தில் சாதாரணமாக ஒரு பஞ்சாயத்தில் பல இடங்களில் இந்தக் கோட்டா முறை இல்லாததால், அந்தப் பகுதி மக்கள் 5, 6 மைல் தூரம் நடந்து போக வேண்டிய நிலையில் இருக்கிருர்கள். அந்த விதமான சங்கடத்தைப் போக்க மாவட்ட விநியோக அதிகாரிக்கு அறிக்கை அனுப்பி இந்தக் குறையை நீக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முயற்சி செய்யவேண்டியது மாவட்ட விநியோக அதிகாரியல்ல; மூட்டை கட்டி இவ்வளவு என்று மாதந்தோறும் வழங்குவது மத்திய சர்க்காரிடம் இருக்கிறது. இப்பொழுது 6,000 டன் தான் கிடைக்கிறது. முன்பு 10, 12 ஆயிரம் டன் என்று இருந்தது. பார்சியல் டிகண்ட்ரோல் காரணமாக 40 சத விகிதம் வெளிச் சந்தையில் விற்கலாம் என்று சொன்னவுடன் கன்யாகுமரி முதல் காசிமேடு வரையில், மில் அதிபர்கள் அதிகவிலையில் விநியோகம் செய்து கொண்டிருக்கிருர்கள். அதை இந்த அரசு எதிர்த்தது. இப்பவும் எதிர்க்கிறது. நாம் எவ்வளவு தூரம் வற்புறுத்தினுலும், 6,000 டன் தான் கொடுப்பதால் மாவட்டத்தின விகிதாசாரப்படி கொடுக்கபபடுகிறது. சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும். சட்டியில் கிடையாது. ஆகவே அது சம்பந்தமாக மத்திய சர்க்காரோடு போராட திரு. மார்டின் அவர்களும் முன் வரவேண்டும்.

## மாதிரிப் பழத் தோட்டங்கள்

***168 வினு.—திரு. கே. ஆர். கோவிந்தன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதிரிப் பழத் தோட்டம் ஏற்படுத்த அரசினரால் வழங்கப்படும் கடன் எவ்வளவு ? மானியம் எவ்வளவு ?

(இ) கொடுக்கப்படும் கடன் தொகையை எத்தனை ஆண்டுகளில் திருப்பிக் கட்ட வேண்டும் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) & (இ) மாதிரிப் பழத் தோட்டங்கள், செடிப் பண்ணைகளை அரசாங்கம் மட்டுமே நிறுவுவதனுல், தனிப்பட்டவர்களுக்குக் கடன் அல்லது உதவித் தொகை அளிக்கும் வினு எழுவதற்கு இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. Minister for Agriculture be pleased to state the number of model orchards in our State and also the conditions required to start new ones ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தமிழகத்தில், ஒன்பது மாதிரிப் பழத் தோட்டங்கள், ஆத்தூர் (செங்கல்பட்டு மாவட்டம்), அருங்குளம் (தஞ்சாவூர்), பெரியகுளம் (மதுரை), கொடைக்கானல் (மதுரை), குற்ருலம் (திருநெல்வேலி), திம்மாபுரம் (தர்மபுரி), குன்னூர் (நீலகிரி), பூவணி (ராமநாதபுரம்), கூழப்பட்டு (வட ஆற்காடு) முதலிய இடங்களில் இருக்கின்றன.

**திரு கே. சகாதேவ கண்டர் :** தலைவர் அவர்களே, மாதிரிப் பழத் தோட்டம் போட எவ்வளவு கடன்கள் வழங்கப்படுகின்றன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மாதிரிப் பழத் தோட்டங்களை அரசாங்கமே, வேளாண்மைத் துறை மூலம் நடத்தி வருகிறது. தனிப்பட்டவர்கள் நடத்துவது இல்லை. அவர்கள் நடத்துவது வேறு விஷயம்,

**திரு. பி. வேலுசாமி :** பழத்தோட்டங்களிலே ஜனங்களுடைய உபயோகத்திற்கு பழம் கிடைக்கும் அளவில் வந்திருக்கிறது எத்தனை ஏக்கர்கள், வெறுமனே இருப்பது எத்தனை ஏக்கர் என்பதைத் தெரிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 1966-67-ல் 1,477 ஏக்கரிலேயும், 1967-68-லே 1,698 ஏக்கரிலேயும் பழத் தோட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன.

### பவானி வட்டத்துக் காடுகளிலுள்ள தரிசு நிலங்கள்

*169 வினா.—**திரு. ஈ. எம். நடராசன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பவானி தாலூகாவில் தரிசாகக் கிடைக்கின்ற பாரஸ்ட் நிலங்கள் எவ்வளவு ?

(இ) அவற்றை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) பவானி வட்டத்தில் உள்ள ஒதுக்கக் காடுகளில் தரிசு நிலம் எதுவுமில்லை.

(இ) நிலமற்ற ஏழை உழவர்களுக்குக் காட்டு நிலத்தை ஒப்படை செய்யும் செயற்குறிப்பு எதுவுமில்லை.

**திரு. ஈ. எம். நடராசன் :** சார், பவானி தாலூகாவில் ஃபாரஸ்ட் நிலங்களைத் தங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஏழை விவசாயிகள் மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். நிலமற்றவர்களுக்கு அந்த நிலங்களைக் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்க உதவி செய்ய சர்க்கார் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அப்படிப்பட்ட விண்ணப்பம் வந்திருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை:** தலைவர் அவர்களே, பொதுவாக ஃபாரஸ்ட் தரிசு நிலங்களில் பல பகுதிகளில் யூகலிப்டஸ் போடுகிறார்கள். இன்னும் சில இடங்களில் சவுக்குப் போடுகிறார்கள். எங்கள் பகுதியில் முந்திரி போட்டிருக்கிறார்கள். அந்த அந்த கிராமங்களுக்கு அருகாமையில் உள்ள, கிராம மக்கள் கட்டுப்பாடாக இருந்து, 10,000 ரூ. பெறுமானமுள்ளவற்றை 1,000, 2,000 என்று எடுத்து விடுகிறார்கள். அதனால் அரசாங்கத்திற்குப் பணம் வீணாகிறது. தனிப்பட்ட ஒரு ஆள் அடித்துக்கொண்டு போய் விடுகிறார். ஆகவே, அவற்றைப் பட்டா நிலமாகச் செய்து கொடுத்தால், உணவு உற்பத்திக்கும் வசதியாக இருக்கும். அதைச் செய்ய சர்க்கார் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** யூகலிப்டஸ் செடியோ, முந்திரி செடியோ, காட்டிலாகாவினரே தான் நடுகிறார்களேயல்லாது, தனிப்பட்டவர்களுக்கு அனுமதி கொடுப்பதில்லை. அங்கத்தினர் சொல்வது போல, பட்டா செய்து கொடுக்கக்கூடிய திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. ஏற்கெனவே நிலம் இருக்கிறவர்களுக்கு மேலும் அரசாங்கத்தின் சொத்தைப் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் இடம் கொடுக்காது.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாநிலத்திலும் காட்டு நிலங்கள் இவ்வளவு இருக்க வேண்டும் என்று காட்டு இலாகா ஏதாவது வரையறை செய்திருக்கிறதா ? அப்படி வரையறை இருந்தால், நம்முடைய காட்டு இலாகா நிர்வாகத்தில் எவ்வளவு நிலம் இருக்கவேண்டுமென்று அரசு வரையறை செய்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஒரு நாட்டின் மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி காட்டு நிலமாக இருக்கவேண்டும். துரதிருஷ்டவசமாக மொழிவழி மாநிலம் அமைந்த காரணத்தால், காடுகள்





எல்லாம் நம்மை விட்டுப் போய்விட்டது. வேறு சிலர் வேண்டுமென்றே இருந்த காட்டுப் பகுதிகளை அழித்துவிட்ட காரணத்தால் நம்முடைய மாநிலத்தில் காடுகள் குறைந்துவிட்டன.

### பூந்தமல்லி பத்திரப் பதிவாளர் அலுவலகம்

*170 வினா :—**திரு. கே. சகாதேவ கண்டர் :** மாண்புமிகு சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி சப்-ரிஜிஸ்தராராபீசை சென்னை தலைமை மாவட்ட செயலகத்தோடு இணைக்காமல் காஞ்சிபுரம் தலைமைச் செயலகத்தோடு இணைத்தது பொதுஜனங்களுக்குப் பாதகமாய் உள்ளது என்று அந்த வட்ட பொதுஜனங்களிடமிருந்து மகஜர் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம், எனில், அரசு அதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) பூவிருந்தவல்லியில் உள்ள உதவிப் பதிவாளர் அலுவலகத்தை காஞ்சீபுரம் பதிவு மாவட்டத்திலிருந்து, சென்னைப் பதிவு மாவட்டத்திற்கு 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் மாற்றுவது குறித்த ஆணைகள், வருவாய்த் துறையின் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் தேதியிட்ட 908-ம் எண் அரசாங்க ஆணையில் வெளியிடப்பட்டுள்ளன.

**திரு. கே. சகாதேவ கண்டர் :** தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லியில் உள்ள சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசை, காஞ்சிபுரத்துடன் இணைக்காமல், சென்னையுடன் சேர்த்தால் அந்த வட்டார பொது மக்களுக்கு நன்மையாக இருக்கும். போக்குவரத்து வசதிக்கும் ஏற்றதாக இருக்கும். ஆகவே, இதைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தக் கோரிக்கையை அந்தத் தொகுதி எம். எல். ஏ. அவர்கள் தலையிட்டு அரசைக் கேட்டுக்கொண்டதன் மேல், உடனடியாக மாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

### *Clash between warders and prisoners.*

*171 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. Minister for Law and Co-operation be pleased to state :—

(*a*) whether there was a clash between the warders and prisoners in Tiruchirappalli Central Jail on or about the 26th of February 1968 ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழுவதற்கில்லை.

### குடும்பக் கட்டுப்பாடு

*172 வினா.—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மாதம் இரண்டு பேர்களைக் கொண்டு வர வேண்டும் என்று ஆணை ஏதேனும் தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

[1968 ஆகஸ்ட் 28

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன்களில் வேலைசெய்யும் ஆசிரியர்கள், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு இவ்வளவு ஆட்களைக் கொண்டுவரவேண்டுமென்று, மாவட்ட ரீதியில் உள்ள அதிகாரிகள் உத்திரவு போட்டு, அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அப்படியென்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா :** அப்படி எந்த உத்தரவும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இதுபோன்று கட்டாயமாக ஆசிரியர்கள் இரண்டு ஆட்களை குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக அழைத்துவர வேண்டுமென்று எவ்வித ஆணையையும் அரசு பிறப்பிக்கவில்லை.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளரும் அந்தந்த மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் சேர்மன்கள், கமிஷனர்கள் ஆகியோர்களை விகிதாசாரப்படி இவ்வளவு பேர்களை குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக அழைத்து வர வேண்டுமென்று கேட்டனரா ? அவர்கள் குறிப்பிட்ட அளவைக் கொடுக்கவில்லையென்றால், ஏன் கொடுக்கப்படவில்லை, எப்போது கொடுக்கப்படும் என்று ரிமைண்டர்கள் போட்டு நிர்பந்தப்படுத்துகிறார்களா ? இதுபோன்ற நிர்பந்தங்களை நீக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அப்படிக் கேட்பதில் தவறு இல்லை. ஆனால் நிர்ப்பந்தப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு எதையும் போடவில்லை.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை இஸ்லாமிய மக்கள் யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, மருத்துவத் துறை அமைச்சர் அவர்கள் தீவிர கவனம் செலுத்தினால் அம்மதத்தினருக்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி அம்மக்களிடையிலும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்திப் பரப்புவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இங்கு மத சம்பந்தமான பிரச்சினையை விவாதிப்பது சரியல்ல. எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களிலும் ஒரு திட்டத்தை சிலர் ஆதரிப்பார்கள், சிலர் எதிர்ப்பார்கள். ஆகவே, கனம் உறுப்பினர் அவர்கள் நல்லமுறையில் கவனம் செலுத்தினால் திட்டம் பயனடையும்.

*173 வினா—**திரு. வை. சுவாமிநாதன் : & திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாட்டிற்காக அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின் குடும்பங்களுக்கு "டிரான்சிஸ்டர்" ரேடியோ பரிசளிக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, வேறு எந்த மாநிலத்திலாவது இம்மாதிரி டிரான்ஸிஸ்டர் கொடுக்கப்படுகிறதா ? இப்போது அறுவை சிகிச்சைக்காகக் கொடுக்கப்படும் தொகை அதிகரித்துக் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வேறு எந்த மாநிலத்திலாவது அறுவை சிகிச்சைக்காக டிரான்சிஸ்டர் ரேடியோ கொடுக்கப்படுகிறதா என்ற விஷயம் நம்முடைய அரசாங்கத்திற்குத் தெரியாது. நம் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அறுவை சிகிச்சைக்காக மற்ற மாநிலங்களைவிட அதிகமான தொகை கொடுக்கப்பட்டு வருகிறது.



1968 ஆகஸ்ட் 28]

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசின் அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் அவர்கள் இம்மாதிரி டிரான்சிஸ்டர் கொடுக்கும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகவும், அதற்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாயும் கூறியது நம்முடைய அரசுக்குத் தெரியாதா? அப்படி நிதி ஒதுக்கீடு செய்யும்போது அரசு மத்திய அரசுக்கு எழுதி, தமிழ்நாட்டுக்கு ஏதாவது நிதி ஒதுக்க வழிவகை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது பத்திரிகைச் செய்தியாக இருந்தது, பத்திரிகைச் செய்தியாகவே ஆகிவிட்டது.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, பல அரிஜனங்களுக்கு இந்த அறுவை சிகிச்சையின் காரணமாக பல தவறுகள் நிகழ்வதாகக் கூறுகிறார்கள். இது பற்றி சேலத்திலிருந்து ஏதாவது புகார்கள் வந்துள்ளனவா ? அப்படியென்றால், அது சம்பந்தமாக எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது பற்றி விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு டிரான்சிஸ்டர் ரேடியோ கொடுக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு டிரான்சிஸ்டர் ரேடியோ கொடுக்காமலிருந்தாலும், திருமணமே ஆகாதவர்களுக்கு டிரான்சிஸ்டர் கொடுப்பதற்கான திட்டத்தை இனிமேலாவது கொண்டுவர அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் திருமணத்தை முடித்துக்கொண்டு பின்னர் அதைக் கவனிக்கலாமே ?

**திரு கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நல்லதொரு திட்டம். அந்தத் திட்டத்தை நம்முடைய அமைச்சர்கள் நடைமுறையில் அனுசரிக்கிறார்களா ? திரு. சாதிக் பாட்சாவைத் தவிர, எத்தனை அமைச்சர்கள் இந்த முறையில் வெற்றி கண்டிருக்கிறார்கள் ? (ஆரவாரம்.)

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்த விஷயத்தில் கனம் உறுப்பினர் அவர்கள் வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் (சிரிப்பு.)

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, சட்டபூர்வமாக கருச்சிதைவுச் சட்டத்தை நமது நாட்டில் கொண்டுவர வேண்டுமென்று, மத்திய அரசு மாநில அரசுக்கு ஏதாவது யோசனை சொன்னதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கட்டாய கருச்சிதைவுச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று மத்திய அரசு கூறியபோது, குடும்பக் கட்டுப்பாடு திட்டமே போதுமானது என்ற கருத்தை இந்த அரசு தெரிவித்தது. இந்த அரசு கருத்தடைப் பிரச்சினையை ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாட்டைச் செய்துகொள்வதற்கு பரிசுத் திட்டம் வழங்குவதன் மூலம், வயது குறைந்தவர்கள்கூட வயதை அதிகப்படுத்திச் சொல்கிறார்கள். ஆகவே பரிசு வழங்குவதை நிறுத்திக்கொள்ள சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பரிசு கொடுக்கிற காரணத்தினுல் வயது முதிர்ந்தவர்கள்தான், வயது குறைந்தவர் களாகச் சொல்லிக்கொள்கிறுர்கள்.

### செஞ்சி வட்டார வளர்ச்சி

* 174 வினு—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டார வளர்ச்சிக்காக 1967-68-ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதில் இதுவரைக்கும் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ரூ. 1,06,300.

(இ) ரூ. 95,299 (31—3—1968 வரையில்).

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, செஞ்சி வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டமாக இருக்கிறது. அதற்கு இப்போது செலவிடப்படுகின்ற தொகை போதாததாக இருப்பதால், வட்டாரத்தின் வளர்ச்சிக்கேற்றவாறு அதிகமாக நிதி ஒதுக்கித்தர அரசாங்கத் திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** வட்டார வளர்ச்சிக்கென்று ஒதுக்கப்பட்ட தொகையை அந்தந்த வட்டாரங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறோம். மேலும் நிதிநிலை இடம் கொடுத்தால் அங்கத்தினரின் வேண்டுகோள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

### பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்

*175 வினு—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஏலகிரி மலை, ஜவ்வாது மலைப் பகுதிகளில் Tribal Block கள் ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, பழங்குடி மக்களின் வளர்ச்சிக்காக வேண்டி, அவர்களுடைய முன்னேற்றத் திற்காக வேண்டி, டிரைபிள் பிளாக்குகளை அமைப்பதற்கு ஏற்படக் கூடிய செலவுத் தொகைகள் பூராவையும் மத்திய சர்க்கார் அளிக்கிறுர்களா? அப்படி மத்திய சர்க்கார் அளித்தால், நம் மாநிலத்திலும் இதுபோன்ற பிளாக்குகளை அமைத்து அந்தப் பணத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நான்காவது திட்டக் காலத்தில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைப் பகுதிகளில் பழங்குடி மக்களின் வளர்ச்சிக்காக வட்டார பிளாக் அமைப்பதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. ஆனல் 1967-68-ம் ஆண்டின் திட்டச் செலவு குறைக்கப்பட்டதன் காரணமாக இந்த ஒரு திட்டத்தையும் கைவிடுமாறு மத்திய அரசு அறிவித்துள்ளது.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, இதுபோன்ற பிளாக்குகளை ஏலகிரி பகுதியில் இருக்கக்கூடிய பழங்குடி மக்களுக்கும் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று மாவட்ட



ஆட்சித் தலைவர்கள் இந்த அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறுர் களா ? அப்படியென்றுல், இந்த அரசு என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாவட்ட ஆட்சித் தலைவர் களும், அரிஜன நலத் துறையினரும் இந்தப் பரிந்துரைகளைச் செய்தார்கள். அந்தப் பகுதியில் இருக்கிற கிராமங்களை இணைத்து ஒரு தனி வட்டாரமாக ஆக்க வேண்டும் என்பது கோரிக்கையாகும். அப்படி இணைத்துவிட்டால் அங்கிருக்கக்கூடிய பழங்குடி மக்களின் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. தற்போதைய நிலையில் ஒரு தனி வட்டாரமாக அமைக்கக்கூடிய சாத்தியக்கூறு இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. டி. அண்ணுமலை :** தலைவர் அவர்களே, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, உயர்ந்த மலைகளாக இருப்பதால் அங்கே கோடை வாசஸ்தலம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அங்குள்ள பழங்குடி மக்க ளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கே நிதி நிலை இல்லாத நேரத்தில் அவற்றை உல்லாச வாசஸ்தலமாக மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இருக்கிற சங்கடங்களைக் கனம் உறுப்பினர் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** கல்வராயன் திட்டத்தை மேற் கொள்வதில் அங்குள்ள நிலங்கள் யாருக்குச் சொந்தம் என்று பழம்பெருங்குடி தலைவர்களால் போடப்பட்ட வழக்கு இருக்கிறதே, அதனுல் இந்தத் திட்டம் நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறதா? அல்லது இந்திய அரசினரின் ஆணைக்கிணங்க நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 1967-68-ஆம் ஆண்டு நிதி நிலை வசதிக் குறைவினுல் அதை எடுத்துக்கொள்ளவேண்டா மென்று இந்திய அரசாங்கம் நிறுத்திவைக்க கேட்டுக்கொண்டது. வழக்கு இருப்பது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பழங்குடி மக்களுடைய வளர்ச்சிக்காக வேண்டி ஒரே ஒரு இடத்தில் ஏற்றுக்கொண்ட திட்டத்தையும் நிறுத்தச் சொல்லிவிட்டார்கள் என்றுல் அந்தத் திட்டமே கைவிடப்பட்டுவிட்டதா ? அல்லது நமது மாநிலத்தில் மட்டும் விட்டுவிடச் சொல்லி உத்தரவு போட்டுவிட்டார்களா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இந்த மாநிலத்திலேயே சேலத்தில் கொல்லி மலை, ஏற்காடு முதலிய இடங்களில் இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கல்ராயன் மலைத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதி வடிவம் எடுக்காததால் 1967-68 நிதி நிலையில் அதற்கு வசதியில்லை என்று சொல்லப்பட்டது.

### *One-unit system for post of Superintendent*

* 155 Q.—Thiru A. M. RAJA,
THIRU N. S. V. CHITHAN,
THIRU K. CHEEMAICHAMY : } Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether the Secretariat Non-Gazetted Staff Association has represented that one-unit system should be brought into effect for the promotion of Assistants to the category of Superintendents ; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. THIRU C. N. ANNADURAI : (*a*) Yes.

(*b*) Orders have since been issued constituting the Departments of Secretariat except Law, Finance and Legislature, as a single unit at the level of Assistants for promotion as Superintendents.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் ஓர் அலகு முறையினைச் செயல்படுத்தியிருப்பதனால் ஏற்பட்டுள்ள அனுகூலங்கள் யாவை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** 1966-ஆம் ஆண்டில் இருந்தே அவர்களது சங்கங்கள் இதுபற்றி கோரிக்கை வைத்து விண்ணப்பங்கள் கொடுத்து வந்திருக்கின்றன. இப்போது அவர்கள மன நிறைவு பெற்றிருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்த ஓரலகு முறை சட்டத்துறை, சட்டப் பேரவைத்துறை, நிதித்துறை ஆகியவற்றுக்கு விஸ்தரிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதற்குக் காரணங்கள் என்ன?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டத்துறைக்கு சில தனித் தகுதிகள் தேவைப்படுகின்றன. ஆகவே அதில் புகுத்தப்படவில்லை. சட்டப் பேரவைத்துறைக்கு தனி செக்ரடேரியட் இருக்கிறது. அதிலும் புகுத்தப் படவில்லை. நிதித்துறையில் தொடர்ந்து சில வழிமுறைகளை அனுசரிக்க வேண்டியதாக இருப்பதால் அதிலும் புகுத்தப்படவில்லை.

DR. H. V. HANDE : The most important cause of agitation, depression and dissatisfaction among the N.G.Os. is because of the high percentage of direct recruitment among gazetted officers. In view of that feeling among N.G.Os. will this Government at least revise the stand of previous Government and see to it that direct recruitment to the posts of gazetted officers is reduced and more N.G.Os. are given chances of promotion as gazetted officers. Unless this is done there will be terrible discontentment among N.G.Os. In view of their feeling in the matter, will this Government come forward to give a new orientation to recruitment policy ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Though the hon. Member's suggestion is good, the question before the House is about one unit system which has now been accepted by this Government.

### போலிஸ் வழக்குகள்

***156 வினா.—திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போலீஸ் இலாக்காவில் ஒவ்வொரு காவல் நிலையத்தின் மூலம் மாதத்திற்கு குறிப்பிட்ட அளவு சந்தேகக் கேசுகள், சாராயக் கேசுகள், திருட்டுக் கேசுகள் பிடிக்க வேண்டும் என்ற முறை உள்ளதா ?

(இ) ஆமெனில், அதனை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



**திரு. பி. வேலுசாமி :** ஐயா, ஒவ்வொரு காவல் நிலையத்திலும் சந்தேகக் கேஸ்கள் எத்தனை, சாராயக் கேஸ்கள் எத்தனை, திருட்டு கேஸ்கள் எத்தனை என்று மாதாமாதம் கொடுக்கவேண்டிய சம்பிரதாயம் இருக்கிற காரணத்தினால் ஒன்றும் அறியாத பாமர மக்கள் கஷ்டப்படவேண்டிய நிலைமை இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? இதை நீக்க ஏதாவது வழிவகை செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் ஏற்கனவே அளித்த பதிலையே சொல்ல வேண்டியிருக்கிறது. கனம் உறுப்பினர் சொல்கின்ற முறையில் ஒரு உத்தரவோ, பழக்கமோ இல்லை. ஆனால் கிரிமினல் ப்ரோஸீஜர் கோட் 55-வது பிரிவின்படி சந்தேகக் கேஸ்கள் பதிவு செய்கிறார்கள். அதில் கூட போலீஸ் துறையினர் விழிப்புடன் இருக்கவேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கடந்த வாரம் கன்னியாகுமரி ஜில்லாவில் தக்கலை போலீஸ் ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர் அந்த பஞ்சாயத்து உப தலைவரைப் பிடித்து நையப் புடைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக அவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இதுபற்றி நகரசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றி முதல் அமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தக் கேள்வியில் வராதே.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்தக் கேள்வியோடு தொடர்புடையது அல்ல என்றாலும் கனம் உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற புகார் வந்திருக்குமானால் அது முறைப்படி விசாரிக்கப்படும்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** இந்த அரசாங்கம் வந்த புதிதில் சந்தேகக் கேஸ்கள் குறைவாகப் போடப்பட்டன. ஆனால் இப்போது பழைய அரசாங்கத்தில் இருந்ததுபோலவே அதிகமான கேஸ்கள் போடப்படுகின்றன என்பதை அரசாங்கம் கவனிக்குமா ? இதைத் தடுக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** முன்னால் போடப்பட்ட வழக்குகள், இப்போது போடப்படுகிற வழக்குகள் இரண்டுக்கும் ஒப்புமை பார்க்கவில்லை. அப்படியிருக்குமானால் சந்தேகத்திற்குரிய காரியங்கள் வளர்ந்திருக்கிறது என்பதை அது காட்டுமே தவிர முறை மீறிவிட்டது என்பதைக் காட்டாது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** சந்தேகாஸ்பதமான கேஸ்கள் இவ்வளவு பதிவு செய்யவேண்டுமென்று திட்டவட்டமான உத்தரவு இல்லாவிட்டாலும் மேலதிகாரிகள் ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் இன்ஸ்பெக்ஷன் செய்ய வருகிறபோது, ஏன் சந்தேகாஸ்பதமான வழக்குகள் குறைந்திருக்கின்றன. ஏன் சாராய கேஸ்கள் குறைந்திருக்கின்றன என்று கேள்வி கேட்கிற பழக்கம் இருப்பதால் தான் இப்படி பொய்யாக வழக்கு போடுகிறார்கள் என்கிற கருத்து இல்லையா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது கருத்தே தவிர நான் சொல்கிறபோதே அப்படி இல்லை என்று சொன்னேன்.

DR. H. V. HANDE : Though the Hon. Minister has been giving us categorical assurances very often on the floor of the House that there is no hard and fast rule, there is no order given to thePolice officials to charge a fixed number of these cases, the fact of the matter is that during the last week of the month, during the last ten days

of the month, the number of cases charged are more than the preceding weeks of the month. I can give a number of instances. You go on a cycle on the last week of the month. It is absolutely not safe. On some pretext (that it has no brake, etc.) the concerned man may be caught. Will the Government therefore find out the number of cases charged in different categories during the last week of the month so that the Hon. Chief Minister will come to know that the information given by Police department is not correct? Will the Hon. Chief Minister ask the Police officials to give the number of cases charged during the first three weeks as compared to those charged during the last week, so that he will have an opportunity to know the truth of the matter?

THE HON. THIRU C. N. ANNADURAI: I do not understand how the hon. Member infers from what he has made out, that instructions are being given. It may be due to the fact that police in the performance of their duties may be sluggish during the first week and become active during the last week. If as has been inferred by the hon. Member these cases are on the increase during the last week only and that I should look into matter, I will look into the matter. But as I have already informed the House, there is no such instruction.

### *Madras Government Officer lent to Pondicherry*

* 157 Q.—THIRU A. M. RAJA: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any request was received from the Government of Pondicherry State to lend the services of an officer of the Finance Department of this State for appointment as Finance Secretary to the Government of Pondicherry; and

(b) if so, the name of the officer recommended by this Government and the rank he was holding in this Government at the time of request?

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** (அ) ஆம்.

(இ) அரசாங்க நிதித் துறையில் அவ்வமயம் துணைச் செயலாளர்களாகப் பணியாற்றி வந்த திரு. N. அச்சுதன் நாயர் அவர்களும், திரு. P. N. சுப்பிரமணியம் அவர்களும்.

**திரு. ஏ. எம். ராஜா:** தலைவர் அவர்களே, அஸிஸ்டெண்ட் செக்ரட்டரியாக இருந்த திரு. சுப்பிரமணியத்தை பாண்டிச்சேரி அரசு முதலிலே ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தால், ஆபீஸர்ஸ் ஓரியண்டட் ஸ்கீம் என்ற முறையைப் புகுத்தி, அதன் மூலம் தமிழக அரசிலே அவருக்கு டெபுடி செகரட்டரியாகப் பதவி உயர்வு கொடுத்து, பின்பு அவரையே பாண்டிச்சேரி அரசுக்குச் சிபாரிசு செய்ததாகக் கூறப்படுவது உண்மையா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இந்த அரசு அச்சுதன் நாயர் என்பவரையும், பி. என். சுப்பிரமணியம் என்பவரையும் சிபாரிசு செய்தது. புதுவை அரசு பி. என். சுப்பிரமணியம் அவர்களை ஏற்றுக்கொண்டது.



### அரியலூரில் தீயணைப்புப் படை

* 158 **வினா.—திரு. ஆர். கருப்பையா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூரில் ஒரு தீயணைக்கும் படையை அமைக்கும் எண்ணமுண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இல்லை.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவர் அவர்களே, அரியலூர் வட்டாரத்திலே அரியலூர், உடையார்பாளையம், ஜெயங்கொண்டாம் போன்ற பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. அங்குள்ள வீடுகள் கூரை வீடுகளாக இருக்கின்றன. ஏதாவது தீ விபத்து என்றால் 45 அல்லது 50 மைல் தூரத்திலுள்ள திருச்சிக்கு தீயணைக்கும் படைக்காகச் சொல்லிவிட வேண்டியிருக்கிறது. நெருப்பு பிடித்தவுடன் எவ்வளவுதான் விரைவாகத் தகவல் கொடுத்தாலும் தீயணைப்புப் படையினர் வருவதற்குள் எல்லாம் எரிந்துவிடுகிறது. நெருப்பை அணைக்க முடியவில்லை. அவர்கள் எரிந்தவற்றைத்தான் பார்க்கமுடிகிறது. ஆகவே அந்தப் பின் தங்கிய பகுதிகளில் ஒவ்வொரு கோட்டாட்சி உள்ள இடங்களிலே தீயணைப்புப் படைகளை வைத்து அந்தப் பகுதி மக்களைக் காப்பாற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** எந்த எந்த இடங்களிலே தீயணைப்புப் படை ஏற்படுத்தவேண்டுமென்று சில ஊர்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே விரைவிலே பெரம்பலூரிலே ஒரு தீயணைப்புப் படை ஏற்படுத்தப்படுமென்று தெரிகிறது. அரியலூரிலிருந்து பெரம்பலூர் 30 கிலோ மீட்டர் தூரத்திலேதான் இருப்பதினாலே அரியலூருக்கும் பயன்படும். அரியலூரிலே இதுவரையிலும் 1968-ஆம் ஆண்டிலே 6 முறைகள்தான் தீயணைப்புப் படையின் உதவி கோரப்பட்டிருக்கிறது. 1967-ஆம் ஆண்டிலே 15 முறைகளும், 1966-ஆம் ஆண்டிலே 5 முறைகளும், 1965-ஆம் ஆண்டிலே 13 முறைகளும் தீயணைப்புப் படை தேவையென்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே அங்கே அவசரமாக உடனடியாக தீயணைப்புப் படை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இப்பொழுது இல்லை. முறைப்படி நகரங்களெல்லாம் தீயணைப்புப் படை வசதிகளைப் பெறுகின்றபொழுது பெரம்பலூருக்கும் அந்த வசதி கிடைக்கும். ஆகவே அரியலூருக்கும் அது பயன்படும்.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ:** நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கோவில்பட்டி, பாளையங்கோட்டை, தூத்துக்குடி போன்ற இடங்களிலே தீயணைப்புப் படைகள் ஏற்படுத்தவேண்டுமென்ற முறையில் நெல்லை மாவட்டத்திலே தாலுகாவிற்கொரு இடத்திலே தீயணைப்புப் படை அமைக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இது நேரடியாக இந்தக் கேள்வியோடு தொடர்பு கொண்டதல்ல என்றாலும் இதற்கு நான் அளித்திருக்கிற பதில் நண்பர் எழுப்பியிருக்கிற பிரச்சினைக்கும் பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

[1968 ஆகஸ்ட் 28

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### கோவில்பட்டி லட்சுமி மில் கதவடைப்பு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. சோ. அழகர்சாமி அவர்கள், திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி லட்சுமி மில் கதவடைப்பின் விளைவாக இரண்டாயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர் குடும்பங்கள் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டுள்ளதால் உடனடியாக மில்லைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று விவாதிக்க ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

தொழில் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள வேறு வழி வகைகள் இருப்பதாலும், கதவடைப்புப் போன்ற நிகழ்ச்சிகளை விவாதிக்க சபையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டியதில்லை என்ற தீர்ப்பு பல முறைகள் எற்கனவே வழங்கப்பட்டிருப்பதாலும் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## 3. அரசினர் தீர்மானம்.

### விதி 41 (3)—ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, "ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக்கூடாது என்ற 41 (3) விதியைத் தளர்த்த வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு அவ்விதி தளர்த்தப்படுகிறது. இப்பொழுது திரு. கே. சகாதேவ கண்டர், திரு. கே. விநயகம், திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்பு விஷயத்தைக் கொண்டுவருவார்கள்,

## 4. கவன ஈர்ப்பு.

### (1) செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களில் பருவ மழையின்மையும், பஞ்ச நிவாரண வேலைகளும்.

**திரு. கே. சகாதேவ கண்டர் :** தலைவர் அவர்களே, பருவ மழை தவறிவிட்டதால், வடாற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் ஏரி, குளம், கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் காய்ந்து குடிநீர் கிடைக்காமல் மக்களும், கால்நடைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பிரதேசங்களைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து பஞ்சநிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றிய பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** துணைத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டின் முற்பகுதியில் பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணமாக, வட ஆற்காடு மாவட்டத்தில் சுமார் 2,000 ஏரிகளுக்கு 1967 டிசம்பர் வரையில் போதிய நீர் கிடைக்கவில்லை. 1967 டிசம்பரில் அம் மாவட்டத்தில் நல்ல மழை பெய்யவே பல ஏரிகளுக்கு நீர் கிடைத்தது. அதன் விளைவாக, நெல் கொள்முதல் நல்லமுறையில் நடைபெற்றதுடன், வேர்க்கடலை பயிரும் நன்றாக விளைந்தது.

2,947 பாசன ஏரிகளில், 2,765 ஏரிகள் வறண்டுள்ளதாகவும் எனவே பாசனத்திற்குப் போதிய அளவு நீர் வசதியில்லையென்றும் மாவட்ட ஆட்சி தலைவர் கடைசியாக அனுப்பிய பருவ அறிக்கையில் அறிவித்துள்ளார். வேலூர், வந்தவாசி, செய்யாறு, திருப்பத்தூர் வட்டங்களில் முன்னோடி முறையில் நிலத்தை உழுகிற வேலை மேற்கொள்ளப்பட்டு நடந்தேறி வருகிறது. மாவட்டத்தின் நிலப் பகுதிகளில் மானவாரி வேர்க்கடலைப் பயிர் விதைக்கப்பட்டு வருகின்றது. குடியாத்தம், திருப்பத்தூர், வாணியம்



1968 ஆகஸ்ட் 28] [திரு. கே. ஏ. மதியழகன்]

பாடி, வேலூர் வட்டங்களில் சொர்ணவாரி நெற்பயிருக்கான நாற்று நடவு வேலைகள் நடந்தேறி வருகின்றன. நெல் கரும்பு, வாழை, கேழ்வரகு, எள், வேர்க்கடலை, கம்பு, சோளம், வெற்றிலை ஆகிய பயிர்களுக்கு இன்னும் அதிக மழை தேவைப்பட்டாலும், அவை நன்றாகவே வளர்ந்துள்ளன. எனினும், ஏரி நீர்த் தேவை காரணமாக நன்செய் நிலங்களில் பயிர்கள் சாவியாகிப்போய்விட்ட இடங்களில், வருவாய் கோட்ட திகாரிகள், பாதிக்கப்பட்ட நிலங்கள் குறித்து வருவாய்த்துறை வாரியத்தின் 13-ம் எண் நிலையாணையின் கீழ் அந்தந்தக் காலத்தில் தீர்வைத் தள்ளுபடி வழங்கி வருகின்றனர். ஆனால், இந்த அறிக்கையைத் தயாரித்ததற்குப் பிறகு வட ஆற்காடு மாவட்டம் போன்ற இடங்களிலே கடந்த இரண்டு நாட்களாக மழை பெய்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆனால் எந்த அளவுக்கு மழை பெய்திருக்கிறது என்ற முழு விவரம் இல்லையென்றாலும், அங்கேயுள்ள சங்கடமான நிலைமையைப் போக்குவதற்கு இந்த மழை உதவும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுச் சுகாதாரம் மன நிறைவு அளிக்கத்தக்கதாக உள்ளது. செங்கற்பட்டு மாவட்ட வறட்சி நிலைமைகளைப் பற்றிய தனி அறிக்கையொன்று 31-8-1968-க்கு முன்னர் இப்பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், நேற்றையதினம் நான் ஊருக்குப் போயிருந்தேன். கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் மழையொன்றும் அங்கே கிடையாது. இலேசாகத் தூரல் போட்டதனால் அதை மழை என்று சொல்லிவிட முடியாது. மழையை நம்பித்தான் அங்கே வேர்க்கடலை, அவரை, துவரை போன்ற பயிர்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். நெல், கரும்பு, வாழை எல்லாம் தீய்ந்துவிட்டன. ஆகவே, உடனடியாக அந்தப் பகுதியில் கிணறுகளை வெட்டுவதற்கும், புதிய கிணறுகளை வெட்டுவதற்கும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், அங்கே பாறையாக இருப்பதால் வேண்டிய கருவிகளையும் போதுமான பணத்தையும் ஒதுக்கி விவசாய அபிவிருத்தி செய்வதன்மூலம் அங்கே ஓர் அளவுக்கு உதவி செய்ய முடியும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கிணறு வெட்ட வேண்டுமென்று சொல்வது வேறு ஒன்று. குடியாத்தத்திலே எந்த அளவுக்கு மழை பெய்ததோ தெரியவில்லை. திரு. முருகையன், திருவண்ணாமலை, வந்தவாசி, போளூர், செங்கம் போன்ற இடங்களுக்குப் போயிருக்கிறார்கள். அங்கே பெய்திருக்கிறது—ஆனால் அதனாலே சரியாகிவிட்டது என்று நான் சொல்லவில்லை. அவர்கள் சொல்வது நீண்டகாலப் பிரச்னை. இந்தப் பிரச்னை வட ஆற்காடு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் தீவிரமாகக் கவனிக்கப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்தந்த நிலைமைகளுக்கு ஏற்றபடி சாத்தியக் கூறுகளை நாம் பரிசீலனை செய்கிறோம்.

**திரு. கே. விநயகம் :** வட ஆற்காடு மாவட்டத்திலே தூரல் இருந்ததாகச் சொன்னார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திலே திருத்தணியிலே ஆடு மாடுகளுக்குக் குடிக்கக் கூட தண்ணீர் இல்லாமல் அவதியாக இருக்கிறது. அம்மாதிரி இருக்கிற நிலங்களைப் பொறுத்த வரையில் வரி வஜா செய்து ஃபாமின் ஏரியா என்று பிரகடனப்படுத்தி ஃபாமின் ரிலீஃப் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பஞ்சப் பிரதேசம் என்று சொல்வது கொஞ்சம் வறட்சியாகப் போய்விட்டதால் சொல்லிவிட முடியாது. அப்படி அறிவிப்பதற்கு எத்தனையோ விதிகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள். மாடு, கன்றுகள் இறக்க வேண்டும், திருத்தணி மக்கள் சாப்பாட்டுக்கு இல்லாது கால்நடையாகவே வெளியூர்களுக்குச் செல்ல வேண்டும், பஸ்கள் புறப்படக் கூடாது, சினிமாக் கொட்டகைகளில் எல்லாம் வசூல் ஆகக் கூடாது. இப்படிப்பட்ட நிலைமைகள்

இருந்தால்தான் வறட்சியான நிலைமையே தவிர, அப்படியிருந்தால்தான் பஞ்சப் பிரதேசம் என்று பிரகடனப்படுத்தவேண்டும். ஆனால் அந்த நிலை தமிழ்நாட்டிலே எங்கேயும் ஏற்படவில்லை.

## (2) காஞ்சீபுரம் லுங்கி கைத்தறி நெசவாளர்கள் வேலை நிறுத்தம்.

**திரு. க. ர. நல்லசிவம் :** துணைத் தலைவர் அவர்களே, கடந்த 18-8-1968-ம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்துவரும் காஞ்சீபுரம் லுங்கி கைத்தறி நெசவாளர்களின் நிலைபற்றிய அவசரப் பொது முக்கிய மான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, காஞ்சீபுரம் நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளான பிள்ளையார்பாளையம், ஒலிமுகமதுபேட்டை, பெரிய காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் சுமார் 2,000 தறிகள் (கைத்தறி-பருத்தி) லுங்கி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. பெரிய காஞ்சீபுரத்திலுள்ள பருத்தி லுங்கி உற்பத்தி செய்யும் சுமார் 600 நெசவாளர்கள் 17-8-1968 அன்று கூலி உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்தனர். நகரின் மற்றப் பகுதிகளான பிள்ளையார் பாளையம், ஒலிமுகமதுபேட்டையிலுள்ள நெசவாளர்கள் இந்த வேலை நிறுத் தத்தில் கலந்துகொள்ளவில்லை. பெரிய காஞ்சீபுரத்திலுள்ள நெசவாளர் சங்கத் தலைவரான திரு கி. முனுசாமி முதலியார் அவர்கள் தலைமையில் வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது. இந்த நெசவாளர்கள் 20-8-1968 அன்று ஊர்வலமாகச் சென்று காஞ்சீபுரத்திலுள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களைச் சந்தித்து (பருத்தி) லுங்கி நெய்வதற்காக கூலி உயர்வு தர வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய மனுவினைக் கொடுத்துள்ளனர். மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி மாவட்ட வருவாய்த்துறை அலுவலர், லுங்கி வியாபாரிகள், நெசவாளர்கள் அடங்கிய கூட்டத்தினைக் கூட்டி, பேச்சு வார்த்தைகள் நடத்தி சுமுகமான முறையில் கூலிகளை ரகத் திற்கு 75 பைசா முதல் ரூபாய் ஒன்று வரை அதிகரித்து ஒவ்வொரு லுங்கி வகைக்கும் கீழ்க்காணும் கூலிகளை நிர்ணயம் செய்துள்ளார்:—

| | | முன்னதாக கொடுக் ப்பட்ட கூலி. ரூ. பைசா. | புதிய கூலி விவரம். ரூ. பைசா. |
|---|---|---|---|
| 1. 80 | 80″—50″ | 20 50 | 21 50 |
| 2. 80 | 80″—36″ | 14 50 | 14 75 |
| 3. 80 | 80″—30″ | 13 00 | 13 75 |
| 4. 60 | 40″—50″ (வெள்ளையும் கலரும்) | 13 50 | 14 25 |
| 5. 60 | .40″—50″ (சலவை) | 13 00 | 13 75 |

இரு தரப்பினர்களும் புதிய கூலி விவரத்தை ஏற்றுக்கொண்டனர். இதன் பிறகு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த நெசவாளர்கள், 22-8-1968 முதல் வேலைக்குத் திரும்பியுள்ளனர். இருந்தபோதிலும், வியாபாரிகளில் சிலர் 60-40 வகை லுங்கிகளில் தங்களுக்குப் போதுமான இலாபம் கிடைக்கவில்லை என்பதால், இந்தக் குறிப்பிட்ட வகைக்குக் கூலி உயர்வு கொடுப்பதில் தயங்குகிறார்கள். ஆகையால் நெசவாளர் சங்கத் தலைவர் அவர்கள் 23-8-1968 அன்று மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் (District Revenue Officer) அவர்களிடம் மீண்டும் ஒரு மனுவினைக் கொடுத்துள்ளார். அந்த மனு ஆலோசனையில் உள்ளது. ஆனால் 22-8-1968 முதல் நெசவாளர்கள் எல்லோரும் வேலைக்குச் சென்று வரு கின்றனர்.

காஞ்சீபுரம் சரக கூட்டுறவு துணைப் பதிவாளர் அவர்களும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு, சுமுகமான முறையில் முடிவு காண உதவியுள்ளார்.





இப்பொழுது லுங்கி வியாபாரம் நல்ல முறையில் இருக்கிறபடியாலும், நெச வாளர்களுக்குத் தொடர்ந்து வேலைகொடுக்கப்படுவதாலும், லுங்கித் தொழி லில் ஈடுபட்டுள்ள ஒரு நெசவாளியின் மாத வருமானம் ரூ. 75 முதல் ரூ. 100 வரையிலுள்ளது. லுங்கி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முன்பைவிட இப்பொழுது அதிகமான அளவில் லாபம் கிடைத்துவருகிறது என்ற அடிப்படையின் பேரிலேயே இந்த நெசவாளர்கள் கூலி உயர்வு கேட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்பது தெரியவருகிறது.

## (3) இராதாபுரம் துணை வட்டத்தில் பருவ மழையின்மையும் பஞ்ச நிவாரண வேலைகளும்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்தில் தொடர்ச்சியாக பருவமழை தவறியதால் கிணறுகளில் தண்ணீர் இன்றி வறட்சி ஏற்பட்டு வேளாண்மைப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதால் அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் பஞ்ச நிவாரண வேலையை ஆரம்பிக்கவும், அவர்கள் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய கடன் வசூல்களைத் தள்ளி வைக்கவும், நஞ்சைத் தீர்வையைத் தள்ளுபடி செய்யவும் வேண்டி யது பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பிசானப் பயிர்ப் பருவத்தின் போது வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிட்டதன் காரணமாக, திரு நெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்திலும், பிற வட்டங்களி லும் பயிர்கள் பாதிக்கப்பட்டன. குறிப்பாக இராதாபுரம் துணை வட்டத்தில் மழை பெரிதும் தவறிவிட்டதால் அங்கே பெரும் பகுதிகளில் நஞ்செய் பயிர்களும் புஞ்செய் பயிர்களும் சாவியடைந்துவிட்டன. வருவாய்த் துறை வாரிய 13-ம் எண் நிலையாணையின் கீழ் நஞ்சை நிலங்களுக்கு நில வரித் தள்ளுபடி வழங்கப்பட்டது. மேலும், நஞ்செய் நிலங்கள் மீதான நடப்பு நிலவரி வசூலை 1378-ம் பசலிக்கு ஒத்திப் போடவும் அனுமதி வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில் கடன் தவணைகளை மெதுவாக வசூல் செய்யும் கொள்கையைப் பின்பற்றுமாறும் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, கடந்த மார்ச் திங்களில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு தீர் மானம் கொண்டுவந்தபோது, ராதாபுரம் பகுதியில் நிலத் தீர்வையைத் தள்ளுபடி செய்யவும், பஞ்ச நிவாரண வேலைகளுக்காக ரூ. 5,30,000 அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். நாளது தேதி வரை அங்கு மழை பெய்யாத காரணத்தால் கூடுதலாகப் பஞ்ச நிலை ஏற்பட்டு இருப்பதால் பஞ்ச நிவாரண வேலையை உடனடியாக ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தற்போது நிலத் தீர்வை தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. பஞ்ச நிவாரண வேலைகள் எந்த அளவு செய்யப்பட்டு வருகின்றன, இன்னும் எந்த அளவு அனுமதிக்கலாம் என்பது மாவட்ட அதிகாரியின் விரிவான அறிக்கையின் பேரில்தான் மேற் கொள்ள வேண்டும். அந்த வகையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள் வது அவசியம் என்று கருதப்பட்டால் அரசாங்கம் யோசிக்கலாம்.

## (4) திருச்சி மாவட்டத்தில் மர்மத் தீ விபத்துகளினால் ஏற்பட்ட சேதங்கள்.

**திரு ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, கடந்த மூன்று வார காலமாக திருச்சி நகர்ப்புறங்களிலும், திருச்சி மாவட்டத்தில் கிராமப் பகுதி களிலும் பரவலாக மர்மத் தீ விபத்து ஏற்பட்டு வீடுகளும் வைக்கோற்

போர்களும் தானிய சேமிப்புகளும் சேதமடைந்து உள்ள நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, திருச் சிராப்பள்ளி மாவட்டத்தில் 14-6-1968 முதல் 14-8-1968 வரை உள்ள காலத்தில் 11 தீ விபத்துக்கள் ஏற்பட்டன. அவை பற்றிய விவரங்கள் கீழே உள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன. இத் தீ விபத்துக்களின் விளைவாக 12 பேர் உயிரிழந்தனர். நிவாரணத் தொகை ரூ. 46,840 வழங்கப்பட்டது.

| தீ விபத்து நடந்த தேதி. (1) | | இடம். (2) | வழங்கப்பட்ட நிவாரணத் தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 14-6-1968 | .. | சிலுப்பானூர் கிராமம், அரியலூர் தாலுகா. | 7,320 |
| 24-6-1968 | .. | திருவரம்பூர் கிராமம், திருச்சிராப்பள்ளி தாலுகா. | .. |
| 26-6-1968 | .. | மேலரசூர் கிராமம், லால்குடி தாலுகா .. | 10,000 |
| 10-7-1968 | .. | ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி தாலுகா .. | .. |
| 14-7-1968 | .. | பெரியார் நகர், வருகனேரி கிராமம், திருச்சிராப்பள்ளி தாலுகா. | 12,440 |
| 16-7-1968 | .. | வையம்பட்டி கிராமம், மணப்பாறை தாலுகா. | .. |
| 19-7-1968 | .. | புத்தூர் h/o ஆண்டிபட்டகாடு, அரியலூர் தாலுகா. | .. |
| 24-7-1968 | .. | மேட்டுப்பட்டி கிராமம், லால்குடி தாலுகா. | 8,720 |
| 27-7-1968 | .. | கணக்கப்பட்டி கிராமம், கரூர் தாலுகா. | .. |
| 14-8-1968 | | திருமலப்பாடி கிராமம், அரியலூர் தாலுகா. | 6,040 |
| 14-8-1968 | .. | அழகாபுரி கிராமம், துறையூர் உபதாலுகா. | 2,320 |

**திரு. ஆர். கருப்பையா :** இந்த எரிந்துபோன வீடுகளைக் கட்டிக்கொள்ள அந்த விவசாயிகளுக்கு 2,000. 3,000 ரூபாய் கடனுக, ஐந்து வருடத் தவணைக் கடனுக குறைந்த வட்டியில் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். ஹரிஜன மக்களைப் பொறுத்த வரையில் ரூ. 300 வட்டியில்லாக் கடன் கொடுக்கப்படுகிறது ஒரு நபர் ஜாமீன்மீது தக்காவிக் கடன் என்ற முறையிலும் வாங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது.

### 5. தன்னிலை விளக்கம்.

### திரு. க. இராமமூர்த்தி ஆற்றிய உரையில் திருத்தம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு இராமமூர்த்தி அவர்கள் ஒரு விளக்கம் அளிப்பார்கள்.

**திரு க. இராமமூர்த்தி :** இந்த அவையின் அனுமதியோடு 24-8-1968 அன்று நான் பேசியபோது சொல்லிய விவரங்களில் ஒன்றிரண்டைத் திருத் திக் கொள்ள விரும்புகிறேன்.

சேலம் மத்தியச் சிறையில் ஒரு கைதி இறந்ததேதி 8-8-1968 என்று சொல்லியிருந்தேன். அதை 6-8-1968 என்று திருத்திக்கொள்ள வேண்டு கிறேன். அந்தக் கைதி செங்கல்பட்டு சப் ஜெயிலிலிருந்து சேலம் மத்திய சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகச் சொல்லியிருந்தேன். செங்கல் பட்டு சப் ஜெயில் என்பதை சைதாப்பேட்டை போலீஸ் நிலையம் என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.





**6. அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்—தொடர்ச்சி.**

THIRU K. VINAYAKAM : Mr. Deputy Speaker, Sir, I am not trying to be apologetic when I say that I am not very happy in associating myself with this No-Confidence Motion against this Ministry. But it is a painful duty to do so and I had spent many sleepless and restless nights to decide whether I should take part in this discussion.

Sir, I am perfectly aware that it is not possible to pilot through this motion in this House against the Party having a road-roller majority, viz., 139 seats as against a meagre strength of 49 seats that we have. I know that this motion will not pass through this House but still I make bold to take part in this discussion because the object is only to highlight and attract the public opinion on the doings of this Government wherever they have fallen below the standard and to point out their short comings and their acts of commission and omission. If that could be achieved, I would be more than happy.

Sir, I have known our Hon. Chief Minister long before anybody in this House, except my hon. Friend, Thiru Natarajan, knows him. Sir, for us, he was considered to be Dr. Johnson and I was one of his "Boswells" and such was the respect I had for him and in the early days of my political career, he contributed much towards my coming to this House. I spite of all these things, why should I take this role today. He might even say, Yeh, Bruto—to quote from Julius Ceaser—you are also stabbing me". I know I am stabbing him, but this Julius Ceaser is not going to die and he is going to walk triumphantly because he has got a large majority. But this is a job which I have got to do. Now, how did our Chief Minister come to power ? When we were in power, there could have been here and there lapses and he made a political Capital of those shortcomings and he rallied youngmen around his party and gone about the country making vituperative villifications-almost character assassination—against our ex-Ministers and also throwing wrong promises which he perfectly knew that he could not fulfill. But he convinced them with his capacity of public-speaking and they rightly or wrongly voted for him and now they are reaping the fruits. . . .

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member is at liberty to say any disparaging remark against me but let him not commit the error of villifying the people who have recorded their judgment.

THIRU K. VINAYAKAM : I concede that the Hon. Chief Minister has been villifying and indulging in character assassination against my colleagues, ex-Ministers.

THE HON. THIRU C. N. ANNADURAI : In short what my hon. Friend wants to impress on this House is that the people were misled by me and I call that "the burden of the song" By making such a disparaging statement about the people, the hon. Member is doubting the people's capacity to judge and that is not very good because he is discounting the capabilities and the intelligence of the public.

THIRU K. VINAYAKAM : I know our Hon. Chief Minister is an adept in this kind of obstructionist tactics. He wants to take away the wind from out of the sails and he thinks that he can unnerve me by this kind of intervention.

THE HON. THIRU C. N. ANNADURAI : I know that he would not be unnerved by this intervention. As a matter of fact doctors tell me that my nerves are weak. What I am trying to say is that if what the hon. Member has stated goes into the official records, people are apt to misjudge him. They may say, "we have very coolly and calmly taken the decision in 1967 and here is an hon. Member belonging to the Opposition Party making a statement on the floor of the House that we are not intelligent". (Thiru K. Vinayakam : You are intelligent). There is no harm in calling me intelligent or not intelligent but what about the intelligence of the people. As far as the judgment of the people is concerned, I would ask him to reshape his sentence.

THIRU K. VINAYAKAM : Mr. Deputy Speaker, Sir, you must take into consideration the time consumed by our Hon. Chief Minister in interfering with my trend of thought. Never mind about that and there is nothing personal about all these things. Whatever we say against him and his Ministry is impersonal . . . .

THE HON. THIRU C. N. ANNADURAI : Again my hon. Friend forces me to intervene. I am not at all worried about his remarks about me or about my colleagues—whether the remarks are good or bad or indifferent—but what I am concerned is that the hon Member should not pass on a sweeping judgment about the people and he should not say that the people have been misled . . .

THIRU P. G. KARUTHIRUMAN : Mr. Deputy Speaker, Sir, the Hon. Chief Minister has taken objection to the use of the words "people have been misled" on the ground that it would go against the people's verdict. Of course, it is for the people to judge. The Great Abraham Lincoln who spoke about the Government of the people, by the people and for the people also stated : ' People may err in an election. The remedy is the next election". The words ' people may have been misled" used by hon. Friend, Thiru Vinayakam are parliamentary and I would like to draw the attention of the Hon. Chief Minister to what Abraham Lincoln had stated viz., ' people may err in an election".

THE HON. THIRU C. N. ANNADURAI: But that great Abraham Lincoln had used the word "may" only and according to the English grammar the expression "may" means "may" or "may not". Now my hon. Friend has made a categorical statement that the people were misled by me which means that the people's judgment is discounted by him. I want to oppose such a sweeping remark about the judgment of the people.



THIRU K. VINAYAKAM : Mr. Deputy Speaker, Sir, if you refer to the official proceedings, you will find that I have only used the words "rightly or wrongly they voted for him to come to power". That means that they may be wrong or they may be right and their judgment also may be wrong or may be right . . .

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I am not questioning that but the hon. Member had stated that people were misled by me. If that is admitted, it means that the people are apt to be misled and that they do not have enough judgment to find out whether what we say is correct or not.

THIRU K. VINAYAKAM : Sir, I do not want to waste the time of the House on this point. Now coming to the election promises to the people, one of them is that he would give a better and cleaner Government and he held a carrot before a hungry donkey. He said that he would give three measures of rice for a rupee and the people were naturally led to get into his trap and they voted for him. But what about their election promises ?

THE HON. THIRU C. N. ANNADURAI : He is courting intervention from me again. In our election manifesto, we have never stated that we would give three measures of rice for a rupee. What we have stated in our election manifesto is that if things are to be arranged properly and if steps are taken with regard to smugglers and blackmarketeers and others, the supply of three measures of rice is not an impossibility.

THIRU K. VINAYAKAM : On so many occasions one rupee measure was promised. Let the Hon. Chief Minister say whether he is going to extend the measure throughout the State or let him say clearly that it is not possible so that the people may be satisfied.

THE HON. THIRU C. N. ANNADURAI : Mr. Deputy Speaker, Sir, the hon. Member is not only inviting or creating occasions for intervention but he likes it. That is why he is putting a direct question to me. When we stated that we would give one measure of rice per rupee it was qualified by the condition it will be for statutory ration areas in our State. The extension, if and when it arises, will only cover statutory ration areas and not the entire State.

THIRU K. VINAYAKAM : If I could trust my memory, never did the Hon. Chief Minister restrict this to statutory ration areas. You, or if you are not, your friends and colleagues in the entire party have been saying that one rupee per measure rice scheme will be for the entire State. But now you people say that unless situation improves, unless the Central Government comes with aid, extension throughout State is not possible. All these things were not said before. You are now trying to qualify the previous statement and the people will judge you by your actions.

THE HON. THIRU C. N. ANNADURAI: Not merely now; but I have made this statement more than once here also.

THIRU K. VINAYAKAM: Let us now come to another point. I know correctly that Madras State Police is one of the best in the world next only to Scotland Yard in England, in their capacity to investigate crimes and check offenders. With such fine police, you are still not in a position to detect crimes, I mean crimes pertaining to huts getting fire frequently in the City. What kind of explanation can be given by the Hon. Chief Minister to these fires? People, poor people have been thrown out of their households and some had to sleep on platforms. A Special Officer was asked to give a report on these fires? The Hon. Chief Minister is taking cover that he would have published the report but a case was pending in the High Court and so he could not publish the same. Under this cover, how long can you rule and put people under suspicion. Sometimes he is threatening that some of our partymen are also clubbed in this and that he could even divulge the names, which may strike me with wonder. May I ask, in all humility, please divulge the names. Let us see whether our partymen are victims of this bad behaviour. If that material could be made available, it would do some good to our party. Let us see who are victims of bad behaviour in our party.

THE HON. THIRU C. N. ANNADURAI: As a lawyer, the hon. Member has admitted that since there is a case pending, the report cannot be published. Having admitted that, it is very unhappy that he should use the word that I am taking "cover".

THIRU K. VINAYAKAM: English language is like that.

THE HON. THIRU C. N. ANNADURAI: He says that English language is like that. There are many civilised words in the English language.

THIRU K. VINAYAKAM: As an Opposition Member, how can you expect me not to use strong words?

THE HON. THIRU C. N. ANNADURAI: He says that as an Opposition Member I cannot expect him to use civilised words. Strong words there can be and yet they may be civilised. I do not want to find fault with him for having used that word "cover". Having admitted that there is a case in the Court, it is not a question of taking cover but acting according to strict judicial conduct that this Government is not publishing the report at present.

THIRU K. VINAYAKAM: Next point. I want to refer to a quotation from Julius Ceaser. "Ceaser's wife must be above suspicion". It should also be made to appear to the country that Ceaser's wife must be above suspicion. You have appointed legal Officers, Advocate-General, Public Prosecutor, etc. I do not question their competence to appear in Courts. The Advocate-General is there to give his opinion in cases wherein Government is a party. But there are cases wherein advice of persons other than Advocate-



General has been taken. In one case pending before the High Court, a High Court Judge remarked as to why the Advocate-General conceded a point which resulted in a great loss. The case referred to is about Sales Tax. In the case of nationalisation of transport, I am reliably informed that our Law Minister consulted Thiru Mohan Kumaramangalam and even paid fees for his services. If that be so, what explanation one can have, when one of the greatest efficient luminous character like Advocate-General is there for Government. When he is there at the top of legal advisers, why should the help of another be taken? These things should be reconsidered. Caeser's wife must be above suspicion. She must appear to be so. My friend Mr. Martin was telling about some appointment. I am not going into all those things. I can cite also some instances. But you can show such favours to people you want because you are in a fortunate position and you are in power. But it is true that people in power should make sacrifices. You should make it clear that you are having a clean Government.

THE HON. THIRU C. N. ANNADURAI: The Opposition has been harping upon the phrase "Caeser's wife should be above suspicion" because there is a phrase like that. But it is not as if Caeser's wife should go about establishing her purity to every individual.

THIRU K. VINAYAKAM: She should appear like that to others, who watch her. She should appear to be above suspicion.

THE HON. THIRU C. N. ANNADURAI: Caeser's wife should be above suspicion and Caeser is the best judge of that.

THIRU K. VINAYAKAM: The poor lady, Caeser's wife, need not be dragged into the picture too much. I would request the Chief Minister to leave it there and not go further.

This kind of giving some appointments to men of their choice for directorship of spinning mills, co-operative sugar mills, I ask, is it fair? You have pushed your own men. Is this fair?

The Hon. Chief Minister wants us to believe that there is no economic stagnation in our country. Does he want me to believe that everything is in order? You may say that we have been in power for twenty years. You are now in power for the past 15 months? Have you taken precaution to see that our State is better off? It is asked what is it that the Congress has done for these twenty years? There is a Government publication regarding that and I want the Hon. Chief Minister to see that we started many industries and many more industries were also proposed to be started in our State, but then you had come to power. With the starting of many industries, having laid an industrial base, we have almost solved unemployment problem among educated people in the past. But what is the situation today? As far as my information goes, 2 lakhs of boys and girls have passed S.S.L.C. and about 56,000 or so have taken to collegiate education. But what about the rest?

THE HON. THIRU C. N. ANNADURAI : Is the hon. Member trying to prove that the Congress has solved unemployment problem when it was in power ?

THIRU K. VINAYAKAM : I said "almost solved the problem".

THE HON. THIRU C. N. ANNADURAI : Let my hon. friend go through the reports that are published along with every Five-Year Plan. He will know then that along with every Five Year Plan, unemployment figure is rising up and not going down.

முற்பகல் 10-30

THIRU K. VINAYAKAM: It is not going down, that I admit. What is the contribution which this Government has made after it came to power ? That is all that I am harping upon. This is a old woman's story, telling me every time "What has your Government done ? Am I not much better than what you were?" This kind of argument will not satisfy either your party or my party.

THE HON. THIRU C. N. ANNADURAI : I realise that that argument irritates. But I do not propose to give it up because a Government can be judged only by comparison with other Governments. A comparison has to be made between the performance of the previous government and the performance of this Government. If you restrict your remarks to one and a half years of your government and compare with our Government, then it is logical. But if you try to compare your fifteen year's achievement with our one and a half year's achievement, it is not only illogical, it does not do good either to the member or to his party.

THIRU K. VINAYAKAM : I know that our Chief Minister is slowly trying to lose patience. I will only counsel patience, because losing patience will not do him good in his present state of bad health.

I come to the question of labour unrest in the State. It is not as if there were no strikes, lock-outs and things of that sort when my party was running the government. Even taking for granted your promise and conclusion and that the comparison should be between the performance of one and a half years of my Government with one and a half years of your Government, if we take into account the lock-outs and labour unrest resulting in shooting, the number of people thrown out of job, number of mandays lost, economic benefits derived or monetary loss sustained, it will be a glaring comparison which will show that we did a much better job than what you are now trying to achieve.

Swatantra Party at the same time condemns the despicable attitude of capitalists in not respecting the rights and needs of genuine Trade Union movement. The responsibility for dragging exploiting politicians into the Trade Union movement falls to a great extent squarely on the shoulders of these selfish capitalists. Swatantra Party will not tolerate this attitude of the capitalists whether they are private people, quasi-Governmental or Governmental agencies. If there is to be a conflict between labour and capital, our party will unhesitatingly side labour unless their demands are proved to be unreasonable. This is a warning which we hope the self-seeking capitalists will take note of. We fully

[Dr. H. V. Hande] [1968 ஆகஸ்ட் 28

endorse the policy of Minister Madhavan in cutting the capitalists to their size. At the same time however we insist that the Minister for Labour must adopt a uniform policy while tackling the labour unions whether they are headed by politicians of whichever party or by independents. In this connection I wish to read out a very interesting extract from 'The Daily Telegraph', London which has a circulation of 14 lakhs in England. This is an ideal which will be useful here and which, I hope, will be an ideal for the country as a whole.

"More than 50,000 railwaymen are to receive increases of 30s a week, equal to 15 per cent, and another 130,000 will be given rises ranging from 3 to 12 per cent in one of the most revolutionary agreements ever made between the British Railways Board and the railway unions. After two-and-half weeks of solid negotiations between the board and the unions of Windsor and another four days of heated discussions by the National Union of Railway men executive, the NUR last night accepted the agreement by 15 votes to 9. The executive sat for more than five hours before reaching its decision........"

The most important point for all our friends hereto whatever party they belong is this :—

"The money will be repaid by productivity, versatality and efficiency It will cost the Railway Board £ 13 million in a full year to implement, but will bring about an 'ultimate saving' of £ 13,300,000 a year." In other words the amount of saving is £ 300,000 a year. This is only a pointer to show that there should be harmonious relationship between labour and capital and respect for Trade Union rights.

As far as raffles are concerned, this is what Rajaji has written in an article in the 'Swarajya':—

Revenue derived by taxation of licensed non-governmental bodies conducting horse-races and the like is a different matter and can be no precedent or justification for any State Government directly making revenue by raffles held by it, for **which there is no** constitutional authority.

**This is the view of Rajaji.**

If unfortunately my congress Friends think that they are gaining any strength, I say that we have absolutely no faith in the Congress Party. We have every faith in the Dravida Munnetra Kazhagam and we have put before them all the shortcomings and the faults that they have committed factually as if in a mirror and not the exaggerated versions of the Congress or the Communist Party as seen in a concave or convex mirror. I hope the Government will take serious note of the points and not brush them aside as being frivolous. I hope that the Government will justify the confidence that the people have reposed in them.

THE HON. THIRU C. N. ANNADURAI : I will certainly give respect to all the opinions provided they conform to the policy and principles adopted by this Government.



1968 ஆகஸ்ட் 28]

**திரு. சி. வீரமணி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நம் மதிப்பிற்குரிய காங்கிரஸ் சகோதரர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பார்க்கிறபோது அதில் எந்தக் காரணமும் எனக்குத் தென்படவில்லை. மக்கள் அவர்களின் மீதுள்ள நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். எனவே அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அவர்கள் ஆளும் கட்சியின்மீது திணிக்கப் பார்க்கிறார்கள். காரணம், அவர்கள் 1967-ல் மக்களிடம் சென்றார்கள். அப்போது மக்கள் அவர்களிடம் நம்பிக்கையில்லை என்று சொல்லிவிட்டார்கள். அதன் பின்னர் தென் சென்னை உப தேர்தலுக்கு சென்றார்கள். அப்போதும் மக்கள் அவர்கள் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லிவிட்டார்கள். நகரம் போகட்டும், கிராமங்களுக்கு வந்தார்கள். சங்கரிக்கு வந்தார்கள். அப்போதும் மக்கள் அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். பிறகு தென்காசிக்குச் சென்றார்கள். அப்போதும் மக்கள் அவர்கள் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லிவிட்டார்கள். இத்தனையும் நேர்ந்த பிறகு அவர்களுக்கு மக்களின் மீது ஒரே கோபம். அந்தக் கோபத்தை யார்மீது காட்டுவது என்று நினைத்தார்கள். அந்தக் கோபத்தை மக்கள் மீது விட்டால் அவர்கள் நம்மைப் பழி வாங்குவார்களே என்று கருதித்தான் மக்கள் யாரை நம்பி ஆளும் கட்சியாக ஏற்படுத்தியிருக்கிறார்களோ அந்த ஆட்சி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தால், என்ன என்று முடிவு செய்துதான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர இதில் வேறொன்றுமில்லை என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

நான் காங்கிரஸ் நண்பர்களைக் கேட்க விரும்புகிறேன். எங்கள்மீது நம்பிக்கை இல்லை என்று சொல்கிறீர்களே, நீங்கள் எப்போதுதான் எங்கள் மீது நம்பிக்கை வைத்தீர்கள் ? என்று. 1957-ல் மக்கள் எங்கள் கட்சியைச் சார்ந்த 15 சட்டமன்ற உறுப்பினர்களைச் சட்டமன்றத்திற்கு அனுப்பினார்கள். அப்போதும் எங்கள் மீது அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. 1962-ல் 50 சட்டமன்ற உறுப்பினர்களை அனுப்பினார்கள். அப்போதும் எங்களை மதிக்கவில்லை. எங்கள்மீது நம்பிக்கை கொள்ளவில்லை. 1967-ல் தமிழக மக்கள் எங்களை ஆதரித்து ஆளும் கட்சியாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்பொழுதும் நீங்கள் நம்பிக்கை கொள்ளாமல் தமிழ் நாட்டில், தமிழகத்தில் விஷக் கிருமிகள் பரவிவிட்டன என்று கூறினீர்கள்.

(திரு ந. தருமலிங்கம் தலைமை).

அப்போதும் எங்கள்மீது உங்களுக்கு நம்பிக்கையில்லை. பிறகு, மக்கள் மீதாவது நம்பிகை ஏற்பட்டதாஎன்றால் மக்கள் போதையில் ஓட்டுப் போட்டுவிட்டார்கள் என்று கூறினீர்கள். உங்கள் மீது நம்பிக்கையில்லை என்று மக்கள் உங்களிடம் கூறிவிட்டதால் நீங்கள் எங்கள் மீது நம்பிக்கையில்லை என்று கூறுகிறீர்களே தவிர, உண்மையில் எங்கள்மீது உங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது என்றே கருதுகிறேன்.

ஒரு அவலட்சணமான பெண் இலட்சணமாக உள்ள பெண்ணைப் பார்த்து அட அவலட்சணமே என்று கூறுவதுதான் வழக்கம், அதுதான் இயற்கை. அதே போல நமது நண்பர்கள் நம்பிக்கை இல்லை என்று கூறுகிறார்கள். அதே இலட்சணம் உள்ள பெண் அவலட்சணம் உள்ள பெண்ணைப் பார்த்து, "இந்தக் கண்ணாடியைப் பார் அம்மா, உன் முகம் எப்படித் தெரிகிறது" என்று கூறுவதைப் போல், "நீங்கள் நடந்து கொண்ட பாதையைச் சற்று நோக்குங்கள்" என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சமயத்தில் அப்பொழுது எத்தகைய இக்கட்டான நிலைமையிருந்தது, எத்தகைய சூழ்நிலையில் நாங்கள் இருந்தோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மக்களுக்கு உணவு இல்லை என்ற நெருக்கடி, இருபதாண்டு காலம் ஆட்சி புரிந்தும், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும், இவ்வளவு பேரும் பசியால் பட்டினியால் வாடினார்கள். ஆட்சியை ஏற்றவுடன் எங்கள் கண் முன்னால் நின்றது, இவ்வளவு பேரின் பசியையும் போக்க வேண்டுமென்பதுதான். அந்தக் குறிக்கோளோடுதான் இருந்தோம். அவ்வாறு நினைத்ததைத் தான் சாதித்தோம்.

[திரு. சி. வீரமணி] [1968 ஆகஸ்ட் 28

1965–66-இல் மழையின் அளவு 315 மில்லி மீட்டர். மழை பெய்த நாட்கள் 41. 1966–67-இல் பெய்த மழையின் அளவு 416 மில்லி மீட்டர், பெய்த நாட்கள் 48. ஆனால் 1967–68-இல் பெய்த மழையின் அளவோ 286 மில்லி மீட்டர், பெய்த நாட்கள் 39. 1966–67ஆம் ஆண்டில் பெய்த மழையைக் காட்டிலும் 1967–68-இல் பெய்த மழை 23 சதவிகிதம் குறைவு. ஆனால் 1967–68-இலே 60 இலட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறோம். இது 1966–67-ஐவிட 2 இலட்சம் டன் அதிகம். இது 1965–66-ஐவிட 7·4 லட்சம் டன் அதிகமாகும். இதைவிட வேறு என்ன எதிர்பார்க்கிறீர்கள்; எது வேண்டுமோ அதைச் செய்தோம். மக்களின் பசியைப்போக்க வேண்டுமென்று கருதினோம், அதைச் செய்தோம். நீங்கள் கேட்பீர்கள் 'நாங்கள் இதைச் செய்யவில்லையா' என்று. நீங்கள் எதைத்தான் செய்யவில்லை மக்களைப் பட்டினிபோட்டு அதனின்றும் அவர்களைக் காப்பாற்றுவதைத்தவிர மற்ற எல்லாக் காரியங்களையும் செய்தீர்கள். பணக்காரர்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்தீர்கள். மக்களைப் பசியிலிருந்து காப்பாற்றத் தவறினீர்கள் என்ற குற்றச்சாட்டைச் சாட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சட்டம், ஒழுங்கைப் பற்றிப் பேசுகிறார்கள். இதைப் பற்றி ஒரு சம்பவத்தைக் கூற ஆசைப்படுகிறேன். 1957-இல் முதுகுளத்தூரில் நடந்த சம்பவத்தைப்பற்றி கூற விரும்புகிறேன். அங்கு கலவரம் நடந்த மொத்த நாட்கள் 20. அதில் இறந்த அரிசனங்களின் எண்ணிக்கை 18. தேவர்கள் 8 பேர் அதில் இறந்தார்கள். அதில் ஏற்பட்ட பொருள் சேதம் 3 இலட்சத்திற்கு மேல். போலீஸ் துப்பாக்கிச் சூட்டினால் 13 பேர் கொல்லப்பட்டார்கள். இத்தனைக்குப் பிறகும் ஒரு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் 30—10—1957-இலே பேசியதைச் சட்டசபைக் குறிப்பேட்டிலேயிருந்து கூறுகிறேன். "வீராம்பாளில் நடந்த விழாவில் கூட்டம் கூட்டமாக வந்து வீடுகளுக்கு நெருப்பு வைத்தார்கள். கிராமம் கிராமமாகச் சென்று கன்னிப் பெண்களைக் கெடுத்தும், விதவைகளை மான பங்கம் செய்தும், பெண்களை நிர்வாணமாக ஆக்கியும் பல அக்கிரம காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அரிசனப் பெண்களைக் கற்பழித்திருக்கிறார்கள்." என்று கூறப்பட்டிருக்கிறது. நீங்கள் எங்களைப் பார்த்துப் பெண்கள் நடமாட முடியவில்லை என்று குறிப்பிட்டீர்கள். உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்தால் இந்த நியாயம் தென்படும். பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதை இந்த மன்றத்தில் நான் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். "இந்தப் பிரச்சனையைப் பற்றி பொது மேடைகளிலும் சரி, சந்தர்ப்பம் கிடைக்கிற நேரத்தில் மிக ஜாக்கிரதையாக நழுவ விட்டிருக்கிறேன், பேசாமல் இருந்திருக்கிறேன்; பத்திரிகையில் ஒரு வார்த்தை கூட எழுதவில்லை. காரணம் இந்தப் பக்கத்தில் நியாயம் இருக்கிறதா? அந்தப் பக்கத்தில் நியாயம் இருக்கிறதா? என்பது ஒரு புறத்தில் தெரிந்துகொள்ள முடியாத சூழ்நிலை சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல நாம் அனுபவிக்கின்ற அரசியல் முறை 1957 உடன் முடிவடைந்துவிடப் போவதில்லை. நல்ல ஆற்றல் படைத்த மக்கள் அவர்கள் பழி துடைக்கப்படுகிற வரையில் உள்ளம் கொதித்துக் கொண்டிருக்கப் போகிறார்கள். இந்தச் சமயத்தில் எந்தப் பக்கத்தை ஆதரித்து நம்முடைய செல்வாக்கை அதிகப்படுத்திக் கொள்வோம் என நாங்கள், சிலரைப்போல அரசியல் தந்திரம் படைத்தவர்களாக இருக்க விரும்பவில்லை" என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் ஒரு பகல், ஒரு சம்பவம் நடந்ததை வைத்துக்கொண்டு, அதற்கு ஆகஸ்ட் போராட்டம் என்று முக்காடு போட்டு, அரசியல் லாபத்தை எவ்வளவு எளிதாகச் சம்பாதிக்கப் பார்க்கிறீர்கள்? அறிஞர் பெருந்தகையின் பேச்சில் அரசியல் ஒழுக்கம், நியாயம் காப்பாற்றப்பட்டது. ஆனால் நீங்கள் இந்த ஒரு சம்பவத்தை வைத்துக்கொண்டு, மக்களிடத்திலே வீண் பழியைச் சுமத்தி எங்கள் மத்தியிலே தீர்மானம் கொண்டு வந்திருக்கிறீர்கள். இது மனச்சாட்சிக்கு விரோதமானது, மக்கள் உங்களை நம்பமாட்டார்கள் என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.



1968 ஆகஸ்ட் 28]

*திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இப்பொழுது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை என்னுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்த்துச் சில வார்த்தைகளைச் சொல்ல முன் வருகிறேன்.

காங்கிரஸ் கட்சியின் மீது 1967-ஆம் வருஷம் நடந்த நான்காவது பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியாவில் 9 மாகாணங்களில் உள்ள மக்கள் நம்பிக்கையில்லாத தீர்ப்பை அளித்து, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களைப் பெரும் தோல்விக்கு ஆளாக்கியிருக்கிறார்கள். இந்நிலையில், அவர்கள் இன்றையத் தினம் என்ன செய்வது என்று புரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். பல குற்றச்சாட்டுகளை இந்த அரசின் மீது சாட்டி, அவைகளை 18 மாதங்களிலே செய்திருப்பதாக கூறுகிறார்கள். கூறுகின்ற குற்றச்சாட்டுகள் ஒருபுறமிருந்தாலும், இந்தத் தவறுகள் எதன் விளைவாக ஏற்பட்டன என்பதை அவர்கள் பார்ப்பதற்கு மறுக்கிறார்கள் என்பதைத்தான் சொல்லவேண்டியிருக்கிறது. நாடு விடுதலையடைந்தபிறகு 20 ஆண்டு காலமாக ஏகபோகமாக நாட்டைச் சொந்தமாக்கிக்கொண்டு ஆட்சி நடத்தி வந்தார்கள். மக்களுடைய குறைகளை எல்லாம் உதாசீனப்படுத்தினார்கள். அவர்களுடைய ஆட்சியில் எங்கு பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டங்கள் ஏற்பட்டன. வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது மட்டும் அல்லாமல் விவசாயிகள் நிலத்திலிருந்து இலட்சக் கணக்கானவர்கள் வெளியேற்றப் பட்டார்கள். வெளியேற்றப்பட்ட விவசாயிகள் வேலை தேடி ஊர் ஊராக அலைந்து கொண்டிருக்கிறார்கள். நகரங்களிலே குடியேறி கூலி வேலை செய்து பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸ் போட்டிருக்கக்கூடிய ஐந்தாண்டுத் திட்டங்கள் அத்தனையும் எட்டளவிலே இருந்ததேயொழிய, நடைமுறையில் நன்மையில்லை. திட்டத்திற்குச் செலவழித்த இரண்டாயிரம் கோடி ரூபாயைச் சில தனி நபர்கள் தங்களுடைய சொந்தக் காரியங்களுக்காக பயன்படுத்தி அதிலே வரக் கூடிய கோடிக்கணக்கான வருவாயைப் பெற்றார்கள் என்பதை நான் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள் பலயிடங்களில் பேசிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களின் நலன்கள் எல்லாம் நேரடியாக மக்களுக்குப் போய்ச் சேராமல், பெரிய ஓட்டை ஏற்பட்டு அதன் வழியாகச் சில தனி நபர்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது என்று கூறுகிறார். அந்தத் தனி நபர்கள் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னாலே ஒரு கோடி ரூபாய் சொத்துள்ளவர்களாக இருந்தால் இன்று சுதந்திரம் கிடைத்து, ஐந்தாண்டுத் திட்டங்கள்; 3 திட்டங்கள் நிறைவேறிய பிறகு பல கோடி ரூபாய்களுக்குச் சொத்து உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய தலைவர் திரு. காமராஜ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நிலைமை அவ்வாறிருக்கின்ற சந்தர்ப்பத்திலே இந்த நாட்டில் வேலை இல்லை என்று சொன்னால், வேலை கிடைப்பதற்கு, தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு வேண்டிய திட்டங்கள் இந்த ஆட்சியில் இல்லை என்று சொல்லுவது எப்படி பொருத்தமாக இருக்கமுடியும். இதற்கு முன்னாலே தயாரிக்கப்பட்ட திட்டங்கள் எந்த அளவுக்கு இருந்து கொண்டிருக்கிறது? சேது சமுத்திரத் திட்டம் என்ன ஆனது என்று அவர்கள் தரப்பிலே சொன்னார்களானால் அது மிகவும் தமிழ்மக்களுக்கு உதவியாக இருக்க முடியும். சேலம் இரும்பாலைத் திட்டத்திற்கு என்ன சொல்லுகிறார்கள் மத்திய சர்க்காரிலிருந்து, என்று அவர்கள் சொல்லியாக வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டப்படி இந்த இராஜ்யத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் கிடைக்க வேண்டிய ரூ. 113 கோடியும் முறையாக கிடைத்திருக்குமானால் மத்திய அரசு கொடுத்திருப்பார்களானால்—சில திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருந்திருக்க முடியும். ஆனால், மிகக் குறைந்த 87 கோடி ரூபாயை மாத்திரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை காங்கிரஸ் தரப்பிலிருந்து இல்லையென்று சொல்ல முடியாது, மத்திய அரசாங்க வஞ்சக போக்கால் நாட்டிலே புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை இல்லை. பண நெருக்கடி ஒரு பக்கம் ஏற்பட்டிருக்கிறது. திட்டங்களை எல்லாம் அவர்களாகவே ஒத்தி

ந. ப. 12–00

[திரு. ஆ. கு. சுப்பையா[ [1968 ஆகஸ்ட் 28

வைத்து, ஊறுகாய் பானையிலே போட்டு வைத்திருக்கிறார்கள். இதன் விளைவாக இன்றையதினம் தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்யமுடியாத சூழ்நிலை இருப்பதை நாம் பார்க்கத் தவறக்கூடாது என்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகள் மூடப்படுவதாகச் சொல்கிறார்கள். இங்குமட்டுமல்ல; எல்லா இராஜ்யங்களிலும் தான் மூடுகிறார்கள். எல்லா இராஜ்யங்களிலும் இருக்கக்கூடிய முதலாளிகள்—உண்மையில் சொல்லப்போனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் முதலாளிகளாக இருக்கிறார்கள். தங்களுடைய இஷ்டத்திற்கு தர்பாரை நடத்திக்கொண்டு வந்தவர்கள்—இன்றைய தினம் இங்கு அரசாங்கம் சொல்லக்கூடிய ஆலோசனைகளை ஏற்காமல் மீறிக் கொண்டே வருகிறார்கள். அரசாங்கத்தை மதிப்பதே கிடையாது. இந்த நிலை இன்றைய தினம் நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் ஒரு பக்கத்திலே தொழிலாளிகளையும் மக்களையும் பார்த்து வேலை கிடைக்கவில்லையென்று சொல்வதும், மற்றொரு பக்கம் முதலாளிகளையெல்லாம் அழைத்து தொழிற்சாலையை இழுக்கிப் பூட்டுங்கள் என்று சொல்வதுமான ஒரு தவறான காரியத்திலே காங்கிரஸ் கட்சி ஈடுபட்டிருக்கிறது என்பதை மக்கள் நன்றாக அறிவார்கள், ஆகவேதான் இவ்வாறு தொழில் முடக்கம் ஏற்படுவதும், தொழிற்சாலைகளை எல்லாம் மூடிக்கொண்டிருக்கிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் ஒரு யோசனை சொல்லியிருக்க வேண்டும். அந்த யோசனை தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க முடியாத அளவில் முதலாளிகள் தொழிற்சாலைகளை மூடுவார்களானால், அப்படி மூடக்கூடிய முதலாளிகள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கக் கூடிய ஒரு மசோதா கொண்டு வருவார்களானால், "நாங்கள் காங்கிரஸ் கட்சியிலேயிருந்து ஆதரிக்கிறோம்" என்று சொன்னார்களானால் அது பொருத்தமாக இருக்கும். ஆனால் அவர்கள் அவ்வாறு சொல்லமாட்டார்கள். அப்படி அவர்கள் சொன்னார்களானால் முதலாளிகளினுடைய செல்வாக்கையும் இழந்தவர்களாக இருப்பார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் நடவடிக்கைகளை குறித்து, அன்றையதினம் காங்கிரஸ் ஆட்சியில் என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையெல்லாம் மறந்திருக்க மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். அவர்களுடைய 20 ஆண்டு கால ஆட்சியில் 2,000 தடவைகள் துப்பாக்கியால் ஜனங்களை சுட்டு வீழ்த்தி இருக்கிறார்கள். அதனால் உயிர் இழந்தவர்கள் 3,700 பேர்கள். அதைக் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால் வருஷம் ஒன்றுக்கு எத்தனை தடவைகள் துப்பாக்கியினால் சுட்டிருக்கிறார்கள் என்று நன்கு தெரியும். அது மாத்திரம் அல்லாமல் சிறையிலே அடைத்துவைத்து கூட பலர்களை, கைதிகளை சுட்டுக் கொன்றார்கள். அவர்கள் ஈவு, இரக்கம் அற்றவர்களாக ஆட்சி நடத்தினார்கள். அன்றையதினம் போலீஸ்காரர்கள் எதை செய்தார்களோ அதே காரியங்களை இன்றையதினம் தொடர்ந்து செய்துவருகிறார்கள். போலீஸ் இலாகாவினுடைய தவறான நடவடிக்கையை மாற்றுவதற்கு வேண்டிய முறையில் இன்றைய அரசு சில கொள்கைகளை இந்த சமயத்திலே வகுக்க வேண்டியிருக்கிறது. 20 ஆண்டு காலமாக அவர்களுடைய ஏகபோக சர்வாதிகார ஆட்சியிலே பணியாற்றிக் கொண்டிருந்த போலீஸ் அதிகாரிகள், தங்களுடைய போக்கிலிருந்து இன்னும் மாறவில்லை. அவர்களை மாற்றுவதற்குரிய முறையில் இன்றையதினம் ஏற்பட்டிருக்கக்கூடிய ஜனநாயக மாற்றத்திற்குரிய முறையிலே, சில நடைமுறை விதிமுறைகளையே மாற்றியாக வேண்டிய ஒரு அவசியமான காலக் கட்டம் வந்திருக்கிறது. இந்த கால கட்டத்திற்கேற்ப மாற்றினால் மேலும் உதவியாக இருக்க முடியும். அந்த அதிகாரம் அப்படியேதான் இருந்து கொண்டிருக்கிறது. பழைய அதிகார போக்கின் விளைவாகத்தான் போலீஸ் அதிகாரிகள் இன்றும் தவறான காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை சொல்லுவதற்கு முன்வருகிறேன். இன்றையதினம் போலீஸார் அத்து மீறிய நடவடிக்கையிலே ஈடுபடுகிறார்கள். அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்றுத்தான் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லமுடியாது. அவர்களுக்கிருக்கக்கூடிய அதிகாரத்தை இன்றையதினம் துஷ்பிரயோகப்படுத்தக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். குறிப்பாக, இன்றையதினம் தஞ்சை



1968 ஆகஸ்ட் 28] [திரு. ஆ. கு. சுப்பையா}

மாவட்டத்திலே விவசாய வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. முன்னால் அரசு ஏற்படுத்தியுள்ள வழக்கம் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. ரிசர்வ் போலீஸ்களை அனுப்பி நிலப்பிரபுக்களுக்கு பாதுகாப்பு அளித்து விவசாயத் தொழிலாளர்களுக்கு விரோதமான நடவடிக்கையிலே ஈடுபட வைத்தார்கள். அந்நிலை இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. இப்பொழுதும் கிராமங்களுக்கு சென்று, வயல் வெளிகளிலே சென்று போலீஸ்காரர்கள் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் செயல் முறைகளை கண்காணிப்பதற்கு, மத்திய அரசாங்கம் எப்படி தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையில் இருக்கிறார்கள், அல்லது விரோதமாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவதற்காக மத்திய அரசாங்கம் இரகசியப் போலீஸ்காரர்களை அனுப்பி, இரகசியப் போலீஸைச் சேர்ந்தவர்கள் இன்றைய தினம் எல்லா மாவட்டங்களிலும் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். இது ஜனநாயகத்திற்கு விரோதமான செய்கையாக இருக்கிறது. ஆகவே தான் போலீஸ் அதிகாரம் தமிழ்நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும் அந்த அந்த மாநில ஆட்சிக்கு உட்பட்டதாக இருக்க வேண்டுமே தவிர, மத்திய அரசாங்கத்திற்கு உட்பட்டதாக இருக்கக்கூடாது என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஊர்வலம் போனதைக் தடுத்து நிறுத்தியதாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய ஆலோசனை அந்த ஊர்வலத்தை அப்படியே விட்டிருக்கவேண்டும் என்பது. அப்படியே விட்டிருந்தால் தான் அவர்களுடைய நடவடிக்கைகளை இந்த இராஜ்ய மக்கள் நன்றாக புரிந்து கொண்டிருப்பார்கள். அவர்களை அப்படியே விட்டிருந்தோமானால் எந்த குறிப்பிட்ட காரியத்திற்காக சென்றார்களோ அந்த காரியத்தை அவர்கள் செய்து முடித்திருப்பார்கள். அவர்கள் செய்து முடித்த பிறகு, இந்த இராஜ்ய மக்களிடமிருந்து "நல்ல நம்பிக்கையான காரியத்தை, செய்து முடித்திருக்கிறார்கள் என்ற ஒரு பெரிய புகழினையும் வாங்கியிருப்பார்கள். ஆகவே தடுத்து நிறுத்தியிருக்க வேண்டிய அவசியம் இல்லையென்று நான் கருதுகிறேன். தினத்தந்தி ஆபீஸை நெருங்கினார்கள்; மற்றப் போக்குவரத்து செல்வதற்கு, ஜனங்களுக்கும் இடையூறு செய்தார்கள் என்ற தவறான நடவடிக்கைகளை அப்பட்டமாக புரிந்து கொள்வதற்கு பொது ஜனங்களுக்கு ஒரு வாய்ப்பேற்படுத்தி இருக்கலாம். அந்த நிலையிலே தான் ஊர்வலத்தை விட்டிருக்க வேண்டுமென்பதை இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சர்க்கார் காரியாலங்களிலே இருந்து கடவுள்கள் படங்களையெல்லாம் எடுத்துவிட வேண்டுமென்று இந்த சர்க்கார் சொல்லியது மிகப் பெரிய தவறு என்று சொல்லப்படுகிறது. எதற்காக காரியாலயங்களிலே படங்கள் வைக்கவேண்டும்? கடவுள்களை பூசிக்கிறவர்கள் வெளியிலே அவர்கள் இஷ்டத்திற்கு எங்கு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளட்டும். அலுவலகங்களிலே தான் வைத்துக்கொள்ள வேண்டுமா? அலுவலகங்களில் வைத்துக்கொண்டு படங்களுக்கு பூசை செய்வதிலே ஈடுபட்டிருந்ததால் வேலைகள் எப்படி நடப்பது? அப்படி செய்வதால் அலுவல்கள் தடைபடாதா? பகுத்தறிவோடு இதை யோசித்துப் பார்ப்போமானால் கடவுள் படங்கள் தேவையில்லையென்றுதான் பகுத்தறிவுவாதிகள் சொல்வார்கள். அந்த முறையிலே படங்களை எடுக்கவேண்டுமென்று சொல்லியது வரவேற்கவேண்டிய ஒரு அம்சம். அங்கே வைத்துக் கொண்டு வேலையில் ஈடுபடாமல் அதைப் பூசித்துக் கொண்டிருப்பதற்கு ஒரு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது சரி அல்ல, இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய ஜனநாயக மாற்றத்திற்கு படங்களை வைத்திருப்பது உகந்ததாக இருக்க முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்வதற்கு விரும்புகிறேன்.

உணவு தானிய கொள்முதல் விஷயமாக நாங்கள் ஒரு ஆலோசனை சொன்னோம். முன்னாளில், அரசு கொள்முதலை ஏஜெண்டுகளிடம் ஒப்படைக்கப்பட்டது. ஏஜெண்டுகள் கொள்ளை லாபம் அடித்தார்கள். விவசாயிகளிடம் குறைவான விலைக்கு கொள்முதல் செய்து, ஸ்டாக் வைத்துக் கொண்டு, அதிக விலைக்கு விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். இந்த

முறையை நாங்கள் ஆட்சேபித்தோம். அந்த நிலையை மாற்றி, இப்பொழுது அரசாங்கமே கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அந்த முறையில் கொள்முதல் செய்கிறார்கள். இன்னும் சில ஏஜெண்டுகள் இருக்கிறார்கள். ஏஜெண்டுகள் கூடாது என்பதுதான் எங்களுடைய கொள்கை. உணவு தானியக் கொள்முதலையும், உணவு விநியோகத்தையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் சொல்லுகிறோம். இவர்கள் கொள்முதல் செய்கிற காலத்தில் ஒரு குறிப்பிட்ட சிறுநிலம் வைத்திருக்கின்ற மூன்று ஏக்கர் நிலத்திற்குக் குறைவாக உள்ளவர்களிடம் கொள்முதல் கூடாதென்றும், 10 ஏக்கருக்கு மேல் நிலமுள்ளவர்களிடம் உபரியாக இருக்கும் தானியங்களை கொள்முதல் செய்வதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு நடைமுறையிலே செயல்படுத்தி வருகிறது. 3 ஏக்கரிலிருந்து 10 ஏக்கர் வரையிலும் "லெவி" முறையிலே கொள்முதல் செய்ய வேண்டுமென்ற ஆலோசனையை சொல்லி வருகிறோம்.

உணவு தானியங்களை உற்பத்தி செய்கிற விவசாயிகளிடமிருந்து நியாயமான விலையில் கொள்முதல் செய்யவேண்டும். இப்பொழுது உள்ள விலை கட்டுபடியாகக் கூடியதாக இல்லை. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் உள்ளவர்களிடம் நாம் விலையை நிர்ணயம் பண்ண வேண்டிய அவசியம் இல்லை. சிறு நிலக்காரர்களுக்கு அதிகம் செலவாகிறது. உரம் வாங்க வேண்டுமானாலும் காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சியிலே இருக்கிற மத்திய அரசாங்கம் உரத்தின் விலையை உயர்த்திவிட்டார்கள். இன்னும் விவசாயத்திற்கு வேண்டிய பொருள்களின் விலை அனைத்தும் உயர்ந்திருக்கிறது. அந்த நிலையில் விவசாயிகளுடைய செலவு அதிகமாக போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்குத் தேவையான பொருள்கள் குறைந்த விலையில் கிடைப்பதற்கு வேண்டிய உத்தரவாதத்தை அரசாங்கம் தர வேண்டுமென்று கேட்கிறோம்.

தீ விபத்து, எங்கு பார்த்தாலும் கிராமங்களில் எல்லாம் பரவி இருக்கிறது. இல்லையென்று சொல்ல முடியாது. அதற்கு அரசியல் "மோட்டிவ்" இல்லையென்று சொல்ல முடியாது. ஏழைகள்தான் காங்கிரஸ் கட்சி அதிகாரத்திற்கு வரக்கூடாது என்று தீர்ப்பளித்தார்கள், அந்த ஏழைகள் மீது ஆத்திரம் ஏற்பட்டிருக்கும். நிலப் பிரபுக்களுக்கும் ஆத்திரம். முதலாளிகளுக்கும் ஆத்திரம். அவர்கள் அந்த ஆத்திரத்தின் காரணமாக இன்றையதினம் வாங்கக் கூடிய முறையில் எங்கு பார்த்தாலும் குடிசையிலே தீ வைப்பு முறையை.............

**திரு. கே. விநாயகம் :** நீங்கள் தான் நெருப்பு வைத்ததாக எங்களுக்குத் தகவல். காங்கிரஸ்காரர்கள் வைத்தார்கள் என்று அப்பட்டமாக பொய் சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். "பொய்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாமா? அந்த ஒரு உறுப்பினர் பொய் சொல்லுகிறார் என்று சொல்வது ஒழுங்குப் பிரச்சினைக்கு உட்பட்டது அல்லவா?

**திரு. கே. விநாயகம் :** உண்மைக்குப் புறம்பாக என்று சொல்லலாம். அல்லது terminological inexactitude என்று ஆங்கிலத்தில் சொல்வதானால், சொல்லலாம். ஆனால் தமிழிலே சொல்வது என்றால், இப்படித்தான் சொல்லவேண்டும். உண்மைக்கு மாறாக என்று சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** "பொய் சொல்கிறார்" என்பதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இப்படி மாற்றவேண்டும் என்று கூறவேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்) :** "பொய் சொல்கிறார்" என்பது மன்றத்தின் மறபுக்கு ஏற்றதல்ல, ஆகவே, அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.



**திரு. கே. விநாயகம் :** "பொய்" என்ற வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். ஆனால் அதே இடத்தில் உண்மைக்கு மாறாகச் சொல்லுகிறார் என்று திருத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இந்த நாட்டில் இருக்கும் ஏழைகள், கோடிக் கணக்கானவர்கள் காங்கிரசுக்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள். ஆத்திரம் கொண்ட முதலாளிகளும், நிலப் பிரபுக்களும் தீ வைத்திருக்கிறார்கள். அதைக் காரணமாக வைத்துக்கொண்டு தீ வைப்பதாகச் சொல்லப்படுகிறது. காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கொளுத்தினார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆகவே, அவர்கள் இந்த மாதிரி . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இவர்கள் சர்க்காராலேயே கண்டுபிடிக்க முடியாததைக் கண்டு பிடித்திருக்கும் போது, அந்தத் தகவலை அவர்கள் ஏன் சர்க்காருக்குத் தெரிவிக்க வில்லை? ஏன் தெரியப்படுத்தி இருக்கக் கூடாது?

**திரு. ஆ. கு. சுப்பையா :** இந்த மாதிரி அவர்கள் தான் செய்தார்கள் என்று சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு—அரசியல் மோடிவ் இருக்கிறது.—காங்கிரசுக்கு எதிராக ஏழை எளியவர்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்பதால், அப்படி வாக்களித்திருக்கிறார்கள் என்ற குற்றத்திற்காக, தீ வைத்திருக்கிறார்கள் என்கிற கருத்து இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் விரும்புவதெல்லாம், அவர்களுக்கு இன்னார் தீ வைத்தார்கள் என்கிற தகவல் தெரிந்து, அதைச் சர்க்காருக்கு அவர்கள் கூட்டணியில் இருப்பதால், கொடுத்து, அப்படிப் பட்டவர்களை ஏன் காட்டிக் கொடுக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வினா.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், அவர் சொன்னார் அவருக்குக் கிடைத்த தகவலை. மிராசுதாரர்களுக்கும், மற்றவர்களுக்கும், காங்கிரசுக்கு எதிராக வாக்களித்தார்கள் என்பதால் ஆத்திரம் கொண்டு, செய்திருக்கிறார்கள் என்று. அப்பன் குதிருக்குள்ளே இல்லை என்று சொல்வது போல, ஏன் சர்க்காருக்கு தகவல் கொடுக்கவில்லை என்று கேட்கும் பெருமதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், கம்யூனிஸ்டுகள் செய்தார்கள் என்று அன்றைக்குச் சொன்னார்களே, அந்தத் தகவலை அவர் ஏன் சர்க்காருக்குக் கொடுக்கவில்லை என்று சொல்ல முடியுமா?

**திரு. கே. விநாயகம் :** சார், நடந்துகொண்டே இருக்கும் விவாதத்தில், என் அப்பன் குதிருக்குள்ளே இல்லை என்று இவர்தானே வருகிறார். எதிராக ஓட்டுப் போட்டார்கள், அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? இவர்கள் நெருப்பு வைத்தார்கள் என்று சொல்லி ஒரு தப்பு அபிப்பிராயத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகத் தான். make it very clear என்று சொல்லும்போது, வருகிறவர் இவர். குதிருக்குள்ளே இருந்த அப்பன் இந்த அப்பனா அல்லது எந்த அப்பன்?

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, யார் தீ வைத்தார்கள் என்பது போகப் போகத் தெரியும். வழக்கு போடப்பட்டிருக்கிறது. அதிலே காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப் பட்டிருப்பதாக அறிகிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சார், மீண்டும், மீண்டும் அதையே சொல்லுகிறார்கள். இப்பொழுது காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டதாக சொல்லுகிறார்கள். அது யார் என்று சொல்ல முடியுமா? நிரூபிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சென்னையில் பட்டு என்கிற லால் பகதூர் மன்றத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரர் தண்டிக்கப்பட்டிருக்கிறார். அப்பீல் செய்திருக்கிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் காங்கிரஸ்காரர் என்று தெரியுமா ? எங்கள் தமிழ்நாடு காங்கிரஸ் மெம்பர்கள் பட்டியலில் இருக்கிறார் என்று நிரூபிப்பார்களா ? யாரோ ஒருவனைப் பற்றிச் சொல்லிவிட்டு . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முதல் அமைச்சர் அண்ணா அவர்களே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி திட்டமிட்டுச் செய்யவில்லை, ஆங்காங்கே இருக்கின்ற அரசியல் சூழ்நிலைகள் காரணமாகச் செய்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பட்டு என்கிற லால் பகதூர் சாஸ்திரி மன்றத்தைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதை நாங்கள் மறுத்திருக்கிறோம். அந்த மன்றத்திலே இருப்பவர்களெல்லாம் காங்கிரஸ்காரர்கள் என்பதற்கில்லை. மீண்டும் மீண்டும் காங்கிரஸ்காரர் பிடிக்கப்பட்டார் என்றால், நாங்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரைப் பிடித்துவிட்டார்கள் என்று சொல்லலாம். பிடிக்கப் பட்டவர்கள் 34 பேர்கள், ஜாமீனிலே விடப்பட்டவர்கள். எங்களால் கொண்டு வந்து நிறுத்தமுடியும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள், நிர்வாகத்தை ஒழுங்கு படுத்தும் முறையில் சில தினங்களுக்கு முன்னால் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். அது மிகவும் புனிதமான அறிக்கை. நம் மாநிலத்தில் அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் செம்மையான முறையில் செயல்படவேண்டும் என்று நிர்வாகச் சீரமைப்பு ஏற்படுத்தியாக வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி நடவடிக்கை எடுத்தால், அது நிர்வாகத்தை சீர்படுத்த உதவியாக இருக்கும்.

இந்த அரசு பதவியேற்று 18 மாதங்கள் ஆகின்றன. விவசாயிகள் புதிய அரசு வந்தபிறகு, பெரிய மாற்றத்தைச் செய்வார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஏற்கனவே செய்திருக்கும் நிலச் சீர்த்திருத்தச் சட்டத்தை விட்டு, அதற்குப் பதிலாக, நல்லதொரு சட்டத்தைக் கொண்டு வந்து விவசாயிகளுக்கு நிலம் அளித்து, அவர்களுக்கு செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, காங்கிரஸ் தரப்பிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மன்றம் ஏகோபித்து நிராகரிக்க வேண்டும் என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சியின் தலைவரால் கொண்டு வரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் சேர்ந்திருக்கும் இந்திய குடியரசுக் கட்சி எதிர்க்கிறது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்த அரசின் மீது கொண்டு வருவதற்கு முன்னதாக, மதிப்புமிக்க காங்கிரஸ் அங்கத்தினர்கள், தாங்கள் எப்படியிருக்கிறோம் என்பதை சற்று நினைத்துப் பார்த்துக் கொண்டு இதைக் கொண்டு வந்திருக்க வேண்டும். இந்த ஆட்சியின் மீது அவர்கள் நம்பிக்கையில்லை, அவர்கள் தவறுகள் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்திலே அவர்கள் சார்ந்திருக்கும் கட்சி நடத்தும் மத்திய சர்க்கார், இந்த ஆட்சியின் மீது என் நம்பிக்கை வைத்திருக்கிறது ? மத்திய அரசிலே பொறுப்புள்ள அமைச்சர்களால், "திராவிட முன்னேற்றக் கழக அரசு மிக நல்ல முறையில் சிறப்புற நடத்தப்படுகிறது" என்று ஆதாரபூர்வமாக சொல்லப்படுகின்ற வார்த்தைகள், புகழுரைகள். இவ்வாறு மத்திய அமைச்சர்களால் இந்த அரசு புகழப்படும் அதே நேரத்தில் தென் மாநிலங்களில் இருக்கின்ற காங்கிரஸ்காரர்கள், "இந்த அரசு நன்றாக நடைபெறவில்லை, அமைச்சர்கள் ராஜிநாமா செய்ய வேண்டும்" என்று சொல்வது வேடிக்கையாகவும் விந்தையாகவும் இருக்கிறது. இப்படி ஒரே கட்சியில் இருப்பவர்கள் இருவிதமான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள். நான் இவ்விதமாகக் கூறுகிற நேரத்தில் காங்கிரஸ்காரர்களுக்கு ஆத்திரம் வரலாம், கோபம் ஏற்படலாம். அவர்கள் கடைசிவரையில் நான் சொல்லுவதைப் பொறுத்துக் கேட்டுக்கொள்ள வேண்டும்.





"நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் எந்த அளவுக்கு உறவு கொண்டிருக்கிறீர்கள் ? வட்ட, மாவட்ட தேர்தல்களிலே காங்கிரஸ்காரர்களுடைய பங்கு என்ன ? ஒரு கட்சியினுடைய வட்ட, மாவட்டத் தேர்தல்களிலே நீங்கள் எத்தகைய உறவு வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் ? உங்களுடைய பங்கு என்ன ? என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதை நான் நிரூபிக்க முடியும். ஒரு கட்சிக்குள்ளே தவறான பூசல்களைக் கிளப்ப வேண்டுமென்பதற்காக பலஇடங்களிலே நேரடியாக உங்களுடைய கட்சியின் சட்டதிட்டங்களை மீறி வேலை செய்திருக்கிறீர்கள். நான் இதைச் சொல்லும்போது, 'இப்படி நடந்திருக்கிறதா ?' என்று சிலர் யோசிக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் பொறுப்புள்ளவர்கள், பெரியவர்கள் எல்லாம் ஒரு கட்சியின் வட்ட, மாவட்டத் தேர்தல்களிலே பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நிரூபிக்க முடியும். நூற்றுக்கு நூறு சொல்வேன்."

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்போது சொல்லப்படும் குற்றச் சாட்டு, எங்களுடைய கட்சி, இன்னொரு கட்சியினுடைய தேர்தலில் ஈடுபட்டது என்பதாகும். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா, மறுக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** என்னிடத்தில் அதற்கான முழு விவரம் இல்லை.

**திரு. கே. பி. எஸ். மணி :** மாண்புமிகு அமைச்சர்களுக்கு இந்த விஷயம் தெரியாது. கட்சியின் கீழ்மட்டத்திலிருப்பவர்கள் தான் இந்த வேலையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களுக்கு ஒன்று சொல்லவிரும்புகிறேன். நீங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அரசு மீது கொண்டுவருவதை விட, மக்களுக்கு ஏன் உங்களிடம் நம்பிக்கையில்லாமல் போய்விட்டது என்பதை ஆராய்ச்சி செய்து, அதற்கு யார் யார் காரணமோ அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கி, புதியதொரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்திக்கொண்டால் உண்மையிலேயே வரவேற்கத்தக்கதாகும். ஆளுகின்ற கட்சியிலே குறைகள் இருக்கலாம். இருக்கத் தான் செய்யும். கடந்த இருபதாண்டுக் காலத்தில் நீங்கள் என்னென்ன கொடுமைகளைச் செய்து வந்தீர்கள் என்பதைக் கூட இருந்து அனுபவித்தவன் என்ற முறையில், உங்களைச் சிந்தித்துப் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். முதலில் உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள், பிறகு மற்றவர்களைத் திருத்தலாம். வேதத்திலே ஒன்று சொல்லுவார்கள். "உன் கண்ணிலே இருக்கும் உதிரத்தை எடுத்துவிட்டு, மாற்றார் கண்ணிலே இருக்கும் துரும்பை எடு" என்று. நீண்டகால அரசியல் வாழ்க்கையில் நீங்கள் இருந்தவர்களாதலால், முதலில் நீங்கள் உங்களையே திருத்திக் கொள்ளுங்கள். முதலமைச்சர் அவர்கள், "நீங்கள் 42 சத வீதம் ஓட்டு பெற்றிருக்கிறீர்களே, இன்னும் கொஞ்சம் முயற்சி செய்தால் பத்து சத வீதம் உயர்த்திக்கொள்ளலாமே ?" என்று கூறியதை நீங்கள் கவனித்துப் பார்க்கவேண்டும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது எதற்காக என்பதைப் பற்றிப் பொது மக்கள், "இது ஒன்றும் இல்லை, வருகிற தேர்தல்களுக்காக, சிலருடைய சொந்த விளம்பரங்களுக்காகவும் தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்" என்று பேசிக்கொள்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது சொந்த விளம்பரம் என்று கூறுகிறார். எது சொந்த விளம்பரம் என்பதை கனம் உறுப்பினர் கூற வேண்டும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தேர்தலில் நிற்பவர்கள் உண்மையில் விளம்பரம் செய்துகொண்டுதான் வரவேண்டும். நாங்கள் என்னென்ன காரியங்களைச் செய்கிறோம் என்று உறுப்பினர்கள் விளம்பரப்படுத்திக் கொண்டுதான் ஆகவேண்டும்.

அடுத்தபடியாக, கடந்த காலத்தில் நிகழ்ந்த தவறுகளையெல்லாம் மீண்டும் செய்கிற நிலைமையில் ஆட்சியாளர்கள் இருக்கக்கூடாது என்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அடிப்படை ஜீவாதாரமான கொள்கையாக இருக்கிற சுயமரியாதைக் கொள்கையை நிலை நிறுத்துவதற்கு எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் ஆட்சியாளர்கள் தயாராக இருக்கவேண்டும். குறிப்பாக இன்றையதினம் சாமி படங்களை அகற்றுவது, கடவுளர் படங்களை அரசாங்க அலுவலகங்களிலிருந்து நீக்குவது என்பதற்கு திரு. ராஜாஜி அவர்கள் கூட எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்ப்பு தெரிவிப்பது என்பது அவர்களுடைய கொள்கையாக இருக்கலாம். நம்முடைய கொள்கையை நாம் செய்ய வேண்டும். மனிதன் மானத்தோடும், சுதந்திரத்தோடும், சுயமரியாதையோடும் வாழவேண்டும் என்ற கொள்கையை உங்கள் ஆட்சியில் செய்வது அவசியத்திலும் அவசியமாகும். கடந்த இருபது ஆண்டுக் காலத்தில் காங்கிரஸ்காரர்கள் காந்தீயத் தத்துவத்தைத் திணிக்கத்தான் முயற்சி செய்தார்கள். அப்படி ஒவ்வொரு அரசியல் கட்சியிலும் தனிப்பட்ட கொள்கை இருக்கும். கடந்த காலங்களில் எந்தெந்த சீர்திருத்தங்களைப் பேசி வந்தோமோ, அந்தக் கொள்கைகளைக் கொஞ்சம் சர்வாதிகாரத்தோடு கூடவாவது செய்வதில் தவறு இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

முதன்மையானது தீண்டாமை என்பதாகும்: தீண்டாமையை ஒழிப்போம் என்று கடந்த இருபது ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சி கண்ணீர்த் துடைப்பு வேலை தான் செய்து வந்தது. முன்பிருந்த நிலைமை தான் இன்று இருந்து வருகிறது. தீண்டாமையை ஒழிப்பதற்காக இந்தப் புதிய அரசு வேலை செய்யவேண்டும். தீண்டாமை ஒழிக்கப்படவில்லையென்றால், உங்களுடைய சீர்திருத்தம் நாட்டிலே ஏற்றுக்கொள்ளப்படமுடியாமல் போய்விடும். கடந்த நாற்பதாண்டுக் காலமாக தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்று பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. தீண்டாமையை தமிழ்நாட்டிலிருந்து வேரறுத்தாக வேண்டும், அதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று கூறிக் கொள்கிறேன். கடைசியாக காங்கிரஸ் கொண்டுவந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கிறேன் என்று கூறி, என்னுடைய
பி.ப. உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.
12-30

*திரு. எம். சுரேந்திரன்: கனம் தலைவர் அவர்களே, சபையின் இருக்கிற எதிர்க்கட்சிகளில் பெரிய எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி சபையின் முன் வைத்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

காங்கிரஸ் கட்சியானது கடந்த இருபது வருஷ காலத்திலே போட்டு வைத்திருக்கிற குப்பை கூளங்களையும், அதில் வளர்ந்திருக்கிற புற்பூண்டு, முட் செடிகளையும், அவற்றில் மறைந்திருக்கிற பூச்சி, புழு பூரான் போன்றவைகளையும் முதலில் நீக்கிவிட்டுத் தான் இந்த அரசு நல்ல காரியங்களைச் செய்யமுடியும் என்று நான் கருதுகிறேன். அப்படிச் செய்கின்ற அரசு இப்போது தான் தவழ்கின்ற நிலையில் இருக்கிறது. கைகால்களுக்குச் சிறிது பலம் ஏற்பட்டவுடன் தான் செயல் புரிய முடியும். இந்த மாதிரி குழந்தைப் பருவத்தில் இருக்கிற இந்த அரசைப் பார்த்து நம்பிக்கை இல்லையென்ற தீர்மானத்தைக் கொண்டு வருவது எவ்வளவு சரியானது என்பது காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாமல் இல்லை. அப்படித் தெரிந்திருந்தாலும் ஏன் கொண்டுவந்தார்கள் என்று பார்க்கிறபோது கடந்த தேர்தலில் ஏற்பட்ட அடி இருக்கிறதே அது அவர்களை 6 மாதம் பேசாமடைந்தையாகிவிட்டது. அடுத்து உபதேர்தலில் கிடைத்த அடிமேல் அடி அவர்களது அணியையே உருக்குலைத்து விடுமோ என்கிற பயம் ஏற்பட்டதன் காரணமாகத் தான் அந்த அடியை லகுவாக்கிக்கொள்ள இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அதற்கு ஆதரவாகத் தான் அவர்கள் தங்களுடைய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள், என்கிற பிரச்சனையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது உண்மையான நிலைதான்,





ஆனால் இந்த நிலை எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்ற அடிப்படையை ஆராயாமல் மேலெழுந்தவாரியாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்வது சரியானது அல்ல என்று தோன்றுகிறது.

நமது ஐந்தாண்டுத் திட்டங்கள் எல்லாம் மேல்நாட்டில் வகுக்கப்பட்டன போல இங்கும் வகுக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேல்நாடு என்று சொன்னால் ரஷ்யாவில் அதிகக் குழந்தைகள் பெறுவதற்குப் பரிசு அளிக்கப்படுகிறது. நம் நாட்டில் குழந்தைகள் பெறுமல் இருக்கப் பரிசு அளிக்கப்படுகிறது. அங்கு மனித உழைப்புச் சக்தி தேவைப்படுகிறது. இது மனித உழைப்புச் சக்தி அதிகமாக இருக்கிற நாடாக இருக்கிறது. ஆகவே இங்கு எந்த ஒரு திட்டத்தையும் வகுக்கிறபோது மனித உழைப்புச் சக்தியை அதிக அளவில் பயன்படுத்திக்கொள்கிற திட்டங்களாக வகுத்திருக்கவேண்டும். அப்படி வகுக்கவில்லை. ஆகவே அந்தத் திட்டங்களின் மூலம் பெரும் முதலாளிகள் பயன் அடைந்தார்களே தவிர சாதாரண ஜனங்களுக்குப் பயன்பட வழியில்லாமல் போய்விட்டது. ஏகபோக முதலாளித்துவ தன்மை வளர்க்கப்பட்டது. சிறுசிறு தொழில்கள் ஏற்பட முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. சிறு சிறு தொழில்கள் வளர்ச்சி பெறாத காரணத்தினால் வருமானம் குறைந்து மக்களது—வாங்கும் சக்தி பெரிதளவில் பாதிக்கப்பட்டுவிட்டது. உதாரணமாக பஞ்சாலையை எடுத்துக்கொண்டால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் மனிதனுக்கு சராசரி 17 கஜம் துணி உற்பத்தி செய்யவேண்டும் என்பது இலக்கு. ஆனால் $13\frac{1}{2}$ கஜம் தான் உற்பத்தி செய்யப்பட்டது. இருந்தாலும் இந்தத் துணிகளே தேங்கிக் கிடக்கிறது. மக்களிடத்து வாங்கும் சக்தி தேய்ந்துவிட்டது.

இன்னொன்றைப் பார்க்கவேண்டும். அங்கங்கே ஐ.டி.ஐ. என்று—— வைத்து மெக்கானிக், பிட்டர் போன்ற கைத்தொழில் நிபுணர்களை உண்டாக்குவதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். ஆனால் அவர்கள் சிறு சிறு தொழில்களில் ஈடுபட மார்க்கங்களைச் செய்யவில்லை. பெரும் பெரும் தொழில்களே திட்டமிட்டுச் செய்யப்படுகிறது. அதில் போடுகிற மூலதனம், தேய்மானம், நிர்வாகச் செலவு இவற்றைப் பார்க்கிறபோது உற்பத்திப் பொருள்களின் விலை ஏறி விடுகிறது. மூல அமைப்பை ஏற்படுத்தி பலபல உப அமைப்புகளை ஏற்படுத்தத் தவறிவிட்டோம். இந்த நிலைமைக்கு—பிரதான காரணம் இந்த அரசு அல்ல, மத்திய அரசு என்பதை காங்கிரஸ் மெம்பர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இருந்தும் இந்த அரசின் மீது சில குறைகள் இருக்கத் தான் செய்கிறது. வேலை செய்த நாட்களுக்குக் கூட தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. இ. எஸ். ஐ. பணம், பிராவிடண்ட் பணம் எல்லாம் கூட கட்டப்படாமலிருக்கிறது. இதற்கு மத்திய அரசு வேண்டாம். முதலாளிமார்களிடம் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய இந்தப் பணத்தை இந்த அரசு வாங்கிக் கொடுக்கலாம். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று சில இடத்தில் சொல்லப்படுகிறது. இது சம்பந்தமாக இந்தச் சர்க்கார் துரித நடவடிக்கை எடுத்துக்கொண்டு தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பணத்தையாவது பெற்றுத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் என் கட்சியின் சார்பில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆக, இதற்காக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக்கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்தபடியாக, சட்டம் அமைதி கெட்டுவிட்டதாகப் பேசப்படுகிறது. கடந்த காலத்தில் எப்படி போலீஸ்காரர்கள் நடந்துகொண்டார்கள் என்பதை மறந்திருக்க முடியாது. எங்காவது வேலை நிறுத்தம் என்றால் அவர்கள் முதலாளிமார்களுக்கு பாதுகாப்பாக தொழிலாளர்களையே தாக்குவார்கள். அந்த நிலை இன்றைக்கு மாறி, வேலை நிறுத்தம் என்றால் சட்டம், அமைதிக்கு உட்பட்டு நடக்கிற நிலையில் போலீஸார் தலையிடுவதே இல்லை. அதற்கு இந்த அரசாங்கம் உறுதி அளித்திருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். ஆயினும் இது சரியாக நடைபெறவில்லை. 22-ம் தேதி பள்ளிப்பாளையம் பேப்பர் மில்லில் தொழிலாளர்கள் மீது தடியடிப் பிரயோகம் நடந்திருக்கிறது. 13-ம் தேதி லேபர் கமிஷனர் முன் நடந்த

பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொண்டவற்றை முதலாளிமார்கள் அங்கே போனவுடன் செயலாக்க மறுத்ததன் காரணமாக ஏற்பட்ட வேலை நிறுத்தம் சங்கப் பிரதிநிதிகள் பேசிக்கொண்டிருந்தபோது அங்கே இருந்த தொழிலாளர்களைப் போலீசார் தாக்கியிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, அவர்களது வீடுகளுக்குச் சென்று பெண்களைத் தாக்கி, போலீஸ் வானில் அழைத்துச் செல்கிற போது தங்கள் இரும்புத் தொப்பியால் அடித்து அநியாயமாக நடந்துகொண்டார்கள் என்பதாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள். சட்டிப்பானை செய்கிற தொழிலாளர்களைத் தாக்கி, அவர்களது சட்டிப் பானைகளை எல்லாம் உடைத்திருக்கிறார்கள். ஆகவேதான் இது போன்று தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் என்று நடக்கிறபோது பட்சபாதமற்ற விசாரணையை நடத்த இந்த அரசு முன்வரவேண்டுமென்று பிரஜா சோஷலிஸ்டு கட்சி வலியுறுத்தி வருகிறது. இதை ஜனநாயக வளர்ச்சியின் ஓர் அம்சமாக எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தச் சர்க்காரின் அமைச்சர்கள் எவ்வளவு தான் சுத்தமான, தூய மனதுடன் நடந்துகொண்டாலும் அதிகாரிகள் தவறு இழைக்காதிருக்க அப்போதைக்கப்போது நீதி விசாரணைக்கு உத்திரவிடவேண்டும். இதற்காக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டிய அவசியம் இல்லை. பழைய காலத்தில் இவர்கள் எப்படி நடந்தார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். 1965-ம் ஆண்டில் லால்பகதூர் சாஸ்திரிகள் வந்தபோது என்னுடைய கட்சி சார்பாக அவருக்கு கருப்புக்கொடி காட்ட திட்டமிட்டிருந்தோம். அதற்கு அடிப்படைக் காரணமே சிலோன் நாட்டில் உள்ள இந்தியர்கள் சார்பாக இந்திய சர்க்கார் செய்துகொண்ட ஒப்பந்தம் திருப்தி அளிக்கவில்லை என்ற ஒன்று. சேலம் உருக்காலை கொண்டு வரவில்லை என்பது மற்றொன்று. அதற்காக நாங்கள் ஒட்டியிருந்த போஸ்டர்களை எல்லாம் போலீஸ்காரர்கள் விட்டு பிய்க்கச் சொன்னார்கள்.

அதேபோல் நேரு அவர்கள் காந்தி கிராமத்திற்கு வந்தபொழுது “நேரு அரசாங்கம் ராஜினாமாச் செய்யவேண்டு” மென்று என்னுடைய கட்சியினர் தீர்மானித்து காந்தி கிராமத்திலே கொடி காட்டவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. எங்களுடைய கட்சியினர், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் கைது செய்து சிறையிலே அடைத்துவிட்டார்கள். ஆனால் இன்றைக்கு அமைச்சர் செய்கின்ற காரியங்களைக்கண்டித்து பகிரங்கமாகக் கருப்புக் கொடி காட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். சட்டம் அமைதி கெடுகிறது என்று சொல்லும்பொழுது, சட்டம் அமைதி கெடுவதற்கான வழிமுறைகள் என்ன என்ன, சந்தர்ப்பங்கள் என்ன என்ன என்பதையெல்லாம் பார்க்கிறபொழுது முன்பு அரசு இருந்த மனோபாவத்திலே, முன்பு இருந்த அரசு நடைமுறையிலே, முன்பு இருந்த அரசு இருந்த சித்தாந்தப் போக்கிலே இன்றைய அரசு இல்லை என்பதைத் தான் அவை காட்டுகின்றன. ஆகவே, காங்கிரஸ் கட்சியானது கொண்டு வந்து இருக்கிற இந்தத் தீர்மானமானது எந்த வகையிலும் சரியானது அல்ல, பொருத்தமானது அல்ல ; அவர்களுடைய அணியிலே உள்ளவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவும் அவர்களுடைய ஆட்சியிலே உள்ளவர்கள் வெளியே போகாமல் தடுத்து நிறுத்தப்படுவதற்காகவும் தான் கொண்டு வந்திருக்கிறார்கள்.

கடந்த காலத்திலே எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் அமைச்சரைப் பார்த்துக் காரியத்தைச் செய்யவேண்டிய நிலைமை ஏற்படும்பொழுது ஆட்சி செய்யும்கட்சியைச்சேர்ந்த தலைவர் பார்த்துத்தான் செய்யவேண்டிய நிலைமை இருந்தது. அது மாதிரியான நிலைமை இன்றைக்கு ஜில்லா மட்டத்திலே உருவாகிக்கொண்டு வருகிறது. தி.மு.க. செயலாளர்களை வைத்துத் தான் கலெக்டரிடமோ, எஸ்.பி.யிடமோ அவர்கள் சொல்லித்தான் காரியங்கள் நடைபெறுகின்றனவே தவிர, மற்றக் கட்சிக்காரர்கள் சொன்னால் நடைபெறுவதில்லை என்ற நிலைமை இருக்கிறது. தி.மு.க. தலைவர்கள் அதிகமாகத் தலையிடுகிறார்கள் என்ற பிரச்னை இருக்கிறது. இந்த மன்றத்திலே, அமைச்சர்களைப் பாதுகாப்பதற்குப் போலீசார் இருக்கிறார்கள். மற்றவர்கள் இருக்கிறார்கள், சட்டம் இருக்கிறது என்றெல்லாம் சொல்லப்பட்டது. இருந்தாலும் கூட தமிழர்படை என்ற படையை வைத்துக் கொண்டிருப்பது சரிதானா, அவசியந்தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க



வேண்டும். இங்கேயுள்ளவர்கள் அனைவரும் தமிழர்கள்தான், இந்த அரசு அவர்களுடைய நலனுக்காகத்தான் இருக்கிறது. அப்படி இருக்கும் பொழுது அந்த அமைப்புத் தேவை தானா ? அந்த அமைப்பு இருப்பதனால் இன்னொரு அமைப்பு ஏற்படுவதற்கு அது வழிகோலாதா ? ஆகவே, இந்த அமைப்பு இருக்கவேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

18 மாதங்களே ஆகியிருக்கின்ற இந்த அரசின்மீது, குழந்தைப் பருவத்திலேயுள்ள இந்த அரசின்மீது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதை என்னுடைய கட்சி வன்மையாக எதிர்க்கிறது. குற்றங்குறைகளை மாற்றுவதற்காகக் கொண்டுவந்திருந்தால் புரிந்து கொள்ளலாம். ஆனால் அதற்காகக் கொண்டுவரவில்லை. இந்த அரசின்மீது தவறான எண்ணத்தை ஏற்படுத்துவதற்காக, அவர்களுக்குள்ளே பிளவு வருவதை மாற்றவேண்டுமென்ற முறையிலே கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறாது என்று அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த வினாயகம் அவர்களே சொன்னார்கள். அப்படித் தெரிந்தும்கூட அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதைக் காலத்திலே அவர்கள் செய்யவில்லை. காலத்திற்கு முன்னால் தங்களைப் பாதுகாப்பதற்காகச் செய்யக்கூடிய காரியமாக இருப்பதால் என்னுடைய கட்சியானது இதை முழுமையாக எதிர்க்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

***திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு மைனாரிட்டி, மெஜாரிட்டி என்பதோ சட்டப்படி ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கொண்டுவரவேண்டுமென்பதோ முக்கிய பிரச்சினை அல்ல. தமிழ்நாட்டில் கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக நடந்து இருக்கும்படியான புதிய ஆட்சியிலே உள்ள குற்றங்களைச் சுட்டிக் காட்டி ஆட்சியாளர்களுக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் செய்வது போல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் எங்களுடைய கட்சியும், அதை வரவேற்று இருக்கும். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் கொண்டுவந்து இருக்கின்ற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தமிழ்நாட்டிலே நாங்கள் என்னென்ன கொள்கைகளை அமுல் நடத்தினோமோ அந்தக் கொள்கைகளையெல்லாம் புதிய தமிழக அரசு நடத்தவில்லை என்று சொல்வதைப் போல் கொண்டுவந்திருக்கிறார்கள். நாங்கள்—நடத்தியது போல் போலீஸ் ராஜ்யம் நீங்கள் நடத்தவில்லை. உணவுக் கொள்கையை நீங்கள் நடத்தவில்லை. தொழில், தொழிலாளர் கொள்கைகளை நீங்கள் நடத்தவில்லை என்றும் நாங்கள் நடத்தியதையெல்லாம் தொடர்ச்சியாக என் கடைப்பிடிக்கவில்லையென்று வற்புறுத்துகின்ற தீர்மானமாகத்தான் இது இருக்கிறது. புதிய சிந்தனையிலே மக்கள் முன்னேற்றத்திற்காக ஒரு மாற்றத்தை உண்டுபண்ணக்கூடிய தீர்மானமாக இது இல்லை. கடந்த ஆண்டும் சரி, இந்த ஆண்டும் சரி, மத்திய அரசு வரிகளை சுமத்தி இருக்கிறது. சர்க்கரை, உரம், துணி, பேப்பர் இவ்வாறு பல பொருள்களின் விலைகளை உயர்த்த அனுமதித்திருக்கிறார்கள். ஒரு டன் பேப்பர் விலை 125 ரூபாயாக இருந்தது. இன்றையதினம் 175 ரூபாயாக உயர்ந்து இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் மாநில அரசா அல்லது மத்திய அரசா ? மத்திய அரசுதான் காரணம். பொருள்களின் விலைகளெல்லாம் உயர உயர மக்கள் வாங்கி உண்ணமுடியாத, உபயோகிக்க முடியாத நிலைக்குத் தாழ்ந்திருக்கிறார்கள்.

விலைகள் உயர்ந்ததின் காரணமாகவும் மக்கள் வாங்கும் சக்தியை இழந்து வருவதின் காரணமாகவும் தொழில்களில் நெருக்கடி முற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜபாளையத்திலே காங்கிரஸ் கட்சியினர் தீர்மானம் போட்டார்கள். கைத்தறியைப் பாதுகாக்கவேண்டுமென மொட்டையான தீர்மானம் போட்டு இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ள கைத்தறி நெசவாளர் மக்களைத் தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ளலாம் என்று நினைத்து இப்படியெல்லாம் செய்கிறார்கள். அவர்களுடைய தொழிலைப் பாதுகாக்கவேண்டுமென்றால் நூல் விலை உயர்ந்து விட்டது, சரிகை விலை உயர்ந்துவிட்டது,

இதைக் குறைக்கவேண்டும். எக்சைஸ் வரி அதிகமாகி விட்டது. இதுவும் குறைக்கப்படவேண்டும். ரிசர்வ் பாங்க் உத்தரவை மாற்றவேண்டும். விசைத்தறிகள் புகுத்தப்படுவதைத் தடுக்க வேண்டும். தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை 25 சத வித நஷ்ட ஈடு கொடுத்து அரசாங்கமே எடுத்துக்கொள்ளவேண்டும். ஆண்டு பூராவும் 10 பைசா ரிபேட் கொடுத்து வரவேண்டும் என்று நெசவாளர் பெருமக்கள் கேட்கிறார்கள். இவற்றையெல்லாம் மத்திய அரசு செய்யவேண்டுமா அல்லது மாநில அரசு செய்ய வேண்டுமா ? கிட்டத்தட்ட இவற்றிலே பத்தில் ஒன்பதை மத்திய அரசு தான் செய்யவேண்டும். அப்படியிருக்கும்போது ராஜபாளையத்திலே மொட்டையான தீர்மானம் போடுவது அரசியல் வஞ்சனை தானே ஒழிய வேறு ஒன்றுமில்லை. ராஜபாளையம் தீர்மானத்தை காங்கிரஸ் எந்த அடிப்படையில் கொண்டுவந்தது என்று கேட்க விரும்புகிறேன். அடுத்து விவசாயத்தை எடுத்துக்கொள்வோம். நாம் தமிழக அரசைக் கேட்கிறோம், நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிற சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்தி சரியான முறையில் நிலச் சீர்திருத்தத்தை அமல் நடத்துங்கள். ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு பதினைந்து ஸ்டாண்டர்ட் எக்கர் நிலம் என நிச்சயுங்கள். இதனால் ஏழை உழவன் குத்தகை விவசாயி தாழ்த்தப்பட்ட மக்கள் நல்ல பயனைப் பெறமுடியும்.'

ஆகவே, அந்த வகையிலே முயற்சியை மேற்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறோம். தமிழக அரசிடமிருந்து ஆலோசிக்கிறோம் என்ற பதிலைப் பெற்றிருக்கிறோம். இதைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்லுகிறார் எனக் கேட்க விரும்புகிறேன். தமிழ் மக்களுக்கு இதை அவர் தெளிவுபடுத்தவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் கல்வி மானியமாக இருந்தாலும் சரி, தொழில் மானியமாக இருந்தாலும் சரி, பட்ஜெட் பொது விவாதமாக இருந்தாலும் சரி, நெல்லுக்கு விலையை உயர்த்து என்றே பேசுவார். இது பெரும் மிட்டாமிராசுகளுக்காகப் பேசுவதைத் தவிர வேறல்ல.

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நூறு கோடி ரூபாய் இருந்தால் வருஷத்திற்கு இருபது கோடி ரூபாய் வீதம் நீர்ப்பாசனத்திற்குச் செலவழித்து நல்ல முறையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்யலாமென்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசிடத்திலே இந்த உதவியைக் கேட்கிறார்கள். இது சம்பந்தமாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கும் நண்பர்களின் கொள்கை என்ன ?

அடுத்து, போலீஸை பற்றிச் சொல்லுகிறார்கள். புதிய ஆட்சி வந்த பிறகும் போலீஸ் நடவடிக்கையில் மாற்றமில்லை என்று நாங்களும் சொல்லுகிறோம். தொழில் தகராறுகளில் போலீஸ் அத்துமீறி நடந்து கொள்கிறது. பொய் கேஸ்கள் முக்காடு கேஸ்கள் பழையபடி நீடிக்கிறது. இவைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்குரிய வகையை முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமெனச் சொல்லுகிறோம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடுகிறபோது, சட்டப்படி நோட்டீஸ் கொடுத்து வேலை நிறுத்தம் செய்கிறபோது அவர்கள் உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என்று கோரும்போது எந்தப் போலீஸும் தலையிடக் கூடாது என்று கூறுகிறீர்களா ? இல்லை.

அவன் போராடக் கூடாது. அவனை உதையுங்கள், சுடுங்கள் என்பது தான் உங்களுடைய கொள்கை. பின் எதற்காக போலீஸைப் பற்றிப் பேசுகிறீர்கள். படி அரிசி என்றோ அல்லது வேறு காரணம் சொல்லியோ இயக்கம் நடத்தினால் அதற்கு போலீஸ் பாதுகாப்பு வேண்டும். ரகளை செய்வதற்கு அனுமதி வேண்டும். இதற்குத் தான் உரிமை கோருகிறீர்களே தவிர, விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், பொது மக்கள் ஆகியோர் தங்கள் நலன்களுக்காக இயக்கம் நடத்தினால் போலீசார் ஆதரவாக இருக்க வேண்டுமே யல்லாது மக்களின் உரிமைகளைப் பறிக்கும் விதத்தில் நடந்துகொள்ளக் கூடாது. அப்போது தான் ஜனநாயகம் வளரும். தனி நபர்களுக்கோ, அல்லது உடைமைகளுக்கோ பாதகம் ஏற்படும்போது மட்டும் தான் போலீசார் தலையிட வேண்டும் என்பது எங்கள் கொள்கை. இதில் காங்கிரசின் கொள்கை என்ன ?





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து உணவு பிரச்சினையை எடுத்துக் கொண்டால் மாநில அரசு இன்றைய தினம் அமல் படுத்தும்படியான உணவு விநியோக முறையை மாற்ற வேண்டும். தலைக்கு தினம் 12 அவுன்ஸ் அரிசி கொடுக்க வேண்டும். கொள்முதல் தீவிரமாக அமல் நடத்தப்பட வேண்டும். எட்டு லட்சம் டன் என்பதை பன்னிரண்டுலட்சம் டன் என்று கொள்முதல் குறிக்கோளை உயர்த்த வேண்டும். அந்த அளவுக்கு நாட்டிலே உணவுப் பொருள் இருக்கிறது. சில இடங்களில் ஒன்றரை ரூபாய், சில இடங்களில் இரண்டரை ரூபாய் என்ற நிலையில் அரிசி விலை இருக்கிறது. இதையும் முறைப்படுத்த வேண்டும் என நாங்கள் கூறுகிறோம். இத்தகைய காரியங்களையெல்லாம் செய்யவேண்டுமென்று கூற முன்வரமாட்டார்கள். ஏனென்றால் இன்னும் 4 லட்சம் டன்னைப் பெரியவர்களிடத்தில் எடுக்கவேண்டுமே, அதற்கு ஒப்புவார்களா ?

தமிழ்நாடு சர்க்கார் பெரும் மிராசுதாரர்களுக்கு ஆதரவாகப் போக வேண்டுமென்பது தான் காங்கிரஸ் கொள்கை. அடுத்து தீ விபத்துக்களைப் பற்றி ஆத்திரமாத்திரமாகப் பேசினார்கள். அதுபற்றி சில விவரங்களை இந்த மன்றத்தில் கூற விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியான வேடசந்தூர் தொகுதியில் கல்வார்பட்டி கிராமத்தில் காசிபாளையம் என்ற ஊர் காங்கிரஸ் கோட்டையாகவே இருந்தது. அதற்கு அருகே வெள்ளையம்பட்டி என்ற ஊரில் 1962-ம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கிளையை அமைத்தது. நான் இப்போதைய நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்லவில்லை. 1962-ம் ஆண்டு நடந்ததைப் பற்றிக் கூறுகிறேன். அந்தக் கிளையை ஆரம்பித்த ஒரே வாரத்திற்குள் ஹரிஜன விவசாயிகளால் ஆரம்பிக்கப்பட்டதால் அந்த ஹரிஜன விவசாயிகளுடைய வீடுகள் நெருப்பை வைத்துக் கொளுத்தப் பட்டன. இது நடந்தது உண்மை. இன்று காலையில் எனக்கு தபால் வந்திருக்கிறது. அதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஏழை விவசாயிகளுக்காக கண்ணீர் வடிப்பதாகக் காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சுப்ரமண்யம் கூட ஹரிஜனங்களுக்கு வேலை செய்யப்போகிறேன் என்று கூறியிருக்கிறார். கல்வார்பட்டி கிராமத்தில் பழனிமாதாரி என்ற ஹரிஜன விவசாயிக்கு என்ன நிலை ஏற்பட்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன். ஏழாண்டுகளுக்கு முன்பு காங்கிரஸ் அரசு ஆட்சி செய்து கொண்டு இருக்கும்போது தனக்கு மூன்றரை எக்கர் நிலத்தை ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென அனுப்பினான். 7 ஆண்டுகளாகியும் பழனி மாதாரிக்கு நிலம் கிடைக்க வில்லை. புதிய அரசு வந்தவுடனேயே அமைச்சரிடத்தில் விஷயங்களை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு ஹரிஜன விவசாயிக்குச் சாதகமாக உத்தரவுகள் போயிருப்பதாக கேள்விப்பட்டேன். பழனி மாதாரிக்கு நிலத்தை ஜாரி செய்து கொடுப்பதற்கான சூழ்நிலை உருவாகி வருகிறது. இந்த நேரத்திலே மூன்று வாரங்களுக்கு முன்பு பழனி மாதாரி, அவனுடைய அண்ணன் மாரிமாதாரி ஆகியோரின் இரண்டு குடிசைகளை நெருப்பு வைத்துக் கொளுத்தி இருக்கிறார்கள். நண்பர் ஏ. கே. சுப்பையா அவர்கள் தீ வைப்புக்கு ஓர் அரசியல் உள்நோக்கம் இருக்கிறது என்று சொன்னவுடன் காங்கிரஸ்காரர்களுக்குக் கோபம் கோபமாக வந்தது. பழனி மாதாரி போன்ற ஹரிஜன மக்களின் குடிசைகள் தீ வைக்கப்படுகின்றது என்றால் எந்த நோக்கத்துடன் செய்யப்படுகின்றது என்பதை இந்த மன்றம் தீர்மானிக்க வேண்டும். இப்போது காங்கிரஸ் கட்சி கொண்டு வந்து இருக்கின்ற நம்பிக்கை யில்லாத் தீர்மானம் அவர்களுக்கே வினையாக வந்து நிற்கிறது. கொக்கு சகதியில் மாட்டிக் கொண்ட கதையாக காங்கிரஸ் கட்சி சிக்கிக்கொண்டு இருக்கிறது. மீனைப் பிடிக்கச் சென்ற கொக்கு சகதியில் மூக்கை மாட்டிக் கொண்டது. மூக்கை எடுப்பதற்காக காலை சகதியில் ஊன்றி மூக்கை எடுக்க முயற்சித்தது. மூக்கும் வராமல், காலும் வராமல் சகதியில் சிக்கிச் செத்தது அந்தக் கதையில். காங்கிரஸ் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற சகதியில் சிக்கிச் செத்துக் கொண்டிருக்கிறது. இந்த வரலாறு காங்கிரஸ் கட்சிக்கு அளித்திருக்கும் தண்டனை. காங்கிரஸ் கட்சி அனுபவித்துத் தான் தீர வேண்டும். இந்த நிலையிலே உள்ள நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை நிராகரிக்கிறேன் என்று கூறி எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. டி. எஸ். ஆதிமூலம் :** மிஸ்டர் சேர்மன் சார், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் உப்பு சப்பு இல்லாமல் இருக்கிறது. இருந்தபோதிலும் ஏதோ நாங்கள் நான்கு நாட்கள் மெட்ருசில் இருந்து, கவனிக்க வேண்டிய காரியங்களை யெல்லாம் கவனித்துவிட்டுப் போக வசதியைத் தேடித் தந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சில விஷயங்களைப் பற்றி வழக்கம் போல் சொல்ல ஆரம்பிக்கிறேன். முதலாவதாக, கடவுள் பட நீக்க உத்தரவைப் பற்றி எடுத்துக் கொள்கிறேன். சர்க்கார் அலுவலகங்களில் கடவுள் படங்கள் இருக்கக் கூடாது என்ற அனுவசியமான உத்தரவை அனுப்பியிருக்கவே வேண்டாம். காங்கிரஸ் ஆட்கள் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். வெள்ளத்திலே போகிறவன் சிறு துரும்பாவது கிடைக்காதா என்ற நிலையில் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த உத்தரவு அவர்களுக்கு மறைமுகமான ஆதரவை உண்டு பண்ணிவிடுவது மாதிரி இருக்கிறது. அந்தக் காலத்தில் கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் இஷ்ட லிங்கேசுவரர் கோயில் கட்டுவதற்கு மெட்ராஸ் கவர்னராக இருந்த லார்டு வெல்லிங்டன் மனைவி உதவி செய்தார்கள் என்று தெரிகிறது. அதே மாதிரி மதுராந்தகத்தில் ஏரி காத்த பெருமாள் கோயில் கட்ட அன்று இருந்த வெள்ளைக்கார கலெக்டர் சர்க்கார் கஜானாவில் இருந்து கோயில் நிர்மாண வேலைக்குப் பணம் கொடுத்திருப்பதாக கல்வெட்டு சாசனம் இருக்கிறது. அந்தக் காலத்தில் இப்படி பிற மதங்களுக்கு உதவி செய்வதன் மூலந்தான் மதச் சார்பற்ற சர்க்கார் என்று ஊர்ஜிதம் செய்ய முடியும் என்ற வகையிலே வெள்ளைக்காரர்கள் செய்து காண்பித்திருக்கிறார்கள். இந்த மாதிரி பட நீக்க உத்தரவை யாரைத் திருப்தி செய்யப் போட்டீர்களோ ? இதை வாபஸ் வாங்கிக் கொள்ள ஏற்பாடு செய்தால் உங்களுக்கு கவுரவம் போய்விடாது. இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் பஸ் தொழிலாளகளுக்கும் மாணவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இரண்டு நாட்களுக்கு பஸ் தொழிலாளர்கள் பஸ்களைத் தங்கள் ஆதிக்கத்தில் எடுத்துக்கொண்டு ரொம்பவும் தவறுகள் செய்திருக்கிறார்கள். எல்லா கட்சிகளுக்கும் இதை சொல்வதற்குக் கொஞ்சம் பயம். இவர்களைப் பற்றிச் சொன்னால் இவர்கள் ஓட்டு கிடைக்காதே, அவர்களைப் பற்றிச் சொன்னால் அவர்கள் ஓட்டு கிடைக்காதே என்பதால் எதிர்க் கட்சியில் கூட அதைப்பற்றி மொழுகித்தான் பேசுகிறார்கள். இந்தச் சர்க்கார் அந்த விஷயத்தில் கொஞ்சம் கவனக் குறைவாக இருந்துவிட்டிருக்கிறது. மந்திரிகள் ஹெட்குவாட்டர்சில்தான் இருக்கிறார்கள். மாணவர்கள் படுகின்ற துன்பத்தைப் பற்றி ஃபோனில் அலறியிருக்கிறார்கள். பஸ் தொழிலாளர்கள் பஸ்ஸை எடுத்துக் கொண்டு கற்களைப் போட்டுக் கொண்டு புரசவாக்கத்தில் லா காலேஜ் மாணவர்களைத் தாக்கி யிருக்கிறார்கள். அடையாறு எஞ்சினியரிங் காலேஜ், மற்றப் பகுதிகளிலும் . . .

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** இந்தப் பிரச்சினை விசாரணையில் இருப்பதால் அதைப் பற்றிய விவரங்களை உறுப்பினர் அவர்கள் பேசுவது முறையா ?

**திரு டி. எஸ். ஆதிமூலம் :** நொண்டிச் சாக்கு. சட்ட சபையில் இப்படிப்பட்ட விஷயங்களைப்பற்றிக் கூறுவது சர்க்கார் வருங்காலத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதற்காகச் சொல்வது. 25 பேரைச் சுட்டார்கள் என்றால் உடனே வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைக்குப் போகிறது. சட்டசபை மெம்பர் அதைப் பற்றிப் பேசினால் உடனே "சப் ஜூடிஸ்" என்று கூறுகிறார்கள். விசாரணைக் கமிஷனில் நடந்தவை பத்திரிகையில் வந்ததைத் தான் நான் பேசுகிறேன். வெடிரினரி காலேஜ்ஜில் ஒரு மாணவனை ஒரு சப் இன்ஸ்பெக்டர் வேட்டையாடிச் சுட்டிருக்கிறார்.

பிற்பகல் 1.00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைக் குறிப்பிட்டு விட்டு விட்டுவிடுங்கள். விளக்கங்கள் கூறுவது முறையல்ல.



**திரு டி. எஸ். ஆதிமூலம் :** ஆகவே இதை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். இந்தக் கமிஷன் 'it is functioning under the instruction of the Legislature' என்றிருந்தபோதிலும், இந்த மாதிரி இரண்டு தினங்களுக்கு (stand still) ஸ்டான்ட் ஸ்டில்லாக இருந்தது சரியல்ல என்பதை முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். போலீஸ் இலாகாவிற்கு கெட்டிக்கார இலாகா என்ற பெயர் இருக்கிறது. ஆனால் போலீஸ்காரர்களின் கவனக் குறைவால்தான் இவை நடந்திருக்கின்றன என்று சொன்னால் அதில் ஏதோ விஷயம் அடங்கியிருக்கிறது. ஆகவே, இனிமேல் இம்மாதிரி அசம்பாவிதங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அடுத்தபடியாக, வழக்கம்போல் உள்ள பல்லவிதான். நான்கு மாதங்களுக்கு முன்பு நான் மதருஸ்க்கு வந்திருந்தேன். காரில் வந்துகொண்டிருந்தேன். ஜில்லாதோறும் ரேஷனை அமல் செய்கிற வகையில் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் ஆள்கள் நேஷனல் ஹைவேஸ்ஸில் ஒரு கல்லை வைத்து அடைத்து செக் போஸ்ட்ஸ் என்று வைத்து காரியங்கள் செய்கிறார்கள். மதருஸ் வரை அதை பார்த்துக்கொண்டே வந்தேன். நான் ஒரு ப்ளட் ப்ரஷர் பேஷியண்ட். அதை பார்த்தவுடன் ப்ரஷர் அதிகமாகி மூக்கு வழி ரத்தம் வந்து ஜெனரல் ஆஸ்பத்திரியில் அட்மிட்டாகிவிட்டேன். அதைப் பார்த்து எனக்கு அவ்வளவு எரிச்சல் வந்தது. தமிழ்நாடு ஒரு Self-sufficient State, surplus என்று ஒத்துக்கொள்ள வேண்டாம். ஒரு படி அரிசி போடுகிறேன். என்று சொல்கிறீர்கள். நான் கேட்கிறேன், எப்படி அதைப் போட முடியும் என்று ? இப்போது உள்ளதற்கே ஏழு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தயிடத்தில்தான் நீங்கள் அபாயத்தில் (danger) மாட்டிக்கொண்டிருக்கிறீர்கள். ஐந்து வருடங்களில் ஸ்டேட் பூராவும் அதை நிறைவேற்றப் போவதில்லை. அப்படி நிறைவேற்றப் போனால் மற்ற அபிவிருத்தி வேலைகள் எல்லாம் தடைபடும். இந்த ஒரு படி அரிசி என்பதை ஸ்டேட் பூராவும் போடமுடியாது. ஆகவே அடுத்த எலக்ஷன் நேரத்தில் இந்த(சப்ஜெக்ட்) விஷயம் காங்கிரஸ்காரர்களுக்கு நல்லதொரு மேடையைக்கொடுக்கிற மாதிரியிருக்கும். இப்போது இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு லகுவாக பதில் சொல்லி கேலி செய்து விட்டுவிடலாம். ஆனால் 1972-ல் தேர்தல் மேடையில் என்ன செய்யமுடியும் என்று பார்க்கவேண்டும்.

தோழமை கட்சியைச் சேர்ந்தவன் என்று கூறுகிறேன். அடுத்த தடவை நான் தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை. அதற்கு என்னிடம் துட்டு கிடையாது. துட்டு இருந்தாலும் ஹெல்த் கிடையாது. இருந்தாலும் சொல்கிறேன் இன்னொரு பெரியதொரு 'danger' இருக்கிறது. முன்னால் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது உணவு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் நெல்லை அரைக்க பெரிய ராட்சச ஆலைகள் வைக்கப்போவதாக, அதற்கு லட்சக்கணக்கான மூட்டை நெல்லைக் கொண்டு வந்து சேர்க்கவேண்டும். அந்த நவீன ஆலைகள் மூலம் நமக்கு 5 சதவீதம் லாபம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அதை ஒத்துக்கொள்ளலாம். ஆனால் லட்சக் கணக்கான மூட்டை நெல்லை அந்த ராட்ச ஆலைகளுக்கு டிரான்ஸ்போர்ட் செய்து கொண்டு வரவேண்டும். மூட்டைகளை அடுக்கி வைப்பார்கள். இப்படி லட்சக்கணக்கான மூட்டை நெல்லை அடுக்கி வைக்கும்போது 400 அல்லது 500 மூட்டை நெல்லாவது சேதப்படாமல் போகாது. ஆகவே அந்த சேதம், டிரான்ஸ்போர்ட் சார்ஜ் இவைகளைப் பார்க்கும்போது அந்த 5 சதவீத லாபமும் அடிபட்டுப் போய்விடும். மேற்கொண்டு 1972-ல் தேர்தல் வரும். அப்போது ஒரு ஆடிட் ரிபோர்ட்டும் வரும். அந்த ரிபோர்ட்டில் சொல்வார்கள், தஞ்சை ஜில்லாவில் அரிசி மூட்டைகளை அடுக்கிவைத்ததின்மூலம் சேதாரம் 47 லட்ச ரூபாய் என்று. அதை கனம் கருத்திருமன் அவர்களும், கனம் விநாயகம் அவர்களும் மேடைக்கு எடுத்துக்கொண்டுபோய் ஆட்டம் ஆடுவார்கள். 47 லட்சம் ரூபாய் நஷ்டம் இந்த சர்க்காரின் அஜாக்கிரதையினால் வந்துவிட்டது என்று. ஆகவே இந்த ராட்சச ஆலைகள் வேண்டாம். இந்த ரேஷனையே எடுத்து விடுங்கள். அப்போது ஆவரேஜாக படி அரிசி ரூ. 1·25-க்கு கிடைக்கும். இப்போது இரண்டு

ரூபாய்க்கு அரிசி கிடைக்கிறது. தரமான அரிசி நல்ல முறையில் மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்றால் இந்த ரேஷனை எடுத்து விடுங்கள்.

ஒரு ஜில்லாவில் ஆயிரம் ரெவின்யு கிராமங்கள் இருக்கின்றன. இருந்தாலும் 300 கிராமங்களுக்குத்தான் இந்த ரேஷன் கொடுக்கப்படுகிறது. அதுவும் தலைக்கு 800 கிராம் என்று கொடுக்கப்படுகிறது. ஒரு நபர் வாரத்திற்கு அரைப்படி அரிசி வாங்கிக் கொண்டா வாழ்க்கை நடத்துகிறான் ? மீதம் தேவைப் படும் அரிசியை வெளி மார்க்கெட்டில் வாங்குகிறார்கள். ஆகவே, இதைப் பற்றி மந்திரிகள் கூடி தீர்மானம் செய்யலாம். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் அதிகாரிகளைக் கூப்பிட்டு யோசனை கேளாதீர்கள். காங்கிரஸ் அரசாங்கம் உணவுக் கொள்கையில் தவறியதினால்தான் பரிதாபகரமாகத் தோற்றது. ஆகவே, அதைப்பற்றி நீங்கள் யோசித்துப் பார்த்து ஒரே அடியாக இந்தச் சனியனை ஒழித்துக் கட்டுங்கள். அதன் மூலம் ஏதாவது கஷ்ட நஷ்டம் வந்தால், மடையா இப்படி மாட்டிவிட்டு விட்டாயே என்று என்னைக்கேட்டால் நான் அந்த இஷ்யூவில் என் சட்டசபை மெம்பர் பதவியை ராஜிநாமா செய்கிறேன். இதனால் ஒன்றும் மரப்போவதில்லை. 1952-ல் இராஜாஜி அவர்களின் மந்திரி சபை வந்தது. அப்போது எங்கு பார்த்தாலும் நெருக்கடி, ஆறு அவுன்ஸ்தான் அரிசி போட்டார்கள். அப்போது ஆறு அவுன்ஸ் காங்கிரஸ் என்றுகூட கேலி செய்தார்கள இராஜாஜி அவர்கள் பதவிக்கு வந்தவுடன் மத்திய உணவு அமைச்சர் திரு. கித்வாய் அவர்களிடம் இன்பார்மலாகச் சொல்லிவிட்டு ரேஷன் கட்டுப்பாட்டை நீக்கினார்கள். அது ஜனங்களுக்கு க்ஷேமமாக அமைந்தது. இது 1964-ல் வந்த சனியன் தானே. அப்போது பாகிஸ்தான் போர் இருந்தது. இப்போது என்ன நெருக்கடியிருக்கிறது ? சென்ட்ரல் கவர்ன்மெண்ட் உணவு அமைச்சர் நம்மை அப்ரீஷியேட் செய்கிறார், அப்படி இப்படி என்று வீண் பிரமையில்லாமல் தீவிரமாக யோசித்து இந்த ரேஷனிங்கை எடுத்து விடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றபடி கவர்ன்மென்டை நல்லமுறையில் Congratulate செய்ய பல அம்சங்கள் இருக்கின்றன. ஆட்சிமொழி விஷயத்தில் இந்தியாவிலேயே உங்களை மாதிரி தெளிவான கொள்கையை உடைய ஒரு கட்சி கிடையாது. சரியானபடி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தென்னாட்டு காந்தி என்று சொல்வதற்கு பொருந்தும் வகையில் மதுவிலக்குக் கொள்கையில் நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். நான் சொல்கிற விஷயங்களைப் பொறுப்போடு யோசிக்கவேண்டும்.

“ இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.”

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்கள். சரியான நண்பர்கள் இல்லாத காரணத்தினால், ஒரு அரசன் பாதுகாப்பற்றவனாகி விடுகிறான். இந்த அரிசி விஷயமாக இந்த உண்மைகளை இந்த சபையில் யாராவது சொன்னார்களா ? ஒருவரும் சொல்லவில்லை. ரேஷனை தீவிரப்படுத்துங்கள், தீவிரப்படுத்தி கம்யூனிஸ்ட் பாலிஸியில் செய்யுங்கள் என்கிறார்கள். ஏன், கம்யூனிஸ்ட் கவர்ன்மெண்ட் என்று டிக்ளேர் செய்து விடுங்களேன். 1972-ல் கோட்டை விட்டுப் போகவா ? முதல் அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஏராளமான ரேஷன் கடைக்காரர்கள் அரசின் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களே, இதை நீக்கிவிட்டால் கட்சி வேலைகள் தடைபடுமே என்று நினைக்காதீர்கள். இந்தமாதிரி சனியன் கட்சியையே அழித்து விடும். தென்காசியில் 23,000 வோட்டுகள் அதிகமாகக் கிடைத்ததே என்று சொல்லலாம். இந்த உணவு பாலிஸியை வைத்துக் கொண்டா வோட்டு போட்டார்கள் ? அந்தக் காலத்தில் எம்.பி.-க்கு நாமினேஷன் போட்டுவிட்டு காஷ்மீருக்கு ஹனிமூனுக்கு போய்விட்டு திரும்பி வந்து மாலையை வாங்கிக் கொண்டு போவார்கள் காங்கிரஸ்காரர்கள். அதே போல் உங்கள் கட்சி பலத்தினால் தென் சென்னையிலும், தென் காசியிலும் வோட்டுகள் விழுந்ததே தவிர, உணவுக் கொள்கையால் என்று நினைக்காதீர்கள். உணவுக் கொள்கையை சாமர்த்தியமாக, வெற்றிகர





மாக நடத்துகிறோம் என்பதால் அல்ல அது. அம்பாசமுத்திரம் தாலுகா சிறிய தாலுகா. அங்கு ஒரு எக்கர், இருபது செண்ட், முப்பது செண்ட் என்று பலர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். 300 கேஸ்கள் அங்கு போடப்பட்டு, கொள்முதலில் பலர் துன்பப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன செய்வது என்பது தெரியவில்லை. ஜனங்கள் துன்பப்படும் அளவிற்கு கொள்முதல் இருக்கிறது. இதை முதல் அமைச்சர் அவர்கள் தீவிரமாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* *

அடுத்தபடியாக, புது ஹாஸ்டல் ஒன்று 60, 70 இலட்சம் செலவு செய்து கட்டியிருக்கிறார்கள். அது கிரிமினல் வேஸ்ட் மாதிரி தெரிகிறது. ராணுவ கோர்ட் மாதிரி வைத்து அதில் ஈடுபட்ட என்சினியர்களை விசாரணை நடத்தலாம். இந்த ராஜ்யத்து எம்.எல்.ஏ.-க்களுக்கு சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. பஞ்சாபில் எடுத்துக் கொண்டால், 450 ரூபாய், கேரளாவில் 300 ரூபாய், மைசூரிலே 400 ரூபாய் என்றிருக்கிறது. டெய்லி பேட்டா 20, 25-க்குக் குறைந்து கிடையாது. இங்கு எனக்கு முந்தாநாள் டாக்ஸி சார்ஜே 20 ரூபாய் ஆகிவிட்டது. மந்திரிசபையை நான் வாழ்த்துகிறேன், சம்பளத்தைக் குறைத்து 500 ரூபாயாக வாங்கிக்கொள்வதற்காக. நீங்கள் வேண்டுமானால் தியாகம் பண்ணிக்கொள்ளுங்கள், நம்மிடமிருந்து பிரிந்த திருவாங்கூர் ராஜ்யத்தில் 300 ரூபாய் சம்பளமும், 20 ரூபாய் பேட்டாவும் கொடுக்கிறார்கள். அதையாவது கருணைபுரிந்து எங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அந்தப் பொறுப்பை வேண்டுமானால், சுதந்திராக் கட்சிக்காரர்தான் சொன்னான் என்று என் பெயரில் வேண்டுமானால் போடுங்கள். ஹாஸ்டல் வசதி ரொம்பவும் மோசமாக இருக்கிறது. எனவே, புதுக்கட்டிடம் இருந்தாலும் பழைய கட்டிடத்தையே உபயோகப்படுத்த வழி செய்யுங்கள். இது சம்பந்தமாக ஒரு மகஜர் தயாரித்து எல்லா எம். எல். ஏ-க்களிடமும் கையெழுத்து வாங்கி முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுக்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். அதற்கு நேரம் கிடைக்கவில்லை. எனவே, பழைய ஹாஸ்டலையும் அசெம்ளி மெம்பர்களுக்காக கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கிறேன் என்ற முறையில் சொல்லிக் கொண்டு வணக்கத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ஆதிமூலம் அவர்கள் முன்பு இந்த இடத்தில் இருந்தவரைப் பற்றி குறிப்பிட்ட அந்தப் பகுதியைச் சபை** நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவரவர்களே, நேற்றைய தினம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர், காங்கிரஸ் தரப்பு உறுப்பினர் திரு. ராமச்சந்திர துரை அவர்கள் “13-ஆம் தேதி, 14-ஆம் தேதி ஆகிய நாட்களில் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்ததாகவும், அந்த நேரத்தில் கட்சியின் தேர்தல் காரியங்களுக்காக அவர் தன்னுடைய அதிகாரத்தைப் பிரயோகித்தது, அவருடைய ஆதரவில் முன்னேறிய பஸ் ஓனருடைய 20 பஸ்களை எடுத்து கொண்டு மாவட்டச் செயலாளர் பதவித் தேர்தல் வேலையை நடத்திவிட்டு வந்திருக்கிறார்கள், கட்சி வேலை செய்திருக்கிறார்கள், இந்த 20 பஸ்களை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் நிரூபிக்க முடியும், 20 எஸ்.எம்.டி. பஸ்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு ஆதாரம் காட்ட முடியும்” என்று தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றிய முழு விவரமும் நான் இன்று பெற்றிருக்கிறேன். எஸ்.எம்.டி. பஸ்கள் 13, 14 ஆகிய தேதிகளில் எந்தெந்த வகையில் பயன்படுத்தப்பட்டன என்பதற்கு ஆதாரபூர்வமான தகவல்களைப் பெற்று வைத்திருக்கிறேன். நண்பர் அவர்கள் சொன்னபடி கட்சிக் காரியத்திற்காக ஒரு பஸ்ஸாகிலும் உபயோகப்படுத்தப்படவில்லை என்பது என்னைப்

**பேரவைத் துணைத் தலைவர் கட்டளைக்கிணங்க அகற்றப்பட்டது.

பொறுத்தவரையில் தெளிவாக இருக்கிறது. ஆகையால் இந்த அவையில் அவர்கள் தவருன தகவல் கொடுத்திருக்கிருர்கள். இந்தத் தவருன தகவலே அவர் திரும்பப் பெற விரும்பிஞல் பெற்றுக்கொள்ளலாம், இல்லையென்ருல் இது உரிமைப் பிரச்சினையில் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை:** எஸ். எம். டி. பஸ் என்று நான் கூறியது, உள்ளபடியே நான் அந்த முதலாளியின் கார்கள் என்று சொல்வதற்குப் பதில் பஸ் என்று கூறிவிட்டேன். பஸ் என்று கூறியதை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை:** முதலில் 20 பஸ்கள் பயன்படுத்தப்பட்டன என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்கிருர்கள் என்பதால் நான் மேலும் தொடர விரும்பவில்லை. விளக்கத்திற்காகக் கூறுகிறேன், 20 கார் எஸ். எம். டி. பஸ் முதலாளி வைத்திருக்கிருரா என்பதை—அவருக்கும் அந்த முதலாளி தெரிந்தவர் தான்—அவர்கள் 20 கார்கள் வைத்துக்கொண்டு அந்த 20 கார்களையும் கழகத் தேர்தல் வேலைக்காக கொடுத்திருக்கிருரா என்பதை நெஞ்சில் கை வைத்து, இங்கில்லாவிட்டாலும் வெளியிலாவது, என் இப்படிச் சொல்ல வேண்டும், கட்சிக்காக வாதாட வேண்டுமென்ருல், வேறு எத்தனையோ வழிகள் இருக்கின்றனவே என்று துரை அவர்கள் தனியாகச் சிந்திக்க வேண்டும்.

***திருமதி வி. ப. பழனியம்மாள்:** தலைவரவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கும் காங்கிரஸ உறுப்பினர்களுக்கு என நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னென்ருல் அவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து விவாதம் நடத்துவதால்தான் பொதுமக்களுக்கு இந்த 18 மாத காலமாக திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி எவ்வளவு அரும்பெரும் காரியங்களைத் தகுந்த காலத்தில் செய்திருக்கிறது என்பதையும், அதை அவர்கள் எப்படி மாறுபடுத்தி திரித்து கூறுகிருர்கள் என்பதையும் தெரிந்துக்கொள்ள வாய்ப்பாக இருக்கிறது. இவர்கள் கூறிக்கொண்டிருக்கும் குற்றச்சாட்டுகள் ஏற்கெனவே இந்த மன்றத்தில் அடிக்கடி கூறப்பட்டு அதற்கு மறுப்பும் கூறியிருக்கிருர்கள். எனவே இவர்கள் அரைத்த மாவையே அரைத்துக்கொண்டிருக்கிருர்களே தவிர, புதிதாக எவ்விதமான குற்றச்சாட்டும் இல்லை. நேற்று இங்கு பேசிய உறுப்பினர் ஒருவர், பேரறிஞர் அண்ணு அவர்களின் மணிவிழா மலருக்காக விளம்பரம் சேகரிப்பதாகவும், அது ஒரு பெரிய தவறு போலவும் கூறியிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு முன்பு 1964-ல் முன்ஞல் முதல்வர் திரு. பக்தவச்சலம் அவர்களுக்கு, 68-வது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடியிருக்கிருர்கள். 60-ஆம் ஆண்டு பிறந்த நாள் கொண்டாடுவதுதான் எங்கும் வழக்கம். ஆனல் 68-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா என்று எந்த வகையில் கொண்டாடியிருக்கிருர்கள் என்பது தெரியவில்லை. மேலும் 68-வது பிறந்த நாளுக்காக ஒரு மலரும் வெளியிட்டிருக்கிருர்கள். அந்த மலரில் 70 விளம்பரங்கள் போட்டிருக்கிருர்கள். ஒவ்வொரு விளம்பரத்திற்கும் ஆயிரம் ரூபாய் வீதம் 70,000 ரூயாய் வாங்கப்பட்டிருக்கிறது, இதையும் அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்குக் காண்பிக்கவில்லை என்று கூறுகிருர்கள். உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்கு தணிக்கை செய்யப்பட்டு பத்திரிகைகளிலே வெளிவந்தது. இந்த மாநாட்டுச் செலவிற்காக எங்கள் அமைச்சர்களில் ஒருவரும் வசூலுக்குச் செல்லவில்லை. ஆனல் சீன யுத்தத்தின்போது உங்கள் அமைச்சர்கள் எல்லோரும் ஊர் ஊராகச் சென்று தங்கமாகவும், வெள்ளியாகவும், வைரமாகவும் வசூல் செய்து வந்தார்கள். அதற்குரிய கணக்குகளை அவர்கள் காட்டவில்லை. தவிர அதற்குரிய ரசீதும் அவர்கள் கொடுக்கவில்லை. எனது தகப்பஞர் கூட 3 பவுன் நகைகளைக் கொடுத்திருக்கிருர். அதற்குரிய ரசீது இதுவரை கிடைக்கவில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். இதையும் பொதுமக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.





மதுவிலக்கை மீறுகிறவர்களையும் சட்டப்படி குற்றம் செய்கிறவர்களையும் குற்றப் பதிவு செய்து, வழக்குகளைத் தொடர அரசாங்கம் தவறியதாகக் கூறுகிருர்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் மதுவிலக்கை அமுல்படுத்துவதில் தமிழக போலீஸே முதன்மையாக இருக்கிருர்கள் என்றும் இந்த ஆண்டில் 6 மாதங்களுக்குள் மதுவிலக்கு சம்பந்தமாக அதிகமான வழக்குகளைத் தமிழகப் போலீஸார் பிடித்திருக்கிருர்கள் என்றும் மவுண்ட் அபுவில் இருக்கும் தேசிய போலீஸார் ஆராய்ச்சி நிலையம் 22–8–1968-ம் தேதியன்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருப்பார்கள்.

சட்டம், அமைதி தமிழ்நாட்டில் கெட்டுவிட்டதாகவும் அவர்கள் கூறிக் கொண்டிருக்கிருர்கள். இதற்கு முன் நமது பாரதப் பிரதமர் அவர்கள் டார்ஜிலிங், காஷ்மீர் ஆகிய இடங்களுக்குத் தான் ஓய்வெடுக்கச் செல்வது வழக்கம். ஆனல், இந்த அரசு வந்ததற்குப் பிறகு நமது பிரதமர் அவர்கள் கொடைக்கானலில் 6 நாட்கள் தங்கி ஓய்வெடுத்திருக்கிருர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஓய்வெடுக்க வந்தவர்கள் இப்பொழுது எங்களது ஆட்சியில் தான் ஓய்வெடுக்க வந்திருக்கிருர்கள். அந்த முறையில் சட்டம், அமைதி தமிழ்நாட்டில் கெட்டுப்போயிருக்கிறதா என்பதை அவர்களே இதன்மூலமாக அறிவார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கார் வழங்கப்பட்டது என்றும், அரிஜன சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கார் கொடுக்கவில்லை என்றும் எனது மதிப்பிற்குரிய அண்ணன் ராமலிங்கம் அவர்கள் நேற்று கூறி இருப்பதாகத் தெரிகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தி. மு. க. அரசு கார் வாங்கிக் கொடுக்கவில்லை. அந்தத் தொகுதி மக்கள் தான் அதை வாங்கிக் கொடுத்திருக்கிருர்கள், தாழ்த்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 4, 5 பேர்களுக்கு அந்தந்தத் தொகுதி மக்கள் கார் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிருர்கள். கனம் அண்ணன் அவர்களுக்கு மீண்டும் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உங்கள் கட்சியைச் சேர்ந்த, ஜில்லா காங்கிரஸ் கட்சித் தலைவராக உள்ள திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு ஒரு கார் இருந்தும் கூட அவருடைய தொகுதி மக்கள் ஒரு ஜீப் வழங்கியிருப்பதாகத் தெரிகிறது. அருகிலுள்ள உங்களுக்கு ஏன் அந்தமாதிரி வழங்கவில்லை. இதையும் நீங்கள் நன்ருக சிந்தித்துப் பார்க்கவேண்டும். தவிர, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களை, எங்களது அமைச்சர்கள் எல்லோருமே தங்களது குடும்பத்திலுள்ள உறுப்பினர்களில் ஒருவராகத்தான் கருதி நடந்துகொள்ளுகிருர்களே தவிர, வேறுபாடாக நடத்துவதில்லை. நீங்களும் 10 ஆண்டுகாலமாக சட்டமன்ற உறுப்பினராக இருந்துகொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு என்ன முக்கியத்துவம் கொடுத்திருக்கிருர்கள்? நீங்கள் ஒரு பட்டதாரி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பட்டதாரி. ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதே தமிழ்நாட்டுக்குத் தெரியவில்லையென்ருல், உங்களது முன்னேற்றத்துக்குத் தடை தான் உங்களவர்கள் ஏற்படுத்தியிருக்கிருர்கள் என்பதை நீங்களும் உணர்ந்துகொள்ள வேண்டுமென்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (ஆளும் கட்சி தரப்பில் ஆரவாரம்.)

நமது எதிர்க்கட்சி கொறடா அவர்கள் ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அன்ருட நிர்வாகத்தில் தலையிடுவதாகக் கூறிஞர்கள். எங்களது தொகுதி மக்களது குறைகளைப் போக்குவதற்காகத் தான் எங்கள் தொகுதி மக்கள் எங்களை அனுப்பி இருக்கிருர்களே தவிர, இங்கே பேசாமல் இருப்பதற்காக அனுப்பவில்லை. உங்களையும் அதே நோக்கத்திற்காகத்தான் அனுப்பியிருக்கிருர்கள். எங்கள் தொகுதி மக்களது குறைகளைப் போக்குவதற்காகத்தான் நாங்கள் அலுவலகங்களுக்கு செல்கிருேம். நீங்களும் தான் வருகிறீர்கள். நீங்கள் அலுவலகங்களுக்குச் செல்வது குறை இல்லை, நாங்கள் செல்வது, இண்டர்ஃபியரன்ஸ் (தலையீடு) என்ருல் அதற்கு வேறு என்ன அர்த்தம் என்று தெரியவில்லை. Caezar's wife should be above suspicion என்று

எதிர்க்கட்சி கொறடா கூறினார்கள். பனை மரத்தடியில் இருந்து பால் அருந்தினாலும் சந்தேகத்திற்கு இடந்தான் என்பதை நன்ருக உணர்ந்து தான் எங்கள் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் லாட்டரி சீட்டிற்கு ஏஜெண்டுகளைத்தேர்ந்தெடுப்பதற்காக குலுக்கல் முறையை கையாண்டிருக்கிருர்கள். நீங்களாக இருந்திருந்தால் "பஸ் பர்மிட்" போல உங்களுக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் கொடுத்திருப்பீர்கள். ஆனால் இந்த குலுக்கல் முறையில் இதை நடத்தியதால் காங்கிரஸ்காரர்களுக்குத்தான் அதிகமாக லாட்டரி சீட்டு ஏஜன்ஸி கிடைத்திருக்கிறதே தவிர, பெரும்பாலும் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைக்கவில்லை. 10 நாட்களுக்கு முன்பு லாட்டரி சீட்டு வெளியிடப்பட்டது. அமைச்சர்கள் அந்த சீட்டை வாங்கக்கூடாது என்றும் நமது கவர்னர் அவர்களுக்கு விற்ற சீட்டுக்கு ஒருவேளை விழுந்துவிட்டால் செஞ்சிலுவை சங்கத்தின் உபயோகத்திற்கு கொடுக்க வேண்டுமென்றும் எங்களது முதலமைச்சர் அவர்கள் கோரினார்கள். நீங்களாக இருந்தால் அவ்வாறு கோரி இருக்கமாட்டீர்கள் என்பது உங்களுக்கே நன்ருகத் தெரிந்த உண்மை.

இந்தக் குறுகிய காலத்தில் நாங்கள் செய்த சாதனைகளைப் பார்த்து பொறுக்கமாட்டாமல் நீங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்களேதவிர உண்மையான குறைகளைச்சொல்வதற்காகக் கொண்டுவரவில்லை. ஆகையால் எங்களது சாதனைகளை போற்றுவதற்காக உங்களது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதுடன் எங்களுக்குச் சிறப்பான முறையில் நாங்கள் ஆட்சி நடத்துவதற்கு முழு ஆதரவினையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கோ. பூவராகன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பாக இந்த அமைச்சரவையின் மீது கொடுத்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களை ஆதார பூர்வமாக சொல்ல நான் விழைகின்றேன். 4 தினங்களாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்த மன்றத்திலே விவாதிக்கப்படுகின்றது. பொதுவாக, ஆளும் கட்சி அல்லாத மற்ற எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற அங்கத்தினர்கள் வெளியிலே, அவர்கள் பத்திரிகையிலே, பொது மேடைகளிலே ஆளுகின்ற கட்சியைப் பற்றி குறை கூறுகின்றவர்கள் இந்த மன்றத்திலும் சற்று மறைமுகமாக எங்களை சாட்டி ஆளுகின்ற கட்சியை குறை கூறினார்கள். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் "நாங்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது நடைபெறும் வாக்கெடுப்பிலே கலந்து கொள்ளா விட்டாலும், இந்த அமைச்சரவையைப் பொறுத்த அளவிலே செய்கின்ற குற்றங்களைக் கூறுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி, 1, 2, என்று சொல்லி கிட்டத்தட்ட 12 குற்றச் சாட்டுகளை இந்த மன்றத்திலே எடுத்து வைத்தார்கள். மற்ற எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கூட. சுரேந்திரன் அவர்கள் கூட, நாங்கள் கொடுத்திருக்கிற இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திலே ஒரு பகுதியாக இருக்கிற தமிழர் படையைக் கலைக்க வேண்டுமென்று சொன்னதை மிகமிக வலியுறுத்தி அந்தப் படையைக் கலைக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

பொதுவாக, எங்களுடைய இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தைப் பொறுத்த அளவிலே பரவலாக எல்லா எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அங்குமிங்குமாக வரவேற்கின்ருர்கள் என்று சொன்னால், அது ஒன்றும் மிகையாகாது.. ஏன் நான் இதை சொல்கிறேன் என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த 16 மாத காலமாக இந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே என்ன என்ன தவருன காரியங்கள் நடந்திருக்கின்றன என்பதை அவர்களே அவர்களுடைய பத்திரிகையை வேண்டுமானாலும் அதிலே வந்த குறிப்புகளையெல்லாம் இந்த அமைச்சரவைக்கு நான் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கின்றேன். அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எழுதுகின்ற பத்திரிகையிலே வருகின்ற செய்திகளையெல்லாம் திரும்பப் பார்க்க வேண்டும். அவர்கள் என்ன என்ன சொன்னார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எனது மதிப்பிற்





குரிய ம. பொ. சிவஞானம் அவர்கள் இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தைப் பார்க்கின்றபோது இது வெறும் குறை சொல்வதாக இருக்கிறது ; குற்றத்தைச் சொல்வதாக இல்லை என்று சொன்னார்கள். குறை வேறு, குற்றம் வேறு என்று சொன்னார்கள். நம்பிக்கையில்லா தீர்மானத்தில் சொல்லுவதெல்லாம் குறையும் குற்றமும் என்று கருதித் தான் நாங்கள் சொல்லிலுகிறோம். ஒருவேளை அவர் சொல்ல வேண்டிய குறை இருக்கலாம், அந்தக் குறை சொந்தக் குறையாக இருக்கலாம், அது ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தாலும் தீர்க்க முடியாத குறையாக இருக்கலாம். அதைப்பற்றிக் கவலை இல்லை. நாங்கள் குற்றம் கண்டுதான் அதனை இங்கே வைத்திருக்கிறோம். ஆதாரபூர்வமான குறைகளை எடுத்துக் காட்டினார்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள். அதற்கெல்லாம் ஆளும் கட்சியிலே பதில் சொல்லுகின்றவர்கள், குறிப்பாக அதற்கு அந்தக் காலத்திலே நடந்திருக்கின்றன, அது இருக்கிறது, இது இருக்கிறது என்று சொல்வது, தட்டிக்கழிக்கின்ற ஒரு முறையிலே இருக்கிறதே தவிர, உண்மையாக அந்தக் குறைகளைக் கண்டு அதைப் போக்கிக் கொள்ளுவதற்கு வழியோ, வருத்தப்படுகின்ற வழியிலே செல்வதோ, திருத்திக் கொள்வதற்கு ஏதாவது வழி வகை காண்கின்ற அளவிலோ இருக்கிறதா என்ருல் இல்லை என்று என்னைப் பொறுத்த வரையில் அவர்கள் போக்கு இருப்பதாகக் குற்றம்சாட்டுகிறேன்.

தொழில் அமைதி கெட்டுவிட்டது, புதிய தொழிற்சாலைகள் வரவில்லை என்று நாங்கள் சொல்லுகிறோம். சுதந்திராக் கட்சிக்காரர்கள் கூட அதைத்தான் சொல்கிருர்கள். அவர்கள், தீர்மானம் கூட போட்டிருக்கின்ருர்கள். தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சிக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கிறது, அமைதியில்லை, அதனால் புதிய தொழிற்சாலைகள் இல்லையென்று சொன்னார்கள். எங்களைவிட ஒரு படி பி.ப. 1–30 மேலாகச் சொன்னார்கள், கண்டித்திருக்கிருர்கள். இந்த தி.மு.க. ஆட்சியைத் தூக்கி எறிய வேண்டிய நிலை கூட ஏற்படலாம் என்று சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம். நேற்று கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. சங்கரய்யா காங்கிரஸ் முதலாளிகளுக்கு வால் பிடிக்கிருர்கள் என்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட்காரர்கள், திருவொற்றியூரில் துப்பாக்கிச் சூடு ஏற்பட்டபோது, அவர்கள் பத்திரிகைகளில் என்னென்ன எழுதினார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். தொழில் அமைச்சர் அவர்களைப் பற்றி அப்போது என்ன சொன்னார்கள் என்று பார்க்கவேண்டும். அதற்குத் தொழில் அமைச்சர் கவிழ்க்கப் பார்க்கிருர்கள் என்று மறுப்புக் கொடுக்கும் வகையில் நிலைமைகள் இருந்திருக்கின்றன என்பதையும் பார்த்தால் நன்கு தெரியும்.

தொழிற்சாலைகள் வளரவேண்டும், தொழில் வளரவேண்டும் என்று சொல்லுகிறோம். முதல் அமைச்சர் நான்காவது திட்டம் சரியில்லை, அதைத் தடைப்படுத்தினார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான்காவது திட்டம் தடைப்பட்டது தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல ; பாரதம் முழுமைக்கும் உண்டான திட்டம். பல ராச்சியங்களிலும் இந்த மாதிரியான நிலைமைதான். தொழில் வாய்ப்பு என்று பார்க்கும் போது, அவர்களிடமே விவரங்கள் வைத்திருப்பார்கள் மற்ற ராஜ்யங்களிலிருந்தும் விவரங்கள் அவர்களுக்கு வரக்கூடும். ஓர் ஆண்டு காலத்தில் முதலீடு எவ்வளவு போட்டிருக்கிருர்கள் என்பதைப் பார்ப்போமானால், புதிய தொழில்களை ஆரம்பித்தார்களா, ஆரம்பிக்கவில்லையா என்பதோடு இரண்டாவது இடம் மூன்ருவது இடம் வகித்தவர்கள் தற்போது எங்கே போய்விட்டோம் என்பதையும் முதலீடுஎந்த அளவிற்குப் போட்டிருக்கிருர்கள் என்பதையும்பார்க்கவேண்டும். ஒவ்வொருமாக எடுத்துக் கொள்ளுங்கள். இதற்கு முன்னால், அதாவது 1967-க்கு முன்னால் ஆண்டுதோறும் முதலீடு எவ்வளவு பணம் போட்டு வந்திருக்கிறோம். அதற்குப் பிறகு ஏன் குறைந்து வந்திருக்கிறது ? மற்ற ராச்சியங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நம்முடைய ராஜ்யத்தில் முதலீடு மிக்க குறைந்திருப்பது நன்ருகத்தெரியும். இதுபோன்ற என்

கட்சியைச் சார்ந்தவர்கள் குறைகள் சம்பந்தமாகக் கொடுத்த விவரங்களைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தீ விபத்துகள் பற்றிச் சொன்னார்கள். ஆட்சி என்றால், சிறு சிறு குறைகள் ஆங்காங்கே இருப்பது வழக்கம், சகஜம் என்று ம.பொ.சி. அவர்கள் சொன்னார்கள். இந்தத் தீ விபத்து தொடர்ந்து ஒரு மாதம் ஒன்றரை மாதத்திற்கு சென்னை நகரில் நடந்து இருக்கிறது. பெரிய நகரங்களிலும் நடந்திருக்கிறது. இங்கேயிருந்து திருச்சிக்குப் போய் இருக்கிறது. அதற்குப் பிறகு தஞ்சைக்குப் போய் இருக்கிறது. தஞ்சை மாட்டத்தில் திருவாரூரில் ஒரு நிகழ்ச்சி. ஒரு பள்ளிக்கூடத்திற்கு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இத்தனை நாளைக்குள், கூரையைப் பிரிக்கவில்லையென்றால் பள்ளிக்கூடத்திற்கு தீ வைக்கப்படும் என்று எழுதியிருக்கிறார்கள். அதுபோலீஸ் இலாகாவிற்குப் போய் இருக்கிறது. இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதே மன்றத்திலே, ஒரு புகார்கடிதத்தை முதல் அமைச்சர் படித்துக் காட்டினார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு மிரட்டல் மொட்டைக் கடிதம் எழுதினார்கள் என்றும், "பார்த்துகொள்ளுகிறேன், 24-ம் தேதி கெடு" என்று கண்டிருக்கிறது என்று படித்துக் காட்டினார்கள். நம்முடைய போலீஸ் இலாகா மிக்க திறமையாக நடக்கிறது, ஆற்றலுடன் நடக்கிறது, பாரதத்திலேயே தமிழ்நாடு போலீஸ் முதன்மையானது, மவுண்ட் ஆபூவில் புகழ்ந்தார்கள் என்று கூட உறுப்பினர் திரு. பழனிவேல் ராஜன் சொன்னார்கள். இந்த மொட்டைக் காகிதத்தைப் பரிசீலித்து, குற்றம் செய்தவரைத் தண்டிக்கும் அளவிற்கு போலீஸ் இலாகா பணிபுரிந்திருக்கிறது. போலீஸ்காரர்கள் முதல் அமைச்சரிடம் சொன்னால்தான் கேட்பார்கள் என்கிற நிலை இருக்கிறது. தீ விபத்தை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. என்ன காரணம்? சென்னை நகரத்தில் சென்ற ஆண்டு நடந்த தீ விபத்துப் பற்றி புள்ளி விவரங்கள் இருக்கின்றன. தீ அணைப்பு இலாகாவினரே சொல்லியிருக்கிறார்கள். முன்னாலே நடந்தது என்றாலும், ஒரு ஆண்டு அல்ல, இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது. இது பற்றி தீ அணைப்பு அதிகாரியே பத்திரிகைக்கு செய்தி கொடுத்திருக்கிறார். இது வரையில் இப்படிபட்ட தீ விபத்து நடந்தது இல்லை. இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் ஏற்படும்போது குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடிக்க என்ன முயற்சிகள் எடுக்கப்படுகின்றன? அதிகாரியை நியமித்து இருக்கிறார்கள், பரிசீலனையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று இருப்பதைக் பார்க்கிறோம். ஆனால் இன்று வரையில் ஒரு நடவடிக்கையும் இல்லை.

அதோடு, தீ விபத்தை ஒட்டி வசூல் நடந்திருக்கிறது. சென்னை நகரில் வசூல் நடந்தது. எப்படிப்பட்ட வசூல். அதை எண்ணிப் பார்க்கவேண்டும். சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் சென்னை நகரத்தில் மற்றவர்களை அழைத்துக்கொண்டுபோய், வீடுவீடாகச் சென்று, தெருத் தெருவாகச் சென்று பல லட்சக் கணக்கான ரூபாய்களை வசூல் செய்திருக்கிறார்கள். பணம் வந்திருக்கிறது. இது தவிர, பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும் வசூல் நடந்திருக்கிறது. பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக் கொண்டு சொல்லுகிறேன், 7, 8 லட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றிருக்கிறார்கள். அந்தப் பணத்தை சென்னை தீ விபத்து நிதிக்காகப் பெற்றார்கள். இன்றைய தினம் திருச்சியில், தஞ்சையில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றால். அவர்களிடம் பணம் இல்லை. கொடுக்க முடியவில்லை. அவர்களுடைய பணம் எதற்காகப் பயன்படுத்தவேண்டும். அதற்கெல்லாம் ஒரு விதியை வைக்க வேண்டும். ஏற்கெனவே பஞ்சாயத்துக்களுக்குப் போதுமான பணம் ஒதுக்கவில்லை என்று குறை இருக்கிறது. அப்படியிருக்கும் போது, பஞ்சாயத்து நிதியிலிருந்து பணத்தைப் பெறுவது என்றால், அது எவ்வளவு சரி என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த பஞ்சாயத்துத் தலைவர்கள், சொந்தப் பொறிப்பில் கொடுப்பதைத் தவறு என்று சொல்லவில்லை. அவரிடம் இருந்தால் கொடுக்கட்டும், ஊரில் பணம் திரட்டிக் கொடுக்கட்டும்.





ஆனால் பஞ்சாயத்து நிதியிலிருந்து, யூனியன் நிதியிலிருந்து அந்தப் பணத்தைப் கொடுக்கிறார்கள் என்றால், அது சரியல்ல என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

பரவலாக பேசப்படுகிறது. தீ விபத்து நிதிக்குப் பணங்கள் பெறப் பெற்றன. கணக்கு வழக்குகள் சரியில்லை என்று. என்ன கணக்கு என்று கேட்கிறார்கள். இந்தக் கணக்குக் கொடுக்கக் கூடிய அளவில் இருக்கவேண்டும். அதெல்லாம் அரசாங்கத்தில் இருக்கிறதா? வேறு கணக்கில் இருக்கிறது என்றால் அதில் ஏதாவது தவறு இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இல்லையென்றால், அதில் ஏற்படும் குற்றம் குறைகள் பின்னால் அரசாங்கத்தைத்தான் சாரும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தீ விபத்திற்காகத் திரட்டப்பட்ட நிதி சம்பந்தமாக கணக்கு யாராலே நிர்வகிக்கப்படுகிறது என்று எண்ணிக் கொண்டு பேசுகிறார்கள் என்பதை அறிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** யாராலே நிர்வகிக்கப்படுகிறது என்று அரசாங்கத்திற்குத்தான் தெரியும். நான் பேசுவது பத்திரிகையில் வந்த செய்தியைத் வைத்துக்கொண்டு பேசுகிறேன். பணம் பெற்றுக் கொண்டு, எப்படி செலவு செய்தார்கள், யாரிடத்தில் கணக்குகள் இருக்கின்றன என்பதை எல்லாம் பற்றி முதல் அமைச்சர் பதில் சொல்லும்போது தகவல் கொடுக்கலாம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இனி அதற்குப் பதில் சொல்லத் தேவையில்லை. முன்னாலேயே பதில் சொல்லியிருக்கிறேன். முறையாகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ஏஜன்ஸிகள் மூலம் அது நிர்வகிக்கப்படுகிறது. ஒன்று, ஸ்டேட் ஹவுஸிங் போர்டு, மற்றொன்று, சென்னை கார்ப்பொரேஷன். இந்த இரண்டும் லோகல் ஃபண்ட் எக்ஸாமினர் நிர்வாகத்திற்கு உட்பட்டவர்களாக, தனிப்பட்ட அமைச்சர்களோ, உத்தியோகப் பற்றற்றவர்களோ நிர்வாகம் செய்யவில்லை. முறையாக கணக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. முறைகேடாக எதுவும் இல்லை என்பதை முன்னாள் அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** மிக்க நன்றி. பஞ்சாயத்திலும், மற்ற இடங்களிலும், ஆர்.டி,ஓ.-கள் போன்ற அதிகாரிகள் பணத்தைப் பெற்று இருக்கிறார்கள். அந்த நிதியில் சேர்க்கப்படாத பணம் இருக்குமோ என்று பேசப்படுகிறது. முதல் அமைச்சர் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவ்வப்பொழுது கொடுக்கப்படுகின்ற பணத்தை நாள் இதழ்களில் வெளியிட்டு வந்திருக்கிறோம். குறிப்பிட்ட பஞ்சாயத்துத் தலைவர் தனிப்பட்ட முறையில் கொடுத்தார்கள். வியாபார நிறுவனங்கள் கூட்டம் போட்டு வசூல் செய்து கொடுத்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையிலும் கொடுத்திருக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களும் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொன்றும் முறையாக கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் செலவினங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. முறையான கணக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** பல வசூல்கள் நடந்திருக்கின்றன. தீ விபத்து என்று முறையற்ற வசூல் நடந்திருக்கிறது என்பதையும் முதல் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பஞ்சாயத்துக்களுக்கும், கூட்டு மன்றங்களுக்கும் சுதந்தர தினத்தை சிக்கனமாகக் கொண்டாட வேண்டும் என்று தாக்கீதுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. சுதந்தர தினத்தை விரிவாகக் கொண்டாட வேண்டாம் என்று சொல்லும் அளவிற்கு

நிதி நிலை இருக்கும் போது, இப்படிப்பட்ட காரியங்களுக்கு இந்தப் பணத்தை பயன் படுத்துகிறேம் என்றுல், வசூல் செய்து அனுப்ப வேண்டும் என்று அதிகாரிகளுக்கு தாக்கீது அனுப்புவது . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** சுதந்தர தினத்திற்கு பணத்தைச் செலவழிக்கக்கூடாது என்று இந்த அரசு மட்டும் சொல்லவில்லை. மத்திய சர்க்காருடைய யோசனையின் பேரில், அவர்களுடைய கோரிக்கையை ஒட்டியும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டனவே தவிர, சுதந்திர தினத்திற்கு செலவழிக்கக் கூடாது என்று இந்த அரசு கருதுகிறது என்று பொருள் இல்லை. அது மட்டுமல்லாமல், பஞ்சாயத்து யூனியன்கள போன்றவைகளிடமிருந்து பணத்தைப் பெறுவது முறைதாஞ என்றதற்கு, பொதுவான இப்படிப்பட்ட காரியங்களுக்கு பணம் வசூல் செய்வது எந்தவிதத்திலும் முறை கேடு இல்லை.

**திரு. கோ. பூவராகன் :** அதே சமயத்திலே, வட்டாரத்தில் உள்ள பிரச்சினைகளுக்கு பணம் இல்லை என்பதையும் முதல் அமைச்சர் உணர்வார்கள் என்று நம்புகிறேன். மத்திய சர்க்கார் உத்தரவு போட்டுவிட்டது, அதனுல் சுதந்தர தினத்தை விட்டுவிட்டோம் என்பதும் பொருத்தமாக இருக்காது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** எப்படிப் பொருத்தமாக இல்லை ? மத்திய சர்க்கார் சொல்லவில்லை என்கிருர்களா ? அப்படிச் சொல்கிற போது, எடுத்த முடிவு சரியில்லை என்கிருர்களா? இரண்டையும் சேர்த்துப் பார்த்துச் சொன்னுல் பொருத்தமாக இருக்கும்.

**திரு. கோ. பூவராகன் :** என்னைப் பொறுத்தவரையில், அப்படி மத்திய சர்க்காரிடமிருந்து உத்தரவு வந்ததாக அறியவில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** மத்திய சர்க்கார் கருத்து, குடியரசு தினத்தைக் கோலாகலமாக கொண்டாடலாம், ஆனுல் சுதந்தர தினத்திற்கு அதிகமாகச் செலவழிக்க வேண்டாம் என்பது. அது இந்த அரசினுடைய கருத்து அல்ல.

**திரு. கோ. பூவராகன் :** சுதந்தர தினத்திற்கு ஏற்கெனவே செலவழித்ததைவிட அதிகமாகச் செலவிட வேண்டாம், குறைத்து விட வேண்டும் என்றுலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில், நாம் எப்போதுமே சிக்கனமாக இருப்பவர்கள், எல்லாத் துறையிலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிறவர்கள், சிக்கன முறையையே கையாண்டு வந்திருக்கிறேம். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைக்க வேண்டிய அவசியம் என்ன என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உலகத் தமிழர் மாநாட்டைப்பற்றி எனக்கு முன்னுலே பேசிய எங்கள் கட்சி உறுப்பினர்கள் விளக்கமாக எடுத்துச் சொன்னுர்கள். உலகத் தமிழர் மாநாட்டிற்கு எப்படி வசூல் செய்ய வேண்டுமென்பதைப் பற்றி அரசாங்கத்திலிருந்து பிரதம காரியதரிசி அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள். அதில் ஒருசில வாசகங்களை மட்டும் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

'For the ensuing Second International Conference of Tamil Studies at Madras in January, 1968, it is estimated that conduct of the Conference-Seminar will cost about Rs. 10 lakhs and the money has to come from the following sources:—

(i) Benefit performances by the top artistes of Tamilnad in eight district centres in Tamilnad—Madras, Tiruchi, Madurai, Tirunelveli, Salem, Coimbatore, Vellore, Thanjavur ;

(ii) Contributions and donations from industrialists and others ;



(iii) Gate collections for the entertainments to be arranged during the Conference-Seminar ;

(iv) Collections from students through the sale of Conference flags ; and

(v) Fees prescribed for delegates and other observers who participate in the seminar of Tamil Studies. It could be seen that more than 10 lakhs of rupees will come through the first four items mentioned above. About two lakhs of rupees will be spent on the production of the Souvenir and a few lakhs set apart for the establishment of a Chair for '*Thirukural*' in Madras University.

According to the existing arrangements, Thiru V. S. Thiagaraja Mudaliar is the nominated secretary-General and Treasurer for the Conference-Seminar and he will be Operating on all the funds collected on behalf of the International Association of Tamil Research. Since Thiru M. R. Perumal Mudaliar, Secretary-General (Organisation) has been asked to look after all the arrangements for the benefit performances, entertainments, production of the Souvenir, Procession, public meetings, exhibitions, etc., he has to incur major items of expenditure. A separate account in the State Bank of India for these collections is being opened. Since Thiru M. G. Ramachandran, M.L.A., who is the Chairman of the Souvenir Production Committee, has undertaken the responsibility for collecting several lakhs of rupees through benefit performances, he also will be assoicated with the collecting and expending of the monies for the Conference. A State Bank Account, therefore, is being opened in the joint names of Thiru M. R. Perumal Mudaliar, Director of Tamil Development and Thiru M. G. Ramachandran as " either or survivor " account.

Already the Minister for Education and Industries has ordered that the amounts collectd through the sale of flags will be accounted for by the Under Secretary to Government, Education Department . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எல்லாவற்றையும் படிக்கப் போகிறீர்களா ? இப்போது நேரம் அதிகமாகிவிட்டது.

**திரு. கோ. பூவராகன் :** இதிலுள்ளதை அப்படியே முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொடுத்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படியானுல் அதை அப்படியே கொடுத்து விடுங்கள்.

**திரு. கோ. பூவராகன் :** அது அவர்களிடமும் இருக்கிறதே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கோ. பூவராகன் :** அடுத்தபடியாக அதில் கூறியிருப்பது என்னவெனில்,

' *Account No. I.*—Internatrional Association of Tamil Research Account for which Thiru V. S. Thiagaraja Mudaliar will be the Treasurer. This Account will receive all Seminar fees

specific donations from Indusrialists, etc., and contributions from out of the benefit performances being held at Madurai, Thanjavur and Coimbatore, as indicated by the respective committees in those areas. If the organisers of the performances set apart any portion of their collection for Thirukkural Chair, that part of the amount will go to Account No. II operated by Thiru M.R. Perumal Mudaliar and Thiru M.G. Ramachandran, M.L.A. The specific contributions by the organisers of above three benefit performances towards the Tamil Conference as such will go to the International Association of Tamil Research Account.

*Account No. II.*—State Bank Account in the name of Thiru M. R. Perumal Mudaliar, Director of Tamil Development and Ex-Officio Deputy Secretary to Government, Education Department and Thiru M. G. Ramachandran M. L.A., Chairman, Souvenir droduction Committee.

*Account No. III.*—This will be purely for receipt of amount through sale of flags, for which the Under Secretary to Government, Education Department will operate as the Treasurer as per orders already issued by the Minister for Education and Industries.

இப்படிப் பல விதிகள் போட்டிருக்கிறார்கள். வசூலைப் பொறுத்தவரையில் தவறான முறையில் வசூலிக்கப்பட்டிருக்கிறது. மொத்த வசூல் பத்து லட்சம் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் கோடிக்கணக்கில் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. கேட்டால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணக்கைச் சொல்லும் நிலைமை இருக்கிறது. மேலவையிலேகூட இரண்டு மூன்று டிக்கெட்டுகளைக் காட்டி, தவறான முறையில் வசூல் செய்திருப்பதை முதலமைச்சர் அவர்களுக்குக் காண்பித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து பதில் அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உறுப்பினர் அவர்கள் படித்த உத்தரவுக்கும், இப்போது அவர்கள் பேசிக் கொண்டிருப்பதற்கும் ஒரு பொருத்தத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மூன்று வகையான குழுக்கள், மூன்று வகையான காரியங்களுக்கு, மூன்று வகையான இடங்களில் கணக்குகளை வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார் அவர்களிடத்தில் ஒரு கணக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்காக அண்டர் செகரடரி அவர்களிடம் ஒரு கணக்கும், திரு. பெருமாள் முதலியார் அவர்களிடம் ஒரு கணக்கும் வைக்கப்பட்டன. இந்தக் கணக்குகள் முறையாக பாங்குகளில் வைக்கப்பட வேண்டும் என்று உத்தரவு கூறுகிறது. இதற்கும் உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து சொல்கின்ற "இரண்டு கோடி ரூபாய் மூன்று கோடி ரூபாய் வசூலாகியிருக்கும்" என்று சொல்வதற்கும் சம்பந்தமில்லை. ஆகவே, அவர் படித்த உத்தரவுக்கும், அவர் தொடர்ந்து பேசுவதற்கும் சம்பந்தமில்லை. உத்தரவைப் பொறுத்தவரையில் என்ன குறை காண்கிறீர்கள் ?

**திரு. கோ. பூவராகன் :** தனிப்பட்டவர்கள் இந்த விழாவை நடத்த வேண்டுமென்று கூறினார்கள். அரசாங்கம் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பியது. எவ்வளவு செலவாகும் என்பதுபற்றி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்கள். யார் யார் இந்த வசூலில் ஈடுபட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேலேயும்கூட தவறான முறையில் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. உத்தரவுக்கும் நடைமுறையில் வசூல் செய்யப்பட்டதற்கும் பொருத்தம் இல்லை. உத்தரவுக்கும் பின்னாலே தவறான காரியங்களில் பணம் வசூலாகியிருக்கிறது.



**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த உத்தரவிலே குறை இருக்கிறதா ? இந்த உத்தரவின்படி காரியங்கள் நடக்கவில்லையா ?

**திரு. கோ. பூவராகன் :** வசூல் பத்து லட்சம் என்று போட்டால் அதற்கு மேலேயே பணம் வசூலித்தார்கள். அந்தக் குழுவைச் சேர்ந்தவர்களே, பணம் வசூல செய்ய வேண்டாம் என்று எழுதியிருக்கிறார்கள். போதுமான பணம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலும் பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் எல்லாம் எப்படிப் போய்விட்டது ? ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். எனக்குப் பேசுவதற்கு நேரம் அதிகம் இல்லை. தயவு செய்து குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கணக்கைப்பற்றிக் காணக்கூடிய குறைகள் முதலாவது சொல்லக்கூடிய சமாதானங்கள் இரண்டாவது. ஒரு உத்தரவை எடுத்து நீங்கள் படித்தீர்கள். நான் அறிய விரும்புவது, இந்த உத்தரவுக்கு முரணாக, மாறாக் காரியங்கள் நடந்திருக்கின்றனவா அல்லது உத்தரவின்படி காரியம் நடந்திருக்கிறதா ?

**திரு. கோ. பூவராகன் :** இந்த உத்தரவின்படி காரியங்கள் நடக்கவில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த உத்தரவு எதைக் குறிப்பிடுகிறது என்றால், எவ்வளவு பணம் செலவாகும், இன்னின்ன வகைகளில் பணம் வசூலிக்கலாம், இன்னின்ன வகையான மூன்று குழுக்கள், இன்னின்னார் குழுக்களின் தலைவராக இருப்பது, இன்னின்ன காரியங்களுக்குச் செலவழிப்பது, வசூலாகும் பணத்தை இன்னின்னார் இன்னின்ன பாங்குகளில் கணக்கு வைக்க வேண்டும் என்பதாகும். அதன்படி காரியம் நடந்திருக்கிறதா, இல்லையா ?

**திரு. கோ. பூவராகன் :** இதன்படி காரியங்கள் நடைபெறவில்லையென்று திரும்பத் திரும்பச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** திரும்பத் திரும்பச் சொல்லி விடுவதாலே உண்மையென நிரூபிப்பதாகிவிடாது. மூன்று குழுக்களுக்குப் பதிலாக ஐந்து குழுக்கள் அமைக்கப்பட்டனவா ? எந்தக் குழுவாவது வேலை செய்யாமல் இருந்ததா ? ஸ்டேட் பாங்கில் கணக்கு வைக்காமல் வேறு ஒரு இடத்தில் கணக்கு வைத்தார்களா? திரு. தியாகராஜ முதலியார் கணக்குப் பார்க்காமல் இருந்தாரா ? அண்டர் செகரடரி ஏதாவது கணக்கைப் பார்க்காமல் இருந்தாரா ? அல்லது கட்சியைச் சேர்ந்தவர்கள் யாராகிலும் அவர்களே பணம் வாங்கிச் செலவழித்தார்களா ? அதை நிரூபிக்க உறுப்பினர் தயாராக இருக்கிறாரா ?

**திரு. கோ. பூவராகன் :** வெளியில் நடக்கும் காரியங்களை நாங்கள் சொல்லுகிறோம். 'இந்தக் குழுவில் இல்லாதவர்கள், பல டிக்கெட்டுகளை அச்சடித்து வசூல் செய்கிறார்கள்" டிரான்ஸ்போர்ட் பர்மிட்டுக்காக பத்தாயிரம் ரூபாய் வாங்கினார்கள் என்று சொல்லப்பட்டது. ஆகவே 25 ரூபாய்க்கு மேலே யார் யார் பணம் கொடுத்திருக்கிறார்கள் என்ற பட்டியலை வெளியிட்டால் நலமாக இருக்கும். பணம் வாங்கியதற்கு ரசீது கொடுக்கப்படவில்லை. 25 ரூபாய்க்கு மேலே பணம் கொடுத்தவர்களுடைய பட்டியலைக் கொடுத்தால் சரியான கணக்கைச் சொல்லி ருசுப்பிக்க முடியும். முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எல்லாவற்றையும் நிரூபிக்கலாம். இப்போது நான் அறிந்துகொள்ள விரும்புவது வெளியில் பலர் தவறான முறையில் வசூல் செய்தார்களா இல்லையா என்பது அல்ல. அதைப் பின்னர் கவனிக்கிறேன் என்று சொல்லுகிறேன்.

ஆனால் தாங்கள் படித்துக் காட்டிய சர்க்கார் உத்தரவின்படி 3 குழுக்கள் அமைக்கப்பட்டனவா, அந்தக் குழுக்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தபடி காரியங்கள் நடந்தனவா, இல்லையா என்பதுதான்.

**திரு. கோ. பூவராகன் :** இந்த உத்தரவுக்கும் மீறி காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. முதல் அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று விசாரித்தால் உண்மை தெரியும். . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் ஏற்கனவே மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது எப்படிப் பேச வேண்டும் என்று சொன்னேன்.

As a general rule ' No Confidence ' motions can be tabled on facts which everybody knows and not on hypothetical grounds. If the hon. Member is prepared to produce before this House evidence in favour of what he said, then he would be perfectly in order. Otherwise, No-Confidence Motions cannot be taken as a vehicle for making allegations or counter-allegations. I should therefore like all hon. Members to remember this when they make allegations.

என்றபடி நீங்கள் குற்றம்சாட்டுகிற நேரத்தில் விசாரித்தால் தெரியவரும் என்பதுபோலச் சாட்டக்கூடாது, சாட்டுகிற குற்றங்களை நிரூபிக்கின்ற வகையில் தெளிவான குற்றச்சாட்டை, தீர்மானமான குற்றச்சாட்டைச் சொல்லுங்கள், பேரவையின நேரத்தை ஒருவருக்கொருவர் விவாதிப்பதின் மூலம் வீணடிக்கக்கூடாது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** துணைச் சபாநாயகர் அவர்களே, இதிலே ஒருவருக்கொருவர் விஷயங்களை எடுத்துச்சொல்வதனால் சபையின் நேரம் எடுத்துக்கொள்ளப்படுகிறது என்றாலும், கனம் உறுப்பினர் அவர்கள் சில குற்றச்சாட்டுகளைச் சொல்லிவிட்டுப் போவது, அதற்கு உடனுக்குடன் விளக்கம் அளிக்காமல் இருப்பது பொதுமக்களுக்குத் தவறான கருத்தைக் கொடுத்து விடும்.

அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள், உத்தரவுக்கு மீறி நடந்திருக்கிறது என்று. அடுத்து, நேற்று ஒரு உறுப்பினர் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தது கணக்கில் வரவில்லை என்று குறிப்பிட்டதைச் சொன்னார்கள். அவர் சொன்னதை அமைச்சராக இருந்த ஒருவர் மேற்கோள் சொல்வதற்கு முன்னால் அவரிடமே அது என்ன விஷயம் என்பதைப்பூரணமாகத் தெரிந்துகொண்டு பேசியிருக்கலாம். பத்தாயிரம் ரூபாய் என்று சொல்வது திருச்சி மாவட்டக் கலெக்டர் வசூல் செய்த தொகை. திருச்சி மாவட்ட வசூலில் ஒரு காசும் உலகத் தமிழ் மாநாட்டுக்காகப் பெறவில்லை. ஆகவே அந்தப் பத்தாயிரம் ரூபாய் வசூல் திருச்சி மாவட்டக் கலெக்டர் கணக்கில் இருக்கிறது. மேலும் பத்தாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டார்கள், பெர்மிட் தரவில்லை என்றார்கள். இது ஒரு குற்றச்சாட்டாகாது. காரணம் பெர்மிட் தருவதாகச் சொல்லி பத்தரயிரம் பெறவில்லை. பத்தாயிரம் கொடுத்தார் என்பதற்காக அவருக்கு இநத அரசு பெர்மிட் கொடுக்கவில்லை என்பது இந்த அரசின் நேர்மைக்கே எடுத்துக்காட்டாக அமைகிறது.

மேலும் முதல் அமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் சென்று விசாரித்தால் முறைதவறி நடந்திருப்பவை தெரியும் என்றார்கள். கனம் உறுப்பினர் என்னுடன் வருவது அவருடைய தகுதிக்குக் குறைந்தது ஆகாது என்று கருதுவாரேயானால் என்னுடன் வரட்டும். அங்கங்கே சென்று விசாரிக்க எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. இதில் எதையும் மறைக்கவும் இல்லை, மூடு மந்திரமும் இல்லை.

**திரு. கோ. பூவராகன் :** முதலமைச்சர் அவர்களிடம் எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. நான் வரவேண்டிய அவசியம் இல்லை. அவர்களே அங்கங்கே சென்று விசாரித்த பிறகு இந்தச் சபையில் அறிவிப்பதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.



**மாண்புமிகு திரு! சி. என். அண்ணாதுரை:** அடுத்து திடீரென்று இந்த வருஷம்தான் வேண்டுமென்றே சுதந்திர தின விழாச் செலவைக் குறைத்து விட்டார்கள் என்றார். வேலூர் நகராட்சியில் இருந்து இது பற்றி விளக்கம் கேட்டதற்குக்கூட " வழக்கத்திற்குக் குறைவாகச் செலவு செய்துகொள்ள வேண்டாம்" என்பதாக இங்கிருந்து தாக்கீது போயிருக்கிறது.

**திரு. கோ. பூவராகன் :** அடுத்து கல்லூரிக்கு நிதி வசூல் பற்றிப் பலவிதமான ஊழல்கள் நடைபெறுகின்றன. குறிப்பாக சேலத்தில் ஒரு கல்லூரிக்காக நிதி வசூல் டிக்கெட் என்னிடம் இருக்கிறது. இதற்கு ஐந்து விதமான டிக்கெட்டுகள் இருக்கின்றன. ஒரு டிக்கெட்டில் ஒரு கல்லூரிக்காக என்று இருக்கிறது. இன்னொரு டிக்கெட்டில் கல்லூரிகளுக்காக என்று இருக்கிறது. இந்த நிதி வசூல் கமிட்டியின் தலைவர் அமைச்சர். ஆர்.டி.ஓ. காரியதரிசி, அமைச்சர் தலைவராக இருக்கக்கூடிய ஒரு நிதி வசூல்-கமிட்டி என்றால் ஒரு நியதி வேண்டாமா? என்னிடம் ஐந்து ரசீதுகள் இருக்கின்றன. ஒன்றில் நாமக்கல் கல்லூரி என்று இருக்கிறது. அதில் ரசீது எண் இருக்கிறது. இன்னொன்றில் நாமக்கல் கல்லூரிகள் என்று இருக்கிறது. அதில் ரசீது எண்ணே இல்லை. அடுத்து கல்லூரி நன்கொடை நாடகம் என்று நடிகர் திலகம் எம்.ஜி.ஆர். பெயருள்ளது இருக்கிறது. அதிலும் ரசீது எண் இல்லை. அடுத்து நாமக்கல் அரசினர் கல்லூரி—இதில் ரசீது எண் இருக்கிறது. இப்படி ஒரு ரசீது போல இன்னொரு ரசீது இல்லாது ஐந்து ரசீதுகள் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இதைப்பற்றி நான் விசாரிப்பதற்கு முன்னால் இவை உண்மையான ரசீதுகள்தானா அல்லது வேண்டுமென்றே இப்படி எதிர்கட்சியினரால் அச்சடிக்கப்பட்டுக் குற்றம் சாட்டப்படுகிறதா என்பதையும் கவனித்து விசாரிக்க வேண்டியிருக்கிறது.

**திரு. கோ. பூவராகன்:** ஒரு அ■கத்தினர் வேண்டுமென்றே பொய் ரசீதுகள் அச்சடித்து இப்படிச் சொல்கிறார்கள் என முதல் அமைச்சர் கருதுவாரேயானால் இதோ இருக்கிறது ரசீதுகள், நிதி வசூல் என்ற பெயரிலே இப்படிப் பலவிதமான ரசீதுகள் அச்சடிக்கப்பட்டு மக்கள் ஆளும் கட்சியினரால் ஏமாற்றப்படுகிறார்கள் என்று குற்றம் சாட்டுவதற்கு ஆதாரம் இருக்கிறது. ஐந்து புத்தகங்கள் என்றால் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான ரசீது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** நான் முதலில் சொன்னது இந்த ரசீதுகள் முறைகேடானவை என்று சொன்னால் அந்த ரசீதுகளை வாங்கிப் பரிசீலிப்பதற்கு முன்னால் அவை வேண்டுமென்றே தவறான கருத்தை உண்டாக்க அச்சடிக்கப்பட்டனவா என்பதையும் பரிசீலித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதுதான்.

**திரு. கோ. பூவராகன்:** அதை முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்துகொள்ளட்டும். இப்படி முறைகேடான வகையில் காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பரவலாக இப்படித் தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன இங்கே டிக்கெட்டுகள் 5, 2, 3 ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. 200 ரூபாயும் போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அதிலே குற்றம் இருப்ப பிற்
தாக எனக்குத் தெரியவில்லை. 5 ரூபாய், 10 ரூபாய் என்று ரசீதுகள் பகல்
இருப்பதால் தவறு ஒன்றும் இல்லை. 2-00

**திரு. கோ. பூவராகன் :** இதிலே பலவிதமான ரசீதுகள் இருக்கின் ஒரே மாதிரியாக இல்லை......

**திரு. க. ர. நல்லசிவன்:** மணி மிக அதிகமாகிவிட்டது, மீண்டும் நான்கு மணிக்குத் தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. 'பூவராகன் அவர்கள் முடித்துவிடுவார்கள், அவர்கள் 15 நிமிடங்கள்தான் கேட்டார்கள் இப்பொழுதே அரை மணி நேரமாகிவிட்டது.

**திரு. கோ. பூவராகன்:** இன்னும் 10 நிமிடங்கள் கொடுத்தால் முடித்துவிடுகிறேன். இல்லையென்றால் மாலையிலே தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுதே வைத்துக் கொள்ளலாம் சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. கோ. பூவராகன் :** மன்ற உறுப்பினர்கள் நேரமாவதைப்பொறுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் ஆர். டி. ஓ. போன்ற அதிகாரிகள் தலைவராக இருந்துகொண்டு பல வசூல்களைச் செய்யக்கூடிய முறையில் காரியங்கள் நடைபெறுகின்றன. சேலத்திலே சீரணிப் படை துவக்குவதற்காகப் பஞ்சாயத்திலிருந்து 50 ரூபாய், 100 ரூபாய் என்ற அளவிலே வசூல செய்திருக்கிறார்கள். சில இடங்களிலே வசூல் செய்ததற்குக் கணக்குக் காட்டப்படவில்லை. அந்தப் பணத்தை எப்படி வசூல் செய்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. சீரணி படையும் தொடங்கவில்லை. அடுத்த படியாக என்னுடைய தொகுதியிலே ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. ஆர். டி. ஓ. டிக்கட் அச்சடித்து நிகழ்ச்சிகள் என்று சொல்லி வசூல் செய்திருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் தவறாக அவரவர்கள் இப்படி வசூல்செய்து கணக்குக் காட்டாத நிலையிருக்கிறது என்றால் இந்த அரசாங்கத்தின்பேரில் இதைவிடக் குற்றச்சாட்டு என்ன சொல்ல இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

நேற்றைய தினம் திரு. சித்தன் அவர்களும் திரு. இராமமூர்த்தி அவர்களும் சிங்கம்புணரி வைத்திய சாலைக்கு வசூல் செய்யப்படுவதுபற்றிச் சொன்னார்கள். அதற்கு அவர்கள் விதியோடு செய்யப்படுகிறது, விதிக்கு மாறாகச் செய்யவில்லை என்று சொன்னார்கள். காரைக்குடியிலே வைத்திய சாலை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி அங்கேயுள்ள நகராண்மைக் கழகம் இருந்த இடத்திலே அந்த வைத்தியசாலையை வைத்துக்கொள்ளலாம் என்று அதை மாற்றிவிட்டார்கள், நகராண்மைக் கழகத்தை இப்பொழுது வாடகைக் கட்டடத்திலே நடத்திக்கொண்டிருக்கிறார்கள், அதற்காக வாடகை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், காரைக்குடியில் அந்த இடத்தில் வைத்தியசாலை திறந்தபாடில்லை. அந்தந்த ஊரிலே வைத்திய வசதி வேண்டாமென்று சொல்லவில்லை. சிங்கம்புணரியிலும் வைத்திய சாலை வேண்டியதுதான், வேண்டாமென்று சொல்லவில்லை, ஆனால் வசூல் எப்படி நடந்திருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். கூட்டுறவுத் துறை மேல் அதிகாரிகள் முதல் கீழ் மட்டத்தில் உள்ள அதிகாரிகள்வரை ஒவ்வொரு ஊரிலும் வசூல் செய்திருக்கிறார்கள். ஒரு மாவட்டத்திலே மாத்திரம் 50 ஆயிரம் ரூபாய் பெற்றிருக்கிறார்கள் என்று அறிகிறேன். இப்படியெல்லாம் நடந்தால் சரியாக இருக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

முதலமைச்சர் பிறந்த தின மலர் போடுகிறார்கள். அதற்காக விளம்பரம் கேட்கிறார்கள். முதலமைச்சருக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் அந்த மலருக்கு விளம்பரம் கொடுக்கவேண்டுமென்றும், கொடுத்ததுபற்றி எனக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்றெல்லாம் சொல்லி அதிகாரிகள் உத்தரவு போட்டுயிருக்கிறார்கள். இதையெல்லாம் முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதற்கு முன்னால் ஒரு மலர் வெளியிட்டிருக்கிறார்கள், பொதுப்பணித்துறை அமைச்சருக்காக வெளியிட்டிருக்கிறார்கள். அந்த மலரிலே 25 ரூபாய் வரைக்கும் தமிழகத்திலே உள்ள எல்லாக்கூட்டுறவு நிறுவனங்களும் விளம்பரம் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. கூட்டுறவுத்துறை சரியான முறையில் நடப்பதற்குப் பணம் இல்லை, மிகவும் கஷ்டப்படுகிறார்கள், நிதி நிலைமை சரியாக இல்லாத காரணத்தால் மூடப்படுகின்ற நிலைமையில் இருக்கின்றன.





சிக்கன நடவடிக்கைகள் என்ற பெயராலே கைத் தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் 700-க்கு மேல் மூடப்பட்டிருக்கின்றன, ஆங்காங்கு ஒவ்வொருவருக்காகவும் பணத்தை எடுத்துக்கொண்டு செலவு செய்தால் தனிப்பட்ட முறையிலே அதைப் பயன்படுத்துவது என்று சொன்னால் இதைவிட அரசாங்கத்திற்கு, அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து இருக்கிறார்கள் என்று எதைச் சொல்ல வேண்டும்? இதை ஒத்துக்கொள்ளாவிட்டால் வேறு எந்தவிதமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் அந்த முறையில் சொல்லலாம். பொதுமக்களுடைய பணம் விரயமாகிறது. அதிகாரிகள் இதற்காகப் பயன்படுத்தப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை சொல்லுகிறேன்.

சென்னையிலே பொதுப்பணித் துறை அமைச்சருக்குச் சிலை வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக ஏற்பாடுகள் எல்லாம் செய்தார்கள். அதுப்பற்றிக் கேட்டதற்கு யாருக்கும் சம்பந்தம் இல்லாமல் நடந்துவிட்டது என்று முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள், பொதுப்பணி அமைச்சரும் சொன்னார்கள். சிலை வைக்கவேண்டுமென்று மவுண்ட் ரோடிலே எவ்வளவு மட்டத்திற்குக் கட்டைகள் கட்டவேண்டுமோ அந்த அளவுக்குக் கட்டியாகிவிட்டது. திடீரென்று நிறுத்திவிட்டார்கள். இதைப்பற்றி யாரைக் கேட்டாலும் தெரியவில்லை என்று சொல்கிறார்கள். முதலமைச்சரும் தெரியவில்லை என்று சொல்கிறார்கள், விழாவுக்குப் பொறுப்பேற்றவர்களும் தெரியவில்லை என்று சொல்கிறார்கள். இப்படி ஒருவருக்கும் தெரியாமல் மவுண்ட் ரோடிலே ஒரு காரியம் நடக்கிறது என்றால் பொதுமக்கள் என்ன நினைப்பார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். யாருக்கும் தெரியாமல், அதுவும் சென்னை நகரத்திலே மவுண்ட் ரோடிலே ஒரு காரியம் நடக்கிறது என்று சொன்னால் அதற்கு இதுவரை ஒருவரும் பொறுப்பேற்றுக்கொள்ளவில்லை. அரசாங்க இடத்தில் நடந்த காரியம்.

அடுத்தப்படியாக லாட்டரிச் சீட்டு. அடிக்கடி முதலமைச்சர் பெருமைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள், ராஜாஜி அவர்கள்தான் ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்தினார்கள் என்று. ராஜாஜிதான் தவறான முறையிலே ஆட்சி போய்க்கொண்டிருக்கிறது, தடுத்து நிறுத்தவேண்டுமென்று சொல்கிறார்கள். இதில் ஊழலும் தவறும் மலிந்துவிடும் லாட்ரிச் சீட்டு எந்த எந்த இடத்திலே விற்கப்படுகிறது, யார் யார் விற்கவேண்டுமென்று இல்லாமல் இருக்கிறது. நம்பரே இல்லாமல்கூட விற்கப்படுகிறது என்றெல்லாம் பார்க்கிறோம். இதை முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதை உடனடியாக நிறுத்த வேண்டும், லாட்டரிச் சீட்டு வைத்துக்கொண்டு தவறான வழியில் சென்று பிழைப்பதற்கும் தவறான வழிகளிலே செல்வதற்கு இது வழியாக இருக்கும். இதை கவனித்து அறவே நிறுத்தவேண்டும்,

எங்களுடைய கட்சிக்காரர்கள் நேரடியாகத் தலையிடுகிறார்கள் என்றால் எங்கே தலையிடுகிறார்கள், எந்த இடத்திலே தலையிடுகிறார்கள் என்றெல்லாம் கூறவேண்டுமென்று முதலமைச்சர் கேட்டார்கள். முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து ஒரு கடிதம் போயிருக்கிறது. முதலமைச்சர் அலுவலகத்திற்கு ஒரு மனு போய் இருக்கிறது. ஒருவர் ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென்று கேட்டு இருக்கிறார். அதற்கு பதில் முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து அவருடைய உதவியாளர் கஜேந்திரன் கடிதம் எழுதியிருக்கிறார். அதிலே "அன்புடையீர், தாங்கள் முதல் அமைச்சர் அவர்களுக்கு எழுதிய 30—10—1967 தேதிய கடிதமும் உடன் அனுப்பிய நெசவாளர் பிரச்சினைக்கு 3-அம்சத் திட்டமும் கிடைத்தது. நன்றி, தாங்கள் தெரிவித்துள்ள 3-அம்சத் திட்டத்தை திரு. ஈ.ஆர். கிருஷ்ணன், எம்.எல்.ஏ., அவர்கள்மூலம் முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்று இருக்கிறது. அப்படி அனுப்பியிருக்கிறார்கள், அனுப்பியவர் டைரக்டர் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார். டைரக்டரிடமிருந்து பதில் வந்திருக்கிறது. ஆனால் முதலமைச்சர் அவர்களிடமிருந்து எம்.எல்.ஏ. அவர்களுக்கு அனுப்பி அவர்மூலமாகமுறையாக வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன

தெரிகிறது என்றால் வட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினரும் சொன்னால்தான் செய்வது இல்லையென்றால் இல்லை என்ற நிலைமைதான் இருப்பதாகத் தெரிகிறது. இந்தமாதிரி குறைகள் முதலமைச்சர் அலுவலகத்திற்கு வந்தால் அதை அதிகாரிகளுக்கு அனுப்பி, கைத்தறி நெசவாளர் பிரச்னையாக இருந்தால் அந்த டைரக்டருக்கு அனுப்பினால் பதில் சொல்வார். அப்படியில்லாமல், எம்.எல்.ஏ. மூலமாக அனுப்புங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள், இவையெல்லாம் முறையாக இருக்கின்றதா என்று கேட்கின்றேன். . . . . . . . . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதில் என்ன தவறு இருக்கிறது ? அந்தப் பகுதியிலிருந்து வந்த பிரச்னைபற்றி அந்தப் பகுதி சட்ட மன்ற உறுப்பினரின் கருத்தை அறிந்துகொள்வதற்கு—அவர் அதைப்பற்றி முழுமையாக அறிந்து தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறார்—அனுப்பப்பட்டிருக்கிறது. அது எப்படி முறைகேடாகும் ?

**திரு. கோ. பூவராகன் :** சிக்கனத்தைக் கையாள்கிறோம். கார்டு விலை கூடிவிட்டதே என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கும்பொழுது இதுமாதிரியெல்லாம் . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அது சரி என்று சொன்னால் அதுமாதிரி மற்ற எல்லாச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்புவார்களா ? காங்கிரஸ்காரர்களுக்கும் அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்த அந்தப் பகுதியிலிருந்து பிரச்னை வருகிறபோது, அந்த அந்தப் பகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கருத்து அறிந்து கொள்வதற்கு முயற்சிக்கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இரண்டு மூன்று பேர்கள் அறைவை ஆலைக்காக விண்ணப்பித்திருக்கிறார்கள். அந்த விண்ணப்பம் இன்றையதினம் அமைச்சர் அவர்களிடத்திலோ, செயலாளரிடத்திலோ இருக்கிறது. ஒன்றிடத்தில் இருக்கிறது, அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னால் "என்னை வந்து பாருங்கள்" என்று கடிதம் எழுதி அழைக்கின்ற நிலைதான் இப்படிப்பட்ட தவறான காரியங்களால் ஏற்படும். அவர்களுடைய கட்சிக்காரர்களுக்காகச் செய்கிறார்கள். சேரணிப் படையில் அவர்களுடைய கட்சிக்காரர்கள் தலைவர்களாகவும், கட்சித் தொண்டர்கள், உறுப்பினர்களாகவும் ஆகக் கூடிய அளவு, வேலை வாய்ப்புக் கிடைக்கக்கூடிய வகையில் சேரணிப் படையை அமைத்திருக்கிறார்கள். ஆனால், இப்படிப்பட்ட காரியங்களும் கட்சிக்காரர்கள் மூலமாகத்தான் நடக்க வேண்டும் என்று சொன்னால் இதுபோன்ற பல பெரிய குற்றத்தை இந்த அமைச்சரவை செய்திருக்கிறது என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** டிக்கட்டுகளைப்பற்றி மட்டும் ஒரு சிறு விளக்கம், இதிலே, விதம் விதமாக டிக்கட்டுகள் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஐந்து ரூபாய் டிக்கட் நாமக்கல் அரசினர் கலைக் கல்லூரிக்காக என்ற பெயரால் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. இன்னொன்று நாமக்கல் கல்லூரிகளுக்காக என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறதே, இது முறைகேடாகத் தென்படுகிறதே என்று கூறினார்கள். நாமக்கல்லிலே முதலிலே ஒரு கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்றுதான் பணம் திரட்ட ஆரம்பித்தார்கள். பின்னர் பணம் நிறையக் கிடைக்கிறது என்ற காரணத்தால் "இரண்டு கல்லூரிகள் வேண்டும்—ஒரு ஆண்கள் கல்லூரி, ஒரு பெண்கள் கல்லூரி வேண்டும் என்று முடிவு செய்து மேற்கொண்டு அவர்கள் இரண்டாவது முறையாக டிக்கட்டுகள் அச்சடிக்கின்றபோது "கலைக் கல்லூரிகள்" என்று அச்சிட்டிருக்கிறார்கள். நாடகத்திற்காக வேறு அச்சடித்திருக்கிறார்களே என்று கேட்டார்கள். முதலிலே அச்சிடப்



பட்ட டிக்கட்டுகள் நன்கொடைக்காக. எதிர்பாராமல் கொடுப்பது. நாடகத்திற்கான கட்டணத்திற்குத் தனியாக டிக்கட் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. இன்னொன்று தொகை குறிப்பிடாமல் இருக்கக்கூடிய டிக்கட். அது இவ்வளவுதான் என்று குறிப்பிட்ட தொகை கொடுக்காமல் ஏதோ இஷ்டப்பட்டுக் கொடுப்பதை நன்கொடையாகப் பெற்றுக்கொள்வதற்காகத்தான் அதிலே தொகை குறிக்கப்படவில்லை. அவற்றில் சீரியல் நம்பர்கள் இருக்கின்றன. எந்த அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டன என்ற விவரங்களும் இருக்கின்றன. இவையெல்லாம் அங்கீகாரம் பெற்ற ஆடிட்டரால் பரிசோதிக்கப்பட்டு சரி என்று அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் மாலை 4-30 மணிக்குப் பேரவை கூடும். பிற் பகல் 2-13

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

(இடைவேளைக்குப் பிறகு மாலை4-30 மணி.)

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நம்பிக்கையற்றவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது நான் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன், நாடு எதிர்க்கிறது நான்கு கோடித் தமிழர்களும் எதிர்க்கிறார்கள். கெடுவான் கேடு நினைப்பான் என்று சொல்வார்கள். ஆகவே கெட்ட எண்ணங்களை இதன் மூலம் தெரிவித்திருக்கிறார்கள், கெட்டுப்போவது நிச்சயம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். முதன்முதலாக இங்கு அரசினர் அலுவல்களில் கட்சிக்காரர்கள் தலையிடுவதுபற்றியும் அதேபோல் உலகத் தமிழ் மாநாடு நிதி வசூல் பற்றியும் இங்கிருக்கிற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் உள்பட இதைப்பற்றி பேசிக்கொண்டே வருகிறார்கள். இந்த நேரத்தில் நான் எதிர்க்கட்சியில் இருக்கிற அரிசந்திரர்களைப் பற்றிச் சில வார்த்தைகளை எடுத்துச் சொல்வது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர் ஒருவருடைய தொகுதியில் சென்ற ஆட்சிக் காலத்தில் அரசினர் கலைக் கல்லூரி ஒன்று துவக்கப்பட்டது. ஒரு கலைக் கல்லூரி துவக்கப்படவேண்டுமென்றால் ஐந்து லட்ச ரூபாய் பணம் கட்டவேண்டும், நாற்பது ஏக்கர் நிலம் பட்டா செய்யப்படவேண்டுமென்பது பொது விதி. ஆனால் இவை எல்லாம் புறக்கணிக்கப்பட்டு 7—8—1966-ல் அன்று கல்வி அமைச்சராகவும், முதல் அமைச்சருமாக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்களைக்கொண்டு திடீரென்று ஒரு கல்லூரியைத் துவக்கினார்கள். அரசினர் உயர்நிலைப்பள்ளி என்ற போர்டை மாற்றிவிட்டு உடனே அரசினர் கலைக்கல்லூரி என்ற போர்ட் மாட்டப்பட்டது. அதற்குப் பிறகு கல்லூரிக்கு நிதி திரட்டவேண்டுமென்று ஒரு குழுவை ஏற்படுத்தினார்கள். அந்தக் குழுவின் தலைவர் முன்னாள் காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஆகும். அந்தக் குழுவின் பொருளாளார் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் ஒரு திடீர் பணக்காரர். அவர், திருவேங்கடம் பஸ் டிரான்ஸ்போர்ட் முதலாளி யாவார். அவரை வைத்து யார் யார் தேர்தல் வேலை செய்யவேண்டுமென்று கருதினார்களோ, யார் யாருடைய ஒத்துழைப்புத் தேவை என்று கருதப்பட்டதோ, அவர்களையெல்லாம் அதில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டு ஒரு குழுவை அமைத்து நிதி திரட்ட முயற்சித்தார்கள். 1966 ஜனவரியில் இருந்து இந்த நிதி வசூல் தொடங்கியது. தேர்தலும் சுறுசுறுப்பாக ஆரம்பித்த நேரம். அதுமட்டுமல்ல, அந்தக் குழுவில் இருந்த உறுப்பினர்கள் அந்தச் சட்டமன்ற உறுப்பினரின் அரசியல் வாழ்விற்காகப் பணியாற்றக் கூடியவர்கள். தேர்தல் நெருங்கியது, நிதி திரட்டல் ஆரம்பமாகியது. 1966-ம் ஆண்டு முழுவதும் இந்த நிதி வசூல் நடந்தது. ஏராளமான டிக்கட்டுகள் அச்சடிக்கப்பட்டன. யார் யாரோ வசூல் செய்தார்கள். ஐந்து லட்சம் ரூபாய் நிதி தேவைப்

பட்டது. எவ்வளவு லட்சம் ரூபாய்க்கு டிக்கட்டுகள் அடித்தார்கள் என்ற கணக்கு தெரியவில்லை. வசூல் செய்த அந்தப் பணத்தைக் கஜாஞவில் கட்டினார்களா என்று பார்த்தால் 18—2—1966 அன்று 1418 செலான் மூலம் 20,000 ரூபாய், 13—3—1966 அன்று 30,000 ரூபாய்தான் கட்டப்பட்டது. தேர்தல் முடிந்த பிறகுதான் மீதித் தொகை கட்டப்படது. திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகுதான் மீதித் ட்தாகை கட்டப்பட்டது. எவ்வளவு லட்சம் ரூபாய்க்கு டிக்கட்டுகள் அடித்தார்கள், யார் யார் வசூல் செய்தார்கள், எவ்வளவு பணம் வசூலாகியது என்ற கணக்கு விவரங்கள் கிடையாது. ஆனல் கட்டிய பணம் 50,000 ரூபாய் தேர்தலுக்கு முன்பு, அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகு மீதித் தொகையை, கிட்டத்தட்ட ரூ. 30,000 கட்டினார்கள். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் இங்கு நிதி வசூல், நிதி வசூல் என்று பேசப்படுகிறது. நிதி வசூல் பொது மக்களிடையே எப்படி நடத்தப்படவேண்டுமென்றும் போதிக்கப் படுகிறது. ஆனல் இந்த நிதி வசூல் எப்படி நடந்தது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கல்லூரிக்கு பணம் கட்டவில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நிதி வசூல் என்னவாயிற்று, மீதிப் பணம் கட்டப்படவேண்டுமே என்று கேட்டதற்கு அவர்கள், எங்களிடம் இருந்தது இவ்வளவுதான், மீதிப் பணத்தை நீங்கள் வசூல் செய்து கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பின்னல் மாவட்ட நலக்குழுவின் மூலம் அங்குள்ள முக்கியஸ்தர்களை வைத்து தேவையான நிதியை அங்கு வசூல் செய்து இப்போது அங்கு அந்தக் கல்லூரி துவக்கப்பட்டிருக்கிறது. நான் இந்த நேரத்தில் எல்லோருக்கும் தெரிவிக்க எண்ணுவது தேர்தல் நெருங்கி வந்த சமயத்தில் ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேல் டிக்கட்டுகள் அச்சடிக்கப்பட்டன. ஆனல் அவற்றில் சீல் கிடையாது. ஐந்து லட்சம் ரூபாய் வசூலாகியதா ? அப்படி வசூலாகியிருந்தால் 78,000 ரூபாய் தான் இதுவரை கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. மீதி நான்கு லட்சத்து சொச்சம் ரூபாய்க்குள்ள கணக்கு என்னவாயிற்று ? அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பொதுக்கூட்டத்தில் பேசும்போது, கல்லூரிக்கு கட்டவேண்டிய நிதி முழுவதும் வசூலாகிவிட்டது. மேலும் மாவட்ட நலக் குழு என்ற பெயரால் நிதி வசூல் செய்கிறார்கள், கட்ட வேண்டிய பணத்தை ஏற்கனவே கட்டியாகிவிட்டது என்று பேசியிருக்கிறார்கள். அந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர் இந்த அவையில் இருக்கிற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமாவார். நான் இதைக் குறிப்பிடக் காரணம், நிதி வசூல்பற்றி டிக்கட்டுகளை எடுத்துக் காட்டினார்கள். நானும் இங்கே டிக்கட்டுகளைக் கொண்டு வந்திருக்கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** விருத்தாசலம் கலைக் கல்லூரி பற்றிச் சொன்னார்கள். இப்போது அந்தக் கமிட்டியை மாற்றி வேறொரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். இப்போது உள்ள கமிட்டியிலும முன்புள்ள கமிட்டியிலும் நான் இல்லை யார்யாரைப் போட்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் என்று இரண்டு லட்சம் ரூபாய் வசூல் செய்து கொடுப்பதாகவும், மூன்று லட்சம் ரூபாய் கொழுஞ்சியப்பர் தேவஸ்தானம் கொடுப்பதாகவும் ஏற்பாடு. இன்னொரு தேவஸ்தானம் 50 ஏக்கர் நிலம் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள். அதற்குப் பிறகுதான் இந்த ஏற்பாடு. அந்தக் கமிட்டியில் ஏதாவது தவறுதல்கள் நடந்திருந்தால், அதில் உள்ளவர்கள் யாராவது தவறு செய்திருந்தால் இந்த அரசு அல்ல, எந்த அரசாங்கமானாலும் அவர்கள் மேல் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம். தனிப்பட்டவர்கள் வசூல் செய்தார்கள் என்றால் எப்படி வசூல் செய்தார்கள், என்ன முறையில் வசூல் செய்தார்கள் என்பதையும் பார்த்துக் கொள்ளலாம். அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** காங்கிரஸ்காரர்கள் ஒழுங்கீனமாக நடந்தார்கள் என்னபதுதான் குற்றச்சாட்டு.





**திரு பி. ஜி. கருத்திருமன் :** இவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது ஒழுங்கீனமாக நடந்தார்கள் என்பதை நிரூபித்தால் எந்தத் தண்டனையையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

**திரு கோ. பூவராகன் :** ஒழுங்கீனமாக நடந்து கொண்டார்கள் என்று சொன்னதை நிரூபிக்க வேண்டும். இல்லவிட்டால் அந்த வார்த்தையை அவர்கள் திரும்பப் பெறவேண்டும்.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** காங்கிரஸ்காரர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார்கள் என்று சொல்வதற்கு ஆதாரங்கள் இருக்கின்றனவா ?

**திரு எஸ். இராமச்சந்திரன் :** ஆதாரங்கள் இருக்கின்றன.

**திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** எந்தக் காங்கிரஸ்காரரையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மொத்தமாக காங்கிரஸ்காரர்கள் நாடு பூராவும் ஒழுங்கீனமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அதை அவர்கள் நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர்கள் ஒழுங்கீனத்திலும் ஒழுங்கீனமாக நடந்து கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சாட்ட விரும்புகிறேன். அவர்கள் மிக மோசமாக நடந்துகொள்கிறார்கள்.

**திரு ந. வீராசாமி :** ஆதாரங்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசும்போது ஆதாரங்களை வைத்துக் கொண்டு பேச வேண்டும் என்று இரு தரப்பாருக்கும் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டிருக்கிறீர்கள், நீங்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்று ஒருவருக்கொருவர் சொல்வது முறையல்ல.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** சண்டையை ஆரம்பித்தவர்கள் அவர்கள்.

**திரு எஸ். இராமச்சந்திரன் :** அந்தக் கல்லூரிக்கு நிதி திரட்ட ஆரம்பித்தது 1966 ஜனவரியிலிருந்து. திரட்டப்பட்ட நிதி ஒரு ஆண்டு ஆகியும் கட்டப்படவில்லை. அது யாரிடத்தில் இருந்தது என்பதும் தெரியவில்லை. நான் இங்கு ரசீதுகள் வைத்திருக்கிறேன். யார் கையெழுத்துப் போட வேண்டும் என்று கிடையாது. யார் வேண்டுமானாலும் கையெழுத்துப் போடலாம். யார் வேண்டுமானாலும் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பாக, 925 எண் ரசீது 20—1—1966-ல் கொடுத்து பணம் வாங்கியிருக்கிறார்கள். 26—5—1966 தேதியிட்ட 839 எண்ணுள்ள ரசீதைக் கொடுத்து 301 ரூபாய் வாங்கியிருக்கிறார்கள். வாங்கப்பட்ட தொகைக்குக் கொடுத்த கையெழுத்தைப் பார்த்தால் எந்த நாமதேயமும் கிடையாது. இப்படியெல்லாம் வசூலாகியிருக்கிறது. இதே நபர்கள்தான் தேர்தல் வேலைகளிலே ஈடுபட்டார்கள். கல்லூரிக்குக் கட்ட வேண்டிய நிதி இரண்டரை இலட்சம் ரூபாய் என்று முன்னாள் அமைச்சர் அவர்களே சொன்னார்கள். ஆனல், கட்டப்பட்டது 78 ஆயிரம் ரூபாய்தான். ஆனல், பொதுக்கூட்டத்தில் பேசுகின்றபோது, "கல்லூரி நிதி முழுவதும் வசூலாகி விட்டது" என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானல், மீதிப் பணம் தேர்தல் செலவுக்காகப் பயன்படுத்தப்பட்டதா ?

**திரு கோ. பூவராகன் :** அந்தப் பணம் முழுவதும் கட்டப்பட்டுவிட்டது என்று இப்போதுகூடச் சொல்கிறேன். இப்போதும் இந்த மன்றத்திலேயே சொல்லுகிறேன். இந்த விவாதத்திலும் சொல்லியிருக்கிறேன். கல்வி விவாதத்தில் கூடச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். எப்போதும் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சர்ச்சை எழும்பிக் கொண்டிருக்கிற காரணத்தால், அதுபற்றி விளக்கம் தெரிவித்துவிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். விருத்தாசலம் கலைக் கல்லூரியைப் பொறுத்தவரையில், கட்டப்பட்டிருக்கிற தன்மைகள் என்னவென்றால் 8—2—1966 அன்று அந்தக் குழுவின் தலைவரால், விருத்தாசலம் சப்-ட்ரெஷரியில், கலைக் கல்லூரிக்காக, 20 ஆயிரம் ரூபாய் கட்டப்பட்டது. 19-6-1966 அன்று 30 ஆயிரம் ரூபாய், அதே குழுவின் தலைவரால், விருத்தாசலம் சப்-ட்ரெஷரியில், கட்டப்பட்டது. 19-5-1967 அன்று, அதே குழுவின் தலைவரால், விருத்தாசலம சப் ட்ரெஷரியில், 25 ஆயிரம் ரூபாய் கட்டப்பட்டது. 10-8-1967 அன்று, 50,000 ரூபாய் தென்னார்க்காடு மாவட்டக் கலெக்டரால் ஸ்டேட் பாங்க்கில் கட்டப்பட்டது. 16-5-1967 அன்று கலெக்டரால் 78 ஆயிரம் ரூபாய் கடலூர் ட்ரெஷரியில் கட்டப்பட்டது. 12-12-1967 அன்று, கலெக்டரால் ரூ. 754·99 சப்-ட்ரெஷரியில் கட்டப்பட்டது. 8-4-1968 அன்று விருத்தாசலம் ரெவினியூ டிவிஷனல் ஆபீசரால், விருத்தாசலம் சப்-ட்ரெஷரியில் 50 ஆயிரம் ரூபாய் கட்டப்பட்டது. 17-4-1968 அன்று, அதே ரெவினியூ டிவிஷனல் ஆபீசரால், ரூ. 41,203·01, விருத்தாசலம் சப்-ட்ரெஷரியில் கட்டப்பட்டது. ஆக, ரூ. 2,94,960 கட்டப்பட்டிருக்கிறது. இரண்டு லட்சம் ரூபாய் கொலிஞ்சியப்பர் தேவஸ்தானம் தருவதாகச் சொல்லுகிறார்கள். இன்னும் கட்டப்படவில்லை. கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மொத்தம் ஐந்து இலட்ச ரூபாய். மாவட்டக் கலெக்டரிட மிருந்து ரூ. 5,040 எதிர்பார்க்கப்படுகிறது. இதுதான் கட்டப்பட்டதனுடைய நிலைமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் ;** தலைவர் அவர்களே, இப்பொழுது அண்மையில் மறுபடியும் அங்கு நடந்த காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் இந்தக் கமிட்டியைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் பேசியிருக்கிறார். "கல்லூரிக்காக வசூல் செய்த பணம் என்னிடம் இருக்கிறது ; மற்ற கமிட்டி மெம்பர்கள் கணக்கு தரட்டும் ; நான் பின்னால் தருகிறேன் ; அதற்கு முன்னதாகத் தரமாட்டேன்" என்று விருத்தாசலம் பஞ்சாயத்து யூனியன் துணைத் தலைவர் அந்தப் பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார். நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், கல்லூரியின் பெயரால், கல்லூரி வரவேண்டும் என்பதில் மக்களுக்குள்ள நல்லெண்ணத்தை வைத்து, ஏராளமான டிக்கட்டுகள் அச்சடித்து, கணக்கு வழக்கு இல்லாமல், கண்ட பேர்வழிகள் வசூல் செய்துவிட்டு, இதுவரையிலும் அந்தக் கமிட்டியில் கணக்குக் காட்டப்படவில்லை. அதிலே பொருளாளராக இருக்கும் அந்த பஸ் முதலாளி, மேற்படி கணக்கு காட்ட வேண்டும் என்று அந்தக் கமிட்டிக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டபோது வரவேயில்லை. வர மறுத்து விட்டார்கள். எவ்வளவோ முயற்சித்தும், அவர்களைக் கொண்டு அந்தக் கணக்கைத் தணிக்கை செய்ய முடியவில்லை. மாவட்டக் கலெக்டர் அவர்கள் கேட்டபோதுகூட, "எங்களிடம் இருப்பது இவ்வளவுதான். இதைக் கட்டிவிட்டோம். மீதிப் பணத்தை நீங்கள் ஒரு பெனிபிட் பெர்ஃபார்மன்ஸ் வைத்து நடத்திக் கொள்ளுங்கள். மீதிப் பணத்தைக் கட்டி கல்லூரியை வைத்துக் கொள்ளுங்கள்" என்று தீர்மானத்தைப் போட்டு அனுப்பினாரே தவிர, இன்னும் கணக்குகள் காட்டப்படவில்லை. பொது மக்களிடையே, அங்கு கல்லூரியின் பேரால் தங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்ற எண்ணம் பரவலாக இருந்து கொண்டு வருகிறது. அதுமட்டுமல்ல. பணம் வசூலித்துக் கட்டுவதற்கு முன்னதாகவே கல்லூரியை ஆரம்பித்ததன் காரணமாக, அட்மிஷனுக்கு வந்தவர்களிடமெல்லாம் 200 ரூபாய், 300 ரூபாய், 400 ரூபாய் என்று நிதி வசூல் செய்யப்பட்டு இருக்கிறது. ரசீது கொடுக்கப்படாமல், ஏராளமான பணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. நான் ஏன் இதைத் திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன் என்றால் வசூல் ஆகிய கணக்கு, அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டியிலே வைத்து சரி செய்யப்படவில்லை. பணத்தை வைத்திருக்கின்ற பொருளாளர் பல முறை அழைக்கப்பட்டும் அந்தக் குழுவுக்கு வரவில்லை ; கணக்கை காட்டவில்லை. அதே நேரத்தில், முன்னாள் அமைச்சர் அவர்கள், "வசூல் முழுவதும் ஆகிவிட்டது" என்று சொன்னாலும், தேவையான பணம் கட்டப்படாமல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு





மீதிப் பணம் கட்டப்பட்டது. இதன் அடிப்படையில் தான், கல்லூரி ரீதியில் மோசடி நடந்திருக்கிறதா என்பதை விசாரிக்க வேண்டும். பொதுமக்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்களா என்பதை அருள்கூர்ந்து முதலில் விசாரிக்க வேண்டும். உலகத் தமிழ் மாநாட்டு விவகாரத்திற்கு முன்னதாக ஊர் தமிழர் விவகாரம் மிக முக்கியமானது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன் (ஆரவாரம்).

உலகத் தமிழ்மாநாடு சம்பந்தமாக நாம் வசூல் செய்தது, ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் ஸீல் போட்ட டிக்கட்டுகளைவிற்றுத்தான். அதை அதிகாரப் பற்றற்றவர்கள் விற்கவே இல்லை. அவர்கள் உடன் வந்தவர்களே தவிர, பணம் வாங்கியவர்கள் அதிகாரிகள். அவ்வப்போது வாங்கிய பணம் அதிகாரிகளால் கட்டப்பட்டிருக்கிறது. ஆகையால் தான், தேர்தல் காலத்திலே அத்தகைய சூறையாடல்கள் நடப்பதைமதடுக்க வேண்டியது ஜனநாயக அரசினுடைய கடமையாகும். ஆகையால், இது குறித்து ஒரு விசாரணை ஏற்படுத்தி, யார் யார் பணம் கொடுத்தார்கள், யார் யார் முன்னாள் அமைச்சருக்கு வேண்டியவர்கள் அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள், கல்லூரிக்கென வாங்கப்பட்ட நிதி தேர்தல் செலவிலே அழித்துவிடப்பட்டதா, கணக்குகள் தர ஏன் மறுக்கப்படுகின்றது, பாங்கு பாஸ் புக்கைக் காட்ட ஏன் மறுக்கிறார்கள், எப்போதெல்லாம் வித்ட்ராயல் இருக்கிறது என்றெல்லாம் ஆராய வேண்டும். இதையெல்லாம், இன்று அரிச்சந்திரர் போல் பேசுகின்றவர்கள் மக்கள் மன்றத்திற்கு வைக்க வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், காமாட்சியம்மன் பஸ் ட்ரான்ஸ்போர்ட் முதலாளிக்கு பஸ் ஷெட் ஒன்று இருக்கிறது. மழை பெய்தால் ஒழுகும். கீழே மணல் கொட்டியிருக்கிறது. ஆனால், முன்னாள் அமைச்சர் எப்படியும் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக, அரசினர் அச்சகத்தை அங்கே கொண்டு போய் வைத்தார்கள். மாதமொன்றுக்கு வாடகை 1,350 ரூபாய். அதுவும் விருத்தாசலத்தில். விருத்தாசலத்தில் 1,350 ரூபாய் மாத வாடகை பெறுமானமுள்ள கட்டடம் இருக்கிறதா? ஆனால், காமாட்சியம்மன் பஸ் ட்ரான்ஸ்போர்ட் முதலாளிக்காக இந்தச் சலுகை செய்யப்பட்டிருக்கிறது. இது அதிகாரத்தைப் பயன்படுத்தியதாக ஆகாதா ? இதை அருள்கூர்ந்து அவர்கள் கவனிக்க வேண்டும்.

**திரு கோ. பூவராகன் :** தலைவர் அவர்களே, எந்த இடத்தில் எப்படி வைக்கப்பட்டது, எதனால் வைக்கப்பட்டது என்பதற்கு அரசாங்கத்திலே ஃபைல் இருக்கிறது. முறைப்படி அந்த இடத்திற்கு எவ்வளவு வாடகை கொடுக்கலாம் என்று சர்டிஃபை செய்திருக்கிறார்கள். கலெக்டர் பார்த்திருக்கிறார்கள். மந்திரியே போய் இடத்தைப் பார்த்து, உத்தரவு போடவில்லை. வேறு இடங்களைக் கூடப் பார்த்தார்கள். உங்களுக்கு (கனம் உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்களைப் பார்த்து) வேண்டியவருடைய இடத்தைக்கூட — எதிர்த்து நின்ற திரு செல்வராஜ் அவர்களுடைய இடத்தைக்கூடப் பார்த்தார்கள். எந்த இடம் தேவையோ அந்த இடத்தில் வைக்கச் சிபார்சு செய்து, அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. யாருக்கும் வேண்டியவர் என்பதல்ல. இப்போது இவர்கள்வந்து ஓராண்டுக் காலம் நடந்திருக்கிறது. தவறு இருந்தால் அதை மாற்றி வேறு இடத்தில் இவர்கள் போட்டிருக்கலாம். இல்லையென்றால், வாடகையைத் திருப்பிப் பெற முயற்சி எடுத்திருக்கலாம்.

**திரு ஈ. ஆர். கிருஷ்ணன் :** அந்த ஃபைல் இப்பொழுது இருக்கிறதா ? அதுவும் கொளுத்தப்பட்டுவிட்டதா ? (சிரிப்பு).

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கொளுத்தப்பட்டிருந்தால், அது இந்த ஆட்சியால் கொளுத்தப்பட் டிருக்க வேண்டுமே தவிர, எங்கள் ஆட்சியால் கொளுத்தப்பட்டிருக்க முடியாது. (சிரிப்பு).

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, முறைப்படி, வாடகைக்கு அந்தக் கட்டடம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால், இன்னும் அக்ரிமெண்ட் கூட ஆகவில்லை என்பதை

நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த அளவிற்கு அவசரம் அவசரமாக, அமைச்சர் மட்டத்திலேயே காரியங்கள் நடைபெற்றன என்பது கண்கூடான உண்மையாகும். அது மட்டுமல்ல. எப்பொழுதெல்லாம் விருத்தாசலத்திற்கு முன்னாள் அமைச்சர் வந்தாரோ அப்போதெல்லாம் இந்தக் கல்லூரிக்கு நிதி வசூலிக்கப்பட்டது. இங்கிருந்த போதே, திருச்சியிலேயிருக்கிற பஸ் அதிபருக்கு — சுந்தரம் ட்ரான்ஸ்போர்ட் பஸ் முதலாளிக்கு — ட்ரங்க் கால் மூலம் ஃபோன் பண்ணி, கல்லூரி நிதிக்குப் பணம் கேட்டு, உடனே சுந்தரம் ட்ரான்ஸ்போர்ட் முதலாளி, "நானே வந்து தருகிறேன்" என்று சொன்னதற்கு, "ஐயையோ நீங்கள் வரவேண்டாம், நானே வந்து பெற்றுக் கொள்கிறேன்" என்று முன்னாள் அமைச்சர் அவர்களே நேரில் சென்று....

**திரு கோ. பூவராகன் :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள், நான் ட்ரங்க் காலில் பேசினதாகச் சொல்லுகிறார்கள். ஆதாரங்களை வைத்துக்கொண்டு பேச வேண்டும் என்று நீங்கள் தீர்ப்பளித்திருக்கிறீர்கள். நான் ட்ரங்க் காலில் பேசினேன் என்பதை அவர் ருசுப்பிக்க முடியுமா ? இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களையெல்லாம் உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடாது. கனம் உறுப்பினர் சொன்னதற்கெல்லாம் என்ன ஆதாரம் ? யார் பேசினது ? யார் சொன்னார் ? என்பதைக் கனம் உறுப்பினர் ருசுப்பிக்க முடியுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** யார் எந்த விதமான குற்றச்சாட்டைக் கூறினாலும், அந்தக் குற்றச்சாட்டுக்குரிய ஆதாரத்தோடு அவர் பேசவேண்டும் என்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டுகள் கூறவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இதுபற்றிய விசாரணை நடத்தத் தயாரானால் இதை நிரூபிக்க நான் தயார்.

THIRU K. VINAYAKAM : I rise on a point of order. The subject before this House is no-confidence motion.

(There was noise from the Ministerialist benches.)

When have these people become Deputy Speaker ? There must be some order. If at all any member is discussing, it should be about the subject-matter of this no confidence motion, not about something which happened some years ago or some centuries ago. These things are said without any relevance to facts. These things cannot be proved with any documentary evidence. It is the job of the Deputy Speaker to pull up whoever the member may be, whether he be on the Government benches or in the Opposition. Please maintain some order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நம்முடைய திரு வினாயகம் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். இந்த விவாதத்தையொட்டிய பேச்சாக இருக்க வேண்டுமென்று இந்த மன்றத்தில் நான் வற்புறுத்தியிருக்கிறேன், நினைவூட்டியிருக்கிறேன். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள் பேசும் நேரத்தில் தாங்கள் ஆளுங் கட்சியாக இருந்த நேரத்தில் முறையான ஆளுங் கட்சியாகத்தான் இருந்தோம் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதை ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில், கூறியவர்களைப்பற்றி கூறுவதில் குற்றம் இருக்கவில்லை. ஆனாலும், பேசுகிறவர்கள் பொறுப்புடனும், ஆதாரத்துடனும் பேச வேண்டுமென்று சொன்னேன். உறுப்பினர்வர்கள் ஆதாரம் இருக்கிறது, விசாரணைக்கு ஏற்பாடு செய்தால் நிரூபிக்கத் தயார் என்று சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்வதுதான் முறையாக இருக்கும்.





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** விசாரணைக்கு, ஆளும்படியானவர்கள் தான் உத்தரவிட வேண்டும். அப்படி உத்தரவிட்டு நிரூபிக்க வேண்டும். அப்படி உத்தரவிட்டு நிரூபித்தால், 1,008 குற்றச்சாட்டுகள் இருந்தாலும் அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இதற்கான ஆதாரங்களை நான் உங்கள் மூலம் தருகிறேன். நிதி வசூலை எப்படியெல்லாம் செய்ய வேண்டும், எப்படியெல்லாம் அது பாழாக்கப்படுகிறது என்று தினந்தோறும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், செயலாளரும் நமக்குப் போதனை செய்துகொண்டிருக்கிறார்களே, முதலில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், அதன் செயலாளருடைய தொகுதியிலே நடந்த நிதி மோசடியைச் சரி செய்துவிட்டு அதற்குப் பிறகு சொன்னால் மிக நன்றாக இருக்கும். அவர்கள் சொன்னதாகப் பத்திரிகையிலே கூட பார்த்தேன், மூர்மார்க்கெட்டில் இரண்டரை அணா, மூன்றரை அணா என்று விற்பதைப் போல லாட்டரிச் சீட்டுகள் விற்கப்படுகின்றன. என்று சொல்லியிருக்கிறார்கள். கையெழுத்து மட்டும்தான் இருக்கிறது, வேறு ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். ஏன்இதைக் கூறுகிறேன் என்றால், அரசியலில் ஒரு தரத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும், பொதுமக்களிடத்தில் நல்ல காரியத்திற்காகப் பண . . .

**திரு. கோ. பூவராகன் :** தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி நிதி மோசடி செய்கிறார்கள் என்று குறிப்பிட்டு, ருசுப்பிப்பதாகச் சொல்லுகிறார்கள். விசாரணை நடத்தட்டும் அதிலே குறைகள் இருந்தாலும், அதிலே யார் சம்பந்தப்பட்டிருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதிலே எந்த விதமான ஆட்சேபணையுமில்லை இதே போன்று நான் சொன்ன. கல்லூரி நிதிக்கும் தலைவர், செயலாளர் என்று யார் யார் இருக்கிறார்களோ அவர்களை விசாரிக்கட்டும், தவறுகள் நடந்திருந்தால், அது எந்தகமிட்டியில் எப்படிப்பட்டவர் செய்திருந்தாலும் அதற்குத் தண்டனை கொடுக்க வேண்டும். இதற்கு நீதி விசாரணை வைத்து யார் யார் குற்றம் செய்தார்களோ அவர்களுக்குத் தண்டனை கொடுக்கட்டும். அதற்கு ஏற்பாடு செய்தால் நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அத்தகைய விசாரணையை மேற்கொண்டால் பல உண்மைகள் வெளிவரும் என்று அவர்கள் ஒத்துக் கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இங்கு பேசும்பொழுது இன்னும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சியிலே உள்ளவர்களும் கூறினார்கள். அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகக் கூறி, உதாரணத்திற்குக்கூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் "சிங்கம்புணரி"யில் மருத்துவமனை கட்டுவதைப்பற்றி சொன்னார்கள். அதிகாரத்தைப் பயன்படுத்தி இத்தகைய காரியங்கள் முன்பு நடைபெறாமல் போய்விட்டனவா ? கணக்குக் காட்டாத நிலை இருக்கிறது என்று இதைப்பற்றியே பேசிக்கொண்டிருக்க தமிழ்நாடு காங்கிரஸ் தீர்மானித்து விட்டதா ? உருப்படியான யோசனைகளையும், திட்டங்களையும் வைத்து மக்களிடம் நம்பிக்கை பெற ஏன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை ? இரண்டு நாட்களுக்கு முன்னாலேகூட ஒரு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் பஸ்ஸை எடுத்துக் கொண்டு மாவட்ட தேர்தலிலே இறங்கினார்கள் என்று.. (குறுக்கீடு) பஸ் இல்லை என்று சொன்னாலும் கார் என்று சொன்னார்கள் விருத்தாசலத்தில்..........

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார்: இன்று முதலமைச்சரவர்கள் விவாதத்திற்குப் பதில் சொல்வதாகவும், நான் இறுதியிலே பேசுவதாகவும் திட்டமிட்டிருந்தோம். முதலமைச்சரவர்கள் பதில் சொல்வதற்குப் பதிலாக இவரே பதில் சொல்லுகின்ற முறையிலே தீர்மானம் செய்துகொண்டிருக்கிறார்களா ? ஒவ்வொரு கட்சிக்கும் இவ்வளவு நேரம் என்று ஒதுக்கப்பட்டது. இப்பொழுது $4\frac{1}{2}$ மணிக்கு எந்த முறையிலே அவர்களுக்குப் பேச நேரம் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு நன்றாகத் தெரியும், மாலை நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவார்கள் என்று நாம் எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை. இருந்தாலும், அதைப்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய அறையிலே முடிவு எடுத்ததைப் பற்றி இங்கே கேள்வி கேட்பது முறை அல்ல என்பது அவர்களுக்குத் தெரியும். நேரம் போட்டிருக்கிறோம். ஆனால் அந்த நேரத்திலே கட்டுப்பாடு இருக்கவில்லை. திரு. விநாயகம் அவர்கள் 20 நிமிஷங்கள தேவை என்றார்கள் ஆனால் 45 நிமிஷங்கள் பேசியிருக்கிறார்கள்.

**திரு. கே. விநாயகம் :** 25 நிமிஷங்கள் மந்திரியவர்கள் பேசினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதே போல திரு. விநாயகம் அவர்களே, திரு. பூவராகனுக்கு 10 நிமிடங்கள் கொடுக்கும்படி சொன்னார். ஆனால் அவர் எவ்வளவு நேரம் பேசினார் என்பதைப் பார்த்தால் தெரியும். எனவே, அதைக் கட்டுப்பாடாக மேற்கொள்ளவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவதற்கு நேரமானபடியாலும், காலையிலே அவர் பேசப் பெயர் கொடுத்து அந்த வாய்ப்பு கொடுக்காத காரணத்தாலும் அவர்களுக்கு இப்பொழுது பேச வாய்ப்பு கொடுக்கப்பட்டது. இதில் எந்த விதமான முறைகேடும், ஒழுங்குத் தவறும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இன்று பிற்பகல் நேரத்திலே அவர்கள் மட்டும் தான் பேச வேண்டுமென்று சொன்னார்கள். கட்சியிலே இருப்பவர்கள் நேரத்தை வரையறுத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் என்னைப் போன்ற சுயேச்சைகளுக்குக் கட்சி கிடையாது. இதில் நானும், திரு. சுப்பையா முதலியாரும் இருக்கிறோம். காலையிலே நானும் பெயர் கொடுத்திருக்கிறேன். எனவே, அந்த ரைட் எங்களுக்கும் உண்டா, இல்லையா என்பதைத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** யாரைப் பேச அழைப்பது, அழைக்க இடமில்லை என்பதைத் தீர்மானிக்க சபாநாயகருக்கு உரிமை இருக்கிறது. ஆகவே, இதிலே யாருக்கும், எந்த விதமான உரிமையும் பாதிக்கப்படவில்லை. சுயேச்சைகளுக்கு 10 நிமிஷங்கள் கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். திரு. சுப்பையா முதலியார் அவர்கள் 10 நிமிஷங்களுக்கு மேல் பேசியிருக்கிறார்கள். சுயேச்சைகளுக்குக் கொடுக்கவேண்டுமென்பது தான் எண்ணம். ஆனால், நேரம் இல்லாத காரணத்தால் கொடுக்க முடியவில்லை. எனவே, இதில் யாருடையஉரிமையையும் மறுப்பதாக நினைக்க வேண்டியதில்லை. இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்னையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட நிர்வாகத் தலையீடும், பொது மக்களிடத்தில் நிதி வசூலிப்பதும் இந்த ஆட்சிக்கு மட்டும் சொந்தமானது அல்ல, எந்த ஆட்சி வந்தாலும் பொது மக்களுடைய பணத்தை வசூல் செய்து நல்ல காரியங்களை ஆற்ற வேண்டியது தான் நேர்மை. பொது மக்களிடம் வசூலிப்பதில் குறையிருக்கிறது, குறையிருக்கிறது என்று அந்த ரீதியில் சொல்லி அரசியலை வளர்க்க வேண்டுமென்றால் இந்த நாட்டின் அரசியல் நிலைமை எந்த அளவுக்குப் போகும் ? ஏற்கெனவே தமிழக மக்கள் காங்கிரஸின் மீது வெறுப்படைந்திருக்கிறார்கள். இன்னும் அவர்கள் இதே ரீதியில் சென்று கொண்டிருந்தால் "பொலிட்டிக்கல் டீஸென்ஸி" என்று சொல்வார்களே, அதாவது அரசியல் நாகரிகம் இல்லாதது மட்டுமல்ல, மக்களுடைய நிரந்தர விரோதிகளாக ஆவார்கள் என்று எச்சரித்து, இந்தத் தீர்மானத்தை 4 கோடி இதயங்களின் சார்பாக நிராகரிக்கிறேன், நிராகரிக்கிறேன், நிராகரிக்கிறேன்.

மாலை 5-00 **மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, இத்தனை நாட்களாக இங்கே விவாதிக்கப்பட்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்பேரில் என்னுடைய கருத்துக்களை விரிவான முறையில்





தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லாமல் அவர்கள் எதிர்த்தரப்பிலிருந்து எடுத்துச்சொன்ன பல்வேறுவகையான குற்றச்சாட்டுகளுக்கு இந்த அவையிலே மற்ற உறுப்பினர்கள் பொருத்தமான பதிலை அளித்திருக்கின்றார்கள் ஆனால் நான் அளிக்கின்ற பதில் எல்லாம் எதிர் தரப்பிலே உள்ள காங்கிரஸ்காரர்களுக்குத் திருப்தி அளிக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு எங்களிடத்தில் நம்பிக்கையில்லையென்று அவர்கள் சொல்லிவிட்ட பிறகு நாங்கள் எடுத்துச் சொல்லுகின்ற விஷயத்திலே மட்டும் நம்பிக்கை வந்து விடும் என்று எதிர்பார்ப்பது விந்தையாகும். அவர்களுக்கு எங்களிடத்திலே நம்பிக்கையில்லை யென்று தீர்மானத்தைக் கொடுப்பதற்கு முன்னாலே இந்தக் கழகம் தோன்றிய நாளிலிருந்து அவர்களுக்கு எங்களிடத்திலேயும் எங்களுடைய கழகத்தினிடத்திலேயும், எங்களுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பினிடத்திலேயும் என்றையதினமும் நம்பிக்கையிருந்ததில்லை. அவர்கள் எதுவுமே நடைபெறாது என்று நம்பிக்கொண்டிருந்தவர்கள். "உங்களுடைய ஆதிக்கம் நிச்சயமாக பொது மக்களாலே வெறுத்து ஒதுக்கப்படும்" என்று நாங்கள் சொன்ன நேரத்தில் எங்களுடைய வார்த்தைகளிலே அவர்களுக்கு நம்பிக்கையில்லை. "பொது மக்கள் விழித்துக்கொண்டிருக்கிறார்கள் ; உங்கள் ஆட்சியின் மூலமாக அவர்கள் பட்டிருக்கிற அல்லலையும் தொல்லையையும் இன்றையதினம் எண்ணி எண்ணி குமுறிக் கொண்டிருக்கிறார்கள் ; பொதுத் தேர்தல் வருகின்ற நேரத்தில் அவர்கள் தங்கள் தீர்ப்பை அளிக்கப்போகிறார்கள்" என்று நாங்கள் சொன்ன நேரத்தில் எங்கள் வார்த்தையிலே அவர்களுக்கு நம்பிக்கையில்லை. நாங்கள் படிப்படியாக வளர்ந்திருக்கிறோம். என்று புள்ளி விவரத்தோடு சொன்ன நேரத்திலும் எங்களுடைய வார்த்தையிலே அவர்களுக்கு நம்பிக்கையில்லை.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்களே அவர்கள் என்றைய தினமும் எங்களிடத்திலே நம்பிக்கை வைத்து அரசியலை நடத்தவில்லை. ஆனால் அதற்கு நேர்மாறாக அவர்களிடத்திலே எங்களுக்கு அன்றும் இன்றும் நம்பிக்கை இருக்கிறது. எந்த வகையிலே அவர்களிடத்திலே நம்பிக்கையிருக்கிறது என்றால் அவர்கள் இன்று நடந்து கொள்வதை இன்னும் கொஞ்சம் திருத்திக் கொள்வார்களானால் ஒரு நல்ல ஜனநாயகத்தை இங்கே கடைப்பிடிப்பதற்கு உறுதுணையாக அமைவதன்மூலம் நம்முடைய மாநிலத்தில் ஒரு நல்ல ஜனநாயக மரபை வளர்க்க முடியும் என்ற முறையில்.

காங்கிரஸ் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டுகள் இன்றையதினம் மட்டும் புதிதாகச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டு அல்ல. ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்ட நாளிலேயே ஒவ்வொரு சந்தர்ப்பம் கிடைக்கின்றபொழுதும் சட்டமன்றத்திலேயும் சட்டமன்றம் கூடாத நாட்களில் வெளியிலேயும் அவர்கள் அடுக்கடுக்காகச் சொல்லிக் கொண்டு வந்த குற்றச்சாட்டுகளைத்தான் இன்றையதினம் அவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்கிறார்கள். தமிழிலே ஒரு பழமொழி சொல்வார்கள், அரைத்த மாவையே அரைப்பது என்று. அந்த அரைத்த மாவையே அரைப்பது என்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். அவர்கள் அரைக்கும் திறன் சரியாக இல்லாததாலே மசியவில்லை என்பதாலே திரும்பத் திரும்ப அரைக்கலாம் அல்லது அரைப்பதற்கு வேறு எதுவும் கிடைக்கவில்லை என்பதாலே அரைத்ததையே திருப்பித் திருப்பி அரைக்கலாம். (ஆளும் கட்சித் தரப்பில் ஆரவாரம்.) இது அரைத்த மாவையே திருப்பித் திருப்பி அரைப்பது போலத் தான். இவைகளுக்கெல்லாம் அவ்வப்போது நான் எடுத்துச் சொன்ன சமாதானங்கள், விளக்கங்கள், புள்ளி விவரங்கள், இவைகள் எதனையும் அவர்கள் கவனிப்பதாகவும் தெரியவில்லை. ஓரிரு உறுப்பினர் கவனித்திருந்தாலும் ஏற்றுக் கொண்டதாகவும் புரியவில்லை. ஆகையால்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு பதில் சொல்லுகின்ற நேரத்தில் அவர்களின் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கவேண்டிய தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

காலையிலே பேசிய சங்கரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வீரமணி அவர்கள் வெகு தெளிவாகக் குறிப்பிட்டார்கள். "எப்பொழுது எங்களிடத்திலே உங்களுக்கு நம்பிக்கை இருந்தது, இப்பொழுது இந்த நம்பிக்கை போய்விட்டதென்று சொல்கிறீர்கள்" என்று அவர்கள் கேட்டார்கள். மிகப் பொருத்தமான கேள்வியாகும். ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதும் அந்த நேரத்தில் பல்வேறு வகையான குற்றச்சாட்டுகளை எடுத்துப் பேசுவதும் ஜனநாயகத்தில் ஒரு மரபாக இருக்கிறது. ஆகையால் இந்த அரசின் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததனாலே இந்த அரசுக்கோ அல்லது இந்த அரசை நடத்துகின்ற கழகத்திற்கோ எந்த வகையிலும் மாசு வந்து விடுமென்றோ, மரு ஏற்பட்டு விடுமென்றோ, இழுக்கு ஏற்பட்டு விடுமென்றோ நான் துளியும் கருதவில்லை. இந்தியப் பேரரசின் மேல் பலமுறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, எப்படி அவைகள் எல்லாம் விவாதிக்கப்பட்டு, எப்படி அவைகள் தள்ளப்பட்டு விட்டனவோ அதைப் போல் இந்த அவையிலும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அவர்கள் கொண்டு வந்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 6 மாதத்திற்கு ஒரு தடவைதானே கொண்டுவர முடியும், தொடர்ந்து மறுபடியும் 6 மாதம் கழித்த பிறகு நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டு வருவோம் என்று மறைமுகமாக"சுட்டிக் காட்டினார்கள். நீங்கள் எத்தனை முறை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள். பொது மக்களுக்கு எங்களிடத்தில் நம்பிக்கையிருக்கிறவரையில் பொது மக்கள் எங்களிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று நாங்கள் எண்ணும் வரையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் எங்களுக்கும் பொது மக்களுக்கும் உள்ள தொடர்பை ஒரு துளியும் பாதிக்காது என்பதை நாங்கள் மிக நன்றாக அறிந்தவர்கள்.

ஏதாவது குற்றச்சாட்டுகளை பன்னிப்பன்னிப் பேசவேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இவ்வளவு விரைவாக இங்கு விவாதத்திற்கு நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள். நீங்களே எண்ணிப் பார்க்கவேண்டுமென்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் எடுத்துக் காட்டிய 11 வகையான குற்றச்சாட்டுக்களில் ஏதாவது புதிதாக வந்ததாக, ஒன்றாவது உங்களால் கண்டு பிடிக்கப்பட்டதாக இருக்கிறதா என்றால், இல்லை. விவாதத்திலே, முன் நீங்கள் இந்த அவையிலேயும் வெளியிலேயும் எதை எதை எடுத்துப் பேசிக் கொண்டிருந்தீர்களோ அதையே தான் பேசுகிறீர்கள். விலை போகாத சரக்கை மாலை இருட்டு நேரம் வருகிறது என்று தெரிந்தவுடன் பெருத்த குரலிலே கத்தி விட்டு, அதிலே ஒட்டி இருக்கின்ற ஈக்களையும் கொசுக்களையும் ஓட்டிவிட்டு அங்காடியிலிருந்து வீட்டிற்கு எடுத்துச் செல்லுகின்ற வணிகர்களைப் போல நீங்கள் இந்த சரக்குகளை தெருத்தெருவாக கூவி விற்றீர்கள், மேடைகளிலே கதை பேசினீர்கள், மாநாடுகளிலே சொன்னீர்கள், ஊர்வலங்களிலே முழக்கம் எழுப்பினீர்கள். இவை அத்தனையையும் கேட்டுக்கொண்டு பொது மக்கள் அடுத்தடுத்து அளித்த தீர்ப்பு என்ன? தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தலிலே நீங்கள் பொது மக்களிடத்திலே இதே விவரங்களையும், எல்லா விவரங்களையும் பேசினீர்கள். பொது மக்கள் அப்போது போதை தெளிந்து விட்டார்கள் என்று சொன்னீர்கள். அப்பொழுது மக்கள் காங்கிரஸ்காரர்களுக்குத்தான் வாக்களிப்பர் என்று நம்பினார்களோ இல்லையோ வெளியிலே பேசினார்கள். மக்கள் அளித்த தீர்ப்பு என்ன? அதற்குப் பிறகு சங்கரியிலே மக்கள் அளித்த தீர்ப்பினுடைய பொருள் என்ன? அதற்குப் பிறகு தென்காசியிலே மக்கள் அளித்த தீர்ப்பினுடைய பொருள் என்ன? இன்னமும் வரக்கூடிய சந்தர்ப்பத்திலேயும் பொது மக்கள் எங்களிடத்திலே நம்பிக்கை இருப்பதற்கு ஏற்ற வகையில் தீர்ப்பளிப்பார்கள் என்பதில் நான் ஒரு துளியும் ஐயப்பாடு கொள்ளவில்லை.

ஆகையால் தான் நான் இடையிலேயே, அவர்கள் பேசிக்கொண்டிருந்த இடையிலேயே குறுக்கிட நேர்ந்தது என்று வருத்தப்படுகிறேன்—கவலைப்படுகிறேன். அதனால் மற்ற விவரங்கள், ருசுப் போகா விஷயங்கள், காதிலே விழுந்தவை, யாரோ சொன்னார்கள், எங்கோ கேள்விப்பட்டோம் என்ற மாதிரியான புகார்களை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லி,





அவைகள் எல்லாம் அச்சில் ஏறி, அச்சாகி வெளியிலே பொதுமக்கள் பார்க்கின்ற நேரத்தில், என்ன, இவைகளுக்கு அமைச்சரவையிலே யாரும் பதில் சொல்லவில்லை என்ற நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத் தான் உடனுக்குடன் இவைகளையெல்லாம் எடுத்துச் சொன்னேன். அவைகளில் பலவற்றை நீங்கள் திரும்பப் பெற்றுக்கொண்டீர்கள். அவைகளுக்குப் பொருந்துமாறு எடுத்துக்காட்டு நான் எடுத்துச் சொன்ன நேரத்தில் அதை ஏற்றுக்கொண்டீர்கள். சில விளக்கங்களுக்கு நன்றி தெரிவித்தீர்கள். அது அப்படியானால் ஒப்புக்கொள்ளுகிறேன் என்றீர்கள். இப்படி ஒவ்வொரு குற்றச் சாட்டுக்கும் நான் விளக்கம் அளித்த நேரத்தில் நீங்கள் அந்த விளக்கங்களிலேயே பலவற்றை ஏற்றுக்கொண்டீர்கள். மறுபடியும் இன்னொரு உறுப்பினர் பேசும்பொழுது அதையே திரும்பப் பேசுகிறார்.

உதாரணத்திற்காக தீ விபத்தினுடைய அறிக்கை ஏன் வெளியிடப்படவில்லை என்பது. இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தின்போதா எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்? எத்தனை நாட்களாக எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள்? அதற்கு எத்தனை முறை இந்த அவையிலே பதில் அளிக்கப்பட்டிருக்கிறது? வழக்கு மன்றத்திலே இது இருக்கிற காரணத்தாலே அந்த அறிக்கை வெளியிடப்படவில்லை என்று அமைச்சரவையின் சார்பில் பலமுறை நான் எடுத்துச் சொல்லியதைக் கேட்ட பிறகு அந்த அறிக்கையை கொண்டு வாருங்கள் என்று கேட்கிறவர்களைப் போல் திருப்பித் திருப்பிப் பேசுவதன் மூலம் எதைச சாதிக்கலாம் என்று கருதுகிறீர்கள்? பொது மக்கள் எண்ணிக்கொள்வார்கள் என்று எண்ணுகிறார்கள். ஏதோ ஒரு அறிக்கை இருக்கிறதாமே, திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் அதை வெளியிட மறுக்கிறதாமே, விநாயகம் கேட்கிறார், கருத்திருமன் கர்ஜனை செய்கிறார், மற்ற உறுப்பினர்களெல்லாம் அதைப்பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள், ஆகவே ஏதோ மூடு மந்திரம் இருக்கிறது என்று மக்கள் எண்ணுவார்கள் என்று எதிர்பார்ப்பீர்களானால் உங்கள் சரக்கு வெளிச் சந்தையில் விலை போகாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே நீங்கள் உலகத்தமிழ் மாநாட்டு கணக்குகளைப் பற்றி திரும்பத் திரும்பப் பேசுகிறீர்கள். உலகத் தமிழ் மாநாட்டு கணக்கு மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு, மூன்று குழுக்கள் அந்த கணக்குகளை அவரவர்கள் நிர்வாகம் செய்து, முறைப்படி ஒப்புக் கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, ஆடிட்டர் மூலமாக அது பரிசீலனை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. தயாரிக்கப்பட்ட பிறகு, அவர் தானே அதை பரிசீலித்தார். இவர் பரிசீலித்தால் என்ன, இன்னொருவர் பரிசீலித்தால் என்ன, என்று கேட்டுக் கொண்டிருப்பது யாரை வைத்துக் கொண்டு பரிசீலிக்க வேண்டுமென்று தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை மறந்து விட்டுப் பேசுகிற பேச்சிலே ஒன்றாகும். நாங்கள் ஏதோ பெட்டிக் கடை வைத்து கணக்கு வைத்திருப்பது போல கணக்குகள்சரிதானா பாருங்கள் என்று பேசுகிறார்கள். ஆங்கிலத்தில் குறிப்பிடுவதானால், "Chartered Accountant" என்கிற யார் வருமான வரிக்கணக்குகளை அங்கீகரிக்கின்ற அதிகாரம் பெற்றிருக்கிறவர்களோ, அப்படிப்பட்டவர்களிடம் கொடுத்து, முழுத் தகவலும் அளித்து, அதைப் பற்றிய விவரங்கள் கொடுத்து, அவையெல்லாம் முறைதான் என்று தெரிவித்தான பிறகு, திரும்பத் திரும்ப உங்கள் கணக்கு எங்கே என்று கேட்பது, ஏதோ நாங்கள் பொதுமக்களிடமிருந்து ஏராளமான பணத்தைப் பெற்றுக் கொண்டு மறைத்து விட்டோம் என்று கருதுவார்களேயானால், அது பொது மக்களுக்கும், எங்களுக்கும் இருக்கும் தொடர்பு பற்றியும், பொது மக்களுடைய மனப்பான்மை என்ன என்பதைப் பற்றியும் அறிந்து கொள்ளவில்லை என்று தான் பொருள். ஏன் நீங்கள் பேசுகிறீர்கள்? உலகத்தமிழ் மாநாடு இந்த நாட்டு மக்களால் மட்டுமல்லாமல் வெளியுலக மக்களாலும் பாராட்டப்பட்டு, தமிழுக்கும் தமிழருக்கும், எதிர்கால வாழ்வு பலன் அளிக்கும் வகையில் இருக்கும் என்றும் மாநாட்டுக்குவந்தவர்கள், வராதவர்களெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் பாராட்டியது மட்டுமல்லாமல், இந்த அரசு ஏற்றுக் கொண்ட பணிக்கு புகழையும், தங்களுடைய கண்ணியமான மரியாதையையும்

நன்றியறிதலையும் பாராட்டுதலையும் தெரிவித்திருக்கிறார்கள். மாநாடு பற்றிய படம் தமிழகத்தில் மட்டில் அல்லாமல், உலகத்தில் எல்லாத் தலை நகரங்களிலும், நியூயார்க்கிலே, வாஷிங்டனிலே, லண்டனிலே பாரிசிலே, ரோம் நகரத்திலே, இன்னும் பல்வேறு நகரங்களிலே காட்டப்பட்டு, வெளி நாட்டுக்காரர்களெல்லாம், இவ்வளவு ஒழுங்கான முறையில் லட்சக்கணக்கான மக்கள், பல்லாயிரக்கணக்கான தாய்மார்கள், கைக் குழந்தைகளோடு தாய்மார்கள், ஊர்வலத்தில் கலந்து கொண்டிருக்கிறார்களே, இவ்வளவு மொழிப்பற்று உங்களுக்கு இருக்கிறதே என்று வியந்து பாராட்டினார்கள் என்னும்போது, அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் புகழ்ச் சின்னமாக அல்லவா இருக்கிறது என்பதைஅறிந்து கொண்டு, பொறாமை உணர்ச்சி தாங்கமுடியாமல், பங்கு கொண்ட சிலர் தவிர மற்றவர்கள் ஒதுங்கியிருந்ததால், பணம் வசூலிக்கப்பட்டு, பாழ்படுத்தி விட்டார்கள் என்று சொல்வார்களானால், கடந்த கால காங்கிரஸ் நிதிகளைப் பற்றிச் சொல்லத் தோன்றுகிறது. திலகர் சுயராச்சிய நிதி தொடங்கி, ஒவ்வொரு நிதியும் பற்றி மோசடி நடந்தது, மோசடி நடந்தது என்று பாரதம் பூராவும் குற்றச்சாட்டு அல்ல, சபித்திருக்கிறது. எந்த நிதி வசூலை குற்றங்குறை காணாமல் நடத்தியிருக்கிறார்கள் என்று காங்கிரஸ் நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

டிக்கட்டுகள், டிக்கட்டுகள் என்கிறார்கள். யார் யாரோ அச்சடித்தார்கள் என்று பேசுகிறார்கள். ஆவடி காங்கிரஸில் கள்ளத்தனமாக அச்சடித்தார்கள் என்று புகார் சொல்லப்பட்டு, நாடு முழுவதும் கை கொட்டிச் சிரிக்கவில்லையா ? இந்த டிக்கட்டை, அந்த டிக்கட்டைப் பாருங்கள் என்று நண்பர் பூவராகன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் ; நான்கு ஐந்து டிக்கட்டுகளையும் எடுத்துக் காட்டினார்கள். அவையெல்லாம் நாலைந்துவகையான காரியங்களுக்காக போடப்பட்ட டிக்கட்டுகள். ஒரே வகைக்காகப் போடவில்லை. அப்படி அவர்கள் எடுத்துக் காட்டும்போது, இந்தத் தரப்பிலிருந்து, வேறு வேறு டிக்கட்டுகளை எடுத்துக் காட்டுகிறார்கள். நிரூபியுங்கள் என்றும் கேட்கிறார்கள். இப்படியே ஒருவர் மீது ஒருவர் குற்றச் சாட்டுகளைச் சாட்டலாம். இதற்கெல்லாம் நீதி விசாரணை வைத்துக்கொள்ள வேண்டும் என்றால், எல்லா நீதி மன்றங்களையும் விட மேலானது பொது மக்கள் நீதி மன்றம் ; அது ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை எச்சரிக்கையோடு, மேல் அதிகாரம் யாருக்கும் இல்லை என்று, அந்த மா மன்றம் கூடுகிறது. அந்த மாமன்றத்தின் தீர்ப்புக்கு, மதிப்பிற்குரிய நண்பர் சுதந்திராக் கட்சி உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் சொன்னதைப் போல நீங்கள் பொது மக்களுடைய வாக்கிற்கு இருக்கும் சக்தியைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதை எண்ணிப் பார்க்கும் போது, உங்கள் மீது கோபத்திற்குப் பதிலாக, பரிதாபம்தான் வருகிறது. உங்களுடைய 20 வருஷ ஆட்சி காலத்தில் நாங்கள் இவ்வளவு குறைகள் சொல்லவில்லை. எதிர்க்கட்சியாக இயங்கிய போதும் பஞ்சாயத்து போர்டுகளில்கூட இடம் கிடைக்காமல் இருந்த நேரத்தில், உங்களைப் போல இவ்வளவு ஆத்திரம் காட்டியதில்லை. எதோ பறி கொடுத்தது போல, பதவியைத் திரும்பப் பெறவேண்டும் என்று நீங்கள் அங்கலாய்ப்பது போல, நாங்கள் அங்கலாய்க்கவில்லை. (குறுக்கீடு) வினயகம் தனிப்பட்ட முறையில் என்னிடம் மிகுந்த மரியாதையும், அன்பும் கொண்டவர்கள் ஆகையினால்தான், அவர்கள் பேசுகிறபோது, கட்சிக்காகச் சொல்லும் வார்த்தைதான் என்பதால் மெல்லிய குரலில், நன்றாக ஆளவில்லையென்றால், "Please step aside" என்று மெதுவாகச் சொன்னார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் மூன்று காரணங்கள் சொல்லலாம் : ஒன்று அவர்களுக்கே பிடிக்காததாக இருக்கலாம்; யாரோ சொல்லச் சொல்லுகிறார்கள் என்று சொல்லுகிறேன் என்பதற்காக இருக்கலாம் ; இன்னொன்று, நாங்கள் சொன்னால் இப்பொழுது விட்டுவிட மாட்டார்கள் என்பதால் மெதுவாகச் சொல்கிறேன் என்று இருக்கலாம் ; மூன்றாவதாக, உள்ளம் என்று ஒன்றிருப்பதால் மரியாதையால் மெதுவாகச் சொன்னதாக இருக்கலாம். ஆனால் நம்முடைய எதிர்கட்சித் தலைவர், கொஞ்சம் துணிவை வரவழைத்துக் கொண்டு, செயலற்ற சர்க்கார், திறமையற்ற சர்க்கார், நேர்மையற்ற சர்க்கார் என்றெல்லாம் சொன்னார்கள். செயலற்ற சர்க்காராக இருந்தால், நேர்மையற்ற சர்க்காராக இருக்க முடியாது, நேர்மையற்ற தன்மை இருக்காது. எதோ செயல் செய்ததால்தான், நேர்மை உள்ளதா இல்லையா என்கிற கேள்வி எழுகிறது. எதோ மூன்று வார்த்தைகளைப் போட்டால், மாலைப்பத்திரிகையில் தலைப் புவரும்போது, " செயலற்ற சர்க்கார் "—ஆகா—"திறமையற்ற சர்க்கார் "—ஒகோ—"நேர்மையற்ற சர்க்கார் "—பேஷ், பேஷ்—என்று நண்பர்கள் பாராட்டுவார்கள் என்று நினைத்திருக்கலாம். ஆனால் தமிழர்கள் பத்திரிகைகளைப் பிரித்துப் பார்க்கும்பொழுது, செயலற்ற சர்க்கார் என்றால், எப்படி திறமையற்ற சர்க்காராக இருக்க முடியும், திறன் இல்லாத சர்க்கார் எப்படி நேர்மையற்ற சர்க்காராக இருக்க முடியும் என்றுதான் கேட்பார்கள். ஆனால், நண்பர் கருத்திருமன் தமிழிலே புலமை பெற்றவர் என்றாலும், அவர்களே ஒப்புக் கொண்டிருப்பது போல, தமிழ் அவர்களுடைய தாய் மொழி அல்ல. கன்னடம் தான் தாய்மொழி என்று பெருமையோடு சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இனியாவது தமிழ்ப் பதங்களை உபயோகிக்கும்போது ஒன்றோடொன்று பொருந்தியிருக்கிறதா என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கிறேன். கறுப்புச் சுண்ணாம்பு, வெள்ளை மஞ்சள், கசக்கும் சர்க்கரை, ஆடாத மயில், போன்ற பொருந்தாத பதங்களைச் சேர்த்துச் சொல்லக்கூடாது. நண்பர் அவர்கள் கம்ப ராமாயணத்தில் புலமை பெற்றவர்கள் என்று நாடு கருதிக் கொண்டு இருக்கிறது. அந்த எண்ணத்தில் மண்ணைப் போட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



இன்னொன்று. ஒரு சர்க்கார் உண்மையிலேயே நேர்மையற்ற சர்க்கார், திறமையற்ற சர்க்கார், நம்பிக்கைக்கு உரிய சர்க்கார் இல்லை, நம்பிக்கை வைக்க வேண்டிய அவசியமில்லாத சர்க்கார் என்பனவற்றையெல்லாம் யோசித்துப் பார்க்க 14 மாதம், 15 மாதம் போதிய காலம்தானா என்பதை நம்முடைய நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதை அறிந்து கொள்ளாமல், அவர்கள் திருக்குறள் பற்றிய புத்தகங்கள் இரண்டு மூன்று வைத்திருக்கிறார்கள். இப்பொழுது இல்லாவிட்டாலும், இதெல்லாம் முடிந்த பிறகு பார்க்கட்டும், அவற்றைப் பிரித்து ; அதிலே, இடம் அறிதல், காலம் அறிதல், வேளை அறிதல், வகை அறிதல் இவைகளெல்லாம் தேவை என்பதை திருவள்ளுவரே குறிப்பிட்டிருக்கிறார்கள். நீங்கள் இடத்தை அறியாமல், 50-க்கு குறைவாக இருப்பதால், எந்த இடத்தில் பேசலாம் என்கிற வகையறியாமல், அளவு அறியாமல், குற்றச் சாட்டுக்கள் சொல்வதில் அளவு இருக்க வேண்டுமே என்பதை எண்ணிப்பார்க்காமல், பேசிக் கொண்டே போனீர்களே தவிர, சொல்லப்பட்ட எதையாகிலும் மறுத்துப் பேசாமல் இருந்திருக்கிறோமா, விளக்கம் கொடுக்காமல் இருந்திருக்கிறோமா என்பதையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மற்றப்படி, ஒவ்வொரு குற்றச் சாட்டையும் எடுத்து ஒவ்வொன்றாக பதில் அளிப்பேன் என்று நண்பர்கள் எண்ணிக் கொண்டு இருந்தால், அவர்களுக்கு எமாற்றம் அளிப்பதற்காக வருந்த வேண்டியிருக்கிறது. இவற்றை வெவ்வேறு குற்றச் சாட்டுகள் என்று நான் கருதவில்லை. வகை பிரித்துப் போட வேண்டும் என்பதற்காக, அது இப்படி அது இப்படி, என்று பட்டியல் கொடுத்திருக்கிறார்களே தவிர, வேறொன்றும் இல்லை. மொத்தத்தில், எங்களுக்கு இருக்கிற நிலையை உங்களால் தாங்க முடியவில்லை, சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆகையால், இந்த அரசின் பேரில் மாசு கற்பிக்க வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது. எடுத்துச் சொல்லப்பட்ட ஒரு குற்றச் சாட்டுக்கும் போதுமான ஆதாரம் இல்லை. நாங்கள் ஒரு வருடத்திற்கு மேலேயே வனவாசம் இருந்து விட்டோம். இனி எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. நீங்கள் எப்படியாகிலும், நாங்கள் வருவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று தனிப்பட்ட முறையில்—நண்பர் என்ற முறையில்—அணுகுவார்களானால், அவர்கள் திரும்பி ஆட்சிப் பீடத்திற்கு வருவதற்கு, மக்கள் அவர்களை மன்னிப்பார்கள் என்ற நம்பிக்கை ஏற்படும் நேரத்தில் நிச்சயமாக வழி செய்து கொடுப்பேன். ஆனால் நீங்கள் சென்று கொண்டிருக்கிற போக்கு—என்னுடைய இடதுசாரி கம்யூனிஸ்ட்

தோழர் சொன்னதைப் போல—நீங்கள் திரும்பி வருவதற்கான காலத்தை வெகுதூரம் தள்ளிக்கொண்டு செல்கிறீர்களே தவிர, திரும்ப அழைத்துக் கொள்ளத் தக்கதாக அமைத்துக் கொள்ளவில்லை.

அடுத்தபடியாக, இடதுசாரி கம்யூனிஸ்ட், சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கள் பத்திரிகைகளில் ஒரு மாதிரியாக எழுதுவதாகவும், பொது மேடைகளில் ஒருமாதிரியாக பேசுவதாகவும், இங்கு ஒருமாதிரியாக பேசுவதாகவும் நண்பர் திரு கோ. பூவராகன் அவர்கள் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டார்கள். எங்களுடைய நட்பைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டுப் பேசுவதில் உள்ளபடியே பலன் இல்லை. எந்தக் கட்சியாக இருந்தாலும், எந்த இடத்தில் குற்றம் குறைகள் இருந்தாலும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவர்கள். நாங்கள் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும், திருத்திக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் எடுத்துக்கூறும் நேரத்தில்கூட அவர்களுக்கு உரிய மரியாதையை தர மறுப்பதில்லை. அவர்களுக்கும் எங்களுக்கும் ஏற்பட்டுவிட்ட ஒப்பந்தத்தின் காரணமாக நாங்கள் எது செய்தாலும் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று எண்ணிக்கொள்ளும் ஏமாளி அல்ல நான். தேர்தல் கூட்டுறவு கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் சொல்கின்ற ஒவ்வொன்றையும் நாங்கள் செய்வோம் என்று அவர்களே எதிர்பார்க்க மாட்டார்கள். ஆகையால்தான், இப்படிச் செய்தால் நன்றாக இருக்கும், அப்படிச் செய்தால் நன்றாக இருக்கும் என்று எடுத்துச் சொல்லுகிறார்கள். நீங்கள் வேண்டுமானால் ஒருவிதத்தில் ஏமாந்திருக்கிறீர்கள். ஓகோ இவர்கள் அவர்களுக்கு விரோதிகள் ஆகிவிட்டார்கள் இந்தத்தடவை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்தால் இவர்கள் நம் பக்கம் வந்து விடுவார்கள் என்று எண்ணி ஏமாறுகிறீர்கள். அவர்கள் யாரோடு சேர்ந்தாலும் சேராமல் போனாலும் ஆண்டவன்மீது ஆணையாக உங்களோடு மட்டும் சேர மாட்டார்கள். (ஆரவாரம்). ஏனென்றால் இந்த அரசினிடத்தில் காண்கின்ற சில குறைகளை விளக்குகின்ற நேரத்தில், " நீங்கள் காங்கிரஸ் பாணியில் போகிறீர்களே " என்று குறை சொல்கிறார்களே தவிர வேறு வழிகளில் போகிறீர்களே என்று சொல்லவில்லை. அவர்களும் இந்த அரசின் குற்றம் குறைகளைச் சொல்கிறார்கள், நாமும் குற்றம் குறைகளைச் சொல்கிறோம். ஆக இருவரும் ஒன்றாகச் சேரலாம் என்று நீங்கள் எண்ணிக்கொண்டிருப்பீர்களானால், முன்னாலே இந்த மன்றத்திலே அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்ன ஒரு கதைதான் நினைவிற்கு வருகிறது. சொந்தக் கட்சிக்காரர்கள், தோழமைக் கட்சிக்காரர்கள் குறைகள் சொல்லுவதற்கும், எதிர்க்கட்சிக்காரர்கள் குறைகள் சொல்லுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. திரு. சி. சுப்பிரமணியம் கூறிய கதை.

" பூனை குட்டி போட்டவுடன் அந்தக் குட்டிகளை தன்னுடைய வாயால் கௌவிக்கொண்டு வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லுமாம். பார்ப்பதற்கு பூனை குட்டியைக் கடிப்பதுபோலத் தோன்றும்." அதேபோல்தான் டாக்டர் ஹாண்டே எங்களிடத்திலுள்ள குறைகளை எடுத்துச் சொல்வது. அது, பூனை தன் குட்டிகளைக் கௌவி எடுத்துக் கொண்டு போவதைப் போன்றது. ஆனால் சில வேளைகளில் டாக்டர் ஹாண்டே அவர்கள் சற்று அழுத்திக் கௌவுகிறார். (சிரிப்பு). இதற்குக் காரணம் கௌவுகின்ற காரியத்தில் அவருக்குப் போதிய பயிற்சி இல்லாததாக இருக்கலாம். (சிரிப்பு.) இடதுசாரி கம்யூனிஸ்ட், வலதுசாரி கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட், பிரஜாசோஷலிஸ்ட் தமிழரசுக் கட்சி ஆக ஒவ்வொரு கட்சிக்கும் நாங்கள் சொல்வதிலே சில பிடிக்காமல் இருக்கின்றன. எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு ம.பொ.சி. அவர்களுக்குக்கூட " தமிழைப் பாடமொழியாக்குவதில் இன்னும் துரிதம் காட்டப்பட வேண்டும். போதிய முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். " என்ற மனக்குறை இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு, தமிழைப் பாடமொழியாக்குவதில் இவ்வளவு துரிதமாகப் போய்விட்டால் ஆங்கிலம் கெட்டுவிடுமே என்ற குறை இருக்கிறது. என்னுடைய நோக்கம் எல்லாம் இவருக்கும் அவருக்கும் இருக்கிற நேர்மாறான கருத்துக்கு இடையில் எந்த அளவுக்குச் சமப்படுத்திச் செல்ல முடியுமோ அந்த அளவுக்குச் சமப்படுத்திச் செல்லக்கூடிய நிலையில் இந்த அரசை நடத்திச் செல்ல வேண்டும் என்பதுதான். பூனை தன் குட்டியை லேசாக



கௌவிக் கொண்டு போவதுபோல் அல்லாமல், பூனை எலிக்குஞ்சைப் பார்த்தால் எப்படிக் கௌவிக்கொள்ளுமோ அப்படி நீங்கள் உடனை தாவுகிறீர்கள். (சிரிப்பு). அப்படியாகிலும் எலிக் குஞ்சாவது கிடைக்கிறதா என்றால் இல்லை. எலிதான் கிடைத்துவிட்டது என்று பூனை தன்னுடைய வாலையே கடித்துக்கொள்வதுபோல் இருக்கிறது உங்களுடைய செய்கை.

அடுத்தபடியாக, இன்றையதினம் தொழில் மந்தம் ஏற்பட்டுவிட்டது என்கிறார்கள். அதற்குப் பொருத்தமான காரியங்களை நான் எடுத்துச் சொன்னதை மறுத்தீர்களா ? மறுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா ? மறுப்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றனவா ? பெருந்தொழில்கள் அத்தனையும் எந்த மாநிலத்திலும் ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில்தான் வருகின்றன என்பதை மறுக்கிறீர்களா ? நீங்கள் நெய்வேலியைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். பெரம்பூர் கோச் பாக்டரியைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். இவைகள் எல்லாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் ஏற்பட்ட தொழில்களாகும்; மத்திய அரசின் மேற்பார்வையில், மத்திய அரசின் பொறுப்பில் அமைக்கப்பட்ட தொழில்களாகும். மாநில அரசு தன்னுடைய சொந்தப் பணத்தைக் கொண்டு நிறுவிய தொழில்களா இவை ? அந்தத் தொழிற்சாலையில் உங்களுக்கும் எனக்கும் ஒரே மாதிரியான உரிமைதானே இருக்கிறது ? அந்தத் தொழிற்சாலையை நிர்வகிக்கும் அதிகாரி, அனுமதி கொடுக்கிறேன் என்று சொன்னால்தான் உள்ளே செல்ல முடியும். தொழிற்சாலையை நிர்வகிக்கும் அதிகாரம் மத்திய அரசைச் சேர்ந்தது. இந்தத் தொழிற்சாலைகளினால் மாநில அரசுக்கு, லாபத்தில் 25 சதவீதம்தான் தரப்படுகிறது. அதுவும் லாபம் கிடைத்தால்தான். இதுவரை நஷ்டக் கணக்குதான் கொடுத்திருக்கிறார்கள். என்றைய தினம்தான் லாபம் கொடுக்கப்போகிறதோ, தெரியவில்லை. நெய்வேலி துவக்கப்பட்ட நேரத்தில் நீங்கள் இருந்திருப்பீர்கள். நாங்கள் இருந்திருந்தால் ஓர் இழப்பை ஏற்படுத்தியிருக்கமாட்டோம். நம்முடைய பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட பழுப்பு நிலக்கரிக்காக ஒரு ராயல்டி கொடுக்க வேண்டும்; லாபம் கிடைப்பினும் நஷ்டம் வரினும், இவ்வளவு தரப்பட வேண்டும் என்று ஒரு ராயல்டி பெற்றிருக்கவேண்டும். வல்லவர்களாகிய காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டை அரசாண்ட காலத்தில் இதைப் பற்றி யோசித்துப் பார்க்காமல், லாபம் வரும்போது 25 சதவீதம் பங்கு கொடுங்கள் என்று ஆரம்பிக்கப்பட்டது. நண்பர் திரு கருத்திருமன் அவர்கள் இதை நகைச்சுவையாகப் பேச முயற்சி செய்தார். அவர்கள் செய்ததெல்லாம் நெய்வேலியில் நிலக்கரி தொழிற்சாலை ஆரம்பித்தது, பெரம்பூரில் இரயில் பெட்டித் தொழிற்சாலை ஆரம்பித்தது தவிர வேறு ஒன்றும் இல்லை. இதை நண்பர் திரு கருத்திருமன் அவர்கள் எதை எதிர்பார்த்துச் சொன்னாரோ, நமக்குத் தெரியாது. அவருடைய கட்சியைச் சார்ந்தவர்களே, " ஓகோ," என்று நகைச்சுவைக்காகச் சொல்லுகிறாரோ என்று பார்த்துவிட்டு மௌனமாகத்தான் இருந்தார்கள். நான் மட்டும்தான் அந்தக் காட்சியை ரசித்தேன், இவரால் எந்த அளவுக்கு நகைச்சுவையாகச் சொல்ல முடியும் என்று. பெரும் தொழில்கள் எல்லாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்தான் ஏற்பட்டன. நான்காவது திட்டம் போட்டு, தொடர முடியாத நிலையில் திட்டம் தோல்வி என்பதை அகில உலகமும் ஒப்புக்கொண்ட பின்னரும், பொருளாதார நிபுணர்கள் ஒப்புக்கொண்ட பின்னரும், திரு காமராஜ் அவர்கள் ஒப்புக்கொண்ட பின்னரும், திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒப்புக்கொண்ட பின்னரும் காங்கிரஸ்காரர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் நாட்டின் செல்வம் குறிப்பிட்ட இடங்களில் போய் வளர்ந்ததே தவிர, ஏழை எளியவர்களுக்குப் போய் சேரவில்லை. இந்தக் கட்டத்தில்தான் மக்களுடைய நம்பிக்கை போய் மக்கள் காங்கிரஸுக்கு வாக்களிக்கவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் திடீர் என்று நிறுத்தப்பட்ட நேரத்தில், அதை நிறுத்த வேண்டுமென்று பெரிய மேதைகள் எல்லாம் சொல்லிய போது, திரு ராஜாஜி அவர்கள் எடுத்துச் சொல்லியபோது,

**Planning is a continuous process and there cannot be a holiday for planning.**

என்றெல்லாம் வாதாடியவர்கள், இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறுத்திவிட்ட பிறகு எப்படி புதிய தொழில்கள் வளரமுடியும் என்று எதிர்பார்க்கிறார்கள்? நீங்கள் அதை நிறுத்தி விட்டு, எங்கே தொழில், எங்கே தொழில் என்று என்னைக் கேட்பது, என்னுடைய கையையும் காலையும் கட்டிவிட்டு, ஓட்டப் பந்தய மைதானத்தில் நீ ஏன் ஓடமாட்டாய் என்று கேட்பதற்குச் சமமாகும். நாங்கள் இன்னின்ன தொழில்களை ஏற்படுத்தினோம், நீங்கள் என்னென்ன தொழில்களை ஆரம்பித்தீர்கள் என்று கேட்பதானால், அதை
பி.ப. 5-30 நான் முன்னாலே அவையிலே எடுத்துச் சொன்னேன், நண்பர்கள் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த 1968 ஜனவரியில் இருந்து மார்ச்சுவரை தனிப்பட்ட முதலாளிகளால் இந்த மாநிலத்தில் தொழில் நடத்துவதற்காகச் செய்து கொள்ளப் பட்ட மனுக்கள் 32 ஆகும். காங்கிரஸ் ஆட்சி நடைபெறுகிற நமது அண்டை மாநிலமான ஆந்திராவில் 12 பேர்கள் மனுச் செய்து கொண்டிருக்கிறார்கள். மைசூர் மாநிலத்தில் 12 பேர்கள் மனுச் செய்து கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்து கொண்டிருக்கிற ஒரு மாநில முதல் அமைச்சர் அவர்கள் கல்கத்தாவுக்கே நேரில் சென்றார். ஒரு வாரம் அங்கே போய்த் தங்கி தொழிலதிபர்களை அழைத்துச் சந்தித்து "நீங்கள் எங்களுடைய மாநிலத்தில் தொழில்களை ஆரம்பிக்க முன்வாருங்கள், உங்களுக்கு வேண்டிய வசதிகளைத் தருகிறோம்" என்று கூவிக் கூவி அழைத்தார்கள். அப்படி அழைக்கப் போவதற்கு முன்னாலே என்னைப் பார்த்தார்கள். நண்பர் என்ற முறையில் நானும் அவரிடம் கேட்டுக்கொண்டேன். "உங்களுக்குப் போதுமான அளவு தொழில்கள் ஏற்பட வாய்ப்புக் கிடைத்து, மிச்சம் இருக்குமானால் எங்கள் மாநிலத்திலும் கூட ஆரம்பிக்கலாம் என்பதாகச் சிபார்சு செய்யுங்கள்" என்று சொன்னேன்.

ஆக, 1968 ஜனவரி மாதத்தில் இருந்து மார்ச்சு மாதத்திற்குள்ளாக தனிப்பட்டவர்களிடம் இருந்து புதிதாக தொழில்கள் ஆரம்பிக்க நமக்கு 32 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன என்றால் இங்கே தொழில் வளர வாய்ப்பில்லையா? அதற்கேற்ற சூழ்நிலையில்லையா? ஏதோ அங்கும் இங்குமாக 10 நாட்களுக்கு தொழிற்சாலை மூடப்பட்டுவிட்டால் தொழில் வளரவில்லை என்று சொல்வதா? அப்படிச் சொல்வதில் பொருள் இல்லை. மாலை 9 மணிக்கு மேலேயோ, ஞாயிற்றுக்கிழமையிலேயோ மவுண்டு ரோடு பக்கம் போனால் ஒருகடைகூடத் திறந்திருக்காது. அதைப் பார்த்துவிட்டு மறுநாள் காலை இங்கே வந்து, "தமிழக அரசு ஆட்சியின் அலங்கோலத்தைப் பாருங்கள். ஒரு கடை கூடத் திறக்கவில்லை. ரோடில் ஈ எறும்பு கூட இல்லை" என்று சொன்னால் அது எவ்வளவு பொருள் அற்றதோ அவ்வளவு பொருளற்றது நமது மாநிலத்திலே தொழில்கள் வளரவில்லை என்பது.

இன்னொன்று சொன்னார்கள், "உங்களிடத்தில் முதலாளிகளுக்கு நம்பிக்கை இல்லை" என்றார்கள். அது ஒருவேளை உண்மையாக இருக்கலாம். எங்களிடத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறதோ, இல்லையோ, உங்களிடத்தில் நம்பிக்கை இருக்கிறது என்பது திரு சங்கரய்யா அவர்கள் சொன்னதுபோல தேர்தலுக்கு அவர்களிடம் இருந்து உங்களுக்குக் கிடைத்திருக்கும் நிதியே சான்று. அப்படியானால் அப்பட்டமாகச் சொல்லுங்கள். எங்களிடத்தில் தான் முதலாளிகளுக்கு நம்பிக்கை இருக்கிறது, நாங்கள் வந்தால்தான் தொழில்கள் பெருகும் என்பதாக. இந்த ஆட்சியை விடுங்கள் என்று எங்களிடத்தில் சொல்வதற்குத் துணிவு இருந்தால் கேளுங்கள். பொருத்தம் இருந்தால் கேளுங்கள். உங்களுக்கும் தொழிற் ஸ்தாபனங்களுக்கும் உள்ள தொடர்பை காலையில் கூட ஒரு உறுப்பினர் எடுத்துச் சொன்னார்கள். இப்போது கூட வியாபார நிறுவனங்களிடம் இருந்து நன்கொடை வாங்குவதைத் தடைசெய்கிற மசோதாவைக்கொண்டு வரலாமா என்று பாராளுமன்றத்தில் யோசிக்கிற போதே காங்கிரசிலேயே மிகவும் பலம் வாய்ந்த ஒரு குழு அதைத் தடுக்கக்கூடாது என்று பேசுகிற போக்கை நாட்டுமக்கள் உன்னிப்பாகக் கவனித்துதான் வருகிறார்கள். ஆகையால் முதலாளிகளுக்கு இந்த





அரசினிடத்தில் நம்பிக்கை இல்லை என்று எடுத்துச் சொல்வது இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்குத் துணை செய்யாது. மாறாக பொது மக்களுக்கு எங்களிடத்தில் ஆர்வம் பெருகும். அக்கறை பிறக்கும். திரு கருத்திருமனே சொல்கிறார், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினிடத்தில் முதலாளிகளுக்கு நம்பிக்கை இல்லையாம், அது உண்மையாகத் தான் இருக்கும். அப்படியானால் முதலாளிகள் ஆதரிக்காத இந்த அரசை நாம் ஆதரிக்கவேண்டும்" என்று பொதுமக்கள் பல்லாயிரக்கணக்காக எங்கள் பக்கம்தான் வந்து சேருவார்கள்.

உண்மையிலேயே இந்த மாநிலத்தில் தொழில்கள் வளருகின்றனவா இல்லையா என்பதைப் பார்க்க இன்னொரு வகையில் உதாரணங்களைப் பார்க்கலாம். குறிப்பாக, 1966-67-ல் இந்த மாநிலத்தில் மின்சாரத் துறையில் ஹைடென்ஷன் கனெக்ஷன் 40 தொழில்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1967-68-ல் 44 தொழில்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது தொழில்கள் வளரவில்லை என்றால் 1966-67-ல் 40 தொழில்களுக்கு வலிவுமிக்க மின்சக்தித் தொடர்பு கொடுத்திருக்க 1967-68-ல் 30 ஆகக் குறைந்துவிட்டதே, 25 ஆகக் குறைந்துவிட்டதே, இதுவே தொழில்கள் வளரவில்லை என்பதற்கு ஆதாரமில்லையா என்று எடுத்துச் சொல்லுங்கள். அப்படிக் குறையவில்லை. மாறாக 44 தொழில்களுக்கு அதிகமாகவே அளிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் மின்சாரத்தை வாங்கி என்ன செய்தார்கள்? அலங்கார பல்புகள் போட்டுக் கொளுத்தினார்களா? இல்லை. தொழில்களுக்கே பயன்படுத்தினார்கள்.

அடுத்து லோ டென்ஷன் கனெக்ஷனைப் பொறுத்தவரையில் 1966-67-ல் 4,253 சிறுதொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டது. அதுவே 1967-68ல் 4,437 இடங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இது தொழில் வளர்ச்சி அடைந்திருப்பதற்கு ஆதாரமா, இல்லை என்பதற்கு ஆதாரமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

மற்றும் 1966-67-ல் இருந்ததைவிட 1967-68-ல் ஹைடென்ஷன் பவர் மூலம் மின்சாரம் எவ்வளவு அதிகமாகச் செலவாயிற்று என்று பார்க்கிறபோது 31·4 கோடி யூனிட் ஆகும். இதைப் பார்க்கிறபோது தொழில் வளர்ச்சி குறைந்துவிட்டது என்று யாரும் சொல்வதற்கு ஆதாரமில்லை. மேலும் மொத்தம் செலவான மின்சார யூனிட்டுகளின் கணக்கையே எடுத்துப் பார்க்கலாம். 1964-65-ல் 1,400 மிலியன் யூனிட். 1965-66-ல் 1,600 மிலியன் யூனிட். 1966-67ல் 1,773 மிலியன் யூனிட். ஆனால் 1967-68-ல் 1,911 மிலியன் யூனிட் என்பதை நீங்கள் கவனத்தில் கொண்டால் தொழில் வளரவில்லை என்று சொல்வது எந்த வகையிலும் பொருத்தமானது அல்ல. நண்பர் கருத்திருமன் அவர்கள் சொல்வார்கள், "எங்களுக்கு எங்கே இந்தப் புள்ளிவிவரங்கள் கிடைக்கின்றன" என்பதாக. அவருக்கும் புள்ளிவிவரங்கள் கிடைக்கின்றன. பலவிடங்களில் இருந்து வருகிற கடிதங்கள், யார் யாரோ அனுப்புகிற புகார்கள், பொதுக் கூட்டத்தில் எடுத்துச்சொல்லப்படுகிற புள்ளிவிவரங்கள் இவற்றை வைத்துக் கொண்டு இங்கே பேசுகிறார்கள். ஆயினும் அவர்கள் இப்போது நான் கொடுத்த புள்ளிவிவரங்களை மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். இவை இன்றையதினம் நாங்கள் தயாரித்தவை அல்ல. 1964-ம் ஆண்டில் இருந்தே தயாரிக்கப்பட்டு வருகிற புள்ளிவிவரங்கள் ஆகும்.

நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தம்முடைய குற்றச்சாட்டில் சொன்னார்கள், இந்த அரசுக்கு நிலையான, தெளிவான ஒரு தொழில் கொள்கை இல்லாததனால்தான் இந்த அவல நிலை ஏற்பட்டது என்று. ஆனால் காங்கிரஸ் கட்சியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒருவரும் எதிர்க் கட்சித் தலைவருக்கே சிறந்த நண்பரும், அவரால் பெரிதும் மதிக்கப்படுகிற ஒருவரும் "திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழில் கொள்கை சரியானதாக இருக்கிறது. இந்த மாநிலத்தின் முன்னேற்றத்திற்குப் பாதகமானதாக நான் உணரவில்லை" என்பதாக 1967-ம் வருடம் ஜூலை மாதம் 26-ம் தேதி அன்று பேசியிருக்கிறார். (திரு. பி. ஜி. கருத்திருமன் : யார்?) நீங்கள் அதைக் கேட்பீர்கள் என்று தெரியும். வேண்டுமென்றேதான் பெயரைச் சொல்லாமல் இருந்தேன். உங்களால் பெரி

தும் மதிக்கத் தக்கவரும், இந்த ராஜ்யத்தின் தொழில் வளர்ச்சிக்கே மிகவும் பாடுபட்டவருமான திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள்தான் சொன்னார்கள். எனக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசின் தொழில் கொள்கையே சரியானதல்ல என்று சொன்னபோது வருத்தமாக இருந்தது. திரு. வெங்கட்ராமன் அவர்கள் சொன்னதைப் பார்த்தவுடன்தான் மன நிம்மதி ஏற்பட்டது. சொல்ல வேண்டியவர் சொல்லிவிட்டார். விவரம் தெரியாதவர் எதைச் சொன்னால் என்ன என்று நினைத்தேன்.

THIRU K. VINAYAKAM: He might have told because of courtesy.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அந்த மரியாதையை நீங்கள் கையாண்டிருந்தால் கூட நஷ்டம் இருக்காது அந்த மரியாதை உணர்ச்சியைக்கூட நீங்கள் பெறவில்லையே என்று வருத்தப்படுகிறேன். தொழில் வளரவில்லை, தொழில் வளரவில்லை என்று சொல்வது இந்த அரசுக்கு கெடுதல் இல்லை. இந்த மாநில தொழில் வளர்ச்சியையே பாதிக்கக்கூடும். பொய்யான தகவல்களை நம்பி—தொழில்களை ஆரம்பிக்க இருக்கிறவர்கள்கூட மலைக்கக்கூடும். ஆகவே உண்மை விவரம் அறிந்து சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் நான் உங்களுடன் வாதாடவில்லை. விவரம் கிடைக்காத நேரத்தில் ஏதாவது சொல்லவேண்டிய நிலைமை உங்களுக்கு இருக்கிறது. அது உள்ளபடியே எனக்கு வருத்தமாக இருக்கிறது.

இந்த நேரத்தில் நான் அதைக் கூட உங்களிடத்தில் சொல்லத் தேவையில்லை. காரணம் உங்களது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திலேயே "அண்ணாத்துரையின் தலைமையில் அமைந்துள்ள இந்த அமைச்சரவையிடத்தில் நம்பிக்கை இல்லை'' என்கிற ஒரு வாசகம் இருக்கிறது. அது ஒரு சமயம் பாராளுமன்ற முறையில் என் பெயரைப் போட்டிருப்பதாகச் சொன்னாலும் நான் வருத்தப்படுகிறேன். நான் தலைமை வகிப்பதனால்தான் இவ்வளவு கெடுதல்களும் இருக்கின்றன. என் கட்சியைச் சார்ந்த வேறு யாராவது தலைமை வகித்தால் சரியாக இருந்திருக்குமோ என்று நினைக்கிறேன். (Thiru K. Vinayakam: That is the regular form.) திரு. கருத்திருமன் அவர்களுக்குத் தெரியும். 1958-ம் ஆண்டு முதுகுளத்தூர் சம்பவத்தை ஒட்டி அப்போதிருந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கை இல்லை என்கிற தீர்மானத்தை வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்தபோது அதில் "திரு. காமராஜ் அவர்கள் தலைமையில்'' என்று குறிப்பிடப்பட்டிருந்ததை நீக்கினால் அந்தத் தீர்மானத்தை நான் ஏற்றுக்கொள்வதாகச் சொன்னேன். அதுதான் அரசியல் கண்ணியம் என்று கருதினேன். உங்களுக்கு அது தேவையில்லை. அவர்களே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள் அண்ணாதுரை தலைமையிலே நடக்கின்ற அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லை என்று. ஆனால் அவர்களே சொல்கிறார்கள், முதலமைச்சர் சொன்னால் ஏற்றுக்கொள்கிறோம், முதலமைச்சர் சரியாகத்தான் செய்வார் முதலமைச்சர் விசாரித்துச் செய்வார், அவர்களிடத்திலே எங்களுக்கு நம்பிக்கையிருக்கிறதென்று. யாரை நீங்கள் நம்பியிருக்கிறீர்களோ அவருடைய தலைமையில் நடந்தால் நன்றாகத்தான் நடக்கும்; ஆனால் அவர்கள் இல்லாமல் வேறு யாரையாவது போட்டு அவருடைய தலைமையில் நடந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்து நீங்கள் அப்படிப் போட்டிருப்பீர்களானால் அது முறையானதல்ல, என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். "நான்'' என்ற வார்த்தையையும், "நான்'' என்ற எண்ணத்தையும் வெகு காலத்திற்கு முன்னதாக இருந்தே நீக்க முயற்சித்திருக்கிறேன். நீங்கள் அண்ணாதுரை என்று குறிப்பிட்டிருப்பதாலே நான் என்று குறிப்பிட வேண்டியிருக்கிறது. என்னிடத்திலும், இந்த அமைச்சரவை மீதும் நம்பிக்கை இல்லை யென்று சொல்கிறீர்கள், ஆனால், நாட்டு மக்களின் நல்ல நம்பிக்கையைப் பெறத்தக்க அளவுக்கு நாங்கள் என்ன என்ன செய்திருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



இந்த வருடத் திட்டத்திற்காக எவ்வளவு பணம் கேட்டோமோ அதை மத்திய அரசு ஏற்று 84·99 கோடி ரூபாய்க்கு மேல் திட்டம் போடக் கூடாது, அதற்குமேல் திட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று அறிவுறுத்தினார்கள். ஆனால், இந்த அரசு "செயலற்ற அரசு", "திறமையற்ற அரசு", 84 கோடியிலிருந்து 70 கோடியாகக் குறைத்துச் செலவிட்டதா என்றால் அதற்கு மாறாக 1968 ஆம் ஆண்டு 92 கோடி ரூபாய்க்கு விரிவடைந்து திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. இது திறமைக்கு எடுத்துக் காட்டாஇல்லையா, இது செயலற்ற தன்மைக்கு எடுத்துக் காட்டா இல்லையா இது நேர்மையா என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக நேர்மையான உள்ளத்தைக் கூட பாழ்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள், நான் எதைச் சொன்னாலும் நீங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள்.

High-yielding variety paddy has been stepped up in 7·98 lakhs acres under Karif as against 3·2 lakhs in the previous year. and to 4 lakhs acres under Rabi as against 1·52 lakhs acres in 1966–67.

இது வளர்ச்சிக்கு அடையாளமா திறமையாக இந்தச் சர்க்கார் பணியாற்றிற்று என்பதற்கு அடையாளமா நேர்மையற்ற, திறமையற்ற என்று அடைமொழிகள் மொழிந்தார்களே அதற்கு எடுத்துக்காட்டா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

In addition an extent of 68,000 acres has also been covered under high-yielding strains of millets against only 52,400 acres in previous year. Further in all 2·25 lakhs acres have been additionally converted from single crop to double crop in the year under review. In particular in Tanjore district alone 2·10 lakhs acres of Samba land havebeen converted into double crop land in 1967–68. Area covered by pesticides and insecticides was increased to 41 lakhs acres against 36 lakhs acres in the previous year. A significant adventure in this field is coverage of a larger area of 1·94 lakhs acres by aerial spraying.

இந்த வளர்ச்சியை நான் குறிப்பிட்டுக் காட்டுவதற்குக் காரணம் எதிர்க் கட்சித் தலைவருக்கு விவசாய வளர்ச்சியிலே நிரம்ப அக்கறை உண்டு பெரிதும் விவசாயத்தையே நம்பி வாழுகின்ற இந்த மாநிலத்தில் விவசாயத் தொழில் 1966–67-ஆம் ஆண்டைவிட 1967–68ஆம் ஆண்டில் இத்தனை வகையான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறபொழுது இந்தக் கருத்தை மனதிலே வைத்துக்கொண்டு இதிலே வளர்ச்சியே இல்லை, செயலே இல்லை என்று பேசுகிறார்கள் என்றால் என்னால் நம்ப முடியவில்லை.

Seven hundred and forty-nine special minor irrigation works have been completed against a target of only 586.

586 என்றுதான் இலக்கம் வைத்திருந்தாலும் 749 சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

Under new well subsidy scheme 14,266 wells were completed as against a target of 10,000.

10 ஆயிரம் என்றுதான் நாம் இலக்கம் வைத்திருந்தாலும் 14,266 என்ற அளவுக்கு ஆழக் கிணறுகள் தோண்டப்பட்டன.

2,000 பில்டர் பாயின்ட் என்று இலக்கம் வைத்திருந்தாலும் திறமையாகப் பணியாற்றியதால் 2,488 தோண்ட முடிந்தது.

1,017 ஆயில் எஞ்சின் பம்ப் செட்டுகளுக்கும் 3,596 எலக்ட்ரிக் மோட்டார்களுக்கும் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

டிராக்டர்கள் 200ஆவது தருவோம் என்று கருதினோம். ஆனால் திறமையாகப் பணியாற்றிய காரணத்தினால் 294 டிராக்டர்கள் தரப்பட்டன.

மீனவர்களுக்குத் தேவையான படகுகள், வலைகள் இவற்றைப் பெறுவதற்காக முதலிலே 40 லட்சம் ரூபாய் செலவழித்தால் போதும் என்றுதான் திட்டமிட்டோம். ஆனுல் அந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கிற வளர்ச்சியின் காரணமாகவும் முன்னேற்றத்தின் காரணமாகவும் 113 லட்சம் ரூபாய் செலவழித்து மொத்தத்திலே 1967-68ஆம் ஆண்டிலே 170 படகுகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. அதைப்போலவே ஒவ்வொரு துறையிலேயும்.

கன்சம்ஷன் ஆப் பவர் 3,400 ஆக இருந்தது 4,000 என்ற அளவுக்கு வளர்ச்சியடைந்தது.

ரூரல் எலக்ட்ரிபிகேஷனுக்காக முதலிலே 6 கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்டிருந்தாலும் 8·19 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு இருக்கிறது.

பஸ்களைத் தேசியமயமாக்குகின்ற திட்டத்தின் அடிப்படையில் 532 புதிய பஸ்கள் இன்றைய தினம் விடப்பட்டிருக்கின்றன.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டாலும் முன்னுலே செலவழித்ததைவிட அதிகக் தொகை செலவழித்து, முன்னுல் எவ்வளவு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்களோ அவற்றைவிட அதிகமான எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கிறுர்கள். கல்லூரிப் படிப்புக்கும் அது பொருந்தும். இப்படிப் புள்ளிவிவரங்களையெல்லாம் நாங்கள் தெளிவாகக் காட்டுகிற நேரத்திலே, அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும் இருந்ததை இழந்துவிட்டதன் காரணமாகவும் எதுவுமே நடக்கவில்லை, நடக்கவில்லை என்று கருதினுல் இந்த அவையிலே உள்ளவர்கள் அதைப்பற்றி சரியானமுறையில் தீர்மானிப்பார்கள் என்பதில் எனக்குத் துளியும் ஐயப்பாடு இல்லை.

சில முறைகேடுகள்பற்றிப் பேசப்பட்டது. அமைச்சர் மாதவன் அவர்களுடைய தொகுதியில், ஆஸ்பத்திரி கட்டுவதற்காகப் பணம் வசூலிக்கப்பட்டதைப் பற்றிக் குறையாக எடுத்துக் காட்டினுர்கள். திரு. மாதவன் தொகுதியாக இருந்தாலும், செய்யப்படுகின்ற காரியம் பொதுமக்களுக்கு நன்மைபுரிகின்ற காரியம், ஆகவே, நிதி திரட்டுவது முறையானது என்ற நீதியைத் தான் இப்பொழுது வலியுறுத்த விரும்புகிறேன். அதற்காக பஞ்சாயத்து யூனியன் பணம் செலவழிக்கப்படலாமா என்று முன்னுலே பேசிய திரு. பூவராகன் அவர்கள் எழுப்பினுர்கள். அரியலூர் கல்லூரிக்கு வசூலித்த பிறகு பணத்தைக் கொடுத்த பிறகு இது முறைதானு என்று கேட்கிறுர். நீங்கள் சுட்டிக்காட்டியதாகிலும் ஏதோ கோவாப்பரேடிவ் அதிகாரி போட்டது. என்னிடத்திலே உள்ள தகவல் சர்க்கார் வெளியிட்ட அறிக்கையே.

செங்கற்பட்டில் கவர்ன்மெண்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடல் கட்டுவதற்காக 1955-56-ல் கோவாப்பரேட்டிவ் ஹோல்சேல் ஸ்டோரில் நிகரலாபத்தில் இருந்து ரூ. 3,42,388 ஒதுக்க வேண்டுமென்று ஜி.ஒ. நம்பர் 51, டிப்பார்ட்மெண்ட் ஆப் இண்டஸ்ட்ரிஸ் என்பதிலேதெளிவாகக் குறிப்பிடபிட்டிருக்கிறது. இதை நாங்கள் குறை சொல்லவில்லை. காஞ்சிபுரம் என்பதற்காகக் குறைசொல்லவில்லை என்று சொல்லவில்லை. மருத்துவ மனைக்காக அந்தப் பணம் செலவாகிறது என்பதாலே அதிலே முறைகேடு இருப்பதாகச் சொல்லவில்லை. பக்தவத்சலம் கல்வி ட்ரஸ்ட் என்று ஒன்று இருக்கிறது. நண்பர் மாதவன் அவர்களுடைய முயற்சியில் ஆஸ்பத்திரி கட்டப்படுவதாகச் சொன்னுர்கள். அப்படிப்பட்ட டிரஸ்ட் போர்டு எதுவும் இல்லை. மாதவன் தலைவராகவும், திருமதி மாதவன் துணைத் தலைவராகவும் போடப்பட்ட டிரஸ்ட் போர்ட் ஒன்றும் இல்லை. ஆனுல் பக்தவத்சலம் டிரஸ்ட் இருக்கிறது. அதிலே யார் யார் இருக்கிறுர்கள் என்பதை—எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவரைப் பற்றி நானே சொல்லக் கூச்சமாக இருக்கிறது—நீங்களே எண்ணிப் பார்த்துக் கொள்வீர்களாஞல் அந்த டிரஸ்ட் போர்டு எந்த முறையில் அமைந்திருக்கிறது என்பது தெரியும். எந்த முறையில் அமைந்திருந்தாலும் செங்கற்பட்டு மாவட்ட சப்ளை அண்டு மார்க்கெட்டிங் சொஸைடியில் இருந்து 1957-58-ம் ஆண்டில் நிகர



லாபத்தில் இருந்து ரூ. 23,153 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கும் சர்க்கார் உத்தரவு இருக்கிறது. அதைப் போலவே காஞ்சிபுரத்தில் பக்தவத்சலம் பாலிடெக்னிக்குக்காக டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் சப்ளை அண்டு மார்க்கெட்டிங் சொஸைட்டியில் இருந்து 1958-59-ம் ஆண்டில் 22,556 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பக்தவத்சலம் கல்வி டிரஸ்டுக்கு காஞ்சிபுரத்தில் பாலிடெக்னிக் கட்ட, நில ஆர்ஜிதம் செய்ய 1960-61-ல் ரூ. 20,733 ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கும் சர்க்கார் உத்தரவு இருக்கிறது. 1965-66-ல் ரூ. 5,34,590 கூட்டுறவு ஸ்தாபனங்களில் இருந்து அரசாங்க உத்தரவினுல் பொதுநிதியிலிருந்து ஜவான் ஃபண்டுக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

'என் பெயரால் உள்ள மலருக்கும், கலைஞர் கருணுநிதி பெயரால் வந்த மலருக்கும் விளம்பரம் கொடுக்கப்பட்டுள்ளது, நடைபெருதது நடந்துவிட்டது, அதிர்ச்சி தரத்தக்க அக்கிரமம் நடந்து விட்டது என்று நண்பர் பூவராகன் அவர்கள் பதறினுர்கள். ஆனுல் அன்று பக்தவத்சலம் மலர் என்று வெளியிட்டார்களே, அதற்கும் கூட்டுறவுத் துறையிலே இருந்து விளம்பரம் தரப்பட்டிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? நீங்கள் செய்தால் அவ்வளவும் நியாயம், அதே முறையில் நாங்கள் செய்தால் அவ்வளவும் அநியாயம். காரணம் என்னவென்றுல் 'செய்கிற இடத்தில் இருந்து நாம் போய்விட்டோமே' என்ற வருத்தந்தானே தவிர, செய்யப்பட்டிருக்கிற காரியங்கள் எல்லாம் தவறு என்று புலப்படவில்லை.

அதைப் போலவே உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றிப் பல கணக்குகளைச் சொன்னுர்கள். அந்தக் கணக்குகள் எல்லாம் முறையான கணக்குகள், ஆடிட் செய்யப்பட்ட கணக்குகள். திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார் கணக்கை வெளியிட்டார்கள். திரு. பெருமாள் முதலியாரும் கணக்கை வெளியிட்டார்கள். காலையில் திரு. பூவராகன் அவர்கள் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளிடத்தில் இருந்து வாங்கிய அந்தப் பணத்திற்குக் கணக்குகள் என்னவாயிற்று என்று கேட்டார்கள். 50 லட்சம் ரூபாய் இருக்குமென்று சொன்னுர்கள். குத்து மதிப்பாகப் பார்க்கும்போது அப்படி தான் இருக்கும். தனக்குப் பிடித்தமான பெண்ணை ஒரு வாலிபன் பார்க்கின்றபோது 'ரம்பை போல் இருக்கிறுள்' என்று சொல்லுவான். யார் பார்த்தார்கள் அரம்பையை? அதைப் போலவே நமக்குப் பிடிக்காதவர்களாக இருக்கும்போது அது இருக்கும் 50 லட்சம் என்று சொல்லலாம். இரண்டு நாள் பொறுத்து அது ஐந்து கோடியாகும். கற்பனைக்கு எல்லை இல்லை. அதிலும் புதிதாகக் கற்பனைத் திறத்தில் இறங்குகிறவர்கள் அதிகமாகக் கற்பனையில் நாட்டம் செலுத்துவார்கள். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளிடத்தில் பாட்ஜ் விற்றதில் கிடைத்த பணமும் சார்ட்டர்டு அக்கவுண்டண்டினுல் பரிசீலிக்கப்பட்டு ஜூலை மாதம் 25-ம் தேதி தரப்பட்டிருக்கிறது. கல்வியமைச்சர் கூட அதையும் பத்திரிகையிலே வெளியிட வேண்டுமென்று சொன்னுர்கள். நான், 'இல்லை, இல்லை—நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப் போகிறுர்கள்—நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் போகிறுர்கள் என்பது எனக்குத் தெரியும். எனக்கும் சில நண்பர்கள் காங்கிரசில் இருக்கிறுர்கள்—அவர்கள் பேசட்டும், பேசுகிற நேரத்திலே தரலாம் என்று சொன்னேன். ஆடிட்டர் அத்தாட்சி பெற்று ஜூலை மாதம் 25-ம் தேதி அளிக்கப்பட்டது. அதிலே இருக்கின்ற விவரம்—பாட்ஜுகள் விற்றுக் கிடைத்த பணம் ரூ. 6,95,707·50 காசு, பல்வேறு வகையான வரவுகள் ரூ. 2,707 01 காசு, ஆக மொத்தம் ரூ. 6,98,414·51 காசு. இதற்கு விவரங்கள்—பிரின்ட்டிங் சார்ஜஸ் ரூ. 42,693.50 காசு, அட்வான்ஸ் டு ஸ்கல்ப்டர் ரூ. 12,500, கொய்னு ரிலிப் பண்ட் ரூ 15,000, (டாக்டர் திரிகுணசென் அவர்கள் தெரிவித்த விருப்பத்தின் பேரில் கொடுக்கப்பட்டது) மிஸ்ஸலேனியஸ் எக்ஸ்பெண்டிசர் ரூ 203·50 காசு, காஸ்ட் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பெடஸ்டல் ரூ, 16,100, பாங்கிங் சார்ஜஸ் ரூ. 437, பாலன்ஸ் இன் பாங்க் இன் பிக்ஸட் டெபாசிட் ரூ. 5,75,000. பாலன்ஸ் இன் பாங்க் இன் கரண்ட் அக்கவுண்ட் ரூ. 32,818, ரெமிட்டன்ஸ் இன் டிரான்சிட் ரூ. 3,601. ஆக மொத்தம் ரூ. 6,98,414.51 காசு,

ஆடிட்டர் பார்த்து ஒப்புதல் அளித்து இருப்பதில் மொத்த பாட்ஜுகளுடைய மதிப்பு ரூ. 7,75,000. அதிலே விற்றது ரூ. 6,25,000. மற்ற பாட்ஜுகள் முறையாகப் பார்க்கப்பட்டு அவையெல்லாம் அதிகாரிகள் முன்னிலையிலே அளிக்கப்பட்டன.

நான் இப்போது சொல்ல விரும்புவது எல்லாம் உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் கிடைத்த பணத்தில் 9 லட்சம் ரூபாய் திருக்குறள் ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆறு லட்சம் ரூபாய்க்குமேல் கையிருப்பு இருக்கிறது. மூன்று லட்சம் ரூபாய் அளவுக்கு மலருக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இது திரும்ப வரக்கூடிய பணம். இவ்வளவு பணம் உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் திரட்டப்பட்டு 9 லட்சம் ரூபாய் திருக்குறள் ஆராய்ச்சிக்காக மூன்று பல்கலைக் கழகங்களுக்குக் கொடுத்திருக்கிறோமே—ஒரு நல்ல வார்த்தை, ஒரு சிறு பாராட்டுதல், ஒரு சிறு மகிழ்ச்சிக் குறிப்பு உங்களால் தர முடிந்ததா? நீங்களே நடத்தியதாகப் பெருமை கொண்டீர்களே—முன்னாலே கோலாலம்பூரிலே இதே போன்ற மாநாட்டில் மிச்சப்படுத்திய தொகையில் எந்தத் தமிழ் ஆராய்ச்சிக்காக எவ்வளவு பணம் தரப்பட்டது? நாங்கள் தலையிட்டு நடத்த ஆரம்பித்ததால் 9 லட்சம் ரூபாய் திருக்குறள் ஆராய்ச்சிக்குக் கொடுக்க முடிந்தது. ஆறு லட்சம் ரூபாய்க்கு மேல் தமிழ் வளர்ச்சிக்காகச் செலவழிக்க பணம் பாங்கியில் போடப்பட்டிருக்கிறது. மலர் விற்று வருகிற அந்தப் பணமும் வரும். பணத்தை வசூலித்து செட்டாக நிர்வாகம் செய்து அதை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்திய காரணத்தால் எங்கள் மீது நம்பிக்கை இல்லையென்று கூறுகிறீர்களா?

மாவட்ட கலெக்டர் வசூலித்த நிதியைப் பற்றிப் பூவராகன் அவர்கள் சொன்னார்கள. அதைப் பற்றி விசாரிக்க நானே செல்ல வேண்டுமென்றார். நான் என்னுடன் கூட அவரையும் அழைத்தேன். நான் வரவில்லை, நீங்களே போய் வரலாம் என்று சொன்னார். அவருக்கு வேறு வேலை இருக்கிறதென்று கருதுகிறேன. எனக்கும் சில வேலைகள் இருக்குமென்பது தெரியும். நான் என்னுடைய வேலையையெல்லாம் விட்டுவிட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு நாட்கள் போகலாம் என்றேன். அவர் தன்னுடைய வேலை காரணமாக வரமாட்டார். கார்ப்பரேஷன் தேர்தலுக்கு அவர்தான் காண்டிடேட்ஸ் பொறுக்குகிறார் என்று கருதுகிறேன். நல்லவர்களாகப் பார்த்துப் பொறுக்கட்டும்.

ஆனால், இந்த மாவட்ட கலெக்டர்கள் வசூலிக்கின்ற நிதி அந்த மாவட்டத்தினுடைய டெவலப்மெண்ட் ஃபண்டில் இருக்கிறது. அதிலே இருந்து நாங்கள் எந்த அளவுக்குப் பெற்றோம், எந்த எந்த இடத்தில் பெறவில்லை என்பதை இந்த அவையிலே தெரிவித்திருக்கிறோம். இது நாங்கள் வெளியிட்ட சரிபார்க்கப்பட்ட கணக்கிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் இருந்து நாங்கள் பணம் பெறவில்லை. தஞ்சை மாவட்டத்தில் இருந்து பணம் கொடுப்பதாகச் சொன்னார்கள். நாங்கள் பெற்றுக்கொள்ளவில்லை. அவையெல்லாம் அந்தந்த மாவட்ட வளர்ச்சிக்காக அந்தந்த மாவட்ட கலெக்டரிடத்திலேயே இருக்கின்றன. அந்தந்த மாவட்டத்தின் டெவலப்மெண்ட் கவுன்சில் கூடுகிறபோது இந்தப் பணத்தை எப்படி எப்படிச் செலவழிக்கப் போகிறீர்கள் என்று கலெக்டரிடம் கேட்கிற உரிமை டெவலப்மெண்ட் கவுன்சிலில் இருக்கிற உறுப்பினர்களுக்கெல்லாம் உண்டு. கோவை மாவட்டத்தில் வசூலான பணத்தில் இருந்துதான் கருத்திருமன் அவர்கள் கம்பர் சிலை பண்ணக் கூட பணம் பெற்றார்கள், டெவலப்மெண்ட் ஃபண்டில் இருந்துதான் பணம் அதற்குத் தரப்பட்டிருக்கிறது.

மாலை 6-00 ஆகவே, அங்கெல்லாம் வசூலித்ததை எல்லாம் கூட்டிப் பார்த்தால் அது பல கோடி ரூபாய் இருக்கும் என்றால் எங்களிடம் வந்த பணத்திற்குக் கணக்கு சொல்லும்போது அதை நீங்கள் கவனித்துப் பார்க்க வேண்டுமே தவிர எல்லாவற்றையும் படித்துப் பார்த்தால் இரண்டு கோடி அல்லது மூன்று கோடி ரூபாய் இருக்கும் என்று சொல்வது ஆறு ஏழு வயது பள்ளிச் சிறுவன் வானத்தை அண்ணாந்து பார்த்து கோடிக் கணக்கான நட்சத்திரம் இருக்கும் என்று சொல்லிக் கொண்டிருப்பதற்





கொப்பாக நீங்களும் சொல்லிக் கொண்டிருப்பீர்களானால் நீங்கள் அதே பருவத்தில் இருக்கவேண்டாம், வளர்ந்த பருவத்திற்கு வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். முறையான கணக்குகள் தரப்பட்ட பிறகும் திருப்பித் திருப்பி அதில் ஒழுங்கீனங்கள் இருக்கின்றன, அதில் முறைகேடுகள் இருக்கின்றன என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பதன் மூலம் நீங்கள் எதைச் சாதிக்கலாம் என்று கருதுகிறீர்கள்? மக்கள் நம்புவார்கள் என்று கருதுகிறீர்களா? அதனால்தான் கேட்டேன், இதைச் சொன்னீர்களே தென் சென்னை மக்கள் நம்பினார்களா? சங்கரியில் சொன்னீர்களே, அங்குள்ள மக்கள் நம்பினார்களா? தென்காசியில் சொன்னீர்களே அங்குள்ள மக்கள் நம்பினார்களா? என்று தென்காசியில் ஒரு படி மேலே போய் பெண்கள் வீதியில் நடமாட முடியவில்லை என்றார்கள். அங்கு 85 சதவிகிதம் மக்கள் வாக்களித்தனர், பெண்களும் வந்து வாக்களித்தனர்.

நான் கேள்விப்பட்டேன்—காங்கிரஸில் உள்ள ஒரு பெண் பேச்சாளர், வீதியில் பெண்கள் நடமாட முடியவில்லை என்று சொன்னது மட்டுமல்ல, தொடையைத் தட்டி அறைகூவல் விட்டார்கள், வரட்டும் யாராவது இருந்தால் என்று. அவர்களுக்கு தமிழ்நாடு இடம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. பெண்கள் நடமாடவே முடியவில்லை என்று நீங்கள் சொன்னதை எப்படி தென்காசி மக்கள் சகித்துக் கொள்வார்கள்? (ஆரவாரம்) நான் அப்படிச் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். நீ அதைப் பார்த்தாயா என்று கேட்காதீர்கள். அந்தக் கோரமான காட்சியைப் பார்க்கும் நிலையில் நான் இல்லை. (ஆரவாரம்.) நானே பல கதைகள் எழுதியிருக்கிறேன். பல கதைகள் படித்திருக்கிறேன். தொடையைத் தட்டிய பெண்ணைப் பற்றி நான் கதை கூட எழுதினதில்லை. எந்தக் கதையிலும் படித்ததும் இல்லை. அவர்கள் தொடை வலியுள்ள தொடையாக இருக்கலாம் (ஆரவாரம்). அதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. பெண்கள் நடமாடவே முடியவில்லை என்று நீங்கள் சொன்னதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தான் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, நீங்கள் எடுத்துக் காட்டியுள்ள குற்றச்சாட்டுகள் பொய்த்துப் போன குற்றச்சாட்டுகள், நிரூபிக்கமுடியாத குற்றச்சாட்டுகள் என்ற முறையில் அவைகளை இந்த அவை நிராகரிக்கும் என்பதில் எனக்கு எந்தவித ஐயப்பாடும் இல்லை. முதல் தேதி அன்று 600 பேர்கள் மண்டையில் அடிபட்டார்கள் என்று சொன்னார்கள். 300 என்பது 500 ஆகி, 500 என்பது 600 ஆகி 600 பேர்கள் மண்டையில் அடிபட்டார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அதற்கான முழுத் தகவல்களையும் நான் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதைத் தருவதற்கு முன்னால் விளக்கம் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். 300 பேர்கள் அல்ல, மூன்று பேர்கள் அடிபட்டிருந்தாலும் அதற்காக நான் வருத்தப்படுகிறேன. அடிபட்டவர்களின் தொகை அதிகமானால்தான் வருத்தப்படவேண்டும், ஓரிருவர் அடிபட்டால் வருத்தப்படவேண்டாம் என்று எண்ணத்தக்க நிலை எங்களுக்கு இல்லை. காரணம் அடிப்பட்டவர்களின் பட்டியலில் நாங்களும் இருக்கிறோம். நாங்களும் அடிபட்டிருக்கிறோம். ஜவஹர்லால் நேரு அவர்கள இங்கு வந்திருந்த நேரத்தில் கோட்டை ரெயில்வே நிலையத்தில் கருப்புக் கொடி காட்டியதற்கு சென்ற நேரத்தில் ஒரு பக்கத்தில் முள் வேலி, இன்னொரு பக்கத்தில் ரெயில்வே ஓரமாக போடப்பட்ட மதில் சுவர். இந்த இரண்டிற்கும் இடையில் ஓட முடியாத நிலையில் துரத்தித் துரத்தி எங்கள் கழகத் தோழர்கள் தாக்கப்பட்டார்கள். அவர்கள் முள்வேலியில் உருட்டித் தள்ளப்பட்டார்கள். நீங்கள் கேட்டால் நம்பமாட்டீர்கள் என்று கருதுகிறேன். அவர்களுக்கு மருத்துவ மனையில் இடம் கிடைக்கவில்லை. தனிப்பட்ட மருத்துவர்கள் கூட வர மறுத்தார்கள். இன்றையதினம் பெரிய நிலையில் இருக்கிற ஒரு தமிழ் பெரும் புலவர் கூட உருட்டி உருட்டித் தாக்கப்பட்டார். அவர்களுக்குக் கூட மருத்துவ மனையில் இடம் தர மறுத்துவிட்டார்கள். அப்போது எங்கள் கழகம் தங்கசாலை தெருவில்

ஒரு வாடகைக் கட்டிடத்தில் இருந்தது. நாங்கள் தேடித்தேடிப் பிடித்து ஒரு மருத்துவரை அழைத்து வந்து அவர்களுக்கு முதல் சிகிச்சை அளிக்கும்படிச் சொல்லிவிட்டு நாங்கள் கூட இருந்து கதறினோம். அந்த அனுபவம் இருப்பதால்தான் சொல்கிறேன், யார் அடிப்பட்டாலும் ஈவு இரக்கமின்றி அடிபடட்டுமே என்று எண்ணக் கூடியவர்கள் அல்ல நாங்கள். எதைச் சொன்னாலும் கொஞ்சம் பொருத்தம் இருக்கவேண்டும். 600 பேர்கள் மண்டையில் அடிப்பட்டார்கள் என்று சொன்னார்கள். ஆஸ்பத்திரி ரிக்கார்ட்படி அனுமதிக்கப்பட்டவர்களில், 19 பேர்கள் "க்ரீவஸ் இன்ஜரி" என்று பதிவாகியிருக்கிறது. மற்ற பெரும்பாலானவர்கள் "ஸிம்பிள் இன்ஜரி அல்லது மல்டிபில் இன்ஜரி" என்று பதிவாகியிருக்கிறதே தவிர நீங்கள் சொல்கிறபடி 300 பேர்கள் மண்டையில் அடிப்பட்டார்கள் என்பதல்ல. 19 பேர்களுக்குத்தான் "கிரீவஸ் இன்ஜரி" என்றிருக்கிறது. தேதிவாரியாகக் கூட மருத்துவ மனையிலிருந்து தகவல் பெற்றிருக்கிறேன். முதல் நாள் எவ்வளவு பேர்கள் அனுமதிக்கப்பட்டார்கள், மறு நாள் எவ்வளவு பேர்கள் வீட்டிற்குச் சென்றார்கள் என்றெல்லாம் 22-ம் தேதி வரையிலுள்ள தகவல் என்னிடம் இருக்கிறது. 22-ம் தேதி அன்று ஆறு பேர்கள் மருத்துவ மனையில் இன்னமும் இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தது. 22-ம் தேதியிலிருந்து இன்று தேதி 28 ஆகிறது, அந்த ஆறு பேர்களில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், எவ்வளவு பேர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்கள் என்று தெரியாது. ஆகவே மிகப் பெரிய பயங்கரம் நடந்து விட்டதைப் போல் நீங்கள் சித்தரிப்பது தேவையற்றது. முதல் தேதி அன்று அனுமதிக்கப்பட்டவர்கள் 158 பேர்கள். 5-ம் தேதி 96 பேர்கள், 6-ம் தேதி 72 பேர்கள், 7-ம் தேதி 60 பேர்கள், 8-ம் தேதி 30 பேர்கள், 9-ம் தேதி 29 பேர்கள், 10-ம் தேதி 8 பேர்கள், 11-ம் தேதி 8 பேர்கள், 12-ம் தேதி 8 பேர்கள், 18-ம் தேதி 7 பேர்கள், 20-ம் தேதி 6 பேர்கள் என்ற வகையில் ஸிம்பிள் இன்ஜரி என்ற காரணத்தினால் உடனுக்குடன் சிகிச்சை பெற்று அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். தடி அடி நடந்தது நியாயம்தான், அடித்தால் என்ன என்ற முறையில் நான் பேசவில்லை. ஆனால் 600 பேர்கள் மண்டையில் அடிபட்டார்கள் என்று பயங்கரமாகச் சித்தரித்து, இந்த ஆட்சி எற்பட்ட பிறகு போலீஸ்காரர்கள் ஈவு இரக்கமற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள் என்று சித்தரிப்பது சரியல்ல. அடிபட்ட அதிகாரிகளைப் பற்றிய புள்ளி விவரங்களை தொழில் அமைச்சர் அவர்கள் தருகிறார்கள்; இப்போது அவர்களுக்கு அதிகாரிகளைப் பற்றி அக்கறை இருக்காது. ஆகவே, அதைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. (திரு. டி. எஸ். ஆதிமூலம் : சொல்லுங்கள்). டெப்டி கமிஷனர் இருவர், அஸிஸ்டென்ட் கமிஷனர் இருவர், இன்ஸ்பெக்டர் ஒருவர், ரிசர்வ் இன்ஸ்பெக்டர் ஒருவர், சப் இன்ஸ்பெக்டர்கள் மூன்று பேர்கள், ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர், ஜமேதார் ஒருவர், போலீஸ் கான்ஸ்டபில்கள் 68 பேர்கள், அவர்களில் 53. பேர்கள் எஸ்.ஏ.பி. 15 பேர்கள் உள்ளூர் போலீஸார். போலீஸ்காரர்கள் அடிபட்டால் பரவாயில்லை, காங்கிரஸ் தொண்டர்கள்தான் அடிபடக்கூடாது. நான் அவர்களுக்காக வாதாட விரும்புகிறேன். போலீஸார் கலவரம் நடக்கும்போது திருப்பித் தாக்குதல் ஏற்படும் என்று எதிர்பார்த்து நடக்கக் கூடியவர்கள். ஆனால் 600 பேர்கள் மண்டையில் அடிப்பட்டார்கள் என்று வர்ணிப்பது எதற்காக ? இனிமேல் கூட நீங்கள் போய் உங்கள் தொண்டர்களிடம் சொல்லி கொஞ்சம் தலையைக் காட்டு, கொஞ்சம் கல்லால் கீறுகிறேன் என்று கீறி மாலை நேரக் கூட்டத்தில் இதோ பாருங்கள் மண்டையில் காயம் என்று காட்டக் கூடச் செய்வீர்கள். அவர்கள் கற்பனைத் திறனில் மிகுந்துவிட்டார்கள் இந்த $1\frac{1}{2}$ ஆண்டு காலமாக. அதற்காக என் பாராட்டுதல்கள். ஆனால் புள்ளிவிவரங்களை நான் நம்புவேனே தவிர இவர்கள் சித்தரித்துக் காட்டுகிற கற்பனைகளை நான் நம்பத் தயாராயில்லை. அதிலும் கற்பனைத் திறன் எந்தளவிற்குச் செல்கிறது என்றால் போலீஸ் உடையில் வேறு யாரோ வந்து தாக்கினார்கள் என்கிறார்கள். எந்த ஈனத்தனமான சர்க்கார் நடந்தாலும்கூட இந்த கோரமான நிலை நிச்சயம் எற்படாது. போலீஸாரைப்பற்றி என்ன கருதிக் கொண்டிருக்கிறீர்கள் ? யாராவது போலீஸ் உடையில் வந்துவிட்டால் அவர்கள் சும்மா விட்டுவிடுவார்களா ? போலீஸ் உடையை வேறு ஒருவர் போட்டிருந்தால் அது சட்டப்படி குற்றம் என்பது வழக்கறிஞர்களுக்கு தெரிந்திருக்கும். நான்கு பேர்களைக் காட்டி





அவர்கள் போட்டுக்கொண்டிருந்தார்கள்,இவர்கள் போட்டுக்கொண்டிருந்தார்கள் என்று கூறி உடனே நீதிபதியை வரவழைத்து விசாரிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். போன வாரம்தான் மாணவர்கள் விவசாயக் கல்லூரியை இந்தப் பக்கத்தில் வைக்கவேண்டாம், இன்னொரு பக்கத்தில் வைக்கவேண்டும் என்று நடந்த கிளர்ச்சியில் மகாராஷ்டிரத்தில் எழு பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அங்கு நடந்ததை என் சொல்லவில்லை ? என் கூச்சப்படுகிறீர்கள் ? தைரியமாக நீங்கள் சொல்லவேண்டும். எங்கள் கட்சி அரசாளுகிற இடத்தில் இப்படிப்பட்ட கோரங்கள் கிடையாது, உங்கள் ஆட்சியில்தான் இவை இருக்கின்றன என்று சொல்வதற்கு முடியாமல் பழைய விஷயங்களைக் கிளறுகிறீர்கள். சென்னையை விட்டு வெளியே போகாதே என்று என் சொல்கிறீர்கள் ? கொஞ்சம் சந்தேகப்பட்ட கணவன் கதவைப் பூட்டிக்கொண்டு போவது மட்டுமல்லாமல் ஜன்னல்களைக்கூட சாத்திவிடுவான். உங்கள் கட்சி விஷயத்தில் என் உங்களுக்கு அவ்வளவு சந்தேகம் ? தைரியமாகச் சொல்லுங்களேன். இங்குதான் துப்பாக்கிச் சூடு நடக்கிறதே தவிர, நாங்கள் ஆளும் ஆந்திராவிலே நடக்கிறதா, நாங்கள் ஆளும் மகாராஷ்டிரத்திலே நடக்கிறதா, நாங்கள் ஆளும் மைசூர் மாநிலத்திலே நடக்கிறதா என்று கேளுங்களேன். என் அந்தத் துணிவு இல்லை, தூய்மை இல்லை ? மகாராஷ்டிரத்தில் சமீபத்தில் 7 பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள், இராணுவம் வரவழைக்கப்பட்டது, ஊரடங்கு சட்டம் போடப்பட்டது. இவ்வளவுக்கும் சேர்த்து அங்கு நீதி விசாரணை நடப்பது யாராலே ? ஒரு மாஜிஸ்ட்ரேட்டினாலே. ஆனால், நீங்கள் இங்கே இருக்கிற நீதிபதி வந்தால் கூட போதாது, வெளி மாநிலத்திலிருந்து வரவேண்டுமென்று சொல்கிறீர்கள். உங்களுக்குப் போலீஸ் அங்கிருந்து வரவேண்டும். நீதிபதி வெளி மாநிலத்திலிருந்து வரவேண்டும். இன்னும் அரசாள்வதற்குக் கூட அங்கிருந்து வரவேண்டும், அதுதானே உங்கள் எண்ணம், அவ்வாறு வருவதால் எந்த வகையிலும் எங்களுக்கு நஷ்டமில்லை. வெளியிலிருந்து வரவழைத்துப் பாருங்களேன். மேற்கு வங்காளத்தில் பார்த்தீர்கள். அங்கு தேர்வு முடிவு வரட்டும், என்ன முடிவு என்பதை மேற்கு வங்காளத்திலுள்ளவர்கள் காட்ட இருக்கிறார்கள். இந்த நீதிபதி வேண்டாம், அந்த நீதிபதி வேண்டும், இங்குள்ளவர்கள் வேண்டாம், அங்குள்ளவர்கள்தான் வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இந்த அரசாங்கத்தைப் பற்றி நீங்கள் என்னதான் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் ? நீங்கள் சொல்வதையெல்லாம் நிறைவேற்றத்தான் நாங்கள் இருக்கிறோம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா ? துளியும் இல்லை. எங்கள் உள்ளத்திற்கு எது சரி என்று படுகிறதோ, நாட்டு மக்களுக்கு எது தேவை என்று படுகிறதோ அதைச் செய்ய இருக்கிறோம். அதில் தவறு என்றால் பொதுமக்கள் எங்களைக் கண்டிப்பார்கள். எனவே, நாங்கள் பகைவனிடத்தில் பஞ்சாங்கம் பார்க்க மாட்டோம், பகைவனிடத்தில் பஞ்சாங்கம் பார்த்தால் அவன் சொல்வான், அடுத்த வியாழக்கிழமைக்குள் நீங்கள் மாண்டு விடுவீர்கள் என்று. நல்லதற்கா அவன் சொல்வான் ? அதைப்போல் நாங்கள் இவ்வாறு நடக்க வேண்டுமென்று நீங்கள் சொல்வது இருக்கிறது. மகாராஷ்டிரத்திலே மாஜிஸ்டிரேட்டை நீதி விசாரணைக்கு நியமித்தால் அதில் திருப்திப்படுவீர்கள். ஆனால் இங்கு இருப்பதிலேயே சீனியர் மோஸ்ட் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜை நீதி விசாரணைக்கு நியமித்தால் என் உயர்நீதி மன்ற நீதிபதியைப் போடவில்லை என்று சொல்லுகிறீர்கள். ஆனால் அதற்குக் கூட என்ன சொல்லுகிறீர்கள்? உயர்நீதிமன்ற நீதிபதி வேண்டும், அதுவும் வெளி மாநிலத்திலிருந்து வர வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். அப்படியானால் இங்கேயிருக்கும் நீதிபதிகள் விஷயத்தில் உங்களுக்கு நம்பிக்கையில்லாமல் இருக்கலாம். ஆனால் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அப்படி நம்பிக்கை இருக்க வேண்டுமென்பதுதான் அரசியல் கண்ணியம் என்று உணர்ந்திருக்கிறேன். நம்முடைய மாநிலத்து நீதிபதிகள் மீது உள்ள நம்பிக்கையை நமக்கு நாமே இழக்கக்கூடாது என்று உணர்ந்திருக்கிறோம். அந்த உணர்வு உங்களுக்கு இல்லாததற்கு நானா பொறுப்பாளி ? அப்படியே வெளி மாநிலத்திலிருந்து வரட்டும், வெளி மாநிலத்திலிருந்து வருபவரின் மீது மட்டும் நம்பிக்கை ஏற்பட்டு விடும் என்பதற்கு என்ன ஆதாரம் ? வருகிற பொழுது நீங்கள் கலவரம் மூட்டிக்கொண்டு வருவீர்கள் என்று மக்கள் எண்ணமாட்டார்களா ? (குறுக்கீடு) செய்யமாட்டார்

கள் என்கிருர். எனவே, கேட்பதற்குச் சுவையாக இருக்க வேண்டும்
என்பதற்காக, "இந்த மாநிலத்திலேயிருப்பவர் வேண்டாம், அந்த மாநிலத்
திலிருந்து கொண்டு வாருங்கள்" என்று சொல்வதும், பிறகு அந்த
மாநிலத்திலிருந்து வருபவர் சரி இல்லை, ஏனென்ருல் அந்த மாநிலத்
திற்கு அண்ணுதுரை போய்விட்டு வந்திருக்கிருன், எனவே அந்த மாநிலத்
திலிருந்து வேண்டாம் என்று சொல்வதும், பிறகு இங்கிலாந்திலிருந்து
வரவழைக்கலாமா என்ருல் வேண்டாம், அமெரிக்காவிலிருந்து வரவழைக்க
லாமா என்ருல் வேண்டாம், பிறகு இரஷ்யாவிலிருந்து வரவழைக்கலாமா
என்ருல் அதில் இப்பொழுது இரண்டுவித அபிப்பிராயம், பிறகு வேறு
எங்கிருந்து வரவழைப்பது என்று ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கிருர்
கள். இந்த மாநிலத்தில் உள்ள நீதிபதிகள் விஷயத்தில் நீங்கள் முழு
நம்பிக்கை வையுங்கள் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளு
கின்றேன். நம்முடைய நீதிபதிகளையும், நீதிமன்றத்தையும் ஒரு துளியும்
குறை சொல்ல முடியாது. அவர்களுடைய தரமும், திறமையும் மேலோங்கி
இருக்கிறது என்பதில் இந்த அரசுக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது.
ஆகையால், வெளிமாநிலத்திலிருந்து நீதிபதியைக் கொண்டு வாருங்கள்
என்று சொல்லும் வாதத்தை—வாதம் என்றுதான் சொல்ல வேண்டும்,
கோரிக்கை என்றுகூட கருதவில்லை—ஏற்றுக்கொள்வதற்கில்லை. இன்னும்
என்ன பாக்கியிருக்கிறது?

கொள் முதல் விலை. அதைக் கருத்திருமன் அவர்கள் 15 வருஷங்களாக
சொல்லிக்கொண்டு வருகிருர்கள். இங்கேயிருந்த மாண்புமிகு திரு.
சுப்பிரமணியம் அவர்கள்கூடச் சொல்லுவார்கள், "கருத்திருமன்
பொருளாதாரம்" என்று. ஆனல், நாங்கள் கொடுக்கின்ற கொள்முதல்
விலை, பொருளாதார நிபுணர்களின் கருத்தை அறிந்து, உழவர்,
பெருமக்களின் பிரதிநிதிகளைக் கலந்து, மார்க்கெட் நிலவரத்தை அறிந்து,
வாங்கி உண்பவர்களின் கருத்தை அறிந்து நிர்ணயிக்கப்பட்டதாகும்.
அந்த விலையைக் கணக்கிலே எடுக்கும் நேரத்தில் உற்பத்தி பெருகி
இருக்கும் அளவையும் கவனிக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சரவர்களுக்குச் சிறிது ஓய்வு
கொடுக்க வேண்டுமென்பதற்காகக் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும்.
நம் நாட்டிலே உள்ள நீதிபதிகளிடம் நம்பிக்கை இருக்கிறது என்று
சொன்னுர்கள். அதேபோல், உயர்நீதிமன்ற நீதிபதி, கொள்முதலுக்காகக்
கொடுக்கப்படும் விலை போதாது, அதிகமாக கொள்முதல் விலை
கொடுக்க வேண்டும், கட்டுப்படியான விலை இல்லை என்ருல் ஒரு விவசாயி
நெல்லைக் கொடுப்பதற்கு மறுக்க உரிமை உண்டு என்று கூறியிருக்கும்
தீர்ப்பையும் ஏற்றுக்கொள்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** நீதிபதியின் தீர்ப்பு
இன்று மறுபரிசீலனையில் இருக்கிறது. கடைசியிலே நீதிபதி அவர்கள்
சொல்வதுதான் சரி என்ருல், அதை இந்த அரசு மட்டும் அல்ல,
எந்த அரசும் ஏற்றுக்கொள்ளும். ஆனல் நான் சொன்னதற்கும்
அவர்கள் கூறுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இங்கேயிருக்கிற
நீதிபதியிடம் நீதி கிடைக்காது, எனவே விசாரிப்பதற்கு வெளி மாநிலத்தி
லிருந்து நீதிபதியைக் கொண்டுவரவேண்டுமென்று பல முறை சொல்வது,
நம்முடைய நீதிபதிகளுக்கும், நீதிமன்றத்திற்கும் உரிய மரியாதை காட்டு
வதாக ஆகாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கொள்முதல் விலையை உற்பத்திப் பெருக்கத்திலே கணக்கிட்டால்,
நில உடைமையாளர்கள் முன்னல் பெற்றுக்கொண்டிருந்ததைவிட இன்று
எவ்வளவு அதிகமாகப் பெறுகிருர்கள் என்பது தெரியும். நான்கு
நாட்கள் இருக்கும் என்று கருதுகிறேன், ரிசர்வ் பேங்கிலிருந்து வெளியிடப்
பட்ட ஒரு அறிக்கையில், இந்தியப் பேரரசின் நிதித்துறை வெளியிட்ட
அறிக்கையில், உற்பத்தி அதிகம் ஆனதாலே கிராமப்புறத்து மக்களிடம்
எவ்வளவு அதிகமான பணம் போய்ச் சேர்ந்திருக்கிறது என்பதற்கு
புள்ளி விபரம்கூடத் தரப்பட்டு இருக்கிறது. ஆகவே, இப்பொழுது
தரப்படும் கொள்முதல் விலை, உற்பத்தியைக் குலைக்கக்கூடிய அளவுக்கு
குறைவாக இல்லை. உற்பத்தியைப் பெருகச் செய்யவேண்டுமென்று,



உற்பத்தியாளர்களுக்கு வேறு பல்வேறு வகையான வசதிகளைச் செய்து
வருகிறது என்பதை நான் இந்த அவையில் சொல்லிக்கொள்ள ஆசைப்
படுகிறேன். அதற்கு என்னுடைய நண்பர் எதிர்க்கட்சித் தலைவரவர்கள்
ஒத்துழைக்க மறுக்கிருர்கள். உரத்தின் விலையிலே உள்ள "சப்ஸிடி"
யை இந்தியப் பேரரசு நீக்கி விட்டதை நான் கண்டிக்க வேண்டும்,
பழைய விலையில் உரம் கிடைக்க வேண்டும், அவ்வாறு செய்து
உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று சொன்னுர்
களா ? மத்திய அரசைச் சார்ந்தவர்களைச் சந்திக்கும்பொழுது எங்கள்
சார்பில் வாதாடி இருப்பார்களா ? அவர்கள் இது எதையும் தொடுவது
இல்லை. ஆனல் அவர்கள் சொல்லுவது, கொள்முதலுக்கு அதிகப்
பணம் கொடு, அதே நேரத்தில் படி அரிசியை விஸ்தரி எனறு தான்
சொல்லுகிருர்கள். இந்த இரண்டையும் செய்தால் என்ன ஆகும் ?
சர்க்கார் நிர்வாகம் நடக்காமல் போகும், சர்க்கார் நிர்வாகம் நடககாமல்
போனல் என்ன ஆகும்? குடியரசுத் தலைவர் ஆட்சி வரும். அதன்
பிறகு என்ன ஆகும்? மறுதேர்தல வரும். மறுதேர்தல் வந்தால்
என்ன ஆகும்? அது மக்களுக்குத்தான் தெரியும். மக்கள் மனம்
மாறியிருப்பார்கள் என்று நீங்கள் எண்ணிக்கொண்டிருக்கக் கூடும்.
பஞ்சாபிலோ, ஹரியானுவிலோ காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற்றதற்கு
இங்கே வால்போஸ்டர்கள் ஒட்டினுர்கள். காங்கிரஸ் மீணடும் திரும்ப
வந்துவிட்டது என்று விழாக் கொண்டாடினுர்கள். அங்கு கூட அப்படி
விழாக் கொண்டாடியிருப்பார்களா என்ருல் கொண்டாடி இருந்திருக்க
மாட்டார்கள், ஏனென்ருல் அவர்களுக்குத் தெரியும் அதற்கு எவ்வளவு
கஷ்டப்பட்டிருடபோம் என்று. அப்படி தொலைவிலே நடந்த நிகழ்ச்சிக்கு
இங்கே விழா கொண்டாடினுர்கள். அதேபோல் இங்கும் திரும்ப
வந்துவிடுமோ என்ற நம்பிக்கையிருந்தால், அவையிலே கூட சொல்ல
வேண்டாம், தனியாகப் பார்க்கும் பொழுதாவது "ஒரு சான்ஸ்" அடிக்கும்
போல் இருக்கிறது என்று சொல்லலாம். நீங்கள் இரண்டு எண்ணிக்
கொண்டிருக்கிறீர்கள். ஒன்று, நாங்கள் செய்த காரியங்களை மக்கள்
மறந்துவிடுவார்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். அது தவறு.
மற்ருென்று. நீங்கள் இருபது ஆண்டுக்காலமாகச் செய்த கொடுமைகளை
மக்கள் மறந்திருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். அது
மிகப்பெரிய தவறு. நீங்கள் செய்த கொடுமைகளைச் சொல்வதற்குக்கூட
கூச்சமாக இருக்கிறது. உங்களுடைய கட்சி ஆளும் மாநிலத்தில்தான்
போலீசாரால் பிடிக்கப்பட்டிருந்த ஒரு தாயையும், மகனையும் புணரச்
செய்தார்கள் என்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. அந்தப் பாவக்கரை
போவதற்கு முன்னலே, அகல வாயைத் திறந்து உரத்த குரலில் இந்த
ஆட்சியைக் குறை சொல்லுகிறீர்கள். இதைக் கொஞ்சம் யோசித்துப்
பாருங்கள் என்று கேட்டுககொள்ளுகிறேன்.

1964–65-இல் மொழிக்கிளர்ச்சி நடந்த நேரத்தில் இங்கு நடை
பெற்ற கொடூரமான செயல்கள், கோரமான சம்பவங்கள், சுட்டுக்கொல்லப்
பட்ட சம்பவங்கள் இவைகளையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று
கருதுகிறீர்கள் ? எங்களுடைய ஆட்சியிலே பூந்தாழங்குடியிலே நடை
பெற்ற ஒரு துப்பாக்கிச் சூட்டை கம்யூனிஸ்ட் நண்பர்கள் கூட மறந்து
விடக் கூடாது என்று அடிக்கடி எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறீர்களே,
நீங்கள் செய்த அக்கிரமங்களை மக்கள் மறந்து விடுவார்கள் என்று
கருதுகிறீர்கள் ? அவ்வளவு சாதாரண அக்கிரமமா நீங்கள் செய்திருக்கிறீர்
கள் ? சேலம் சிறைச்சாலையில் 21 கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்
களே, மக்கள் மறந்து விட்டார்கள் என்று கருதுகிறீர்கள் ? கம்யூனிஸ்டு
நண்பர்களை ஓடச்சொல்லி சுட்டும் கொன்றீர்கள்—தஞ்சையில். மக்கள்
மறந்து விட்டார்கள் என்று கருதுகிறீர்கள் ? முதுகுளத்தூரிலே
கைகளையும் கால்களையும் கட்டிவிட்டு சுட்டதாகத் தெரிந்துள்ள மக்கள்
மறந்து விட்டார்கள் என்று கருதுகிறீர்கள் ? மறந்து விடக்கூடிய
தவறு செய்தீர்கள் ? நீங்கள் செய்திருக்கிற கொடுமையை நாடு இன்று
அல்ல, இன்னும் வருடம் 5 ஆனலும், 10 ஆனலும் நிச்சயம் மறக்காது,
அதை மறந்து விட்டதைப் போலவும், நாங்கள் செய்த நன்மைகளை மறந்து
விட்டதைப் போலவும் பொதுமக்களைப் பற்றி இன்பகீதம் பாடிக்கொண்டு,

இன்பக் கனவு காண்கிறீர்கள். உங்களுக்கு இன்பகரமான கனவு காண உரிமை உண்டு. நீங்கள் இன்பக் கனவு காண வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். எங்கள் தரப்பிலே ஒரு உறுப்பினர் The Congress is dead and gone for ever என்று கூறினார்கள். நான் அந்தக் கருத்திலே இல்லை. என்னுடைய கட்சியினருக்கும் நான் சொல்லிக்கொள்வேன், எந்தக் கட்சியும் அப்படி மறைந்து விட வேண்டும், இறந்து விட வேண்டும் என்று எண்ணுவது ஜனநாயகப் பண்பாடு அல்ல. காங்கிரஸ் வளர வேண்டும். காங்கிரஸ் வளர்வதன் மூலம் மறுபடியும் ஒருமுறை அது ஆட்சிக்கு வருவதானாலும் நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இவ்வளவுக்கும் பிறகும் மறுபடியும் அவர்கள் ஒரு தடவை வருவார்களானால் அவர்கள் எப்படி நடக்கிறார்கள் என்று பரீட்சை பார்க்கக் கூட அவகாசம் தர வேண்டும், உரிமை தர வேண்டும். ஆனால் என்னுடைய நண்பர் கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் சொன்னதைப் போல இராமாயணத்திலே கூட இராமனும் சீதையும் அயோத்தியை விட்டுத் தாண்டிய உடனே, காட்டுக்குச் செல்கிறவர்கள் அயோத்தியை விட்டுத் தாண்டிய உடனே, "நாதா, காட்டுக்கு வந்து விட்டோமா ?" என்று சீதை கேட்டார்கள். காட்டுக்கும் நாட்டுக்கும் வித்தியாசமே தெரியாத அளவுக்கு வளர்ந்ததாலே, நாட்டை விட்டுத் தாண்டியவுடன், "இது தான் காடு" என்று சீதை எண்ணிக் கேட்டார்கள். நீங்கள் நந்தவனத்திலே அல்லவா இருந்தீர்கள் ? அரண்மனையிலே அல்லவா இருந்தீர்கள் ? கூப்பிட்ட குரலுக்கு மகாராஜாக்களை அல்லவா கண்டீர் கள் ? தொகை போடாத செக்குகளை அல்லவா வாங்கிக்கொண்டிருந்தீர் கள் ? வாழ்ந்த வாழ்வுக்கு குறை வந்துவிட்டதால், இந்த $1\frac{1}{2}$ வருட வேதனையைத் தாங்க முடியாமல் சீதைபிராட்டியைப் போலக் கேட்கிறார்கள், "அண்ணா, இன்னுமா இருக்கிறாய்" என்று. (ஆளும் கட்சித்தரப்பில் சிரிப்பு). ஏதோ இந்த $1\frac{1}{2}$ வருடத்திலே நடக்கக்கூடாதது நடந்து விட்டது போல நாங்கள் அதற்கு விளக்கம் தரவேண்டுமென்ற நிலையிலே இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மற்றபடி இருக்கிற குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் நம்முடைய கழகத்தைச் சேர்ந்தவர்கள் அவ்வப்பொழுது பதில் கூறிவிட்டார்கள், விளக்கம் கொடுத்து விட்டார்கள்.

கடைசியாக, இவ்வளவு நாள் இல்லாமல் இப்பொழுது லாட்டரி சீட்டைப் பற்றிக் கூடச் சொன்னார்கள். அதற்கு தைரியம் வரவேண்டு மென்று காத்துக் கொண்டிருந்தார்கள். ராஜாஜி அவர்கள் அறிக்கை விட்டவுடனே தைரியம் வந்து விட்டது. ராஜாஜி அவர்கள் அறிக்கை விட்டு: அதன்படி நான் நடக்காததாலே எனக்கும் ராஜாஜிக்கும் விரோதம் வந்து விடும் என்று எண்ணுகிறீர்களா ? வராது. (ஆளும் கட்சி தரப்பில் ஆரவாரம்). ஏன் வராது என்றால் அவர் சில லட்சியங் களோடு நாடு நடக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார், எனக்கு மட்டும் அல்ல, நாட்டுக்கு மட்டும் அல்ல, உலகத்திற்கும் சிலவற்றை சொல்லிவருகிறார்கள். அவருடைய பாலிஸியை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லையென்பதற்காக வருத்தப்பட்டேனே தவிர, அவர் சொல்வது தவறு என்பதற்காக அல்ல. இதிலே அவர் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது மட்டும் அல்ல, நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டுமென்று கருதுகிறேன், சுதந்திராக் கட்சி அரசாளுகின்ற ஒரிஸ்ஸாவிலே கூட, நடக்கின்ற அந்த ராஃபில் சர்க்காரினுடைய அனுமதியோடு தான் நடக்கிறது. It is authorized by the Government of Orissa. அது இப்பொழுதும் நடக்கின்றது. (குறுக்கீடு) கேரளா நம்மைப் போல தப்பான சர்க்கார். **நான் சொல்லுவது, ராஜாஜி அவர்களுடைய கருத்தைக் கேட்காத குற்றம் எனக்கு மட்டும் அல்ல, சுதந்திரா அரசாளுகின்ற இடத்திலே கூட அப்படித்தான் இருக்கிறது. காரணம் என்னவென்றால் அவர் சொல்லு** கின்ற அளவுக்கு அந்த இலட்சிய நிலையில் எந்த அரசும் **இன்றைய தினம்** நடந்து கொள்ளுகிற நிலையிலே இல்லை. ஏனென்றால் இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கின்ற இந்த ராஃபில் கூட தவறான காரியத்திற்காக





அல்ல. அதிலே யாரும் சந்தேகிக்காதீர்கள். (எதிர்க்கட்சி **வரிசையில்** ஒரு படத்தைக் காட்டி) படம் கூட இருக்கிறது. அதிலே இருக்கிற அந்த பாரபட்டி ராஃபிலே அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருக்கிற நிஜலிங்கப்பா அவர்கள் தான் விற்கிறார்கள். அதனாலே ராஜாஜி சொன்ன கருத்து மதிக்கத்தக்க கருத்து அல்ல என்று நான் சொல்லவில்லை. மதிக்கத்தகக கருத்துதான். ஆனால் சர்க்கார் ஏற்றிருக்கின்ற நல்ல காரியங்களுக்கு இதைப் பயன்படுத்தலாம் என்பதற்காகத்தான் அதை பயன்படுத்துகிறோம்.

நம்முடைய பூவராகன் அவர்கள், நீங்கள் வந்த பிறகு, சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தைக் கெடுத்து விட்டீர்கள், அல்லது குறைத்து விட்டீர்கள், என்றெல்லாம் சொன்னார்கள். இந்திய அரசே அப்படி சொல்லியிருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். அதிலே குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

Fifteenth August should be celebrated with such celebrations as might be decided by the Government of India. The matter has now been further considered.

என்று போட்டு அதிலே அவர்கள் குறிப்பிட்டு இருப்பது *Flag hoisting*—

The Governor has to give some parties and there is no particular reason why you should not give a party on the 15th August.

இதுதான். அதைப் போல் சுதந்திர தின விழாவன்று கவர்னர் அவர்களுடைய பார்ட்டியும் தரப்பட்டிருக்கிறது. அதைப் போல் இதிலே அன்றைக்கு எப்படி இருக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

Independence day will be celebrated on 15th August on a modest scale.

There will be no special illumination of public buildings.

என்று 1953-வது வருஷத்திலே போடப்பட்டிருக்கிற உத்தரவே தவிர நாங்களாகவே சுதந்திர தின விழாவினுடைய மகிழ்ச்சியைக் குறைத்து விட்டோம் என்று நண்பர் பெரிதாகக் கருதிக் கொண்டு காலையிலே பேசியது முறையல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடவுள்கள் படத்தைப்பற்றிச் சொன்னார்கள். நம்முடைய நண்பர் விநாயகம் அவர்கள் ஒரு கடவுள் பக்தனுடைய அளவு தன்மையுள்ள நிலையில் பேசுகிறார். அதிலே அவர் பெறுகின்ற பலன், அல்லது பெற்றிருக்கிற பலன், அல்லது எதிர்பார்க்கிற பலன் இதெல்லாம் எனக்குத் தெரியாது. பெயர் விநாயகம் என்றிருக்கிறது என்று சொல்ல லாம். பெரியவர்கள் வைத்த பெயர். அவருக்கு நிரம்ப மத பக்தி இருக்கிறது என்று வைத்துக்கொண்டே பேசுகிறேன். நாங்கள் சர்க்கார் அலுவலகங்களிலே இந்தப் படங்கள் இருக்க வேண்டாம் என்று சுற்றறிக்கை வெளியிட்டிருப்பதற்கும் மத நம்பிக்கைக்கும் எந்த வகை யிலேயும் தொடர்பில்லை. இந்த விவாதம் நடந்து கொண்டிருந்த நேரத்திலே விநாயகச் சதுர்த்திக்கு விடுமுறை வேண்டுமென்றார்கள். விடு முறை விடவில்லையா ? நாங்கள் நாஸ்திக வாதத்தை இங்கே புகுத்து கிறோம் என்று பொருள் ? அப்படி நாஸ்திகத்தை இங்கே புகுத்து கிறோம் என்றால் இவைகளுக்கெல்லாம் விடுமுறைகள் விட்டிருப்போமா ? திருவிழாக்கள் எல்லாம் நடக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பித் திருக்கலாமே ? கோவில் பணத்தையெல்லாம் கோவில்களுக்கு செல வழிக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்க மாட்டோமா? ஆனால், நாங்கள் பண்பு அறிந்தவர்கள். மக்களின் மனது பிரச்சாரத்தின் மூலமாகத்தான் பக்குவப்பட வேண்டுமே தவிர ஒரு 5 வருஷம், 10 வருஷம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்து உத்தரவிடுவதன் மூலம் ஆஸ்தி கத்தை மாற்றி நாஸ்திகத்தை ஏற்படுத்த முடியும், அல்லது நாஸ்திகத்தை மாற்றி ஆஸ்திகத்தை ஏற்படுத்த முடியும் என்ற மனப் பிராந்தியும் எங்களுக்குத் துளியும் இல்லை. எங்களால் மக்களுடைய மத நம்பிக்கை யில் எந்த வகையிலேயும் குறுக்கிட முடியவில்லை விருப்பமும் இல்லை.

அது எங்களுடைய நோக்கமும் அல்ல. அரசினர் மாளிகையில் அல்லது அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களை எடுத்துவிட்டால், நாஸ்திகத்தை புகுத்துகிறேன் என்று பொருளா? சீனிவாசன், வெங்கடேசன், சுப்பிர மணியம், சங்கரசுப்பிரமணியம் என்று எல்லா கடவுள்களினுடைய பெயர் களும் மனிதர்களுக்கு உள்ளன. இது கடவுள்கள் பெயராக இருப்பதாலே இது ஆஸ்திகத்தைப் பரப்புகிறது, ஆகவே இந்தப் பெயர்களை எல்லாம் மாற்றிவிடுங்கள் என்று சொல்கிருேமா? சங்கரய்யா அவர்கள் மாற்றிக் கொண்டாரா? அல்லது பாலசுப்பிரமணியம் அவர்கள் மாற்றிக் கொண்டாரா? பாலசுப்பிரமணியன் என்று பெயர் வைத்திருப்பதால் அவர் முருகன் கதையை நம்புகிருர் என்ரு பொருள்? சங்கரய்யா என்று பெயர் வைத்திருப்பதால் அவர் முக்கண்ணனை நம்புகிருர் என்ரு பொருள்? நம்புவாரானல் உங்கள் பேரில் இருக்கிற கோபத்திற்கு முக்கண்ணைக் காட்டி எரித்து அல்லவா இருப்பார்? அது பாமர மக்களுக்காக இட்டுக் கட்டப்பட்ட கதை என்று அவர்களுக்குத் தெரியும். அதே முறையில் தான் நாங்கள் இந்தக் காரியத்தைச் செய்தோமே

மாலை 6-30 தவிர, சர்க்கார் அலுவலகங்களிலே பணியாற்றுபவர்கள் அது எங்களுக்கு விருப்பம் அல்ல, அந்த படங்கள் இருக்கத்தான் வேண்டுமென்று தெரிவிப் பார்களானல் நான் மறு பரிசீலனை செய்ய தயாராக இருக்கிறேன் என்று இந்த அளவிற்கு நான் கனிவாக சொல்வதற்குக் காரணம் மத நம்பிக்கையைக் கலைக்க வேண்டுமென்ரே அல்லது எங்களுடைய கருத்தை திணிக்க வேண்டுமென்ரே நாங்கள் ஒரு துளியும் எண்ணவில்லை. அதற்காக அப்படி ஈடுபடவில்லை என்று நான் மறுபடியும் வலியுறுத்தி சொல்ல விரும்புகிறேன். ஆனல் என் இவ்வளவு வலியுறுத்து கிருர்கள் காங்கிரஸ் நண்பர்கள் என்று புரியவில்லை. (திரு. கே. விநயகம்: ராஜாஜி சொல்லியிருக்கிருர்) மறுபடியும், பூனைக் கதையைத்தான் கவனப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் எதற்காகச் சொல்லு கிருர்கள் என்ருல் வரக்கூடிய தேர்தலிலே, "கடவுளர் படத்தை எடுத்தவர்களுக்கா ஓட்டுப் போடப்போகிறீர்கள்" என்று சொல்லலாம் என்று சொல்கிருர்கள். அவர்களுடைய பக்கத்தில்தான் பெயரோடு ஒருவர் "நாத்திகம்" வைத்திருக்கிருர்கள்; பாடக்கூடிய ஒருவர் இருக்கிருர்: அவருக்கு இராவணன் என்று பெயர்; இன்னும், ஐந்து வருஷ காலமாக, சீதையின் முறைகேடு பற்றியும், ராமனின் கோழைத்தனம் பற்றியும், உங்களுடைய செலவில், உங்களுடைய கொடியின் கீழ், உங்கள் மேடைகளில் விஸ்தாரமாகப் பேசிவந்திருக்கிருர்கள். அப்பொழு தெல்லாம், ஆத்திகம் கெட்டுப்போகிறதே என்கிற உணர்வு வராமல், இப்பொழுதாகிலும் அந்த உணர்வு வந்ததே, அதற்கு ஒருவகையில் மகிழ்ச்சி. ஆனலும், அது விலைபோகாத சரக்கு. அதை வைத்துக் கொண்டு, லாபம் அடையலாம் என்று கருதுவீர்களானல், ஏமாற்றம் தான் அடைவீர்கள். எவ்வளவோ சொன்னீர்கள். சொன்னதிலே ஒப்புக்கொள்ளக்கூடியது இருக்கிறதா என்று பார்க்கிருேம். எதுவும் இல்லை. நண்பர்கள் சொன்னதை வெகு அக்கறையோடு பார்க்கிறேன். எதுவும் இல்லை. ஆனல் என் அப்படியெல்லாம் சொல்லுகிறீர்கள்? ஒரு கதை சொல்லுவார்கள்—கொஞ்சம் சாரீரம் கெட்டுவிட்ட சங்கீத வித்துவான் ஒருவர், இளமையோடு அழகாகப் பாடும் இசைவாணன் இசையைக் கேட்டு விட்டு வெளியே வரும்போது, நண்பர்களிடம், "என்ன பாடிவிட்டான், சாரீரம் அவ்வளவு சுகம் இல்லை" என்ருர். பக்கத்தில் வந்தவர் "என்ன சொல்கிருர்" என்று கேட்டார். காரணம் என்ன வென்ருல், அவர் அவ்வளவு கீழ்ஸ்தாயியில் தான் பேசமுடிந்தது. அவ்வளவு குரல் கேட்கமுடியாத அளவிற்கு குரல் கெட்டவனும் மற்றவன் பாட்டை மாசுபடுத்தினன், குறை கண்டான். அது போல நீங்கள் "முன்னுள்" ஆகிவிட்டு, "இன்னுளை" இழுக்குபடுத்த வேண்டும் என்று குறை கூறுகிறீர்கள். முன்னுள் அமைச்சர், இன்னுள் அமைச்சர், என் என்னுள் அமைச்சரையும் உருவாக்குகிறவர்கள், பொதுமக்கள் தான். அவர்கள் எங்களிடத்தில் முழு நம்பிக்கை வைத்திருக்கிருர்கள். அவர்கள் எங்களிடம் வைத்திருக்கும் நம்பிக்கை நாளுக்கு நாள் வளருகிறது. அதில் ஐயப்பாடு இல்லை. அது மட்டுமல்லாமல், இந்த அவையில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத் தில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று எடுத்துக் கூறிவிட்டார்கள்,



தெளிவு படுத்திவிட்டார்கள். இந்த அவை பூரணமாக எதிர்க்கிறது என்பது எனக்குத் தெரிந்திருக்கிறது போல, உங்களுக்கும் தெரிந்திருப்ப தால், கடைசிமுறையாகச் சொல்லுகிறேன், இந்த தீர்மானத்தை வலி யுறுத்தித் தோற்றுவிட்டது, சபையினுல் நிராகரிக்கப்பட்டுவிட்டது, எல்லாக் கட்சிகளும் எதிர்த்தன, என்று பதிவு எட்டில் திரட்டிப் பதிவு செய்வதற்கு பதிலாக, பல விஷயங்களைப் பேசவேண்டும் என்று கருதினேம், அதற் காகத்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தோம், சொல்ல வேண்டியவைகளையெல்லாம், சொல்லியாகிவிட்டது, அவற்றைக் கேட்ட முதல் அமைச்சர் திருத்த வேண்டியவைத் திருத்திக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது, ஆகவே, இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை நாங்கள் திரும்ப பெற்றுக் கொள்ளுகிருேம் என்று சொன்னல், உங்களிடம் பொது மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும்; இல்லை, இல்லை எப்படியானலும் ஆகட்டும், நாங்கள் சொன்ன குற்றச் சாட்டுகளை, எந்த ஆதாரத்தைக் காட்டி மறுத்தாலும், நாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான் என்று சாதிப்பதாக இருந்தால், கால்கள் மூன்ருகவே இருந்துவிட்டுப் போகட்டும், எனக்கு நஷ்டம் இல்லை.

Dr. H. V. HANDE: Sir, on a point of personal explanation, as far as the raffle scheme is concerned. it was only Rajaji who called and told me that he was against the scheme and I had some discussion with him on that matter. As regards the point that the scheme is in practice in Orissa, it has been going on there for a number of years. With regard to Orissa also the views of Rajaji are the same. He gave Shri Singh Deo the same advice. Shri Singh Deo also stated that the difficulty was that it had been going on there for a long time and he was unable to undo the damage. So, we say that this sort of thing should not be encouraged in our State.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உதவி சபாநாயகர் அவர்களே, மூன்று நான்கு நாட்களாக விவாதம் நடந்தது இந்த நம்பிக்கையில்லாத் தீர் மானத்தின் மீது. இன்று இறுதிக் கட்டத்தில் இருக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிருர்கள். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவன் என்ற முறையில், இது வரையில் பேசின பேச்சுக்கள், இன்று முதல் அமைச்சர் அளித்த பதில்கள், இவை எல்லாவற்றையும் இணைத்துப் பார்த்தால், எதற்காக நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதோ, அதன் பொருளை விட்டு விட்டு, எதை எதையோ சொன்னுர்கள். எனக்கு ஒரு கதை, பழமொழி நினைவுக்கு வருகிறது. அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்தானும். அம்மாதிரித்தான் இருந்தது, முதல் அமைச்சர் இவ்வளவு நேரம் பேசிய பேச்சு என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே தீர்மானம் செய்யப்பட்டது; விவாதத்தின்போது பல குறைகளுக்கு பதில் சொல்லியும், எதிர்க் கட்சிக்காரர்கள் பேசும்போது அவ்வப்பொழுது பதில் சொல்லியும் கூட, எங்களுடைய நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தின் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு வெகு பொருத்தமான பதில், நியாயமான பதில் சொல்லவில்லை என்கிற நிலையைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பழமொழி, கதை இவற்றை வைத்துக் கொண்டு இல்லாமல் எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு நேரிடையாகப் பதில் சொல்ல வேண்டும் என்று முன்னலேயே கேட்டுக் கொண்டு இருந்தேன். எனக்குப் புள்ளிவிவரங்கள் இல்லை, புள்ளி விவரங்கள் தருகிருேம் என்றும் சொன்னுர்கள், ஆனல் எதையும் தரவில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் எங்கள் கட்சி கொண்டு வந்திருக்கிறது. பாக்கிக் கட்சிகள் குற்றச் சாட்டு சொல்லும்போது, சுதந்தரம் பெற்று 20 வருஷ காங்கிரஸ் ஆட்சியில், ஒன்றும் நடைபெற வில்லை, இருண்டு கிடந்தது என்ற குற்றச்சாட்டைச் சொன்னுர்கள். 20 வருஷ காலத்தில் மக்களுக்கு எந்த அபிவிருத்தியும் ஏற்படவில்லை என்று சொன்னல், வேறு வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், ஒன்றும்

இல்லை, ஒன்றும் இல்லை என்ற நிலையைத்தான் விளக்கினார்கள். திட்டவட்டமாகச் சொல்லுவேன், காங்கிரஸ் கட்சி 20 வருஷ ஆட்சியில், நாட்டின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற முயற்சிகளை செய்து வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கட்சிக்கு அவநம்பிக்கை இருந்தாலும், உலகத்தில் உள்ளவர்கள், நிபுணர்கள், எங்களுக்கு அத்தாட்சி கொடுத்திருக்கிறார்கள். அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து நிபுணர்கள் பாராட்டியிருக்கிறார்கள். காங்கிரஸ் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, நடுத்தர மக்களுக்கு பல நன்மைகளையும் செய்திருக்கிறது. செய்ய வில்லை என்று வேறு யாரும் சொல்லவில்லை.

ஆம். தோற்றுவிட்டோம். அரசியல் காழ்ப்புக்காகக் கொண்டு வந்தோம் என்கிறார்கள். எதிர்க் கட்சிக்கு எந்த விதமான காழ்ப்பும் இல்லை. எதிர்ப்பும் தேவையில்லை. மக்களுடைய தேவைகளை, மக்களுடைய நன்மைகளைச் செய்து கொண்டு வந்திருக்கிறோம். சுதந்தரம் பெறுவதற்காகப் பெரிய பெரிய தியாகங்களைச் செய்திருக்கிறோம். ஆகவே, நாங்கள் செய்திருக்கும், செய்துவரும் நல்ல காரியங்கள் ஆதரிக்கப்படும். ஆனால், இந்த அரசு செய்வதில் பூராவும் நன்மைகளே இல்லையா என்றால், ஒரு ஐந்து சதவிகிதம் இருக்கும். அதைப் பற்றி பின்னால் சொல்ல விரும்புகிறேன். நல்ல காரியங்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்கு அவர்கள் சொல்லுகிறார்கள், ஒன்றரை வருஷத்தில் எதைச் சாதிக்க முடியும் என்று. அது பொருத்தமானாலும் கூட, தப்பில்லை என்றாலும், அவர்கள் சொன்னது என்ன ? எங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள், 20 வருஷ காலத்தில் அவர்கள் சாதித்ததை, நாங்கள் ஒரு வருஷத்தில் முடிக்கிறோம், என்று சொன்னார்களா, இல்லையா ? அவர்களுக்கு சாதகமாகப் பேசிய திரு. நல்லசிவம் அவர்கள் கூட பட்ஜட் உரையின் போது,—அவர்கள் எப்பொழுதுமே எதிர்க் கட்சியில் இருந்தவர்கள்— காங்கிரஸ் ஆட்சியின் 20 வருஷத்தில் நடந்ததை விட, இந்த ஒரு ஆண்டு ஆட்சியில் ஊழல், லஞ்சம் எல்லாம் அதிகமாகியிருக்கிறது என்கிற குற்றச்சாட்டை இந்த சட்ட சபையிலேயே சொல்லியிருக்கிறார்கள். ஆக, இந்த மாதிரி ஆதரிக்கிறோம், ஆதரிக்கிறோம் என்கிறவர்களெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் பேசும்போது—அதன் மீது நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை கூட எழுப்பினேன்—காங்கிரஸ்காரர்கள் பச்சோந்திமாதிரி மாற்றிக் கொள்ளுகிறார்கள் என்று சொன்னார்கள். உதவி சபாநாயகர் அவர்களே, "ஆம், அது பார்லிமெண்டரி தான், நிச்சயமாகச் சொல்லலாம்" என்றும் நீங்களே சொன்னீர்கள். நான் கேட்பதெல்லாம், இந்த எதிர்க் கட்சியிலே இருக்கிறவர்கள்..........

**திரு எல். கணேசன் :** தலைவர் அவர்களே, கனம் எதிர்க் கட்சித் தலைவர் கழுவிய மீன், நழுவிய மீன் என்றெல்லாம் சொன்னார்களே, அதையெல்லாம் உயிர் இனம் என்பதுபோல, பச்சோந்தியும் உயிர் இனம் தானே?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, உண்மையில் பார்த்தால் நீங்கள் பச்சோந்திகளா, நாங்கள் பச்சோந்திகளா என்பது நன்றாகத் தெரியும். உங்களுடைய கட்சியின் வரலாற்றை எடுத்துப் பாருங்கள், யார் பச்சோந்தி என்று நன்றாகத் தெரியும். யாரோ 72 வயதுள்ள வாலிபர் 22 வயதுள்ள பெண்மணியை கல்யாணம் செய்து கொண்டதைத் தொடர்ந்து உருவானதே உங்கள் கட்சி. முதன் முதலில் தனி நாடு வேண்டும் என்று கேட்டீர்கள், பின்பு திராவிட நாடு கேட்டீர்கள், அதன் பின்னர் தனித் தமிழ்நாடு வேண்டும் என்று கேட்டீர்கள். நமது முதலமைச்சர் அவர்கள்கூட, தனித் திராவிட நாட்டிற்காக இறுதிவரை போராடுவேன். இன்பத் திராவிட நாடுதான் எனது மூச்சு என்று சொல்லவில்லையா ? அதையெல்லாம் மறந்துவிடுங்கள் என்று சொன்னால், நாங்கள் மறந்துவிட தயாராக இருக்கிறோம். மத்திய சர்க்காரிலே, நாட்டுப் பிரிவினையை தடை செய்யும் சட்டம் வரும் என்று சொன்ன சமயத்திலே நீங்கள் முன்பு





கேட்ட பிரிவினையை கைவிட்டுவிட்டீர்கள். பிரிவினை எண்ணத்தை விட்டுவிட்ட தன்மைக்காகத்தான் நாட்டு மக்களின் ஆதரவு உங்களுக்கு கிட்டியது. இவையெல்லாம் பச்சோந்தித்தனம் இல்லையா ?

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** நாங்கள் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டது பச்சோந்தித்தனம் அல்லவா என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள். ஒரு கொள்கை நாட்டுக்கு நன்மை தராது என்ற உணர்வு ஏற்பட்டதும் விட்டுவிட்டோம். அது தவறு என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறார்களா ? அப்படி இது தவறு என்றால், பாகிஸ்தானைப் பற்றி அன்று காங்கிரஸ் சொன்னதும் தவறாக இருக்கலாம். "பாகிஸ்தானுக்கு இணங்க மாட்டோம். எங்கள் பிணத்தின்மீதுதான் பாகிஸ்தான் ஏற்படும். பாகிஸ்தான் ஏற்பட நாங்கள் இடம் தரமாட்டோம்" என்று சொல்லி வந்த அகில இந்தியக் காங்கிரஸ், முடிவில் பாகிஸ்தானுக்கு இணக்கம் தெரிவித்த காரணம் என்ன ? அது பச்சோந்தித்தனம் அல்லவா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எப்போதுமே நமது முதலமைச்சர் அவர்கள் இப்படித்தான் ஏதாவது சொல்லிக்கொண்டிருப்பார்கள். (சிரிப்பு), காங்கிரஸ் அன்று அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டது அதுபோல நாங்களும் மாற்றிக் கொண்டோம் என்று. விலாங்கு மீன் பாம்புக்குத் தலையைக் காட்டும், மீனுக்கு வாலைக் காட்டும். அதுபோல சமயத்திற்குத் தகுந்தமாதிரி சொல்லிக்கொண்டிருப்பார். முதலமைச்சர் அவர்கள் காங்கிரஸ் கட்சி மீது பக்தி வைத்தா காங்கிரஸ் செய்த முடிவை ஏற்றுக்கொண்டோம் என்று சொல்கிறார் ? காங்கிரஸ் செய்தது மாதிரி நாங்களும் செய்தோம் என்று தைரியமாகச் சொல்வதற்காக அவர்களைப் பாராட்டுகிறோம் (காங்கிரஸ் கட்சித் தரப்பில் ஆரவாரம்).

காங்கிரஸ் ஆட்சியில் ஒன்றுமே நன்மை விளையவில்லை என்று சொல்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சியில் பல நன்மைகள் ஏற்பட்டன என்று வெளிநாட்டுக்காரர்கள் எல்லாம் அத்தாட்சி கொடுக்கிறார்கள். நமது இந்தியாவில் இருக்கக்கூடியவர்கள் வேண்டாம், பிரிட்டன், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலுள்ள பொருளாதார நிபுணர்களைக் கேட்டால், கடந்த இருபது ஆண்டுக் காலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் இந்தியா வளர்ச்சியடைந்துள்ளதா, இல்லையா என்று சொல்வார்கள். அப்படி நிபுணர்கள் காங்கிரஸ் ஆட்சியில் நன்மை ஏற்படவில்லையென்பதை நிரூபித்தால் நான் என்னுடைய அரசியல் வாழ்க்கையிலிருந்தே விலகிவிடத் தயாராக இருக்கிறேன். இதனை நான் இந்தச் சட்டசபையில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். காங்கிரஸ் ஆட்சியில் தமிழகத்தில் தொழில்கள் வளர யார் காரணமாக இருந்தார்கள் ? பெரம்பூர் கோச் பாக்டரி, திரு. என். கோபாலஸ்வாமி அய்யங்கார் அவர்கள் மத்திய சர்க்காரில் அமைச்சராக இருந்த காலத்தில்தான் கொண்டு வந்தார். அதேபோல திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்தில்தான், தமிழ் நாட்டிற்கு லாபத்தில் 25 சதவீதம வந்தால் போதும் என்ற அளவில் நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்தைக் கொண்டு வந்தார். இவைகள் எல்லாம் கடந்த காங்கிரஸ் அரசாங்கத்தின் முயற்சியினால் ஏற்பட்டன. ஆனால் இங்குள்ளவர்கள் காங்கிரஸ்காரர்கள் மத்திய அரசாங்கத்திற்குத் தாளம் போடுகிறார்கள், மத்திய அரசாங்கத்திற்குக் காவடி தூக்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். சில நாட்களுக்கு முன்பு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட காவடி தூக்கித்தான் டெல்லிக்குச் சென்றாரா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் காவடி தூக்கிச் செல்லவில்லை. ஏமாவதி நதி அணைக்கட்டுத் திட்டத்தைப்பற்றிப் பேசுவதற்காக மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் அழைத்ததற்கு நான் போயிருந்தேன். மொழிப்பிரச்சினை நேரத்தில் காங்கிரஸ் அமைச்சர்கள்தான் காவடி தூக்கிச் சென்றார்கள். ஆனால் நம்முடைய அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் டெல்லி சென்று,

உதவிப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களிடமே, "இந்தி மொழி கூடாது" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டு வந்திருக்கிறார். முன்பு இப்படி யாரேனும் காங்கிரஸ் அமைச்சர்கள் கூறியது உண்டா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** காங்கிரஸ் மந்திரிகள் தேசத்திற்கு நல்லது செய்திருக்கிறார்கள். பொருப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கூட டெல்லியில் எமாவதி நதி அணைக்கட்டுத் திட்டத்தைக் குட்டிச் சுவராக்கிவிட்டு வந்திருக்கிறார்கள் (காங்கிரஸ் தரப்பில் ஆரவாரம்). அணையைக் கட்டிக்கொள்ளுங்கள், சாவியை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள், பூட்டை நாங்கள் வைத்துக்கொள்கிறோம் என்று நிலைமை இருக்கிறது. அணைக்கட்டிய பிறகு தண்ணீர் மீதி இருந்தால்தானே மற்ற பிரச்சினைகள் எல்லாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது ஏற்பட்டிருக்கிற பேச்சு வார்த்தை உடன்பாட்டை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக் கொள்கிறார்களா, இல்லையா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எற்கெனவே நமக்கு இவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்ற உத்தரவாதத்தை எப்படி பெற முடியும்? அணையைக் கட்டிவிட்டு தண்ணீர் தராவிட்டால் என்ன செய்வது? தருகிறேன் என்று சொல்வதெல்லாம் தாஜா பண்ணும் வேலை. அவர்களுக்கே தண்ணீர் இல்லாதபோது நமக்கு எப்படி தருவார்கள் ? இப்பொழுது ஏற்பட்டுள்ள பேச்சுவார்த்தை உடன்பாட்டை ஒத்துக்கொள்ள தயாராக இருக்கிறேன். இல்லாவிட்டால், அதை வைத்துக்கொண்டு பொதுமக்கள் மத்தியில், "பார், பார், கருத்திருமன் அவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்" என்று சொல்வார்கள்.

முதலமைச்சர் அவர்கள், "தொழில் வளங்கள் எல்லாம் சீர்கெட வில்லை, சிறப்பாக நடைபெற்று வருகின்றன" என்று குறிப்பிட்டார்கள். மின்சாரத்தில் இருக்கும்படியான பவர்களையே எடுத்துக் காட்டிச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் வந்த பிறகா இவைகளையெல்லாம் செய்தார்கள் ? நாங்கள் எல்லாவற்றையும் செய்து வைத்துவிட்டுப் போனதற்கு, ஸ்விட்சு போட நீங்கள் வந்துவிட்டீர்கள். இவைகள் எல்லாம் நாங்கள் எற்கனவே போட்ட திட்டங்களின் விஸ்தரிப்பு. நீங்கள் வந்து போட்டது எதாவது உண்டா ? நீங்கள் திறப்பு விழாக்களைத்தான் நடத்தியிருக்கிறீர்கள், பல இடங்களில் மூடு விழாக்களும் நடந்திருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மேட்டூர், பைகாரா திட்டங்கள் காங்கிரஸ் அரசு ஏற்படுவதற்கு முன்னாலே போடப்பட்ட திட்டங்கள். மின்சாரத் திட்டமும் மற்றவைகளும் காங்கிரஸ் அரசுக்கு முன்னாலே ஏற்பட்டவை. மின்சாரத்தை எடிஸன் கண்டுபிடித்ததற்கு அடுத்தபடியாக காங்கிரஸ்தான் கண்டுபிடித்ததுபோல, நண்பர் எண்ணிக்கொண்டு பேச வேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வெள்ளைக்காரர்கள் நம் நாட்டை விட்டுப் போனபோது 50 ஆயிரம் கே. வி. லைன்கள் இருந்தன. இவர்களிடத்தில் இந்த ஆட்சியை ஒப்படைக்கும்போது 15 லட்சம் கே.வி. லைன்கள் என்ற அளவில் நிரமப்பட்டு அதிகப்படுத்தியிருக்கிறோம். நாங்கள் சொல்லும் குற்றச்சாட்டு என்னவென்றால், இதுவரைக்கும் காங்கிரஸ் செய்த அபிவிருத்தி வேலைகளைவிட நீங்கள் சிறப்பாக எதாவது செய்திருக்கிறீர்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இன்னும் வேகமாகச் செய்கிறோம், குறைக்கவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இன்னும் வேகமாகச் செய்கிறோம், குறைக்கவில்லை என்று பொருப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். பொதுத் தேர்தலுக்கு முன்பு கோவையிலே 4 மில்கள் மூடப்பட்டிருந்தன. ஆனால் இந்தப் புண்ணியவான்கள் ஆட்சியிலே 24 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன.





எத்தனை ஸ்ட்ரைக்குகள் நடந்திருக்கின்றன? எவ்வளவு தொழிலாளர்களின் வேலை நேரம் வீணடிக்கப்பட்டிருக்கின்றது? இவைகள் எல்லாம் நடைபெறாமல் இருந்திருந்தால் இன்னும் தமிழ்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு தூரம் இவர்கள் வந்து கெட்டும் கூட அபிவிருத்திகள் இருக்குமானால் இவர்களால் கெடுக்கப்படாமல் இருந்திருந்தால் எவ்வளவுதூரம் உயர்ந்திருக்க முடியும் என்பது பிரச்சினையே தவிர வேறு இல்லை. எங்கள் ஆட்சிக் காலத்தில் 25 மில்கள் மூடப்படவில்லை. இந்த ஒரு வருஷத்தில் மட்டும் வேலை நிறுத்தம் 305 நடந்திருக்கிறது. இதுபோல எங்கள் ஆட்சியில் நடக்கவில்லை. இந்த ஒரு வருஷத்தில் மட்டும் மனித சக்தி வேலை இழப்பு நாட்கள் பதினோரு லட்சத்து இருபதாயிரத்து ஐநூற்றுப் பதினேழு ஆகும். இதுபோல எங்கள் ஆட்சியில் நடைபெறவில்லை. இதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மனித வேலை இழப்பு நாட்கள் 11 லட்சம் சொச்சம் என்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரத்திலேயே அவர்களது ஆட்சியில் ஏற்பட்ட மனித வேலை இழப்பு நாட்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் சொல்ல வேண்டும். காங்கிரஸ் ஆட்சியில் உள்ள மற்ற மாநிலங்களின் நிலைமையை எடுத்துச் சொல்ல வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாம் தமிழ்நாட்டுச் சட்டசபையில்தான் இருக்கிறோம். இங்குள்ள நிலைமையைத்தான் பார்க்க வேண்டுமே தவிர அந்த நாட்டைப் பார், இந்த நாட்டைப் பார் என்று சொல்வதில் பயன் இல்லை. காங்கிரஸ் கட்சி இந்த மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்த 1965-ம் வருடத்தில் நடந்த ஸ்ட்ரைக் 135 தான். மனித சக்தி வேலை இழப்பு நாட்கள் $4\frac{1}{2}$ லட்சம் தான். 1966-ம் ஆண்டு நடந்த ஸ்ட்ரைக்குகள் 176 தான். மனித வேலை இழப்பு நாட்கள் $7\frac{1}{2}$ லட்சம் தான். ஆனால், இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே வேலைநிறுத்தங்கள் 305 ஆக உயர்ந்திருக்கிறது. $11\frac{1}{4}$ லட்சம் நாட்கள்—மனித சக்தி வேலை இழப்புநாட்களாயிருக்கின்றன. இல்லையென்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் உறுப்பினர் 1959-ம் ஆண்டில் இருந்து பார்த்து அவர்களது ஆட்சியில் இதைவிட அதிகமான ஸ்ட்ரைக்குகள் நடந்திருப்பதையும் சொல்லலாம். இந்த 11 லட்சத்தையும் விட அதிகமான மனித சக்தி வேலை இழப்பு நாட்கள் இருப்பதையும் பார்த்துச் சொல்லலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இங்கே நீங்களே கொடுத்திருக்கிற புள்ளி விவரங்களைப் பார்த்துத்தான் சொல்கிறேன். 1966-ல் காங்கிரஸ் ஆட்சியில் 135 வேலை நிறுத்தங்கள்தான் நடைபெற்றிருக்கின்றன. உங்களது ஆட்சியில் 305 வேலை நிறுத்தங்கள் 1967–68-ல் நடந்திருக்கின்றன. 1966-ல் வேலை இழப்பு நாட்கள் $4\frac{1}{2}$ லட்சம் என்றால் உங்கள் ஆட்சியில் 1967–68-ல் $11\frac{1}{4}$ லட்சம் வீணடிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதை நீங்கள் மறுக்க முடியாது.

அடுத்தபடியாக, நமது முதல் அமைச்சர் அவர்கள் வரிசை வரிசையாக, அடுக்குமுறையில் பேசிவிட்டார்கள். நான் பேசும்போது "செயலற்ற", "நேர்மையற்ற" என்று சொன்னதற்கு தொடர்பு இல்லை என்பதாகக் காட்டினார்கள். அவரைப்போல பேசும் திறன் எனக்கு இல்லை. அவர் பேச்சுத் திறன் படைத்தவர்கள். இதை ஏன் செயலற்ற அரசு என்றேன், நேர்மையற்ற அரசு என்றேன் என்பதற்கு விளக்கம் கேட்டால் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்தலுக்கு முன்னால் மக்களுக்கு முன்னிலையில் பல வாக்குறுதிகளைத் தந்தீர்கள். அந்த வாக்குறுதிகளை நம்பி அவர்களும் உங்களுக்கு ஓட்டுத் தந்தார்கள், எங்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை. மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சி பீடத்தில் ஏறியிருக்கிற நீங்கள்—மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றினீர்களா என்று அடிக்கடி கேட்க வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சியில் இருக்கிற எங்களுக்கு இருக்கிறது. அடிக்கடி முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது விளம்பரத்திற்காகப் பேசுவ

தாகச் சொன்னார்கள். அவர்களுக்கு மட்டும் விளம்பரத்தில் ஆசையில்லையா? மந்திரிசபை அமைந்தவுடனேயே "நான் பத்திரிகைகளுக்குக் குழந்தை" என்று அவர்களை அவர் தாஜா செய்துகொள்ளவில்லையா என்று கேட்கிறேன். எவ்வளவு கனிவான வார்த்தைகளைப் பேசி—தங்களுடைய தவறுகளை எல்லாம் அவர்கள் மறைப்பதற்கு அவர்களைக் கைக்குள் போட்டுக்கொண்டார்கள். அப்படி அவர்களைப் போல விளம்பரத்திற்காக என்று இல்லாவிட்டாலும் எங்களுடைய கடமையை நாங்கள் ஆற்ற வேண்டியதாக இருக்கிறது. விளம்பரம் இல்லாது எந்தக் காரியமும் நடக்காது. தங்களுக்கு விளம்பரம் கிடைக்க வில்லையே என்பதற்காக, எங்களுக்கு விளம்பரம் கிடைக்கிறதே என்பதற்காக அவர் வருத்தப்படலாம். நீங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் எங்கே ? அவற்றை எங்கே செயல்படுத்தினீர்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறபோது விளம்பரத்திற்காகப் பேசுகிறேன் என அதைத் தட்டிக் கழிப்பதில் பயன் இல்லை. பத்திரிகையில் வந்ததை நான் போட்டோ பிடித்தே வைத்திருக்கிறேன். நாளைக்கு எங்கே இவற்றுக்கு ஆதாரம், நாங்கள் சொன்னோமா என்று சொல்வீர்கள். இதை நீங்கள் மறுக்க முடியாது. "தி.மு. கழகம் ஆட்சி பீடம் ஏறினால்—ஆட்சி பீடத்தில் ஏறியவுடனேயே விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும், ரூபாய்க்கு ஒரு படி என்றும் படிப்படியாக ரூபாய்க்கு 3 படி வீதம் அரிசி கொடுக்கும்படி வழி செய்யும். மக்களை மதிக்கும் ஆட்சியாக இருக்கும். ஐந்து ஏக்கருக்கு குறைவாக நிலம் உள்ள ஏழை உழவர்களுக்கு நிலவரியை ரத்து செய்யும். ஏழைகள் மீதுள்ள தாங்கமுடியாத வரிச்சுமையைக் குறைக்கும். ஏழைகளின் அன்றாடத் தேவையான தீப்பெட்டிக்கும், மண்ணெண்ணெய்க்கும் வரி இருக்காது. மக்கள் துயர் தீர்க்க அண்ணா அவர்கள் தந்த உறுதி மொழிகள் இவை. உங்கள் சின்னம் உதய சூரியன்" என்கிற விளம்பரத்தைக் கொடுத்து மக்களுக்கு முன் உங்கள் வாக்குறுதிகளை வைத்தீர்களே, எங்கே உங்கள் வாக்குறுதிகள் காப்பற்றப்பட்டன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதை ஓராண்டில் செய்துவிடுவோம், இரண்டாண்டில் செய்துவிடுவோம் என்பதாக ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** "தி. மு. கழகம் ஆட்சி பீடம் ஏறியவுடனேயே என்று சொன்னால் பதினைந்து வருஷங்கள் கழித்து என்று அர்த்தமா ? இந்த ஓராண்டுக்குள்ளேயே நீங்கள் செய்திருக்கிற காரியங்களைப் பார்க்கிறபொழுது பதினைந்து ஆண்டுகள் கழித்து இந்த ஆட்சியை நீங்கள் கொடுத்தீர்களானால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவே மாட்டோம். அவ்வளவு தூரம் நிலைமை சீரழிந்து போய்விடும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆட்சிபீடம் ஏறியவுடனே என்பதை அடுத்து என்ன வருகிறது, படியுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆட்சி பீடத்தில் ஏறியவுடனேயே ரூபாய்க்கு ஒரு படி என்றும் . . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுதான் சென்னையிலும், கோவையிலும் ஒரு படி அரிசி போட்டோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் வீட்டுக்கு ஒரு படி அரிசி
இரவு 7-00 போட்டோம் என்று சொல்லிவிடுங்கள் போதும். சொன்னது தவறு என்று சொல்லுங்கள், ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன். அவர்கள் நேர்மையாளர்களாக இருப்பார்களானால், "ஐயா நாங்கள் ஏதோ சொன்னோம், சொன்னது தவறு" என்று சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லாமலிருப்பது ஏறிய ஏணியை மேலே ஏறிவிட்ட பிறகு தட்டிவிட்டதுமாதிரித்தான் இருக்கிறது. அதுமாதிரித்தான் பதவிக்கு வந்துவிட்டார்கள். நாங்கள் எத்தனையோ வாக்குறுதிகளைக் கொடுத்தோம், நிறைவேற்ற முடிந்ததா ? ஆனால் நாங்கள் இந்த மாதிரியான மலிவான வாக்குறுதிகளைக் கொடுக்கவில்லை. அவர்கள் மலிவான





வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள், நிறைவேற்ற முடிந்ததா ? 1967-ம் ஆண்டுக்கு முன்பு மழையே இல்லை, அப்படி வறட்சியான நிலைமை இருந்த நேரத்திலே மக்கள் மிகவும் கஷ்டமான நிலைக்கு ஆளாகிவிடுவார்களே என்று நினைத்து என்ன என்ன காரியங்கள் செய்திருக்கிறோம் தெரியுமா ? திரு. சுப்பிரமணியம் அவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று அரிசி வாங்கிக்கொண்டு வந்து போடக்கூடிய தன்மையிலே மக்களைக் காப்பாற்றினோம். எவ்வளவு அதிருப்தியை வேண்டுமானாலும் பெற்றுக்கொண்டு மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் செயல்பட்டு அவர்களைக் காப்பாற்றிய பெருமை காங்கிரசுக்குத்தான் இருக்கிறது. அதுதான் கம்பர் அழகாகச் சொல்லியிருக்கிறார், அவர் சொன்ன முறையில் செய்திருக்கிறோம். "நவைமிக நலியினும் நடுவு நோக்குவர்" என்று சொன்னதைப் போல் நாங்கள் பதவியையும் பட்டத்தையும் பொருட்படுத்தவில்லை, எது நியாயமோ அதைத்தான் செய்தோம். இப்பொழுதும் செய்துகொண்டிருக்கிறோம். எதிர்க்கட்சியிலிருக்கிற எங்களைப் பார்த்தால் உற்சாகம் குன்றியவர்களாகவா தெரிகிறது ? உங்களைவிட வேகமாகத் தானே பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் கோபமாக அல்ல. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நிலைமை மோசமாக இருக்கிறது. நேர்மையாக நடக்கவேண்டும், செயல் திறனுடன் நடக்க வேண்டும் என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில்கள் ஏன் ஸ்தம்பித்து நிற்கின்றன? முதலமைச்சர் அவர்கள் அதற்கு என்னமோ காரணம் எல்லாம் சொல்கிறார்கள். மவுண்ட் ரோடிலே டாக்ஸி ஓட்டுகிறார்களே அவர்களைக் கேட்டால் சொல்கிறார்கள். ஐயா உங்கள் காலத்திலே ஒரு நாளைக்கு 40 ரூபாய் வரையில் வசூலாகிக் கொண்டிருந்தது, இவர்கள் வந்ததற்குப் பிறகு ஒரு நாளைக்கு இருபது ரூபாய் வசூலாகக்கூடிய நிலைமைதான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்கு இன்றைக்குப் பொருளாதாரம் ஸ்தம்பித்து நிற்கும்படியான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது......

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** டாக்ஸிக்காரர்கள் என்னிடம் கூடச் சொன்னார்கள், நீங்கள் வந்து பஸ்களை எல்லா இடங்களுக்கும் போட்டுவிட்டீர்கள், கட்டணத்தையும் குறைத்துவிட்ட காரணத்தினால் ஏழைகள் எல்லாம் அதிலே சென்று விடுகிறார்கள் என்று.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஏழைகள்கூட டாக்ஸியில் போகக்கூடிய அளவுக்கு ஆட்சியை நடத்தும்படியான நிலைமை அப்பொழுது இருந்தது. அவ்வளவு வருவாய் இருந்திருக்கிறது. ஏழைகள் டாக்ஸியில் போகக் கூடிய நிலைமைக்குப் பொருளாதாரம் வளர்ந்திருந்த இப்பொழுது பணக்காரர்கள்கூட அதிலே போகமுடியாதபடி எல்லாம் ஸ்தம்பித்து நிற்கின்றன . . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவர்களுடைய ஆட்சியிலே ஏழைகள்கூட டாக்ஸியிலே போகக்கூடிய அளவுக்குப் பொருளாதாரம் வளர்ந்து நின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள். ஏழைகள் டாக்ஸியிலே போனால்தான் போகமுடியும் என்ற அவல நிலையில் நாங்கள் ஏழைகளை வைத்திருந்தோம் என்றுதான் அவர்கள் சொல்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்கள், நிறைவேற்றவில்லை. வாக்குறுதிபற்றி அண்ணாவின் பொன்மொழி இருக்கிறது, அதை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். அதிலே ஜனநாயக வாதிகள் பொதுவாழ்விலே ஈடுபடக்கூடியவர்கள் எந்த அளவுக்கு வார்த்தைகளை வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். "கோபுரத்திலே இருக்கிற பதுமை அழகான பதுமை; நம்மையே பார்த்துக்கொண்டிருப்பதுபோல் தோன்றும், ஆனால் அது தொட்டுத் தாலிகட்டிய மனைவிக்குச் சமம் அல்ல. அதைப்போல் ஜனநாயக வாதி, நான் வாக்குறுதிகளைத் தருகிறேன் என்று சொல்வ

கோபுரத்துப் பொம்மைக்குச் சமமே தவிர, வீட்டிலே கொலுவைத்திருக்கிற இல்லத்தரசிக்கு சமானமல்ல.” என்று சொல்லி அறிஞர் அண்ணா என்று போடப்பட்டிருக்கிறது. இதை அவர்கள் நிச்சயமாக மறுக்க முடியாது என்று நினைக்கிறேன்....

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதிலே நான் பேசியதாகக் குறிப்பிட்டிருப்பதை நான் மறுக்கவில்லை. இப்பொழுது அது எந்த வகையிலே பொருத்தமுடையதாகிவிட்டது ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதைத்தான் நான் சொல்லப்போகிறேன். 3 படி அரிசி போடுவோம் என்று நீங்கள் கொடுத்த வாக்குறுதியெல்லாம் கோபுரத்துப் பொம்மை மாதிரித்தான், தொட்டுத் தாலி கட்டிய மனைவியல்ல என்பது மனதுக்குள்ளே இருக்கிறது. ஜனநாயகவாதிகள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் கோபுரத்துப் பொம்மைகள் என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள், அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதாய் இருந்தால் நான் அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்....

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் சொன்னதைப் பொதுமக்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள், இப்பொழுதும் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். அதுதான் தென்காசித் தேர்தல் முடிவிலிருந்து தெரிகிறது. எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைப்போல் நாங்கள் வேறு மாதிரியாக நடக்கிறோம் என்று மக்கள் கருதியிருப்பார்களானால் தீர்ப்பு வேறுமாதிரியாக இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தேர்தலைப்பற்றிச் சொல்கிறார்கள், நாங்கள் தோற்றதினாலே அதிகமாக அதைப்பற்றிச் சொல்லவேண்டாம் என்று இருக்கவில்லை. முதலமைச்சர் சொன்னார்கள் தேர்தலில் ஜெயித்தோம் என்று. சாதாரணத் தேர்தலா அது ? தேர்தலுக்கு முன்னாலேயே அமைச்சரவையின் அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டன. அமைச்சர்கள் எல்லோரும் ஒன்பது அமைச்சர்களும் முன்னாலேயே போய் அங்கே டேரா அடித்தார்களே. தேர்தல் காலத்திற்கு முன்னாலே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஒரு நடைமுறை இருந்தது. தேர்தலுக்கு முன்னாலே எந்தவிதமான மாற்றுதலும் இருக்கக்கூடாது, புதுப்புதுத் திட்டங்கள், வேலைகள் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று இருந்தது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பொதுத் தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்னாலாகிலும் அமைச்சரவை பதவி விலகவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருத்துத் தெரிவித்தும் அப்பொழுது இருந்த காங்கிரஸ் அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. பொதுத் தேர்தல் நேரத்திலே அமைச்சரவை விலகவேண்டுமா, வேண்டாமா என்பதை அடுத்த பொதுத் தேர்தல் வருகிறபோது நாம் தீர்மானித்துக் கொள்வோம். இடைத் தேர்தல் நடக்கிறபோது இப்படி நடக்கிற காரியங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம், புதிதாகச் செய்யவில்லை. தர்மபுரி இடைத் தேர்தலின்போது, நாங்கள் ஏதோ டேரா அடித்ததாகச் சொன்னார்களே, அவர்கள் அங்கே டேரா அடிக்கவில்லையா, அமைச்சர்கள் சென்று பேசாமல் இருந்தார்களா, வாக்குறுதி கொடுக்காமல் இருந்தார்களா ? ஏதோ இப்படிப்பட்ட காரியங்களை அவர்கள் செய்யாதவர்களைப் போலவும் நாங்கள்தான் சென்றோம், செய்தோம் என்பதைப்போலவும் பேசுவது மிகமிகத் தவறானது. வெளி மாநிலத்தைப் பற்றிப் பேசினால் வெளி மாநிலத்திற்குப் போகவேண்டாம் என்று சொன்னார்கள். நான் முதலிலேயே குறிப்பிட்டுச் சொன்னேன். எடுத்துக்கொள்ளப்படுகின்ற பிரச்னைக்கு உவமை காட்டி, ஒப்புக் காட்டிப் பேசுவதன்மூலம்தான் உண்மையான அளவில் அதைப் புரிந்து கொள்ளமுடியும், அந்த வகையிலே எங்கே எங்கே ஒப்பு, உவமைகள் இருக்கின்றனவோ அவற்றைக் காட்டிப் பேசுவதை அவர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அரியானாவில் இடைத் தேர்தல் பொதுத் தேர்தலாக வந்த நேரத்திலே பிரதம மந்திரியும் மற்ற எல்லா அமைச்சர்களும், எதிர்க்கட்சித் தலைவர்





சொன்னார்களே அதைப்போல் அங்கே டேரா அடித்தார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்பொழுது அமைச்சர்கள் எல்லாம் சென்றார்களா, இல்லையா ? காங்கிரஸ்காரர்கள் என்ற முறையில் இடைத் தேர்தலில் நாம் போகக்கூடாது என்று ஏதாவது கட்டுத் திட்டம் வகுத்தார்களா ? அவர்கள் அரியானாவிலும், தர்மபுரியிலும் தேர்தலின் போது செல்லலாம், நாங்கள் செல்லக்கூடாது என்று கருதுவார்களானால், நாங்கள் போவதாலே மக்களுடைய மனம் மாறிவிடும் என்று அவர்கள் கருதுவார்களானால் உள்ளபடியே எங்கள் விஷயத்திலே அவர்களுக்கு அச்சம் இருப்பதாகக் கருதுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பொதுத் தேர்தலுக்கு முன்னால் போகக்கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை, சொன்னவர்களே அவர்கள்தான், நாங்கள் சொல்லவில்லை. இப்பொழுது நாங்கள் தப்புப் பண்ணிவிட்டதாகச் சொல்கிறார்கள் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நாங்கள் சொன்னது பொதுத் தேர்தல்பற்றி. இடைத்தேர்தல் அல்ல, ஆகவே அமைச்சர்கள் சென்றது முறைதான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** விலகி நிற்போம் என்று அவர்கள் சொன்னார்கள் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இடைத் தேர்தலிலே அமைச்சர்கள் வரக்கூடாது என்று நாங்கள் சொன்னதாக இல்லை. பொதுத் தேர்தலின்போதுதான் அமைச்சர்கள் பதவி விலகவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இடைக்காலத் தேர்தலுக்குப் போவதுதான் கட்சியின் கொள்கை என்று சொல்கிறார்கள், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதையெல்லாம் நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் இந்தச் சமயத்திலே போய் காரியங்கள் என்ன என்ன செய்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்காகத்தான். பள்ளிக்கூடங்களைத் திறப்பது, நிலம் வழங்குவதற்காகப் பட்டாக்கள் கொடுக்கும்படியான நிலை இவற்றையெல்லாம் பிரச்சாரத்திற்காகச் செய்திருக்கிறார்கள். இதைத் தவிர யார் யார் என்ன செய்தார்கள் என்பதுபற்றி முதலமைச்சர் அவர்கள் விரும்பினால் தனியாகச் சொல்லிக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் *

* * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைப்பற்றி குறிப்பிடக்கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் பண்பாடு உடையவர்கள், தவறு செய்ததைக் கண்டிக்கிறேன் என்று சொன்னார்கள்: செய்யக் கூடாத காரியத்தைச் செய்தபொழுது ஏன் கண்டிக்கவில்லை ? ஏன் போகக்கூடாது என்று சொல்லவில்லை ? அதைத் தவறு என்ற நிலையில் ஏன் சொல்லவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இடைத்தேர்தல் நேரத்தில் அமைச்சர்கள் சென்று எதை எதையோ திட்டங்களையெல்லாம் துவக்கினார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அன்று திருவண்ணாமலையிலே இடைத்தேர்தல் நடந்த நேரத்தில் காங்கிரஸ்அமைச்சர்கள் 48 லட்சம் ரூபாய் செலவில் குடிதண்ணீர்த் திட்டம் அமைக்கப்படும் என்ற வகையில் உறுதியளித்தார்கள், நிறைவேற்றினார்கள், பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. ஒரு மார்க்கெட்டுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

---

* பேரவைத் துணைத் தலைவர் கட்டளைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** திருச்செங்கோட்டிலே இடைத் தேர்தல் நேரத்திலே தண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதாக உறுதியளித்து, குழாய்கள் எல்லாம் கொண்டுவந்து போடப்பட்டன. அந்தத் தேர்தலிலே தோல்வியுற்றுவிட்டதால் அந்தக் குழாய்கள் எல்லாம் திரும்ப எடுத்துச் செல்லப்பட்டன என்பதை நான் கவனமூட்ட விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்களும் வேண்டுமானால் அது போல் குழாய்களை எல்லாம் திரும்ப எடுத்துக்கொண்டு போய்களேன். ஒரு குற்றச்சாட்டைச் சாட்டும்போது எதிர்க் குற்றச்சாட்டு சாட்டுவது பண்பல்ல. செய்தது தவறு இல்லையா என்பதுதான். "நீங்கள் செய்தீர்கள், நாங்கள் செய்கிறோம்" என்று சொல்லுவது சரியல்ல. நாங்கள் செய்த குற்றங்களைச் செய்யாத நிலையில் ஏன் நீங்கள் இருக்கக்கூடாது? தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டோம், மக்கள் ஆதரித்துவிட்டார்கள் என்று சொல்லிப் பயன் இல்லை. எவ்வளவுதூரம் செலவாயிற்று என்பதற்கு மனச்சாட்சிப்படி—அவர்கள் மனச்சாட்சியின் பேரில் நம்பிக்கை வைத்து பதவிப் பிரமாணம் எடுத்தவர்கள்—நாங்கள் கடவுள் மீது நம்பிக்கை வைத்துப் பதவிப் பிரமாணம் எடுத்தவர்கள்—எண்ணிப் பாருங்கள்.

அடுத்தபடியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நெல் விலை சமாசாரம் கருத்திருமனின் தனிப் பொருளாதாரம் என்று சொன்னார்கள். நான் வெட்கப்படவில்லை. என் குடும்பம் விவசாயக் குடும்பம். விவசாயியாகப் பிறந்தேன். இன்றும் சொல்லுகிறேன்—சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கும் எல்லோரையும்விட நான் சிறப்பான முறையிலே விவசாயத்தைச் செய்ய முடியும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவருடைய குடும்பம் விவசாயக் குடும்பம் என்பது அவரைப் பொறுத்தவரையிலே கொஞ்சம் பொருத்தம். அவருடைய மகன்களிலே ஒருவர் டாக்டர். இன்னொருவர் எஞ்ஜினியர். விவசாயக் குடும்பமாக இருப்பது இன்றையதினம் உத்தியோகஸ்தர்கள் குடும்பமாக மாறி விட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஏன் இப்போது மாறினேன் என்பதற்கான காரணத்தைப் பாராளுமன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். I will prefer my son to be a dock-labourer than be a farmer in this country என்று சொல்லியிருக்கிறேன். ஒப்பற்ற பிரதமர் நேருஜி அவர்கள் முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். நான் நெல்லுக்கு விலை அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், பணக்காரர்களுக்காக வாதாடுகிறார் என்று கம்யூனிஸ்டு கட்சியினரும் மற்றவர்களும் முதலைக் கண்ணீர் வடித்தார்கள். ஏழை உழவனிடத்தில் ஒரு மூட்டை நெல் இருந்தால், அவனுக்கு அந்த விலை வேண்டாமென்று அர்த்தமா ? இதிலேமட்டும் முதலமைச்சர் அவர்கள் பாக்கி மாநிலத்தைக் கை காட்டுவது இல்லை. தொட்டால் சுடும். கம்யூனிஸ்டுகள் அரசாங்கம் இருக்கின்ற கேரள மாநிலத்திலே குவிண்டாலுக்கு 60 ரூபாய் கொடுக்கிறார்கள். மேற்கு வங்காளத்தில் 60 ரூபாய் கொடுக்கிறார்கள். பாக்கி இருக்கும் மாநிலங்களிலும் அதிக விலை கொடுக்கப்படுகிறது. இங்கு ஏன் கொடுக்கக்கூடாது ? "நெல் விலையையும் கூட்டிக் கொடுக்க வேண்டும், படியரிசித் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும்" என்று கேட்கிறார்களே என்று சொல்லுகிறார்கள். படியரிசித் திட்டத்தை நிறைவேற்றுகிறேன் என்று சொல்லுகிறவர்கள் நீங்கள். நெல் விலையை அதிகமாகக் கூட்டிக் கொடுத்துவிட்டுப் படியரிசித் திட்டத்திற்கான வழிவகையைக் காணவேண்டிய பொறுப்பு உங்களிடத்தில் இருக்கிறது. முதலமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் கணக்குப் போட்டுச் சொன்னார்கள். அந்த வகையிலே நெல்லுக்கு விலையை ஏற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டால் அது விவசாயத் தொழிலாளி, விவசாயத்தில் பாடுபடும் குத்தகைதாரர்கள் ஆகியோருக்காகத்தான் கேட்கிறேனே தவிர, மிராசுதாரர்களுக்காகக் கேட்கவில்லை என்பதை ஊர்ஜிதமாக, உறுதியாகத் தெரிவித்



துக் கொள்ள ஆசைப்படுகிறேன். வலதுசாரிக் கம்யூனிஸ்டுகள்கூட நெல் விலையை உயர்த்த வேண்டுமென்றுதான் கூறுகிறார்கள். இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் முதலிலே எங்களைத் திட்டி, பிறகு இந்த அரசாங்கத்தைத் திட்டுகிறார்கள். இன்றைக்கு ஆட்சி எப்படி நடத்தப்படுகிறது ? வள்ளுவர் பார்த்தார்—இதுமாதிரி அரசாங்கம் ஏற்படக்கூடும் என்று எண்ணித்தான் முன்பே எழுதி வைத்திருக்கிறார்.

> " பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
> கொல்குறும்பும் இல்லது நாடு "

என்று கூறியிருக்கிறார்.

பல்குழுவும்—யுனைடெட் ஃப்ரண்ட் என்று சேர்ந்திருக்கிறார்களே, அது தான். பாழ் செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு" . . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** (உச்சரிப்பைப் பொறுத்து) "வேந்தலைக்கும்" என்று சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் தமிழன் அல்ல, கர்நாடகத்தைச் சேர்ந்தவன் என்று முதலமைச்சர் அவர்களும் சொல்லிவிட்டார்கள். ஆகவே, நான் சொல்லுவதில் தவறு இருந்தால் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய நாட்டில் துரதிருஷ்டவசமாக ஜனநாயகம் என்னும்படியான அடிப்படையைக் கொண்டு வெளிநாட்டுக்குக் காட்டிக் கொடுக்கும்படியான அநேக கட்சிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

**திரு. மு. சின்னசாமி :** ஆன் எ பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் சார். இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரகாரம் அரசியல் கட்சியாக இயங்கிக் கொண்டிருக்கின்ற கட்சியைப்பற்றிச் சட்ட மன்றத்தில் பேசும்போது "வேறு ஒரு நாட்டுக்கு விஸ்வாசமாக இருக்கிறது" என்ற முறையில் அவையிலே சொல்லலாமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆயிரம் தரம் சொல்லலாம். அதை நிரூபிக்க நான் தயாராக இருக்கிறேன். 1962ம் வருஷத்திலே சைனா இந்தியா தேசத்தின்மீது படையெடுத்த சமயத்தில் இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் மாலை போட்டு வரவேற்றனர்.

(திரு. மு. சின்னசாமி எழுந்தார்)

**திரு. என். சங்கரய்யா :** முதலிலே யாரைப்பற்றிக் குறிப்பிடுகிறார் 'என்பதைப்பற்றி வெளிப்படையாகச் சொல்லக்கூடத் தைரியமில்லை எதிர்க் கட்சித் தலைவருக்கு. ஏதோ சில கட்சிகள் என்று சொல்லுவதை ஊகித்துக்கொண்டு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் ஒன்று கூற விரும்புகிறேன். எங்கள் கட்சியின் தலைவர் எம். ஆர். வெங்கட்டராமன் அவர்கள்மீது ஹைகோர்ட்டிலே ஹேபியஸ் கார்ப்பஸ் வழக்கு ஒன்று வந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுகளுடைய திட்டத்தைப்பற்றியோ, அவர்களுடைய தேசபக்தியைப்பற்றியோ சந்தேகிப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லையென்று உயர்நீதி மன்றத் தீர்ப்பிலே கூறியிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, இன்றைக்கும் சொல்லுகிறேன்—அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமிருந்து ஆயிரக்கணக்கான டாலர் கடனைப் பெற்று இந்தியாவின் நாணயத்தையே உலகச் சந்தையில் மதிப்புக் குறைவாக, கேவலமாக வைத்திருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியினர்தான் காட்டிக் கொடுப்பவர்கள் என்று கூறுகிறது இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி. 1947ல் இருந்த பிரிட்டிஷ் முதலாளிகளும், அமெரிக்க முதலாளிகளும் காங்கிரஸ் கட்சியை . . .

**(அவையில் பலர் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பினார்கள்.)**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த மன்றத்தில் ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைப் பழித்தோ, இழித்தோ பேசுவது கூடாது என்பதைப்போலவே ஒரு கட்சிக்காரர் இன்னொரு கட்சியை இழித்துப் பேசுவது கூடாது என்பதும் முறைதான். ஆனால் அந்த முறையை, பேசுகின்ற அத்தனை பேரும் கடைப்பிடிக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத்தில் இடம் பெற்றிருக்கின்ற ஒரு அரசியல் கட்சி நாட்டைக் காட்டிக் கொடுக்கக் கூடிய கட்சி என்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகின்ற போது அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், தாங்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்கக்கூடியவர்கள் அல்ல என்பதற்கு உயர்நீதி மன்றத் தீர்ப்பை எடுத்துக் காட்ட வேண்டியது அவர்கள் கடமை அல்லவா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பாகிஸ்தானுடைய ஒற்றன் ஒருவன் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பல ஆண்டுக் காலம் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "உட்பகை சேராதியல்வது" என்பதை அன்று உணரவில்லையா? இந்த உட்பகை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலேயே இருந்திருக்கிறதே.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** துரோகிகள் என்பவர்கள் எல்லா இடத்திலும் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். நான் ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய கட்சியைப் பற்றிப் பலவாறாகப் பேசிய சமயத்தில் நான் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்தேன். நான் இவர்களைப்பற்றிச் சொல்லும்போதுமட்டும் என் ஆத்திரப்படுகிறார்கள்? ஏதோ ஒரு வழக்கிலே வேண்டுமானால் அவர்கள் நாட்டுக்கு எதிராக இல்லை என்று நிரூபிக்கப்பட்டிருக்கலாம்.... ஏற்கெனவே நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் குறிப்பிட விரும்புகிறேன். நான் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்த சமயத்தில் நடந்தது. அதற்கும் இந்தக் கேஸுக்கும் சம்பந்தம்கிடையாது. காங்கிரஸ்காரன்தான் தீ வைத்தான் என்றெல்லாம் சொல்கிறார்கள். மதுரையில் . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எதிர்கட்சித் தலைவர் அவர்கள், தேசத் துரோகமான கட்சி, காட்டிக் கொடுக்கிற கட்சி என்றெல்லாம் சொன்னார்கள். அக்கட்சி சட்டபூர்வமாக தேர்தலில் நிற்க அனுமதிக்கப்பட்ட ஒரு கட்சி. ஒரு ராஜ்யத்தில் ஆட்சி செலுத்தி வருகிற கட்சி அது. அப்படிப்பட்ட தேசத்துரோகமான கட்சியைத் தடை செய்யவில்லை என்றால் இவர்கள் கட்சிக்காரர்களும் தேசத் துரோகிகளா அல்லது அதற்கு உடந்தையா? சட்டப்படி அமைந்துள்ள ஒரு கட்சியைத் தேசத்துரோக கட்சி என்று சொல்வதை அனுமதிக்கலாமா? அந்த வார்த்தையை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது, 1960ல் கொடுத்த ரூலிங்.

"When Members belonging to one party attacked another party in their speeches, it was not fair for them to raise points of order when Members belonging to that Party attacked their Party in return. Hence, it was desirable that Members were careful while speaking

இப்போதுள்ள விவாதம் ஒரு கட்சியின்மீது நம்பிக்கையில்லை என்பதைத் தெரிவிப்பதுதான். அதை விட்டுவிட்டு ஒருவருக்கொருவர் இப்படி மாறி மாறிப்பேசுவது முறையாகாது. எதிர்கட்சித் தலைவரவர்கள் இந்த அவையின் மரபைக் காப்பாற்றவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** காங்கிரஸ்காரர்களை பச்சோந்திகள் என்று குறிப்பிட்டார்கள். யார் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டாலும் அது தப்புதான். இவ்வளவு ரூபாய்க்குத்தான் நெல் விற்கவேண்டுமென்று இருக்கிறது. அதிக விலையில் கருப்பு மார்க்கெட்டில் விற்கிறார்கள் என்றால்





அதுவும் தேசத் துரோகமான செயல்தான். இந்த மாநிலத்தில் தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது, அதற்குக் கூட்டணியில் உள்ள அந்தக் கட்சிக்கு பொறுப்பிருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். இந்த நிர்வாகத்தைச் சீரழிக்க, ஸ்தம்பிக்க வைக்கவேண்டுமென்று திட்டங்கள் போடுவதைப்பற்றி குறிப்பிடுகிறேன். திராவிடமுன்னேற்றக் கழகத்தாரை தலைவர்களாக வைத்துக்கொண்டு தொழிற்சங்கங்களில் இடதுசாரி கம்யூனிஸ்ட்கள் ஊடுருவிக் கொண்டிருப்பது நல்லதல்ல என்றுதான் கூறுகிறேன். சர்க்காரின் ஆதரவை வைத்துக்கொண்டு அப்படிச் செய்வது மிகவும் ஆபத்தான சூழ்நிலையாகும் என்று எச்சரிக்கிறேன். என்னிடம் சில தகவல்கள் இருக்கின்றன. அக்டோபர், நவம்பர் மாதத்தில் இடதுசாரி கம்யூனிஸ்ட்கள் பொதுவேலை நிறுத்தம் செய்ய திட்டம் போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவத் துணைத் தலைவர் :** இந்த மன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி பேசவேண்டும். நடக்கப்போகிற நிகழ்ச்சிகளை எதிர் நோக்கிப் பேசுவது முறையல்ல. அவற்றையெல்லாம்பற்றிப் பேச வேண்டாம்.

**திரு. என். சங்கரய்யா :** பாய்ண்ட் ஆஃப் ஆர்டர். எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அக்டோபர், நவம்பரில் நடைபெறப் போவதைப்பற்றிப் பேசுகிறார்கள். அப்படி அவர்கள் பேசுவது என்றால், அவர்களின் கட்சி இன்னும் மூன்று மாதங்கள் கழித்து இந்த மாநிலம் பூராவிலும் தீ வைக்கத் திட்டமிட்டிருக்கிறது என்று நான் சொல்லவும் எனக்குச் சம உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் ஏற்கனவே சொல்லி விட்டேன், அப்படியெல்லாம் பேசுவது முறையாகாது என்று. எதிர் காலத்தில் நடக்கப் போவதைப்பற்றிப் பேச வேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்குள்ள தகவலை வைத்துச் சொல்கிறேன். அவர் சொல்வதை அவர் நிரூபித்தால் அதை ஏற்றுக் கொள்ள நான் தயார். இப்போதுள்ள வேலை நிறுத்தங்கள் பரவலாகப் பரவும். அப்போது சர்க்கார் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். ஆகவே எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் நான் அரசாங்கத்தை எச்சரிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது கூட்டுறவு நிதியிலிருந்து பணத்தை நல்ல காரியங்களுக்குக் கொடுப்பதில் தவறு இல்லை என்று சொன்னார்கள். திரு. பக்தவத்சலம் அவர்களைப் பற்றியும், செங்கல்பட்டு ஜில்லாவைப்பற்றியும் சொன்னார்கள். மாநிலத்தில் உள்ள எல்லா கூட்டுறவு சங்கங்களுக்கும் உத்தரவு போடப்படவில்லை. ஆஸ்பத்திரி வருவது நல்லதுதான்.

"வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு."

என்று வள்ளுவர் கூறியிருப்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு செய்வது, வேலை கையில் எடுத்துக் கொண்டு செய்வதற்கு ஒப்பாகும். காங்கிரஸ்காரர்கள் தவறுகள் செய்திருந்தால் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று திரு. பூவராகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு தவறை திருத்த இன்னொரு தவறை எடுத்துக் காட்டுவது முறையாகாது, அது பண்பாடு மாகாது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவந்து என்ன சாதித்து விட்டீர்கள் என்று கேட்டார்கள். இப்போதாவது முதல் அமைச்சர் அவர்கள் ஆகஸ்ட் 1-ம் தேதி தடியடி ஏற்பட்டது என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்த பிறகு தடியடி நடந்தது என்று ஒப்புக்கொண்டது அல்ல. அந்தப் பிரச்சினை வந்த நாளிலிருந்து தடியடி நடந்திருக்கிறது என்பதையும் அதற்கான காரணங்களையும் இந்த அவையில் பல முறை சொல்லியிருக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** யாரோ ஒரு பத்திரிகைஆபீசைப் போய் தாக்குவதாக மனதில் நினைத்துக் கொண்டு தடியடி செய்யப்பட்டது, லாரி கொளுத்தப்பட்டது, ஸ்கூட்டர் கொளுத்தப்பட்டது என்று சொல்லப்பட்டது. எந்த லாரி கொளுத்தப்பட்டது, எந்த ஸ்கூட்டர் பொது மக்களால் கொளுத்தப்பட்டது ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** லாரி கொளுத்தப்பட முயற்சிக்கப்பட்டது, ஸ்கூட்டர் கொளுத்தப்பட்டது. அது அன்றையதினம் கிடைத்த தகவல்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** லாரி கொளுத்தப்பட்டது, ஸ்கூட்டர் கொளுத்தப்பட்டது, தினத்தந்தி மேல் மக்கள் தாவினர், ஆகவே அடிபட்டார்கள் என்ருர்கள். காந்தி–இர்வின் ரோடிற்கும் தினத்தந்தி ஆபீஸுக்கும் இடையே தடியடி நடந்திருக்கவேண்டும். என் கண்ணீர்ப்புகை விடவில்லை ? என் எச்சரிக்கை செய்யவில்லை ? மக்களை மிருகத்தனமாக அடித்திருக்கிருர்கள். புள்ளி விவரங்கள் சொன்ஞர்கள். 158 பேர்கள் என்று சொல்கிருர்கள். யார் அடிபட்டாலும் அதற்காக வருத்தப்படுகிறேன் என்று சொன்னதற்கு என் நன்றி. ஒரு அங்கத்தினர் கேட்டார், இவர் போலீஸாரைச் சென்று பார்த்தாரா என்று. அவர்களைப் பார்க்கவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கும் என் அனுதாபங்கள். காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல அடிபட்டவர்கள். பாவம், கூட்டத்தோடு வந்தவர்களும் அடிபட்டிருக்கிருர்கள். ஐந்தாறுபேர்கள் இப்போது இன்னும் இருக்கிருர்கள் என்று சொன்ஞர்கள். ஒருவருக்கு நடக்க முடியும் என்று நினைக்கவில்லை. ஒருவருக்கு தலையை எடுக்க முடியும் என்று நினைக்கவில்லை. டாக்டர்கள் நடந்துகொள்ளும் முறை மிகமிக வெட்கப்படவேண்டிய முறை. தினம் நான் போன் செய்துகொண்டிருக்கிறேன். பார்த்துக்கொண்டிருக்கிறேன். உங்களுக்கு என்ன வேலை, போங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிருர்கள்.

உடையார்பாளையம் துப்பாக்கிச் சூடு பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பழமொழி சொல்வார்கள், " ஆட்டைக்கடித்து மாட்டைக் கடித்து, கடைசியில் மனிதனையும் கடித்தான் " என்பதாக. அது போல, காங்கிரஸ்காரர்கள் மீது, இளைஞர் காங்கிரஸ்காரர்கள்மீது தாக்குதலை நடத்தியது கடைசியிலே உங்கள் கட்சிக்காரர்கள் சண்டைக்கே துப்பாக்கிச்சூடு என்னும்படியான நிலைமைக்கு வந்துவிட்டது. இப்படி சட்டம், அமைதி கெட்ட நிலையிலே இருக்கிறது. ஆயிரம் பேர்களைக கட்டுப்படுத்தி சமாளிக்க அவர்களால் முடியாதா ? உடனே முதலமைச்சரவர்கள் அறிக்கைவிடுகிருர்கள், உடையார்பாளையம் என்று பெயரைமாற்றிவிட்டேன் என்று. மிரட்டுபவர்களுக்காகப் பணிந்து பெயரை மாற்றுவதா ? அத்தகைய குற்றச்சாட்டைச் சாட்டவிரும்புகிறேன். என்னைப்பொறுத்தவரையில் அதற்கு "ஜெயங்கொண்ட உடையார்பாளையம்" என்று வைத்துவிட்டால் நன்ருக இருக்கும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** அந்தச் சம்பவத்தைப் பார்த்துவிட்டு உடையார்பாளையம் என்று மாற்றிவிட்டேன் என்று நான் சொல்லவில்லை. அதற்கு முன்ஞலேயே, டிசெம்பர் மாதத்திலேயே அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நிருபர்களுக்கு நினைவுபடுத்தினேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உத்தரவு போட்டிருக்கலாம். ஆஞல் உடையார்பாளையம் என்று இதற்குப் பிறகுதானே பெயர் மாற்றப்பட்டது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** அதுதான் இல்லை என்கிறேன். இதற்கு முன்ஞலேயே அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டு
இரவு 7-30 விட்டது. உத்தரவு பிறப்பிக்கப்பட்டது தெரியாததாலேயே இந்தக்கிளர்ச்சி ஏற்பட்டு விட்டது. இதற்குப்பிறகு நிருபர்களைச் சந்தித்து **Government have taken a decision to retain that name,** மாற்றுவது கூட அல்ல, உடையார்பாளையம் என்று நிலைக்கப்படுகிறது என்று அறிவித்தேன். எனவே, திரு. கருத்திருமன் அவர்கள் சொல்வது தவறு, உத்தரவு போட்டது இதற்கு முன்ஞலேயே.





**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இதற்குமுன்ஞலேயே உத்தரவு போட்டு விட்டதாக முதலமைச்சரவர்கள் சொன்ஞர்கள். மிகமிக நன்றி. "ஜெயங்கொண்ட உடையார்பாளையம்" என்ற பெயரை வைக்கலாம் என்ற என்னுடைய வேண்டுகோளை விடுக்கின்றேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஏன் கொண்டு வந்தீர்கள் என்று கேட்கிருர்கள். பல விஷயங்களை மக்களுக்குத் தெரிவிக்கத்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தோம். உணவு அமைச்சரவர்கள், இப்பெழுதாவது, ஜெகஜீவன்ராம் அவர்கள் அதிக விலை கொடுத்தால் ஆட்சேபனை செய்ய மாட்டார்கள் என்ற நிலைக்கு வந்திருக்கிருர்களே, அதற்காகத்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம். பல தடவைகள், திருப்பி திருப்பிச் சொல்லி, "அடி மேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்" என்பார்களே, அதுமாதிரி இந்த அமைச்சர்களிடமிருந்து வரவேண்டுமென்பதற்காகதான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பதை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1968-ம் வருஷத்திற்குப்பிறகு, இந்த அமைதி இருக்கிறது என்று சொன்ஞர்கள். நான் கூறுகிறேன் "சென்னை சுற்றுப்புறங்களில் தொழில்துறையில் அமைதியின்மை" என்று தினமணி 21—6—1968-இல் வந்திருக்கிறது. "அம்பத்தூர் தொழில்பேட்டையில் நாசகர நடவடிக்கைகள்" என்று நவசக்தி 22—6—1968-இல் வந்திருக்கிறது. 1968-ஆம் வருஷத்திற்குப் பின்ஞலே எவ்வளவு தூரம் அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது என்பதற்கான தஸ்தாவேஜுகளைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். இறுதியாகச் சொல்ல விரும்புவது என்னவென்ருல் இவர்கள் ஆட்சிபற்றி வெளியிலே இருப்பவர்கள் எந்த நிலையிலே நினைத்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதற்குச் சில குறிப்புகளை மட்டும் படித்துக்காட்ட ஆசைப்படுகிறேன்.

With your permission, I will read an extract—

" It does not seem to make a difference which party is in power—the Congress or any other. Our problem is that there is a lack of character and a lack of competence". In such or similar sad words was the current disillusionment expressed by one who not very long ago attempted to be the friend, philosopher and guide of the D.M.K. and on whom I had the privilege of calling when I was in Madras for a few weeks last month. There is no need for me to name him.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன பேப்பர் அது ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்தப் பேப்பர் " ஈஸ்டர்ன் டைம்ஸ்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேப்பரிலுள்ள தலையங்கமா; அல்லது யாராவது எழுதியதா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** "ஈஸ்டர்ன் டைம்ஸ் "-ல் தரப்பட்ட குறிப்புகளைப் படிக்கிறேன். இது இந்தியா பூராவும் வரும் பத்திரிகை, உலகமெல்லாம் போகும் பத்திரிகை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** நண்பர் அவர்கள் படிக்கும் அந்தக் கட்டுரையை நானே கவனித்திருக்கிறேன். அந்தப் பத்திரிகை " ஈஸ்டர்ன் டைம்ஸ் " அல்ல, " ஈஸ்டர்ன் எகஞமிஸ்ட் ".

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** "டைம்ஸ்" என்று சொல்லி விட்டேன்; "ஈஸ்டர்ன் எகஞமிஸ்ட்" என்று சொல்வதற்குப்பதில்.

There is an air of unreality about the political scene in Madras State today. There is no doubt that the general deterioration in the law and order situation in the State is causing real concern to

more and more people interested simply in the ordinary business of living. For this state of affairs the inexperience of administration, natural perhaps for a party exchanging overnight an agitational role for the responsibilities of government, is only partly to blame.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதில் இருப்பதிலே என் னென்ன குற்றச்சாட்டுகள் என்பதைமட்டும் சொல்லிவிடுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பூராவும் குற்றச்சாட்டுகள்தான்.

All of the corruption is not merely psychological. There is also a great deal of corruption in the common and popular meaning of the term. Ministers are reported to have become millionaires, while lesser men in the party ranks, not to speak of the party hierarchy, are said to have transformed themselves into so many men of property. Indeed, there is already so much cynicism in the public mind about these goings—on that it is familiar gossip that Mr. C. N. Annadurai's remarkable devotion to prohibition is to be explained almost entirely by his solicitude for the wealth and welfare of DMK strong men who are said to have discovered that a combination of politics and bootlegging pays better than politics alone.

After a sustained period of accelerated industrial expansion, the economy of Madras State is now in a benumbed State. The recession in the country could only be partly responsible for this. The greater blame must rest on the casual attitude, amounting almost to indifference, which the government under the present dispensation seems to have opted for where the problems of the industrial growth of the State are conerned. Worse still is the positive encouragement which influences inimical to industrial peace seem to be receiving from the D.M.K. government, particularly its Minister for Labour. Mr. Madhavan, whose background is that of a labour leader working with minority unions, now seems to be bent upon taking his past disappointments and frustrations out of the employers and company managements whom the course of politics has now placed in his administrative power. Even the most cursory survey of recent labour troubles in Madras State would show that workers' demands, sparking off strikes or compelling lock-outs, were but rarely economic demands or legitimate employee grievances. Much of what has been happening is the simple tactical struggle by minority unions to force their way to representative or even dominant status.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** அது "எடிட்டோரியலா" அல்லது யாராவது எழுதியதா ?

**திரு பி. ஜி. கருத்திருமன் :** எழுதியது. "ஈஸ்டர்ன் எகனுமிஸ்ட்" என்ற பத்திரிக்கையில், "மூவிங் ஃபிங்கர்" என்ற புனைப்பெயரில் எழுதி யிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ரொம்ப விரிவாக அவர் படித்த கட்டுரையிலிருந்து என்ன தெரிகிறது என்றால், வேறு இடத்தி லும் சில கருத்திருமன்கள் இருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கருத்திருமன் மட்டுமல்ல, வேறுபல
இடங்களிலும் அண்ணாதுரைகள் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன். நியாயத்தைச் சொல்வதற்கு எல்லா இடங்
களிலும் கருத்திருமன்கள் இருப்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதிலே வந்திருப்பது
எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு நியாயமாக இருக்கலாம். நியாயமற்றது
என்பது என்னுடைய கருத்து.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் சொல்வதை மறுப்பதற்கு
72-வரையிலும் உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. நான் குற்றச்சாட்டுகள்
என்று சொல்லும் பொழுது, இதை எழுதக் கூடியவர் இந்தியா பூராவி
லும் சுற்றிக்கொண்டு வருபவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்த "ஈஸ்டர்ன் எகனு
மிஸ்ட்" என்ற பத்திரிகை பெரிய தொழிலதிபருடைய பத்திரிகை.
அவர்களுக்கு இப்படிப்பட்ட மனக்குறை இருப்பது நன்றாகத் தெரியும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலாளிகள் பத்திரிகை என்று
சொன்னார்கள். இதை எழுதியவர் பெரிய தொழிலாளி என்று
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** "மூவிங் ஃபிங்கர்" என்ற
புனைப் பெயரில் எழுதுகிறார் என்று சொல்லப்படுகிறது. அந்தத் தொழி
லாளித் தோழனின் பெயர் அவருக்குத் தெரிந்திருக்கும், அதை அவர்கள்
அறிவிப்பாரா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எந்தவிதமான பெயரும் வெளியிடப்
படவில்லை. "மூவிங் ஃபிங்கர்" என்றிருப்பதால் தொழிலாளியாகத்
தான் இருப்பார்.

**திரு. ஆலடி அருணா :** துணைத்தலைவர் அவர்களே, இதே
"ஈஸ்டர்ன் எகனுமிஸ்ட்" என்ற பத்திரிக்கையில் 6 திங்கள்களுக்கு முன்பு
திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பாராட்டி ஒரு கட்டுரை வந்திருக்
கிறது, அதை எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஏற்றுக்கொள்கிறாரா என்று
அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி கருத்திருமன் :** எனக்கு ஆதரவாகப் பேசியதற்காக
நன்றி. உங்களுக்கு ஆதரவாக எழுதியிருந்தபோது ஏற்றுக்கொண்டீர்கள்,
அதுபோல் இப்பொழுது அதில் சொல்லுவதை ஏற்றுக்கொள்ள ஏன்
மறுக்க வேண்டும் ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** குற்றம் கண்டிருப்
பதை மேற்கோள் காட்டிய அதே பத்திரிக்கையிலே, குற்றம் காணாமல்
பாராட்டியிருப்பதை நண்பரவர்கள் ஞாபகப்படுத்தினார்கள். இரண்டையும்,
அரசுக்கு நியாயமாக இருந்தால் ஏற்றுக்கொள்ளும், நியாயம் அற்றதாக
இருந்தால் தள்ளிவிடும். "மினிஸ்டர்" என்று எழுதுவதற்குப்
பதிலாக அமைச்சரின் பெயரைக் குறிப்பிட்டு எழுதியிருந்தால் வழக்கு
மன்றத்திலே அவர்களைச் சந்தித்து இருப்போம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களைச் சந்தேகிக்க வேண்டு
மென்பதற்காகத்தான் இதை நான் படித்துக் காட்டினேன். தயவு
செய்து அவர்கள் கேட்டு . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவர்களுக்கு சட்டம்
தெரிந்திருக்க வேண்டும். பொதுப்படையாக Ministers have become
millionaires என்று எழுதினால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை
அறிந்துதான் எழுதியவர் அந்த மாதிரி எழுதி இருக்கிறார்கள். Such and
such a Minister has become a millionaire என்று எழுதினால் அவர்
"டெஃபமேஷனுக்கு" போய் இருக்க முடியும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுது இருக்கும்படியான இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்மீது பேசிய பல அங்கத்தினர்களுக்குப் பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். ஒன்றை மட்டும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. உயிரைக் கொடுக்கிறேன் என்றெல்லாம் பேசுகிறார்கள். நமது மதிப்பிற்குரிய ம. பொ. சிவஞானம் அவர்கள் கூடப் பேசினார்கள். அவரை விட காங்கிரஸைத் தாக்குவதற்கு வேறு யாரையும் பார்க்க முடியாது. ஆனால், 1957, 1962-க்கு முன்னாலே அவருடைய பேச்சுக்களை எல்லாம் எடுத்துப் பார்ப்பார்களேயானால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எவ்வளவு புகழ் மாலை சூட்டியிருக்கிறார்கள் என்று தெரியும். தமிழ்தான் என்னுடைய உயிர், தமிழை ஆட்சி மொழி ஆக்கியதற்காக இந்த ஆட்சியை பாராட்டுகிறேன் என்று சொன்னார். அந்த கொள்கை அவருடைய மகனுக்கு இருக்கிறதோ என்னவோஎனக்கு தெரியவில்லை. என்னுடைய . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மன்றத்திலே இருக்கிறவர்களைப் பற்றித்தான் பேச வேண்டுமே தவிர, மன்றத்திலே இல்லாதவர்களைப் பற்றி, அவர்களுடைய உறவினர்களைப் பற்றி பேசுவது முறையாகாது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை. துணிவிருந்தால் எதைக் குறிப்பிட்டுச் சொல்கிறார் என்பதைத் தெளிவாகச் சொல்லட்டும், பதில் அளிக்க நான் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு). அப்படிப் படிக்க வைக்கிற அளவுக்கு என் தாய் மொழிப் பற்றுக் குறைந்தது அல்ல. என் பிணம் போகிறபோதும் அதன் மீது தாய் மொழி மணங்கமழும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இது மாதிரி எனக்கும் பதில் சொல்லத் தெரியும். என் தாய் மொழிப் பற்று குறைந்தது அல்ல, பிணம் போகிற போதும் தாய் மொழியை மறந்து விடாதே என்று சொல்கிறார்கள். அவர் மகனுக்கு விவேகானந்தா கல்லூரியில் ஆங்கிலம்தான் வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் தமிழ்தான் இருக்கிறது என்று சொல்லி விட்டார்கள். திரும்ப அவரிடத்திலே சென்ற உடனே..

**திரு. ம. பொ. சிவஞானம் :** திரும்பவும் அவர் சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்கிறார். ஒரு எதிர்க்கட்சித் தலைவர் கடைப் பிடிக்க வேண்டிய நேர்மையையும் அவர் கடைபிடிக்க வேண்டுமென்கிறேன். என் மீது ஏதேனும் சொல்லவேண்டுமானால், நேரடியாக, தெளிவாக, திடமாகச் சொன்னால் மறுப்பதற்கு இடமிருக்கும். (குறுக்கீடு). தலைவர் அவர்களே, அந்த பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. என் பிள்ளைகளை நான் கல்லூரியில் சேர்க்கமுடியாத அளவுக்கு வெறி பிடித்து பொது வாழ்வில் என்னையே அழித்துக் கொண்டதற்கு நீதி வழங்குவதற்காக நான் கேட்கவில்லை. என்னுடைய பிள்ளைகள் உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்தது கூடக் கிடையாது. எந்த உறவினருக்கும் நான் சிபாரிசு செய்தது கிடையாது. இந்த ஆண்டு என்னிடம் சிபாரிசுக்காக வந்தவர்களுக்கு தமிழ் மீடியம் தவிர, இங்கிலீஷ் மீடியம் சிபாரிசு செய்ய மறுத்திருக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மிக மிக நன்றி. எனக்கு வந்த தகவலை வைத்துத்தான் அப்படி சொல்லுகிறேன். அவர் அப்படிச் சொல்லியிருப்பாரானால் எனக்கு வந்த தகவல் இப்படி இருக்கிறது. அதைத்தான் சொன்னேன் (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மன்றத்திலே உறுப்பினர்கள் பேசுவதைக் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, ஒரு சிறு விஷயம். 42 ஆண்டுகாலமாக பொது வாழ்க்கை நடத்தி வருபவன் என்ற முறையில் என்னுடைய குடும்பத்தைப் பற்றி சொன்னது தவறு என்று ஒப்புக்





கொண்டால் மட்டும் போதாது, அதை வாபஸ் பெற்று வருத்தம் தெரிவிப்பதுதான் இந்த மன்றத்தினுடைய மரபுக்கு உகந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் விளக்கம் சொல்கிறார். எனக்கு வந்த தகவலை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அப்படி வந்த தகவல் தவறு, அதை வாபஸ் பெற வேண்டுமென்று....

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** யாருடைய மகனைப் பற்றி தாங்கள் குறிப்பிடுகிறீர்களோ அவர் தந்தையே அந்த தகவல் தவறு என்று விவரமாக சொல்லிவிட்ட பிறகுகூட தாங்கள் ஏற்றுக்கொள்வதற்கு என்ன தயக்கம்?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் ஒரு கட்சிக்காக இருக்கிறேன். நான் ஒருவரை சிபாரிசு செய்கிறேன். என்னுடைய கட்சியை விட்டு மாற்றிக் கொள்ளும்படியான சமயத்திலே இதைக் குறை சொல்வதற்காக அல்ல ; ஆகவே இருக்கக்கூடிய அதற்குக் கூட மாற்றிக் கொள்ளும்படியான நிலையிலே ஒரு தகவலைத்தான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உங்களுக்கு வந்த தகவல் தவறு என்றும் தன்னுடைய மகனோ அல்லது தன்னுடைய உறவினர்களிலே எவருமே இங்கிலீஷ் மீடியம் பள்ளிக்குச் செல்லவில்லையென்றும் வேறு யாருக்கும் சிபாரிசு செய்யவில்லையென்றும் சம்பந்தப்பட்டவர்களே சொல்லுகிற போது, எனக்குக் கிடைத்த தகவல் தான், பேரவையில் ம. பொ. சிவஞானம் அவர்கள் சொல்லுவதைப் பற்றிக்கூட கவலை இல்லை என்று கூறுகிறீர்கள். யாரும் கல்லூரிக்குச் செல்லவில்லையென்று அவர்கள் கூறிய பிறகும் அந்தத் தவறான தகவலை வைத்துக் கொண்டு நான் சொன்னதற்காக வருந்துகிறேன் என்று சொல்வது உங்களுடைய பெருந் தன்மையை நிச்சயமாக பாதிக்காது ; அதனால் உங்களுடைய கண்ணியம் மிகும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் சிபாரிசு செய்திருக்கிற பிள்ளை என்று நான் சொல்கிறேன். ஆனால் நான் சொன்னது சரியில்லையென்று சொன்னால் அதற்காக வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அவரால் சிபாரிசு செய்யப்பட்ட பிள்ளை, அவருடைய சொந்த மகனோ....

(ஓர் உறுப்பினர்) நீங்கள் முதலிலே . . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர் முதலிலே ம. பொ. சிவஞானம் அவர்களினுடைய மகன் என்றே குறிப்பிட்டார். இப்பொழுது மகன் இல்லை, அவரால் சிபாரிசு செய்யப்பட்டபிள்ளை என்று குறிப்பிடுகிறார்.

**திரு ம. பொ. சிவஞானம் :** என்னுடைய பிள்ளை என்றே அவர்கள் சொன்னார்கள். அதை அவர் திரும்பப் பெற்றுக்கொண்டு, வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்பது இந்த மன்றத்தின் மரபுக்காக, எனக்காக அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் சொன்ன பிற்பாடு, அந்த மாதிரி சூழ்நிலை இல்லையென்று பெரியவர் சொல்லும்போது, எனக்குக் கிடைத்த தகவல் தவறான தகவல் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த மன்றத்திலே இந்த விவாதம் தொடங்கிய நேரத்திலேயே சொன்னேன். இந்த மன்றத்திலே எந்த உறுப்பினராவது எந்தவிதமான குற்றச்சாட்டையாவது கூறுவதானால் தக்க ஆதாரத்தோடு அந்தக் குற்றச்சாட்டைக கூற வேண்டும். அப்படி ஆதாரம் இல்லாமல் வெறும் குற்றச்சாட்டைக் கூறுவது முறையாகாது என்று நான் கூறியிருக்கிறேன். அதிலும் ஒரு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்படி ஒரு தவறான தகவல் வைத்திருக்கிறோம் என்று கூறுவது, அந்தத் தவறான தகவலை வைதுக்கொண்டு குற்றச்சாட்டைக் கூறுவது அவ்வளவு நல்லதல்ல. ஆகவே, தவறு என்று

தெரிந்தவுடனே அதற்காக வருத்தம தெரிவிப்பதுதான் முறையாகும்
இதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** தவருன தகவல் கிடைத்
தால் எப்படி அமையும் என்பதற்கு முன்னலே நடைபெற்ற ஒரு சம்ப
வம். என்னுடைய மகனுடைய பெயர் பரிமளம். நம்முடைய நண்பர்
விஞயகம் அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்தில் அண்ணுதுரைக்குப் பரிமளம்
என்று ஒரு பெண் இருக்கிறது . . . (சிரிப்பு).

**திரு. கே. விஞயகம் :** பரிமளத்தை எனக்கா தெரியாது ? பரிமளம்
ஆண் என்பது எனக்கு நன்ருகத் தெரியும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** இந்தப் பள்ளிக்கூடத்திலே
அந்தப் பெண் படிக்கிறது என்று பேசி பத்திரிகையிலே வந்தது. அதற்
குப் பிறகு ஒரு முறை அவரே ஃபோன் செய்திருக்கிருர்கள். பரிமளம்
ஃபோனை எடுத்துப் பேசியிருக்கிருன். நீ யார் என்று கேட்டிருக்கிருர்கள்.
நான்தான் பரிமளம் என்று சொன்னவுடனே, அப்படியா, நீ ஆணு, நான்
பெண் என்று பேசிவிட்டிருக்கிறேன் என்று சொன்ஞர் (சிரிப்பு).

**திரு. கே. விஞயகம் :** நம்முடைய அண்ணு அவர்கள் கற்பனை
யிலே நிரம்ப சூரன். ஆகையால் ஏதோ ஒன்றை இதற்கு உபமானம
என்று காட்டி தவறு சொல்கிருர்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர். சபையில்
பதில் சொல்லுவதற்கு வாய்ப்பில்லாத ஒருவரைப் பற்றி சபையிலே பேசக்
கூடாது என்ற மரபு இருக்கிறதே அந்த மரபுகூட கைவிடப்பட்டிருக்
கிறதா இப்பொழுது ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, எனக்குக்
கிடைத்தது தவருன தகவல். அதை ம. பொ. சி. அவர்கள் இல்லை
யென்று மறுத்து, அவர் புண்படும்படியான நிலையிலே, என்னுடைய வருத்
தத்தைத் தெரிவித்துக்கொள்வதிலே நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.
மனிதன் தவறுவது இயற்கை. அவ்வளவு தூரம் வலியுறுத்திச் சொல்லும்
படியான சமயத்திலே அவருடைய கருத்தை ஏற்றுக்கொள்கிறேன்.

நான் ஏற்கனவே முதலமைச்சர் அவர்களுக்கு எங்களிடம் வந்த
சில புகார்கள், அதிலே எந்த எந்த வகையிலே நிலையீடுகள் இருக்கின்றன
என்பதற்கு எல்லாம் விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறேன். நான் வேண்
டிக் கேட்டுக்கொள்வது இவைகளையெல்லாம் அச்சிட்டுக் கொடுக்க வேண்டும்
என்பதுதான். மக்கள் நல ஆட்சி வேண்டுமென்னும்படியான ஒரு நிலை
யிலே கொடுத்திருக்கும்படியான இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம்
64 இலட்சம் வாக்காளர்களுடைய பிரதிநிதிகளுடைய, 138 இலட்சம் வாக்
களிக்கப்பட்டதிலே 41 சத விகிதம் எந்தக் கட்சியும் பெற முடியாத
வகையிலே வாக்குகளைப் பெற்ற நாங்கள் கொண்டுவந்திருக்கிருேம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** நான் கொடுத்த புகார்
களையெல்லாம் அச்சடித்து வழங்கப்படவேண்டும் என்று சொன்ஞர்கள்.
இப்பொழுதுதான் கொஞ்ச நேரத்திற்கு முன் தன்னிடம் வரும் தகவல்
தவறு என்று உணர்ந்தார்கள். ஆகவே, அவர்கள் கொடுத்திருப்பதில்
பெரும்பாலானவை தவருனவையாக இருக்கக்கூடும். தவருன தகவலைக்
கொடுத்திருக்கலாம். சரியான தகவல்களாக இருந்தாலும், அவற்றை
அச்சடித்துக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லுவதற்கு
உறுப்பினருக்கு உரிமையில்லை. அப்படிப்பட்ட மரபும் சட்டமன்றங்களிலே
இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சொல்வதையெல்லாம் கேட்கிறதாக
இருந்தால் அந்த மாதிரி இருக்கலாம். ஆனல், இவையெல்லம்
கையெழுத்துப் போட்டவைகள். தவறு என்ற நிலை இருந்தால், அவர்
களே கையெழுத்துப் போட்டிருப்பார்களா ?



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த மன்றத்திலே அவ்வாறு கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருந்தாலும், அவற்றை எதிர்க் கட்சித் தலைவர் மன்றத்திலே கொடுத்தால், கையெழுத்துப் போட்டவர் மட்டும் பொறுப்பல்ல, கொடுத்தவர், இன்னும் மன்றத்திலே இருக்கும் அத்தனை உறுப்பினர்களும் பொறுப்புள்ளவர்கள். அதையும் நினைவில வைத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்கு வரும் தகவல்களை நான் எந்த முறையில் பைசல் செய்ய முடியும் ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு உறுப்பினர் தவருன கருத்தைக் கொடுத்தார் என்று அந்த உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் அதை உணர்ந்து இந்தத் தாள்களைக் கொடுத்திருக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** புகார்களுக்குச் சரியான பதில் கிடைக் வேண்டும் என்று கொடுக்கிறேன். மக்கள் சார்பாக அதைச் சொலலுகிறேன்.

இறுதியாக என்னுடைய நிலை, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விளம்பரத்திற்காக இல்லை, மக்களின் நிலையைப் பார்த்துத்தான் கொண்டு வந்திருக்கிருேம். பகவத் கீதையில் கிருஷ்ண பகவான் "தொழில் செய்யத் தான் உனக்கு அதிகாரம் உண்டு : பலனைப் பற்றிக் கவலைப்படாதே; தொழில் செய்யாமல் இருப்பது தவறு" என்று சொலலியிருப்பதாக ஒரு உபநிஷத்து இருக்கிறது . . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** பகவத் கீதையில் ஒரு சுலோகம் என்று சொல்ல வேண்டும், உபநிஷத்து அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எப்படியிருந்தாலும் சரி, இப்பொழுது நம்பிக்கை இல்லை என்று சொல்லுகிருேம் என்ருல் எங்கள் கடமையைச் செய்கிருேம். இவர்கள் ராமாயணத்திற்கும், உபநிஷத்திற்கும் விளக்கங்கள் கொடுப்பதால், அவற்றையெல்லாம நன்ருகப் படித்திருக்கிருர்கள் என்ற நிலை தெரிகிறது. ஆகவே, இப்பொழுது, இந்த சர்க்கார் எந்த வார்த்தைகளை மக்களுக்குக் கொடுத்தார்களோ, அவற்றை நிறைவேற்றவில்லை ஆகவே, நேர்மையில்லை, நேர்மையில்லாத காரணத்தால், திறமை இருக்கிறதா என்ருல், செயல் திறன் அற்றது என்கிற குற்றச்சாட்டுகளைச் சாட்டி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

**திரு. என். சங்கரய்யா:** சார், ஒரு பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன். எதிர்க் கட்சித் தலைவர் பேசும்போது, எங்களுடைய கட்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஹேபியஸ் கார்பஸ் மனுபற்றி விளக்கும்போது, குறிப்பிட்டேன். ஒன்று சொல்ல விரும்புகிறேன். 1962—1964-ம் ஆண்டுகளிலே அவர்களுடைய காங்கிரஸ் அரசாங்கத்திஞல் கைது செய்யப்பட்டு, சிறைச்சாலையில் வைக்கப்பட்ட கம்யூனிஸ்டுகள் சார்பாக, எங்கள் தலைவர் சுந்தரையா ஒரு சவால் விட்டார்கள். இந்தியா முழுவதிலும், லட்சக்கணக்கான கம்யூனிஸ்டுகள், தேசத் துரோக குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் மீது இருக்கும் குற்றத்தைக் கோர்ட்டில் நிரூபிக்க முடிந்தால், எங்களுடைய கட்சியையே கலைக்கிருேம் என்ருர்கள். ஆனல் இந்த பரந்த இந்திய நாட்டில் பல்லாயிரக்கணக்கான தோழர்கள் கைது செய்யப்பட்டு இருந்தும், ஒருவர் மீது கூட அவர்களுடைய காங்கிரஸ் அரசாங்கத்திஞல் வழக்குப் போட முடியவில்லை. அவர்கள் அத்தனை பேர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தச் செயலுக்குப் பதில் மக்கள் 1967 தேர்தலிலே கூறிஞர்கள். இடது சாரி கம்யூனிஸ்டுக்கு ஓட்டுப் போடுவது, சைனுவிற்கு ஓட்டு போடுவது போன்றது என்று பிரசாரம் இருந்தும் கூட, மதுரையில் தோழர் ராமமூர்த்தி நின்றபோது, மன்றங்களுக்கெல்லாம் பெரியதான மக்கள் மன்றம் ஒன்றேகால் லட்சம் ஓட்டு வித்தியாசத்தில், தோழர் ராமமூர்த்தியைத் தேர்ந்தெடுத்திருக்கிறது என்பதே இந்த அவதூறுகளுக்கெல்லாம் ஆணித்தரமான பதிலாகக் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[1968 ஆகஸ்ட் 28

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, இறுதியாகப் பதில் சொல்ல எனக்குத்தான் உரிமை உண்டு . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர்கள் தன்னிலை விளக்கம் என்று சொல்லுகிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்தக் கூட்டணி விஷயத்தில், கம்யூனிஸ்டுகள் . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால், இந்த மன்ற நிகழ்ச்சிகளைப் பற்றி இருக்க வேண்டும். நீங்கள் உட்காருங்கள். இப்பொழுது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பேரவையின் முடிவிற்கு விடுகிறேன். இப்பொழுது பேரவை முன் உள்ள கேள்விகள்.

" This House expresses its want of confidence in the D.M.K Ministry headed by Hon. Thiru C. N. Annadurai for the following reasons :—

1. Unsettled industrial and labour policy which has led to stagnation resulting in unprecedented unemployment among the skilled and unskilled labourers, failure to attract entrepreneurs to invest in new industries due to labour unrest such as strikes and lockouts.

2. Failure of the Government to provide economic and incentive price to the farmers due to wrong procurement policy of Government.

3. Fire accidents in slums on a large scale in many parts of the State leading to the sufferings of the poor people and the failure of the Government to prevent such recurrence and the failure of the Government to detect the culprits who are responsible for the offence and the failure of the Government to construct and provide fire proof houses as promised in spite of huge amount of money having been collected from public as donations.

4. The fast deteriorating situation in law and order resulting in the flouting of the established authorities and the growing tendency amongst the very people who are responsible for law and order taking a partisan attitude. Failure of the Government to tackle the dispute between students and State Transport workers resulting in a large scale fight between them resulting in great sufferings to students, preventing them from pursuing their studies. The indiscriminate shooting resorted to by the Police in different parts of the State.

5. The orgy of violence unleashed by the Police on 1st August 1968, on the peaceful Youth Congress Marchers who were unprotected and unoffensive resulting in untold casualties like breaking their limbs and heads of persons numbering over 500.

6. Failure of the Government to render proper accounts regarding the collections for Second World Tamil Conference made by Governmental authorities using pressure and coercion and the failure to have the accounts audited by a competent authority, namely, Accountant and Auditor-General.



1968 ஆகஸ்ட் 28] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

7. Failure of the Government to check the ruling partymen from interfering in day-to-day administration thus resulting in partisan favouritism and nepotism which has led to gross inefficiency of the Government machinery.

8. The questionable conduct of the Hon. Minister for Co-operation in using the Governmental agencies in collecting huge sums of money from the public and co-operative institutions by coercive methods for the purpose of putting up a hospital in his native village which does not deserve to have a hospital of this size under ordinary circumstances.

9. Failure of the Government to check the growth of fissiparous tendencies like the formation of a " Sena " like Tamil Sena which may lead ultimately to the disintegration of the country.

10. The irreligious attitude taken by Government in ordering the removal of the pictures of gods, goddesses, and saints from Government buildings which has wounded the feelings of the people at large and the Government servants.

11. And the failure of the Government to enforce prohibition policy strictly allowing numerous illicit distillations and the falilure to detect and book the offenders under the prohibition law."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தத் தீர்மானத்தை ஆதரிப்போர் 'ஆம்' என்க; மறுப்போர் 'இல்லை' என்க. 'இல்லை' என்போரே அதிகம் ஆகையால் தீர்மானம் தோல்வியுற்றது என அறிவிக்கிறேன்.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I press for a division. இரவு 8-00

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு கோரப்பட்டு உறுப்பினர்கள் கீழ்க்கண்டபடி வாக்களித்தனர்:—

**ஆதரித்தவர்கள்.**

1. திரு பி. ஜி. கருத்திருமன்.
2. திரு கே. விநாயகம்.
3. திரு எஸ். ராமலிங்கம்.
4. திரு பி. எம். முனுசாமி கௌண்டர்.
5. திரு என். எஸ். வி. சித்தன்.
6. திரு எ. ஒய். எஸ். பரிசுத்த நாடார்.
7. திரு எ. பட்டாபி நாயுடு.
8. திரு ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்.
9. திரு ரா. ராமச்சந்திர துரை.
10. திரு நா. காசிராமன்.
11. திரு க. இராமமூர்த்தி.
12. திரு கே. சகாதேவக் கண்டர்.
13. திரு அ. செல்லக் கவுண்டர்.
14. திரு எஸ். சிவசுப்பிரமணியன்.
15. திரு சு. சீனிவாசன்.
16. திரு நா. சௌந்தர பாண்டியன்.
17. திரு வை. சுவாமிநாதன்.
18. திரு பா. தம்பி நாய்க்கர்.
19. திரு நா. தீர்த்தகிரி.
20. திரு தி. தீர்த்தகிரி கவுண்டர்.

[1968 ஆகஸ்ட் 28

**ஆதரித்தவர்கள்—தொடர்ச்சி.**

21. திரு டி. டி. எஸ். திப்பையா.
22. திரு கோ. பூவராகன்.
23. திரு எம். வில்லியம்.
24. திரு இல. பலராமன்.
25. திரு என். துரைபாண்டியன்.
26. திரு த. சி. சுவாமிநாத உடையார்.
27. திரு ஜே. ஜேம்ஸ்.
28. திரு வி. ஜார்ஜ்.
29. திரு மு. கந்தசாமி படையாச்சி.
30. திரு ஆர். கருப்பையா.
31. திரு அ. மாரிமுத்து.
32. திரு டி. மார்டின்.
33. திரு க. முருகேசன்.
34. திரு கே. கே. முத்தையா.
35. திரு பா. க. சி. முத்துசாமி.
36. திரு தோ. மு. நல்லசாமி.
37. திரு சி. நஞ்சன்.

**எதிர்த்தவர்கள்.**

1. திரு எம். ஜி. ராமச்சந்திரன்.
2. திரு மு. அலங்காரம்.
3. திரு மு. ஆனந்தன்.
4. திரு எ. வி. பி. ஆசைத்தம்பி.
5. திரு சி. வி. எம். அண்ணாமலை.
6. திரு வி. டி. அண்ணாமலை.
7. திரு எஸ். கணேசன்.
8. திரு அ. பொ. அரசு.
9. திரு அ. ஆறுமுகம்.
10. திரு ஆலடி அருணா.
11. திரு கே. ஆண்டி என்ற குருசாமி.
12. திரு எம். சி. பாலன்.
13. திரு எ. கோ. பாலகிருஷ்ணன்.
14. திரு ஜெ. பெள்ளி கௌடர்.
15. திரு சி. கே. சின்னராஜி கவுண்டர்.
16. திரு மு. சின்னசாமி.
17. திரு வி. சின்னசாமி.
18. திரு ந. தருமலிங்கம்.
19. திரு சு. ம. துரைராஜ்.
20. மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன்.
21. மாண்புமிகு திரு மு. கருணாநிதி.
22. மாண்புமிகு திரு கே. எ. மதியழகன்.
23. மாண்புமிகு திரு எ. கோவிந்தசாமி.
24. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து.
25. திரு து. ப. அழகமுத்து.
26. திரு இராம. அரங்கண்ணல்.
27. திரு எஸ். முருகையன்.
28. திரு எம். எஸ். மணி.
29. திரு எம். சண்முகம்.
30. திரு முனு. ஆதி.
31. திரு ஆர். என். அரங்கநாதன்.
32. திரு பழனிவேல்ராஜன்.
33. திரு கே. ஆர். கோவிந்தன்.
34. திரு வி. எஸ். கோவிந்தராசன்.
35. திரு கே. கோவிந்தராசுலு.
36. திரு ஆ. கோவிந்தராசன்.
37. திரு டி. இராசரத்தினம்.



1968 ஆகஸ்ட் 28]

**எதிர்த்தவர்கள்—தொடர்ச்சி.**

38. திரு இ. ஜயராமன்.
39. திரு பி. ஜெயராமன்.
40. திரு எ. கே. மூர்த்தி.
41. திரு எம். கந்தசாமி.
42. திரு எம். ஆர். கண்ணன்.
43. திரு எம். கண்ணப்பன்.
44. திரு ஆ. கருப்பையா.
45. திரு தே. கேசவலு.
46. திரு என். கிட்டப்பா.
47. திரு க. மு. கதிரவன்.
48. திரு கொளத்தூர் கோதண்டம்.
49. திரு கு. கிருஷ்ணமூர்த்தி.
50. திரு சி. கிருஷ்ணமூர்த்தி.
51. திரு மு. கிருஷ்ணமூர்த்தி.
52. திரு அ. கிருஷ்ணன்.
53. திரு நா. கிருட்டிணன்.
54. திரு சி. கோவிந்தராசன்.
55. திரு சி. வீரமணி.
56. திரு பெ. மலைச்சாமி.
57. திரு வீ. மலைக்கண்ணன்.
58. திரு ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ.
59. திரு பி. துரைராஜ்.
60. திரு இரா. மாணிக்கவாசகம்.
61. திரு பி. எஸ். மணியன்.
62. திரு மு. மாரிமுத்து.
63. திரு எம். மேத்தா.
64. திரு ரா. ரா. முனுசாமி.
65. திரு எ. முனியாண்டி.
66. திரு எல். கணேசன்.
67. மாண்புமிகு திரு செ. மாதவன்.
68. மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா.
69. மாண்புமிகு திரு மா. முத்துசாமி.
70. திரு செ. கோ. விசுவநாதன்.
71. திரு. என். ராஜாங்கம்
72. திரு மா. இராசாங்கம்.
73. திரு மு.ச. சிவசாமி.
74. திரு எஸ். இராமச்சந்திரன்.
75. திருமதி எ. சுவாரெஸ்.
76. திரு எஸ். முத்துலிங்கம்.
77. திரு பு. செ. முத்துச்செல்வன்.
78. திரு மு. வேதாசலம்.
79. திரு பா. நாகலிங்கம்.
80. திரு ஆர். நாகசுந்தரம்.
81. திருமதி சு. குப்பம்மாள்.
82. திருமதி வி. ப. பழனியம்மாள்.
83. திரு இரா. நாராயணன்.
84. திரு ஜி. நடராஜன்.
85. திரு செஞ்சி வி. முனுசாமி.
86. திரு ஈ. எம். நடராசன்.
87. திரு எஸ். பி. பச்சையப்பன்.
88. திரு சி. பழனி.
89. திரு எ. சி. நரசிம்மன்.
90. திரு எம். கோபால்.
91. திரு எம். பன்னீர்செல்வம்.
92. திரு பி. என். பரமசிவ கவுண்டர்.
93. திரு பெ. பெரியசாமி.

**எதிர்த்தவர்கள்—தொடர்ச்சி.**

94. புலவர் பொ. பொன்னம்பலம்.
95. திரு தி. பொன்னுமலை.
96. திரு ஏ. எம். ராஜா.
97. திரு க. மு. ராசகோபால்.
98. திரு சு. துரைசாமி.
99. புலவர் க. முருகையன்.
100. திரு டி. ஏ. ராஜவேலு.
101. திரு க. ந. இராமச்சந்திரன்.
102. திரு மு. ராமன்.
103. திரு வ. க. இராமராசன்.
104. திரு இ. ராமசாமி.
105. திரு ஜே. எஸ். இராசு.
106. திரு மு. இரத்தின சபாபதி.
107. திரு கே. என். சாமிநாதன்.
108. திரு பி. எஸ். சந்தானம்.
109. திரு என். சங்கரய்யா.
110. திரு க. ர. நல்லசிவன்.
111. திரு ஆ. கு. சுப்பையா.
112. திரு ம. பொ. சிவஞானம்.
113. திரு வி. கே. கோதண்டராமன்.
114. திரு கோ. பாரதிமோகன்.
115. திரு கே. என். குமாரசாமி.
116. திரு சோ. அழகர்சாமி.
117. திரு எம். அப்துல் கபூர் சாகிப்.
118. திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார்.
119. திரு பெ. சீனிவாசன்.
120. திரு எம். பூபதி.
121. திரு பி. எஸ். தனுஷ்கோடி.
122. திரு எஸ். ஜே. ராமசாமி.
123. திரு மா. ப. சாரதி.
124. திரு அ. ப. சண்முகசுந்தரம்.
125. திரு கொ. இர. ஞானசம்பந்தன்.
126. திரு சி. கோவிந்தராசன்.
127. திரு பி. வேலுசாமி.
128. திரு சி. சேதுராமன்.
129. திரு என். மருதாசலம்.
130. திரு இரெ. இளம்வழுதி.
131. திரு ஏ. அ. சுப்பராஜா.
132. திரு கே. வி. சுப்பையா.
133. திருமதி கே. பி. ஜானகியம்மாள்.
134. திரு வி. எஸ். இளஞ்செழியன்.
135. திரு தொ. க. சிறைமீட்டான்.
136. திரு ந. சோமசுந்தரம்.
137. திரு பெ. சௌந்திரபாண்டியன்.
138. திரு அ. லெ. சுப்பிரமணியம்.
139. திரு க. ந. சிவபெருமாள்.
140. திரு எம். சுப்பிரமணிய கவுண்டர்.
141. திரு தி. சி. திம்மராய கவுண்டர்.
142. திரு எஸ். கே. வடிவேலு.
143. திரு என். வரதராஜன்.
144. திரு ந. வீராசாமி.
145. திரு சி. வே. வேலப்பன்.
146. திரு ஏ. வெள்ளத்துறை.
147. திரு டி. எஸ். ஆதிமூலம்.
148. திரு ஏ. பாலசுப்பிரமணியன்.
149. டாக்டர் எச். வி. ஹாண்டே.



**எதிர்த்தவர்கள்—தொடர்ச்சி.**

150. திரு எஸ். அழகுத் தேவர்.
151. திரு கே. எஸ். கோதண்டராமையா.
152. திரு எஸ். பரமசிவம்.
153. திரு சௌடி எஸ். சுந்தரபாரதி.
154. திரு வி. தவமணி தேவர்.
155. திரு பி. வெங்கடசாமி.
156. திரு எஸ். ராமசாமி நாயுடு.

*நடுநிலைமை வகிப்பவர் எவரும் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தீர்மானத்திற்கு ஆதரவாக 37 வாக்குகள் ; தீர்மானத்திற்கு எதிராக 156 வாக்குகள் ; நடுநிலைமை வகிப்பவர் எவரும் இல்லை. ஆகவே, தீர்மானம் தோல்வியுற்றது.

பேரவையின் இன்றையநிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும். இரவு 8–12

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 7. பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

* 183. Annual Report and statement of Accounts and Government Review on the working of the Madras Agro. Industries Corporation, Ltd., Madras, for the year ended 31st March 1967. [*Laid on the Table of the House under section 619-A of the Companies Act*, 1956 (*Central Act I of* 1956).]

### B. Reports, Notifications and Other Papers.

* 58. Notification issued with G.O. Ms. No. 567, L.A., dated the 21st March 1968, in regard to the appointment and removal of non-official members of the Mettur, Bhavani Sagar, Kodaikanal and Courtallam Township Committees.

*59. Notification issued with Memorandum No. 56014/M-10/66-12, R.D. & L.A., dated the 28th December 1967, in regard to erratum to the R.D. & L.A. Department Notification II-2 No. 454 of 1967, dated the 29th November 1967, published at pages 467–469 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 13th December 1967.

* 60. Notification issued with Memo. No. 141997/M-10/67-2 R.D. & L.A., dated the 28th December 1967, in regard to erratum to the Rural Development and Local Administrtion Department Notification II-2 No. 312 of 1967, dated the 17th October 1967 published at pages 316–319 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 15th November 1967.

* 61. Notification issued with Memo. No. 18635/M-10/67-7, R.D. & L. A., dated the 29th December 1967, in regard to erratum to the Rural Development and Local Administrtion Department Notification II-2 No. 326 of 1967, dated the 19th September 1967, published at pages 335–337 of Part II – Section 2 of the *Fort St. George Gazette*, dated the 22nd November 1967.

* 62. Notification issued with Memo. No. 155379/M-10/67-1, R. D. & L.A., dated the 30th December 1967, in regard to erratum to the Rural Development and Local Administrttion Department Notification II-2 No. 483 of 1967, dated the 14th December 1967, published at pages 25-31 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 16th December 1967.

* 63. Notification issued with Memo. No. 156679/M10/67-1, R. D. & L. A., dated the 4th January 1968, in regard to erratum to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 469 of 1967, dated 7th December 1967, published at pages 9-10 of Part II Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 16th December 1967.

* 64. Notification issued with Memo. No. 143249/M-10/67-3, Rural Development and Local Administration, dated the 18th January 1968, in regard to erratum to the Notification II-2 No. 503 of 1967, dated the 22nd December 1967, published at page 7 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th December 1967.

* 65. Notification issued with Memo. No. 1883/M-10/68-1, R.D. & L.A., dated the 17th January 1968, in regard to erratum to the Notification II-2 No. 494 of 1967, dated the 20th December 1967, published at page 4 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th December 1967.

* 66. Notification issued with Memo. No. 4459/M-10/68-1, R.D. & L.A., dated the 19th January 1968, in regard to erratum to the Notification II-2 No. 508 of 1967, dated the 26th December 1967, published at page 10 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th December 1967.

* 67. Notification issued with Memo. No. 5606A/M-10/68-1, R.D. & L.A., dated the 24th January 1968, in regard to erratum to Notification II-2 No. 324 of 1967, dated the 18th September 1967, published at pages 332-335 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 22nd November 1967.

* 68. Notification issued with Memo. No. 146787/M-10/67-6, R.D. & L.A., dated the 8th February 1968, in regard to erratum to the Notification published as II-2 No. 486 of 1967, published at pages 1-2 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th December 1967.

* 69. Notification issued with Memo. No. 19424/M10/68-1, R.D. & L.A., dated the 23rd February 1968, in regard to the erratum to the Notification II-2 No. 47 of 1968, dated the 28th December 1967, published at pages 57-59 of Part II—Section 2 of *Fort St. George Gazette*, dated the 24th January 1968.

---

***Laid on the Table of the House on 26th August 1968.**

## தமிழகச் சட்டப் பேரவை

---

**வியாழக்கிழமை, 1968 ஆகஸ்ட் 29.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

THIRU K. VINAYAKAM: Sir, on a point of order. How can this House function in the absence of the Ministers who are expected to answer the questions?

(The Hon. Thiru S. Madhavan just then entered the House )

**வினாக்கள்—விடைகள்.**

**1. வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.**

**தமிழ்நாட்டில் வனஸ்பதி தொழிற்சாலை.**

* 176 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரசுத் துறையில் ஒரு வனஸ்பதி தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேர்க்கடலை வட ஆர்க்காட்டிலே மிக அதிகமாகப் பயிராகிறது. எனவே வனஸ்பதி தயாரிப்பதற்கு இந்த வேர்க்கடலை எண்ணெய் பிரயோஜனமாக இருப்பதால் இனியாவது அப்படி ஒரு தொழிற்சாலையை அரசுத் துறையில் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே வனஸ்பதி தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இருக்கிற தொழிற்சாலைகளிலே உற்பத்தித் திறன் தேவையைவிட அதிகமாகக் குறைந்து வருகிறது. பல தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறன் அளவிற்குக் குறைந்து உற்பத்தி செய்கிறார்கள். சில தொழிற்சாலைகள் மூடப்படக்கூடிய நிலைமையும் இருக்கிறது. ஆகையால் புதிய தொழிற்சாலை உற்பத்தி செய்வதற்கு இந்திய அரசு இடம் அளிக்கவில்லை. ஏற்கெனவே வேலை செய்யாமல் இருக்கிற மெஷின்களைப் பயன்படுத்தி தொழிற்சாலை வைக்க யாராவது முன்வருவார்களானால் அவர்களுக்கு அனுமதி அளிக்கும். ஆண்டு ஒன்றுக்கு 15 ஆயிரம் டன் உற்பத்தியாகும் என்ற அளவிலே தொழிற்சாலையை விரிவுபடுத்திய பிறகு அதில் 75 சதவிகிதம் மூன்று ஆண்டுகள் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிந்தால் அந்த அளவிலே போதுமான அளவிற்கு விரிவுபடுத்த இடம் தருகிறார்கள். தொழிற்சாலைகளில் உற்பத்தி அதிகமாக இருக்கின்ற காரணத்தால் புதிய தொழிற்சாலைகள் வைக்க இடமில்லை.

**திரு. எம். சண்முகம்:** தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் விழுப்புரத்தில் தனியார் துறையில் ஒரு வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிப்பதற்குத் தயாராக இருந்தும், அரசாங்கத்தின் நிதி உதவி பெற்றிருந்தும், 10 ஆண்டுகளாக நடத்தப்பெறாமல் இருந்துவருகிறது. அதை அரசினராவது எடுத்து நடத்துவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதைப்பற்றிய விவரங்கள் தெரியவில்லை. தெரிந்த பிறகுதான் சொல்லமுடியும். இதை அரசு எடுத்து நடத்துவதற்கான நிலைமை இல்லை. அதை நடத்தமுடியாமல் இருப்பதற்கான சங்கடங்களை அவர்கள் எடுத்துச் சொன்னால் அவற்றை நீக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய முயலலாம்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிப்பதிலே மத்திய சர்க்காரின் பங்கு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மத்திய அரசின் பங்கு லைசென்ஸ் வழங்குகிற பங்குதான் இருக்கிறது. நிதி உதவியோ மற்றவையோ இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது வட ஆற்காடு மாவட்டத்தில் காட்பாடியில் சுதர்சன வனஸ்பதி ஆயில் மில்ஸ் என்று ஆரம்பிப்பதற்காக வேண்டி 10 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு அவர்களுக்குள்ளேயே குழப்ப நிலைமை ஏற்பட்டதினால் ஏலம் விட்டதிலே எவ்வளவு பணம் வசூலிக்கப்பட்டது ? இல்லையென்றால் என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.

**திரு. இல'. பலராமன் :** இந்த மாநிலத்தில் அதிகமாக மணிலா பயிர் உற்பத்தி செய்வது வட ஆற்காடு மாவட்டமாக இருப்பதால் அங்கு வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பித்தால் அங்கு இருக்கும் ஏழை விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் அதிக வருவாய் உண்டாகும் என்ற காரணத்தால் அங்கே ஒரு வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிக்க பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல் காட்பாடியிலே வனஸ்பதி தொழிற்சாலை மூடப்பட்டுள்ள நிலைமை இருக்கிறது. எற்கெனவே உள்ள மெஷின்களை யாராவது வாங்கி நடத்துவார்களேயானால் அதைப்பற்றி கவனிக்கலாம். அதேமாதிரி விழுப்புரத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பாடுகள் செய்யப்பட்டு தொடங்கப்படாத நிலைமை இருக்கிறது. இப்பொழுது நடைபெறுகின்ற தொழிற்சாலைகளில் இந்துஸ்தான் லிவர் லிமிடெட், திருச்சி-6,000 டன் வனஸ்பதி உற்பத்தி செய்கிறது. போனப்பா, மைசூர் பிரைவேட் லிமிடெட், இது சென்னையில் இருக்கிறது. இது 2,000 டன் உற்பத்தி செய்கிறது. ஈஸ்ட் ஏஷியாடிக் பிரைவேட் லிமிடெட் தண்டையார் பேட்டையில் இருக்கிறது. இது 6,000 டன் உற்பத்தி செய்கிறது. மேட்டூர் கெமிகல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் கார்பொரேஷன், மேட்டூர் டாம், மேட்டூரில் இருக்கிறது. இது 3,850 டன் உற்பத்தித் திறன் உள்ளது. ஆகையால் விழுப்புரத்தில் உள்ள தொழிற்சாலை இயங்கப்படாமல் இருக்கிற காரணத்தாலும், காட்பாடியிலுள்ள தொழிற்சாலை இயங்கப்படாமல் இருக்கின்ற காரணத்தாலும் குறைபாடுகளை ஆராய்ந்து பிறகுதான் மேற்கொண்டு வைக்கலாமா என்பது பரிசீலிக்கப்படும்.

**திரு. சி. கோவிந்தராசன் :** விழுப்புரத்தில் இருக்கக் கூடிய வனஸ்பதி கம்பெனி, வனஸ்பதி என்று போர்டைப்போட்டுக்கொண்டு, அதற்கு மானியமும் பெற்றுக்கொண்டு, அந்தத் தொழிலை நடத்தாமல் புகையிலையை வரவழைத்து அதிலிருந்து ஒருவிதமான ஆயிலைத் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக புகையிலை சரியாகக் கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்பட்டு ஏற்கனவே அங்கே வேலை செய்துகொண்டிருக்கின்ற தொழிலாளர்களை நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? வனஸ்பதி தொழிற்சாலை என்று போர்டு போட்டிருக்கிறபடி வனஸ்பதி தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற விவரங்கள் அரசாங்கத்துக்குத் தெரியவில்லை. வனஸ்பதியைத் தயாரிக்கவேண்டுமென்று அதில் இப்போது இருக்கக் கூடிய சங்கடங்களைத் தெரிவிப்பதற்கு அவர்கள் அரசை அணுகினால், அதைப்பற்றி என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளலாம் என்று பார்க்கலாம்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** உற்பத்தித் திறன் அளவிற்கு உற்பத்தி செய்யாது வேலை செய்துகொண்டிருக்கின்ற தொழிற்சாலைகள் யாவை ? மூடப்பட்டுவிட்ட தொழிற்சாலைகள் யாவை என்ற விவரம் சொல்ல முடியுமா ? இப்போது அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்பொரேஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அவர்கள் ஏற்று நடத்துவதற்கு முன்வந்தால் அதை அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலிலே சங்கடங்கள் என்னென்ன என்று தெரிவிப்பார்களானால் அதை ஆராய்ந்து அதை யார் நடத்துவது என்ற முடிவுக்கு வரலாம். அப்படி சங்கடங்களை ஆராய்ந்து நடத்த முடியுமானால் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்பொரேஷன் செய்யலாமா அல்லது யார் செய்யலாம் என்று முடிவு செய்யவேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** நமது நாட்டின் தேவை எவ்வளவு ? உற்பத்தி எவ்வளவு ? இதற்கு மூலப்பொருள்கள் எங்கெங்கிருந்து வருகின்றன ? எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்று சொல்லமுடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முழு விவரத்திற்கு தனிக்கேள்வி போடவும். அகில இந்தியாவிலே வனஸ்பதி தொழிற்சாலைகள் பரவி இருக்கின்றன. அந்த அளவிலே இருப்பதனால் ஒரு மாநிலத்திற்குத் தேவைப்படுவதை மாநிலத்திற்கு மாநிலம் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகள் மூடப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன. நம்மைப் பொறுத்தவரை உற்பத்தித்திறன் அதிகமாக இருக்கிறது.

**திரு. என். வரதராஜன் :** வனஸ்பதியின் விலையை உயர்த்திவிட்டிருக்கிறார்கள். இதனால் மற்ற எண்ணெகளின் விலைகளும் உயர்ந்திருக்கின்றன. இந்த விலையை மத்திய சர்க்காரே உயர்த்தி இருக்கிறதா அல்லது மாநில சர்க்காரைக் கேட்டுக்கொண்டு உயர்த்தியதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே வனஸ்பதி தொழிற்சாலையை கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் ஏற்படுத்தலாம் என்று கூட்டுறவு சங்கத்தின் சார்பாகவும், மாவட்டத்தலைவர் சார்பாகவும் கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் மூலமாகவும் மனுசெய்திருக்கிறார்கள். இதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டபடி வனஸ்பதி உற்பத்தி அதிகமாக இருக்கிறது. தொழிற்சாலைகளில் பல இடங்களில் 100-க்கு 100 உற்பத்தி செய்யாமல் 50, 60 சத விகிதம்தான் செய்கிறார்கள். ஆகையால் புதுத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டியதில்லை. எற்கெனவே வேலை செய்யாமல் இருக்கிற தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்களைப் பயன்படுத்தி யாராவது ஆரம்பிக்க முன்வந்தால் கவனிக்கலாம். 15 ஆயிரம் டன் உற்பத்தித் திறன் என்று சொன்னார்கள். இதிலே 75 சதவிகிதம் உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்று தெரிந்தால் அதை விரிவுபடுத்துவதற்கு அரசு முயற்சி செய்யலாம்.

**திரு. எஸ். முருகையன் :** . நம்முடைய மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு மணிலாப் பயருகவும், எண்ணெயாகவும் கொண்டு போய், அங்கே வனஸ்பதி தயார் செய்கிருர்கள். இங்கே வனஸ்பதி தொழிற்சாலை நடைபெருமல் மூடப்பட்டிருக்கிறது. இதற்கான கார ணம் என்ன என்பதைப்பற்றி ஆராய்வதற்கு ஒரு குழுவை நியமித்துப் பரிசீலனை செய்து, மீண்டும் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி, விழுப்புரம் தொழிற்சாலைதான் மூடப்பட்டிருக் கிறது. அதற்கான காரணங்களை அறிந்து, அந்தச் சங்கடங்களைப் போக்க என்ன வழி இருக்கிறது என்பதைப்பற்றி ஆராயலாம். அதுபற்றி முழு விவரங்களையும் தந்து முறைப்படி அரசாங்கத்தை அணுகுவார்களாஞல், மற்றும் இதைத் தவிர, வேறு தொழிற்சாலை ஆரம்பிக்க வாய்ப்புக்கூறு கள் இருக்கின்றனவா என்பதையும் ஆராயவேண்டும்.

## உலகத் தமிழ் மாநாடு

***177 விஞ.— திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி அரசாங் கம் செலவு செய்த தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாநாட்டிற்கென வசூ லிக்கப்பெற்ற தொகையிலிருந்தே செலவுகள் பெரும்பான்மையும் ஈடு எடுத் பெற்றன. ஒரு சில செலவினங்களையே அரசு ஏற்றுக்கொண்டது. அழைப்பிதழ், துக்காட்டாக, ஜனவரி 3-ந் தேதி நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு அக்கூட்டத்திற்கு மேடை, ஒலி, ஒளி அமைப்பு, ஜனவரி 11-ந் தேதி நடைபெற்ற அரசு விருந்து, மாநாட்டு வேலைகளுக்கென நியமிக்கப்பெற்ற அலுவலர்கள் ஆகிய செலவினங்களைக் குறிப்பிடலாம்.

**திரு. என். என். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ் மாநாட்டுக்காக அரசாங்கம் மொத்தம் செலவு செய்த தொகை எவ்வளவு? அதை தமிழ் மாநாட்டுக் குழுவினரிடமிருந்து பெறமுடி யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழ் மாநாட்டுக் குழுவி னிடமிருந்து பெறுவதைப்பற்றியதல்ல இது. பொதுவாக, சிலபல நிலை மைகளில் இந்தியக் குடியரசுத் தலைவர் வருகின்றபோது நடைபெறுகின்ற பொதுக் கூட்டங்கள், வரவேற்புகள், விருந்துகள் ஆகியவற்றை அர சாங்கத்தின் சார்பாக நடத்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. அந்த வகை யில்தான், 3—1—1968 அன்று நடந்த பொதுக் கூட்டத்தைப் பொறுத்து 25 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது. விமான நிலையத்தில் குடி யரசுத் தலைவரை வரவேற்பதற்காக அமைக்கபபட்ட பந்தல் போன்ற செலவுக்கு 13 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டது. முதலமைச்சர் கருத் தரங்குப் பேராளருக்கு 11—1—1968 அன்று அளித்த விருந்துக்கு ரூபாய் 13,333·35 செலவிடப்பட்டது. அரசு அலுவலர் சம்பளம் முதலிய வற்றுக்கு ரூபாய் 23,735·70 செலவிடப்பட்டது.

**திரு. மா. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டின்போது கண்ணகி, கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. போன்ற வர்களுக்குச் சிலைகள் வைக்கப்பட்டன. நம்முடைய வழிபாட்டுக்கும் வணக் கத்திற்கும் உரிய அத்தகைய சிலைகள் இன்னும் நகல் படிவங்களாகவே இருக்கின்றன, அசல் படிவங்கள் வரவில்லை. இந்தச் சிலைகள் மிகவும் சேதப்பட்டு, பார்ப்பதற்கு பரிதாபகரமாக இருப்பதால், இவற்றை மாற்று வதில் என் தயக்கம் ஏற்படுகிறது என்பதை அறியலாமா?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தச் சிலைகளையெல்லாம் வெண்கலச் சிலைகளாக மாற்றித் தரவேண்டும் என்று, அவற்றைச் செய்கின்ற சிற்பிகளை நாங்கள் அவ்வப்போது வற் புறுத்திக்கொண்டே இருக்கிருேம். அவர்கள் 10 நாள், 15 நாள், 20 நாள் என்று தவணை சொல்லி, தருகிருேம், தருகிருேம் என்று சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே, விரைவிலே வரும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. அதற்குரியதில் பாதித் தொகைதான் 25 ஆயிரம் தர வேண்டியதற்கு 12,500 ரூபாய்தான் செலுத்தப்பட்டிருக்கிறது. மற்றத் தொகை தந்தபிறகு வைத்துவிடுவார்கள். ஆனுல், வற்புறுத்தப்பட்டு வருகிறது. விரைவிலே அந்தச் சிலைகளெல்லாம் மாற்றப்படும்.

**திரு. கே. விநயகம் :** இந்த உலகத் தமிழ் மாநாட்டுக்கு எவ்வளவு பணம் எல்லாத் துறைகளிலிருந்தும்—அரசாங்கத் துறை, ஆசிரியர்கள் துறை போன்ற துறைகளிலிருந்து மாவட்டக் கலெக்டர்களால் வசூலானது என்ற பட்டியலும், அந்தப் பணத்தை எந்தெந்த விதமாகச் செலவு செய்தது என்ற விவரமும், அதுபற்றிய கணக்குகளை எந்த ஆடிட்டர் தணிக்கை செய்தார் என்ற விவரமும் சட்டசபை மேஜை மீது வைக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய கணக்கு தனித் தனியாகத் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால், விவரங்களெல்லாம் சேகரித்துத் தரலாம்.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர், சார், உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி, பூம்புகார் நகர் அமைக்கப்பட்டது. அந்தப் பூம் புகார் நகர் அமைக்கப்பட்ட இடத்தில், இன்னொரு பூம்புகார் நகரத்தை அமைப்பதற்கு செயற்குறிப்பு ஏதேனும் அரசினரிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அசல் பூம்புகார் இருப்ப தால், இங்கே ஒரு பூம்புகார் என்ற பெயரில் நாம் தாற்காலிகமாகத்தான் அமைத்தோம். அப்படியே நாம் அமைக்க விரும்பிஞலும், இராணுவத் தினர் இடம் தரமாட்டார்கள்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டையொட்டி சிறப்பாக வெளியிடப்பட்டிருக்கின்ற மாநாட்டுச் சிறப்பு மலரின் முதல் பதிப்பு விற்பனையாகிவிட்டது என்றும், இரண்டாவது பதிப்பு தயாராகிக்கொண்டிருக்கிறது என்றும் அறிகிறேன். கிறிஸ்துவர் களும் இஸ்லாமியர்களும் வளர்த்த தமிழ் என்ற பகுதி முதல் பதிப்பில் விட்டுப்போய் விட்டது. தமிழைச் சிறப்பாக வளர்த்திருக்கிற கிறிஸ்துவச் சமயப் பெரியோர்களைப் பற்றியும், இஸ்லாமியச் சமயப் பெரியோர்களைப் பற்றியும், அவர்கள் வளர்த்த இன்பத் தமிழ் இலக்கியத்தைப் பற்றியும் அந்த மலரின் இரண்டாவது பதிப்பில் இடம் பெற அரசு ஏதாவது நட வடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இன்னும் முதல் பதிப்பு முழுவதும் விற்பனையாகி முடியவில்லை. இரண் டாவது பதிப்பு போடுகின்ற நிலை இப்பொழுது ஏற்படவில்லை. அப்படி ஏற்படுகிற நிலை வந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து மனத்திலே கொள்ளப்படும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஐயா, கடந்த இருபதாண்டுக் காலமாகக் காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிந்து, தமிழைப் பற்றியும், தமிழ்ப் பண்பாடு பற்றியும் உள்ள, இதுவரையிலும் வெளிவராத சில முக்கியமான இரகசிய தஸ்தாவேஜுகளைக் கண்டுபிடித்திருக்கிற திரு பிலோ இருதய நாத் அவர்களுடைய கட்டுரைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந் திருக்கின்றனவா? அப்படி வரவில்லையென்ருல், அதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அவர் தனிப்பட்ட முறையில் ஆராய்ச்சி செய்து சிலபல நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவை அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அதுபற்றி நடவடிக்கை எதுவும் எடுக்காமலேயே அவருடைய நூல்கள் மக்களிடையே நன்கு பரவிக் கொண்டிருக்கின்றன.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டையொட்டி அமைக்கப்பட்ட பூம்புகார் மீது வெறும் புகார் கூறப்பட்டதே, அது சர்க்காருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தெரியாது.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** உலகத் தமிழ் மாநாட்டுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர், வட்டாட் த் தலைவர், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் மூலமாகப் பணம் வசூலிக்கப்பட்டது. அரசாங்கச் சிப்பந்திகள் மூலம் வசூலிக்கப்பட்ட அந்தப் பணம், தனிக் கமிட்டி கணக்கில் எப்படிப் போய்ச் சேர்ந்தது? அரசாங்கச் சிப்பந்திகள் மூலம் வசூல் செய்த பணத்தின் கணக்கை அரசாங்கம் இந்தச் சட்டசபை முன் வைக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆங்காங்கு, அதற்கென்று, எல்லா மாவட்டங்களிலும், குறிப்பிட்ட சில மாவட்டங்களிலும் தனித்தனிக் குழுக்களுக்கு ஏற்பாடு செய்து அமைக்கப்பட்டன. அந்தக் குழுக்களோடு, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மற்றவர்களும் ஈடுபடுத்தப்பட்டார்கள். அவையெல்லாம் செம்மையாக நடைபெறும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அவை முழுக்க முழுக்க அரசாங்கத்தின் சார்பாகவே நடைபெறவில்லை. திரு. பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. திருமதி சந்திரகாந்தி அம்மையார் தலைமையில் கோயம்புத்தூரில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவுக்கு மாவட்ட ஆட்சித்தலைவரும் மற்றவர்களும் உதவி செய்தார்கள். தமிழ் மாநாட்டுக்காக மட்டுமல்லாமல், அந்தந்த மாவட்டத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் சேர்த்து நிதி வைத்திருக்கிறார்கள். அதைப்பொறுத்து, அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள் முழுக் கணக்கு விவரங்களை அவரவர்களே வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதுபற்றிய விவரத்தைத்தான் முன்பு தந்தார்கள். முழு விவரம் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் இருக்கிறது. தனிக் கேள்வி போட்டால், அத்தகைய விவரங்களையெல்லாம் சேகரித்துத்தரலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, கேள்வி எண் 178 எடுத்துக்கொள்ளப்படுகிறது. திரு. கரு. சீமைச்சா மி அவர்களுடைய கேள்விக்கு மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் விடை அளிப்பார்கள்.

**திரு. கே. விநாயகம் :** முந்தைய கேள்விக்கு நான் ஒரு துணைக் கேள்வி கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்த கேள்வியை எடுத்துக்கொள்ளலாம் என்று நான் அறிவித்துவிட்ட பிறகு, உறுப்பினர் அவர்கள் முந்தைய கேள்விக்குப் போகக்கூடாது. முந்தைய கேள்விக்கு போதிய துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டுவிட்டன. ஒரு கேள்வி முடிந்த பிறகு, அதற்குத் துணைக் கேள்வி கேட்கவேண்டும் என்று நேற்றையதினம் போலவே இன்றும் கேட்பது என்ற முறையை வைத்துக் கொள்ளக்கூடாது. இப்பொழுது கேள்வி எண் 178 எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**THIRU K. VINAYAKAM :** One small question. I have been trying to catch your eye. You saw me also. Afterwards you went away to others. What can I do ?





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. சீமைச்சாமி அவர்களின் கேள்விக்கு மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் விடை அளிப்பார்கள்.

**THIRU K. VINAYAKAM :** This question being a very important one which concerns the welfare of our State, I wish that one hour debate may be allowed by the Deputy Speaker.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதைப்பற்றி, நான்கு நாட்களாக நடைபெற்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் விரிவாகப் பேசப்பட்டு, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் விளக்கமாக பதில் அளிக்கப்பட்ட காரணத்தால், இதன் மீது ஒரு மணி விவாதத்திற்குத் தேவை இல்லை என்று நான் கூறுகிறேன்.

**THIRU K. VINAYAKAM :** Let us not stand on formalities.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி எண் 178 போடப்பட்டு மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் அதற்கு விடை அளிக்கலாம்.

### மதுரையில் விளையாட்டு அரங்கம் அமைத்தல்

178 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் ஸ்டேடியம் கட்டும் திட்டம் எந்நிலையில் உள்ளது.?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதுரையில் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு பொருத்தமான புறம்போக்கு நிலங்களை அம் மாவட்ட விளையாட்டுக் குழுவிற்கு அளிப்பது குறித்து மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவன செய்து வருகின்றார் என்று தெரிகிறது. மாவட்ட விளையாட்டுக் குழுவிற்கு நிலங்களை அளிப்பது அல்லது பண உதவி அளிப்பது பற்றிய கோரிக்கைகள் எதும் அரசிடம் இன்னும் வந்து சேரவில்லை.

**திரு. நா. காசிராமன் :** மதுரையில் அமைக்கப்பட இருக்கும் விளையாட்டு அரங்கிற்கு மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய தகவல் இல்லை. 24 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் 2 லட்சம், 3 லட்சம், 4 லட்சம் என்பதாக ஒவ்வொருவிதமாகத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அவர்களது மதிப்பீட்டில் பாதி அல்லது 1 லட்சம் இதில் எது குறைவாக இருக்கிறதோ அதைத் தரும்.

**திரு. ந. தருமலிங்கம் :** ஸ்டேடியம் கட்டுவது பற்றி இந்த அரசாங்கம் பெரிய பட்டிணங்களில்தான் கட்டவேண்டும் என்பதற்கு வகை செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** குறிப்பாக ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் நல்ல ஸ்டேடியம் கட்ட வேண்டுமென்ற எண்ணம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இப்போது திருச்சி, வேலூர், நீலகிரி, மதுரை நகரங்களில் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மதுரையில் ஸ்டேடியம் கட்ட வேண்டுமென்று நகரசபை தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது. அதற்காகும் செலவில் பங்கையும் நகரசபை ஏற்கத் தயாராய் இருக்கிறது. ஆகவே அது எப்போது அமைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதுரையில் வடக்கு கிரா மப் பகுதியில் 24 எக்கர் ஆர்ஜிதம் செய்து ஸ்டேடியத்திற்காகத் தர வேண்டுமென்ற செயற்குறிப்பு ரெவின்யூ போர்டிற்கு வந்திருக்கிறது. அங்கிருந்து அரசாங் த்திற்கு வரும். அரசாங்கம் அந்த நிலத்தை ஆர் ஜிதம் செய்து கொடுத்து 1 லட்சம் தரும். பாக்கித் தொகைக்கு மா வட்ட ஸ்போர்ட்ஸ் கவுன்சில் நகரசபையினிடம் வரும். அப்போது அந்தப் பணத்தையும் உபயோகித்துக்கொண்டு சீக்கிரம் கட்ட வாய்ப்பு ஏற்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister the steps that would be taken to construct a stadium in Dharmapuri and also in view of the backwardness of the district, will the Government come forward to spend more amount for the construction of the stadium ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் இல்லை. அதுபற்றி மாவட்ட ஸ்போர்ட்ஸ் கவுன்சில் எழுதி அனுப்பினால் பரிசீலனை செய்யலாம்.

**திரு. சு. துரைசாமி :** கோவையில் ஸ்டேடியம் கட்டுவதற்கு கடந்த நான்கைந்து மாதங்களாக நிதி திரட்டப்பட்டது. இரண்டு லட்சத்திற்கும் அதிகமாக கிடைத்திருக்கும் என்று கருதுகிறேன். கோவையில் இந்த வேலை எப்போது துவங்கப்படும்? எந்த இடத்தில் கட்டுவதற்கான நிலைமை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போ வேண்டும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** மாநில ஸ்போர்ட்ஸ் கவுன்சில் எந்த எந்த நகரங்களில் ஸ்டேடியம் கட்டவேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது? விளையாட்டு அரங்கங்களோடு, உடற்பயிற்சி ஆசிரியர்கள் சம்பந்தமாகவும் ஏதாவது சிபார்சு செய்திருக்கிறதா? செய்திருக்கிறது என்றால் அதன் மீது அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் குறைந்த அளவு ஸ்டேடியம் ஒன்று இருக்கவேண்டுமென் பது முதல் முயற்சி. இன்றைக்கு சென்னையைத் தவிர வேறு இடத்தில் அமையவில்லை. பிறகுதான் மற்ற இடங்களைப் பற்றி யோசிக்க வேண்டி வரும்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** விளையாட்டு அரங்கங்கள் அங்கங்கே அமைக்கப்படுகிற முயற்சி வரவேற்கத்தக்கது. தற்பொழுது எந்த எந்த மாவட்டத்தில் விளையாட்டு அரங்கங்கள் இருக்கின்றன? எந்த எந்த மாவட்டத்தில் இல்லை என்று சொல்லமுடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பெரும்பாலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் போலீசாரின் விளையாட்டு அரங்கங்கள் தான் இருக் கின்றன. அவற்றையே சாதாரணமாகப் பயன்படுத்தி வருகிறோம். பொது மக்களுக்கென்றே தனியாகப் பயன்படுகிற வகையில் தனியாக அமைக்க இப்போது முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. முதற்படியாக வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, நீலகிரி மாவட்டங்களில் எடுக்கப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்கள் பற்றியும் பரிசீலித்துக்கொண்டி ருக்கிறார்கள்.

**திரு. என். துரைபாண்டியன்:** மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டு அரங்கிற்காக நிலம் ஆர்ஜிதம் செய்வது என்றால் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தாலுக்கா தலைநகரில் குறைந்த விலையில் நிலத்தை வாங்கி அமைக்க அரசாங்கம் முன்வருமா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஒவ்வொரு மாவட்டத்தலை நகரிலும் விளையாட்டு அரங்கங்கள் இருந்தால்தான் அந்த மாவட்டத்திற் குள்ளேயே அங்கங்கே போட்டிகள் நடத்தி, தலைநகரில் முடிவு விளை யாட்டை வைக்க முடியும். மேலும் இந்த அரங்கங்களை பள்ளிகளும், கல்லூரிகளும் கூடக் பயன்படுத்திக்கொள்ள முடியும். இதற்கான நிலங் களைக் கூட புறம்போக்கு நிலங்களாகப் பார்த்து எடுக்கப்படுகிறது. மேலும் புறம்போக்கு நிலங்களை ஒட்டியிருக்கக்கூடிய நிலங்களை இனாமாக தனிப்பட்டவர்களிடத்தில் இருந்தும் பெறப்படுகிறது. மதுரையில் கூட ஒரு கிளப்புக்குச் சொந்தமான நிலத்தை அவர்கள் இனாமாகத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பொதுமக்கள் எல்லோரும் கலந்துகொள்கிற ஆண்டு விளையாட்டுப்போட்டி நடத்தி, மாநிலத்தில் இருந்தெல்லாம் சென் னைக்கே வந்து ஆண்டு விளையாட்டுப்போட்டி நடத்தி மக்களிடத்து நல்ல ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண் டும் என்பதுதான் கருத்தாகும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மாவட்டத்தலைநகரங்களில் 25 லட்சம், 30 லட்சம் என்று விளையாட்டு மைதானம் ஏற்படுத்த கலெக்டர்கள் பஞ் சாயத்துக்களிடம் இருந்தெல்லாம் வசூல் செய்கிறார்கள். நாடு இன்றிருக்கிற ஏழ்மை நிலைமையில் இது அவசியம்தானா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவ்வளவு அதிகச் செலவு தேவையில்லை. 2 லட்சம், 3 லட்சம், 4 லட்சம் என்ற அடிப்படையில் தான் ஸ்டேடியம் அமைக்க மத்திய ஸ்போர்ட்ஸ் கவுன்சில் மூலம் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது வேலூரில்கூட மூன்று, நான்கு லட்சத் திற்குள்தான் திட்டமிட்டிருக்கிறார்கள். 25 லட்சம், 30 லட்சம் என்று திட்டமிட வேண்டிய அவசியமே இல்லை.

**திரு. மா. பா. சாரதி :** இப்போது வேலூரில் கட்டப்படுகிற ஸ்டேடியம் போலீஸ் க்ரவுண்டிலேயே கட்டப்படுகிறது. பொதுமக்களுக்குப் பயன்படுகிற வகையில் அதை வேறு இடத்தில் அமைத்து, ஸ்போர்ட்ஸ் கவுன்சிலிடம் ஒப்படைக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பொதுமக்களுக்குப் பயன் படுகிற வகையில்தான் அங்கே கட்டப்படுகிறது. எந்த இடத்தில் கட்டப் படுகிறது என்கிற விவரம் இல்லை. எங்கு கட்டப்பட்டாலும் பொதுமக்கள், ஸ்போர்ட்ஸ் கவுன்சில் சார்பாகவே கட்டப்படுகிறது.

**கோவையில் மின்சார விபத்துக்கள்.**

*179 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் கோயமுத்தூரில் பல மின்சார விபத்துக்கள் நடந்து 3 பேர் மாண்டதும், பலர் காயம்பட்டதும், அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் என்றால், இவ்வித அபாயங்களைத் தடுக்க என்ன பரிகாரம் மேற்கொள்ளப்பட்டது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) மூன்று மரண விபத் துக்கள் உட்பட, ஐந்து மின்சார விபத்துக்கள் நேரிட்டதாக அரசாங்க மின் சாரத் தலைமை ஆய்வாளருக்கு அறிவிக்கப்பட்டது.

(இ) பாதுகாப்பு முன் எச்சரிக்கைகளின் முக்கியத்துவமும் அவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய அவசியமும் மின்சாரத்துறை ஊழியர் களுக்கும் பொதுமக்களுக்கும் வலியுறுத்தப்பட்டன. இவ்விபத்துக்களுக் குப் பொறுப்பானவர்களை நகராட்சி மின்சாரப் பொறியாளர் தண்டித் துள்ளார்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஏற் படுகின்ற விபத்துக்களுக்குக் காரணமானவர்கள் அவற்றை நிர்வகிக்கின்ற பொறியாளர்களே. பொறியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அங்

கிருக்கிற ஊழியர்களை சஸ்பெண்டு செய்வது போன்ற நடவடிக்கையை எடுக்கிறார்களே, அதை மாற்றி பொறியாளர்களின்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆங்காங்கு ஏற்படுகிற தவறுகளுக்கு யார் காரணமாக இருக்கிறார்களோ அவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இங்கு ஏற்பட்டுள்ள ஐந்து விபத்துக்களில் ஒன்றில் பொறியாளர் சஸ்பெண்டு செய்யப்பட்டு, செகண்டு கிரேடு சூப்பர் வைசராகத் தள்ளப்பட்டிருக்கிறார். ஆக, விபத்துக்கு யார் காரணமோ அவர்கள் தான் சஸ்பெண்டு செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு, தண்டிக் கப்படுகிறார்கள்.

மு.ப. 9 31 **திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்த மின் விபத்துக் களால் உயிரிழக்கக்கூடியவர்கள் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்கப் படுகிறதா, அது எவ்வாறு நிச்சயிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மின் சாரத் துறையில் விபத்துக்குள்ளாகிறவர்களுக்கு நஷ்ட ஈடு தருவதற்கு முறைகள் வைத்திருக்கிறார்கள். அவற்றைப்பற்றிய முழு விவரங்கள் இல்லை. இருக்கின்ற விதி முறைகளின்படி நஷ்ட ஈடு தருகிறார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இதிலே மாண்டவர்கள் 3 பேர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக் கிறதா ? அவர்கள் மின்சார இலாகாவில் வேலை செய்தவர்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூன்று பேர்கள் மாண் டார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மின்சார இலாகா விலே வேலை செய்தவர்கள். நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா இல்லையா என்பதுபற்றி விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் சொல்லலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** மின்சார இலாகாவில் பணிபுரியக் கூடியவர்கள் விபத்துக்குள்ளானால் நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறது. ஆனால் பொதுமக்கள் பாதையிலே போகக்கூடிய சமயத்திலே எதிர்பாராத வித மாக விபத்துகளுக்குள்ளானால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுவது இல்லையே, அவர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விதிமுறைகள் எப்படி இருக்கின்றன என்பது தெரியவில்லை. அதுபற்றி தக்க வகையில் ஆராயலாம்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** இந்த விபத்திலே மாண்டவர்களின் சரித்திரம் என்ன ? அவர்களுக்குப் பிள்ளைகுட்டிகள் எவ்வளவு, அவர் களுடைய சர்வீஸ் என்ன என்றெல்லாம் அமைச்சர் அவர்களுக்குக் குறிப்பு வந்திருக்குமே, அந்தக் குறிப்பின்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதிலே ஒருவர் இறந்து பட்டிருக்கிறார். இன்னொருவர் தெரியாத்தனமாக பியூஸை மாட்டிவிட்ட தன் காரணமாக விபத்துக்குள்ளாக நேரிட்டது. அதற்குக் காரணமாக இருந்தவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. குடும்பத்தின ருக்கு நஷ்ட ஈடு எவ்வளவு தரப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம். அதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. யார் யார் அதற்குப் பொறுப்போ அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. அந்த வகையிலேதான் ஜூனியர் எஞ்சினியராக இருந்த வரை சஸ்பெண்ட் செய்து கிரேடு 2 சூப்பர்வைசராகப் போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்விகள் 180, 181, 183 அமைச்சரின் வேண்டுகோளின்படி தள்ளிவைக்கப்படுகின்றன.



## மதுரை மத்திய சிறைச்சாலைக்கு செய்தித்தாள் விநியோகம்.

*184 விஞ.—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மத்திய சிறைச்சாலையில் உள்ள கைதிகள் படிப்பதற் காக இதுகாறும் வழங்கப்பட்ட தினசரி ஏடு "நவசக்தி"யை தமிழக அரசு இப்போது வழங்காமல் நிறுத்தியது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) கீழே குறிப்பிடப்பட்ட மூன்று தினசரி செய்தித்தாள்களும், 200 கைதிகளுக்கு ஒரு தாள் வீதம் அரசாங்கச் செலவில் "சி" வகுப்புக் கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன.

1. தினமணி.
2. சுதேசமித்திரன்.
3. தமிழ்நாடு.

மேலும் வகுப்புப் பாகுபாடின்றி எல்லாக் கைதிகளும் அவர்கள் சிறையிலேயே அங்கீகரிக்கப்பட்ட பட்டியலிலுள்ள செய்தித் தாள்களிலிருந்து/ பத்திரிகைகளிலிருந்து அவர்களுக்குத் தேவையான தாள்களை / பத்திரிகை களை வாங்கிக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state the number of daily newspapers which were being supplied to the prisoners in Central Jail, Madurai before this Government assumed charge and may I know how many of them were stopped by this Government ? If so, the reasons for the same ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முன்னாலே எத்தனை பத்திரிகைகள் கொடுக்கப்பட்டு வந்தன என்ற லிஸ்ட் என்னிடத்தில் இல்லை. எவை எவை நிறுத்தப்பட்டன என்ற லிஸ்ட்டும் இல்லை. நவசக்தியோடு இன்னும் சில பத்திரிகைகளும் நிறுத்தப்பட்டன. இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு இந்த அரசாங்கத்தின் கொள்கைப்படி அரசாங்கச் செலவில் அரசியல் பத்திரிகைகள் கொடுக்கப்படுவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டது. அவர் கள் பத்திரிகை வேண்டுமென்றால் டீஸென்ஸி, மாரல் ஃபீலிங்ஸ் பாதிக் காத அளவுக்கு ஒரு பட்டியல் கொடுத்திருக்கிறோம். அந்தப் பட்டியலின்படி அவர்கள் கேட்டால் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

**திரு. பி எஸ். தனுஷ்கோடி :** சிறைச்சாலையில் இருக்கக்கூடிய கைதி களில் பலர் அரசியல் கட்சிக்காரர்களாக இருப்பார்கள். ஆகவே எல்லா அரசியல் கட்சி பத்திரிகைகளையும் போடுவதற்குப் பரிசீலனை செய்யப் படுமா ? துணைச் சிறைச்சாலையிலும் அரசாங்கச் செலவிலே பத்திரிகைகள் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** துணைச் சிறைச்சாலையில் இருக்கிற வர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. அரசியல் கட்சிகளின் சார்பிலே வெளி வருகின்ற பத்திரிகைகளைக் கொடுக்கின்ற முறையை மாற்றவேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் சிறைச்சாலையிலே இருந்தபொழுது எங்கள் கட்சிப் பத்திரிகை கேட்கப்பட்டபொழுது மற்ற அரசியல் கட்சி பத்திரிகைகள் இல்லையென்று சொன்னார்கள். எனவே அரசாங்கச் செல விலே அரசியல் பத்திரிகைகள் தரப்படுவதில்லையென்றும், அவர்களே வேண்டுமென்றால் அவர்கள் செலவிலே வாங்கிக்கொண்டால் ஆட்சேபணை யில்லையென்றும் சொல்லப்பட்டது.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டிற்கு கோவை மத்திய சிறையிலிருந்து வந்தவர்கள் கவிதைகளை இயற்றித் தந்தார்களே, அவை அந்த மாநாட்டில் இடம் பெற்றனவா ?

[1968 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உலகத் தமிழ் மாநாட்டில் அவர்களுடைய கவிதைகள் அரங்கேற்றப்பட்டன. தலைமை நீதிபதிதான் அவற்றை வெளியிட்டார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தினமணி, சுதேசமித்திரன், தமிழ்நாடு போன்ற பத்திரிகைகள் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். அவற்றிலே தமிழ்நாடு நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்குப் பதிலாக நவ சக்தியைச் சேர்த்துக்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நிறுத்தப்பட்டுவிட்டது என்று முழுமையாகச் சொல்லக்கூடாது. அதற்குப் பதிலாக நவசக்தியை வாங்க இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அரசியல் கட்சியைச் சேர்ந்த பத்திரிகையாக இருப்பதாலே அரசாங்கச் செலவிலே வாங்கிக்கொடுக்க முடியாது, கனம் அங்கத்தினர் செலவிலே வாங்கிக்கொடுக்கலாம்.

**திரு. பி. வேலுசாமி :** ஒருவர் இன்னொரு உயிரை வாங்கிவிட்டார் என்பதற்காக அவருடைய உயிரை வாங்கக்கூடிய முறையில் தூக்கு தண்டனை கொடுக்கக்கூடிய முறையை மாற்றி வேறு தண்டனை கொடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி சிறையிலே பத்திரிகை கொடுப்பதுபற்றி. அதைப்பற்றி மட்டிலும் கேள்வி போடவேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** சார், நவசக்தி ஒருவேளை காங்கிரஸ் கட்சி ஏடு என்று நிறுத்தினார்களே, இன்று ஆட்சியிலே இருக்கிற கட்சிக்காரர்கள் நடத்துகின்ற பத்திரிகைகளான மாலைமணி, முரசொலி, நம்நாடு போன்ற பத்திரிகைகள் தரப்படுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் கூர்மையாக கவனித்திருந்தால் எந்த அரசியல் பத்திரிகையும் கொடுக்கப்படுவதில்லை என்பது தெரிந்திருக்கும். அந்த அளவுக்கு நவசக்தியை காங்கிரஸ் கட்சி ஏடு என்று ஏற்றுக்கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்க செலவிலே அரசியல் பத்திரிகைகளைக் கொடுக்கக்கூடாது என்று வைத்து இருக்கிறோம். அவர்களாகச் செலவு செய்து வாங்கிக்கொண்டால் ஆட்சேபனை இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கட்சி சார்பிலே வெளிவரக்கூடிய பத்திரிகைகள் தரக்கூடாது என்று சொல்லி அமைச்சர் அவர்கள் தினமணி, சுதேசமித்திரன் என்ற இரண்டு பத்திரிகைகளையும் கொடுப்பதாகச் சொல்கிறார்களே, இந்த இரண்டும் கட்சி சார்பிலே வரவில்லை என்றாலும் காங்கிரஸ் கட்சியையும், சுதந்திராக் கட்சியையும் ஆதரிக்கக்கூடிய பத்திரிகைகள் ஆயிற்றே ? ஆகவே அவற்றை எடுத்து விடுவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பத்திரிகைகளிலே வரக்கூடியவை செய்திகளாக இருக்கவேண்டும் என்ற முறையிலேதான் மூன்று பத்திரிகைகளைத் தேர்ந்தெடுத்தோம். இன்னும் சில அம்மாதிரி இருக்கலாம். கட்சி வெளியிடுகிற பத்திரிகை போட ஆரம்பித்தால் கட்சிக்குக் கட்சி உள்ள எல்லாப் பத்திரிகைகளையும் போடவேண்டும், அதற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லை. அதனால்தான் கட்சி சார்பிலே உள்ள பத்திரிகைகளைக் கொடுக்கவில்லை.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** இந்த அரசு வந்ததற்குப் பிறகு நவசக்தி பத்திரிகையுடன் வேறு எந்தெந்த பத்திரிகைகளை நிறுத்தியிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முதலிலேயே சொன்னேன். அந்தப் பட்டியல் இல்லை. அதோடு மற்றப் பத்திரிகைகளும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. பத்திரிகைகளின் எண்ணிக்கை மூன்றாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.



1968 ஆகஸ்ட் 29]

**திரு. ந. வீராசாமி :** அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் எந்த அரசியல் கட்சிப் பத்திரிகைகளும் வாங்குவதில்லை என்று சொன்னார்கள். இந்தக் கொள்கை இந்த அரசாங்கம் வந்த பிறகு உருவாக்கப்பட்டதா ? முன்பு இருந்த அரசாங்கம் உருவாக்கியதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதற்கு முன்பு இருந்த அரசாங்கம் சில அரசியல் கட்சிகளை வளர்ப்பதற்காகத் தங்களுடைய பத்திரிகைகளுக்குத் தனி அனுமதி கொடுத்து வந்தார்கள். அதன்பேரில் தங்களுடைய கட்சிப் பத்திரிகைகளையும் வாங்கவேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்தது. இந்த அரசாங்கம் அதைப் பரிசீலித்து இந்தத் தொல்லையே வேண்டாம், எல்லோருக்கும் பொதுவான ஒரு கொள்கையை வகுப்போம் என்ற முறையில் எந்த அரசியல் கட்சிகளைச் சார்ந்த பத்திரிகைகளையும் வாங்குவதில்லை என்ற புதுமையான கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** தமிழ்நாடு நாளிதழ் நிறுத்தப்பட்டுவிட்ட காரணத்தால், மூன்று பத்திரிகைகளை அரசு தன்னுடைய செலவில் வாங்கிக் கொடுத்து வந்தது இரண்டு பத்திரிகைகளாகக் குறைந்திருக்கிறது. ஆகவே, சிறந்த பத்திரிகையாக, பாமரர், கட்சி சார்பற்றவர் படிக்கின்ற பத்திரிகையாக சிறப்பாக நடைபெறுகிற " தினத்தந்தி " பத்திரிகையை வாங்கிக் கொடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தினத்தந்தி பத்திரிகையை விரும்புபவர்கள் இருப்பார்கள், வெறுப்பவர்கள் இருப்பார்கள். இந்த அரசாங்கம் அதைத் தகுந்த நேரத்தில் பரிசீலிக்கும்.

**திரு. ந. தருமலிங்கம் :** அரசியல் கட்சி சார்புடைய பத்திரிகைகளைச் சிறைச்சாலையில் போடக்கூடாது என்பது கொள்கையாக இருந்தாலும்கூட ஆளும் கட்சியாக இருக்கின்ற மிகப் பெரிய கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரபூர்வமான ஏடான " நம் நாடு " பத்திரிகையை வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம் நாடு இதழை மனமுவந்து படிப்பவர்களுக்கு கழகத் தோழர்கள் அவர்களுடைய கைச் செலவிலேயே வாங்கிக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** கட்சி சார்பற்ற பத்திரிகைகள் மத்திய சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்குத் தரப்பட வேண்டுமென்ற கருத்து நல்ல கருத்து. அதையொட்டி தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் நடத்தும் நவமணி பத்திரிகையைப் போட சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நல்ல யோசனை.

**திரு. எம். சுரேந்திரன் :** என்னைப் போன்றவர்கள் சிறையில் இருந்த காலத்தில் பத்திரிகைகளைத் தரும்போது சில பகுதிகளைத் தாராலே அடித்துவிட்டுத் தருவார்கள். இப்போதும் அதுபோன்ற முறை கையாளப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் சொன்னவுடன் அந்த நினைவு வந்தது. " மாரல் ஃபீலிங்ஸை " கெடுப்பதாக இருந்தால், ஒழுக்கக் கேட்டை உருவாக்குவதாக இருந்தால் அந்தப் பகுதிகளைத் தாரிலே அடித்துவிட்டுக் கொடுப்பது நல்ல கருத்தாகும். ஆனால் சிறைச்சாலையில் எங்கள் கட்சியைப் பற்றிய செய்திகளோ அல்லது ஆளும் கட்சிக்கு எதிரான செய்திகளோ வந்தால் அதை அடித்துவிட்டுக் கொடுக்கும் முறை இருந்தது. உடனடியாக அதைத் தடுக்க இந்த அரசாங்கம் ஆணை பிறப்பிக்கும்.

**திரு. க. இராமமூர்த்தி :** மத்திய சிறையில் இருப்பவர்களுக்குப் பத்திரிகைகள் கொடுக்கும் பட்டியலில் தினத்தந்தி இடம் பெறவில்லை என்றார்கள். அதற்குக் காரணம் அது அரசியல் கட்சிப் பத்திரிகை என்பதாலா அல்லது தரமற்ற பத்திரிக்கை என்பதாலா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தரமற்ற பத்திரிகை என்பது கனம் அங்கத்தினருடைய தரத்தைப் பொறுத்திருக்கிறது. அரசியல் கட்சிப் பத்திரிகைகள் அல்லாத அனைத்தையும் ஏற்றுக் கொண்டதாகச் சொல்ல வில்லை. நான் சொன்ன மூன்று பத்திரிகைகள் மட்டுமே கொடுக்கப் படுகின்றன.

**திரு. டி. மார்டின் :** பத்திரிகைகள் அவர்களுக்குக் கொடுப்பது அவர் கள் உலக நடப்புகளையும், அரசியல் நிகழ்ச்சிகளையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொந்த செலவில் வேண்டுமானால் மற்றப் பத்திரிகைகளை வாங்கிக் கொள்ளலாம் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரேடியோ போன்ற வசதியை தங்களுடைய செலவிலேயே செய்து கொள்ள அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பத்திரிகைகள் வேண்டுமென்றால் அவர்கள் செலவிலே வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னேன். வானொலிப் பெட்டியைப் பொறுத்தவரையில் சிறை முழுவதும் கேட்கும் படியாக இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட கைதிகள் வானொலிப் பெட்டியை வாங்கி வைத்துக் கொள்ள முன்னாலே இருந்த அரசாங்கம் ஒத்துக்கொண்டு ஆணை பிறப்பித்தது. நாங்கள் அதைப் பரி சீலித்து கைதிகள் தாங்களே வானொலிப் பெட்டி வாங்கி வைத்துக்கொள்ள அனுமதி கொடுத்தால் இடையூறுகள் ஏற்படலாம் என்று கருதி, அப்படி வாங்க அனுமதி கொடுக்க வேண்டாம், அதற்குப் பதிலாக ஒவ்வொரு சிறைச்சாலையின் எல்லாப் பகுதிகளிலும் கேட்கும் வண்ணம் ஏராளமான லௌட் ஸ்பீக்கர்கள் வைக்கச் சொல்லி அரசாங்கம் யோசனை கூறி யுள்ளது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** இப்போது கிளை சிறைச்சாலைகளில் பத்திரிகை கொடுப்பதில்லை. கிளை சிறைச்சாலைகளிலும் பத்திரிகை கொடுப்ப தற்கு அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அங்கத்தினர் அவர்களுடைய ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படும்.

### துணைச் சிறைச்சாலைகளின் நிர்வாகம்.

*185 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு சட்ட-கூட் டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வட்ட அளவில் உள்ள சிறைச்சாலைகளை (Sub-jails) வருவாய்த் துறையினரின் நிர்வாகத்திலிருந்து சிறை நிர்வாகத் துறையினரின் கீழ் மாற்றி அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** துணைச் சிறைச்சாலைகளின் நிர் வாகக் கட்டுப்பாட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து சிறைச் சாலைத் துறைத் தலைவரிடம் மாற்றும் செயற்குறிப்பினை அரசாங்கம் ஆய்வு செய்துள்ளது. துணைச் சிறைச்சாலைகள் சில அவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து சோதனை அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த மாவட்டத்திலே உள்ள சிறைச் சாலைகளைப் பார்வையிடுவதற்கு ஏதேனும் உத்தரவைப் பிறப்பித்துள்ளதா ? எந்தெந்த முறையில் பார்வையிட்டு தெரியப்படுத்தலாம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சட்ட மன்ற உறுப்பினர்கள் சிறைச் சாலையைப் பார்க்கவேண்டுமென்று சொல்லும்போது அவர்களுக்கு மதிப்பே இல்லாத சூழ்நிலையை நானே அனுபவித்தேன். ஆகையால் அரசாங்கம் அதைப் பற்றி பரிசீலித்து சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் முன் அறிவிப்புடன் எப்போதும் சிறைச்சாலைக்குச் சென்று பார்க்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.



**திரு. ஆர். நாகசுந்தரம் :** திருச்சி சப்-ஜெயில் நகரின் மத்தியில் இருப்பதை மாற்ற வேண்டுமென்று நகரசபை, வர்த்தகக் கழகம், பொது மக்கள் ஆகியோர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதன் மீது அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தத் துணைச் சிறைச்சாலையை மத்திய சிறைச்சாலைக்குப் பக்கத்தில் கட்டடம் கட்டிக் கொண்டு போகலாம் என்ற ஆலோசனை இருக்கிறது. நிதி வசதியைப் பொறுத்து அது மேற் கொள்ளப்படும்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** இந்த மாநிலத்திலே பெண் களுக்கான தனி சிறை வேலூர் ஒன்றிலேதான் இருக்கிறது. அது பல பகுதிகளுக்கு மிகத் தூரமாக இருப்பதால் அவர்களைப் பார்க்கப் போகிறவர் களுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பெண்களுக்கான ஒரு தனி சிறையை மாநிலத்தின் மத்திய பகுதியில் திருச்சியிலோ அல்லது அதைப்போன்ற ஒரு மாவட்டத்திலோ அமைப்பது பற்றி சர்க்கார் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறைச்சாலைகளைக் குறைப்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கம்.

Thiru K. S. KOTHANDARAMIAH : It is said that the sub-jails will be taken away from the control of the Revenue Depatment and placed under the Jail Department. Will the Hon. Minister for Law be pleased to state the compelling reason why he should take such action ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அவை சிறைச்சாலையினுடைய நிர்வாகத்தில் இருந்தால், போலீஸ் துறையிடத்திலோ, ரெவின்யூ துறை யிடத்திலோ அந்த நிர்வாகம் இல்லாமல் சிறைச்சாலை அதிகாரியின் நிர் வாகத்தின்கீழ் இருந்தால், அதனால் அந்தக் கைதிகளுக்கு வசதிகள் ஏற்பட முடியும் என்ற காரணத்தால் கொஞ்சம் கொஞ்சமாக அரசாங்கம் அந்தப் பொறுப்பை மாற்றி வருகிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** துணைச் சிறைச்சாலைகளின் நிர்வாகத்தை வருவாய்த் துறையில் இருந்து சிறை நிர்வாகத் துறைக்கு மாற்றுவதன் மூலம் அதிகமாக அரசுக்கு எவ்வளவு செலவாகும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தக் குறிப்பு என்னிடத்தில் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** சிறைச்சாலைகளுக்கு அட்வைசரி கமிட்டி என்று போட்டிருக்கிறார்களே, அது எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுகிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தந்த மாவட்டத்தில் மாவட்ட கலெக்டர் சிபாரிசின் பேரில் அரசாங்கம் நியமிக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இந்தக் கேள்வியின் நோக்கம் என்ன தெரியுமா ? அந்த சிறைச்சாலைகளை தாசில்தார் கண்ட்ரோலில் இருந்து சிறை அதிகாரிகளின் கீழ் மாற்றவேண்டுமென்பதுதான். இது ரெவின்யூ இலாகாவில் இருப்பதால் தாசில்தாருக்குப் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஜாமீன் வாங்க முடியாத நிலை எல்லாம் ஏற்படுகிறது. ஆகவே, சிறை அதிகாரி நிர்வாகத்தின் கீழ் இது கொண்டுவரப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைத்தான் நான் முன்னாலேயே சொன்னேன். நன்மைகள் அதிகம் கிடைக்கின்றன என்ற காரணத்தால் அவ்வாறு நிர்வாகத்தை மாற்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. செலவைப்

பொறுத்து அவ்வப்போது மாற்றப்படும். தற்போது மூன்று சிறைச்சாலைகளைப் பொறுத்தவரை பரிட்சார்த்தமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

*Labour participation in Management*

*186 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether the scheme of "Labour participation in management" is proposed to be implemented in the public sector undertakings ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) இவ்வுத்தேசம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பல சமயங்களில் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் நியாயமாக இருந்தாலும் பொதுத் துறையினுடைய நிதிநிலை நெருக்கடியில் இருப்பதால் தொழிற் தகராறுகள் அதிகரிக்க ஏதுவாக இருக்கிறது. ஆகவே, தொழிலாளர்களையும் நிர்வாகத்தில் சேர்த்துக் கொள்ளும் திட்டத்தை விரைவுபடுத்த சர்க்கார் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பணம் முதலிய வசதிகளைக் கொடுப்பதை விட நிர்வாகத்தில் அவர்களும் பங்கு பெற்றால் நிர்வாகம் சுமுகமாக நடைபெறும் என்ற அடிப்படையிலே, தொழிலாளர்களுக்கு உற்சாகம் ஏற்படும் என்ற அடிப்படையிலே, இதை அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது. இந்த நிலைமை வரும்போது அதில் என்ன கஷ்டம் ஏற்படும் என்பதையும் பரிசீலித்து கொஞ்சம் கொஞ்சமாக, பரிட்சார்த்தமாகக் கொண்டு வரலாம் என்று அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** இப்போது திருநெல்வேலி கணபதி மில்லில் தொழிலாளர்கள் ஷேர்கள் கட்டியிருக்கிறார்கள். ஆகவே ஷேர்கள் கட்டியிருக்கிற தொழிலாளர்களுக்கு ஒரு டைரக்டர்ஷிப் தரவேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அது பரிசீலிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தத் தொழிலாளர் தலைவர் என்னிடம் பேசினார். நிர்வாகமும் அவர்களும் சேர்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

**திரு. நா. காசிராமன் :** நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெறக் கூடிய இந்த நல்ல திட்டம் எந்த ஆண்டு முதல் துவங்கப்பட்டது ? இப்போது எவ்வளவு நிறுவனங்களின் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெற்று வருகிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இத் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகத்தான் என் குறிப்பில் இருக்கிறது. இதுவரை எந்த நிர்வாகத்திலும் அரசாங்கத்தைப் பொறுத்த அளவிற்கு இருப்பதாக என்னிடம் தகவல் இல்லை.

DR. H. V. HANDE : Sir, sometime back there was a proposal even in the Madras State Electricity Board to have representatives of labour in its management and a number of demands were placed before them and the Hon. Minister had stated that they would be considered favourably. Sir, this demand has been going on for a long time and so, will the Ministry tell us, whether they have made any headway in regard to this matter and any concrete





programme has been chalked out and if so, what is the first Department in which the scheme re. labour participation in the management is likely to be introduced ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதைப்பற்றி நம்முடைய நிர்வாகத் துறையிலே இருக்கக் கூடிய அத்தனை தொழிற்சாலைகளுடைய நிர்வாகிகளையும் அழைத்து அரசாங்க அளவில் ஒரு கூட்டம் நடத்தி அதில் பரிசீலிக்கப்பட்டது. அவர்கள், இப்படி ஜாயின்ட் மானேஜ்மெண்ட் கவுன்ஸில் அமைப்பதில் சில கஷ்டங்கள் ஏற்படும் காரணம், நிர்வாகமே அந்த முடிவை எடுக்க முடியாது என்றும் அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டி இருப்பதால் சில கஷ்டங்கள் ஏற்படும் என்றும் சொன்னார்கள். அதை மேலும் பரிசீலிக்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்த அளவிற்கு, எந்த அடிப்படையில் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு கொள்ளக் கூடிய அளவிற்கு பரிசீலனையில் உள்ளது ? பொதுத் துறைக்கு மட்டுமா அல்லது தனியார் துறைக்கும் சேர்த்து அதுபோன்றதொரு நிலையைக் கொண்டு வருவதற்கு உத்தேசமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எந்தெந்த முறையில் நிர்வாகத்தில் பங்கு கொள்ளலாம் என்பதும் பரிசீலனையில் இருக்கிறது. பொதுத் துறையைப் பொறுத்த அளவிற்கு நாம் முடிவு எடுக்கலாம். தனியார் துறையைப் பொறுத்த அளவிற்கு அவர்கள் தான் முடிவு எடுக்க வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** நிர்வாகத்தில் பங்களிப்பது என்பது ஒரு நல்ல திட்டமாக இருந்தாலும் இதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்வது சிறிது சிரமமான காரியம் என்று தோன்றுகிறது. ஆகவே சர்க்கார் அமைப்பிலுள்ள நிறுவனங்களில் முதலில் இதற்கான பங்குகளை ஏற்படுத்தி மற்ற தனிப்பட்டவர்களுக்கு வழி காட்டுவதற்கான நடவடிக்கைகளை விரைவில் அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த நல்ல காரியத்தைத் தான், இந்த அரசு வந்ததற்குப் பின்னால் இந்த நிர்வாகத்திலுள்ள தலைவர்களையெல்லாம் அழைத்து கூடிப் பேசி எப்படியாவது இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்; அதை ஒரேயடியாகக் கொண்டு வராவிட்டாலும் சிறுகச் சிறுகக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நாசரத் கூட்டுறவு நூற்பாலையில் தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆமெனில் அதன் விவரங்கள் என்ன ? இத் திட்டம் எந்த வருடத்தில் துவக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் முன்பே சொன்னேன், எந்த ஆண்டு துவங்கப்பட்டது என்று என்னிடம் தகவல் இல்லை. தொடர்ந்து இது பரிசீலனையில் இருந்து வருகிறது. கூட்டுறவு அமைப்பு தனி அமைப்பு. அவர்களுக்குள் மானேஜ்மெண்ட் இருக்கிறது. அவர்கள் அப்படிச் செய்திருந்தால் பாராட்ட வேண்டும்.

**திரு. ந. வீராசாமி :** இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் நிர்வாகத்தில் தொழிலாளர்களை பங்கு கொள்ளச் செய்யும் கொள்கையை தீவிரமாக்கி வருவதாகத் தெரிகிறது. அப்படி இந்தத் திட்டத்தை அமுலாக்குவதற்கு முன்னால் தொழிற்சங்கத் தலைவர்களை கலந்து இது பற்றி முடிவு எடுக்கப்படுமா ?

[1968 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த அரசு செய்ததா, அது இல்லை என்று கூறுபவர்களும் நாட்டில் இருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில் எப்படி இதை நிறைவேற்ற வேண்டும் என்ற முடிவுக்கு வந்தவுடன் நிச்சயம் தொழிலாளர் தலைவர்கள் அவர்களுக் குரிய அட்வைஸரி க்ரூப்பில் கலக்கப்படுவார்கள்.

**திரு. டி. மார்டின் :** நிர்வாகத்தில் தொழிலாளர்களை பயன்படுத்துவதை அரசாங்கக் கொள்கையாகச் செய்வது என்ற ஒரு திட்டத்தில், சர்க்கார் இப்போது நடத்தி வருகிற பஸ் தொழிலில் அவர்களை அந்த விதமாக பங்கு கொள்ளச் செய்யக் கூடிய செயற் குறிப்பு ஏதாவது அரசினிடம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டிலும் இது பற்றி பரிசீலிக்கப்பட்டது. அதிலுள்ள இடையூறுகள் பற்றி இப்போது ஆலோசனையில் இருக்கிறது. காரணம், எந்தத் தொழிற் சங்கத்திலிருந்து சேர்க்க வேண்டும், மெஜாரிட்டியா மைனாரிட்டியா, அதில் எந்தக் கட்சி என்று இவ்வளவு இடையூறுகள் எல்லாம் இருக்கின்றன. நிர்வாகத்தில் பங்கு பெறக் கூடிய தொழிலாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதிலும் சிக்கல் இருக்கிறது. அவைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும்.

**திரு. இல. பலராமன் :** கூட்டுறவுத் துறையில் இயங்கக்கூடிய பல் ஸ்தாபனங்களில் உள்ள நிர்வாகங்களில் தொழிலாளர்கள் நியமிக்கப் பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படி கூட்டுறவு ஸ்தாபனங்களில் உள்ள நிர்வாகங்களில் தொழிலாளர்கள் சேர்க்கப்படாமல் இருந்தால் அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அரசினர் அறிவுரை கூற முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கூட்டுறவு ஸ்தாபனங்களில் அப்படி முடிவு எடுத்திருந்தால் அதைப் பாராட்ட வேண்டும். இதே யோசனையை மற்றவர்களும் ஏற்றுக் கொண்டு அவர்களும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**THIRU K. VINAYAKAM :** Sir, has the Hon. Minister got any idea of the experiences felt by other States where this scheme of labour participation in the management has ended in a colossal failure because of the irksome and conflicting ideas of both the management and labour and so, will the Hon. Minister take lessons out of these things and move in that direction very diligently ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலாளர்களைக் கண்டு உறுப்பினர் அவர்கள் இவ்வளவு பயப்படக் கூடாது. இந்த மாநிலம் மட்டும் இந்த முடிவு எடுப்பதில்லை. மத்திய அரசாங்கம் இந்தக் கொள்கையை வலியுறுத்தி எல்லா இடங்களிலும் இதைக் கொண்டு வரும்படிச் சொல்லியிருக்கிறார்கள். எல்லா மாநிலங்களும் இந்தக் கொள்கையை எதிர்ப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் சொன்னது போல் இந்தக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு, அமுல் செய்வதற்கு தொழிற் சங்கங்கள் எந்த அளவிற்கு ஒத்துழைக்கின்றன என்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன்: :** அண்டை மாநிலமான கேரளாவில், கேரளா மின்சார வாரியத்தில் தொழிலாளர்கள் பிரதிநிதியை அந்த வாரியம் அமைப்பட்டபோதே போட்டிருக்கிறார்கள். அதே போல் நம்முடைய பொதுத் துறைகளிலும் அதற்கான போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் நிர்வாகக் குழு அமைக்கப்படும்போதே அதில் தொழிலாளர்கள் பிரதிநிதியையும் தேர்ந்தெடுத்து நியமிப்பதில் என்ன கஷ்டங்கள் இருக்கின்றன?



1968 ஆகஸ்ட் 29]

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் மதராஸ் ஸ்டேட் எலெக்ட்ரிஸிட்டி கன்ஸல்டேட்டிவ் கவுன்ஸில் என்றிருக்கிறது. அது போதும் என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தொழிலாளர்கள் சார்பில் அவர்களுக்கும் அதில் பொறுப்பு கொடுக்கவேண்டுமென்று நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களிடம் அவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள்.

## நாங்குநேரியில் முன்சீப் கோர்ட்

*** 187 வினா.—திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரியில் முன்சீப் கோர்ட் ஒன்று ஏற்படுத்தும் எண்ணம் இந்த அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** இப்போது நாங்குநேரி தாலுகாவின் பெரும் பகுதியும் திருநெல்வேலி முன்ஸீப் கோர்ட் ஜூரிஸ்டிக்ஷனில் இருக்கிறது. ராதாபுரம் கிட்டத்தட்ட 40 மைல் தூரத்தில் இருக்கிறது. இதனால் கட்சிக்காரர்களுக்கு ஏராளமான செலவு ஏற்படுகிறது. திருநெல்வேலியில் முன்சீப் கோர்ட், அடிஷனல் முன்சீப் கோர்ட் என்று இரண்டு கோர்ட்டுகள் இருக்கின்றன. ஆகவே இதைக் கருத்தில் கொண்டு நாங்கு நேரியில் ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்த இந்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாங்குநேரியில் முன்சீப் கோர்ட் வைப்பது, தூரத்தை மட்டும் வைத்து முடிவு செய்துவிட முடியாது. உயர்நீதி மன்றத்தினிடம் இதுபற்றி கேட்கப்பட்டது. அவர்கள் அங்கு தனியாக ஒரு நீதிமன்றம் வைத்தால் அதற்குரிய வேலைப்பளு இருக்காது என்று கருத்து தெரிவித்து, வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. என். துரைபாண்டியன் :** நாங்குநேரி தாலுகாவில் உள்ள ஒரு பகுதி மக்கள் திருநெல்வேலிக்கும், ஒரு பகுதி மக்கள் அம்பாசமுத்திரம் முன்சீப் கோர்ட்டுக்கும் போகவேண்டி யிருக்கிறது. நாங்குநேரியில் முன்சீப் கோர்ட் வைக்கா விட்டாலும், அதிக தூரம் போக வேண்டி யிருப்பதால், ராதாபுரம், வள்ளியூர் போன்ற இடங்களில் உள்ளவர்கள் திருநெல்வேலி முன்சீப் கோர்ட்டுக்குப் போக அனுமதிக்க சர்க்கார் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்டதொரு வேண்டுகோளை உறுப்பினர் அவர்கள் அனுப்பினால் அதை உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி பரிசீலிக்கச்சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நாங்குநேரியில் முன்சீப் கோர்ட் அமைப்பதைப் பற்றிய துணை வினாவைக் கேட்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். முற் பகல் 10-00

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** தலைவரவர்களே, நாங்குநேரி வட்டத்திலுள்ள வள்ளியூரில் ஒரு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஏற்படுத்துவது பற்றிய அரசாங்க பரிசீலனை நீண்ட நாளாக இருந்து கொண்டிருக்கிறதே, அது எந்த நிலையில் உள்ளது, கூடிய சீக்கிரம் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இப்பொழுது முன்சீப் போர்ட் அமைக்கவில்லை என்றாலும் நாங்குநேரியில் ஒரு அடிஷனல் ஃபர்ஸ்ட் கிளாஸ் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்-கம்-முன்சீப் கோர்ட் என்பது போலாவது அமைக்கும் திட்டம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதையும் கூட உயர்நீதிமன்றம் பரிசீலித்தது. அதுவும் தேவையில்லை என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கேள்வியில் வேறு பகுதியைக் கேட்டு விடுவார்களோ என்ற நோக்கத்துடன் தலைவரவர்கள் நாங்குநேரியைப் பற்றித்தான் கேட்க வேண்டுமென்று முன்னதாகவே சொல்லிவிட்டார்கள். நாங்குநேரியைப் பற்றித்தான் கேட்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளவர்கள் கேட்பதைப் போல் வேறு எங்கெங்கிருந்து, இங்கே வேண்டும், அங்கே வேண்டும் என்ற வேண்டுகோள்கள் வந்திருக்கின்றன ? வெள்ளைக் காரர்கள் காலத்தில் வைக்கப்பட்டது. நமது சட்ட அமைச்சர் அவர்கள் சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள், எதிர்க்கட்சியில் இருந்தபோது நன்றாக வாதாடிக் கொண்டிருந்தவர்கள், அவர்கள் மறுபரிசீலனை செய்து இப்படிப் பட்ட கஷ்டங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ அந்தந்த இடங்களில் மையமாக மாற்றியமைக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டுமல்ல, மாநிலம் முழுவதும் நீதிமன்றம் பரவலாக அமைக்க வேண்டு மென்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆனால், இருக்கின்ற நிலை மைகளை மாற்றி யமைத்தால் அதனால் பல சிக்கல்கள் வருவதை கனம் அங்கத்தினர்களே அனுபவத்தில் உணர்ந்திருப்பார்கள். இனிமேல் புதி தாக நீதிமன்றம் அமைக்கும் பொழுது மக்கள் வசதியைக் கருதிப் பரவ லாக வைக்க வேண்டு மென்று அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவரவர்களே, நாங்குநேரியில் முன்சீப் கோர்ட் ஆரம்பித்தால் வேலைப்பளு இருக்காது என்பதாக உயர்நீதிமன்றம் கூறியதா ? அது ஒரு பக்கம் இருந்தாலும், வேலைப்பளு அதிகமாக இருக்க வேண்டுமா, அல்லது மக்களுக்குச் சௌகரியங்கள் இருக்க வேண் டுமா என்பதை வைத்து மக்களுக்குச் சௌகரியமான ஒரு வட்டத்தில் முன்சீப் கோர்ட்டை அமைக்க வேண்டுமென்ற நிலையில் தமிழக அரசு உயர்நீதிமன்றத்திற்குச் சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புது நீதிமன்றம் அமைக்கும் பொழுது இவ்வாறு இருக்க வேண்டு மென்று வேறு ஒரு அங்கத்தினர் கூறிய யோசனையை ஆலோசித்துப் பார்த்தோம். அதனால் ஏராளமான செலவு வருகிறது. வேலை யில்லாமல் அவ்வளவு தூரம் செலவாவது நல்லது அல்ல.

**திரு. என். துரைபாண்டியன் :** தலைவரவர்களே, நாங்குநேரி தாலுக் காவில் ராதாபுரம் பஞ்சாயத்து யூனியன், வள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் இந்த இரண்டு யூனியன்களையும் கன்னியாகுமரி ஜில்லாவோடு இணைத்து வள்ளியூரில் முன்சீப் கோர்ட் வைக்க இருப்பதாக ஒரு வதந்தி நிலவு கிறதே, அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வதந்திகளுக்குப் பதில் சொல்வது முறை அல்ல.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இப்பொழுது திரு நெல்வேலியிலே எல்லா கோர்ட்டுகளும் ஒரே காம்பவுண்டில் இருக்கின் றன. ஆனால் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் மட்டும் வண்ணாரப்பேட்டை என்ற இடத்தில் இருக்கின்றன. கோவாப்பரேட்டிவ் டிப்பார்ட்மெண்ட் அலுவலகம் கோர்ட் காம்பவுண்டிற்குள் இருக்கிறது. எனவே, இந்த



கோவாப்பரேட்டிவ் டிப்பார்ட்மெண்டை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்களை அந்தக் கட்டிடத்தில் அமைக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அன்றைக்கு அந்த இடத்திலேயே சொன்னேன், கூட்டுறவைச் சேர்ந்தவர்களுடன் பேசி ஏற்பாடு செய்துஅவர்களுக்கு வேறு இடம் பார்த்துக்கொண்டு விட்டால் ஆட்சேபணை இருக்காது.

## வெள்ளிக்குறியிடாத வினாக்கள்

### தமிழக அரசு போக்குவரத்தின் கன்னியாகுமரி பிரிவு

வினா 1—

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை போக்குவரத்து இலாகாவின் கன்னியாகுமரி பிரிவில் டவுன் சர்வீஸ் நீங்கலாக கிராமங்களில் ஓடுகின்ற பேருந்துகளில் 31—3—1968 அன்று டிக்கட் விற்ற வகையில் மொத்த வரவு தொகை என்ன ?

(இ) கட்டணங்கள் உயர்த்திய பிறகு அதே வகையில் 7—4—1968 அன்று வரவு என்ன ?

**விடை**—(அ) & (இ) தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த கன்னியாகுமரி பிரிவில், நகரில் ஓடிய பேருந்துகள், நீள்தொலைப் பேருந்துகள் நீங்கலாக, ஏனைய வழித்தடங்கள் அனைத்திலும் ஓடிய பேருந்துகளின்மூலம் 31—3—1968 தேதியன்று 47,702 ரூபாயும் 7—4—1968 தேதியன்று 54,034 ரூபாயும் வசூலாகியது.

(*a*) & (*b*) The collections of the Kanyakumari Branch of the Madras State Transport Department on 31st March 1968 and on 7th April 1968 in respect of all the services excepting town services and long distance services, were Rs. 47,702 and Rs. 54,034 respectively.

வினா 2.—

### கல்லூரிகளுக்கான மானியம்

**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1957 முதல் 1967 வரையில் நமது இராஜ்யத்தில் எந்தெந்த கல்லூரிகளுக்கு கிராண்ட் பணம் ரத்து செய்யப்பட்டது ? அதற்கான காரணங்கள் யாவை ?

**விடை:** 1957-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதி யில் எக்கல்லூரிக்கும் ஆசிரியர் மானியம் மறுக்கப்படவுமில்லை அல்லது நிறுத் தப்படவுமில்லை.

During the period from 1957 to 1967 there was no case of refusal or withdrawal of teaching grant to any college.

வினா 3—

### அரிசிப்பொரி தயாரிப்பதற்கான உரிமம்

**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசிப்பொரி தயாரிக்கக் கூடியவர்களுக்கு நெல் பெர்மிட் கொடுப்பதில்லை என்பது உண்மையா ?

(இ) 1965 முதல் 1967 வரையில் எத்தனை பேர்கள் நெல் பெர்மிட் கேட்டு மனுப் போட்டார்கள் ?

(உ) மாவட்ட வாரியாக எத்தனை பேர்களுக்கு மறுக்கப்பட்டது ? அல்லது கொடுக்கப்பட்டது ?

(எ) கொடுத்திருந்தால் ஒவ்வொருவருக்கும் எந்த அளவுக்குக் கொடுக்கப்பட்டது ?

**விடை :** (அ) உண்மையில்லை.

(இ) 1,942 நபர்கள் மனுப் போட்டார்கள்.

(உ)

| மாவட்டத்தின் பெயர். | மறுக்கப்பட்டது. | கொடுக்கப்பட்டது |
|---|---|---|
| 1 தென்னாற்காடு .. .. | .. | 216 |
| 2 கோயம்புத்தூர் .. .. | 1,011 | 670 |
| 3 தருமபுரி .. .. .. | .. | 1 |
| 4 வட ஆற்காடு .. .. | .. | 10 |
| 5 சேலம் .. .. .. | 9 | 1 |
| 6 மதுரை .. .. .. | .. | 13 |
| 7 திருச்சிராப்பள்ளி .. | .. | 11 |
| | 1,020 | 922 |

(எ) ஒவ்வொரு நபருக்கும் சராசரி 2 குவிண்டால் முதல் 25 டன் வரை பொதுவாக அவரவர்கள் வியாபார அளவையும் தேவையையும் பொறுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

### கோவை மாவட்டத்திலுள்ள புறம்போக்கு நிலங்கள்

வினா 4—

**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை ஜில்லாவில் சர்க்காருக்குச் சொந்தமான விவசாயம் செய்யத் தகுதி வாய்ந்த புறம்போக்கு நிலங்கள் எவ்வளவு உள்ளது, தாலூக்கா வாரியாக ?

விடை—

| *Name of taluks.* | *Extent of poramboke lands fit for cultivation.* |
|---|---|
| | ACRES. |
| 1 Avanashi taluk .. .. .. .. .. | 85·71 |
| 2 Bhavani taluk .. .. .. .. .. | 2,099·00 |
| 3 Coimbatore taluk .. .. .. .. | 60·10 |
| 4 Dharapuram taluk .. .. .. .. | 283·45 |
| 5 Erode taluk .. .. .. .. .. | 161·11 |
| 6 Gobichettipalayam taluk .. .. .. | 3,671·36 |
| 7 Pollachi taluk .. .. .. .. .. | 186·35 |
| 8 Tiruppur taluk .. .. .. .. .. | 505·84 |
| 9 Udumalpet taluk .. .. .. .. | 1,489·64 |
| Total .. | 8,542·56 |



வினா 5—

### அரிசன மாணவ விடுதிகள்

**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை ஜில்லாவிலுள்ள அரிசன ஆஸ்டல்கள் எத்தனை ? அவைகளில் பெண்கள் ஆஸ்டல்கள் எத்தனை ?

விடை—

| | |
|---|---|
| (அ) கோவை மாவட்டத்திலுள்ள மொத்த அரிசன நல விடுதிகள். | 23 |
| அரிசன மாணவியர் விடுதிகள் .. .. .. .. | 9 |
| (இ) தனியார் விடுதிகள் .. .. .. .. .. | 3 |
| தனியார் மாணவியர் விடுதிகள் .. .. .. .. | 1 |
| தனியார் மாணவ மாணவியர் விடுதிகள் .. .. | 1 |
| (*a*) Total number c Government Hostels for Harijans .. | 23 |
| Number of hostels for girls alone .. .. .. | 9 |
| (*b*) Total number of subsidised hostels .. .. | 3 |
| Hostel for girls alone .. .. .. .. | 1 |
| Hostel for girls as well as boys .. .. .. | 1 |

வினா 6—

### கோவை மாவட்டத்தில் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள்

**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை ஜில்லாவில் 1965-ம் வருஷம் முதல் 1967-ம் வருஷம் வரை மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களுள் தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

விடை—

| | |
|---|---|
| (*a*) 1965 .. .. .. .. .. .. | 19,426 |
| 1966 .. .. .. .. .. .. | 24,692 |
| 1967 .. .. .. .. .. .. | 22,789 |
| (*b*) 1965 .. .. .. .. .. .. | 17,416 |
| 1966 .. .. .. .. .. .. | 21,545 |
| 1967 .. .. .. .. .. .. | 19,266 |

வினா 7—

### ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பித்த மாணவர்கள்

**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயது செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-68 ஆம் ஆண்டில் தமிழகத்திலுள்ள ஆசிரியர் பயற்சிப் பள்ளிகளில் சேர விருப்பி விண்ணப்பித்துக்கொண்ட மாணவ மாணவியர்கள் எத்தனை பேர்கள் ?

(இ) அதில் அரிசன மாணவ, மாணவியர்களிடமிருந்து வந்த விண்ணப்பங்கள் எத்தனை ?

(உ) பயிற்சிப்பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவ, மாணவியர்கள் எத்தனை பேர்கள் ?

**விடை—**

| | மாணவர்கள். | மாணவிகள். |
|---|---|---|
| (அ) .. .. .. | 59,555 | 59,211 |
| (இ) .. .. .. | 7,234 | 3,707 |
| (உ) .. .. .. | 6,206 | 4,968 |

**வினு 8.—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966-ம் வருஷம் கோவை ஜில்லாவில் உபாத்தியாயர் பயிற்சிக்காக வந்த விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) அவைகளுள் தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

(உ) தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ? அவர்களுள் செடியூல்டு வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

**விடை—**

| | ஆண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள். | பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள். |
|---|---|---|
| (அ) .. .. .. .. | 8,146 | 4,222 |
| (இ) .. .. .. .. | 6,513 | 3,842 |
| (உ) தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் .. | 1,633 | 380 |
| செடியூல்டு வகுப்பைச் சேர்ந்தவர்கள் .. | 240 | 62 |

## வேட்டைக்காரன்புதூர் குளம்

**வினு 9—திரு. இ. ராமசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி வட்டம், வேட்டைக்காரன்புதூரில் உள்ள குளத்தின் பரப்பளவு எவ்வளவு ?

(இ) அதில் உள்ள தண்ணீர் எத்தனை எக்கர்களுக்குப் பயன் படுத்தப்படுகிறது ?

**விடை—**

(அ) வேட்டைக்காரன்புதூர் கிராமத்தில் குளம் ஒன்றும் இல்லை. இக்கிராமத்திற்கு அருகாமையில், உடையகுளம் என்ற கிராமத்தில் கோலப்பத்து குளம் என்ற ஒரே குளம் மட்டுமே உள்ளது. இக்குளத்தின் கொள்ளளவு 305 லட்சம் கன அடியாகும். நீர்ப்பரப்பு 123·83 எக்கர்களாகும்.

(இ) கோலப்பத்து குளத்தின் நேரடிப் பாசனத்திற்கு உட்பட்ட நிலங்கள் 315·55 எக்கர்களாகும்.

(*a*) There is no tank in Vettaikaranpudur village. The only tank near this village is the Kolapathu tank situated in Odayakulam village. The capacity of this tank is 30·5 mc. ft. The water spread area of the tank is 123·83 acres.

(*b*) The tank has a direct ayacut of 315·55 acres.



## நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் மாயூரம் தாலூகாவில் கிடைக்கப்பெற்ற உபரி நிலங்கள்

**வினு 10.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு டிசம்பர் முடிய மாயூரம் தாலூகாவில் நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற உபரி நிலங்கள் எவ்வளவு ?

(இ) அவற்றில் எத்தனை எக்கர் நிலம் எத்தனை விவசாயிகளுக்குக் குத்தகைக்காக கொடுக்கப்பட்டது ?

**விடை—**

(அ) 670 எக்கர்.

(இ) 654 எக்கர் 690 விவசாயிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டது.

(*a*) 670 acres.

(*b*) 654 acres and 690 agriculturists.

## கேரளத்திற்கு அரிசி கடத்தல்

**வினு 11.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்குப் விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலிருந்து கேரளாவிற்கு அரிசி கடத்தியதாக 1967-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி முடிய எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன ?

(இ) அவைகளில் பறிமுதல் செய்யப்பட்ட அரிசியின் மதிப்பு எவ்வளவு ?

(உ) அபராதம் அல்லது சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் அவற்றின் விவரம் என்ன ?

**விடை —**

(அ) 3,415 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

(இ) அரிசியின் மதிப்பு ஏறக்குறைய 5½ லட்ச ரூபாய்.

(உ) 430 பேர்களுக்கு சிறைத்தண்டனையும் 989 பேர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. மொத்த அபராதம் ரூ. 70,192·50 வசூலிக்கப்பட்டது. சிறைத்தண்டனை ஒரு வாரம் முதல் ஒரு ஆண்டு வரை விதிக்கப்பட்டது.

## *Sugarcane Cultivation in Thanjavur district*

*Q.* 12—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the area under Sugarcane cultivation for the last three years in Tanjavur district ?

*A.*—The area under Sugarcane cultivation in Thanjavur district for the last three years is as follows :—

| | (IN HECTARES.) |
|---|---|
| 1964-65 .. .. | 3,640—00 |
| 1965-66 .. .. | 3,840—00 |
| 1966-67 .. .. | 3,640—00 |

தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளாகக் கரும்பு சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பளவு வருமாறு :—

| | (ஹெக்டேரில்.) |
|---|---|
| 1964-65 .. .. .. .. .. | 3,640—00 |
| 1965-66 .. .. .. .. .. | 3,840—00 |
| 1966-67 .. .. .. .. .. | 3,640—00 |

*New Panchayat Towns*

Q. 13—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number of new panchayat towns created in this State district-wise, during the year 1967-68 ?

A.—

| *Name of district.* (1) | *Number of Panchayat Towns constituted during 1967-68.* (2) |
|---|---|
| 1 Chingleput .. .. .. .. .. .. | 2 |
| 2 Tiruchirappalli .. .. .. .. .. .. | 8 |
| 3 North Arcot .. .. .. .. .. .. | 3 |
| 4 Salem .. .. .. .. .. .. | 9 |
| 5 Coimbatore .. .. .. .. .. .. | 14 |
| 6 Madurai .. .. .. .. .. .. | 7 |
| 7 Dharmapuri .. .. .. .. .. .. | 2 |
| 8 Tirunelveli .. .. .. .. .. .. | 1 |
| 9 Thanjavur .. .. .. .. .. .. | 1 |
| Total .. | 47 |

**தீபாவளியின்போது விற்பனையான கைத்தறி**

வினா 14.—**திரு. கே. ஆர். கோவிந்தன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966-ம் ஆண்டு தீபாவளியின்போது விற்பனையான கைத்தறித் துணியை விட 1967-ம் ஆண்டு விற்பனையான கைத்தறித் துணி அதிகமா ?

(இ) ஆம் எனில், அதற்குக் காரணம் என்ன ?

**விடை—**

(அ) இல்லை. 1966-ம் ஆண்டு தீபாவளியின் போது விற்பனையான கைத்தறி துணியின் மதிப்பு ரூ. 220.81 லட்சம். 1967-ம் ஆண்டு தீபாவளியின்போது விற்பனையான மதிப்பு ரூ. 219.74 லட்சம்.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(*a*) No. During Deepavali 1966, handloom cloth to the value of Rs. 220·81 lakhs was sold while during Deepavali 1967, the value of cloth sold was Rs. 219·74 lakhs.

(*b*) Does not arise.



**எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதியோர்**

வினா 15.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி - தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1968-ம் ஆண்டு ஏப்ரலில் நடந்த எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதியவர்கள் மாணவ, மாணவியர் முறையே எத்தனை பேர் ?

**விடை—**

1968-ம் ஆண்டு ஏப்ரலில் நடந்த எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதிய வர்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

| | மாணவர்கள். | மாணவிகள். |
|---|---|---|
| உயர்நிலைப் பள்ளிகளின் மூலம் தேர்வெழுதிய வர்கள். | 119,365 | 45,837 |
| தனியாகத் தேர்வெழுதியவர்கள் .. .. | 22,923 | 8,147 |

Particulars of candidates who appeared for the S.S.L.C. Examination held in April 1968 are as follows :—

| | *Boys.* | *Girls.* |
|---|---|---|
| Number of candidates who appeared through High Schools. | 119,365 | 45,837 |
| Private candidates .. .. .. .. | 22,923 | 8,147 |

**புதிய தொழிற் பயிற்சிப் பள்ளிகள்**

THIRU G. GOMATHY SANKARA DIKSHIDAR: } Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether some mysterious fever has been reported in and around Madurai City (Papankulam, Tiruppuvanam) during September 1967;

(*b*) if so, the number of persons attacked by this; and

(*c*) the number of deaths, if any, on this account?

*A.*—(*a*) Para-typhoid fever.
(*b*) 74.
(*c*) Nil.

(அ) "பாராடைபாய்டு" காய்ச்சல்.
(இ) 74
(உ) ஒருவரும் இறக்கவில்லை.

### *Special rebate on sale of khadi cloth*

67 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether a special rebate of 20 paise per rupee was allowed on the sales of cotton khadi cloth during the period from 2nd to 31st October 1967; and

(*b*) if so, the reasons therefor?

*A.*—(*a*) Yes. A special rebate was allowed.

(*b*) As an incentive to the consumer to buy this cloth and to step up the sales, especially as the Central Khadi and Village Industries Commission was bearing 10 paise per rupee.

(அ) ஆம், சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டது.

(இ) கதர்த் துணி வாங்குவோருக்கு ஊக்கமளிப்பதற்காகவும், அதன் விற்பனையை பெருக்கவும் அச் சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டது. சிறப்பாக மத்தியக் கதர் கிராமத் தொழில்கள் ஆணைக்கழகம், ரூபாய்க்கு 10 காசு தள்ளுபடிக்கு உதவித் தொகை வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டதனாலேயே இச்சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டது.

*Compositions of Saint Thyagaraja*

68 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether about 26 songs composed by Saint Thyagaraja have come to light recently, and

(*b*) if so, whether the Government have taken steps to publish all available Krities of the Saint including the abovementioned unpublished rare Krithies?

*A.*—(*a*) Yes.

(*b*) The Madras State Sangita Nataka Sangam has so far sanctioned a grant of about Rs. 9,000 towards the publication of the compositions of Saint Thyagaraja including two dance dramas and the rare Krities rocently brought to light.

(அ) ஆம்.

(ஆ) தியாகராஜ சுவாமிகளால் அருளிச் செய்யபட்டு, அண்மையில் புலனாகிய அரிய கீர்த்தனைகளையும் இரண்டு நாட்டிய நாடகங்களையும் வெளியிடுவதற்காகத் தமிழ் நாடு சங்கீத நாடகக் கழகம் மானியமாக இதுவரையில் ஏறக்குறைய ரூ. 9,000 வழங்கியுள்ளது,

*Temples in Thanjavur*

69 Q.—Thiru K. VINAYAKAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Archaeological Department of the Government of India has sanctioned Rs. 4 lakhs for carrying out repairs to the temple at Thanjavur; and

(*b*) if so, the details of repairs to be effected to the temple?

*A.*—(*a*) Yes, Sir.

(*b*) Structural repairs such as replacement of broken roof slabs, lintels, beams, etc., relaying the terrace, relaying the flooring of the large courtyard, providing doors with locking arrangements, water, tightening of leaky parts of roof, provision of fenced space for alternate temple flower garden, after removal of the unsighty ones inside the courtyard, removal of unsightly mud walls and other modernistic accretions, provision of grilled iron in front of Utsava idols for safety, etc., are proposed to be carried out.



*Demonstration against Hindi films.*

70 Q.—Thiru K. VINAYAKAM: Will the Honourable the Chief Minister be pleased to state—

(a) whether hundreds of college students in Madurai demonstrated in front of two cinema theatres on 14th October 1967 demanding withdrawal of screening of Hindi flms; and

(*b*) if so, whether there was any loss of property and life consequently?

*A.*—(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

*Mahamakam*

71 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

The number of pilgrims who turned up to Kumbakonam for having a holy dip during Kumbakonam festival?

*A* —" Approximately 15 lakhs ".

சுமார் 15 லட்சம்.

*Super Market at Vellore*

72 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether a Super market under the name 'Karpagam' was opened in Vellore in 11th February 1968; and

(*b*) if so, whether it is a unit of North Arcot District Co-operative Supply and Marketing Society Limited, Vellore?

A.—(*a*) and (*b*) Yes.

(அ). (இ) ஆம்.

*State Transport Booking Office at Mayuram*

73 Q—Thiru K. M. RAMASWAMY GOUNDER: Will the Hon. the Minister for Public Works be pleased to state—Whether there is any proposal to open a State Transport Booking Office at Mayuram for issuing tickets for passengers travelling by Express buses?

*A.*—No.

இல்லை.

தேயிலை விற்பனை மூலம் கிடைத்த வரி

74 வினா—திரு. கே. போஜன்: மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

கடந்த ஐந்து ஆண்டுகளில் நீலகிரி மாவட்டத்திலிருந்து தேயிலை விற்பனை மூலம் கிடைத்த விற்பனை வரித் தொகை எவ்வளவு ?

விடை—

| | தமிழக விற்பனை வரி (1) | மத்திய விற்பனை வரி. (3) |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1963-64 .. .. .. .. | 7,32,999·36 | 4,03,355·79 |
| 1964-65 .. .. .. .. | 9,42,334·26 | 3,92,382·96 |
| 1965-66 .. .. .. .. | 10,61,429·89 | 3,97,787·83 |
| 1966-67 .. .. .. .. | 11,33,204·92 | 5,25,850·86 |
| 1967-68 .. .. .. .. | 7,90,003·49 | 4,95,847·15 |

*Notified parks and play fields, etc.*

75 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

The particulars of parks, play fields and open spaces set out in Madras City, Constituency-wise under the Madras Parks, Playfields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 ?

*A.*—The list of parks, play fields and open spaces in the Madras City has not yet been notified under the Madras Parks, Playfields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959.

சென்னை மாநகரில் உள்ள பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், திறந்த வெளிகள் ஆகியவற்றின் பட்டியல், தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், திறந்த வெளிகள் [(காத்தல்-முறைப் படுத்தல்) சட்டத்தின் கீழ் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

*Cost of living index for Madras*

76 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) Whether the cost of liviug index for Madras City has fallen in February 1968; and

(b) if so, the causes thereof ?

*A.*—(a) Yes. The cost of living index number for working class in Madras City has fallen by 10 points as compared with January 1968.

(b) The cuase for the decrease in the index was due mainly to a fall in the price of dhall, vegetables, chillies, tamarind, garlic, coconut oil, gingelly oil and ghee.

(அ) ஆம், சென்னை மாநகரில் தொழிலாளர் வகுப்பினருக்கான வாழ்க்கை செலவுக் குறியீட்டு எண் ஜனவரி 1968 மாதத்தை விட பத்து புள்ளிகள் இறங்கிற்று.

(இ) பருப்பு, காய்கறி, மிளகாய், புளி, வெள்ளைப்பூண்டு, தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், நெய் முதலியவைகளின் விலை இறங்கின காரணத்தால் இந்த குறியீட்டெண்ணும் இறங்கிற்று.



*Major Inams notified by Government*

77 Q.—THIRU G. GOMATHY SANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) the number of major inams notified by the Government for the purposes of issue of pattas, district-wise ;

(b) the number of them where pattas have been issued ; and

(c) the number of them where pattas have not been issued so far ?

*A.*— (a), to (c): The particulars are furnished in the appended statement.*

*Fruit show at Coonoor*

78 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state :—

Whether any fruit show was conducted by Municipal Council of Coonoor during the last half of May 1968 ?

*A.*— No.

இல்லை.

**செங்கற்பட்டு மாவட்டத்தில் அரிசனநலத்துறையினர் மேற்கொண்ட அபிவிருத்திச் செலவு**

79 வினா—கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து, கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) 1967–68-ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் அரிசன நலத்துறையினரால் கிணறு பள்ளிகள், நீர் அழுத்தத் தொட்டிகளுக்காகச் செலவழிக்கப்பட்ட ரூபாய் முறையே எவ்வளவு ?

(ஆ) மதுராந்தகம் வட்டத்தில் மேற்படி காரியங்களுக்காகச் செலவழிக்கப்பட்ட பணம் எவ்வளவு ?

விடை—

| | ரூ. |
|---|---|
| (அ) 1. கிணறுகள் வெட்டவும் பழுது பார்க்கவும் .. | 62,045 |
| 2. பள்ளிகள் கட்டவும் பழுது பார்க்கவும் .. .. | 1,07,800 |
| 3. மேல்நிலை நீர்த்தொட்டிகள், நீர் அழுத்தத் தொட்டிகள் அமைக்கவும். | 4,86,800 |
| (ஆ) 1. கிணறுகள் .. .. .. .. .. | 7,122 |
| 2. பள்ளிகள் .. .. .. .. .. | 14,613 |
| 3. மேல்நிலை நீர்த்தொட்டிகள் நீர் அழுத்தத் தொட்டிகள். | 99,800 |

| | RS. |
|---|---|
| (A) (1) Sinking and repairing wells .. .. | 62,045 |
| (2) Construction and repairs to schools .. | 1,07,800 |
| (3) Provision of overhead tank and pressure tank. | 4,86,800 |
| (B) (1) Wells .. .. .. .. .. | 7,122 |
| (2) Schools .. .. .. .. .. | 14,613 |
| (3) Overhead tank and pressure tanks .. | 99,800 |

* Printed as Appendix III on page 509 infra

வடாற்காடு மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கி

80 வினா.—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு சட்டக் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரிலுள்ள வடாற்காடு மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கின் தலைவர் அறையில் குளு குளு சாதனம் அமைக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான செலவுத் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(இ) ரூபாய் 4,286·42 பைசா.

(a) and (b) Yes. Rs. 4,286·42 P.

*Registration fees*

81 வினா—திரு. கே. சகாதேவ கவுண்டர் : மாண்புமிகு சட்டக்கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966–67-ம் ஆண்டின் தமிழக பத்திர பதிவுத்துறையில் பத்திரங்களின் பதிவுக்காக வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அது 1967—68-ம் ஆண்டின் வருமானத்தை விட அதிகரித்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா ?

(உ) குறைந்திருந்தால் அதன் காரணம் என்ன ?

விடை—

(அ) ரூ. 1,42,73,837.

(இ) அதிகரித்துள்ளது (1967–68-ம் ஆண்டின் வருமானம் ரூ. 1,58,31,835).

(உ) இவ்வினா எழவில்லை.

(a) Rs. 1,42,73,837.

(b) More (Rs. 1,58,31,835).

(c) Does not arise.

*Industries Oriented Courses*

82 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether Industries Oriented Post-graduate Courses are to be started in the Regional Engineering College, Tiruchirappalli with UNESCO aid from this year?

A.—No. It is however, understood that the experts of the UNESCO visited the Regional Engineering College, Tiruchirappalli, recently to study the feasibility of introducing Industries-Oriented Post-graduate Courses with reference to the facilities avilable at the college.

இல்லை. ஆனால் "யுனெஸ்கோ" வல்லுநர்கள் அண்மையில் திருச்சிராப்பள்ளி வட்டாரப் பொறியியற் கல்லூரிக்குச் சென்று, அக்கல்லூரியில் கிடைக்கக்கூடிய வசதிகளைக் கருத்திற்கொண்டு, தொழில் சார்புள்ள பட்ட மேற்படிப்புப் பாட முறைகளைக் கொண்டுவருவதன் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்தனர் எனத் தெரிகிறது.

*President's Medals*

83 Q.—THIRU G. GOMATHY SANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state :

The basis on which recommendations are made for the award of President's Medal for Police personnel from this State ?

A.—The President's awards are styled and designated "President's Police and Fire Services Medal " and " Police Medal " and they are announced by the President on the occasion of the Republic Day and Independence Day each year. They are to be conferred on members of



Police Forces, the Central Intelligence Bureau and organised Fire Services throughout the Indian Union in consideration of meritorious service or gallantry and outstanding devotion to duty respectively. These medals when awarded for gallantry will carry a monetary allowance at the rates fixed in the rules, The allowance is granted only to offiicers of and below the rank of Inspector of Police.

2. According to the rules regulating the grant of President's Police and Fire Services Medal, it is awarded for—

(i) a specially distinguished record in Police Service ;

(ii) success in organising Police or Fire Services or in maintaining their organisations under special difficulties ;

(iii) special service in dealing with serious wide-spread outbreaks of crime or public disorder, or fire; and

(iv) prolonged service, but only when distinguished by very exceptional ability and merit.

It has also been laid down that the President's Police and Fire Services Medal should be awarded only for exceptional skill or conspicuous devotion to duty. The nominee should also have put in at least 20 years of service, and a period of 6 years should have elapsed since the last award.

3. The Police Medal is awarded for valuable services characterised by resource and devotion to duty including prolonged service of ability and merit. It has also been stressed that the medal may be awarded only for conspicuous merit. The nominee should also have put in at least 15 years of service.

குடியரசுத் தலைவர் அளிக்கும் விருதுகள், "காவலர்—தீயணைப்புப்படையினர் பதக்கம்", "காவலர் பதக்கம்" என அழைக்கப்படுகின்றன. இவை ஒவ்வோராண்டும் குடியரசுத் தலைவரால் குடியரசு நாளன்றும், சுதந்திர நாளன்றும் அறிவிக்கப்படுகின்றன. இந்தியா எங்கணுமுள்ள காவல் படையினர், குற்றப் புலனாய்வு மத்தியக் கழகத்தினர், தீயணைப்புப் படையினர் செய்த சிறந்த சேவை அல்லது வீரச் செயல்களுக்காகவும் கடமையிற் கருத்தூன்றிப் பணியாற்றியதற்காகவும் முறையே அளிக்கப்படுகின்றன. வீரச் செயலுக்காக இப் பதக்கங்கள் அளிக்கப்படும்போது, விதிகளில் முடிவு செய்துள்ள வீதப்படி ரொக்கத் தொகையும் வழங்கப்படுகின்றது. காவல் துறை மேற்பார்வையாளர்களுக்கும் அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கும் மட்டுமே இந்த ரொக்கத் தொகை வழங்கப்படும்.

2. குடியரசுத் தலைவரின் காவல் தீயணைப்புப் படையினர் பதக்கம் கீழ்க்கண்டவற்றை முன்னிட்டு அளிக்கப்படுமென உரிய விதிகளில் சொல்லப்பட்டுள்ளது.—

1. காவல் பணியில் தலைசிறந்த வகையில் பணியாற்றியிருப்பது;

2. காவலர் அல்லது தீயணைப்புப் படைகளை நல்ல வகையில் நிறுவியதற்கோ அல்லது மிக்க நெருக்கடியான காலங்களில் அப்படைகளின் கட்டுக் குலையாமல் வைத்திருப்பதில் வெற்றியடைந்திருப்பது ;

3. பரவலான முறையில் கடுமையான குற்றங்கள் நடைபெறும்போது அல்லது பொதுமக்கள் ஒழுங்கு குலைந்து வன்செயல்களில் ஈடுபடும்போது அல்லது தீ விபத்தின்போது உரிய நடவடிக்கை எடுப்பதில் சிறப்பாகப் பணியாற்றியிருப்பது ;

4. நீண்ட காலம் பணியாற்றியிருப்பது, இத்தகைய நேர்வுகளில், மிகத் திறமையாகவும், மெச்சத் தகுந்த வகையிலும் அக்காலம் அளவில் பணியாற்றியிருக்க வேண்டும்.

தலைசிறந்த திறமை, கடமையில் மிகவும் கண்ணும் கருத்துமாயிருத்தல் ஆகியவைகளுக்கு மட்டுமே குடியரசுத் தலைவரின் காவலர்—தீயணைப்புப் படையினர் பதக்கம் வழங்கப்பட வேண்டுமென்றும் விதிக்கப்பட்டுள்ளது. இப் பதக்கம் பெறுவதற்குப் பரிவுரை செய்யப்பெறுபவர்கள் 20 ஆண்டுக் காலமாவது பணியாற்றியிருக்க வேண்டும். ஒருவருக்கு முதல் முறை பதக்கம் அளிக்கப்பட்டதிலிருந்து 6 ஆண்டுகளேனும் கழிந்த பின்னர்தான் அவர் இரண்டாம் முறை பதக்கம் பெற இயலும்.

3. திறமையுடனும் மெச்சத் தக்க வகையிலும் நீண்ட காலம் பணியாற்றியிருப்பது உட்பட, கடமையுணர்வுடனும் கண்ணுங் கருத்துமாய் திறமை மிக்க, தலை சிறந்த பணியாற்றியதற்கே காவலர் பதக்கம் வழங்கப் படுகிறது. சாலச் சிறந்த திறமை பெற்றிருப்பவர்களுக்கே இப்பதக்கம் வழங்கப்பட வேண்டுமென்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பதக்கம் பெறுவதற்குப் பரிவுரை செய்யப்பெறுபவர்கள் 15 ஆண்டுகளேனும் பணியாற்றியிருக்க வேண்டும்.

*Police Stations Anna Nagar.*

84 Q—THIRU G. GOMATHY SANKARA DIKSHIDAR : Will the Hon'ble the Chief Minister be pleased to state whether Police Stations have been provided in Anna Nagar, Madras ?

*A.*—No.
இல்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**2. நடைமுறைக் கேள்விகள்.**

**(i) வினு நேரத்தில் அவையில் அமைச்சர்கள் இல்லாதிருத்தல்.**

**திரு. பி. வேலுசாமி :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் கேள்வி நேரம் என்பது இந்த அவையிலே மிகவும் முக்கியமான நேரம் என்று கருதுகிறேன். 3½ கோடி தமிழ் மக்களின் வாழ்விலே இருக்கும் பிரச்சினைகளை எல்லாம் நாம் எடுத்துச் சொல்லவும், சந்தேகங்களுக்கு விளக்கங்கள் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பு இந்த நேரத்திலே தான் ஏற்படுகிறது. இம்மாதிரியான நேரத்திலே கூட அமைச்சர்கள் எல்லோரும் இல்லாதிருப்பதானது, வாஸ்தவமாகவே இந்தச் சபையின் நடவடிக்கைகளை அவர்கள் அலட்சியப்படுத்துகிறார்களோ என்று மற்றவர்கள் ஐயப்பாடு கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, துணைத் தலைவரவர்கள், எல்லா அமைச்சர்களும் கேள்வி நேரத்திலே இருக்க வேண்டுமென்று உத்தரவிட்டு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே அமைச்சர்கள் அத்தனை பேரும் கேள்வி நேரத்தில் பொதுவாக இருக்க வேண்டுமென்பது தான் நியதி. ஆனால் முதலிலே தீர்மானித்தபடி 28-ஆம் தேதியோடு சட்டசபைக் கூட்டம் முடிந்துவிடும் என்றிருந்த காரணத்தினால் பல அமைச்சர்கள் வெளியூர்களில் சுற்றுப் பிரயாணம் செய்தல் முதலிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டன. எனவே, எதிர்பாராத நிலையிலே இவ்வாறு ஏற்படடு விட்டதே தவிர வரக்கூடாது என்ற காரணத்தினால் அல்ல. இன்று 3 அமைச்சர்களுக்குக் கேள்விகள் போடப்பட்டிருந்தன. அதற்குரிய இரண்டு அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள். ஒரு அமைச்சர் வரவில்லை. ஆகையால், எதிர் பாராமல் இவ்வாறு ஏற்பட்டுவிட்டதே தவிர திட்டமிட்டோ அல்லது வேண்டுமென்றோ செய்யவில்லை. கூடுமான வரையில் சட்டமன்றம் நடக்கும் பொழுதும்,





கேள்வி நேரம் நடைபெறும் பொழுதும் அமைச்சர்கள் அனைவரும் இருக்க வேண்டுமென்பது தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரை என்பதையும் கூறிக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டமன்ற நிகழ்ச்சிகளில் கேள்வி நேரம் மிகவும் இன்றியமையாதது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். அமைச்சர்கள் அத்தனை பேரும் வந்திருந்து அவர்களுக்குரிய கேள்விகளுக்கு விடையளிப்பது தான் மரபாக இருக்க வேண்டும். ஆனால், அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல சில காரணங்களை முன்னிட்டு அமைச்சர்கள் வரவில்லை. அதிலும் மூன்று அமைச்சர்கள் வருவார்கள் என்று குறிப்பிட்டு அந்த மூன்று அமைச்சர்களுக்கும் அதிகமாகவே கேள்விகள் போட்டிருந்தோம். அதில் ஒரு அமைச்சருக்கு உடல் நிலை சரியாயில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கே தெரியும். ஆகவே, எதிர் பாராத நிலையில் அவர் வரவில்லை. இனி, கேள்வி நேரத்தில் எல்லா அமைச்சர்களும் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி நானும் பார்த்துக் கொள்கிறேன், அமைச்சரும் அதற்கு உறுதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : On a point of Order, Sir. This point has not been properly examined. What I am worried about is that under no circumstances, Hon. Ministers should go out of Madras when the House is in session. The Hon. Leader of the House tells me that we anticipated this House would finish its job early and later only the Ministers fixed these tours. They should have reasonably anticipated that the House might be extended by two or three days. In future at least the Hon. Ministers should take into their memory that their work should not conflict with the work of the Assembly. Their business should be so arranged that there should be no clash with the programme of the House.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் திரு. விநயகம் அவர்கள் கூறியதை நான முன்பே கூறிவிட்டேன். எல்லா அமைச்சர்களும் இருக்க வேண்டும் என்று கூறிவிட்டேன். ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால், சட்டமன்றக் கூட்டத் தொடர் 24-ம் தேதி முடிவடையும் என்பது பிறகு 28-ஆம் தேதியாக்கப்பட்டு, அதன் பிறகு 31-ம் தேதி என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். இவ்வாறு மூன்று கட்டங்களிலே சட்ட மன்ற நிகழ்ச்சிகள் பற்றி முடிவெடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அமைச்சர்கள் முன்பே போட்ட திட்டங்களின்படி பல இடங்களுக்குச் சென்று தீரவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அமைச்சர்கள் நாட்டின் நலனைக் கவனிக்க பல இடங்களுக்குச் சென்று பல கூட்டங்களில் கலந்துகொள்ளக்கூடிய நிலையிருக்கிறது. எனவே, இதைக் கட்டாயமாக இன்றியமையாத விதியாகப் போடுவதற்கு இயலாது. கூடுமான வரையில் எல்லா அமைச்சர்களும் இருக்க வேண்டும். அதற்கு நானும் வகை செய்கிறேன் என்று கூறுகிறேன். இத்துடன் இந்த ஒழுங்குப் பிரச்சினைக்கு முடிவு கட்டி விடலாம்.

**3. அவையுரிமைக் கேள்வி.**

**அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் பற்றிய செய்தி உரிய காலத்திற்குமுன் வெளியீடு.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கநாதன் அவர்கள் 23-8-1968 அன்று ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். 18-8-1968 அன்று பகல் 12 மணியளவில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நம்முடைய துறைச் செயலாளர் அவர்களிடத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் போகிறேன்

என்ற ஒரு குறிப்பைத் தந்தார்கள். அது அன்றைய பத்திரிகையிலே வந்திருக்கிறது. பத்திரிகையிலே வந்திருப்பதோடு மட்டுமல்லாமல், இதிலே என்னென்ன காரணங்களுக்காக என்று சொல்லப்படுகிறதோ அவற்றில் பெரும்பாலானவை அதில் இடம் பெற்றிருக்கின்றன. அந்தச் செய்தித் தாள்கள், இதற்கு சபாநாயகர் அனுமதி பெற வேண்டும், அனுமதி பெறுவதற்கு இத்தனை பேர் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற விதிமுறைகளையெல்லாம் குறிப்பிட்டிருக்கின்றன. அவ்வாறு குறிப்பிட்டிருக்கும் செய்தித் தாள்களுக்கு, அந்தத் தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வந்து அதன் பிறகு தான் வெளியிட வேண்டும் என்றும் தெரிந்திருக்க வேண்டும். எனவே, பத்திரிகைகள் தவறு என்று நாம் நினைக்க முடியவில்லை. பத்திரிகைகளுக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் செய்தி கொடுத்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் சொன்னார்கள் என்று கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி இந்த மன்றத்திலே கொண்டு வந்து அனுமதி பெறுவதற்கு முன்பு பத்திரிகைகளுக்குச் செய்தியைக் கொடுப்பது என்பது மன்றத்தின் உரிமையைப் பாதிக்காதா என்று கேட்கிறார்கள்.

இது உரிமைப் பிரச்சினையாகக் கருதப்படவேண்டும் என்பது முறையல்ல. இருக்கிற மரபை பாதிக்கிறது என்று தான் நான் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, ஒரு குறுகிய கால கேள்வி கொடுத்து, அந்தத் தீர்மானமும் கேள்வியும் அனுமதிக்கப்பட்டு அவற்றிற்குரிய விடைகள் அளிப்பதற்கு முன்பே பத்திரிகையிலே வருமானால் அது மரபை மீறிய செயலாகும் என்று லோக் சபாவிலே கூட இப்படிப்பட்ட தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒரு அளவிற்கு இது மரபைமீறிய செயல்தான். ஆனாலும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நான் கொடுக்கவில்லை, பத்திரிகையிலே வந்த செய்தியை நான் பார்க்க வில்லை, பத்திரிக்கையிலே வந்ததற்கு நான் பொறுப்பாளி அல்ல என்று கூறிய காரணத்தாலே அவருடைய சொல்லுக்கு மதிப்பளித்து இப்படிப்பட்ட மரபுகள் இனி நல்ல முறையிலே கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று கூறி, இத்துடன் இதை முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

### 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (ii) அவையுரிமைக் கேள்விகள் எழுப்ப வேண்டிய நேரம்.

Dr. H. V. HANDE: With regard to the point of order I raised, the Deputy Speaker promised to give a clear-cut ruling as to the exact stage at which a privilege motion could be raised.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அன்றே அந்த பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்குப் பதில் அளித்திருக்கிறேன். இந்த மன்றத்திலே எப்படிப்பட்ட மரபுகள் இருக்கின்றன என்று கூறி இருக்கிறேன். அதன் மீது வேறு விதமான ஒழுங்குப் பிரச்னைகள் எழுப்ப வேண்டியதில்லை. வேண்டுமானால் ரூல்ஸ் கமிட்டி தீர்மானித்து திருத்தம் செய்து கொள்ளலாம்.

**திரு. க. ர. நல்லசிவன் :** பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், சார். இன்னும் இரண்டு நாட்களுக்குச் சட்டசபை இருக்கிறது. இந்த இரண்டு நாளிலே நேரடியாக உரிமைத் தீர்மானங்கள் போன்ற பல இருக்கின்றன. அமைச்சர்கள் நாளை, நாளை மறுதினமாவது வருவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு வராத அமைச்சர்கள் நாளைக்காவது வந்தால் அவர்கள் மூலம் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உரிமைப் பிரச்னைகள் வந்து, நம்முடைய மன்றத்திலே பல தொடர் கூட்டங்களிலே முடிவுக்கு வராமல் அந்தக் கூட்டம் கவர்னராலே கலைக்கப்படுகின்ற காலத்திலே காலாவதி



யாகிய நிகழ்ச்சிகள் கூட இருக்கின்றன. உரிமைப் பிரச்னைகளை எப்பொழுது எடுத்துக் கொள்ளலாம் என்பதற்கு சபாநாயகர் தான் காலம் குறிப்பிட வேண்டும். அந்தக் காலத்திலேதான் எடுத்துக்கொள்ள முடியும். "அது ஓர் உரிமைப் பிரச்னை, அதை ஏற்றுக் கொள்ளலாமா?" என்றெல்லாம் கேட்பதற்கு இடம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். திரு. பால சுப்பிரமணியன் அவர்கள் கொடுத்திருக்கின்ற உரிமைப் பிரச்னையைப் பொறுததவரை பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களைக் கலந்து அதற்கு நான்அளிக்கிறேன். அதையும் இன்றே எடுத்துக் கொள்ளலாம் என்று இருந்தேன். அமைச்சர் வராத காரணத்தாலே இன்றையதினம் எடுத்துக் கொள்ளவில்லை.

**டாக்டர் எஸ். வி. ஹாண்டே :** ஒரு விளக்கம். திட்டவட்டமாக உரிமைப் பிரச்னையை எப்பொழுது கிளப்பலாம் என்று நீங்கள் இங்கே ஒரு அறிவிப்புத் தந்தால் அது நமக்கு, அடுத்தபடியாக புது உரிமைப் பிரச்னை கொண்டுவர வேண்டுமென்று விரும்பினால் சௌகரியமாக இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் சொல்வது புரிகிறது. சபாநாயகர் இப்பொழுது செய்யக் கூடிய தெல்லாம் நம்முடைய கையிலே இருக்கிற சட்டமன்ற விதிமுறைகள் என்ன கூறுகின்றனவோ, நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சிகள் எப்படி நடந்திருக்கின்றனவோ, அதை ஒட்டித்தான் ஆகவே, இப்பொழுது இருக்கின்ற சட்டமன்ற விதிமுறைகளும் சட்டமன்ற நிகழ்ச்சிகளினுடைய முன் நிகழ்ச்சிகளும் இப்பொழுது நான் கூறிய முறையைத்தான் கூறுகின்றன. ஆகவே, அதற்கு மாறாக வேறு ஏதாவது கொடுக்க வேண்டுமென்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு தீர்மானம் கொடுத்து நிறைவேற்றிக் கொள்ளலாம். அதை ரூல்ஸ் கமிட்டி பரிசீலிக்கும் என்று நான் கூறியிருக்கிறேன். அதை மீண்டும் மீண்டும் இந்த மன்றத்திலே எழுப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு மசோதா, மாண்புமிகு இராமமூர்த்தி அவர்கள்.

### 4. தனி உறுப்பினர் அலுவல்

### (i) மசோதா

### தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதா

Thiru K. RAMAMURTHY : Sir, I move for leave to introduce the Madras State Marriages Registration Bill, 1968.

Thiru N. S. V. CHITHAN : I second the motion.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

Thiru K. RAMAMURTHY : I have pleasure to introduce the Bill.

**மாண்புமிகு பேரவைத் துணைப் தலைவர் :** மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

இப்பொழுது திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் ஒரு தன்னிலை விளக்கம் கொடுக்க விரும்புகிறார்.

### 5. தன்னிலை விளக்கம்.

### திரு பழனிவேல் ராஜன் ஆற்றிய உரையில் திருத்தம்.

Thiru PALANIVEL RAJAN : Sir, while speaking on the no-confidence motion yesterday, I said that according to Mr. K. T. Kosalram the Congress Party had spent seventy-five lakhs of

rupees in the last general election. It has now been pointed out that, while Mr. K. T. Kosalram was present at the meeting, Mr. S. N. Somayajulu was the person who made the statement that seventy-five lakhs had been spent. I express regret for the mistake and request that the proceedings be suitably amended.

## 4. தனி உறுப்பினர் அலுவல்—தொடர்ச்சி.

### (ii) தனித் தீர்மானங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, தனி நபர் தீர்மானங்கள். தீர்மானம் 1, திரு. மெய்யப்பன் அவர்கள் இடத்தில் இல்லை; ஆகவே, அது முன் மொழியப்படவில்லை. அடுத்து, இரண்டாவது தீர்மானம், திரு. க. ர. நல்லசிவன் அவர்கள்.

### (1) அங்கத்தினர்களும், அமைச்சர்களும் சொத்து வருமான—செலவு விவரங்களைப் பேரவைமுன் அளித்தல்.

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"சட்டப்பேரவை அங்கத்தினர்களும், அமைச்சர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து தங்களது சொத்து, வருமானம்—செலவுபற்றிய விவரங்களை வருடாவருடம் சட்டப்பேரவை முன் சமர்ப்பிக்க வேண்டுமென்று இப் பேரவை கருதுகிறது."

பெருமதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் இது போன்ற ஒரு தீர்மானத்தைப் பிரேரேபிப்பதிலே நான் உண்மையிலே பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஏனெனில இதுவரையிலே இதுபோன்ற கருத்துப் பேசப்பட்டு வந்ததே தவிர நடைமுறையில் கொண்டுவருவதற்கான சந்தர்ப்பம் இருந்ததே கிடையாது. இதை யெல்லாம் விட எனது மதிப்பிற்குரிய சட்ட அமைச்சர் அவர்கள் 1964-வது ஆண்டிலே நானுவது தீர்மானமாகக் கொடுத்திருக்கிறேன்—மசோதா உருவத்திலே இந்தச் சட்டசபையிலே கொடுத்தார்கள். அதன் மீது விவாதம் நடந்தது. அதை ஆதரித்து ஓட்டு போட்டவர்களிலே, எங்களிலே பெருவாரியான நண்பர்கள், இங்கே இருக்கிறோம். அதை எதிர்த்த பல பேர் இங்கே கிடையாது. அந்த வகையிலே இது நிறைவேறும் என்பதற்கு எனக்குப் பூரணமான நம்பிக்கை இருக்கிறது. அது மாத்திரம் அல்ல, என்னுடைய 14 வருஷ சட்டசபை வாழ்விலே நிறைவேறக்கூடிய தீர்மானம் கொண்டு வரக்கூடிய சந்தர்ப்பம் இப்பொபொழுது தான் எனக்குக் கிடைத்திருக்கிறது. இதை நிறைவேற்றுவதன் மூலம் நாம் மகிழ்ச்சிக்குரியவர்களாவோம் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. முதல் முதலாக, அமைச்சர் அவர்கள் முன்பு கொடுத்த மசோதாவிலே கொடுத்த காரண, காரிய விளக்கத்தைப் படித்துவிட்டு இதைப்பற்றி நான் பேச விரும்புகிறேன்.

Whereas the citizens of India are engaged in the great experiment of "Democratic Socialism" and whereas the practice of democracy should be nurtured in our country based on high principles, political and moral, and whereas the people should be convinced that their representatives holding offices either as Members or as Ministers hold such offices only for the public benefit and not to benefit themselves directly or indirectly and should be above suspicion, an enactment as above is necessary.

என்ற காரண, காரிய விளக்கத்தோடு இந்த மசோதாவைக் கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலே அன்றைக்கு நாட்டிலே இந்தத் தீர்மானத்தை மசோதாவாகக் கொண்டுவந்து சட்டமாக்குவதற்கான அவசியம் இருந்தது



கிடையாது. ஆனால் இன்றைக்கு அரசியல் வாதிகள் மாத்திரம் அல்ல, பொதுமக்கள் கூட அவர்கள் மத்தியிலே இருக்கிற அரசியல்வாதிகள் மீதும் அரசியல் வாழ்விலே நீண்ட நாட்களாக இருப்பவர்கள் மீதும் அபவாதம் கூறக்கூடிய பெரும் போக்கு இருக்கிறது. இதற்கான காரணம் என்ன என்று நாம் பாரக்க வேண்டும். தேர்தல் காலத்திலே அந்த அந்தக் கட்சிகள் தங்களுடைய கட்சிக் கொள்கைகளைச சொல்வதறகுப் பதிலாக அந்த அபேட்சகருடைய தனி யோக்கியதை என்ன, வரவு-செலவு என்ன, அதிலே அவர் குடும்பத்தைப் பற்றியும் பேசுவதுதான் அதிகமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கை விளக்கத்தைப் பேசாமல் இதைப்பற்றியே பேசுவதை நாம் பார்க்கிறோம். இதறகுக் காரணம் என்ன என்று நாம் பார்க்க வேண்டும். 20 ஆண்டுகளுக்கு முன்னால் சுதந்திரம் பெற்ற காலத்திலே மக்களெல்லாம் மகிழ்ச்சி வெள்ளததிலே திளைத்துக் கொண்டிருந்தார்கள். சுதந்திர போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் கூட ஒரு பெரும் போரிலே ஈடுபட்ட சிப்பாய்கள் எப்படிப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்த உடனே ஆடம்பரக் கேளிக்கையிலே ஈடுபட்டார்களோ, அதைப் போல் சில நன்மைகளைத் தேட ஆரம்பித்தார்கள். அதனுடைய விளைவாக இன்றைக்கு அரசியல்வாதிகள் என்று சொன்னாலே மக்கள் அருவருக்கக் கூடிய ஒரு நிலையில் வந்திருக்கிறது. இதை நாம் கவனித்தே தீரவேண்டும். இந்த நாட்டின் நலனில் அக்கறை கொண்டவர்கள் அத்தனை பேர்களும், அந்தக் கட்சி, இந்தக் கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பார்கள் என்று நான் நம்புகிறேன. இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் 1964-ம் ஆண்டில் இந்தச் சபையில் இந்த விஷயம் வந்த காலத்தில் கூட அதன் அடிப்படை நோக்கத்தை, எந்த நோக்கத்தை எட்ட வேண்டும் என்று நாம் கருதுகிறோமோ, அதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. இப்பொழுது அதற்கு அவசியமில்லை என்று சொல்லப்பட்டதே தவிர, அதன் அடிப்படையை யாரும் ஆட்சேபித்தது கிடையாது. அதுமட்டுமல்ல, இன்றைக்கு 20 ஆண்டு காலமாக ஏற்பட்டிருக்கக்கூடிய விரக்தியை நாம் கணக்கில் எடுததுக் கொள்ள வேண்டும். சுதந்திரத்திற்குப் பின்னால் பொருளாதாரத்துறையில் மாற்றம் ஏற்படும், அரசாங்கததின் தன்மை பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கைகொண்டிருந்தவர்கள், இன்றைக்கு அவை இரண்டுமே வேகமாக அழிந்து கொண்டிருப்பதை ஒப்புக்கொண்டு தான் தீரவேண்டும். வேறு வழி கிடையாது. சோஷலிஸத்தில் முழு நம்பிக்கை உள்ளவர்கள் சோஷலிஸத் துறையில் இந்தத் தேசம் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது, அந்தத் துறையிலே நாம் எந்த அளவுக்கு அடி எடுத்து வைத்திருக்கிறோம் என்று பரிசீலனை செய்து பார்த்தால், ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், அந்த அடிப்படையிலே பார்த்தால், அந்தத் துறையிலே தேசம் முன்னேறிவிட்டது என்று சொல்ல முடியாது. சமததுவம் இன்னும் இந்த நாட்டிற்கு முழுவதும் வந்துவிடவில்லை. வாழ்வில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் இருந்து கொண்டு தான் இருக்கிறது. தேசத்தில் என்றைக்கும் இல்லாத அளவுக்கு இன்றைக்கு ஏற்றத் தாழ்வுகள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த 20 ஆண்டு காலத்தில் சமத்துவம் வேண்டும், சமத்துவம் தான் தங்கள் முழு மூச்சு, தங்கள் கொள்கை என்று இந்த நாட்டை ஆண்டுவந்தவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், உண்மை நிலை என்னவென்றால், ஏழை மேலும் ஏழையாக ஆனான், பணக்காரன மேலும் பணக்காரன் ஆனான். இந்த நிலையிலே, இதனுடைய விளைவாகத்தான், மக்களிடையே அரசியல் கட்சிகளிடத்தில் ஒரு சந்தேகம் கூடத் தோன்றியிருக்கிறது, தேசத்தில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையிலே பேசக்கூடிய ஒரு சூழ்நிலை மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. அது முழுவதும் உண்மையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அங்கொன்றும், இங்கொன்றுமாக நிச்சயம் உண்மையைத் தேடிக் கண்டிபிடித்துவிட முடியும். பத்திரிகையில் அடிக்கடிசெய்தி வருகிறது. ஒருவர் இவ்வளவு கோடி கொள்ளை ய ட ₹ ார். அந்த மந்திரி இவ்வளவு சொத்துச் சேர்த்தார், இந்த மந்திரி இவ்வளவு சொத்துச சேர்த்தார் என்றெல்லாம் செய்திகள் வருவதைப் பாரக்கிறோம.

அதன் மூலம் அவர் மீண்டும் பதவிக்கு வரக்கூடிய காரியங்களை செய்துச் கொண்டிருக்கிறார் என்றெல்லாம் பேச்சு அடிபடுகிறது. இன்றைக்கு ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது, ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டிருக்கிறது. 20 ஆண்டு காலமாக ஆட்சி புரிந்தவர்களை மக்கள் வெளியே அனுப்பி வைத்துவிட்டு, நம்மை ஒத்தவர்களை இங்கே ஆட்சிபீடத்தில் உட்கார வைத்திருக்கிறார்கள். முன்பெல்லாம் தேசிய இயக்கத்தில் பங்கு எடுத்துக் கொண்டவர்கள், விடுதலை பெற்ற பிறகு சட்டசபையில் அங்கம் வகிக்கும் சூழ்நிலை இருந்தது. இன்றைக்கு நம்மை ஒத்தவர்கள் தான் சட்டசபையில் இருக்கிறார்கள். அன்றைக்கு மன்னர்கள், ராஜாக்கள், இவர்களெல்லாம் சட்டசபையில் அங்கம் வகித்தார்கள். நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வசதியுள்ளவர்கள் எதைச் செய்தாலும், எந்தத் தவறைச் செய்தாலும், சமூகத்திலுள்ளவர்கள் அதைப்பற்றி அதிகம் கவலை கொள்வது கிடையாது. ஆனால், நம்மை ஒத்தவர்கள் சட்டசபையில் இப்பொழுது அங்கம் வகிக்கும் அளவுக்கு நிலைமை மாறி இருக்கிறது. ஒரு புரட்சி ஏற்பட்டிருக்கிறது. சமூகத்தில் இப்படிப்பட்டவர்கள் மீது சந்தேகம் வளரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அழுக்கு அகலாமல் வெள்ளைச் சட்டை போட்டுக் கொண்டால் கூட சந்தேகப்படக்கூடிய சூழ்நிலை சமுதாயத்தில் வளர்ந்திருக்கிறது. அரசியல் கொள்கைகளை வைத்து தேர்தல்களில் போட்டி இடக்கூடிய போக்குக்குப் பதிலாக, அவன் இவ்வளவு சொத்து சேர்த்துவிட்டான், இவன் இவ்வளவு சொத்து சேர்த்துவிட்டான், அவன் கார் வாங்கிவிட்டான், என்றெல்லாம் உண்மை இல்லாத குற்றச்சாட்டுகளைச் சொல்லி தேர்தலில் ஜெயிக்க முடியும் என்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அந்த வகையில் பார்த்தால், நாம் சுத்தமானவர்கள் என்று காட்டிக்கொள்வதற்கு இதைவிட வேறு எந்த மார்க்கமும் கிடையாது. அது மாத்திரமல்ல; அன்றைக்கு ஒரு அதிகாரப் பற்றற்ற மசோதாவை இந்தச் சபையில் கொண்டுவந்த எனது மதிப்பிற்குரிய திரு. மாதவன் அவர்கள், அவரே இதைச் சட்ட ரூபத்தில் இங்கு இன்றைக்குக் கொண்டுவரக்கூடிய நிலையில் சட்ட அமைச்சராக இங்கே வீற்றிருக்கிறார் என்பது எனக்குப் பெரிதும் மகிழ்ச்சி தருகிறது. ஆகவே, இம்மாதிரி ஒரு மசோதாவைக் கொண்டு வந்து, இந்த மாநிலத்திற்கு மட்டுமல்லாமல், இந்தத் தேசம் பூராவுக்கும் ஒரு வழிகாட்டியாகத் திகழ வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது போன்ற ஒரு மசோதா கேரளத்தில் வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். அது சட்டசபை அங்கத்தினர்கள், மந்திரிகளுக்கு மாத்திரமல்ல, தேர்தலில் நிற்பவர்கள் அனைவரும் மக்கள் மன்றத்தின் முன்னால் தங்களது சொத்துக்களைப் பற்றிய கணக்குகளை வைக்க வேண்டும் என்ற வகையில் அந்த மசோதா கேரளாவில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்னும் அது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று நான் நினைக்கிறேன். நம்மைப் பொறுத்தவரையில், நாமும் இது போன்ற மசோதாவைக் கொண்டுவருவதன் மூலம், மக்களிடையே புதிய தெம்பை, புதிய நம்பிக்கையை உண்டு பண்ண முடியும்.

இதன் விளைவாகச் சட்டசபை அங்கத்தினர்கள், மந்திரிமார்கள், மேல் தட்டில் இருக்கக்கூடியவர்கள், இது போன்ற நிலையில் இருக்கக்கூடியவர்களின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற மாறுதல், இந்த நாட்டில் இருக்கக் கூடிய அதிகார வர்க்கத்தினரையும் பாதிக்கின்றது. நம்மை சுத்தமானவர்கள் என்று காட்டிக் கொள்ள இது போன்ற ஒரு மசோதாவைக் கொண்டு வருவதைவிட வேறு சிறந்த வழி கிடையவே கிடையாது. 1972-ம் ஆண்டு வரப்போகிற தேர்தலையும் பற்றி நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் ஆட்சி நடந்து வந்தது. அதன் விளைவாக மக்களின் வாழ்க்கையில் பெரிய புரட்சிகரமான எந்தவிதமான மாறுதலும் ஏற்பட்டது கிடையாது. ஆகவே, அதிருப்தி அடைந்த மக்கள் காங்கிரஸ் ஆட்சியை அகற்றிவிட்டு, நம்மை ஒத்தவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். இந்த நாட்டில் பரவலாக பல்வேறு இடங்களிலும் அப்படிப்பட்ட மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. மக்களிடம் நம்பிக்கை உண்டு பண்ணத் தவறிய காங்கிரஸ் ஆட்சியை மக்கள் மாற்றி விட்டார்கள். இப்பொழுது நம்மை ஒத்தவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கக்





கூடிய சூழ்நிலையில் மக்களுக்குப் தெம்பு ஊட்டும் வகையில், நம்பிக்கை ஊட்டும் வகையில், புரட்சிகரமான மாறுதல்களைச் செய்யவேண்டும். பொருளாதாரத் துறையில் மாறுதல் ஏற்படுத்துவதல்லாமல், அதற்கு முன்னால், மக்கள் மன நிலையில், எண்ணத்தில் ஒரு புரட்சி உண்டு பண்ண வேண்டும். அப்படிப்பட்ட காரியங்களைச் செய்தால் தான், அதற்காக வித்திட்டவர்களாக ஆவோம். காந்திஜி இருந்த காலத்தில், தியாகத்திற்கு பெருமதிப்பு இருந்தது. இன்றைக்கு அந்த மதிப்பு அழிந்துவிட்டது. இதே போக்கில் நாம் போய்க் கொண்டிருந்தால், 1972-ல் பொதுத் தேர்தல் நடக்குமா, அல்லது நாட்டில் சர்வாதிகார ஆட்சி வந்திடுமா என்று சந்தேகம் எழக்கூடிய அளவுக்கு சூழ்நிலை இருக்கிறது. எந்த வகையில் பார்த்தாலும், இந்தத் தீர்மானத்தை மசோதா உருவமாக ஆக்கி, சட்டமாக்க வேண்டிய பொறுப்பு இந்த ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் தி.மு.க. அரசுக்கு உண்டு என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது மாத்திரமல்ல. இதற்கு முன்னால் இந்தச் சபையில் இதுபற்றி கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை முன்பிருந்த பல அங்கத்தினர்கள், திரு. சங்கரன் போன்ற காங்கிரஸ் தரப்பில் இருந்த அங்கத்தினர்கள் கூட ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். அடிப்படையில் இந்தத் தீர்மானத்திற்கு எதிரான கருத்து ஒன்றும் கிடையாது. சில நாட்களுக்கு முன்பாக மதிப்பிற்குரிய திரு. மாதவன் அவர்கள் பத்திரிகையாளரிடத்திலே பேசும்பொழுது அமைச்சர்கள் தங்களது சொத்து பற்றிய கணக்குகளைக் கொடுப்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அகில இந்திய அடிப்படையிலே லோக பால் ஏற்படுத்துவது, அல்லது மந்திரிமார்கள் தங்களுடைய சொத்து பற்றிய கணக்குகளை முதல் மந்திரியிடம் கொடுப்பது, முதல் மந்திரி தன்னுடைய சொத்து பற்றிய கணக்குகளை மந்திரிசபையிடம் கொடுப்பது ஓரளவுக்கு மந்திரிமார்களை மட்டும் காப்பாற்றிக் கொள்வதற்குப் பயன்படுமே தவிர, நம்மை ஒத்த சட்டசபை அங்கத்தினர்கள் சுத்தமானவர்கள் என்று காட்டிக்கொள்ள இதைவிட வேறு எந்த வழியும் கிடையாது என்று நான் நம்புகிறேன். தேசம் பூராவுக்கும் இம்மாதிரி ஒரு மசோதா கொண்டுவரப்படுவது வழிக்காட்டியாக இருக்கும். இம்மாதிரி ஒரு சட்டம் கொண்டுவருவதன் மூலம் இந்தக் காரியங்களை நாம் வெற்றிகரமாகச் செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன். பத்திரிகைகளில் இதைப்பற்றி செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அவன் இப்படி பணக்காரன் ஆனான், இவன் இப்படி பணக்காரன் ஆனான் என்றெல்லாம் சொல்லக்கூடிய சூழ்நிலை வளர்ந்து கொண்டே போகிறது. இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான எதிர்ப்பும் இருக்காது என்று நினைக்கிறேன். இதை ஆதரிக்கும்படி அங்கத்தினர்களை மிகவும் பணிவோடு, அன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். முன்பு இந்த சட்டமன்றத்தில் இம்மாதிரி தீர்மானம் கொண்டு வந்த எனது சகா, நண்பர் இன்றக்குச் சட்ட அமைச்சராக இருக்கிறார். அவர் நிச்சயம் இது பற்றிய மசோதாவைக் கொண்டுவருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதில் துளிக் கூட எனக்குச் சந்தேகம் கிடையாது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே, இந்தக் கணக்கு சரியில்லை, அந்தக் கணக்கு சரியில்லை என்றெல்லாம் பேசப்படுகிறது. தனிப்பட்ட முறையில் நம்முடைய கணக்குகளை இந்த மன்றத்தின் முன்னால் வைத்துவிட்டால் பொதுக் கணக்குக்களைப்பற்றி இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டு யாரும் கேட்கமாட்டார்கள். தனிப்பட்ட முறையில் சொத்து சேர்த்துக் கொண்டார்கள் என்ற சந்தேகம் தீர்க்கப்பட்டுவிட்டால், பொதுக் கணக்கில் ஊழல் இருக்கிறது என்று சொல்லக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படாது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை சபை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மீண்டும், மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். சட்ட அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு மசோதா வரிவடிவம் கொடுத்து, அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் இதைச் சட்டமாக நிறைவேற்றுதவதற்கு எல்லா விதத்திலும் உதவியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

முற் பகல் 10-30 **திரு. எ. பாலசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்திற்குப் பின்னால் இருக்கும் கருத்தையும், மனப்பான்மையையும், நான் முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ளுகிறேன். நம்முடைய தேசீய இயக்கத்திற்கு மிகப் பெரிய சிறப்பை அளித்து, வாழ்விலே எளிமை, தியாக உள்ளம், நாட்டுப் பற்று போன்ற கொள்கைகள் தான். அந்த "நாஷனல் வால்யூஸ்", மதிப்புக்களெல்லாம், கடந்த 20 ஆண்டுகளில் படிப் படியாக அழித்து, ஒழிக்கப்பட்டு விட்டன. அதன் விளைவாக, அரசியல் வாதி என்றாலே யோக்கியதை இல்லாதவன் என்ற பரவலான கருத்து நாட்டிலே வளர்ந்து கொண்டு இருக்கிறது. அதை இன்றைக்குப் பரிசீலித்துப் பார்க்கும் போது, செல்வம் ஒரு சிலர் கைகளில் குவியக் குவிய, ஏகபோக மூலதனமாக வளர வளர, அவர்கள் தாங்கள் எதையும் செய்ய முடியும் என்கிற நிலை வளருகிறது. ஏராளமான செல்வத்தைப் படைத்தவர், தன்னுடைய செல்வத்தைக் கொண்டு அதிகார வர்க்கத்தை தன் வசப்படுத்திக் கொள்வது எளிதாகி அரசியல் கட்சிக்காரர்களையும் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளவும் பல சமயங்களில், வெற்றி பெற்று விடுகிறார்கள். சமீபத்திலே, பாங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்றத்திலே வந்த போது, அதற்கு ஏற்பட்ட எதிர்ப்பைப் பார்த்தோம். ஏகபோக மூலதனத்தை, தொட வேண்டுமென்றால், கூப்பாடு வருகிறது. கம்பெனிகள் நன்கொடை அளிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதை காங்கிரஸ் கட்சியின் மேலிடத்தில் ஒப்புக்கொண்டாலும், அதை தத்துவமாக ஏற்கும் அளவு இருந்தாலும், தீர்மானமாகவோ, அல்லது மசோதாவாகவோ, நாடாளும் மன்றத்திலே கொண்டு வர அந்தக் கட்சியிலே எதிர்ப்பு வருகிறது என்பதைப் பார்க்கிறோம். பிர்லா போன்றவர்கள் அதைக் கொண்டு, ஆயிரக்கணக்கான எம். பிக்களை, மேலும் மேலும் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ள, அதிகார வர்க்கத்தைத் தன் வசப்படுத்திக் கொள்ளத் தக்க போக்கு வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம். நாம் அரசியல் வாழ்வில் இருப்பவர்கள், தூய்மையாக இருக்க வேண்டும். அவ்வப் பொழுது, நம்முடைய தூய்மையை எடுத்துக் காட்ட வேண்டிய அளவில் இருக்கிறோம். அதனால் இப்படிப்பட்ட கருத்து வரவேற்கத்தக்க கருத்தாக இருக்கிறது. அது சட்ட வடிவத்தில் வந்தாலும் சரி, வேறு எந்த ரூபத்தில் செய்தாலும் சரி, அதை உரிய வகையில் செய்வார்கள் என்று கருதுகிறேன்.

இந்தச் சமயத்திலே, ஒரு விஷயத்தை தன்னிலை விளக்கமாகவும், என் கட்சி நிலை விளக்கமாகவும் குறிப்பிட விரும்புகிறேன். என் கட்சியைப் பொறுத்தவரையில், இந்தச் சட்ட மன்றத்திலே பெறும் சம்பளம், படி, தனிப்பட்ட எம். எல். ஏ. யைச் சேர்ந்தது அல்ல. தனிப்பட்ட யாரும் அதை எடுத்துக்கொள்ள இயலாது. அது இயக்கத்தைச் சார்ந்தது. இயக்கம் பொறுப்பேற்கிறது. அவரை நிர்வகிக்க. குறிப்பிட்ட சட்ட, மன்ற உறுப்பினரானாலும், அமைச்சரானாலும், இயக்கத்திற்குக் கட்டுப்பட்டு இயக்கத்தின் கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர்கள். தான் பெறும் பணத்தை இயக்கத்திடம் தந்து விட்டு, பிறகு அதிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். இது இந்தியா முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. அமைச்சராக இருந்தாலும் சரி, வேறு சாதாரண முழு நேர ஊழியராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு என்ன சம்பளம் இருக்க வேண்டும் என்று கட்சி முடிவு செய்ய வேண்டும் என்ற நியதியைப் பின்பற்றுகிறோம். மேற்கொண்ட தொகையை வைத்துக் கொள்ள முடியாது. அது, முதல் அமைச்சராக இருந்தாலும், வேறு சாதாரண கட்சி உறுப்பினராக இருந்தாலும், அதில் கறாராக அமல் நடத்தி, கொள்கை, கட்டுப்பாட்டை நாங்கள் நிலைநாட்டி வருகிறோம். அந்தக் கட்டுப்பாட்டிற்கு, அந்த நிலைமைகளுக்கு ஒப்புக் கொள்ள வில்லை என்றால், கட்சியிலிருந்து விலகிவிடுவார்கள்.



என்னைப் பொறுத்தவரையில், வேதனை மிக்க நிகழ்ச்சி ஒன்று இந்த சட்ட மன்றத்திலே ஏற்பட்டது. ஏற்கெனவே, ரெவின்யூ மானியத்தின்மீது விவாதம் நடந்தது. அப்பொழுது வரிச நாட்டு, நிலக்கிழார்கள் நிலத்திற்குப் பட்டா பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. ஒரு தவறான விவரத்தை வேளாண்மைத் துறை அமைச்சர் தந்து, அந்தத் தகவலை, முதல் அமைச்சரிடம் கொடுத்து, கம்யூனிஸ்ட், மார்க்ஸிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு 50 ஏக்கர் நிலத்திற்குப் பட்டா போட்டிருக்கிறது, என்று முதல் அமைச்சர் மூலமாகக் கேட்கப்பட்டது. நான் மிகவும் வருத்தமும் வேதனையும் பட வேண்டிய நிலை இருந்தது. என் கட்சியில் நான் அகில மத்தியக் குழுவில் உறுப்பினனாக இருக்கிறேன். 25 ஆண்டுகளாக முழு நேர ஊழியராக வேலை செய்து வருகிறேன். என் கட்சியில் லேசான சந்தேகம் இருந்தாலும், எந்தப் பொறுப்பான இடத்திலும், கீழ் மட்டக் கமிட்டியிலும் கூட அங்கம் வகிக்க முடியாது. இவ்வளவு சோதனைகளையும் தாண்டிய பிறகுதான், மாநில மத்தியக் குழுக்களில் பொறுப்புக்குப் போக முடியும். அப்படியிருக்கும்போது, இப்படிப்பட்ட கேள்வியை இந்தச் சட்ட மன்றத்திலே கிளப்பியது. நான் உண்மைநிலையைக் கூறி, மறுக்க வேண்டியிருந்தது, ஒரு வருந்தத்தக்க நிகழ்ச்சியாகும். இன்னொன்றையும் நான் குறிப்பிடுகிறேன். என் தொகுதியில், எனக்கும் ஒரு கார் அன்பளிப்பாகத் தந்தார்கள், (குறுக்கீடு) எல்லாவற்றையும் விளக்கவேண்டும் என்று கருதுகிறேன். அது என்னுடைய கார் இல்லை : நான் இஷ்டப்படி பயன்படுத்த முடியாது. அந்தக் கார் என் பெயரில்கூட பதிவாகவில்லை. திண்டுக்கல் நகர் கட்சிச் செயலாளர் பெயரில் இருக்கிறது. அது இயக்கத்திற்குப் பயன்பட வேண்டும் என்கிற நோக்கத்தைக் கொண்டு அப்படிச் செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட கறார் நிலைகளை மேற்கொள்ளவில்லை என்றால், பொது வாழ்வில் நமக்கே சங்கடங்கள் பல ஏற்படும். ஆகவேதான், சட்டமன்ற உறுப்பினர்களானாலும், நாடாளுமன்ற உறுப்பினரானாலும், அமைச்சராக இருந்தாலும், இப்படிப்பட்ட கறார் கட்டுப்பாட்டை அனுசரித்து, எவ்வளவு சேற்றை வாரி வீசினாலும், நம்மீது ஒட்டிக்கொள்ளாத வகையில் நடந்துக்கொள்ளுகிறோம். ஆகவேதான், இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, குறிப்பிட விரும்புகிறேன். திரும்பத் திரும்பக் கம்பெனிகள் டொனேஷன் மூலமாகப் பணங்களைக் கொடுத்துவிட்டு, பெரு முதலாளிகள் நாட்டையும் அரசுகளையும் ஆட்டிப் படைக்க முடிகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது பார்த்தால், கோடிக்கணக்கான ரூபாய்களைக் காங்கிரஸ் கட்சிக்குத் தருகிறார்கள் பெரும் பெரும் முதலாளிகள் ; லட்சக்கணக்கான ரூபாய்களை சுதந்திராக் கட்சிக்குக் கொடுக்கிறார்கள். விவரங்களையெல்லாம் நாடாளுமன்றத்திலே தந்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் தொல்லையாக இருந்தால், மாற்றும் நிலை இருக்கிறது. அதனால்தான், கீழ் மட்டத்திலிருந்தே பரிசுத்தமாக வைக்க வேண்டும் என்கிற நிலை ஏற்படுகிறது. நல்ல முறையில் தயக்கமின்றி விளக்கங்கள் கொடுக்கும் அளவில், அரசியல் இயக்கங்கள் இருந்தால்தான் நாட்டுக்கு நல்லது. மக்களுக்கு உபதேசம் செய்வதற்கு முன்னால், எது சுத்தம், எது அசுத்தம் என்று பொதுவாழ்வில் வகைப்படுத்தவில்லை என்றால், நமக்கு மதிப்பு இருக்காது. மக்களின் ஊழியர்களாகவும், தலைவர்களாகவும் வந்திருக்கும் நாம், அந்தத் துறையில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுது தான் நம்மீது சேற்றைத் தெளித்தாலும் அது ஒட்டாத நிலையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி ஏற்படுத்திக் கொள்வது அவசியம், அவ்வாறு செய்யும்போது, அரசியல் கருத்துக்கள் தனிப்பட்ட பிரச்சாரத்திற்கு எடுபடாமல், அரசியலில், இந்த நாட்டுப் பொருளாதாரம் எப்படி அமைய வேண்டும், உற்பத்திப் பெருக்கம் எப்படி எப்படி அமைக்கப்பட வேண்டும், உற்பத்தியான சரக்குக்கள் எந்த எந்த வகைகளில் வினியோகம் செய்யப்படவேண்டும் என்கிற உண்மையான பொருளாதாரத் தத்துவங்கள் பற்றிய அரசியல் விவாதங்கள் நடக்கவும் வழி ஏற்படும். அந்த முறையில் தான் நாட்டு மக்கள் வளம். பெறுவதும் சாத்தியமாக இருக்கும்.

அதிகமாக தனிப்பட்ட முறையில் குணக்கேடுகள், ஒழுக்கக் கேடுகள் இவைகளே பிரசாரத்தில் இடம் பெற்று, எங்கே பார்த்தாலும், அரசியல் மேடையிலே உட்கார்ந்து கேட்க முடியாத நிலைதான் ஏற்பட்டு வருகிறது. இதையெல்லாம் தவிர்க்க, நண்பர் மதிப்பிற்குரிய நல்லசிவம் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தின் பின்னால் இருக்கக் கூடிய கருத்தை, அது மசோதா மூலமாகவோ அல்லது தீர்மானம் மூலமாகவோ, ஏற்று சரியான ஏற்பாட்டைச் செய்து கொள்வது மிக மிக அவசியமானது. ஆனால், நமக்குத் தெரியும், சட்டம் எப்படிச் செய்தாலும், சட்டங்களை என்னென்ன வழிகளில் உடைக்கலாம் என்பதை நாட்டில் புரிந்துகொண்டு இருக்கிறார்கள். அப்படிச் செய்யும் பழக்கம் இருக்கிறது. ஆகவே, வெறும் சட்டத்தினால் மட்டும் இதைத் தீர்த்துவிட முடியும் என்று திரு. நல்லசிவம் நம்பமாட்டார்கள் என்று நினைக்கிறேன். கட்சியின் கொள்கை சரியாக அமையவேண்டும், அதில் பற்று இருந்து நிலைநாட்ட வேண்டும், அப்பொழுதுதான் கட்டுப்பாடு இருக்கும், கட்டுப்பாடு இருந்தால்தான் ஒழுக்கம் இருக்கும், ஒழுக்கத்தைக்கடைப்பிடித்தால்தான், வாழ்க்கை சீராகஅமையும். இவை அனைத்தையும் மனதில் கொண்டு, இந்தக் கருத்தை வரவேற்றுப் பேசி, ஏதாவது வகையில் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற பொதுவான கருத்து மன்றத்திலே தெரிவிக்கப்பட்டிருப்பதால், ஏதாவது அளவில் வந்தால் அது இந்தக் நேரத்தில் வெகு உதவியாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்து, இந்த தீர்மானத்தின் மீது கருத்துக்களைத் தெரிவிக்க நேரமளித்த தலைவருக்கு உண்மையான நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. இல. பலராமன் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே இந்த இரண்டாவது தீர்மானமாகிய, "சட்டப்பேரவை அங்கத்தினர்களும், அமைச்சர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து தங்களது சொத்து, வருமானம்—செலவு பற்றிய விவரங்களை வருடாவருடம் சட்டப்பேரவை முன் சமர்ப்பிக்க வேண்டுமென்று இப்பேரவை கருதுகிறது" என்கிற தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய கட்சியின் சார்பாக சில வார்த்தைகள் சொல்ல முற்படுகிறேன். மக்கள் சேவையே மகேசனுக்குச் செய்யும் சேவையாகும் என்ற தத்துவத்தை மனத்தில் நிறுத்தி நாம் பாடுபடவேண்டும். மக்களுக்காக சேவை செய்ய இருக்கின்றோம் என்று ஒரு சத்தியப் பிரமாணத்தை நாம் மேற்கொண்டு அந்த வழிக்குள் காரியங்களைச் செய்து வருகின்றோம். நாம் செய்யும் கடமைகளை ஒவ்வொரு நிலவரத்திலும் சிந்தித்துப் பார்க்கக் கூடியவர்களாக இருக்கிறோம். நாம் செய்யும் காரியம் புனிதமாக இருக்கிறதா, மக்களுக்காக இருக்கிறதா என்று பார்த்துத் தான் காரியம் ஆற்றுகிற நிலையில் உழைத்து வருகிறோம். மன்னர்கள் அரசாண்ட காலத்திலே ஒரு தனிப்பட்ட நபர் நீதியோடும் நேர்மையோடும் ஆண்டான் என்ற நிலைமை இருந்தது என்பது வழிவழியாக வந்த சரித்திரமாகும். இன்று நாம் மக்களுடைய தேவைக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, நாம் நம்முடைய கடமையை ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் பணியாற்ற வந்திருக்கிறோம். நாம் செய்யும் காரியங்களைப் பொறுப்போடு பணியாற்றுகிறோமா என்று யோசித்து அதன் பின்னரே அதில் ஈடுபட வேண்டும். புனிதமான நிலையிலே நாம் போரிட்டதற்குப் பின்னால் நம்முடைய தேசப் பிதா மகாத்மா காந்திஜியின் பின்னால் வந்தவர்களாக நாம் அனைவரும் மிகவும் தெள்ளத் தெளிவாக இருக்க வேண்டும். குறிப்பாக, நாம் சொல், செயல் இவை இரண்டிலும் ஒற்றுமையுடையவர்களாக இருக்க வேண்டும். எதைச் சொல்லுகிறோமோ அதைச் செய்ய வேண்டும். நாம் சீரிய முறையில் புனிதத் தன்மையடையக் கூடிய வகையில் மக்களுக்காகப் பணியாற்றுகிறோமா என்று நம்மை நாமே உன்னிப்பாக கவனிக்க வேண்டும். நாம் இந்த நாட்டில் ஜனநாயக மன்னர்களாக இருக்கிறோம். மன்னர்கள் எவ்வழியோ அவ்வழியே மக்கள் என்று ஒரு பழமொழி சொல்வார்கள். நாம் இந்த நாட்டில் ஜனநாயகத்தின் மன்னர்களாக, நாட்டு மக்களின் பண்பாட்டைச் சீரிய முறையில் வளர்க்கும் செயல் மன்னர்களாக விளங்க வேண்டும்.



குறிப்பாக, பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்மை பல்லாயிரக் கணக்கான கண்கள் கண்காணித்துக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நமக்கு இரண்டு கண்கள் தான். ஆனால் நம்மைச் சுற்றிலும் பல்லாயிரக்கணக்கான கண்கள் நம்மையே கவனித்துக் கொண்டிருக்கின்றன. அந்தக் கண்களுக்கு நாம் பதில் சொல்லியாக வேண்டும். நாம் என்னென்ன தவறுகளைச் செய்கிறோம், நம்மிடத்தில் என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதைக் பொது மக்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள். பொதுமக்களின் கண்களுக்கு அஞ்சி நடக்கும் நிலையில் இருக்கிறோம். பொது வாழ்வில் இருக்கக் கூடியவர்கள் அதிருப்தியான நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலைமையை மேலும் வளரவிடக் கூடாது. ஆகவே தான் இதைத் தீர்மான ரூபமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். பொது வாழ்வில் இருக்கக்கூடியவர்கள் புனிதமான செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற எண்ணத்தை வளர்ப்பதற்கு இது நல்ல வாய்ப்பாக அமையும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

பொது வாழ்வில், சுதந்திரம் வாங்குவதற்கு முன்னால் நாம் நேருஜி போன்றவர்களின் வழியைப் பின்பற்றி வந்திருக்கிறோம். அதற்கு "நேர் வழி" என்றுகூடச் சொல்வார்கள். நேருஜி போன்ற தலைவர்கள் தங்களுடைய சொத்துக்களை தேசத்திற்காகவும், தேச மக்களுக்காகவும் அர்ப்பணித்தார்கள். தங்களுடைய சுகதுக்கங்களை மறந்து நாட்டுக்காக நாட்டு மக்களுக்காக உழைத்தார்கள். அதை இந்த நாடு இருக்கும் வரையிலும், இந்த உலகம் உள்ளவரைக்கும் யாரும மறக்கமாட்டார்கள். அந்த அளவுக்கு நல்லதொரு கோட்பாட்டை வகுத்துத் தந்தார்கள். நாம் மக்களை வேறு திசையில் திருப்பி நம்முடைய புனிதத் தன்மைக்கு இழுக்கை ஏற்படுத்திவிடக்கூடாது, மாசு கற்பிக்கக் கூடாது. நாம் இன்னின்ன காரியங்களை இன்னின்னவாறு அனுஷ்டிக்க வேண்டுமென்பதற்கு ஒரு நல்ல வழியை வகுத்துத் தந்திருக்கிறார்கள் நம் தலைவர்கள்.

அடுத்தபடியாக, பத்திரிகைகளின் வாயிலாகப் பல செய்திகள், வருகின்றன. ஒருசிலர் ஒன்றிரண்டு கார்களை வாங்கினார்கள் என்று செய்திகள் வருகின்றன. இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எ. பாலசுப்பிரமணியத்தைப் பற்றி அவர் 50 எக்கர் நிலம் வாங்கினார் என்று மறைமுகமாகக் கூறப்பட்டது. பொது வாழ்வில் ஈடுபடுவோர்களுக்கு இது போன்ற மாசுகள் ஏற்படக்கூடாது. தன் வாழ்வை அழித்துக் கொண்டு பிறருக்காக வாழ வேண்டும் என்பதே பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளோருக்கு உள்ள மணிமொழி. பொது வாழ்க்கை என்பது மெழுகு வர்த்தியைப் போன்றது. தன்னையே அழித்துக் கொண்டு பிறருக்குப் பிரகாசத்தைத் தரும் மெழுகுவர்த்தியாக இருந்தால் நாடு நல்ல முறையில் செயல்படும். நாட்டு மக்கள் நல்வாழ்வு பெறுவார்கள். பொது வாழ்வும் நல்ல முறையில் இயங்கும்.

பொது வாழ்வில் இருக்கக்கூடிய அதிகாரிகளிடம் ஒரு சிறிய காரியத்திற்காகச் சென்றாலும் பணம் வாங்குகிறார்கள் என்ற எண்ணம் பரவலாக பொதுமக்களிடையே பேசப்பட்டு வருகிறது. பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கும் சட்டமன்ற அங்கத்தினர்களும் இதைக் கூறுகிறார்கள். இந்த நிலையைப் போக்க அரசினர் கண்டிப்பான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தச் சர்க்கார்—மாநில சர்க்கார்—செய்ய முடியாவிட்டாலும் மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்யலாம். ஒரு அதிகாரி லஞ்சம் வாங்கினார் என்றால் அவரை எத்தனையோ முறைகளில் கண்டிக்க, தண்டனை கொடுக்க ஆயத்தமாக இருக்கிறார்கள். பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கும் ஒருவர், ஒரு காரியத்தை தான் சாதித்துத் தருவதாகச் சொல்லி பணம் வாங்கினாலும், அதிகாரிக்குக் கொடுக்கப்படும் தண்டனை அவருக்கும் கொடுக்கப்பட வேண்டும். பொது வாழ்வில் ஈடுபடுபவர்களுக்கு இத்தகைய தண்டனை தேவையா என்ற கேள்வி எழலாம். ஆனால் குற்றம் செய்வதைப் பொறுத்துத்தான் தண்டனை வழங்கப்பட வேண்டும். ஆகவே, அப்படிப்பட்ட சட்டமே இயற்ற வேண்டுமென்ற நிலைமை ஏற்படுகிறது. நாம் ஒழுங்காக நடந்தால் அதிகாரிகளும் ஒழுங்காக நடந்துகொள்வார்கள்.

பொதுமக்களும் செம்மையாக நடந்துகொள்வார்கள். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் வருடா வருடம் தங்களுடைய வருமானம்-செலவு பற்றிய விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை இதிலே எழுப்பப்பட்டிருக்கிறது. இது நியாயமான கோரிக்கை. பொதுவாழ்வில் இருக்கக் கூடியவர்கள் இதை அனுஷ்டித்தால் பொது மக்களுடைய நல்லெண்ணத்தையும், பொது மக்களின் நல்ல அபிப்பிராயத்தையும் பெறுவார்கள் என்பதோடு நாட்டுக்குச் சேவை செய்யக்கூடியவர்கள் இருக்கின்றார்கள் என்று போற்றுவார்கள். ஆகவே, இந்தத் தீர்மானத்தை எங்களுடைய கட்சியின் சார்பாக வரவேற்று ஆதரிக்கிறேன் என்று கூறி, வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

***திரு. எம். சுரேந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை அங்கத்தினர்கள், அமைச்சர்கள் ஆகியோர்களின் வருமானம்-செலவு பற்றிய விவரங்களைச் சட்டப் பேரவை முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். இது ஒழுக்க நியதி சம்பந்தப்பட்ட ஒரு தீர்மானம். இன்றைக்கு ஜனநாயகக் கோட்பாட்டுகளைக் கடைபிடிக்கின்ற ஒரு அரசியலை இந்த தேசம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இம்மாதிரி ஒப்புக கொள்வதற்கு முன்பிருந்தே ஒழுக்க நியதிகள் மதச் சார்புகளிலே போதிக்கப்பட்டு வந்தன. அந்தந்த மதங்கள், அந்தந்த மதத்தவர்களிடையே நல்ல எண்ணம், நல்லொழுக்கம், கடமை, பொறுப்பு போன்ற நல்ல நியதிகளை போதித்து வந்தன. அரசியல் கட்சிகள் வந்த பிறகு அவை யெல்லாம் சீர்குலைய ஆரம்பித்தன. முதன் முதலில் தேசத்திலே இருந்த ஆதிக்கக்காரர்களை விரட்ட வேண்டுமென்ற எண்ணத்தினால் ஒரு இயக்கம் நடந்தது. அந்த ஆதிக்கக்காரர்களை எதிர்ப்பதற்குத் தகுதியும் சக்தியும் வேண்டுமென்றால் இயக்கத்தில் உள்ளவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும், தியாகம் புரியும் மனப்பான்மையுடையவர்களாகவும், எந்தக் கஷ்டம் வந்தாலும் சகித்துக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற நிலை தொடர்ந்து இருந்து வந்தது. இன்றைக்கு ஒழுக்கம் சம்பந்தமான சமுதாய நீதிகள் சம்பந்தமான எண்ணங்கள் சித்தாந்தங்கள் இவைகள் எல்லாம் மாறுபட்டு வருகின்றன. இரயில், மின்சாரம், தந்தி, தபால், சினிமா, தொழிற்சாலைகள் இவைகள் எல்லாம் வந்ததற்குப் பின்னால் அன்றைக்கு இருந்த நீதிகள் மாறுபடுகின்றன. இதனால் இன்றைக்கு ஒரு ஒழுக்கம். நீதியைப் பற்றி ஓர் வழிமுறை ஏற்பட வேண்டும், ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஜனநாயக அமைப்பில் மக்கள் நேர்மையுள்ளவர்களாக, நீதி புத்தி ஒழுக்கம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டுமானால் முதற்படியாக அரசியல்வாதிகளாகிய நாம் வழிகாட்டியாக வேண்டும். ஜனங்கள் என்று சொல்லுகிறபோது பெருவாரியானவர்கள் சாதாரணமானவர்கள். அவர்களுடைய சராசரி வருமானம் மிகக் குறைவானது என்பதைப் புள்ளி விவரங்களே கூறுகிறது. சாதாரணமானவர்களுடைய பிரதிநிதிகளாக உறுப்பினர்கள், அமைச்சர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு அவர்களிடம் ஒரு கருத்தை எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு வழி காட்டியாக, தலைமை தாங்கி நாம் அழைத்துப் போக வேண்டுமென்றால் நாமே சில சட்டதிட்டங்களையும், சம்பிரதாயங்களையும், பழக்க வழக்கங்களையும் உருவாக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இன்றைக்குப் பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் மீது சுமத்தப்படுகிற சாதாரண குற்றச்சாட்டு அவர்கள் அங்கே பணம் வாங்கினார்கள், இங்கே பணம் வாங்கினார்கள் என்பது தான். இது ஒன்றுதான் பெரிய அளவிற்கு இன்றைக்கு அவர்கள் மீது களங்கம் சுமத்தப்படுகிறது. இதன் காரணமாகவே அவர்கள் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரம் இல்லாமல் போய்விடுகிறார்கள். பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கக்கூடிய நாம் என்றைக்கும் பொது மக்களுடைய நம்பிக்கையைப் பெற்றவர்களாக இருக்க வேண்டியிருக்கிறது. நாம் நல்ல காரியங்களை செய்தால் மட்டும் போதாது.





அதை மக்கள் புரியும்படி வெளிப்படுத்தும் காரியத்தையும் செய்ய வேண்டும். காரணம் இன்றைக்குத் தேர்தல் என்றால் இருபது, முப்பது செலவழிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இருபது, முப்பது செலவழித்து வருகிறவர்கள் தங்கள் பதவிக் காலத்திற்குள் அந்தப் பணத்தை திரும்ப ஈட்டாமலா போவார்கள் என்கிற கருத்து மக்களிடத்திருக்கிறது. அதுவும் சாதாரண மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறபோது, இவர்களிடம் பணம் ஏது, பணம் இல்லாதவர்களாகையால் எப்படியும் பணத்தைச் சம்பாதிக்கவே பார்ப்பார்கள் என்கிற மனநிலை வேறு உருவாகிறது. இந்த உணர்வை மாற்ற வேண்டும். அதை மாற்றுவதற்கு அங்கங்கே பிரசங்கம் செய்வது மட்டும் போதாது. ஜனங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணமே; சென்ற அரசு ஒரு பழக்க வழக்கத்தை, சம்பிரதாயத்தை ஏற்படுத்தி விட்டுச் சென்றிருப்பதே காரணமாகும். நாட்டின் சுதந்திரத்திற்காகத் தியாகம் செய்து, நல்லவர்களாக இருந்தாலும் சரி அவர்களைவிட்டு, புதிதாகப் பணம் சேகரிக்கிறவர்களை காங்கிரஸ் ஸ்தாபனத்திற்குள்ளே கொண்டு வந்து விட்டு, பதுக்கல்காரர்களை, கள்ளமார்க்கெட்காரர்களை, பெரும் முதலாளிகளை, சுரண்டல்காரர்களை உண்டாக்கி விட்டதன் காரணத்தினால் தான் இன்றைக்கு ஜனங்கள் எல்லோரையும் சந்தேகப்பட ஆரம்பித்து விட்டார்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும் அதையேதான் செய்யும் என்கிற உணர்வு ஏற்பட்டுவிட்டது. அதை மாற்ற வேண்டியது முக்கியமாகிறது. அதுவும் இன்றைக்குப் பிரதான ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் அதைக் கட்டாயம் செய்ய வேண்டும். அதில் இருக்கிற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எல்லோருமே சாதாரண மனிதர்களாக இருந்து வந்திருக்கிறவர்கள். அவர்கள் சாதாரண ஜனங்களுடைய பிரதிநிதிகள் என்று சொல்லும் போது இன்னும் அதிகமாகப் பணத்திற்கு ஆசைப்படுபவர்களாக இருப்பார்கள் என்கிற பிரச்சாரம் நடைபெறுகிறது. மற்றவர்கள் பரம்பரைப் பணக்காரர்கள். பணத்தைச் சேகரித்துக்கொள்ள வேண்டுமென்ற விருப்பம் அவர்களுக்கு இருக்காது. ஏழைகளாக இருந்து வந்திருக்கிற காரணத்தினால் பணத்தைச் சேர்க்கவே விரும்புவார்கள் என்று எண்ண வாய்ப்பு இருக்கிறது. அப்படி வாய்ப்பிருந்தாலும் கூட செயலில் அப்படி இல்லை என்பதை முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையில் பண்பாட்டோடு, நீதியோடு சொல்லி வருகிறார்கள். ஆயினும் எவ்விதக் களங்கமும் பொது வாழ்வில் ஈட்டுபட்டிருப்பவர்கள் மீது ஏற்படுத்தப்படாமல் இருக்க திரு. நல்லசிவம் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் நல்லதொரு சட்டத்தையே உருவாக்க வேண்டும். அதில் சங்கடங்கள் இருக்கலாம்.

இன்றைக்கு ஒரு மாநிலத்திலே கம்யூனிஸ்டு ஆட்சி நடக்கிறது. இன்னொன்றில் சுதந்திராக் கட்சி ஆட்சி நடக்கிறது. இன்னொன்றில் காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. இங்கே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடக்கிறது. இந்தத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மற்றவைகளை எல்லாம் போலவே இதிலும் மற்ற மாநிலத்திற்கு ஒரு வழிகாட்டியாக முன்வர வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். முன்னாலிருந்த அமைச்சர்களைவிட சம்பளத்தை குறைவாக இவர்கள் வாங்குகிறார்கள் இப்படி மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக இருப்பது கண்டு பெருமை அடைகிறோம். ஒரு படி அரிசி இரண்டு இடங்களில் போடுகிறார்கள். அது சரியா இல்லையா என்பது வேறு விஷயம். இதைப் பார்த்து மற்ற மாநிலத்தில் உள்ளவர்களும், "அங்கே ரூபாய்க்குப் படி அரிசி போடுகிறார்களே, இங்கும் போடுங்கள்" என்று கேட்க வழியேற்பட்டிருக்கிறது. இப்படி மற்றவற்றில் முன் உதாரணமாக இருப்பது போல உறுப்பினர்கள், அமைச்சர்கள் எல்லோரும் கணக்குக் கொடுப்பது என்பதிலும் வழிகாட்டியாக விளங்க வேண்டும். ஆகவேதான் இந்தத் தீர்மானத்தை எனது கட்சி முழுமூச்சாக வரவேற்கிறது.

அதுமட்டுமல்ல. இன்னொன்றையும்கூட என் கட்சி வலியுறுத்தும். ஒரு தொகுதியில் ஒரு சட்டசபை உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அந்தத் தொகுதி மக்களுக்கு விரோதமான காரியங்களில் அவர்கள் ஈடுபட்டாரானால் அவரைத் திரும்பப் பெறுவதற்கான வழிவகைகளும் இருக்க வேண்டும்

[திரு. எம். சுரேந்திரன்] [1968 ஆகஸ்ட் 29

அப்போதுதான் ஜனங்கள் விரும்புகிற பிரதிநிதியாக ஒருவர் இருக்க முடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தவருக நடக்கிற ஒருவரை விதியே என்று "*ஜனங்கள் வைத்திருப்பது ஜனநாயகமல்ல, பண்பாடல்ல ஜனநாயகக் கோட்பாடும் அல்ல. ஆகவே எந்த நேரத்திலும் அந்த உறுப்பினரைத் திரும்பப் பெற மக்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்பதையும் என் கட்சி வலியுறுத்துகிறது. அதற்கு ஓர் படியாக, ஓர் எடுத்துக்காட்டாக, ஓர் உதாரணமாக இப்படி ஒரு தீர்மானம் சபையில் வந்திருக்க, அதன் அடிப்படையில் சட்டம் உருவாக வேண்டும். மற்றவர்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும் என்கிற காரணத்தினுல் நானும், எனது கட்சியும் சபைமுன் உள்ள தீர்மானத்தை ஏற்றுக்கொள்கிறோம். இதை எல்லோரும் முழு மனதுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மு. ப. 11-00 **திரு. என். துரைபாண்டியன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, திரு. நல்லசிவன் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னதாக சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களில் முக்கியமான தலைவர் மகாத்மா காந்திஜி அவர்கள்தான். காந்திஜி அவர்களுக்குப் பின்னுல் நம்முடைய நாட்டின் தலைவராக இருந்த மதிப்பிற்குரிய தலைவர் நேருஜி அவர்கள் நாட்டின் பிரதமராக இருந்தார். அவருக்குப் பின் மறைந்து போன லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் தனக்கென்று ஒரு குடிசைகூட இல்லாமல் வாழ்ந்தார். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். அந்தக் கட்சியின் சார்பாகத்தான் நாங்கள் எல்லாம் இந்த மன்றத்திலே இருக்கிறோம். அப்பேர்ப்பட்ட பரம்பரையில் வந்த நாங்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்காமல் இருக்க முடியாது. ஆகவேதான் நாங்கள் இதை ஆதரிக்கிறோம்.

எனக்கு முன்னுல் பேசிய நண்பர், கள்ளமார்க்கெட்காரர்களையும், பணக்காரர்களையும் கட்சியில் சேர்த்ததன் காரணமாகத்தான் கட்சிக்கு இழுக்கு வந்தது, பொதுமக்கள் மத்தியிலே அரசியல்வாதிகள் என்றுல் கள்ள மார்கெட்காரர்கள் பணம் சம்பாதிக்கிறவர்கள் என்றெல்லாம் எண்ணுகிருர்கள் என்று பேசினுர்கள். அது ஓரளவுக்கு உண்மைதான். அதை மறைக்கமுடியாது. இன்று ஆளுங் கட்சியாக இருக்கிறவர்களில் சிறை சென்றவர்கள் இருக்கிருர்கள். காங்கிரஸ் அட்சி பிப்ரவரி காலத்திலே வந்த மாதிரி தி.மு.க.வும் பிப்ரவரி மாதத்திலேதான் வந்தார்கள், ஆகவே அவர்களிலும் அப்படிப்பட்டவர்கள் இருக்கத்தான் செய்கிருர்கள். அந்த வகையிலே இந்தத் தீர்மானத்தை எல்லோருமே ஆதரிக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிச் சட்டமாக உருவாக்கிய போதிலும் அது பயனுள்ளதாக இருக்குமா என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வருடந்தோறும் கணக்கைச் சமர்ப்பிக்கும் பொழுது மனசாட்சிக்குப் பயந்து கணக்கை உண்மையாகச் சென்னுல்தான் சட்டம் பயனுள்ளதாக இருக்கும். சட்டப்படி தேர்தலில் நிற்பதற்கு என்ன செலவாயிற்று என்பதை அறிவிக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. சட்டப்படி கொடுக்கப்பட்டுள்ள வரம்பிற்குள்ளே செலவழித்துத்தான் தேர்தலில் நின்று இந்த மன்றத்திற்கு வந்தார்களா என்றுல் ஒருவர் கூட அப்படி வந்திருக்கிருர் . என்று சொல்ல முடியாது. பல லட்சங்களைச் செலவழித்துதான் இந்த மன்றத்திற்கு வருகிறோம். ஆனுல் சர்க்காருக்கு கள்ளக் கணக்குகளை எழுதி அனுப்புகிறோம். சட்டத்திலே கணக்கைக் காட்ட வேண்டுமென்று இருந்தாலும் கள்ளக் கணக்கைக் காட்டுவதன் காரணமாக சட்டம் பயனற்றதாக ஆகிவிடுகிறது.

**திரு. ந. வீராசாமி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், தலைவர் அவர்களே, இங்கே பொறுப்புள்ள அவையிலே வந்திருக்கிற உறுப்பினர்கள் கள்ளக் கணக்கு எழுதுகிருர்கள் என்று சொல்வது ஒழுங்கு தஎ என்பதை அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1968 ஆகஸ்ட் 29]

**திரு என். துரைபாண்டியன் :** அடுத்தபடியாக, சட்டமன்ற அங்கத்தினர்கள், அமைச்சர்கள் மட்டும்தான் கணக்குக் காட்ட வேண்டுமென்று இருக்கிறது. அதற்கு நான் ஒரு திருத்தம் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு முறையைப் பற்றி இன்றைய தினம் ஆளுங்கட்சியிலிருப்பவர்கள் அன்று கூட்டுறவு என்றுலே கொள்ளைக் கூட்டம் என்று பேசி வந்தார்கள். ஆகவே கூட்டுறவுத் தலைவர்கள், டைரக்டர்கள் ஆக இருப்பவர்கள் அவர்களுடைய கணக்கையும் காட்டி இந்த மன்றத்திற்கு அனுப்புவார்களானுல் சாலச் சிறந்ததாக இருக்கும். அடுத்தபடியாக ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, அந்தக் கட்சிகளின் செயலாளர்கள், காரியதரிசிகள், மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் இவர்களும் அவர்களது கணக்குகளை அனுப்பினுல், குறிப்பாக இந்த மாமன்றத்திற்கு அனுப்பினுல் மக்கள் மத்தியிலே எந்தவிதமான துர்வார்த்தைகளும், இருக்காது. சீர்குலைவும் நடக்காமல் இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுமக்கள் என்ன நினைக்கிருர்கள் என்றுல் விலைவாசிகள் ஏறியிருப்பதன் காரணமாக 4, 5 பிள்ளைகளையுடையவர்கள் கிராமத்திலே வாழ்ந்தாலும்கூட குறைந்தது மாதத்திற்கு 500 ரூபாயாவது வேண்டியிருக்கிறது. எந்த நிலமும் இல்லாமல், எந்தவிதமான விவசாயமும் இல்லாமல், எந்தவிதமான தொழிலும் இல்லாமல், எந்தவிதமான உத்தியோகமும் இல்லாமல் அரசியல்வாதியாக இருந்து கொண்டே இந்த நாட்டில் பல பல சுகபோகங்களை அனுபவிக்கிருர்கள். பிள்ளை குட்டிகளை வாழவைக்கிருர்கள், அவர்களுக்கு எங்கிருந்து பணம் வருகிறது, யார் யார் கொடுத்தார்கள், யார் யார் வாங்கினுர்கள், இவற்றை யெல்லாம் ருசுப்படுத்த முடியாமல் இருந்தாலும்கூட யாருடைய தலையிலே மிளகாய் அரைக்கிருர்களோ என்ற அபிப்பிராயம் ஜனங்களின் மத்தியிலே உருவாகி வருகிறது. இந்த அரசு, அமைச்சர்களுடையவும், சட்டமன்ற உறுப்பினர்களுடையவும் சொத்துக்களையெல்லாம் சி.ஐ.டி. மூலமாக மன்றத்திற்கு அனுப்பினுல் நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக, கார்கள் பரிசு கொடுத்திருக்கிருர்கள். அது வரவேற்கத் தக்கது. ஆனுல் அன்பளிப்பு என்று சொல்கிருர்கள், உண்மையிலேயே கார் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் அனுபவப் பூர்வமாகச் சொல்வது கார் என்றுல் மாதத்திற்கு மெயின்டனன்ஸ்க்காக 500 ரூபாயாவது வேண்டும் குறைந்த பட்சம் என்று சொல்கிருர்கள். ஆனுல் இங்கே கொடுக்கக்கூடிய சம்பளம் 250 ரூபாய்தான். இவர்கள் கார் வைத்திருக்கிருர்கள் என்றுல் அதற்குச் செலவு செய்வதற்காக பூர்வீகமாக ஏதாவது இருக்கிறதா என்பதையும் கணக்குக் காட்ட வேண்டும். காரை மட்டும் கொடுக்கிருர்கள். சம்பளம் குறைத்து வாங்குகிறோம் என்று சொல்லிக்கொள்கிருர்கள். மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் வாழ வசதிகள் அவர்களுடைய நண்பர்கள் கொடுப்பார்கள் என்று சொன்னுர்கள். லஞ்சத்தைக் கொடுத்து அன்பளிப்பு என்று சொல்வார்கள். ஆகவே அன்பளிப்பு கொடுக்கக் கூடாது என்று சட்டம் ஆக்கினுல் நல்லது என்று நினைக்கிறேன்.

எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி மக்கள் மத்தியிலே அவர்கள் என்ன செய்கிருர்கள் என்பதைக் கண்காணிக்க வேண்டும். விஜிலன்ஸ் இருக்கிறது, அவர்கள் உத்தியோகம் பார்க்கிறவர்களை மட்டும் கண்டுபிடித்து கேஸ் போடுகிருர்கள். என்னுடைய அபிப்ராயம் என்ன வென்றுல் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், மந்திரிகளாக இருந்தாலும் விஜிலன்ஸ் கண்காணித்து அவர்கள் மேலும் கேஸ் போடலாம் என்று இந்தச் சபையிலே தீர்மானம் போட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, திரு. நல்லசிவன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச நினைக்கிறேன். பொதுவாக இந்த ஜனநாயக நாட்டிலே

சுதந்திரம் உச்சக் கட்டத்திலே இருக்கிறது. பேச்சுச் சுதந்திரமும் உச்சக் கட்டத்திலே இருக்கிறது. பத்திரிகைச் சுதந்திரமும் உச்சக் கட்டத்திலே இருக்கிறது. ஜனநாயகத்தினுடைய கிளைமாக்ஸ் என்று சொல்வார்கள். அதைப் போல கொடுக்கப்பட்டிருக்கிற உரிமைகளைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு சில பத்திரிகைகளும், பேச்சாளர்களும் வெளியிடுகின்றவற்றைக் கேட்டுக் கொண்டிருக்கின்ற மக்களுக்கே குழப்பம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது என்பதை நாம் எல்லாம் அறிவோம். பாராளுமன்றத்தை எடுத்துக் கொண்டாலும் ஒரே விவாதம். எந்தக் கூட்டத்தை எடுத்துக் கொண்டாலும், அமைச்சர்கள் மீதோ, அல்லது பொறுப்பில் உள்ளவர்களைப் பற்றியோ தவறுகள் நடக்கின்றன. சந்தேகங்கள் இருக்கின்றன என்று சொல்லக்கூடிய நிலைமைகளைப் பார்க்கிறோம். இந்த நிலைமையிலே நம்மைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்ற பிரநிதிகளாக இருக்கின்றவர்கள் மக்களிடத்திலே நல்ல நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

இதை யாரும் மறுக்க முடியாது. அந்த நிலையிலே இந்தப் பதவியை ஏற்றுக்கொண்டவுடனே நம்முடைய சொத்துக் கணக்கை உடனடியாகத் தெரிவித்து அதை கெஜட்டில் பப்ளிஷ் செய்தால் கூட நல்லதுதான். ஒவ்வொரு வருஷமும் கணக்குக் காட்ட வேண்டும். எந்த வகையில் சம்பாதித்தார்கள் என்பதற்கும் கணக்குக் கொடுக்க வேண்டுமென்பது மிக முக்கியமான விஷயமாகும். அதைக் கொடுத்துவிட்டால் மக்களிடத்திலே போய் அவர்களைக் குழப்ப முடியாது, எந்த ஒரு நபரையும் சந்தேகிக்கக்கூடிய நிலை இருக்காது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. பாராளுமன்றத்தில் பார்க்கிறோம்—லோப்பால் என்று சொல்லி அமைச்சர்களும், மெம்பர்களும், அதிகாரிகளும் தவறு செய்தால் அவர்கள் விசாரிக்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆட்சியின் அன்றாடப் பொறுப்பில் முழுக் கவனத்தையும் செலுத்த முடியாதவாறு இந்தப் பிரச்சினையிலே நாட்டிலே எங்கு பார்த்தாலும் பேசப்படுகிற நிலை இருந்துவருகிறது. உண்மையாகப் பார்க்கப் போனால் அரசியல் மேடைகளிலே, நாம் நாட்டுமக்களுக்கு என்ன செய்யப் போகிறோம், நாட்டுமக்களின் வாழ்க்கைத் தரத்தை எந்த வகையில் உயர்த்தப்போகிறோம், அதற்கு என்னென்ன திட்டங்களைத் தீட்டப் போகிறோம் என்ற பேச்சுக்களையெல்லாம் விட்டு விட்டு, எந்தப் பேச்சாளரும் இன்றையதினம் "அந்த மந்திரி இந்தக் கார் வாங்கினார், இந்த சட்டசபை மெம்பர் இந்தக் கார் வாங்கினார், அவர் அங்கே போன இடத்திலே பத்தாயிரம் ரூபாய் கொடுத்தார்கள், இவருடைய வீட்டில் திடீரென்று பலவிதமான நாற்காலிகளும், பீரோக்களும் வந்தது எப்படி" என்ற முறையிலே அரசாங்க சி.ஐ.டி.களுக்கு மேல், இந்த மாதிரியான சாதாரண சமாசாரங்களைப் பற்றிப் பேசிப்பேசி காலம் தள்ளக்கூடிய நிலை இருக்கிறது. அதற்கு நாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று சொன்னால் நம்முடைய சொத்துக் கணக்குகளை நாமாகவே கொடுத்துவிட்டால தேர்தல் காலத்திலே அதை நிரூபிப்போம், இதை நிரூபிப்போம் என்ற முறையில் ஒருவருடைய கண்ணியத்தைக் குறைக்கக்கூடிய பேச்சுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய நிலை ஏற்படும்.

இன்றைக்கு நமது சட்டதிட்டங்களுக்குள்ளே சேவை செய்யக்கூடிய நிலையில், கூட்டுறவு ஸ்தாபனங்கள் மற்ற வகைகளில் சேவை செய்யக் கூடிய நிலையில் இருக்கிறோம். கூட்டுறவுப் பண்டகசாலைகளில் ஈடுபட்டு வேலை செய்யும்போது மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பொதுவாக ஒரு மருந்துக் கடையை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லும்போது, கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோர்சுக்கு விளம்பரம் அவசியம் செய்யவேண்டும். அப்போதுதான் அது கன்ஸ்யூமர்ஸை அட்ராக்ட் பண்ண முடியும் என்ற கருத்தைச் சொல்லுவார்கள். அடுத்தபடியாக, என்ன சொல்லுவார்கள் என்றால், "இவ்வாறு விளம்பரம் எல்லாம் செய்திருக்க வேண்டிய அவசியம் இல்லை, எதற்காகச் செய்தார்கள், இதில் ஏதோ கொள்ளை லாபம் அடிப்பதற்காகத் தான் செய்கிறார்கள்" என்று கூறுவார்கள். இப்படி



இரண்டு பக்கமும் சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு நேரத்திலும் சந்தேகிக்கக்கூடிய நிலையிலே இன்றைக்கு அரசியல ரொம்ப மோசமான நிலைக்கு ஒருசில தனிப்பட்ட நபர்களால் ஆக்கப்பட்டிருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இந்த நிலைமைகளை அறவே ஒழிக்க வேண்டுமென்று சொன்னால், நல்ல விதத்தில் அமைச்சர்கள், பிரதிநிதிகள் ஆகிய நாம் எல்லோரும் நம்முடைய சொத்துக் கணக்குகளை அவசியம் கொடுத்து அவற்றை கெஜட்டில் பிரசுரிக்கச் செய்ய வேண்டும். இந்த மாதிரியான நிலைமையில் முன்கூட்டியே எடுத்துக் காட்டாக இந்த அமைச்சரவை இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எ. ஒய். எஸ். பரிசுத்த நாடார்: மதிப்பிற்குரிய துணைத்தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரிப்பதுடன் இரண்டொரு வார்த்தைகளையும், சொல்ல ஆசைப்படுகிறேன். அரசியலில் சிறு பிராயத்தில ஈடுபடாவிட்டாலும்கூட, தற்காலத்தில் அரசியல் கட்சிகளின் பல்வேறு தலைவர்களிடத்திலும், அங்கத்தினர்களிடத்திலும் பழகும்படியான வாய்ப்பு ஏற்பட்ட காரணத்தால், பொதுமக்கள் அரசியலில் ஈடுபடுகின்றவர்களைப் பற்றி என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. தேர்தலுக்குப் பிறகு இவர்கள் ஏன் தேர்தலுக்கு நின்று சட்டசபைக்குச் செல்லுகிறார்கள் என்றால் தங்களுடைய சொந்த சவுகரியத்திற்காகத்தான் செல்லுகிறார்கள் என்ற மனப்பான்மை பொதுமக்களிடத்தில் இருப்பது எல்லோருக்கும் தெரியும். அதைப் போக்குதற்கு இதைப் போன்று சொத்துக் கணக்குகளைக் கொடுப்பது அவசியமானது. பொதுமக்கள்தான் அப்படிக் கூறுகிறார்கள் என்று பார்த்தால் நேற்று நடந்த விவாதத்தின்போது நமது அங்கத்தினர்களிலே ஒருவர், மதிப்பிற்குரிய ஆசைத்தம்பி அவர்கள் "காங்கிஸ்காரர்கள் எல்லோரும் நேர்மையற்றவர்கள்" என்று சொன்னார்கள். இவ்வளவு பொறுப்புள்ளவர்களே இப்படிச் சொல்லும்போது, பொதுமக்கள் சொல்லுவதிலே தவறு இல்லை என்று என்னுடைய மனதை சமாதானப்படுத்திக் கொண்டேன். அவர் அவ்வாறு சொல்லுகிறார் என்றால், அவர் எந்தக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பார்க்கிறாரோ அந்த முறையில்தான் தெரியும். "கிளியர் கிளாஸ்" போட்டுப் பார்த்தால் தெளிவாக இருக்கும். "கலர் கிளாஸ்" போட்டுப் பார்த்தால் அப்படித் தான் தெரியும். அவர்களுடைய மனப்பான்மையையொட்டி அவர்கள் பேசியிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, கணக்குக் கொடுப்பது பொதுமக்களிடத்தில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் அளவில் இருக்கிறது. என்னைக் கேட்டால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் மட்டுமல்லாது, மந்திரிகள் மட்டுமல்லாது, தேர்தலுக்கு கான்டிடேட் ஆக நிற்கிறார்களே அவர்களெல்லாம் கூட தொகுதி மக்களுக்குச் சொத்துக் கணக்கைக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்தால் கூட நல்ல முறையாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த நண்பர் நல்லசிவன் அவர்கள், "இதுவரையில் காங்கிரஸ் ஆட்சியில் மாறுதல் இல்லை. 20 ஆண்டு காலமாக இல்லாத மாறுதல் இப்போது ஏற்படப் போகிறது" என்று சொன்னார். எந்தக் காரணத்திற்காக அதைச் சொன்னார் என்ற நோக்கத்தை நன்றாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. சொத்துக் கணக்கைக் கொண்டு வந்தால் மாறுதல் ஏற்படுமோ என்று சொன்னார்களோ தெரியவில்லை. இவ்விதமாகக் கணக்கைக் கொடுப்பது முக்கியமாக நமக்கு மட்டுமல்ல, கையிலுள்ள பணத்தையும் பொதுமக்களுக்காகச் செலவழித்தும், சேவை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் செலவழித்தும், அவர்களுக்கு நம்பிக்கை இல்லாத காரணத்தால், கணக்குகளை ஒவ்வொரு ஆண்டும் சட்டசபைக்குச் சமர்ப்பிக்கவேண்டிய முறையில் சட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இங்கே பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய திரு. வன் அவர்களின் தீர்மானத்தை நான் ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இருபது ஆண்டு காலமாக ஆண்டவர்கள் இதுபோன்றதொரு தீர்மானத்தை அவர்களாகவே கொண்டு வந்து தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டிருக்கலாம். அதை அவர்கள் செய்யத் தவறிவிட்டார்கள். அது மட்டுமல்ல. சென்ற முறை நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது நமது சட்ட அமைச்சர் அவர்கள் இதுபோன்றதொரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அப்போது ஆளும் கட்சியில் இருந்து காங்கிரஸ் நண்பர்கள் இது தேவையற்றது, இது தேவையில்லாத ஒரு தீர்மானம், மக்களிடம் இது பலவிதச் சந்தேககங்களை ஏற்படுத்திவிடும் என்ற காரணத்திற்காக இது தேவையில்லை என்று மெஜாரிட்டி வோட்டு மூலம் அதை நிராகரித்தார்கள். இப்போது கூட அவர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பார்களோ அல்லது எதிர்ப்பார்களோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கலாம். அன்றைய தினம் இந்தத் தீர்மானத்தை நிராகரித்து எனக்கு முன் பேசிய துரை பாண்டியன் அவர்கள் இன்று அதை ஆதரித்துப் பேசுகிறார்கள். அப்போதே அந்தத் தீர்மானத்தை ஆதரித்து நல்லதொரு மரபை ஏற்படுத்தியிருந்தால் நன்றாகயிருந்திருக்கும். இன்று அவர்கள் இத் தீர்மானத்தை ஆதரிப்பதில் இருந்து என்ன தெரிகிறது என்றால், நாங்கள் என்ன வேண்டுமானாலும் தவறு செய்வோம், அப்போது இந்தச் சட்டம் தேவையில்லை, ஆனால் இப்போது எதிர்க்கட்சியாக இருந்த கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டதால் இது தேவை என்று பேசுகிறார்கள். இது எந்த அளவிற்கு நியாயம் என்பதை இம்மன்றத்தில் உள்ளவர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். பொதுவாக இதுபோன்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு முன்பாக சட்ட அமைச்சர் அவர்கள் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து இந்தச் சட்டத்தை எப்போதிருந்து அமலுக்குக் கொண்டுவர வேண்டும், எந்தெந்த முறையில் அதில் திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்பதையெல்லாம் பற்றி தீவிரமாக ஆலோசனை செய்து சட்டபூர்வமாக இதை முறைப்படி ஒரு மசோதாவாக சட்ட அமைச்சர் அவர்களே கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது 15 ஆண்டுகளுக்கு முன்பாகவே இது அமுலுக்கு வரும் என்ற ஷரத்தைச் சேர்க்க வேண்டும். ஏனெனில் பொதுவாக பொது மக்களிடத்தில் ஒரு தவறான எண்ணம் தொடர்ந்து இருந்து வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்களாக வந்தவர்கள் எப்படி முதலில் வந்தார்கள், அப்போதுள்ள அவர்களின் நிலை என்ன, இப்போது அவர்களின் நிலை என்ன, எந்தளவிற்கு அப்போது அவர்களுக்குச் சொத்து இருந்தது, இப்போது அவர்களுக்கு எந்தளவிற்குச் சொத்து இருக்கிறது என்ற முறையில் பொது மக்கள் பேசிக் கொள்வதை சொல்கிறேன். உறுப்பினராக வரும்போது இரண்டு எக்கருக்கு சொந்தக்காரராக இருந்தார், இப்போது 15, 20 எக்கர் நிலத்திற்கு சொந்தக்காரராகி விட்டார், முன்பு ஒரு வீட்டிற்கு சொந்தக்காரராக இருந்தவர் இப்போது பத்து பதினைந்து வீடுகளுக்குச் சொந்தக்காரராக ஆகி விட்டார் என்று பரவலாகத் தொடர்ந்து சென்ற பதினைந்து ஆண்டுகளாக இப்படிப் பேசப்பட்டு வருகிறது. ஆகவேதான் நான் சொல்கிறேன், இந்தச் சட்டத்தைக்கொண்டு வரும்போது சட்ட அமைச்சர் அவர்கள் முன் தேதி இட்டு இச் சட்டத்தைக் கொண்டுவந்து, ஆரம்பத்தில் உறுப்பினராக வரும்போது அவருக்கு என்ன சொத்து இருந்தது இப்போது அவருக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது, அவர்களது குடும்பத்திற்கு அப்போது எவ்வளவு சொத்து இருந்தது, இப்போது எவ்வளவு சொத்து இருக்கிறது, அந்தச் சொத்துக்கள் எல்லாம் முறைப்படியாக சம்பாதிக்கப்பட்டதா, அதற்கு வேண்டிய வரிகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கிறதா அல்லது சட்டத்திற்குள் வராமல வேறு வகைகளில் சம்பாதிக்கப்பட்டிருக்கிறதா என்று கண்டு ஆராய்வது பொது மக்களின் சந்தேகத்தை நிவர்த்திப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே சட்டமன்ற உறுப்பினராக வரும்போது அவரது சொத்து எவ்வளவு இப்போது அவரது சொத்து எவ்வளவு, பாகம் பிரியாத குடும்பமாக இருந்தால் முன்பு அந்தக் குடும்பத்திற்கு இருந்த சொத்து எவ்வளவு, இப்போது அந்தக் குடும்பத்திற்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்பதற்கான கணக்குகளைக் காட்டுவது பொருத்தமாகஇருக்கும். அப்படிச் செய்தால்தான் பொது மக்களின் சந்தேகம் தீரவும், அவரவர் கட்சிக்கு நல்லதொரு பெயர் கிடைக்க வசதியாக இருக்கும். ஒரு நேரத்தில் இத் தீர்மானத்தை எதிர்ப்பதும், ஒரு நேரத்தில் இத் தீர்மானத்தை ஆதரிப்பதும் என்பது ஒரு முறையான செய்கை அல்ல. இதுபோன்ற ஒரு தீர்மானம் கழிந்த காலத்தில் வந்தபோது அதைவேகமாக எதிர்த்தவர்கள் அவர்கள். திரு. துரைபாண்டியன் அவர்கள் கூட பேசினார்கள் என்ற ஞாபகம் எனக்கிருக்கிறது. இதனால் வீண் வதந்திகளும் இடம் ஏற்படும், ஆகவே இது போன்றதொரு சட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று அப்போதிருந்த முதல் அமைச்சர் அவர்கள் சொல்லி வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது. இது நல்லதொரு சட்டம். இதைச் சட்ட அமைச்சர் அவர்கள் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கார் கொடுப்பது பற்றி திரு. துரைபாண்டியன் அவர்கள் சொன்னார்கள். நன்கொடையாக கார்கள் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். அதில் கூட ஊழல்கள் ஏற்பட்டனவா என்ற பிரச்னையை எழுப்பினார்கள். கார் கொடுப்பதாக இருந்தாலும் கட்சியின் ஒப்புதல் பெற்று, எந்தெந்த முறையில் வசூல் செய்யவேண்டுமென்பதை சபாநாயகர் அவர்களோ அல்லது வேறு முறைப்படி வகைப்படுத்தி இவ்வளவு டிக்கட்டுகள் போடப்பட்டன, இன்னார் இன்னாரிடம் வசூல் செய்யப்பட்டது, சட்டமன்ற உறுப்பினர் பதவி துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை என்று தெளிவாகச் சொல்லிவிட்டால் நன்றாகயிருக்கும். அதற்குத்தக்க வழிவகைகளை அமைச்சர் அவர்கள் காண வேண்டும். இது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு சட்டம். இருந்தாலும் முன் தேதி இட்டு இதை அமலுக்குக் கொண்டு வரவேண்டியது மிக மிக அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இதை ஆதரிக்கிறேன்.





**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நண்பர் திரு நல்லசிவன் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தை நான் முழுமனதோடு ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 1964-ம் ஆண்டில் இதை ஒரு அதிகாரப்பற்றற்ற தீர்மானமாக இன்றைய சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருந்தும் அது நிறைவேறாமல் போனது பற்றியோ அல்லது சென்ற நாட்களில் அதை எதிர்த்ததைப் பற்றியோ இப்போது பேசி பயன் இல்லை. இப்போது இத் தீர்மானம் வருகிறது. இதற்கு உருக்கொடுக்க வேண்டிய பொறுப்பு ஆளும் கட்சிக்கு இருக்கிறது. மந்திரிகள் இப்போதே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற அங்கத்தினர்கள் கொடுக்க வேண்டுமென்று சொல்லுவதும் சரிதான். இன்னும் பொது சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள் கொடுப்பதும் நல்லதுதான். அதற்காக நாம் செய்கிற சட்டத்தை விரித்துக் கொண்டு போக முடியாது. ப்ராக்டிகலாக எவ்வளவு தூரம் இச்சட்டத்தை நன்கு அமல் நடத்த முடியுமோ அந்த அளவிற்கு நாம் அமுல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும். இதைக் கொண்டு வந்ததால் எல்லாவற்றையும் செய்து விட்டதாக நாம் திருப்தி அடைந்துகொள்ள முடியாது. இந்த மன்றத்தில் ஏகோபித்த ஆதரவினால இத் தீர்மானம் நிறைவேற்றப்படக்கூடும். இது நிறைவேற்றப்பட்டாலும், காரியாம்சத்தில் இது நன்கு நடைபெறுவதற்கு வேண்டியதைச் செய்வது சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் கையில்தான் இருக்கிறது, முன்னதாகவே இதைப் பற்றி அவர்கள் நன்கு ஆலோசித்து விட்டார்கள். 1964-ல் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அது ஒரு மசோதாவாக வந்திருக்கிறது. அன்று அவர்களால் செய்யமுடியவில்லை என்றாலும் இன்று அவர்கள் ஒரு அமைச்சராக இருப்பதால் சட்டப்பூர்வமாக, மந்திரிசபை சார்பாக, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து அமுல் நடத்துவார்களானால் தமிழ்நாடும், தமிழ்நாடு மக்களும் அவர்களுக்குக் கடமைப்பட்டிருப்பார்கள்.இதைப் பற்றி நான் விரிவாகப் பேச வேண்டியதில்லை. பேசிய அங்கத்தினர்களின் கருத்துக்களில் இருந்து இதை எல்லாக் கட்சிகளும் ஆதரிப்பதாகத் தெரிகிறது. ஆகவே இத் தீர்மானத்தின் நன்மை பற்றி நான் விரிவாகச் சொல்லிக் கொண்டிருக்கத் தேவையில்லை. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொலவார்கள், **selling coal in**

New castle என்று. கொல்லர் தெருவில் ஊசி விற்பது போல் என்று. வருடாவருடம் கணக்குக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதைத் தவிர இன்னும் குறுகிய காலத்துக்குக்கூட கொடுக்க முயற்சிக்கலாம். ஆனால் இதை எப்படிச் செய்ய முடியும் என்பதை யோசிக்க வேண்டும். வருடா வருடம் கொடுக்கப்படுகிற கணக்குகளில் "லூப்ஹோல்ஸ்
மு.ப. 11-30 இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பவர்களை, பண்டகசாலைகளில் இருப்பவர்களை, மற்றபடி பொதுக்காரியங்களிலே ஈடுபட்டிருப்பவர்களை இந்தச் சட்டத்திலே கொண்டுவர வேண்டும், இதை விரிவுபடுத்த வேண்டுமென்று கூறப்பட்டது. அதை யெல்லாம் நாம் அதிகமாக யோசிப்பதை விட சட்டமன்ற உறுப்பினர்களும், இங்கேயுள்ள அமைச்சர்களும் கொடுப்பது என்று வைத்துக்கொண்டால் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் இப்படிப்பட்ட ஒரு சட்டம் முன்னதாகவே இருந்திருந்தால் நேற்று இங்கு அமைச்சரவையின்மேல் கொண்டு வரப்பட்ட அவநம்பிக்கைத் தீர்மானம் கூட வந்திராது என்று எண்ணுகிறேன். நேற்று அந்தத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தின் போது பல முறை கூறியதுபோல **Like Ceasor's wife one should be above suspicion** அதாவது, சீஸரின் மனைவியைப் போன்று சந்தேகத்திற்கு இடமில்லாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் சட்டமன்றத்தில் வந்திருக்காது. அப்படியே வந்திருந்தாலும் அது நேற்று வந்திருக்காது. அடுத்த தேர்தல் வருவதற்கான சமீப காலத்திலேதான் வந்திருக்கும். எனவே, இதைத் தடுப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், ஆளுகின்ற கட்சியினரும், மந்திரிகளும், மற்ற உறுப்பினர்களும், தன்னல மறுப்பாக **(self-denijing ordinance)** இப்படி ஒரு சட்டம் இயற்றி அவர்களைப் பொறுத்த வரையிலும் முதல்படியாகச் செய்து கொண்டால் போதும். இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களிலே **(unlimited Co-operative Societies)** சட்டமாக இல்லாவிட்டாலும் அங்கிருக்கக்கூடிய ஒவ்வொரு அங்கத்தினரும் அஸெட்ஸ், லயபிலிடிஸ் என்று ஆஸ்திப் பொறுப்புக்கான ஸ்டேட்மெண்ட் வைத்து அதைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, எட்டளவிலே இருப்பதுமட்டும் போதாது. எப்படிக் கிடைத்தது, ஒவ்வொருவருக்கும் உள்ள சொத்து எவ்வளவு, அடுத்த வருஷம் இரண்டு மடங்கு நான்கு மடங்காகியிருந்தால் 1 மடங்கு $1\frac{1}{2}$ மடங்கு ஆகியிருந்தால் அது எப்படி வந்தது என்று கண்டு பிடிக்க வேண்டும். அதை மற்றவர்களுக்கு மாற்றி மறைத்து வைத்துக் கொள்ளாத நிலையை நாம் வைத்துக்கொள்ள வேண்டும். திரு. நல்லசிவன் தீர்மானமாகக் கொண்டுவந்ததுள்ளது, மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் முன்னால் கொண்டு வந்த மசோதா ரூபத்திலே கொண்டு வரவில்லை என்றாலும் அந்தப் பொறுப்பைத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டவுடனேயே உருவாக்குவது நமது அமைச்சரவையைப் பொறுத்திருக்கிறது. நம் ஆளுங் கட்சியைப் பெரும்பாலும் பொறுத்திருக்கிறது. அப்படி இங்கேயிருக்கின்ற நாமெல்லாம், தன்னலத்திற்காக, சொந்தப் பெருமைக்காக, சொந்தக் காரியத்திற்காக நம்முடைய சொத்துக்களையும், ஆஸ்திகளையும் வெகுவாகப் பலப்படுத்திக் கொள்வதற்காகவே வந்தவர்கள் அல்ல.

நமக்கு முன்னாலே பொதுச் சேவையைத் தான் **(Service before self)** நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பொதுச் சேவை முடிந்த பிறகு தான், தான், தனது என்பது வருகிறது என்ற நிலையை வைத்திருப்பதால் இது மிகவும் நன்றாக நடப்பதற்கு எல்லாக் கட்சிகளும் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் ஆதரவு கூறுவதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் பெருமித்தோடு என் சுதந்திராக் கட்சியின் சார்பாகவும், சொந்த முறையிலும் இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு வரவேற்று, இதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கொடுத்திருக்கும் இந்தப் பிரேரணையை எல்லோருமே ஆதரித்திருப்பது தக்க ஒன்றுதான். அந்த வகையில் நானும் ஆதரிக்கிறேன். ஆனால், கட்சிப் பூசலோ, கட்சிப் போட்டியோ இதிலே கலக்காமல், சமுதாயத்தின் பொது ஒழுக்கத்தின் அடிப்படையிலே உருவாக வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். சந்தானம் கமிட்டி அறிக்கையிலே, பொதுவாழ்விலே முற்படுபவர்கள் இதுபோன்ற கணக்குக் காட்டும் முறை தோற்றுவிக்கப்பட வேண்டுமென்று அகில இந்திய ரீதியிலே யோசிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழக அரசு, மத்திய சர்க்காரின் மூலமாக இந்த முயற்சி எடுக்கப்படுவதை மறுத்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அங்கு காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கிறது. இங்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கிறது என்பதற்காக மட்டுமல்ல, ஜனநாயக நாட்டிலே மத்திய அரசிலும், மாநிலத்திலும் வெவ்வேறு கட்சிகள் இருக்க வாய்ப்பிருக்கிறது. மத்தியிலே உள்ள அரசு நியாயமான முடிவை எடுத்தாலும், வேறுபட்ட கட்சியிருப்பதனால் அதை ஒத்துக்கொள்ளவில்லை என்று தமிழக அரசின் மீது புகார் கூற இடமுண்டு. ஆகையினால், இந்த மாநில அரசே அதற்கான முயற்சியை எடுத்து, இங்குள்ள கட்சிகளைக் கலந்து பேசி சுமுகமான ஏற்பாட்டைச் செய்துவிடுவது நல்லது என்பது என்னுடைய எண்ணம்.

பொது வாழ்விலே ஈடுபடுபவர்களில் இன்றையதினம் சாதாரண குடும்பங்களில் உள்ளவர்கள் அதிகப்படியாக ஈடுபட்டு வருகிறார்கள். மேல்தளத்திலே உள்ள செல்வாக்கு பெற்ற சுகஜீவிகள் தலைவர்களாகவோ, எம். எல்.ஏ.க்களாகவோ அமைச்சர்களாகவோ வந்திருக்கும் நேரத்தில் இம்மாதிரியான புகார்கள் அதிகமாக எழவில்லை. அதனால், அவர்கள் தவறு செய்வதில்லை என்று அர்த்தம் இல்லை. அனுபவம் உள்ள நமக்கு அது தெரியும். ஏனோ அப்பொழுது அப்படி எழவில்லை. சமுதாயத்தின் அடித்தளத்திலேயுள்ளவர்கள், வயது வந்து வாக்குரிமை பெற்ற ஏழை எளியக் குடிமகன் முன்னேறி வரலாம் என்ற நிலை உருவாகி வந்திருக்கக்கூடிய நேரத்தில் கண்டபடி புகார்கள் கூறுவதைப் பார்க்கிறோம். அதை இந்த மன்றத்திலேயும் அடிக்கடி கேட்கிறோம். அப்படிப்பட்ட நிலையிலும் ஏழை எளிய மக்களில் பலர் ஏன் மிகப் பலர் என்றே சொல்ல வேண்டும், ஒரு சிலர் அல்ல, மிகப் பலர் தங்கள் வாழ்க்கையைத் தூய்மையாக வைத்துக்கொண்டு வருகிறார்கள் என்பது குறிப்பாகத் தமிழ்நாட்டுக்குள்ள பெருமை. ஏழைக் குடும்பத்தில் தோன்றியவர் மீது மேட்டுக்குடியில் தோன்றிய கனவான் எதையும் சொல்லிவிடலாம், "மாங்காய் புளித்ததோ வாய் புளித்ததோ" என்று. அந்த வாய்களுக்குப் பூட்டுபோட சட்டமும், சம்பிரதாயமும் தேவை. நல்லபடியாக பொது வாழ்க்கையை நடத்தி வருபவர்களைப் பார்த்து, மேட்டுக்குடியிலே பிறந்தவர்கள் நிலப் பிரபுக்கள் நெஞ்சிலே இறுமாப்போடு இவர்களெல்லாம் யோக்கியர்கள் இல்லாதவர்கள் போன்றும், தாங்கள் யோக்கியர்கள் என்று எல்லோரும் எண்ண வேண்டும் என்றும் நினைக்கிறார்கள். இனி அவ்வாறு எண்ண வேண்டாம் என்று கூறிக்கொண்டு இந்தச் சட்டம் நூற்றுக்குநூறு வரவேண்டுமென்று கூறி இந்தச் சட்டத்தை ஒத்துக்கொள்ளுகின்றேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவரவர்களே, கனம் உறுப்பினர் நல்லசிவன் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானம், அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து அவர்களுடைய ஆண்டு வருமானம் பற்றிய அறிக்கை ஒன்றினை சபையில் வைக்க வேண்டுமென்ற கருத்துப்படி ஒரு தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் இந்தத் தீர்மானம் எந்த நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கத்தைப் பன்னெடுங்காலமாகவே எடுத்துச் சொல்லி வருகிறது என்பதை அவர்களும் குறிப்பிட்டார்கள், நாடும் நன்றாக அறியும். பொதுவாகவே, பொதுவாழ்வு என்பது ஒரு காலத்தில் பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் கையிலே இருந்தது. இராஜ்ய பரிபாலனமும்

அவர்கள் வகுக்கின்ற ஆணைகள் அல்லது அவர்கள் இடுகின்ற கட்டளைகள்தான் இந்த ராஜ்யத்தில் நிறைவேற்றப்பட்ட வேண்டுமென்றும், அவர்கள்தான் இந்த ராஜ்யத்தின் அதிகாரிகள் என்றும் சொல்லப்படும் கருத்து நம்முடைய நாட்டில் உலவி வந்தது. ஆனால் காங்கிரஸ் இயக்கம் தோன்றி, மக்களுடைய மன்றத்தில் நல்ல கருத்துக்களை ஏற்படச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு அந்த மகாசபை ஏற்பட்ட பிறகு பொதுவாழ்க்கையிலே சீமான்கள் மட்டுமல்ல, ஜரிகைக் குல்லாய் போட்டவர்கள் மட்டுமல்ல, மக்கள் எல்லோருமே பொது வாழ்விலே கலந்துகொண்டு மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற்று, மக்களுக்காகப் பாடுபட்டு, மக்களுடைய தலைவராக வரலாம் என்று உணர்த்தப்பட்டது. சுதந்திர இயக்கத்தின் அந்த நோக்கம் நாட்டிலே அரும்பிய பிறகு, வாழ்க்கையிலே எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காண வேண்டுமென்ற அடிப்படையின்மீது அரசியல் கட்சிகள் துவங்கப்பட்ட பிறகு, அந்த அரசியல் கட்சிக்காகப் பாடுபட்டவர்கள், அந்த அரசியல் கட்சியின் வாயிலாக மக்களுக்குச் தொண்டாற்றுபவர்கள் அத்தனை பேருக்கும் சிறப்பு ஏற்பட வேண்டும், அந்தச் சிறப்பை மக்களுக்கே திருப்பித் தர வேண்டுமென்ற கருத்து வேரூன்றி, அதன் அடிப்படையில் சட்டமன்றங்களும், பாராளுமன்றமும் இயங்கக் கூடிய சூழ்நிலை இன்று உருவாகியிருக்கிறது. மாடி வீட்டிலிருப்பவர்களுக்குத்தான் பொதுவாழ்வு சொந்தமாக வேண்டுமென்ற நிலை மாறி, ஏழை எளியவர்கள், குடிசைகளிலே வாழ்பவர்கள். பிற்பட்ட இன மக்கள் அத்தனைபேரும் பொதுவாழ்விலே, இருதய, சுத்தியோடு பாடுபடலாம், ஒரு இலட்சியத்தோடு, தங்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு மக்களுக்காகப் பாடுபடுபவர்கள் என்று சொன்னால் அவர்களை கௌரவமானவர்களாகக் கருதி பெருமை தர வேண்டுமென்ற கருத்தும் இந்த ஜனநாயக யுகத்தில் இன்று வேரூன்றி தழைத்து வருகின்றது. அப்படித் தழைத்து வருகின்ற காரணத்தால்தான் என்னைப் போன்றவர்களும், என்னைப் போன்ற ஏழை எளியவர்களும், எழுத்தாளர்களும் இன்னும் பல்வேறு துறைகளில் இருப்பவர்களும் தாங்கள் சீமான்களாக இல்லாவிட்டாலும் அரசியல் வாழ்விலே நல்லமுறையிலே பணியாற்றும் நிலைமைஇன்று ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இப்படி ஏழை எளியவர்களாக இருக்கிறவர்கள் வேறு தொழில்களைச் செய்து கொண்டு அதே நேரத்திலே பொது வாழ்விலே ஈடுபட்டிருக்கிற காரணத்தாலே அவர்கள் அவரவருடைய வாழ்க்கையில் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற வரையறையை நாம் வரையறைத்துக் கொள்வது நல்லது என்பதே இன்றைய தினம் எழுப்பப்பட்ட கருத்தாகும்.

பொதுவாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் பணியாற்றி வருகின்ற என்னைப் போன்றவர்களும் மற்ற தோழர்களும் அவர்களுக்கேற்ற ஒரு தொழிலை வைத்துக்கொண்டு அந்தத் தொழிலின் வாயிலாக தங்கள் குடும்பத்தையெல்லாம் காப்பாற்றிக்கொண்டு அதே நேரத்தில் மீதி நேரத்தை கழகத்திற்குப் பயன்படுத்தியும், சில பேர் கழக வேலைதான் முக்கியம், அதற்கு அடுத்துதான் தொழில்கள் என்ற நிலையில் நாம் பொது வாழ்விலே அப்பழுக்கு படாமல் வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம். அதன் காரணமாகத்தான் அவர்களுக்கு ஆதாயம் ஏற்படுகிறதோ என்று கருதுகின்ற எண்ணம் மக்கள் மன்றத்திலே உருவாகின்றது. சிலரால் உருவாக்கவும் படுகின்றது. ஏழை எளியவர்கள் நிரம்பிய நாட்டில் இப்படிப்பட்ட எண்ணங்கள் ஏற்படுவது தவறு என்று நாம் சொல்லிவிட முடியாது. இப்படிப்பட்ட எண்ணங்கள் ஏற்படும். ஆனால், அரசியல் கட்சியிலே இருக்கின்ற நாம் யார் யார் மீது எந்த எந்த நேரத்திலே கோபம் வருகிறதோ, எனக்கு இன்னொரு அரசியல்வாதியிடத்திலே கோபம் வந்தால், "தெரியுமா, அந்த அரசியல்வாதி அந்தப் பதவியிலே இருந்த காரணத்தினால் இவைகள் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டிருக்கிறார்" என்று நான் குற்றம் சாட்டவும், என் மீது யாருக்காவது கோபம் வருமானால், அவர் அந்தக் கட்சியிலே இருக்கிற காரணத்தாலே, ஆளும் கட்சியிலே இருக்கிற காரணத்தாலே





இப்படியெல்லாம் செய்திருக்கிறார் என்று வெளியிலே குற்றம் சாட்டவும் இப்படி இரண்டு குற்றச்சாட்டுகளிலே உண்மை இருக்கிறதோ இல்லையோ, நம்முடைய ஆசை, நம்முடைய அபிலாஷைகள், நம்முடைய விருப்பு வெறுப்புகள் ஆகியவைகளை அந்த அந்தப் பொதுமக்கள் தலைவர்கள் மீது வீசியும் அதேபோல் அவர்கள் தொடர்பு கொண்டிருக்கிற இன்னொருவர் மீது வீசியும் அப்படிப்பட்ட சூழ்நிலையை நாம் இன்றைய தினம் நம்முடைய தமிழ் நாட்டில் மட்டும் அல்ல, இந்திய துணைக் கண்டத்தில் எல்லாப்பகுதிகளிலும் காண்கிறோம். இந்தச் சூழ்நிலை மாற வேண்டுமென்றால் பொதுவாழ்விலே இருக்கிற நாம் எல்லாம் நமக்கென்று ஒரு கட்டுக்கோப்பான ஒழுங்குமுறையை வரையறுத்துக் கொள்வது நல்லது ஆகும்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு நம்முடைய இந்திய அரசினுடைய சார்பிலும் நம்முடைய அரசினுடைய அளவிலும், நம்முடைய பொது அதிகாரிகளுக்கும் சர்க்காரிலே பணியாற்றுகிற அதிகாரிகள் எப்படி பொதுமக்களுடைய குறைகளை எல்லாம் கேட்க வேண்டுமென்பதற்காக நம்முடைய ராஜாஜி மண்டபத்திலே ஒரு நல்ல மாநாடு நடந்தது. நம்முடைய சர்க்கார் துறையைச் சேர்ந்த பல்வேறு அதிகாரிகளும் சட்டமன்றத்தின் சார்பில் நானும், டாக்டர் ஹாண்டே அவர்களும், நம்முடைய நண்பர் காசிராமன் அவர்களும் அந்த பொது விவாதங்களில் பங்குகொண்டோம். அந்த கமிட்டிக் கூட்டத்திலே கூட வலியுறுத்திச் சொன்னேன். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்தில் அவர்களுடைய பணிகளை நல்லமுறையில் செய்ய வேண்டுமென்று கருதுகிறார்கள். ஆனால், இன்றைய தினம் நாட்டிலே எழுப்பப்படுகின்ற கருத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளுகிற வர்க்கத்தோடு தொடர்பு கொண்டு அதிகாரிகளுடைய செயலுக்கு இடைஞ்சலாக இருக்கிறார்கள், நிர்வாகத்திலே தலையிடுகிறார்கள் என்பது. எங்களுடைய தலைவரும் அவருடைய தொண்டராக இருக்கிற நாங்களும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டு வரக் கூடாது என்பதிலே மிகவும் சிரத்தை காட்டுகிறோம். நானும் சட்டமன்ற உறுப்பினன் என்ற முறையில் அதிகாரிகளைப் பார்த்து இந்த கமிட்டியைப் பார்த்துக் கேட்டுக்கொள்வதெல்லாம் நாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும், சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த அதிகாரியை சந்திப்பது, எந்த சூழ்நிலையிலே சந்திப்பது, கலெக்டரை மட்டும் சந்திப்பது போதுமா, தாசில்தாரை மட்டும் சந்திப்பது போதுமா, ரெவின்யூ இன்ஸ்பெக்டரை பார்த்துப் பேசினால் போதுமா, எந்தக் கட்டத்திலே ஒரு எம்.எல்.ஏ. குறுக்கிடலாம், அல்லது எம்.எல்.ஏ. குறுக்கிட முடியாவிட்டாலும் பொதுமக்கள் அவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம் என்பதற்கு சில வரையறைகளை வகுக்க வேண்டுமென்று நமது பிரதம செயலாளர் அவர்களையும், அதிகாரிகளையும் பார்த்துக் கேட்டுக்கொண்டேன். அங்கே ஒரு யோசனை கூட சொல்லப்பட்டது. போலீஸ் இலாகாவைப் பொறுத்த வரையில் பல புகார்கள் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் அவைகளை வாங்கமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் புகார் பெட்டி என்று ஒன்று வைத்துவிட்டால் அந்தப் புகார் பெட்டியில் யாரும் சப் இன்ஸ்பெக்டர் என்ன கேட்பாரோ என்று கவலைப்பட வேண்டியதில்லை, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்ன கேட்பாரோ என்று கவலைப்பட வேண்டியதில்லை, எந்தப் பொதுமக்களும் புகார் எழுதிப் போட்டுவிட்டால் அந்த சப் இன்ஸ்பெக்டர் வாரத்திற்கு ஒருமுறை உட்கார்ந்து அந்த புகார்களை கவனித்து நடவடிக்கை எடுக்கலாம் என்ற யோசனைகூட கூறப்பட்டு, முடிவு எடுக்கப்பட்டது.

என்ன காரணமோ—அதை நான் குறை சொல்லவில்லை—ஆனால் கடந்த 20 ஆண்டு ஆட்சிக்கால பாரம்பரியத்தில் ஏழை எளியவர்களாக இருந்தவர்கள் பொதுமக்களுடைய தலைவர்களாக உருவான காரணத்தாலோ என்னவோ எந்தக் காரியத்தை எடுத்தாலும் அவர் போய்

சொன்னால்தான் நடக்கும், இவர் போய் சொல்வதற்கு இதைச் செய்தால்தான் நடக்கும் என்ற சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அந்தச் சூழ்நிலையை மாற்ற வேண்டுமென்று சொன்னால் பொறுப்பாக இருக்கிற, இன்றைய தினம் தமிழ் நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பிலே பங்கேற்றிருக்கிற நாம் எல்லாம் ஒரு நல்ல வழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதிலே என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையிலும் எந்தவிதமான அபிப்பிராய பேதமும் இல்லை.

இந்த சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியவர்கள் எப்படி அவர்களுடைய சொத்து விவரங்களையெல்லாம் காட்ட வேண்டுமென்ற பிரச்சினை கடந்த 10 ஆண்டு காலமாகவே அகில இந்திய காங்கிரஸிலேயே பேசப்பட்டு வருகின்றது. டெல்லியிலே அமைச்சர்களாக இருக்கிறவர்கள் பிரதமரிடத்திலே காட்டி வருகின்றார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்களை அப்படி சொத்து விவரங்களை எல்லாம் கேட்பதற்கு ஏதாவது ஒரு வழி வகை செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இதுவரையிலும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரையிலும் தமிழ்நாடு எதற்கும் வழிகாட்டுகிறது. இதற்கும் ஒரு வழிமுறையை நாம் எல்லாம் கலந்து உட்கார்ந்து பேசி செய்துகொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே கூட இந்த கருத்து சொல்லப்பட்டது நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களாலே. அமைச்சர் பெருமக்கள் அவர்களுடைய சொத்து விவரங்களையெல்லாம் நம்முடைய முதல்வரிடத்திலே தரவேண்டும், அந்த சொத்து விவரங்களையெல்லாம் அவர்கள் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று கருத்து இருந்து கொண்டிருக்கிறது.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நீங்கள் யார் கேட்டாலும் யாருக்கு என்ன சொத்து இருக்கிறது என்கிற விவரங்களைத் தருவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின்சார்பிலே இருக்கிற அமைச்சர்களானாலும் சரி, சட்ட மன்ற உறுப்பினர்களானாலும் சரி, யாரும் தயக்கம் காட்டுவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. எங்களுடைய வாழ்க்கை திறந்த புத்தகமாக இருக்கிறது. யார் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும், எந்த இடத்திலே வேண்டுமானாலும்—சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் அல்ல, யார் வேண்டுமானாலும்—திறந்த புத்தகத்தைப் பார்த்து எங்களைப் பற்றி தெரிந்துகொள்ளலாம். திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி, தமிழரசு கழகம், கம்யூனிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சுதந்திரா கட்சி, இன்னும் புதிதாக எதிர்காலத்திலே ஏற்படக் கூடிய கட்சிகள் எல்லாமாகச் சேர்ந்து ஒரு வழிவகை அமைத்துக் கொள்ள வேண்டும் என்கின்ற கருத்தினை நான் வரவேற்கிறேன். ஆனால் இதை எப்படி செய்ய வேண்டும் ? தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டாலே போதுமா? என்ன என்ன முறைகளையெல்லாம் செய்யவேண்டுமென்பதை எல்லாம் நாம் யோசித்து நமக்குள்ளே முடிவுகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, திரு. நல்லசிவன் அவர்கள் கொண்டு வந்த இந்த தீர்மானத்தினுடைய நோக்கத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். பொது வாழ்விலே அப்பழுக்கற்ற பொது வாழ்வு, யாரைப் பற்றியும் குற்றம், குறை சொல்ல முடியாத ஒரு பொது வாழ்வு, கீழிருக்கின்ற சாதாரண மக்களுக்காகவும் அவர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தைப் பெறுகின்ற ஒரு பொது வாழ்வு வேண்டுமென்று சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பிலே அந்தத் தீர்மானத்தினுடைய நோக்கத்தை நான் வரவேற்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இருக்கும்படியான இந்த உத்தியோகப்பற்றற்ற தீர்மானத்தின் மேல் விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. தீர்மானத்தை திரு. நல்லசிவன் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் ; எல்லா



கட்சியினரும் இதை ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தீர்மானத்தினுடைய நோக்கம் எப்படி இருந்தாலும் கூட அதனுடைய விஷயம் பொதுமக்களுடைய கவனத்திற்கு நாம் சந்தேகத்திற்கு இடம் இல்லாத ஒரு நிலையிலே இருக்க வேண்டுமென்பது மிக மிக அத்தியாவசியம். இருந்தாலும் கூட ஆளும் கட்சியிலே பேசியவர்கள் எல்லாம் அந்தப் பழம்போக்கினை விட்டுப் போகவே இல்லை. 20-வருஷத்திற்கு முன்னே என்ன? காங்கிரஸ் கட்சியிலே நடந்த தவறு என்ன ? எல்லாம் நடந்து விட்டது, அந்தப் பழங்கதையிலிருந்து கொஞ்சம் கூட இன்னும் மாறவே இல்லை என்பதுதான் என்னுடைய வருத்தமாகும். இப்பொழுது நீங்கள் ஆட்சியிலே இருக்கிறீர்கள் ; முன்னால் இருந்தவர்கள், அமைச்சர்களோ, எம்.எல்.ஏ-க்களோ காங்கிரஸ்காரர்களோ தவறு செய்திருப்பார்களானால் தவறாக பதவியை உபயோகப்படுத்தியிருப்பார்களானால் சர்க்காருக்கு நடவடிக்கை எடுக்க உரிமை உள்ளது. அமைச்சராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, பொதுக் கூட்டத்தில் பேசும்படியான நிலை இருக்கிறது. சட்டசபை அங்கத்தினர் என்ற முறையில் இப்பொழுது அமைச்சராக இருக்கிற மதிப்பிற்குரிய மாதவன் அவர்கள் முன்பு இம்மாதிரி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. நான் அப்பொழுது சட்டசபையில் இல்லை. அப்படி அவர் ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கலாம். அந்தத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் பக்கத்திலிருந்து கூட இப்பொழுது இதைக் கொண்டு வந்திருக்கலாம். நான் குற்றம் சாட்டுவதற்காகச் சொல்லவில்லை. பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள் மிகவும் பரிசுத்தமாக இருக்க வேண்டும், கைகள் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் யாருக்கும் ஆட்சேபனை கிடையாது.

"கோயிற் பூசை செய்வோர்—சிலையைக்
கொண்டு விற்றல் போலும்,
வாயில் காத்து நிற்போன்—வீட்டை
வைத் திழத்தல் போலும்,
ஆயிரங்க ளான—நீதி
யவை உணர்ந்த தருமன்
தேயம் வைத் திழந்தான்—சீச்சீ !
சிறியர் செய்கை செய்தான்."

என்று பாரதியார் கூறியிருக்கிறார். நாட்டு மக்கள், "நீங்கள்தான் ஆள வேண்டும்" என்று சொல்லி பிரதிநிதிகளிடம் ஆட்சியை ஒப்படைத்திருக்கிறார்கள். ஆகவே, இன்று மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் கூட, சட்டசபை உறுப்பினர்கள் எல்லோருமே சேர்ந்து மக்களுக்கு பொறுப்பு உள்ளவர்களாக இருக்கிறோம். மக்கள் நம் மீது நம்பிக்கை வைத்து, நாட்டினுடைய தலைவிதியை நிர்ணயம் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நாம் நல்ல முறையில், நாணயமான முறையில் நடந்துகொள்ள வேண்டும். நமக்குக் கொடுத்த செல்வாக்கை, நமக்குக் கொடுத்த சந்தர்ப்பத்தை, நமக்குக் கொடுத்த பதவியை தவறான முறையில் பிரயோசனப்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான் இத்தகைய ஒரு தீர்மானம் அவசியம் என்று நினைக்கிறேன்.

எத்தனையோ குற்றச்சாட்டுகள், சட்டசபையில் இருக்கும்படியானவர்கள் தவறாக நடந்து கொண்டார்கள், அமைச்சர்கள் தவறாக நடந்து கொண்டார்கள் என்று இருந்து கொண்டிருக்கின்றன. அவை எவ்வளவு தூரம் நிரூபிக்கப்பட்டன, எவ்வளவு தூரம் அவற்றை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், எவ்வளவு தூரம் அவற்றை நிரூபிக்கும்படியான சக்தி இருக்கிறது என்பதெல்லாம் பிரச்சினைகள். ஆகவே பொது வாழ்வில் இருக்கக்கூடியவர்கள் பற்றி இதுமாதிரி "லூஸ் டாக்ஸ்" இருந்து கொண்டிருக்கின்றன. ஒரு சட்ட மன்ற உறுப்பினராக இருப்

பவர் முன்னாலில் அவர் வாழ்க்கையில் சாதாரணமாக இருந்திருக்கலாம். சட்டசபை உறுப்பினராக ஆனவுடன் ஒரு வெள்ளைச் சட்டை போட்டுக் கொண்டு வந்துவிட்டால் கூட ஏதாவது அவரைப் பற்றி புகார் சொல்லப் படலாம். பொறுப்பற்ற முறையில் கூட அவ்வாறு புகார்கள் சொல்லப்படலாம். நம்மைப் பொறுப்பற்ற முறையில் சொல்கிறார்கள் என்று சொல்வது போல, பொது மக்களும் பொறுப்பற்ற முறையில் சொல்ல லாம். பொது மக்கள் எல்லோரும் பொறுப்புள்ள முறையில் பேசுகிறார்கள் என்று சொல்ல முடியாது. பதவிக்குத் தகுந்த மாதிரி உடுத்திக்கொள்ள வேண்டும் என்ற ஒரு நல்ல சூழ்நிலையிலே, நல்ல நிலையிலே வெள்ளை ஷர்ட் போட்டுக்கொண்டால் கூட, தவறான பிரசாரத்திற்கு இலக்காக்கப்படலாம். சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லாதவர்கள் எத்தனை சொத்து சேர்த்தாலும், எந்த வகையிலே சொத்து சேர்த்தார்கள் என்று கேட்பதில்லை. கார் வாங்கினால் கூட ஏன் வாங்கினார்கள் என்று சட்டசபை உறுப்பினர்களைக் கேட்பார்கள். ஆனால், பொதுமக்களுக்கு பணி செய்யக்கூடியவர்கள், தாங்கள் ஒரு தியாக சின்னமாக வந்திருக்கக்கூடியவர்கள் எப்படி மெழுகுவர்த்தி எரிந்தும், தன்னைக் குறைத்துக் கொண்டு, வெளிச்சம் தருகிறதோ அது மாதிரி நிலையில் இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய நிலை.

சொத்து விபரம் கொடுப்பது பற்றி பல்வேறு கருத்துக்கள் சொல்லப் பட்டன. ஒருவர் சொன்னார், முதலில் எத்தனை ஏக்கர் இருந்தது, அதற்குப் பிறகு எத்தனை ஏக்கர் இருக்கிறது என்று விவரம் கொடுக்க வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு முன்னால் ஒவ்வொருவருக்கும் ஓர் அந்தஸ்து, ஒரு நிலை இருக்கிறது. ஒருவர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கலாம், ஒருவர் தொழிலில் ஈடு பட்டிருக்கலாம். ஏதாவது ஒரு முறையிலே சமுதாயத்தில் ஓர் அந்தஸ்து அவர்களுக்கு இருக்கும். அந்த நிலையில் பார்க்கும்பொழுது நியாய மான முறையில் அவர்கள் சொத்து சேர்த்தார்களா என்பதைப் பார்க்க வேண்டும். அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர், குடும்பத்தில் பொறுப்பாக இருப்பவர் ஓரளவுக்குச் சொத்தை விருத்தி செய்வதில் எந்த விதமான தவறும் இருக்க முடியாது. எது நியாயம், எது நியாயம் இல்லாதது என்று நிரூபிக்கும்படியான ஒரு பொறுப்பு, மிக்க கஷ்டமான நிலை கூட அதில் இருக்கிறது.

காங்கிரஸ் கட்சி ஆண்டுகொண்டிருந்தது. அவர்கள் இம்மாதிரி ஒரு தீர்மானத்தை ஏன் கொண்டுவரவில்லை என்றெல்லாம் கேட்டார்கள். உதவி சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாக அவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எங்களுடைய கட்சியைப் பொறுத்த வரையில், எங்களுடைய கட்சி சார்பாக தேர்தலுக்கு அபேட்சகராக நிற்கக்கூடியவர்கள், ஒவ்வொரு வருஷமும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிடம் சொத்து விவரத்தை அறிவிக்க வேண்டும் என்ற ஒரு நியதியை நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம். சொத்தைப்பற்றிய கணக்கு விவரம் கொடுக்கப்படவில்லை என்றால், அத்தகைய நபர்கள் கட்சியின் சார்பாக போட்டியிடுவதைக்கூட ஒதுக்கி வைத்திருக்கிறோம் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இருக்கும்படியான குற்றச்சாட்டு, காங்கிரஸ் கட்சியில் இப்படி நடந்ததா, இல்லையா என்பது. எங்க ளுடைய கட்சியைப் பொறுத்தவரையில், நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் படியான நடவடிக்கை, கட்சிக் கட்டுப்பாட்டினுடைய முக்கியமான அம்சம் என்னவென்றால், ஒருவர் தேர்தலுக்கு அபேட்சகராக நிற்க வேண்டுமென்றாலோ, காங்கிரஸ் தீவிர அங்கத்தினராக இருக்க வேண்டுமென்றாலோ, சட்ட மன்ற அங்கத்தினராக இருக்கக்கூடிய சமயத்திலும், பாராளுமன்ற அங்கத்தினராக இருக்கக்கூடிய சமயத்திலும் ஸ்டேட்மெண்டு ஆஃப் ப்ராபர்டிஸ், லையபிலிடீஸ் அண்டு அஸெட்ஸ் பற்றிய விவரம் கொடுத்தாக வேண்டும் என்ற ஒரு சட்ட திட்டத்தை ஒழுங்காகக் காப்பாற்றிக்கொண்டுதான் வருகிறோம் என்பதை நான் உதவி சபாநாயகர் அவர்கள் மூலம் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மேலும், ஒரு சில தவறுகள் நடந்திருந்தாலும் கூட, பதவியை விட்டு



நீங்கும்படியான நிலை எங்களுடைய காங்கிரஸ் கட்சி ஆட்சியில் ஏற்பட் டிருக்கிறது. அமைச்சர் ஓரிருவர் இதுமாதிரி நிலையிலே தவறாக நடந்து கொண்டார்கள் என்ற ஒரு சந்தேகம் ஏற்படும்படியான நிலை இருந்தால்கூட, அவர்கள் ராஜினாமா செய்திருக்கக்கூடிய நிலை தான் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும் அமைச்சர் அவையின ருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது மாதிரி சந்தேகம் ஏற்பட்டால் தவறாக நடந்து கொண்டார்கள் என்று சந்தேகம் வந்தாலும் கூட, அமைச்சர்களை அமைச்சரவையிலிருந்து நீக்கும்படியான சக்தி அவர்களுக்கு இருக்கிறதா என்பதுதான் பிரச்சினை. எங்களுடைய காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், அந்த நிலையிலே ராஜினாமா செய்திருக்கிறார்கள் சிலர் என்பதை நான் எடுத்துக்காட்ட முடியும். எதற்காகச் சொல்கிறேன் என்றால், பிரைமா ஃபாஸியாக தவறாக நடந்து கொண்டார்கள் என்று சந்தேகம் எழுந்தாலும் கூட, இரண்டொருவர் அமைச்சராக இருந்தவர்கள் பதவியைவிட்டு விலகி நின்றிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியது அமைச்சரவை. ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால், அதி காரத்தை துஷ்பிரயோகம் செய்தார்கள் என்று புகார் செய்யப் பட்டால், ஓரளவுக்கு அதில் உண்மை இருக்கிறது என்று நிரூபிக்கப் பட்டால், பதவியிலிருந்து விலகிக்கொள்கிறோம் என்ற நிலை இருப்பது மிகவும் நல்லது. எந்தக் கட்சியினராக இருந்தாலும் சரியே, யாராக இருந்தாலும் சரியே, பொதுமக்களுக்கு சேவை செய்யும்படியான நிலையில் இருக்கக்கூடியவர்கள் யாராக இருந்தாலும் சரி, ஏதாவது சந்தேகத் திற்கு இடம் இருக்குமானால், பொது வாழ்விலிருந்து விலகிக் கொள்வது என்ற நியதியை ஏற்படுத்திக்கொண்டால், இந்த நாட்டினுடைய அரசியல் மிகச் சிறந்த, உயர்ந்த பண்பாட்டுள்ள அரசியலாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உத்தியோகஸ்தர்கள் சொத்துக்களைச் சேர்க்காமல் இருக்கிறார்களா ? உத்தியோகஸ்தர்கள் சொத்துக்களைச் சேர்த்தால், அதைக் கண்டுபிடிப்பது எப்படி ? அதைக் கண்டுபிடிக்கக்கூடிய நிலையில் இருக்கிறோமா ? என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்த நிலையில் இருந் தாலும், குற்றம் சாட்டப்படுகிறது. அதிகாரி கார் வாங்கினால் கூட குற்றம் சாட்டப்படுகிறது. மிகவும் நாணயமாக இருப்பவர், சுத்தமாக இருப்பவர் ஒரு சிறு தவறு செய்தால் கூட அதைப்பற்றி பெரியதாக குற்றம் சாட்டக்கூடிய நிலை இருக்கிறது. அதிகமாக தவறு செய்பவர்கள் மிகவும் நல்லவர்களாகத் தெரியக்கூடிய நிலையும் இருக்கிறது. இந்த நிலையிலே பார்த்தால், இதில் இரண்டு விதமான கஷ்டமும் இருக்கும். நியாயமாக நடந்து கொள்ளக்கூடியவர்கள், தூய்மையாக இருக்கக் கூடியவர்கள், தெரிந்தோ தெரியாமலோ ஒரு தவறு ஏற்பட்டால்கூட, அவர் மேல் குற்றச்சாட்டு வெகு பலமாக வந்துகொண்டிருக்கக்கூடிய நிலையும் இருக்கிறது. அதேபோல, குற்றங்களை, மறைக்கும்படியான சக்தி படைத்தவர்கள் கெட்டிக்காரர்கள், ரொம்பப் பெரிய மனிதர் களாக காட்டப்படுகிறார்கள். ஆகவே, இது விஷயத்தில் ஜாக்கிரதை யாக நடந்துகொள்ள வேண்டும். ஒரு சட்டதிட்டத்தைக் கொண்டு வரும்பொழுது எல்லோருக்கும் நல்ல முறையில் அது அமைய வேண்டும். எல்லோருக்கும் திருப்திகரமான நிலையிலே அது இருக்க வேண்டும். எல்லோரும் அதை ஆதரிக்கும்படியான வகையிலே இருக்க வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் ஒரு கிரேடு, ஒரு படி இருக்கிறது. அமைச்சர்கள் சட்ட சபை அங்கத்தினர்கள் எலெக்ஷனுக்கு முன்னாலே அவர்களுடைய சொத்து மதிப்பு என்ன, எலெக்ஷனுக்குப் பின்னாலே அவர்களுடைய சொத்து மதிப்பு என்ன என்று கணக்குக் கொடுக்கவேண்டுமென்றால், அது எப்படிச் செய்யப்படும், எந்த முறையில் செய்யப்படும் என்பது சாதாரணமான விஷயம் அல்ல. சட்டமன்றத்தில் சொத்து விவரங்களை வைக்க வேண்டுமென்று சொன்னால், எல்லாவிதமான கணக்குகளையும் தான் வைக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். அது எந்த விதத்தில் வைக்கப்படவேண்டும், அதை சட்டமன்றத்தில் வைக்க வேண்டுமா அல்லது சர்க்காருக்கு அறிவிக்க வேண்டுமா அல்லது

[திரு. செ. மாதவன்] [1968 ஆகஸ்ட் 29

கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எங்களில் சிலரைப் பாராட்டிப் பேசியதை வரவேற்கிறேன். அவர்களுடைய பாராட்டுகளினாலே எங்களிடத்தில் பிளவு ஏற்படும் என்று அவர் எண்ணிக் கொள்வாரானால் அதற்காகப் பரிதாபப்படுகிறேன்.

பொதுவாக நாங்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரையும் மதிக்கிறோம். குறிப்பாக இந்த மன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரை மிகவும் மதிக்கிறோம். 1964-லே கனம் பக்தவத்சலம் அவர்கள் இந்தத் தீர்மானத்தின் கருத்தை எதிர்த்து என்ன என்ன பேசினார்கள் என்பதைப் படிக்காமலேயே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இன்றைக்குத் தம்முடைய கருத்தை எடுத்துச் சொன்னதாகத் தெரிவித்தார்கள். இவர்கள் இரண்டு பேர்களுடைய கருத்தும் ஒரு வகையில் ஒத்திருப்பது மகிழ்ச்சி தான். அவ்வளவு ஒற்றுமை அவர்களுக்குள் இருக்கிறது. ஆயினும், துரதிருஷ்டவசமாக "இன்று 49 பேர் வந்துவிட்டோமே, திரு. க.ர. நல்லசிவன் அவர்களுடைய தீர்மானத்தை எதிர்க்க முடியவில்லையே" என்று அவர்கள் நினைப்பதிலே கஷ்டம் இருக்கத்தான் செய்யும்.

ஆகவே அடிப்படைக் கருத்தை இன்றைக்கு ஏற்றுக்கொண்டாலும், "இதற்கென சட்டம் வேண்டுமா அவரவர்கள் அவர்களது கட்சியினிடத்தில் சொத்து வருமான செலவுக் கணக்கைக் கொடுத்துவிடலாமே" என்றார்கள். "உறுப்பினர்கள் தங்கள் தங்களது கட்சித் தலைவரிடம் இதுபோன்ற கணக்கு விவரத்தைக் கொடுக்கும் முறை காங்கிரஸ் கட்சியில் இருக்கிறது" என்றும் சொன்னார்கள். இந்த ஒரு காரணத்தை அன்றைய முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

கட்சிக்குள் கணக்குக் கொடுப்பதை நாங்கள் அன்றும் ஏற்கவில்லை, இன்றும் ஏற்கவில்லை. கட்சி உறுப்பினர்கள் என்கிற நிலை வேறு, சட்டப் பேரவை உறுப்பினர்கள் என்கிற நிலையே வேறு. இது பொதுமக்களுக்குப் பிரதிநிதியாகச் செயலாற்றும் பொதுச் சேவையாகும். ஆகவே "எனது கட்சியினிடத்தில் கணக்கைக் கொடுக்கிறேன்" என்று சொன்னால் அதற்குக் கட்சித் தலைவர்கள் பொறுப்பேற்க வேண்டும். எந்தக் கட்சித் தலைவராவது — தன்னுடைய கட்சி உறுப்பினரிடம் — உள்ள ஊழலை பகிரங்கமாக ஒப்புக்கொள்ள முன்வருவாரா? ஆகவே கட்சியினிடம் கொடுக்கிறேன் என்று சொல்வது தப்பித்துக் கொள்ளும் வாதமாகும். நமக்கு எல்லாம் ஒரு பொறுப்பு இருக்கிறது. அமைச்சர்களுக்கு மட்டுமல்ல, சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் கூட நிர்வாகத்தில் பொறுப்பு இருக்கிறது, அதிகாரத்தில் பங்கு இருக்கிறது.

"சந்தேகம் விழுந்த காரணத்திற்காக, அமைச்சர் பதவியை விட்டே வெளியேறியவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள்" என்று எதிர்க் கட்சித் தலைவர் கூறினார்கள். வெறும் குற்றச்சாட்டு மட்டும் அல்ல — தஸ்தாவேஜுகளுடன் பகிரங்கமாகவே அந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபித்துக் காட்டிய பின்னும் பதவியில் உள்ளவர்களும் பலர் இன்றைக்கு அந்தக் கட்சியில் இருக்கிறார்கள். இப்படி வைத்திருப்பது காங்கிரஸ் கட்சியின் தனி உரிமையாக இருக்கலாம். ஆனால், நாம் ஒரு நல்ல பாரம்பர்யத்தை —அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்ட ஒரு நல்ல பாரம்பர்யத்தை—இது விஷயத்தில் ஏற்படுத்தியாக வேண்டும். ஆகையால் நான் சட்டசபை உறுப்பினர்களின் சொத்துக் கணக்கு கொடுக்கப்பட வேண்டும் என்பதை நான் எதிர்க் கட்சி வரிசையில் அன்றைக்கு இருந்தபோதும் சொன்னேன். இன்றும் அதையேதான் சொல்கிறேன்.

"அரசாங்கத்தில் பணிபுரியும் அலுவலர்களுக் கெல்லாம் இன்றைக்குக் கட்டுப்பாடு வைத்திருக்கிறார்களே, கட்டுப்பாடு இருப்பதனால் அவர்கள் தவறு செய்யாமல் இருக்கிறார்களா?" என்று கேட்கிறார்கள். தவறு இருக்கலாம். தவறு செய்தால் கண்டுபிடிக்கவும் வழி இருக்கிறது. அதேபோன்று சட்டப் பேரவை உறுப்பினர்களும் கூட தவறான கணக்கைக் கொடுக்கிறார்கள் என்றால் அதையும் கண்டுபிடிக்க—எந்த வகையில் சட்டம் போடுவது —என்பது பற்றி யோசிக்கலாம். அதில் ஒன்றும் கஷ்டமில்லை.



1968 ஆகஸ்ட் 29] [திரு. செ. மாதவன்]

இன்னொன்றையும் சொன்னார்கள். நேற்று திரு. கே. விநாயகம் அவர்கள், "Caeser's wife must be above suspicion" என்று சொன்னார்களே, அதேபோன்று இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டாமா? இப்படி கணக்குக் கொடுக்கச் சொல்வதனால் அவர்கள் மீதே அனாவசியமான சந்தேகங்கள் வளர்ந்துவிடுமே! வீண்புரளியும், வதந்தியும் கிளம்ப இது வழி ஏற்படுத்திவிடாதா? இதைக் கண்டு நாம் அஞ்ச வேண்டாமா" என்று கேட்டார்கள். அன்றைய முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களும், "வீண் புகாருக்கு இடம் கொடுக்கக் கூடாது" என்ற இதே காரணத்தைச் சொல்லித்தான் எதிர்த்தார்கள். வீண் புரளி வரும், அவதூறு வரும் என்று சொல்வது உண்மை. ஆனால் அதைத் தடுப்பதற்குத் தான் இது பயன்படும்.

சமீப காலமாகவே பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் மீது அவதூறுகளைக் கூறுவதும், புழுதிவாரித் தூற்றுவதும் அதிகரித்துள்ளது, என்னைப்பற்றிக் கூட பல புகார்கள் வந்துள்ளன.

உதாரணமாக, நான் சமீபத்தில் என்னுடைய ஊருக்குப் போய் இருந்தேன். எனக்கு என்று ஒரு சொத்தும் இல்லை, நான் சம்பாதிக்கவும் இல்லை. எனக்கு இருப்பது என்னுடைய மூதாதையர்கள் சம்பாதித்து வைத்த சொத்துக்கள்தான். அப்படி இருக்க நான் என் ஊருக்குப் போன போது, என்னுடைய தந்தையார் என்னிடம், "ஏண்டா, எங்களுக்குக்கூடத் தெரியாமல் இரண்டு லட்சம் ரூபாயில் சென்னையில் ஒரு வீடு கட்டியிருக்கிறாயாமே? உண்மையா? என்று கேட்டார்கள். எனக்கு ஒரே வியப்பாக இருந்தது. "நான் ஒன்றும் வீடு கட்டவில்லையே! யார் சொன்னார்கள்?" என்று கேட்டேன்.

அதற்கு அவர்கள், "நம் வீட்டிற்குப் பக்கத்தில் காங்கிரஸ்காரர்கள் ஒரு கூட்டம் போட்டார்கள். அதிலே பேசும்போது சட்ட அமைச்சர் சென்னையில் இரண்டு லட்சம் ரூபாயிலே ஒரு பெரிய பங்களா கட்டிவிட்டார்கள் என்று சொன்னார்கள். நீ அதுபற்றி இதுவரை என்னிடத்தில் ஒன்றும் சொல்லவில்லையே என்றுதான் கேட்டேன்" என்றார்கள். நான் என் வீட்டாரிடம், "எனக்கு அரசாங்கத்திலே தற்போது குடியிருக்க ஒரு வீடு கொடுத்திருக்கிறார்கள். ஒரு வேளை அந்த வீட்டிற்கு இரண்டு லட்சம் ரூபாய் இருக்கும் என்று மதிப்புப் போட்டு, இரண்டு லட்சத்தில் வீடு கட்டிவிட்டேன் என்று பேசியிருப்பார்கள்" என்று சொன்னேன். இப்படிப் பொய்ப் புகார்களை—வதந்திகளை—அவதூறுகளைக் கிளப்பி விடுவது அதிகரித்தே வருகிறது. ஆகவேதான், இம்மாதிரியான புகார்களுக்கு இடமளிக்காத வகையில் அவற்றைத் தடுக்கும் வகையில் நாமே கணக்குக் கொடுப்பது என்று ஏற்படுத்திக் கொள்கிற முறை பயன்படும் என்று கருதுகிறேன்.

மக்களிடையே அவதூறுகளைக் கிளப்பிவிட்டு, உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு அரசியலை வளர்க்கலாம் என்ற நிலை சமீப காலமாக வளர்ந்துவிட்டது. அதுவும் அவதூறு கூறியே பிழைக்கக்கூடிய நிலைமை வளர்ந்துவிட்டது மிகவும் துரதிருஷ்டவசமானது.

குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நான்கு நாட்களாகப் பேசினார்கள். "The questionable conduct of the Minister" என்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சொன்னார்களே, அமைச்சர்களின் மீது எந்தக் குற்றச்சாட்டை வலியுறுத்தினார்கள்? காங்கிரஸ் கட்சியில்—பெருந்தலைவரோ, சிறிய தலைவரோ எனக்குத் தெரியாது—ஒருவர் "அமைச்சர்கள் எல்லாம் லஞ்சம் வாங்குகிறார்கள், லைசென்ஸ் கொடுப்பதற்குக் கமிஷன் கேட்கிறார்கள்" என்று கூறிய பேச்சைப் படித்துப் பார்த்தேன். ஒரு வேளை அதை ஆதாரமாகக் கொண்டுதான் எதிர்க்கட்சித் தலைவர்

[திரு. செ. மாதவன்] [1968 ஆகஸ்ட் 29

அவர்கள், துண்டு, துண்டாக 11 காரணங்களைக் கொடுத்து, "The questionable conduct of the Minister" என்று குற்றம் சாட்ட வந்தார்களோ என்னவோ? வெளியில் எல்லாம் கண்டபடி சொல்கிறார்களே, அவற்றுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் ஏதாவது ஆதாரம் தருவார்களோ என்று நினைத்தேன். ஒன்றும் இல்லை. அது வெறும் புஸ்வாணமாகப் போய்விட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதே மன்றத்திலே அது மறுக்கப்படவில்லை. அமைச்சர் அவர்களுடைய ஊரில் ஆஸ்பத்திரி கட்டுவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை, சாதாரண நிலையிலே ஏற்படுத்துவதற்குப் பதிலாக பெரிய வசதியுள்ளதாக அது ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரி கட்டுவதற்காக மாநிலம் பூராவிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து பணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பணவசதி எவ்வாறு கிடைத்தது என்பதை முதலமைச்சர் அவர்கள்கூட சரியாக தன்னுடைய பதிலில் சொல்லவில்லை. திரு. பக்தவத்சலம் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் மட்டும்தான் பணம் வசூல் செய்தார். ஆனால் இப்போது மாநிலம் முழுவதிலும் இருந்து அமைச்சரின் தொகுதிக்காக வசூல் செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அதுபற்றிநான் விளக்குவதற்கு இப்படி ஒரு வாய்ப்பைத் தர வேண்டுமென்பதற்காகத்தான் குறிப்பாகச் சொன்னேன். "The questionable conduct of the Minister" என்பதைப்பற்றி குறிப்பிட்டுள்ளதைப் படித்துப் பார்த்தேன். இதில் அமைச்சர் என்ன தவறு செய்தார்? பணம் வசூலித்தாரா? ஒன்றுமில்லை. "அமைச்சர் என்றால் செகரடரி அல்லது டிபார்ட்மெண்ட் என்று பொருள்படும். டிபார்ட்மெண்ட் என்று சொல்லிவிட்டு டிப்டி ரிஜிஸ்ட்ரார் உத்தரவு போட்டார்" என்று குறிப்பிட்டார்கள். இதில் டிப்டி ரிஜிஸ்ட்ரார் போட்டதும் உத்தரவு அல்ல, ஒரு வேண்டுகோள். இதில் நடந்தது என்ன என்பது அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

பொதுமக்களின் நலனுக்காக நிதி வசூலில் அரசாங்கத் தரப்பிலே அரசாங்க அதிகாரிகளும் பங்கு பெறலாம். இப்படிச் செய்வது புதிது ஒன்றும் அல்ல. இதில் தவறும் இல்லை. அதிகாரிகள் வேண்டுகோள் விடுவது, கலெக்டர் பர்மிஷன் கொடுப்பது போன்றவற்றுக்கு அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே இருபது முப்பது உதாரணங்கள் கொடுக்க முடியும். போயும் போயும் இதை ஒரு குற்றச்சாட்டாகக் கூறியதற்கு எதிர்க்கட்சித் தலைவர் மீது பரிதாபப்படுகிறேன். ஒருவேளை அவர்மீது ஏற்பட்ட பரிதாபத்தின் காரணமாகத்தான் நமது முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லாமலேயே விட்டுவிட்டார்களோ, என்னவோ? "மருத்துவ விடுதி கட்டுவது தவறு என்று சொல்லவில்லை. இது தேவையா" என்று இப்போது எதிர்க்கட்சித் தலைவர் கேட்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னுடைய வாசகமே, "அமைச்சரின் தொகுதியிலுள்ள சிறிய ஊருக்கு இவ்வளவு செலவில், இவ்வளவு பெரிய மருத்துவ விடுதி தேவையா?" என்பது. அப்படியென்றால் டாக்டர்கள் அதிகமாக இருக்க வேண்டும் அல்லவா? அந்த ஊருக்கு பொது மக்களுடைய பணத்தைக் கொண்டு, ஏற்படுத்துவதா? நன்கொடை வசூலித்துச் செய்வதில் ஆட்சேபணை இல்லை. அதிகாரி உத்தரவு போட்டாலும் அமைச்சருக்குப் பொறுப்பு உண்டு. ஆனால், மாநிலத்தில் இருக்கும்படியான கூட்டுறவுச் சங்கங்களில் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் அமைச்சர்தான் பொறுப்பாளி. ஏன் டிப்டி ரிஜிஸ்ட்ரார் மேல் நடவடிக்கை எடுக்கக் கூடாது? எந்தெந்த இடங்களில் வசூல் செய்யப்பட்டது? திரு. பக்தவத்சலம் காலத்தில் அவருடைய மாவட்டத்தில் மட்டும்தான் வசூல் செய்யப்பட்டது.



1968 ஆகஸ்ட் 29]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று மணிக்கணக்கில் பேசினார்கள். இன்றும் மணிக்கணக்கில் பேச விரும்புகிறார்கள். பேசட்டும். ஆனால் ஒரு அரசியல் நாகரிகத்தோடு பேச வேண்டும். இதில் அமைச்சர் என்ன செய்தார் என்பதற்கு விளக்கம் தரவேண்டும். அங்கே கட்டப்படுகிற ஆஸ்பத்திரி எந்த அளவில் கட்டப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் நிர்ணயிக்கும். அங்குள்ள மக்கள் நிர்ணயிப்பார்கள்.

முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்திலே ஒரு காரியம் செய்வதற்கு அந்த மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் இருந்து மட்டும் தானே வசூல் செய்தார்கள், மாநிலம் முழுவதிலும் இருந்து இதற்கு வசூல செய்யப்படுகிறதே என்றார்கள். ஒரு உதாரணம் அல்ல, பல உதாரணங்களைக் காட்ட முடியும். அவர்கள் காலத்திலேயே மாநிலம் முழுவதிலும் இருந்து வசூல் செய்யப்பட்ட சம்பவங்கள் பல உண்டு. சர்ஜன்களுக்கு அக்காமடேஷன் கட்டுவதற்கு, இராமநாதபுரத்தில் இருந்து வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அது போலவே ராமகிருஷ்ண குடில், ராஜாஜி டி.பி. சானடோரியம், தஞ்சை சரபோஜி கல்லூரி போன்று பல காரியங்களுக்கு மாநிலம் முழுவதிலும் இருந்து வசூல் செய்யப்பட்டிருப்பதைச் சொல்ல முடியும். இப்படிச் சொல்வதனாலேயே முன்னாள் முதல் அமைச்சர் செய்தது தவறு என்று நானோ, முதல் அமைச்சர் அவர்களோ சொல்லவில்லை. அவை நாட்டு நன்மைக்காகவே செய்யப்பட்டன என்பதை ஒப்புக்கொள்கிறோம். முன்னாள் முதலமைச்சருடைய சொந்தக்காரர், குடும்பத்தினர் ஸ்தாபனத்திற்கு லட்ச ரூபாய்க்கு மேல் பல இடங்களில், பல சமயங்களில் வசூல் செய்து கொடுத்திருப்பதைக்கூட நாங்கள் தவறு என்று சொல்லவில்லை. பாலிடெக்னிக் என்றால் அதுவும் பொது நன்மைக்காகவே ஏற்படுத்தப்படுவது என்று நினைக்கிறோம். ஆனால் இப்போது நாங்கள் ஒன்றுமே செய்யாதபோது அரசாங்கத்தின் மீது பழி வாரிப்போடுவது நல்லதல்ல. இப்படிச் சொல்வது அரசியல் நாகரிகமா? அரசியல் பண்பாடா? ஆகவே தான் இப்படிச் சொல்வதற்கே இடமளிக்காத வகையில் நாம் ஒரு புது பாரம்பரியத்தை எடுத்துக் கணக்கைக் காட்டுவது என்பதை ஏற்றுக்கொள்வது நல்லது என்கிற வாதத்திற்காகத் தான் இவற்றை எடுத்து வைக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சிங்கம்புணரி கிராமத்திலே எவ்வளவு ஜனத் தொகை, அந்த ஜனத்தொகைக்கு எவ்வளவு பெரிய ஆஸ்பத்திரி கட்டியிருக்கிறார்கள். இது போல வேறு எங்காவது கட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னால் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** இதுபோல ராஜாஜி டி.பி. சானடோரியத்திற்கு வசூல் செய்திருக்கிறார்கள் என்று சொன்னேன். இப்போது இவ்வளவு பெரிதாகக் கட்டப்பட்டிருக்கிறதே என்கிறார்கள். எவ்வளவு பெரியதாக இருக்கவேண்டும் என்பதை அரசாங்க அதிகாரிகள் தீர்மானிக்கிறார்கள். மக்கள் தீர்மானிக்கிறார்கள். வசூலாகிற நிதி அளவைக் கொண்டது அது.

இப்படி எல்லாம் பல தூற்றல்களுக்கு இடமேற்படாத வகையில் ஒரு நல்ல மரபையே உருவாக்குகின்ற தன்மையில் திரு. நல்லசிவம் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே என்பதற்காக மகிழ்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் உவமை சொல்லவில்லை. ஆனால் முன்னாள் அமைச்சர் அவர்கள் ஒரு உவமை கூடச் சொன்னார்கள். "கல்லூரி ப்ரின்சிபால் ஒருவர், தான் வெளியே போகும் போது தம் மனைவியை அறையில் வைத்துப் பூட்டி சாவியை எடுத்துக்கொண்டு போவார், திரும்பி வந்தபோது திறந்து விடுவார். அந்த மாதிரி நாம் சந்தேகப்படலாமா" என்றார். சந்தேகம் எழாத சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் இந்த தீர்மானத்தின் நோக்கமே.

[திரு. செ. மாதவன்] [1968 ஆகஸ்ட் 29

'இதற்கு ஒரு கட்டாயம் வேண்டுமா? நாமே ஒரு முறையை வகுத்துக் கொள்ளக்கூடாதா" என்றார் எதிர்க்கட்சித் தலைவர். இதற்கு ஒரு கட்டாயம் வேண்டுமா, ஒரு பாரம்பரியத்தை வைத்துக் கொள்ளலாமா என்பதை நாம் முடிவு செய்து கொள்ளலாம். அதிலே ஆட்சேபணை இல்லை.

"இதற்கு அமைச்சர் அவர்கள் வழிகாட்டியாக இருக்கவேண்டும்" என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள். அதிலும் கூட எங்களுக்கு ஆட் சேபணை இல்லை. இது பற்றி வெளியிலே கூட ஒன்றுக்கொன்று முரண் பாடாகப் பேசப்படுகிறது. மாநில முதல் அமைச்சர்கள் எல்லோரும் டெல்லியில் கூடி இது பற்றி விவாதித்தார்கள். கடைசியில் ஒரு முடிவுக் கும் வந்தார்கள். "அதன்படி கோட் ஆப் காண்டக்ட் பார் மினிஸ்டர்ஸ்" என்பது உருவாக்கப்பட்டது. இங்கே இருக்கிற அமைச்சர்கள் இங்கேயுள்ள முதல் அமைச்சரிடத்தில் கணக்குகளைக் கொடுக்கவேண்டும். அவர் அதனை மேற்பார்வை செய்யவேண்டும் என்று சொன்னார்கள். ஒத்துக்கொண்டோம். இங்குள்ள முதல் அமைச்சர் மத்தியில் உள்ள பிரதம அமைச்சரிடமோ, உள்துறை அமைச்சரிடமோ கணக்குகளைக் கொடுக்கவேண்டும் என்றார்கள். அப்படி ஜி.ஓ. போட்டார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், தமிழரசுக் கழகத் தலைவர் திரு ம. பொ. சி. அவர்கள், "மத்திய அரசுக்கு மாநில அரசுகள் அடிமைகளாக இருக்கக் கூடாது" என்று எடுத்துக் கூறியதுபோல, இங்குள்ள முதல் அமைச்சர் மத்திய பிரதம அமைச்சருக்கோ, உள்துறை அமைச்சருக்கோ அடிமைப் படக்கூடிய வகையில் அவர்களிடத்தில் கணக்கைக் கொடுக்கவேண்டும் என்று சொல்வதை ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை. இப்படிச் செய்வது ஓர் அடிமை உணர்ச்சியை எழுப்பும். மாநிலங்களின் உரிமை யைப் பறிப்பதாகும் என்கிற காரணத்தினால் அந்த யோசனையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களுடைய அதிருப்தியைத் தெரிவித்தோம். இதற்கு மாற்று யோசனையை அவர்கள் இன்னமும் தெரிவிக்கவில்லை. நாங்களே யோசித்தோம். வேறு ஒரு மாநிலத்தில் முதல் அமைச்சர் அவர்கள் காபினெட்டுக்குக் கணக்குக் கொடுத்தால் போதும் என்று செய்திருக்கிறார்கள். அதைப் போலவே இங்கும் அமைச்சர்கள் முதல் அமைச்சரிடத்தில் கணக்குகளைக் கொடுப்பார்கள். முதல் அமைச்சர் தம் முடைய காபினெட்டுக்குத் தம் கணக்குகளைக் கொடுப்பார் என்பதாக வறையறுத்துக்கொள்ள பரிசீலனை செய்துகொண்டு இருக்கிறோம்.

ஆனால் இந்தக் கணக்குகளைக் சட்டமன்றத்தில் வைக்கவேண்டுமா என்பது ஒரு கேள்வி. சட்டமன்றத்தில் வைக்கவேண்டும், அதன் மூலம் பகிரங்கமாகப் பொது மக்களுக்குத் தெரியவேண்டும் என்பது ஒரு கொள் கைப் பிரச்னையாக இருக்கிறது. அது மக்களுக்குத் தேவை—ஜனநாயக பாரம்பரியத்தை நல்ல முறையில் ஏற்படுத்துவதற்குத் தேவை—என்று தான் இந்த அரசாங்கம் மனப்பூர்வமாகக் கருதுகிறது.

"லோக் பால், லோக் அயுக்த்" என்கிற நிறுவனம் கூட மத்திய அமைச்ச ரவையால் உருவாக்கப்பட இருக்கிறது. லோக்பால் என்பது அந்த ஸ்தாபனத்திற்குத் தலைமை வகிக்கிறவர் பெயர். அந்தப் பெயரே கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் எல்லோரும் இந்த ஸ்தாபனத் திற்குக் கட்டுப்பட்டவர்கள் என்று மத்திய உள்துறை கூறியிருக்கிறது. அதுவும் அங்கே இருக்கிறவர்கள் இங்கேயுள்ளவர்களைக் கட்டுப்படுத்த அனுமதிக்கக்கூடாது என்ற காரணத்தினாலேயே ஆட்சேபிக்கப்பட்டது. அது பற்றி கடிதப்போக்குவரத்து வைத்துக்கொண்டிருக்கிறோம். மாநில அதிகாரிகள் தங்கள் கணக்குகளை "லோக் அயுக்"திடம் கொடுக்கவேண்டும் என்பது. நம்முடைய மாநில அதிகாரிகளும் மத்தியில் உள்ளவர்களுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டு செயல்படவேண்டுமென்ற கருத்தை நாங்கள் எதிர்க்கின்றோம். இந்த "லோக் பால், லோக் அயுக்த்" என்கிற திட்டத்தை யே நாங்கள் எதிர்ப்பதாக வெளியே ஒரு கருத்து நிலவி வருகிறது. அது தவறாகும். நாங்கள் அந்தத் திட்டத்தை எதிர்க்கவில்லை. அதன் அடிப் படைக் கொள்கைகளை நாங்கள் ஏற்கிறோம். இந்த மாநிலத்தில் உள்ள அமைச்சர்கள், அதிகாரிகள் இவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் இந்த மாநிலத்திலேயே இருக்கவேண்டுமே தவிர வெளியாருடைய ஆதிக்



1968 ஆகஸ்ட் 29] [திரு. செ. மாதவன்]

கத்திற்கு உட்பட்டு இருப்பது என்பதனைத் தான் எதிர்க்கிறோம். அந்த நிறுவனம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதைத் தான் நாங்கள் எதிர்க்கிறோம். மாநில உரிமையை அது பறிப்பதாகும் என்பதை இந்த ஆட்சி வலியுறுத்தி வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்றையதினம் இப்படிப்பட்ட அடிப்படைக் கருத்தையே முழுமூச்சாக எதிர்த்த காங்கிரஸ்காரர்கள் இன்றைக்கு இதை ஆதரிக்கக்கூடிய நிலைமை க்கு வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். அந்த நிலைமைக்கு அவர்களைக் கொண்டுவந்த வாக்காளர் பெருமக்களைப் பாராட்டி நன்றி கூறிக்கொள் கிறேன். திரு. நல்லசிவம் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின் கருத்தை எப்படிச் செயல்படுத்துவது என்பதைப் பற்றி நாம் எல்லோரும் சேர்ந்து பரிசீலிக்கவேண்டும் என்பதில் ஆட்சேபணை இல்லை. அன்றைக்கு அந்தக் கருத்தை அறவே எதிர்த்து வாக்குப் போட்டவர்கள் இன்றைக்கு மிக அருமையாகப் பேசினார்கள்.

ஆட்சிக்குத் தகுந்தாற்போல் சிலர் மாறி மாறி எப்படி எப்படி எல்லாம் பிழைக்கிறார்கள், அரசியலை நம்பி வாழ்கிறார்கள், அரசியல் வாழ்வைப் பி.ப. 12-30
பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பது தெரியும். அரசியல்வாதி வாழ்க் கையில் தனக்கு ஏற்படக்கூடிய வாய்ப்புக்களை, தனது சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்வதை கட்டாயம் தடுத்தாக வேண்டும். ஆகவே இன்றைக்கு திரு. நல்லசிவம் கொண்டுவந்த தீர்மானத்தை காங்கிரஸ் காரர்களும் ஆதரித்திருப்பது எனக்குப் பெருமை அளிக்கிறது. ஆகவே எல்லோரும் ஏகோபித்து இந்தக் கருத்தை ஆதரித்து இருக்கிறார்கள். எல்லோரும் ஏகோபித்து ஆதரித்திருப்பது எனக்குப் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. அரசாங்கமும் இந்தக் கருத்தை வரவேற்கிறது.

திரு. இராமமூர்த்தி அவர்கள், "ஏதோ மசோதா கொடுத்திருக்கிறார்கள்" என்று சொன்னவுடன் நான் கூட நினைத்தேன் "இதுவாகத் தான் இருக்கும்" என்று. ஆனால் ஐயோ பாவம், வேறு எதையோ கொடுத் திருக்கிறார்கள் என்று தெரிந்தது. திரு. நல்லசிவம் அவர்கள் அந்த வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். அவரது தீர்மானத்தின் கருத்தை ஏற்றுக் கொண்டு அதைச் செயல்படுத்துகின்ற முறையிலே அரசுத் தரப்பினரும்; எதிர்க்கட்சித் தலைவர்களும் கூடி மிக விரைவிலே—இதிலே காலதாமதம் கூட வேண்டாம் என்ற முறையிலே—மிக விரைவிலே எப்படி எப்படி மசோதாவின் பிரிவுகளைப் போடுவது, எந்த எந்த முறைகளிலே தவறு களைக் கண்டுபிடிப்பது, எப்படித் தண்டிப்பது, தண்டிக்கின்ற அதிகாரத்தைக் கூட யாரிடம் கொடுப்பது, என்பவை பற்றி எல்லாம் விரிவாகப் பேசி முடிவு செய்யலாம்.

"ஆளும் கட்சித் தரப்பில் இருந்து கொண்டு வந்தீர்களா ?" என்று கேட்டார்கள். திரு. நல்லசிவம் அவர்கள் கொண்டுவந்திருப்பது நான் முன்பு கொண்டுவந்த நிர்மாணம் தான். முன்பிருந்த அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கு காரணமாக இருந்த கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தான் கொண்டுவந்திருக்கிறார், எதிர்க்கட்சித் தலைவர் அதற்காக வெட்கப்படலாம்.

ஆனால் இதே தீர்மானத்தை முன்பு ஆதரிக்கமாட்டேன் என்று சொன்ன கட்சியைச் சேர்ந்தவர்கூட இன்றைக்கு "இதை வரவேற்கிறேன்" என்று சொல்லக்கூடிய அந்த நல்ல வாய்ப்பை திரு. நல்லசிவம் அவர்கள் ஏற்படுத்திக்கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்ட இந்தக் கருத்திற்கான சட்டத்தை—இதற்காகப் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதில்லை— ஒரு ஆண்டிற்குள்ளாகவே கொண்டுவரலாம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரலாம்" என்றார்கள். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கொண்டு வரலாம் என்பதற்காக அவர்கள்
. . . . . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஆறு மாதங்களுக்கொருமுறை கொண்டு வருவார்கள் என்று சொல்கிருர்கள். அப்படி முறையிருக்கிறது. முதல மைச்சர் கூட அப்படிச் சொன்ஞர்கள். நாங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் சொல்கிறவற்றை எடுத்துக்கொண்டு 6- மாதங் களுக்குள் நல்ல பிள்ளைகளாக நடந்தால் அது தேவையில்லை. அப்படி யில்லாமல் மீண்டும் இப்படியே நடந்தால் அதைக் கொண்டுவருவதைத் தவிர வேறு வழியில்லை. என் தலைவிதி, கொண்டு வரத்தான்வேண்டும். ஆனல் நல்லபடியாக நடந்துகொள்வார்கள் என்ருல், புத்திசாலிகளாக நடந்துகொள்வார்கள் என்ருல் அது தேவையில்லை. ஏதோ 156 வாக்கு கள் பெற்றுத் தோற்கடித்து விட்டோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு அப்படியே நடந்துகொண்டிருந்தால் ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதிர்க்கட்சித் தலைவர் தங்களுடைய தலைவிதி எப்படியிருக்குமோ என்று வருத்தப்பட்டார்கள். அவர்கள் வருத்தப்படவேண்டாம். எனக்குத் தலைவிதியில் நம்பிக்கையில்லை யென்ருலும் அவர்கள் தலைவிதி நன்ருகவே இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தலைவிதியைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம், ஆண்டவனைப் பற்றியும் கவலைப்படவேண்டாம். நம்மைப் பற்றி நாம் கவலைப்படுவோம்.

இந்த நல்ல தீர்மானத்தின் மீது—மிக விரைவிலேயே கூடி— முடி வெடுத்துச் சட்டமாகவோ அல்லது பாரம்பரியமாகவோ—சட்ட மன்ற உறுப்பினர்கள் எந்த முடிவை எடுக்கிருர்களோ அதன்படி, அரசாங்கம் இந்தக் கருத்தை அமுலுக்குக் கொண்டுவரத் தயாராக இருக்கிறது என்பதை உறுதியாகக் கூறிக்கொண்டு அதனலே சோஷலிஸ்டு கட்சித் தலைவர் திரு நல்லசிவம் அவர்கள் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்தாது அது பற்றிய கருத்தை மட்டும் கூறி முடிப்பார்கள் என்று நமபி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** ஒரு சிறிய வருத்தம் எனக்கு. இப்பொழுது அமைச்சராக இருக்கிறவர்கள் முன்பு இந்தத் தீர்மானத்தைக்கொண்டு வந்தபொழுது நான் பேசினேன் நீங்களும் பேசினீர்கள், இப்பொழுது பேசக்கூடிய நிலைமையில் இல்லை. சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கங் களைச் சொன்ஞர்கள், அதற்கு மேலே நான் பேச விரும்பவில்லை. இந்தத் தீர்மானத்தை ஆதரித்த சகல பகுதியிலுள்ள நண்பர்களுக்கும் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு சந்தேகங்களைக் கிளப்பினூர் கள், ஒன்று அமைச்சர்கள் மட்டும் தங்களுக்குள்ளே கொடுத்துக் கொள்ளக் கூடாதா என்பது. என்னைப் பொறுத்தவரையில் நம்முடைய எஜமானர் கள் வெளியிலே இருக்கிற வோட்டர்கள்தான், மந்திரிகளும் சரியே, சட்ட மன்ற உறுப்பினர்களும் சரியே, அவர்களுக்குத் தான் முதலிலே கடமைப் பட்டு இருக்கிருேம். இந்தச் சபையின் மூலமாகப் பதில் சொல்லக் கூடிய முறையிலே இந்தத் தீர்மானம் உருப்பெறும் என்று நம்புகிறேன். இரண்டாவதாக கணக்குக் கொடுப்பதிலே சில சங்கடங்கள் இருக் கின்றன என்று சொன்ஞர்கள். அது உண்மைதான், என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து சொல்ல முடியும். வெளியிலே சொல்லி- விட்டால் மறுபடியும் கடன் கிடைக்காது. அதுபோன்றவர்கள் தங்களுடைய கணக்கைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும். கடைசியாக அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கக்கூடிய எதிர்க் கட்சித் தலைவர்களையும் சேர்த்து முடிவு எடுத்துக்கொள்ளப்படுவதற்குத் தயாராக இருக்கிருேம் என்று சொல்லியிருப்பதாலே அதைப் பற்றி நான் அதற்குமேல் ஒன்றும் சொல்ல முடியாது. ஆனல் ஆறு மாதங்களுக்குள் இது மசோதா உருவம்பெற்று சட்டமானல் நல்லது. வெளியே உள்ளவர்கள் இங்கே பேசியவர்கள் பேசிய காட்சியைப் பார்க்கும்பொழுது இந்தப் பேச்சுக்கள் எல்லாம் அவர் அவர் களது உள்ளத்திலிருந்து வந்தவை, மனிதாபிமானத்தின் அடிப்படை யிலே வந்தவை, சட்ட மன்றத்தின் கண்ணியத்தைக் காப்பாற்றிக்கொள்ளக்



கூடிய முறையில் வந்தவை என்ற அளவிலே நல்ல காட்சியாக இருந்தது. அந்த உணர்ச்சியை எல்லோருடைய பேச்சிலிருந்தும் நான் கண்டேன். ஆகையால் இது துரிதமாக இந்தச் சபை முடிவதற்குள்ளாகவே சரியான ஏற்பாட்டை மேற்கொள்ளத் தயாராக இருக்கிருேம் என்று அமைச்சர் அவர்கள் அந்த அளவுக்கு தெளிவான வாக்குறுதியைக் கொடுத்து இருக்கிருர்கள் என்பதால் நான் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வில்லை. ஆறு மாதங்களுக்குள்ளாக சட்டமாக வேண்டும். அந்த ஏற் பாட்டை சட்டஅமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையிருப்ப தால் இந்தத்தீர்மானத்தை வற்புறுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Dr. H. V. HANDE :** By way of clarification, Sir, how about having this meeting of leaders of parties in the next Assembly session ? Why not all leaders of parties meet before or during the next session and arrive at a solution ? Will the Hon. Minister give an assurance that he will arrange for such a meeting so that we may feel comfortable about it ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த முறை களைப் பற்றியெல்லாம் பல இடங்களிலே எப்படி கருத்துத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது என்று பார்த்தேன். அதிலே மன்றத்தினுடைய தலைவர் அவர்களும் சம்பந்தப்பட்டிருக்கிருர்கள். அவர்களும் அங்கத்தினராக இருக் கிற காரணத்தாலே அவர்களும் பேசவேண்டுமென்று பார்த்தேன். ஆகவே எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் கூடிப்பேசி எந்தத் தேதியை சொல் கிருர்களோ அந்தத் தேதியிலே தலைவர் அவர்களுடைய அறையிலே கூடிப் பேசலாம். இப்பொழுதேகூட மற்றக் கட்சித் தலைவர்கள் எல்லாம் கூடிப் பேசி முடிவெடுத்தால் அரசாங்கத் தரப்பிலே ஆட்சேபணையில்லை

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னுடைய ஆலோசனை என்னவென் ருல் இதைப் பொதுப்படையாக ஏற்றுக்கொள்கிருேம். இப்பொழுது அதற் குரிய மசோதாவைத் தயார் செய்து அதற்குப் பிறகு எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசினல் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தத் தேதியிலே தலைவர் அவர்கள் சொல்கிருர்களோ அந்தத் தேதியிலே பேசலாம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்த எந்த வகையிலே இருக்கலாம் என்பதற்கான குறிப்புக்களை யெல்லாம் எதிர்க் கட்சித் தலைவர்கள் தெரிவிப்பார்கள் என்ருல் அந்தக் குறிப்புகளின் அடிப்படை யிலே முடிவெடுத்து அதற்குப் பிறகு தயாரிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. நல்லசிவம் அவர்கள் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

### 2 அரசாங்கப் பணிமனைகளிலும், தொழில் நிறுவனங்களிலும தனியார் தொழிலகங்களிலும் அனுமின் இயந்திரத்தைப் புகுத்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து அரசாங்கப் பணி மனைகளிலும், தொழில் நிறுவனங்களிலும் தனியார் தொழிலகங்களிலும் அனுமின் இயந்திரத்தை (ஆட்டொமேஷன்) புகுத்துதல் பற்றி திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள். அதே பொருள் பற்றி திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும் திரு. ஏ. பாலசுப்பிரமணியம் அவர்களும் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிருர் கள். இந்த மூன்று தீர்மானங்களையும் ஒருசேர எடுத்துக்கொண்டு விவா திக்கலாம்.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, "அரசாங்கப் பணி மனைகளிலும், தொழில் நிறுவனங்களிலும், தனியார் தொழிலகங்களிலும் அனுமின் இயந்திரம் (ஆட்டொமேஷன்) புத்துவதானது நாட்டில் வளரும்

வேலை வாய்ப்பைக் குறைக்கவும், தற்போதுள்ள வேலைகளையும் குறைத்து ஆட்குறைப்புக்கும் வழி செய்யுமாதலால் ஆட்டொமேஷன் புகுத்துவதற்கு அனுமதியோ, ஆதரவோ அளிக்கக்கூடாதென்று தமிழக அரசுக்கு இப்பேரவை பரிந்துரைக்கிறது'' என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தீர்மானம் வழிமொழியப்பட்டது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, ''தனியார் மற்றும் பொதுத்துறையிலுள்ள நிறுவனங்களில் அணுமின் இயந்திரம் (ஆட்டொமேஷன்) புகுத்தப்படுவதானது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கச் செய்யுமாதலால் ஆட்டொமேஷனை தமிழகத்தில் புகுத்துவதற்கு அனுமதியோ ஆதரவோ கொடுக்கக்கூடாதென்று தமிழக அரசுக்கு இப்பேரவை பரிந்துரைக்கிறது'' என்ற தீர்மானத்தை முன் மொழிகினே.

தீர்மானம் வழி மொழியப்பட்டட்து.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் பேரவைக்கு முன் வரும்போது சிலர் நினைக்கலாம், இது ஏதோ தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை, அதிலும் குறிப்பாக ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனைச் சேர்ந்த சிப்பந்திகளின் பிரச்சினை என்று லேசாக நினைக்கலாம். இதனால் தொழிலாளர்களுக்கு வளரும் வேலை வாய்ப்பு குறைகிறது என்பது மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரத்தையே சீர்குலைக்கக்கூடிய விஷயம் இது என்பதையும் எடுத்த எடுப்பிலேயே குறிப்பிட விரும்புகிறேன். எந்த நாட்டிலும் எந்தப் புதிய திட்டத்தைக் கொண்டு வந்தாலும், புதிய மெஷின்களைக் கொண்டு வந்தாலும் அதற்கும் அந்தந்த நாட்டில் இருக்கக்கூடிய பொருளாதார நிலைக்கும் பொருத்தம் இருக்க வேண்டும். ஏதாவது ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வரும்போது அது அந்த நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்குலைப்பதாக இருக்குமானால் அப்படிப்பட்ட திட்டத்தைக் கைவிடுவதுதான் நல்லதே தவிர, அதை வற்புறுத்துவதில் பிரயோசனம் இல்லை என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அணு மின் இயந்திரத்தைப் புகுத்துவது சாதாரண விஷயமல்ல. பல நூற்றுக் கணக்கான தொழிலாளர்களோ, சிப்பந்திகளோ வேலை செய்யக்கூடிய இடத்தை ஒரு இயந்திரம் பூர்த்தி செய்கிறது. அதனால் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை போகிறது என்பது மட்டுமல்ல, அந்த இடத்தில் மேலும் மேலும் புதிதா ரெக்ரூட்மென்ட் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. நாட்டில் ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டத்தோடு கூட, தகுதிக்கேற்ற வேலையில்லாத நிலைமையும் போதுமான வேலையில்லாத நிலையும் 'அண்டர் எம்ப்ளாய்மெண்ட்' இருந்துவரக் கூடிய சூழ்நிலையில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவது நாட்டில் இருக்கக்கூடிய ஏராளமான தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் வாங்கும் சக்தி குறைந்து நாட்டில் உற்பத்தியாகக்கூடிய பொருள்களை உள்நாட்டிலேயே வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, பொருளாதார நெருக்கடி மேலும் மேலும் ஏற்படக்கூடிய நிலையும், தொழில் மந்தம் ஏற்படக்கூடிய அபாயகரமான நிலையும் ஏற்படும் என்று இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன்.

நமது மாநிலத்திலே இந்த அணு மின் இயந்திரத்தைப் புகுத்தக் கூடாது என்ற கொள்கையை இன்றைக்கு அமைச்சரவையில் இருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையிலேயே கொடுத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, கடந்த ஆண்டிலும் இந்த ஆண்டிலும் தொழிலாளர் நல கொள்கைகளைப் பற்றி விளக்கும்போது, கொள்கை அறிக்கையிலே **This Government is opposed to automation** என்று இந்த அரசு வலியுறுத்தியிருக்கிறது. நம்முடைய மாநில தொழிலாளர் நல அமைச்சர் மாநாடுகளிலே டெல்லியில் பேசும்போதும் சரி, இந்தப் பிரச்சினை ஸ்டாண்டிங் லேபர் கமிட்டியில் வரும்போதும் சரி எதிர்த்திருக்கிறார்கள். பல தொழிலாளர் மாநாடுகளிலும், குறிப்பாக ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் நடத்திய ஆண்டு விழாக் கூட்டத்திலும் பேசும்போது நம்



முடைய அமைச்சர் அவர்கள் ஆட்டொமேஷன் கூடாது என்று பேசியிருக்கிறார்கள். நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் [illegible] சரி, பல்வேறு தொழிலாளர் மாநாடுகளில், குறிப்பாக எல்.ஐ.சி. எம்ப்ளாயிஸ் யூனியன் ஆண்டு விழாவின்போது கோவையில் பேசும்போதும் சரி, ஆட்டொமேஷனால் வரக்கூடிய ஆபத்தான விளைவுகளைப் பற்றி ஏற்கனவே கூறியுள்ளார்கள். எனவே, இந்த அரசினர் சம்பந்தப்பட்ட வரையில் என்னுடைய தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுவார்கள் என்பதில் எனக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. ஏதோ இது ஒரு குறிப்பிட்ட தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினை, சிப்பந்திகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்ற முறையில் பார்க்கக்கூடாது என்பதற்காகச் சில பல உதாரணங்களை நான் கூற விரும்புகிறேன்.

(திரு. ந. தருமலிங்கம் அவர்கள் தலைமை.)

இது வேலை வாய்ப்பைத் தடுக்காது என்று பலர் கூறுகிறார்கள் அந்தக் காரணத்தை வைத்துக் கொண்டு இதைத் தடுக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கூறுகிறார்கள். உற்பத்தித் திறன் பெருகவும், துரிதமாக அபிவிருத்தி ஏற்படவும் புரட்சிகரமான இயந்திர சாதனங்கள் தேவை என்று சொன்னால் என்னுடைய கட்சியும், நானும் ஒரு புரட்சிகரமான விஞ்ஞான அபிவிருத்தியை எதிர்பார்ப்பவர்கள் அல்ல. நாங்கள் கூறுவதெல்லாம், என்னுடைய தீர்மானம் கூறுவதெல்லாம், நாட்டில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத நிலைமையும், ஏற்கனவே மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகும் 2 கோடி பேருக்கு மேல் வேலையில்லாமல் இருப்பதும், ஐந்து கோடி பேருக்குமேல் தகுதியுள்ள வேலை, போதுமான வேலை கிடைக்காமல் அண்டர் எம்ப்ளாய்மெண்டில் இருக்கிறார்கள் என்பதும் அரசாங்கத்தின் கணக்காக இருக்கும்போது, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகு நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் எங்கே இருக்கிறது என்று தேடிப்பிடித்துக் கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் வேலை வாய்ப்பையும், பொருளாதார நிலைமையையும் பாதிக்கக்கூடிய இந்த அணு மின் இயந்திரத்தைக் கொண்டு வருவது அவசியந்தானா, தேவைதானா என்பதை உறுப்பினர்களும், மற்றவர்களும் யோசிக்க வேண்டும்.

அமெரிக்கா போன்ற நாடுகளிலே, இங்கிலாந்து போன்ற நாடுகளிலே இப்படிப்பட்ட நூதனமான இயந்திரங்களைக் கொண்டு வருகிறார்கள் என்பதால் அதைப் போலவே நாமும் காப்பி அடிக்க வேண்டுமென்று விரும்புவது எந்த விதமான விபரீத விளைவைக் கொண்டுவரும் என்று யோசிக்காமலே செய்வதாகும். அமெரிக்கா நாட்டிலே கூட இன்று இதைப் பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களே, இந்த அணு மின் இயந்திரம் வந்த பிறகு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை போய்விட்டது என்று கூறுகிறார்கள். அந்த இயந்திரத்தை உற்பத்தி செய்த இண்டர்நேஷனல் பிசினஸ் மெஷின் கம்பெனியாரே ஒத்து கொள்ளுகிறார்கள். இந்த இயந்திரத்தைத் தங்களுடைய நிறுவனத்திலே புகுத்திப் பதினெட்டு மாதங்களுக்குள் 1800 தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள் என்ற கணக்கை அவர்களே காட்டியிருகிறார்கள். ஆகவே, இந்த நூதன இயந்திரத்தைக் கொண்டு வருவதால் வேலை வாய்ப்பு குறையாது என்று சொல்லுவது சரியல்ல.

அமெரிக்காவிலே 1954-ல் அணு மின் இயந்திரம் புகுத்தப்பட்ட பிறகு வளர்ந்துள்ளது. எங்கெல்லாம் தொழிலாளர்கள் குறைவாக இருக்கிறார்களோ, வேலை வாய்ப்பு அதிகமாக இருக்கிறதோ அந்தப் பகுதிகளிலே பயன்படுத்துவதற்காக இந்த அணு மின் இயந்திரத்தைக் கண்டு பிடித்து பயன்படுத்தலாம் என்ற முறையிலே இது கண்டு பிடித்து பயன்படுத்தப்பட்டது. ஆனால் பொருளாதார நெருக்கடி நிலைமையும், அரசாங்கக் கணக்குப்படி 2 கோடி பேர் வேலையில்லாமலும், 5 கோடி பேர் அண்டர் எம்ப்ளாய்மெண்டிலும் இருக்கக்கூடிய சூழ்நிலையில் நம்முடைய நாட்டில் அதைக் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை என்பதற்காகத் தான் அமெரிக்காவிலுள்ள நிலைமையைப் பற்றியும் எடுத்துக் கூறினேன்.

இது வந்தபிறகு அமெரிக்காவிலுள்ளவர்கள் பல் வேறு கமிஷன்களைப் போட்டுஇந்த அணுமின் இயந்திரம் புகுத்தப்பட்டதால் வேலை வாய்ப்பு குறைந்திருக்கிறதா இல்லையா என்று பார்ப்பதற்காக ஆராயத் தொடங்கினார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்தக் கமிஷன் நிறுவப்பட்டு வருகிறது. அவர்கள் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களைக் குறிப்பிட நான் விரும்புகிறேன். 1947-ல் இருந்து 1960 வரையில் ஆட்டோவொர்க்ஸில்" 50 சதவிகிதம் உற்பத்தி பெருகினாலும் 3·2 சதவிகிதம் அளவிற்கு வேலைவாய்ப்பு குறைந்து தொழிலாளர்கள் குறைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆட்டோ ஒர்க்கர்ஸ் டெட்ராய்ட்' நகரில் 1,60,000 பேர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு வேலை வாய்ப்பில்லாத ஒரு பயங்கர சூழ்நிலை இருக்கிறது. "ஜுவரி வொர்கர்ஸ்' 1-50-60 வரை 55 சதவிகிதம் அளவிற்கு தொழிலாளர்களுக்கு வேலை போய் விட்டது. "கம்யூனிகேஷன் வொர்க்கர்ஸ்" 1955-60 வரையில் 25 சதவிகிதம் அளவிற்கு உற்பத்தி பெருகினாலும் கூட 5·5 சதவிகிதம் தொழிலாளர்கள், கிட்டத்தட்ட 33,000 பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கணக்கை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆபீஸ் வொர்கர்ஸ் 25 சதவிகிதம் பேர்களுக்கு வேலை போய்விட்டது. கிட்டத்தட்ட 40 லட்சம் ஆபீஸ் சிப்பந்திகள், கிளார்க்குகள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ப்ளாக்ஸ்மித், பாயிலர் வொர்க்கேர்ஸ் 58-லிருந்து 60 வரையில் இரண்டு ஆண்டுகளில் $6\frac{1}{2}$ சதவிகிதம் பேர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் மூழ்கி விட்டார்கள். பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன் வொர்க்கேர்ஸ் 16 சதவிகிதம் பேர்கள், கெமிகல் வொர்கேர்ஸ் 1953-ல் இருந்து 1960 வரையில் 13,000 பேர்கள், எலக்ட்ரிகல் வொர்க்கேர்ஸ் 80,000 பேர்கள், ரெயில் ரோடு வொர்க்கேர்ஸ் 10 லட்சம் பேர்கள், 1940-லிருந்து 1960 வரை டெக்ஸ்டைல் வொர்க்கேர்ஸ் 38 சதவிகிதம் என்ற அளவில் வேலை இழந்திருக்கிறார்கள். அமெரிக்காவில் லேபர் போர்ஸ் குறைவு, வேலை வாய்ப்புக்கள் அதிகம், என்ற நிலையிலும் அந்த இடத்தில் கூட இந்த அணுமின் இயந்திரத்தைப் புகுத்தியதின் மூலம் பொருளாதாரத்தை சரிக்கட்டலாம் என்று கொண்டு வரப்பட்டு இப்போது வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் பெருகி ஏராளமான தொழிலாளர்கள், ஆபீஸ் சிப்பந்திகள் வேலை இழந்து நிற்கிறார்கள். அமெரிக்காவின் நிலையை பார்க்கும்போது நம் நாட்டிற்கு இந்த அணுமின் இயந்திரம் தேவைதானா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். யு. கே.யில் கூட இந்த நிலைதான்.

**Thomas J. Watson, President of the biggest manufacturing concern of automatic hardwares,**

அவரே இதை ஒப்புக்கொள்கிறார். நிச்சயமாக இந்த அணுமின் இயந்திரங்கள் காரணமாக தொழிலாளர்கள் வேலைகளிலிருந்து நீக்கப்படக் கூடிய நிலையும், வேலைவாய்ப்புக்கள் குறையக் கூடிய நிலையும், எதிர் காலத்தில் வேலைவாய்ப்புக்களை குறைக்கக் கூடிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது என்று அவர்களே கூறியிருக்கிறார்கள். அமெரிக்காவிலுள்ள **John Snyder, Chairman, American Foundation of Automobiles** என்ன கூறுகிறார்? இந்த அணுமின் இயந்திரங்கள் புகுத்தப்படுவது காரணமாக வாரத்திற்கு 40,000 தொழிலாளர்களின் வேலை வாய்ப்பு கெடுவது மட்டுமல்லாமல், படிப்படியாக அவர்களை நீக்கிக்கொண்டே இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். நம் நாட்டில் ஏராளமான மனித சக்தி இருக்கிறது. நம் நாட்டில் இரும்பு ஏராளமாகக் கிடைக்கிறது. நம் நாட்டில் எஃகு கிடைக்கிறது, நம் நாடு பரந்த நாடு என்றெல்லாம் சொல்கிறார்கள். இந்த சக்திகளையெல்லாம் நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். ரெயில்வேயில் பலவிடங்களில் ஆட்டொமேஷன் புகுத்தப்பட்டு வருகிறது. நம் மாநிலத்தில் குறிப்பாக சில ஆபீஸ்களில் புகுத்தப்பட்டிருக்கிறது. நம் மாநிலத்தில் கூட படிப்படியாக தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய பல்வேறு பகுதிகளில் கூட இது புகுத்தப்பட்டு வரும் சூழ்நிலை இருக்கிறது. பலயிடங்களில் புகுத்தப்படுகின்றன. காங்தொழிலாளிகளை எடுத்துக் கொள்வோம். நான்கு மைல்கள் பத்து காங்க் தொழிலாளிகள் வேலை செய்யவேண்டும். ட்ராக்குகள் எல்லாம் சரிவர



பழுதுபார்க்க முடியாத சூழ்நிலையில் ஏராளமான ரெயில் விபத்துக்கள் ஏற்படுவதைப் பார்க்கிறோம். ஒரு மெஷினைக் கொண்டு வந்தால் அது கிட்டத்தட்ட பல நூற்றுக்கணக்கான ஸ்லீப்பர்களை ஒரு மணி நேரத்தில் அகற்றி விடுகிறது, பல நூற்றுக்கணக்கான ஸ்லீப்பர்களை ஒரு மணி நேரத்தில் போட்டு விடுகிறது, நூற்றுக்கணக்கான மைல் ட்ராக்கை ஒரு மணி நேரத்தில் பழுது பார்த்து விடுகிறது. ஆகவே இந்த ஆட்டொமேஷன் இயந்திரம் வந்தால் ஏராளமான தொழிலாளிகளுக்கு வேலை போகக்கூடிய ஒரு நிலை ஏற்படும். ஆக, இந்த ஆட்டேமேஷன் இயந்திரம் கொண்டுவரப்பட்டால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். இது "லேபர் ஸேவிங் திட்டம்" என்று சொல்லப்படுகிறது. நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கோவையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது இது "லேபர் ஸேவிங் திட்டம்" அல்ல, இது "லேபர் டிவோவரிங்" திட்டம், தொழிலாளர்களை விழுங்கக் கூடிய திட்டம் இது என்று வெகு அழகாக குறிப்பிட்டிருக்கிறார்கள். பல்வேறு மாநிலங்களில் இது படிப்படியாகப் புகுத்தப்பட்டு வருகிறது. இதுவரையில் இவ்விதமான இந்தியா முழுவதும் 31 வித இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு சொல்கிறேன். நம் நாட்டில் பத்து ஆண்டுகளுக்கு முன்பாக டாட்டா கம்பனியில் கொண்டுவரப்பட்டிருக்கும் அணுமின் இயந்திரம், ஸிடிஸி 3600 என்று சொல்லும் இயந்திரமாகும். அந்த அணுமின் இயந்திரம் அந்த இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் கொண்டுவரப்பட்டது. ஒரு விநாடியில் ஆறு லட்சம் கூட்டல் கழித்தல், இரண்டு லட்சம் பெருக்கல் வகுத்தல், அதுவும் 15 டிஜிட்டில், செய்யக்கூடியது அது. பத்து வருடங்களுக்கு முன்பாக கம்ப்யூட்டர்ஸ் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் கொண்டு வரப்பட்ட பழைய மிஷின் அது. அதன் சக்தியே இந்த அளவிற்கு இருக்கிறது என்றால், இந்த விஞ்ஞான காலத்தில் அந்த மெஷினை பல மாறுதல்களுக்கு உட்பட்டிருக்கும் நிலையில் அதன் சக்தி எவ்வளவு தூரம் இருக்கும் என்று பாருங்கள். அப்படிப்பட்ட ஒரு மெஷின் வந்தால் எவ்வளவு தொழிலாளர்கள், எவ்வளவு சிப்பந்திகள் வேலை இழக்க நேரிடும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஐபிஎம் 7903 என்ற கம்ப்யூட்டர் $1\frac{1}{2}$ லட்சம் தொழிலாளர்கள் ஒரு வாரததிற்கு செய்யும் வேலையை ஒரு மணி நேரத்தில் செய்து முடிக்கிறது. அதன் விலை கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய். நம் நாடு இருக்கின்ற நிலையைப் பற்றி சட்டமன்றத்தில் பேசுகிறோம், பொதுக்கூட்டங்களில் பேசுகிறோம். விவசாய அபிவிருத்திக்குப்போதுமான பணம் செலவு செய்ய முடியவில்லை, லிப்ட் இரிகேஷனுக்கு அதிகப் பணம் ஒதுக்க முடியவில்லை என்ற நிலை இருக்கிறது. அந்த நிலையில் இரண்டு கோடி, மூன்று கோடி ரூபாய் கொடுத்து தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டக் கூடிய மெஷின்களை வாங்குவது என்பது நாட்டின் பொருளாதாரத்திற்கு ஆபத்தா இல்லையா என்பதை உணரும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பணத்தை ஏராளமான கிணறுகள் வெட்ட பயன்படுத்தலாம். அந்தப் பணத்தை நம் விவசாய அபிவிருத்திக்காக பயன்படுத்தலாம். ஆகவே, இந்த ஆட்டொமேஷனைப் புகுத்துவது மிகவும் ஆபத்தானது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம் பொருளாதார நெருக்கடியை மேலும் அதிகப்படுத்தும் இந்த ஆட்டொமேஷன் திட்டத்தைப் புகுத்துவது மிகவும் ஆபத்தானதாகும். இதை கொள்கை ரீதியாக நம் அரசாங்கம், குறிப்பாக தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும் கூட மத்திய அரசும், வேறு சில மாநிலங்களும் இதை ஏற்றுக்கொள்ளாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த அணுமின் இயந்திரங்கள் பல மாநிலங்களில் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இன்று நம் மாநிலத்தில் கூட ரெயில்வே ஜெனரல் மானேஜர் ஆபீஸில் இருக்கிறது. ஐ.சி.எப்.ல் ஒரு இயந்திரம் இருக்கிறது. தனியார் துறையில் பின்னி ஆண்டு கோ-வில் இருக்கிறது. ஷாவாலஸில் சிறிய அளவில் ஒரு இயந்திரம் இருக்கிறது. நம் மாநில அரசாங்க அமைச்சர்கள் கூறினார்கள், ஆட்டொமேஷன் புகுத்தப்படுவதை நாங்கள் எதிர்க்கிறோம் என்று.

ஆனால், நடைமுறையிலே பார்த்தால் பல்வேறு மாநிலங்களிலும் சரி, அல்லது இந்த மாநிலத்திலும் கூட மூன்று, நான்கு இடங்களிலே இப்படிப்பட்ட பின் இயந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. விடாப்பிடியாகப் பொதுத்துறையிலே பல்லாயிரக்கணக்கான ஆட்களுக்கு வேலை வாய்ப்பைக் குறைக்கும் வகையில் செய்துகொண்டு வருகிறார்கள். ஒரு பக்கத்தில் ஆட் குறைப்பு ஏற்படாது என்ற வாக்குறுதி கொடுக்கப்பட்டு வருகிறது. 1957-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11, 12 தேதிகளில் கூடிய இந்தியன் லேபர் முக்கூட்டு மாநாட்டில், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், முதலாளிகளும் சேர்ந்து பேசி ஏற்றுக்கொண்ட பிறகுதான் நூதன இயந்திரங்கள் கொண்டுவரப்பட வேண்டும், எந்த விளைவுகளையும் இரு சாராரும் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு இருந்தால்தான், இப்படிப்பட்ட மாற்றம் செய்ய வேண்டும் என்று தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. தனியார் துறையிலும் சரி, பொதுத்துறையிலும் சரி அந்த முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதா என்றால் கிடையாது. தொழிலாளர்களைக் கலந்து பேசாமல், தொழிலாளர் பிரதிநிதிகளையோ, தொழிற்சங்கப் பிரதிநிதிகளையோ கலந்து பேசாமல் இந்தத் திட்டத்தைப் புகுத்திக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இன்று அவர்கள் 'ரிட்ரென்ச்மென்ட்' அதாவது ஆள்குறைப்பு இல்லாமல்தானே இவ்வாறு செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இன்றிருக்கும் ஆட்களை உடனடியாக ஆள்குறைப்பு செய்வது இல்லை, படிப்படியாக ஆள்குறைப்பு செய்து வருகிறார்கள். எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு எப்படி இருக்குமென்றால், இன்று 22,000 தொழிலாளர்கள் ஒரு ஆயில் கம்பெனியில் அல்லது இந்தியன் ஆயில் கம்பெனியிலேயே இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்தியன் ஆயில் கம்பெனியில் 1960-61-இல் 22,000 தொழிலாளிகள் இருந்தார்கள் என்றால் இன்றைக்கு 13,000 தொழிலாளிகள்தான் அந்தக் கம்பெனியில் வேலை செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அங்கு ஒரு உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது, ஆள்குறைப்பு செய்யாமலேயே இதைச் செய்கிறோம் என்று. ஆனால் அதே சமயத்தில் ஆட்குறைப்பைச் செய்வதற்கு, வேறு ரூபத்தில் செய்வதற்கு சில யோசனைகளைச் சொல்லி, தொழிலாளர்களையும் கவர்ச்சி செய்யக்கூடிய சில திட்டங்களை வைத்திருக்கின்றார்கள். ஒரு தொழிலாளி, அல்லது ஒரு சிப்பந்தி இன்னும் 30 ஆண்டுகள் பணிபுரிய வேண்டுமென்று வைத்துக்கொள்ளுங்கள். அவர் 55, 60 வயதுவரை வேலை செய் வேண்டுமென்றால், இன்றைக்கு அவருக்கு 40 வயதுதான் ஆகி, இன்னும் 20 வருஷங்கள் பாக்கியிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த ஆயில் கம்பெனிக்காரர் அந்தச் சிப்பந்தியைக் கூப்பிட்டு, 20 ஆண்டுகளில் நீங்கள் சம்பாதிக்கக்கூடிய சம்பளத்தை இன்றையதினமே கொடுத்து விடுகிறோம், 20 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைக்க வேண்டிய பிராவிடெண்ட் தொகையை இப்பொழுதே உங்களுக்குக் கொடுத்து விடுகிறோம், 20 ஆண்டுகளுக்குப் பிறகு உங்களுக்குக் கிடைக்க வேண்டிய 'ரிடையர்மெண்ட் பெனிஃபிட்' எல்லாவற்றையும் உங்களுக்கு இப்பொழுதே கொடுத்து விடுகிறோம், நீங்கள் வேலையைவிட்டுப் போய் விடுகிறீர்களா என்று அவர்களின் 'ஆப்ஷனை' கேட்கிறார்கள், அவ்வாறு விலக விருப்பமுள்ளவர்கள் தெரிவிக்கலாம் என்று நோட்டீஸ் போடுகிறார்கள். இன்றிருக்கும் நிலைமையில் தொழிலாளர்கள் என்ன நினைக்கிறார்கள்? இருபது ஆண்டுகள் வேலை செய்து சம்பாதிக்கும் பணத்தை, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு கிடைக்கக்கூடிய 'பெனிஃபிட்டை" இப்பொழுதே கொடுத்து விடுகிறார்களே என்று சொல்லி, அதைவிட இது ஆதாயம் என்று நினைத்து இவர்கள் அந்தப் பணத்தைப் பெற முன் வருகிறார்கள். பெற்ற பிறகு அவர்கள் என்னென்ன நினைக்கிறார்கள்? வேறு ஏதாவது தொழிலுக்குப் போகலாம் என்று நினைக்கிறார்கள். வேறு இடத்திலே எப்படி வேலை கிடைக்கும் என்பது நமக்குத் தெரியும். அடுத்த ஆண்டு அதே முதலாளிகள், சிப்பந்திகளிடம் இருபது ஆண்டு சம்பளம் மட்டும்தான் கொடுப்போம், கிராஜுவிடியோ அல்லது வேறு சில 'ரிடையர்மெண்ட் பெனிஃபிட்டோ' கிடையாது இதற்கு உடன்பாடா என்று கேட்கிறார்கள். உடனே அங்குள்ளவர்கள் என்ன நினைக்கிறார்கள், சென்ற ஆண்டு சென்றவர்கள், 20 ஆண்டு சம்பளம், பஞ்சப்படி, 'ரிடையர்மெண்ட் பெனிஃபிட்' எல்லாம் அனுபவித்திருக்கின்றார்கள். ஆனால் இந்த ஆண்டு வெறும்



சம்பளம் மட்டும்தான் கிடைக்கும், வேறுவிதமான "ரிடையர்மெண்ட் பெனிபிவிட்" கிடைக்காது என்று சொல்லுகிறார்கள், அடுத்த ஆண்டு போனால் இன்னும் குறைக்கப்பட்டுவிடும் என்று அஞ்சி, மேலும் மேலும் விண்ணப்பங்கள் குவிந்து, நாங்கள் இதை வாங்கிக்கொண்டு சென்று விடுகிறோம் என்று நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் வருகின்றன. அதற்கு அடுத்த ஆண்டு, இருபது ஆண்டு சம்பளத்திற்குப் பதிலாக 15 ஆண்டுகள் சம்பளம்தான் கொடுக்கப் போகிறோம் என்று சொல்வார்கள், இப்படி எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் சென்றால் அதிகப்படியான பணத்தை வாங்கிக்கொண்டு செல்ல முடியும் என்ற அந்த ஒரு "டெம்ப்டேஷனை" உண்டு பண்ணி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிலிருந்து அனுப்பப்படுகிறார்கள். சட்டத்திற்குள்ளேயே செய்கிறோம், ஆட்குறைப்பு இல்லாமலேயே செய்கிறோம் என்று கூறி இப்படிப்பட்ட விபரீதமான திட்டங்களையெல்லாம் அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆயில் கம்பெனிகள் என்றால் இந்தியா பூராவும் இக்கம்பெனிகள் இருக்கின்றன. இங்கிருக்கக்கூடிய ஒரு சிப்பந்தியை அல்லது தொழிலாளியை டெல்லிக்கு மாற்றுவது, கல்கத்தாவிலிருக்கக்கூடிய சிப்பந்தியை இராஜஸ்தானுக்கு மாற்றுவது, இப்படியெல்லாம் செய்வதாலே அவர்களுக்குச் சீதோஷ்ண நிலை ஒத்துவராததனாலேயோ அல்லது வேறு பொருளாதார சூழ்நிலை இல்லாத காரணத்தினாலேயோ அந்தத் தொழிலாளர்கள் அங்கு போக விருப்பப்படவில்லை என்றால் தானாகவே "டிஸ்மிஸ்" செய்யப்படுகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட ஒரு மாற்றுதல் உத்தரவைப் போட்டுவிட்டு "ஆயில் கம்பெனிகள்" எங்கிருந்தாலும் போக வேண்டியதுதானே என்று இங்கிருந்து டெல்லிக்கு மாற்றுவது, கல்கத்தாவிலிருப்பவரை ஒரிஸ்ஸாவிற்கு மாற்றுவது என்று இப்படி வேறு மாநிலங்களுக்கு மாற்றினால், இந்தப் பரந்த நாட்டில் எந்த மாநிலத்திற்கு வேண்டுமானாலும் செல்ல வேண்டுமென்று ஒரு மாற்றத்தையும் செய்தால் அதற்கு விருப்பப்படமாட்டார்கள், அதன் மூலம் பல பேரை வெளியேற்றலாம் என்பதற்குத்தான் இது பயன்படும். ஒருபக்கத்தில் தனியார் துறையிலும் சரி, பொதுத் துறையிலும் சரி, நாங்கள் 1957-இல் நிறைவேற்றப்பட்ட முக்கூட்டு மாநாட்டின்படி, அதன் பிரகாரம்தான் செய்கிறோம், யாரையும் ஆட்குறைப்புச் செய்யவில்லை, தாங்களே விருப்பப்பட்டு ஓய்வு பெற்றுச் செல்லுகிறார்கள் என்று கூறுகிறார்கள். அத்தகைய ஒரு "டெம்ட்டேஷனை" உண்டு பண்ணி ஏராளமானவர்களைப் படிப்படியாக கிளப்பத் திட்டம் செய்கிறார்கள்.

அடுத்தபடியாக இரயில்வேயை எடுத்துக்கொண்டால், நம் கண்முன்னாலே நடக்கக்கூடிய விஷயத்தைப் பாருங்கள். "ஜெனரல் மானேஜர் ஆபீசில்" இருக்கக்கூடியதுதானே என்று சிலர் நினைக்கலாம். இங்கு என்ன செய்யப்படுகிறது என்றால், எதிர்காலத்தில் வேலை வாய்ப்பு குறைப்பதற்கான திட்டம் நிறைவேற்றப்படுகிறது. ரயில்வே ஜெனரல் மானேஜர் ஆபீசில் பல குமாஸ்தாக்கள் அவர்கள் வேலை நேரத்திற்குப் பிறகு சென்ட்ரல் ஸ்டேஷனில் டிக்கெட் விற்கச் சொல்லப்படுகிறார்கள். 25 பேர்களுக்கு "பேட்ச் பேட்சாக" டிக்கெட் எக்ஸாமினர் டிரெயினிங் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு ஓவர் டைம் சம்பளம் கொடுக்கப்படுகிறது. 5 மணி ஆகிவிட்டால் மீதியிருக்கக்கூடிய நேரத்தில் இந்த டிரெய்னிங் கொடுக்கப்படுகிறது. ஒரு பக்கத்தில் ஜெனரல் மானேஜர் ஆபீசில் இந்த இயந்திரம் புகுத்தப்பட்டிருப்பதால், 5,000 சிப்பந்திகள் இருக்கிறார்கள் என்றால். 500 சிப்பந்திகளாகச் குறைக்கப்பட்டு மீதி 4,500 சிப்பந்திகள் படிப்படியாக வெளியேற்றப்படுகிறார்கள். இப்படி ஒரு பக்கத்தில் நடக்கும்பொழுது இன்னொரு பக்கத்தில் என்ன நடக்கிறது ? ஓவர் டைம் கொடுத்து இந்த வேலையில் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இப்படி டிக்கெட் எக்ஸாமினர் டிரெய்னிங் கொடுப்பதால் அந்த வேலை காலியாகும்போது இவர்களே அந்த வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள். இவ்வாறு செய்வதால் "ஃபர்தர் ரெக்ரூட்மெண்ட்" செய்ய வழியில்லை.

இதே போல இண்டக்ரல் கோச் ஃபேக்டரியிலும் அணு மின் இயந்திரம் உள்ளது. இவை பற்றி ஒன்று கேட்கப்படலாம். நம்முடைய மாநில அரசினுடைய வரம்புக்கு, அதன் சக்திக்கு உட்பட்ட தொழில் நிறுவனங்களிலே நாம் கொண்டுவராமல் இருக்க ஏற்பாடு செய்ய முடியும். ஆனால் மத்திய சர்க்காருடைய துறைகளிலே நாம் எப்படித் தலையிட முடியும் என்ற கேள்வி எழலாம். அதற்கு நான் என்ன பதில் சொல்ல ஆசைப்படுகிறேன் என்றால், மத்திய சர்க்காரினுடைய துறையாக இருந்தாலும்,இந்த ரிஜியனில் பிரதேசத்தில் நடக்கக்கூடிய, தொழில். இரயில்வே என்றால் தமிழ் மாநிலம் பூராவும் ஓடக் கூடியது. அதில் 'எலக்ட்ரானிக் கம்ப்யூடர்ஸ்' வைத்தால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும், சிப்பந்திகளும் குறைக்கப்படுகிறார்கள் என்றால், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுத் தொழில் அமைதியின்மை ஏற்படுகிறது. ஏராளமான, ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்துவிடுகிறார்கள் என்று சொன்னால், அவர்களை நம்பி இருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ வழி இன்றித் தவிக்கின்றது என்று சொன்னால், அவர்களுக்கு வாங்கும் சக்தி இல்லாத நிலைமை ஏற்படுகிறது என்று சொன்னால், அதனால் இங்கு தொழில் நெருக்கடியும், மந்தமான நிலைமையும் மேலும் மேலும் ஏற்படுகிறதென்றால், அவற்றைச் சமாளிக்கும் பொறுப்பு யாருடையது? நம் மாநில அரசினுடையது அல்லவா?

(1) இந்தப் பிரதேசத்தில் பணியாற்றக்கூடிய மத்திய அரசாங்கத்தினுடைய நிறுவனம் எதுவாக இருந்தாலும் சரி, அங்கு இப்படிப்பட்ட காரணத்தினால், 'லேபர் அன்ரெஸ்ட்' ஏற்படுகிறது என்று சொன்னால், அதன் காரணமாக இந்தப் பிரதேசத்தில் சட்டம், அமைதி கெடக் கூடிய நிலையும் வருகிறது. (2) இந்தப் பிரதேசத்தில் செயலாற்றக்கூடிய ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனாக இருந்தாலும் சரி, ரெயில்வேயாக இருந்தாலும் சரி, வேறு எந்த மத்திய நிறுவனமாக இருந்தாலும் சரி, இந்தப் பிரதேசத்தில் இருக்கக் கூடிய ரிசோர்ஸஸ்-ஐத்தான், வருவாயைத்தான் பயன்படுத்துகின்றன. இங்கிருந்து அவர்கள் எடுத்துக்கொண்டு செல்வதால் சமுதாயக் கடன் உண்டு, இந்தப் பிரதேசத்தில் சோஷியல் ஆப்ளிகேஷன் அவர்களுக்கு உண்டு என்ற முறையிலே எந்த பொதுத் துறையாக இருந்தாலும் நம்முடைய எல்லைக்குள் இப்படிப்பட்ட நூதன இயந்திரங்கள் புகுவதன் மூலமே தொழில் வளர்ச்சியை அவர்கள் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால் அதை எதிர்த்துக் கண்டிப்பாக உத்திரவிடுவதற்கு நம்முடைய அரசாங்கம் முன்வர வேண்டும். இல்லையென்று சொன்னால் நம் தலையில் சுமந்து கொண்டு இதைப் பராமரிப்பதற்கு நம்மால் முடியாது. அவர்களால் ஏற்படுத்தக்கூடிய கொடூரமான விளைவுகளை மாநில சர்க்கார் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்கள் எங்களுடைய எல்லைக்குள் இதைக் கொண்டுவரக் கூடாது என்று சொல்வதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. இப்படிப்பட்ட கரூர் நிலைமைகள் முன்பிருந்த மேற்கு வங்காள சர்க்காரால் கொண்டுவரப்பட்டது. அந்த சர்க்காரினுடைய தொழிலாளர் நல அமைச்சர் எங்களுடைய எல்லைக்குள் இதைக் கொண்டுவரக் கூடாது என்று சொன்னார்கள். ஏன், சுதந்திரா கட்சி ஆட்சியில் இருக்கக்கூடிய ஒரிஸா மாநிலத்தில் கூட, எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்தப் பொதுத் துறை நிறுவனமாக இருந்தாலும், அது ரெயில்வேயாக இருந்தாலும் சரி, எல்.ஐ.சி. ஆக இருந்தாலும் சரி, எங்கும் இப்படிப்பட்ட அணு மின் இயந்திரங்களைப் புகுத்தக் கூடாது என்ற ஒரு தீர்மானத்தை, ஒரு கொள்கையை அந்த அரசு கடைப்பிடித்து வருகிறது. எனவேதான் நமக்கு அந்த உரிமை உண்டு. எனவே நம்முடைய மாநில அரசாங்கம், திட்டவட்டமாக ஒரு முடிவு எடுக்க வேண்டும். ஐயோ, பொதுத் துறை நிறுவனமாயிற்றே என்று கவலைப்பட வேண்டிய அவசியம் இடையாது. தொழிலாளர்களை அவர்களுடைய இன்னலிலிருந்து, அவர்களுடைய வேதனையிலிருந்து மீட்க வேண்டியது நம்முடைய கடமை. அவர்களுடைய பொருளாதார நிலைமைக கெடாமல் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை. சட்டமும் அமைதியும் கெடுவதிலிருந்து பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை. எனவே, இந்த நாட்டிலிருந்து கொண்டு செல்லக் கூடிய வரவு இந்த நாட்டு மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற



முறையிலே, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைமையிலே இருக்கிற எந்தப் பொதுத் துறையிலும் அதை எதிர்த்து நம்முடைய கடமையைத் திட்டவட்டமாக நாம் நிறைவேற்ற வேண்டும். நம்முடைய சக்திக்கு அப்பாற்பட்டது என்று நினைக்க வேண்டிய அவசியம் இடையாது என்று இந்த சமயத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இந்த அணு மின் இயந்திரம் புகுத்துவது சம்பந்தமாக ஏதோ இது தொழிலாளர்களுடைய பிரச்சினை, அதிலும் எல். ஐ. சி. சிப்பந்திகளுடைய பிரச்னை என்று கருதி வந்த நாட்டு மக்களுடைய கவனத்தைப் பூராவும் இதில் திருப்பிட, இதனுடைய கடுமையான விளைவுகள் என்ன என்ன என்று எடுத்துக் காட்டுவதற்கு முன்வந்த ஸ்தாபன சிப்பந்திகள் இன்ஷூரன்ஸ் சிப்பந்திகளாவர். அகில இந்திய இன்ஷூரன்ஸ் சிப்பந்திகள், எல். ஐ. சி.யினுடைய சிப்பந்திகளாவர். அவர்கள் தான், ஆட்டமேஷன், 'ஆட்டமேஷன், ஆட்டமேஷன்', என்று சொல்லக் கூடிய இந்த நிலைமைகளைத் தொடர்ந்து பல ஆண்டுகளாக பலவிதமான கிளர்ச்சிகளை நடத்தி, நாட்டு மக்களுக்கு மட்டும் அல்ல, தொழிற்சங்கங்களுக்கு மட்டும் அல்ல, எல்லோருக்கும் இந்த நிலைமையினால் ஏற்படும்—ஏற்படக்கூடிய கொடிய விளைவுகளை எடுத்துக் காட்டினார்கள். பல்வேறு 'கன்வென்ஷன்கள்' நடத்தப்பட்ட காலத்தில் எல்லாம் 'ஸ்டேண்டிங் லேபர் கமிட்டிகள்' நடத்தக்கூடிய காலத்தில் எல்லாம் பல்வேறு விதமான மகஜர்களை அந்த அந்த கால கட்டங்களில் கொடுத்து, அதனால் வரக்கூடிய ஆபத்தை, விளைவுகளை எடுத்துக்காட்டி, இது நிறுத்தப்பட வேண்டுமென்று இந்தியா முழுவதிலும் கிளர்ச்சி செய்திருக்கிறார்கள். தமிழக சிப்பந்திகளுடைய பங்கும் இதற்குக் குறைந்தது அல்ல. எனவே, முதல் முதலாக இதன் விளைவுகளை ஆபத்துக்களை எடுத்துக் காட்டியவர்கள் அவர்கள் என்ற முறையிலே இந்த சமயத்திலே அவர்களுக்கு நன்றி தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கடுத்தப்படியாக, இதனைப் பற்றி எடுத்துக் காட்டியவர்கள், தமிழக மாநிலத்திலே இரயில்வே சிப்பந்திகள். 'ஆட்டோமேஷன்' என்ற முறையிலே ஏற்படும் விளைவுகளைப் பற்றி பல்வேறு இடங்களில் விழுப்புரத்திலேயும் ஜெனரல் மானேஜர் ஆபீஸிலும் கிளர்ச்சி நடத்தினார்கள். இருப்பினும்கூட அது புகுத்தப்பட்டிருக்கிறது, 1965-லும், 1967-லும் நடத்தப்பட்ட இரண்டு கன்வென்ஷன்களிலும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எல்லாம் சேர்ந்து இந்த ஆட்டோமேஷன் புகுத்துவதனை எதிர்த்து கன்வென்ஷனை நடத்தினார்கள்—ஏகமனதாக இந்த நாட்டிற்குள் ஆட்டோமேஷன் தற்போதுள்ள நிலைமையில் தேவையில்லை என்பது எடுத்துக்காட்டப்பட்ட பிறகும் கூட பல்வேறு இடங்களில் இது புகுத்தப்பட்டு வருவது வருந்தத்தக்கது.

இன்னொரு காரணம் சொல்லப்படுகிறது. இப்படி எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டர்ஸ் வரவழைப்பதன் மூலமே, உற்பத்திச் செலவைக் குறைத்துக் கொள்வதன் மூலம் நாம் அன்னிய செலாவணியைப் பெற முடியும் என்று சொல்லப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா பல தொழில்களைப் பரிசீலித்து, இந்த எலெக்டிரானிக் கம்ப்யூட்டர்ஸ் வரவழைத்து தொழில் நடத்துவதன் மூலம் ஏதாவது அன்னிய செலாவணியை நாம் பெற்றிருக்கிறோமா அல்லது அன்னிய செலாவணியை இழந்திருக்கிறோமா என்பதைக் கவனித்தது. அந்த ரிசர்வ பாங்க் ஆஃப் இந்தியா கொடுத்த கணக்கை நான் சொல்லுகிறேன். 1960-64-ல் டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரியலில் மட்டும் ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் ரூ. 344 கோடி கிடைத்தது ஆனால் அதே சமயத்தில் பருத்தி மெஷின்கள் இரசாயன பொருள்கள், டைஸ், போன்ற சாமான்களை வாங்குவதற்காக நாம் ரூ. 538 கோடி செலவழித்திருக்கிறோம். எனவே ரூ. 344 கோடி இதனால் கிடைத்தாலும் ரூ. 538 கோடி நாம் அந்த குறிப்பிட்ட காலத்திலே செலவழித்ததன் காரணமாக ரூ. 194 கோடி நமக்கு போயிருக்கிறதே தவிர அந்த தொழில்களில் நாம் அன்னிய

செலாவணி சம்பாதிக்கவில்லை என்பதை அவர்களே கூறி இருக்கிறார்கள் எனவேதான் இந்தக் காரணமும் பொருந்துவதாக இல்லை. ஏதோ மத்தியிலே இருக்கக்கூடிய அமைச்சர்கள் அமெரிக்காவுடனும், பிரிட்டனுடனும் உடன்பாடு செய்து கொண்டு எப்படியாவது பல தொழில்களை இங்கு இருக்கக்கூடிய நிலைமையில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு அந்த ஒப்பந்தத்தினுடைய அடிப்படையிலே இது செய்யப்படுகிறதே தவிர, இது நாட்டினுடைய தொழில் அபிவிருத்திக்கோ, செழுமைக்கோ உதவாது என்பதை நான் ஏற்கனவே எடுத்துக்காட்டியுள்ளேன்.

நமக்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. நான் ஆரம்பத்திலே கூறியபடி அளவுகடந்த தொழிலாளர்கள் இருக்கிறார்கள். உதாரணத்திற்காக நான் ஒன்று சொல்லுகிறேன். இங்கு நிலக்கரி கிடைக்கிறது, இரும்பு கிடைக்கிறது. அதனை நாம் உபயோகப்படுத்தி நம்முடைய நாட்டிலே பல்வேறு விதமான தொழில்களை செய்து அதன் மூலமாக வெளிநாட்டிலிருந்து இயந்திரங்கள் இறக்குமதி செய்வதற்குப் பதிலாக இங்கேயே நம்முடைய தொழில்களை முன்னேற்றலாம். அதற்கு வாய்ப்புகள் இருக்கக் கூடிய காலத்திலே அன்னிய உதவியை எதிர் பார்க்க வேண்டிய அவசியமே கிடையாது. இதனால் இரயில்வே போன்ற இடங்களில் டீசலைக் கூட எதிர்க்கிறார்கள். எந்த ஆயில் கம்பெனிக்கும் நாம் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. இரும்பு, நிலக்கரி கிடைக்கக்கூடிய காலத்திலே இரயில்வே லைனைப் போடுவதற்குரிய தொழிலாளர்கள் சக்தி நம்மிடம் இருக்கிறது. நாம் அவைகளைப் பயன்படுத்தி, அந்த அடிப்படையிலே செய்யலாம். டீசல் வண்டிகள் வேண்டாம், எலெக்ட்ரிக் ட்ரெயின் கூட வேண்டாம் என்னும் நிலை இருக்கிறது. துரிதப் போக்குவரத்துக்கு நல்லது என்று சொன்னாலும்கூட, இன்றைக்கு இருக்கக்கூடிய ஏராளமான லேபர் ஃபோர்ஸை பயன்படுத்த வேண்டும். இந்த மெட்ரியேல்ஸ் இந்த நாட்டிலே கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தாலேதான் நமக்கு வேலை போய் விடுகிறதே என்ற ஆபத்தினால் தான் நமது இரயில்வே தொழிலாளர்கள் கூட இதற்கு எதிர்ப்பு மனப்பான்மை காட்டி வருகிறார்கள். அடிப்படையிலே இந்தப் ப்ரசினைச்யை நான் எதிர்க்கவில்லை. நான் சொல்வதெல்லாம், இன்றைக்கு இந்த நாட்டில் ஆடோமேஷன் புகுத்தப்படுவதற்கு சந்தர்ப்பம் கிடையாது. நம்முடைய முதல் அமைச்சர் கோவையில் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக பேசும்பொழுது சொல்லியிருக்கிறார் 1966-1967-ல் கூட அல்ல, 1968-ல் கூட அல்ல, இந்த நாடு இன்றைக்கு ஆடோமேஷனைப் புகுத்தக்கூடிய நிலையில் இல்லை. இன்னும் 2,000 ஆண்டுகளுக்குப் பிறகு கூட ஆடோமேஷன் இந்த நாட்டில் கொண்டுவரக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்குமா என்பது சந்தேகம், என்ற முறையில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். எனவே தான் இன்றைக்கு ஆடோமேஷன் இந்த நாட்டில் புகுத்தப்படுவது அவ்வளவு உசிதம் அல்ல, அதனால் விபரீதமான விளைவுகள் ஏற்படும். ஆகவே, நிலைமைகளை பரிசீலனை செய்து பார்க்கும்படி மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆடோமேஷன் புகுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்ற என்னுடைய தீர்மானத்தை இந்த மன்றம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பவேண்டும். இதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

***திரு. சு. துரைசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் உறுப்பினர் திரு கோவிந்தராசன் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து, அதன் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்சலாம் என்று கருதுகிறேன். தமிழகத்தில் ஆளுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கிற தி. மு. க. அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனேயே முதல் முறையாக இந்த மன்றத்தில் பேசிய நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இந்த அரசாங்கத்தினுடைய தொழிலாளர் கொள்கை என்ன என்ற அறிக்கையிலே இந்தத் தமிழகத்திலே



அணுமின் இயந்திரம் புகுத்தப்படுவதை இந்த அரசாங்கம் எதிர்க்கிறது, அதை ஒரு போதும் இந்த அரசாங்கம் ஒத்துக்கொள்ளாது என்று மிகத் தெளிவாக இந்த மன்றத்தில் அறிவித்தார்கள். அதற்குப் பின்னாலே அவர்கள் கலந்துகொண்ட மத்திய லேபர் ஸ்டாண்டிங் கமிட்டியிலும் மிகத் தெளிவாக தமிழக அரசாங்கத்தின் சார்பிலே தமிழக அரசாங்கம் ஒரு போதும் அணுமின் இயந்திரம் புகுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ளாது என்பதனை மிக உறுதியுடன் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். இந்த அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னாலேயே இந்த நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் வேலையில்லா திண்டாட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் 20 ஆண்டு காலத்தில் ஏராளமாக படித்து பட்டம் பெற்ற இளைஞர்கள் பல்வேறு துறைகளிலும் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள்' இந்த நேரத்தில் இந்த நாட்டில் மின்அணு இயந்திரத்தை புகுத்துவது கண்டிக்கத்தக்கது என்பதனை நாம் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பின்னாலும் நம்முடைய நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் மிகப் பெரிய அளவிலே வளர்ந்திருக்கிறது. ஏராளமான அளவுக்கு அன்னியச் செலாவணியைச் செலவழிக்கக் கூடிய முறையில் இந்த இயந்திரங்களை வாங்கிப் புகுத்துவது நியாயம்தானா என்பதை நாம் இன்றைக்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும் இன்றைக்கு மிகத் தெளிவாக நம்முடைய நாட்டில் ஏராளமான அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருந்தாலும் கூட, மத்திய அரசிலே இருக்கக்கூடிய உதவிப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் இந்த மின் அணு இயந்திரம் திணிக்கப்படுவதிலே மிகப் பெரிய அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நாடு ஒருபோதும் மறக்காது. எல். ஐ. ஸி. நிறுவனத் தலைவர் திரு. எம். ஆர்.பீடே அவர்களிடம் மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சர் திரு. ஹாத்தி அவர்கள் எல்.ஐ.ஸி. நிறுவனத்தில் இந்த இயந்திரம் திணிக்கப்படவேண்டாம் என்ற கருத்தைத் தெரிவித்திருந்தபோதிலும்கூட, தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய அந்த ஆலோசனையை புறக்கணித்துவிட்டு, மொரார்ஜி தேசாய் அவர்களுடைய ஆதரவோடு இந்த இயந்திரங்கள் திணிக்கப்படுகின்றன என்பதை இன்றைக்கு யாரும் மறந்துவிடுவதற்கில்லை.

இன்றைக்கு உலகத்தில் இருக்கிற வேறு பல நாடுகளில் இப்படிப்பட்ட இயந்திரங்கள் திணிக்கப்படவில்லையா என்பது சிலருடைய கேள்வி, உழைக்கின்ற மக்களுடைய எண்ணிக்கை குறைவாக உள்ள இடங்களில் தான், மக்களுடைய சக்தி தடைபடுகின்ற இடங்களில் தான், இப்படிப்பட்ட இயந்திரங்கள் திணிக்கப்பட்டிருக்கின்றனவே ஒழிய, நம்முடைய நாட்டைப் போல ஏராளமான அளவிலே வேலையில்லா திண்டாட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிற நாட்டிலே இம்மாதிரி இயந்திரங்கள் திணிக்கப்படவில்லை. அமெரிக்க நாட்டிலே கூட இந்த இயந்திரம் திணிக்கப்படுவதற்கு முன்னாலே, இந்த இயந்திரம் திணிக்கப்பட்டால் அதனால் வருகிற விளைவுகள் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்த பின்னாலே தான், இந்த இயந்திரத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு முன்பாக 'நாஷனல் கமிஷன் ஆஃப் டெக்னாலெஜி, ஆடொமேஷன் அண்டு எகனாமிக் ப்ரொகிரஸ், என்கின்ற முறையில் ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னாலே தான், இதைச் செய்வதன் மூலம் என்ன நிலை ஏற்படும் என்று பரிசீலித்ததற்குப் பின்னாலே தான் அமெரிக்க நாட்டில் இதைச் செய்திருக்கிறார்கள். அதைப் போலத்தான் இன்றைக்கு இங்கிலாந்து நாட்டில் 'மான் பவர் ஸ்டடீஸ்' என்கின்ற முறையில் ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவானது இந்த இயந்திரம் திணிக்கப்படுவதினால் ஏற்படுகின்ற சாதகபாதகங்கள் என்ன என்பதைப் பரிசீலனை செய்த பின்னாலேதான், அங்கே இந்த இயந்திரத் திணிப்பை அனுமதித்தார்கள் என்பதைப் பார்க்கிறோம். நம்முடைய நாட்டில் ஏராளமான தொழிலாளர்கள் வேலையில்லா திண்டாட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், படித்து விட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்ற நிலையில் கூட, நம்முடைய நாட்டில் யாரையும் கேட்காமலேயே மத்திய அரசின்

உதவிப் பிரதமரும், அதில் இருக்கிற பெரிய தலைவர்களும் திட்டமிட்டு நம்முடைய நாட்டில் இந்த இயந்திரத்தைப் புகுத்தி விட்டார்கள். இந்த இயந்திரத் திணிப்பு சம்பந்தமாக திரு. காட்கில் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வளர்ச்சி பெற்ற நாடுகளிலெல்லாம் இந்தத் திட்டம் திணிக்கப்படுவதற்கு முன்னால் பரிசீலனை செய்யப்படுகிறது. நம்முடைய இந்திய துணைக்கண்டத்தில் அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இயந்திரம் திணிக்கப்படுவதன் மூலம் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புப் போய்விடுகிறது. யாரையும் வேலையை விட்டு வெளியே போகச் சொல்லவில்லையே என்று இதற்கு ஒரு காரணம் சொல்கிறார்கள். இந்த இயந்திரம் திணிக்கப்படுவதால் யாருக்கும் பாதகம் வந்துவிடாது என்று சொல்கிறார்கள். ஆனால், நடைமுறையில் இருக்கக்கூடிய நிலைமை என்ன? இந்த இயந்திரம் திணிக்கப்படுவதன் காரணமாக இன்றைக்கு இந்தத் துறையில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குக் கிடைக்கவேண்டிய பதவி உயர்வு கிடைக்காமல் பாதிக்கப்படுவார்கள் என்பதை யாரும் மறந்துவிடுவதற்கு இல்லை. அதைப் போல இந்த இயந்திரம் திணிக்கப்படுவதினால் எதிர்காலத்தில் பெரும் அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வரும் என்பதை நாம் மிகத் தெளிவாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல. இன்றைக்கு இந்த இயந்திரம் திணிக்கப்படக்கூடாது என்பதற்காக பல்வேறு காரணங்களை நம்முடைய நாட்டிலே இருக்கிற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருந்தும், அதை விட்டு விட்டு, மத்திய அரசில் இருப்பவர்கள் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். அதனால் பெரிய முதலாளிகளும், பல எண்ணெய் கம்பெனிகளும் பல்வேறு துறைகளிலே இந்த மின் அணு இயந்திரங்களை திணிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட மின்அணு இயந்திரங்கள் திணிக்கப்படக்கூடாது. அதை எதிர்த்தே தீருவது என்ற உறுதியான எண்ணத்திலே நமது அரசு இருக்கிறது. ஆகவே, இந்த மன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை தி.மு.க.வின் சார்பிலே, இங்கே வெற்றி பெற்று வீற்றிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே, அமைச்சரவையின் சார்பிலே இந்த இயக்கத்தின் சார்பிலே நாங்கள் ஆதரிக்கிறோம். இந்திய துணைக் கண்டத்தில் இந்த இயந்திரம் திணிக்கப்படக்கூடாது என்பதிலே உறுதியான நம்பிக்கை உண்டு இந்த அரசாங்கத்திற்கு என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

*184. Notification issued with G.O. Ms. No. 2989, Home, dated the 31st October 1967, in regard to exemption from payment of tax under the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 in respect of certain stage carriages belonging to Andhra Pradesh State Road Transport Corporation, Hyderabad plying on the route Madras to Thirupathi on temporary permits. [*Laid on the Table of the House under section* 16 (5) *of the Madras Motor Vehicles* (*Taxation of Passengers and Goods*) *Act*, 1952 (*Madras Act XVI of* 1952).]

## B. Reports, Notifications and other papers.

*Nil.*

*Laid on the Table of the House on 28th August 1968



## இணைப்பு I

[487-ம் பக்கத்திலுள்ள 22-ம் எண்ணுள்ள வெளிக் குறியிடாத வினாவின் விடையைக்காண்க.]

1967 பொதுத் தேர்தலை முன்னிட்டுப் பணியாற்றிய அலுவலர்களின் பயணப்படியும் நாட்படியும் கோரி அனுப்பிய மனுக்களைப் பரிசீலனை செய்து, தொகை அளித்ததன் முன்னேற்றத்தினைக் காட்டும் புள்ளி விவர அறிக்கை.

| மாவட்டப் பெயர். (1) | மாவட்டவாரியாக கொடுக்கப்பட வேண்டியவை. (2) | வந்தவை. (3) | தொகை அளிக்கப்பட்டவை. (4) | முடிவாகாதவை. (5) |
|---|---|---|---|---|
| | பயணப்படி நாட்படி கோரிய மனுக்களின் மொத்த எண்ணிக்கை. | | | |
| 1. சென்னை நகரம் | 7,304 | 7,304 | 7,304 | — |
| 2 செங்கற்பட்டு | 6,349 | 6,312 | 6,137 | 212 |
| 3. வட ஆர்க்காடு | 9,963 | 9,963 | 9,963 | — |
| 4. தென் ஆர்க்காடு | 6,294 | 6,290 | 6,244 | 50 |
| 5. திருச்சிராப்பள்ளி | 11,987 | 11,798 | 11,798 | 189 |
| 6. தஞ்சாவூர் | 13,896 | 13,776 | 13,776 | 120 |
| 7. மதுரை | 12,766 | 12,766 | 12,766 | — |
| 8. இராமநாதபுரம் | 7,200 | 7,200 | 7,140 | 60 |
| 9. திருநெல்வேலி | 9,620 | 9,005 | 8,962 | 658 |
| 10. கன்னியாகுமரி | 3,610 | 3,337 | 3,337 | 273 |
| 11. சேலம் | 7,696 | 7,665 | 7,665 | 31 |
| 12. தருமபுரி | 5,770 | 5,[illegible]06 | 5,668 | 102 |
| 13. கோயம்புத்தூர் | 16,597 | 16,361 | 16,325 | 272 |
| 14. நீலகிரி | 1,596 | 1,504 | 1,034 | 562 |
| மொத்தம் | 1,20,648 | 1,18,987 | 1,18,119 | 2,529 |

பணியாளர் சங்கங்களிடமிருந்தும் தேர்தல் பணிக்கு நியமிக்கப்பட்டவர்களிடமிருந்தும் முறையீடுகள் வந்ததின்மேல், பொதுத் (தேர்தல்கள்-3) துறையின் 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ம் நாளுள்ள 1213-ம் எண்ணுள்ள அரசாங்க ஆணையின் மூலம் தேர்தல் பயணப்படி-நாட்படி வீதங்கள் அதிகரிக்கப்பட்டன. எனவே தேர்தல் பணியாளர்கள் உயர்த்தப்பட்ட வீதப்படி தங்கள் கோரிக்கைகளைத் திருத்திக் கொடுக்கச் சில காலம் ஆயிற்று. இதன் காரணமாக தவிர்க்கவொண்ணாத தாமதம் ஏற்பட்டது.

## APPENDIX I.

[*Vide* Answer to unstarr d question No. 22 at page 487.]

Statement showing progress made in the settlement of travelling allowances and daily allowance claims of polling personnel in connection with General Elections, 1967.

| Name of district. | | Due for the district. | Received. | Total number of claims. Paid. | Pending. |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| 1 | Madras city .. | 7,304 | 7,304 | 7.304 | .. |
| 2 | Chingleput .. | 6,349 | 6,312 | 6.137 | 212 |
| 3 | North Arcot .. | 9,963 | 9,963 | 9,963 | .. |
| 4 | South Arcot .. | 6 294 | 6.290 | 6,244 | 50 |
| 5 | Tiruchirappalli .. | 11,987 | 11 798 | 11,798 | 189 |
| 6 | Thanjavur .. | 13,896 | 13,776 | 1 ,776 | 120 |
| 7 | Madurai .. | 12 766 | 12,766 | 12,766 | .. |
| 8 | Ramanatha-puram. | 7,200 | 7,200 | 7,140 | 60 |
| 9 | Tirunelveli .. | 9,620 | 9,005 | 8,962 | 658 |
| 10 | Kanyakumari .. | 3,610 | 3,337 | 3,337 | 273 |
| 11 | Salem .. .. | 7,696 | 7,665 | 7.665 | 31 |
| 12 | Dharmapuri .. | 5,770 | 5,706 | 5.668 | 102 |
| 13 | Coimbatore .. | 16,597 | 16,361 | 16.325 | 272 |
| 14 | The Nilgiris .. | 1,596 | 1,504 | 1,034 | 562 |
| | Total .. | 1,20,648 | 1,18,987 | 1,18,119 | 2,529 |

On receipt of several representations from the Service Associations and also from the persons posted for election duties, the rates of election travelling allowance and daily allowance were enhanced in G.O. Ms. No. 1213, Public (Elections III), dated 15th May 1967. It there-fore took some time to get revised claims from the polling personnel. This led to some unavoidable delay.

## இணைப்பு II.

[492ம் பக்கத்திலுள்ள 34-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடாத வினாவின் விடையைக் காண்க.]

| வரிசை எண்ணும், அரசாங்க மருத்துவமனையின் பெயரும். | 1967 ஜனவரியில் அங்கீகரிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை. | தற்போது தங்கி மருத்துவம் பார்க்கும் நோயாளிகளின் தின சராசரி எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. அரசு பொது மருத்துவமனை, சென்னை .. | 1,266 | 1,783 |
| 2. அரசு ஸ்டேன்லி மருத்துவமனை, சென்னை .. | 930 | 1,180 |
| 3. அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை .. | 1,310 | 1,911 |
| 4. கோவை மாவட்ட தலைமை மருத்துவமனை .. | 785 | 1,129 |



## APPENDIX II

*Vide* Answer to unstarred question No. 34 at page 492.

| *Serial number and name of the Government hospital.* | *Sanctioned bed strength during January 1967.* | *Daily average number of inpatients treated at present.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 Government General Hospital, Madras .. | 1,266 | 1,783 |
| 2 Government Stanley Hospital, Madras .. | 930 | 1,180 |
| 3 Government Erskine Hospital, Madurai .. | 1,310 | 1,911 |
| 4 Government District Headquarters Hospital, Coimbatore. | 785 | 1,129 |

## APPENDIX III.

[*Vide* answer to unstarred Question No. 77 at page 515 ante.]

Statement showing the number of inam estates notified under Act 26 of 1963 and the number for which pattas have been issued.

| District. | | Number of major estates notified by the Government. | Number covered by stay orders of the High Court or the Supreme Court. | Number actually taken over. | Number of estates in which settlement was introduced and where pattas have been issued. | Number of estates in which settlement was not introduced but pattas have been issued. | Number of estates where pattas are yet to be issued. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | Madurai .. .. | 11 | .. | 11 | 11 | .. | .. |
| 2 | Ramanatha-puram. .. .. | 849 | 14 | 835 | .. | 226 | 609 |
| 3 | Tirunelveli .. .. | 70 | 17 | 53 | 13 | 22 | 18 |
| 4 | Thanjavur .. .. | 606 | 71 | 535 | .. | 6 | 529 |
| 5 | South Arcot .. .. | 24 | 6 | 18 | .. | 1 | 17 |
| 6 | Tiruchirappalli .. | 128 | 29 | 99 | .. | 23 | 76 |
| 7 | Chingleput .. .. | 55 | 8 | 47 | 31 | .. | 16 |
| 8 | North Arcot .. .. | 20 | .. | 20 | 5 | .. | 15 |
| 9 | Salem .. .. | 69 | 5 | 64 | 48 | .. | 16 |
| 10 | Dharmapuri .. .. | 139 | 8 | 131 | .. | .. | 131 |
| 11 | Coimbatore .. .. | 3 | .. | 3 | 3 | .. | .. |
| | Total .. | 1,974 | 158 | 1,816 | 111 | 278 | 1,427 |

In respect of the remaining estates for which pattas are yet to be issued, settlement has been programmed to be introduced in faslis 1378 to 1380. Settlement is introduced on a phased programme.

# தமிழக சட்டப் பேரவை

---

## வெள்ளிக்கிழமை, 1968 ஆகஸ்ட் 30

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* **புலவர் கா. கோவிந்தன்** *அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண்கள் 188, 189, 190, 191 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### *Supply of Electric Energy*

*192 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether on 29-1-1968, Madras and Mysore States have entered into an agreement in regard to the supply of electric energy; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (ஆ) மைசூரிலுள்ள ஷாராவதியின் உற்பத்தி நிலையத்திலிருந்து தமிழ்நாடு மின் இணைப்பிற்கு 1968-ம் ஆண்டில் 30 கோடி யூனிட் மின்சக்திக்குக் குறையாமல் வழங்கப் படுவதற்குத் தமிழ்நாடு, மைசூர் அரசாங்கங்கள் 21—1—1968 அன்று ஒப்பந்தம் செய்து கொண்டன. இதில் முதல் 10 கோடி யூனிட் வரை ஒரு யூனிட்டிற்கு 5 காசு வீதமும் 10 கோடி யூனிட்டிற்கு மேற்பட்டும் பெறும் மின்சக்திக்கு ஒரு யூனிட்டிற்கு 4·5 காசு வீதமும் தொகை செலுத்தவேண்டும்.

**திரு. கே. விநயகம் :** நமது மாநிலத்தில் போதுமான அளவிற்கு மின்சாரம் உற்பத்தியாகக்கூடும் என்று சொல்லப்படுகிறதே, அப்படியிருக்கும்போது மைசூர் மாநிலத்தை என் கேட்கவேண்டும் ? நெய்வேலியிலுள்ள அனல் மின்சாரத்தை நாம் வேண்டுமென்றே வாங்கவில்லை என்ற புகார் இருக்கிறது. காரணம் மத்திய சர்க்காருடைய அமைப்பாக இருப்பதாலே, அது உண்மையா ? அங்கே இருக்கும் மின்சாரத்தை எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தேவையையொட்டி மைசூர் மாநிலத்தில் மின்சாரம் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. நெய்வேலியிலிருந்து வாங்கக்கூடாது என்ற எண்ணம் அல்ல. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரித் திட்டம் இருப்பதால் அவர்களுக்குத் தேவைப்பட்டது போக 150 மெகாவாட்தான் மிச்சப்படுகிறது. அதனை எடுத்துக்கொள்ள முடிவிற்கு வந்திருக்கிறார்கள். நெய்வேலியில் மின்சாரத்தை வாங்குவதற்குத் தேவைப்படுகின்ற செலவுக் கணக்கையும் மைசூர் மாநிலத்திலிருந்து மின்சாரத்திற்கு ஆகின்ற செலவும் ஓரளவிற்கு ஒரே அளவுதான் இருக்கிறது. நாட்டுக்கே பொதுவாக நிலக்கரி மிச்சமாகும். அவர்கள் 10 கோடி யூனிட்டுகளுக்கு 5 காசு வீதம் தரலாம் என்று சொன்னார்கள். பிறகுதான் 4·5 காசு என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மொத்தத்திலே பார்த்தால் 4·66 காசு வருகிறது.

**திரு. ந. வீராசாமி :** *தலைவர் அவர்களே, 29—1—1968-ல் மைசூர் மாநிலத்திற்கும் இந்த அரசுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகுதான் கட்டணக்குறைப்பு ஏற்பட்டதா ? அல்லது முந்தைய அரசு இருந்தபோதே கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** *தலைவர் அவர்களே, அது 29—1—1968-ல் அல்ல, 21—1—1968-லே ஒப்பந்தம் ஏற்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மின்சாரக் கட்டுப்பாடு இருந்தபோது, அவர்களுடைய உற்பத்தி குறைவாக இருந்தபோது 9 காசுக்குத் தந்தார்கள். தேவை குறைந்தவுடன் நிறுத்திவிட்டோம். ஆனால், ஷாராவதி திட்டத்திலே அதிகமாக உற்பத்தியாயிற்று. தேவைக்கு மேலும் தொடர்ந்து கொடுக்க முன்வந்தார்கள். 3½ காசுக்கு, 4½ காசுக்குத் தருகிறீர்களா என்று பேரம் பேசினோம். பிறகு உட்கார்ந்து பேசுகின்ற அளவிலே செலவுகளை எல்லாம் கணக்குப் பார்த்து 4·5 காசுக்கு எடுக்கலாம் என்று சொல்லப்பட்டது. 5 காசுக்கு ஒத்துக் கொண்டால்தான் எல்லா சாராருக்கும் கட்டுபடியாகும் என்பதால்தான் எடுத்துக் கொள்ளப்படுகிறது.*

**திரு. கே. பி. எஸ். மணி :** *தஞ்சையிலே தனியார் துறையில் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற கம்பெனியை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அவர்கள் நடத்தியபோது மின்சாரக் கட்டணம் அதிகமாக இருந்தது. இப்போது அதை அரசாங்கம் எடுத்துக்கொண்டபிறகு பம்பு செட்டுகளுக்கும் இறைவைகளுக்கும் சலுகைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?*

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** *மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றாலும் அரசு எடுத்துக்கொண்டதற்குப் பிறகு மின்சாரவாரியத்தில் எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறதோ, அந்த அடிப்படையிலே இறைவைகளுக்கும் மற்றவைகளுக்கும் தரப்படுகிறது.*

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** *தலைவர் அவர்களே, நெய்வேலியிலிருந்து மின்சாரம் வாங்குவதைவிட மைசூர் மாநிலத்திலிருந்து வாங்குவது மலிவாக இருக்கிறது. ஆகவே, நீண்டகால அடிப்படையில் 5 ஆண்டுகளுக்கோ அல்லது 10 ஆண்டுகளுக்கோ அவர்களிடம் கேட்டு ஒப்பந்தம் செய்துகொள்ளக்கூடிய முறையில் யூனிட்டுகளின் விலையைக் குறைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?*

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** *தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லியபடி நெய்வேலியிலிருந்து வருகின்ற மின்சாரத்தை நாம் வாங்காமல் இருப்பதற்கில்லை. அது மின்சார வேலையை மட்டும் பொறுத்து அமையவில்லை, வேலைவாய்ப்பு பிரச்சினை, தென் ஆர்க்காடு மாவட்டத்தின் சூழ்நிலை இவற்றையும் பொறுத்திருக்கிறது. நாம் வாங்காமல் இருந்தால் அங்கே மின்சார உற்பத்தி குறையும். இதனால் நிலக்கரி வெட்டி எடுக்கவேண்டிய நிலைமை இருக்காது. இதன் காரணமாக சுரங்க வேலைத் திட்டம் தடைபடும். அது தடைப்பட்டால் பொறியாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேலையில்லாமல் போய்விடும். அந்த வகையிலே அனல் மின்சாரம் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. எதிர்காலத்திலே மின்சாரம் பெறவேண்டுமென்றால் நெய்வேலியிலிருந்து பெறக்கூடிய வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றன. இப்போது 400 மெகாவாட் உற்பத்தித் திறன் இருக்கிறது. அடுத்த ஆண்டு 600-க்கு செல்லக்கூடும். எதிர்காலத்தில் 1,000 மெகாவாட் பெறவேண்டுமென்றாலும் இரண்டாவது சுரங்கத்தின் மூலம் பெறலாம். முதலிலே அவர்கள் 7½ காசு கேட்டார்கள். பிறகு 6·68 காசு கேட்டார்கள். நாம் ஒப்பந்தம் செய்துகொண்டதன் பேரில் 5·9 காசு கட்டுபடியாகக்கூடிய அளவிற்கு இருக்கிறது. தேவைப்படுகிற அளவிற்கு மைசூரிலிருந்து மின்சாரம் வாங்கக்கூடிய காரணத்தால் நெய்வேலி மின்சாரத்தை விட்டுவிடுவதற்கில்லை.*

**திரு. பி. வேலுசாமி :** *நாம் உற்பத்தி செய்கின்ற மின்சார செலவு வெளியிலிருந்து வாங்குகின்ற மின்சார செலவு—இரண்டுக்கும் இருக்கக்கூடிய செலவை விட குறைவாக தனிப்பட்ட தொழிற்சாலைக்கு மின்சாரம் ஏதாவது கொடுக்கப்படுகிறதா?*





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** *தலைவர் அவர்களே, பொதுவாக அந்தந்த தொழிற்சாலையைப் பொறுத்து அமைகிறது. வேளாண்மைக்கு 8½ காசு என்று கொடுக்கிறார்கள். பல தொழில்களுக்கு 30, 40 காசுகள் என்ற அளவுக்கு கொடுக்கிறோம். ரா மெடீரியல்ஸ்க்கு மின்சாரம் 30 சதவீதம், 40 சதவீதம் என்று தேவைப்படுகின்ற தொழிலைப் பொறுத்தவரையில் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுகின்றது. இரும்பு, அலுமினியம் உற்பத்தி செய்கின்றவற்றிற்கு சலுகைகள் கொடுக்கிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *இன்று மின்சார வாரிய நிதி நிலை அறிக்கைபற்றி விவாதம் நடக்க இருப்பதால் அதில் பேசும்போது பேசிக்கொள்ளலாம். அடுத்த கேள்வி 193.*

* 193 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether it is a fact that there would be no electricity power cut this year ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** *நடப்பு ஆண்டில் மின்சார வெட்டு இராது என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *திரு. விநாயகம்.*

**திரு. கே. விநாயகம் :** *அதுதான் மின்சார வாரியத்தைப்பற்றி பேசப் போகிறோமே அதில் பேசிக்கொள்ளலாம்.*

### *Students of Madurai Colleges*

* 194 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there was any strike during the month of July 1967 by the students of Madurai Colleges ;

(*b*) if so, the reasons therefor ; and

(*c*) whether the demands of the inmates of the hostel were conceded in time ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** *(அ) ஆம். மதுரைக் கல்லூரியிலும், தியாகராயர் கல்லூரியிலும் நடந்தது.*

*(இ) சேலம் மாவட்டத்தில் உருக்கு ஆலைத்திட்டமும் தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும் நிறைவேற்றப்படல் வேண்டும் என்னும் கோரிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் தியாகராயர் கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்குப் போகாமலிருந்து விட்டனர். கல்லூரி விடுதியில் சில மேம்பாடுகள் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளுக்காக மதுரைக் கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லாமல் இருந்துவிட்டனர்.*

*(உ) தியாகராயர் கல்லூரியைப் பொறுத்தவரையில் இந்த வினா எழவில்லை. மதுரைக் கல்லூரியில் நிர்வாகிகள் மாணவர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர்.*

Thiru K. VINAYAKAM : Sir, how many working days were lost by such kind of strikes and will any arrangement be made to compensate the loss of working days ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** *தலைவர் அவர்களே, மதுரைக் கல்லூரியைப் பொறுத்தவரையில், 525 மாணவர்களில் 250 பேர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். கல்லூரி விடுதிகளில் சில பல வசதிகள் குறைவாக இருக்கின்றன, அந்த வசதிகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்ற கோரிக்கைக்காக வேலை நிறுத்தம் செய்தனர். அதன்*

காரணமாக மேலும் பல தொல்லேகள் ஏற்படக்கூடாது என்பதற்காக, இடையூறுகள் ஏற்படக்கூடாது என்பதற்காக 26—7—1967 அன்று கல்லூரி மூடப்பட்டது. பிறகு, விடுதிக் காப்பாளருக்கும் மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படி 2—8—1967-ல் மீண்டும் கல்லூரி படிப்படியாக திறக்கப்பட்டு, 7—8—1967-ல் முழுவதும் திறக்கப்பட்டது. இந்த நாட்கள் பின்னல் காம்பன்சேட் பண்ணப்பட்டதா என்பதற்கு விவரக்குறிப்பு இல்லே. ஓராண்டுக்கு இவ்வளவு நாட்கள் நடைபெறவேண்டும் என்ற விதிப்படி செய்திருப்பார்கள் என்றுதான் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மதுரைக் கல்லூரி மாணவர்கள் என்னென்ன கோரிக்கைகளே முன்வைத்து வேலே நிறுத்தம் செய்தார்கள்? அவற்றில் எவை எவை ஏற்கப்பட்டன ? எவை எவை நிராகரிக்கப்பட்டன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலேவர் அவர்களே, மாணவர் விடுதியில் உள்ள வானெலி ஞாயிற்றுக்கிழமை முழுவதும் வேலேசெய்ய வேண்டும் என்றும், மற்ற நாட்களில் மாலே இரண்டு மணி நேரம் இயங்கவேண்டும் என்றும் ஒரு கோரிக்கையை அவர்கள் வைத்தனர். பொழுதுபோக்கு நிலேயம் ஒன்று இருக்கவேண்டும் என்றும் கேட்டனர். குடிதண்ணீர் வசதியைப் பொறுத்து நகராட்சி குடிதண்ணீர் அங்கே தரப்படவேண்டும் என்றும் வற்புறுத்தினர். நாள் ஒன்றுக்கு சாப்பாட்டுக் கட்டணம் இரண்டு ரூபாய்க்கு மேல் போகக்கூடாது என்ற கோரிக்கையையும் வைத்தனர். காய்கறி போன்றவற்றை டெண்டர் விட்டு வாங்கக் கூடாது, மாணவர்களே போய் காய்கறி வாங்கிவர அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அவைகளில் ஒவ்வொரு நாளும் இரண்டு மணிநேரம் வானெலி இயங்கவேண்டும், ஞாயிற்றுக் கிழமை முழுவதும் இயங்கவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாமல், ஒவ்வோரு நாளும் இரண்டு மணிநேரம் இயக்கலாம் என்று ஒப்பந்தம் ஏற்பட்டது. பொழுதுபோக்கு நிலேயம் அமைக்க காப்பாளர்கள் ஒப்புதல் அளித்தனர். குடிதண்ணீர் வசதியைப் பொறுத்து நகராட்சிக் குடிதண்ணீர் வழங்குவதில் பல சங்கடங்கள் இருப்பதால் உடனடியாக பெறுவதற்கில்லே, அதற்குரிய நிலேமை வந்தபிறகு செய்ய முடியும் என்று சொன்னர்கள். சாப்பாட்டுக் கட்டணத்தைப் பொறுத்த வரையில், காலே, மாலே, நண்பகல், இரவு ஆகிய நேரங்களில் என்னென்ன கொடுக்கப்பட்டதோ அதிலே ஒன்றையும் குறைக்கக்கூடாது என்ருல் கட்டணம் ரூ. 2·20க்குத்தான் வருகிறது. என்ருலும் அதை ஒப்புக்கொண்டார்கள். காய்கறியைப் பொறுத்தவரையில் ஏற்கனவே டெண்டர் விடப்பட்டிருக்கின்ற காரணத்தால் அதை உடனடியாக ரத்துசெய்வதற்கில்லே. ஆகவே இந்த ஆண்டு முழுவதற்கும் அந்த காண்டிராக்ட் விடப்பட்டிருக்கும் காரணத்தால் அதற்கு பிறகு வைத்துக்கொள்ளலாம், இப்பொழுது அந்த முறைதான் கையாளப்படும் என்று சொன்னதின் பேரில் மாணவர்கள் இந்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்டார்கள்.

**திரு. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் துணேத் தலேவர் அவர்களே, மதுரைக் கல்லூரி விடுதியில் நடைபெற்று இருப்பதைப் போன்ற சில நிகழ்ச்சிகள் சில தனியார் கல்லூரிகளிலும் சர்க்கார் கல்லூரிகளிலும் நடைபெற்றிருக்கின்றன. அதனுல் ஓர் ஆய்வுக்குழுவை நியமித்து, மாணவர் விடுதிகள் எல்லாவற்றிலும் போதிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதை ஆராய்வதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலேவர் அவர்களே, ஆங்காங்கு அவ்வப்போது ஏற்படுகிற பிரச்சினேகள், நிலேமைகள் ஆகியவைகளுக்கு ஏற்ப அவற்றைத் தீர்க்கவேண்டுமே தவிர, இதற்காக குழு ஒன்று அமைத்து, எங்கு பார்த்தாலும் போகச் செய்வதென்ருல், இல்லாத குறைகள் எல்லாம் புதிது புதிதாக வந்துவிடக்கூடும். ஏதோ குழு ஒன்று இருக்கிறது, நமக்கு வசதிகளேச் செய்துதர வந்திருக்கிறது என்று கோரிக்கைகளின் எண்ணிக்கை 50, 60 என்றுபோய், அதிலே பல நிறைவேற்றபடமுடியாத அளவுக்கு போய்விடக்கூடும். ஆகவே தனிக்குழு



ஏற்படுத்துவதைவிட எங்கெங்கு குறைபாடு இருக்கிறதோ அதைக் குறித்த கோரிக்கைகளே அவ்வப்போது முறைப்படி வைத்தால் அதன்பிறகு வசதி செய்து தருவதற்கான முயற்சியை நாம் முறைப்படி மேற்கொள்ளலாம்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலேவர் அவர்களே, மதுரைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் சேலம் உருக்காலேத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் தூத்துக்குடி துறைமுகத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் கோரிக்கை எழுப்பினுர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். அந்த கோரிக்கை நிறைவேற்றப்படுகின்ற வகையில் சர்க்கார் எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலேவர் அவர்களே, மதுரையில் இருக்கும் ஏழு கலேக்கல்லூரிகள், மூன்று இதரக் கல்லூரிகள் ஆக பத்து கல்லூரிகளில் மாணவர் விடுதியில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக வேலே நிறுத்தம் நடைபெற்றது. தியாகராயர் கல்லூரியில் மட்டும் இந்தக் கோரிக்கைக்காக ஒரு நாள் வேலே நிறுத்தம் ஏற்பட்டது. அந்த இரண்டு திட்டங்களேப் பொறுத்து மாணவர்கள் வற்புறுத்த வேண்டும் என்ற நிலே இல்லாமல் ஆங்காங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களாலும், மற்றவர்களாலும், வற்புறுத்தப்படுகிற எல்லா நிலேமைகளும் இருந்துகொண்டு வருகின்றன. ஆகையால், இந்த இரண்டு திட்டங்களேயும் நிறைவேற்ற வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து மாறுபாடு இல்லே. அவற்றை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றப்படுவதற்கான முயற்சிகளே மேற்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசுக்கும், திட்டகமிஷனுக்கும் எழுதியிருக்கிறது. அதுபற்றி முதலமைச்சர் மாநாட்டிலும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிருர்கள். இவைபற்றி திட்டவட்டமான முடிவு எடுத்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவை சேர்க்கப்பட்டு நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நாம் இருக்கவேண்டியவர்களாக இருக்கிருேம். அவற்றை இந்த அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலேவர் அவர்களே, மதுரைக் கல்லூரி மாணவர்கள் தாங்கள் சைக்களில் வந்தால் அந்த கல்லூரி காம்பவுண்டுக்குள் நிறுத்த கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகின்றது. அது கூடாது என்று அங்குள்ள மாணவர்களுடைய கோரிக்கைகளில் ஒன்ருக வைத்திருந்தார்கள். அப்படி சைக்கிள் கட்டணம் வசூலிப்பது நிறுத்தப் பட்டுவிட்டதா ? இல்லே என்ருல், அதை ரத்து செய்யும்படி அந்தக் கல்லூரி நிர்வாகிகளுக்கு அரசு தெரிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலேவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கை வைக்கப்பட்டதாக என்னிடத்தில் இருக்கும் விவரக் குறிப்பில் இல்லே. அப்படிப்பட்ட கோரிக்கை வைக்கப்பட்டு இருக்குமானுலும் மாணவர்களுக்கும் காப்பாளர்களுக்கும் இடையே, அதுபற்றி ஒரு சுமுகமான முடிவு ஏற்பட்டிருக்க வேண்டும் என்றுதான் கருதப்படுகிறது. ஆனுல், அது பற்றி விவரக் குறிப்பு இல்லே.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், மாணவர்களுடைய கோரிக்கைகளில் உணவு விடுதி சம்பந்தமாகவும் ஒரு கோரிக்கை வைத்திருந்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். குறிப்பாக திருச்சிராப்பள்ளியிலுள்ள செயிண்ட் ஜோசப் கல்லூரி போன்ற கல்லூரிகளில் சொந்தமாக அவர்கள் நிலம் வைத்து அதிலிருந்து நெல் மற்றும் உணவுப்பொருள்களே உற்பத்தி செய்து மாணவர்களுக்குக் குறைந்த விலேயில் உணவு விநியோகம் செய்வது போன்று மற்ற கல்லூரிகளிலும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணேத் தலேவர் :** மூலக் கேள்வி மதுரைக் கல்லூரி மாணவர்களேப்பற்றியது. தாங்கள் திருச்சிக்குப் போனுல் மற்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு ஊராகப் குறிப்பிடக்கூடும்.

THIRU T. MARTIN : Sir, I am giving only an illustration...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் இல்லஸ்ட்ரேஷனே கூடாது.

**திரு. டி. மார்டின் :** செயிண்ட் ஜோசப் கல்லூரியில் இருக்கின்ற முறைப்படி மற்றக் கல்லூரிகளிலும் சொந்தமாக விளைநிலங்கள் வைத்து அந்த விதமாக அதிலிருந்து கிடைக்கக்கூடிய பொருள்களை விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு உணவு கொடுக்கக்கூடிய நிலைமை இருப்பதைப்போல், இந்த அரசு ஒவ்வொரு கல்லூரியிலும் ஓரளவு விளைநிலம் வைத்திருக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதற்கும் மூலக் கேள்விக்கும் நேரடித் தொடர்பு இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று செயிண்ட் ஜோசப் கல்லூரியில் இருக்கின்ற முறை வரவேற்கத்தக்க முறைதான். அவ்வாறு எல்லாக் கல்லூரிகளிலும் வைக்கவேண்டுமென்று வற்புறுத்தமுடியாது. ஏனென்றால் ஆங்காங்கு கிடைக்கின்ற வசதிகளைப் பொறுத்தும் அந்தந்தக் கல்லூரிகளில் இருக்கிறவர்கள் தரும் ஊக்கத்தைப் பொறுத்தும், மாணவர்கள் அதிலே காட்டுகின்ற நல்ல ஆர்வத்தைப் பொறுத்தும்தான் அது அமையமுடியும். அதற்கான வாய்ப்பு கூறுகள் இருந்து இந்தமுறையை பின்பற்றுவார்களானால் அதன் மூலமாக செலவைக் குறைக்க முடியும். பொதுவாக இது மாணவர்களுக்கு நலம் பயக்கத்தக்கதாகத்தான் இருக்கும்.

*Tiruchirappalli–Tiruchendur Express buses*

* 195 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to ply Government Express buses from Tiruchirappalli to Tiruchendur, via. Madurai, Tirunelveli, Satankulam and Udangudi ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இல்லை.

**திரு. டி. மார்டின் :** திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கமும், நெல்லை மாவட்டத்திலுள்ள திருச்செந்தூரும் முக்கியமான இடங்களாக கருதப்படுகிற காரணத்தால் இந்த இரண்டு ஊர்களையும் நேரடியாக இணைக்கக்கூடிய துரித பஸ் போக்குவரத்தை நடப்பு ஆண்டிலாவது விடுவதற்கு இந்த அரசு உத்தேசிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த இரண்டு க்ஷேத்திரங்களையும் ஒன்றாக இணைக்கவேண்டுமென்பது குறிக்கோள் அல்ல. ஆனால் உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற உடன்குடி, திருச்செந்தூர் ஆகிய இடங்களை இணைத்து நாகர்கோயிலிலிருந்து இராமநாதபுரத்திற்கும், நாகர்கோயிலிலிருந்து கோயம்புத்தூருக்கும் இடையே விட எண்ணியுள்ள கடுவிசைப் பேருந்துகள் பற்றிய செயற்குறிப்புகள் இப்பொழுது இருக்கின்றன. அவர் குறிப்பிடுவதைப்பற்றி இப்பொழுது யோசிப்பதற்கு நம்மிடத்தில் " சான்ஸ் " இல்லை.

(திரு. மு. ச. சிவசாமி எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருச்சிராப்பள்ளிக்கும் திருச்செந்தூருக்கும் இடையே பேருந்து விடுவது பற்றித் துணைக்கேள்வியொன்றை திரு. எம்.எஸ். சிவசாமி அவர்கள் கேட்கலாம்.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, நாகர்கோயிலிலிருந்து இராமநாதபுரத்திற்கும், நாகர்கோயிலிலிருந்து திருச்செந்தூருக்கும் துரித பஸ் விடுவதாக ' ப்ரபோசல் ' இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி ஆலோசனையில் இருக்கும் ரூட்டைப் பொறுத்த வரையில், இப்பொழுது துரித பஸ் இல்லாத விளாத்திக்குளம், நாகலாபுரம் வழியாக விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாகர்கோயிலிலிருந்து இராமநாதபுரம் செல்லுகின்ற கடுவிசைப் பேருந்து—வள்ளியூர், நாங்குனேரி, திசயன்விளை, உடன்குடி, திருச்செந்தூர், தூத்துக்குடி, குறுக்குசாலை, விளாத்திகுளம், சாயல்குடி, உத்திரகோசமங்கை ஆகிய ஊர்களின் வழியாகச் செல்லும். நாகர்கோயிலிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் கடுவிசைப் பேருந்து—வள்ளியூர், திசயன்விளை, உடன்குடி, திருச்செந்தூர், தூத்துக்குடி, குறுக்குச்சாலை, எட்டயபுரம்,. அருப்புக்கோட்டை, மதுரை, கோடைச்சாலை, திண்டுக்கல், பழனி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி வழியாகச் செல்லும்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, இந்த விரைவு வண்டிகள் எந்த அடிப்படையில் விடப்படுகின்றன—மக்கள் கோரிக்கையின் அடிப்படையிலா அல்லது ஆர்.டி.ஓ. வேண்டுகோளை வைத்து செய்யப்படுகிறதா என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விரைவு வண்டிகள் மக்கள் விரைவாகப் பயணம் செய்ய வேண்டும் என்றுதான் விடப்படுகின்றன. மக்கள் கோரிக்கையின் அடிப்படையில்தான் விடப்படுகின்றன.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் முன்னாள் அமைச்சரும், இன்னாள் உறுப்பினருமானவர் விரைவு வண்டிகளை பொதுமக்கள் விறகு வண்டிகள் என்று படிக்கிறார்கள் என்றும், அதை மக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் குறிப்பிட்டார்களே, அந்தப் பெயரை மாற்றி எழுத அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி ஒன்றும் சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

*Uniforms to State Transport Department Workers*

* 196 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that Government have decided to provide khaki (mill made) uniforms to the workers in Government Transport Department instead of khadi khaki uniforms ; and

(*b*) if so, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) இல்லை. கதருக்குப் பதிலாக காக்கி மில்துணி கொடுக்கப்படவில்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

**திரு. கே. விநாயகம் :** காக்கி மில் துணி வேண்டும் என்று அங்கே வேலை செய்யும் கண்டக்டர்கள், ட்ரைவர்கள் கோரிக்கை விட்டார்களா ? எதற்காக அப்படி வேண்டும் என்று சொல்லுகிறார்கள் ? அவர்களுக்கு என்ன லாபம் ? கதரை ஏன் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அரசு போக்குவரத்துப் பணியாளர்கள் கதர்த்துணிகள் நீடித்து உழைப்புக் கொடுக்கவில்லை, விரைவில் கசங்கி விடுகின்றன, ஆகவே, கதர்த் துணிக்குப் பதில் காக்கி மில் துணி வேண்டும் என்று கேட்டார்கள். கதருக்குப் பதில் மில் துணி கொடுப்பது உசிதம் இல்லை என்று கருதி, அதற்குப் பதிலாக கைத்தறி துணியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லி அந்த வகையில் கொடுக்கப்படுகிறது. அந்த வகையில் போக்குவரத்துத் துறைக்கும் 2,16,000 ரூபாய் மிச்சம் ஆகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த உடைகள் வருஷத்திற்கு ஒருமுறை கொடுக்கப்படுகிறதா அல்லது இரண்டு வருஷத்திற்கு ஒருமுறை கொடுக்கப்படுகிறதா ? கொடுக்கும் இந்த உடை ஆறு மாதத்திற்குக் கூட வரவில்லை. ஆகவே, உழைக்கும் அவர்களுக்கு உடைகள் கொடுப்பதை உயர்த்தக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை அல்ல ; ஆண்டுக்கு ஒருமுறை, அநேகமாக தீபாவளியின்போது கொடுக்கப் பட்டு வந்தது. இப்பொழுது அவர்களுடைய தேவையை முன்னிட்டு, 1968–69-க்கான உடைகளை செப்டம்பர் திங்களிலிருந்து, அவர்களுடைய அவசரத்தை முன்னிட்டு வழங்கப் போகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இந்த காக்கி உடைக்குப் பதிலாக ரெயில்வே கார்டுகள் போல் வெள்ளை உடை கொடுக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அது அழுக்காகிவிடும்.

### *Extra flights within State*

* 197 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Government has been consulted by the Indian Airlines Corporation for operating extra flights within this State—

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இல்லை.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகம் வருவதால் தொழிலுக்கு வாய்ப்பு இருக்கிறது. அதை ஒட்டி, திருநெல்வேலி மாவட்டத்தில் கயிற்றாறில் விமான நிலையம் நிறுவ மத்திய அரசாங்கத்திற்கு, நம்முடைய அரசாங்கம் சிபாரிசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சாதாரணமாக மாநிலங்களில் உள்ள விமான நிலையங்கள் பற்றி மாநில அரசைக் கலந்து ஆலோசனை செய்வது இல்லை. ஆனாலும், அதற்கென்று குழுக்கள், அட்வைசரி கமிட்டி கள் இருக்கின்றன. அந்தக் கமிட்டிகள் மூலமாக நம் தேவைகளைச் சொல்ல முடியும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், சேலம் நகரத்தில் ஒரு விமான நிலையம் நிறுவ வேண்டும் என்று அரசாங்கத்திற்கு கோரிக்கை வந்ததா ? அதன்மேல் அரசாங்கம் ஏதாவது சிபாரிசு செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்தக் கோரிக்கை பற்றி மத்திய சர்க்கார் சேலத்தில் தொழிற்சாலை அமைக்கப்பட்ட பிறகு அது அவசியமாக இருக்கும் என்று அதை இப்போதைக்கு ஒத்தி வைத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒவ்வொரு மாவட்டத் தலை நகரம் பற்றியும் ஒவ்வொரு உறுப்பினர் கேட்பதற்குப் பதிலாக, எல்லா நகரங்களைப் பற்றியும் ஒருவர் கேட்டால், அமைச்சர் பதில் அளிக்க வசதியாக இருக்கும்.

DR. H. V. HANDE : Have this Government suggested or recommended to the Central Government or Indian Airlines Corporation, to have more aerodromes in our State as at present we have aerodromes only in Madras, Madurai, Coimbatore and Trichy ? In view of the fact that in recent times flights from Trivandrum to Madras have been cancelled and people want to



go quickly and they are put to lot of difficulties due to reduction of flights, will the Hon. Minister convey the feelings of the House to the Centre to have more aerodromes and flights in this State ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த அதிகாரங்கள் நம்மிடத் தில் இல்லை. அவற்றைக் கவனிக்க கமர்ஷியல் மானேஜர் என்று இந்த விமானப் போக்குவரத்தைக் கவனிக்கிறார். நம் தேவைகளைப் பற்றிச் சொல்ல, இந்தியன் ஏர்லைன்ஸ் அட்வைசரி கமிட்டி யென்றும், ஏர்-இந்தியா அட்வைசரி கமிட்டி என்றும் இருக்கிறது. அதிலே தமிழக அரசு உறுப் பினர்களும் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக, மாநில அரசு சிபாரிசு தான் செய்யக்கூடிய சூழ் நிலை இருக்கிறது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கோவையி லிருந்து சென்னைக்கு வர பகலில் 11 மணிக்குத்தான் விமான சர்வீஸ் இருக்கிறது. ஆகவே, தொழில் அதிபர்கள், மற்றவர்கள் சென்னைக்கு வந்து காரியங்களைப் பார்க்க இடையூறு இருக்கிறது. ஆகவே, காலை 7 மணி, 8 மணி அளவில் கோவையில் புறப்பட்டு, மாலை 6 மணிக்குத் திரும்பப் போகும் அளவில் சர்வீஸ் விடுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விமானப் போக்குவரத்தைப் பற்றி குறைகள், இடையூறுகள், இருப்பதை தனியாக எழுதி அனுப்பப்பட்டால் மத்திய சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர மாநில சர்க்கார் தயங்காது.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** தலைவர் அவர்களே, விமானப் பயணத் தில் மக்களுக்கு அதிகமான ஆவல் ஏற்பட்டிருப்பதால், சென்னையைச் சுற்றிவர விமானங்களை ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைப் பற்றி மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யப்படும்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, விமானப் போக்கு வரத்தைக் கவனிக்க இரண்டு ஆலோசனைக் குழுக்கள் இருக்கின்றன என்று அமைச்சர் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தின் சார்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் யார் யார் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மொத்தம் இரண்டு குழுக்கள் இருக்கின்றன. ஐ.ஏ.ஸி.-யில் 17 பேர்களும், ஏர்-இண்டியா கமிட்டியில் 16 பேர்களும் இருக்கிறார்கள். மாநில அரசின் சார்பில் ஐ.ஏ.ஸி.யில் திரு. தர்மலிங்கம், எக்ஸ்-எம். பி. யும், ஏர்-இந்தியா அட்வைசரிக் கமிட்டியில் திரு. எஸ். எஸ். எம். சுப்பிரமணியன் என்பவரும் உறுப்பினர் களாக இருக்கிறார்கள்.

### சென்னையில் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஒழிப்பு

*198 **வினா.—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் ஆட்டோ ரிக்ஷாவை ஒழிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் என்றால், எப்போது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

**திரு. கே. வினாயகம் :** சார், ஆட்டோ-ரிக்ஷாக்கள் கட்டணம் குறைவாக இருக்கிறது என்றாலும் பிரயாணம் செய்வதில் சுகம் ஒன்றும் இல்லை. அதில் ஏறிப் பிரயாணம் செய்யும்போது, சத்தம் அதிகமாக இருக்கிறது.

உதரல் எடுக்கிறது, இறங்கியவுடன் சுரம் வருகிறது என்று தெரிவதால், 'இம்ப்ரூவ்ட் கண்டிஷன்' இல்லை என்றால், பூராவும் எடுக்க ஏற்பாடு உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உறுப்பினர் ஆட்டோ ரிக்‌ஷாக்கள் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கேட்கிறார்களா அல்லது ஒழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கேட்கிறார்களா என்று புரியவில்லை. ஆட்டோ ரிக்‌ஷாவில் போனால் சுரம் வந்ததாகத் தகவல் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** ஆட்டோ ரிக்‌ஷாக்கள் பற்றி நிலை எப்படி இருந்தாலும், கை வண்டி ரிக்‌ஷாக்களுக்கு, ஏதாவது ஒரு இயந்திரத்தைப் பொருத்தி, கையால் இழுப்பதைத் தவிர்க்க தானே இயங்கும் விசையை அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது அநேகமாக மனிதன் இழுக்கும் ரிக்‌ஷா எண்ணிக்கையில் குறைந்து வருகிறது. அவர்கள் மற்ற தொழில்களை ஏற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, இந்த யோசனைக்கு இடம் இல்லை.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்தில் 7 பேர்கள் ஏறக்கூடிய 'டெம்போ வான்களை' டாக்சிகளாக விடுகிறார்கள்.
மு.ப. அது பொதுமக்களுக்கு மிக்க வசதியுள்ளதாக இருக்கிறது. அதுபோல
9-30 நம் மாநிலத்திலும் டெம்போ வான்களை டாக்சிகளாக விடுவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுபற்றி ஆராய வேண்டும்.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, சில சமயங்களில் 'நோ பார்க்கிங்' இடங்களில் பொது மக்கள் நின்றுகொண்டு ஆட்டோ ரிக்‌ஷாக்களையும், டாக்சிகளையும் நிறுத்துகிறார்கள். பின்னாலே வருகிற டிராஃபிக் போலீஸ்காரர் 'நோ பார்க்கிங்' ஏரியாவில் நிறுத்தியதாக வழக்குத் தொடருகிறார்கள் என்ற புகார்கள் ஆட்டோ ரிக்‌ஷா சங்கத்தின் மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி புகார்கள் வந்தெனவென்றால் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் கணிசமாக வந்ததாகத் தெரியவில்லை. அப்படி வந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. டி. அண்ணாமலை :** தலைவர் அவர்களே, மத்தியதர வகுப்பினரும், ஏழை எளிய மக்களும் குறைந்த கட்டணத்தில் துரித பிரயாணம் செய்வதற்காக வேண்டி ஆட்டோ ரிக்‌ஷாக்களை உபயோகப்படுத்துகிறார்கள். காரில் போவதை விட பாதிக் கட்டணம்தான் இதற்குச் செலவாகிறது. ஆகவே, சென்னை நகரத்திலும், மற்ற நகரங்களிலும் ஆட்டோ ரிக்‌ஷாக்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சென்னை நகரத்தில் நடுத்தர மக்களின் தேவையையும், ஏழை மக்களின் தேவையையும் முன்னிட்டுத்தான் அதிகமான அளவுக்குப் தமிழக அரசு பேருந்துகள் விடுகின்றன.

THIRU B. VENKATASWAMY : Sir, auto-rickshaws provide the cheapest conveyance to the public. It is a fact that auto-rickshaws are also the cheapest form of vehicles and will the Government come forward to issue more licences to introduce auto-rickshaws in Madras and other first class-cities of our State ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இன்றையதினம் ஆட்டோ ரிக்‌ஷாக்களின் கட்டணம் குறைவாக இருந்தாலும், அதைவிடக் கட்டணம் குறைவான அளவில் தமிழக அரசுப் பேருந்துகள் அதிகமான அளவில் சென்னை நகரத்தில் விடப்படுகின்றன என்று ஏற்கனவே பதில் அளித்திருக்கிறேன்.



**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, சில தெருக்களின் வழியாகவும், சந்துகளின் வழியாகவும் ஆட்டோ ரிக்‌ஷாக்கள் போக முடியாது. அப்பகுதிகளில் சைக்கிள் ரிக்‌ஷாக்கள்தான் போக முடியும். ஆகவே, ஆட்டோ ரிக்‌ஷாக்களில் இரண்டு பேர் செல்ல அனுமதித்திருப்பதைப் போல சைக்கிள் ரிக்‌ஷாக்களில் இரண்டு பேரை ஏற்றிச் செல்ல அரசாங்கம் அனுமதிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுபற்றி காவல் துறையோடு ஆலோசித்த பிறகுதான் முடிவு செய்யப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் பேருந்துகள் அதிக அளவில் விடப்பட்டிருந்தாலும் கூட பேருந்துகள் குறுக்குத் தெருக்களில் புகுந்து போக முடியாது. அந்தத் தெருக்களில் ஆட்டோ ரிக்‌ஷாக்கள்தான் போக முடியும். மேலும் ஆட்டோ ரிக்‌ஷாக்களில் கட்டணம் குறைவாகவும் இருக்கிறது. ஆகவே, சென்னை நகரத்திலும், மற்ற நகரங்களிலும் ஆட்டோ ரிக்‌ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் நிலைமை இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சென்னை நகரத்தில் நாளுக்குநாள் போக்கு வரத்துப் பெருகிக்கொண்டு வருகின்ற காரணத்தால், கோவை நகரத்தில் ஆட்டோ ரிக்‌ஷாக்களை அனுமதித்த அளவுக்கு சென்னை நகரத்தில் ஆட்டோ ரிக்‌ஷாக்களை அனுமதிக்க முடியாது என்று காவல் துறை கூறுகிறது. அவர்கள் கூறுவதும் பொருத்தமானதாக இருக்கிறது. விரிவடைந்திருக்கின்ற போக்குவரத்து இதற்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவேதான் ஆட்டோ ரிக்‌ஷாக்களை அதிகரிக்கும் அனுமதி வழங்கப்படாமல் இருக்கிறது. இருந்தபோதிலும் ஏற்கெனவே இருப்பதை அகற்றவேண்டுமென்றும் இந்த அரசு கூறவில்லை.

### அரிசி அரைவை ஆலைகளை தேசியமயமாக்கல்

*** 199 வினா.—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசி மில்களை சர்க்கார் தேசிய உடமையாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் என்றால், எப்போது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, அரிசி ஆலைகளை தேசிய உடமையாக்கும் பிரச்சினை, அரசாங்கம் உணவுத் தானிய மொத்த வியாபாரத்தை மேற்கொள்வதைப் பொறுத்திருக்கிறது. உணவுத் தானிய மொத்த வியாபாரத்தை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு நடத்த வேண்டுமென்ற நிலை தற்போது இல்லை. எனவே இந்த நிலை எழவில்லை. கூட்டுறவுத் துறையிலே நவீன அரிசி ஆலைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் 11 நவீன அரிசி ஆலைகளை 1 கோடி 10 லட்சம் ரூபாய் செலவிலே, தஞ்சாவூர் மாவட்டத்தில், திருவையாறு, மாயவரம் கும்பகோணம், பட்டுக்கோட்டை, மன்னார்குடி ஆகிய இடங்களிலும் வெளி மாவட்டங்களில் 6 அரிசி ஆலைகளும் அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆலைகள் ஒரு மணி நேரத்தில் 4 டன் தானியம் அரைக்கக் கூடியவை. ஆகவே, அரிசி ஆலைகளை தேசிய உடமையாக்கும் நிலை, அரசாங்கம் உணவு தானிய மொத்த வியாபாரத்தைப் பொறுத்த பிரச்சினையாக இருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, இப்போதுள்ள அரிசி மில்களில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள் தரமுள்ளதாக இருக்கவில்லை. பொதுமக்களுக்கு சரியான தரமுள்ள உணவுப் பொருள்களை வழங்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், லாப நோக்கத்தைச் சர்க்கார் பார்க்காமல், அரிசி ஆலைகளை மேற்கொள்ள வழிவகை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தக் காரணத்திற்காக அரசாங்கம் அரிசி ஆலைகளை தேசீய மயமாக்க வேண்டும் என்று கூறுவது பொருத்தமானதாக இல்லை. இன்றையதினம் உணவு வர்த்தகத்தில் அரசாங்கம்தான் பெரிய வியாபாரியாக 100, 130 கோடி ரூபாய் அளவுக்கு வியாபாரம் செய்து வருகிறது. கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகிற குறைபாடுகளை நீக்குவதற்காகத்தான் 11 நவீன அரிசி ஆலைகளை அரசு துவங்கவிருக்கிறது. உணவுக் கார்ப்பரேஷனும் 4 ஆலைகளுக்கு விண்ணப்பித்திருக்கிறது. வட ஆர்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களிலும் துவக்க உத்தேசித்திருக்கிறது. உணவுப் பொருள்களின் தரத்தை மேம்படுத்த சிறிய ஆலைகளில் நடைபெறும் கேடுகளை நீக்க அரசு முயற்சி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி கேட்கும் உறுப்பினர்கள் யோசனை சொல்லக் கூடாது, கேள்வி மட்டும்தான் கேட்க வேண்டும்.

**திரு கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, அரிசி ஆலைகளுக்கு லைசென்ஸுகள் வழங்கப்படும்போது என்னென்ன விதி முறைகளை அனுசரித்து லைசென்ஸுகள் வழங்கப்படுகின்றன ? அதிகமான லைசென்ஸுகள் வேண்டுமென்று விண்ணப்பங்கள் வந்திருக்கின்ற காரணத்தால் அரிசி மில்களுக்கான கட்டுப்பாட்டை நீக்கும் உத்தேசம் இருக்கிறதா ? உணவு உற்பத்தியைப் பெருக்கும் முறையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும் லைசென்ஸுகள் வழங்குவதில் சலுகை காட்டப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதற்கு விதி முறைகள் இருக்கின்றன. மத்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் மாநில அரசாங்கத்திற்கு இதற்கான உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. புதிய அரசு வந்ததற்குப் பிறகு ஏராளமாகவும், தாராளமாகவும் லைசென்ஸுகள். வழங்கப்பட்டிருக்கின்றன. ஆயிரத்திற்கு மேற்பட்ட அரிசி ஆலைகளுக்கு லைசென்ஸுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதுபற்றி குறைபாடு ஏதும் இல்லை.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தலைவர் அவர்களே, அதிக அரிசியை உற்பத்தி செய்கின்ற நேரத்தில் இத்தகைய லைசென்ஸ் தேவையில்லை. ஆகவே, லைசென்ஸ் இல்லாமல், அதாவது ஃப்ரீயாக அரிசி மில்களை நடத்தலாம் என்று சர்க்கார் திட்டம் வகுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போது இருக்கிற நிலைமை என்னவென்றால், இந்த மாநில அரசுகளுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தையே கூட எடுத்துக்கொள்ள மத்திய சர்க்கார் பாராளுமன்றத்தில் ஒரு மசோதாவை நிறைவேற்றி, அது ஜனாதிபதியின் கையெழுத்து ஆகும் நிலைமை இருக்கிறது. ஜனாதிபதியின் கையெழுத்து ஆனதும், அது வந்த பிறகுதான் என்ன என்ன நாம் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி ஆலோசனை செய்ய வேண்டும்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 11 நவீன ஆலைகளை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறினார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் ஐந்து ஆலைகள் என்று கூறினார். தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அடுத்தபடியாக அதிக அளவில் நெல் உற்பத்தியாகும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சர்க்கார் தரப்பில் ஆலைகளை ஏற்படுத்தும் உத்தேசம் இருக்கிறதா ? உணவுக் கார்ப்பரேஷன் எந்தெந்த இடங்களில் அரிசி ஆலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள் ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அரிசி ஆலைகளை தேசீய உடமையாக்கும் உத்தேசம் பற்றியது மூலக் கேள்வி. அதையொட்டி மட்டும் கேள்விகள் கேட்க வேண்டுமென்று உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வட ஆர்க்காடு மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையிலோ, உணவுக் கார்ப்பரேஷன் மூலமோ, ஒரு ஆலை அமைய நிச்சயமாக வாய்ப்பு இருக்கிறது என்பதை உறுப்பினர் புரிந்து கொள்ளலாம்.



**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** ராட்சச ஆலைகள் ஏற்படுத்துவதை விட சிறு சிறு குடிசைத் தொழில்களைப் போல 3 ஹார்ஸ் பவர், 4 ஹார்ஸ் பவர், ஏன் ½ ஹார்ஸ் பவர்கூட—ஜப்பான் நாட்டில் வைத்திருப்பதைப் போன்று நம் மாநிலத்திலும் அரிசி மில்கள் ஏற்பட அனுமதி கொடுக்கும் திட்டம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த முறையில் நான் தாராளமாக அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. என். வரதராஜன் :** ரைஸ் மில்களை உடனடியாக தேசீயமயமாக்காவிட்டாலும் நல்ல தரமான அரிசி மக்களுக்குக் கிடைக்கச் செய்ய அவற்றை லீசுக்கு எடுத்துக்கொள்ளும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த மாதிரியாகவும், ஸ்டாச்சுடரி ரேஷன் ஏரியாவுக்கு அரிசி சப்ளை செய்ய தஞ்சை மாவட்டத்தில் சில அரிசி ஆலைகளை லீசுக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். வேறு இடங்களிலும் மேற்கொண்டு தொடர்ந்து எடுக்கும் முறை பரிசீலனையில் இருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that the Central Government are contemplating to nationalise all the rice mills in the country and if so, did the Central Government consult the State Government on this issue and also what is the opinion expressed by our State Government Also, how many rice mills are functioning in our State now ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : As regards the number of rice mills, the hon. Member can put a separate question.

Regarding nationalisation of rice mills, there was some talk about it during the session of the Congress at Bhuvaneswar but the State Government are not aware whether the Central Government have any such view or whether they have ever consulted the State Government.

### கிணறுகள் ஆழப்படுத்த கடன்.

* 200 வினு.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

கடன் பெற்று வெட்டப்பட்ட கிணறுகளில் தேவைப்படும் அளவு தண்ணீர் கிடைக்காமல் இருப்பதைப் போக்க மேலும் அவர்களுக்கு கிணறு ஆழப்படுத்த கடன் தரும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆம். உறுப்பினர் குறிப்பிடுவதைப் போல கிணறு வெட்டக் கடன் தருவதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

**திரு. சு. துரைசாமி :** கோவை மாவட்டம், பல்லடம், அவிநாசி, தாராபுரம், போன்ற இடங்களில் மூவாயிரம் ரூபாயில் கிணறு வெட்ட முடிவதில்லை. அந்தப் பணத்தை வாங்கி கிணறு வெட்ட ஆரம்பிக்கும்போது வேலை பாதியில் நின்றுவிடுகிறது. மேற்கொண்டு வெளியில் கடன்வாங்கி வெட்ட முடிவதும் இல்லை. அதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, தண்ணீர் வருகின்ற வரையில் மேற்கொண்டும் அவர்களுக்குக் கடன் கொடுத்து உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அம்மாதிரி கடன் கொடுக்கவும் விதி முறைகளில் வாய்ப்பு இருக்கிறது. பூமியின் பெருமானம் 10 ஆயிரம் என்றால், அதில் முக்கால் பங்கு 7,500 வரை கடன் பெறக்கூடும். பூமியின் மதிப்பு அப்போதைக்கு குறைவாக இருந்தாலும் கிணறு வெட்டுவதனால் அதன் மதிப்பு உயரக் கூடும் என்கிறபோதும் கடன் உதவி அளிக்கப் படுகிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** கிணறு வெட்டுவதற்கும், ஆழப்படுத்துவதற்கும் கடன் கொடுக்கப்படுகிறது. அந்த வேலையை முடிக்க சிறிது காலம் தாமதமாகிவிட்டது என்றால் கூட தவணை முறைகளை ஒழித்து, உடனடியாக மொத்தப் பணத்தையும் கட்டவேண்டுமென்று உத்திரவு போடுகிறார்களே, அப்படி இன்றி தவணை முறையிலேயே வசூல் செய்வதற்கு உத்திரவு செய்ய முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைப் பற்றியும் பரிசீலனை செய்யலாம்.

**திரு. மு. கிருஷ்ணமூர்த்தி :** தமிழக அரசு ஏற்பட்ட பிறகு இதுவரை எத்தனை விவசாயிகளுக்குக் கிணறு வெட்டக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது ? மொத்த தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. பி. வேலுசாமி :** கோவை மாவட்டத்தில் ஒரு கிணறு வெட்டுவது என்றால் 100 அடி, 120 அடி வெட்ட வேண்டியதாக இருக்கிறது. அதை அனுசரித்து அந்த மாவட்டத்திற்குக் கிணறு வெட்டக் கடன் அளிக்கப்படும் தொகையை அதிகமாகக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த முறையில்தான் இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. தி. பொன்னுமலை :** நாலாயிரம் ரூபாய் கிணறு வெட்டச் செலவானால் அரசு ஆயிரம் ரூபாய் மானியம் அளிக்கிறது. பதினைந்து அடி வெட்டியவுடன் பாறை வந்துவிட்டால் மிகக் கஷ்டமாகப் போய்விடுகிறது. ஆகவே, பாறை பகுதி முழுவதையும் எடுக்க என்ன செலவாகிறதோ அதை அரசு மானியமாக அளிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நல்ல யோசனை, அது பற்றி பரிசீலிக்கலாம்.

### *Extraction of Jasmine oil*

* 201 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are schemes before the Government for the extraction of jasmine oil at the Horticultural Department, Coimbatore, and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) and (இ) கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த தோட்டக் கலைப் பிரிவில் மல்லிகைத் தைலம் எடுக்கும் திட்டம் எதுவும் இல்லை. எனினும் கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் பூச்செடிகள் வளர்ப்புப் பிரிவை ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அண்மையில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் கீழ் பல இனங்கள் குறித்து நாளடைவில் ஆராய்ச்சி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. கண்கவர் வணப்புச் செடிகளை அடிப்படையாகக் கொண்டு வேளாண்மைத் தொழில் வாய்ப்புகள் குறித்து ஆராய்ச்சிக்கு ஏற்பாடு செய்வதும் அந்த ஆராய்ச்சி இனங்களில் ஒன்றாகும்.





**திரு. என். எஸ். வி. சித்தன் :** மதுரை மாவட்டத்தில் ரோஜா, மல்லிகை மலர்கள் நிறைய உற்பத்தியாகின்றன. ஆகவே, மதுரையிலும் இந்த மலர்களில் இருந்து தைலம் எடுக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மதுரையாக இருந்தாலும், கோயம்புத்தூராக இருந்தாலும் ஒன்றுதான். முதலில் கண்கவர் பூக்களை வளர்க்க வேண்டியிருக்கிறது. அவற்றை வளர்த்துத் தைலம் எடுக்கப் பூர்வாங்கமாக இப்போது ஆராய்ச்சி நிலைதான் இருக்கிறது. ஆராய்ச்சி முடிந்த பிறகு இது பற்றி சிந்திக்கலாம்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** மல்லிகைத் தைலம் எதற்குப் பயன்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் தைல வியாபாரி அல்ல. உறுப்பினருக்கு அதில் அனுபவம் இருந்தால் அதை இந்த மன்றத்திற்குச் சொல்லலாம். (சிரிப்பு.)

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Jasmine flowers are grown in plenty in the Dharmapuri district especially in the Hosur taluk. Sometime back the Dharmapuri District Development Council also has recommended the starting of such an industry at Hosur. So, I wish to know from the Hon. Minister, what steps have been taken in that direction ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am not aware of that recommendation.

**திரு. சி. கோவிந்தராசன் :** மல்லிகைத் தைலம் எந்தவிதமான ஆரோக்கியத்தையும் அளிப்பதில்லை. அதற்கு மாறாக மக்களுக்கு மிகுந்த ஆரோக்கியத்தை அளிக்கும் அரைக்கீரை, கரிசலாங்கண்ணி போன்றவற்றைப் பயிர் செய்து தைலம் எடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மல்லிகைத் தைலம் பிரயோசனம் இல்லை என்பதை நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். மலர்களிலேயே சிறந்தது மல்லிகை. மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகை என்றாலும் மணக்கும் என்பது உலக மரபு. இதுதான் முதற்படி. மற்றவை பற்றியும் ஆராய்ச்சிகள் செய்யலாம்.

**திரு. மு. ச. சிவசாமி :** நெல்லை மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையோரங்களில் லெமன் கிராஸ் (புல்) ஏராளம் வளர்ந்து வீணாகிக் கொண்டிருக்கிறது. இதில் இருந்து தயாரிக்கப்படுகிற தைலம் அந்நியச் செலாவணியை நமக்குத் தேடித் தரத்தக்கது. ஆதலால் குற்றாலத்திலோ, பாபநாசம் அருகிலோ இந்த லெமன் கிராஸ் (புல்) தைலம் எடுக்க முயற்சி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தைல உற்பத்தியில் நமது உறுப்பினர்கள் மிகுந்த உற்சாகம் எடுத்துக்கொள்கிற காரணத்தினால் இது சம்பந்தமான நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்தலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரத்திலே எதாவது சொல்லவேண்டுமென்று சொல்லக்கூடாது. மூலக் கேள்வியிலே சொல்லப்பட்டிருப்பதை யொட்டியவையாகத்தான் துணைக் கேள்விகள் இருக்கவேண்டும். மல்லிகையிலிருந்து தைலம் இறக்குவதைப் பற்றி மூலக் கேள்வி இருக்கும் பொழுது, இன்னொரு புல்லிலிருந்து தைலம் இறக்குவதைப் பற்றி யெல்லாம் துணைக்கேள்விகள் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மீன்பிடிக்கும் வலைகளுக்கு நூல் விநியோகம்.

*202 வினா.—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் ஆறு காட்டுத்துறையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வலைகளுக்காக நமது அரசு வலை நூல் வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், வழங்கியுள்ள வலை நூல்கள் கடனாகவா இலவசமாகவா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) இத் தீ விபத்திற்குள்ளான 117 மீனவர்களுக்கு ஏற்பட்ட விரயத்தில் $\frac{1}{4}$ பங்கு வரை நைலான் நூலாகவும் பருத்தி நூலாகவும் பரிகாரமளிக்கப்பட்டது. இதில் பாதி மானியமாகவும் பாதி கடனாகவும் கருதப்பட்டது.

### *Sub-Registrar's Office for Thattarmadam*

* 203 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Sub-Registrar's Office at Thattarmadam village in Sattankulam Panchayat Union Council area in Tirunelveli district ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, சாத்தான்குளம் பகுதியிலே குமட்டிக்கோட்டை, நடுவக்குறிச்சி, தட்டார்மடம், என்ற இடங்களிலே பத்திரப் பதிவு அலுவலகம் இல்லாத காரணத்தினாலே, நான்குனேரி பகுதியிலே உள்ள திசையன்விளைக்கு வந்து பத்திரப் பதிவு செய்யவேண்டியிருக்கின்ற காரணத்தாலே தட்டார்மடத்திலே பத்திரப்பதிவு அலுவலகத்தை ஏற்படுத்த முடியாது என்று சொல்லிவிட்ட காரணத்தாலே திசையன்விளையிலிருந்து சப் ரிஜிஸ்தாரை வாரத்திற்கொருமுறை தட்டார்மடத்திற்கு வந்து பத்திரங்களைப் பதிவு செய்து கொடுக்கக்கூடிய வசதிகளைச் செய்யவேண்டுமென்று அந்தப் பகுதியிலுள்ள மக்களிடமிருந்து விண்ணப்பம் வந்ததா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு கேள்விக்கு இல்லையென்று பதில் சொல்லிவிட்ட பிறகு மீண்டும் அதையே கேட்பது . . .

**திரு. டி. மார்டின் :** விண்ணப்பம் வந்ததா என்று கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டும் ஒன்றுதான்.

### பத்திரப் பதிவுத் துறையின் வருமானம்.

*204 வினா.—**திரு. கே. சகாதேவக் கண்டர் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகப் பத்திரப் பதிவுத் துறையில் கோப்பு முறை அமுலுக்கு வந்த பின் முன்பைவிட வருமானம் அதிகரித்துள்ளதா அல்லது குறைந்து உள்ளதா, எவ்வளவு ?

**மாண்மிகு திரு. செ. மாதவன் :** ரூ. 20,59,544 அதிகரித்துள்ளது.



**திரு. கே. சகாதேவக் கண்டர் :** தலைவர் அவர்களே, இந்தப் புதிய முறை அமலுக்கு வந்ததற்குப் பிறகு சிக்கனத்தை முன்னிட்டுப் பத்திரப் பதிவு அலுவலகங்களில் வேலை பார்க்கின்ற ஊழியர்கள் ஏதாவது நீக்கப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 412 எழுத்தர்கள் நீக்கப்படவில்லை. அவர்களுக்கு வேறு துறைகளில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள நிலைமை பத்திரம் எழுதிக்கொண்டு ரிஜிஸ்டர் செய்வதற்குப் போனால் மதிப்பைச் சரியாகப் போடவில்லை என்று திருப்பிவிடுகிறார்கள். ஆகவே மதிப்புக்கான விசேஷ அதிகாரத்தை சப்-ரிஜிஸ்திராருக்கு வழங்கியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மதிப்பைக் குறைவாகப் போட்டுக்கொண்டு வருகிறவர்களும் இருக்கிறார்கள். அது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். இதைத் தடுப்பதற்கு ரெவின்யூ இலாகாவிலே டெபுடி கலெக்டர் போட்டு மாவட்ட அளவிலே ஒவ்வொரு மாவட்டந்தோறும் அவர்களே மதிப்பை நிர்ணயித்து அதைத்தான் பத்திரப் பதிவு அலுவலகத்தில் பின்பற்ற வேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** புதிய பத்திரப் பதிவு முறையைப் பற்றி பொதுமக்களிடமிருந்து சரியாகச் செயல்படவில்லை என்று புகார்கள் வந்து உள்ளனவா, அல்லது திருப்தியாக உள்ளது என்று ஏதாவது பாராட்டு வந்து உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இரண்டு வகையிலும் உண்டு.

**திரு. எம். சுரேந்திரன் :** இம்மாதிரி மதிப்பிடப்பட்டு அதன்படி தஸ்தாவேஜுகளைப் பத்திரப் பதிவு அலுவலகத்திலே ரிஜிஸ்தர் செய்வது என்பது பல இடங்களிலே சிரமமாக இருக்கிறது, சரியாக இல்லை என்று எல்லாம் புகார்கள் சொல்லப்படுகின்றன. அம்மாதிரி எந்த இடத்திலிருந்தாவது புகார்கள் வந்தால் அவற்றைப் பரிசீலிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் முன்பே சொன்னேன் ஒவ்வொரு இடத்திலும் கருத்து வேறுபாடு இருக்கலாம். அதனாலே சில பேர்கள் பத்திரப் பதிவு செய்யமாட்டேன் என்று சொல்வதாகவும் சொல்கிறார்கள். கூடிப் பேசி ஸ்டாம்புக் கட்டணத்தைக் குறைப்பதற்கு வழி செய்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். அதனால்தான் ஒவ்வொரு பகுதியாக எடுத்துக்கொண்டு ரெவின்யூ இலாகாவிலே அவர்கள் மதிப்புப் போட்டு, ஒவ்வொரு மாவட்ட அளவிலும் போட்டு ஒரு பட்டியல் தயாரித்து, அந்தப் பட்டியலை அவர்களிடத்திலே கொடுத்துவிட்டால் புகார்கள் இருக்காது என்று கருதப்பட்டது.

**திரு. என். துரை பாண்டியன் :** மதிப்புக் குறைவாகப் போடுவதன் காரணமாக ரிஜிஸ்தரார் ஆபீசிலே ரிஜிஸ்டர் செய்யாமல் மறுத்து விடுகிறார்கள். ஆனால் அதே சமயத்திலே கடன் வாங்குவதற்காக அதிக மதிப்புப் போட்டுவிட்டால் அதைக் குறைப்பதற்கு சப் ரிஜிஸ்திராருக்கு உத்திரவிட்டிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்கத்திற்கு வரும் வருமானத்தை கனம் அங்கத்தினர் தடுப்பது சரியல்ல.

**திரு. அ. ஆறுமுகம் :** அந்த அந்த வட்டத்திலே நிலங்களை மதிப்புப் போட கோட்டாட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எந்தச் சட்டத்தின் கீழும் கொண்டு வரமுடியாது. ஒரு மதிப்பை நிர்ணயிப்பது மாவட்டம் முழுவதற்குமாக எடுத்து நிர்ணயிக்கவேண்டுமென்ற அடிப்படையில் மாவட்ட அளவிலே டெபுடி கலெக்டர் போடப்பட்டிருக்கிறார்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** தலைவர் அவர்களே, நிலங்களின் மதிப்பு என்ன என்ன, பிராந்தியத்திற்கு என்ன, ஏக்கருக்கு என்ன விலை என்பது எல்லாம் நிர்ணயித்து அந்த மதிப்பில்தான் பதியவேண்டுமென்று சொல்கிறார்களே, அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதுதான் முன்பே சொன்னேன்.

### மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் தேர்வு

***205 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1962 முதல் 1966 வரையில் மருத்துவக் கல்லூரிகளுக்கு (M.B.B.S.) மாணவர்கள் எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ?

(இ) P.U.C.-யில் இரண்டு ஆண்டுகள் Fail ஆகியவர்களையெல்லாம் தேர்ந்தெடுத்தது உண்மையா, விவரம் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) மாணவர்கள் அவர்களுடைய பல்கலைக் கழகத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலும், நேர்முக பேட்டியில் அளித்த விடைகளின் அடிப்படையிலும் ஆண்டுதோறும் அரசினரால் அமைக்கப்பட்ட தேர்வுக் குழுவால் மருத்துவக் கல்லூரி படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(இ) விவரங்கள் இல்லை. விதிகளின்கீழ் அம்மாதிரியான தேர்வுகளுக்கு எவ்விதத் தடையும் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், உபகாரச் சம்பளம் கொடுப்பதிலே உபகாரச் சம்பளம், பார்வர்ட், பேக்வர்ட், மோஸ்ட் பேக்வர்ட், ஷெட்யூல்ட் இப்படியெல்லாம் கணக்கிட்டு உபகாரச் சம்பளமும் மார்க்குகளில் சலுகையும் கொடுக்கப்படுகிறது. ஆனால் மிகவும் பின்தங்கிய, அதிகமாகத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு முதல் சலுகை தேர்வு கிடையாதே, இனி மேலாவது முதல் சலுகை தேர்வு கொடுப்பதற்கு முயற்சி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தாழ்த்தப்பட்டவர்களுக்கு குறிப்பிட்ட சத விகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே பின்தங்கியவர்களுக்கும் குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் மருத்துவ படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**Dr. H. V. HANDE :** These medical college admissions have become a serious business. There is no basis. A lot of complaints are there against Government . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒவ்வொரு முறையும் சொல்கிறேன். கேள்வி நேரத்திலே எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் இருக்கக்கூடாது என்று. அமைச்சர்களிடமிருந்து ஏதாவது செய்திகள் தெரிந்துகொள்வதற்கு தான் கேள்வி போடவேண்டும்.

### 2. அவையுரிமைக் கேள்விகள்

### (i) டாக்டர் எச். வி. ஹாண்டே மீது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ரொம்ப சந்தோஷம். நீங்களும் எதிர்க்கட்சியில் இருந்தீர்கள். தி.மு.க. எதிர்க்கட்சியிலிருந்த . . .

(மணியடிக்கப்பட்டது.)



**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்புக்குப் பிறகும் தங்களுடைய தீர்ப்பைப் பற்றி விமர்சனம் செய்வது நமது சட்ட மன்ற விதி முறைகளுக்கு ஒழுங்கானதல்ல. ஆகவே, இதை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து தங்களுடைய தீர்ப்பையும் விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் எதிர்கட்சியிலே இருந்ததைப் போல் மாண்புமிகு உறுப்பினரும் இருந்திருக்கிறார்கள். சட்டமன்ற விதிமுறைகளை அறிந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். சட்டமன்ற விதிகளிலே கேள்விகள் கேட்கிற நேரத்திலே,

Any member may ask a question to elicit information on a matter of public importance.

என்று இருக்கிறது. என்ன என்ன இருக்கக்கூடாது என்பதும் சொல்லப்பட்டு இருக்கிறது. அதாவது—

It must not be of excessive length.

A question once fully answered must not be asked again.

It shall not raise a question of policy.

It shall not ask for information on trivial matters.

It must not contain arguments, inferences, ironical expressions or defamatory statements.

இப்பொழுது நான் சட்ட மன்றத்திற்கு வந்ததற்குப் பிறகு இடையிலே வந்த விதிகள் அல்ல இவை. தொன்றுதொட்டு கடைப்பிடிக்கப்படுகின்ற விதிமுறைகள்தான் என்பதை நினைவுபடுத்துவதற்குத்தான் சொன்னேனே தவிர, புதிதாக விதிமுறைகள் வகுக்கப்படவில்லை. "நீங்களும் எதிர்க்கட்சியில் இருந்தீர்கள்" என்று கூறுவது சரியல்ல. இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் சேர்ந்து தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். தலைவருக்குச் செலுத்தவேண்டிய மரியாதையைச் செலுத்தாவிட்டால் தங்களுக்குத் தாங்களே மரியாதையைச் செலுத்தவில்லை என்பதாகும். ஆகவே தம் உரையிலே வந்த அந்த வார்த்தைகளை மாண்புமிகு உறுப்பினர் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Dr. H. V. HANDE :** I have neither insulted the House nor have I gone off the rules. The point I wanted to tell the Deputy Speaker was that we have been carrying on the business of this House for a number of years. Let us take all the questions that have been put. Members have been given the opportunity to give their ideas, to put forth their complaints or grievances in the form of questions. Has this rule been strictly adhered to ? So many questions are there extending to six lines and eight lines. All these things have been done for the past several years. When I ask a question about medical college admissions, Mr. Arangannal is so allergic that he discovers a point of order. மு.ப. 10-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. அரங்கண்ணல் அவர்கள் நீங்கள் மருத்துவக் கல்லூரியைப் பற்றிக் கேட்டவுடனே பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பவில்லை. நான், கேள்வி நேரத்திலே எந்தவிதமான குற்றச்சாட்டும் கூறக்கூடாது என்று சொன்ன பிறகு, "நீங்களும் இந்த சட்ட மன்றத்திலே எதிர்க்கட்சியிலே இருந்திருக்கிறீர்கள்" என்று என்னைப் பற்றிச் சொன்ன பிறகுதான், பாயிண்ட் ஆப் ஆர்டரை எழுப்பினார்கள்.

இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் விதிமுறைகளுக்கேற்ப நடக்கவேண்டும். தங்கள் தங்களுக்கென்று பல கருத்துக்கள் இருக்கலாம். அவற்றையெல்லாம் சொல்வதற்கு இந்த மன்றந்தான்

இடம் என்றால் மன்றத்தின் எந்தவித நடவடிக்கைகளும் நடைபெற முடியாது. கட்சி வேறு, மன்றத்தை நடத்திச் செல்வது வேறு என்பதை உணர்ந்து கனம் உறுப்பினர் எந்தெந்த வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும், எந்த முறையில் பேசவேண்டுமென்பதற்கு உள்ள விதிமுறைகளின்படி பேசவேண்டும். இந்த மன்றம் சட்டங்கள் உருவாக்குகின்ற மன்றம். நீதிமன்றங்களிலே வரம்புக்குட்பட்டு நடந்து கொள்ளவேண்டுமென்ற விதிமுறைகள் இருக்கின்றன. அதைக் காட்டிலும் அதிகமான அளவுக்கு விதிமுறைகளின் வரம்புக்குட்பட்டு நடந்தால்தான் நல்ல முறையில் மன்றத்தின் நிகழ்ச்சிகளை நடத்திச் செல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர்கள் இதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயிண்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் சார். தலைவர் அவர்களே, தோழர் ஹாண்டே அவர்கள் கேட்ட கேள்வியைப் பற்றி எனக்கு எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது. எவ்வளவு கேள்விகள் வேண்டுமானாலும் கேட்கட்டும். பேரவைத் தலைவரைப் பற்றி அவர் கூறியது ஒழுங்கு முறைக்கு, விதி முறைகளுக்கு முரணானது என்பதைத்தான் நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Have I insulted you ? I only reminded you that you were a member of this House as a member of the Opposition. Have I made one imputation or insult to the Hon. Deputy Speaker ? I am only trying to establish the fact how difficult it is to function as an Opposition member. We cannot just put questions. We have to put some questions here and there. I have done it and Mr. Vinayakam also has done it. Let us see the proceedings. When I take this opportunity, that is a question for which I want an answer. I want to know from the Deputy Speaker why with such rigidity these rules are enforced here when I ask a question about medical college admissions ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியின் பொருளையொட்டி இப்படிப்பட்ட விதி முறைகள் வகுக்கப்படுகிறது என்ற குற்றத்தைச் சாட்டியிருக்கிறார்கள். இது சபாநாயகரை நேர்முகமான முறையில் குற்றம் சாட்டியதாக இருக்கிறது. இந்த மன்றத்தின் விதிமுறைகளின்படி சபாநாயகரே எடுக்கின்ற முடிவுப்படி என்னுடைய முறையிலேயே இதை உரிமைக் குழுவுக்கு அனுப்புகிறேன்.

Dr. H. V. HANDE : I did not accuse the Deputy Speaker. I put only a question.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த விவகாரம் முடிந்து விட்டது. வேறு கேள்வியைக் கேளுங்கள்.

Dr. H. V. HANDE : It is all right. I can be expelled, I can be dismissed. I am doing my work properly. My conscience is clear.

1. **வினுக்கள் விடைகள்**—தொடர்ச்சி.

Dr. H. V. HANDE : I want an answer, if possible from the Leader of the House, whether he is prepared to scrap this system of interview which is not at all appreciated by the public outside. I want to know what is this mysterious factor which they are finding out in the interview which is not connected with the number of marks that the students have got ? Time and again I have suggested that this interview should be abolished. Will the Minister dispel the impression that something is going wrong in the medical college admissions and give a categorical assurance that they will abolish the marks for interview ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தொடர்ந்து இந்த மாநிலத்திலே கடைப்பிடித்து வருகின்ற ஒரு முறையைத் தான் மருத்துவக் கல்லூரியிலே மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு சென்ற ஆண்டிலும் சரி, இந்த ஆண்டும் சரி கடைப்பிடித்து வந்திருக்கிறோம். சென்ற ஆண்டு பல வழக்குகள் தொடரப்பட்டன என்றாலும் உயர்நீதி மன்றமோ, தலைமை நீதி மன்றமோ, இந்த முறையைப் பற்றியோ, அமைந்திருக்கின்ற வகையைப் பற்றியோ, அதற்காக இருக்கின்ற விதி முறைகளைப் பற்றியோ, கொடுக்கப்படுகின்ற மார்க்குகள் பற்றியோ குறை காணவில்லை. மேலும் 27 இடங்களுக்குத் தேர்ந்தெடுப்பதிலே, வெயிட்டிங் லிஸ்டில் இருப்பவர்களுக்கும், புதிதாக வந்தவர்களுக்கும் மறுபடியும் தேர்வு நடத்தவேண்டுமென்றார்கள். அந்தத் தேர்வை நடத்தியதிலே 24 பேர் எடுத்துக் கொள்ளப்பட்டதோடு புதிதாக 3 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தலைமை நீதிமன்றம், மாவட்ட வாரியாக மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது தவறு, மாநில அளவிலே தான் தேர்ந்தெடுக்கவேண்டுமென்றார்கள். ஆகவே இந்தமுறை தவறு என்றோ, கமிட்டி அமைப்பது தவறு என்றோ உயர் நீதி மன்றமோ, தலைமை நீதி மன்றமோ சொல்லவில்லை. ஆறாயிரம், ஏழாயிரம் பேர் மனுச் செய்கின்ற நேரத்தில் ஏதாவது ஒரு முறையைக் கையாண்டு தான் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அந்த முறை சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த முறையினைப் பற்றி உயர் நீதி மன்றமோ, தலைமை நீதி மன்றமோ தவறு என்று கூறவில்லை. ஆகவே, இந்த முறையை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்த ஆண்டு மருத்துவக்கல்லூரித் தேர்விலே, இராமநாதபுரம் மாவட்டத்திலே பின்தங்கிய பகுதியான முதுகுளத்தூரிலே, பின்தங்கிய முக்குலத்தோர் வகுப்பைச் சார்ந்த மாணவன் ஒருவன் பி.யு.சி-யில் இரண்டு பாடங்களில் "டி" யும், ஒரு பாடத்தில் "ஏ பிளஸ்"-ம் எடுத்து, நேர்முகத் தேர்விலும் நல்ல முறையில் பதில் அளித்தும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் மிகக் குறைந்த மார்க் எடுத்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த அடிப்படையில் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மூலக் கேள்வி 1962 முதல் 1966 வரையில் மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பது. ஆகவே, இதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேர்முகத் தேர்வில் நல்ல முறையில் அந்த மாணவர் விடையளித்ததாகச் சொல்லுகிறார். எதை வைத்து உறுப்பினர் அவர்கள் அவ்வாறு கூறுகிறார்? உறுப்பினர் அவர்களுக்கு எப்படித் தெரியும். கேள்வி நேரத்தில் அப்படிப்பட்ட தகவல்களைக் கூறும்போது அங்கத்தினர் அவர்கள் அதற்குப் பொறுப்பு ஏற்கவேண்டும்.

Thiru K. VINAYAKAM : Is it not a fact that these personal interviews of candidates will give an impression to the members about the aptitude, personality and suitability to the course and is it not also a fact that it should be continued irrespective of the grade which they obtained in the examination which may not reflect the actual efficiency of the boys sometimes ?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : The answer to this question is in my Friend's supplementary question.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** சமுதாயத்திலே மேல் மட்டத்திலே இருக்கக்கூடியவர்கள், வசதி படைத்தவர்கள் வீட்டுப் பிள்ளைகள் அதிகமான மார்க்குகளைப் பொதுவாக வாங்குகிறார்கள். எல்லோருக்கும் சம வாய்ப்பைத் தரும் பொருட்டுத் தான் நேர்முகத் தேர்விலே ஞாபக சக்தியைப் பரீட்சை செய்கிறார்கள். அறிவைப் பரீட்சை செய்யவில்லை. நேர்முகத் தேர்விலே கேள்விகள் கேட்டு விடையளிப்பதற்கு இப்போது 75 மார்க்குகள் என்று இருப்பதை 150 மார்க்குகள் என்று உயர்த்துவதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எண்ணற்ற பெற்றோர் களின் கருத்தைத் தான் கனம் அங்கத்தினர் அவர்கள் பிரதிபலித்திருக் கிறார்கள்.

**THIRU T. MARTIN :** May I request the Hon. Minister to state whether this Government will at least this year place on the table of this Hon. House a list of the selected candidates showing their parents' address and giving particulars of the marks obtained in the Pre-University Course and in the interview at least for the perusal of the Hon. Members of this House ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பட்டியல் தயாரிக்கப்பட்டு அந்தந்தக் கல்லூரிகளில் ஒட்டப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துக் கொள்ளலாம். அவரவர்கள் பெற்ற மதிப்பெண்களையும் அவர்களைக் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம். இண்டர்வியூவில் கொடுக்கப்படுகிற மார்க்குகளைப் பற்றி ஒரு சட்டப் பிரச்னை இருக்கிறது. இண்டர்வியூவை நடத்தக்கூடிய தலைவர் கள் அது எங்களுடைய சொந்த பிராபர்ட்டி (personal property) we will not place it. before the Government என்ற வாதத்தை எழுப்பி யிருக்கிறார்கள். இப்போது அது உயர்நீதி மன்றத்தில் இருக்கிறது. உயர் நீதி மன்றம் என்ன முடிவைக் கூறுகிறதோ அதை இந்த அரசாங்கம் ஏற்று செயல்படும்.

**திரு. பெ. சீனிவாசன் :** கடந்த 20 ஆண்டு காலமாக இந்த மாதிரி சட்ட மன்றத்தின் முன்னால் அப்படிப்பட்ட விவரங்களை வைக்கவேண்டு மென்று கேட்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த அரசாங்கம் வந்தவுடன்தான் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இப்போது மருத்துவக் கல்லூரிக்கு தேர்வு செய்கிற தேர்வுக் குழு தயார் செய்கிற லிஸ்டை முடிவான லிஸ்டாக பப்ளிஷ் செய்யப்படுகிறதா ? அல்லது அந்த லிஸ்ட் முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு முதல் அமைச்சர் அவர்கள் அதை ஏற்ற பிறகு பப்ளிஷ் செய்யப்படுகிறதா ? அல்லது முதல் அமைச்சர் அவர்களால் அதில் மாற்றம் செய்யப்பட்டு அதன்படி பப்ளிஷ் செய்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எப்போதும் பின்பற்றப்பட்டு வந்த முறையை கொஞ்சம் கூட நழுவாது பின்பற்றுகிறோம். அந்தந்த குழுத் தலைவர் அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து அறிக்கை தயாரித்து கையெழுத்திட்டு அனுப்புகிறார்கள். அப்படியே இந்த அரசாங்கம் அதை அனுமதித்து உடனடியாக அதை வெளியிடவும் செ து.
ய்கிற

**திரு. ந. வீராசாமி :** 1962 முதல் தேர்வுக்குழு வைத்துக் கொண்ட மதிப்பெண்கள் எவ்வளவு ? இப்போது இந்த அரசு வந்ததற்குப் பிறகு தேர்வுக் குழு வைத்துக் கொண்டிருக்கிற மதி பெண் எவ்வளவு ? முந்திய அரசு அதிக எண்கள் வைத்திருந்த காரணத்தினால் பல தவறு கள் நடந்தது என்பது உண்மையா ?





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** முன்னால் நேர்முக இன்டர்வ்யூவிற்கு 150 மார்க் என்றிருந்தது. பிறகு முன்னாள் அரசாங் கமே அதை 75 ஆக குறைத்தது. அதை தொடர்ந்து அனுஷ்டித்து வருகிறோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தேர்வுக் கமிட்டித் தலைவர்கள் இது எங்கள் சொந்த அதிகாரத்திற்கு உட்பட்டது என்று சொல்லி நீதி மன்றத்தில் அதை வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போதுதான் அதுபோன்ற ஒரு பிரச்சினை கிளம்பியிருக்கிறதா ? அல்லது ஏற்கனவே அதுபோன்றதொரு பிரச்சினை இருந்ததா ? அப்போதும் இது போன்ற முறையை அனுஷ்டித்தார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த மதிப்பெண்கள் கொடுக்கக் கூடிய பிரச்சினையில் அவர்கள் எழுப்பக்கூடிய சந்தேகம் ஒரு தனிப்பட்ட காண்டிடேட் செல்லும்போது அவருக்கு நாங்கள் எவ்வளவு மார்க்குகள் கொடுத்தோம் என்று வெளியே தெரிந்தால் எங்கள் மீது அவர்களுக்கு கோபம் வரும், எங்கள் மீது விரோதம் வரும், அதனால் எங்களுக்கு இடை யூறுகள் வரும், அதை ஒத்துக்கொண்டால் நாங்கள் குழுவிற்கு வரவே மாட்டோம் என்பது அவர்கள் வாதம். அதேசமயத்தில் மார்க் லிஸ்டை அழிப்பது என்பது ஒரு பாரம்பரியமாக பின்பற்றப்பட்டு வந்தது. அது எங்கள் ஆட்சியால் புதிதாகத் தொடங்கப்பட்டதல்ல. ஆனால் நம் ஆட்சி வந்தபிறகு அதைக் கூட எரிக்காதீர்கள், அதை வைத்திருங்கள், குறைந்த காலத்திற்காவது வைத்திருங்கள், நீதிமன்றம் கேட்கும்போது அவர்களிடம் நாங்கள் பதில் சொல்லவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். எந்த முறையும் புதிதானதல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பேர்ப்பட்ட கல்லூரிகளில் சேர்க்கும் போது இதுபோன்ற இண்டர்வ்யூக்களின் அடிப்படை நோக்கமே ஏற்கனவே முன்னேறியிருக்கக்கூடியவர்களுக்கு சில சலுகைகள் இருப்பதால் பின் தங்கிய வகுப்பினருக்கு ஓரளவு சலுகை இருக்கவேண்டுமென்ற அடிப்படை யில்தான் இது இருக்கிறது. அங்கு கொடுக்கப்படுகிற மதிப்பெண்கள் இதற்கு ஓரளவு உதவி செய்யும். ஆகவே தொடர்ந்து இப்படியே நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் நல்ல கருத்தை அவர்களது கட்சிக்காரர்களுக்கும், வெளியே உள்ளவர் களுக்கும் பிரசாரம் செய்தால் நாட்டுக்கும் நல்லது, நமக்கும் நல்லது.

**திரு. பி.எஸ். தனுஷ்கோடி :** முன்னாள் அரசாங்கம் கடைப்பிடித்த முறையைத்தான் நாங்களும் கடைப்பிடித்து வருகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முன்னாள் அரசாங்கம் தேர்வு முறையில் கடைப்பிடித்தவை தவறான ஏற்பாடுகள் என்ற எண்ணம் பொதுமக்களி டையேயும், பெற்றோர்களிடையேயும் இருந்து வருகிறது. ஆகவே அந்த முறையை மாற்றி புதுத்தேர்வு முறையைக் கொண்டுவர இந்த அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பின்பற்றப்படுகிற முறைகளில் ஏதா வது தவறு இருக்கிறது. ஆகவே அதை மாற்றவேண்டுமென்று உறுப் பினர் யோசனை சொன்னால் அதை பரிசீலிக்கலாம். இந்த அரசு செய் வதெல்லாம் தவறு என்று அவதூறு கூறினால் அதற்கு எப்படிப் பதில் சொல்வது ?

**DR. H. V. HANDE :** Sir, what is the difficulty for the present Government to do away with these interview marks as it is done in certain other States like Andhra Pradesh, West Bengal and Kerala even though the previous Government had been pursuing this wrong policy and allot seats for students belonging to the Harijans, Backward and Most Backward Communities ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அங்கத்தினர் விருப்பம் அதுதான் சுருக்கமாக. அதாவது, மதிப்பெண்களைத் தவிர வேறு எதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதுதான் அவர்கள் விருப்பம். அந்த விருப்பத்தை இந்த அரசு ஒருகாலும் ஏற்காது. இந்த நாட்டு மக்கள் விரும்புவது—எல்லா மாவட்டங்களுக்கும், எல்லாப் பகுதிகளுக்கும், விவசாயக் குடும்பங்களில் உள்ளவர்களுக்கும் வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கையாக உதாரணமாகச் சொல்கிறேன். கிராமத்திலுள்ள ஒரு சாதாரண விவசாயியின் மகனையும், இங்குள்ள ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசரின் லயோலா கல்லூரியில் படித்த மாணவரின் திறமையையும் ஒன்றாக பாவித்து ஏழை மக்களைப் பழிவாங்க இந்த அரசு ஒருகாலும் ஒத்துக்கொள்ளாது. (ஆரவாரம்.)

DR. H. V. HANDE : Sir, on a point of personal explanation. I do not know whether the Hon. Minister has understood my question....

THE HON. THIRU S. MADHAVAN : Sir, he has already insulted the Hon. Speaker and now he has insulted the Minister.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மறுபடியும் வினாவைப் போடுகிறேன் என்று சொல்லுங்கள். குற்றச்சாட்டு இருக்கக்கூடாது.

DR. H. V. HANDE : Sir, my question is very clear. I did not say that the students from different districts should not be given a chance. My question is with regard to Harijans, Backward Classes and Most Backward Classes and I want that a certain percentage of seats should be allotted for them. Also my submission is with regard to the interview marks and aptitude test which are intended to find out whether a boy or girl is fit for admission to the medical college. But the Hon. Minister in his reply has stated that I am against farmers' children being educated in the medical college. Far from it. That is not my question. I am for giving representation to different communities on a percentage basis. Sir, with regard to the interview and the aptitude test, there is a certain amount of misunderstanding outside the House and it is not in the interest of the Government. So, my question as reframed now is whether the Government would do away with the interview marks....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் கொடுத்து விடுங்கள். அது போதும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மதிப்பெண்களைப் பற்றி விளக்கம் கேட்டார்கள். தலைவரிடத்திலும் கேட்டோம். டி ப்ளஸ், டி ப்ளஸ், டி ப்ளஸ் வாங்கியிருக்கிறவர்கள் எந்தக் கேள்விகளுக்கு பதில் அளித்து அந்த டி ப்ளஸ் வாங்கினார்களோ அந்தக் கேள்வியைக் கேட்டவுடன் அதற்குப் பதில் சொல்லாமல் முழித்ததை நாங்கள் பார்த்தோம் என்கிறார்கள். மதிப்பெண்களை மட்டும் வைத்து தேர்ந்தெடுக்கக் கூடிய முறையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அது எங்கள் கொள்கை. மதிப்பெண்களோடு உண்மையில் இந்த மாதிரி படிப்பிற்கு அவர்கள் லாயக்குள்ளவர்களா என்று பார்ப்பதற்கு அந்தக் குழுவிற்கு பொறுப்புண்டு. அந்தக் கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை மாற்றுவதை ஒருகாலும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மதிப்பெண்கள் வாங்குவதில் கூட* இருக்கின்றன என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?....

* பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சாதாரணமாக மதிப்பெண்கள் ஓரளவிற்கு அவர்களுடைய அறிவு, ஆற்றல் திறனைக் காட்டுகிறது. அதுவே திறனை முழுமையாகக் காட்டவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருப்பதால் பர்ஸனல் இன்டர்வ்யூ வைத்து ஆராய்வதும், பர்ஸனாலிட்டி, ஆப்டிட்யூட், அவர்கள் தகுதி எல்லாவற்றையும் ஆராய்ந்து ஒட்டுமொத்தமாக சேர்த்துத்தான் மார்க் கொடுக்கவேண்டியிருப்பதால் இந்த முறை வைக்கப்பட்டிருக்கிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் கூட இன்டர்வ்யூவில் ஆப்டிட்யூடை பார்த்து தேர்ந்தெடுக்கவேண்டியிருப்பதால் தேர்வு எண்களை மட்டும் நம்ப இயலாது என்றுதான் தொடர்ந்து இந்த முறை கையாளப்பட்டு வருகிறது. அந்த முறைதான் பின்பற்றப்பட்டு வருகிறது. இதில் தவறு எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * என்ற வார்த்தையை....

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்த வார்த்தையை எடுத்து விடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * என்ற வார்த்தையைப் பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி உத்தரவு இடுகிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்தத் தேர்வுக் குழுவில் உயர்நீதி மன்ற நீதிபதியை நியமித்திருப்பதாக அறிகிறேன். இந்தக் கேள்வியில் குறிப்பிட்டிருக்கிறபடியுள்ள 1962 முதல் 1966 வரை இருந்த குழுக்களில் நீதிபதிகளை நியமிக்கும் வழக்கம் இருந்ததா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 1962 முதல் 1966 வரையில் நீதிபதிகளை நியமித்ததாக குறிப்பில்லை. இந்த ஆண்டும், கடந்த ஆண்டும் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரை நியமித்திருக்கிறோம்.

**திரு. எம். சுரேந்திரன் :** தேர்வுக் கமிட்டியில் இருப்பவர்கள் மதிப்பெண்கள் எவ்வளவு போடப்பட்டது என்று வெளியே சொல்வதற்குப் பயப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அம்மாதிரி ஒரு கடமையைச் செய்கிறவர்கள் பயப்படுகிற உணர்வுடன் காரியங்களைச் செய்தால் சரியான முறையில் காரியங்கள் நடைபெறாமல் போய்விடும். ஆகவே, மதிப்பெண்கள் எவ்வளவு போட்டார்கள் என்பதை வெளியே சொல்லி இதுதான் சரியானது என்று சொல்கிற முறையில் அவர்கள் இருக்கவேண்டும் என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமா ? அதற்கான முறையில் அவர்களுக்கு அரசாங்கம் ஆலோசனை கூறுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்கம் அதைத் தெரிவித்தது என்று நான் ஏற்கனவே சொன்னேன். ஆனால் அதை அவர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். அதற்குரிய வாதத்தை வைக்கிறார்கள். அதை நாங்கள் ஏற்றுச் செய்கிறோம்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, மருத்துவக்கல்லூரி தேர்வுக்கு 3 குழுக்கள் "இன்டர்வ்யூ" செய்கின்றன. அவ்வாறு செய்வதால் "Standard of judgment is not uniform." என்று ஒரு கருத்து இருக்கிறதே. எனவே, ஒரே குழுவானது சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களுக்குச் சென்று இன்டர்வ்யூ நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் வக்கீலுக்குப் படித்தவர்கள். அவர்களுக்குத்தெரியும். நாடு முழுவதும் உள்ள கல்லூரிகளுக்கும் நடக்கும் தேர்வுகளுக்கு எங்கெங்கிருந்தோ தேர்வாளர்கள் வரவழைக்கப்பட்டு பேப்பரைத் திருத்தி மதிப்பெண்கள் போடுகிறார்கள் என்பது அவர்களுக்கும் தெரியும்.

** பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

[1968 ஆகஸ்ட் 30

## குடியாத்தம் சாக்கடை அமைப்புத் திட்டம்.

*206 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரமன்றம் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசிடம் கடனோ, மானியமோ கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) அரசாங்கத்தின் தற்போதைய நிதி பற்றுக்குறை காரணமாக, குடியாத்தத்திற்கு இந்த 5 ஆண்டுத் திட்டத்தில் ஒரு வடிகால் திட்டம் துவக்குவதற்கு சாத்தியமாகாது என்று அந்த நகரசபைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், 100-க்கு 90 சதவீதம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களும், பீடித் தொழிலாளர்களும் கொண்டதும், அந்த மாவட்டத்தின் தலைநகருக்கு அடுத்த மிகப்பெரிய ஜனத்தொகை கொண்டதுமான அந்த ஊரிலே இந்தச் சாக்கடைக் கால்வாய்த் திட்டம் இல்லாத காரணத்தால் அடிக்கடி அவர்கள் வியாதியஸ்தர்களாகி அதற்குப் போதுமான அளவு சிகிச்சை பெற வசதியில்லாமல், ஆஸ்பத்திரியில் போதுமான படுக்கை வசதியில்லாமல் இருப்பது தெரியும். அதை உத்தேசித்தாவது. இப்பொழுது இல்லை என்றாலும் அடுத்த ஆண்டிலாவது உடனடியாக அதில் கவனம் செலுத்தி ஏற்பாடு செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் குறிப்பிடுகிற அந்தத் திட்டம் எப்பொழுதாவது, ஏதாவது ஒரு காலத்தில் நிச்சயமாக வரும். ஆனால், தற்போது நிதிப் பற்றுக்குறை காரணமாக இருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். சற்றுச் சில நிமிஷங்களுக்கு முன்பு கேள்வி நேரத்தில் அமைச்சரவர்கள் 1962 முதல் 1966 வரையில் மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் குழுவில் நீதிபதிகள் இல்லை என்று சொன்னார்கள். இதே நேரத்தில், ஜஸ்டிஸ் சுப்பிரமணியம் அவர்களும், ஜஸ்டிஸ் ராமசாமி கவுண்டர் அவர்களும் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள், அவர்கள் அந்தக் குழுவில் இருந்திருக்கிறார்கள். அதை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்டு தங்களுடைய கருத்தைத் தெரிவிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் பதில் அளிக்கும் நேரத்தில் அது போன்ற குறிப்பு இல்லை என்றுதான் குறிப்பிட்டேன். குறிப்பைப் பரிசீலனை செய்து அப்படியிருக்குமானால் ஏற்றுக்கொள்ளலாம். அதற்கு ஆட்சேபனை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது எனபதைக் குறிக்கும்.]

## 3. நடைமுறைக் கேள்விகள்

### (i) தனியார் அலுவல் நாளில் பேரவையை ஒற்றிவைக்கும் நேரம்

DR. H. V. HANDE : On a point of order, Sir, I would like to know when the business of the House is likely to be wound up in the afternoon ? Will the debate be over by 1-30 p.m. or is it likely to go on till 2-00 p.m. ? Yesterday, during non-official day, the



1968 ஆகஸ்ட் 30] [Dr. H. V. Hande]

business of the House was over by 1-28 p.m. The previous non-official day was carried on till 2·00 p.m. What is the practice ? We must know. Yesterday I wanted to speak but suddenly at 1·28 p.m. the House was adjourned. What is the procedure to be adopted ? What is the criterion by which the House is wound up on a non-official day ? I want a clarification.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மன்றம் $1\frac{1}{2}$ மணிக்கு மேலும் போகிறது என்பதைப் பற்றிக் கேட்கிறார்கள். உறுப்பினர்களுக்கு எவ்வளவு நேரம் என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறதோ அந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குள் அவர்களும் பேசுவது என்ற முறையைக் கடைப்பிடித்தால் இந்த மன்ற நிகழ்ச்சியை $1\frac{1}{2}$ மணிக்குள் முடித்து விடலாம். ஆனால் இங்கே பேசுபவர்கள் 10 நிமிஷங்கள் என்று வரையறை செய்யப்பட்டிருந்தால் 15 நிமிஷங்கள் பேசுவதும், 20 நிமிஷங்கள் பேசுவதுமாக இருக்கிறார்கள். எனவே உறுப்பினர்கள் கட்டுப்பாட்டோடு நடந்தால் சபையின் நேரமும் கட்டுப்பாட்டுக்குள் வரும். அவ்வாறு இல்லாததால்தான் உறுப்பினர்கள் வசதி, வாய்ப்பு இவைகளைக் கருத்திற்கொண்டு பேரவையின் நேரத்தை மேலும் சிறிது நேரம் நீடிக்க வேண்டி இருக்கிறது. பொதுவாக $1\frac{1}{2}$ மணிக்கு முடிய வேண்டும். ஆனால் உறுப்பினர்களின் வசதிக்காக மேலும் சில மணி நேரம் நீட்டிக்கப்படுவதால் எந்த நேரத்திலே சபை முடியும், எவ்வளவு நேரத்திலே சபை முடியும் என்று முன்கூட்டியே சொல்ல இயலாது.

DR. H. V. HANDE : I wanted to speak yesterday and I was assured I will be given a chance. I wanted to speak yesterday on non-official resolution on anti-automation. But suddenly at 1·28 p.m., the House was adjourned. What is the procedure generally adopted in adjournment of the House ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையிலே யாரைப் பேச அழைக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க தலைவருக்கு உரிமை உண்டு. அறையிலே உறுப்பினர்கள் வந்து பேசி, அங்கு நான் சொன்ன கருத்தை உறுதி மொழி என்று இங்கு வந்து கூறுவது முறையாகாது. $1\frac{1}{2}$ மணிக்கு சபை முடிய வேண்டுமென்று விதியிருக்கிறது. ஆனால் நான் ஏற்கனவே சொன்னபடி உறுப்பினர்களின் வாய்ப்பைக் கருதியும், எடுத்துக்கொண்ட பொருள்பற்றியும் கருத்திற்கொண்டு பேரவையின் அனுமதியோடு இன்னும் சிறிது நேரம் அதிகமாக எடுத்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. எனவே இது சம்பந்தமாக வரைமுறையான ஒரு கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சட்டமன்றம் $1\frac{1}{2}$ மணிக்கு முடிய வேண்டுமென்பதுதான் விதி. மேலும் சபையின் நேரத்தை $1\frac{1}{2}$ மணிக்கு மேலும் நடத்த வேண்டுமென்றால் சபையின் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும். சாதாரணமாக கேள்வி நேரம் என்று 1 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு மேலும் கேள்வி நேரத்தை நீட்டிக்க வேண்டுமென்றால் சபையின் அனுமதி பெற்றுத்தான் நீட்டிக்க வேண்டும், அந்த முறையில்தான் நீட்டிக்கிறோம். உத்தியோகச் சார்பற்றவைகளும் இதனுடைய தொடர்ச்சியாக அடுத்த முறை வரும்போழுது தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்படும்.

## 2. அவையுரிமைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ii) பொதுப்பணி அமைச்சர் ஹேமாவதி திட்டம்பற்றி டெல்லியில் நடத்திய பேச்சுவார்த்தைபற்றிய செய்தியை பத்திரிகைகளுக்கு முன்னதாக அளித்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். என். வி. சித்தன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த உரிமைப் பிரச்சினையைப்பற்றி விளக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகப் பொதுப்பணி அமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் காவிரியின் உபநதியான ஹேமாவதி நதியின் மீது மைசூர் அரசு அணைக்கட்டுவது சம்பந்தமாக தனக்கும் மைசூர் முதல் அமைச்சர் அவர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றி, ஆகஸ்ட் 20-ம் தேதி டெல்லிப் பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அதில் அவர் கூறிய விவரங்களும் 24-ம் தேதி சட்டப் பேரவையில் வெளியிட்ட விவரங்களும் ஒன்றுக உள்ளன. தமிழ் நாட்டின் நலனை பாதிக்கக்கூடிய பொது முக்கியம் வாய்ந்த பிரச்சினைபற்றி, பேரவை கூடியிருக்கின்ற காலத்தில், பேரவைமுன் வைப்பதற்கு முன் டெல்லியில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தது பேரவையின் உரிமைகளை மீறிய தாகும். எனவே அமைச்சர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள் பேரவையின் உரிமைகளை மீறிவிட்டார் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதே பொருள்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பாலசுப்பிரமணியன் அவர்களும் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியுள்ளார்கள். அவர்களையும் அதுபற்றிக் கூறுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** சபாநாயகரவர்களே, மைசூர் அரசு காவிரி நதியின் உபநதியான ஹேமாவதியில் அணை கட்டுவது சம்பந்தமாக விவாதிக்க சபை விதி 57-ன்படி ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். அலுவல் ஆய்வுக்குழுவில் இது சம்பந்தமான......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இரண்டுவிதமான உரிமைப்பிரச்சினைகளை எழுப்பியுள்ளீர்கள். திரு. சித்தன் அவர்கள் இப்பொழுது ஒன்று கொடுத்திருக்கிறுர்கள். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் பேரவை கூடியிருக்கும் நேரத்தில் பேரவைக்கு அறிவிக்காமல் ஹேமாவதி திட்டம் பற்றி டெல்லியிலே அறிவிப்பு செய்தது பற்றிய உரிமைப்பிரச்சினையைக் கூறுங்கள். அதன் பிறகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் விளக்கம் கொடுப்பார்கள்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** டெல்லியிலிருந்து திரு. கருணாநிதியவர்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் ஹேமாவதி பிரசினை சம்பந்தமாகச் சில தகவல்களை வெளியிட்டார். அதே தகவலைத் தான் 24–8–1968-ல் சபையில் அறிக்கையாக வெளியிட்டார். ஆகவே, அமைச்சர் திரு. கருணாநிதியவர்கள் சபாநாயகர் முன்னுள்ள விஷயம் குறித்து சபை நடந்துகொண்டிருக்கையில் சபையில் அறிவிக்காமல் சபைக்கு வெளியே தெரிவித்தது சபையின் உரிமைகளை மீறிவிட்டாரெனக் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, டெல்லியிலே நடந்த பேச்சுவார்த்தைகளைப்பற்றி அந்த பேச்சுவார்த்தைகள் முடிவுற்றதும் மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே. எல். ராவ் அவர்கள் ஒரு அறிக்கையைப் பத்திரிகை நிருபர்களுக்குத் தந்தார். அதையொட்டி நிருபர்கள் என்னைக் கேட்டபோது சுருக்கமான செய்தியைக்கூறினேன். அதற்கும் இங்கு அளிக்கப்பட்ட அறிக்கைக்கும் வேறுபாடு இல்லையென்றுலும், இது விரிவாகத் தரப்பட்டதாகும், அங்கு பத்திரிகைச் செய்தியாளர்களுக்குச் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. அது அத்தனையும் "பட்ஜெட்" டில் தெரிவிக்க வேண்டிய விஷயம் அல்ல, கொள்கை விளக்கம் அல்ல, பேச்சுவார்த்தைகளைப் பற்றியதுதான். எனவே, நான் உரிமையை மீறியிருப்பதாகக் கூறியிருப்பது நியாயமாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகரவர்களே, இதே போலத்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டு வரவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. ஒரு உதாரணத்திற்காக இதைச் சொல்லுகிறேன். ஆனல் விவரங்களையெல்லாம் சொல்லிவிட்டதாகவும், பத்திரிகையிலே வந்துவிட்டதாகவும் கூறினுர்கள். அதற்குத் அந்த மரபு வழுவாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நீங்களும் தீர்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த மரபைக் காக்க வேண்டியதுதான் என்று சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் அந்த மரபைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பிருக்கிறது. சட்டசபை நடந்து கொண்டிருக்கும்பொழுது அங்கே போய்க் கூறுவது மரபுக்கு ஒத்தது தானு? உரிமை பாதிக்கப்படவில்லையா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இதிலே மு.ப. 10-30
மரபை மீறிய காரியம் ஒன்றிலும் நான் ஈடுபடவில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது வேறு. இதிலே என்ன என்ன காரணங்களுக்காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிறோம் என்று சொல்வது வேறு. இது பேச்சு அளவிலே ஏற்பட்ட ஒரு முடிவு. இன்னும் சொல்லப்போனுல், அது முடிந்த முடிவு என்று கூட நான் பத்திரிகையாளர்களிடத்திலே சொல்லவில்லை. தமிழக அமைச்சர்களிடத்திலே கலந்து கொண்டு, முதலமைச்சர் அவர்களை கலந்துகொண்டு தான் முடிவு செய்யப்படும் என்று நான் அங்கே சொன்னேன். அதையும் இங்கே விரிவாக எடுத்துக் கூறினேன். இது மரபை மீறிய செயல் அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கே. எல். ராவ் சொன்னவைகளைத்தான் நான் சொன்னேன் என்று சொன்னுர். ஆனல் பத்திரிகையில் வந்திருக்கிறது.

"Madras P.W.D., Minister M. Karunanidhi announced this to newsmen today at the end of the two-day talks between him and the Mysore Chief Minister and the Union Irrigation Minister here.

Mr. Karunanidhi said his Government had expressed fears that the interests of Tamilnad ryots in the Cauvery Delta would be adversely affected if Mysore took up the Hemavathi Project. It had therefore wanted that the State should continue to get supply of water according to the 1924 agreement" என்று. ஆகவே இந்தச் சபையிலே எதைச் சொன்னுர்களோ, அதுவேதான் அங்கும் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, சட்டசபைமேல் நம்பிக்கை இல்லாமல் வெளியிலே இருக்கும்படியான நிலையிலே சொன்னுர்கள் என்பது எங்களுடைய, இந்தச் சட்டசபையினுடைய உரிமையை பாதிக்கிறது என்பதைத்தான் நான் விளக்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கே. எல். ராவ் பேசியது இந்த பத்திரிகையில் வராமல் இருந்திருக்கலாம். டெல்லி பத்திரிகையாளர்களுக்கு கே. எல். ராவ் செய்தி அளவில் சொன்னுர்கள், நான் அங்கே கூட இருந்தேன். நான் சொன்னது ஒரு செய்திதான். கொள்கை விளக்கம் அல்ல. அதை கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். சர்க்கார் வகுக்கின்ற கொள்கையை முன்கூட்டி நான் சொல்லியிருந்தால் இந்த விதமான குற்றத்திற்கு ஆளாவேன், நான் உரிமையை மீறிய குற்றத்திற்கு ஆளாவேன் என்று நானே கூட அதற்கு ஒப்புக்கொள்வேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்னும் பன்னிப்பன்னிச் சொல்கிறுர்கள், அதையே நான் சொன்னேன் என்று. மாற்றிச் சொல்ல வேண்டுமென்று தலைவர் அவர்கள் விரும்புகிறுர்களா? என்று எனக்குப் புரியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுது தான் உரிமைப் பிரச்சினை மீண்டும் உறுதியாகிறது. இங்கு சொல்லியதை வெளியிலே ஏற்கெனவே சொல்லிவிட்டார்கள் என்பதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**திரு. ஆலடி அருணா :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பைச் சொன்னது சம்பந்தமாக உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே பத்திரிகையாளர்களுக்கு கொடுத்து 4, 5 தினங்களுக்கு மேலாகிறது. அதை உடனடியாக அவையின் கவனத்திற்குக் கொண்டுவராமல் காலம் தாழ்த்திக் கொண்டு வருவது முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்பொழுதே எழுதிக் கொடுத்தாகி விட்டது.

**திரு. க. ர. நல்லசிவன் :** உதவி சபாநாயகர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இரண்டு விஷயங்களை சபையினுடைய கவனத்திற்குக்கொண்டு வந்தார்கள். ஒன்று, இது கொள்கைப் பிரச்சினை அல்ல என்பது. இது செய்தியாளர்களிடத்திலே சொன்ன சுருக்கம் தானே, வேறுவிதமான ஒரு கருத்தையோ அல்லது அடிப்படைக் கொள்கையையோ நான் சொல்லவில்லை என்று சொன்னார்கள். ஒன்று, இந்த ஹேமாவதி பிரச்சினை தமிழ் நாட்டினுடைய உயிரான, அடிப்படையான பிரச்சினையாகும். இரண்டாவது, இங்கே சபை நடந்து கொண்டிருக்கும்போது, அங்கே விரிவாகச் சொன்னோம், குறுகிய அளவிலே சொன்னோம், கொள்கையைச் சொன்னோம், அதைப்பற்றிய விளக்கங்களைச் சொன்னோம் என்று சொல்வதே உரிமையை மீறிய ஒன்றாகும். ஆகவே, இது உரிமைப் பிரச்சினை என்பதை நான் தங்களுடையக் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இந்த ஹேமாவதி திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஓர் ஒற்றிவைப்பு தீர்மானம் கொடுத்திருந்தார். ஆனால் அதற்குள்ளே அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்படி ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்த காரணத்தாலே அதன்படி இதை விவாதிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. விதி 82, உப பிரிவு 2-ன்படி அமைச்சருடைய ஸ்டேட்மெண்ட் பேரிலே ஒரு விவாதம் இருக்க முடியாது என்ற காரணத்தாலே அது விவாதிக்கப்படவில்லை. ஆனால், இதைப்பற்றி இதற்கு முன்பே ஒற்றிவைப்பு தீர்மானம் கொடுத்திருந்தோம். ஆனால், இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்ததாலே அதைப்பற்றி விவாதிக்க முடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டது. ஆகவே, அந்த நிலைமையில் இந்தச் சபை அதன்படி விவாதிக்கப்போவதைத் தடுக்கின்ற வகையிலே 'அதுபற்றி ஏற்கெனவே ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கப்பட்டது. அதுபற்றி விவாதிக்க முடியாது' என்ற முடிவு தருகின்ற நிலைமை இருக்கிறது. அது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்வது நம்முடைய சட்டமன்ற விதிமுறைகளிலே எந்தவிதமான தவறு நடந்தால் அதைப்பற்றி எழுப்புவது. அமைச்சர் ஏதாவது தவறு செய்திருந்தால் அதற்கு வேறு முறை இருக்கிறது. இந்தச் சட்டமன்ற விதிமுறைகளிலே என்ன தவறு நடந்தது ?

**திரு. க. இராமமூர்த்தி :** ஏற்கெனவே, ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் சட்டமன்ற விதிமுறைகளுக்குட்பட்டு நாங்கள் கொடுத்திருக்கிறோம். அந்த ஒற்றிவைப்பு தீர்மானம் பற்றி, அமைச்சர் அவர்கள் 82-வது விதிப்படி ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முடிவு என்ன ஆயிற்று ?

**திரு. க. இராமமூர்த்தி :** அமைச்சர் அவர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுத்ததால் இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதுபற்றி சபாநாயகர் அவர்கள் தீர்ப்பளிக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது இல்லை. ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு தீர்ப்பு கொடுத்தாகிவிட்டது. இப்பொழுது அது இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பு வந்த காரணத்தாலே ஒற்றி வைப்புத் தீர்மானம் இருந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பு வந்த காரணத்தாலே, ஸ்டேட்மெண்ட் கொடுத்த காரணத்தாலே இதை முடியாது......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அனுமதிப்பதும் அனுமதிக்காததும் சபாநாயகரினுடைய உரிமை. அவர் அதை மறுத்திருக்கிறார். காரணம் காட்டிய நேரத்திலே இங்கே ஓர் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறி இருக்கிறார். எது சட்டமன்ற விதிமுறைகளுக்கு முரணாகப் போய்விட்டது ? அமைச்சர் எது செய்தார் என்பது அல்ல. ஒழுங்குப் பிரச்சினை என்று சொன்னால் அதற்கு சட்டமன்ற விதிமுறைகள் இருக்கின்றன. நான் அந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை நிராகரித்தேன். காரணம் கேட்டபொழுது அமைச்சர் ஸ்டேட்மெண்ட் கொடுத்தார் என்றேன். அது எப்படி தவறாகும் ?

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** அது ஒற்றிவைப்புத் தீர்மானம் அல்ல. ஒற்றிவைப்புத் தீர்மானமும் ஒன்று கொடுத்திருந்தேன், 57-வது விதியின்கீழும் ஒன்று கொடுத்திருந்தேன். 57-வது விதியின் கீழ் ஒன்று இருக்கிற காரணத்தால் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை நிராகரிக்கிறேன், 57-வது விதியின் கீழ் இருக்கிற தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படலாம் என்று பதில் அளித்திருந்தீர்கள். இதுதான் நிலை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள பிரச்சினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஹேமாவதி நதித் திட்டம் பற்றி, மைசூர் மாநில அரசோடும், மத்திய அரசோடும் கூட கலந்து பேசி அதுபற்றி முடிவு எடுத்த ஒன்றை பற்றியதாகும். அந்தச் செய்தியை மத்திய அமைச்சர் வெளியிட்டதற்கொப்ப அவர்களும் வெளியிட்டார்கள். ஆகவே, பல்வேறு பேச்சு வார்த்தைகளினுடைய முடிவை வெளியிடுவது என்பது சபையினுடைய உரிமைப் பிரச்சினையே அல்ல; சபையினுடைய உரிமைக்கும் மாறுபடுவது அல்ல ; பல்வேறு கட்டங்களிலே செய்திமூலமாக வெளியிடுகிறோம். உதாரணமாக, மைசூருக்கும் நமக்கும் மின்சாரத் துறையிலே ஒரு பேச்சு நடந்தது என்றால், நடந்த அடுத்த நிமிடம் அதைப்பற்றி முடிவுகளை வெளியிடுகிறோம். தீர்மான உருவிலோ, கேள்வியாகவோ அல்லது ஒற்றிவைப்புத் தீர்மானமோ வேறு ஒரு தீர்மானத்தையோ கொண்டுவர இருந்து அந்தத் தீர்மானத்தினுடைய விஷயங்களை பத்திரிகைகளிலே வெளியிட்டால் அது உரிமைப் பிரச்சினை கீழே வரும். அல்லது நாம் செய்தியாளர்களிடத்திலே ஒரு செய்தியை சொல்லி, அதற்கு மாறுபட்ட வேறு தவறான செய்தியை இந்த மன்றத்திற்கு அளிப்பார்களேயானால் அப்பொழுது உரிமைப் பிரச்சினை வரும். ஆகவே, செய்தி என்ற அளவிலே வெளியிடுவது தவறாகாது.

82-வது விதியின்கீழ் எந்த விளக்கத்தையும் எந்த சமயத்திலும் தெரிவிப்பதற்கு அமைச்சருக்கு உரிமை இருக்கிறது. ஆகவே, 82-வது விதியின்கீழ் அந்த ஹேமாவதி திட்டம்பற்றிய முடிவுகளை அறிக்கையின் வாயிலாக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு

உரிமை இருக்கிறது. முடிவு பத்திரிகைகளில் வெளியிட்டது இந்த அவையினுடைய உரிமையை பாதிக்கின்ற ஒன்று அல்ல. தீர்மான வடிவத்திலே இருந்து; அல்லது கேள்வி வடிவத்திலே இருந்து, இங்கே வருவதற்கு முன்னதாக, அதற்கான அனுமதி காத்துக் கொண்டிருக்கிற வகையில் அதற்கான பதிலும் மற்றவைகளும் பத்திரிகையிலே வந்தால் அது உரிமையைப் பாதிக்கும். அந்த நிலைமைகள் இதிலே ஏற்படவில்லை. எனவே உரிமைப்பிரச்னை எழவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். தலைவர் அவர்களே, ஹேமாவதி நீர்த்திட்டத்தைப் பற்றி தமிழக அரசினுடைய பொதுப்பணித்துறை அமைச்சர், மைசூர் மாநிலத்தினுடைய முதலமைச்சர், இன்னும் இந்திய அரசினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் ஆகிய மூவரும் சேர்ந்தெடுத்த ஒரு முடிவு. ஆகவே, அந்த தீர்ப்புக்கு மூன்று தரத்தாரும் They make themselves responsible for that statement.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் சொல்வது என்ன? இது பாயின்ட் ஆஃப் ஆர்டரா?

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விளக்கம் அமைச்சர் அவர்கள் கொடுப்பார்கள். (திரு. நல்லசிவன் அவர்களைப் பார்த்து) நீங்கள் விளக்கம் கொடுத்துவிடுங்கள்.

**திரு. க. ர. நல்லசிவன் :** இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தே தீர்த்தாகவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த உரிமைப் பிரச்சினை கொண்டுவரப்படவில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஹேமாவதி நதியின் மீது மைசூர் அரசு அணை கட்டுவதைப் பொறுத்த வரையிலே இந்தச் சபையிலே விவாதிக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதைப் பற்றி விவாதிப்பதற்கு உறுப்பினர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்க வேண்டும். கேரள சட்டசபையில் விவாதித்திருக்கிருர்கள், மைசூர் சட்டசபையில் விவாதித்திருக்கிருர்கள் தமிழ் நாடு சட்டசபையில்தான் இன்னும் விவாதிக்கப்படவில்லை; முன்பே இதைப் பற்றி அமைச்சர்கள் கூடிப் பேசியிருக்கிருர்கள். ஆகவே, இதைப்பற்றி விவாதிப்பதினுல் பெரிய தொல்லைகள் ஒன்றும் வந்து விடாது. இதிலே பெரிய வேடிக்கை என்னவென்ருல், இந்தப் பேச்சு வார்த்தைகளுடைய முடிவிலேயே அதைத் தொடர்வதற்கான அடிப்படை இருக்கிறது. ஆகவே, அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டும் என்பதுதான் கோரிக்கையே தவிர, வேறு ஒன்றுமில்லை என்பதை கனம் உதவி சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** இதற்காக உறுப்பினர் அவர்கள் உரிமைப் பிரச்சினையை விட்டுத் தரவேண்டிய அவசியமில்லை என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். விவாதம் நடத்தப்பட வேண்டும் என்பது வேறு. இப்பொழுது உரிமைப் பிரச்சினையைப்பற்றி நடத்தப்படுகிற விவாதம் வேறு. உதவி சபாநாயகர் அவர்கள் உரிமைப் பிரச்சினையின் மீதான விவாதத்திற்கு தீர்ப்பு அளிக்க இருக்கிருர்கள். பிறகு விவாதம் நடத்தப்படவேண்டும் என்பது பற்றி விளக்கம் அளிக்க நான் இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது திரு. சித்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற உரிமைப் பிரச்சினை என்னவென்ருல் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றம் கூடியிருக்கின்ற நேரத்தில், சட்ட மன்றத்திற்கு ஒரு செய்தியைக் கூறுவதற்கு முன்பு டெல்லியில் இருக்கிற பத்திரிகையாளர்களுக்கு ஓர் அறிக்கை



அளித்துவிட்டார்கள் என்பது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், வேறு மாநிலத்தைச் சேர்ந்த ஓர் அமைச்சரும், மத்திய அரசின் அமைச்சரும் சேர்ந்து கூடிப்பேசிய ஒரு மகாநாட்டின் முடிவு அது. அந்த மகாநாட்டினுடைய முடிவைத்தான் கூறியிருக்கிருர்களே ஒழிய, அரசினருடைய கருத்தைக் கூறவில்லை. நம்முடைய மன்றத்தில் கொடுத்திருக்கிற அறிக்கையிலே கூட அவர் கடைசியிலே கூறியிருப்பது இதுதான்.

"டெல்லியில் நடந்துள்ள பேச்சு வார்த்தைகள் குறித்து தமிழக முதல் அமைச்சர் அவர்களுடன் கலந்து அரசின் சார்பில் மேற்கொண்டு (மத்திய அரசுக்கு) கருத்து அறிவிக்கப்படும், என்று டெல்லி பேச்சு-வார்த்தையின் இறுதியில் தெரிவித்தவிட்டு வந்திருக்கிறேன்".

இந்த மகாநாட்டினுடைய முடிவை நம்முடைய மாநில அமைச்சர் அவர்கள் சொல்லவில்லையென்ருலும், இந்த மகாநாட்டில் கலந்துகொண்ட வேறு ஓர் அமைச்சர் கூறியிருக்க முடியும். அப்படி கூறியிருக்கக்கூடிய செய்தியைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிருர்கள். இது உரிமைக்குரியதா என்பது கேள்வி. லண்டன் காமன்ஸில் அளிக்கப்பட்ட ஒரு தீர்ப்பிலே, அமைச்சர் அவர்கள் நல்லெண்ணத்தின் காரணமாக வெளியே கூறுவதற்கு முன்பு சபையில் கூறவேண்டும் என்ற ஒரு வழக்கத்தை மேற்கொண்டிருக்கிருர்கள். அந்த ஒரு வழக்கம் நல்ல வழக்கமாக, மரபாகக் கருதப்பட்டிருக்கிறது. அந்த வழக்கத்தை மீறுவது உரிமையை மீறுவதாகாது.

I am clear that there is no question of privilege about it. The custom of the House whereby Ministers judge it courteous to the House to make important announcements here before they make them outside is a matter of courtesy which has grown into a custom, a good custom of the House. Its breach does not raise a question of privilege

என்று சொல்லியிருக்கிருர்கள். ஆகவே, இந்த மரபு காக்கப்பட வேண்டும். ஆனால், இந்த மரபு மீறப்பட்டிருக்கிறதா என்று கேட்டால், மரபு மீறப்படவில்லை. அமைச்சர் அவர்கள் கூறியது அந்த மகாநாட்டில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைப் பற்றித்தான். அந்த மகாநாட்டையொட்டி அரசு மேற்கொண்டிருக்கிற எதையும் அவர் அங்கே கூறவில்லை. அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலும் இதைப்பற்றிக் கூறவில்லை. மன்றத்தில், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடன் கலந்துகொண்டு, அரசின் சார்பில் மேற்கொண்டு கருத்து அறிவிப்பதாகத்தான் கூறியிருக்கிருர்கள். ஆகவே, எந்தவிதமான கொள்கையையும் எந்தவிதமான அரசாங்கத்தினுடைய கருத்தையும் அவர்கள் கூறவில்லை என்ற காரணத்தினுல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிமையையோ, மரபையோ மீறியதாக நான் கருதவில்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

### (iii) பொதுப்பணி அமைச்சர் மீது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மைசூா அரசு காவிரி நதியின் உப நதியான ஹேமாவதியில் அணை கட்டுவது சம்பந்தமாக விவாதிக்க சபைவிதி 57-ன் படி ஒரு தீர்மானம் கொண்டு கொடுத்திருந்தேன். அலுவல் ஆய்வுக்குழுவில் இது சம்பந்தமான பரிசீலனையின்போது இரு ராஜ்யங்களுக்கிடையேயுள்ள நதிநீர்ப்பங்கீடு சம்பந்தமாக டெல்லியில் இந்திய அரசு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் முன்னிலையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் முடிவுக்கப்புறம் பாசனத்துறை அமைச்சர் திரு. கருணுநிதி ஓர் அறிக்கை விடுவதென்றும் பிறகு விவாதம் வைத்துக்கொள்ளலாமெனவும் முடிவு செய்யப்பட்டதாக அறிகிறேன். திரு. கருணுநிதி அவர்கள் 24—8—1968-ம் தேதியன்று சபையில் அறிக்கை சமர்ப்பித்தார். அதற்கப்புறம் சபையில் நான் என்னுடைய தீர்மானம் எப்பொழுது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கேட்டேன்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் திரு. கருணாநிதி அவர்கள் அலுவல் ஆய்வுக்குழுவில் என் கட்சித் தலைவர் திரு. நல்லசிவன் அவர்கள் கலந்து கொண்டதாகவும் அப்பொழுது அமைச்சர் அறிக்கைக்குப்பின் விவாதம் நடத்த வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்பட்டதாகவும் சொன்னார். ஆனால் என் கட்சித் தலைவர் திரு. நல்லசிவன் அவர்களிடம் நான் கேட்டபொழுது அமைச்சர் கூறியது தவறான தகவலென்றும் அமைச்சரின் அறிக்கைக்குப்பின் சபையில் விவாதம் நடைபெறுவதென முடிவு செய்யப்பட்டதாகவும் கூறினார். ஆகவே திரு. கருணாநிதி அவர்கள் வேண்டுமென்றே சபைக்குத் தவறான தகவலைக் கொடுத்ததன் மூலம் சபையின் உரிமைகளை மீறிவிட்டாரென்று கருதுகிறேன்.

## (iv) திரு செ. பாலசுப்பிரமணியன் மீது

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தவறான தகவல்களை கனம் உறுப்பினர் அவர்கள் தந்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டை நான் இப்பொழுது தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அலுவல் ஆய்வுக் குழுவில் அமைச்சர் அறிக்கைக்குப்பின் விவாதம் நடத்த வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்பட்டதாக நான் சொன்னதாக அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்றைய தினம் நடைபெற்ற சட்டமன்ற நடவடிக்கைகள் குறிப்பு என்னுடைய கையில் இருக்கிறது.

திரு. செ. பாலசுப்ரமணியன் அவர்கள் கேட்டார்கள் "தலைவர் அவர்களே, இது நடைமுறை சம்பந்தமானது. விதி 57-ன் கீழ் நான் ஒரு தீர்மானம் கொடுத்து, அந்தத் தீர்மானத்தைத் தாங்கள் அனுமதித்து, இதுசம்பந்தமான விவாதத்திற்கு ஒருமணி நேரம் ஒதுக்கப்பட்டு இந்தச் சட்டசபைக் கூட்டத் தொடரிலே நடைபெறும் என்று தெரிவித்தீர்கள். அதை எப்போது எடுத்துக்கொள்ளப்போகிறீர்கள் ?"

அதுபற்றி நான் குறுக்கிட்டு குறிப்பிட்டதும் இங்கே குறிப்பில் இருக்கிறது.

"அலுவல் ஆய்வுக்குழுவில் இதுபற்றிய விவரம் வந்தபோது, திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் தெரிவித்தார்கள். அப்போது, நான் டெல்லி சென்று வந்ததும் அதுபற்றி விவரமாக அறிக்கை ஒன்றை அளிக்கிறேன் என்று கூறினேன். அதற்கேற்றவாறு தான் இந்த விவரம் இப்போது அவையில் அளிக்கப்பட்டது" என்றுதான் சொல்லியிருக்கிறேன். இதைத் தவிர குறுக்கிட்டு நான் வேறு எதையும் பேசவில்லை. ஆனால், அவர்கள் ஒரு தவறான அடிப்படையில் ஒரு தவறான தகவலை இந்தச் சபையில் நடந்ததாக சித்தரித்து இங்கே கூறியிருக்கிறார்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் திரு. நல்லசிவன் அவர்கள் கலந்துகொண்டதாகவும், அப்பொழுது அமைச்சர் அறிக்கைக்குப் பிறகு விவாதம் நடத்தவேண்டியதில்லை என்று முடிவு செய்யப்பட்டதாகவும், நான் கூறியதாக உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும்; அல்லது உரிமை பிரச்சினைக்கு எதிர் உரிமைப் பிரச்சினை அவரைத் திருப்பித் தாக்கும் என்பதைக் குறிப்பிட்டு, இந்த அளவோடு என் விளக்கத்தை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** உரிமைக் குழுவில் நான் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் இருவரும் சந்திப்பது வேறு. மன்றத்தில் கலந்துகொண்டு நிகழ்ச்சிகள் நடத்தும் முறை வேறு. அமைச்சர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவினுடைய முடிவைத் தவறாக இந்த மன்றத்தில் கொடுத்திருக்கிறார்கள் என்பது திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுடைய குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டிற்கு ஆதாரம் காட்டவேண்டும். இது நம்முடைய சபை நடவடிக்கைகளின் குறிப்பு. இந்தக் குறிப்பிலே இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்த வார்த்தைகளைத் தவிர, உறுப்பினர் அவர்கள் கூறிய மாதிரி எந்த



விதமான குறிப்பும் இல்லை. அதை அங்கத்தினர் அவர்கள் ஒப்புக்கொள்கிறாரா, இல்லையா என்பது வேறு. அலுவல் ஆய்வுக் குழுவில் ஒப்புக் கொண்டாரா, இல்லையா என்பது வேறு. இங்கு அமைச்சர் அவர்கள் அதை மறைத்தாரா என்பது தான் நம் முன்னுள்ள பிரச்சினை. இந்த நிகழ்ச்சிக் குறிப்பில் அவர்கள் அம்மாதிரி மறைத்ததற்கு ஆதாரம் எதுவும் இல்லை. ஆதாரம் இல்லாத ஒன்றை எடுத்துக்காட்டி, அதன் மீது உரிமைப் பிரச்சினை எழுப்புவது முறையாகாது எனவே, திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் அதுபற்றி ஒரு விளக்கம் கூறுவார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக்கொண்ட சமயத்தில் கனம் அங்கத்தினர் அவர்கள் எதிர் உரிமைப் பிரச்னையை "நான் உரிமைக் குழுவில் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்" என்று சபாநாயகர் அவர்கள் தீர்ப்புக்கு கூறுவதற்கு முன்னாலேயே சவால் விடுவது அனுமதிக்கப்படலாமா என்ற ஒழுங்குப் பிரச்சினையை நான் கிளப்புகிறேன். சபாநாயகர் அவர்கள் தீர்ப்புக் கொடுப்பதற்கு முன்னால் "நான் உரிமைக் குழுவில் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்" என்று கூறுவது ஒழுங்கா என்பது பற்றி முதலடியாக தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** இந்த அவையிலே நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக கற்பனை செய்து, அதை உரிமைப் பிரச்சினையாக தாளில் எழுதி, தங்கள் முன்னிலையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். நான் சொல்லாத தகவலை சட்டமன்றத்தில் சொன்னதாக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற காரணத்தினால், நான் அவர்கள் மீது இந்த அவையிலே உரிமைப் பிரச்சினையை எழுப்புகிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** முழுவதையும் நான் சொல்கிறேன். முதலில் அவர்கள் அறிக்கை விட்டார்கள். பிறகு நான் ஒழுங்குப் பிரச்னையை எழுப்பிக் கேட்டேன். பிறகு அவர்கள் சொன்னார்கள். இது சம்பந்தமாக விவாதம் நடத்தத் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டதாக அவர்கள் சொன்னார்கள். ரெகார்டில் எப்படி இருக்கிறதோ அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சிக் குறிப்பு அவ்வப்போழுது குறிப்பெடுத்து எழுதுகின்ற ரெகார்டு. அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பதிவு, ரெகார்டாகும். அதில் எப்படியிருக்கிறதோ என்று சொன்னால், இந்தச் சபையை எந்தவிதத்திலும் நம்பக்கூடிய நிலைமை இல்லாமல் போய்விடும். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சுக்களை அவ்வப்பொழுது எழுதி, அதில் உறுப்பினர்களுடைய கையெழுத்தைப் பெற்று, பிறகு நிகழ்ச்சிக்குறிப்புகள் அச்சடிக்கப்படுகின்றன. இதில் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், அதைப்பற்றி கவலை இல்லை, தான் கூறுவதுதான் ஏற்றுக்கொள்ளத் தக்கது என்று கூறுவது இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் குறிப்பிடுகின்ற வார்த்தை இல்லை, ஆகவே உறுப்பினர் அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும். "சட்டமன்ற நிகழ்ச்சிக் குறிப்பில் அவ்வாறு இல்லை, தெரியாமல் குறிப்பிட்டுவிட்டேன், நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன், அதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன்" என்று உறுப்பினர் அவர்கள் சொல்லிவிட்டால், இதை இந்த அளவோடு முடித்துவிடலாம். அந்த நிலையை ஏற்றுக்கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** சார், அவர்கள் கூறியதிலிருந்து நான் புரிந்து கொண்டதெல்லாம் விவாதம் தேவையில்லை என்று சொன்னதாகத்தான் இருந்தது. "ப்ரொசீடிங்சில்" இருக்கிறது என்பது பற்றி எதுவும் சொல்லத்தயாராக இல்லை. இந்த நிலையில், உரிமைக் குழுவிற்கு அனுப்பினால், நான் அங்கே சொல்லிக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுது அமைச்சர் கூறாத ஒன்றை அவர்கள் கூறியதாகச் சொன்ன காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று கோரியதில், தெளிவாக, மேலெழுந்தவாரியாக **உரிமை எழுந்திருக்கிறது என்று நான் தீர்ப்பளிக்கிறேன்.**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, சபையிலே நான் சொல்லாத ஒன்றை, உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன், என்னுடைய வாக்கியங்களாக அமைத்து, தவறான தகவலை, சொல்லாத ஒன்றைக் கற்பனை செய்து கொண்டு சொல்லியிருப்பதற்காக, உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியத்தின் மீது உரிமைப்பிரச்சினை கொண்டு வருகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்சினை கொண்டு வருவத னால், அது எழுத்து மூலமாகத் தங்களுக்குத் தரவேண்டும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மன்ற விதியின் படி,

A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon:

Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business.

என்று இருக்கிறது. ஆகவே, அதை இப்பொழுதே எடுப்பதற்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் பேரவைமுன் வைத்துள்ள தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. பேரவையின் முன் உள்ள கேள்வி—

"உறுப்பினர் திரு. செ. பாலசுப்பிரமணியத்தின் மீது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### (v) "கடிதம்" என்ற நாளிதழில் வந்துள்ள செய்தி.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** கனம் சபாநாயகர் அவர்களே, தமிழக சட்டப் பேரவை விதி 184-ன் கீழ் கீழ்க்காணும் உரிமை மீறல் பிரச்சினையை சபையில் எழுப்புகிறேன்.

சென்னையிலிருந்து வெளிவரும் "கடிதம்" என்னும் நாளிதழில் (27—8—1968) "சட்டசபை என்ன நீதி மன்றமா ?" என்ற தலைப்பிட்டு, ஒரு கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது. அதன் பிரதியை இத்துடன் இணைத்திருக்கிறேன். அதில் கீழ்க்கண்ட பகுதிகள் காணப்படுகின்றன. முதல் அமைச்சரைப் பற்றி எழுதுகையில்,

"பொய்யில் வளர்ந்து வாழ்கின்றவர். எவ்வளவு பெரிய இடத்தில் புகுந்தாலும் அதை மறப்பாரா ?"

"அவர் சட்டசபை குள்ளும் தன்னுடைய கற்பனை சக்தியை அவிழ்த்து விட்டு இருக்கிறார்".

மேலும்,

"தன்னுடைய கெட்டிக்காரத்தனத்தைக் கொண்டு சட்டசபையில் எதையும் சமாளித்து விடலாம் என்று அவர் கருதுகிறார்".

"சட்டசபை ஒன்றும் நீதிஸ்தலமல்ல, அங்கு நடப்பவைகளை யெல்லாம் அப்படி அப்படியே ஏற்றுக்கொள்ள".

இந்தப் பகுதிகளும், கட்டுரையின் மொத்தமும் சபையின் உரிமைகளை மீறியதாகும் எனக் கருதுகிறேன்.

ஆகவே, சென்னையிலிருந்து வெளிவரும், நாளிதழ், "கடிதம்" வெளியிடுபவரும், ஆசிரியருமான, திரு. கண்ணதாசன், அச்சிடுபவரான திரு. சி. ஜம்பு, ஆகியவர்கள் மீது உரிமை மீறல் பிரச்சினையை எழுப்புகிறேன்.





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன், இந்த உரிமைப் பிரச்சினையை கொண்டு வந்திருக்கிறார்கள். உள்ளபடியே, குற்றச்சாட்டுக்கு இந்த அவையின் உறுப்பினர்களையும், குறிப்பாக முதல் அமைச்ச ருடைய பண்பையும், தன்மையையும், பாதிக்கும் ஒன்றாக அமைந்திருக் கிறது. இந்த மன்ற உரிமை, தன்மைகளை பாதிக்கும் உறுப்பினர்கள் விழிப்போடு இருக்கிறார்கள். ஆகவே, யாரும் எதையும் உறுப்பினர்களை மீறி சாதித்து விட முடியாது. அதைக் குறை கூறுவதானால், மன்ற உறுப்பினர்கள் விழிப்போடு இல்லை என்று ஏற்படும். அது மட்டுமல்லாமல் "பொய்யில் வளர்ந்து வாழ்கின்றார்" என்று சொன்னால், மற்றவர்கள் குறிப்பாக விறுவிறுப்பாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கும் எதிர்க் கட்சித் தலைவர் சும்மா விடமாட்டார்கள்; அப்படிப்பட்ட நிலையை சபாநாயகர் கவனத்திற்குக் கொண்டு வந்து தீர்ப்புப் பெறுகின்ற வாய்ப்பு இருக்கிறது. "கற்பனை சக்தியை அவிழ்த்து விட்டிருக்கிறார்" என்றிருக்கிறது. கற்பனை சக்தி எல்லாம் இருக்கிறது. அடுத்து, "தன்னுடைய கெட்டிக்காரத்தனத் தைக் கொண்டு சட்டசபையில் எதையும் சமாளித்து விடலாம் என்று அவர் கருதுகிறார்" என்று முதல் அமைச்சரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக் கிறது. அப்படி மாண்புமிகு முதல் அமைச்சர் எதையும் சமாளித்து விட முடியாது என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். அதற்கு இந்த மன்றம் இடம் கொடுக்காது. அடுத்தாற்போல, "சட்ட சபை ஒன்றும் நீதிஸ்தலமல்ல அங்கு நடப்பவைகளையெல்லாம் அப்படி அப்படியே ஏற்றுக்கொள்ள" என்று குறிப்பிட்டிருக்கிறது. இது சட்டங்களை இயற்றும் மன்றம்; நீதி மன்றம் தீர்ப்பு வழங்கும், சட்ட மன்றத்திலே நடப்பவைகளை அப்படி அப் படியே ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆனால், விவாதத்தின்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றை அப்படி அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம், மறுக்கலாம், மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று கோரலாம். ஆனால், சட்ட மன்றம் ஒரு முடிவு செய்த பிறகு, அதை நாட்டு மக்கள் மதிக்க வேண்டும், ஏற்றுக் கொள்ள வேண்டும். நீதிமன்றத்தில் நிலைமை வேறு, சட்டமன்றத்தில் நிலைமைவேறு. சட்டமன்றத்தில் விவாதத்தின்போது கருத்துக்களை சொல்லலாம். ஆனால் முடிவு எடுத்த பிறகு அது எல்லோரையும் கட்டுப்படுத்தும் அதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். சட்ட மன்றத்தின் முடிவை ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும் என்கிற அவசியம் இல்லை என்று கருதுவது, மன்றத்தின் உரிமையைப் பாதிக்கும். மேலும், "சராசரி மனித உரிமைகளை சட்டசபை ஆளுங்கட்சி அவமதிக்குமானால், சட்ட சபையை யே அவமதிக்க நான் தயங்க மாட்டேன்" என்றும் குறிப்பிட்டிருக்கிறது. அந்த வகையில் சட்ட சபையை யே மிரட்டுகிறார். இது சம்பந்தமாக பல தீர்ப்புகள் இருக்கின்றன :

On 26th February 1701, the House of Commons resolved that to print or publish any libels reflecting upon any member of the House for or relating to his service there in, was a high violation of the rights and privileges of the House.

Written imputations, as affecting a Member of Parliament may amount to breach of privilege without, perhaps, being libels at common law, but to constitute a breach of privilege a libel upon a Member must concern the character or conduct of the Member in that capacity.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அதனுடைய உரிமையை, தன்மையை ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்றால் அது இந்த சட்ட மன்றத்தின் உரிமையைப் பாதிக்கும். ஆகவே, இதிலே உரிமைப் பிரச்சினை இருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு விட்டு ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, இந்தப் பத்திரிகை இன்றைக்கு மட்டுமில்லை, தினசரி இப்படித்தான்; எதை எடுத்தாலும் உரிமையைப் பாதிப்பதாகத்தான் இருக்கும். (குறுக்கீடு) ஆமாம், நான்

வாங்கிப் படிக்கிறேன். நல்லது கெட்டது இரண்டையும் தான் படிக்கிறேன். (குறுக்கீடு) விலை கொடுத்துத்தான் வாங்குகிறேன். வெளியிலே நடப்பவை களை எவ்வளவு வேண்டுமானாலும் விமரிசனம் செய்து கொள்ளட்டும். ஆனால், அமைச்சர்களும், சட்டசபை உறுப்பினர்களும் சட்டசபையிலே பேசியதற்கு பாதுகாப்பு இல்லாவிட்டால், அவர்களுடைய உரிமை பாதிக்கப் படும். சட்டசபை நடவடிக்கைகளைப் பற்றி எது வேண்டுமானாலும் எழுதலாம் என்ற நிலை இருக்கக்கூடாது. ஆகவே, இந்தப் பத்திரிகையில் எழுதி யிருப்பவற்றில் உரிமைப் பிரச்சினை இருக்கிறது. இதை உரிமைக் குழு விற்குக் கொண்டுபோக, இந்தச் சபை இந்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** "கடிதம்" என்ற பத்திரி கையில் எழுதப்பட்டிருக்கின்ற வாக்கியங்கள் தெளிவாக இந்த மன்றத்தை அவமதிக்கின்ற முறையிலே எழுதப்பட்டிருக்கின்ற காரணத்தாலும், அவை முதல்வர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இந்த வாக்கியங்கள் இந்த மன்றத்தை அவமதிக்கின்ற முறையில் இருப்பதாக எடுத்துக்காட்டியிருப்ப தாலும் "உரிமை மீறல்" இருக்கிறதென்று தீர்ப்பு அளிக்கிறேன்.

**திரு செ பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, "கடிதம்" என்ற நாளிதழ்மீது கொண்டுவந்திருக்கும் உரிமைப் பிரச்சினையை, உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று பிரேரேபிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"'கடிதம்' என்ற நாளிதழ்மீது எழுப்பப்பட்டிருக்கும் உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 4. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### எமனேஸ்வரம் கைத்தறி நெசவாளர்களுடைய கூலி குறைப்பு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. எ. அ. சுப்பராஜா அவர்கள் இந்தப் பேரவைக்கு கீழ்க்கண்ட ஓர் அறிவிக்கை கொடுத்திருக் கிறார்கள் :—

" சட்டப் பேரவை 42-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் நட வடிக்கையை ஒற்றிவைக்க வேண்டுகிறேன்.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் எமனேஸ்வரம் கைநெசவு தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த கூலியை திடீரென்று மாஸ்டர் வீவர்கள் குறைத்துவிட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பற்றி விவாதிக்க சபையின் இன்றைய அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டு கிறேன்."

இந்தத் தீர்மானம் அரசின் அன்றாட நிர்வாக காரியங்களுக்கு உட்பட்ட காரியமாக இருக்கிறபடியால், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப் படுகிறது.

அடுத்தபடியாக, இதே பொருள் குறித்து ஓர் ஒற்றிவைப்புத் தீர் மானத்தை திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும் கொண்டு வந் திருக்கிறார்கள். அதற்கும் அனுமதி மறுக்கப்படுகிறது.

## 5. கவன ஈர்ப்பு.

### உடன்குடி ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்காமையினால் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு திரு. டி. மார்டின் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்.



THIRU T. MARTIN : Mr. Deputy Speaker, Sir, under rule 41 of the Legislative Assembly Rules, I wish to call the attention of the Hon. Minister for Education and Industries to a matter of urgent public importance, viz., the failure of the Udankudi Panchayat Union Council in Tiruchendur Taluk in Tirunelveli district to pay the salaries of the teachers working in the aided schools in the jurisdiction of Udankudi Panchayat Union Council and the tense situation prevailing in that area on account of non-payment of salary.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் முடிவு செய்துள்ள உரிமைகள் குறித்த விவர அறிக்கையின்படி, உடங்குடி ஊராட்சி ஒன்றியக் குழு, 1967–68-ல் அதன் செலவின மதிப்பீட்டில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற் கென ரூபாய் 7,31,600 செலவாகுமென மதிப்பிட்டுள்ளது. சிறப்பு அகவிலைப்படி மானியம், துணைக் கல்வி மானியம், நிலவரி ஒப்படை மானியம், உள்ளூர்க் கல்வி மானியம் இவற்றின்கீழ் இந்த ஊராட்சி ஒன்றியத்துக்கு கல்வித் துறை ரூ. 7,08,992 மானியத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழுந்தது, எனவே, ஊராட்சி ஒன்றியப பள்ளி ஆசிரியர்களுக்கும், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் சம்பளம் வழங்க அதனால் இயலவில்லை. ஊராட்சி ஒன்றியத்தின் நிதி நிலைமையை விரிவாக ஆய்வு செய்யும் வரையில், அரசாங்கத்தின் கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறை, ஷை ஊராட்சி ஒன்றியம் தனது தற்போதைய நிதி நிலைமையைச் சீராக அமைத்துக் கொள்வதற்கென வழிவகை முன்பணமாக 1968 மார்ச்சு திங்களில் மேற்கொண்டும் ரூ. 50,000 வழங்க ஒப்பளிப்பு வழங்கியது. எனவே, 1967–68-ல் இந்த ஊராட்சி ஒன்றியத்தின் செலவு மதிப்பீடு ரூ. 7,31,600 ஆகுமென்பதற்கு மாறாக அதற்குக் கிட்டிய மொத்த வரவினம் ரூ. 7,58,992 ஆயிற்று. உடங்குடி ஊராட்சி ஒன்றியக் குழு விற்கு பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் 1968 ஏப்ரலில் உடனடியாக ரூ. 1,49,400 வழங்கினார். இத்தொகைகள் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்க பயன்படுத்தப்பட்டன. ஊராட்சி ஒன்றியப் பகுதியில் பணியாற்றும் சுமார் 420 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களில் சுமார் 220 ஆசிரியர்களுக்கு ஊராட்சி ஒன்றிய மானியங்களிலிருந்து 1968 பெப்ரவரித் திங்கள் வரையில் சம்பளம் ஏற்கெனவே வழங்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. எஞ்சியுள்ள சுமார் 200 ஆசிரியர்கள் திருநெல்வேலி மாவட்டப் பொறுப்பு நிறுவனச் சங்கத்தின் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள். திருநெல்வேலி மாவட்டப் பொறுப்பு நிறுவனச் சங்கம் தனது ஆசிரியர்களுக்கு 1968 ஜனவரி, பெப்ரவரி திங்களுக்கான சம்பளங்களைத் தனது நிதிகளிலிருந்து வழங்கி யுள்ளதாக அறிவித்துள்ளது. ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் மானி யம் பெறும் பள்ளியாசிரியர்களைப் பொறுத்தவரையில், 1968 ஏப்ரல் வரையில் ஆசிரியர் மானியம் வழங்கப்பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்படு கிறது.

உடங்குடி ஊராட்சி ஒன்றிய நிதி நிலைமையை நேரில் ஆராய்வதற்காக கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த தலைமைக் கணக்கு அதிகாரி அண்மையில் அந்த ஒன்றியத்துக்கு அனுப்பப் பட்டார். தொடக்கக் கல்வி செலவில் ஊராட்சி ஒன்றியத்தின் பங்கு 1968–69-க்கு ரூ. 56,931 என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், தனது சொந்த நிதிவாயில்களிலிருந்து இந்தப் பங்கு செலவினையும் கொடுப்பதற்கு ஊராட்சி ஒன்றியத்தால் இயலவில்லை. இந்த நிலையை எந்த எந்த அளவிற்கு நல்ல முறையில் சீர்படுத்த இயலும் என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**திரு டி. மார்டின் :** தலைவர் அவர்களே, தற்சமயம் அங்குள்ள ஆசிரியர்கள் சம்பளம் இல்லாதபடி இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் சம்பளம் பெறுவதற்கு சர்க்கார் உடனடியாகப் பரிகாரம் தேட வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நிதி பற்றாக்குறை காரணமாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் தரப்படவில்லை. ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஓரளவு நிதி வழங்கப்பட்டது. மேலும் கொடுக்கவேண்டிய அளவுக்கு ஊராட்சி ஒன்றியத்தில் நிதி இல்லை. அது பற்றி விரைவில் முடிவெடுத்து, ஆசிரியர்களுக்கு கிடைக்க முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, 1968-69-ம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம் நடைபெறும். திரு. எம். எஸ். சிவசாமி அவர்கள் பேசுவார்கள்.

## 3. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (ii) கவன ஈர்ப்பு ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கும், வினாக்களுக்கும் உடனடியாக தகவல் அளித்தல்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இந்த மாதிரி முக்கியமான பிரச்சினைபற்றி நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். ஒரு மணி நேர விவாதம் வேண்டுமென்று கோரினேன். கவன ஈர்ப்புத் தீர்மானமும், குறுகிய காலக் கேள்வியும் கொடுத்திருக்கிறேன். ஒரு மாதத்திற்கு மேலாகியும் இதுவரையிலும் ஒன்றும் வரவில்லை. சட்டத்தைக் காட்டி என்னை உட்கார வைத்து விடுகிறீர்கள். நாங்கள் தலைவருக்குக் கட்டுப்பட்டவர்கள். நாங்கள் என்னென்ன தெரிந்து கொள்ள விரும்புகிறோமோ அவற்றை உடனுக்குடன் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. அதற்கு அதிகாரிகள் காரணமா? துரிதமாக பதில்களைப் பெறுவதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? இதுபற்றி ஒரு ஏற்பாட்டைச் செய்ய உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் கேட்பது நியாயமான கோரிக்கை, நானும் எத்தனையோ வகைகளில் உடனுக்குடன் பதில் பெறுவதற்கான முயற்சியைச் செய்து வருகிறேன். ஒரு நாளைக்கு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குப் பதிலாக மூன்றுக்குப் பதிலளிக்க விதியை சற்று தளர்த்திக் கொள்கிறோம். உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கான பதில்களை இருக்கும் செகரடேரியட்டிலிருந்து மட்டும் நாம் பெற்றுவிடுவதில்லை. அவற்றை மாவட்டங்களுக்கு அனுப்பி தகவல்களை வாங்க வேண்டியிருக்கிறது, துரிதப்படுத்த முயற்சி எடுத்திருக்கிறோம். திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளிக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கப்படும் தீர்மானத்திற்கெல்லாம் உடனே பதில் சொல்ல முடியாது. நீங்கள் கொடுப்பதை டிபார்ட்மெண்டுக்கு கொடுக்கிறோம். அங்கிருந்து அறிக்கை வந்த பிறகுதான் அவையில் வைக்க முடியும். அதிகாரிகளை சீக்கிரம் கொடுங்கள் என்று உத்தரவிட சபாநாயகருக்கு அதிகாரம் இல்லை. விரைவிலே கொடுக்க முயற்சி செய்கிறோம். காலம் கடந்துபோனால், உறுப்பினர்களுக்கு தபாலில் அனுப்புவதற்கு கூட வழி செய்திருக்கிறோம்.

## 6. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968-69-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. மு. ச. சிவசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968-69-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழக அரசு பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு மைசூர் மாநிலத்துடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக மின்சார வாரியத்திற்கு 1 கோடியே 35 லட்சம் ரூபாய் லாபம் கிடைப்பதற்கு வகை செய்திருப்பதற்காக அரசை முதன் முதலாகப் பாராட்டுகிறேன். 1967-68-ம் ஆண்டைவிட



நடப்பு ஆண்டு 1968-69-ல் 6 கோடியே 14 லட்சம் ரூபாய் கூடுதல் லாபம் கிடைக்கக்கூடிய அளவுக்குச் சிறந்த நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருப்பதற்காக மின்சார வாரியத்தைப் பாராட்டுகிறேன். முன்பு காங்கிரஸ் ஆட்சியில், மின்சார வாரியம் கொடுக்க வேண்டிய வட்டியைக் கூட கொடுக்க முடியாத நிலை இருந்துவந்ததை மாற்றி, இந்த ஆண்டுக்கான வட்டியைக் கொடுத்தது மட்டுமல்லாமல், சென்ற ஆண்டின் பாக்கியையும் கொடுக்கக்கூடிய நிலையில் லாப நோக்குடன் சிறந்த நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கும் மின்சார வாரியத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்று கூறிக்கொண்டு, ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதே மன்றத்தில் கடந்த ஆண்டு கொடுத்த நிதிநிலை அறிக்கை மிகத் தெளிவாகவும், மிக விளக்கமாகவும், முழு விவரங்கள் அடங்கியதாக இருந்தது. இந்த ஆண்டு சிக்கனத்தின் காரணமாகவோ, வேறு என்ன காரணத்தினாலோ, முழு விவரங்கள் அடங்கிய அறிக்கையாக அளிக்காமல் இரண்டு மூன்று பக்கங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. வருகிற ஆண்டிலாவது மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை முழு விவரங்கள் அடங்கிய அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

1967-68-ஆம் ஆண்டு தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்திற்காக பத்து லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அந்தப் பத்து லட்சம் நீக்கப்பட்டு, அந்தத் திட்டத்தை எண்ணூர் அனல் மின்சாரத் திட்டத்துடன் இணைத்திருக்கிறார்கள். தூத்துக்குடி பெரும் நகரமாக மாறக்கூடிய நிலையில் இருக்கிறது. அங்கே துறைமுகமும் வளர்ச்சி பெறத் தக்கதாக இருக்கிறது. தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தின் அபிவிருத்திக்கும், அனல் மின்சாரத் திட்டத்திற்கும், தொடர்பு இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்காரிடத்தில் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகமாக ஆக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியபோது மக்கள் எடுத்துச் சொன்ன காரணங்களில் ஒன்று—தூத்துக்குடியில் அனல் மின்சாரத் திட்டம் வருவதன் மூலம் ஒரு லட்சம் டன் இறக்குமதி செய்கிற சூழ்நிலை இருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டினோம். இப்போது அங்கே அனல் மின்சாரத் திட்டம் இல்லாமல் அந்தத் திட்டம் எண்ணூரில் சேர்க்கப்படுவதனால் ஒரு லட்சம் டன் இறக்குமதியாகவேண்டிய நிலக்கரி குறைகிறது. இறக்குமதி அளவில் ஒரு லட்சம் டன் குறைவு ஏற்படுகிறது. ஏற்கனவே தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் லாபம் உள்ளதாக இருக்குமா என்று யோசிக்கின்ற நேரத்தில் இது பற்றியும் ஒரு குறை எழுகின்ற நிலை இருக்கிறது. அங்கே ஆழ்கடல் துறைமுகம் ஏற்படுவதை ஒட்டி, பல பெரிய தொழிற்சாலைகள் வரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றன. குறிப்பாக வெகு சீக்கிரத்தில் அங்கு ஒரு உரத் தொழிற்சாலை வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கல்பாக்கம் அணு மின்சாரத் திட்டம் அமைக்க எண்ணிப் பார்ப்பதை விட—தூத்துக்குடியில் திட்டமிட்டு, சர்வே செய்யப்பட்டு, முடிக்கப்பட்ட அனல் மின்சாரத் திட்டத்தை உடனடியாக உருவாக்க தமிழக அரசும், மின்சார வாரியமும் முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல நெல்லை மாவட்டத்தில் மேல் மணிமுத்தாறு, மேல் தாமிரபரணி ஆகிய இரண்டு புனல் மின்சாரத் திட்டத்திற்கு சர்வே நடந்து முடிக்கப்பட்டுவிட்டது. அங்கே இந்த இரண்டு புனல் மின்சாரத் திட்டங்களும் லாபகரமாக நடக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பது அந்த சர்வே திட்டத்தின்மூலம் தெளிவாகத் தெரிகிறது. எனவே இனி ஆரம்பிக்க இருக்கிற புனல் மின்சாரத் திட்டங்களில் மேல் மணிமுத்தாறு, மேல் தாமிரபரணி புனல் மின்சாரத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்பீட்டுக் கமிட்டிகளின் மூலம் பரம்பிக்குளம்-ஆளியாறு போன்ற பகுதிகளுக்குச் சென்றபோது அந்த அணைக்கட்டுப் பகுதியில் தினக் கூலிகளாக வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தவர்கள் பல குறைகளைச் சொன்னார்கள். கல் உடைத்து, மரங்களை அகற்றி—மிகக் கஷ்டமான நிலையில் இங்கு வசித்து பல காரியங்களைச் செய்திருக்கிறோம், இந்தத் திட்டங்கள் முடிந்து வேறு இடத்தில் ஒரு புதிய திட்டத்தை ஆரம்பிக்கிறபோது அங்கே இருக்கிறவர்களை தினக் கூலிகளாக நியமித்துக்கொள்கிறார்களே தவிர, எங்களை நியமிப்பதில்லை, எங்களுக்கு இந்தப் பகுதியில் அரிசி கூடக் கிடைக்காத நிலையில் கஷ்டப்பட்டோம் என்பதாகச் சொன்னார்கள். மின்சார வாரியம் இவற்றைக் கவனத்தில் கொண்டு எங்காவது புதுத் திட்டத்தைத் துவக்கினால் அங்குள்ள தினக் கூலிகளுக்கு அரிசி சப்ளை ரேஷன் முறையில் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் முன்பு திட்டப் பகுதியில் தினக் கூலிகளாக வேலை செய்தவர்களையே இங்கும் வேலைக்கு அமர்த்திக் கொள்ள முன்வர வேண்டும். அதுதான் முறை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பல கிராமங்களுக்கு ஸ்கீம்கள் போடப்படுகின்றன. ஸ்கீம்கள் போட்டு ஐந்தாண்டு, ஆறு ஆண்டுகளானாலும்கூட எஸ்டிமேட் போடுகிறார்களா என்றால் இல்லை. வேலை ஆரம்பிக்கிறார்களா என்றால் இல்லை. கிராமத்தில் இருக்கக்கூடிய மக்கள் இதோ வந்துவிடும், அதோ வந்துவிடும் என்று எண்ணி ஏமாறுகிறார்கள். அப்படியின்றி போட்ட ஸ்கீம்கள் உடனடியாக அமலுக்கு வர மின்சார வாரியம் முழு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலியில் கடற்கரைப் பகுதியில் நிறைய உப்பளங்கள் இருக்கின்றன. பெரும் பகுதி உப்பளங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் அமைந்திருக்கின்றன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு நீர் ஏற்றத்திற்கு மின் இணைப்புக் கேட்டால் அவை சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் இருக்கின்றன என்று சொல்லி மறுக்கப்படுகிறது. இது போலவே பல கிராமங்களில் பல்லாண்டாக புறம்போக்கு நிலங்களில் நெல் உற்பத்தி செய்கிற விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் பம்பு செட் வைக்க மின் இணைப்புக் கேட்டாலும் மின்சார வாரியம் மறுக்கிறது. இங்கே அது பற்றி ஒரு கேள்வி கேட்ட நேரத்தில் அமைச்சர் அவர்கள் அது ரெவின்யூ போர்டு செய்யவேண்டிய வேலை என்று சொன்னார்கள். இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்வது எல்லாம், மின்சார இலாகா ரெவின்யூ இலாக்காவைக் காட்டுவது, ரெவின்யூ இலாக்கா மின்சார இலாக்காவைக் காட்டுவது என்றில்லாமல் உடனடியாக இதில் கவனம் செலுத்தி புறம்போக்கு நிலங்களில் இருப்பவர்கள் பம்பு செட்டுக்கு மின் இணைப்புக் கேட்டாலும் கூட கொடுப்பதற்கான விதி முறைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். இது தமிழக அரசு, குறிப்பாக மின்சார வாரியம், உடனடியாகச் செய்ய வேண்டிய காரியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில், சங்கரன்கோவில், நாங்குனேரி, போன்ற இடங்களில் கிணற்றுப் பாசனம் இருக்கிறது. அந்த ஊர்க்காரர்கள் எல்லா வேலைகளையும் செய்து முடித்து வைத்திருந்தும் மின் இணைப்புக் கிடைக்காமல் இருக்கிறது. பொதுநல ஊழியர்கள் அங்கே போகிறபோது மக்கள் முறையிட்டுக்கொள்கிறார்கள். அதுபற்றி பல முறை அங்குள்ள சூப்பரிண்டிங் என்ஜினியரிடமும் சொல்லியிருக்கிறேன். இதுபோன்ற காலதாமதத்தை உடனடியாகத் தவிர்க்க மின்சார வாரியம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இது போன்று காலதாமதத்தைத் தவிர்க்க யோசனை கூறுவதற்கு ஒவ்வொரு மாவட்ட அளவிலும் ஒரு ஆலோசனைக் குழு இருந்தால் நலம் என்று கருதுகிறேன். அப்படிக் கூறுகிறபோது டிஸ்ட்ரிக்ட் டெவலமெண்டு கவுன்சில் இருக்கிறது என்று சொல்லலாம். மின்சார வாரியம் சம்பந்தமாக அதில் ஒன்றும் செய்யப்படவில்லை. ஆகை





யால் குறைந்தபட்சம் மாவட்டத்திற்கு ஒரு ஆலோசனைக் குழுவையாவது அமைக்க அரசு முன்வர வேண்டும் என்று கூறி இந்த அளவோடு முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்றைக்கு பதினைந்து உறுப்பினர்கள் பேசப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இருக்கக்கூடியது 2 மணி நேரம் தான். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் 8 நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ளவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. நா. வெள்ளக்கரபாண்டியன் :** மதிப்பிற்குரிய சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களே. 1968–69-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்த அளவில் மின்சாரம் நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. ஆனாலும் கூட வேளாண்மைக்கு மின்சாரம் வழங்குவதில் இன்னும் அதிகமான கவனம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. குறிப்பாக பின்தங்கிய வறண்ட பிரதேசங்களில் அதிகக் கவனம் செலுத்தி கூடுதலாக மின்சாரம் வழங்கவேண்டும்.

விசையேற்றங்களுக்கு மின்சக்தி வழங்கப்படுவதற்காக கம்பங்கள் கொடுக்கும்பொழுது விவசாயிகளே அவற்றை எடுத்துக்கொண்டு வரவேண்டுமென்று அதிகாரிகள் சொல்கிறார்கள், அதைத் தவிர்ப்பதற்கு மின்சார வாரியம் முற்படவேண்டும்.

பெரும்பாலான திட்டங்களுக்கு ஒப்பளிப்பு கொடுப்பதற்கு மிகவும் காலதாமதம் ஆகிறது. காரணம் என்னவென்றால் உதவி பொறியாளருக்கு ரூபாய் 1,000 வரைதான் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு கொடுக்கக் கூடிய அதிகாரம் இருக்கிறது. மற்ற இலாக்காக்களிலே 10 ஆயிரம் வரை கொடுப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே அந்த முறையிலே இந்தத் துறையிலேயும் 5,000 ரூபாய் வரையில் ஒப்பளிப்பு வழங்குவதற்கு அதிகாரங்கள் கொடுப்பதற்கு முயலவேண்டும். அங்கே ஒரு குமாஸ்தாதான் இருக்கிறார், கூடுதலாக ஒரு குமாஸ்தாவை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

இதைத் தவிர மேலும் பல திட்டங்களைப் பொறுத்தவரையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. என்னுடைய பகுதியான இராதாபுரத்தைப் பொறுத்தவரையிலே கும்பளம்பாடு மின் நீடிப்புத் திட்டம், கூடங்குளம் வைரா கிணறு மின் நீடிப்புத் திட்டம், பளவூர் மின் நீடிப்புத் திட்டம் இவற்றிற்கெல்லாம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டும் வேலை நடைபெறவில்லை. இவற்றை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

வீடுகளுக்குக் கொடுக்கப்படுகின்ற மின்சாரம் ஒரே சீராக இல்லாமல் மின் அழுத்தம் அடிக்கடி குறைந்தும் அல்லது அதிகமாகவும் இருக்கிறது. இதைத் தவிர்க்கவேண்டும்.

வீடுகளுக்கும், வேளாண்மைக்கும் கொடுக்கக்கூடிய மின்சாரத்தின் கட்டணம் அதிகமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மைசூர் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்ததின் காரணமாக பல கோடி ரூபாய்கள் லாபம் என்று. அதன் காரணமாக விவசாயிகளுக்கு நன்மை புரியக் கூடியவகையில் கட்டணத்தில் சலுகைகள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்களிலே உள்ள தெரு விளக்குகள் ஒழுங்காக எரியவில்லை என்ற புகார் பரவலாக இருக்கிறது. இதைப்பற்றி துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். ஊராட்சி மன்றங்களிலிருந்து தெரு விளக்குகள் போட வேண்டுமென்று மனுக்கொடுத்தும் பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் கவனிக்கவில்லை. குறிப்பாக காவல் கிணறு, செட்டிகுளம்,

கூடங்குளம், கோவங்குளம் போன்ற இடங்களிலே மனுக்கொடுத்து பல ஆண்டுகள் ஆகியும்கூட கவனிக்கவில்லையென்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மின்சார வாரியம் கடன் எழுப்பும் திட்டத்தால் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். பொதுமக்கள் கடன் வழங்குகிறபோது ஆறு மாதத்திற்கொருமுறை வட்டி வழங்கப்படுகிறது. அப்படியில்லாமல் வருடத்திற்கொரு முறை வட்டி வழங்குகின்ற முறையைக் கொண்டு வந்தால் நல்லதாக இருக்கும். வட்டியைப் பொறுத்தவரையில் பெறுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே வட்டியை வேண்டுமானால் மின்சாரக் கட்டணத்தில் ஈடுசெய்யக்கூடிய முறையில் வழிவகைகள் செய்தால் பலர் கடன் வழங்குவதற்கு முன் வரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மின்சார அமைப்பிற்கு புதிய வருவாய் பிரிவு ஒன்று அமைக்க அரசாங்கப் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. அப்படி அமைத்தால் அதை வள்ளியூரில் அமைத்தால் நல்லது. அந்த இடத்தைச் சுற்றியுள்ள இடங்கள் விவசாயம் பெருகியுள்ள முக்கியமான இடங்களாக இருக்கின்றன. ஆகவே அங்கே அந்த வருவாய் பிரிவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி, தூத்துக்குடி தனியார் மின்சார உரிமைதாரர்கள் நிறுவனங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்வதன் மூலம் அப்பகுதியில் கிராம மின்சாரத் திட்டங்களுக்கும், வேளாண்மைத் திட்டங்களுக்கும் நல்ல முறையில் பயன்படுத்த முடியும். ஆகவே இந்த நிறுவனங்களை உடனடியாக அரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் மேற்கொண்டால் அந்தப் பகுதியிலே உள்ள விவசாயப் பெருமக்களுக்கு உதவியாக இருக்கும், ஊராட்சிகளில் தெரு விளக்குகள் போடக்கூடிய வேலைகளும் துரிதமாக நடக்கும்.

தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்திற்காக 1966–67 இல் 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1967–68 இல் செலவு செய்யப்படவில்லை. 1968–69 ஆம் ஆண்டு பணம் ஒதுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் எண்ணூர் திட்டத்தோடு சேர்த்து இருப்பதாகச் சொன்னார்கள். தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும், அது தென் மாவட்டங்களுக்கு வரப்பிரசாதமாக இருக்கும் என்றெல்லாம் சொல்லப்பட்டது. தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை மத்திய அரசு 1970-க்குள் முடித்துவிடும் என்று சொல்லியிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியிலே உள்ள இந்த மின்சாரத் திட்டத்தை மாநில அரசு நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யவில்லை. அதற்கு உடனடியாக முயற்சி செய்யவேண்டும். காரணம், துறைமுகம் என்றால் தொழில்கள் நிறைய இருக்கவேண்டும், அதற்கு மின்சாரம் வேண்டும். தனியார் நிறுவனங்களில் மின்சாரம் கொடுக்க முடியாத நிலை இருப்பதால் அரசாங்கம் அவற்றை உடனடியாக எடுத்துக்கொண்டு அரசாங்கத்திலிருந்து தொழில்களை நிறுவி அந்தத் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோதையாறு புனல் மின்சாரத் திட்டம் 1970 இல் முடிவு அடையும் என்று தெரிவிக்கிறார்கள். ஆனால் நடக்கிற வேலையின் வேகத்தைப் பார்க்கிறபோது முடிவு அடையாதுபோல் தெரிகிறது, ஆகவே இதைத் துரிதப்படுத்தவேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பரலையாறு புனல் மின்சாரத் திட்டம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மேல் தாம்பிரவரணி, மேல் மணிமுத்தாறு புனல் மின்சாரத் திட்டம் இவைகளையும் உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். இப்படி சிறியசிறிய திட்டங்களை விரைவிலே நிறைவேற்றுவதின் மூலம் கூடுதலாக மின்சார சக்தி கிடைத்து அதன் மூலம் தொழில் வாய்ப்புக்கள் பெருகக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே விவசாயிகள் மின் இணைப்புக்காக பல ஆண்டு



களாக மனுச்செய்தும் இன்னும் மின் இணைப்பு கிடைக்கவில்லை. குறிப்பாக என். டி. ஞானப்பிரகாசம் (வடக்கு அருணம், பனையூர்) என்பவர் மின் இணைப்புக்காக 1965-ஆம் ஆண்டிலே மனுப்போட்டார். 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 தேதியில் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்திருக்கிறார். இதுவரையில் மின்சாரம் கொடுக்கவில்லை. மின்சாரம் கொடுக்க முடியாது என்ற அளவிலே அந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று 1968-ல் பதில் கிடைத்திருக்கிறது. இப்படிச் செய்தால் ஏழை விவசாயிகள் என்ன என்ன நிலைமையிலிருப்பார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். 1965-லே அவர் மின்சார மோட்டார் கடன் அரசாங்கத்திலிருந்து வாங்கியிருக்கிறார். இதுவரையில் மின்சாரம் கொடுக்கப்படவில்லை. இதுபோன்றவற்றை நல்ல முறையில் மின்சார வாரியம் கண்காணிக்க வேண்டும். இப்பொழுது வாரியத்தின் தலைவராக இருப்பவர் பல துறைகளில் இருந்து சிறந்திருக்கிறார் என்ற காரணத்தாலே இந்தக் குறைகளையெல்லாம் ஆராய்ந்து நல்ல ஒரு முடிவை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மு. இரத்தினசபாபதி: சட்டப் பேரவை உதவித் தலைவர் அவர்களே, 1968–69-ஆம் ஆண்டிற்கான மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது எனது கருத்துக்களை கூற முன்வந்திருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு மின்சார வாரியம் நல்ல திட்டமிட்டு சிறந்த முறையிலே பொதுமக்களுக்கு நன்மைகள் பயக்கத்தக்க வகையிலே தங்களுடைய செயல்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். 1967–68 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே தமிழகத்திலே மின்சார விஸ்தரிப்பிற்காக ஏறக்குறைய 4 கோடி ரூபாய் அளவில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வரவு செலவு கணக்கைப் பார்க்கிறபோது 9 கோடியே 6 லட்சம் ரூபாய் செலவு செய்யக்கூடிய அளவிற்கு இந்த நாட்டில் உள்ள மக்களுக்கு நல்ல முறையிலே சேவை செய்திருப்பதைப் பார்க்கிறோம். மின்சாரத்தை பொதுமக்களுக்கு நல்ல முறையிலே விஸ்தரிக்க வேண்டுமென்ற முறையிலே 3,210 கிராமங்களுக்கு மின்விசை கொடுத்திருக்கிறது. அதைப்போலவே மின் ஏற்றங்களுக்காக அவர்கள் குறிப்பிட்டிருந்த அளவுக்கு மேலாகவே, அதாவது 51,746 ஏற்றங்களுக்கு மின் வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அரிசனக் குடியேற்றங்களைப் பொறுத்தவரையில் 443 இடங்களில் மின் வசதியைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். இந்த முறையில் கடந்த ஆண்டு மின்சார வாரியம் பொதுமக்களுக்கு நல்ல முறையிலே பணியாற்றிக்கொண்டு வந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மின்சார விஸ்தரிப்புக்காக பல திட்டங்கள் போட்டு உற்பத்தி அதிகரித்து இருந்தாலும் பற்றாக்குறை காரணமாக மைசூர் மாநிலத்திலிருந்து 30 கோடி யூனிட்டுகள், யூனிட்டுக்கு 9 காசாக இருந்ததை 4·66 காசாக குறைத்து வாங்கி தமிழகத்திலே மின்சாரத்தை வழங்கியதன் காரணமாக கணிசமான தொகையை மிச்சப்படுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நல்ல நிலையிலே அவர்கள் மின்சார வாரியத்தை ஏற்படுத்திச் செயல்பட்டுக் கொண்டு வருவது உண்மையிலேயே நமக்கு மகிழ்ச்சி தரக் முற்பகல் 11-30
கூடிய செயலாக இருக்கிறது.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

தூத்துக்குடியிலே அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்தவேண்டுமென்று 1964-ம் ஆண்டிலே முடிவு செய்யப்பட்டது. இப்போது பல காரணங்களால் அது தள்ளி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எண்ணூரிலே 110 மெகா வாட் கூடுதலாக மின் உற்பத்தி செய்யக்கூடிய நிலையத்தை ஏற்படுத்தியிருப்பதன் காரணமாகவும் பிற்காலத்திலே, தமிழகத்தின் தென் பகுதியிலே அணு மின்சார நிலையம் ஒன்று ஏற்பட வாய்ப்பு இருப்பதாகக் காரணம் காட்டி, தூத்துக்குடியில் அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்துவது தள்ளி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தூத்துக்குடி துறைமுகத் திட்டம் கூடிய சீக்கிரம் நிறைவேற இருப்பதால், பல தொழில்கள் பெருக வாய்ப்பிருப்பதால் தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் மிகமிகத் தேவை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மின்சார வாரியத்தில் இருந்து கிராமங்களுக்கு மின்சாரம் விநியோகிக்கப்படுவது கன்ஸ்ட்ரக்ஷன் டிப்பார்ட்மெண்டில் இருந்து ஓ.எம்.என். டிப்பார்ட்மெண்டிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு, புதிய கிணறுகளுக்கு பம்ப் செட் வைக்க மின்சாரம் தேவை என்று கேட்கிறபோது, புதிதாக மதிப்பீடு தயாரித்து எவ்வளவு தொகை என்று கணக்குப் பார்க்கிறபோது ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தால் எ.இ. முடிவு செய்ய முடியாதபடி, இ.இ.-க்கு அனுப்பப்பட்டு அவர் சரிபார்த்து ஒப்புதல் அளிக்க வேண்டியிருப்பதால் மிகவும் காலதாமதமாகிறது. பொதுப்பணித் துறை, மற்றத் துறைகளைப் பொறுத்தவரை எப்படி எ.இ. லெவலில் 3,000 ரூபாய் வரை ஒப்புதல் அளிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதோ அந்த அதிகாரத்தை இங்கும் கொடுத்தால் காலதாமதத்தைத் தவிர்க்க முடியும்.

கோயில்பட்டி தாலுகாவில் கிழக்குப் பகுதியான கடற்கரை ஓரங்களில் கிணற்றுப் பாசனத்திற்காக பம்ப் செட் வைத்து விவசாயம் செய்கிருர்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பருவ மழை தவறிவிட்டதால், கிணற்றிலுள்ள தண்ணீர் எல்லாம் கடல் தண்ணீராக மாறிவிடுகிற தன்மையில் இருப்பதால் அந்தத் தண்ணீரை எடுத்து விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அந்த மின் விசைத் தொடர்பை ரத்து செய்துவிட வேண்டுமென்று கோரினால், இலாகாவினர் 10 ஆண்டுகளுக்கு மினிமம் சார்ஜ் கட்ட வேண்டுமென்று கூறுகிருர்கள். அந்தக் கிணறுகளின் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலையில் மின் இணைப்பை எந்தவித கட்டணமுமின்றி ரத்து செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கோயில்பட்டி தாலுகாவின் கிழக்குப் பகுதியாகிய விளாத்திகுளம் தொகுதி தமிழகத்திலேயே பின்தங்கிய பகுதியாகும். அந்தப் பகுதியில் நிறைய கிராமங்கள் மின் இணைப்பைப் பெருமலே இருக்கின்றன. பக்கத்து தொகுதிகளில் மின் இணைப்பு நல்ல முறையில் இயங்கி வருவதைப் பார்க்கிறபோது தங்களுடைய பகுதிகளுக்கும் மின் இணைப்பு வரவேண்டுமென்று ஆசைப்படுகிருர்கள். அந்தப் பகுதி பின் தங்கிய பகுதி என்பதோடு அரிசனங்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதி. ரெம்யூனரேட்டிவ் ஸ்கீமாக இருக்குமா என்றெல்லாம் பார்க்காமல் எவ்வளவு சீக்கிரம் அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில கிராமங்களில் மின்சாரக் கட்டணத்தை வசூலிப்பதற்காக வாரத்தில் குறிப்பிட்ட இரண்டு தினங்களில் வந்துதான் வசூலிக்கின்ற நிலை இருக்கிறது. இந்த இரண்டு தினங்களும் விடுமுறையாகி விட்டால் அவர்கள் வராமலே இருந்து விடுகிருர்கள். கிராம மக்கள் 10, 15 மைல் தூரம் சென்று தலைமை நிலையத்திலேதான் பணத்தைக் கட்ட வேண்டியிருக்கிறது. உதாரணமாக, விளாத்திகுளம் எஸ்.ஒ. ஆபீசைப் பொறுத்து இந்த நிலைமை இருக்கிறது. குளத்தூர் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ளவர்கள் குறிப்பிட்ட இரண்டு தினங்களில்தான் பணத்தைக் கட்ட வேண்டியிருக்கிறது, வசூலிக்கின்ற நிலை இருக்கிறது. அந்த இரண்டு தினங்களும் விடுமுறையாகி விட்டால் மக்கள் வந்து திரும்ப வேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கே எப்போதும் செயல்படும் அளவுக்கு ஒரு அலுவலகத்தைத் திறந்து வசூலிப்பாளரை நியமித்தால் பொதுமக்களுக்கு வசதியாக இருக்குமென்று கூறி இந்த அளவோடு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. மாரிமுத்து : தலைவர் அவர்களே, 1968-69-ம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை குறித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். தஞ்சை மாவட்டம் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று எல்லோராலும் அழைக்கப்படுகிறது. அந்த மாவட்டத்திலுள்ள அத்தனை விவசாயிகளும் காவிரி நீரையும், மின்சாரத்தையும்



நம்பித்தான் வாழ்கிருர்கள் என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மைதான். உணவுப் பொருள் உற்பத்தி செய்யக்கூடியவனுக்கு வயிருர உண்பதற்கு உண்டிக்கு கிடைக்காத அளவு பஞ்சமாகிப் போய்விடுகிறது. அதைப் போல விவசாயத்தைப் பற்றியும், ஆடுதுறை 27 நெல் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதைப் பற்றியும், அதை எந்த முறையில் விவசாயிகள் பயன்படுத்த வேண்டுமென்பதைப் பற்றியும், பேசுவதற்கு இங்கு நேரம் கிடைக்காத நிலையில் பஞ்சமாக இருக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆடுதுறை 27 என்ற ரக நெல் முதலில் தஞ்சை மாவட்டத்தில் பயன்படுத்தப்பட்டது. அன்று காவிரியில் நீர் பற்ருக்குறையாக இருந்த நிலையில, அப்போது இருந்த சர்க்கார் பாதாள நீரை எடுத்துப் பயன்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தார்கள். நிறைய வடிமுனைக் குழாய்களை அமைத்துத் தந்தார்கள். அந்த முறையில் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன் படுத்துவதற்கு மின்சாரம் தேவையாக இருக்கிறது. அந்தப் பகுதியைச் சார்ந்த விவசாயிகள் அத்தனைபேரும் ஆடுதுறை 27 நெல் விதையைப் பயன்படுத்தி விவசாயம் செய்ய மிகுந்த ஆர்வத்துடன் இருக்கிருர்கள். முன்னால் இருந்த சர்க்கார் அந்த விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து மோட்டார் பம்ப் செட்டுகள் வாங்க வழி செய்து கொடுத்தது. ஆனால் மின்சார தொடர்புக்கு வசதி செய்து கொடுக்க முடியாத காரணத்தால் அந்தக் கடனையே இன்று ரத்து செய்துவிட்டார்கள்.

நாம் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ருல் இன்றைய தினம் மின்சாரம் மிக மிக அவசியமான ஒன்ருகும். நான் சில இடங்களில் பார்க்கிறேன், விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்க முடியாத நிலையில், ஒரு சில இடங்களில் கல்யாணங்களுக்கும், பொதுக்கூட்டங்களுக்கும் ஏராளமான மெர்க்குரி லைட்டுகளுக்கும் மற்றவற்றிக்கும் மின்சாரம் வழங்கப்படுகிறது. அதற்கெல்லாம் மின்சாரம் கொடுக்கவே கூடாது என்று கூறவில்லை. ஆனலும் விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டிருக்கும்போது மின்சாரம் வழங்குவதில் விவசாயத்திறகு முதற்சலுகை காட்ட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து ஆட்சி முறை வந்து நிறைய மின் விளக்குகள் குக்கிராமங்களில் வந்திருப்பதைப் பார்க்கிருேம். இதில் சில குறைகள் எங்கு பார்த்தாலும் இருக்கின்றன என்பதை போர்ட் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சாதாரணமாக ஒரு கிராமத்திற்கு மின் ஒளி தேவை என்ருல் சர்வீஸ் கட்டணம் கட்ட வேண்டியிருக்கிறது. கிராமங்களிலுள்ள ஒருசில வசதி படைத்தவர்கள்தான் அதைக் கட்டிக் கொண்டு வருகிருர்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளில் அந்த சர்வீஸ் கட்டணத்தைக் கட்டுவதற்கு அங்குள்ள மக்களுக்கு நிதி வசதி இல்லாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே எந்தப் பஞ்சாயத்தானுலும் சரி, ஹரிஜனங்கள் வாழக் கூடிய தெருக்களுக்கு முதலில் கம்பம் நட்டுவிட்டு அடுத்தாற்போல்தான் மற்றப் பகுதிகளுக்கு கொண்டு செல்வது என்ற ஒரு நிலையை ஏற்படுத்த வாய்ப்பு, வசதி அளிக்கவேண்டும்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில் ஒருசில குறைகளை இங்கு எடுத்துச் சொல்ல ஆவலுள்ளவனுக இருக்கிறேன். மின்சார வாரியத்திற்கு ஒட்டிய கருத்தாக இல்லாவிட்டாலும் நான் ஒருசில குறைகள் பற்றி இங்கு கூறிவிட்டு முடித்துக் கொள்ளலாமென்று கருதுகிறேன். என் ஆடுதுறை தொகுதியில் திருவிடமருதூர், திருபுவனம், திருநாகேஸ்வரம் போன்ற இடங்களில் ஏழைகளின் குடிசைகள் தீக்கு இரையாகியிருக்கின்றன. தீ விபத்துக்கள் பற்றி இங்கு ஏராளமாக பேசப்பட்டிருக்கின்றன. இருப்பினும், அந்தப் பகுதிகளில் நடந்த தீ விபத்துக்களைப் பற்றி என்னுல் சொல்லாமல் இருக்க முடியவில்லை. தீ விபத்துக்கள் பற்றி எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது முதல் அமைச்சர்

அவர்கள் சொன்னார்கள், தீ விபத்தில் பம்பாயில் கூட கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள ஒரு கட்டடம் எரிந்து விட்டது என்று. நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, எங்கள் பகுதியில் ஏழை மக்களின் குடிசைகள் மட்டும்தான் எரிந்திருக்கின்றன. எரிந்து போன வீடுகளுக்கு சர்க்கார் மூலம் வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 80 தான். அதுவும் சொந்த வீடாக இருந்து இந்த விபத்துக்கு உள்ளானவர்களுக்குத்தான் இந்த ரூ. 80 கொடுக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. வாடகை வீட்டில் குடியிருந்தால் ரூ. 20 தான் கொடுக்கும் நிலையிருக்கிறது. திருப்புவனத்தில் நிறைய ஏழை நெசவாளர்கள், கூரை வீடுகளில் வாடகைக்கு இருப்பவர்கள் இந்த தீ விபத்தினால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஒரு பழமொழி சொல்வார்கள், தரியை சுருட்டி விட்டார் என்று. திருபுவனத்தில் உள்ள ஏழை நெசவாளர்கள் மிகமிகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நம் மாநிலத்தில் சென்ற ஒன்றரை ஆண்டுகளாக் தீ விபத்துக்கள் பரவி வருகின்றன. இந்த தீ விபத்துக்கள் பற்றி இந்த அவையில் உள்ள அங்கத்தினர்கள் நல்ல பல கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அமைச்சர்கள் கூட இது சம்பந்தமாக நிறைய ஆய்வு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். என் தொகுதியைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட நூறு வீடுகளுக்கு மேல் எரிந்திருக்கின்றன. அந்த மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நெசவாளர்கள் எங்கள் பகுதியில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தற்போது கொடுக்கப்பட்டு வரும் ரூ. 80 என்பதை நீக்கிவிட்டு இந்த அரசாங்கம் அவர்களுக்குப் போதிய அளவிற்கு நிதி உதவி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், விவசாயிகளுக்கு மின்சாரம் மிக மிக இன்றியமையாததாக இருக்கிறது. எங்கள் பகுதியில், காவேரியில் எப்போது தண்ணீர் வரும் என்று கேட்டால், எங்களுக்கு காவேரித் தண்ணீர் அவசியமில்லை, நாங்கள் போட்டுள்ள பம்ப் செட்களுக்கு, மோட்டார்களுக்கு வேண்டிய அளவிற்கு மின்சாரம் கொடுத்தால் நெல் களஞ்சியம் என்று சொல்லக்கூடிய மாவட்டத்தை இன்னும் உயர்த்திக் காட்டத் தயாராயிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த முறையில் அங்குள்ள விவசாயிகளின் ஆர்வத்தை மனதில் கொண்டு அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கத்தக்க வகையில் மின்சார வசதியை அவர்களுக்கு நல்ல முறையில் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், நீர்ப்பாசனம் பற்றி ஒருசில கருத்துக்கள் தெரிவிக்க விரும்புகிறேன். மின்சார வாரியத்தோடு தொடர்புள்ள கருத்தாக இருக்கும் என்று கருதித்தான் இதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். முன்பெல்லாம் ஆறுகள் பி.டப்ளியு.டி.-யின் மேற்பார்வையில் இருந்தன. ஏ க்ளாஸ், பி க்ளாஸ் வாய்க்கால்கள் இருக்கின்றன. ஆற்றிலிருந்து ஏற்படக்கூடிய கண்மாய்கள் கிராமங்களில் நிறைய இருக்கின்றன. அந்தக் கண்மாய்கள் மூலம் வயலுக்கு நேரடியாக தண்ணீர் பாய வாய்ப்பிருக்காது. கிராமப் புறங்களில் நிறைய தண்ணீர் வசதி இருக்கிறது. கிராமப் புறங்களில் தண்ணீரை பஞ்சாயத்து குடிமராமத்து என்ற முறையில் பராமரித்து வருகிறார்கள். அவை நல்ல முறையில் இயங்கப் போதிய நிதி வசதி அவர்களுக்கு இல்லாத காரணத்தினால் ஏக்கருக்கு $2\frac{1}{2}$ ரூபாய் என்றிருப்பதை சிறிது உயர்த்தியாவது அவற்றை நல்ல முறையில் நடைபெறச் செய்யவேண்டும். ஏ க்ளாஸ், பி க்ளாஸ் வாய்க்கால்களை எல்லாம் அதிகாரிகளோ, அரசாங்கமோ, பஞ்சாயத்தோ, பஞ்சாயத்து யூனியனோ பராமரிக்க முடியாத நிலை இருக்கிறது. ஆடுதுறை தொகுதியில் பீமன் வாய்க்கால், பாண்டியன் வாய்க்கால், ஒட்டை வாய்க்கால் என்று பல ஏ க்ளாஸ் வாய்க்கால்கள் இருக்கின்றன. அந்த வாய்க்கால்களை எல்லாம் நல்ல முறையில் பராமரிக்காவிட்டால் தஞ்சை நெல் களஞ்சியமாக இருக்காது என்று சொல்லி தஞ்சை மாவட்டத்தை பஞ்ச மாவட்டமாக ஆக்காதிருக்குமாறு எல்லோரையும் கேட்டுக்கொண்டு என் தொகுதிக்கு மின்சார வசதிகளை நல்ல முறையில் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.





**திரு. அ. ப. சண்முகசுந்தரம் :** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நம்முடைய மன்றத்திலே கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மின்சார வாரிய நிதிநிலைத் திட்டத்தின்மீது நான் என் கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். நம் மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு 44 கோடி ரூபாய் வருமானம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்த வருமானம் வருகிற ஆண்டு 50 கோடியாகப் பெருகும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பார்க்கும் போது உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறோம். இதில் பாராட்டத்தக்க நல்லதொரு செய்தி என்னவென்றால் அதிகப்படியான மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 33,000 மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கலாம் என்று இலக்கு வைத்திருந்தோம். ஆனால் 52,000 மின்விசை ஏற்றங்களுக்கு மின்இணைப்பு கொடுத்திருக்கிறோம். நம் இலக்கைவிட 19,000 மின் விசை ஏற்றங்களுக்கு அதிகப்படியாக மின் இணைப்பு கொடுத்திருக்கிறோம். இது மிகவும் பாராட்டத்தக்கதொரு செயல். நம் தமிழ்நாட்டில் சேலம், கோவை இந்த இரு மாவட்டங்களும்தான் கிணற்றுப் பாசனத்தை நம்பியிருக்கிறது. அந்த இரண்டு மாவட்டங்களுக்கும் குறுகிய காலத்தில் விரைவில் அதிகப்படியான மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவேண்டும். இந்த ஆண்டு சுமார் 50,000 மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கலாம் என்ற குறிப்பு இருக்கிறது. அப்படி 50,000 மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுத்தால், நம் இலட்சிய அளவு இன்னும் நிறைய இருக்கிறது. நமது இலட்சியம் 9 லட்சம் மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பது என்பதாகும். அதில் இதுவரை $3\frac{1}{2}$ லட்சம் மின்விசை ஏற்றங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். ஆகவே இப்போது 50,000 மின் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பது என்றால் அது சிறிது குறைந்த அளவில்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன். அதை அதிகப்படுத்தித் தருமாறு முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த வகையிலே நமக்கிருக்கும் நிதிப் பற்றுக்குறையைப்பற்றியும் அமைச்சரவர்கள் இந்த அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். அதே நேரத்தில், நாம் நம்முடைய மாநிலத்திலேயிருக்கிற நிதிப் பற்றுக் குறையைப் பார்த்துக் கொண்டிராமல், மத்திய சர்க்காரிடம் இன்னும் 5 கோடி ரூபாய்கள் மின் இணைப்புத் திட்டங்களுக்காக வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அந்த 5 கோடி ரூபாய்கூடப் போதாது. இன்னும் அதிகமான தொகையை மத்திய அரசிடமிருந்து பெற வேண்டும் அல்லது, குறைந்த பட்சமாக இந்த 5 கோடியாவது நிச்சயமாகக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக்கேட்டு வாங்கினால், அதிகப்படியாக 50,000 மின்விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க வழிவகை கிடைக்கும்.

கோவை மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் உள்ளவர்கள் கிணற்றுப் பாசனத்தை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்திலே கிணறுகள் எல்லாம் மிக ஆழமான இடத்தில் அதாவது 50 அடி, 60 அடி இன்னும் சொல்லப்போனால் 100 அடிகூட ஆழமாகத் தோண்ட வேண்டியிருக்கிறது. எனவே, கிணறுகளுக்குக் கூடிய விரைவில் மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிக் கொடுப்பதிலே அதிகாரிகளும் நல்ல முறையிலே செயலாற்றிக்கொண்டு தான் வருகிறார்கள். இருந்தாலும்கூட அவர்களுக்குச் சில சாமான்கள் கிடைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கம்பங்கள், மீட்டர்கள் இதுபோன்ற "மெட்டீரியல்ஸ்" கிடைக்கவில்லை என்ற பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, ஆங்காங்கு அந்தச் சாமான்களை நிரப்பிவைத்து இதுபோன்ற சிறிய காரணத்திற்காக காலத்தைத் தள்ளிப்போட முடியாத வகையில் செய்து விரைவில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க ஒரு மாதம் இரண்டு மாதம், என்றும் அதற்கு மேலும் காலமாகிறது. இனி மின் இணைப்பு கொடுப்பதில் 1 மாதம், அதிகமாகப் போனால் 2 மாதங்களுக்கு மேல் போகக்கூடாது என்ற முறையை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களெல்லாம

கீழ்மட்டத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகளால் எவ்வளவு விரைவில் மின்சார இணைப்பு கொடுக்கப்படுகிறதோ அதைப் பொறுத்துத்தான் நம்மைப் பாராட்ட இருக்கிறார்கள். அந்த முறையில் விரைவில் மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதிலும்கூட விசித்திரமான ஆணை ஒன்று பரம்பிகுளம்-ஆளியார் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, பரம்பிக்குளம்-ஆளியார் திட்டப்பகுதிகளில் உள்ள வாய்க்கால்களில் தண்ணீர் வரும்பொழுது கிணறுகளுக்கான மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்று ஆணையிட்டு உறுதிப்பாடு வாங்குகிறார்கள், உடன்படிக்கை வாங்குகிறார்கள். அப்படியிருப்பதால், அங்கு வாய்க்காலில் தண்ணீர் வரும்பொழுது கிணறுகளைப் பயன்படுத்த முடிவதில்லை. வாய்க்காலில் தண்ணீர் வரும் காலத்திலும் கடைசிப் பகுதிகளுக்கு அந்தத் தண்ணீர் வருவதில்லை. அப்படிப்பட்ட நேரத்தில் கிணற்றுத் தண்ணீரைத் தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் அப்பொழுது மின்விசை துண்டிக்கப்பட்டு விடுகிறது. அங்கு மின் விசை இருக்கிறது. கிணற்றிலே தண்ணீரும் இருக்கிறது, ஆனால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் காரணத்தினால் அதை உபயோகப்படுத்த முடிவதில்லை. இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலை உருவாகியிருக்கிறது. இவ்வாறு செய்வது வரவேற்கக் கூடிய காரியம் அல்ல. அமைச்சரவர்களும், அதிகாரிகளும் இதை மனத்திற்கொண்டு, சமீபத்திலே கொடுத்திருக்கும் அந்த ஆணையை ரத்து செய்ய வேண்டுமென்று இந்த மன்றத்தில் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எங்கள் பொள்ளாச்சி வட்டத்தைப் பொறுத்தவரையிலும் மின்சாரத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. 30 மெகாவாட் விசை கொடுத்து, அது இயங்கிக்கொண்டு வருகிறது. சோலையாற்றில் 60 மெகாவாட் விசை நல்லமுறையிலே நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆளியாற்றில் 60 மெகாவாட் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்த ஆளியாறு திட்டம் முடிவாகும் நிலையில் இருக்கிறது. அது பூர்த்தியாகும் நேரத்தில் இன்னொரு திட்டத்தை நிறைவேற்ற ஆரம்பிக்க வேண்டும். காடம்பாறை திட்டத்திற்கு 35 மெகாவாட் கொடுத்து அந்தத் திட்டத்தை விரைவில் நடத்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான், மேல் ஆளியாறு அணைக்கட்டு திட்டம் முடிந்து விட்டதும், அதில் இருக்கும் சாமான்களையும், இயந்திரங்களையும், அதில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களையும் இந்த காடம்பாறை மின்சாரத் திட்டத்திற்கு அனுமதி கிடைத்துவிட்டது என்றால் அவைகளை அப்படியே மாற்றிக்கொள்ள வழிவகை ஏற்படும். எனவே, உடனடியாகக் காடம்பாறை திட்டம் வந்தால் அதைச் சுலபமாகச் செய்ய ஏற்பாடுகள் இருக்கின்றன. நமக்கு இப்பொழுதுள்ள பிரச்சினைகளெல்லாம் விவசாயிகளுக்கு எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் கொடுக்க வேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவில் மின் இணைப்பைக்கொடுக்க வேண்டும் என்பதுதான்.

தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்படும் மின்சாரத்திற்கு, யூனிட் ஒன்றுக்கு $4\frac{1}{2}$ காசு வீதம் நமக்கு உற்பத்திச் செலவாகிறது என்றால் சிமெண்ட் தொழிற்சாலை, மேட்டுப் பாளையத்திலுள்ள "ஜெம்" தொழிற்சாலை செயற்கை வைரத் தொழிற்சாலை ஆகியவற்றிற்கு யூனிட் ஒன்றுக்கு $4\frac{1}{2}$ காசுக்கு குறைத்துக்கூட மின்சாரம் வழங்கி வருகிறோம். இனி அவ்வாறில்லாமல் யூனிட் ஒன்றுக்கு $4\frac{1}{2}$ காசுக்குக் குறையாமல் கொடுக்க வேண்டும் என்று ஆக்க வேண்டும். அப்பொழுதுதான் மின்சார வாரியத்திற்கும் வருமானம் அதிகமாகப் பெருகும். அப்படியிருந்தால் விவசாயத்தை நம்பியிருக்கும் நம்முடைய மக்களுக்கு மின்விசையேற்றங்களுக்கு அதிகப்படியான அளவில் மின் இணைப்பு கொடுக்க முடியும்.

பஞ்சாலைகளைப் பொறுத்தவரையிலே விதிவிலக்கு அளித்து விட்டு மற்ற ஆலைகளுக்கெல்லாம் யூனிட் ஒன்றுக்கு $4\frac{1}{2}$ காசுக்கும் குறைவில்லாமல் கொடுக்கவேண்டும் என்ற திட்டத்தை ஏற்படுத்த வேண்டும்.



பொள்ளாச்சி வட்டத்தில் நிறைய கவனிக்கப்பட வேண்டிய திட்டங்கள் இருக்கின்றன. அந்தத் திட்டங்களை அமைச்சர்களும் பார்வையிட்டிருக்கிறார்கள். நல்ல பல திட்டங்களை உருவாக்கி இருக்கிறோம். அவைகளுக்கு நல்ல முறையில் உதவும் வகையில் காடம்பாறை திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசிடமிருந்து பெற வேண்டும். அதைப்போலவே விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக டெல்லி அரசாங்கத்திடமிருந்து 5 கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அது கூடப் போதாது, இன்னும் அதிகமாகக் கேட்க வேண்டுமென்று மீண்டும் கூறிக்கொண்டு இந்த வாய்ப்பை நல்கிய தலைவரவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Mr. Deputy Speaker Sir, I wish to participate in the present discussions and say a few words about the Budget of the Madras State Electricity Board. From the brochure that has been given to us, we find that there are many salient achievements of the present Government. Within a short period of assuming office, they have made an agreement with Mysore Government and brought down the price of power per unit to 4·66 Ps., they have come into an agreement with the Neyveli Lignite Corporation and they have also settled the long-standing dispute between the employees and management of the Electricity Board. It contains many more salient points. I congratulate the Minister and the Electricity Board for all these good things. The Board as well as the Government have given some assurance that they will take into consideration any comments made by M.L.As on the statement of receipts and expenditure of Electricity Board. The Hon. Minister has also given an assurance that our task is to carry the benefits of electric power to the maximum number of farmers, factories, homes and streets without making it a burden on the tax-payer. That is a very laudable aim. If these things are carried to the maximum extent, I think our country will make rapid progress. Modern progress of mankind depends mostly on the advancement of electricity. Especially our country being an agricultural one, the necessity to extend electricity to all villages is more important. Our Government has achieved many things while there are so many practical difficulties in the extension of electricity.

The Electricity Board is divided into three divisions, viz., commercial, construction and O.M. All these three departments are working in different sections and that is causing a lot of difficulties to the farmers. When an application is sent to the " Commercial Branch " it takes a lot of time. Afterwards it is sent to 'Construction Branch" and then to " O.M. Branch " Considering the present illiteracy and ignorance amongst our farmers in the entire State, they do not know where to send the applications. Suppose one sends the application to commercial Branch, they will not send it to the concerned department. But they will keep it for a long time.

Secondly, I wish to say one point. There are Gramasevaks in each village. When I went to a number of villages, the villagers told me that they used to give applications to Gramasevaks. These Gramasevaks also collect something, small amounts, from these farmers. These corrupt practices should be put an end to.

From many villages a number of applications have already been sent not once but many a time. But when the applicants go to ந.ப 12-00 the department and ask, the officers they say that they have not received the application. Therefore I request the Hon. Minister concerned to give instruction to the Gramasevaks not to interfere with the departments but to confine themselves to their allotted work.

With regard to materials—bulbs, wire, etc.,—there is a lot of complaint. Wherever we go, we find bad bulbs, bulbs which get easily fused. In my taluk I find that four hundred bulbs are not in good order in one month. We have to go to every village, find out and make a representation to the concerned authority. It takes a lot of time. Therefore I request that necessary steps be taken to put an end to these irregularities and to supply goods of proper quality.

Ours is an agricultural country. Though we are spending lakhs of rupees on industries, yet agriculture has not come up to the position of the industries in our State or in our country. More than fifty per cent of the people are engaged in agriculture and agriculture should be considered as a basic industry. To meet the needs of this basic industry, extension of electricity to the villages is necessary. There are so many practical difficulties in getting electricity. That is why agriculturists are suffering. Moreover the fate of agriculturists depends upon the vagaries of the monsoon. We have seen that rains have chronically failed in many parts of the State and in many parts of the country also. Failure of rain has become chronic. Wherever we go we find that there is no rain and there is failure of crop. Rainfall is very erratic. Sometimes there is rain in one street and in the next street you don't see any rain at all. Officers who see rain in one street report that there is rain and things are better. If you don't extend electricity to all the villages within a short period, our agriculturists will not be able to carry on agriculture in the method and manner in which it should be done. They cannot completely depend upon rainfall. Each agriculturist should have at least one well and it should have a pumpset with electric connection. Extension of power depends upon so many factors. There is the Land Mortgage Bank, there is the Karnam who does not give the survey accounts and there are joint pattas. Moreover the department say that they have no materials. All these things are there. I request the Government to appoint an officer to go round the villages once a year or once in six months or even a shorter period and report whether things are going on properly or not.

Our taluk contains one thousand villages. But only one hundred and twenty-five pumpsets have been given electric connection. In a number of villages wiring work has been done. In the Kundamanapalle Panchayat, wiring work was completed one and a half years back, but no further action has been taken. We have represented to the Department and yet it is in the same position. In





so many places agriculturists have installed pumpsets but there is difficulty in getting power. I request the Government to see that the backward area of Dharmapuri district and the still more backward area of Hosur taluk are given special attention and the district is brought on a par with the other districts. Electricity is taken from the Mysore State. It enters our State at Hosur. Sometime back there was a proposal to construct a power house at Hosur to supply electricity to the entire Dharmapuri district which is a backward and a newly carved out district. I do not know what happened to it. I request the Hon. Minister to pursue that proposal and see that a power house is constructed at Hosur and facilities for extension of electricity are provided at an early date so that the whole district may be brought on a par with the other districts. Thank you.

**திரு. வி. டி. அண்ணாமலை :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968-69-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினையும் 1967-68-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையினையும் நான் வரவேற்கிறேன். அந்த வாரியத்தினுடைய சேவையைப் பாராட்டுகின்றேன். அது மட்டும் அல்ல, இந்தப் பொறியாளருடைய சேவையையும் பாராட்டுகின்றேன். இந்த நேரத்திலே, மின்சாரத்தினுடைய நன்மைகளை எல்லாம் அதை எப்படி வழங்க வேண்டுமென்பதையெல்லாம் கண்டுபிடித்ததற்காக, அதைக் கண்டுபிடித்த ஃப்ராடே அவர்களுக்கும் என்னுடைய வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தவிரவும் நம்முடைய தமிழகத்திலே முதல் முதல் மின்சாரப் பொறியாளராகப் பணியாற்றிய சர் ஹென்றி ஹவார்ட் அவர்களையும்—அவர் 1927-லே பணியாற்றினார்—அவருடைய சேவையையும் பாராட்டுகின்றேன். கடைசியாக நம்முடைய மாநிலத்தில் உயர்திரு அப்பாதுரை முதலியார் அவர்கள் தலைமைப் பொறியாளராகத் தொண்டாற்றி பல்வேறு கிராமங்களுக்கெல்லாம் மின் இணைப்பைக் கொடுத்து, கிராமங்களை எல்லாம் தன்னுடைய சொந்த ஊராகப் பாவித்து "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற முறையில் தொண்டு செய்து மின்சார வாரியத்தின் தலைவராகவும் இருந்து தற்போது ஓய்வு பெற்றிருக்கிறாரே அவர்களுக்கும் நம்முடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்—தமிழக மக்களின் சார்பாக.

சென்ற ஆண்டு, தமிழகத்தின் ஒப்பற்றதலைவர் அறிஞர் பெருந்தகை அண்ணாவினுடைய அமைச்சரவை மக்களுக்கு நல்லதொண்டாற்றியிருக்கிறது. அந்தத் தொண்டின் விளைவாய் நாம் நல்லபயனை பெற்றிருக்கிறோம். 1966-ம் வருஷத்தில் 22,137 கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. 1968-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி வரை 28,269 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கபபட்டுள்ளது. அதாவது 6,132 கிராமங்களுக்கு அதிகமாக மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்லாமல், 85,055 அளவு அதிகமான பம்ப் செட்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டும் அல்லாமல், ரூ. 62½ கோடி அதிகமாக நிதி உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. இதன் காரணமாக 2,64,000 மக்கள் மின்சாரம் உபயோகப்படுத்துகிறார்கள். இவ்வளவு அதிகமான மக்களுக்கு வசதி செய்தும் கூட மக்கள் தேவை அதிகமாக இருக்கிற காரணத்தினால் அவர்களுக்கு நிறைய மின்சாரம் வழங்கப்படாமல் இருக்கிற ஒரு குறை இருக்கிறது. பொதுவாக, வட ஆற்காடு மாவட்டத்தில் மின்சாரம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் எஸ். ஈ. ஆஃபீஸ் என்று இருந்தது. இப்பொழுது அவர்களுடைய சேவை 3 மடங்காக ஆகியிருக்கிறது. இருந்தபோதிலும்கூட வேலூரிலே காட்பாடி எக்ஸ்டென்ஷனிலே இருக்கிற எஸ். ஈ. ஆஃபீஸ் ஒன்று தவிர, மற்றொன்று வட ஆற்காடு மாவட்டத்திற்கு உடனடியாகக் கட்டப்பட வேண்டும். ஏனென்றால் அவருடைய பொறுப்பு அதிகமாக இருக்கிறது. அவருக்கு வேலை அதிகமாக இருக்கிற காரணத்தால் பல

கிராமங்களுக்கு பல இணைப்புகளைக் கொடுக்க முடியாமல் இருக்கிற ஒரு அவல நிலை இருக்கிறது. தவிரவும், மின்சார வாரியத்தில் பொறியாளர் அவர்கள், ஒரு டி. ஈ. இவ்வளவு தான் செய்ய வேண்டும், ஒரு ஏ.ஈ. இவ்வளவு தான் செய்ய வேண்டுமென்று ஒவ்வொருவருக்கும் வரையறை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதாவது "சீலிங் ரேட்", இவ்வளவு இருந்தால் போதும் என்று சொல்கிறார்கள். அந்த மாதிரியான முறை இருக்கக் கூடாது. பொதுவாக, நம்முடைய வேலூரிலே எஸ்.ஈ. அவர்களை மின்சார பம்ப் செட்களுக்கு இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டால், நாங்கள் எல்லாவற்றையும் கொடுத்தாகி விட்டது, இதற்குமேல் சாமான்கள் இல்லை, மீதம் இருக்கிற மாதங்களில் நாங்கள் வெறுமனே மேற்பார்வை செய்தால் போதும் என்ற நிலை, என்று கூறுகிறார்கள். எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களுடைய ஆர்வத்தைத் தூண்டிவிட ஃப்ளோரிங் ரேட் ஒன்றுதான் இருக்க வேண்டும். இவ்வளவு அதிகமாகச் செய்ய வேண்டும் என்று வாய்ப்பு கொடுத்து, அவர்களுக்கு கட்டுப்பாடு இல்லாமல் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டிக்கொள்கிறேன்.

வட ஆற்காட்டில் போளூரில் ஒரு ரெவின்யூ யூனிட் இருக்கிறது, ஆரணியில் ஒரு ரெவின்யூ யூனிட் இருக்கிறது. இரண்டுக்கும் இடைவெளி 16 மைல். எனவே 8 மைலில் உள்ள ஒரு கிராமத்தான் அந்த ரெவின்யூ யூனிட்டுக்குச் சென்று அடைந்து, அவனுக்கு வேண்டியதைச் செய்து கொள்ளலாம். ஆனால் வந்தவாசித் தாலுகாவில் ஒரு ரெவின்யூ யூனிட் இருக்கிறது. சாலவேடு, தெள்ளார் ஆகிய பிர்க்காக்களிலுள்ள மக்கள் அந்த ரெவின்யூ யூனிட்டிற்குப் போக வேண்டுமென்றால் சுமார் 45 மைல் தூரத்தில் அது இருக்கிறது. வட ஆற்காட்டில் ஒருவனுக்குத் தன்னுடைய கணக்கையோ அல்லது வேறு ஏதாவது தகராறையோ தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றால் 8 மைல் தூரத்திலுள்ள ரெவின்யூ யூனிட்டிற்குப் போய்த் தீர்த்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆனால் வந்தவாசித் தாலுகாவில் சுமார் 45 மைல் தூரத்திலுள்ள ரெவின்யூ யூனிட்டிற்குப் போய்த்தான் தன்னுடைய தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. இந்த அவல நிலை தீர்க்கப்படவேண்டும் புதியதாக வந்தவாசியில் ஒரு ரெவின்யூ யூனிட் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியம் இதற்காக ஏற்படுத்தியிருக்கிற கண்டிஷன்கள் அங்கே நிறைவேறியிருக்கிற காரணத்தினால்—16,000 சர்வீஸ்கள் இருக்க வேண்டும், வந்தவாசியில் 18,000 சர்வீஸ்கள் இருக்கின்றன—வந்தவாசியில் ஒரு புதிய ரெவின்யூ யூனிட் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, சூபர்வைசர்கள் சேவை மிகவும் முக்கியமானது. அவர்கள் சைக்கிள்களில் சென்றால், மின்சாரக் கோளாறுகள் இருக்கின்ற இடத்திற்குத் துரிதமாகப் போய்ச் சேருவதற்கு முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, சூபர்வைசர்களுக்கு மோட்டார் பைக் தேவைப்படுகிறது. அவர்களுக்கு மோட்டார் பைக் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்தால், அவர்கள் துரிதமாகச் சென்று, அங்கே இருக்கிற விவசாயிகளுக்குத் தேவைப்படுகிற பொழுது அவர்களுடைய சேவை கிட்டும்படியான நிலை ஏற்படும் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகள் பம்பு செட்டுகளுக்கு மீட்டர் வைத்திருக்கிறார்கள். இந்த மின்சார மீட்டர்களில் சில இடங்களில் தகராறுகள் இருக்கின்றன. கிராமத்திலுள்ள ஒன்றுமே தெரியாத விவசாயி ஏழை விவசாயி, நகரத்திலுள்ள மக்களுக்கு அரிசி பயிரிட்டுக் கொடுக்கிற விவசாயி இம்சைப்படுகிறான். "மீட்டர் பெட்டியில் அதைச் செய்து விட்டாய், இதைச் செய்துவிட்டாய், உன் பேரில் கேஸ் போடப்போகிறேன்" என்றெல்லாம் கூறி விவசாயிக்கு இம்சை கொடுக்கிறார்கள். இதனால் கிராமத்திலுள்ள ஏழை, எளிய மக்களுக்கு மிகவும் தொல்லையாக இருக்கிறது. எனவே, மீட்டர் ரீடிங் எடுக்கின்ற அதிகாரிகள் மீட்டரைப் பூட்டி, அவர்களே சாவியை வைத்துக் கொள்ளலாம். விவசாயிக்கு மீட்டர் பெட்டியின் சாவி தேவையில்லை.





அவன் மீட்டர் ரீடிங் பார்க்கப்போவதில்லை. ஆகவே, மீட்டர் பெட்டியைப் பூட்டி சாவி மீட்டர் ரீடிங் எடுக்கிறவர்கள் கையிலேயே இருக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றைக் கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். கிராமத்திலுள்ள விவசாயி நிலத்தை வாங்குகிறான், கிணறு எடுக்கிறான், மீட்டர் போடுகிறான், மீட்டர் போட்டு மின்சாரத்தின் உதவியால் தண்ணீர் இறைத்து நெல் பயிரிடுகிறான். மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று பலர் கூறினார்கள். குறைக்கக்கூட வேண்டியதில்லை. பூராகவும் நம்முடைய சர்க்கார் மான்யமாகக் கொடுக்க வேண்டும். நெல் பயிரிடுகிற விவசாயிக்கு அவனுடைய வயலில் கொண்டு போய் நீரைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்தச் சர்க்காருக்கு இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நெல் பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை இனாமாகக் கொடுக்கவேண்டும். மின்சார வாரியம் மின்சாரக் கட்டணத்தை முழுவதும் தள்ளிக் கொடுக்க முடியாது. ஆகவே, தமிழக சர்க்கார் நம்முடைய மின்சார வாரியத்திற்கு இந்தக் கட்டணத்தை முழுவதும் மான்யமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற தொழில்களுக்கு கொடுப்பதுபோல, விவசாயத்திற்குப் பயன்படுத்துகிற மின்சாரக் கட்டணத்தையும் இன்னும் 2 பைஸா அல்லது 3 பைஸா குறைத்துக் கொடுக்க வேண்டும் என்று நம்முடைய மின்சார வாரியத்தின் பொறுப்பாளரையும், மின்சார என்சினியர்களையும் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த துணை சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இப்பொழுது விவாதத்தில் இருக்கக்கூடிய தமிழக மின்சார போர்டின் வரவு-செலவு சம்பந்தமாக என்னுடைய ஆலோசனைகளைச் சொல்லிக்கொள்வதற்கு விரும்புகிறேன். தமிழக அரசு பொறுப்பேற்றபிறகு, நிர்வாகத்தை ஒழுங்கு படுத்தி, நல்ல வேலை முறையைக் கையாண்டு கொண்டுவருகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். இதற்கு முன்னால் பழி வாங்கப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. அதைப்போலவே, தொழிற்சங்கத்தை அரசாங்கம் அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் இது வரையிலும் அங்கீகாரம் கோரி வந்தார்கள். இன்றைய தினம் தொழிற்சங்கத்தை அங்கீகரித்து, தொழிலாளர்களுக்கு மின்சார ஆலோசனைக் குழுவில் பிரதிநிதித்துவம் அளித்து, அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கக்கூடிய இந்த அரசைத் தொழிலாளர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் தான் இருக்க வேண்டும் என்று பேசப்பட்டு வருகிறது. நம்முடைய அமைச்சர் அவர்களும் அவ்வாறு தான் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருப்பது தான் நல்ல வழி முறையாக இருக்க முடியும். பல்வேறு சங்கங்கள் இருப்பதன் காரணமாக, தொழில்களில் குழப்பம் ஏற்பட்டு, தொழில்களை முறையாக நடத்தமுடியாத நிலை இருந்துவருவதை மாற்றியாக வேண்டும். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் தான் இருக்க வேண்டும் என்ற ஒரு திட்டவட்டமான கொள்கையை இந்த அரசு கடைபிடித்தாகவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பெரிய தொழில்களுக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுத்து வருகிறார்கள். இதன் மூலமாகப் பெரிய முதலாளிகள் சலுகைகளைப் பெறுகிறார்கள். இந்தக் குறைபாட்டை அரசாங்கம் போக்கியாக வேண்டும். தொழில்களுக்குக் கொடுக்கக்கூடிய மின்சாரத்திற்கு அதிகக் கட்டணம் வசூல் பண்ணுவதன் மூலம் மின்சார போர்டுக்குத் தேவையான வருவாய் கிடைப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும். விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தாகவேண்டிய ஒரு நிலையை ஏற்படுத்தியாக வேண்டும். இன்றைய தினம் 300 கோடி ரூபாய் மூலதனம் போட்டு வரவு

[திரு. ஆ. கு. சுப்பையா] [1968 ஆகஸ்ட் 30

செலவு செய்யக்கூடிய ஒரு ஸ்தாபனத்தில் 50 கோடி ரூபாய் வருமானம்
வருகிறது என்று சொன்னால், இதற்குக் காரணம் என்னவென்று ஆராய்
வது உதவியாக இருக்க முடியும் என்று நான் சொல்வதற்கு விரும்பு
கிறேன். விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய ஆலோசனை அர
சாங்கத்தில் இருந்துவருகிறது. தஞ்சை மாவட்டத்தில் 14 லட்சம் எக்கர்
நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அந்த மாவட்டத்தில்
தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் சமயங்களில் மின்சார விஸ்தரிப்பு செய்து
கொடுப்போமானால், மின்சாரத்தைக் கொண்டு கிணறுகளிலுள்ள தண்
ணீரை இறைத்து விவசாயம் செய்வதற்கு உதவியாக இருக்க முடியும்.
அந்த முறையில் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய நிலையில்
துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயத்திற்கு
துரிதமாக மின்சாரம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திட்டக் கமிஷனின் அங்கீகாரத்தைக் கோரி, ஐந்து திட்டங்கள் ன்
னும் காத்துக்கொண்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களை நமது நாட்டிற்கு
அவசியம் கொண்டுவந்தாகவேண்டும் என்று திட்டக் கமிஷனிடம் மாத்திர
மல்லாமல், மத்திய அரசினிடமும் வற்புறுத்துவதன் மூலமாக தமிழகத்
தில் ஏற்பட்டிருக்கக் கூடிய மின்சாரப் பற்றாக்குறையை போக்கிக்கொள்
வதற்கு உதவியாக இருக்க முடியும். அந்த அளவில் நமது தமிழக
அரசு மத்திய அரசினிடம் வலுவாக, அழுத்தமாகக் கோரி, அந்தத்
திட்டங்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் நடவடிக்கை எடுக்கவேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புற மின்சார விஸ்தரிப்புக்காக 5 கோடி ரூபாய் மத்திய அரசின்
வேளாண்மைத் துறையைக் கேட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கிராமப்
புற மின்சார விஸ்தரிப்பு மிக அவசியம் என்பதை இந்த அரசு உணர்ந்
திருப்பதன் காரணமாகத்தான் இன்றைய தினம் ரூ. 5 கோடி கோரிக்கை
யாக வைத்திருக்கிறார்கள். இந்த ஐந்து கோடி ரூபாயையும் நிச்சயமாக
வாங்குவதற்கு உரிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.
கிராமப்புறங்களில் மின்சார விஸ்தரிப்புக் கொடுக்கும்போது, எல்லா
ஏற்பாடுகளையும் செய்தபிறகுதான் மின்சாரம் கொண்டு வரப்படுகிறது.
ஆனால், அரிஜனத் தெருக்களை ஒதுக்கி விடுகிறார்கள். இன்றைய நிலை
யிலும் அதேதான் நடந்து கொண்டு இருக்கிறது. அரிஜனத் தெருக்களுக்
கும் சேர்த்துத் தான் திட்டம் போடப்படுகிறது. இப்பொழுது புதிதாகப்
பொறுப்பேற்று இருக்கும் சேர்மன் அவர்களுக்கும் இது பற்றி ஒரு கடிதம்
எழுதியிருக்கிறேன். இந்தப் போக்கு நீடிக்காமல், மின்சார போர்டார்,
தக்க நடவடிக்கை எடுத்து, நிச்சயமாக அதை அனுமதிக்கக் கூடாது
என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மின்சார விஸ்தரிப்பு என்றால் எல்லாத்
தெருக்களுக்கும், அரிசன் தெருக்களுக்கும் சேர்த்துத் தான் செய்ய
வேண்டும். அரிசன், அரிசன் இல்லாதவர் என்று பாகுபாடு இருக்கக்கூடாது.
அந்த வகையில் நம்முடைய அரசாங்கமும், மின்சார போர்டும் மாற்றத்தைச்
செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன். அவ்வாறு சொல்லும்போது, இன்றையதினம், தஞ்சை
மாவட்டத்தில், மிகுந்த அக்கறை செலுத்துவதற்கு அரசாங்கம் முன்வர
வேண்டும். அப்படிச் செய்தால்தான், விவசாயத்தில் நல்ல முன்னேற்றத்
தைக் காண முடியும். அதிகத் தண்ணீர் ஒரு காலத்தில் இருக்கிறது.
மற்றக் காலங்களில் மோசமாக இருக்கிறது. விவசாயம் செய்ய முடிய
வில்லை. நாற்றுப் பாவி, அதன் பிறகு நடுவதற்குக் கூட ஏற்பாடுகள்
செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. பல லட்சக் கணக்கான எக்கர் நிலங்
கள் மின் இறவைப் பாசனத்தின் மூலம் விவசாயத்திற்குக் கொண்டுவர
முடியும். மின் இறவை செய்யக் கூடிய விளை நிலங்களை விவசாயத்திற்குக்
கொண்டுவர திட்டங்கள் போட வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் இப்படிப்
பட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.
அந்த நிலையை ஆராய்ந்து விவசாயத்திற்குப் பாதகம் வராத நிலையில்
இந்த "லிஃப்ட் இர்ரிகேஷன்" திட்டத்தை அரசாங்கம் கொண்டு வர
வேண்டும், அதன் மூலமாக பல லட்சக்கணக்கான எக்கர்களை விவசாயத்
திற்குக் கொண்டு வந்து, பாசன வசதி செய்து கொடுக்க முடியும்.



1968 ஆகஸ்ட் 30] [திரு. ஆ. கு. சுப்பையா]

இன்றைக்குப் பல கிராமங்களில் வடிகால் வசதி இல்லாமல், தண்ணீர்
தேங்கிக் கிடக்கிறது. அந்தத் தண்ணீரை இறைக்க மின்சாரத்தை உபயோ
கிக்கலாம் என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். அதைச் செய்தால்,
பல்லாயிரக்கணக்கான எக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய வசதி ஏற்படும்.
அதிகமான உற்பத்தியை அடைய தஞ்சையைப் பயன் படுத்த முடியும்.
அந்த வகையில் அதிக வேகமாக வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த அரசாங்கத்திற்குத் தஞ்சை மக்கள் சார்பில் எங்கள்
நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தனியார் நிறுவனங்களை அர
சாங்கமே எடுத்துக் கொண்டு, மாற்றியமைத்ததற்காக நாங்கள் நன்றி
செலுத்துகிறோம். இன்னும் சில இருக்கின்றன. அவற்றையும் அரசாங்க
கமே எடுத்துக் கொண்டு விடவேண்டும்.

நல்ல திறமையான இயக்குநர்களைக் கொண்டு இந்த போர்டு வேலை
செய்து வருகிறது. இன்னும் அது துரிதமாக வேலை செய்ய வேண்டும்.
கோவை மாவட்டத்தில், பவானி தாலுகாவில், அம்மாப்பேட்டை ஏரியா
வில் மூன்று கிராமங்களில் 200 கிணறுகள் தோண்டி, தண்ணீர் இறைக்க
வேண்டிய சாதனங்களெல்லாம் வாங்கியாகிவிட்டது. இன்னும், மின்சாரத்
தொடர்பு கொடுக்கப்படவில்லை. அது பற்றி ஒரு மகஜர் கொடுத்திருக்
கிறார்கள். சாத்தியமான இடங்களுக்கு மின்சார விஸ்தரிப்புச் செய்து
கொடுத்து, பாசனத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

*திரு. இ. ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1968-69-ம்
ஆண்டுக்கான மின்சார பட்ஜெட்டை ஆதரித்து பேச முற்படுகிறேன். பரம்பிக்
குளம்-ஆளியார் திட்டமானது, என்னுடைய தொகுதிக்குள்ளே அமைந்
திருக்கிறது. இந்த மானியத்தின்மீது, இதை ஆதரித்துப் பேசும்போது
அந்தப் பகுதியில் இருக்கின்ற, அந்த இலாகாவில் பணிபுரியும் தொழி
லாளர்களுடைய நிலைமைகளை, இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன். அதற்கு வேண்டிய பரிகாரம் தேடிக் கொள்ள இதுவே
சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். தமிழகத்தில் பல பகுதி
களில், பல ஆண்டுகளுக்கு முன்னிருந்து தொடங்கப்பட்ட மின்சார வேலைத்
திட்டங்கள் வேலையில் அந்தப் பகுதியில் பணிபுரியும் தொழிலாளர்கள்,
திட்டம் முடிவுறும் போது வேலையிலிருந்து நீக்கப்படும் நிலையில் இருக்
கிறார்கள். அதே போல பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திலும், வேலை
யிலிருந்து நீக்கப்பட இருக்கிறார்கள். ஒரு திட்டம் முடியும் போது, அதில்
வேலை செய்த தொழிலாளிகள் வேலையிலிருந்து நீக்கப்படுவது ஒரு
புறம் நியாயம் என்றாலும், பல ஆண்டுகளாக அந்தத் தொழிலில் ஈடு
பட்டிருந்தவர்கள், திட்டம் முடிவு பெறும்போது, அவர்களுடைய நிலையைப்
பற்றிக் கொஞ்சம் சிந்திக்கக் கடமைபட்டிருக்கிறோம். இன்றைய தினம்,
பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில், சோலையாறு மின் நிலயம் 1, 2-ம்
நவ மலை மின் நிலையம், சர்க்கார் பதி மின் நிலையம் இவையெல்லாம்
உருவாக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு கடம்பாறை, நீராறு திட்டம்
நிறைவேறுமேயானால், இந்தத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக்
கொடுக்க மிகச்சாதகமாக இருக்கும் என்று கருதுகிறேன். நீராறு திட்ட
மானது கேரள சர்க்காருக்கும், தமிழக அரசுக்கும் உடன்பாடு ஏற்பட்டால்
நிறைவேறும் என்று தெரிகிறது. இந்தத் திட்டத்தைப் பேரறிஞர் அண்ணா
அவர்கள் துரிதமாக பேச்சுவார்த்தைகளை நடத்தி வெற்றி கண்டு செய
லாற்றினால், நிச்சயமாக இந்தத் தொழிலாளிகளுடைய நிலை ஓரளவிற்கு
சரிப்படுத்தப்படும். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். அதே
நேரத்தில் மின்சாரத்தை விரிவுபடுத்தவும் ஏதுவாக இருக்கும். அதே
நேரத்தில் இன்றைய தினம் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற,
"ஒர்க் சார்ஜ்ட்" என்ற பெயரில் மாநில அளவில் சுமார் 1,800 பேர்கள்
இருக்கிறார்கள். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் 410 பேர்கள் இருக்
கின்றார்கள். தற்போது அந்த திட்டம் முடியும் தருவாயில் இருக்கின்றது
திட்டப்பகுதி வேலைகள் முடிந்தாலும் கூட நிரந்தரத் தொழிலாளர்கள் 300

பேர்கள் வேலையில் இருக்க முடியும். ஒர்க் சார்ஜ்ட் தொழிலாளர்கள் சங்கம் தங்களை சர்வீஸ் அடிப்படையில் நிரந்தரமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசு ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நீர் மின் திட்டத்தில் ஓ.எஸ்.எஸ். நிரந்தர வேலைக்குப் புதிய ஆட்களை எடுக்கிறார்கள். புதிய ஆட்களை எடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், பல ஆண்டுகாலமாக திட்டப் பகுதியில் வேலை செய்து வந்திருக்கும் ஒர்க் சார்ஜ்ட் தொழிலாளர்களை அவரவர் தகுதிகளைப் பார்த்து அவர்களுடைய சர்வீசையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, அந்த அடிப்படையில் நிரந்தர வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், அதன் பிறகு தேவையிருந்தால் புதிய ஆட்களை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் வேலை முடிய இன்னும் பல மாதங்கள் இருக்கிறது. ஆனால் இப்பொழுதே ஒர்க் சார்ஜ்ட் பணியாளர்களை வேலை நீக்கம் செய்ய அதிகாரிகள் சொல்லுவதாகத் தெரிகிறது. எனவேதான், கடம்பாறை, நீராறு திட்டத்தை விரைவாக நிறை
12-30 பிற்பகல் வேற்றினால், வேலை இழக்கக் கூடியவர்களுக்கு அந்தப் பகுதியில் வேலை வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்வேன். அதே போல, சி. எல். ஆர்., என்.எம்.ஆர். தொழிலாளர்களுடைய நிலைகள், அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படும் போது மோசமான நிலைக்குப் போகிறார்கள்.

தமிழகத்தில் இருக்கின்ற திட்ட வேலைகளில் நமது அரசு கவனம் செலுத்தி தீவிரப் படுத்த் வேண்டும். அப்படிச் செய்தால் தொழிலாளர்களுடைய பிரச்சினைக்கு வழியில்லாமல் போய்விடும் என்பதைச் சொல்லி கொள்கிறேன். இந்தப் பிரச்னையைச் செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான வால்பாறை பகுதியில் தேயிலை உற்பத்தி அதிகம். அங்கே பெரிய பெரிய தேயிலைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. பல தொழிற்சாலைகளில் அரசாங்கத்தின் உத்தரவு இல்லாமல் மெஷினரிகளைப் பொருத்தி யிருக்கிறார்கள். பெரிய கருமலை பகுதியில் அக்காமலை என்ற தோட்ட முதலாளிகள் அரசாங்கத்தின் உத்தரவு இல்லாமல் மெஷினரிகளைப் பொருத்தி மின்சாரம் எடுத்துக் கொள்கிறார்கள். இதனால் மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. மின்சார வாரிய அதிகாரிகள் அதைக் கண்டுபிடித்தாலும் கடுமையான தண்டனை அளிப்பதில்லை. ஆகவே, இப்படி அரசாங்கத்தின் உத்தரவு இல்லாமல் மெஷினரிகளைப் பொருத்தி மின்சாரம் எடுப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அடுத்தாற்போல், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள தெரு விளக்குகளில் சில எரிகின்றன, சில எரிவதில்லை. எரியாத லைட்களுக்கும் மின்சாரம் சப்ளையாகி மின்சாரம் நஷ்டமாகிறது. மேலும், இந்த லைட்களில் போடும் பல்புகள் தரமானதாக இருப்பதில்லை. அடிக்கடி கெட்டுவிடுவதால் பாதி லைட்கள் எரியாமல் இருக்கின்றன. ஆகவே, தரமான பல்புகளைப் போட்டு ஒவ்வொரு லைட்டுக்கும் மீட்டர்களைப் பொருத்த வேண்டும். அப்போது மின்சாரம் வீணாகாமல் இருக்கும். எரியாத லைட்களுக்கும் சேர்த்துத்தான் பஞ்சாயத்துகள் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. அதனால் மின்சாரமும் நஷ்டம், பஞ்சாயத்துகளின் பணமும் நஷ்டமாகிறது. ஆகவே, அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விஷயத்தில் உடனே கவனம் செலுத்த வேண்டும். மீட்டர் பொருத்தி கட்டணத்தை வசூலிக்க வேண்டும். இதனால் மின்சார வாரியத்திற்கும் ஆதாயம், பஞ்சாயத்திற்கும் ஆதாயம் ஏற்படும். இதில் எதுவும் சிரமம் இருக்காது என்று கூறிக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்காக தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



**திரு. பி. வெங்கடசாமி** தெலுங்கில் பேச ஆரம்பித்தார்.

**திரு ஜே. ஜேம்ஸ் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஃ ஆர்டர். நண்பர் அவர்கள் உரையாற்றுவதை இங்கு ரிபோர்ட்டர்கள் யாரும் குறிப்பு எழுதுவதாகத் தெரியவில்லை. அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேசுகிற உறுப்பினர், தன்னுடைய பேச்சை எழுதிக் கொடுத்துவிடுவார்.

**திரு. பி. வெங்கடசாமி :** தொடர்ந்து தெலுங்கில் பேசினார்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இங்கே மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது பேசுகிற வாய்ப்பினைத் தந்தமைக்கு முதற்கண் தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஒண்ணரை ஆண்டுக் காலத்தில் நமது தமிழக சர்க்கார் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு 2 லட்சத்து 64 ஆயிரம் சொச்சம் பம்புசெட்டுகளுக்கு மின்விசை வழங்க முன்வந்திருப்பதும் ஆறாயிரம் மக்களுக்கு மின்விசை வழங்க முன்வந்திருப்பதும் வரவேற்கத் தக்கதாகும். மக்கள் இதனைப் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். எனது வட்டார மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இன்னும் செய்யப்பட வேண்டிய ஓரிரு காரியங்களை என்னுடைய வட்டார மக்கள் சார்பில் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனது செஞ்சி வட்டம் மிகவும் பின் தங்கிய பகுதி. கடந்த இருபதாண்டு ஆட்சிக் காலத்தில் எனது வட்டம் தென்னாற்காடு மாவட்டத்திலேயே மிகவும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இப்போது தான் சில பல விவசாயிகளுக்கு மின்விசை அளிக்கப்படுகிறது. குறிப்பாக 1959, 1960 1961-ஆக இந்த மூன்று ஆண்டுகளில் சர்வே செய்து சில கிராமங்களை இணைக்கும் வண்ணம் மின்விசை தர நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆயினும் இன்றுவரை அந்த கிராமங்களுக்கு மின்விசை அளிக்கப்படவில்லை. தேவதானப்பட்டி, பாடி கிராமம் போன்ற 10 கிராமங்களை ஒன்றாக இணைத்து இந்தப் பத்து கிராமங்களுக்கும் ஒரே ஒரு டிரான்ஸ்பார்மர் வைத்து மின்சாரம் வழங்கப்பட சர்வே செய்யப்பட்ட திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதிகாரிகளை அணுகிக் கேட்டால் கம்பம் இல்லை, ஒயர் இல்லை, என்பது போன்ற பல காரணங்களைச் சொல்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய பகுதியாகவும், விவசாயிகள் நிறைந்த பகுதியாகவும் இருப்பதனால் உடனடியாக நமது தமிழக அரசு அந்த கிராமங்களுக்கு எல்லாம் மின்விசை அளிக்கத்தக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. என்னுடைய தொகுதியில் உள்ள பஞ்சாயத்து கிராமங்களுக்கு தெரு விளக்குகளுக்கு சரியானபடி பல்புகள் வழங்குவதில்லை. கொடுக்கிற பல்புகள் இரண்டு மூன்று நாள் எரிகின்றன. உடனே ப்யூஸ் ஆகிவிடுகிறது. திரும்பப் போய்க் கேட்டால் பல்பு ஸ்டாக் கைவசம் இல்லை என்று கைவிரித்து விடுகிறார்கள். இதை வைத்துக் கொண்டே காங்கிரஸ்காரர்கள், "பார்த்தீர்களா நாங்கள் இருந்தபோது தெருவிளக்குகள் எல்லாம் எரிந்தன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தெருவிளக்குகளை அணைத்து விட்டார்கள்" என்று அவதூறு செய்கிறார்கள். இதற்கு இடம் இல்லாது தனிப்பட்ட கம்பெனிகளிடம் இருந்தாவது நல்ல பல்புகளை வாங்கி அளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல. தெருவிளக்குகளுக்கு மீட்டர் கிடையாது. விளக்கு ஒன்றுக்கு இரண்டரை ரூபாய், மூன்று ரூபாய் என்று வாங்குகிறார்கள். எரிகிற விளக்கு, எரியாத விளக்கு எல்லாவற்றுக்கும் சேர்த்து வாங்குகிறார்கள். இதுபோல் இன்றி மீட்டர் பொருத்தி எரிகிற அளவுக்கு கட்டணம் வாங்க ஏற்பாடு செய்வது நலமாக இருக்கும். என்னுடைய பஞ்சாயத்திலும் இந்தக் குறைபாடுதான்.

அதுமட்டுமல்ல. என்னுடைய தொகுதியில் சரியான மழையில்லை. வானம் பார்த்த வறண்ட பகுதி. அங்குள்ள விவசாயிகள் மழையில்லாத காரணத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கிற கடனை ஓராண்டு காலத்திற்காவது ஒத்தி வைக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. என்னுடைய பகுதியில் தீ விபத்துக்கள் அடிக்கடி நடைபெறுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மின்சார வாரியத்தைப் பற்றி மட்டுமே பேச வேண்டும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தில்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எல்லாவற்றையும் சொல்ல முடியாது. மின்சார வாரியத்தை மட்டும் பற்றிப் பேசுங்கள்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** முன்பு டிவிஷனல் ஆபிஸ் செஞ்சி வட்டத்திற்கு விழுப்புரத்தில் இருந்தது. இப்போது விருத்தாசலத்திற்கு மாற்றி இருக்கிறார்கள். இதனால் என் வட்ட மக்கள் போய் வருவது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே முன்போல விழுப்புரத்திலேயே ஏற்பாடு செய்ய வேண்டுமாறு கேட்டுக் கொண்டு, பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு என்று நினைக்கிறேன், மதிப்பிற்குரிய ராமையா அவர்கள் அளித்த அறிக்கைக்கும், நம்முடைய அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற அறிக்கைக்கும் நான் அதிகப்படியான வேறுபாட்டைக் காணவில்லை. அவர்கள் கனம் அமைச்சர் என்று குறிப்பிட்டிருந்தார்கள். இவர்கள் மாண்புமிகு அமைச்சர் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். தமிழக அரசு என்று ......

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அறிக்கைவிட்டவர் திரு. ராமையா அல்ல, திரு. வெங்கட்டராமன் அவர்கள்.

**திரு. ஆர். கருப்பையா :** தமிழக அரசு என்று வெளியே போட்டுவிட்டு உள்ளே கிராபிலே ஆங்கிலத்தைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். அதுவும் தமிழிலேயே அமைக்கப்பட்டு இருந்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எட்டு நிமிடங்கள் தான் கொடுத்திருக்கிறோம். அதிலே இலாக்கா, தொகுதிபற்றிப் பேசுங்கள், இதுவெல்லாம் வேண்டாம்.

**திரு. ஆர். கருப்பையா :** அரியலூர் பகுதியிலே மின்சாரம் பெறுவதற்குப் பல கடுமையான தடைகள் இருக்கின்றன. அங்கேயுள்ள மின் அழுத்த மாற்றி சரியாக இல்லை. அந்த மாற்றியை மாற்றினால் அங்கேயுள்ள மக்களுக்கு மின்சாரம் கொடுத்து உதவி செய்யக் கூடிய வாய்ப்புகள் இருக்கும். அங்கே மின்சாரம் கொடுக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தாலும் கூட அங்கேயுள்ள நிறுவனத்தினர் மின்சார இணைப்புக் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே நல்ல முறையிலே மின்சாரம் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் அந்த மின் அழுத்த மாற்றியை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோட்டக் கோயில், தாமரைக்குளம் போன்ற கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகச் சொல்லி வந்து எல்லா ஏற்பாடுகளையும் செய்தும்கூட இன்னும் வேலைகளைத் தொடங்கவில்லை, ஆகவே அதையும் விரைவிலே செய்து கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.





மின்சார டிவிஷன்களைப் பொறுத்த வரையிலே செஞ்சியையும், விருத்தாசலத்தையும் இணைத்து ஒரு டிவிஷனாகச் செய்கிறார்கள். அதிலே திருமானூர்ப் பகுதிகளையும் இணைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் தங்களுடைய குறைகளைப் பற்றி அதிகாரிகளைப் பார்த்துச் சொல்ல முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே திருமானூரிலே உள்ள சில பகுதிகளை திருச்சிப் பகுதியோடு சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் தான் அவர்கள் அவ்வப்போது அதிகாரிகளைச் சந்தித்து, அவர்களிடம் சொல்லி வேண்டியவற்றைச் செய்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதால் இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைத் தேசிய மயமாக்குகின்ற கொள்கையின்படி அரியலூர் பகுதியிலே உள்ள சௌத் மெட்ராஸ் கார்ப்பரேஷனையும் அந்த நிறுவனம் பரவலாக மின்சாரத்தைக் கொடுக்க முடியாமல் இருக்கிற காரணத்தால் அரசாங்கமும் இப்பொழுது ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிற காரணத்தாலும் அரசாங்கம் அந்த நிறுவனத்தை உடனடியாக எடுத்துக் கொண்டால் தான் முடியும், இல்லாவிட்டால் அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகிவிடும். மின்சார விஸ்தரிப்பைப்பற்றி அந்த நிறுவனத்தினரிடம் கேட்டால் அவர்கள் இக்கட்டான நிலைமையில் இருப்பதால் விஸ்தரிக்கவில்லை என்று சொல்கிறார்கள், அரசாங்கமும் செய்ய முடியவில்லை, ஆகவே திரிசங்கு சொர்க்கம் போல் நிலைமை இருக்கிறது. ஆகவே சௌத் மெட்ராஸ் கார்ப்பரேஷனை தேசிய மயமாக்கிவிடுவதன் மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்ற தெரு விளக்குகளைப்பற்றி யெல்லாம் குறிப்பிட்டார்கள். ஒரு போஸ்டில் லைட் எரிகிறது என்றால் 2 ரூபாய் $2\frac{1}{4}$ ரூபாய் வசூலிக்கப்படுகிறது. ஆனால் லைட் எரிவதற்கு அவ்வளவு கரண்ட் தேவையில்லை. இதனால் பல பஞ்சாயத்துக்கள் கட்டணம் கட்ட முடியாமல் தவிக்கின்றன. இதன் காரணமாக ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் தனித்தனியாக மீட்டர் போட்டு எவ்வளவு கரண்ட் ஆகிறதோ அதற்குத் தகுந்தபடி வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார ஊழியர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் மற்றவை யெல்லாம் போதுமான அளவுக்கு கேரளாவிலே அதிகமாக இருந்தாலும், நம்முடைய மாநிலத்திலே குறைவாக இருக்கிறது. அதன் காரணமாக அங்கேயுள்ளவர்கள் விறுவிறுப்பாகவும் சுறுசுறுப்பாகவும் வேலை செய்யவில்லை என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அந்த அளவுக்கு போதுமான அளவில் அதிகமாக சம்பளத்தையும் மற்றவைகளையும் மாற்றிக் கொடுக்க வேண்டும்.

என்னுடைய பகுதியான திருமானூர் பஞ்சாயத்து யூனியனிலே அதிகமான வடிமுனைக் குழாய்கள் இருக்கின்றன. அவை நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டு வருகின்றன. ஆனால் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. வாய்க்காலில் தண்ணீர் இல்லை யென்றால், புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் இல்லை யென்றால் தடைபடுகிறது. வடிமுனைக் குழாய்களுக்குப் போதுமான கரண்ட் இல்லாத காரணத்தால் அவை இருந்தும் பயனளிக்காமல் இருக்கின்றன. ஆகவே இந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு வசதி ஏற்படக் கூடிய முறையிலே வடிமுனைக் குழாய்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டும். எலாக்குறிச்சி, தாமரைப் பள்ளி, மாத்தூர் போன்ற பகுதிகளிலும் அவற்றை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரியலூர் பகுதியிலே சிறப்பாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கேயுள்ள சௌத் மெட்ராஸ் கார்ப்பரேஷன் தலைவர் வேண்டியவராக இருந்தாலும். வேண்டாதவராக இருந்தாலும், வேண்டியவர் என்று சொல்லுகிறார்கள், உடனடியாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டு தமிழகத்தில் மின்சார வசதிகளை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர் :** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது என்னைப் பேச அழைத்து வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டத்திலே ஓடுகின்ற ஒகேனக்கல் நதியில் ஒகேனக்கல் ஸ்கீம் என்று பல காலமாக இருந்து வருகிறது. அங்கே ஒரு அணை கட்டி மின்சாரம் எடுத்தால் தர்மபுரி மாவட்டத்திற்கும் பல பகுதிகளில் உள்ள இடங்களுக்கும் மின்சாரம் கொடுக்க எதுவாக இருக்கும்.

தர்மபுரியில் ஒரு சப் ஸ்டேஷனை அமைத்து அந்தப் பகுதியிலே உள்ள ஏழை எளிய விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசாங்கம் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று நில அடமான பாங்குகள் மூலமாக பம்பு செட்டுகளுக்கு நிறையக் கடன்கள் வழங்குகின்றது. அதன் வாயிலாக விவசாயிகள் பம்பு செட்டுகள் போட்டு கனெக்ஷன் கோருகிறார்கள். தமிழக அரசாங்கம் $1\frac{1}{2}$ வருட காலத்தில் பல மின்சார பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுத்திருக்கிறது. எங்கள் பகுதியிலே ரொம்பவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிற காரணத்தினாலே விவசாயிகள் அவரவர்கள் நிலங்களிலே பம்புசெட்டுகள் அமைத்து விவசாய சேவையைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு நல்ல முறையிலே கனெக்ஷன் கொடுத்து விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரிப் பகுதியிலே பல டிரான்ஸ்பார்மர்களில் லோட் இல்லாத காரணத்தாலே விவசாயிகளுக்கு கனெக்ஷன் கொடுக்க முடியாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட டிரான்ஸ்பார்மர்களில் லோடு கொடுத்து அவர்களுக்கு அதிகப்படியான கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி பகுதியிலும், அரூர் பகுதியிலும் ரொம்பவும் பிற்பட்ட பகுதிகள் இருப்பதால், பஸ்வாபுரம், சிவநல்லி போன்ற பஞ்சாயத்துக்களில் உள்ள விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுத்து விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொரப்பூர், பஞ்சாயத்து யூனியனிலே உருபரள்ளி பஞ்சாயத்து இருக்கிறது. அங்கே பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டும் மின்சாரம் வழங்கப்படவில்லை. ஆகவே அந்தப் பஞ்சாயத்தில் உள்ள விவசாயிகளுக்கு கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி யூனியனிலே லக்கிம்படி பஞ்சாயத்திலே 2, 3 வருடங்களாக கனெக்ஷன் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப் படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கும் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி பஞ்சாயத்து யூனியனில் நடுஹல்லி என்ற கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திலுள்ள பம்ப் செட்டுகளுக்கு மின்சார கனெக்ஷன் கொடுத்து விவசாயிகளை ஊக்குவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பி.ப 1-00 வீடுகளுக்கும் மற்றவற்றுக்கும் தருமபுரியில் மின்சார கனெக்ஷன் கொடுத்து பல வருஷங்கள் ஆகின்றன. டவுனில் எரியும் லைட்டுகள் எல்லாம் மழை வந்தால், இடி இடித்தால் அடிக்கடி நெருப்பு பற்றி எரிந்துவிடுகிறது. அங்கே இருக்கிற ஒயர்களை எடுத்துவிட்டு புதிய ஒயர்களைப் போட வேண்டும். அவ்வாறு மாற்றுவதன் மூலம்தான் விபத்துக்களைத் தடுக்க முடியும்.

தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்ற காரணத்தால் கடந்த $1\frac{1}{2}$ வருஷ காலமாக தமிழக சர்க்கார் அந்த மாவட்டத்திற்காகப் பல நன்மைகளைச் செய்து வருகிறது. 'இன்னும் எங்களுடைய மாவட்டத்தில் எவ்வளவோ நன்மைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது காங்கிரஸ்காரர்கள், தருமபுரி மாவட்டத்தில் இருந்து எதிர்க் கட்சிக்கார



கள் தான் எம்.எல்.ஏ.-க்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள் என்ற காரணத்தால் தருமபுரி மாவட்டத்தின் பல பகுதிகளைக் கண்ணெடுத்தும் பார்க்காமல் இருந்து வந்தார்கள். அதற்கு மேல் பல இன்னல்களையும் விளைவித்து வந்தார்கள். தமிழக அரசு வந்த பிறகு தான் பொதுமக்கள், ஏழை விவசாயிகள் நன்மைகளைப் பெற்று வருகிறார்கள். அவர்களுடைய மற்றக் குறைகளையும் தீர்ப்பதோடு ஹொகனேகல் மின்சாரத் திட்டத்தை உடனடியாக அமல் நடத்த வேண்டுமென்று தமிழக அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, காங்கிரஸ்காரர்கள் பல பல இன்னல்களைச் செய்துகொண்டிருந்தார்கள் என்று பேசினார். தமிழக அரசாங்கத்தைப் பாராட்டுவதிலே ஆட்சேபணை இல்லை. அவர்கள் காங்கிரசைப் பற்றிக் குற்றச்சாட்டாகக் கூறும்போது குறிப்பாக விவரங்களோடு பேச வேண்டும். ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால் அதை நிரூபிக்க வேண்டும்.

**திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர் :** நான் உண்மையைத் தான் எடுத்துக் கூறினேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உண்மையைத் தான் சொன்னேன் என்று கூறுகிறார். அதை நிரூபிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த மன்றத்தில் குற்றஞ் சாட்டுகிறபோது குறிப்பாகச் சொல்ல வேண்டும். பொதுவாகச் சொல்லக் கூடாது. தருமபுரி மாவட்டத்தை யாரும் கவனிக்காமல் விட்டுவிட்டார்களே என்று சொன்னார்களே தவிர, பெரிய அளவில் குற்றம் சாட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் சொல்லவில்லை என்று கருதுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்களுக்குக் கொடுக்கும்படியான பாதுகாப்பை எங்களுக்கும் கொடுக்க வேண்டும். இரண்டு பேரையும் சமமானவர்களாகத் தாங்கள் கருத வேண்டும்.

***திரு. என். மருதாசலம் :** துணைச் சபாநாயகர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்று மின்சாரமானது கிராமப் பகுதிகளில் அதிகமாகப் பரவி இருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலும், பஞ்சாயத்துக்கள் பகுதிகளிலும் மின்சாரம் கொடுக்கும் போது அரிசன மக்கள் இருக்கும் பகுதிகளில் விளக்குகள் போடுவதில்லை. மற்ற இடங்களில் மெர்குரி விளக்குகளாகப் போடுகிறார்கள். சாதாரண விளக்குகள் கூட அரிசனங்கள் இருக்கும் பகுதிகளில் போடுவதில்லை. அரிசனங்கள் வசிக்கும் பகுதிகளுக்கு முதற் சலுகை கொடுத்து அந்தப் பகுதிகளில் விளக்குகள் போட்ட பிறகு மற்றப் பகுதிகளுக்குப் பின்னர் போட வேண்டுமென்று உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் மலம்புழா, ஆளியாறு திட்டத்தில் வேலை செய்த தொழிலாளர்கள் இப்போது வாழ்க்கை வசதி இல்லாமல் இருக்கிறார்கள். தற்போது நம்முடைய அரசில் ஐந்து திட்டங்கள் இருக்கின்றன. அவை பிளானிங் கமிஷன் பரிசீலனையில் இருக்கின்றன. அந்தத் திட்டங்களை எடுத்துக்கொள்ளும்போது தற்போது வேலை இழந்து நிற்கின்ற தொழிலாளர்களை அதிலே வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் வரை இடைக்காலத்தில் பாதிச் சம்பளமாவது கொடுத்து அவர்களுடைய வாழ்க்கை வளம் பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் பம்ப் செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். மோட்டார் இணைப்புக்கு மின்சார கனெக்ஷன் கொடுக்கும்போது அடிஷனல் சார்ஜஸ் என்று சொல்லி இரண்டு சார்ஜுகளை வசூலிக்கிறார்கள். அந்த அதிகப்படியான சார்ஜை பத்து ஏக்கருக்கு மேற்பட்டு வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு வேண்டுமானால் போடலாம். பத்து ஏக்கருக்குக் குறைவாக வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு அந்தக் கட்டணத்தைப் பாதியாகக் குறைக்க வேண்டும். மக்களுக்கு நல்ல முறையில் மின்சாரத்தை உபயோகிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதோடு மட்டுமல்லாமல் அரிசனங்கள் வசிக்கும் பகுதிகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் முதற் சலுகை காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: தலைவர் அவர்களே, முதன் முதலாக பற்று வாரியங்களிலும், நிறுவனங்களிலும் தயாரிக்கப்படுவது மாதிரி மின்சார வாரியத்திலும் கமர்ஷியல் பட்ஜெட் என்று தயாரிப்பது மிக மிக அவசியம் என்று கூற விரும்புகிறேன். பொதுவான அறிக்கையைச் சமர்ப்பித்து அதன் மீது மட்டும் பரிசீலிப்பதினால் நிச்சயமாகப் பிரச்சினை தீர்ந்துவிடாது என்று கருதுகிறேன். ஆகவே, கமர்ஷியல் பட்ஜெட் தயாரிக்க வேண்டுமென்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்றையதினம் நம்முடைய மின்சார வாரியத்தைப் பொறுத்தவரை பெரிய தொழில்களுக்கு மின்விசையைக் கொடுக்கும்போது கட்டணத்தைக் குறைத்துக் கொடுக்கிறார்கள். அதை உயர்த்த வேண்டுமென்று திட்டவட்டமாக வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். பல சாமான்கள் விலை உயர்ந்துவிட்ட பிறகு நிலக்கரி போன்ற மூலப் பொருள்களின் விலை உயர்ந்துவிட்ட பிறகு அதையெல்லாம் வாங்கக்கூடியவர்கள், மின்சாரத்திற்கும் அதிகக் கட்டணம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். 24 மணி நேரமும் மின்சாரத்தைப் பெரும் முதலாளிகள் உபயோகிக்கின்ற நிலையில் அவர்களிடமிருந்து அதிகப்படியான கட்டணத்தை வசூலிக்க வேண்டுமென்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

கிராமங்களுக்கு மின்விசை கொடுப்பதிலே பலவிதமான சிரமங்கள் ஏற்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற பகுதிகளில் தனியாரிடமிருந்து பொறுப்பை மின்சார வாரியமே எடுத்துக் கொண்டது வரவேற்கத்தக்கது என்றாலும் இன்றும் உழவர்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் சிரமங்கள் இருக்கின்றன. அரிசன மக்களுக்கு இணைப்பு கிடைப்பதில்லை. சால்வன்சி சர்டிபிகேட் எல்லாம் இணைத்து மனுச் செய்தாலும் கனெக்ஷன் கிடைப்பதில்லை. என்னுடைய தொகுதியில் பல பஞ்சாயத்துக்களில் இந்த மாதிரியான நிலைமை இருக்கிறது. ஒரு தெருவிலே விளக்கு வேண்டுமென்றால் அந்தத் தெருவிலே என்ன வருமானம் வரும் என்று கணக்கிடப்படுகிறது. அது தவறான முறையாகும். இந்தக் கணக்கைப் பார்க்காமல் தெரு விளக்குகளுக்கு மின்சாரம் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதே சமயத்தில் உழவுத் தொழிலுக்கு உபயோகப்படுத்தக்கூடிய மின்சக்திக்குக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன். தமிழகத்தில் உணவுப் பிரச்சினையில் தன்னிறைவு அடைய வேண்டுமென்பதும், அதிகமான உற்பத்தியைச் செய்ய வேண்டுமென்றும் கூறும் நிலையில் அதற்குப் பயன்படுத்துகிற மின்விசைக்கான கட்டணம் இன்று இருப்பதை விடக் குறைவாக இருக்க வேண்டும். வேளாண்மைக்கு மின்விசை வழங்குவதற்காக இன்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை போதாது, அதிகமாக ஒதுக்க வேண்டும். இந்த மின்விசை கொடுப்பதைப் பற்றி டி. டி. சி.-ல் விவாதிப்பது மட்டும் போதாது. பஞ்சாயத்துகளிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும், கிராமங்களிலும் மின்விசை கொடுப்பது பற்றி விவாதிக்க ஜில்லாக்களில் மின்விசை சம்பந்தமான விஷயத்தைப் பற்றி விவாதிப்பதற்காக ஒரு தனிக் குழுவை அமைப்பது மிக மிக அவசியம்.





இன்று பல்புகளைப் பொறுத்தவரை பல வீணாகிவிடுகின்றன. இப்போது அதற்குப் பின்பற்றக்கூடிய முறை பல நிறுவனங்களில் இருந்து கொட்டேஷன் கேட்பதாகும். எது குறைவாக இருக்கிறதோ அதைப் பார்த்து சாமான்கள் வாங்கப்படுகிற முறை இருக்கிறது. அம்மாதிரி வாங்கப்பட்டால்தான் தரக்குறைவான பல்புகள், தரக் குறைவான சாமான்கள் கிடைக்கின்றன. அவை துரிதமாகக் கெட்டுவிடுகின்றன. விலையில் எது குறைவு என்று மட்டும் பார்க்கக் கூடாது. தரமான சாமான்களாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். தரமான சாமான்களாகப் பார்த்து தேர்ந்தெடுத்தால் இந்தக் குறை போகும். எனவே இந்தக் குறை நிச்சயம் போக்கப்பட வேண்டும்.

அடுத்து, தேய்மானம் என்று போடப்படுகிறது ஒரு விஷயத்தை மட்டும் உதாரணத்திற்காகச் சொல்லவிரும்புகிறேன். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு வாங்கிய ஒரு இயந்திரத்திற்கு இன்னும் தேய்மானம் போடுவது அவசியமானதா என்று மின்சார வாரியமே சிந்திக்க வேண்டும். இயந்திரத்தின் விலையை விட மூன்று மடங்கிற்கு அது சம்பாதித்துக் கொடுத்ததற்குப் பிறகு மீண்டும் அதற்கு தேய்மானம் போடுவது என்பது சரியானதல்ல. அது மாற்றப்பட வேண்டும்.

அதேபோல் ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்று அங்கீகரித்திருக்கிறோம். அதற்கு மாறாக மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் கணக்காயர்கள் போன்றவர்கள் இல்லை என்ற காரணத்தினால் அவர்களுக்குத் தனியாக ஒரு ஸ்தாபனத்தைத் தோற்றுவித்து அதை அங்கீகரிக்க முற்படுவது நியாயமானதல்ல, அது ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்க உபயோககரமாக இராது.

இன்றைய தினம் மின்சார வாரியம் லாபமும் இல்லாமல் நஷ்டமும் இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு ஸ்தாபனம் என்று கூறப்படுகிறது. கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய்க்குமேல் மூலதனம் போட்டு ஆண்டு ஒன்றுக்கு ஐம்பது கோடி ரூபாய் வருமானம் வரும் ஒரு ஸ்தாபனம் இம்மாதிரி இருப்பது சரியல்ல. இன்றையதினம் வாரியத்தின் சொத்துக்கள், மற்ற விஷயங்கள், சாமான்கள் வாங்குவது, வேஸ்டேஜ், மின் திருட்டு போன்ற விஷயங்களை நல்ல முறையில் கண்காணித்து ஒழுங்குபடுத்த, முறைப்படுத்த ஒரு உயர்மட்டக் குழு வைப்பது அவசியம். 300 கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டு 50 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வரக்கூடிய இந்த வாரியம் லாபமும் இல்லாமல், நஷ்டமும் இல்லாமல் இருக்கிறது என்ற அளவிற்குச் சொல்வது சரியென்று நான் கருதவில்லை. இந்த வாரியத்தை நிச்சயமாக நல்ல லாபத்தில் ஈட்ட முடியும். அதற்கு வழி என்னவென்றால், நான் முன்பு கூறியபடி தொழில் அதிபர்களுக்கான கட்டணத்தை உயர்த்துவது. வேஸ்டேஜைக் கண்டுபிடிப்பது, ஊழல்களைக் கண்டுபிடிப்பது, மின் திருட்டுகளைக் கண்டு பிடிப்பது, சொத்துகளைச் சரியாகக் கணக்கிடுவது போன்றவற்றை பரிசீலனை செய்ய ஒரு உயர்மட்டக் குழு அமைத்துப் பரிசீலனை செய்து நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு தொழிலாளர்கள் பழிவாங்கப்படுவது நின்றுவிட்டது என்பது மகிழ்ச்சிக்குரியதுதான். இருந்தபோதிலும் ஒரு விஷயத்தை மட்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். 9—2—62-ல் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டதற்காக அன்று பழி வாங்கப்பட்ட பலருக்கு வேலை கொடுக்கப்படாமல் இருக்கிறது. வாரியத்தின் இன்றைய கண்ணோட்டத்தில் மாறுதல் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஜானகிராமன், மாதவன் போன்றவர்கள் பழிவாங்கப்பட்டு இன்னும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. அதைப் பரிசீலனை செய்து நிச்சயமாக அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள, நம் புதிய கொள்கைக்கு ஏற்ப அவர்களை நிச்சயம் வேலைக்கு எடுத்துக் கொள்ள ஒரு உத்தரவு பிறப்பிப்பது அவசியம். இன்றையதினம் பல ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். சில ஊழியர்கள்

களை டெஸ்ட் வைத்து அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதனால் சினியாரிட்டி பாதிக்கும் அபாயம் இருக்கிறது. ஆகவே வேலை செய்யும் ஊழியர்கள் பொதுவான அளவிற்கு வேலை செய்தால் சீனி யாரிட்டி பிரகாரம் ப்ரமோஷன் கொடுக்க நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியம். இப்படிப்பட்ட முறைகளை மேற்கொண்டால் வாரியத்தை லாபகரமாக இயக்க முடியும். பொதுத்துறையை எதிர்க்கிறவர்கள் இன் றையதினம் மின்சார வாரியத்தை உதாரணமாகக் காட்டுகிறார்கள். இதில் ஏமம் இல்லை. ஆகவே பொதுத் துறையை ஊக்குவிக்கக் கூடாது என்ற தவறான, பிறபோக்கான கருத்து இன்றையதினம் நாட்டில் உலவுகிறது. அதற்கு ஆதாரம் தேடக் கூடிய முறையில் மின்சார வாரியம் அதற்கு ஒரு உதாரணமாக இருக்கக் கூடாது. எனவேதான் இதைக் கூறுகிறேன். ஆகவே ஒருங்கிணைந்த பட்ஜெட் தயார் செய்து இந்த யோசனைகள் எல்லாம் அமுலாக்கப்பட்டால் நிச்சயமாக இந்த மின்சார வாரியம் ஒரு லாபகரமான வாரியம் என்பதைத்தெளிவாக நிரூபிக்க முடியும். எனவே தான் இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கைக்கேற்ப, தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டு சோஷலிஸப் பாதையில் முன்னேற நாங்கள் முன் நிற்கிறோம். அரசு ஒப்புக் கொண்டுள்ள கொள்கைக் கேற்ப இந்த மின்சார வாரியத்தை நல்ல லாபகரமான வாரியமாகச் செய்ய வேண்டும். ஆகவே, அதற்கான நடமுறைக் கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்து கொள்கிறேன்.

***திரு மு. கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, 1968-69-ம் ஆண்டிற்கான மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி நடைபெறும் விவாதத்தில் நானும் கலந்து கொண்டு உரையாற்றுவதற்கு வாய்ப்பினைத் தந்தமைக்கு என் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் தமிழக மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு நடந்த வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது உறுப்பினர்களால் கொடுக்கப்பட்ட பலதரப்பட்ட கோரிக்கைகள், பலதரப்பட்ட குறைகள் எல்லாவற்றையும் இந்த அமைச்ச ரவை நல்ல முறையில் பரிசீலனை செய்து அவற்றிற்கு நல்லதொரு பரிகாரம் கண்டிருப்பது கண்டு உண்மையிலே நான் பெருமைப்படுகிறேன். 1968-69-ம் ஆண்டுக்கு மின்சார வாரியம் 32-17 கோடிக்கணக்கான வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறது. இத் திட்டத்தில் குறைந்த செலவில் மின்சாரத்தை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கும், குறை வான கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்படுவதற்கும் வழி வகை காணப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் சென்ற ஆண்டு மின்சாரத் தட்டுப் பாடு இல்லாத முறையில் இத் துறையினர் செயல்படுத்திக் காட்டியிருக் கின்றனர். எனது பேராவூரணித் தொகுதி தஞ்சை மாவட்டத்தின் கடை மடைப் பகுதியாக இருக்கிறது. கடைமடைப் பகுதி என்று சொல்லும் போது கடலோரப் பகுதியிலுள்ள ஏழை எளியவர்களும் அந்தப் பகுதி களில் இருக்கிறார்கள். கடைமடைப் பகுதியும் மானாவாரிப் பகுதியுமான எனது தொகுதியில் இன்னும் ஏராளமான கிராமங்கள் மின்வசதியற்ற நிலையில் இருக்கின்றன. பல பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு வழிவகை காணப்பட்டிருந்தும், அதற்குரிய இணைப்புகள் கொடுக்கப்படாமல் தடுக்கப்பட்டோ அல்லது காலதாமதப்படுத்தப்பட்டோ இருக்கின்றன. சென்ற பொதுத் தேர்தலின்போது இந்தத் தொகுதி இணைந்த தஞ்சா வூர் பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டவர் முன்னாள் அமைச்சர். அவர்கள் இந்தத் துறை அமைச்சராக இருந்த காரணத்தினால் தேர்தல் நெருங்க நெருங்க என் தொகுதியில் பல பாகங்களில் மின்சாரக் கம்பங்கள் பலயிடங்களில் போடப்பட்டன. மின்சாரக் கம்பிகளும் சில இடங்களில் கொண்டு வந்து போடப்பட்டது. மின்சாரத் துறையினர் பலபல ஆக்க வேலைகளுக்கு அங்கு ஆயத்தம் செய்தார்களே தவிர பின்னால் அவைகளை எல்லாம் எடுத்துச் சென்று மற்றப் பகுதிகளுக்குப் பயன்படுத்தினர். ஆகவே, பல கிராமங்கள் இன்று ஏமாற்றப்பட்ட நிலையில் இருக்கின்றன. கீரமங்கலம் பகுதிகள் தஞ்சை மாவட்டத்தோடு இணைந்திருந்தாலும் அது



ராமநாதபுரம் மாவட்டத்தோடு இணைய வேண்டிய பகுதியாகும். கீரமங் கலம் மேட்டூர் நீர்த்தேக்கப் பாசன பகுதியாக இல்லாததினால் கிணற்றை நம்பிதான் அங்கு உற்பத்தி செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. குறிப் பாகச் சொல்லப்போனால் கொத்தமங்கலம் கிராமம் என்பது ஒரு சிறிய பஞ்சாயத்து. அங்கு 87 கிணறுகளுக்கு மின்சார இணைப்புத் தேவை என்று கேட்கப்பட்டு கோரிக்கைகள் அனுப்பப்பட்டும் இன்றைய தினம் வரை அது கவனிக்கப்படாமல் இருக்கிறது. அது போன்ற கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கினால் நிலத்தடித் தண்ணீரைக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் இந்த மின்சார வசதி கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே மின்சார வசதியற்றிருக்கிற பகுதிகளுக்கு மின்சாரம் துரிதமான முறையில் வழங்குவதற்கு வழி வகை காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தெரு விளக்குகள் எரிவதில் உள்ள இடர்ப்பாடுகள் பற்றி இங்கு பல உறுப்பினர்கள் பலதரப்பட்ட முறையில் எடுத்துக் கூறினார்கள். அந்தக் குறைபாடுகளை நிச்சயம் போக்க வேண்டும். கிராமங்களில் மழை அல்லது வேறு சில காரணங்களினால் மின்சாரம் வருவது தடைப்பட்டால் அதைப் புதுப்பிக்க அல்லது அதைச் சீர்படுத்த ஒரு சில தினங்கள் கூட ஆகின்றது. அவைகளை உடனடியாக இணைக்க வழிவகை செய்ய வேண்டும். சிப்பந்திகளை அதிகமாகப் போட்டாவது அதற்கு வழிவகை காண வேண்டும்.

கிராமப் பகுதிகளிலுள்ள தெரு விளக்குகள் மாலை 2 மணி, 3 மணி யிலிருந்து எரிந்து கொண்டிருக்கின்றன. மறுநாள் காலை 9 மணி, 10 மணி வரையிலும் எரிந்து கொண்டிருக்கின்றன பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கும் நம்மைப் போன்றவர்கள் அந்த நேரத்தில் சொல்லும் பொழுது, "இந்த அரசு மின்சாரத்தை வேஸ்ட் செய்கிறது" என்று குறிப்பிட்டுப் பேசும் அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. ஆகையினாலே, தேவையில்லாமல் மின்சாரம் வீணாவதைக் குறைப்பதற்காக, அந்த மின் சார இணைப்புக் கொடுக்கிற ஊழியர்களை அதிகப்படுத்தியாவது, மாலை 5 மணி யிலிருந்து விளக்குகள் எரிய வேண்டும் காலை 5 மணிக்கு அணைக்க வேண்டுமென்று முறைப்படுத்தப் வழி வகை காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேராவூரணி தொகுதியிலுள்ள அக்கினியாற்றில் மின்விசை நீர் ஏற்றத் திட்டங்களை நிறை வேற்ற வேண்டுமென்று பல கோரிக்கைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மகிழங்கோட்டை பஞ்சாயத்திலுள்ள விவசாயிகளும் கொள்ளு காடு பஞ்சாயத்திலுள்ள விவசாயிகளும் கோரிக்கைகளைக் கொடுத் திருக்கிறார்கள். அவைகளுக்கு உடனடியாக வழிவகை காண வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்த மின்சாரத் துறை மானியத்திலே பேசக்கூடிய நேரத்தில் குறிப் பாக கடைமடைப் பகுதியிலுள்ள விவசாயிகளைப் பற்றியும் கூற வேண்டும். முறையாகப் பாசனத்திற்கு வேண்டிய நீர் கடைமடைப் பகுதிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. அவ்வாறு போய்ச் சேராத காரணத்தினாலே, ஊற்றுக் கிணறுகளை வெட்டி பாசனத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று சொல்லக் கூடிய நேரத்தில் அந்த விவசாயிகள் என்ன கருதுகிறார்கள் என்றால், மேட்டூர் அணையிலுள்ள தண்ணீரைக் கொண்டு இவ்வளவு சுலப மாகப் பாசனம் செய்யும் நேரத்தில் நாம் கிணற்றுப் பாசனத்தைப் பெருக வேண்டுமா என்று அந்த விவசாயிகள் ஐயுறுகிறார்கள். அதனாலே, கடைமடைப் பகுதிகளுக்கு, குறிப்பாக தஞ்சை மாவட்டப் பகுதிகளுக்கு நெல் உற்பத்தியில் சிறந்து விளங்குகின்ற அந்த மாவட்டத்திலுள்ள கடைமடைப் பகுதியிலுள்ள விவசாயிகள் மின்சாரத்தைப் பயன்படுத்த முற்பட்டால் இன்னும் அதிக விளைச்சல் பெருகும். எனவே, அவர்களுக்கு மின்சார வசதியைச் செய்து தர வேண்டும், மின்சாரக் கட்டணச் சலுகையை அவர் களுக்குக் கொடுக்க வேண்டும். விவசாயத்திற்காக கொடுக்கும் மின்சாரத் திற்கு வாங்கும் அந்தக் கட்டணத்தை ரத்து செய்ய வழிவகை கண்டால் கூட நிச்சயமாக நல்ல ஆதரவையும், பாராட்டுதல்களையும் பெற முடியும் நிலைமையில்

கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின்

உள்ள இந்த அமைச்சரவை, இந்த ஆண்டு மட்டும் 3,210 கிராமங்களுக்கு மின்சார வசதியளித்துள்ளதையும், இது வரையில் 9,354 கிராமங்களுக்கும், 18,877 சிற்றூர்களுக்கும் மின்சார வசதி அளித்துள்ளதையும், 33,000 விசையேற்றங்களுக்கு மின்சக்தியளிப்பது என்று போட்டிருந்த குறியீட்டளவையும் மிஞ்சி 51,246 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளித்துள்ள சாதனையையும் ஒரு கணம் எண்ணிப் பார்க்கும் நேரத்தில் இந்த அரசு பலப் பல முன்னேற்றங்களைக் கண்டறிய முன் வந்திருக்கிறது என்பது தெரியும்.

அதே நேரத்தில் இந்த அரசு விவசாயத்திற்கும், கிராமங்களுக்கும் மின் விசையளிப்பதில் தனிக் கவனம் செலுத்துகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தலைமையில் அமைந்துள்ள திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையின் இந்த மகத்தான சாதனையையும், தமிழக மின்வாரியத்தின் திட்டமிட்டு செயலாற்றும் திறனையும், மின் துறை அமைச்சரின் அயரா உழைப்பையும் கடமையுணர்வையும், அறிவாற்றலையும், சீரிய சிறப்பான நடவடிக்கையின் விளைவையும் இம் மாமன்றம் வாழ்த்தும், வரவேற்கும் என்று கூறி இத் துணை மானியக் கோரிக்கையின் கீழ் நான் கலந்து கொண்டு உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக மீண்டும் நன்றி விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று, பேரவை நாளை காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 7. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

*Nil.*

### B. Reports, Notifications and other papers.

†70. Notification issued with G.O. Ms. No. 963, Revenue, dated the 7th May 1968, in regard to exemption from payment of stamp duty on the instrument of settlement for charitable purposes
பி ப to be executed in favour of Thiru Ramakrishna Tapovanam, Tiruchi-
1 30 rappalli under the Indian Stamp Act, 1899 (Central Act II of1899).

† 71. List of Unstarred Questions and Answers from 1 to 84.

@ 72. The Madras Shops and Establishments (Amendment) Bill 1968 (L.C. Bill No. 1 of 1968).

† Laid on the table of the House on 29th August 1968.
@ Despatched to Members on 29th August 1968.

# தமிழக சட்டப் பேரவை

## சனிக்கிழமை, 1968 ஆகஸ்ட் 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்–விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### ஹிந்து பத்திரிகை அலுவலகம்

*கு.கா.வி. 2.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) ஹிந்து பத்திரிகை காரியாலயம் மூடப்பட்டிருப்பதும் அதனால் 1,000 பேர்கள் பாதிக்கப்பட்டிருப்பதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) இப்பிரச்னையை பரிசீலிக்கும்படி தொழிலாளர்துறை ஆணையாளரை கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த இந்து பத்திரிகை காரியாலயத்தை இப்போது மூடிவிட்டதற்குக் காரணம் என்ன ? வேஜ் போர்ட் தீர்ப்பை அமல்படுத்தவேண்டுமென்று கேட்டும், வேஜ் போர்ட் தீர்ப்பிலிருந்து ஓரளவிற்குக் குறைவாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தும், அதை அமல் படுத்தாத நிலையில் தொழிற்சங்கத் தலைவர்களையும், தொழிலாளர்களையும் பழிவாங்குவது என்ற எண்ணத்திலேதான் இது போன்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த விஷயத்திலே உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ஊதியக்குழு தங்களுடைய பரிந்துரையை தந்தவுடன் மத்திய அரசு ஏற்றுக்கொண்டு அதை செயல் படுத்தவேண்டுமென்று மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டது. இருக்கக்கூடிய பத்திரிகைகளைப் பல தரங்களாக பிரித்திருக்கிறார்கள், கிளாஸ் 1, கிளாஸ் 2 என்று பல தரங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அரசாங்கம் பத்திரிகைச் சொந்தக்காரர்களைக் கூப்பிட்டுப் பேசி அதை நிறைவேற்றவேண்டுமென்று சொன்னது. வேஜ்போர்டிலே சிபார்சு செய்யப்பட்டிருக்கின்ற முழுவதையும் நிறைவேற்றினால் பாதகம் ஏற்படும், அதனால் பத்திரிகைத் தொழிலை நடத்தமுடியாத நிலைமை ஏற்படும் என்று அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு தொழிலாளர்களின் தலைவர்களை அழைத்து அவர்கள் சொல்லுவதிலே நியாயம் இருக்கிறது, ஆகவே நீங்கள் உங்களுக்குள்ளே சுமுகமாக ஒப்பந்தம் செய்துகொள்ளக்கூடிய அளவிற்கு முடிவு செய்யலாம் என்று சொல்லப்பட்டு அந்த அடிப்படையில் ஒரு ஒப்பந்தத்தின் அளவிலே செய்யலாம் என்று அரசாங்கத்தின் சார்பிலே கேட்டுக்கொள்ளப்பட்டது. பெரும்பான்மையான பத்திரிகைகள் அந்த அளவிற்கு ஏற்றுக்கொண்டு விட்டன. மற்ற பத்திரிகைகளைப் பொறுத்த வரையில் இது சம்பந்தமாக தகராறு இல்லாமல் போய்விட்டது. இந்து பத்திரிகையைப் பொறுத்த வரையில் இடைக்காலத்திலே ஒப்பந்தம் செய்து கொண்டு இதற்குப்பின்னாலே பெடரேஷன் அளவிலே பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்தது. பத்திரிகை நிர்வாகிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடந்தது. முழுமையாக அமல்

படுத்துவதா இல்லையா என்' அபற்றிய பேச்சு வார்த்தையில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. இதில் முக்கியமானது வேஜ்போர்ட் ரெகமென் டேஷனை நிறைவேற்றுவது என்பதுபற்றி. இண்டர்பிரடேஷன் ஆப் ரெக மண்டேஷன் பற்றி பேச்சு வார்த்தை இருந்தது. இப்போது பேச்சு வார்த் தைகள் வெற்றி அடையவில்லை. இந்திய நாட்டின் அளவிலே வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று முடிவு எடுத்தார்கள். இந்து பத்திரி கையைச் சேர்ந்தவர்களும் இதில் பங்கு பெற்றார்கள். இதற்குப் பிறகு அரசாங்கம் இதிலே தலையிட்டு ஒவ்வொருவர்க்கும் ஒரு பார்முலாகொடுத்தும் அதை அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். வேஜ் போர்டின் தீர்ப்புப்படி முழுமையாக அதை நிர்வாகத்தினர் அதை ஏற்றுக்கொண்டார்கள். பேச்சு வார்த்தை மூலம் அதைத் தீர்க்க முயற்சிக்கலாம். அது இயல வில்லையென்றால் அட்ஜுடிகேஷனுக்கு விட்டு விடுவதென்று ஒப்புக்கொண் டார்கள். பேச்சு வார்த்தைக்கு முன்னாலோ அல்லது அமல் நடத்துவதற்கு முன்னாலோ முன் ஆலோசனை வேண்டுமென்று சொல்லப்பட்டது. நிர் வாகத்தின் சார்பிலே எங்களுடைய இண்டர்பிரடேஷன்படி அமல் நடத்த வேண்டுமென்றும், பேச்சு வார்த்தை பிறகு என்றும் சொன்னார்கள். தொழிலாளர்கள் சார்பிலே இது எப்படி அமல் நடத்தப்படும் என்ற விவ ரங்கள் சொல்லுங்கள் நாங்கள் ஒப்புக்கொண்டதை அமல்படுத்தினால் ஒப்புக் கொள்வதைப்பற்றி பேசிக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். இந்த சூழ்நிலையிலே யூனியனைச் சேர்ந்த ஒருவரை நீ வெளியே போ என்று நிர்வாகத்தினர் சொன்னதாகவும் டிஸ்மிசல் ஆர்டர் கொடுக்காவிட்டால் நான் போகமாட்டேன் என்று சொன்னதாகவும், எந்த விதமான என் கொயரி இல்லாமல் டிஸ்மிசல் ஆர்டர் போட்டு விட்டதாகவும் சொல்லப் பட்டது. "இன்டிசிப்ளின்", "கோ ஸ்லோ" என்பதின் காரணமாக லாக் அவுட் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

**திரு. க. ர. நல்லசிவம் :** உதவி சபாநாயகர் அவர்களே, இந்த லாக் அவுட் ஆனது சட்டபூர்வமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதன்படி எடுக்கப்பட்டு லாக் அவுட் செய்யப்பட்டதா ? இல்லையென்றால் இது சட்டபூர்வமான லாக் அவுட் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலாளர்களைப் பழி வாங்கு வதற்குத்தான் லாக் அவுட் செய்யப்பட்டிருக்கிறதென்றும், அரசாங்கம் தலையிட வேண்டுமென்றும் யூனியனைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள். இது சரியா, தவறா என்று தொழிலாளர் இலாக்கா பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : While being grateful for the elaborate explanatory answers given by the Honourable the Minister for Law and Co-operation. , . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரத்திலே இந்த பாராட்டுதலெல்லாம் தேவையில்லை.

**திரு கே. விநாயகம் :** இதில் தப்பு ஒன்றும் இல்லையே. I am only paying a tribute to the Hon. Minister.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள்.

THIRU K. VINAYAKAM : In view of the fact that THE HINDU is one of the most popular Papers without reading which the readers do not get satisfaction even when they read the other papers and it is one of the best Papers which gives world news, what is the contribution which the Government have made to resolve this stalemat between the owners of the Paper and the employees employed in the Peper ?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்கம் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளையெல்லாம் விரிவாகச் சொன்னேன் என்று அவர்களே பாராட்டினார்கள். இப்பொழுது என்ன செய்தார்கள் என்று கேட்கிறார் கள். இப்பொழுது இருக்கிற பிரச்சினையையொட்டி தொழிலாளர் இலாக்கா பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்து பத்திரிக் கை நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் கதவடைப்பு செய்த காரணத்தினால் பைண்டிங் செக்ஷன் போன்ற பிரிவுகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர் களுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு நீங்கள் எல்லாம் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக சொன்னதாக சொல்கிறார்கள். இதில் அரசாங்கம் தலையிட்டு வேண்டியதைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கதவடைப்பு செய்ததற்குப் பின் னாலே 100 தொழிலாளர்களை சட்ட பூர்வமாக டிஸ்மிசல் செய்திருக்கிறார் கள் என்றும் அதற்குப் பின்னாலேயும் இந்து பத்திரிகையினுடைய ஒரு பகுதி வேலைக்குத் தேவையில்லை என்று ரிட்ரென்ச்மெண்ட் நோட்டீஸ் கொடுத்திருப்பதாகவும் தொழிலாளர்கள் சார்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தின ருக்கும் தகராறு ஏற்பட்டால், அது சம்பந்தமாக அரசாங்கம் பரிசீலனை செய்ததற்குப் பின்னால்தான் லாக் அவுட் செய்யவேண்டுமென்று நடை முறைகள் இருக்கின்றன. அப்படியிருக்க அரசாங்கத்தைக் கலக்காமலே எந்த அடிப்படையிலே லாக் அவுட் செய்திருக்கிறார்கள் ? அதைப் பார்த் துக்கொண்டு ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சட்டத்திற்கு உட்பட்டுத்தான் நட வடிக்கை எடுக்க முடியும். கனம் உறுப்பினருக்குத் தெரியும், நமக்குள்ள அதிகாரங்கள் குறைவு என்று. நமக்கு என்ன அதிகாரங்கள் இருக்கின் றனவோ அவற்றையெல்லாம் பயன்படுத்தி தொழிலாளர்களும், முதலாளி களும் ஒரு சுமுகமான முடிவுக்கு வர அரசாங்கம் முயற்சி செய்யும்.

**திரு. சி. கோவிந்தராசன் :** சம்பள நிர்ணயக்குழுவின் சிபார்சை அமல் நடத்த இந்து பத்திரிகை நிர்வாகம் தயாராய் இருப்பதாகச்சொல்லிக் கொண்டு அவ்வப்போது அரசாங்கத்துடன் ஆலோசனை செய்வதாகச் சொல் லிக்கொண்டு மீறி மீறிப் போவதென்ற நிலைமை இருக்கிறது. 1968 ஆகஸ்ட் 4-ம் தேதி வேலை நிறுத்தம் நடந்தபோது அமைச்சரிடம் வாக்கு கொடுத்து விட்டு வேலை நிறுத்தம் வாபஸ் வாங்கப்பட்ட பிறகு அமல் படுத்த முடியா தென்று பின்வாங்கியதுண்டு. அடிக்கடி அப்படிச்செய்வதால்தான் தொழில் தகராறுகள் ஏற்படுகின்றன. வாக்குறுதிகளை அமல் நடத்தாத தற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தொடர்ந்து கேள்விகள் கேட்டுக்கொண்டே போனால் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கவேண்டு மல்லவா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நிர்வாகத்தினர் அடிக்கடி ஒப்பந்தத் தை மீறுகிறார்கள் என்று சொல்லப்பட்டது, தொழிலாளர் சார்பிலே. வேஜ் போர்ட் ரெகமென்டேஷனை தங்களுடைய இண்டர்பிரடேஷன்படி அமல் நடத்த தொழிலாளர்கள் ஒத்துவரமாட்டேன் என்று சொல்வதாக நிர் வாகத்தின் சார்பிலே சொல்லப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், மத்திய சர்க்காரையும் மதிக்க வில்லை, ராஜ்ய சர்க்காரையும் மதிக்கவில்லை. இந்த நிலைமையில், அந்தத் தீர்ப்பை அமல் படுத்தாதது மட்டும் அல்ல—திட்டமிட்டு, பம்பாயில் இருக் கும் பத்திரிகை, சென்னையிலிருக்கும் பத்திரிகை, அத்தனையையும் மூடி ஏற்கனவே "தினமணி", "இந்தியன் எக்ஸ்பிரஸ்" எப்படி இக்

கிருந்து ஆந்திராவுக்குப் போனதோ அதேபோன்று—இந்து பத்திரிகை பெங்களூரிலிருந்தும் பம்பாயிலிருந்தும் சென்னைக்கு வரக்கூடிய அளவிற்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மைதானா ? அப்படியானால், மத்திய சர்க்காரை வற்புறுத்தி, இதற்கான தீவிர நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மத்திய அமைச்சரும் இதில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார்கள். பல முறை தொலைபேசி மூலம் என்னிடம் தொடர்பு கொண்டார்கள். "இந்து" பிரச்சினையை மிக எளிதாகத் தீர்க்க வேண்டும் என்றுதான் இருக்கிறார்கள். இப்பொழுது மத்திய சர்க்காரும், ஊதிய போர்டு சிபாரிசுகளைக் கட்டாயம் அமல் படுத்தவேண்டும் என்று உறுதியாக நம்புவதாகத்தான் நானும் நினைக்கிறேன். ஊதிய போர்டு சிபாரிசுகளை மீறக்கூடிய பத்திரிகைகளுக்குக் கதவடைப்பு செய்திருந்தால் நியூஸ்பேப்பர் கோட்டாவைகூட நிறுத்த வேண்டும் என்ற கருத்து இப்பொழுது பாராளுமன்றத்திலே வலியுறுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசாங்கம் இதற்குத் துணையாகத் தான் இருக்கிறது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 137 எண்ணுள்ள கேள்வியில் எழுப்பப்பட்டுள்ள விஷயம் இப்பொழுது நீதிபதியினுடைய விசாரணையில் இருப்பதால் இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

## அறுவடையின்போது போலீஸ் பாதுகாப்பு

* **138 வினா.—திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற சாகுபடி அறுவடையின்போது எந்தெந்த நிலச் சொந்தக்காரர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தஞ்சாவூர் மாவட்டத்தில் சமீபத்தில் நடந்த அறுவடையின்போது, தனிப்பட்ட நிலக்கிழார் யாருக்கும் போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை.

**திரு. கொ. இரா. ஞானசம்பந்தம் :** தலைவர் அவர்களே, வலிவலத்தை அடுத்த நமசிவாயபுரம் கிராமத்தில் தகராறு ஏற்பட்டு, வெளியூர் ஆட்களைக் கொண்டுவரக்கூடாது என்ற ஒப்பந்தத்தை அமல் படுத்தும்படி தொழிலாளிகள் வற்புறுத்தியதன் காரணமாக அவர்கள் கைது செய்யப்பட்டு வழக்குகூட நடந்துகொண்டிருக்கிறதே, அம்மாதிரி, ஒப்பந்தத்தை மீறும் நிலக்கிழார்களுக்காக போலீஸை அனுப்பாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கேட்கப்பட்டிருக்கிற கேள்வி, "தஞ்சாவூர் மாவட்டத்தில் யாராவது தனிப்பட்ட நிலக்கிழாருக்குப் போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டதா ?" என்பது. "அளிக்கப்படவில்லை" என்பது பதில். ஆனால் ஆங்காங்கு ஏற்பட்ட தகராறுகளின் போது போலீஸ் பாதுகாப்பும் சமரச ஏற்பாடுகளும் இரண்டுமே தொடர்ந்து நடைபெற்று இருக்கிறது.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** ஐயா, தஞ்சாவூர் மாவட்டத்தில் வலிவலம் கிராமத்தில் இரண்டு வருஷ காலமாக எஸ்.ஏ.பி. இருந்து கொண்டு வருவது அரசாங்கத்திற்கு தெரியவருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** வலிவலத்திலும் வலிவலத்தைச் சுற்றியும் அறுவடை நேரத்திலும் மற்ற நேரத்திலும் கிசான் தகராறு இருப்பதையொட்டி அந்த இடத்திலே போலீஸ் பாதுகாவல்படை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைத் திரும்பப் பெறவேண்டும் என்று விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள். எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நிலைமை அமைதியானதும், அந்த கோரிக்கையும் பரிசிலிக்கப்படும்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** சார், தஞ்சாவூர் ஜில்லாவில் பரவலாக விவசாயம் செய்வதற்கு தகுந்த ஒரு பாதுகாப்பு இல்லாத நிலைமையில்



நிலச்சுவாந்தார்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். மேற்கொண்டு விவசாயக் கூலிகள் வெளியிடங்களிலிருந்து வந்தாலும் அதைத் தடுத்து தகராறு செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது மட்டும் அல்ல, தஞ்சாவூர் ஜில்லாவைச் சார்ந்த மிராசுதார்களும் விவசாய சங்கத் தலைவர்களும் ஒன்றாகக் கூடிப்பேசி, தகராறுகளெல்லாம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு, நிலைமை இன்றையதினம் நல்லபடியாக இருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஐயா, தஞ்சாவூர் மாவட்டத்தில் சாகுபடி வேலைகள் சம்பந்தமாக ஏற்படக்கூடிய தகராறுகளைக் கவனிப்பதற்காக விசேஷ போலீஸ் பிரிவை நியமித்திருப்பதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதைப்பற்றி தகவல் இல்லை. ஆனால் தனியான சில தகவல்கள் சேகரிக்கவேண்டும் என்றால் அப்படிப்பட்ட தனி போலீஸை அனுப்பி தகவல்களைச் சேகரிப்பது வழக்கம்.

## முதலமைச்சர்கள் மாநாடு

***139 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திராவில் அரிசன வாலிபனை அடித்து தீயிட்டுக் கொளுத்தி சாகடித்த விஷயமாக முதல்வர்கள் மகாநாடு நடைபெற்றதா ?

(இ) ஆம் எனில், அதில் என்ன முடிவு செய்யப்பட்டது ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்)

**THIRU K. VINAYAKAM :** For a question of this type, the Chief Minister has answered and there it ends. It is a matter concerning another State and it is in keeping with the propriety of the proceedings of this House that we should not discuss anything which happened in a sister State or neighbouring State like this. Will you give a ruling that no further question should be put ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** என்ன கேள்வியைக் கேட்கிறார் என்பதைப் பொறுத்துத்தான் முடிவு சொல்லவேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** முதலமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய முதலமைச்சரும் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் இதுபோன்ற விஷயம் விவாதிக்கப்பட்டதாக பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. அந்தக்காரணத்தினாலேதான் கேள்வி கொடுத்தேன். இது இன்னொரு ராஜ்யத்தை சேர்ந்த விஷயம், ஆகவே கேட்கக்கூடாது என்றாலும் நம்முடைய முதலமைச்சர் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதால்தான். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஆந்திராவிலே அரிசன வாலிபரை தீயிட்டுக் கொளுத்திக்கூட . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** "முதலமைச்சர்கள் மாநாட்டில் இதுபற்றிப் பேசப்பட்டதா ?" என்ற கேள்விக்கு, "இல்லை" என்று விடையளிக்கப்பட்டது. உறுப்பினர் அவர்களின் மற்ற விளக்கமெல்லாம் தேவை இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இதுபோன்ற விஷயத்தில் எப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைப்பற்றி முதலமைச்சர்கள் மாநாட்டில் விவாதித்து ஒரு முடிவு கண்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அங்கே என்னதான் விவாதம் செய்யப்பட்டது என்பதைத் திட்டவட்டமாக முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் மனத்திலே எண்ணிக்கொண்டிருக்கிற விஷயத்தைப்பற்றி விவாதிப்பதற்காக முதலமைச்சர்கள் மாநாடு கூட்டப்படவில்லை. வேறு சந்தர்ப்பங்களிலும்—முதலமைச்சர்கள் மாநாடு கூடிய நேரத்தில்—இதைப்பற்றி விவாதம் எழவில்லை.

## நெல்லிக்குப்பத்தில் தீயணைக்கும் நிலையம்

*140 வினா.—**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டம், நெல்லிக்குப்பத்தில் ஓர் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இல்லை.

**திரு. சி. கோவிந்தராசன் :** நெல்லிக்குப்பத்திலிருந்து சுமார் 20 மைல் வரை ஃபையர் சர்வீஸ் உதவி தேவை என்றால், கடலூரிலிருந்துதான் போகவேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட முப்பது மைலுக்குமேல் ஆகிறது. நெல்லிக்குப்பம் ஒரு முனிசிபல் நகரம். அங்கு அநேகமாகக் குடிசைப் பகுதிகள்தான் அடிக்கடி தீப் பற்றி எரிகின்றது. அதற்குக் காரணம் கரும்பு ஓலையினால் குடிசைகள் அமைந்திருப்பதுதான். உடனடியாகத் தீயை அணைக்க முடியாமல் ஏராளமான நஷ்டங்கள் ஏற்படுகின்றன. சமீபத்தில் கூட தீ விபத்துக்கள் ஏற்பட்டன. இவைகளையெல்லாம் உத்தேசித்து, நெல்லிகுப்பம் இப்பொழுது முனிசிபல் நகரமாக இருப்பதால், அங்கு தீயணைப்பு நிலையம் ஒன்றை வைப்பதற்கு அரசாங்கம் இனியாவது ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நெல்லிகுப்பத்தில் ஒரு தீயணைப்புப் படை தேவை என்பதற்குக் கனம் உறுப்பினர் சொன்ன காரணங்கள் கவனிக்கப்படத்தக்க காரணங்கள். ஆனால், ஏற்கனவே, தீயணைப்புப் படை எங்கெங்கு வைக்கவேண்டும் என்பதற்கான பட்டியலில் இன்னும் முப்பது ஊர்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் நிறைவேற்றப்படுகிற நேரத்தில், நெல்லிகுப்பத்தில், அவசியம் ஏற்பட்டால், தீ அணைப்புப் படை வைப்பதுப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

## செஞ்சி வட்டத்தில் தீ விபத்துக்கள்

*188 வினா.—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1965-ல் இருந்து 1968 வரை தென்னார்க்காடு மாவட்டம் செஞ்சி வட்டத்தில் எத்தனை தீ விபத்துக்கள் ஏற்பட்டன?

(இ) அதை உத்தேசித்து செஞ்சி வட்டத்தில் ஒரு தீ அணைப்பு நிலையம் அமைக்கும் உத்தேசமுண்டா ?

(உ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** (அ) 1965 முதல் 1968 மே வரையில் தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி வட்டத்தில் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்ட தீ விபத்துக்களின் எண்ணிக்கை :—

| | நகர எல்லைக்குள் இருந்து வந்த அழைப்புகளின் எண்ணிக்கை. | நகரத்திற்கு அருகிலுள்ள பகுதிகளிலிருந்து வந்த அழைப்புக்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1965 .. .. .. | .. | 5 |
| 1966 .. .. .. | .. | 1 |
| 1967 .. .. .. | 4 | 5 |
| 1968 (மே திங்கள் வரையில்). | 2 | 2 |

(இ) இல்லை.

(உ) இவ் வினா எழவில்லை.



**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, செஞ்சிவட்டத்தில் இப்பொழுது தீ அணைக்கும் காவல் நிலையம் இல்லை என்பதை தெரிவித்துவிட்டார்கள். ஆனால் இப்பொழுது அங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையை ஒட்டி, செஞ்சிக்கும் திருவண்ணாமலைக்கும் 24 மைல், திண்டிவனம் 17 மைல், இப்படி சுற்று வட்டாரத்தில் தீ அணைக்கும் நிலையம் இல்லாததால் அங்கே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. போன திங்கள் கூட என்னுடைய தொகுதியிலே 45 வீடுகள் எரிந்து நாசம் ஆயின. அதை ஒட்டியாவது அங்கே தீ அணைக்கும் அலுவலகம் நிறுவ உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** செஞ்சிக்குப் பக்கத்தில் 27 கிலோ மீட்டரில் திண்டிவனம் இருக்கிறது. செஞ்சிக்குப் பக்கத்திலே தீ விபத்து ஏற்பட்டால் திண்டிவனத்திலிருந்து தீ அணைப்பு இயந்திரம் அனுப்பப்படுகிறது. அங்கும் ஒரு தீ அணைப்பு நிலையம் வேண்டுமென்று கனம் உறுப்பினர் கூறுவாரானால் முன்னாலே நெல்லிகுப்பம் உறுப்பினர் அவர்களுக்கு சொன்ன பதில் இதற்கும் பொருந்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு ரூலிங் பாருங்கள். 'When a Minister has given a negative reply, the Chair would not allow any supplementary question.'

## *Prosecutions under Prohibition Law.*

* 189. *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state —

(*a*) the number of prosecutions launched under the Prohibition Law in Madras City during the last three years, and

(*b*) the steps taken by the Government to strictly enforce the law ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ)—

| | |
|---|---|
| 1965 .. .. .. .. .. .. | 27,685 |
| 1966 .. .. .. .. .. .. | 29,519 |
| 1967 .. .. .. .. .. .. | 31,366 |

(இ) சட்டம் மீறப்படுகின்ற குற்றப்பகுதிகளில் திடீர்சோதனைகள் அவ்வப்பொழுதும் முறையாகவும், நடத்தப்படுகின்றன. கள்ளச்சாரயம் காய்ச்சுவதையும், மேலும் அது சென்னை மாநகருக்குள் கொண்டு வரப்படுவதையும் கண்டுபிடிப்பதற்காக, சென்னை மாநகரிலும், எல்லைப்புறக் கிராமங்களிலும், மற்றும் பெரிய சாலைகளிலும் திடீர் சோதனைகளையும் வண்டிச் சோதனைகளையும் தனி ரோந்துப் படைகள் நடத்துகின்றன.

**திரு. கே. விநாயகம் :** இந்த ஆண்டு கோர்ட்டுகளிலே இந்த வழக்குகள் வருவதில்லை என்று தெரியவருகிறது. அதன் விளைவு ஒரு வேளை மக்கள் இந்த குற்றத்தைச் செய்யவில்லையா, அல்லது வேண்டுமென்றே அரசாங்கத்திடமிருந்து உத்திரவு பெற்று இந்தக் குற்றங்களை கண்டு பிடிக்காமல் விட்டுவிடுகிறார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த வருஷத்தைப்பற்றிய கேள்வி இங்கே எழவில்லை. 1967-வது ஆண்டுவரை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டைப் பற்றிய முழு தகவல் கிடைத்ததும் கனம் உறுப்பினர் கேட்கின்ற கேள்விக்கு பதில் அளிக்க முடியும்.

[1968 ஆகஸ்ட் 31

**திரு. டி. மார்டின் :** டெபடி ஸ்பீக்கர் சார், பெரும்பாலும் குடிக்கின்ற குற்றத்தைச் செய்கின்றவர்கள் தங்களுடைய பழக்கவழக்கத்தின் காரண மாக செய்கிருர்கள் என்று தெரிகிற காரணத்தால், அவர்கள் தண் டனை பெறுகின்ற பொழுது, தனியான ஒரு சிறையில் வைத்து, அவர்கள் மற்ற கைதிகளோடு தொடர்பு கொள்ளாத நிலையில் வைத்து அவர்களை வீட்டுக்கு அனுப்பக்கூடிய ஒரு செயற்குறிப்பு ஏதேனும் உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** ஒவ்வொரு வகையான குற்றவாளிக்கும் ஒவ்வொரு வகையான சிறைச்சாலை அமைக்கத்தக்க அளவுக்கு சிறைச் சாலை நிர்வாக நிலைமை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் யோசனை கள் கூட கூறக்கூடாது.

**திரு. ந. காசிராமன் :** இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களும் சரி, கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பவர்களும் சரி, அவர்களுக்கு ஏற்படு கின்ற அதிகப்படியான இலாபத்தின் காரணமாகவும், கொடுக்கப்படும் தண்டனை குறைவாக இருப்பதாலும் இது நடைபெறுகிறது. ஆகவே, இதைத் தடுப்பதற்காக கடுமையான தண்டனை அளிக்க அரசாங்கம் முய ற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** முன்னுலே வெறும் அப ராதம் மட்டுமே இருந்து வந்த நிலைமையிலே இருந்து இப்பொழுது அவர் களை 6 மாதம சிறைக்கு அனுப்புகின்ற அளவுக்கு சட்டம் திருத்தப்பட்டு இருக்கிறது. இந்த குற்றம் தொடர்ந்து நடந்துகொண்டிருக்குமானுல் அரசு கவனம் செலுத்தி அவ்வாருன நிலை நிச்சயமாக வரும்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** ஐயா, மதுவிலக்குக் குற்றங்களை கண்டு பிடிக்க தனிப் போலீஸ் இலாகா நியமிக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** முதலிலே அது தனியாக வைக்கப்பட்டிருந்தது. பிறகு, அது சரியாக வேலை செய்ய முடியாது என்ற காரணத்தாலே போலீஸ் இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, மதுக்காசமும், அரிஷ் டமும் ஒரே மாதிரியான வாடையாக இருப்பதால், அரிஷ்டம் சாப்பிடு கின்றவர்களை, மது சாப்பிட்டதாக சாதாரண பாமரர்கள் கைது செய்யப் படுகிற சூழ்நிலை இருக்கிறதே அதைத் தவிர்க்க அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** வழக்கறிஞர்கள் தம்மு டைய திறமையினுலே இவைகள் எல்லாம் மதுவிலக்கு சட்டத்தின் கீழே வராது என்று வாதிட்டுப் பல இடத்திலே வெற்றி பெற்றிருக்கிருர்கள். அதைப்பற்றி சட்ட நுணுக்கங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

### காவல் துறையிலுள்ள துப்பறியும் நாய்கள்

**வினு * 190—திரு. என். எஸ். வி. சித்தன் :**
**திரு. கே. வினுயகம் :** } மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

காவல்துறையைச் சேர்ந்த துப்பறியும் நாய் படையுடன் ஜெர்மன் இனத்தை இணைத்து மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** கோயம்பத்தூரிலுள்ள துப்பறியும் நாய் படைக்காக கிழக்கு ஜெர்மனியிலிருந்து துப்பறியும் இரண்டு நாய்களை வரவழைக்க, காவல் துறைத்தலைவர் திட்டமிட்டுள்ளார். காவல் பணிக்குப் பயன்படும் துப்பறியும் நாய்கள் இந்தியாவில் கிடைக்கமாட்டாவா வெனக் கண்டறியுமாறு அவர் கேட்கப்பட்டுள்ளரர்.



1968 ஆகஸ்ட் 31]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, இப்பொழுது பகல் கொள்ளைகள் திடீர் திடீரென்று அதிகமாகி வருவதால் நாய் படையை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** அதிகப்படுத்த வேண்டு மென்ற எண்ணத்திலே தான் எங்கெங்கு அவைகள் கிடைக்கின்றன என்று இப்பொழுது விசாரிக்கப்பட்டு வருகின்றன. ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்படுவது மட்டும் அல்லாமல் இந்தியாவிலே வேறு மாநி லத்திலேயே இப்படிப்பட்ட நாய்கள் கிடைக்குமா என்று போலீஸ் துறை விசாரித்துக்கொண்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, instead of depending upon the human intelligence to detect these crimes, we now go in for animals. Is the Hon. Chief Minister aware of the fact that even animals have failed in so many cases and even innocent people got into trouble on account of the indecisive character of this dog squad ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I take it as the advocate's version of the problem.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** சார், இந்த மாதிரி ஜெர்மன் அல்சேஷன் நாய்கள் போன்றவைகள் கூட நமது தமிழ்நாட்டிலுள்ள இராஜ பாளையத்திலேயே கிடைக்கின்றன. ஆகவே, அந்த இராஜபாளையம் நாய் களையும் இந்த துறையிலே பயிற்றுவிக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** நான் ஏற்கனவே சொன்ன படி வெளியிலேயிருந்துதான் இந்த நாய்கள் தருவிக்கவேண்டுமென்று இல்லை. நம்முடைய நாட்டிலேயே இப்படிப்பட்ட முறையிலே பயிற்சி கொடுக்கக் கூடிய முறையிலே நாய்கள் கிடைக்குமானுல் அதையும் பயன் படுத்தலாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** கொலைக் குற்றங்கள், மற்ற குற்றங்கள் ஆகியவைகள் இந்த நாய்கள் மூலமாக எத்தனை கண்டுபிடிக்கப்பட்டன, எத்தனை குற்றங்களை இந்த நாய்கள் கண்டுபிடிக்காமல் விட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணுதுரை :** அதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

### திருட்டு, கொலைக்குற்றங்கள்

*** 191 வினு.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சென்ற 1966–67-ம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட திருட்டு, கொலைக் குற்றங்கள் முறையே எத்தனை ? இவை 1965–66-ம் ஆண்டைவிட குறைந்துள்ளதா அல்லது கூடியுள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** 16,240 திருட்டுக் குற்றங் களும் 404 கொலை குற்றங்களும் துப்புத் துலக்கப்பட்டன. இந்த இரு தலைப்புகளின் கீழும் துப்புத் துலக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்தக் குற்றங்களில் அரசியல் காரணமாக ஏற்பட்ட கொலைகள் எத்தனை, குடும்பத் தகராறு காரணமாக ஏற்பட்ட கொலைகள் எத்தனை என்று கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** அரசியல் காரணங்களுக் காக மிகக் குறைவாகத்தான் இருக்குமென்று நான் கருதுகிறேன். ஆனுல் அந்த விவரம் என்னிடத்திலே இல்லை.

[1968 ஆகஸ்ட் 31

**திரு. அ. மாரிமுத்து :** தலைவர் அவர்களே, கண்டு பிடிக்கமுடியாத திருட்டுகளும் கொலைக் குற்றங்களும் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** 1965–66-லே கண்டு பிடிக்கப்பட்ட, செய்த குற்றங்களைவிட இப்பொழுது அதிகரித்திருக்கிறது, 1966–67-ல். 1965–66-ல் 62·6 சத விகிதம் தான் கண்டு பிடிக்கப்பட்டது. 1966–67-ல் 67·3 சத விகிதம் கண்டு பிடிக்கப்பட்டது.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, எந்த மாவட்டத்தில் திருட்டு, கொலைக் குற்றங்கள் அதிகம் ஏற்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மாவட்டங்களில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறது. இராமநாதபுரத்தில் குறைவாக இருக்கிறது. தர்மபுரியில் மிகக் குறைவாக இருக்கிறது. நீலகிரியில் குறைவாக இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், குற்றங்கள் அதிகப்பட்டு வருவது சமுதாயத்திலே இருக்கிற மோசமான நிலைமையை காட்டுகின்றது. இன்றைய வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும் அதற்குக் காரணமாக இருக்கலாம் என்று இந்த அரசு கருதுகின்றதா? அப்படி கருதினால் அவைகளை மாற்றுவதன் மூலம் குற்றத்தைக் குறைக்கலாம் என்று எண்ணுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது உள நூல் ஆராய்ச்சியாளர்கள் நாடெங்கிலுமாக சொல்லிக்கொண்டு வருகின்ற கருத்து. வறுமையினைப் போக்கவேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய திட்டங்களிலே ஒன்றாகும்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** சார், கோவை ஜில்லாவில் அதிகக் குற்றங்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது. பெரிய ஜில்லா என்ற முறையில் அதற்கு 2 மந்திரிகள் கொடுக்கப்பட்டதா, அல்லது அதிகக் குற்றங்கள் இருக்கிறது என்பதற்காக கொடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம்உறுப்பினர் அவர்கள் கோவை ஜில்லாவிற்கு 2 மந்திரிகள் கொடுத்ததை குற்றம் என்று கருத மாட்டார் என்று கருதுகிறேன்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கோவை ஜில்லாவில் குற்றங்கள் அதிகமாக இருப்பதாகத் தெரிவித்தார்கள். கோவை ஜில்லாவைப் பொறுத்தவரையில்
முற் பகல் 9-30 கொலைக் குற்றங்கள் அதிகமாக நடந்திருப்பதாகத் தெரிவித்தார்களே தவிர, திருட்டு அல்லது வேறு மோசமான குற்றங்கள் அதிகமாக இருக்கும் என்று நான் கருதவில்லை. கோவை ஜில்லாவில் எந்தக்குற்றம் அதிகமாக இருக்கிறது என்பதை முதல் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதைப்பற்றி அதிகமாக விவரங்களை கனம் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்தானா என்ற ஒரு ஐயப்பாடு இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கோவையில் கொலைக் குற்றம்தான் அதிகமாக இருக்கும் என்று கருதுகிறார்கள். ஆனால் என்னிடமுள்ள தகவலின்படி அங்கே இரண்டு வகையான குற்றங்களும் அதிகமாக இருக்கின்றன.



1968 ஆகஸ்ட் 31]

*Five days work in a week.*

*207 *Q.*—Dr. H. V. HANDE
Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR, } Will
Thiru S. J. RAMASWAMY :

the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce 5 day week work in the Secretariat ;

(*b*) if so, the details thereof ;

(*c*) whether the Government has received any proposals from the Tamilnadu Secretariat Staff Association with regard to the working of the Secretariat employees ; and

(*d*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) இத்தகைய ஒரு செயற்குறிப்பு ஆலோசனையிலுள்ளது.

(இ) காலை 10-30 முதல் மாலை 5 மணி வரையிலுள்ள அலுவலக வேலை மணி நேரங்களை காலை 8-30 முதல் மாலை 4 மணி வரை மாற்றும்படியும், வாரத்தில் 6 வேலை நாட்களுக்குப் பதிலாக ஐந்து வேலை நாட்களென மாற்றும்படியும் இச்செயற்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ) ஆம்.

(எ) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியாளர்ச் சங்கத்தை சார்ந்த ஒரு சிலர் மகஜர் மனுவில் இச் செயற்குறிப்புகளை வரவேற்கின்றனர். ஆனால், புதிய வேலை மணி நேரங்கள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இருக்கலாமெனக் கருத்துரை தெரிவித்துள்ளனர்.

**திரு. கே. குமாரசாமி :** வாரத்தில் 5 நாட்கள் வேலை செய்கின்ற திட்டம் இதிலே மட்டுமல்ல. தொழில்களிலும் அப்படி உண்டாக்குவதன் மூலம் பல ஆயிரக்கணக்கானவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். ஓரளவுக்கு மக்களுக்கு உபயோககரமான ஒரு திட்டமாக இருக்கும் என்பதை அரசு அறிந்து முடிவு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அரசாங்கம் தன்னுடைய பணிமனைகளில் இந்தத் திட்டத்தை செயல் படுத்த முடியாத நிலையில் மற்றவர்களுக்குப் பரிந்துரைப்பதில் இப்பொழுது பயனில்லை என்று கருதுகிறேன்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, சிப்பந்திகளுடைய சங்கத்தார் கேட்டிருக்கக் கூடிய கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொள்ளுமா அல்லது பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த செயற்குறிப்பு இப்பொழுது பரிசீலனையில் இருந்துவருகிறது.

Thiru K. VINAYAKAM : Whereas the present working hours in Government offices is giving the expected results and diminishing returns in the evening hours will be felt by the employees, will this Government continue to maintain the *status quo* instead of introducing this kind of reform ?

The Hon. Thiru C. N. ANNADURAI : If the Hon. Member's view is to be taken as right, there would have been no necessity for a new proposal. The very fact that a new proposal is being examined proves beyond doubt that the present method needs to be rectified or corrected or re-arranged.

*Ragging in colleges*

*208 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of instances of ragging that had taken place in different colleges in our State during the months of June and July 1967; and

(*b*) the remedial steps taken to prevent such occurences ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) 20.

(இ) நெடுநகையாடித் துன்புறுத்துவதைத் **(ragging)** தடுக்கவும், புதிய மாணவர்கள் உரிய கண்ணியத்துடன் நடத்தப்படவும் நட வடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென எல்லாக் கல்லூரி முதல்வர் களுக்கும் பல்கலைக் கழகம் சுற்றறிக்கைகள் அனுப்பியது. சுற்றறிக்கையின் நகல்கள் மாணவர்களின் தகவலுக்காக கல்லூரி, மாணவர் இல்லங்களின் அறிவிப்புப் பலகைகள் முதலிய இடங்களில் ஒட்டி வைக்கப்பட்டன. ஒவ் வொரு கல்லூரியிலும், கல்லூரி ஆசிரியர் முதலானோர் மாணவர் இல்லங் களில், கண்டிப்புடனும், விழிப்புடனும் கண்காணித்தனர். மாணவர்களைக் கண்காணிக்கும்படியும், மேலும் அவர்கள் நெடுநகையாடித் துன்புறுத்தும் செயல்களில் ஈடுபடா வண்ணம் அறிவுரை வழங்கும்படியும் ஆசிரியர்கள் சிறப்பாகக் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

THIRU K. VINAYAKAM : Ragging in the college has become a nuisance. Is the Hon. Minister sware of the fact that last year a suicide has been committed, by one of the students subjected to ragging ? Were there instances of ragging this year also in any college in the State ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று சென்ற ஆண்டு இருந்தது. இந்த ஆண்டு எங்கும் அதைப் பற்றிய புகார்கள் எதுவும் இது வரையில் வரவில்லை. அந்த வகையில் தான் சென்ற ஆண்டு சிலபல கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, மூன்று, நான்கு கல்லூரி களில். குறிப்பாக கோவை இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜியில் 12 ராகிங் கேஸ்கள் நடைபெற்றன. அதில் நான்கு பேர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டார்கள். பதினேறு பேர்கள் கல்லூரியை விட்டு வெளியேற்றப் பட்டார்கள். கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜ், கோவையில் இரண்டு ராக்கிங் கேஸ்கள் நடைபெற்றன. அதில் மூன்று பேர்கள் சஸ்பெண்டு செய்யப் பட்டார்கள். கிண்டி இன்ஜினீயரிங் காலேஜில் மூன்று கேஸ்கள் நடை பெற்றன. அதில் ஒருவர் சஸ்பெண்டு செய்யப்பட்டார் இரண்டு பேர்கள் கல்லூரியைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள். சேலம் தியாகராஜா என்ஜினீ யரிங் காலேஜில் இரண்டு ராகிங் கேஸ்கள் நடைபெற்றன, அதன் காரண மாக ஆறு பேர்கள் வெளியேற்றப்பட்டார்கள். மதுரை மெடிகல் காலேஜில் ஒரே ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் காரணமாக மூன்று பேர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. வேறு எந்தக் கல்லூரியிலும் சென்ற ஆண்டு இதுமாதிரி நடைபெற வில்லை. இந்த ஆண்டு எங்கும் நடைபெற்றதாகத் தகவல் எதுவும் வர வில்லை.

THIRU K. VINAYAKAM : I am grateful for the stringent action against these offenders. Is it a fact that the Principals of some colleges reinstated these students who were responsible for this ragging ? Subsequent to the punishment were these students taken back on representation by the parents that they would behave properly in future.



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மறுபடியும் அவர்கள் பெற்றோர்கள் விரும்பியபடி அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்களா, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது பற்றிய குறிப்புகள் இப்பொழுது என்னிடம் இல்லை. அதைப் பற்றி தனியாகக் கேட்டால், அதற்கான குறிப்புகளைச் சேர்த்துத் தரலாம்.

*Midday meals programme in North Arcot district*

*209 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the CARE organisation is contemplating to raise an Agricultural Farm to feed a number of central kitchens under the Midday Meals Programmes in the district of North Arcot;

(*b*) how many acres of land does it propose to reclaim for cultivation; and

(*c*) how many kitchens does it propose to support to start with ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) and (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Is it a fact that the CARE organisation were contemplating and approached the State Government to acquire some lands in our State and that the Government have also given consent to place some acquired lands at their disposal for this purpose ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் அப்படிப்பட்ட ஒரு விவசாயப் பண்ணை அமைப்பது பற்றி கேள்வி கேட்ட காரணத்தினுல், இல்லை என்று சொன்னேன். ஆனுல், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்தில் செயற்காடு என்ற இடத்தில் ஒரு மத்திய உணவுச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே 31 எக்கர் நிலத்தில் அது அமைக்கப்பட்டு, அது நடைபெறுவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மத்திய உணவுச் சாலை அமைக்கப்பட்ட தன் நோக்கம் எண்ணியபடி சிறப்பாக நிறைவேறிவருகிறது. காய்கறி போடுகிற திட்டம் நிறைவேறி வருகிறது. ஆனுல் பயிர் செய்கின்ற திட்டம் சரியாக நிறைவேறவில்லை. வட ஆற்காடு மாவட்டத்திலும், அதைப் போல வேறு இரண்டு மாவட்டங்களிலும், செயற்காட்டில் இருப்பது போன்ற மத்திய உணவுச் சாலைகள் 73 ஊராட்சி ஒன்றியங்களில் வைப்பதற்கு இப் பொழுது திட்டமிடப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் காய்கறி பயிரிடுவதற்கு மட்டும், ஒரு சென்ட்ரல் கிட்சன் (மத்திய உணவுச் சாலை) அதையொட்டி தேவையான காய்கறிகளைப் போடலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆனுல், ஒரு குறிப்பிட்ட இடத்தில் பெரிய ஒரு பண்ணை அமைத்து, ஒரு மாவட்டம் முழு வதற்குமோ, அல்லது இரண்டு, மூன்று மாவட்டங்களுக்குமோ அரிசியை தருவதற்கான அளவுக்கு நெல் பயிர்த் தொழில் நடத்தலாமா என்பதைப் பற்றி அவர்கள் விசாரித்தார்கள். வட ஆற்காடு ஆரணி ஜாகிர்தாருக்குச் சொந்தமான பூசமலைப்க்குப்பம் பகுதியை ஆராய்ந்தார்கள். கேர் நிறுவனத்தினர் பார்த்து விட்டு பயிர்ச் செலவுக்கு ஏற்றது அல்ல என்று குறிப்பிட்ட காரணத்தினுல், அந்த இடம் கைவிடப்பட்டது. வேறு இடம் இருக்கிறதா என்று ஆராயப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆம் செய்யூரிலிருந்து பனையூர் செல்லும் சாலையை தேவையான குறுக்கு வடிகால் அமைப்புகளுடன் மேம்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியை விரைவில் முடிக்கும்படி, சென்னை நெடுஞ்சாலை கிராமப் பணிகள் துறை மேற்பார்வைப் பொறியாளருக்கு நெடுஞ்சாலை கிராமப் பணிகள் துறைத் தலைமைப் பொறியாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, சாதாரண மழை காலத்தில்கூட பாதை அடைபட்டுப் போகிறது. ஆகவே, உடனடியாக இதைச் செயல் படுத்த அமைச்சர் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** என்னுடைய பதிலிலேயே அதை விரைவில் முடிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

*** 213 வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப்பாரா—

(அ) மேலூரிலிருந்து திருச்சி செல்லும் சாலையையும், கொட்டாம் பட்டியிலிருந்து திண்டுக்கல் செல்லும் சாலையையும் 100 அடி அகலமாக்குவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) இத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

***214. *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR :** Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the expenditure incurred during the last three years by the Government in maintaining the city roads taken over from the Madras Coporation ;

(*b*) the details of the roads so taken for maintenance ; and

(*c*) whether the Government propose to hand over the maintenance work back to the Madras Corporation ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ), and (இ) : மன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விவர a அறிக்கையைப பார்க்குமாறு மதிப்பிற்குரிய உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

(உ) இல்லை, அத்தகைய செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே. விநாயகம் :** சார், கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான ரோடுகளை பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் எடுக்க வேண்டும் என்று ஒரு விதியின் அடிப்படையில், சென்னைக்கு வருகிற ரோடுகள் அனைத்தையும் எடுத்துக் கொள்ள செயற்குறிப்பு ஏதாவது உண்டா ? குறிப்பாக கோடம்பாக்கம் ஆற்காடு ரோடில் அதிகமான வண்டிகள் சென்று, அதிக போக்குவரத்து இருப்பதால், அதை விசாலப்படுத்துவதற்கும், வேறு வழிகள் செய்வதற்கும் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுதே அரசாங்கம் எடுத்திருக்கும் சாலைகளை மாநகராட்சி திரும்பக் கேட்கிறார்கள். பொதுவாக அப்படிப்பட்ட செய்ற்குறிப்பு எதுவும் இல்லை.

---

a 757–758-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, மெரினா பீச் ரோடு அரசாங்கப் பராமரிப்பில் உள்ளதா அல்லது கார்ப்பரேஷன் பராமரிப்பில் இருக்கிறதா ? குறிப்பாக பப்ளிக் ஒர்க்ஸ் ஆபீஸ்கள் இருக்கும் இடத்திற்கு எதிரில் மெரினா சாலை மிக மோசமாக இருக்கிறது. அதைச் சரி செய்ய அரசாங்கம் உத்தரவு போடுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுதே, வடக்கே கஸ்டம்ஸ் ஹவுசிலிருந்து பீச்சு சாலைகளெல்லாம் அரசாங்கப் பராமரிப்பில் தான் இருக்கின்றன. உறுப்பினர் சொன்ன குறைபாடுகளும் கவனிக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், சென்னை நகரம் நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்து கொண்டு வருகிறது. ஆகவே, நெடுஞ்சாலை பராமரிப்புக்கு அதிகமான தொகைகள் ஒதுக்கப்பட வேண்டும். ஆனால் இங்கே பார்க்கும்போது, 1964-65-ல் ரூ. 4,08,847 என்று இருந்தது, 1966-67-ல் ரூ. 3,61,479 என்று குறைந்துவிட்டிருக்கிறது. அப்படிக் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பழுது குறைவாக இருந்திருக்கும். ஆகவே, செலவும் குறைவாக இருக்கும்.

### உடன்குடி பகுதியில் தானிய விநியோகம்

*215 வினா—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சாத்தான்குளம் உடன்குடி பகுதிகளிலுள்ள (minor) பஞ்சாயத்துக் கிராமங்களில் ரேஷன் கொடுக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) தூத்துக்குடி சப் தாலூக்காக்களில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் ரேஷன் வழங்கப்படுகின்றதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) அண்டு (இ) சாத்தான்குளம் பகுதியில் அரிசி தேவைப்படுகிற 18 கிராமங்களில் நியாயவிலை கடைகள் மூலமாக அரிசி வழங்கப்படுகிறது. தூத்துக்குடி துணைவட்டத்தில் 20 கிராமங்களுக்கு அரிசி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் ஸார், சாத்தான்குளம் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், அறுவடை காலம் என்று பல கிராமங்களில் ரேஷன் நிறுத்தப்பட்டு இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ? அந்த கிராமங்களில் திரும்பவும் அரிசிபோட சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அறுவடைக் காலத்தை முன்னிட்டு, சாத்தான்குளம், உடன்குடி பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில், சில பஞ்சாயத்துக்களில் உணவுப் பங்கீடு நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் அங்கேயெல்லாம் இப்பொழுது திரும்பவும் குடும்பக் கார்டு முறையில் பங்கீடு செய்யப்படுகிறது. சாத்தான்குளத்தில், பெரியதலை, புடுக்கப்பட்டு, அரசூர், எழுவரைமுக்கி, அலகப்பாபுறம் போன்ற 18 பஞ்சாயத்துகளிலும், உடங்குடி பஞ்சாயத்து யூனியனில், அறியக்குறிச்சி, செட்டியப்பத்து, நங்கைமொழி, வெங்கடராமானுஜபுரம் போன்ற 12 பஞ்சாயத்துக்களும் ஆகும். அறுவடை காலம் என்பதற்காக முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும், இப்பொழுது அது ரெஸ்டோர் செய்யப்பட்டுவிட்டது.

**திரு மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே,. தூத்துக்குடி சப்தாலூகாவில் நஞ்சை நிலம் இருக்கும் கிராமங்களுக்கு அரிசி கொடுப்பதில்லை என்பது உண்மையா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கிராமங்களில் உணவுப் பங்கீடு கொடுப்பதில்லை என்று சொல்வது சரியானது அல்ல. எங்கு ரொம்ப நெருக்கடி இருக்கிறதோ, அங்கே பங்கீடு செய்யப் பட்டுக் கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் அறுவடை நடக்கிறது என்கிற காரணத்தால், தேவையில்லை என்று நிறுத்தியிருக்கலாம்.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே நகராட்சி மன்ற எல்லையில், வீடு கிடைக்காத காரணத்தால், அருகாமையில் உள்ள கிராமத்தில் நகராட்சியில் வேலை செய்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால், நகரத்தில் உணவுப் பங்கிடு இருந்தாலும், கிராமத்தில் பங்கீடு கிடையாது. ஆகவே, நகராட்சி எல்லையில் இருக்கும் கிராமங்களில் இருப்பவர்களுக்கும் ரேஷன் கிடைக்க உத்தரவு போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்தமாதிரி உத்தேசம் இல்லை. கொடுக்க வேண்டிய இடங்களில் இருக்கும் நிலைமைகளை அனுசரித்துத்தான் வினியோகிக்கப்படும்.

**திரு பி. துரைராஜ் :** சார், நஞ்சைப் பகுதிகளில் உணவுப் பங்கீடு அவ்வளவு அவசியம் இல்லை. வரட்சியான பிரதேசங்களுக்குத்தான் வேண்டும் என்று அமைச்சர் சொன்னார்கள். நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோவில் பகுதி மிகவும் வரண்ட பகுதி, நஞ்சை கிடையாது. அங்குள்ள எல்லா கிராமங்களுக்கும் உணவுப் பொருள் ரேஷன் போட நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நம்முடைய உணவு தானியங்கள் கையிருப்பைப் பொறுத்து அவசியமான இடங்களுக்குக் கொடுக்கப் பட்டு வருகிறது.

### முன்னாள் படைவீரர்களுக்கு வீட்டுமனை

*216 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை முன்னாள் ராணுவத்தினர் சங்கத்திடம் இருந்து 1967-ம் வருடம் ஏப்ரல் மாதம் 15-ம் தேதி, 1967 ஜூலை மாதம் ஆகிய காலங்களில் வீடு கட்ட நிலம் கோரி அரசாங்கத்திற்கு விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கோயம்புத்தூர் வட்டத்தில் உள்ள குறிச்சி கிராமத்தில் நில அளவை 603-1எ எண்ணில் முன்னாள் படை வீரர்களுக்கு வீடு கட்டுவதற்காகக் காலி மனை எதுவும் இல்லை என்று கோயம்புத்தூரில் உள்ள முன்னாள் படை வீரர் சங்கத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### *Training for fishermen.*

*180 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is proposed to conduct State-wide training in the Departmental Inshore Fishing Stations and Training Centres under the auspices of Thiru Greeves Cotton & Co., and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

*181 வினா—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களுக்கு பயிற்சியளிக்கும் நிலையங்கள் தமிழ் நாட்டில் எத்தனை உள்ளன ?

(இ) எந்த எந்த ஊரில் இந்த நிலையங்கள் உள்ளன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) 7 (கடலில் மீன்பிடி பயிற்சி நிலையங்கள்—6, உள் நாட்டு நீர் நிலைகளில் மீன்பிடி பயிற்சி நிலையம்—1.)

(இ) கடலில் மீன்பிடி பயிற்சி நிலையங்கள் கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன—

(1) அடையாறு.
(2) கடலூர்.
(3) நாகபட்டினம்.
(4) மண்டபம்.
(5) தூத்துக்குடி.
(6) குளச்சல்.

உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் பிடி பயிற்சி நிலையம் மேட்டூர் அணையில் உள்ளது.

**திரு. ந. தருமலிங்கம் :** தஞ்சை மாவட்டத்தில், கோடிக்கரை, அதிராம்பட்டி முத்துப்பேட்டை போன்ற இடங்களில் மீன் பிடிக்கும் பயிற்சி நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று செயற்குறிப்பு அரசுக்கு வந்திருக்கிறதா, அதற்கான ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படியிருந்தால், அது பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** இந்த நிலையங்களில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு எவ்வளவு நாட்களுக்குள்ளே மீன் பிடிக்க படகு கொடுக்க உத்தேசம், எத்தனை கொடுக்கப்படுகிறது, தேவை எத்தனை, அரசாங்கத்தில் ஸ்டாக் எத்தனை இருக்கிறது என்று சொல்லமுடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிக்கேள்வி போடவேண்டும்.

**திரு. ந. வீராசாமி :** தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு பயிற்சி நிலையங்கள் ஏழு என்று அமைச்சர் தெரிவித்தார்கள். இந்தப் பயிற்சி நிலையங்களை ஒட்டி மீன் பதனிடும் தொழிற்சாலையும் ஏற்படுத்த ஏதாவது செயற்குறிப்பு உண்டா ?

(பதில் இல்லை.)

**திரு. என். துரைபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி நிலையங்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, மற்ற இனத்தவர்களைப் பயிற்சிக்கு மறுக்கப்படுகிறார்கள் என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது சரியானதல்ல.



## செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பழத்தோட்டங்கள்

*182 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கின்ற பழத் தோட்டங்களின் விஸ்தீர்ணம் எவ்வளவு ?

(இ) பழத் தோட்டங்களுக்கு 1964-65, 1965-66, 1966-67-ம் ஆண்டுகளில் அரசினர் செலவழித்திருக்கிற ரூபாய் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) 9,581 ஏக்கர்.

(இ)

| ஆண்டு. | செலவு ரூபாய். |
|---|---|
| | 68,800 |
| (1) 1964-65 .. | 45,500 |
| (2) 1965-66 .. | 44,900 |
| (3) 1966-67 .. | |

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, பழத் தோட்டங்களை வைப்பதற்காக சர்க்கார் மானியமாக எவ்வளவு தருகிறார்கள் ? கடனாக எவ்வளவு தருகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிக் கேள்வி போடவும்.

## திருப்பூரில் செயற்கை கருமுறை நிலையம்

*183 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் திருப்பூரில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செயற்கைக் கருமுறை நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம், எனில், எப்போது துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) அண்டு (இ) கோவை தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செயற்கை முறைக் கருவூட்டு கிளை நிலையம் ஒன்று திருப்பூரில் 1965-ம் வருடம் ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் செயலாற்றி வருகிறது. இந்தக் கிளை நிலையம் கால் நடை மருத்துவமனையிலேயே நிறுவப்பட்டுள்ளது.

## சிறைச்சாலை பார்வையாளர் குழு

*217 வினா—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகமெங்குமுள்ள சிறைச்சாலைகளைப் பார்வையிடுவதற்கென "சிறைச்சாலையைப் பார்வையிடும் குழு" அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், குழுவில் யார் யார் உள்ளனர் ?

(உ) இவர்களின் பதவிக்காலம் எதுவரையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

### பொன்னேரியில் சிவில் கோர்ட்

*218 வினு.—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரியில் சிவில் கோர்ட் எற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம், எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### கடலூர் வட்டத்திலுள்ள பஞ்சாயத்துக்கள்

* 219 வினு—**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தென்னுர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூர் வட்டத்தில் நான்கு ஆண்டு காலமாக கணக்குகள் தணிக்கையே (Audit) செய்யப்படாமலிருக்கும் பஞ்சாயத்துக்கள் யாவை ?

(இ) தணிக்கை செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) கடலூர் தாலுக்காவிலுள்ள எந்த பஞ்சாயத்தும் நான்கு ஆண்டுகளாக கணக்குகள் தணிக்கை செய்யப்படாமல் இருந்ததில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் நான் போடும்போது, பல பஞ்சாயத்துகளில் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஆடிட் செய்யவில்லை. எனவே, 1967-ம் ஆண்டு இறுதியில் ஆடிட் செய்யப்பட்ட பஞ்சாயத்துக்கள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்தின் கணக்குகள் தணிக்கை செய்யப்படவில்லையென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கணக்குகள் தணிக்கை செய்யப்படாமல் இருந்ததில்லை யென்றுநான் பதில் தரப்பட்டிருக்கிறது.

**திரு. எ. கே. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, எல்லா பஞ்சாயத்துகளிலும் தணிக்கை செய்நாகிவிட்டது என்ற குறிப்பை அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். அது, கடலூர் வட்டத்திலுள்ள பஞ்சாயத்துகளில் மட்டும் தணிக்கையாகி விட்டதா ? அல்லது எல்லா இடங்களிலும் உள்ள பஞ்சாயத்துகளில் தணிக்கையாகி விட்டதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கேள்வி கடலூர் வட்டத்தைப் பொறுத்தது.

### திருப்பூரில் உள்ள மத்திய பஸ் நிலையம்

* 220 வினு—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருப்பூர் நகரில் தற்போது உள்ள நகராட்சி மத்திய பஸ் நிலையம் வேறு இடத்தில் அமைக்க கேட்டு நகராட்சி மன்றம் அரசிடம் விண்ணப்பித்துள்ளதா ?



(இ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, திருப்பூரில் தற்போது இருக்கிற பஸ் நிலையம் போதுமான வசதியுள்ளதாக இல்லை. ஆகவே, அதை அருகாமையில் வேறொரு இடத்தில் மாற்றியமைக்க வேண்டுமென்று நகராட்சியிடமிருந்து கோரிக்கை ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா ? அதன் மீது விரைவான நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :-** திருப்பூர் நகராட்சியிடமிருந்து அப்படிப்பட்ட கோரிக்கை வருமாஞல் அரசாங்கம் அதை பரிவுடன் பரிசீலிக்கும்.

### வெள்ளிக் குறியிடாத விஞக்கள்.

### *Cases of Corruption against Tahsildars*

*Q.* 85—**Thiru A. M. RAJA :** Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) the number of Tahsildars who have been dealt with for corruption charges from 1962 to 1968, district-wise ; and

(*b*) the results thereof ?

*A.*—(*a*) Eight Tahsildars in Madurai district, six in Tiruchirappalli, four each in North Arcot, Chingleput and Ramanathapuram districts, three each in Coimbatore and Salem districts, two in Thanjavur and one each in South Arcot and Tirunelveli districts have been dealt with for charges of corruption during 1962-1968.

(*b*) As a result of the action taken, out of the 36 cases of Tahsildars, five have been dismissed from service, one has been removed from service, two have been compulsorily retired from service, one has been censured; charges have been dropped in respect of 8 Tahsildars and in respect of the remaining 19 cases disciplinary action is pending.

**விடை.**—(அ) மதுரை மாவட்டத்தில் எட்டு தாசில்தார்கள், திருச்சிராப்பள்ளியில் ஆறு தாசில்தார்கள், வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, இராமநாதபுரம் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் நான்கு தாசில்தார்கள், கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று தாசில்தார்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் இரண்டு தாசில்தார்கள், தென் ஆர்க்காடு, திருநெல்வேலி மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு தாசில்தார் ஆகியோர் மீது லஞ்சக் குற்றங்கள் குறித்து 1962 முதல் 1968 வரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(இ) நடவடிக்கை மேற்கொண்டதன் விளைவாக, 36 தாசில்தார்களில் 5 பேர் பணியிலிருந்து தள்ளப்பட்டனர், ஒருவர் பணியிலிருந்து நீக்கப்பட்டார், இருவர் கட்டாயமாகப் பதவி ஓய்வு அளிக்கப்பட்டனர், ஒருவர் கண்டிக்கப்பட்டார். 8 தாசில்தார்கள் குறித்த குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரையில், அவர்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டன. எஞ்சியுள்ள 19 தாசில்தார்களைப் பொறுத்தவரை, ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது.

### கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரணம்

**விஞ** 86—**திரு. ஏ. அ. சுப்பராஜா :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா ?

விடை.—கைத்தறி நெசவாளர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக, பொதுவாக கூட்டுறவுத் துறையின் மூலமாக ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் அரசாங்கம் பல்வேறு திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அத்தகைய திட்டங்களில், அடியிற் கண்டவை அடங்கும் :—

(1) பங்கு மூலதனக் கடன்—கூட்டுறவு அமைப்பின்கீழ் நெசவாளர்களைச் சேர்த்தல்.

(2) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வட்டி வீதத்தின் கீழ் கொடுக்கப்படும் நடைமுறை மூலதனக் கடனுக்கு வட்டி செலுத்த உதவித் தொகை கொடுத்தல்.

(3) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவித் தொகை, கடன் கொடுத்தல், வசதி மிகுந்த கருவிகளை வழங்குதல்.

(4) கைத்தறி ரகத் துணிகளை தள்ளுபடி வழங்கி விற்பனை செய்வதற்காக சங்கங்களுக்கு உதவித் தொகை அளித்தல்.

(5) விற்பனைக்கும் விளம்பரத்திற்கும் உதவித் தொகை வழங்குதல்.

(6) தறியேதுமில்லாத நெசவாளர்களின் நன்மைக்காக தொழிற்சாலை வகையிலமைந்த கூட்டுறவுச் சங்கத்திற்கு உதவித் தொகை தருதல்.

(7) நெசவாளர் வீட்டுவசதித் திட்டம்.

(8) உதவித் தொகையுடன் கூடிய சிக்கன நிதித் திட்டம்.

(9) பயிற்சியளிக்கும் திட்டங்கள்.

(10) நிர்வாகப் பணியாளர்களை வேலைக்கு வைத்துக்கொள்ள உதவித் தொகை வழங்குதல்.

(11) நெசவாளர்கள் தறி முதலாளிகளிடம் கடன்பட்டிருப்பதினின்றும் விடுபட்டு கூட்டுறவுச் சங்கங்களில் சேருவதற்குக் கடன் தொகை அளித்தல்.

(12) பட்டு, செயற்கைப் பட்டு நெய்யும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளித்தல்.

(13) தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தில் அரசாங்கம் பங்கேற்றல்.

(14) கூட்டுறவு அமைப்பின்கீழ் வராத நெசவாளர்களுக்கு உதவுவதற்காக கைத்தறி நிதிக் கார்ப்பொரேஷன் ஒன்றை அமைத்தல்.

கைத்தறித் தொழிலின் 1968–69-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டக் கணக்கு 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் தேதி அன்று சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்டபோது, உடன் வைக்கப்பட்ட "1967–68-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் வளர்ச்சி பற்றிய ஆய்வில்" இத் திட்டங்களின் விவரமும் நடப்பு ஆண்டின் வேலைத் திட்டமும் கொடுக்கப்பட்டுள்ளன.

*A*.–Several schemes have been sanctioned by the Government under the Five-Year Plans for the economic uplift of the weavers, generally through the co-operative sector. The following are among them :—

(1) Share capital loans—Admission of weavers in the co-operative fold.

(2) Subsidy towards interest on working capital loans given under concessional rates of interest to weavers' co-operative societies.

(3) Subsidy and loan to weavers' co-operative societies and supply of improved appliances.

(4) Subsidy to societies to allow rebate on sales of handloom cloth.

(5) Subsidy towards Marketing and Publicity.



(6) Subsidy to Factory type of Co-operative Society to the benefit of loomless weavers.

(7) Housing Schemes for weavers.

(8) Contributory Thrift Fund scheme.

(9) Training schemes.

(10) Subsidy towards employment of managerial staff.

(11) Loans to weavers to relieve their indebtedness to master-weavers and join the Co-operatives.

(12) Financial assistance to Silk and Artsilk Weavers' Co-operative Societies.

(13) State participation in the share capital of Apex Society.

(14) Establishment of a Handloom Finance Corporation to assist the Weavers outside co-operative fold.

The details of the schemes and the programme for the current year have been furnished in the "Review on the Development of Handloom Industry in Madras State during 1967–68" placed on the Table of the House when the Budget for Handloom Industry for 1968–69 was moved on 22nd March 1968.

## புதிய பத்திரப்பதிவு அலுவலகங்கள்

விஞ 87—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய அரசு பொறுப்பு ஏற்ற பிறகு இதுவரை மாவட்டவாரியாக எத்தனை பத்திரப் பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது ?

(இ) பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க வேண்டுமானால் என்னென்ன அம்சங்கள் இருக்க வேண்டும் ?

விடை.—(அ) கீழ்க்காணும் பதிவு மாவட்டங்களில் மொத்தம் 9 அலுவலகங்கள் திறக்கப்பட்டன :—

| | |
|---|---|
| சிதம்பரம் .. .. .. .. .. .. | 1 |
| செங்கற்பட்டு .. .. .. .. .. .. | 1 |
| திண்டுக்கல் .. .. .. .. .. .. | 1 |
| சென்னை .. .. .. .. .. .. | 1 |
| மதுரை .. .. .. .. .. .. | 1 |
| இராமநாதபுரம் .. .. .. .. .. | 1 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. .. .. | 1 |
| திருவண்ணாமலை .. .. .. .. .. | 2 |
| மொத்தம் .. | 9 |

(இ) பொதுவாக அந்தந்தப் பகுதிகளின் தேவைகளை ஒட்டிப் புதிய பதிவு அலுவலகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. புதிய அலுவலகம் ஏற்படுத்தும் தேவையுள்ளதா என்பதை முடிவு செய்கையில் பதிவுத் துறையில் கீழ்க்காணும் கூறுகள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன :—

(i) இப்போது இருந்துவரும் துணைப் பதிவு அலுவலகத்தின் இருப்பிடம் அல்லது பெருவாரியான கிராமங்களுக்கான துணைப் பதிவு அலுவலகங்களின் இருப்பிடம், இருக்கும் தன்மையானது, அதன் துணைப் பதிவு அலுவலகம் வெகு தொலைவில் இருப்பதும் கிராமத்து மக்களுக்கு எளிதான அல்லது வசதியான தொலைவுக்குள் இல்லாததும் ;

(ii) இப்போதுள்ள துணைப் பதிவு அலுவலகத்தில் மிகுந்த வேலையிருந்து மிகுதியான வேலைப்பளுவைக் குறைக்க வேண்டியிருத்தல் ;

(iii) புதிய அலுவலகத்திற்குக் கருதியுள்ள இடத்தில், அலுவலகத்திற்கும் பணியாளர்க்கும் தகுந்த கட்டட வசதி, அஞ்சல் அலுவலகம், காவல் நிலையம், உயர்நிலைப்பள்ளி, மருத்துவ மனை, உணவு விடுதி முதலிய சௌகரியங்களும், வசதிகளும் உள்ளன ;

(iv) துணைப் பதிவு அலுவலகத்திற்குச் செல்வதற்கும் அங்கிருந்து திரும்பி வருவதற்கும் பொதுமக்களுக்கு போதிய போக்குவரத்து வசதிகள் உள்ளன;

(v) துணைப் பதிவாளருக்கும் பணியாளர்க்கும் இப்புதிய அலுவலகம் போதிய வேலை அளிக்கும்";

(vi) இப் புதிய அலுவலகம் நிதி வசதியில் தன்னிறைவு உள்ளதாயிருக்கும். அதாவது அதன் எதிர்பார்க்கப்படும் ஆண்டு வருவாய் அதன் ஆண்டு மதிப்பீட்டுச் செலவுக்குக் குறைவாயிராது;

(vii) மாவட்ட ஆட்சித் தலைவர் இச் செயற்குறிப்பை ஆதரித்துள்ளார் ;

(viii) இவ்விடத்தில் புதியதொரு அலுவலகத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமுண்டாக்கும் சில சிறப்புக் கூறுகள் உள்ளன.

*A*.—(*a*) 9 offices in the following Registration District were opened:—

| | |
|---|---|
| Chidambaram .. .. .. | 1 |
| Chingleput .. .. .. .. | 1 |
| Dindigul .. .. .. .. | 1 |
| Madras .. .. .. .. | 1 |
| Madurai .. .. .. .. | 1 |
| Ramanathapuram .. .. .. | 1 |
| Tiruchirappalli .. .. .. | 1 |
| Tiruvannamalai .. .. .. | 2 |
| | 9 |

(*b*) New Registration Offices are opened with reference to the needs of the areas concerned. The following factors are taken into account in Registration department in deciding whether a need for a new office exists :—

(i) that the location of the existing Sub Registry Office or Sub-Registry Offices for a large number of villages in the area is such that the Sub-Registry Office is far away and is not within easy or convenient reach of the people of the villages ;

(ii) that the existing Sub-Registry Office has heavy work and requires relief from excessive work load ;

(iii) that the place proposed for the new Office has amenities and facilities like proper building accommodation for office and staff, post office, police station, high school, hospital, hotels, etc ;

(iv) that there are adequate transport facilities for the public to go to and return from the Sub-Registry Office ;

(v) that the new office will provide adequate work for the Sub-Registrar and the staff ;

(vi) that the new office will be self supporting, i.e., its anticipated yearly receipts will not be less than its estimated yearly expenditure ;



(vii) that the district Collector has supported the proposal ; and

(viii) that there are certain special features which render necessary the opening of a new office at the place.

### ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கு முன் ஊதிய உயர்வு

**வினு 88—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 24-4-1967 தேதியிட்ட அரசு ஆணை எண் 850-ன் படி 24-4-1967 தேதிக்குப் பின் அபிவிருத்தி கணக்குத் தேர்வில் (Panchayat Development Account Test) தேர்ச்சி பெறும், ஊராட்சி ஒன்றியப் பிரிவுகளிலுள்ள அரசாங்க அலுவலர்களுக்கு முன் ஊதிய உயர்வு (Advance Increment) வழங்கும் திட்டத்தை ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கும் நீட்டிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) 24-4-1967-க்கு முன் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இந்த முன் ஊதிய உயர்வு கொடுக்கப்படாததற்கான காரணங்கள் யாவை ?

**விடை**—(அ) ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ஊதியம் பெறும் பணியாளர்கள் பதவியிலிருந்துகொண்டு பதவி உயர்வு பெறுவதற்கோ அல்லது தகுதிகாண் பருவம் நிறைவெய்துவதற்கோ அல்லது தொடர்ந்து பணியிலிருப்பதற்கோ ஊராட்சி வளர்ச்சி கணக்குத் தேர்வில் வெற்றி பெறவேண்டுமென்று விதிகளில் எதும் வகை செய்யப்படவில்லையாதலால் கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 850-ம் எண்ணுள்ள அரசாங்க ஆணையில் கொடுக்கப்பட்டுள்ள சலுகையைப் பெற அவர்கள் தகுதியுள்ளவர்களாகமாட்டார்கள். எனவே, இந்தச் சலுகையை நீட்டிப்பது குறித்த வினுவே எழவில்லை.

(இ) முன்கூட்டிய சம்பள உயர்வு அளிப்பதே ஒரு வகையில் சலுகையாகும் ; எனவே இந்த ஆணையைக் கடந்த ஒரு தேதியிலிருந்தே செயல்படுத்துவது ஏற்புடைத்தல்ல.

*A*.—(*a*) As the rules do not provide for the passing of the Panchayat Development Account Test *for promotion or completion of probation or continuance*, in the post for employees of the Panchayat Union paid out of its funds, they are not entitled to the concession granted in G.O. Ms. No. 850, R.D. and L.A., dated 24th April 1967 and hence the question of extending the concession does not arise.

(*b*) As the grant of advance increment is by itself a concession, there is no justification to give retrospective effect to the orders.

### *Pool price for Controlled Commodities.*

89 *Q*.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether any pool price is being fixed for the sale of controlled commodities by the Government ; and

(*b*) if so, the particulars thereof ?

*A*.—(*a*) Yes. Pool prices have been fixed for rice, wheat, wheat products, sugar, gram and gramdhall.

(*b*) The pool price is in force from June 1965 for rice. The main object of fixing the pool prices was to secure certain amount of stability and uniformity in prices not withstanding the different variable factors

which constitute the cost structure. The pool prices are therefore fixed in such a way that they may be made applicable to all the stocks in a district whether they are procured locally or brought from other surplus districts by road or by rail and irrespective of the period of storage of the individual consignment and fixed on an estimated basis mainly with reference to the average expenditure on the various elements involved in the price structure.

**விடை.**—(அ) ஆம். அரிசி, கோதுமை, கோதுமைப் பொருள்கள், சர்க்கரை, கொத்துக் கடலை, கடலைப்பருப்பு ஆகியவற்றுக்காகத் தொகுப்பு விலைகள் (Pool Prices) முடிவு செய்யப்பட்டுள்ளன.

(இ) அரிசிக்கான தொகுப்பு விலை 1965 ஜூன் முதற்கொண்டு செயலில் உள்ளது. விலை நிலவரத்தில் மாற்றங்கள் ஏற்படுத்த பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக இருந்தபோதிலும், விலைகள் ஓரளவிற்கு உறுதியாக ஒரே நிலையில் நீடிக்கச் செய்வதே தொகுப்பு விலைகளை நிச்சயிப்பதன் முக்கிய நோக்கமாகும். எனவே, ஒரு மாவட்டத்தில் உள்ள சரக்கு இருப்புகள் அனைத்திற்கும் பொருந்தும் வகையில் தொகுப்பு விலைகள் முடிவு செய்யப்படுகின்றன. அந்தச் சரக்குகள் உள்ளூரில் கொள்முதல் செய்யப்பட்டிருந்தாலும் அல்லது உபரியாயுள்ள பிற மாவட்டங்களிலிருந்து சாலை மூலமாகவோ, இரயில் மூலமாகவோ கொண்டு வரப்பட்டிருந்தாலும், தனியே அனுப்பப்பட்ட இச்சரக்குகள் எக்கால அளவிற்குச் சேமித்து வைக்கப்பட்டிருந்தாலும் அவற்றைக் கருதாமல் அந்தச் சரக்குகளுக்குத் தொகுப்பு விலைகள் பொருந்தும்படிச் செய்வதே இதன் நோக்கமாகும். மேலும், முக்கியமாக விலைவாசிக்குத் தொடர்பான பல இனங்களில் ஏற்படும் சராசரிச் செலவினையொட்டி அத் தொகுப்பு விலைகள் தோராயமாக நிச்சயிக்கப்படுகின்றன.

### பரமக்குடியில் நெசவாளர் போராட்டம்

90 **வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :**
**திரு. எம். சுரேந்திரன் :** } மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1-4-1968-ல் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் கைத்தறி நெசவாளர்கள் போராட்டம் நடத்தினார்களா ?

(இ) ஆமெனில், அதன் காரணம் யாது ?

(உ) அதன் காரணமாக எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் ?

விடை.—(அ) ஆம்.

(இ) இப்பகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் சில கோரிக்கைகளை வற்புறுத்துவதற்காக.

(உ) 1—4—1968 .. 211 பேர்கள். இவர்களில் 35 பெண்கள்.
2—4—1968 .. 100 பேர்கள்.
3—4—1968 .. 92 பேர்கள். இவர்களில் 27 பெண்கள்.
4—4—1968 .. 104 பேர்கள். இவர்களில் 29 பெண்கள்.

இவர்களெல்லாம் கைது செய்யப்பட்ட அன்றே சொந்த ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்கள்.

*A.*—(*a*) Yes.

(*b*) In furtherance of some demands of the handloom weavers in Paramakudi area.

(*c*) 1—4—1968 .. 211 persons including 35 women.
2—4—1968 .. 100 persons.
3—4—1968 .. 92 persons including 27 women.
4—4—1968 .. 104 persons including 29 women.

All of them were released on the day of arrest on production of personal security bonds.



### *Retrenchment of teachers in Industrial Training Centre, Tiruchirappalli*

91 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is a fact that 16 teachers of Industrial Training Centre at Tiruchirappalli have been retrenched in the month of August 1967 ;

(*b*) whether any more are to be retrenched and if so, how many ; and

(*c*) whether the Government will provide alternate employment for these teachers ?

*A.*—(*a*) It is a fact that 16 Craft Instructors at Industrial Training Institute, Tiruchirappalli have been discharged for want of vacancies in the month of August 1967.

(*b*) There are none to be retrenched further at present.

(*c*) Out of the 16 Craft Instructors retrenched from the Industrial Training Institute, Tiruchirappalli, one has been deputed for training to the Central Training Institute, and 7 have been appointed as Craft Instruotors in the Industrial Traiuing Institutes of which 6 have joined duty.

**விடை.**—(அ) திருச்சிராப்பள்ளி தொழிற் பயிற்சிப் பள்ளியில் பதவிகள் இல்லாமையால், 1967 ஆகஸ்ட் திங்களில் 16 கைப்பணிப் பயிற்சி ஆசிரியர்கள் வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டனர் என்பது உண்மையே.

(இ) தற்போது மேற்கொண்டு எவரையும் ஆட்குறைப்பு செய்வதாக இல்லை.

(உ) திருச்சிராப்பள்ளி தொழிற் பயிற்சிப் பள்ளியிலிருந்து ஆட்குறைப்பு செய்யப்பட்ட கைத்தொழிற் பயிற்சி ஆசிரியர்கள் 16 பேரில், 7 பேர் மத்தியப் பயிற்சி நிலையத்திற்கு பயிற்சி பெற அனுப்பப்பட்டுள்ளார். 7 பேர் தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் கைப்பணி பயிற்சி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 6 பேர் வேலையில் சேர்ந்துவிட்டனர்.

### *Industrial Co-operatives*

92 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the total number of industrial co-operative societies that were in existence as on 1st March 1967 and the total number of employees of the societies ;

(*b*) Whether orders have been passed to close down certain industrial co-operative societies ; and

(*c*) if so, the total number of Industrial Co-operative Societies ordered to be closed down upto 1st December 1967 and the total number of employees that are likely to be thrown out of employment consequently?

*A.*—(*a*) The total number of Industrial Co-operative Societies that were in existence as on 1st March 1967 was 404. The total number of persons provided with employment in these societies was 27,751 during 1966-67.

(*b*) Yes.

(*c*) The total number of industrial co-operative societies ordered to be closed down by the Government up to 1st December 1967 was 28 and the total number of societies actually liquidated from 1st March

1967 to 1st December 1967 was 6. The total number of employees that were thrown out of employment consequent on the closure of these six societies is *Nil* as these societies were dormant for more than one or two years.

விடை.—(அ) 1967 மார்ச் 1-ந் தேதி நிலவரப்படி 404 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இந்தச் சங்கங்களில் 1966–67-ம் ஆண்டில் மொத்தம் 27,751 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கப்பட்டது.

(இ) ஆம்.

(உ) 1967 டிசம்பர் 1-ம் நாள் வரையில் 28 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை மூடிவிடும்படி அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. 1967 மார்ச் 1-ம் தேதியிலிருந்து 1967 டிசம்பர் 1-ம் தேதி வரை 6 சங்கங்கள் கலைத்து விடப்பட்டன. இந்த ஆறு சங்கங்கள் கலைத்து விடப்பட்டதன் விளைவாக வேலையிழந்த பணியாளர்கள் எவரும் இல்லை. இந்தச் சங்கங்கள் ஓரிரு ஆண்டுகளாகவே செயல் முடங்கிய நிலையில் இருந்ததே இதற்குக் காரணம்.

### செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் சம்பள விதம்

93 வினா—திரு. டி. மார்டின் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பப் பாடசாலையில் பணியாற்றும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் ஹைஸ்கூலில் பணியாற்றும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் அவர்கள் வாங்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

விடை.—(அ) & (இ) உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும், தொடக்கப்பள்ளிகளில், ஒப்பளிக்கப்பட்ட செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கான பதவியிடங்களில் நியமனம் பெற்றுள்ள செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் சம்பள வீதத்தில் வேறுபாடு ஏதுமில்லை ; இருவகை ஆசிரியர்களுக்கும் ரூ. 90—140 என்கிற வீதப்படியே சம்பளம் வழங்கப்படுகிறது. ஆனால் தொடக்கப்பள்ளிகளில் ஹையர் கிரேடு பதவிகளில் நியமனம் பெற்றுள்ள செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு ஹையர் கிரேடு சம்பள வீதப்படியே, அதாவது ரூ. 65—90 என்கிற வீதப்படியே சம்பளம் வழங்கப்படுகிறது. ஹையர் கிரேடு பதவிகள் அனைத்தையும் சில ஆண்டுகளில் படிப்படியாக செகண்டரி கிரேடு பதவிகளாக மாற்றுவதென அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

*A.*—(*a*) & (*b*) The scale of secondary grade teachers working in high schools and that of the secondary grade teachers appointed against sanctioned secondary grade posts in elementary schools is the same, namely Rs. 90—140. But secondary grade teachers appointed against higher grade posts in elementary schools are getting only the higher grade scale of pay, namely Rs. 65—90. The Government have taken a decision to convert all higher grade posts into secondary grade posts under a phased programme over a period of years.

### *Houses for repatriates from Ceylon*

94 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal pending before the Government to provide subsidy and interest free loans to Ceylon repatriates for building houses ; and

(*b*) if so, the details thereof ?



*A.*—(*a*) The Government have sanctioned a scheme for the grant of liberal subsidies and loans to Ceylon repatriates for building houses.

(*b*) The scheme of financial assistance is as follows :—

| | Ceiling fixed. |
|---|---|
| (1) *Rural areas*— | RS. |
| (i) For homestead plot .. .. .. | 200 (loan). |
| (ii) For development of homestead land (clearance, levelling, internal roads, drains, culverts and water-supply). | 600 (grant). |
| (iii) For construction of house .. .. | 1,250 (loan). |
| (iv) For business premises .. .. .. | 200 (loan). |
| (2) *Urban areas*— | |
| (i) For homestead plot .. .. .. | 600 (loan) |
| (ii) For development of homestead, land (clearance, levelling, internal roads, drains, culverts and water supply). | 1,500 (loan). |
| (iii) For construction of house .. .. | 2,000 (loan). |
| (iv) For business premises .. .. .. | 500 (loan). |

விடை—(அ) இலங்கை அகதிகளுக்கு வீடுகள் கட்டுவதற்காக மானியமும், கடனும் வழங்கும் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(இ) நிதி உதவி மேல்வரம்பு கீழ்க்கண்டவாறு உள்ளது :—

| | முடிவு செய்யப்பட்ட நிதி வசதி மேல் வரம்பு. |
|---|---|
| (1) கிராமப்புறப் பகுதிகள்— | ரூபாய். |
| 1. வீடுசூழ் பண்ணை மனைக்கு (Homestead Plot). .. .. .. | 200 (கடன்) |
| 2. வீடுசூழ் பண்ணை நிலத்தைச் சீர்செய்வதற்கு (சுத்தப்படுத்தல், மட்டப் படுத்தல், உட்சாலைகள், கழிவு நீர் வடிகால்கள், மதகுகள், குடிநீர் வழங்குதல்). | 600 (மானியம்) |
| 3. வீடு கட்டுவதற்கு .. .. .. .. | 1,250 (கடன்) |
| 4. தொழில் இடத்திற்கு .. .. .. .. | 200 (கடன்) |
| (2) நகர்ப்புறப் பகுதிகள்— | |
| 1. வீடுசூழ் பண்ணை மனைக்கு .. .. .. | 600 (கடன்) |
| 2. வீடு சூழ் பண்ணை நிலத்தைச் சீர்செய்வதற்கு (சுத்தப்படுத்தல், மட்டப்படுத்தல், உட்சாலைகள், கழிவு நீர் வடிகால்கள், மதகுகள், குடிநீர் வழங்குதல்). | 1,500 (கடன் |
| 3. வீடு கட்டுவதற்கு .. .. .. .. | 2,000 (கடன்) |
| 4. தொழில் இடத்திற்கு .. .. .. .. | 500 (கடன்) |

### House sites for fishermen in Tirunelveli district

95 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether there is any proposal pending before the Government to provide house sites for landless fishermen in Manappad, Periathalai, Alanthalai, Ovari, Koothankuli and Kulasekarapatnam villages in Tirunelveli district ; and

(*b*) if so, the details thereof ?

*A.*—(*a*) & (*b*)—There are at present no proposals under consideration of the Government for the provision of house sites to fishermen in Periathalai, Alanthalai, Ovari and Kulasekarapatnam villages in Tirunelveli district.

At Manapad, the construction of nine houses for the benefit of fishermen affected by sea erosion is under consideration.

The question of transfer of 5 acres of Natham land for providing house sites to fishermen of Koothankuli is also under consideration.

**விடை**—(அ) & (இ) திருநெல்வேலி மாவட்டத்தின் பெரியதாழை, ஆலந்தலை, உவரி, குலசேகரப்பட்டினம் ஆகிய கிராமங்களில் உள்ள மீனவர்கட்கு வீட்டுமனைகள் கொடுக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நலனுக்காக மணப்பாடில் 9 வீடுகள் கட்டுவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

கூத்தங்குளியிலுள்ள மீனவர்களுக்கு வீட்டுமனைகள் வழங்கும் பொருட்டு 5 எக்கர் பரப்புள்ள நத்தம் நிலத்தை மாற்றுவது குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

### சர்க்கரை ஒதுக்கீடு

96 **வினா—திரு. எஸ். இராமச்சந்திரன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

1967 மார்ச் முதல் டிசம்பர் வரை மாதவாரியாக இந்திய அரசால் எவ்வளவு சர்க்கரை ஒதுக்கப்பட்டது ?

**விடை**—இந்திய அரசால் இம்மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட சர்க்கரை அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| கால அளவு. | | ஒதுக்கப்பட்ட அளவு. |
|---|---|---|
| முதல் | வரை. | |
| 23- 2-1967 | 22- 3-1967 .. .. .. | 11,500 டன். |
| 23- 3-1967 | 22- 4-1967 .. .. .. | 11,500 ,, |
| 23- 4-1967 | 22- 5-1967 .. .. .. | 9,609 ,, |
| 23- 5-1967 | 22- 6-1967 .. .. .. | 9,609 ,, |
| 23- 6-1967 | 22- 7-1967 .. .. .. | 9,609 ,, |
| 23- 7-1967 | 22- 8-1967 .. .. .. | 9,609 ,, |
| 23- 8-1967 | 22- 9-1967 .. .. .. | 9,609 ,, |
| 23- 9-1967 | 22-10-1967 .. .. .. | } 21,158 ,, |
| 23-10-1967 | 22-11-1967 .. .. .. | |
| 23-11-1967 | 22-12-1967 .. .. .. | 6,096 ,, |



1967-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 23-ம் நாள் முதற்கொண்டு, இந்திய அரசு சர்க்கரைக் கட்டுப்பாட்டை ஓரளவு நீக்கும் கொள்கையைப் பின்பற்றுகின்றது. இதன்படி இந்நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் 60 சதவீதமுள்ள சர்க்கரை, பொது மக்களுக்கும் அனாதை இல்லங்கள் போன்ற சில சிறப்பு வகையினருக்கும் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக "லெவி" முறைப்படி கொள்முதல் செய்யப்படுகிறது. எஞ்சிய 40 சதவீத சர்க்கரையை ஆலைகள் இந் நாட்டில் எங்கு வேண்டுமாயினும் விற்றுக்கொள்ளலாம். மேலே காட்டியுள்ளவாறு 23—11—67 லிருந்து 22—12—1967 வரையுள்ள கால அளவில் ஒதுக்கப்பட்ட 6,096 டன் சர்க்கரை, இம்மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட "லெவி" பங்கீட்டளவினைக் குறிக்கும்.

*A.*—The allotment of sugar made by the Government of India to this State is as follows :—

| *Period.* | | *Quantity allotted.* |
|---|---|---|
| *From* | *To* | |
| 23- 2-1967 | 22- 3-1967 | 11,500 tonnes. |
| 23- 3-1967 | 22- 4-1967 | 11,500 ,, |
| 23- 4-1967 | 22- 5-1967 | 9,609 ,, |
| 23- 5-1967 | 22- 6-1967 | 9,609 ,, |
| 23- 6-1967 | 22- 7-1967 | 9,609 ,, |
| 23- 7-1967 | 22- 8-1967 | 9,609 ,, |
| 23- 8-1967 | 22- 9-1967 | 9,609 ,, |
| 23- 9-1967 | 22-10-1967 and } | 21,158 ,, |
| 23-10-1967 | 22-11-1967 } | |
| 23-11-1967 | 22-12-1967 | 6,096 ,, |

With effect from the 23rd November 1967, the Government of India are following the policy of partial decontrol of sugar, under which 60 per cent of the total production of sugar in the country will be procured by the Government of India, under a system of levy for distribution to domestic consumers and certain priority categories like orphanages and the factories will be free to sell the remaining 40 per cent anywhere in the country. The allotment of 6,096 tonnes indicated above for the period from 23rd November 1967 to 22nd December 1967 was the levy quota allotted to this State.

97**வினா.—திரு. எஸ். இராமச்சந்திரன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் புதிய சர்க்கரை வினியோகக் கொள்கைகள் விவரமென்ன ?

(இ) & (உ) இக்கொள்கைக்கு நமது மாநில அரசு உடன்பாடு தெரிவித்துள்ளதா ? இல்லையானால் என்ன கருத்துரை வழங்கியது ?

**விடை**—(அ) 1967–68-ம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி குறையவே சர்க்கரை விலை அதிகரித்துவிட்டது. வருங்காலத்தில் சர்க்கரை உற்பத்தி மேலும் குறைவதைத் தடுப்பதற்காகவும் சர்க்கரை நியாய விலைக்குத் தொடர்ந்து கிடைக்கும்படி செய்வதற்காகவும் 23—11—1967 தேதியிலிருந்து இந்திய அரசு சர்க்கரை கட்டுப்பாட்டை ஓரளவு நீக்கியுள்ளது. இதன்படி சர்க்கரை ஆலைகளில் மொத்த உற்பத்தியில் 60 சத வீதத்திற்கு நிகரான அளவுள்ள சர்க்கரை 1966–67-ம் ஆண்டில் "லெவி" திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்டு, பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்களுக்குக் குறிப்பிட்ட விலைக்கு வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள 40 சத வீதம் சர்க்கரையை இந்திய அரசின் ஆணைகளுக்குட்பட்டு, இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் எந்த விலைக்கும் ஆலைகள் விற்பனை செய்யலாம்.

[1968 ஆகஸ்ட் 31

(இ) & (உ) சர்க்கரை கட்டுப்பாட்டை ஓரளவு தளர்த்துவதென்ற கொள்கை அவ்வளவாகப் பயனளிக்காதென்றும் பயன் கொள்வோரின் நலனுக்கு ஊறு விளைவிக்கும் என்றும் இந்த அரசாங்கம் மத்திய உணவமைச்சரிடம் கருத்தறிவித்தது. எனினும், இந்திய அரசு சர்க்கரை கட்டுப்பாட்டை ஓரளவு தளர்த்துவது என்ற கொள்கையை நிறைவேற்றி யுள்ளது.

*A*.—(*a*) The decline in the production of sugar during the year 1967–68 resulted in the increase in price of sugar. To restrict further fall in the production of sugar in future and to keep the sugar price at a reasonable level, the Government of India are implementing a scheme of partial decontrol of sugar with effect from 23rd November 1967, under which a quantity equivalent to 60 per cent of the total production of sugar in sugar factories during the year 1966-67 is being procured under 'levy' scheme and distributed among domestic card holders at a fixed price, leaving the balance of 40 per cent to be sold by the factories anywhere in India, at any price, subject to orders of the Government of India, sanctioning the release from the Factories.

(*b*) & (*c*) This Government apprised the Union Food Minister, of their view that the policy of partial decontrol may not be quite useful and will be injurious to the interests of the consumers. However, the Government of India have implemented their policy of partial decontrol of sugar.

98 **வினு—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தற்பொழுது நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் சர்க்கரை யின் அளவு எவ்வளவு ?

(இ) அதில் நமது மாநிலத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்படுகிறது ?

(உ) வேறு மாநிலங்களுக்கு எவ்வளவு சர்க்கரை மாநிலவாரியாக அனுப்பப்படுகிறது ?

**விடை**—(அ) 1967–68ம் ஆண்டில், 15—7—1968 வரை தமிழ்நாட்டி லுள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் மொத்த அளவு 163,023 டன்களாகும்.

(இ) 1967 நவம்பரில் சர்க்கரை கட்டுப்பாடு ஓரளவு நீக்கப்பட்ட திலிருந்து, இம் மாநிலத்திற்குத் திங்கள் ஒன்றுக்கு 6,096 டன் 'லெவி' கொள்முதல் சர்க்கரை இந்திய அரசால் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது.

(உ) தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து பிற மாநிலங் களுக்கு ஒதுக்கப்பட்ட 'லெவி' கொள்முதல் சர்க்கரை அளவின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| திங்கள். | கேரளா. | புதுச்சேரி. | மைசூர். | ஆந்திரப் பிரதேசம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (டன்.) | (டன்.) | (டன்.) | (டன்.) |
| 1967 டிசம்பர். | 2,701 | 59 | 283 | .. |
| 1968 ஜனவரி .. | 2,858 | 59 | .. | .. |
| 1968 பிப்ரவரி .. | 3,457 | 59 | 115 | .. |
| 1968 மார்ச் .. | 3,177 | 59 | .. | .. |
| 1968 எப்ரல் .. | 3,448.5 | 64·2 | .. | .. |
| 1968 மே .. | 2,577 | 61·6 | .. | .. |
| 1968 ஜூன் .. | 3,207 | 59 | .. | .. |
| 1968 ஜூலை .. | 3,218 | 59 | 506 | 607 |
| மொத்தம் .. | 24,643·5 | 479·8 | 904 | 607 |



1968 ஆகஸ்ட் 31]

*A*.—(*a*) The total sugar produced by the Madras Factories in 1967–68 up to 15th July 1968 is 163,023 tonnes.

(*b*) A fixed quantity of 6,096 tonnes of levy sugar is allotted to this State by the Government of India every month, since November 1967 when a system of partial decontrol was introduced.

(*c*) Quantity of levy sugar allotted to other States from Madras State Factories is as follows :—

| *Month.* | *Kerala.* | *Pondi-cherry.* | *Mysore.* | *Andhra Pradesh.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | Tonnes. | Tonnes. | Tonnes. | Tonnes. |
| December 1967 .. .. | 2,701 | 59 | 283 | .. |
| January 1968 .. .. | 2,858 | 59 | .. | .. |
| February 1968 .. .. | 3,457 | 59 | 115 | .. |
| March 1968 .. .. | 3,177 | 59 | .. | .. |
| April 1968 .. .. | 3,448·5 | 64·2 | .. | .. |
| May 1968 .. .. | 2,577 | 61·6 | .. | .. |
| June 1968 .. .. | 3,207 | 59 | .. | .. |
| July 1968 .. .. | 3,218 | 59 | 506 | 607 |
| Total .. | 24,643·5 | 497·8 | 904 | 607 |

99 **வினு—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தற்போது நமது மாநிலத்திலுள்ள நியாயவிலைக் கடைகளிலும் ரேஷன் கடைகளிலும் விற்கப்படும் 40 சதவீத சீனிக்கும் வெளிச் சந்தையில் 60 சத வீதம் விற்கப்படும் சீனிக்கும் விலை நிர்ணயம் செய்தது மத்திய அரசா, மாநில அரசா ?

**விடை**—1967–68-ல் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை யின் மொத்த அளவில் 60 சதவீத அளவு, "லெவி கொள்முதல்" திட்டத்தின்கீழ்க் கொள்முதல் செய்யப்பட்டு, வீட்டுக்காரியங்களுக்குப் பயன் படுத்துவோருக்கும் அனுதை இல்லங்கள் போன்ற சலுகை வகையைச் சேர்ந்த சில நிலையங்களுக்கும் குறித்த விலைக்கு வழங்கப்படுகிறது. வெளியே கொண்டுவரப்படும் "லெவி கொள்முதல்" சர்க்கரை சம்பந்தப் பட்ட தொழிற்சாலை விலையை இந்திய அரசு முடிவு செய்கிறது. போக்கு வரத்துக் கட்டணம், பணியாளர் செலவு முதலிய இடைநிகழ் செலவு களைக் கணக்கில் கொண்டு, இந்திய அரசு இம்மாநிலத்திற்கு ஒதுக்கும் "லெவி கொள்முதல்" சர்க்கரை சம்பந்தமாக இம்மாநிலத்திற்குள் இருக்கும் பயன்கொள்வோருக்கு விற்பனை விலையை இம்மாநில அரசு முடிவு செய்கிறது.

எஞ்சிய 40 சதவீத அளவு சர்க்கரையைச் சர்க்கரை ஆலைகள், இந்தியாவில் எங்கு வேண்டுமானுலும் எந்த விலைக்கும் விற்கலாம்.

*A*.—A quantity equivalent to 60 per cent of the total production of sugar in sugar factories during the year 1967–68 is being procured under a scheme of 'levy' and distributed among domestic consumers and some priority categories like orphanages at a fixed price. The ex-factory price in respect of the levy sugar released is fixed by the Government of India. After taking into account the incidental charges, like transport charges, establishment charges, etc., the State Government fix the issue prices to consumers within the State in respect of the levy sugar allotted to them by the Government of India.

The Sugar factories are free to sell the balance 40 per cent at any price anywhere in India.

### உணவுப் பங்கீட்டுக் கார்டுகள்.

**100 வினா—திரு. எஸ். இராமச்சந்திரன், திரு.வி.கே. கோதண்டராமன்:** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டபூர்வ குடும்பக் கார்டுமுறை உள்ள பகுதிகளில் போலிக் கார்டுகள் புழக்கத்தில் இருக்கின்றன என்பது பற்றிய புகார்கள் அரசினருக்கு வந்ததா ?

(இ) ஆமெனில், போலிக் கார்டுகளைக் கண்டுபிடித்து உணவுப் பங்கீட்டு முறை சீராகவும் செம்மையாகவும் நடைபெற எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

(உ) இவ்விதம் தமிழ்நாடு முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போலி கார்டுகள் எண்ணிக்கை என்ன ?

(எ) இவற்றில் சென்னை நகரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போலிக் கார்டுகளின் தொகை என்ன ?

**விடை**—(அ) ஆம்.

(இ) உணவுப் பங்கீட்டுப் போலிக் கார்டுகளைச் செலாவணியிலிருந்து நீக்குவதற்காக நேரிடப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுள்ளது. மண்டல உணவுப் பங்கீட்டு அதிகாரிகளின் உடன் மேற்பார்வையில் நேரிட நிர்வாகப் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று உணவுப் பங்கீட்டுக் கார்டுகளை முனைப்பாகப் பரிசீலனை செய்யும் வேலை மேற்கொள்ளப்பட்டது. போலிக் கார்டுகள் எவையேனுமிருப்பின் அவற்றை நீக்குவதற்கு அவ்வப்போது திடீரென்று சோதனை செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட போலிக் கார்டுகள் உடனடியாக ரத்து செய்யப்படுகின்றன. இதனால் பங்கீட்டுப் பொருள்களின் அளவும் அதற்கேற்ப மிச்சப்படுத்தப்படுகிறது. சட்டப்படிக்கான உணவுப் பங்கீட்டுப் பகுதிகளில் போலிக் கார்டுகளைக் கண்டுபிடிக்கும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

(உ) 58,737.

(எ) 45,398.

*A.*—(*a*) Yes.

(*b*) The Government have taken measures to strengthen the field staff for purpose of eliminating bogus cards from circulation. Intensive verification of ration cards by door to door inspection by the field executive staff was taken up under the immediate supervision of Zonal Rationing Officers. Such a check is being continued periodically by surprise to eliminate bogus cards if any. Bogus cards so detected are cancelled immediately and the quota of the rationed articles is thus saved to that extent. The hunt for bogus cards is being continued in the statutory rationed areas.

(*c*) 58,737.

(*d*) 45,398.

**101 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் உணவு பங்கீட்டு முறை அமுலில் உள்ள கோயமுத்தூர், சென்னை ஆகிய இரு நகரங்களிலும் எத்தனை பங்கீட்டுக் கார்டுகள் வழங்கப்பட்டன ?



(இ) இரு நகரங்களிலும் தனித்தனியே முறையே அரிசியும் கோதுமையும் எவ்வளவு தேவையுள்ளது ?

(உ) தேவையுள்ள அரிசி, கோதுமை ஒரு மாதத்திற்கு இருப்பு வைக்க சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளதா ?

**விடை**—(அ) சென்னை மாநகரில் மொத்தம் 565,656 பங்கீட்டுக் கார்டுகளும் கோயம்புத்தூரில் மொத்தம் 161,387 பங்கீட்டுக் கார்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

(இ) சென்னை மாநகருக்கு 17,199 மெட்ரிக் டன் அரிசியும் 4,300 மெட்ரிக் டன் கோதுமைப் பொருள்களும் தேவைப்படுகின்றன. கோயம்புத்தூருக்கு 4,647 மெட்ரிக் டன் அரிசியும், 1,162 மெட்ரிக் டன் கோதுமைப் பொருள்களும் ஒரு மாதத்திற்குத் தேவைப்படுகின்றன.

(உ) தேவையுள்ள அரிசியை இருப்பில் வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பங்கீட்டுப் பொருள்களின் பட்டியலிலிருந்து கோதுமை நீக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு, இம்மாநிலத்திற்கு ஒவ்வொரு மாதமும் கோதுமை ஒதுக்குகிறது. அதை இவ்வரசு மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்க ஒதுக்குகிறது. எனவே, கோதுமையை இருப்பில் வைக்கும் பிரச்சினைக்கு இடமில்லை.

*A.*—(*a*) The total number of ration cards distributed in Madras City is 565,656 and that in Coimbatore is 161,387.

(*b*) Seventeen thousand one hundred and ninety-nine tonnes of rice and 4,300 tonnes of wheat products for Madras City and 4,647 tonnes of rice and 1,162 tonnes of wheat products for Coimbatore are the monthly requirements.

(*c*) Arrangements have been made to stock the requirements in respect of rice. Wheat has been removed from the list of rationed articles. The Government of India are allotting wheat to this State every month. This Government in turn allot it to the districts for distribution. The question of stocking wheat does not therefore arise.

### விருந்துகள் கட்டுப்பாடு

**102 வினா—திரு. எஸ். இராமச்சந்திரன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனிப்பட்ட விருந்துகள், திருமண விருந்துகள் ஆகியவைகளுக்கு முன்னுள் சர்க்காரால் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளின் விவரம் என்ன ?

(இ) அவைகளில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா ?

**விடை**—(அ) 1967 மார்ச் திங்களுக்கு முன்பு விதிக்கப்பட்டிருந்த கட்டுப் பாட்டின்படி சாதாரண விருந்துகள் அல்லது வரவேற்புகள், சமூக நிகழ்ச்சிகள் அல்லது பிற நிகழ்ச்சிகளில் விருந்தினர்களின் எண்ணிக்கை விருந்து அளிப்பவர் அல்லது விருந்து அளிப்பவர்கள் உட்பட மொத்தம் 25 பேர்களுக்கு மேற்படக்கூடாது. திருமணங்களைப் பொறுத்தவரை, விருந்தினர்கள் 50 பேர்களுக்கு மேற்படக்கூடாது. "தடை செய்யப்பட்ட உணவுப் பொருள்கள்" என்னும் சொற்றொடருக்கு எல்லா உணவு தானியங்கள், அவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் என்று அப்போது பொருள் கூறப்பட்டது. விருந்தினர்களின் எண்ணிக்கை, சந்தர்ப்பத்திற்கேற்ப, 25-க்கு மேற்பட்டிருந்தாலுஞ்சரி அல்லது 50-க்கு மேற்பட்டிருந்தாலுஞ்சரி, இரண்டு உணவு வகைகளையே பரிமாறலாம்.

(இ) 1967 மார்ச் திங்களுக்குப் பிறகு, விருந்தினர்களின் எண்ணிக்கை சாதாரண விருந்துகளுக்கு 25 என்பதிலிருந்து 50 ஆகவும், திருமணங்களுக்கு 50 என்பதிலிருந்து 100 ஆகவும் உயர்த்தப்பட்டது. திருமணங்களில் விருந்தினர்களின் எண்ணிக்கை 100 என்பதிலிருந்து

150 ஆக அண்மையில் உயர்த்தப்பட்டுள்ளது. "தடை செய்யப்பட்ட உணவுப் பொருள்கள்" என்னும் சொற்றொடருக்குரிய பொருள் விளக்கம் அரிசி, அரிசிப் பொருள்கள், அவற்றைக் கொண்டு செய்யப்படும் உணவுப் பொருள்கள் மட்டும் என்று மாற்றப்பட்டது. பரிமாறப்படுகிற உணவு வகைகளின் எண்ணிக்கை இரண்டிலிருந்து நான்காக உயர்த்தப்பட்டது. தனி வீடுகளில் கொடுக்கப்படும் சிற்றுண்டிகளிலும் விருந்துகளிலும் பரிமாறப்படுகிற உணவு வகைகளின் எண்ணிக்கை குறித்து இப்போது கட்டுப்பாடு எதுவுமில்லை. பொது இடம் ஒன்றில் அல்லது தனி வீட்டில் நடக்கும் எந்த விருந்துகளில் அல்லது வரவேற்புகளில், விருந்துகள், வரவேற்புகள், சமூக நிகழ்ச்சிகள் அல்லது பிற நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரை விருந்தினர்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கு மேற்பட்டும், திருமணங்களைப் பொறுத்தவரை விருந்தினர்களின் எண்ணிக்கை நூற்று ஐம்பதுக்கு மேற்பட்டும் உள்ளதோ அவற்றில் அரிசியும் அரிசிப் பொருள்களும், அவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருள்களும் நீங்கலாக மற்றெல்லா உணவுப் பொருள்களும் இப்போது பரிமாறப்படலாம். ஆனால், அவற்றில் பரிமாறப்படுகிற உணவு வகைகள் நான்குக்கு மேற்படக்கூடாது.

*A.*—(*a*) According to the restrictions imposed prior to March 1967, the number of persons to be entertained in ordinary parties or entertainments, social or other functions should not exceed 25 including host or hosts. In the case of marriages, the number of persons to be entertained should not exceed 50. The term 'prohibited foodstuffs' was then defined to mean all cereals and preparations made therefrom. Only two courses of meal could be served irrespective of whether the number of participants exceeded 25 or 50, as the case might be.

(*b*) After March 1967, the number of persons to be entertained at ordinary parties was raised from 25 to 50 and those in marriages from 50 to 100. The number of persons to be entertained in marriages has been further increased from 100 to 150 recently. The term 'prohibited foodstuffs' was redefined to mean only rice and rice products and preparations made of them. The number of courses was increased from two to four. The restrictions on the number of courses shall not apply to lunches and dinners held at a private residence now. At parties and entertainments, held whether at a public place or private residence at which the number of persons exceeds fifty in the case of parties, entertainments, social or other functions, one hundred and fifty in the case of marriages, all foodstuffs excluding rice and rice products and preparations made out of them, can be served now provided the number of items served does not exceed four.

## கேரளத்திற்கு அரிசிக் கடத்தல் தடுப்பு

103 **வினு—திரு. எஸ். இராமசந்திரன், திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

கேரள மாநிலத்திற்கு பெருமளவில் அரிசி கள்ளக் கடத்தல் நடைபெறுவதைத் தடுக்கும் வகையில் புதிய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**விடை**—கேரள மாநிலத்திற்கு அரிசி கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, கேரள எல்லையை மூடிவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கேரள மாநிலத்தின் எல்லையைச் சார்ந்துள்ளவையும், கள்ளக்கடத்தல் நடைபெறுவதாகத் தெரிகிற முக்கிய வழிகளில் கூடுதலாகச் சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன. காவல் துறைப் பணியாளர்களும், வருவாய்த்துறைப் பணியாளர்களும், உணவுப் பொருள் வழங்கல்துறைப் பணியாளர்களும் எல்லைப் பகுதிகளில் இரவு நேரங்களில் தமது காவல் பணியை மும்முரப்படுத்துமாறும் சோதனைச் சாவடிகளுக்கும், கள்ளக் கடத்தல் குற்றம் நடக்கக்கூடிய முக்கிய இடங்களுக்கும் திடீரென்று சென்று சோதனையிடுமாறும் ஆணையிடப்பட்டுள்ளனர். இரு மாநில எல்லைகளுக்கு இடையிலுள்ள இரயில் நிலையங்களில் இரயில் வண்டிகளில் சென்று திடீர்ச் சோதனைகளும் நடத்தப்பட்டன. கடற்கரை நெடுகக் காவல் பணி புரிவதில் கள்ளக் கடத்தல் தடுப்புப் பணியாளர்கள் பயன்படுத்துவதற்காக மீனளத் துறையைச் சேர்ந்த விசைப் படகு ஒன்று அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



*A.*—In order to prevent the illicit movement of rice to Kerala State steps have been taken to seal the border with Kerala. Additional check posts have been established on the vulnerable and strategic routes bordering Kerala State. The Police, Revenue and Civil Supplies staff have also been instructed to intensify night patrols in the border areas and pay surprise visits to the check posts and vulnerable points. Raids have also been conducted in the trains at the State border stations. A motor launch belonging to Fisheries Department has also been placed at the disposal of Anti Smuggling-staff for patrolling work along the sea coast.

## *Geological Survey at Mamandur*

104 *Q.*—Thiru S. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whe ther any Geological Survey of copper deposit has been undertaken at Mamandur; and

(*b*) if so, the results of the survey?

*A.*—(*a*) and (*b*) Yes Sir. The Geological Survey of India investigated the copper deposit at Mamandur between 1957 and 1963, including geophysical survey and drilling. The Geology Branch of the Industries Department is carrying out further detailed investigation in the area based on the Geological Survey of India reports. Further work is in progress.

**விடை.**—(அ) & (இ) ஆம். இந்தியப் புவியியல் ஆய்வுத்துறை 1957-ம் ஆண்டிலிருந்து 1963-ம் ஆண்டுக்குள் மாமந்தூரில் செம்புப் படிகங்கள் வெட்டி எடுப்பதற்கான ஆய்வு வேலைகளை நிறைவேற்றியது. புவியியல் பௌதிக ஆய்வும் துளையிடும் பணியும் முடிந்துள்ளன. தொழில்துறையைச் சேர்ந்த புவியியல் பிரிவு இந்திய புவியியல் ஆய்வுத்துறையின் அறிக்கைகளின் அடிப்படையில் அப்பகுதியில் மேற்கொண்டு விரிவாக ஆய்வு நடத்தி வருகிறது. பணி மேற்கொண்டும் நடந்தேறி வருகிறது.

## *Shortage of Non-Judicial Stamp Papers.*

105 *Q.*—Thiru S. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) Whether the Government are aware of the hardship caused to the public due to non-availability of non-Judicial Stamp Papers ; and

(*b*) If so the steps taken to mitigate their sufferings ?

*A.*—(*a*) Yes.

(*b*) After considering the various measures to mitigate the sufferings of the public for want of non-Judicial Stamp Papers, orders have been issued to all the Sub-Registrars except those in the City of Madras to receive cash up to Rs. 500 in lieu of stamp for certain instruments (i.e. sale, mortgage, gift and settlement) and certify by endorsement thereon, that the proper duty has been paid. In cases, where the amount exceed Rs. 500 the parties have been instructed to make payment of the amount in the Sub-Treasury and on production of the chalans, the Sub-Registrars

have been instructed to make the endorsement on the documents. The Government have also empowered all Treasury Officers in the State to issue Special Adhesive Stamps to the public and perforate the stamps.

**விடை**—(அ) ஆம்.

(இ) நீதித் துறையல்லாத சாதாரண முத்திரைத் தாள்கள் கிடைக்காமையால் பொதுமக்கள் துன்பப்படுவதைத் தவிர்ப்பதற்கானபல்வேறு நடவடிக்கைகளைப் பற்றி ஆலோசித்துப் பார்த்த பின்னர் (கிரய பத்திரம், அடைமானப் பத்திரம், தான பத்திரம், செட்டில்மெண்ட் பத்திரம் போன்ற) சில ஆவணங்களுக்கு முத்திரைத் தாள்கள் பயன்படுத்துவதற்குப் பதிலாக ரூ. 500 வரை ரொக்கம் பெற்றுக் கொள்ளுமாறும், தக்க தீர்வை செலுத்தப்பட்டதற்கு அறிகுறியாக அதன் மேல் குறிப்பெழுதுமாறும் சென்னை மாநகர் நீங்கலாக ஏனைய இடங்களிலுள்ள துணைப் பதிவாளர் அனைவருக்கும் அரசாங்கம் ஆணையனுப்பியுள்ளது. தொகை ரூ. 500-க்கு மேற்படுகிற நேர்வுகளில் ஆவனம் பதிவு செய்வோர் முதலில் துணைக் கருவூலத்தில் தொகை செலுத்திவிட்டு, செலுத்துச் சீட்டைத் துணைப் பதிவாளரிடம் காண்பிக்க வேண்டுமெனவும், அதன் மீது துணைப் பதிவாளர் ஆவனத்தில் மேற்குறிப்பெழுத வேண்டுமென்றும் கட்டளையிடப் பட்டுள்ளது. சிறப்பு ஒட்டு முத்திரைத் தலைகளை வழங்கவும், அத்தலைகளில் துளையிடவும் இம்மாநிலத்திலுள்ள கருவூல அதிகாரிகள் அனைவருக்கும் அரசாங்கம் அதிகாரம் வழங்கியுள்ளது.

### முதல் அமைச்சர்கள், உணவு அமைச்சர்கள் மாநாடு.

**106. வினு—திரு. வி. கே. கோதண்டராமன்,**
**திரு. கே. வினயகம்,**
**திரு. எஸ். ஜே. ராமசாமி,**
**திரு. எஸ். இராமச்சந்திரன்,**
**திரு. ஏ. எம். இராஜா :**
மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967 ஏப்ரல் 2-வது வாரத்தில் டெல்லியில் நடந்த முதல் மந்திரிகள், உணவு மந்திரிகள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ?

(இ) உணவு, நிதி விஷயமாக தமிழ்நாட்டின் ஒதுக்கப்பட்டவை என்ன விபரம் ?

விடை.—(அ) புது டில்லியில் 8–4–1967, 9–4–1967 தேதிகளில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் பின் வருவனவாகும்—

(1) தற்போதுள்ள மண்டலக் கட்டுப்பாடுகளும் ஒரு மாநிலத்திலிருந்து மற்ற மாநிலத்திற்கு உணவு தானியங்களை எடுத்துச் செல்வதற்குள்ள தடையும் தொடர்ந்திருக்க வேண்டும்.

(2) எதிர்காலத்தில் மிகச்சரியான உணவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காகப் புள்ளி விவரங்கள் திரட்டும் முறையைச் செம்மைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(3) அரிசிக் கொள்முதலை முனைப்பாக்கவும் பற்றுக்குறை மாநிலங்களுக்குப் போதுமான அளவு அரிசியை வழங்கவும் முயற்சி மேற்கொள்ளப் பட வேண்டும். எவ்வாறு கொள்முதல் செய்வதென்பதை மாநிலங்களுக்கே விட்டுவிட வேண்டும்.

(4) கொள்முதல் பணியிலும் உணவுத் தானியங்களைக் கிரயத்துக்கு வாங்குவதிலும் முடிந்த வரையில் இந்திய உணவு கார்ப்பொரேஷனைப் பயன்படுத்திக்கொள்ள மாநிலங்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

(5) பலவாறான உணவுச் சிக்கல்கள் எழும்போது அவற்றைத் தீர்க்க முதலமைச்சர்கள் நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

(6) முடிந்தவரையில் அதிகப்பரப்பளவு நிலத்தில் குறுகிய காலப் பயிரைப் பயிரிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.





(இ) (1) தமிழகம் சம்பந்தப்பட்டவரையில் தற்போது மத்திய பொதுத் தொகுப்பிற்கு ( Common pool ) அரிசி வழங்குமாறு தமிழகம் கேட்கப் பட மாட்டாது.

(2) இம் மாநாட்டில் மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் இடையில் நிதி பகிர்ந்து கொள்வது குறித்து விவாதிக்கப்பட்டது ; ஆனால் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி குறித்து இறுதியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

*A*.—(*a*) The following are the conclusions reached at the Conference of Chief Ministers held at New Delhi on 8th April 1967 and 9th April 1967 :—

(i) The existing zonal restrictions and the ban on inter-State movement of food-grains should continue.

(ii) Efforts should be made to perfect the system of collection of data to prepare a more accurate Food Budget in future.

(iii) Every effort should be made to intensify the procurement of rice and distribute sufficient quantity to deficit States , the method of procurement being left to the States.

(iv) The State should make efforts to utilise Food Corporation of India in the operation of procurement and purchase of food-grains to the extent possible.

(v) A Standing Committee of Chief Ministers will be formed to deal with the various problems on food as and when they arise ; and

(vi) Efforts should be made to grow short term crops in as large an area as possible.

(*b*) (1) So far as Madras State is concerned, it will not be called upon to supply any rice to the common pool for the present ; and

(2) The allocation of finance between Centre and State was discussed at the Conference but no firm decision was taken on the final allocation to States.

### தஞ்சை மாவட்டத்தில் இரண்டாவது போக சாகுபடிக்குத் தண்ணீர் தீர்வை.

**107 வினு—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் இரண்டாவது போகம் சாகுபடிக்கு தண்ணீர் தீர்வை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதா ?

(இ) அப்படியானல் எவ்வளவு தொகை ?

**விடை.**—(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், காவிரிப் பாசன ஏற்பாட்டின்கீழ் உள்ள நன்செய் நிலங்கள், புன்செய் நிலங்கள் (முறையான பாசனம் பெறுபவை) மானவாரி நிலங்கள் (முறையான பாசனம் பெறுபவை) ஆகியவை அடங்கிய பட்டா நிலங்களுக்குச் சிறப்பாக சென்ற ஆண்டிற்கு மட்டும் (பசலி 1377) இரண்டாம் போகத் தண்ணீர்த் தீர்வை தள்ளுபடி அளிக்க அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. அந்தத் தள்ளுபடி கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும் :—

(i) இந்த நிலங்களில் 1376-ம் பசலி வரையில் சம்பா நெல் பயிரிடப்பட்டிருக்க வேண்டும் ;

(ii) 1377-ம் பசலியில் முதலில் குறுவை நெல் பயிரிடப்பட்ட நிலங்களில் முதன் முறையாக இரண்டாம் போகக் குறுவை அல்லது நடுத்தரக் கால நெல் பயிரிடப்பட்டிருக்க வேண்டும்.

(இ) மேற்கண்ட ஆணைகளை ஒட்டி இரண்டாம் போகத் தண்ணீர்த் தீர்வைத் தள்ளுபடி காரணமாக ஏற்பட்ட வருவாய் விரயம் ரூ. 38,838·66 என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்துள்ளார்.

A.—(a) The Government have ordered that the second crop water charge on patta lands comprising wet lands, dry lands (regularly irrigated) and manavari lands (regularly irrigated) under the Cauvery system in Thanjavur district be waived as a special case during last year (Fasli 1377) only, subject to the following conditions :—

(i) A samba paddy crop should have been raised regularly on those lands upto fasli 1376 ; and

(ii) The lands should have been raised with second short or medium term paddy crop preceded by a short term paddy crop for the first time during fasli 1377.

(b) The Collector has reported that the loss of revenue on account of waiver of second crop water charge for fasli 1377 with reference to the above orders is Rs. 88,838·66.

### உருளைக்கிழங்கு இறக்குமதி.

108 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1957 முதல் 1966 வரையில் வெளி நாடுகளிலிருந்து, இதர ராஜ்யங்களிலிருந்து உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(உ) அதனுல் எற்பட்ட லாபம், நஷ்டம் எவ்வளவு ?

**விடை—**

(அ) 1966-ம் ஆண்டு மார்ச்-எப்ரல் திங்களில் உத்தரப் பிரதேசத்திலிருந்து மட்டுமே உருளைக்கிழங்கு அரசுக்கணக்கில் இறக்குமதி செய்யப்பட்டது. பிற நாடுகளிலிருந்து அரசுக்கணக்கில் உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்படவில்லை.

(இ) உத்திரப் பிரதேச கூட்டுறவு ஒன்றிப்பிலிருந்து மொத்தம் 7,84,080·28 ரூபாய் செலவில் 1,711 டன் உருளைக்கிழங்கு வாங்கப்பட்டது.

(உ) உருளைக்கிழங்கை வாங்கியதற்கான செலவு, வாங்கி விற்றதில் கிடைத்த வருவாய் ஆகியவற்றைக் கணக்கிட்டுப் பார்த்ததில், இந்த வகையில் ரூ. 6,34,000 இழப்பு எற்பட்டுள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது.

*A.*—(a) Potatoes were imported on Government account from Uttar Pradesh only during March-April 1966. Potatoes were not imported from other countries on Government Account.

(b) A quantity of 1,711 tonnes of potatoes was purchased from Uttar Pradesh Co-operative Federation, Limited at a total cost of Rs. 7,84, 080·28.

(c) Taking into account the receipt and expenditure, etc., the loss in this transaction is estimated as Rs. 6·34 lakhs.

### சிறைச்சாலைகள் சீர்திருத்தம்

109 வினு—திரு. வி. கே. கோதண்டராமன், திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளைச் சீர்திருத்தம் செய்ய திட்டம் எதெனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை—(அ) ஆம்.

(இ) தனிப்பட்டவர்களால் தைக்கப்பட்ட ஆடைகளைக் கைதிகள் சிறைச்சாலையில் அணிந்துகொள்ள அனுமதி வழங்கி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கைதிகள் குல்லாய் அணியவேண்டும் என்ற நிபந்தனையும்



அகற்றப்பட்டுவிட்டது. (அ), (இ) வகுப்புக் கைதிகளை உறவினர் வந்து பார்க்கையில் அவ்வகுப்பைச் சேர்ந்த கைதிகள் தங்கள் சொந்த உடைகளை அணிந்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். சென்னை, வேலூர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள மத்தியச் சிறைச் சாலைகளில் கைதி காவலர்களுக்கு தனிப்பட்ட சமையலறையும், உணவுக் கூடமும் கொடுக்கப்பட்டுள்ளன. மத்தியச் சிறைகள் சிலவற்றில் கிளை நூலகங்களும் தொடங்கப்பட்டுள்ளன. சிறைச்சாலைகளைச் சீர்த்திருத்துவது குறித்த பிற திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றது.

சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைகளை பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிறைச்சாலையையும் உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவு பெற்று நடைபெற திட்டங்கள் தீட்டும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

*A.*—(a) Yes.

(b) Orders permitting the use by prisoners of privately stitched clothes in the Jail have been issued. The stipulation for wearing the cap by the convicts has been removed. 'A' and 'B' class prisoners are being permitted to wear their own clothes while seeing their relatives. Convict warders are provided with separate kitchen and messes in Central Jail, Madras, Vellore and Madurai. Branch libraries have been opened in some of the Central Jails. Members of Legislature and Parliament have been permitted to visit jails in their constituency. Each and every jail has been asked to prepare necessary plans to augment its production with a view to attain self-sufficiency. Other Schemes of reforms are also being formulated.

### பட்டு நெசவுத் தொழில்

110 வினு—திரு. வி.கே. கோதண்டராமன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பட்டு நெசவுத் தொழிலுக்கு ஊக்கமளிக்கும் வகையில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

**விடை.**—பட்டு நெசவுத் தறிகள் மிகுந்துள்ள பகுதிகளில், பட்டு நெசவுத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வேண்டுமென அரசாங்கம் 1967-ம் ஆண்டிலிருந்து தூண்டி வருகிறது. மேலும் பல நெசவுத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ்க் கொண்டு வருவதற்காக, உறுப்பினர்களுக்கு தொழில் மூலதனக் கடன்/பங்கு மூலதனக் கடன் அளிக்கிறது. நெசவுக்குத் தேவைப்படும் புதுமுறைக் கருவிகளை வாங்குவதற்கு உதவித் தொகை வழங்குவது, தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் செயலாளர்களாகப் பணியாற்றுவதற்காக கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த பணியாளர்களை இலவசமாகத் தந்துதவுவது ஆகியவகைகளிலும் உதவி அளிக்கப்படுகிறது. கச்சா பட்டு, சரிகை மற்றும் எனைய முக்கிய மூலப் பொருள்கள் ஆகியவற்றை வாங்குவதற்குத் தேவைப்படும் உதவியும் அளிக்கப்படுகிறது.

*A.*—The Government have been encouraging the formation of Silk Weavers' Co-operative Societies in areas where there is concentration of silk looms, from 1957 onwards. Financial assistance is given for enlistment of more looms in the co-operative fold by providing loans for working capital/share capital of the members. Subsidies for purchase of improved appliances and for providing free services of departmental staff to work as Secretaries of the individual co-operative societies are also granted. Assistance required for purchase of raw silk, jari and other essential raw materials is also given.

[1968 ஆகஸ்ட் 31

### வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள புறம்போக்கு நிலங்கள்

111 **வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு வாருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் டி.சி. புறம்போக்கு நிலம் எத்தனை ஏக்கர் உள்ளது (தாலுகா வாரியாக)?

(இ) அதில் உயர்ந்த ஜாதிக்காரர்கள் விவசாயம் செய்யக் கூடிய நிலம் எத்தனை ஏக்கர் உள்ளன?

**விடை—**

| | (அ) (ஏக்கர்) | (இ) (ஏக்கர்) |
|---|---|---|
| வேலூர் .. .. .. .. .. | 520·10 | 20·40 |
| வாலாஜா .. .. .. .. .. | 1,333·13 | 56·59 |
| அரக்கோணம் .. .. .. .. .. | 1,496·80 | 61·54 |
| செங்கம் .. .. .. .. .. | 6,216 26 | 2,197·00 |
| வந்தவாசி .. .. .. .. .. | 249·47 | 36·47 |
| செய்யாறு .. .. .. .. .. | 331·96 | 34·38 |
| ஆரணி .. .. .. .. .. | .. | .. |
| திருவண்ணாமலை .. .. .. .. | 816·26 | 236·49 |
| போளூர் .. .. .. .. .. | 774·13 | 315·75 |
| திருப்பத்தூர் .. .. .. .. .. | 280·00 | 90·00 |
| குடியாத்தம் .. .. .. .. .. | 75·25 | 41·25 |
| வாணியம்பாடி .. .. .. .. | 153·40 | 125·40 |
| மொத்தம் .. | 12,196·76 | 3,215·27 |

### ஊராட்சி ஒன்றியத்தில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அதிகாரங்கள்

112 **வினா.—திரு. பெ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியத்தில் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் இதுவரை அளிக்கப்பட்டுள்ளன ?

**விடை.**—ஓர் ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் முழுவதுமோ அல்லது அதன் யாதேனுமொரு பகுதி அடங்கிய ஒரு சட்ட மன்றப் பேரவைத் தொகுதியைச் சேர்ந்த சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் ஒருவர் ஊராட்சி ஒன்றியக் குழுவின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள உரிமையுண்டு ; ஆனால் அவற்றில் வாக்களிக்கும் உரிமை அவருக்கு இல்லை. அந்த உறுப்பினர் ஊராட்சித் தலைவராக இருப்பாரானால், ஊராட்சி ஒன்றியக் குழுவின் முழு உரிமையுடைய உறுப்பினரைப் போலவே அவர் செயல்படலாம். ஊராட்சி ஒன்றியக் குழுவின் தலைவர் அல்லது துணைத் தலைவராகக் கூட அவர் தேர்ந்தெடுக்கப்படலாம். ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் ஆசிரியர்களை மாற்றுவதைக் கவனித்துக் கொள்ளும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள குழுவின் ஓர் உறுப்பினராக மாநிலச் சட்ட மன்றப் பேரவை உறுப்பினரும் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் அலுவல் சார்பான ஆய்வின் பொருட்டு அழைத்துச் செல்லப்படுகையில் ஜீப் வண்டிகளை அந்த வட்டாரத்திற்குள் அவரும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

*A.*—A member of the State Legislative Assembly representing a constituency comprising the whole or any part of a Panchayat Development Block shall be entitled to take part in the proceedings of the Panchayat



1968 ஆகஸ்ட் 31]

Union Council but shall not be entitled to vote therein. If the member is a Panchayat President, he can function as a full-fledged member of the Panchayat Union Council. He can also be elected as the Chairman or Vice-Chairman of the Panchayat Union Council. A member of the State Legislative Assembly has also been included as a member of the Committee constituted to attend to the transfer of teachers of Panchayat Union Councils. He may also travel in the jeeps within the block when he is taken for official inspections by the Panchayat Union Commissioner.

### எலக்ட்ரானிக் சாதனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை

113 **வினா.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நிறுவப்படவிருக்கும் "எலெக்ட்ரானிக்" தொழிற்சாலை திருவெறும்பூரில் நிறுவப்படுமா அல்லது ஆவடியில் நிறுவப்படுமா ?

(இ) எந்த ஆண்டில் நிறுவப்படும் ?

**விடை.**—(அ) & (இ) எலெக்ட்ரானிக் சாதனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நாட்டில் நிறுவ இந்திய அரசு உத்தேசித்துள்ளது. பாரத் எலெக்ட்ரானிக் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள், திருச்சிராப்பள்ளியிலும், சென்னை நகர்க்கு அருகாமையிலும், தமிழக அரசால் பரிந்துரைக்கப்பட்ட மனைகளைப் பார்வையிட்டனர். தொழிற்சாலை நிறுவும் இடம்பற்றிய இந்திய அரசின் முடிவு இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.

*A.*—(*a*) and (*b*) The Government of India propose to set up a factory for the manufacture of electronic equipments in the country. The officials of the Bharat Electronics, Limited, visited sites at Tiruchirappalli and near Madras City suggested by this Government. The decision of the Government of India on the location of the factory is awaited.

### மண்வாரும் இயந்திர உற்பத்தித் தொழிற்சாலை

114 **வினா.—திரு. செ. பாலசுப்பிரமணியன் :**
**திரு. கே. வினாயகம் :**
**திரு. கோமதிசங்கர தீட்சிதர் :** } மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் அமெரிக்க ஜெனரல் மோட்டார்ஸ் ஸ்தாபனத்தார் உதவியுடன் மண்வாரும் இயந்திரத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை ?

**விடை.**—(அ) & (இ) தமிழகத்திலுள்ள செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திருவள்ளூர் தாலுக்காவில் கீழ்க்கண்ட மண்வாரும் இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அமெரிக்க ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் நிறுவ இந்திய அரசு 1966-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், திரு. இந்துஸ்தான் மோட்டார்ஸ் நிறுவனத்தினருக்கு தொழில் உரிமம் வழங்கியுள்ளது.

| கருவியின் பெயர். | உற்பத்தித் திறன் (ஆண்டுக்கு). |
|---|---|
| (அ) ஊரும் எந்திரக் கலப்பை (வகைகள் வி-6 & டிவி 12). | 240 |
| (ஆ) மண் குவிக்கும் ஊர்தி (மாதிரி ஆர்-20) .. | 240 |
| (இ) விசை ஏணி (மாதிரி எஸ்-7) .. .. .. | 100 |
| (ஈ) மும்முனைச் சுமையேற்றி (மாதிரி எல்-30) .. .. | 50 |

இந்தத் தொழிற்சாலையின் மொத்த மூலதனம், நிலத்தின் மதிப்பு உள்பட ரூபாய் 9—10 கோடியாக இருக்கும் என்றும், 2,520 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவிலிருந்து 6·25 கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்களை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும். அமெரிக்க வணிக வங்கிகளுடனும், பிற அமெரிக்க தனியார் கடனுதவி நிறுவனங்களுடனும் அந்நியச் செலாவணி கடன்பற்றி பேச்சுவார்த்தை நடத்த இந்திய அரசிடம் திரு. இந்துஸ்தான் மோட்டார்ஸ் நிறுவனத்தார் மனுச் செய்துள்ளனர். அது இந்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

*A.*—(*a*) and (*b*) In April 1966 the Government of India granted an industrial licence to Thiru Hindustan Motors Ltd., Calcutta, to establish a factory in Madras State in Tiruvellore taluk, Chingleput district in collaboration with the General Motors Corporation of the United States of America for the manufacture of earth moving machineries detailed below :—

| *Name of article.* | *Annual capacity.* |
|---|---|
| (*a*) Crawler Tractors (types C-6 & TC-12) .. .. | 240 |
| (*b*) Dumpers (Model R-20) .. .. .. .. | 240 |
| (*c*) Motorised Scrapers (Model S-7) .. .. .. | 100 |
| (*d*) front end Loaders (Model L-30) .. .. | 50 |

The estimated total capital structure of the Company including cost of land is about Rs. 9 to 10 crores with an employment potential of 2,520 persons. Machines worth Rs. 6·25 crores are proposed to be imported from United States of America. The Company's application for the necessary clearance to negotiate foreign exchange loan with U.S. Commercial Banks and other private lending Institutions in U.S.A. to implement the project is under the consideration of the Government of India.

## சித்தாமூர் இனாம் கிராம விவசாயிகள்

**115 வினா.—திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம்,. சித்தாமூர் பிர்க்கா, வேலூர் கிராமத்தில் இனாம்தாரருக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டிருக்கும் தகராறு அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் எனில் இனாம்தாரர் விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்ற முயற்சிப்பது உண்மையா ?

**விடை.**—(அ) ஆம்.

(இ) இக் கிராமம் அரசாங்க ஆதிக்கத்திற்கு மாற்றப்பட்ட பின்னர் புறம்போக்கு நிலங்களின் இயல்பை வெளிப்படையாகக் கொண்டிருந்த அந்த நிலங்களை உழுவதை நிலக்கிழார் தடுக்க முடியாதென்ற எண்ணத்தில் குடியானவர்கள் அந்த நிலங்களை உழத் தொடங்கினர். ஆனால் குடியானவர்களின் இக்கருத்து, தமிழ் நாடு 1963-ம் ஆண்டு சிறு இனாம் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் விதித்துறைகளுக்கு ஏற்புடைத்தல்ல. மேற்படி சட்டத்தின் 8, 9-வது பிரிவுகளின் விதித்துறைகளை யொட்டி, நிலவரி ஏற்பாட்டு விசாரணையில் குடியானவர்களுக்கு அல்லது இனாம்தாரருக்கு பட்டா வழங்குவது முறைப்படுத்தப்படும். இது நடைபெறும் வரையில், அரசாங்கத்தால் மேற்கொள்ளபபட்ட சிறு இனாம் நிலத்தின் எப்பகுதியிலும் தலையிட குடியானவர்களுக்கு உரிமை இல்லை. அவர்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லும் நிலை இன்னும் வரவில்லை. மேலும் அவர்களுக்குச் சட்டப்படியுள்ள உரிமைகள் அவர்களிடமிருந்து பறித்துக்கொள்ளப்படவில்லை.





*A.*—(*a*) Yes.

(*b*) The ryots started ploughing the lands under the impression that after the village had passed into the control of the Government the landholder had no right to prevent them from tilling the lands which had *prima facie* the characteristics of porambokes. This stand of the ryots is not in consonance with the provisions of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. Grant of patta either to the ryots or to the inamdar will be regulated with reference to provisions of sections 8 and 9 of the Act during the settlement enquiry. Till this is done, the ryots have no right to interfere with any part of a minor inam taken over. As yet, the stage, when they can ventilate their grievance has not been reached and they have not been deprived of the rights to which they are legally entitled.

## குடும்பக்கார்டு பகுதிகளுக்கு உணவு தானிய அளவு

**116 வினா.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் குடும்பக்கார்டு திட்டம் அமுலில் இருக்கும் எல்லா இடங்களிலும் ரேஷன் அளவை அதிகரித்து கொடுக்கும் செயல் குறிப்பு ஏதேனும் தற்சமயம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம்?

**விடை.**—(அ) இம் மாநிலத்தில் உணவுப் பொருள் பங்கீட்டு முறை சட்டப்படி செயலில் இராத பகுதிகளில் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படவேண்டிய பங்கீட்டுப் பொருள்களின் அளவை அரசாங்கம் வரையறுக்கவில்லை. அந்தந்தப் பகுதியின் தேவைகளையும் உணவுப் பொருள் இருப்பு நிலையையும் ஒட்டி, பங்கீட்டு அளவை முடிவு செய்யும் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இவ்வாறு முடிவு செய்யப்படும் அளவு, உணவுப் பொருள் பங்கீட்டு முறை சட்டப்படிச் செயலில் உள்ள பகுதிகளுக்காக முடிவு செய்யப்பட்டுள்ள அளவை, அதாவது வயது வந்தவர் ஒருவருக்கு வாரம் ஒன்றுக்கு 1,400 கிராம் அரிசி, 350 கிராம் கோதுமைப் பொருள்கள் என்ற அளவுக்கு மேற்படக்கூடாது என விதிக்கப்பட்டுள்ளது. எனவே, உணவுப் பங்கீட்டுமுறைச் சட்டப்படிச் செயலில் இராத பகுதிகளில் வழங்கப்படும் உணவுப் பொருள்களின் அளவை அதிகரிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

*A.*—(*a*) The Government have not fixed the scale of ration to be supplied through Fair Price Shops in the informal rationed areas of this State and have left it to the discretion of the District Collectors themselves to fix the same according to the needs of the locality and the availablity of stocks. It has been however stipulated that the quantum should not exceed the scale fixed for the statutorily rationed areas, viz., 1,400 grammes of rice and 350 grammes of wheat products per adult per week. The Government have therefore no proposal to increase the quantum of ration supplied in informal rationed areas.

(*b*) Does not arise.

## மது உட்கொள்ளுவதற்கான அனுமதிச் சீட்டு.

**117 வினா.—திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மது பர்மிட் என்னென்ன யோக்கியதாம்சங்கள் உள்ளவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன ?

**விடை.**—சென்னை மாநகரில் காவல்துறை ஆணையர் மூலமாக அல்லது அந்தந்த மாவட்டக் கலெக்டர் (அல்லது மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி மூலமாக அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக்கொள்வதன் மூலம்,) மது உட்கொள்வதற்கான அனுமதிச் சீட்டுகளை அரசாங்கம் வழங்குகிறது. இந்த விண்ணப்பத்துடன், விணணப்பதாரர் வசிக்கும் மாவட்டத்தில் மாவட்ட மருத்துவ அதிகாரி அல்லது அந்த மாவட்ட அரசாங்க மருத்துவமனையில் வேலைக்கமர்த்தப்பட்ட சம்பளம் பெறும் "சிவில் சர்ஜன்" வழங்கிய மருத்துவச் சான்றிதழ்களையும் இணைத்து அனுப்ப வேண்டும். அனுமதிச் சீட்டுகள் வழங்கக் கீழ்க்காணும் நிபந்தனைகள் நிறைவு செய்யப்படவேண்டும்.

(i) விண்ணப்பதாரர் உரிய வயதுவராதவராக (மைனராக) இருக்கக் கூடாது;

(ii) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மதுவை அருந்த அனுமதிக்கப் படவில்லையெனில், விண்ணப்பதாரரின் உடல்நலம் கடுமையாகவும் நிலையாகவும் பாதிக்கப்படும்;

(iii) விண்ணப்பதாரரின் சொந்தச் சூழ்நிலைகள் அவருக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்படுவதற்கு ஏற்றவாறு உள்ளன. அந்த அனுமதிச் சீட்டினை அவர் தவறுகப் பயன்படுத்த மாட்டார்;

(iv) விண்ணப்பதாரர் இம்மாநிலத்தில் நிலையாக வாழ்பவர்; மற்ற எந்த மாநிலமும் வழங்கிய மது உட்கொள்ளும் ஆண்டு அனுமதிச் சீட்டு எதுவும் அவரிடமில்லை. மது அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுவதற்கான விதிகள்; அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டவாறு தமிழ்நாடு 1960-ம் ஆண்டு மது (அனுமதிச் சீட்டும் உரிமமும்) விதிகளில் அடங்கியுள்ளன.

*A.*—

Permits for the consumption of liquor are granted by the Government on applications made by individuals to the Government through the Commissioner of Police in Madras City or the Collector (or District Revenue Officer) of the District as the case may be, accompanied by medical certificates issued by the District Medical Officer of the district or a paid Civil Surgeon employed in Government Hospital of the district in which the applicant resides. The following conditions should be satisfied for the grant of permits:—

(i) the applicant is not a minor;

(ii) the health of the applicant will be seriously and permanently affected if he is not permitted to consume liquor mentioned in the application;

(iii) the personal circumstances of the applicant justify his being granted a permit and he is not likely to misuse the permit; and

(iv) the applicant is a permanent resident of the State and he does not hold any annual liquor permit issued by any other State.

The rules for the grant of liquor permits are contained in the Madras Liquor (Licence and Permit) Rules 1960 as amended from time to time.

### மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை

**118 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 1964–65 1965–66, 1966–67 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கிற நஷ்டமென்ன ?

(இ) அதற்கான காரணங்களென்ன ?

(உ) இந்த சர்க்கரை ஆலையின் குறைகளை நிவர்த்தி செய்ய சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகள் யாவை ?



**விடை.**—(அ) 1964–65 நட்டம் ரூ. 5·70 லட்சம்.

1965–66 நட்டம் ரூ. 0·35 லட்சம்.

1966–67 லாபம் ரூ. 2·60 லட்சம்.

(இ) (1) தரமான கரும்பு ஆலைக்கு அருகாமையில் கிடைக்கவில்லை;

(2) ஆலையில் எதிர்பாராத இயந்திரத் தொல்லைகள் அதிகம்;

(3) ஆலையின் குறைந்த பிழியும் திறன், முதலியவைகள்.

(உ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நன்கு வேலை செய்வதைப் பற்றி ஆராய அறிந்து வழிமுறைகளை வகுப்பதற்காக, அரசு திரு. எஸ். ஆர். கெய்வார் (முதல் மெம்பர், வருவாய்த்துறை கழகம்) அவர்களை நியமித்திருக்கிறது. அன்னார் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் நடப்பைத் தற்பொழுது ஆராய்ந்து வருகிறார். அவர் முன்னோடி அறிக்கை ஒன்றை அரசுக்கு அனுப்பியிருக்கிறார். அது பரிசீலனையில் உள்ளது.

*A.*—(*a*) 1964-65—Loss Rs. 5.70 lakhs.

1965–66—Loss Rs. 0·35 lakhs.

1966–67—Profit Rs. 2·60 lakhs.

(*b*) (1) Absence of quality cane nearby.

(2) Unexpected breakdowns of machinery.

(3) Low crushing capacity, etc.

(*c*) To enquire into the working of Co-operative Sugar Mills and to suggest ways and means of improving their working, the Government have appointed Thiru S. R. Kaiwar (First Member, Board of Revenue) as one man commission. His preliminary report has been received and it is under the consideration of Government.

### செங்கற்பட்டு மாவட்டத்தில் அரிசி கடத்தல் வழக்குகள்

**119 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் அரிசி கடத்தல் சம்பந்தமாக பிடிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) எத்தனை வழக்குகள் போடப்பட்டு தீர்ப்புகள் கூறப்பட்டிருக்கிறது ?

(உ) தீர்ப்பு கூறப்படாமல் இருக்கிற வழக்குகள் எத்தனை ?

**விடை.**—(அ) :

| | 1967 | 1968. (1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் தேதி முடிய). |
|---|---|---|
| பதியப்பட்ட வழக்குகள் | 138 | 90 |
| பிடிபட்டவர்களின் எண்ணிக்கை | 489 | 293 |
| (இ) | 80 வழக்குகள் | 17 |
| (உ) | 41 வழக்குகள் | 21 வழக்குகள். |
| | 12 வழக்குகள் உயர் நீதி மன்றத்தில் நடவடிக்கையில் உள்ளன. 5 வழக்குகள் காவல் துறையினரின் விசாரணையில் உள்ளன. | 52 வழக்குகள் காவல் துறையினரின் விசாரணையில் உள்ளன. |

## கடலே கொள்முதல்

**120 வினு.—திரு எஸ். ஜே. இராமசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966–67-ம் ஆண்டில் எண்ணெய் விலேயைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின்கீழ் எவ்வளவு டன் கடலே கொள்முதல் செய்யப்பட்டது ?

(இ) அதிலிருந்து எடுக்கப்பட்ட கடலே எண்ணெய், பிண்ணுக்கு முறையே எவ்வளவு ?

(உ) இதனுல் அரசாங்கத்திற்கு லாபம் நஷ்டம் எவ்வளவு ?

**விடை.**—(அ) 1966–67-ல் மொத்தம் 213·200 டன் அளவு வேர்க் கடலே கொள்முதல் செய்யப்பட்டது.

(இ) மேற்சொன்ன அளவுடைய வேர்க்கடலே எண்ணெய் ஆடப்பட்டு, 95·940 டன் எண்ணெயும் 106·600 டன் பிண்ணுக்கும் பெறப்பட்டன.

(உ) அரசாங்கத்துக்கு ரூ. 52,333·33 விரயம் ஏற்பட்டது. விலேயைக் கட்டுப்படுத்தவேண்டுமென்னும் நோக்கத்துடன் இத்திட்டம் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டது ; இந்த வகையில் ஓரளவு விரயம் ஏற்படுவது தவிர்க்கப்பாலதல்ல.

*A.*—(*a*) A total quantity of 213·200 tonnes of groundnut was procured during 1966–67.

(*b*) The above quantity of groundnut was crushed and 95.940 tonnes of oil and 106·600 tonnes of oil cakes were obtained.

(*c*) The Government sustained a loss of Rs. 52,333·33 in the transaction. This scheme was undertaken as a deliberate measure to curb prices, and in the process some loss was inevitable.

## பொறியியற் கல்லூரிக்கு மாணவர்கள் தேர்வு

**121 வினு.—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கென 1967-ம் ஆண்டு எத்தனே மாணவர்கள் விண்ணப்பம் செய்தார்கள் ?

(இ) அவர்களில் எத்தனே பேர்கள் எந்த அடிப்படையில் அனுமதிக்கப்பட்டார்கள் ?

**விடை**—(அ) பொதுத் தேர்வுத்திட்டத்தில் அடங்கும் பொறியியல் கல்லூரிகளில் 5 ஆண்டுப் பொறியியல் பட்டப் படிப்பில் சேருவதற்காக 3,769 மாணவர்களும், 3 ஆண்டுப் பொறியியல் பட்டப் படிப்பில் சேருவதற்காக 459 மாணவர்களும் 1967–68-ல் விண்ணப்பித்திருந்தனர். எனினும், இக்கல்லூரிகளில் சேருவதற்கான தகுதி பெற்றிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை முறையே 2,896-ம் 406-ம், மட்டுமே ஆகும்.

(இ) 5 ஆண்டுப் பொறியியல் பட்டப் படிப்பில் 1,511 மாணவர்களும், 3 ஆண்டுப் பொறியியல் பட்டப் படிப்பில் 254 மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அரசாங்கத்திஞல் அமைக்கப்பட்ட பொதுத் தேர்வுக் குழுவிஞல் இம் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்ற ஆண்டு பின்பற்றப்பட்ட கொள்கையே பொதுவாக இந்த ஆண்டிலும் பின்பற்றப்பட்டது.

*A.*—(*a*) 3,769 students applied for admission to Five-Year B. E. and 459 to three-year B.E. in the Engineering Colleges coming under the Common Selection Scheme, during 1967-68. The number of eligible applications was, however, only 2,896 and 406 respectively.

(*b*) 1,511 students were admitted to five year B.E. and 254 to three year B.E. The candidates were selected by a Common Selection Committee constituted by the Government. The policy followed was generally the same as in the previous year.



## ராமநாதபுரம் மாவட்டத்தில் சாலேகள் பணி

**122 வினு—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

1967-ம் ஆண்டு ஜூலே மாதம் 18-ம் தேதி அன்று, கல்லூரணி
ராமநாதபுரம், சிவகங்கை தாலுகா) பொது மக்களால் மடப்புறம் பெரிய
கோட்டை சாலே சம்பந்தமாகவும், திருப்பரச்சேத்தி–படமாத்தூர் ' சாலே.
சம்பந்தமாகவும், தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கரு.
சீமைச்சாமி, எம். எல். ஏ., அவர்கள் மூலம் மாண்புமிகு பொதுப்பணித்
துறை அமைச்சரிடம் நேரில் கொடுத்த மனு மீது சர்க்கார் எடுத்த
நடவடிக்கை என்ன ?

**விடை.**—முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெரியகோட்டை மடப்புறம்
சாலேயின் நீளம் 9 மைல், 4 பர்லாங் ஆகும். இதில் 2 மைல் 4 பர்லாங்
தொலேவு மானுமதுரை ஊராட்சி ஒன்றியத்திஞல், கிராம வேலேகள்
மானியத் திட்டத்தின்கீழ் ரூ. 19,300 செலவில் போடப்பட்டுள்ளது.
எஞ்சியுள்ள சாலேயை அமைக்கும் செயற் குறிப்பு எதுவும் தற்போது
இல்லே. ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகத்தின் கீழுள்ள ஏனேய
சாலேகளுடன் சேர்த்து, இதனேயும் பின்வரும் திட்டக் காலத்தில்தான்
ஆலோசிக்க. வேண்டும். ஏனெனில், நிதி வசதிப் பற்ருக்குறை காரண
மாக இதனே இப்போது எடுத்துக்கொள்ள இயலாது.

படமாத்தூர்–திருப்பரச்சேத்தி சாலேயின் நீளம் 6 மைல் 2 பர்லாங்
ஆகும். நான்காவது திட்ட வரைவில் இந்தச்சாலே முழுவதும் தார்
போடத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காவது வரைவுத் திட்டத்திற்கு
ஏற்பளிப்பது ஆலோசனேயில் உள்ளது. இந்தச் சாலேயின் 2/6 மைலில்
உள்ள பாலத்தினே ரூபாய் 50,000 செலவில் மீண்டும் புதுப்பிப்பது குறித்து
நிதி வசதியையும் வேலேயின் முறை வைப்பையும் பொறுத்து வருங்காலத்
திட்டங்கள் எதிலாவது ஆலோசிக்கப்படும்.

*A.*—The length of the road from Periakottai to Madapuram referred
to in the representation is 9 miles 4 furlongs, of which road for 2 miles
4 furlongs has been formed by the Manamadurai Panchayat Union under
Village Works Grant Programme at a cost of Rs. 19,300. There is no
proposal to form the remaining length of the road at present and the
same will have to be considered under "other roads" under the
administration of Panchayat Unions in later plan periods, as there is
no possibility of taking it up now in view of acute financial stringency.

The length of the Padamathur-Tiruppachetti road is 6 miles 2 furlongs.
It is proposed to black-top the entire length of road during Fourth
Plan period. The question of approving the draft Fourth Plan is under
consideration. The question of reconstructing the bridge at Mile 2/6
on the road at a cost of Rs. 50,000 can be considered in any of the future
plans with reference to funds available and relative priorities of works.

## தமிழகத்தில் கொக்கோ பயிரிடுதல்

**123 வினு—திரு. பெ. மலேச்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கொக்கோ எங்கெங்கு பயிர் செய்யப்பட்டுள்ளது ?

( ) இதற்கான தீவிரத் திட்டத்தை ஏதும் அரசு வகுத்துள்ளதா ?

விடை—(அ) நீலகிரி மாவட்டத்தில் தெங்குமரஹாடா பகுதி.
நீலகிரி மாவட்டத்தில் கல்லாறு-பர்லியாறு பழத் தோட்டங்கள்.
கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறைப் பகுதி.
கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனமலைக் குன்றுகள்.
திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம் குன்றுகள்.
மதுரை மாவட்டத்தில் மங்கலம்கொம்பு பகுதி.

(இ) இந்தப் பயிர் அண்மையில் தான் இம் மாநிலத்தில் புதிதாகக் கொண்டுவரப்பட்டது. அதைப் பெருமளவில் பயிரிடும் வேலையை மேற்கொள்வதற்கு முன்பு, அப் பயிரை விளைவிப்பவர்களுக்கு, அதைச் சரிவரப் பயிரிடும் முறைகளைக் கற்பிப்பது அவசியமாகும். இதற்கென, முன்னோடித் திட்டக் கட்புல விளக்க நிலையங்கள் மூன்று தொடங்கப்பட்டுள்ளன. எனவே, இப் பயிரை மும்முரமாக விளைவிக்கும் திட்டம் எதையும் மேற்கொள்வது குறித்து அரசாங்கம் எண்ணுவதற்கு இது உற்ற தருணம் அல்ல.

*A.*—(*a*) Thengumarahada area in Nilgiris district;
Kallar and Burliar Fruit Stations in Nilgiris district;
Pechiparai area in Kanyakumari district;
Anamalai Hills in Coimbatore district;
Papanasam Hills in Tirunelveli district; and
Mangalacombu area in Madurai district.

(*b*) This is a new crop which has been introduced in this State only recently. Before its cultivation can be taken up on a large scale, the people have to be educated fully on the proper method of cultivation of the crop. For this purpose, three pilot demonstration project centres have been started. It is therefore too early now for the Government to think of taking up any scheme for intensive cultivation of the crop.

### திருப்பூர் ஊராட்சி நாளங்காடி வியாபாரிகள் விண்ணப்பம்

124 **வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் முனிசிபல் மார்க்கட் வியாபாரிகள் சங்கத்திடம் இருந்து 1967 செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் அவர்கள் கடைகள் வைத்திருப்பது பற்றி ஏதாகிலும் விண்ணப்பம் அமைச்சர் அவர்களுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

**விடை**—(அ) ஆம். நாளங்காடியிலிருந்து 100 மீட்டர் தொலைவிற்குள் பெருமாள் கோயிலுக்கு எதிரே காய்கறி விற்பவர்கள் அவற்றை விற்பனைக்கு பரப்பி வைத்திருப்பதாகவும், இது அங்காடியின் விற்பனைக்கு இடையூறாக உள்ளதாகவும் முறையீடு செய்யப்பட்டது.

(இ) தொடர்புள்ள அதிகாரிகளிடமிருந்து இது குறித்து அறிக்கை ஒன்று வரவழைக்கப்பட்டது. விலை கூறி விற்பவர்களுக்கு நீதிமன்றத்தில் அபராதம் விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. காவலர் உதவியுடன் அவர்கள் அந்த இடத்திலிருந்தும் அகற்றப்பட்டனர்.

*A.*—(*a*) Yes. A complaint was received that hawkers were exposing vegetables for sale in front of the Perumal Koil Temples, at a distance of less than 100 metres from the market and that this was adversely affecting the sales in the market.

(*b*) A report was called for from the concerned authorities. It is seen that the hawkers have been fined in Court. They were also evicted with police help.



### தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் திட்டம் (கோவை மாவட்டம்)

125 **வினா—திரு. க. துரைசாமி :** மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், சோமனூர், அரசூர், பல்லடம் பகுதியில் உள்ள கருணாம்பிகா, அம்பாள், ராணி லட்சுமி, லட்சுமி மில் பிராஞ்சு (பல்லடம்) லட்சுமி நாராயண மில் ஆகிய மில்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு E.S.I. திட்டம் அமலாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்தத் தேதியிலிருந்து அமலாக்கப்படும் ?

**விடை**—(அ) ஆம். கோயம்புத்தூர் மாவட்டத்தில் சோமனூர், அரசூர், பல்லடம் பகுதிகளில் அமைந்துள்ள ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

(இ) 1968 ஆகஸ்டு 31-ந் தேதி முதல் பல்லடம் பகுதிக்கு இத் திட்டம் விரிவுபடுத்தப்படும். சோமனூரையும், அரசூரையும் பொறுத்த வரையில், தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் மருத்துவமனையை அமைப்பதற்கான தகுந்த கட்டிடங்கள் கிடைத்தவுடன் அவ்விடங்களில் இத் திட்டம் நிறைவேற்றப்படும்.

*A.*—(*a*) Yes. Proposals for extending the Employees' State Insurance Scheme to the workers employed in the Mills situated in Somanur, Arasur and Palladam areas in Coimbatore district are under consideration of the Government.

(*b*) A scheme will be extended to Palladam area, with effect from 31st August 1968. As regards Somanur and Arasur, the Scheme will be implemented at these places, as soon as suitable buildings are secured for housing the Employees' State Insurance dispensary.

### திருப்பூரில் வெளவுதல் செய்யப்பட்ட அரசாங்க நிலங்கள்.

126 **வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு திரு. உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் அரசாங்க நிலங்களை அரசாங்க அனுமதி இல்லாமல் (பட்டா இல்லாமல்) எத்தனை அரசாங்க ஊழியர்கள் வீடுகள் கட்டியுள்ளனர் ?

(இ) அவர்கள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**விடை**—(அ) திருப்பூர் நகரம், தொட்டிப்பாளையம் கிராமத்தில் உள்ள அரசாங்கப் புறம்போக்கு நிலங்களில், குறைந்த சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்கள் ஆறு பேர், அரசாங்கத்தின் அனுமதியின்றி, சிறிய பரப்பளவில் ஓட்டு வீடுகள் கட்டிக் கொண்டுள்ளனர்.

(இ) மேலே குறிப்பிட்டுள்ள அரசாங்க ஊழியர்களால் செய்யப்பட்ட வெளவுதல்கள், வெளவுதல் குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்கொண்டும் நடவடிக்கைகள் எடுப்பதற்காக, திருப்பூர் தாசில்தார், சம்பந்தப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு நில வெளவுதல் சட்டத்தின்கீழ் தேவையான அறிவிப்புகளை அனுப்பியுள்ளார்.

*A.*—(*a*) There are six cases of unauthorised occupation of small extents, by tiled houses of Government poramboke lands in Thottipalayam village, Tiruppur town by low paid Government servants.

(*b*) The encroachments made by the Government servants referred to above have been booked to B. Memorandum and necessary notices have also been issued to the persons concerned under the Madras Land Encroachment Act, by the Tahsildar, Tiruppur for taking further action.

**127 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பொதுமக்களிடமிருந்து, அரசாங்க ஊழியர்கள் சர்க்கார் நிலத்தை ஆக்கிரமித்தது குறித்து புகார் மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**விடை**—(அ) அரசாங்க ஊழியர்கள் சிலர், செய்துள்ள வளைவுதல்கள் குறித்து திருப்பூர் நகரப் பொதுமக்கள் சிலர் உள்ளூர் வருவாய்த்துறை அலுவலர்களிடம் புகார் செய்துள்ளனர்.

(இ) மேலே குறிப்பிட்டுள்ள அரசாங்க ஊழியர்களால் செய்யப்பட்ட வளைவுதல்கள், வளைவுதல் குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்களை அவ்விடங்களிலிருந்து வெளியேற்றுவதற்காகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு திருப்பூர் தாசில்தார், தேவையான அறிவிப்புகளை அனுப்பியுள்ளார்.

*A*.—(*a*) Some members of the public of Tiruppur town have complained to the local Revenue officials about the encroachments by a few Government servants.

(*b*) The encroachment by the Government servants referred to above have been booked to B. Memorandum and necessary notices have been issued to the persons concerned by the Tahsildar, Tiruppur for taking eviction proceedings.

### காய்கறி வளர்ப்புத் திட்டம்

**128 வினா—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்மிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சென்னை நகரத்திற்கு அருகே நூறு ஏக்கரில் அரசாங்கக் காய்கறிப் பண்ணை யொன்றை நடத்தும் திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**விடை**—(அ) ஆம்.

(இ) காய்கறி வளர்ப்புத் திட்டம் கீழ்க்கண்ட பகுதிகளில், நிறைவேற்றப்பட்டு வருகின்றது :—

மன்னூர் கிராமம், ஸ்ரீ பெரும்புதூர் வட்டம்—100 ஏக்கர்.
அரசாங்க வீட்டு மாளிகை —சென்னை—15·41 ஏக்கர்.
கிரின்வேஸ் சாலை, சென்னை—8·91 ஏக்கர்.

தொடக்கத்தில், முருங்கை, அகத்தி, வாழை, தென்னை ஆகியவற்றுடன் தக்காளி, வெண்டை, கத்தரி போன்ற காய்கறிகள் பயிரிடப்படும். தேவைப்படும்பொழுது நிலங்கள் பண்படுத்தப்பட்டு நீர் பாய்ச்சுவதற்காகக் கிணறுகள் வெட்டப்பட்டு வருகின்றன.

*A*.—(*a*) Yes.

(*b*) The Vegetable Development Scheme is being implemented in the following areas :—

| | | | Ac. | C. |
|---|---|---|---|---|
| Mannur village, Sriperumbudur taluk | .. | .. | 100 | 00 |
| Government House Estate, Madras | .. | .. | 15 | 41 |
| Greenways Road, Madras | .. .. | .. | .. | 8 | 91 |

In the first instance, vegetables like tomatoes, bendai and brinjal along with drumsticks, agathi, plantains and coconuts will be raised. Wherever necessary, the land is being reclaimed, and wells are being dug with a view to provide irrigation facilities.



### காவிரிப்பூம்பட்டினம் சாலை, மாயூரம்

**129 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், மாயூரம் நகரில் உள்ள காவிரிப்பூம்பட்டினம் சாலையை அரசினரின் நெடுஞ்சாலைப் பிரிவில் இணைக்கக் கோரி வேண்டுகோள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**விடை.**—(அ) இச்சாலையை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தை வேண்டி 30—10—1964-ம் நாளிட்ட கிழக்குத் தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சி மன்றத்தின்கீழ் தீர்மானம் ஒன்றும், இச்சாலையின் 61/2-வது மைலிலிருந்து 63/5-வது மைல் வரையில் இதன் ஒரு பகுதியை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தை வேண்டி 16—3—1965-ம் நாளிட்ட மாயூரம் நகராட்சி மன்றத்தின் தீர்மானம் ஒன்றும் அரசாங்கத்திற்குக் கிடைத்தன.

(இ) இச்சாலையில் 62/5+590′ மைலிலிருந்து 63/1 மைல் வரையில் உள்ள பகுதியை 1965–66-ல் அரசாங்கம் மேற்கொண்டது. இச்சாலையில் 61/2 மைலிலிருந்து 62/5+590′ மைல் வரையில் உள்ள பகுதியை அரசாங்கம் நடப்பு ஆண்டு 1968–69-ல் மேற்கொண்டிருக்கிறது. மைல் 63/4 முதல் 72/5 வரையுள்ள பகுதியையும் நடப்பு ஆண்டு 1968-69 மேற்கொள்வதற்குத் தலைமைப் பொறியாளர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளதை அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. இது சம்பந்தமான அரசின் ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும்.

*A*.—(*a*) A resolution of the East Thanjavur District Development Council, dated 30th October 1964 requesting the Government to take over this road and a resolution of the Mayuram Municipal Council dated 16th March 1965, requesting the Government to take over the portion of the road from M. 61/2 to M. 63/5 were received by the Government.

(*b*) The Government have taken over the reach of the road from M. 62/5 + 590′ to M. 63/1 during 1965–66 and the reach from M. 61/2 to 62/5+590′ during the current year 1968-69. The Government have accepted the proposal of the Chief Engineer (Highways and Rural Works) to take over the reach from M. 63/4 to M. 72/5 also during the current year 1968–69. Orders in this regard will issue shortly.

### *Children's Film Club, Madras*

130 *Q.*—THIRU G. GOMATHY SANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state

(*a*) whether any representation has been made by the Childrens Film Club, Madras-4, to the Government in September 1966 seeking exemption of Children's Films shown to students, from the provisions of the Madras Entertainments Tax Act, 1939; and

(*b*) if the details thereof and the action taken thereon ?

*A*.—(*a*) Yes, Sir.

(*b*) In September 1966, the Madras Children's Film Club applied for the issue of clearance certificate to the effect that their shows will be exempted from all the taxes, as their shows are strictly limited to their members and no ticket sale is done.

Since January 1956, Films certified by the Children's Film Society, New Delhi, for exhibition to children and all shows of films produced for exhibition to children and recommended by the Children's Film Society, New Delhi, which may be conducted in the State, have been exempt from liability to entertainments tax.

The Government have since exempted from liability to entertainments tax, all cinematograph films shows of 8 mm and 16 mm dimensions. The Government have therefore informed the Madras Children's Film Club that its request to exempt from liability to entertainments tax in respect of film shows conducted by it could not be complied with and that it may apply, if so advised, for the grant of exemption from liability to surcharges, leviable under the Madras Local Authorities Finance Act, 1961, to the local authorities concerned, in whose jurisdiction it desires to conduct the film show.

**விடை.**—(அ) ஆம்.

(இ) சென்னை சிறுவர்கள் திரைப்படக் கழகம், தங்களுடைய திரைப் படக் காட்சிகள், கழக உறுப்பினர்களுக்கு மட்டுமே காண்பிக்கப்படுவதாலும், அக்காட்சிக்களுக்காக அனுமதிச் சீட்டுகள் விற்பனை செய்யப்படுவதில்லை யாதலாலும், அவற்றிற்கு எல்லா வரிகளிலிருந்தும் விலக்களிக்கும் படியாக விலக்குச் சான்றிதழ் அளிக்கப்பட வேண்டும் என்று 1966-ல் செப்டம்பரில் மனுச் செய்துகொண்டது.

சிறுவர்களுக்குக் காண்பிக்கப்படுவதற்காக புதுடில்லி சிறுவர்கள் திரைப்படக் கழகத்தின் சான்றிதழ் பெற்ற திரைப் படங்களுக்கும், மாநிலத்தில் காண்பிப்பதற்காகச் சிறுவர்களுக்கெனத் தயாரிக்கப்பட்டு புதுடில்லி திரைப்படச் சங்கத்தினால் பரிந்துரைக்கப்பட்ட திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரி விதிக்கப்படுவதிலிருந்து 1956 ஜனவரியிலிருந்து விலக்களிக்கப் பட்டுள்ளது.

எட்டு மில்லி மீட்டர், 16 மில்லி மீட்டர் அளவுள்ள திரைப்படக் காட்சிகள் அனைத்திற்கும் கேளிக்கை வரி விதிப்பதிலிருந்து அரசாங்கம் விலக்களித்துள்ளது. எனவே, தங்களுடைய திரைப் படக்காட்சிகளுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்ற சென்னைச் சிறுவர்கள் திரைப்படக் கழகத்தின் வேண்டுகோளுக்கு, இணக்கம் தெரிவிக்க இயலாது என்று அரசாங்கம் அக்கழகத்திற்குத் தகவல் தெரிவித்துள்ளது. மேலும், அவர்கள் வேண்டுமானால் எந்த உள்ளாட்சி மன்ற அதிகார வரம்பில் தாம் திரைப்படக் காட்சி நடத்த விரும்புகிறார்களோ அந்த உள்ளாட்சி மன்றத்திற்கு, 1961-ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படத் தக்க மேல் வரிகளிலிருந்து தாம் நடத்தும் திரைப்படக் காட்சிகளுக்கு விலக்களிக்க வேண்டும் என்றும் மனுச் செய்து கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது.

*Schools for Deaf and Dumb at Madras*

131 *Q*—Thiru G. GOMATHY SANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether any grant from the Union Government has been secured for the school for Deaf and Dumb at Madras;

(*b*) If so, the details thereof; and

(*c*) the details of the proposal to expand the Institution and to provide employment opportunities for the inmates?

*A.*—(*a*) and (*b*) Out of three schools for the deaf and dumb at Madras the C.S.I. School for the Deaf, Mylapore alone received a grant of Rs. 41,760 from the Union Government in 1960 for construction of class rooms estimated to cost Rs. 79,330 The balance of cost was met by the management from its own funds. The other schools namely St. Louis Institute of the Deaf, Adyar, and the school for the Blind, Deaf and Dumb, Cathedral, did not receive any grant from the Union Government.

(*c*) No proposal to expand the Institution and to provide employment opportunities for the inmates of the school has been received from any of the three institutions.



(அ) & (இ) சென்னையில் உள்ள செவிடர்—ஊமைகளுக்கான பள்ளிகள் மூன்றில் மயிலையில் உள்ள செவிடர்களுக்கான பள்ளி மட்டுமே, மத்திய அரசிடமிருந்து 1960-ம் ஆண்டில் ரூ. 41,760 மானியமாகப் பெற்றுள்ளது. ரூ. 79,330 மதிப்பீட்டுச் செலவில் வகுப்புகளைக் கட்டுவதற்காக இந்த மானியம் பெறப்பட்டது. எஞ்சிய செலவை பள்ளி நிர்வாகமே தன்னுடைய நிதியிலிருந்து ஏற்றுக் கொண்டது. அடையாற்றில் உள்ள செவிடர்களுக்கான புனித லூயி நிறுவனம் என்ற பள்ளியும், கதீட்ரலில் உள்ள குருடர், செவிடர் ஊமைகளுக்கான பள்ளியும் மத்திய அரசிடமிருந்து மானியம் எதையும் பெறவில்லை.

(உ) இம் மூன்று நிறுவனங்களை விரிவுபடுத்துவதற்கும் மாணவர்களுக்கான வேலை வாய்ப்புகளை அளிப்பதற்கும் வேண்டிய செயற்குறிப்புகள் அந்த நிறுவனங்கள் எவற்றிடமிருந்தும் வரவில்லை.

*Export of jaggery*

132 *Q.*—Thiru GOMATHYSANKARA DIKSHIDAR, Thiru K. CHEEMAICHAMY and Thiru S. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is proposed to ban the export of jaggery from this State; and

(*b*) if so, the details thereof?

*A.*—(*a*) and (*b*) This Government addressed the Government of India in June 1967 for their concurrence to the proposal of this Government for imposing a ban on the export of jaggery from this State; but the Government of India did not give their concurrence. The Government of India have informed this Government that imposition of restrictions on export of jaggery by one State will result in considerable hardship to consumers in other States who depend on outside supplies and that they therefore do not consider it desirable to agree to imposition of restrictions on movement of jaggery outside Madras State. In view of this, the entire question is under the consideration of the Government.

**விடை.**—(அ) & (இ) தமிழ்நாட்டிலிருந்து வெல்லம் ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடைசெய்வதற்கான இந்த அரசாங்கத்தின் செயற்குறிப்புக்கு இசைவு அளிக்குமாறு இந்திய அரசுக்கு இந்த அரசாங்கம் 1967 ஜூன் திங்களில் எழுதியது. ஆனால், இந்திய அரசு அதற்கு இசைவு அளிக்கவில்லை. வெல்ல ஏற்றுமதி மீது ஒரு மாநிலம் கட்டுப்பாடு விதித்தால் வெளியிடங்களிலிருந்து வெல்லம் தருவித்து வழங்கப்படுவதை நம்பியுள்ள பிற மாநிலம் பயன்கொள்வோர்களுக்குப் பெருமளவிற்கு இடர்ப்பாடு ஏற்படும் என்றும், எனவே, தமிழ்நாட்டிற்கு வெளியே வெல்லம் ஏற்றுமதி செய்வதன் மீது கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு ஒப்புக்கொள்வது விரும்பத்தக்கதல்ல என்றும் தான் கருதுவதாகவும் இந்திய அரசு இம் மாநில அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது. இது காரணமாக, இதனை அரசாங்கம் முழுமையாக ஆலோசித்து வருகிறது.

*Purchase of grains and pulses from other States*

133 *Q*—Thiru G. GOMATHY SANKARA DIKSHITHAR: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to State the new procedure in regard to the purchase of grains and dhalls from other States?

*A.*—During 1966, the Government obtained a total quantity of 19,800 tonnes of rice on loan basis from Andhra Pradesh and Central Pool to this State on the understanding that this State would supply an equal quantity of rice to Kerala State. During the year 1967-68, this State returned to the Central Pool all rice loans which had been

obtained in the previous year to tide over difficult situations by 23rd April 1967. Arrangement has been made to obtain raw rice from Andhra Pradesh on the basis of replacement of an equal quantity of rice from Madras State to Kerala.

2. As regards the purchase of pulses from other States, it was the practice till the end of 1966 to procure directly toor dhall, gram and gramdhall from the northern States on Government account. But consequent on the establishment of the Food Corporation of India, the procurement of gram and gramdhall was entrusted to the Food Corporation of India through their branches in despatching States. The Government of India have since removed the ban imposed on the movement of gram/gramdhall from the producing States. We had huge stocks of toor and toor dhall purchased on Government account in 1965-66 when this Government took charge in March 1967. It was feared that we might have to lose about Rs. 20 to Rs. 22 lakhs in the toor dhall transaction as there was no demand from the dealers for our stocks. However, by watching the market trend closely and by judicious distribution of stocks we have been able to turn the corner and sell stocks at higher and higher prices thus reducing the overall loss in the sale of toor dhall by an appreciable figure. At the same time care has been taken to see that the Government prices compare very favourably with open market prices and act as a buffer against further increase of open market prices. The Government have taken a decision not to make any further purchase of toor or toor dhall on Government account.

So far as wheat is concerned, the Government of India make allotment of wheat to this State. There has been no change in the procedure in getting wheat from the Government of India.

**விடை.**—தமிழ்நாடு 1966-ம் ஆண்டில் 19,800 டன் அரிசியை ஆந்திரப் பிரதேசத்திலிருந்தும், மத்திய தொகுப்பிலிருந்தும் கடனாகப் பெற்றது. கேரளாவுக்கு இதே அளவுள்ள அரிசி தமிழ் நாட்டிலிருந்து அனுப்பப் படும் என்ற ஏற்பாட்டின் பேரிலேயே இவ்வாறு பெறப்பட்டது.

கடந்த ஆண்டில் 23—4—1967 வரை நெருக்கடி நிலையைச் சமாளிப் பதற்காக கடனாக வாங்கிய அரிசியை இம் மாநிலம் 1967–68-ம் ஆண்டில் மத்தியத் தொகுப்பிற்கு திருப்பிக் கொடுத்து விட்டது. தமிழ் நாட்டிற்கு ஆந்திராவிலிருந்து பச்சரிசி பெறுவதற்கும் அதே அளவுள்ள வேறு அரிசியைக் கேரள மாநிலத்திற்கு அனுப்புவதற்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

2. பிற மாநிலங்களிலிருந்து பருப்பு வகைகள் வாங்குவதைப் பொறுத்த வரை துவரம் பருப்பு, கொத்துக்கடலை, கடலைப்பருப்பு ஆகியவற்றை வடக்கேயுள்ள மாநிலங்களிடமிருந்து அரசாங்கக் கணக்கில் கொள்முதல் செய்வதே 1966-ம் ஆண்டு இறுதிவரை வழக்கமாயிருந்தது. ஆனால் இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் துவக்கப்பட்டதன் விளைவாக கொத்துக் கடலை, கடலைப்பருப்பு, ஆகியவற்றைக் கொள்முதல் செய்யும் பணி ஏற்று மதி செய்யும் மாநிலங்களிலுள்ள இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் கிளைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. கொத்துக்கடலை, கடலைப் பருப்பு ஆகியவை உற்பத்தி செய்யும் மாநிலங்களிலிருந்து வெளியிடங்களுக்கு அனுப்புவதற்கு விதித்திருந்த கட்டுப்பாடுகளை இந்திய அரசு இப்போது நீக்கியுள்ளது.

3. 1967-ம் ஆண்டு மார்ச் திங்களில் இந்த அரசாங்கம் பதவியேற்றபோது 1965–66-ல் அரசாங்கக் கணக்கில் வாங்கப்பட்ட துவரை, துவரம்பருப்பு ஆகியவை அதிக அளவில் கைவசம் இருந்தன. நம்மிடமிருந்த துவரம் பருப்பினை வணிகர்கள் வாங்க முன் வராததால், இதில் இம் மாநிலத் திற்கு ரூ. 20 லட்சம் முதல் ரூ.22 லட்சம் வரை விரயம் ஏற்படுமோ என்று





அஞ்சப்பட்டது. அங்காடி நிலவரத்தைக் கூர்ந்து கவனித்து, இருப்பினை ஏற்ற வகையில் பங்கீட்டுக் கொடுத்ததால் நாம் நிலைமையைச் சமாளிக்க முடிந்தது. துவரம் பருப்பினைக் காலந் செல்லச் செல்ல அதிக விலைக்கு விற்க முடிந்ததால் முன்னர் ஏற்படவிருந்த பெரு விரயம் பெருமளவு குறைக்கப்பட்டு விட்டது. அதே நேரத்தில், துவரம் பருப்பின் விற்பனை விலைகள் வெளிச்சந்தை விலைகளை விடக் குறைவாக இருக்குமாறும் அரசு பார்த்துக்கொண்டது. வெளிச்சந்தை விலைகள் மேற்கொண்டு உயரா திருக்க இது காப்புத் தடையாகவும் விளங்கியது. இனி அரசாங்கக் கணக்கில் துவரை, துவரம்பருப்பு வாங்குவதில்லை எனவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கோதுமையைப் பொறுத்தவரையில் இந்தமாநிலத்திற்கான கோதுமையை இந்திய அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. இந்திய அரசிடமிருந்து கோதுமை பெறுவதற்கான நடைமுறையில் எந்த மாறுதலும் இல்லை

*Tax exemption for Sale of Condoms*

134 *Q.*—THIRU G. GOMATHY SANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether any sales tax exemption has been granted in respect of sales of Condoms; and

(*b*) if so, the details thereof.

*A.*—(*a*) Yes Sir,

(*b*) On the request of the Government of India, Ministry of Health and Family Planning, and in view of the need for encouraging family planning methods, Government have granted exemption from liability to tax under the Madras General Sales Tax Act, 1959, in respect of sales of Condoms with effect from 29th November 1967. The inter-State sales of Condoms from this State are also exempted from liability to tax under the Central Sales Tax Act, 1956, with effect from 29th November 1967.

**விடை**—

(அ) ஆம்.

(இ) இந்திய அரசின் சுகாதார குடும்பக்கட்டுப்பாட்டு அமைச்சகத்தின் வேண்டுகோளுக்கிணங்கவும், குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொள்ளு மாறு மக்களைத் தூண்டுவதன் அவசியத்தைக் கருதியும் 29—11—1967 தேதி முதற்கொண்டு (காண்டம்) கருத்தடைச் சாதனங்களின் விற்பனையை பொறுத்தமட்டில் தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வரி செலுத்த வேண்டியதில்லையென்று அரசாங்கம் விலக்கு அளித்துள்ளது. இம் மாநிலத்திலிருந்து மாநிலங்களுக்கு இடையே (காண்டம்) கருத்தடைச் சாதனங்களின் விற்பனைக்கும் 29—11—1967 தேதியிலிருந்து 1956-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வரி செலுத்தவேண்டியதில்லையென விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

*Development of Cuddalore Harbour*

135 *Q.*—THIRU K. VINAYAKAM AND N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to improve and execute the Cuddalore Harbour Development Project;

(*b*) if so, the estimated expenditure thereof; and

(*c*) the contribution the Central Government proposes to make?

*A.*—(*a*) & (*b*) The Cuddalore Port Development Scheme is taken up for execution as a Centrally-sponsored scheme during the Third Five-Year Plan at an estimated cost of Rs. 120·74 lakhs and it has

been carried over to the Fourth Five-Year Plan. The Scheme is now estimated to cost of Rs. 139·24 lakhs in view of certain modifications made in the design of features including provision of two sand pumps.

(c) Against the total original estimated cost of Rs. 120·74 lakhs for the scheme, the Government of India allocated Rs. 50 lakhs for the grant of loan assistance to the State Government during the Third Five-Year Plan. They have been urged to provide the balance of Rs. 70·00 lakhs during the Fourth Five-Year Plan.

விடை—

(அ) & (இ) : கடலூர் துறைமுக வளர்ச்சித் திட்டம் ரூ. 120·74 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசுத் திட்டமாக மேற்கொள்ளப் பட்டு, நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது. இரண்டு மணற் குழாய்களுக்கு ( Sand pumps ) ஏற்பாடு செய்வது உட்பட அமைப்பு முறையில் சில மாறுதல்கள் செய்தமையால் இத்திட்டத்திற்குத் தற்போது ரூ. 139·24 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

(உ) இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ. 120·74 லட்சம் செலவாகுமென முன்னர் மதிப்பிடப்பட்டது; மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இம்மாநில அரசாங்கத்திற்குக் கடன் உதவியாக ரூ. 50 லட்சம் இந்திய அரசு ஒதுக்கியது. நான்காம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் எஞ்சிய 70 லட்சம் ரூபாயை அளிக்குமாறு மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

### *Basic Land Taxes*

136 *Q.*—Thiru K. VINAYAKAM, Thiru K. CHEEMAICHAMY and Thiru V. K. KOTHANDARAMAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

Whether there is any proposal to abolish the basic land tax for all kinds of land holdings irrespective of the size or extent of lands owned by the agriculturists in the State.

*A.*—

The Government have ordered the waiver with effect from 1st July 1967 of the basic dry assessment on all lands in the State except Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district. As regards Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district the above order shall be implemented as from 1st July 1967 after the ryotwari settlement under the Madras (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 is completed. The question of rationalisation of water rates on wet lands with a view to abolishing the consolidated assessment on wet lands is separately under consideration.

விடை—

கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலியின் செங்கோட்டை வட்டம் நீங்கலாக தமிழ் நாட்டிலுள்ள எல்லா நிலங்களுக்கும் அடிப்படை புன்செய்த் தீர்வை விதிப்பிலிருந்து 1—7—1967 முதற்கொண்டு விலக்களிக்கப்படும் என்று அரசாங்கம் ஆணை யிட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத் தின் செங்கோட்டை வட்டம் ஆகியவற்றை பொறுத்தவரையில் தமிழ்நாடு (மாற்றப்பட்ட பகுதி) ரயத்துவாரி நிலவரி ஏற்பாட்டுச் சட்டத்தின் கீழ் ரயத்துவாரி நிலவரி ஏற்பாட்டினை நிறை வேற்றிய பிறகு 1—7—1967 முதல் மேற்படி ஆணை செயல் படுத்தப்படும். நன்செய் நிலங்கள் மீதான ஒருங்கிணைந்த தீர்வையை நீக்கும் நோக்கத்துடன் நன்செய் நிலங்கள் மீதான தண்ணீர்த் தீர்வைகளைச் சீரமைப்பது குறித்து தனியே ஆலோசிக்கப்பட்டு வருகிறது.



### *Handloom Weavers, Tiruthani.*

137 Q.— Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(*a*) the nature of living conditions of Handloom Weavers in Tiruthani taluk ;

(*b*) the wage paid to the weavers in that area ; and

(*c*) whether Government has any proposal to increase it ?

*A.*—(*a*) About 25 per cent of the weavers engaged in the production of handloom fabrics have gone to other places to do manual work and eke out their livelihood, as the handloom industry in that area cannot provide them sufficient work. As production is restricted to meet the demands of merchant exporters and the local requirements, all the remaining weavers could not get sufficient work.

(*b*) The monthly wages earned by a weaver in that area range from Rs. 40 to Rs. 50. The wages paid to weavers for production of different varieties of cloth ranges from 0·24 to 0·85 Paise per yard according to the count and the variety of the fabrics.

(*c*) As the handloom industry is a decentralised industry and as the Government are not employing the weavers, the question does not arise

விடை.—(அ) திருத்தணி வட்டத்தில் கைத்தறித்துணி உற்பத்தியில் ஈடு பட்டிருந்த நெசவாளர்களில் சுமார் 25 சதவிகிதத்தினர் தங்களுக்குப் போதுமான அளவிற்கு அத்தொழில் வேலை வாய்ப்பு அளிக்காததால், மெய் வருந்த உழைத்துத் தங்களின் வாழ்வை நடத்த வேற்றிடங்களுக்குச் சென்று விட்டனர். ஏற்றுமதி செய்யும் வணிகர்களின் தேவைகளுக்கும் உள்ளூர்த் தேவைகளுக்கும் இணங்க உற்பத்தி கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால். எஞ்சிய நெசவாளர்கள் அனைவருக்கும் போதுமான அளவிற்கு வேலை வாய்ப்பில்லை.

(இ) அந்தப் பகுதியில் உள்ள நெசவாளர் ஒருவருக்குத் திங்கள் ஒன்றுக்கு 40 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரை ஊதியம் கிடைக்கிறது. பல ரகத்துணிகளைத் தயாரிப்பதற்காக நெசவாளர் களுக்கு அந்த அந்தத் துணிகளின் இழைநயம், ரகம் ஆகி வற்றிற்கேற்ப கஜம் ஒன்றுக்கு 24 காசு முதல் 85 காசு வரை ஊதியம் கொடுக்கப்படுகிறது.

(உ) கைத்தறித் தொழில் ஆட்சிக் கட்டுப்பாடற்ற ஒரு தொழில் என்பதாலும், அரசாங்கம் நெசவாளர்களை நியமிப்பதில்லை என்பதாலும் இவ்வினா எழ இடமில்லை.

### *Inter-district movement of food grains*

138 *Q.*—Thiru. K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

Whether the Government has under consideration any proposal to allow free and uninterrupted movement of all kinds of food grains inside the State by removing the inter-district check posts ?

A.—There is no proposal under consideration for lifting restrictions on inter-district movement of paddy and rice within the State. The ban on movement of coarse grains within the State was lifted in October 1967. There is no restriction on the movement of wheat in the Southern Zone comprising the States of Madras, Mysore, Andhra Pradesh, Kerala, and the Union Territory of Pondicherry. But a permit is necessary for the movement of wheat products from and to statutorily rationed areas in the State.

விடை.—

இம் மாநிலத்தில் நெல்லையும், அரிசியையும் ஒரு மாநிலத்திலிருந்து, மற்றொரு மாநிலத்திற்கு அனுப்புவதற்குள்ள கட்டுப்பாடுகளை சம்பாக் கொள்முதல் முடிவடையும் வரை அகற்றும் செயற்குறிப்பு எதுவும் ஆலோசனையில் இல்லை. பயறு வகைத் தானியங்களை இம்மாநிலத்திற்குள் அனுப்புவதற்கு விதித்திருந்த தடை, 1967 அக்டோபர் திங்களில் நீக்கப்பட்டது. தமிழ்நாடு, மைசூர், ஆந்திரப்பிரதேசம், கேரளா, புதுச்சேரி யூனியன் ஆட்சிப் பகுதி ஆகியவை அடங்கிய தென்மண்டலத்தில் கோதுமை அனுப்புவதற்குக் கட்டுப்பாடு எதுவும் இல்லை. ஆனால், இம் மாநிலத்தில் சட்டப்படியான உணவுப் பங்கீட்டு முறை உள்ள பகுதிகளிலிருந்து, அல்லது அப்பகுதிகளுக்கு கோதுமை பொருள்களை . அனுப்புவதற்கு அனுமதிச் சீட்டுப் பெற வேண்டும்.

*Subway near Madras High Court*

139 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state —

(*a*) whether it is a fact that subway near High Court, Madras, is eaking and needs extensive repairs ; and

(*b*) if so, the extent of damage suffered thereby ?

*A.*—(*a*) & (*b*) There has been no damage whatsoever to the structure of the bridge. It was only seepage water which was oozing through the side walls of the subway after the heavy rains during the last rainy season. Such sweating can be expected in all new constructions of cement concrete works, especially after heavy rains. According to a special clause in the agreement, the contractor is required to observe the behaviour of the structure after one rainy season and attend to the places where seepage occurs and make the concrete waterproof, free of cost. The contractor has attended to this item of work in accordance with the terms of the agreement.

விடை.—

(அ) & (இ) : இப்பாலத்தின் கட்டுமானத்திற்கு எவ்விதச் சேதமும் ஏற்படவில்லை. கடந்த மாரிக்காலத்தில் பெருமழைக்குப் பிறகு, சுரங்கப் பாதையமைப்பின் பக்கச் சுவர்கள் மூலம் நீர் கசிந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. சிமிட்டி கான்க்ரீட் கொண்டு கட்டப்பட்டுள்ள புதிய கட்டுமானங்கள் அனைத்திலும் குறிப்பாகப் பெருமழைக்குப் பின்னர் இத்தகைய கசிவு எதிர்பார்க்கக்கூடியதே. ஒப்பந்தத்தில் கண்டுள்ள சிறப்புப் பகுதியின்படி, ஒரு மழைக்காலம் முடிந்த பின்னர் அந்தக் கட்டுமான அமைப்பை ஒப்பந்தக்காரர் கவனித்து, நீர்க்கசிவு ஏற்படும் இடங்களை அவரது செலவில் செப்பனிட்டு கான்க்ரீட் சுவர்களை நீர்ப் புகாவண்ணம் சீர்படுத்த வேண்டும் ; ஒப்பந்தத்தில் கண்ட நிபந்தனையின்படி ஒப்பந்தக்காரர் இப்பணியைச் செய்து முடித்துள்ளார்.

*Percentage of passes from Vivekanada College, Madras*

140 Q.— THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) how many students appeared for B.Com. examination and B.Sc., (Physics, Chemistry, etc.,) examination of 1967 from Vivekananda College, Madras: and

(*b*) what is the percentage of passes ?



*A.*—(*a*) and (*b*)

| | Course. | *Number of students presented by the college in March—April* 1967. | *Number of students passed in March—April* 1967. | *Percentage.* |
|---|---|---|---|---|
| 1 | B. Com. .. .. | 68 | 66 | 97 |
| 2 | B.Sc. Branch I Mathematics. | 60 | 48 | 80 |
| 3 | B.Sc. Branch III Physics. | 39 | 38 | 97 |
| 4 | B.Sc. Branch IV Chemistry. | 47 | 38 | 81 |
| 5 | B.Sc , Branch V Botany. | 28 | 24 | 86 |

*Excavation work in Woriur, Thiruchirappalli*

141 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(*a*) Whether excavations are conducted in Woriur, Tiruchirappalli district by the Madras University Ancient history and Archaeological section ; and

(*b*) If so, the progress made so far ?

*A.*—(*a*) Yes.

(*b*) University of Madras has been conducting excavations in Woriur in Tiruchirappalli district for the past three years. So far nine trenches were dug in different places in Woriur and the adjacent areas. During the second year Mr. Eves Martin, of French Institute, Paris surveyed this place with the help of 'Proton Magneto Meter'. Based on his report the University Department excavated a site and came across some ancient pottery. This year's excavation, it is reported has yielded, potsherds carrying inscribed letters in Damili characters. Besides this the excavation has yielded ancient potteries showing foreign influence, beads and a few teracotta figures. The finds are being examined by the University authorities.

விடை.—(அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் உறையூரில் கடந்த மூன்றாண்டுகளாகச் சென்னைப் பல்கலைக்கழகம் அகழ்வாராய்ச்சி நடத்தி வருகிறது. இதுவரையில் உறையூரிலும் அதை அடுத்துள்ள பகுதிகளிலும் பல இடங்களில் ஒன்பது அகழ்விடங்கள் தோண்டப்பட்டன. இரண்டாம் ஆண்டில் பாரிஸ் நகர பிரெஞ்சு கழகத்தைச் சார்ந்த திரு ஈவ்ஸ் மார்டின் அவர்கள் நுண்காந்தக் கருவி (Proton Magneto Meter) ஒன்றைக் கொண்டு இப்பகுதியை ஆய்ந்தார். அவரது அறிக்கையின் அடிப்படையில் பல்கலைக் கழகத் துறை அகழ்வாராய்ச்சி நடத்தியபோது பண்டைய மட்பாண்டச் சின்னங்கள் கிடைத்தன. இந்த ஆண்டு அகழ்வாராய்ச்சியில், தாமிலி போன்ற எழுத்துக்களோடு கூடிய பானை ஓடுகள் கிடைத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அகழ்வாராய்ச்சியுடன் வெளிநாட்டுத் தொடர்பைக் காட்டும் பண்டைய பானைகள், சிறுமணிகள், சுட்ட மண் பாவைகள் சில ஆகியவைகளும் கிடைத்துள்ளன. அகழ்ந்தெடுத்த இப்பொருள்களைப் பல்கலைக் கழக அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

[1968 ஆகஸ்ட் 31

## வேளாண்மை—தோட்டக்கலைச் சங்கம், சென்னை

142 வினா.—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையிலுள்ள Agri-Horticultural Society-க்கு 1962 எப்ரல் முதல் 1967 மார்ச்சு முடிய ஆண்டு ஒவ்வொன்றுக்கும் முறையே அரசாங்கம் வழங்கியுள்ள மான்யத் தொகை எவ்வளவு ?

(இ) அந்தச் சங்கத்திற்குரிய நில விஸ்தீர்ணம் எவ்வளவு ?

(உ) அதில் அரசாங்கத்தைச் சேர்ந்த Society-யைச் சேர்ந்த நில விஸ்தீர்ணம் முறையே எவ்வளவு ?

(எ) கொடுக்கப்பட்ட மான்யத் தொகைக்கு அரசாங்கம் தணிக்கை செய்துள்ளதா ?

விடை.—(அ) சென்னை, வேளாண்மை-தோட்டக் கலைச் சங்கத்திற்கு அனுமதிக்கப்பட்ட மானியத் தொகை கீழ்க்கண்டவாறாகும் :—

| ஆண்டு. | | தொகை (ரூபாய்.) |
|---|---|---|
| 1962–63 | .. | 8,629 |
| 1963–64 (1—4—63 முதல் 31—12—63 வரை) | .. | 5,499 |
| 1964–65 (1—1—64 முதல் 31—12—64 வரை) | .. | 9,296 |
| 1965–66 | .. | .. |
| 1966–67 | .. | .. |
| 1967–68 | .. | .. |
| மொத்தம் | .. | 23,424 |

(இ) 24·97 ஏக்கர்.

(உ) அரசாங்கம்—மேற்படி சங்கம் ஆகிய இரண்டு தரப்பினர்களின் உரிமைக் கோரிக்கைகளுக்குப் பாதகமின்றி இந்த நிலத்தின் உரிமையை எவருக்கென்பது முடிவு செய்யப்படாமல் விடப்பட்டுள்ளது.

(எ) இல்லை. இச் சங்கம் தனியார் நிறுவனமாக இருப்பதால், அரசாங்கம் அதன் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு இடமில்லை.

*A*.—(*a*) The amount of grants sanctioned to the Agri-Horticultural Society, Madras is as follows :—

| *Year.* | | *Amount.* Rs. |
|---|---|---|
| 1962–63 | .. | 8,629 |
| 1963–64 (1—4—63 to 31—12—63) | .. | 5,499 |
| 1964–65 (1—1—64 to 31—12—64) | .. | 9,296 |
| 1965–66 | .. | .. |
| 1966–67 | .. | .. |
| 1967–68 | .. | .. |
| Total | .. | 23,424 |

(*b*) 24·97 acres.

(*c*) The question of title to the land has been left open without prejudice to the contentions of both the parties—the Government and the Society.

(*d*) No. As the Society is a private body the question of its audit of accounts by the Government does not arise.



1968 ஆகஸ்ட் 31]

## போளூர் தாலூகாவிலிருந்து அனுப்பப்பட்ட உணவு தானியங்கள்

143 வினா.—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் உபரித் தாலூகாவான போளூரிலிருந்து பற்றாக்குறை தாலூகாக்களுக்கென 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மாவட்ட சப்ளை ஆபீசர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட உணவு தானியங்கள், போளூர் தாலூகா சப்ளை ஆபீசர் அவர்களால் விநியோகம் செய்யப்பட்டதா ?

(இ) இல்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

விடை (அ) போளூர் வட்டத்திலிருந்து பற்றாக்குறை வட்டமாகிய வேலூர் வட்டத்துக்கு 1967 செப்டம்பரில் 100 டன் அரிசி ஒதுக்கப்பட்டது. இதில் போளூர் வட்ட வழங்கல் அதிகாரி 27·825 டன் அரிசி அனுப்பியுள்ளார்.

(இ) 1967 செப்டம்பரில், போளூர் வட்டத்தினின்று இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 150 டன் அரிசி அனுப்பப்பட்டதால், போளூர் வட்ட வழங்கல் அதிகாரி அவ்வட்டத்தினின்று வேலூர் வட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட அரிசியில் இன்னும் அனுப்பிவைக்கவேண்டிய பகுதியை அனுப்ப இயலவில்லை. ஆனால், வேலூர் மக்களுக்கு இதனால் எவ்விதமான வசதிக் குறைவும் ஏற்படவில்லை. வேலூரில் வெளிச் சந்தையில் அரிசி தாராளமாகக் கிடைத்ததே இதற்குக் காரணம்.

*A*.—(*a*) Out of 100 tonnes of rice allotted from the Polur taluk to the deficit taluk of Vellore during September 1967, the Taluk Supply Officer, Polur moved 27·825 tonnes.

(*b*) As a quantity of 150 tonnes of rice was moved from Polur taluk to Ramanathapuram district during September 1967, the Taluk Supply Officer, Polur was not able to move the balance quantity of rice allotted to Vellore taluk from Polur taluk. This did not cause any inconvenience to citizens of Vellore as rice was easily available in the open market in Vellore.

## அரசு கணக்கிலிருந்த கடலைப் பருப்பு

144 வினா.— திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1—4—1968-ல் தமிழக அரசிடம் இருந்த கடலைப் பருப்பு (Bengalgram) ஸ்டாக் எவ்வளவு ?

(இ) அந்தப் பருப்பை கிலோ என்ன விலைக்கு விற்க அரசு உத்தரவிட்டது ?

(உ) 1968 எப்ரல், மே மாதங்களில் வெளிச் சந்தையில் பருப்பு கிலோ என்ன விலைக்கு விற்கப்பட்டது ?

விடை.(அ) கொத்துக்கடலை 6,344 டன்.
கடலைப்பருப்பு 345 டன்.

| | சென்னை மாநகரத்தில. | மாவட்டங்களில். |
|---|---|---|
| (இ) கொத்துக் கடலை. | கிலோ ஒன்றிற்கு ரூ. 1·53 அத்துடன் விற்பனைவரி 3 சத வீதம். | கிலோ ஒன்றிற்கு ரூ. 1·55 அத்துடன் விற்பனை வரி 3 சத வீதம். |
| கடலைப்பருப்பு. | கிலோ ஒன்றிற்கு ரூ. 1·64 அத்துடன் விற்பனைவரி 3 சத வீதம். | கிலோ ஒன்றிற்கு ரூ. 1·64 அத்துடன் விற்பனைவரி 3 சத வீதம். |

(உ) 1968-ம் ஆண்டு எப்ரல், மே திங்கள்களில் சென்னை மாநகரத்தில் வெளிச் சந்தையில் விற்கப்பட்ட கொத்துக்கடலை, கடலைப் பருப்பு ஆகியவைகளின் விலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**ஒரு குவிண்டால் கொத்துக்கடலை.**

| | 15—4—68 உடன் முடிந்த இரண்டு வாரங்களில். | 30—4—68 உடன் முடிந்த இரண்டு வாரங்களில். | 15—5—68 உடன் முடிந்த இரண்டு வாரங்களில். | 31—5—68 உடன் முடிந்த இரண்டு வாரங்களில். |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| சென்னை மாநகரில். | 140·00 | 120·00 | 80·00 | 87·00 |

**ஒரு குவிண்டால் கடலைப் பருப்பு.**

| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|
| சென்னை மாநகரில் | 166·67 | 155·56 | 111·11 | 100·00 |

*A*.—(*a*) Bengalgram 6,344 tonnes.

Bengalgram dhall 345 tonnes.

| | | *Madras City.* | *Districts.* |
|---|---|---|---|
| (*b*) Bengalgram | .. | Rs. 1·53 per kilo+ S.T. at 3 per cent. | Rs. 1·55 per kilo+ S.T. at 3 per cent. |
| Bengalgram dhall. | | Rs. 1·64 per kilo+ S.T. at 3 per cent. | Rs. 1·64 per kilo+ S.T. at 3 per cent. |

(*c*) The ruling open market prices of Bengalgram and Bengal gram dhall in Madras City during the months of April to May 1968 are as follows :—

*Bengal Gram per quintal.*

| | | *Fortnight ended 15th April* 1968. | *Fortnight ended 30th April* 1968. | *Fortnight ended 15th May* 1968. | *Fortnight ended 31st May* 1968. |
|---|---|---|---|---|---|
| Madras City | .. | Rs. 140·00 | Rs. 120·00 | Rs. 80·00 | Rs. 87·00 |

*Bengal Gram Dhall per qunital.*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Madras City | .. | Rs. 166·67 | Rs. 155·56 | Rs. 111·11 | Rs. 100·00 |

**திருத்துறைப்பூண்டிக்கு அரசினர் தொழிற்பயிற்சிப் பள்ளி.**

**145 விஞ.— திரு ந. தருமலிங்கம் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் தேவை எனக்கோரி கீழத் தஞ்சை மாவட்ட அபி விருத்தி மன்றம் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி நிறை வேற்றிய தீர்மானம் எண். 91 அரசுக்குக் கிடைத்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுந்த நடவடிக்கை என்ன ?

**விடை.**—(அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்போது இரண்டு தொழிற்பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. கைப்பணியாளர் பயிற்சித் திட்டம் குறித்த நான்கா வது திட்டச் செயற்குறிப்புகளை இந்திய அரசு இன்னும் வகுக்கவில்லை. மாவட்டம் முழுவதன் தேவையைக் கருதிப் பார்த்தும், நிதி வசதி யைப்



பதற்கு உட்பட்டும், தஞ்சாவூர் மாவட்டத்தில் கூடுதலாகத் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் தொடங்குவது பற்றி ஆலோசிக்கப்படும். மேற்படி நிலைமை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதி அன்றே தெரிவிக்கப்பட்டுவிட்டது.

*A*.—(*a*) Yes.

(*b*) At present 2 Industrial Training Institutes are functioning in Thanjavur district. Tho Fourth Plan proposals relating to Craftsmen Training Programme have not yet been formulated by the Government of India. The question of starting of additional Industrial Training Institutes in the Thanjavur district will be considered on the basis of the needs of the District as a whole and subject to the availability of funds. The Collector of Thanjavur was informed of the above position on 8th November 1967.

[*குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

## 2. நடைமுறைக் கேள்விகள்.

### (i) விஞக்களுக்கு விடை அளிப்பதில் தாமதம்

**திரு. சோ. அழகர்சாமி :** பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன், சார் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷனுக்கு இடம் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். நான் கேள்விகள் அனுப்பி ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டது. இரண்டு கூட்டத் தொடர்களும் நடநது முடிந்துவிட்டன. என்னுடைய கேள்விகள் இன்றும் வரவில்லை. அடுத்த கூட்டத்திலாவது என்னுடைய கேள்விகள் வருமா ? ஒரு மாதத்திற்குள்ளாகவாவது வருவதற்கு வழி செய்யப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்விகள் கொடுத்து, அதற்கு விடை வேண்டு மென்பதை பேரவைத் தலைவரின் அறையிலே கேட்க வேண்டும். உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கான பதில்களை விரைவிலே கொடுப்பதற்கான வழிவகை செய்யப்படும்.

### (ii) வெள்ளிக் குறியிட்ட விஞவை வெள்ளிக் குறியிடாத விஞவாக மாற்றல்

THIRU K. VINAYAKAM : Sir, my point of order is this. I had given notice of many questions and particularly named them as starred questions, and I wanted them to be answered on the floor of the House. But without taking my permission or even consulting me, the Hon. Speaker has ordered that they should be printed as unstarred questions. Sir, these questions are of major public importance calling for more details and that they will educate not only the public but also the hon. Members of this House. On what authority were my questions printed as unstarred questions ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்விகளை "ஸ்டார்டு கொஸ்டினாக" எழுதிக் கொடுக்க வேண்டும். "ஸ்டார்டு கொஸ்டின்களை கூட "அன்-ஸ்டார்டு கொஸ்டின்"களாக மாற்றுவதற்கு "ஸ்பீகருக்கு" உரிமை இருக்கிறது. ஏற்கெனவே அனுமதித்த "ஸ்டார்டு கொஸ்டின்" களைக்கூட "அன்-ஸ்டார்டு கொஸ்டின்"களாக மாற்றுவதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. எதற்காக அப்படி ஆக்கினீர்கள் என்ற கேள்வியை எழுப்புவது முறையாகாது.

The Speaker may direct that lengthy answers or statistics given in answer to a starred question shall be laid on the table and printed in the official report of the proceedings of the Assembly instead of being given orally.

அதாவது "ஸ்டார்டு கொஸ்டின்" ஆக வந்ததைக் கூட "அன்-ஸ்டார்டு கொஸ்டின்"ஆக ஆக்கலாம் என்ற உரிமை இருக்கிறது. அப்படி அனுமதிக்கலாம் என்று ஸ்பீக்கருக்கு உரிமை இருக்கிறது. என் இப்படி செய்தீர்கள் என்று கேட்க உறுப்பினருக்கு உரிமை இல்லை.

**திரு. கே. விநயகம் :** தலைவர் அவர்களே, "ஸ்டார்டு கொஸ்டின்"ஆகக் கொடுப்பதற்கான காரணமே பொது மக்களுக்குத் தேவையான பதில்களைப் பெற வேண்டு மென்பதற்காகத் தான். மேலும் உறுப்பினர்கள் சப்ளிமெண்டரி கேள்விகள் போடுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. "ஸ்டார்டு கொஸ்டினை" அன்-ஸ்டார்டு" ஆக்கிவிட்டால் அது பொது மக்களுக்கும் தெரியாமல் போய்விடும். எனக்கும் சப்ளிமெண்டரி கேள்விகள் போடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். (மணியடிக்கப்பட்டது.) பொது மக்களுக்கு விளக்கம் கொடுக்க என்றால் முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** "ஸ்டார்டு கொஸ்டினை" "அன்-ஸ்டார்டு" ஆக்கி, பதில்களை அச்சடித்துக் கொடுத்துவிட்ட பிறகு மேலும், தகவல் தெரிய வேண்டு மென்று உறுப்பினர் விரும்பினால், மீண்டும் கேள்வி கேட்க உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது.

The Hon. Thiru C. N. ANNADURAI : Sir, the hon. Member's querry was, under what authority have you . . .

Thiru K. VINAYAKAM : That he has explained.

The Hon. Thiru C. N. ANNADURAI : Then the hon. Member should be satisfied with that.

**திரு. கே. விநயகம் :** தலைவர் அவர்களே, இப்போது திருத்தணியில் ஒரு பஸ் ஸ்டாண்ட் ஏற்படுத்துவார்களா என்ற கேள்வி கேட்டால், அது ஒரு பிரதேசத்தைப் பொறுத்த கேள்வி என்று எண்ணி அதை "அன்-ஸ்டார்டு" ஆக்கிவிட்டால் பொது மக்களுக்கு நான் அந்தக் கேள்வியைக் கேட்டதாகக் கூடத் தெரியாமல் போய்விடும். ஆனால் பாலிசியைப்பற்றி, புரொஹிபிஷன் பற்றி, மர்டர் பற்றி கேள்வி கேட்டால் அதை "அன்-ஸ்டார்டு" ஆக்கினால் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நம்முடைய விதிமுறையே இருக்கிறது, கொள்கையைப் பற்றியும், பாலிசியைப் பற்றியும் கேள்வி போடக் கூடாது என்று.

### (iii) முதலமைச்சர் விடையளிக்க வேண்டிய வினக்களை எடுத்துக் கொள்ளும் நேரம்

Dr. H. V. HANDE : Sir, on a point of order with regard to the order in which the questions are to be taken up, one of my colleagues Thiru Meiyappan also raised it recently—it would be better for us if we know when the Hon. Chief Minister is going to answer the questions put to him. To-day the Hon. Chief Minister unusually nswered his questions first but I wanted to put supplementary questions with regard to them. For instance, in the case of Short Notice Questions, we know that they are going to be taken up first and the Departments also would be ready with their answers. So, we should have asort of system by which we should know when the Hon. Chief Minister is going to answer his questions so that it



would be convenient for us. I am not making this as a sort of complaint. Sir, according to the rules, we can postpone the questions to a later date but we cannot postpone them to the same day..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதைப் பற்றி நான் முன்பே இந்த மன்றத்திலே உறுப்பினர் கேட்டு, அதற்கு விளக்கம் அளித்திருக்கிறேன். உறுப்பினர் கால தாமதமாக வந்தால், உறுப்பினருடைய உரிமை பறிபோய் விடவில்லை, வாய்ப்பும் போய்விடவில்லை. அமைச்சர் நேரம் கழித்து வந்து என்னுடைய கேள்வியை நாளைக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டால், மறு நாளைக்கு அவையில் அதைக் கொண்டு வராமல் இருப்பதில்லை. இப்படி இப்படித்தான் கொண்டு வர வேண்டுமென்று சொல்வது நடைமுறைக்கு ஒத்துவராது. இதிலே ஒரு குறிப்பிட்ட திட்டத்தைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, my only request to the Chair is, that if the Hon. Chief Minister's questions can be put at the end it will be convenient for us and we should have a system by which we can take up this questions at the end.

The Hon. Thiru C. N. ANNADURAI : Sir, I endors the hon. Member's suggestion that my questions should be taken up after all the other questions are over.

### 3. தன்னிலை விளக்கம்

#### டாக்டர் எச். வி. ஹாண்டே வின நேரத்தில் மற்றொரு உறுப்பினரைப் பற்றித் தெரிவித்த கருத்து குறித்து

Dr. H. V. HANDE : On a point of a personal explanation, Sir . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதெல்லாம் முடிந்துவிட்ட பிறகு சொல்லலாம்.

Dr. H. V. HANDE : Sir, on a point of personal explanation, yesterday my hon.Friend Thiru Rama Arangannal raised a point of order when I said that he was very allergic to the question. I want to clarify the position. I have nothing against the hon. Member. He is a distinguished member of this House and I have the greatest respect for him. I am even prepared to withdraw the expression used at that time if it had hurt him. I was a little upset when he intervened and I thought he was putting an obstacle. I have absolutely no ill-feeling. I have the greatest regard for my colleagne Thiru Rama Arangannal. This is what I want to say by way of personal explanation.

### 4. வினக்களை அமைச்சர்வாரியாக ஒவ்வொரு நாளும் வரிசைப்படுத்தல்

மு.ப.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவித் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலோசனையை கேள்விகளைப் பொறுத்த வரையில் சிறு விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். பாராளு மன்றத்திலே எல்லா அமைச்சர்களும் ஒரு நாளிலே கேள்விகளுக்குப் பதில் சொல்வதில்லை. இன்ன இன்ன அமைச்சர்கள் இன்ன இன்ன சப்ஜெக்ட்டுகளைப் பற்றி இன்ன இன்ன நாட்களில் கேள்விகள் போடவேண்டுமென்று முறை இருக்கிறது. முதலமைச்சர் கேள்விகள் என்றால் புதன்கிழமை, அல்லது வியாழக்கிழமை என்று போட்டுவிட்டால் நிச்சயமாக சௌகரியமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாராளுமன்றத்திலே ஒவ் 10-00

வொரு நாளிலும் என்ன என்ன சப்ஜெக்ட்டுகள் என்ற முறையிலே கேள்விகள் கேட்பதற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அந்த முறையை அனுசரிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இங்கே சில அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டிய கேள்விகள் அதிகமாக இருக்கும். சில அமைச்சர்களைப் பொறுத்த வரையில் குறைவாக இருக்கும். ஆகவே அப்படி எடுத்துக் கொண்டால் முறையாக இருக்காது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பாராளுமன்றத்தில் இந்த முறை இருக்கிறது. ஆனால் அதைவிட நம் முறை கொஞ்சம் வசதியாக இருக்கிறது. ஒரு நாளில் ஒரு அமைச்சர் உடைய கேள்வி என்று மட்டும் எடுத்துக் கொள்வோமானால் சுவைக் குறைவாக இருக்கும். ஆகவே பல்வேறு வகையான தகவல்களை அமைச்சர்களிடமிருந்து தெரிந்து கொள்வதுதான் நல்லதாக இருக்கும். முதலமைச்சர் கேள்விகளை வினா நேரத்தின் இறுதிக் கட்டத்திலே வைத்துக் கொள்வது முறையாக இருக்கும்.

## 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (iv) கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு விளக்கம் கொடுப்பதில் தாமதம்

**திரு க. ர. நல்லசிவன் :** ஆன் ஏ பாயின்ட் ஆஃப் ஆர்டர் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நடைமுறைகளிலே மாறுபாடு இருந்தால், அல்லது சட்ட விதிமுறைகளை மீறியிருந்தால் அதைப்பற்றி மட்டும் ஒழுங்குப் பிரச்னை இருந்தால் சொல்லுங்கள்.

**திரு க. ர. நல்லசிவன் :** கவன ஈர்ப்புப் பிரச்னைகள் இரண்டு கொடுத்திருந்தோம், அவையிரண்டும் முக்கியமான பிரச்னைகள், இந்தச் சபையின் இக் கூட்டத் தொடர் இன்று முடியப் போகிறது. மற்றப் பிரச்னைகள் வந்திருக்கின்றன. இந்தப் பிரச்னைகள் வரவில்லை. நாங்கள் அதைப் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறோம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வரவில்லை. கவன ஈர்ப்பு முன்னறிவிக்கை கொடுத்தது வரவில்லையென்று சொன்னால், அதைப்பற்றி என்னுடைய அறையிலே வந்து கேட்க வேண்டும். கொடுத்ததை இலாகாவுக்கு அனுப்பி இலாகாவினர் எந்தப் பகுதியிலிருந்து அதுபற்றிய தகவல்கள் கேட்கவேண்டுமோ அந்தப் பகுதியிலிருந்து கேட்கிறார்கள். அந்தப் பகுதியிலிருந்து தகவல்கள் வந்ததற்குப் பிறகுதான் சபைக்கு வரவேண்டியிருக்கிறது. கேட்கப்படுகின்ற தகவல்களைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இன்றைக்கு 4 அறிக்கைகள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கூடுமான வரையில் எவ்வளவு விரைவிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமோ அவ்வளவு விரைவிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அடுத்தபடியாக, திரு. இளம்வழுதி ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்புகிறார்கள்.

**திரு க. ர. நல்லசிவன் :** ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், சட்டசபை 57-வது விதியின் படி ஹேமாவதி அணைக்கட்டுத் திட்டம் சம்பந்தமாக ஒரு பிரேரணையை விவாதிப்பதற்காக நாங்கள் கொடுத்திருந்தோம் தலைவர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள், விவாதிக்கலாமென்று, அலுவல் ஆய்வுக்குழுவிலே முடிவுசெய்யப்பட்டதாக நம்புகிறேன். இதுவரையிலும் அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் படவில்லை, விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள சந்தர்ப்பம் இருப்பதாகவும் தெரியவில்லை. ஹேமாவதி பேச்சுக்கள்பற்றி மீதியுள்ள சட்டசபையிலே பேசப்பட்டு இருக்கிறது......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றிச் சொல்லவேண்டும்.





**திரு. க. ர. நல்லசிவன் :** ஆகவே இது முக்கியமான விஷயம், இதைப்பற்றி இங்கே விவாதம் செய்வது மந்திரிசபைக்கு ஆக்கம் கொடுக்கக்கூடிய முறையிலே இருக்கும். விவாதத்திற்கு வராமல் இருப்பதற்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அதை அமைச்சர்கள் செய்திருக்கிறார்கள். தீர்மானம் விவாதத்திற்கு வராததன் காரணத்தினாலே இந்த ஹேமாவதித் திட்டத்தைப்பற்றிச் சிந்திக்க வைக்கக் கூடிய முறையிலே நாங்கள் சபையிலேயிருந்து வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்ற முறையிலே வெளிநடப்புச் செய்கிறோம்.

(திரு. க. ர. நல்லசிவன் அவர்களும், திரு. செ. பாலசுப்பிரமணியம் அவர்களும் வெளிநடப்புச் செய்தார்கள்.)

## 5. அவை உரிமைக் கேள்விகள்

### (i) சுதேசமித்திரன் நாளிதழில் வந்துள்ள செய்தி

**திரு. இரெ. இளம்வழுதி :** தலைவர் அவர்களே, சட்டமன்ற 184-வது விதியின் கீழ் சுதேசமித்திரன் பத்திரிகையினுடைய ஆசிரியர், வெளியிடுவோர் மீது நான் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டுவருகிறேன். 30, 31-8-1968-ம் தேதியிட்டு வெளியான சுதேசமித்திரன் பத்திரிகையில் இரண்டாவது பக்கத்தில் முதல் காலத்தில் "கண்ணியம் காக்கவும்" என்ற தலையங்கத்தில் உண்மைக்கு மாறாகவும், சட்டமன்றத்தை அவமதிக்கின்ற முறையிலும் இங்கிருக்கின்ற உறுப்பினர்களுக்குக் கௌரவ குறைவாகவும் எழுதப்பட்டிருப்பதால் இந்தஉரிமைப் பிரச்னையை நான் கொண்டுவருகிறேன். 28-8-1968-ம் நாளன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசியதாகக் குறிப்பிட்டுச் சில வார்த்தைகளை வைத்து இந்த சுதேசமித்திரன் பத்திரிகை நம்முடைய அவையை அவமதித்து இருக்கிறது. அது மட்டுமல்லாமல் அவர்கள் சொல்லாத சில வார்த்தைகளை சொன்னதாகக் கற்பித்து திருத்தி உண்மைக்கு மாறாக வைத்து இந்தப் பத்திரிகை எழுதியிருக்கிறது. இந்தத் தலையங்கத்திலே உள்ள முக்கியமான பகுதிகளை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கண்ணியம் காக்கவும் என்ற தலையங்கத்திலே "அரசியலில் கிண்டலைக் கையாள்வது ஆட்சேபிக்கத் தக்கதல்ல; உலகு எங்குமே உபயோகிக்கப்படும் ஆயுதம்தான் இது. ஆகவே, தமிழகச் சட்டமன்றத்தின் கீழ்ச் சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தின்போது முதலமைச்சர் திரு. அண்ணாதுரை இந்த முறையைப் பயன்படுத்தியது பற்றிப் புகார் செய்வதற்கில்லை. ஆயினும் அவர் அறிவுறுத்தியதுபோல, "இடமறிதல்—காலமறிதல்—அளவறிதல்—வகையறிதல்" ஆகிய நான்கையும் எதிலும் அனுசரிப்பது அவசியம். இந்த நோக்கில் பார்க்கும்போது குறிப்பிட்டதொரு கேலிப் பேச்சை பொறுத்த வரையில் மேற்படி நான்கில் மூன்றை அவரே மறந்து மீறிவிட்டார் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

தென்காசித் தேர்தல் நிகழ்ச்சி யொன்றைப் பற்றியது அது, அப்போது காங்கிரஸ் சார்பில் பிரசாரம் செய்த பெண்களில் ஒருவர் தொடை தட்டி தி.மு.கழகத்துக்குச் சவால் விட்டாராம்.—இவ்விதம் "கேள்விப்பட்டதாக" முதலில் குறிப்பிட்டுவிட்டு, "படித்ததாக" பிற்பாடு சொன்ன முதல்வர்,. "அப்படிப் பேசியது சரக்கு போலும்" என்று நையாண்டி செய்திருக்கிறார். சரக்கு போலும் என்று முதலமைச்சர் குறிப்பிட்டதாகக் கூறியிருப்பது உண்மைக்கு மாறாகும். முதலமைச்சர் அவர்கள் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வலிவான தொடை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் சுதேசமித்திரன் சரக்குப் போலும் என்று நையாண்டி செய்திருப்பதாகக் குறிப்பிட்டு கண்ணியக் குறைவாக முதலமைச்சர் குறிப்பிட்டிருப்பதாகவும் அதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும் எழுதியிருக்கிறது. மேலும் அதிலே சொல்கிறது—

குறிப்பிட்ட பெண்மணிக்குக் களங்கம் கற்பிக்கப்பட்டுவிட்டது என்பதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும். சட்டசபைக்கு வெளியே

அந்த மாதின் பெயரைச் சொல்லி இவ்வாறு பேசும் பட்சத்தில் தாம் மான நஷ்ட வழக்குக்கு ஆளாவோம் என்பதை ஸ்ரீ அண்ணுதுரை அறியாதிருக்கவியலாது. அப்படி வழக்கு வருகிறதோ இல்லையோ, "கண்ணியத்தைக் காப்பது கடமை" என்று அடிக்கடி முழக்கிவரும் முதல்வரின் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தையல்ல இது. அவரே இவ்விதம் பேசுவாராஞல் பிறரும் பின்பற்றத் துவங்கி அரசியல் துறை ஆபாசச் சொற்கள் மிகுந்ததாகிவிடாதா ? ஆகையால், சபையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து இந்தக் கேலிக் கணையை நீக்குவதோடு இல்லாமல் இனியாவது இவ்விதம் பேசுவதை முதல்வர் தவிர்ப்பார் என்றும் எதிர்பார்க்கிருேம்" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

இந்தத் தலையங்கம் சட்டசபையை அவமதிப்பதோடு மட்டுமல்லாமல் சட்டசபையிலே உள்ள உறுப்பினர்களையும் அவமதிப்பதாகவும் இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சட்டசபைக்கு வெளியே இதுபோல் சொல்வாராஞல் அவர்மீது குறிப்பிட்ட மாது வழக்குத் தொடர்வார் என்று பயந்து முதலமைச்சர் சட்ட மன்றத்தின் உள்ளே பேசி சட்டமன்றத்தைத் தனக்குள்ள பாதுகாப்பாகக் கருதுவதாக ஒரு உள்நோக்கத்தைக் கற்பித்து எழுதியிருக்கிறது. வாதம் நடத்தி, இந்தக் கேலிக் கணையை சட்டசபை நடவடிக்கைகளிலிருந்து நீக்கவேண்டுமென்று சுதேசமித்திரன் கேட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஒரு வார்த்தை முன்னுல் வைத்து உள்நோக்கத்தைக் கற்பித்து நீக்கவேண்டுமென்று கோருவது சடடமன்றத்தை அவமதிப்பதாகக் கருதுகிறேன். 28-ஆம் நாளன்று முதலமைச்சர் குறிப்பிட்டபொழுது சட்டமன்றத்திலிருந்து யாருமே அந்த வார்த்தையை

## 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (v) பத்திரிகை நிருபர் அவையில் அமர்ந்திருக்கும் உறுப்பினருக்கு தாள் அனுப்புதல்.

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்கள் அமர்ந்திருக்கும் இடத்தில் இருந்து சுதேசமித்திரன் நிருபர் தாள் ஒன்றை உறுப்பினர் மார்ட்டின் அவர்களிடம் கொடுத்த காட்சியை நான் பார்த்தேன். அவ்வாறு கொடுப்பது இந்தச் சபையின் ஒழுங்கு முறைக்கு உகந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** செய்தியாளர்களுக்கு இங்கு ஒரு வாய்ப்பளித்திருப்பது சபை நிகழ்ச்சிகளைக் குறிப்பெடுத்துக் கொள்வதற்கு மட்டுந்தான். அவர்கள் உறுப்பினர்களோடு தொடர்பு கொள்ளுவதோ அல்லது உறுப்பினர்கள் அவர்களோடு தொடர்பு கொள்ளுவதோ முறையாகாது, சட்டமன்ற மரபுக்கு ஒத்ததல்ல. அந்த மரபை மீறுகின்ற வகையில் பத்திரிகையாளர்கள் இந்த மாதிரியான காரியங்களில் ஈடுபடுவார்களாஞல் நடைமுறை நிகழ்ச்சிகளே பெரிய அளவில் பாதிக்கப்படும். அப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு குறிப்பிட்ட பத்திரிகையாளர் வருத்தம் தெரிவித்துக் கொள்ள வேண்டும். மன்றத்தில் இருக்கும் உறுப்பினரும் அதற்கு இடம் தருவது அதைவிட பெரிய தவருகும். அதற்கு இடம் கொடுத்த உறுப்பினர் அவர்களும் வருத்தம் தெரிவித்துக் கொள்வதுதான் முறையாகும்.

**திரு. டி. மார்டின் :** துணைச் சபாநாயகர் அவர்களே, என்னைத் தேடி ஒருவர் வந்திருக்கிருர் என்று எழுதப்பட்ட சீட்டைத்தான் என்னிடம் தந்தார். அவ்வாறு சீட்டு கொடுப்பது கூட சட்டசபை விதிமுறைகளை மீறியதாகுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்கு வழிவகைகள் இருக்கின்றன. அதற்காக நம்முடைய அலுவலகத்தில் இருந்து பணியாளர்களை நியமித்திருக்கிருேம். அந்தப் பணியாளகள் மூலமாகத்தான் கொடுக்க வேண்டும். நம்முடைய மன்றத்தில் யாருக்காவது எதையாவது கொடுக்க வேண்டுமென்று சொன்னுல்—நம்முடைய செயலகத்தில் இருக்கின்ற பலருக்கு அந்த உரிமை கிடையாது—அதனைப் பணியாளர்கள் மட்டுந்தான் செய்ய வேண்டும், அதனை பத்திரிகையாளர் செய்வது என்பது சரியல்ல.



**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** நான் பார்த்த காட்சியை எடுத்துக் கூறினேன். அந்தத் துண்டுத் தாளிலே இருந்த விஷயம் வேறு என்று மார்ட்டின் அவர்கள் சொன்னுர்கள். நிருபர்கள் மேஜையில் இருந்து குறுக்காக உறுப்பினருக்கு தாள் இப்படிக் கைமாறுவது என்பது சரியல்ல. அதைப் பற்றித்தான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நிருபர்கள் மேஜையிலிருந்து உறுப்பினருக்குத் தாள் வந்ததைப் பற்றி அமைச்சர் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிஞர்கள். அமைச்சர்கள் பதில் சொல்லும்போது அமைச்சர்களுக்குப் பக்கத்தில் இருக்கின்ற இடத்திலிருந்து தாள்கள் வருகின்றன. அது முறையா என்பதை விளக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தில் பல ஆண்டுகளாக ஆளும் கட்சிக் சார்பில் அங்கத்தினராக இருந்தவர்கள். ஆளும் கட்சி கொறடாவாகவே பணியாற்றியவர்கள். அவர்களுக்கு இந்த மரபு தெரிந்திருக்கவேண்டும். இந்தப் பக்கத்திலே இருப்பவர்கள் அதிகாரிகள், அமைச்சர்களுடைய செயலாளர்கள். அமைச்சர்களுக்கு வேண்டிய தகவல்களைத் தருவதற்காகவே இருக்கிருர்கள். அது எப்படி முறைகேடானது என்ற சந்தேகம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வந்தது என்று தெரியவில்லை. அது முறைகேடானது அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இவ்வளவு தூரம் தாங்கள் சொல்ல வேண்டியதில்லை. ஒழுங்கு முறைக்கு உட்பட்டதுதான் என்று சொல்லி விடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த விளக்கத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னிடத்திலிருந்து பெற வேண்டுமென்ற நிலையில் இருப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** அதிகாரிகளிடமிருந்து அமைச்சர்களுக்குத் தகவல்கள் கொடுக்கின்ற முறை சட்டப் பேரவை விதிகளின் கீழ் எந்த விதிமுறையின்படி நடைபெறுகிறது என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர்களுக்கு அதிகாரிகள் விளக்கம் கொடுக்கின்ற நேரத்தில் அங்கிருக்கும் அதிகாரிகள் உள்ளே வந்து அமைச்சர்களிடத்தில் கொடுப்பதில்லை. அமைச்சர்கள் அதிகாரிகளிடத்திலிருந்து விளக்கத்தைப் பெற்று வருகிருர்கள். சில நேரத்தில் அந்த விளக்கங்களை அதிகாரிகள் பணியாளர்கள் மூலம் கொடுத்து அனுப்புகிருர்கள். ஆகவே, இதிலே எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை.

**திரு. என். வரதராஜன் :** சட்ட மன்றத்தை நடத்துவதற்காக நாம் சில விதிமுறைகளை வைத்திருக்கிருேம். இந்த விதிகளுக்கு அப்பாற்பட்டு சில பேருக்கு விதிவிலக்கு கொடுக்கக்கூடிய சூழ்நிலையில் இந்திய அரசியல் சட்டத்தில் ஏதாவது பிரிவு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** இதற்கு இந்திய அரசியல் சட்டத்தைச் சான்றுக்கு அழைக்கத் தேவையில்லை. அமைச்சர்கள் பதில் அளிக்கின்ற நேரத்தில் முழுத் தகவல்களையும் அதிகாரிகளிடத்தில் இருந்து கேட்டுப் பெற்றுக் கொள்வது அவைக்குச் சரியான தகவல்களை அளிப்பதற்காகக் கையாளப்படுகிற முறையாகும்.

**திரு. என். வரதராஜன் :** நான் அமைச்சர்களைப் பற்றிச் சொல்லவில்லை, உறுப்பினர்களைப் பற்றிச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர்களும் இந்த மன்ற உறுப்பினர்கள்தான்.

### 5. அவையுரிமைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (i) சுதேசமித்திரன் நாளிதழில் வந்துள்ள செய்தி—தொடர்ச்சி.

**திரு. இரெ. இளம்வழுதி :** தலைவர் அவர்களே, மேலும் அந்தப் பத்திரிகை குறிப்பிடும்போது இப்படி எழுதியிருக்கிறது—

" . . . 'சரக்கு' என்னும் வார்த்தையினால் வருணித்தது ரசக் குறைவானது என்பதை எவரும் மறுக்க முடியாது. சாதாரணப் பதமேயாயினும் அதற்கு இந்தப் பின்னணியில் என்ன பொருள் என்பது வேறெவருக்கும் விளங்காவிடினும் தமிழில் மூழ்கியுள்ள முதல்வருக்குத் தெரியாமல் இருப்பதற்கில்லை . . . "

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் பேசாத ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. அவர்கள் குறிப்பிடாத ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டதாகக் கூறி, அதற்கு ஒரு விளக்கம் சொல்லி, அந்த விளக்கத்தின் அடிப்படையில் முதலமைச்சருடைய தரத்தைப் பற்றி விமர்சித்தது உள்ளபடியே இந்தச் சட்டமன்றத்தை அவமதித்ததோடு மட்டுமல்லாமல், இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுடைய கவுரவத்தையும் அவமதிப்பதாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படிச் சட்ட மன்ற நிகழ்ச்சிகளைப் பற்றித் தவறாக எழுதுவது எப்படி உரிமைப் பிரச்சினையின் கீழ் வருகிறது என்பதைப் பற்றி "மே"ஸ் பார்லிமெண்டரி பிராக்டிசில், கூறப்பட்டிருக்கிறது.

In 1701 the House of Commons resolved that to print or publish any books or labels reflecting on the proceedings of the House is a high violation of the rights and privileges of the House and indignities offered to the House by word spoken or writings published reflecting on its character or proceedings have been constantly punished by both Lords and Commons, upon the principle that such actstendto obstruct the house in the performance of their functions by diminishing the respect due to them

மேலும் இன்னொரு இடத்தில் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்— Publishing gross or withful misrepresentation of Members' speeches என்று. ஒரு உறுப்பினருடைய பேச்சை மாற்றியோ, திருத்தியோ வெளியிடுவது உரிமைப் பிரச்சினையின்பாற் பட்டதாகும் என்று வெகு தெளிவாக "மே"ஸ் பார்லிமெண்டரி பிராக்டிஸ்" என்ற நூல் குறிப்பிடுகிறது எனவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லாத வார்த்தையை வைத்து சொல்லியதாகக் குற்றம் சாட்டியிருக்கிற சுதேசமித்திரன் பத்திரிகையினுடைய ஆசிரியர், அந்தப் பத்திரிகையை வெளியிடுபவர் ஆகிய இருவரும் நம்முடைய சபையை அவமதித்த குற்றத்திற்கு ஆளாகிறார்கள். சபையில் நடக்காத காரியத்தை வெளியிட்டு சபையினுடைய கவுரவத்தைக் கேவலப்படுத்தியதும், சபையினுடைய கவரவத்தைக் கேலி செய்ததும் உரிமையை மீறிய செயலாகும். பத்திரிகையில் விமர்சனம் எழுதுவது ஜனநாயக உரிமை என்று அவர்கள் கூறலாம். இங்கே பேசப்படுவது ஜனநாயக உரிமை பற்றியல்ல. இங்கே பேசப்படுவது சபையினுடைய கவரவத்தைப் பற்றியதாகும். எனவே, இந்தப் பத்திரிகை ஆசிரியர், வெளியிடுபவர் ஆகிய இருவர் மீதும் நான் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறேன். அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



### 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (vi) சட்டப்பேரவை நூலகத்தில் திருத்தப்பட்ட நடவடிக்கைக் குறிப்பு வைப்பதற்குமுன் அவையுரிமைக் கேள்வி எழுப்புதல்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர்கள் இந்தச் சபையில் பேசுகின்ற பேச்சுக்களைத் திருத்திக் கொடுப்பதற்கு, முன்னால் இருந்த சபாநாயகர் அவர்கள் ஒரு வார காலம் அனுமதி அளித்திருக்கிறார்கள். திருத்தப்பட்ட பேச்சின் அடிப்படையிலேதான் இந்தச் சபையிலே எந்த ஒரு விவாதத்தையும் தொடங்க முடியும். முதலமைச்சர் அவர்கள் பேசி இன்னும் ஒருவார காலம் ஆகவில்லை. ஒரு வாரம் கழித்துத்தான் திருத்தப்பட்ட பேச்சு சட்டசபையின் லைப்ரரியில் வைக்கப்படுகிறது. அவ்வாறு லைப்ரரியில் வைத்தபிறகுதான் உறுப்பினர்கள் என்ன பேசினார்கள் என்பதைப் பார்த்துத் தெரிந்து கொள்ள முடியும். இப்போது முதலமைச்சர் அவர்கள் பேசி ஒரு வார காலம் ஆகவில்லையாதலால் அதற்குள்ளாக அதைப் பற்றி உரிமைப் பிரச்னை எழுப்புவது முறைதானா என்ற ஒழுங்குப் பிரச்னையை எழுப்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இங்கு பேசப்பட்ட பேச்சுக்கள் திருத்தப்பட்டு புத்தகநிலையத்தில் வைத்த பிறகுதான் அதைப்பற்றிப் பேசலாம் என்று ராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அதற்கு முன்பாகவே பத்திரிகைகளில் வெளியிட்டுவிட்டு அதன்மீது தங்கள் கருத்துக்களைக் கூறி கண்டனம் தெரிவிப்பது எந்த வகையில் முறை? அதுவும் முறையல்ல. முறையல்லாத செயல்கள் செய்யப்பட்டால் கண்டிக்கத்தான் செய்வார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** அவர்கள் முறையற்ற செயல்கள் செய்கிறார்கள் என்பதற்காக இந்தச் சபையும் முறையற்ற செயலைச் செய்வது சரியல்ல.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** அவர்கள் இந்த அவை முறையற்ற செயலைச் செய்கிறது என்பதை வாபஸ் வாங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு வாரம் வரை காத்திருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு வாரம் வரை காத்திருக்க வேண்டியதில்லை, பேச்சு அதற்குள் திருத்தப்பட்டு விட்டால். உறுப்பினர் சட்டம் தெரிந்தவர், வழக்கறிஞர். ஒழுங்கு முறை என்றால் என்ன என்பதைத் தெரிந்துகொண்டு அவர்கள் பேசவேண்டும் என்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இந்த மன்றம் ஒழுங்குமுறைகளை மீறி நடந்து கொள்ளவில்லை. அப்படி மீறி நடந்திருந்தால் அதைச் சுட்டிக்காட்ட உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. உறுப்பினர்களுக்கு அதைச் சுட்டிக் காட்ட உரிமை இருக்கிறதே தவிர அதன் மீது தீர்ப்பு அளிப்பதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை. தீர்ப்பளிக்கக்கூடிய உரிமை தலைவருக்குத் தான் உண்டு. ஆகவே, உறுப்பினர் அவர்கள் ஒழுங்கு முறைகளை மீறி இந்த அவை நடப்பது சரியல்ல என்று சொல்வது தவறு. அதை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டுவிடுவது நல்லது.

**திரு க. இராமமூர்த்தி :** இந்தச் சபை நடவடிக்கைகள் லைப்ரரியில் வைக்கப்படுவது பற்றிய ஒரு பிரச்னை முன்பே வந்தது. சில மாற்றங்கள் தேவை, சில தவறாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நானே இந்த அவையில் அந்தப் பிரச்னையைக் கிளப்பினேன். அப்போதிருந்த சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்பளித்தார்கள். அவர்களின் தீர்ப்பு ஒரு வாரத்திற்குப்பின் திருத்தப்பட்டு வைக்கப்படலாம் என்பது. அதில் கூட எங்கள் கட்சிக் கொரடா மீது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எந்த வகையில் நீங்கள் கூறுகிற நிகழ்ச்சி இதற்குப் பொருந்தும்? ஒரு வாரத்திற்குப் பிறகு தான் அவை திருத்தப்பட்டு லைப்ரரியில் வைக்க வேண்டும் என்று முன்னாள் பேரவைத் தலைவர் கூறியதை ஏற்றுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பொதுவாக இந்த அவையில் பேசுகிற பேச்சுக்கள் பற்றிய குறிப்புகள் முழுவதையும் மன்ற உறுப்பினர்கள் பார்வைக்காக வைக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டபோது எல்லாத் தலைவர்களும் கூடிய கூட்டத்தில் ஒரு முறை வகுக்கப்பட்டது. குறைந்த அளவு ஒரு வாரத்திற்குள்ளாக திருத்தி வைக்கப்படவேண்டும். ஆனால் இரண்டு நாட்கள், மூன்று நாட்களில் கூட வைக்கலாம். அது ஒரு விதியாக இருக்க முடியாது. ஒரு வார காலத்திற்குப் பிறகுதான், திருத்திய பிறகுதான் பத்திரிகைகளில் வர வேண்டுமென்றால் எந்தக் கருத்தையும் நேரடியாகக் கேட்டு வெளியிடமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். தகராறுகள் வரும்போதுதான் பிரச்னைகளை அணுகிச் செய்ய வேண்டியிருக்கிறது. இன்று பேசிய பேச்சுக்கள் ஒரு வாரத்திற்குப் பிறகுதான் வெளியிடவேண்டுமென்றால் அது ஒரு வாரம் கழித்துத்தான் வரும், அடுத்த நாள் பேசியது அதற்கும் அடுத்த நாள் தான் வரும் என்ற நிலை ஏற்படும். உறுப்பினர்கள் பார்வையிடுவதற்கு ஒரு வாரத்தில் நூல் நிலையத்தில் வைக்கப்படும் என்றிருக்கிறது. நிகழ்ச்சிகள் உடனடியாகப் பத்திரிகைகளில் வரவேண்டும். இங்கு ஒரு வாரத்திற்குள் திருத்தியனுப்பப்படாவிட்டால் அந்தப் பேச்சு அப்படியே "காரி அவுட்" ஆகும் என்றிருக்கிறது. இங்கு அந்தப் பிரச்னை வராது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இதற்காகத் தான் நான் ஏற்கனவே சொன்னேன், என்னென்ன பேசப்பட்டதோ அவற்றை தவறோ இல்லையோ அப்படியே லைப்ராரியில் வைத்தால் பார்ப்பதற்கு சௌகரியமாக இருக்கும் என்று. இங்கு இப்போது ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு சில வார்த்தைகளைப் போட்டிருக்கலாம், போடாமல் இருக்கலாம். மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசினார்கள். அதை இல்லையென்று மறுக்க முடியாது. எந்த முறையில் பேசினார், எப்படிப் பேசினார் என்பதுதான் பிரச்னை.

## 5. அவையுரிமைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### "சுதேசமித்திரன்" நாளிதழில் வந்துள்ள செய்தி—தொடர்ச்சி.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இங்குபேசப்பட்ட ஒரு கருத்தை வெளியிலே விமர்சிக்க உரிமை உண்டு. அதை யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. இங்கு பேசப்பட்ட கருத்துக்களை வைத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. குறிப்பாக, பத்திரிகைகளுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் விமர்சனம் செய்ய உரிமை இருக்கிறது. அப்படி விமர்சனம் செய்திருப்பதும் தவறாக ஒன்றும் விமர்சனம் செய்ததாகத் தெரியவில்லை. கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும். இதுமாதிரி நிலை இருக்கக் கூடாது என்ற ஆலோசனையே தவிர குற்றச்சாட்டு ஒன்றும் அந்தத் தலைப்பில் இல்லை.. முதல் அமைச்சர் அவர்கள் பேசியபோது ஒரு பெண் பேச்சாளர் தொடையைத் தட்டி சவால் விட்டார். தொடையைத் தட்டி சவால் விட்டார் என்பதோடு மட்டுமல்லாமல் அந்தத் தொடை அவ்வளவு கெட்டியானதா என்று சொன்னதாக ஞாபகம். அவர்கள் சொன்னதை திருப்பிச் சொன்னால் அது என்ன முறையில் இருக்கிறது என்று பார்க்க அனுகூலமாகியிருக்கும். அவர்கள் சொன்னதை பூர்ணமாக படித்த பின்னால்தான் நிலைமை எப்படி என்று சொல்ல முடியும்.

Dr. H. V. HANDE : I want a clarification, Sir. Are we not playing into the hands of these people who want to give extraordinary publicity to these speeches. It is up to the Hon. Chief Minister to consider this. The Hon. Chief Minister was speaking in a lighter vein. A paper had written about it. Are we to give extraordinary publicity to these things and by giving such publicity are we not playing into the hands of those people ? Should we give such a wide publicity by raising a privilege issue ?



***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் ஹாண்டே அவர்கள் இதற்கு நாம் கொடுக்க வேண்டிய அளவை விட அதிகமான முக்கியத்துவம் கொடுக்கிறோமா என்றார்கள். சுதேசமித்திரன் பத்திரிகை பன்னெடுங்காலமாகத் தமிழ்நாட்டிலுள்ள செல்வாக்கு மிகுந்த ஒரு பத்திரிகை. அதில் ஒரு செய்தி தவறான முறையில் வருமானால் அதை நாம் தவறு என்று எடுத்துக் காட்டுவது தேவைக்கு அதிகமான முக்கியத்துவம் அந்தப் பத்திரிகைக்குக் கொடுத்ததாகாது. அந்த முறையில் அது பற்றிப் பேசுவது முறை என்று கருதுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எல்லோரும் ஒத்துக்கொள்ளத்தக்க ஒன்றைச் சொன்னார்கள். சபையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பற்றிப் பத்திரிகைகள் விமர்சனம் தெரிவிக்க அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது என்று சொன்னார்கள். முழு உரிமை இருப்பது மட்டுமல்ல, அதைச் செய்வதற்குத்தான் பத்திரிகைகள் இருக்கின்றன. அது அவர்கள் கடமையும் கூட. ஆனால் இங்கு நடைபெற்றிருப்பது நான் சொல்லாத ஒன்றை வைத்துக் கொண்டு, நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக எடுத்துக் கொண்டு, அதன் பேரில் விமர்சனம் செய்திருப்பது ஆகும். அது முறையல்ல. அது நம் உரிமையைப் பாதிக்கிறது என்பதுதான்.

### (ii) நவமணி, நவசக்தி நாளிதழ்களில் வந்துள்ள செய்தி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதே பொருள் பற்றி திரு. அரங்கநாதன் அவர்களும் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மு.ப. 10-30

Thiru R. N. RANGANATHAN : Mr. Deputy Speaker, Sir, I wish to raise under rule 184 of the Assembly Rules, a matter of privilege in regard to the report of the Chief Minister's speech made in this house on 28th August 1968 in Navamani, dated 29th August 1968 and the reported speech of Thiru C. Subramaniam, President, Tamil Nadu Congress Committee, at a public meeting held on August 29, 1968 at Mylapore, Madras, in the daily Navasakthi, dated 30th August 1968 and the reported speech of Thirumathi Anandanayaki in the Navasakthi, dated 31st August 1968.

The Hon. Chief Minister has stated during his speech on the No Confidence motion as follows :

"நானே பல கதைகள் எழுதி இருக்கிறேன். பல கதைகளைப் படித்திருக்கிறேன். தொடையைத் தட்டிய பெண்ணைப் பற்றி நான் கதை கூட எழுதியதில்லை. எந்தக் கதையிலும் படித்ததும் இல்லை அவர்கள் தொடை வலிவுள்ள தொடையாக இருக்கலாம்."

But in the Navamani the speech has been published and reported as :

"ஒரு வேளை அது மலிவுள்ள சரக்கு போலும். மலிவான விஷயம் போலும்."

Thiru C. Subramaniam while addressing the public meeting is reported to have said :

"இப்படிப் பெண்களைப் பார்த்து மலிவுச் சரக்கு என்று முதல் மந்திரி பேசுவாரானால், அவர் தமிழ்நாட்டுக்கு முதன் மந்திரியாக இருக்க லாயக்கானவர்தானா ?"

His speech was reported in the daily Navasakthi, dated 30th August 1968, under the caption—

"தமிழ்ப் பெண்களை மலிவுச் சரக்கு என்று பேசுவதா ? அண்ணாதுரை சட்டசபைப் பேச்சுக்கு சி. எஸ். கண்டனம்—சபை நடவடிக்கையிலிருந்து நீக்கிவிட வேண்டுகோள்."

[திரு. ஆர். என். ரங்கநாதன்] [1968 ஆகஸ்ட் 31

Thirumathi Anandanayaki is reported to have said at a public meeting held at Chetput—

"சட்டமன்றத்தில் முதன் மந்திரி தமிழ்நாட்டுப் பெண்களைப் பற்றி மலிவு சரக்கு என்று பேசுவது எவ்வளவு மானங்கெட்ட பேச்சு. நடவடிக்கைப் புத்தகத்திலிருந்து நீக்கிவிடவில்லையென்றால் சாகும்வரை. உண்ணு விரதம்."

The above speeches and publications are libels upon this House and the Hon. the Chief Minister. It has always been regarded that publishing wilful misrepresentation, perverted, distorted and injurious report of the debate in the House and the speech of the Hon. Chief Minister as a breach of privilege. Speeches and publications referred to above are wilful and deliberate misrepresentation of the speech made in this House and contain insinuations calculated to bring the House and Hon. Chief Minister into disrespect, and therefore it constitutes breach of privilege. I therefore request that I may be permitted to raise a matter of privilege against Thiru C. Subramaniam, Tamilnad Congress Committee President, Thirumathi Anandanayaki and the Editors and Publishers of Navamani and Navasakthi.

## (iii) 'ஜெயபேரிகை' நாளிதழில் வந்துள்ள செய்தி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதே போல், இதே பொருள்பற்றித திரு. ஞானசம்பந்தம் அவர்களும் ஒரு உரிமைப் பிரச்சனையைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

**திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்:** தலைவரவர்களே, தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையின் நடைமுறை விதி 184 படி கீழ்க்கண்ட அவையுரிமைப் பிரச்சனையை சட்டப் பேரவையில் எழுப்ப அனுமதி அளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

"திரு. ஏ. சி. இராசரத்தினம் என்பவரை ஆசிரியராகக் கொண்ட அவராலேயே இனியன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படும் "ஜெய பேரிகை" என்ற நாளிதழின் மலர்-2, இதழ் 14, தேதி, சென்னை 30-8-1968 வெளியூர் 31-8-1968-ல்"

"சட்டசபையில் யார் யார் எப்படிப் பேச வேண்டும் என்ற வரை முறையே கொஞ்ச காலமாக மீறப்பட்டு வருகிறது. அண்ணாதுரை, தான் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக சரியாகவோ தவறாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம் என்ற நினைவே இன்றி அடிக்கடி பெண்களைப் பற்றிய ஆராய்ச்சிக்கு சட்டசபையைப் பயன்படுத்திக் கொள்கிறார்" என்ற செய்தியைப் பிரசுரித்திருக்கிறது. இந்தச் செய்தி சட்டப் பேரவையையும், அதனுடைய நிகழ்ச்சிகளையும் அவமதிப்பதுடன், ஆதாரமில்லாத இழிவான அவதூறைக் கிளப்பிவிட்டு, தமிழக மக்கள் மனதில் சட்டப் பேரவையைப் பற்றி ஓர் தவறான கருத்தைப் பரப்ப முயல்கிறது. இது அவையுரிமையை பெரிதும் பாதிக்கும் செயலாகும். எனவே, இந்தப் பிரச்சனையை அவையுரிமைக் குழுவிற்கு அனுப்ப இம் மாமன்றம் தீர்மானிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்."

கொஞ்ச காலமாகவே, இந்தப் பத்திரிகை இழிவான அரசியலைத் தமிழகத்தில் பரப்பிக் கொண்டு வருகிறது. "ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து கடைசியில் மனிதனைக் கடிப்பது போல" கடைசியில் சட்டமன்றத்தையே குறைகூறி இழிவுபடுத்துகின்ற நிலைமைக்கு வந்திருக்கின்றது. இது இந்த அவையின் உரிமையைப் பாதிப்பதோடு, முதலமைச்சருக்கு நோக்கம் கற்பிப்பது, இல்லாத விஷயத்தை எடுத்துக் கூறுவது என்ற குற்றத்தையும் இழைத்திருக்கிறது. எனவே, இதை அவையின் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.



1968 ஆகஸ்ட் 31]

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உதவி சபாநாயகர் அவர்களே, உறுப்பினர் திரு அரங்கநாதன் அவர்கள் பேசும்படியான சந்தர்ப்பத்திலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசிய பேச்சைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நானும் அன்றையதினம் முதலமைச்சரவர்கள் பேசின நேரத்தில் இங்கேயிருந்து கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். அன்று அவர் பேசியதில் ஒரு வரியை விட்டு விட்டு இவர்கள் கூறுகிறார்கள். அன்றைய பேச்சில், காங்கிரஸ் கட்சியின் பெரும் பெண் பேச்சாளர் ஒருவர் தொடை தட்டிப் பேசினார் என்று சொன்னதாக எனக்கு ஞாபகம். அந்த வரியை விட்டு விட்டார்கள். மேலும், முதலமைச்சரவர்கள் அன்றையதினம் பேசுகையில், "நான் கதை எழுதியிருக்கிறேன், அதில் கூட அப்படியில்லை, என்னுடைய கற்பனையிலேகூட அவ்வாறு உதிக்கவில்லை, அந்தப் பெண் பேச்சாளர் தொடை தட்டிக் கொண்டு பேசியிருக்கிறார், அது அவ்வளவு வலிவான தொடை போலும்" என்று கூறியிருக்கிறார். அப்படிச் சொன்னது உண்டா, இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவரவர்களே, ஒரே விஷயத்திற்காக மூன்று உரிமைப் பிரச்சினைகள் இங்கே எழுப்பப்பட்டிருக்கின்றன. இதிலே இரண்டாவதாக உரிமைப் பிரச்சினை எழுப்பிய உறுப்பினர் மாண்புமிகு திரு அரங்கநாதன் அவர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு சி. சுப்பிரமணியம் அவர்களும், தமிழ்நாடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்களும் இதைப் பற்றிப் பேசியதைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் இருவரும் நவமணி பத்திரிகையிலும், மற்ற பத்திரிகையிலும் வந்த செய்தியை வைத்துக் கொண்டு பேசியிருக்கிறார்கள். ஆகையால், பத்திரிகையிலே தவறான செய்தி வெளிவந்தது; உரிமை பிரச்சினைக்கு வரும் அளவுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருடைய பேச்சோ அல்லது திருமதி அனந்தநாயகி அவர்களுடைய பேச்சோ உரிமைப் பிரச்சினையில் சேர்க்கப் படத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார், இப்படிச் சொல்லி இருந்திருப்பாரானால் அது சட்டசபைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே நானே அப்படித் தவறிச் சொல்லிவிட்டிருந்தாலும் கூட நிச்சயமாக அது சட்ட மன்ற நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்பதை நானே கூட தங்களுக்குத் தெரிவித்திருப்பேன். ஆனால் நடைபெற்றிருப்பது, நான் சொல்லாத ஒன்றை நவமணி பத்திரிகையும், சுதேசமித்திரன் பத்திரிகையும் வெளியிட்டு, அவ்வாறு வெளியிட்டதோடு மட்டும் அல்லாமல் சுதேசமித்திரனில் அதைக் குறித்து தலையங்கமும் எழுதப்பட்டிருக்கிறது. நான் இங்கே பேசுவதற்கு முன் இடையிலே நம்முடைய நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் "ஒருவாரப் பிரச்சினையைக்" கிளப்பினார்கள். அப்படி ஒரு வாரம் எடுத்துக் கொண்டால் கூட இதைத் திருத்த வாய்ப்பிருக்கிறது. அப்பொழுது நான் பேசியதைக் கூட திருத்தியிருக்கலாம். இங்கே என்னிடத்தில் உள்ளது திருத்தப்படாதது. என்ன பேசப்பட்டதோ அது அப்படியே தரப்பட்டிருக்கிறது. [குறுக்கீடு] அதிலே நான் சொல்லியிருப்பது, "நான் கேள்விப்பட்டேன் — காங்கிரஸில் உள்ள ஒரு பெண் பேச்சாளர், வீதியில் பெண்கள் நடமாட முடியவில்லை என்று சொன்னது மட்டுமல்ல, தொடையைத் தட்டி அறைகூவல் விட்டார்கள், வரட்டும் யாராவது இருந்தால் என்று. அவர்களுக்குத் தமிழ்நாடு இடம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. பெண்கள் நடமாடவே முடியவில்லை என்று நீங்கள் சொன்னதை எப்படித் தென்காசி மக்கள் சகித்துக் கொள்வார்கள்? நான் அப்படிச் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். நீ அதைப் பார்த்தாயா என்று கேட்காதீர்கள். அந்தக் கோரமான காட்சியைப் பார்க்கும் நிலையில் நான் இல்லை. நானே பல கதைகள் எழுதியிருக்கிறேன். பல கதைகள் படித்திருக்கிறேன். தொடையைத் தட்டிய பெண்ணைப் பற்றி நான் கதை கூட எழுதினதில்லை. எந்தக் கதையிலும் படித்ததும் இல்லை. அவர்கள் தொடை வலிவுள்ள தொடையாக இருக்கலாம்." இதுதான் நான் பேசியது. "பெண்கள் நடமாடவே முடியவில்லை என்று நீங்கள் சொன்னதை நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத் தான் நான் இந்த நேரத்தில் சுட்டிக்

காட்ட விரும்புகிறேன்" என்று கூறினேன். நாட்டிலே பெண்கள் நடமாட முடியவில்லை. வெளியே போக முடியவில்லை என்று பேசினார்கள், பேசுகிறார்கள், அதற்காகத்தான் சொன்னேன். இப்படிப்பட்ட முறையிலும் பேசுகிறார்கள், எனவே, நீங்கள் சொன்னதை நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத் தான் அவ்வாறு கூறினேன்.

இதிலே, நவமணி பத்திரிகைச் செய்தியை வெளியிட்டும், சுதேசமித்திரன் பத்திரிகை தலையங்கம் எழுதியும், மலிவான சரக்கு என்று தமிழ் நாட்டுப் பெண்களைப் பற்றி நான் குறிப்பிடுவதாக அவர்கள் எண்ணிக் கொண்டு எழுதியிருக்கிறார்கள். நான் மிகக் காரசாரமாகப் பேசுவது உண்டு. ஆனாலும், அந்த நேரத்திலேயும் கண்ணியத்திலே தவறிப் பேச வேண்டுமென்ற நோக்கம் எந்த விதத்திலேயும் ஏற்பட்டதில்லை. அது போல் அன்றைய தினமும் ஏற்படவில்லை. தமிழ்நாட்டுப் பெண்களைப் பற்றித் தரக் குறைவாகப் பேசுகிறேன என்றால், அது என்னுடைய தாயை, என்னுடைய தங்கையை, குடும்பத்திலுள்ள அனைவரையும் அது பாதிக்கும். அந்தக் கண்ணியக் குறைவான வார்த்தை என்னுடைய வாயிலிருந்து வராததுடன், மலிவான சரக்கு என்றும், விலை போகாத சரக்கு என்றும் இந்தச் சந்தர்ப்பத்திலே பேசியதாகத் தவறாக வெளியிட்டது உள்ளபடியே உரிமைப் பிரச்சினையின் கீழ் வரத் தக்கதாகும். இப்பொழுது நான் படித்துக் காட்டியது, நம்முடைய நண்பர் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதைப் படித்துக் காட்ட வேண்டுமென்று கேட்டதற்காகப் படித்துக் காட்டியதாகும். மலிவான சரக்கு என்று பெண்களைப் பற்றி நான் தரக்குறைவாகச் சொல்லவில்லை. இன்னும் சொல்லப் போனால், இப்படிப் பேசுபவர்களைத் தமிழ்நாடு காங்கிரஸ் அனுமதித்துக் கொண்டிருக்கிறதே, தமிழ்நாட்டுத் தாய்க்குலத்திற்குக் கண்ணியம் இருக்கிறது, மதிப்பு இருக்கிறது, அது மங்குகிற அளவுக்கு வேறு யாரும் நடந்து கொள்ளக் கூடாது என்னும் கருத்து என்னுடைய பேச்சிலே தொக்கி நிற்கிறது. மறதியாகக் கூட தமிழ்நாட்டுப் பெண்களை இழிவு செய்ய வேண்டும். அல்லது தரக்குறைவாகப் பேச வேண்டும் என்ற எண்ணம் எப்படிப்பட்ட நேரத்திலும் தோன்றியதில்லை. ஆனால் நான் "விலைபோகாத சரக்கு" என்று இந்த விவாதத்திலே வேறு ஒரு இடத்திலே பேசியிருக்கிறேன். அதை நிருபர்கள் எழுதிக் கொண்டு பத்திரிகையில் போடும்பொழுது நான் எதற்குச் சொன்னேனோ அதற்குப் பயன்படுத்தாது இந்த இடத்திலே பயன்படுத்தியிருக்கிறார்கள். நான் சொன்னது, விலை போகாத சரக்கை மாலை இருட்டு நேரம் வருகிறது என்று தெரிந்தவுடன் பெருத்த குரலிலே கத்திவிட்டு, அதிலே ஒட்டி இருக்கின்ற ஈக்களையும் கொசுக்களையும் ஒட்டிவிட்டு அங்காடியிலிருந்து வீட்டிற்கு எடுத்துச் செல்லுகின்ற வணிகர்களைப் போல நீங்கள் இந்த சரக்குகளை தெருத் தெருவாகக் கூவி விற்றீர்கள் மேடைகளிலே கதை பேசினீர்கள், மாநாடுகளிலே சொன்னீர்கள், ஊர்வலங்களிலே முழக்கம் எழுப்பினீர்கள். இவை அத்தனையையும் கேட்டுக் கொண்டு பொது மக்கள் அடுத்தடுத்து அளித்த தீர்ப்பு என்ன ? தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தலிலே நீங்கள் பொது மக்ககளிடத்திலே இதே விவரங்களையும், எல்லா விவாங்களையும் பேசினீர்கள். பொது மக்கள் அப்போது போதை தெளிந்து விட்டார்கள் என்று சொன்னீர்கள். அப்பொழுது மக்கள் காங்கிரஸ்காரர்களுக்குத் தான் வாக்களிப்பர் என்று நம்பினார்களோ இல்லையோ வெளியிலே பேசினார்கள். ஆனால் நடந்தது என்ன என்று கேட்டு, பொதுவாக, காங்கிரஸ்காரர்கள் எங்கள் பேரிலே சொல்லிக் கொண்டு வருகிற குற்றச்சாட்டுகளை "விலை போகாத் சரக்கு" என்று சொல்லி இருக்கிறேன். அதை கூட "மலிவான சரக்கு" என்று சொல்லியிருக்கவில்லை. "மலிவான சரக்கு" என்று சொல்லியிருந்தால் உங்களுக்கு "வலிவு" இருந்திருக்கும். தெளிவாக "விலை போகாத சரக்கு" என்று சொல்லியிருக்கிறேன். இதை பத்திரிகை நிருபர்களோ, அல்லது பத்திரிகை நடத்துபவர்களோ "மலிவான சரக்கு" என்று அதை எடுத்துக் கொண்டு நான் பேசாத இடத்திலே அதைச் சொல்லி, எனக்கு, கண்ணியமாகநடக்க வேண்டுமென்று புத்திமதி



சொல்ல முற்பட்டார்கள். எந்தப் பத்திரிகை நடத்துபவர்களும் எனக்குப் புத்திமதிச் சொல்ல முன் வருவார்களானால் அதை நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். அவர்களுக்கு அந்த உரிமையும் இருக்கிறது. கடமையும் இருக்கிறது. ஆனால் தாய்க் குலத்தை நான் இழிவுபடுத்தியதாக அவர்களாக ஒரு வார்த்தையினைக் கற்பனையாக போட்டுக் கொண்டு எழுதுவது, எனக்கு புத்திமதி சொல்வதாகாது. அவர்கள் வேண்டுமானால் தாய்க்குலத்தை இழிவுபடுத்துவதாகும் நான் பேசாத வாக்கியத்தைத் தங்கள் பத்திரிகையிலே வெளியிட்டிருப்பதும் அதை வைத்துக் கொண்டு மற்ற பத்திரிகை விமரிசனம் எழுதுவதும் இரண்டு பிரச்னைகளும் உரிமைப் பிரச்னைகளின் கீழே வரும்.

இவைகள் இரண்டும் உரிமைப் பிரச்னைகளின் கீழே வரும் என்பதற்கு பலமான ஆதாரங்கள் காட்டியிருக்கிறார்கள் என்றாலும் நான் இப்பொழுதும் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன, அந்தப் பத்திரிகைகளுக்கு இன்றைய தினம் தாங்கள் ஒரு வாய்ப்புக் கொடுங்கள். அவர்கள் அந்த "மலிவான சரக்கு" என்று நான் பேசியதாகப் போட்டதைத் தவறு என்று உணர்ந்து "அண்ணாதுரை தன்னுடைய பேச்சில் தாய்க்குலத்தை இழிவுப் படுத்தும் அந்த வார்த்தையைப் பேசவில்லை" என்று வெளியிடுவதற்கு ஒரு வாய்ப்பாக இதைப் பயன்படுத்திக்கொள்வார்களானால் பிறகு விட்டுவிடலாம். அல்லது அதையும் மீறி அவர்கள் மறுபடியும் அதைப் பற்றிச் சொன்னார்களானால் அப்பொழுது அதை உரிமைப் பிரச்னைக்கு விடுவது தான் நாம் பத்திரிகைகளுக்கு காட்ட வேண்டிய கண்ணியத்தை காட்டுவதாகும். என்னைப் பொறுத்த வரையில் கண்ணியமான முறையில் பத்திரிகை நடத்த வேண்டுமென்று எண்ணுகின்ற யாரும் ஏற்றுக் கொள்வார்கள், அதை தங்கள் பத்திரிகையிலே வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். "மலிவான சரக்கு" என்று தமிழ்நாட்டுப் பெண்களையும் சொல்லவில்லை, காங்கிரஸ் பெண் பேச்சாளர்களையும் சொல்லவில்லை. அத்தனையும் "விலை போகாத சரக்கு" என்று காங்கிரஸ் குற்றச்சாட்டைத் தான் சொன்னேன். அந்த பெண் பேச்சாளர்களையோ, அல்லது தமிழ்நாட்டின் பெண் குலத்தையோ அப்படிச் சொல்லும் இழித்தன்மையான இயல்பு எனக்கு என்றும் இருந்தது இல்லை, இனியும் இருக்காது, அன்றும் இருக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், ஆக, பத்திரிகையாளர்களுக்கு வாய்ப்பு அளிக்கிற முறையில் சரியான முறையில் திருத்தி வெளியிட வேண்டுமென்று அவர்களுக்கு ஒரு அறிவுரை சொல்வதே போதும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. பி. ஜீ. கருத்திருமன்:** உதவி சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அவருடைய பேச்சையும் படித்துக் காட்டினார்கள். அதிலே இன்னொரு பகுதி என்னவென்றால், பெண் பேச்சாளர் தொடை தட்டிப் பேசியதாக எல்லாம் இருக்கிறது. என்னுடைய வாதம் என்னவென்றால் சிலர் அதையே வைத்துக்கொண்டு வாதத்திற்காக பேசும்படியான சம்பவங்கள் ஏற்பட்டாலும் ஏற்படலாம், பொறுப்பற்ற முறையிலே வெளியிலே பேசினாலும் பேசலாம், என்பது. நான் வேண்டுகோள் விடுவதெல்லாம் பெண் பேச்சாளர் தொடை தட்டிப் பேசினார் என்னும் படியான பகுதியை இந்தக் குறிப்பிலிருந்து எடுத்து விடுவது நல்லது என்று. அதுவே என்னுடைய ஆலோசனை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் பின்னாலே ஒவ்வொரு தவறாக குறிப்பிடுவது (குறுக்கீடு)...... வேண்டாமென்று சொன்னால் நம்முடைய கௌரவம் காண்பதற்கு உகந்தது அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். அதாவது காங்கிரஸ் பெண் பேச்சாளர் தொடை தட்டிப் பேசினார் என்பதை இழிவுபடுத்தும்படியான நிலையில் பேசவில்லை என்பதை தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். சொன்னதற்குப் பின்னாலே பெண் பேச்சாளர் பேசியது நடந்ததோ இல்லையோ என்பதைக் காணப் போவதாகச் சொன்னார்கள். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் அதை எடுத்துவிடுவது நல்லது என்பது தான்.

நான் ஒருவர் சொன்னதைக் கேட்டது என்னவென்றால், பொதுக் கூட்டத்திலே பேசும்படியான சமயத்திலே ஒருவர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் "இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே

கருத்திருமன் அவர்கள் எங்கள் அண்ணா முன்னாலே மயக்கம் அடைந்து விழுந்து, தண்ணீர் கொடுத்து தெளிய வைப்பதற்குள் பெரும்பாடாகப் போய்விட்டது. என்று பேசினார் என்பது. அப்படித்தான் எனக்குத் தகவல் வந்தது. நான் அப்படி மயக்கம் அடைந்து விழுந்து விட்டால் அவர் நிச்சயமாகத் தண்ணீர் கொடுப்பார் என்பதிலே சந்தேகம் கிடையாது. இன்னும் அப்படிக் கூடச் சொல்லவில்லை, "அவர்களுக்கு முன்னாலே நான் என்ன என்ன பேசுவது என்று தெரியாமல் மயக்கம் வந்து விழுந்து எழுந்து, தெளிந்து போனதாகச" சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கற்பனையிலே அப்படி யெல்லாம் வந்திருக்கலாம். அதன்மீது கூட உரிமைப் பிரச்னை கிளப்பலாம். எப்படி நடக்காத சம்பவத்தை நடந்ததாக வெளியிலே போய்ச் சொன்னார்கள் என்று உரிமைப் பிரச்னை கிளப்பலாம். என்னுடைய வேண்டுகோள், முதலமைச்சர் அவர்களுக்கும், சபாநாயகர் அவர்களுக்கும் என்ன வென்றால் அந்தப் பகுதியை எடுத்து விட்டால் மிகவும் நல்லது என்பது (குறுக்கீடு) இல்லை அப்படித் தான் இருக்கும், ஒன்றும் இல்லையென்று சொன்னால்......

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இப்பொழுது எழுப்பப் பட்டிருக்கிற பிரச்னை, நான் பேசாத ஒன்றைச் சில பத்திரிகைகள் வெளி யிட்டதும், அதை வைத்துக் கொண்டு சில பத்திரிகைகள் விமர்சனம் எழுதியதுமாகும் அதற்கு, அந்த பத்திரிகைகள் நான் கொடுத்த விளக்கத்தை வெளியிட்டு, வருத்தம் தெரிவிப்பார்களானால் உரிமை பிரச்னைக்கு விட வாய்ப்பில்லை யென்று நான் சொன்னேன். நான் பேசியதில் சில திருத்தங்கள் தேவை என்று எதிர்க் கட்சித் தலைவர் கருதுவார்களானால் அதை மற்றொரு சந்தர்ப்பத்தில் தெரிவிப்பாரானால் அது கவனிக்கப்படும். இந்தத் தொடர்பாகக் கொண்டு வருவாரானால் இந்த உரிமைப் பிரச்னைக்கும் அதற்கும் தொடர்பிருக்காது.

THIRU K. VINAYAKAM : Sir, may I add a few words ?

முதலமைச்சர் அவர்கள் கேள்விப்பட்டதைத்தானே இங்கு சொல்லுகிறார். அது எங்கும் பத்திரிகையிலே வந்தது, படித்துச் சொன்னார் என்ற நிலை இல்லை. வெறும் சொற்களைக் கேட்டு அவர் சொல்கிறார். அவர்களுக்குச் சொன்னவர் சரியாகச் சொன்னாரோ, அவர் கேட்டாரோ (குறுக்கீடு) I am going ro the root.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நீங்கள் வேறு ஒன்றை எழுப்புகிறீர்கள். அதை எழுப்புவதற்கு சந்தர்ப்பம் (நேரம்) கொடுத்தேன். அதற்குத் தான் நான் சொன்னேன், அன்றையதினமே கூட யாராவது ஒரு காங்கிரஸ் உறுப்பினர் எழுந்திருந்து "தங்கள் கட்சியிலே யாரும் அப்படிப் பேசவில்லை, அப்படிச் செய்யவில்லை" என்று சொல்லியிருந்தால் உடனே அந்த பேச்சை நான் தொடர்ந்திருக்கமாட்டேன். நேரடியாக தேர்தலில் ஈடுபட்ட நண்பர்கள் இங்கிருக்கிறார்கள். அவர்கள், "எங்களுக்கு நன்றாகத் தெரியும், அப்படி ஒன்றும் நடக்கவில்லை" என்று சொல்லுவதானால் அப்பொழுது அதை நீக்க வேண்டுமென்பதைப் பற்றி கொஞ்சம் கூடத் தயக்கம் காட்டமாட்டேன். நான் அதிலே கூட மிகவும் எச்சரிக்கையாகச் சொல்லியிருக்கிறேன். "கேள்விப்பட்டேன்" என்று தான் சொல்லியிருக்கிறேனே தவிர, "அங்கே பார்த்தேன்", என்று சொல்லவில்லை. அப்பொழுதே நான் எதிர்பார்த்தேன், நீங்கள் யாராவது எழுந்திருந்து அப்படி நடக்கவில்லை என்று சொல்வீர்கள் என்று. உள்ள படியே நான் எதிர்பார்த்தேன். (குறுக்கீடு). நம்முடைய வினாயகம் அவர்கள் உட்கார்ந்து கொண்டே சொல்லுகிறார்கள்.

**திரு. கே. வினாயகம்:** எழுந்து பேச வாய்ப்புக் கொடுக்க மறுக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஆகவே தான், சபைக் குறிப்பிலே வரவேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன். "நாங்கள் வேண்டுமென்றே, தவறு செய்து விட்டும் என்று விட்டு விட்டோம்" என்று சொல்கிறார்கள். அதைச் சுட்டிக் காட்டியிருக்க வேண்டியது எதிர்க் கட்சியினுடைய கடமை. நாங்கள் ஒரு தவறான காரியத்திலே ஈடுபட்டால் அல்லது தவறான பேச்சு பேசினால் அதை உடனுக்குடன் சுட்டிக்காட்டாமல்,





அந்தத் தவறுகளையெல்லாம் அவர்கள் செய்யட்டும் என்று விட்டு விடுவதற்காக எதிர்க் கட்சி இல்லை. அது எதிர்க் கட்சியினர் செய்யவேண்டிய கடமையிலிருந்துகூடத் தவறுவதாகும். அந்த நோக்கத்தோடு அவர்கள் சொல்லியிருப்பார்கள் என்று நான் கருதவில்லை. ஏனென்றால் அவர்களை நான் பார்த்துக்கொண்டுதான் பேசினேன். பலபேர் என்ன இப்படி யெல்லாம் நடந்துவிட்டதே என்று வருத்தப்படுவதாகத்தான் படப் பட்டதே தவிர, இது நடக்காததைப்போல் இருந்ததாகத் தெரியவில்லை. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள்கூட அங்கே கடைசி இரண்டு, மூன்று நாட்கள் தேர்தல் பிரச்சாரம் செய்தார் என்று கருதுகிறேன. அவராவது அல்லது இன்னும் அங்கேயே இருந்தவர்கள் "அப்படி ஒன்றும் நடக்கவில்லை" என்று தெரிவிப்பார்களானால், "நான் சொன்னது தவறு, அதற்காக வருந்துகிறேன்" என்று தெரிவிப்பதற்கு நான் தயக்கமே காட்டமாட்டேன். இந்த அவையிலே தவறு செய்திருந்தால், தவறாகச் சொல்லியிருந்தால் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்று கூறுவதற்குத் தயக்கம் காட்டியதே இல்லை. எதிர்க கட்சித் தலைவர் அவர்கள், சங்கரித தேர்தலிலே "அண்ணாதுரை ஆயிரம் தடவை மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்" என்று சொல்லியதாகக் கேள்விப் பட்டேன். தவறைத் தெரிந்துகொள்ளாமல் இருப்பதுதான் தவறு. தவறைத் தெரிந்துகொண்ட பிறகு திருத்திக் கொள்வதுதான் சரியான முறை. (குறுக்கீடு) திரு. வினாயகம் அவர்களே ஒப்புக்கொண்டார்கள். ஆகையால் தவறு என்று சுட்டிக் காட்டி இருந்தால் அன்றையதினமேகூட நான் ஏற்றுக்கொண்டிருப்பேன். தீர விசாரித்துச் சொல்லுங்கள. அந்தப் பெண் பேச்சாளர் அப்படிச் செய்யவில்லை என்று; நீங்கள் பிறகுகூட விசாரித்துச் சொல்லுங்கள். "சரி நீங்கள் சொல்கிறீர்கள், ஆகவே ஏற்றுக் கொள்கிறேன்" என்றுகூட ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், இப்பொழுது இருக்கிற உரிமைப் பிரச்சினைக்கும் இதற்கும் தொடர்பில்லை.

**திரு. கே. வினாயகம் :** நேற்று மாலை ஒரு காங்கிரஸ் பொதுக் கூட்டம் நடந்தது. அதில் நானும், திரு. சி. எஸ். அவர்களும், திருமதி அனந்த நாயகி அவர்களும் பேசினோம். திரு. சி. எஸ். அவர்கள் சொன்னார், "என் தலைமையிலேதான் அந்தத் தேர்தல் பிரச்சாரம் நடந்தது. நான் கவனித்துக் கொண்டு வந்திருக்கிறேன், அது மாதிரி எந்தப் பேச்சாளரும் தொடை தட்டிப் பேசவில்லை" என்று சொல்லியிருக்கிறார். முதல் அமைச்சர் அவர்கள் அப்படிப் பேசியதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு அப்படி யாராவது தகவல் கொடுத்திருக்கலாம். தவறு என்று தெரிந்து கொண்டால் அதைத் திருத்திக் கொள்ளவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார். நான் சொல்கிறேன். அதிகாரப் பூர்வமாக சொல்கிறேன். திரு. சி. எஸ். அவர்கள் தலைமை வகித்துத் தேர்தல் நடத்தினார். பேச்சாளர்கள் எப்படிப் பேசுகிறார்கள் என்று அவர் கவனித்து வந்திருக்கிறார். அவருக்குத் தெரிந்த வரையிலே எவரும் அப்படிப் பேசவில்லை என்று சொல்லியிருக்கிறார். ஆகவே முதல் அமைச்சர் அவர்கள், தான் சொன்னதைத் திருத்திக்கொள்வாரா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** திரு. சி. எஸ். அவர்கள் தென்காசித் தேர்தலை முழு அளவிலே நின்று நடத்தினார்கள் என்பது உண்மை. ஆனால் எல்லாக் கூட்டங்களுக்கும் அவர் சென்றிருக்கிறார் என்பது உண்மையாக இருந்திருக்க முடியாது. அவர் இல்லாத கூட்டங்களில் அப்படி நடந்திருக்கலாம், அப்படி பேசப்பட்டிருக்கலாம். நேற்று அவர் பேசியதை நம்முடைய நண்பர் திரு. வினாயகம் அவர்கள் கேட்டதாகச் சொன்னார்கள். அநேகமாக 6-ம் தேதி நானும், திரு. சி. எஸ். அவர்களும் வேறு ஒரு. விஷயத்திற்காகச் சந்திப்பதாக இருக்கிறோம். அப்பொழுது அவர் என்னிடத்திலே நேரிடையாக இதைப் பற்றித் தெரிவித்தால், நான் நிச்சயம் அதைப்பற்றிக் கவனிப்பேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சர் அவர்கள் என்னைப் பற்றிக் குறிப்பிட்டதால் நான் விளக்கம் சொல்ல ஆசைப்படுகிறேன். அண்ணா அவர்கள் ஆயிரம் தடவை மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் ள்

என்று நான் சங்கரித் தேர்தலின்பொழுது சொன்னதாகக் கூறினார். நான் என்ன நடந்தது என்பதுபற்றி ஏற்கனவே விளக்கம் கொடுத்திருக்கிறேன். என்னைப்பற்றிச் சில அமைச்சர்கள் எப்படியெல்லாமோ பிரச்சாரம் செய்யவில்லையா ? எதிர்க்கட்சித் தலைவர் எதற்கும் லாயக்கு இல்லாதவர், ரொம்ப மோசமான எதிர்க்கட்சித் தலைவர், எங்கள் அண்ணா இவரை என் இப்படி இங்கே உட்கார வைத்திருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். ஆமாம் அப்பேர்ப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் எப்படி பொறுப்புள்ள தன்மையில் நடந்து கொண்டார் என்பதற்கு ஒரு சம்பவத்தைச் சொல்லிக் காட்டுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் என்மீது மதிப்பு வைத்து ஓரளவுக்கு வருத்தம் தெரிவிக்கும் அளவுக்கு நிலை இருக்கிறது என்று நான் சொன்னேன். பொதுப் பணித் துறை அமைச்சர்கூட " தாய்மீது ஆணையாக தந்தை மீது ஆணையாகச் சொல்கிறேன், நான் அப்படிச் சொல்லவில்லை" என்று சொன்னார். பத்திரிகையிலே வந்தது. தான் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்கிறார். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். பத்திரிகையிலே வந்தது தவறு என்றால் நான் ஏற்றுக் கொள்கிறேன். 1000 தடவை, 2000 தடவை மன்னிப்புக் கேட்க வேண்டுமென்பதில்லை. தவறு என்று தெரிந்தால், ஒரு தரம் மன்னிப்புக் கேட்டாலே போதும். முதல் அமைச்சருக்கு யாராவது தவறான தகவல்களைக் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு அவர் சொல்லி மாட்டிக் கொண்டிருக்கலாம். அதுமாதிரி எனக்கும் யாராவது தவறான தகவல்களை சொல்லியிருக்கலாம். அதை வைத்துக்கொண்டு நானும் சொல்லி மாட்டிக் கொண்டிருக்கலாம். தவறு என்று தெரிந்தால் மன்னிப்புக் கேட்பதுதான் முறையாகும். முதல் அமைச்சர் அவர்கள் 1000 தரம் மன்னிப்புக் கேட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. நான் சொல்லியதெல்லாம் பொறுப்பான முறையில்தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இப்பொழுது நான் பேசாத ஒன்றைப் பேசியதாக சில பத்திரிகைகள் வெளியிட்டதும், அதைப் பற்றி ஒரு பத்திரிக்கை விமர்சனம் எழுதியதும் முறையல்ல என்பது தான் நான் எடுத்துச் சொன்ன வாதம் உரிமைப் பிரச்னைகள் கொண்டுவந்தவர்களுடைய வாதமும் அதுதான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதைப் பற்றி கருத்துச் சொல்லாதது எனக்கு வியப்பாக இருக்கிறது. நான் சொல்லாத ஒன்றை சொன்னதாக ஒரு பத்திரிக்கை வெளியிடுவதும் அதை வைத்துக்கொண்டு, இன்னொரு பத்திரிக்கை விமர்சனம் செய்வதும் சரியா, சரியில்லையா என்பது பிரச்னை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் என்னோடு சேர்ந்து அந்தப் பத்திரிக்கைகள் அப்படிச் செய்தது முறையல்ல என்று தெரிவித்து அந்தப் பத்திரிகைகள் திருத்தம் வெளியிட்டு வருத்தம் தெரிவித்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கலாம் என்று சொன்னால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய கடமையைச் சரிவர செய்தவர் ஆவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் சொல்லிப்படி கருத்துக்களை பத்திரிக்கைகளிலே எழுதுவதற்கு உரிமை உண்டு. ஆனால், முதல் அமைச்சர் அவர்கள் மறுத்ததற்குப் பின்னாலும், இதுமாதிரி நடை பெறவில்லை என்று சொன்னதற்குப் பின்னாலும், பத்திரிகைகள் வருத்தம் தெரிவிப்பது மட்டுமல்ல, சட்டசபை அங்கத்தினர்கள், அமைச்சர்கள் எல்லோருமே சில சமயங்களில் தவறான கருத்துக்களை எடுத்துச் சொல்லிவிடுகிறோம். பிறகு அது தவறு என்று தெரிந்த பிறகு, அதுபற்றி வருத்தம் தெவித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் முறையாக இருக்கிறது. அது தான் கண்ணியமானது. முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியபடி, தவறான கருத்துக்களை வெளியிட்டதற்கும், அதைப்பற்றி விமர்சித்ததற்கும் பத்திரிக்கைகள் திருத்தம் வெளியிட்டு, வருத்தம் தெரிவித்து, முதல் அமைச்சர் அவர்களுடன் ஒத்துழைத்துச் சபையினுடைய கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் காப்பாற்ற வேண்டும். இந்த நிலையிலே இந்த உரிமைப் பிரச்னையை ஏற்றுக் கொள்ள வேண்டாம். முதல் அமைச்சர்





அவர்கள் சொன்னமாதிரி பத்திரிகைக்களுக்கு வருத்தம் தெரிவிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் அளித்துவிட்டு, விட்டுவிடலாம் என்று சொன்னதை நான் ஆதரிக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்பொழுது எழுப்பியிருக்கக் கூடிய உரிமைப் பிரச்னை டற்றி, நண்பர் திரு விநாயகம் அவர்கள் சொன்னார்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் எதற்காக எழுந்து நிற்கிறீர்கள் என்பதை முதலில் சொல்லுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நண்பர் விநாயகம் அவர்கள் சொன்னார். " நாங்கள் மூன்று பேர்களும் கூட்டத்தில் பேசினோம். எந்த நேரத்திலும் அப்படி யாரும் தொடை தட்டிப் பேசவில்லை என்று அந்தக் கூட்டத்தில் திரு. சி. எஸ். அவர்கள் சொன்னார்" என்றார். நண்பர் திரு. சி. எஸ். அவர்கள் விஷயம் புரியாதவர் அல்ல. மற்ற பத்திரிக்கைகளையும் படிக்கக் கூடியவர். நவமணி, சுதேசமித்திரன் பத்திரிககையில் வந்திருக்கக்கூடிய தவறான செய்திகளை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதில் என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது இந்தத் தீர்மானங் கொண்டுவந்தவர்கள் முதலமைச்சர், அவை முதல்வர், எதிர் கட்சித் தலைவர் ஆகியோர்களுக்குத்தான் இந்தத் தீர்மானத்தின் பேரில் பேசுவதற்கு உரிமை உண்டு. இதிலே ஒன்றும் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. நான் பல தடவை சொல்லியிருக்கிறேன். சட்டமன்ற நிகழ்ச்சிகள் முறை மாறி நடக்கின்றன, சட்டமன்ற விதி முறைகள் கடைபபிடிக்கப்படவில்லை என்ற நேரத்தில்தான் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டும். மற்ற நேரத்தில் பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்புவது கூடாது.

**திரு. ஆலடி அருணா :** ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயிண்டு ஆப் இன்பர்மேஷன் இதில் ஒன்றும் கிடையாது.

**திரு. கா. இர. ஞானசம்பந்தம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பத்திரிக்கைகளுக்கு எச்சரிக்கை விடுத்தால் போதும் என்று கூறினார். நான் கிளப்பிய பிரச்னை என்னவென்றால், முதல் அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சின மேல் இந்தப் பத்திரிக்கை " ஜெய பேரிகை " விமர்சிக்கவில்லை. " ஜெய பேரிகையின் " இரண்டு திட்டவட்டமான குற்றச் சாட்டுகள் இருக்கின்றன. " சட்டசபையில் யார் யார் எப்படி பேசவேண்டும் என்ற வரைமுறையே கொஞ்ச காலமாக மீறப்பட்டு வருகிறது " என்று எழுதப்பட்டிருக்கிறது. சபை அங்கத்தினர்கள் அனைத்துப் பேர்களும் வரைமுறையற்றவர்கள் என்று திட்டவட்டமாக குற்றம் சாட்டப்படிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களுடைய பேச்சை எடுத்துக் கொண்டு அதன்மீது செய்யப்பட்ட விமர்சனம் அல்ல இது. பொதுவாகவே, சட்டசபையில் வரைமுறை மீறப்பட்டு வருகிறது என்று திட்டவட்டமாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய பேச்சின் பேரில் செய்யப்பட்ட விமர்சனம் அல்ல இது. திட்டவட்டமாக இரண்டு குற்றச் சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. " அண்ணாதுரை, தான் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக சரியாகவோ, தவறாகவோ தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறோம் என்ற நினைவே இன்றி அடிக்கடி பெண்களைப் பற்றிய ஆராய்ச்சிக்கு சட்டசபையை பயன்படுத்திப் கொள்கிறார் " என்ற செய்தியை பிரசுரித்திருக்கிறது. வழக்கமாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் $1\frac{1}{2}$ ஆண்டு காலமாக இதுமாதிரி பேசுகிறார்கள் என்று திட்டவட்டமாக அதில் குற்றச்சாட்டு வந்திருக்கிறது. எனவே, இல்லாத விஷயத்தை கற்பித்து, தவறுதலாக செய்யப்பட்டிருக்கிற திட்டவட்டமான குற்றச்சாட்டு

இது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன யோசனை இந்தப் பத்திரி கைக்குப் பொருந்தாது. இந்தப் பத்திரிக்கையைப் பொறுத்தவரையில் இதை உரிமைப் பிரச்சினையாகக் கருதி உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மற்றப் பத்திரிக்கைகளுக்கு ஒரு வாய்ப்பு அளிப்பதுபோல இந்தப் பத்திரிக்கைக்கும் வாய்ப்பு அளித்து. சட்ட மன்றத்தில் சில நாட்களாகவே வரைமுறையற்றுப் பேசுகிறார்கள் என்றெல்லாம் சபையின் கண்ணியத்தைக் குலைக்கும் முறையில் எழுதியதற்கு, ஒரு திருத்தம் வெளியிட்டு, வருத்தம் தெரிவித்துக் கொள்வதற்கு அந்தப் பத்திரிக்கைக்கும் தலைவர் அவர்கள் ஒரு வாய்ப்பு அளிப்பது தான் முறை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. இளம்வழுதி, திரு. அரங்கநாதன், திரு. ஞானசம்பந்தம் ஆகியோர்கள் உரிமைப் பிரச்னைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவற்றிலே உள்ள குற்றச்சாட்டுகள், நம்முடைய சபையிலே நடைபெறாத ஒன்றை நடந்ததாகக் கூறியது ஒன்று. இரண்டாவது, இந்த மன்றம் நடைபெறுகின்ற நேரத்தில், ஓர் உறுப்பினர் ஒழுங்குமுறை மீறுகிற நேரத்தில், ஒழுங்குபிரச்னை என்று கூறி, இந்த மன்றம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு துணைபுரிவதற்கு உறுப்பினர் எல்லோரும் விழிப்புடன் பணியாற்றுகிறார்கள். மன்றம் ஒழுங்காக நடைபெற வேண்டும் என்று உறுப்பினர் எல்லோரும் விழிப்பாக இருந்து அக்கறையோடு நடந்து கொள்கிற நேரத்தில், அதுபற்றி வெளியே கூறினால் அது மான நட்ட வழக்கு தொடரக்கூடிய அளவுக்கு குற்றம் இருக்கிறது என்பதை உணர்ந்திருந்தும் சட்டமன்றத்தில் முதல் அமைச்சர் அவர்கள் இப்படிக் கூறினார் என்று சொன்னால், முதல் அமைச்சர் அவர்களுக்குமட்டும் அந்தக் குற்றம் சாருவது அல்ல. "அவர் அப்படிக் கூறியதை இந்த மன்றத்தில் இருக்கும் உறுப்பினர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு முறைகேடான நிகழ்ச்சி நடைபெறுகிறது அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், ஒழுங்குப் பிரச்னை கிளப்புவது இல்லை" என்ற இன்னொரு குற்றச்சாட்டும் இந்த மன்ற உறுப்பினர்களைச் சாரும். ஆகவே, இந்தக் குற்றச்சாட்டுகள் இந்த மன்ற நிகழ்ச்சிகளின் உரிமையை மீறிய செயலாகும் என்று நாம கருதுகிறோம் என்றாலும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் வேண்டிககொண்டதன் பேரில், அந்தப் பத்திரிக்கைகளுக்கு தாங்கள் செய்த செயலுக்கு வருத்தம் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கின்ற வகையிலே, இந்தத் தீர்மானங்களின்மீது என்னுடைய தீர்ப்பு அளிப்பதை பிறகு வைததுக்கொள்கிறேன். அதற்கு முன் அந்தப் பத்திரிக்கைகளுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கின்றேன்.

**திரு. டி. மார்டின் :** சார் ஆன் பாயின்ட் ஆப் ஆர்டர், கனம் முதல் அமைசசர் அவர்கள் காங்கிரஸ் பெண் பேச்சாளர் தொடையைத் தட்டிப் பேசினார், அது உண்மையாகவும் இருக்கலாம், அது உண்மை இல்லாமலும் இருக்கலாம் என்று சொன்னவுடன் திரு. விநாயகம் அவர்கள் கேட்டதற்கு அதை நிரூபிப்பதற்கு நேரம் இருக்கிறதாகவும், பிறகு அது பற்றி கவனித்துக்கொள்வதாகவும் சொன்னார்கள். (திரு என். வீராசாமி மற்றும் பலர் பாயின்ட் ஆப் ஆர்டர்ஸ் எழுப்பினார்கள்.) நான் எனனுடைய பாயின்ட் ஆப் ஆர்டரை முதலில் முடிக்கிறேன்.

நான் சொல்வது என்னவென்றால் சட்டசபையின் இந்தக் கூட்டத் தொடரின் முடிவு நாள் இன்றைக்கு. முதல் அமைச்சர் பேச்சில் பெண் பேச்சாளர் பற்றி இருக்கிறதா இல்லையா என்று முடிவு செய்யப்பட்டும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் பாயிண்ட் ஆப் ஆர்டர் தெளிவாக இருக்க வேண்டும். சட்டமன்ற விதிமுறை மாறுகின்ற நேரத்தில், நடைமுறை கேடுறுகின்ற நேரத்தில்தான பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியும். இங்கே அப்படி என்ன நடந்திருக்கிறது என்பதைமட்டும் எடுத்துக்காட்ட வேண்டும். என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பது பற்றி சரிதானா என்பது பற்றி எல்லாம் எழுப்புவது முறை அல்ல.





**திரு டி. மார்டின் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய பேச்சு பேரவை நடவடிக்கைக் குறிப்பில் அச்சேறும். இன்றுதான் இந்தக் கூட்டத்தொடரின் இறுதி நாள், ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் எப்போது அதைப்பற்றிச் சொல்லப்போகிறாரோ அதுவரை இப்போது அவர் பேசியிருப்பதும் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் ஏறாதிருக்கத் தாங்கள் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கனம் உறுப்பினர் வழக்கறிஞர். இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. வேண்டுகோள். "அப்படிக் கூறவில்லை என்று சொன்னால் நான் திரும்பப் பெறுகிறேன்" என்றும் முதல் அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதுவும் இந்தக் குறிப்பில் வரும்.

**திரு. கோ. பூவராகன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் பட்ஜெட் கூட்டத்தொடரிலேயே இரண்டு உரிமைப் பிரச்சினைகள் கொடுத்திருக்கிறேன். ஒன்று ஹரிஜன நல இலாக்கா மீதும், மற்றொன்று பொதுப் பணித்துறை அமைச்சர், முதல் அமைச்சர் மீதும் கொடுத்திருந்தேன். எனக்கு ஒன்று பற்றிதான் தகவல் வந்தது. அவை எந்த அளவில் இருக்கின்றன என்பதற்குத் தாங்கள் தீர்ப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பூவராகன் அவர்கள் கொடுத்த பிரச்சினை ஆய்வில் இருக்கிறது. பிறகு அதை எடுத்துக் கொள்கிறேன்.

## 6. ஒற்றி வைப்புத் தீர்மானம்

### திண்டுக்கல் நகராட்சியின் குடிநீர் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திண்டுக்கல் நகர்ப்பகுதியில் இருக்கும் குடிதண்ணீர்க் கஷ்டத்தைப்பற்றி திரு. வரதராஜன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி அரசினருடைய அன்றாட நிகழ்ச்சிக்கு அப்பாற்பட்டது என்பதற்குச் சிறு விளக்கம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, ஒரு கோடி ரூபாய் செலவு செய்து திண்டுக்கல் காமராஜ் நீர்த் தேக்கம் கட்டப்பட்டது. அதன் மூலம் திண்டுக்கல், சின்னாளப்பட்டி. ஆத்தூர் போன்ற பல்வேறு நகரங்களுக்கும் தண்ணீர் சப்ளை செய்யும்படியான அந்தத் திட்டத்தை ஒரு கோடி ரூபாய் செலவுசெய்து கட்டியும், அதில் தண்ணீர் வரமுடியாதபடி. தடுப்புச் சுவர் எழுப்பிவிட்டார்கள். அதனால் தண்ணீர் வராது நின்றுவிட்டது. அந்தப் பகுதி மக்கள் தண்ணீருக்காக இன்று மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இது மிகவும் முக்கியமான பிரச்சினை. உடனடியாகக் கவனிக்கவேண்டிய பிரச்சினை. ஆகவே, அவசரமாக விவாதித்து அந்தத் தடுப்புச் சுவர்களை நீக்கிவிடுவதுபற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்கக் கோரி என் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தற்பொழுது நிலவி வரும் வெப்ப நிலையிலும் மழையின்மையாலும் திண்டுக்கல் நகராட்சியில் குடிதண்ணீர் வழங்குவதில சில கஷ்டங்கள் உணரப்படுகின்றன. குடிநீர்த் தேக்கத்தில் உள்ள தண்ணீர் 15 நாட்களுக்கு மாத்திரமே வழங்கப்போதுமானதாக இருக்கிறது. இன்னும் அதிக நாட்கள் தண்ணீர் வழங்குவதின்பொருட்டு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நரசிங்காபுரம் குளத்திற்குப் போகும் வரத்துக்காலிலிருந்து தண்ணீரை குடிநீர் தேக்கத்திற்குத் திருப்பிவிட ஏற்பாடுகள் செய்துள்ளார். இந்தக் குளத்தில் ஆயக்கட்டிற்கு இப்பொழுது பாசனத்தேவை ஏற்படவில்லை. இப்படித் திருப்பப்பட்ட தண்ணீரைக்கொண்டு திண்டுக்கல் நகராட்சியில் குடிநீர் வழங்குவதில் ஏற்பட்டுள்ள உடனடிக் கஷ்டங்களைத் தவிர்க்க இயலும் என எதிர்பாககப்படுகிறது. காமராஜ் நகர் நீர்த் தேக்கத்திற்கு வரும் வரத்துக்காலில் உள்ள கட்டுமானங்களுக்கு என்னென்ன சீரமைப்புகள் தேவை என்பதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்ந்து

வருகிறார். ஆகவே இந்தப் பிரச்சினை இப்போது அரசினரின் கவனத்திலேயும் பொறியாளரின் தீவிர கவனத்திலேயும் இருந்து வருகிற காரணத்தினால் இதற்கு அவையின் பிற அலுவல்களின் ஒத்திவைப்புத்தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தின் காரணத்தினால் இந்த ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.*

### 7. அரசினர் தீர்மானம்

### விதி 41 (3)ஐந் தளர்த்தல்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** *பேரவைத்தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின 41 (3) விதியின் கீழ்" ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக்கூடாது" என்று உள்ள தடையை இன்று தளர்த்தவேண்டும் என்று கோருகிறேன்.*

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.*

### 8. கவன ஈர்ப்பு

### (i) கோவை மாவட்டத்தில் குடிநீர் கிடைக்காமை.

**திரு. சு. துரைசாமி :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ்,*

*கோவை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக மழை தவறிப் போய்விட்டமையால் பொது மக்கள் குறிப்பாக கிராமப்புறத்தில் குடியிருக்கும் மக்கள் குடிதண்ணீர் கிடைக்காமல் துன்பப்படும் நிலை பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** *மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டுகளுக்கு மேல் கோவை மாவட்டத்தில் பருவமழை தவறியது குறித்து அவ்வப்போது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக மாவட்டம் முழுவதிலும் நிலத்திற்கடியிலுள்ள நீர் மட்டம் கணிசமான அளவுக்குக் கீழே சென்றுவிட்டது. குடிநீர்க் கிணறுகள் பலவும் வற்றிவிட்டனவென்றும் அறிவிக்கப்பட்டது. எனவே, இக் கிணறுகள் பலவற்றை ஆழப்படுத்த வேண்டியிருந்ததால் 1967–68-ஆம் ஆண்டில் அரசாங்கம் இம்மாவட்டத்துக்கு இதற்கென 22,12,500 ரூபாய் ஒதுக்கியது. ஹரிஜனக் குடியிருப்புகளில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு மேலும் 3 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. கிணறு வெட்டுவதற்குத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாக இருந்ததால் மேற்சொன்ன நிதி ஒதுக்கததில் ரூ. 3 93 லட்சத்தை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பிக்கொடுத்துவிட்டார். எஞ்சிய தொகை பயன்படுத்தப்பட்டது. சீர்கேடான பருவ நிலையினால் பாதிக்கப்பட்ட கிணறுகளை ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்ளுவதற்காக, 1968-ம் ஆகஸ்டு முற்பகுதியில் கோவை மாவட்டத்திற்காக மேலும் ரூ. 4 லட்சம் ஒதுக்கப்பட்டது. கூடுதலாக நிதி ஒதுக்கவேண்டுமென்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மீண்டும் அரசாங்கத்தை வேண்டியுள்ளார். இக் கோரிக்கையை அரசு பரிவுடன் ஆய்வுசெய்து வருகின்றது. இந்த வேண்டுகோளைக் குறித்து அரசு விரைவில் தக்க ஆணைகளைப் பிறப்பிக்கும்.*

**திரு. சு. துரைசாமி :** *பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் கூடுதலாக நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்குள்ள கஷ்டத்தை நீக்க மாவட்ட ஆட்சித் தலைவரது கோரிக்கையை அரசாங்கம் விரைவில் ஆய்வு செய்து அவர் கோரியபடி அதிக நிதி ஒதுக்கித் தருவார்களா என்று கேட்கிறேன்.*

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** *ஆய்வு நடைபெற்று வருகிறது. விரைவாகவே அதுபற்றி முடிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறேன்.*



### (ii) ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் இல்லாமை.

**திரு. சு. துரைசாமி :** *சட்டப் பேரவையின் விதிகளின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.*

*"தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக கிராமப் புறங்களில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மருத்துவ மனைகளிலும் மொத்தமாக 250-க்கு மேற்பட்ட மருத்துவர்கள் (டாக்டர்கள்) இல்லாத குறையினால் மருத்துவ மனைகளில் இடங்கள் காலியாக இருப்பதும் அதனால் பொதுமக்கள் கஷ்டங்கள் அடைந்து வருவதுமான நிலை."*

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Mr. Deputy Speaker Sir, on 12th August 1968 114 posts of Medical Officers were vacant as indicated below :—

| | | |
|---|---|---|
| 1. | Hospitals and Dispensaries— | |
| | Men .. .. .. .. .. | 41 |
| | Women .. .. .. .. .. | 37 |
| 2. | Primary Health Centres .. .. .. | 12 |
| 3. | E.S.I. Hospitals and Dispensaries in city and mofussil. | 24 |
| | Total .. | 114 |

At present out of 287 Primary Health Centres in the State, only 12 posts of Medical Officers in Primarary Health Centrse are vacant. The vacancies are due to—

(i) Medical Officers being deputed for higher studies like M.D., M.S., condensed M.B.B.S. course, etc., and Diplomas like D.O., D.L.O., D. V., etc.

(ii) Medical Officers proceeding on leave on medical grounds and on private affairs ; and

(iii) Medical Officers being posted but not joining duty owing to a variety of reasons.

The vacant posts are being filled up as and when Medical Officers become available. The Government have since approved the proposal of the Director of Health Services and Family Planning for appointment of 93 candidates as temporary Assistant Surgeons in the Madras Medical Service. Therefore only 21 vacancies still remain to be filled up. Necessary action will be taken to fill up these vacancies, as quickly as possible.

**திரு சு. துரைசாமி :** *பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவதால், மெடிகல் லீவு போட்டுவிட்டு இதர இடங்களுக்கு முயற்சிப்பதால், இந்த வேலைக்குப் போகாமல் இருப்பதால், பொதுமக்கள் வெகு சிரமப்படுகிறார்கள். அப்படி மாற்றல் செய்யப்படும் போது, வேலைக்குச் சேராத டாக்டர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, வேலைநீக்கம் செயயும் அளவிற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** *கனம் உறுப்பினர் சொல்லுவதுபோல வேலைநீக்கம் செய்ய வேண்டிய நிலை இல்லை. மாற்றம் செய்யப்படும் போது, அவசியத்திற்கு லீவு எடுக்கிறார்கள். உறுப்பினர்களைப் போன்றவர்கள் ஒத்துழைத்தால் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று நம்புகிறேன்.*

## (iii) இராதாபுரம் துணை வட்டத்தில் பருவமழையின்மையும், கடன் வசதிகள் அளித்தலும்

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியம் வாய்ந்த காரியம் ஒன்றை மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

"திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் துணை வட்டத்தில் தொடர்ச்சியாக பருவ மழை தவறியதால் கிணறுகளில் தண்ணீர் இன்றி வறட்சியான நிலை ஏற்பட்டு வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளதால், அங்கு கிணறு வெட்டவும் மின்சார மோட்டார்கள் வாங்கவும் கடன் வழங்கவேண்டியது."

*THE HON. THIRU S. MADHAVAN: Prior to April 1968, loans for the sinking of new wells and for the installation of pumpsets were being given directly by the Government. But, from 1st April 1968 there is no direct lending by Government for this purpose and loans for the sinking of new wells and installation of pumpsets are given only through Land Mortgage Banks. The Agro-Industries Corporation is also supplementing the efforts of the Land Mortgage Banks in granting loans for purchase of pumpsets.

However, in respect of loans given by the Government for sinking of new wells prior to 1st April 1968, the Government will continue to give the second instalment.

As far as the current year is concerned, the position is that Radhapuram sub-taluk will be covered by the Nanguneri Co operative Land Mortgage Bank which proposes to issue loans for sinking of wells and installation of pumpsets to an extent of Rs. 15 lakhs. Agriculturists of Nanguneri taluk (including the agriculturists in the sub-taluk of Radhapuram) can avail of loan facilities from the Nanguneri Co-operative Land Mortgage Bank for sinking of new wells and insfallation of pumpsets. The following statement will show the amounts already disbursed by the Government towards the second instalment for new wells and the loans disbursed by the and Mortgage Banks from 1st April 1968 :—

| | *Allotment.* | *Amount disbursed.* |
|---|---|---|
| | RS. | RS. |
| 1. Amount disbursed by the Government as second instalment for New Well Subsidy Scheme. | 2,15,500 | 1,55,000 |
| 2. Loan disbursed by the Land Mortgage Banks from 1st April 1968 to 23rd August 1968. | .. | 72,000 |

In addition, 135 applications have been received from the ryots in Radhapuram sub-taluk and are under enquiry by the Nanguneri Co-operative Land Mortgage Bank and loans will be granted soon after these enquiries are over.

In switching over to the new scheme of grant of loans by Land Mortgage Banks and Agro-Industries Corporation, the Government have taken care to see that the loan applications from ryots will be



received and processed by the same Block agencies as before. The Government have also liberalised the conditions for the grant of loans by Land Mortgage Banks and present procedure for obtaining loans is given below :—

*Through Land Mortgage Banks*: Documents relating to the property to be mortgaged as security for the loan for the past 13 years should be produced by the applicant. He should initially pay the share capital of Rs. 10 and entrance fee of 0·50 paise along with his application. The Bank will obtain the encumbrance certificate for the previous 13 years and call for documents revealed in the encumbrance certificate if not already produced by the applicant. The Extension Officer (Co-operation) or the Co-operative Sub-Registrar (Land Mortgage Bank) will visit the land, value them and recommend the loan to the land Mortgage Bank which will obtain legal opinion as to soundness of the title to the property and if they found it acceptable and then the loan application will be sent to the Assistant Secretary to Central Land Mortgage Bank stationed at the District headquarters. He will after scrutiny of the title sanction the loan for disbursement.

*Through the Agro-Industries Corporation*: In the case of Agro-Industries Corporation also, the Block and the Revenue Staff are obtaining applications for sanction of loans for supply of oil engines and electric motor pumpsets and processing them. The Enquiry Officer (Block Development Officer) should issue the Solvency Certificates and the valuation of the land offered as security with reference to sale deeds obtained from the party in the adjoining lands. The Enquiry Officer should also recommend the amount to be granted as loan to the party. Then the staff of the Corporation visits various Blocks, scrutinises the loan applications and if the applications are in order, they are approved for sanction and supply order is placed with the concerned firm for the supply of the unit through the Panchayat Union Commissioner of the District concerned.

The North East-Monsoon had completely failed in the Radhapuram sub-taluk in Fasli 1377 and the adverse effects of this failure have been felt more in this sub-taluk than in any taluk of the district. There has, however, been some improvement in the seasonal conditions in Kar of Fasli 1378 in Radhapuram sub-taluk area and even here there has been only a very meagre supply of water in certain tanks in the area. Plantains, chillies and cholam are the standing crops and their condition is reported to be fair. Prospects of Kar crops also seem to be encouraging. Sanction of loans through Land Mortgage Banks and co-operatives is being pushed through to give relief to the ryots and help them in their agricultural operations.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, கடந்த ஐந்து மாதங்களாக யாதொரு கடனும் கொடுக்கப்படவில்லை. நில அடமான பாங்கிகளில் கடன் வாங்குவதில் சிரமங்கள் இருக்கின்றன. அந்தச் சிரமங்களை நிவர்த்திக்க, ஊராட்சி ஆணையர்கள் மூலம் கொடுக்கப்படும் கடன் மனுக்கள் எல்லாவற்றிற்கும் கடன் வழங்கவேண்டும் என்கிற உத்தரவாதத்தைக் கொடுத்து உத்தரவு போடுவார்களா ? மழை தவறியதால்

பழைய கிணறுகளை ஆழப்படுத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்குத் தனியாகப் பஞ்சாயத்து யூனியன் ஆணையர் மூலம் கடன் வழங்க உத்தரவு போடப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** கூட்டுறவு சங்கங்கள் நில அடமான பாங்கிகளிலிருந்து கடன் தருவதுபற்றிய விரவங்கள் தரப்பட்டிருக்கின்றன. இரண்டாவது இன்ஸ்டால்மெண்ட் பற்றிய தகவலும் கொடுத்திருக்கிறேன். இன்னும் மேலும் கடன்கள் பெறுவதற்கு ஆங்காங்கே உள்ள பி.டி.ஓ.க்களின் கீழே வேலை செய்யும் வி. எஸ். ஆர்., இ.ஓ. (கோவாபரேஷன்) இவர்களுக்கும் அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் அங்கத்தினருக்கே தெரியும். நில அடமான பாங்குகள் மூலமாக உடனடியாகக் கடன்கள் கொடுக்க எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது.

## 9. அவை முன்னவரின் விளக்க உரை.

### ஆபாச நடனங்கள்பற்றி திரு. கரு. சீமைச்சாமி கேட்ட துணை வினா குறித்து:

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே நான் இந்தப் பேரவையில் ஓர் அறிவிப்புச் செய்ய விரும்புகிறேன். இப்பேரவையில் 1968-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 19-ம் தேதி அன்று "ஆபாச நடனங்கள்" என்ற கேள்வியின்கீழ் திரு. சீமைச்சாமி அவர்கள் ஒரு உப கேள்வி போட்டார்கள். அவர் அதில், "இம்மாதிரி ஆபாச நடனங்கள் நடத்துவதில் ஒன்றும் தவறு இல்லை. சென்னை, கோவை போன்ற பெரிய நகரங்களில் இம்மாதிரி ஆபாச நடனங்கள் நடக்கின்றன என்று வட ஆர்க்காடு மாவட்ட கலெக்டர் அவர்கள் சொல்லியிருக்கிறார்களே, அது சம்பந்தமாக முதலமைச்சருடைய கருத்து என்ன ?" என்று கேட்டதற்கு முதல் அமைச்சர் அவர்கள், "வட ஆர்க்காடு மாவட்ட கலெக்டர் என்ன சொன்னார் என்பது எனக்குத் தெரியாது" என்று பதில் அளித்தார்கள். அதுபற்றி வட ஆர்க்காடு மாவட்ட கலெக்டர் அவர்கள்

To the best of my memory and knowledge I do not remember having made any such public statement nor has there been any enquiry from the Government or any other agency asking my views on this subject. I shall be extremely thankful if you will kindly request Thiru Cheemaichami the basis of his information.

என்பதாக சட்டப் பேரவைத் தலைவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இந்தக் கடிதம் மாண்புமிகு உறுப்பினர் சீமைச்சாமிக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவரிடம் இருந்து பதில் வந்ததும் மேல் நடவடிக்கை என்ன எடுக்கப்படும் என்று அறிவிக்க விரும்புகிறேன்.

## 10. அறிவிப்புகள்.

### (i) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாட்டு சட்டமன்ற மேலவையின் தலைவரிடமிருந்து கிடைத்த கீழ்க்கண்ட செய்தியை நான் பேரவைக்குத் தெரிவிக்கின்றேன்.

"திரு. கே. அறிவழகனின் உறுப்பினர் பதவிக் காலம் முடிவடைந்து விட்டதாலும், திரு. ஆர். எம். சேஷாத்திரி தேர்ந்தெடுக்கப்பட்டதை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டதாலும், 1968–69-ம் ஆண்டுக்கான தமிழ்நாட்டுச் சட்டப்பேரவை சட்டவிதிகள் ஆய்வுக் குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு கீழ்க்கண்ட இரண்டு உறுப்பினர்களை இந்த அவை நியமிக்கிறது.

1. திரு. டி. கே. பொன்னுவேலு.
2. திரு. டி. சந்தோஷம்."



### (ii) மேலவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 21/68) 1968-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 22-ம் நாளன்று சட்ட மன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிந்துரை எதும் செய்யாமல் நிறைவேற்றப்பட்டது என்று சட்ட மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது.

மேலும், கீழ்க்கண்ட மசோதாக்கள் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிந்துரை எதும் செய்யாமல் நிறைவேற்றப்பட்டது என்றும் சட்ட மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது.

1. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 8/68).
2. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 9/68).
3. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு இனும்கள் (தீர்வைவிதித்தல்) (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 12/68).

கீழ்க்கண்ட மசோதாக்கள் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு திருத்தம் எதுமின்றி, நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவென்றும் சட்ட மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது.—

1. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (எடுத்துவிடுதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 10/68).
2. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (சிறப்பு விதித்துறை) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 17/68).
3. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு ஒருவருக்கே உரிய எஸ்டேட்டுகளின் கிராமப் பணியும், தமிழ்நாடு பரம்பரைப் பதவிகளையும் (ரத்து செய்யும்) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 16/68).

கீழ்க்கண்ட மசோதாக்கள் 1968-ம் ஆண்டு ஆகஸ்டு 28-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு திருத்தம் எதுமின்றி, நிறைவேற்றப்பட்டிருக்கிறனவென்றும், சட்டமேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது:—

1. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு கூட்டுறவு நில அடமான வங்கிகள் (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண 11/68).
2. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 13/68).
3. 1968-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண 14/68).
4. 1968-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 15/68).
5. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொதுப் பொறுப்பு நிறுவனங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்த மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 19/68).
6. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு இந்து சமயஅறக்கட்டளைகள் (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 20/68).
7. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நகராட்சி அதிகார மன்றங்கள் (பதவிக்காலம்—மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்) திருத்த மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 22/68).

**11. தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் 1968–69-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.**

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, நெய்வேலி அனல் மின்சாரத் திட்டத்தினிடம் இருந்து பெறப்படுகிற மின்சாரத்திற்கு இதுவரை இருந்த விலையை மாற்றி—நம்முது முதல் அமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும், மின்சார வாரியமும் பாராட்டத்தக்க முறையில் பேச்சுவார்த்தை நடத்தி அந்த முயற்சியின் பயனாக இப்போது யூனிட் ஒன்றுக்கு 5·9 காசு என்று நிர்ணயித்திருப்பதை நான் வரவேற்கிறேன். மின்சார வாரியத்திற்கு நேர இருந்த பணச் செலவு ஏராளமாக இதன் மூலம் குறைந்திருப்பதற்காக பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். எழுபதாயிரத்திற்கும் மேல் இருப்பார்கள். ஆகவே மின்சார வாரியம் அந்தத் தொழிலாளர்களிடத்தில் அக்கறை செலுத்தவேண்டிய கடமை பெற்றிருக்கிறது. மின்சாரம் ஆண்டு முழுவதும் அடிப்படைத் தேவையானது. ஆதலால் அந்தத் தொழிலாளர்களிடத்தில் விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அங்கே அந்தத் தொழிலாளர்களிடத்தில் அக்கறை செலுத்துகின்ற தொழிற்சங்கம் ஒன்று இருக்கிறது. அதிகத் தொழிலாளர்களை உறுப்பினராகப் பெறாத சங்கமும் ஒன்று இருக்கிறது. தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் கலந்து பேசுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சங்கம் அழைக்கப்படுகிறது. எதோ ஒரு காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்ற காரணத்தினால் இன்றைக்கு அதில் பெரும்பான்மையானவர்கள் உறுப்பினர்களாக இல்லாதபோது அதை அழைத்துப் பேசுவது சரியல்ல. அதன் காரணமாக இன்றைக்குத் தொழிலாளர்களுடைய பிரச்சினையைக் கவனிக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகையால் இன்றைக்கு எந்தத் தொழிற்சங்கத்தை அங்கீகரிப்பது, எதில் அதிக உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய ரகசிய வாக்கெடுப்பு நடத்தி—அந்தச் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும். அப்படி அங்கீகரிக்கப்படுகிற சங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி, தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். பல்வேறு இன்னல்களுக்கிடையே பல்லாண்டுகளாகப் பணிபுரிந்து வருகிறவர்கள் வொர்க் சார்ஜ்டு என்ற தரப்பிலேயே நிரந்தரமாக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆப்ரேஷன் அண்டு மெயின்டனன்ஸ் பிரிவில் பணியாற்றக்கூடிய தற்காலிகமானவர்களைக் கூட நேரடித் தேர்வு மூலம் நிரந்தரமாக்குகிற சூழ்நிலை இருக்கிறது. அணைக்கட்டுத் திட்டப் பகுதியில் பணிபுரியக்கூடியவர்களின் நிலைமைதான் நிரந்தரமற்ற தன்மையில் இருக்கிறது. இந்த அரசும் மின்சார வாரியமும் உடனடியாக அணைக்கட்டுப் பகுதியில் பல்லாண்டுகளாக வேலை செய்யக்கூடியவர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டும் அல்ல. இப்போது அவர்களுக்கு நிரந்தரமாகக் கொடுக்கப்படுகிற சம்பளத்தைப் போன்று இல்லாமல் அவர்களுக்கும் 'இன்க்ரிமென்ட்' தருவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இப்போது வேலையில் இருந்து நீக்கப்படுவதற்கு, அல்லது வேலை உயர்வு கொடுப்பதற்கு ஒரு பொதுமையான சீனியாரிடி பட்டியல் தயாரிக்கப்படவில்லை. ஆகையால் கட்டுமானத்துறையில் பணியாற்றுகிற தொழிலாளர்கள் அத்தனை பேர்களுக்கும் அவரவர்களுடைய தகுதிக்கேற்றவாறு பொது முதன்மைப் பட்டியலைத் தயாரித்து பதவி



நீக்கம் என்றால் யார் கீழே இருக்கிறார்களோ அவர்களை நீக்குவது, பதவி உயர்வு என்றால் யார் மேலாக இருக்கிறார்களோ அவர்களுக்கு உயர்வு கொடுப்பது என்பதாக முறையை ஏற்படுத்த ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல ஆப்பரேஷன் அண்டு மெயின்டனன்ஸ் பிரிவில் வேலை காலி வருகிறபோது, இங்கே முதன்மையாக உள்ளவர்கள் அங்கே சேர்த்துக் கொள்ள வழிசெய்யப்பட வேண்டும். பரம்பிகுளம், ஆளியாறு திட்டப் பகுதியில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு இன்னும் கூலி நிர்ணயம் மாற்றப்படாமல் இருக்கிறது. இந்த நல்ல காரியங்களை எல்லாம் உடனடியாகச் செய்வதன் மூலம்தான் தொழிலாளர்களிடத்து மகிழ்ச்சியை ஏற்படுத்த முடியும். ஆகையால் தொழிலாளர்களுக்குப் பல நன்மைகளைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் இருந்தால் போதாது, காரியத்தில் செய்து முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அணைக்கட்டுப் பகுதிகளில் கிராமங்கள் கிடையாது, நகரங்கள் கிடையாது. ஆகவே தொழிலாளர்களுக்கு ஆங்காங்கே வீடுகள் கட்டித் தரவேண்டும். அப்போதுதான் அவர்களிடம் முழுநேர வேலையைப் பெற வாய்ப்பு இருக்கும். ஆகையால் இதில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மின்சார போர்டிலே பணியாற்றும் என்ஜினியர்களைப் பொறுத்த விஷயம். இப்போது கேரள மாநிலத்தில் என்ஜினியர்களுக்குச் சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. தங்களுக்கும் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடன் கலந்துபேசி அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய வேலைப்பளு போன்ற பிரச்சினைகளையும் ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் மின்சார வாரியத்தில் ஸ்டோர் கீப்பர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து முதல் கிரேடுகளாக மாற்றும் சமயத்தில் முதன்மை பட்டியல் முறை பின்பற்றப்படவில்லை. அவர்களுடைய தகுதி, திறமை மட்டும் பார்க்காமல், அவர்களுடைய முதன்மை, சர்வீஸ் ஆகியவைகளும் பார்க்கப்பட்டு பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும். ஸ்டோர் கீப்பர்களின் முன்னேற்றத்திற்கான வழிவகைகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் நெருக்கடிகள் ஏற்படுகின்றன. இதில் நாம் ஒரு தனிக் கவனம் செலுத்த வேண்டும். எந்தப் பகுதிகளுக்கும் 10 சதவீதம் ரிட்டர்ன் இருந்தால்தான் தரப்பட வேண்டும் என்ற விதி இருக்கிறது. எல்லா இடங்களுக்கும் இந்த விதியை நாம் பின்பற்ற முடியாது. பின்தங்கிய பகுதிகளுக்கு இந்த விதியைச் சற்று தளர்த்தலாமா என்ற யோசனை சென்ற ஆண்டில் நடந்த ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றது. நாம் எல்லா இடங்களுக்கும் நடைமுறைவிதிகளை அனுசரிப்பதில்லை. 10 சதவீதம் ரிட்டர்ன் இருக்கிறதா, இல்லையா என்று கூட சில இடங்களில் பார்ப்பதில்லை. இந்தத் துறையினுடைய மொத்த வருவாய் இவ்வளவு, செலவு இவ்வளவு என்று பார்த்து ஒவ்வொரு திட்டத்திற்கும் 10 சதவீதம் ரிட்டர்ன் வருகிறதா என்று கணக்கு வைத்துக்கொள்வதும் இல்லை. விவசாயத்திற்காக எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள், தொழிலாளர்களுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்ற அடிப்படையிலே கணக்கு வைத்து பின் தங்கிய கிராமங்களுக்கு மின்சார வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்னேறிய கிராமங்களுக்கு ஏற்கெனவே மின்சாரம் வழங்கப்பட்டுவிட்டது. இப்போது பின்தங்கிய கிராமங்களில் மின்சாரம் வழங்கப்பட வேண்டும். பத்து சதவீத ரிட்டர்ன் விதியை வைத்துக்கொண்டு இப்பகுதிகளில் மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லையானால், அப்பகுதிகளின் முன்னேற்றம் குறைந்துவிடும். ஆகவே இந்த விதியைச் சற்று தளர்த்துவது நன்மை தரும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வாரியத்தில் ஏராளமான அளவில் பொருள்கள் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் பல சங்கடங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஒரு தனி மனிதருடைய அதிகாரத்தின்கீழ் வருவதனால் நாம் எந்த நேரத்திலும் விழிப்புடன் இருக்க வேண்டும். பொருள்களை வாங்கி சேகரித்து வைப்பதற்காக டெண்டர் கமிட்டி, பர்சேஸ் கமிட்டி போன்றவைகளை அமைக்க வேண்டுமென்று பேசப்பட்டு வருகிறது. இது நியாயமான பலன் தரும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே அத்தகைய கமிட்டியை அமைத்து நல்லவர்களை அதில் உறுப்பினர்களாகப் போட்டு, குறைந்த விலையில் பொருள்களை வாங்க வழி செய்யலாம். கடந்த பத்து, பதினைந்து ஆண்டுகளில் சுமார் 20 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் பண்டகசாலைகளில் தேங்கிக் கிடக்கின்றன. நம்முடைய மூலதனம் பண்டகசாலைகளில் பொருள்களாக தேங்கிக் கிடக்கிறது. இதற்காக ஒரு குழுவை நியமித்து ஓரிரு ஆண்டுகளில் ஸ்டாக் கிளீயரன்ஸ் செய்ய வேண்டும்.

இப்போது விவசாயத்தில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மினிமம் சார்ஜ் போடப்படுகிறது. (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தலைவர்கள் பேச வேண்டியிருப்பதால் மற்ற உறுப்பினர்கள் தங்கள் பேச்சை 12 மணிக்குள் முடித்துவிட வேண்டும். பேசுவதற்கு இன்னும் 6 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் ஐந்து நிமிஷங்களில் தன்னுடைய பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. எஸ் இராமச்சந்திரன்:** இதைப்பற்றி ஏற்கெனவே முன்னாள் தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

To facilitate intensive rural electrification, the Committee recommends the possibility of getting loans interest-free for the first five years may be explored, advantage may be taken of the loan assistance, if any, offered by the Life Insurance Corporation, and Board should consider whether the minimum guarantee levied by them on agricultural consumption can be reduced or abolished.

ஏனென்றால் விவசாயத்தில் அதிக வருவாய் வருவதில்லையென்று அறிகிறேன். விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்காக ஆகும் செலவு, வருவாயை விட அதிகமாக இருப்பதால் இந்த மினிமம் சார்ஜைகூட தள்ளுபடி செய்துவிடலாம். தற்போது மின்சார வாரியம் பல வல்லுநர்களைப் பெற்றிருக்கிறது. அவர்களுடைய நல்ல ஒத்துழைப்பு இந்த மின்சார வாரியத்திற்குக் கிடைக்க வேண்டும். ஒரு டிசப்ளின் இருந்தால்தான் காரியங்கள் ஆற்ற முடியும். அதிகாரிகள் ஊக்கத்துடனும், ஆக்கத்துடனும் பணியாற்றினால்தான் கீழே இருக்கின்ற அதிகாரிகளும் நல்ல முறையில் பணியாற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் ஊரிலே குடி தண்ணீர்த் திட்டத்திற்காக இரண்டு மாதங்களுக்கு முன்னதாக ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. கீழே இருக்கின்ற அதிகாரிகளால் ஒழுங்குமுறை பின்பற்றப்படாததால் நீண்ட காலதாமதமாகிறது. கீழே இருக்கின்ற அதிகாரிகள் நல்ல முறைகளைக் கடைப்பிடிப்பதற்கு வேண்டிய ஊக்கத்தையும், முயற்சியையும் தர பாடுபட வேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வை. சுவாமிநாதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மின்சார வாரியம் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டும் நல்ல முறையில் தொண்டாற்றி வருகிறது. அதற்காக நாம் உண்மையிலேயே போற்றிப் புகழ வேண்டும், பாராட்ட வேண்டும், வாழ்த்த வேண்டும். சமீபத்தில் குஜராத் சட்டசபைக் கூட்டத்திலேகூட நமது மின்சார வாரியத்தின் சேவையைப் போற்றிப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். மின்சார



வாரியத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு, இருக்கக் கூடிய சில பிரச்சினைகளை அரசாங்கம் உடனடியாகத் தீர்க்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, 1957-லிருந்து 1963-ம் ஆண்டுக் காலத்திற்கான போனஸ் தகராறுகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருந்து வருகின்றன. இதைத் தீர்க்க உடனடியாகத் தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். பதவி உயர்வு அளிக்கும்போது முக்கியமாக அனுபவ அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும். தினப்படியாக தற்போது $1\frac{1}{4}$ ரூபாய் என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. இப்போதிருக்கிற விலைவாசிகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தொகையைச் சற்று அதிகப்படுத்தித் தர வேண்டும். மற்ற மாநிலங்களில் உள்ள பணியாளர்களுக்கு ஊதியமும், தினப்படியும் நம் மாநிலத்தில் இருப்பதைவிட அதிகமாக இருக்கிறது. அந்த அளவுக்கு நம்முடைய தொழிலாளர்களுக்கு நாமும் உயர்த்தித் தர வேண்டும். மேலும் இரண்டு வருடங்களுக்கு மேலாக வேலை செய்து வந்த போதிலும் அவர்கள் பெர்மனென்ட் ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். கூடிய விரைவில் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை நிரந்தர உத்தரவாதம் அளிக்க வேண்டும். மேலும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, கல்வி வசதி போன்ற எல்லா சலுகைகளையும் கொடுத்து வந்தால், இந்த வாரியத்தில் உள்ள பணியாளர்கள் சிறப்புடனும், திறமையுடனும் பணியாற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் வரைக்கும் மின்சாரத்தைப் பெற நாம் முயற்சி செய்ய வேண்டும். அது நீர்மின்சாரமாக இருந்தாலும் சரி அனல் மின்சாரமாக இருந்தாலும் சரி, அணு மின்சாரமாக இருந்தாலும் சரி அவைகளை எந்த அளவுக்குப் பயன்படுத்த முடியுமோ, அதிகப்படுத்த முடியுமோ, அதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். மைசூர் அரசாங்கத்துடன் கலந்து பேசி ஹொகனேக்கல் திட்டத்தை சீக்கிரமாகச் செயல் படுத்த வேண்டும். திருவெறும்பூரில் எலக்ட்ரானிக் தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். அரசாங்கம் இதைப் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். எங்கள் ஜில்லாவைப் பொறுத்தமட்டில் இரண்டு பிரிவுகளாக வேலை செய்கிறார்கள். தென் மதராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பொரேஷன் என்றும் ஸ்டேட் எலக்ட்ரிசிடி போர்டு என்றும் இரண்டு பிரிவுகள் வேலை செய்து வருகின்றன. அதன் காரணமாக பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட இடம் தென் மதராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பொரேஷன் எல்லையில் உள்ளதா? அல்லது ஸ்டேட் எலக்ட்ரிசிடி போர்டைச் சேர்ந்த பகுதியா என்ற பிரச்சினைகள் எழுகின்றன. தென் மதராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பொரேஷனிடம் அதிகஅளவு மின்சாரம் கேட்டால், அவர்கள் தங்கள் குறைபாடுகளை எடுத்துச் சொல்கிறார்கள். அவர்களைக் கேட்டால் எங்களுக்குப் போதிய நிதி வசதி இல்லை, நிதி வசதி கொடுத்தால் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஒரு வருஷத்திற்கு 20 லட்சம் ரூபாய் மதிப்புள்ள வேலைகளைத்தான் அந்த கார்ப்பொரேஷன் செய்கிறது. திருச்சி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய் தேவை என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தால் அவ்வளவு தொகை கொடுக்க முடியாவிட்டாலும் கூட இந்த ஆண்டுக்கு 50 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று முறையிட்டிருக்கிறார்கள். அரசாங்கம் ஓரளவு பணம் கொடுத்து உதவினால் ஒருசில கிராமங்களுக்கு மின்வசதி கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். தற்போது மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்து வருகிறது. அந்தத் தொகையிலே ஒரு சிறு தொகையை தனியார் ஸ்தாபனங்களுக்குக் கொடுத்து உதவினால் சில கிராமங்களுக்கு மின்சாரவசதி ஏற்படும். அரசாங்கத்திற்கு இதில் ஒன்றும் சிக்கல் இல்லை. மேலும், தென் மதராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பொரேஷனை

[திரு. வை. சுவாமிநாதன்] [1968 ஆகஸ்ட் 31

அரசாங்கம் எடுத்துக்கொள்ளப்போகிறது என்று பேசப்பட்டு வருகிறது. அப்படி அரசாங்கம் மேற்கொள்ளப் போகிறதா, அல்லது இந்தத் திட்டத்தை மேலும் ஒருசில ஆண்டுகளுக்கு தள்ளி வைக்கப்போகிறதா? இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாத காரணத்தினால் அந்தக் கார்ப்பொரேஷன் மேற் கொண்டு வேலைகளைச் செய்வதில் தயக்கம் காட்டுகிறது. அவர்களைக் கேட்டால் அரசாங்கம்தான் எடுத்துக்கொள்ளப் போகிறதே, என்று சொல் கிறார்கள் இன்னும் சில இடங்களில் டிரான்ஸ்பார்மர்களை மாற்ற வேண்டியதாக இருக்கிறது. அவர்களைக் கேட்டால் நாங்கள் எதற்காக புதியதாக மாற்ற வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அர சாங்கம் திட்டவட்டமாக தென் மதராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பொரேஷனை எடுத்துக்கொள்ளப் போகிறதா, அல்லது ஒரு ஐந்தாண்டுகளுக்கு எடுத் துக் கொள்ளவில்லை யென்பதையாவது அறிவித்துவிடவேண்டும். அப்படி அறிவித்தோமானால் அந்தப் பகுதிகளிலே நல்ல முறையிலே மின்சாரம் வழங்குவதற்கான வாய்ப்புக்களும், சந்தர்ப்பங்களும் ஏற்படும். ஸ்டேட் எலக்ட்ரிசிடி போர்டு எடுத்துக்கொண்ட வேலைகளைப் பொறுத்தவரையில் பணம்கட்டி வருடக்கணக்கில் ஆகியும், மின்சாரம் கிடைக்கவில்லை குறிப்பாக என்னுடைய பகுதியில் பாகனூர், சத்திரப்பட்டி, பூலாங்குளத்துப்பட்டி போன்ற இடங்களில் உள்ளவர்கள் 5,000 ரூபாய் பணத்தைக் கட்டியிருக்கிறார் கள். இன்னும் அவர்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. அதைக் குறித்து சென்ற முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். 5 வருடங்கள் ஆகியும்கூட ஒர்க் ஆர்டர் கொடுக்கவில்லை. வேலைகள் தொடங்கப்படவில்லை. பணம் கட்டிய கிராமங்களில் மின்சார வேலைகளைச் செய்ய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சில இடங்களில் ஒர்க் ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேலை பாதியிலே நிற்கிறது. கேட்டால் சாமான்கள் சப்ளை சரியாக இல்லை, குறுகிய காலத்திலே வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அப்படியில்லாமல் எந்த இடத்திலே ஒர்க் ஆர்டர் கொடுத்தாலும் உடனடி யாக வேலைகளைச் செய்வதற்கேற்ற முறையில் வேண்டிய சாமான்களை துரிதமாகக் கொடுத்தால்தான் வேலைகளைச் செய்யமுடியும். அந்தச் சாமான்களையெல்லாம் மின்சார வாரியமே உற்பத்திசெய்தால் சப்ளை செய்வதற்கு சௌகரியமாக இருக்கும்.

அதேபோல் தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் கிராஷ் புரகிராம் போட்டு 25 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் 900 பம்புசெட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல் கிராஷ் புரகிராம் திருச்சி ஜில்லாவிற்கும் அமலாக்கினால் பல காரியங் களுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்த வாய்ப்பாக இருக்கும்.

மின்சார வாரியத்திலே மின்சார இலாகா, ரெவின்யூ இலாகா விவ சாய இலாகா இவை மூன்றையும் ஒன்றாக இணைத்து ஒருங்கமிட்டி அமைத்து வேலைசெய்தால் மின்சார வசதிகள் துரிதமாகப் பெருவதற்கு வசதியிருக்கும். ரெவின்யூ இலாகா தனியாக இருப்பதால் நிலங்களைப் பொறுத்து இது பட்டா நிலம்அல்ல புறம்போக்கு நிலமல்ல என்றெல் லாம் சொல்லிவிடுகிறார்கள். அதைபோல் விவசாய இலாகாவும் நிலங்கள் விவசாயத்திற்கு லாயக்கற்றவை என்று சொல்லிவிடுகிறார்கள். மின்சார இலாகாவும் மின்சார லைன் அருகில் இல்லை ஆகையால் செய்யமுடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே மூன்று இலாக்காக்களையும் ஒன்றாக இணைத்து வேலை செய்வோமானால் மின்சாரம் கிடைக்க சீக்கிரமாகக் கிடைக்க வசதியாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு குறைகளை யெல்லாம் நிவர்த்திக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக் களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த நிதி நிலை அறிக்கை விவாதத்தின்பேரிலே அங்கத்தினர்கள் எல்லாம் சொன்ன கருத்துக்களை எடுத்து என்ன நடவடிக்கைகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக் கின்றன என்று காட்டுவதற்காக ஒரு செயல் குறிப்பு இந்த ஆண்டு அவை யிலே வைக்கப்பட்டிருக்கிறது, அது பாராட்டுக்குரியதாகும். அதற்காக



1968 ஆகஸ்ட் 31] [திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டி, பொறுப்பேற்று இருக்கக்கூடிய வாரியத் தலைவர்களையும் பாராட்டிக் கொள்கிறேன். இந்த முறையை மற்றத் துறையினரும் அமைச்சர்களும் கருத்துக்களையெல்லாம் மனதிலே கொண்டு எந்த எந்த முறையிலே அவையெல்லாம் சாத்தியம் அல்லது சாத்தியம் அல்ல என்பதைப் பொதுவாகக் குறிப்பிட்டு இத்தகைய செயற் குறிப்புகளை வைத்தால் நலமாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்திலே பேசிய பல உறுப்பினர்கள் பொதுவான ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதற்கு முன்பு சொன்ன கருத்தைத்தான் திரும்பச் சொல்வதை நான் காணகிறேன். கிராமப்புறங்களிலும், நகர்ப் புறங்களிலும் தெருவிளக்குகள் தீய்ந்துபோனால் அல்லது கெட்டுப்போனால் அதை மாற்றுவதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. இந்த நிலையைப் பற்றி முன்பு விளக்கியபொழுது அந்த விவாதத்திற்கு முன்பு பதிலளித்து அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது சப்ளை செய்துகொண்டிருந்த கம்பெனி திருப்திகரமாகச் சப்ளை செய்யவில்லை, எனவே வேறு கம்பெனியிட மிருந்து பல்புகளை வாங்குவதற்கு பேச்சுவார்த்தை நடந்துவருகிறது என்றும், முடிந்தவுடன் இந்தக் கஷ்டம் இருக்காது என்றும் சொன்னார்கள். அவர் கள் அப்படிக் குறிப்பிட்டு மூன்று மாதங்களுக்கு மேல் இருக்கும் என்று நினைக்கிறேன். இருப்பினும் கூட இந்த மன்றத்தில் அந்தக்குறை பற்றி பேசப்படுவதற்குக் காரணம் என்னவென்றால் அந்தக் குறை இன்னும் முழுமையாக நிவர்த்திக்கப்படவில்லையென்று தெரிகிறது. முன்னால் இருந்ததைவிட ஓரளவுக்கு முன்னேற்றம் இருப்பதை நானும் உணர்ந் திருக்கிறேன். ஆனால் முழுவதுமாக இந்தக் குறை நிவர்த்திக்கப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அதற்குச் சில காரணங்கள் சொல்லப் படுகின்றன. பல்புகளுக்கு வேண்டிய குமிழ்கள் கிடைப்பதிலே இறக்கு மதியிலே காலதாமதம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதனால் திருகு பல்புகளை விட்டுவிட்டு சாதாரண பல்புகளைப் போடுவதற்கு உத்திர வளிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சாதாரண பல்புகளிலே இடைஞ்சல் என்னவென்றால் திருடுவதற்கு எளி தாக அவை இருப்பதால் இந்த அரசாங்கம் சம்மதத்தை அளிக்காமல் இருந்தது. இடையிலே இந்த இடைஞ்சல் காரணமாக இந்த சாதாரண பல்புகளைப் போடுவதற்கு அங்கீகரித்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஒரு காரணத்திற்காக இடைஞ்சல் இருக்கிறது என்றால் ஒரு வருடத்திற்குள் இந்த நிலைமை இருக்காது என்று அரசாங்கம் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும். திருகு பல்புகளைப் போடுவற்குப் பதிலாக டியூப் லைட்டுகளைப் போட்டால் நல்லது, திருடு போவதற்கு வசதியாக இருக்காது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(திரு. வை. சுவாமிநாதன் தலைமை)

கிராமங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு பம்புசெட்டுகளுக்கு கொடுக்கக்கூடிய கனெக்ஷன்பற்றி அதிகமாகப் பேசப்பட்டது. இரண்டு மூன்று வருடங்கள் இதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார் கள். என்னுடைய பகுதியிலே கூட அருப்புக்கோட்டைத் தாலுக்காவைப் பொறுத்தவரையில் பாலவநத்தம் கிராமத்தில் 2, 3 வருடங்களாக கனெக்ஷன் கொடுக்கப்படாத நிலைமைதான் இருக்கிறது. இதைப் போக்கு வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று தெளிவாக இதிலே குறிப்பிடப்படவில்லை. நான் அதற்கு ஒரு யோசனை யைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எந்த எந்தப் பகுதி களிலே மின்சாரம் கிடைக்கும் என்பது பற்றி பொதுமக்களுக்கு தெரியாது. எந்தக் காலங்களிலே எந்தப் பகுதியிலே மின்சாரம் கொடுக்கலாம் என்பது மின்சார வாரியத்திற்குத் தெரியும். ஆகவே லோன் கொடுக்கின்ற பொறுப்பையும் மின்சார வாரியமே ஏற்றுக்கொள்ளலாம். ஒரு வருடத் திற்குப் பிறகு, இரண்டு வருடங்களுக்குப் பிறகுதான் கனெக்ஷன் கொடுக்க முடியும் என்று தெரிந்தால் அப்பொழுது கடன் கொடுக்கலாம். கடன் கொடுத்து அதற்குப் பிறகு வருடக்கணக்கில் காத்திருக்கவேண்டிய

அவசியம் இல்லை. ஆகையினாலே பிளாக்கிலிருந்து இந்தப் பொறுப்பை மின்சார வாரியம் ஏற்றுக்கொண்டால் நலமாக இருக்கும் என்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதற்கடுத்தபடியாக, லைட்டுகளை மின்சார வாரியமே புரடக்ஷன் செய்வதை ஏற்றுக்கொள்ளலாம் என்று சட்டசபைக் கூட்டத்திலே ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அது சாத்தியமல்ல என்று மின்சார வாரியம் பதில் கொடுத்திருக்கிறது. ஆனால் என்ன காரணத்தால் சாத்தியமில்லை, என்ன என்ன காரணங்களினால் அது சாத்தியமில்லை என்பதை தெரிவிக்கவில்லை. ஆகவே அதையும் மின்சார வாரியமே எடுத்துக் கொண்டுவிட்டால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. பா. தம்பி நாயக்கர் :** தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் பேரில் நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மின்சார விஸ்தரிப்பைப் பொறுத்தவரை நம்முடைய மாநிலம் வெகுவாக முன்னேறியிருக்கிறது என்று சொன்னாலும் கூட, என்னுடைய தொகுதியிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே எந்த நிலைமை இருந்ததோ அதை விட அதிகமான பகுதிகளுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, சானார்பட்டி யூனியனில் 22 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவற்றில் எட்டு பஞ்சாயத்துக்களில் உள்ள சில ஊர்களில் மட்டுந்தான் மின்வசதி செய்யப்பட்டிருக்கிறது. தெருக்களில் போடப்பட்டிருக்கும் மின்விளக்குகள் சரியாக எரிவதில்லை. பல்புகள் தீய்ந்து போய்விடுகின்றன. வேறு பல்புகள் ஏன் உடனடியாக மாற்றப்படவில்லை என்று கேட்டால் பல்புகள் கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். அவை மறை போட்ட பல்புகளாக இருப்பதால் கிடைக்கவில்லை என்ற காரணத்தைக் கூறுகிறார்கள். அதற்குப் பதிலாக பின் போட்ட பல்புகளைப் போட ஏற்பாடு செய்தால் அது நிறைய கிடைக்கின்ற காரணத்தால் உடனடியாக மாற்றுவதற்கு ஏதுவாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள் பம்பு செட்டுகள் வைத்து பல மாதங்கள் ஆனாலும் கூட காலாகாலத்தில் இணைப்பு கொடுப்பதில்லை. இதனால் விவசாயம் பாதிக்கப்படுவதோடு விவசாயிகளும் பாதிக்கப்படுகிறார்கள். பஞ்சாயத்துக்களில் போடப்பட்டிருக்கும் தெரு விளக்குகள் பல நாட்கள் எரியாவிட்டாலும் கூட, முழுத்தொகையும் வசூல் செய்து விடுகிறார்கள். அதற்கு மாறாக எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ அதற்கு மட்டுமே பணத்தை வசூல் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மின்சார கம்பங்களையும் பல்புகளையும் வாரியமே தயாரித்தால் கூட நலமாக இருக்கும். மின்சாரக் கட்டணம் மற்ற மாநிலங்களைக்காட்டிலும் நம்முடைய மாநிலத்தில் அதிகம் என்று சொல்லப்படுகிறது. அதைப் பரிசீலித்து கட்டணத்தைக் குறைப்பது பற்றிப் பரிசீலிக்கவேண்டும். விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கும்போது மிகக் குறைந்த கட்டணத்தை வசூலிக்க ஏற்பாடு செய்யவேண்டும். சில பஞ்சாயத்துக்களில் நிதி நிலை சரியில்லாத காரணத்தால் பணம் கட்டவில்லை. அதனால் பல கிராமங்களில் மின்சார விளக்கு போட முடியவில்லை ஆகவே, பஞ்சாயத்து யூனியன் மூலம் பணத்தைக் கட்டிவிட்டு மின்சார இணைப்பு வரும்போது அந்தப் பணத்தை பஞ்சாயத்து யூனியன்கள் ஈடு செய்துகொள்ளுவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மின்சார வாரியத்தில் வேலை செய்யக்கூடிய ஊழியர்கள் மலைகளிலும் காடுகளிலும் பல கஷ்டங்களுக்கு உள்ளாகி வேலை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் தற்





போது வேலையில்லாது இருக்கின்ற நிலையில் புதிய திட்டங்களை மேற்கொள்ளும்போது அதிலே அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டும். கோதையாறு, ஆழியாறு திட்டத்தில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை அனுதாபத்துடன் கவனித்து மீண்டும் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார இணைப்பு கிடைப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படுவதில் பல ஊழல்கள் இருப்பதாகப் புகார்கள் கூறப்படுகின்றன. பொதுவாக, மோட்டார் விற்கக்கூடியவர்கள் பம்ப் செட்டுக்கு தங்களுடைய மோட்டாரை வாங்கிக் கொண்டால் உடனடியாக மின்சார இணைப்பை வாங்கிக் கொடுக்கிறோம் என்று கூறி விற்கிறார்கள். அதன்படி மின்சார இணைப்பையும் பெற்றுத் தருகிறார்கள். ஆனால் அதற்கும் முன்னால் இணைப்பு வேண்டுமென்று கேட்டவர்களுக்குக் கிடைக்காத நிலை இருக்கிறது. இந்த மாதிரித் தவறுகளுக்கு இடமளிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களில் விளக்கு போடுவதைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். அந்தப் பொறுப்பு தனியாரிடத்தில் இருக்கின்ற காரணத்தால் வருமான அடிப்படையில்தான் மின்சாரம் விஸ்தரிக்கப்படுகிறது. தற்போது அது சர்க்கார் வசம் வந்த பிறகும் இந்த நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. நான் இருக்கக்கூடிய பஞ்சாயத்தில் இரண்டு வருஷத்திற்கு முன்னதாக அரிசன தெருக்களுக்கு விளக்கு போட்டுக் கொடுக்க வேண்டுமென்று எழுதியும், இன்றைய தேதி வரை எந்த விதமான பதிலும் வரவில்லை. இந்த அரசாவது தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் ஒளி விளக்குகள் அமைத்துக் கொடுப்பதிலே முதலிடம் கொடுத்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தஞ்சை மாவட்டம் உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் ஈடுபட்டிருக்கக்கூடிய மாவட்டம். தற்போது மேட்டூர் அணையை நம்ப முடியாத நிலை இருக்கிறது. வறட்சியின் காரணமாக அங்கு விவசாயம் நடக்கவில்லை. அரசாங்கத்தினர் ஆழ்கிணறுகளை வெட்டி பம்ப் செட் வைத்து தண்ணீரை எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். விவசாயிகள் மேட்டூர் அணையில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்ற விவரத்தைப் பத்திரிக்கையில் பார்த்த வண்ணம் இருக்கிறார்கள். அங்கே தண்ணீர் இல்லாத நிலைமையில் பம்ப் செட்டுகளுக்கு உடனடியாக மின்சார இணைப்பு கொடுப்பதற்கு அரசாங்கம் துரிதமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் நடவு நடுவதற்கு உதவிகரமாக இருக்கும்.

மின்சார வாரியத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் 65,000 பேர் இருக்கிறார்கள். அதிலே 30,000 பேர் நிரந்தரமற்றவர்களாக, தினக் கூலிகளாக இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமான தொழிலாளர்களாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். மின்சார வாரியத்திற்குத் தேவையான மின் கம்பங்களை, சிமெண்ட் போஸ்டுகளைத் தயார் செய்யும்படியான பொறுப்பை மின்சார வாரியமே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒப்பந்தக்காரரிடம் இருந்து வாங்கக்கூடாது. அவ்வாறு அதை மின்சார வாரியமே ஏற்று நடத்தினால் வேலை இழந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடியும்.

மின்சார வாரியத்தில் தரைப்படம் வரையக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கணக்காயருக்குக் கொடுக்கப்படுகிற அதே கிரேடு தான் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

மின்சார திட்டங்களை நிறைவேற்றும்போது சில ஊழல்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. அந்த மாதிரி ஊழல்கள் ஏற்பட இடம் தரக் கூடாது. வாடகைக்காக "தனிப்பட்டவர்களுடைய இடம் வாங்கப்படுகிறது.

அதோடு ஃபாரஸ்டு இலாகாவுக்குச் சொந்தமான இடமும் ஒதுக்கப்பட்டு அதற்கும் வாடகை கொடுக்கப்படுகிறது. சர்க்காருக்குச் சொந்தமான அந்த இடத்திற்கு வாரியம் வாடகை கொடுக்கத் தேவையில்லை என்று செய்யவேண்டும். தனியார் இடத்திற்கு வெகு காலமாக வாடகை கொடுத்து வருவதாகத் தெரிய வருகிறது. வாரியத்திற்கு சர்க்காருக்குச் சொந்தமான இடத்தைக் கொடுத்து வாடகை வாங்காதுவிட்டால் அதனால் அந்த ஊழியர்களுடைய கோரிக்கையான போனஸ் பிரச்சினையை ஓரளவு தீர்க்க முடியும்.

விவசாயத்திற்காக மின்சாரம் கொடுக்கும்போது அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவதாக விவசாயிகள் கூறுகிறார்கள். ஒரு ஹார்ஸ்பவரில் இருந்து ஐந்து ஹார்ஸ்பவர் வரை உள்ள மோட்டார் வைத்து தண்ணீர் இறைத்தால் மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் வீதம் மூன்று வருஷத்திற்கு அக்ரிமெண்ட் செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இரண்டு மூன்று ஏக்கருக்குள் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் இந்த அக்ரிமெண்ட் செய்து கொண்டு இறைவைப் பாசனம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. அந்த மாதிரி விவசாயிகளுக்கு பாதி விலையில் சர்க்கார் மின்சாரக் கட்டணமாக வசூலிக்கவேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற விவசாயிகளுடைய பம்ப் செட்டுகளுக்கு உடனடியாக மின்சாரஇணைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு அரிசனங்கள் வசிக்கும் தெருக்களுக்கும் உடனடியாக மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

ந. ப. 12-00 **திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இப்போது சபையில் நடக்கும் மின்சார வாரியத்தின் மீதான விவாதத்தில் நான் சில கருத்துக்களைச் சொல்ல அசைப்படுகிறேன். எவ்வளவோ திட்டங்களையெல்லாம் கொண்டு வருகிறார்கள். சில விஷயங்களில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கும். ஆனால், இந்த மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் அவ்வளவு மாறுபட்ட கருத்துக்கள் இல்லாமல் அக்சப்பணிகளுக்காக இது இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. 1967-68, 1968-69-ம் வருடங்களுக்கான நிதி நிலை அறிக்கையில் மின்சாரத்தைப் பெருக்குவதற்கு திட்டங்கள் இல்லை என்பது தெரிகிறது.

THIRU T. MARTIN : Sir, on a point of order. Under Rules 18 and 19 of the Assembly Rules, at least one-tenth of the total number of members inclusive of the Speaker should be present in the House. I wish to bring to your kind notice that there is no quorum now as required under Rules 18 and 19 of the Assembly Rules. Rule 18 says—

The presence of at least one-tenth of the total number of members inclusive of the Speaker or person presiding shall be necessary.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சுவாமிநாதன்):** கோரம் இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்த மின்சாரவாரியத்தில் வேலைகள் எப்படித் தேங்கிக் கிடக்கின்றனவோ அதேபோல் சட்டசபையில்கூட அங்கத்தினர்கள் எல்லாம் தேங்கியிருக்கிறார்கள். 1967-68, 1968-69-ம் ஆண்டு திட்டங்களைப் பார்த்தால் உற்பத்தித் திறன் நிலையாக இருக்கிறதே தவிர அது ஏறுமுகமாகயில்லை. உற்பத்தித் திறனை அதிகமாகச் செய்யாது இருந்த நிலையிலே இருப்பது குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுவது போல் தான் இருக்கும்.

நமக்கு மின்சாரத் தேவையோ அதிகம், உற்பத்தியோ இல்லை. நமது தேவையை மீறிவிட்டோம் என்று சர்க்கார் சொல்வார்களேயானால், அது தவறான புள்ளி விவரமாகத்தான் இருக்க முடியும் என்று சந்தேகிக்க



வேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்லலாம், மைசூரிலிருந்து விலைக்கு வாங்குகிறோம் என்று. ஒன்பது பைசா என்றிருந்ததை 4.66 காசுக்கு வாங்குகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை ஒரு சமாதானமாகச் சொல்வார்கள். எவ்வளவு நாட்களுக்கு நாம் பிற மாநிலங்களை நம்பி மின்சாரத்தைப் பெற்று நம் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். புதுப்புதுத் திட்டங்கள், முதலீட்டுத் திட்டங்கள் பெருக வேண்டும். ஜெனரேஷன் கப்பாஸிடியை நாம் பெருக்கினால்தான் விவசாயத் துறைக்கு நலமாக இருக்கும். இப்போது இண்டஸ்ட்ரீஸுக்கு மின்சாரம் குறைந்த கட்டணத்தில் கொடுக்கப்படுகிறது. பல சலுகைகள் எல்லாம் அளிக்கப்படுகின்றன. தொழில் வளர வேண்டியதுதான். அதற்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் விவசாயத்தின் சிறப்புதான் மிக மிக முக்கியமானது. தொழில்களுக்கான ரா மெட்டீரியல்ஸைப் பெருக்குவதற்கான நிலை விவசாயத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஆகவே, விவசாயத்துறையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 40,000 பம்ப் செட்டுகள் இருந்தன. இப்போது 3½ லட்சம் பம்ப் செட்டுகள் இருக்கின்றன. 1961-62-ல் 40,000 பம்ப் செட்டுகள்தான் இருந்தன. இப்போது 3,40,000 பம்ப் செட்டுகள் இருக்கின்றன. விவசாயத்தில் நல்ல வாய்ப்புக் கொடுத்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு இது அடிப்படையாக அமைந்திருக்கிறது. பன்னிரண்டு லட்சம் கிணறுகள் இருக்கின்றன. அவைகளுக்காக பம்ப் செட்டுகள் கேட்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. முன்னால் கூட சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். இதில் திட்டமிட்டுச் செய்யவேண்டும். எவ்வளவு நாட்களுக்குள் ஒரு திட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று வரையறுக்க வேண்டும். எக்ரிமெண்ட் கொடுப்பது எவ்வளவு நாட்களுக்குள் என்று வரையறுக்க வேண்டும். எக்ரிமெண்ட்டிற்குப் பின்னால் இவ்வளவு நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்படும் என்று வரையறுக்க வேண்டும். அப்படியிருந்தால் பல புகார்கள் வருவது தடுக்கப்படலாம். அப்படி இல்லாததினால்தான் வேண்டியவர்கள், வேண்டப்படாதவர்கள், ஆட்சியில் இருப்பவர்கள், ஆட்சியில் இல்லாதவர்கள், சில இடங்களில் சீக்கிரமே மின் இணைப்பு கொடுக்கிறார்கள் என்றெல்லாம் புகார்கள் ஏற்படுகின்ற நிலைமை இருக்கிறது. இதை சர்க்கார் மறுக்க முடியாது. ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பின்னால், பல இடங்களில் பல கான்பரன்ஸஸ், பல மகாநாடுகள் கூட்டப்பட்டன. அவைகளின் அடிப்படை நோக்கமே அங்குள்ள திராவிட முன்னேற்றக் கழக சட்டசபை உறுப்பினர்கள், பார்த்தீர்களா நாங்கள் எவ்வளவுதூரம் மக்களை அணுகுகிறோம் என்பதைச் சொல்ல மகாநாடு கூட்டினார்கள். ஏதோ இதற்கு முன்பெல்லாம் மின்சார இணைப்பு நடக்காதது போலவும், இப்போதுதான் நடப்பது போலவும் கூட்டங்கள் கூட்டுவது மட்டுமல்ல விண்ணப்பங்கள் வாங்கப்பட்டு ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ. 50 வசூல் செய்தார்கள். ஐம்பது ரூபாயைக் கொடுத்தவுடன் மின்சார இணைப்பு வந்துவிடும் என்று ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் வந்து குவிந்தன. மகாநாடுகள் கூட்டப்பட்டன. அமைச்சர்களும் வந்தார்கள். அங்கு வந்து மின்சார விளக்குகள் எங்கே என்று கேட்கப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏ. விளக்கம் தந்தார்கள், பார்த்தீர்களா எவ்வளவு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன, இது எப்படி முடியும் என்று. பணத்தைக் கொடுத்தவுடனே அடுத்த நாளே மின்சாரம் வந்துவிடும் என்று அந்த மக்கள் நம்பினார்கள். ஆகவே, இவை விளம்பரத்திற்காகவே கூட்டப்பட்டன. கட்சி நோக்குடனேயே கூட்டப்பட்டன. அங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களும், அவர்களைச் சேர்ந்த நண்பர்களும் கட்சியில் உள்ள தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவற்றைக் கூட்டினார்கள். மின் இணைப்புக் கொடுப்பது என்பது பொது விஷயம். என் குற்றச்சாட்டு என்னவென்றால், அங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர்களின் அரசியல் உள் கருத்துக்களை வைத்து மின் இணைப்பை பெற்றிருக்கிறார்கள் என்ற

குற்றச்சாட்டைச் சாட்டாமல் இருக்க முடியாது. இணைப்புக் கொடுக்கப்பட்டவர்கள் அந்தக் கட்சிக்கு ஆதரவாக இருக்கலாம், கொடுக்கப்படாதவர்கள் வேறு கட்சிக்கு வரலாம்.

நான் என் தொகுதியில் நான்கு முறை உறுப்பினராக இருந்திருக்கிறேன். என்னை ஆதரித்தவர்கள், எதிர்த்திருக்கிறார்கள், எதிர்த்தவர்கள் ஆதரித்திருக்கிறார்கள். ஆகவே, இதை ஒரு பொதுப் பிரச்னை என்று கருத வேண்டும். இதை ஒரு கட்சிப் பிரச்னையாக, அல்லது அந்தப் பகுதி சட்டமன்ற அங்கத்தினரின் பிரச்னையாகக் கருதக் கூடாது. ஆளும் கட்சி எம்.எல்.ஏ. தொகுதிகளில் மின்சார இணைப்புகள் நடந்துகொண்டிருக்கின்றன. எதிர்க்கட்சி அங்கத்தினர்களின் தொகுதிகளில் மின்சார இணைப்புகள் நடைபெறவில்லை என்ற புகாருக்கு இடம் கொடுக்காமல் நடந்துகொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் பல பிற்பட்ட பகுதிகள் இருக்கின்றன. நான் என் தொகுதி பற்றிப் பேசுவது என்றில்லை. திருநெல்வேலி ஜில்லா, தென் ஆர்க்காடு ஜில்லா போன்றவைகளிலுள்ள ஏராளமான பிற்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக மின்சார வசதி செய்து கொடுக்கப்படவேண்டும். இதில் எல்லோருக்கும் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத காரணத்தினால் என் கட்சியில் இருந்துகூட சில அங்கத்தினர்கள் தங்கள் தொகுதிகளிலுள்ள குறைகளைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திரு. மார்டின் அவர்களின் தொகுதியாகிய சாத்தான்குளம் தொகுதி மிகவும் பிற்போக்கான பகுதி. அங்கு உடனடியாக மின்சார வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். அப்படி வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால்தான் விவசாயத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து உற்பத்தியை பெருக்க முடியும். திரு. பூவராகன் அவர்களின் தொகுதியாகிய விருத்தாசலம்—தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் பல இடங்கள் பிற்போக்கான பகுதிகளாக இருக்கின்றன. அங்கும் மின்சார இணைப்புகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்ளாமல் இருக்க முடியாது. எந்தெந்தப் பகுதிகள் நீர்ப்பாசன வசதி இல்லாமல் மழையை நம்பி இருக்கின்றனவோ அப்பகுதிகளுக்கெல்லாம் மின்சாரத்தை துரிதமாகக் கொடுக்க வேண்டும். நீர்ப்பாசனம் உள்ள பகுதிகளுக்கும் கொடுக்கட்டும், வேண்டாமென்று நான் சொல்லவில்லை. நீர்ப்பாசனமில்லாத பகுதிகளுக்கு அதைவிட அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 50,000 மின்விசையேற்றங்கள் என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது போதவே போதாது. 75,000 ஆக இருந்தால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். விவசாயத்திற்காக வழங்கப்படும் மின்சாரம் நாட்டின் சுபிட்சத்திற்காகப் பயன்படும் என்பதில் சந்தேகமில்லை.

இன்னொரு பிரச்சினை என்னவென்றால், சில இடங்களில் மகாநாடுகள் கூட்டப்பட்டு அதற்கு சீஃப் என்ஜினீயர் அவர்களும் வந்தார்கள். வந்தவுடன் எங்கெங்கு 10 பம்பு செட்டுகள், 20 பம்பு செட்டுகள் என்று வைக்கப்பட்டிருக்கின்றனவோ அங்கெல்லாம் கொடுக்கப்படும் என்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். கோபிசெட்டிப்பாளையத்திற்கு அமைச்சர்களும் வந்தார்கள். எலக்ட்ரிசிடி போர்டு சேர்மனும் வந்தார்கள். தாளவாடி பிர்க்கா மிக மிகப் பின்தங்கிய ஒரு இடம், எந்தவிதமான பாசன வசதியும் இல்லாத இடம், அங்கு 500 பம்பு செட்டுகள் கொடுத்தால்தான் அந்த பிர்க்காவின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். அங்கு பம்பு செட்டுகள் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அங்கு துரிதமாக வேலைகள் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிறது. பெருமுகை என்னும் கிராமத்திலிருந்து 30, 40 விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களிடம் எலக்டிரிசிட்டி போர்டு, சேர்மேன் அவர்கள் பம்பு செட்டு வைத்ததற்கு ரசீது கொடுங்கள், உடனடியாகச் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் பம்பு செட்டுகள் வைத்து ஒரு வருஷமாகியும் இன்னும் வேலை செய்ய முடியாத நிலையிலிருக்கிறது. இதைப் பற்றி எழுதினால் ஒரு கடிதம் வருகிறது, கவனிக்கப்படும், உடனடியாகக் நடவடிக்கை எடுக்கிறோம் என்று அஸிஸ்டெண்ட் இன்ஜினீயரைப் பார்த்து கேட்போமென்றால், விவசாயிகள் சந்தித்துப் பேசும்படியான நிலையில் அவர் பேசுவதில்லை. சூப்பர்வைஸர்



என்னும்படியான தகுதியிலே இருக்கக்கூடியவரைப் பார்த்துக் கேட்டால் விவசாயிகளுக்கு இது ஒரு கேடா, என்று சொல்லும்படியான நிலையிருக்கிறது. அவரைக் கவனிக்க வேண்டிய விதத்திலே கவனித்தால், நிச்சயமாக, உடனடியாகக் கிடைக்கும். ஆனால், எல்லா விவசாயிகளுக்கும் அந்தமுறை தெரியாது. அவர்கள் நினைக்கிறார்கள், நாம் நேர்மையாக, நியாயமாக வரி கொடுக்கிறோம், உற்பத்தியைப் பெருக்குகிறோம், நமக்கு மின் இணைப்புக் கிடைக்க வேண்டியதுதானே என்று எண்ணுகிறார்கள். சகஜ நிலை ஏற்படுமென்றுதான் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், திட்டவட்டமான முறையை அறிவிக்க வேண்டும். அக்ரிமென்ட் எடுத்தால் 6 மாதத்திலேயோ அல்லது ஒரு வருஷத்திலேயோ நிச்சயமாக மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்ற உத்திரவாதம் வேண்டும். இதில் பிரியாரிட்டி என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். முதல் 6 மாதத்தில் திட்டங்கள் தீட்டப்படும், அடுத்த 6 மாதத்தில் ஒப்பந்தம் எடுக்கப்படும், அதற்கும் அடுத்த 6 மாதத்திலே இணைப்புக்கள் கொடுக்கப்படும் என்று இருக்க வேண்டும். இது காகித அளவிலே இருந்தால் பிரயோசனப்படாது. இவ்வளவு பேருக்கும் கொடுக்க வேண்டுமென்றால், நாம் உற்பத்தித் திறனைப் பெருக்கியாக வேண்டும். உற்பத்தித் திறனைப் பெருக்கினால்தான் எல்லோருக்கும் கொடுக்க முடியும். சட்டியிலே இருந்தால்தானே அகப்பையில் வரும். அவ்வாறு உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்ன திட்டங்கள் இருக்கின்றன ? உடனே அமைச்சரவர்கள் சொல்வார்கள், மத்திய சர்க்காரிலிருந்து கடனை வாங்கிக் கொடுத்தால் செய்துவிடுவோம் என்று சுலபமாகச் சொல்வார்கள். கல்பாக்கம் அனல் மின்சாரத் திட்டத்திற்கு நாம் எல்லோரும் சேர்ந்து, வற்புறுத்தி, சீக்கிரமாக, துரிதமாகச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். இது விவசாயிகளின் பிரச்னை. எவ்வளவு தூரம் ஜெனரேஷன் கப்பாஸிடியை அதிகப்படுத்துகிறோமோ, எவ்வளவு பூரணமாகப் பிரயோசனப்படுத்துகிறோமோ அவ்வளவுக்கு நாட்டிலே முன்னேற்றம் இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.

எலக்ட்ரிசிட்டி போர்டைப் பற்றி எனக்கு பல புகார்கள் வருகின்றன. அந்தப் புகார்களில் சில தவறுகக்கூட இருக்கலாம். பலபேர் வேலையில்லாமல் குறைக்கப்பட்டிருக்கிறார்கள், வேலை வாய்ப்பு தவிர்க்கப்பட்டிருக்கிறது என்ற புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. இருக்கும்படியானவர்களை நாம் வைத்துக்கொண்டு திறமையை அதிகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சிக்கன நடவடிக்கைக்காக எல்லோரும் வேலையில்லாமல் இருக்கக் கூடாது என்ற கொள்கையுடையவன் நான். டெக்னிக்கல் விஷயம் தெரிந்தவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மின்சார போர்டின் தலைவராக வேண்டுமானால் ஐ.ஏ.எஸ். ஆஃபீசரைப் போடலாம். ஆனால், மின்சாரத்தை உபயோகப்படுத்த, துரிதப்படுத்த பலப் பல எஞ்சினீயர்கள் இருக்க வேண்டும். யாருக்காகவும் நான் சிபார்சு செய்வதற்காகச் சொல்லவில்லை. சிபார்சு செய்து யாரையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டுமென்ற நிலையிலும் நான் இல்லை. ஐம்பத்தைந்து வயது வரை கொடுக்கலாம் என்பது ரிக்கார்டு. ஆனாலும், நல்ல அனுபவம் உள்ளவர்களை, வேலையில் சிறந்தவர்களை பூரணமாகப் பிரயோசனப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நிலை இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்கிறேன். யாருக்காகவாவது சிபார்சு செய்து அவரைத் திருப்திப்படுத்த வேண்டுமென்ற நிலை எனக்கு இல்லை என்பதை நிச்சயமாகச் சொல்லிவிட்டேன். விஞ்ஞான முறையிலே இருக்கும்படியானவர்களைப் பூரணமாகப் பயன்படுத்தி அவர்களிடத்திலே திறம்பட வேலை வாங்கும்படியான நிலை இருக்க வேண்டும். சில சில சமயங்களிலே தவறாக நடந்து கொண்ட இன்ஜினீயர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றிப் புகார்கள் வந்திருக்கின்றன. இதுமாதிரி இருப்பதால், நல்ல முறையில், ஆக்கத்தோடும், ஊக்கத்தோடும் வேலை செய்யக்கூடியவர்கள் தவறாக இருந்தவர்களுக்கு, புகார்கள் இருந்தவர்களுக்கு—இவர்களுக்கெல்லாம் உத்தியோக உயர்வு கிடைத்திருக்கிறது. நல்ல நிலையில் இருக்கும்படியான நமக்கு அத்தகைய சூழ்நிலை இல்லை என்று எண்ணுகிறார்கள். இதனால் நல்ல முறையில் நேர்மையாக வேலை செய்பவர்

களுக்கு உற்சாகம் குறைவதுடன், நாமுந்தான் தவறு செய்யலாமே என்னும்படியான எண்ணம் உண்டாகவிடும். எனவே இவ்வாறு ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

நமது சென்னை ராஜ்யத்திலே கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு அளித்ததிலே உலகத்திலேயே வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத அளவிற்குச் செய்யப்பட்டுள்ளது என்ற பெருமையைப் பெற்றிருக்கிறோம். சுதந்திரம் பெற்ற பிறகு மின்சார அபிவிருத்தியில் வேறு எங்கும் பெறாத அளவுக்கு நாம் பெற்றிருக்கிறோம். இதைச் சொன்னால் இப்பொழுது ஆளும்படியான கட்சிக்கு சில சங்கடங்கள் இருக்கலாம். பழையதை ஞாபகப்படுத்துகிறேன் என்று சொல்லலாம். நமமுடைய நாட்டிலே சுதந்திரத்தைப் பெற்ற பிறகு, தமிழகத்திலே ஒரு வாரியம் சிறப்பாக, உயர்வாக, நல்லதாக, பயனுள்ளதாக நடந்திருக்கிறது என்றால், அது மின்சார வாரியம்தான் என்றால் மிகையாகாது. சிறந்த இன்ஜினீயர்கள் இருந்து பெரிய பெரிய திட்டங்களெல்லாம் செய்தார்கள். அதை எடுத்து நடததி, தீவிர முயற்சியுடன் தளராத ஆக்கத்துடன், ஊக்கத்துடன் பணியாற்றினார்கள். அத்தனைபேரும் நம்முடைய பாராட்டுதல்களுக்கு உரியவர்களாவார்கள். அவர்களுக்கு பாராட்டுதல்களைக் கூறிக்கொண்டால் அது மிகையாகாது.

என்னைப் பொறுத்த வரையில், இந்த மின்சார போர்டே வேண்டாமென்ற கருத்தில் இருந்தவன். சட்டசபை உறுப்பினராக இருந்தபொழுது கூட போர்டே இருக்கக் கூடாது, சர்க்காரேதான் நேரடியாக நடத்த வேண்டும் என்று ஆலோசனை சொல்லியிருக்கிறேன். அகில இந்திய அடிப்படையிலே போர்டு ஏற்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முறையிலே அமைக்கப்பட்டிருந்தால், கமர்ஷியல் அட்டானமஸ், முறையில் நியமிக்கப்பட்டு, பொறுப்பு அவர்களிடம் பூரணமாகக் கொடுக்கப்பட்டால் காரியத்தை செவ்வனே செய்வார்கள். அதைப் பரிசீலிக்கவும் முடியும். சர்க்காரும் பங்கு கொண்டு, போர்டும் இருந்தால் பொறுப்பை யார் மேலே சுமத்துவது? போர்டு சொல்லலாம், சர்க்கார் தலையிடுகிறது, ஆகவே எங்களால் செயல்பட முடியவில்லை என்று. சர்க்கார் சொல்லலாம், போர்டு சொல்லித்தான் நாங்கள் செய்கிறோம் என்று. இப்படி இருந்தால் போர்டு சரியாக இயங்காது. ஆகவேதான் இப்பொழுது ஒரு திட்டவட்டமான முடிவு எடுக்க வேண்டும். இப்பொழுது கடன்கூட சர்க்காரினுடைய அனுமதியின் பேரில்தான் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தனியாக ஒரு அட்டானமஸ் போர்டாக, சென்னை மாநிலத்திலே எப்படி ரயில்வே தனியாக இருக்கிறதோ, அந்த நிலைமையில் இதையும் நாம் செய்வோமானால் நிச்சயமாக அதைக் கண்காணிக்கின்ற நிலையிலே நல்ல முறையிலே நடக்கிறதா, இல்லையா என்பதைப் பரிசீலிக்கலாம் என்று என்னுடைய பொதுப்படையான கருத்தினை சொல்லிக்கொள்கிறேன். இவைகளையெல்லாம் இந்த அமைச்சரவை, குறிப்பாக நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரும்படியான நம்பிக்கையிலே என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டிற்கான மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது இந்தப் பேரவையினுடைய உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை மிகச் சிறப்பாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். பேரவை உறுப்பினர்கள் பலரும் மின்சார வாரியம் ஈடுபடுகின்ற பல்வேறு பணிகளை பாராட்டியதோடு மேலும் இந்தப் பணிகள் சிறந்து விளங்கவேண்டுமென்பதற்கான காரண, காரிய விளக்கங்களையும் அளித்ததற்காக அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தம்முடைய உரையிலே மின்சார வாரியத்தை பாராட்டி, அதனுடைய பணிகள் மேலும் வளர்ந்தோங்கவேண்டுமென்பதற்கான காரண, காரிய விளக்கங்களை தந்திருக்கிறார்கள். ஆளும் கட்சித் தரப்பைச் சேர்ந்தவர்களும், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும் மின்சார வாரியம் சிறப்பான



பணிகளை ஆற்றி வருகிறது என்பதை எடுத்துச் சொல்லி, இந்த ஆண்டு வியக்கத்தக்க பணிகள் பல நடக்கின்றன என்று சுட்டிக்காட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரும் ஏறத்தாழ முன்பு இருந்த வாரியத்தின் திட்டத்திற்கும் இப்பொழுது இருக்கின்ற மின்சார நிதிநிலை அறிக்கைக்கும் வேறுபாடே இல்லையென்றார்கள். ஆகவே, வியத்தகு மாறுதல், கூடுதல் இல்லையென்று அவர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இந்த அளவுக்கு இருக்கிறது என்று சொன்னதிலிருந்து அவருடைய முழுப் பாராட்டும் கிடைத்திருக்கிறது என்பதிலே எனக்கு மகிழ்ச்சி. ஆகவே, ஆளும் கட்சி தரப்பிலிருந்தும் மகிழ்ச்சி பெற்றிருக்கிறோம். எதிர்க்கட்சி தரப்பிலிருந்தும் மகிழ்ச்சி பெற்றிருக்கிறேன் என்பதிலே எனக்கு மன நிறைவு ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல், நல்ல உருவான யோசனைகளையும் மற்றவைகளையும் எடுத்து தெரிவித்து இந்த வாரியம் மேலும் சிறக்க வேண்டுமென்று முறையில் பலரும் கருத்துக்களை எடுத்து தெரிவித்தார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் எடுத்து தெரிவித்ததைப் போல தமிழக மின்சார வாரியம் உற்பத்தியைப் பெருக்குவதிலே முன்னாலே இருந்து வருகிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. மற்ற எல்லா துறைகளையும் விட குறிப்பிட்ட இலக்குக் காலத்திற்கு முன்னாலேயே நிறைவேற்றுகிற வகையிலே தான் மின்சார வாரியம் தன்னுடைய பணிகளை ஆற்றிக்கொண்டு வருகிறது என்பதை நாம் நன்றாக அறிவோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் போதுமான அளவுக்கு நாம் திட்டங்கள் மேற்கொள்ளவில்லை ; ஆகவே திட்டங்கள் மேற்கொள்ளவேண்டுமென்றும் மின்சார வாரியம் அதற்கு வழி வகை காண வேண்டுமென்றும் எடுத்து தெரிவித்தார்கள். குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் டாக்டர் ஹாண்டே அவர்களும் குறிப்பிட்டார்கள். ஆனால் தேவையை சரிக்கட்டுகின்ற அளவுக்கு மின்சார உற்பத்தியை பெருக்குவதிலே கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். ஆகவே, நாம் விட்டுவிட வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாநிலத்தினுடைய தேவையை, இங்கே உற்பத்தி ஆகிற புனல் மின்சாரத்தின் மூலமும் அனல் மின்சாரத்தின் மூலமும் பெறுகிறோம். நெய்வேலியிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தையும் செலவுக்குப் போக அத்தனையையும் மாநிலத்தினுடைய தேவைக்கு எடுத்துக்கொண்டு வருகிறோம். நம்முடைய தேவையைக்கூட நிறைவேற்ற முடியாத அளவிலே தான் அவர்கள் இருக்கிறார்கள். 90 மெகாவாட் தேவைப்படுகிற நிலையிலே, நெய்வேலியிலே அதற்கும் குறைவாகத்தான் தயாரிக்கப்படுகிறது. மேலும் கொடுப்பதற்கான வழிவகை இல்லையென்று தெரிவித்தார்கள். நாம் மின்சார தேவையை நிறைவு செய்கின்ற முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறோம். பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களிலே நாம் மின்சாரத்தை பெருக்குகின்ற முயற்சியிலே பக்கத்திலே இருக்கிற மைசூர் மாநிலததோடு ஒப்பந்தம் செய்துகொண்டு 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை 30 கோடி யூனிட் பெறுவது என்று இருக்கிறோம். அதன் மூலம் நமக்கு சில பல சலுகைகள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் நான் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கிறேன். அவர்களிடமே பெறவேண்டுமென்ற எண்ணத்திலே இல்லை. ஆகவே, மைசூர் மாநிலத்தைப் பார்த்து, பிற மாநிலங்களை நம்பியேதான் வாழவேண்டுமென்ற நிலையில் நாம் வைக்கவில்லை. நம்முடைய தேவைகள் அதிகமாகின்ற காரணத்தாலே முழுவதும் பூர்த்தி செய்ய முடியவில்லை. இதற்கான திட்டங்கள் நாம் வகுக்காமலும் இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டதிலேகூட முன்பு வரை ரூ. 175 கோடி அளவுக்கு மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல்வேறு திட்டங்கள் வகுத்து திட்டக் கமிஷனுக்கும் அனுப்பி வைத்திருக்கிறோம். இப்பொழுது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். 1968–69-லே நமக்கு வேண்டிய திட்டத்தில் 60 மெகாவாட் கூடுதல் பலன் பெருகின்ற அளவுக்கு நெய்வேலியில் 100 மெகாவாட் பெற நாம் முயற்சி செய்திருக்கிறோம். 1968–69-லே இந்தத் திறன் நமக்கு கூடக் கிடைக்கும். பேசின் பிரிட்

ஜிலே 30 மெகாவாட் கூடக் கிடைக்க வழி வகுத்திருக்கிறோம். 1968–69-ல் அது கிடைக்க வழி இருக்கிறது. 1969–70-ல் நெய்வேலியிலே 100 மெகா வாட் மின்சாரம் கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது 400 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிறார்கள். அடுத்த ஆண்டு, அதாவது 1968–69-ல் 500 மெகாவாட் கிடைக்கும். 1969–70-ல் 600 மெகாவாட் கிடைக்கின்ற அளவுக்கு உற்பத்தித் திறன் கிடைக்க வழி செய்யப்படும். அந்த அளவுக்கு உற்பத்தித் திறன் பெறக்கூடும். எண்ணூரிலே இரண்டு யூனிட்டுகள் மூலம் 1969–70-ல் 120 மெகாவாட் பெறக் கூடும். கோதையாறிலே 60 மெகாவாட் பெறக்கூடும். 1969–70-லே, கோதையாறு இரண்டாவது திட்டத்திலே 40 மெகாவாட் கிடைக்கக்கூடும். 1968–69-ல் 190 மெகாவாட் கூடுதல் பெறுவதற்கும் 1969–70-லே 345 மெகாவாட் கூடுதல் பெறுவதற்கும் நாம் வழிவகை பெற்றிருக்கிறோம். கல்பாக்கம் திட்டத்திலிருந்து 1972–73-லே அதனுடைய உற்பத்தித் திறன் கிடைக்கக்கூடுமென்று நான் எதிர்பார்க்கிறேன். 1974-லே இந்த திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிய நிலையிலே அப்பொழுது 600 மெகாவாட் கூடக் கிடைக்கும் என்று எண்ணுகிற நிலையிலேதான் மேற்கொண்டு தேவையானதை தற்போது மைசூர் மாநிலத்திடமிருந்தும் மற்ற மாநிலங்களிடமிருந்தும் பெறத் தக்க முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். திட்டக் கமிஷனுடைய முடிவையும் இந்திய அரசினுடைய ஒப்புதலையும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம், நம்முடைய சில திட்டங்களை நிறைவேற்றுவதற்கு என்பதை தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

சென்ற ஆண்டு மின்சாரத்தில் வெட்டு ஏற்படவில்லை என்பது தொழில் மந்தத்தையும் உற்பத்தித் தன்னிறைவு இல்லையென்பதையும் குறிக்கும் என்று நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மின்சார வெட்டு ஏற்பட்டிருப்பது தொழில் மந்தத்தையும், தொழில் நடைபெறாததையும் காட்டவில்லை. ஏராளமானநீர் தேக்கங்களிலே நீர் தேங்கியதால் நாம் மின்சாரத்தைப் பெற்றோம் என்பது மட்டுமல்லாமல் வெளி மாநிலங்களிலிருந்தும் மின்சாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. இயற்கையும் ஓரளவுக்கு நமக்கு உதவி செய்தது. மின்சார வெட்டுப்படவேண்டிய அவசியம் ஏற்படாமல் யாருக்கும் மின்சாரம், கேட்டவர்களுக்கு மின்சாரம் கிடையாது என்று சொல்லாத அளவுக்கு கொடுத்து வருகிறோம். ஆகையால் மந்தம் ஏற்பட்டு விட்டது என்று சொல்வது சரியல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட தன்னுடைய உரையிலே மின்சாரம் பெருத்த அளவிலே பயன்படுத்துகிற சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறதே தவிர மந்த நிலை ஏற்படவில்லையென்று கூறினார். அதை நாம் கணக்கிலேயே காணலாம். 1966–67-ல் உயர் அழுத்த மின் சக்தி கம்பிகள் 1,401 மில்லியன் யூனிட்டுகள் பயன்படுத்தப் பட்டன. 1967–68-ல் 1,714 மில்லியன் யூனிட்டுகள் உயர் அழுத்த மின் சக்தி கம்பிகள் பயன்படுத்தப்பட்டன. இந்த அளவில் பயன்படுத்தியிருக்கிறோம் என்றால் இது தொழில் மந்தம் ஏற்படவில்லை என்பதைக் காட்டுகிறது. 1966–67-ல் உபயோகப்படுத்தப்பட்ட உயர் அழுத்த மின் சக்தி கம்பிகளை விட அதிகமாக 1,714 மில்லியன் யூனிட்டுகள் அளவுக்கு பயன் படுத்தியிருக்கிறோம் 1967–68-ல். ஆக, இருநூற்றுச் சில்லரை யூனிட்டுகள் அதிகம் பயன்படுத்தியிருக்கிறோம் என்றால் எந்த அளவுக்கு தொழில் வளர்ந்திருக்கிறது என்பதை இது காட்டுகிறது. 1966-ஐ விட 22 சத விகிதம் அதிகம் 1967-ல்.

குறைந்த அழுத்த மின்சக்தி பயன்படுத்துவதிலேகூட 1966–67-ஐ விட 1967–68-லே அதிகமாகத்தான் இருக்கிறது. இதுவும் தொழிற் மந்தத்தைக் காட்டாது. 159 மில்லியன் யூனிட்டுகள் திறன் பயன்படுத்தப் பட்டது 1966-67-ல். 198 மில்லியன் யூனிட்டுகள் திறன் பயன்படுத்தப் பட்டது 1967–68-ல். இது முந்தைய ஆண்டை விட 24 சத விகிதம் அதிகம். ஆகவே, இதில் வெட்டு ஏற்படாதிருப்பதற்குக் காரணம்— தொழில் மந்த நிலை அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள
பி.ப. விரும்புகிறேன். மேலும், பெரும் தொழில்களுக்கு அதிகமான அளவுக்கு நாம் மின்சாரத்தைப் பயன்படுத்தலாம் என்ற கருத்தை நண்பர்





திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும், மற்றும் சில உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். சில தொழில்களுக்கு அவைகளுடைய மூலப் பொருள்களில் ஒன்றாக மின்சாரம் அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட தொழில்கள் அதிகமான அளவுக்கு மின்சாரத்தை பயன்படுத்துகின்றன. அப்படிப்பட்ட தொழில்கள்—இரும்பு, உருக்கு த்தொழிற்சாலை, அலுமினிய தொழிற்சாலை, சிமெண்டு தொழிற்சாலை—இவைகளுக்கு மின்சாரக் கட்டணம் ஓரளவுக்குக் குறைத்துத் தருவதினால்தான், தொழில்கள் நடைபெறுகின்றன. மின்சாரக் கட்டணத்தை ஓரளவுக்கு அதிகமாக ஆக்கினாலும், உற்பத்திச் செலவு கட்டுப்படியாகாத நிலைமை ஏற்பட்டு, ஆக அந்த தொழிற்சாலையை மூடும்படியான நிலைமை ஏற்பட்டு, அதன் காரணமாக தொழிலாளர்களுக்கு வேலை இழப்பும், மற்றவர்களுக்கும் வேலையின்மையும் ஏற்படுகிற கட்டத்திற்குப் போகும். உதாரணமாக, அலுமினியம் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால், இப்பொழுது இருக்கிற மின்சாரக் கட்டணம் ஒரு யூனிட்டுக்கு ஒரு காசு அதிகமானாலும், அதன் காரணமாக அலுமினியம் ஒரு டன் உற்பத்தி செய்வதற்கான செலவு ரூ. 170 கூட ஆகிறது. இப்பொழுதே அவர்கள் சர்சார்ஜ் 30 சத வீதம் கொடுக்கிறார்கள். சர்சார்ஜ் முழுவதையுமே எடுத்துவிடமென்று அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். பல்வேறு தொழில்களுக்கும் அம்மாதிரி போட்டிருக்கிற காரணத்தினால், அவர்களும் இதைக் கட்டவேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம். ஒரு காசு தூக்கினால்கூட உற்பத்தி செலவு ரூ. 170 ஆகிவிடும். அதனால் மார்க்கெட்டில் பொருள்கள் விலை போகாது. தொழில் நடத்தமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடும். இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு வினாவிற்கு விடை அளிக்கும்போதுகூட சொன்னேன். மத்திய அரசுத் துறையில் நடத்தலாமா, மாநில அரசுத் துறையில் நடத்தலாமா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, இரண்டு பேர்களும் நடத்த முடியாது, தனியார் ஆதரவில் நடத்தலாம் என்று கருதப்பட்டு, அதற்கும் யாரும் வராமல், கோவையில் ஒருவர் முன் வந்து அவருக்கும் சில பல சலுகைகள் தருகிறோம் என்று சொன்னதன் பேரில் நாம் அலுமினியம் தொழிற்சாலையை மேட்டூரில் உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதுவும் நாம் விதித்திருக்கிற கட்டணமும் குறைந்தது தான். நம்முடைய நாட்டில் மட்டுமல்ல, அலுமினியம் தொழிற்சாலை இரும்பு உருக்கு தொழிற்சாலை, சிமெண்டு தொழிற்சாலை ஆகியவைகளுக்கு உலகத்திலேயே எந்த நாட்டில் பார்த்தாலும் அவர்களுக்கு தரப் படுகிற மின்சாரம் குறைந்த விலையிலே தரப்படுகிறது. அந்த முறையிலேதான் இங்கு நாமும் தந்துகொண்டிருக்கிறோம் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மறுபடியும், தேவையைப் பொறுத்தவரையிலேகூட, அதிக அளவுக்கு நாம் பயன்படுத்தவில்லை என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு கருத்தை எடுத்துத் தெரிவித்தார்கள். நம் உச்ச தேவைகூட சாதாரணமாக நாள் ஒன்றுக்கு 750 மெகாவாட்டு அளவுக்குத்தான் கூடுகிறது. மாலை நேரத்தில் 1,000 மெகாவாட் அளவிற்குப் போகிறது. காலை 7 மணியிலிருந்து மாலை 7 மணி வரையில் நம்முடைய தேவை உச்சநிலையை எய்துகிறது. இரவு நேரத்தில் உச்ச நிலை கிட்டத்தட்ட 400 அல்லது 450 மெகாவாட் அளவுக்கு இறங்குகிறது. ஒரு நாள் முழுவதும் எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்கிறோமோ அவ்வளவையும் பயன்படுத்துகிற சூழ்நிலை பகலில் ஏற்படுகிறது. மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையில் பயன்படுகிற அளவுக்கு 24 மணி நேரமும் பயன்படுகிற சூழ்நிலை ஏற்படாது. உச்ச அளவை எண்ணிப் பார்த்துத்தான் உற்பத்தித் திறனை அமைக்கவேண்டியிருக்கிறது. 800 மெகாவாட், 1,000 மெகாவாட் தேவைப் படும் என்றுதான் உற்பத்தித் திறனை அமைக்கவேண்டியிருக்கிறது. பயன்படுத்துகிற அளவு குறைகின்ற காலத்தில் உற்பத்தியை குறைக்க வேண்டியிருக்கிறது சில இடங்களில். அப்படி குறைக்கின்ற காலத்தில் புனல் மின்சாரம் இயங்குகின்ற சில இடங்களில் பொறிகளை, இயந்திரங்களை நாம் ஓடாமல் நிறுத்தி வைத்து அதன் மூலம் உற்பத்தியைக் குறைக்க முடியும். அனல் மின்சாரத்தைப் பொறுத்தவரையில் அந்த முறையில் கூட செய்யமுடியாது. ஒரு தடவை அனல் மின்சாரப் உற்பத்தியைத்

துவக்கிவிட்டால், தொடர்ந்து அது இயங்கிக்கொண்டுதான் இருக்கும். மின்சாரம் வந்துகொண்டேதான் இருக்கும். அனல் மின்சாரத்தைப் பொறுத்தவரையில் உற்பத்தியாகிற மின்சாரம் முழுவதையும் பயன்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. புனல் மின்சாரத்தைப் பொறுத்தவரையில், இயந்திரங்களை, ஐந்தில் மூன்றை ஓட்டி, ஒன்றை ஓட்டி, நான்கை மூடி வைத்து, அவ்வப்பொழுது கூட்டியும், குறைத்தும் நாம் போதுமான அளவுக்கு மின்சாரத்தைப் பெற வேண்டியிருக்கிறது. ஆகவே, நாம் இருக்கிற உற்பத்தித் திறன் அத்தனையையும் தேவையான அளவுக்குப் பயன்படுத்திக்கொண்டுதான் வருகிறோமே தவிர, எங்கும் பயன்படுத்தப்படாமல் வீணாக்கப்படுகிறது என்ற சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெய்வேலி மின்சாரத்தை நாம் முற்றிலும் பயன்படுத்தவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டையும் பலர் எடுத்துச் சொன்னார்கள். நான் முதலிலேயே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவர்களோடு நாம் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறோம். அவர்கள் தேவை போக மீதப்படுகிற அத்தனையையும் இந்த மாநிலம் எடுத்துக்கொள்வதாக செய்யப்பட்டிருக்கிற ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்கள் யூனிட் ஒன்றுக்கு 7½ காசு கேட்டார்கள். உற்பத்திச் செலவு அதிகமாகிறது, சம்பளம் மற்றவைகள் அதிகமாகத் தந்துகொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக நெய்வேலி கார்ப்பரேஷன் அதிக நட்டத்திற்கு ஆளாகின்ற காரணத்தினால் யூனிட் ஒன்றுக்கு 7½ காசு தரவேண்டும் என்று கேட்டார்கள். பிறகு அவர்கள் கணக்குப் போட்டு 6·8 காசு தரவேண்டும் என்று சொன்னார்கள். அது நம்முடைய மாநில அரசுக்கும், மின்சார வாரியத்திற்கும் கட்டுப்படியாகாது என்ற காரணத்தினால், மத்திய அரசின் அமைச்சரை வரவழைத்து வைத்து, நெய்வேலி கார்ப்பரேஷன் அதிகாரிகளும், மாநிலத்தின் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், நானும், மற்ற அதிகாரிகளும் பேச்சு வார்த்தைகள் நடத்தி, ஒரு யூனிட் 5·9 காசு என்ற அளவுக்குப் பெறலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அது ஓரளவுக்கு புனல் மின்சாரத்தைவிட கொஞ்சம் அதிகம் என்றாலும், நெய்வேலித் திட்டம் நம்மை நம்பி இருக்கிற காரணத்தினால், நமக்காகவே இருக்கிற காரணத்தினால், எதிர் கால உற்பத்தித் திட்டத்திற்கு அதைத்தான் பயன்படுத்தவேண்டும் என்ற காரணத்தினால், அதைக் காப்பாற்றவேண்டும் என்ற பொறுப்பு மாநில அரசுக்கு இருக்கிற காரணத்தினால், சற்று கூடுதலாக இருந்தாலும், 5 9 காசுக்கு வாங்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். எதிர் காலத்தில் 1,000 மெகாவாட் அளவுக்கு மின்சாரம் பெறவேண்டுமென்றால், அங்கே இரண்டாவது சுரங்கத் திட்டத்தை உண்டாக்கி 1,000 மெகாவாட் அளவிற்கு நாம் செல்லவேண்டிய கட்டம் ஏற்படக்கூடும். மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்கு இரண்டாவது சுரங்கத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்பதையும், அந்தத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டும் என்பதையும் அவர்களிடத்தில் தெரிவித்திருக்கிறோம்.

விவசாயத்தைப் பொறுத்தவரையிலும், பெரும்பாலான உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார்கள். குறைபாடுகளைப் போக்கவேண்டும் என்ற கருத்தை பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் எடுத்துரைத்தார்கள். தேவையை உணர்ந்துதான், விவசாயத்திற்கு மிகத் தேவையான ஒன்றாக மின்சாரம் இருக்கிறது என்பதை உணர்ந்து தான், நம்முடைய மாநிலத்தின் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும், வேளாண்மைத் துறை வளர்ச்சி அடைவதற்கு விசையேற்றங்களுக்கு மின் இணைப்புத் தரவேண்டும் என்பதில் அதிக நாட்டம் செலுத்தி, சென்ற ஆண்டு இருந்ததை விட, அதற்கும் அதிகமாகவே, முடிந்த வரையில், இயன்றவரையில், எந்த அளவுக்கு கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு கொடுத்துக்கொண்டுதான் வருகிறோம். இதற்கு முன்னால் இருந்த நிலைமையை விட சற்று அதிகமான அளவுக்குத் தரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இயங்கிக்கொண்டு இருக்கிறோம். அந்த நிலையில்தான் மேலும் அதிகமாக விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு தரப்படுவதற்கான வாய்ப்புக் கூறுகள் ஆராயப்பட்டு, மின் இணைப்பு தரப்பட்டு வருகிறது





குறைந்த அழுத்த கம்பி மூலம் வேளாண்மைத் துறைக்கு ஒரு யூனிட் மின்சாரம் கொண்டுபோய்க் கொடுப்பதற்கு மின்சார வாரியத்திற்கு ஏற்படுகிற செலவு 16-லிருந்து 17 காசாக இருந்துவருகிறது. வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கருதி, வேளாண்மைத் துறைக்கு செலவு இனங்களைக் கூட்டக் கூடாது என்று கருதி, அந்தத் துறையில் சுமையை அதிகமாக ஏற்படுத்தக் கூடாது என்று கருதி, அவர்களுக்கு ஒரு யூனிட் 8¼ காசு என்ற அளவுக்குத் தருகிறோம். உற்பத்திச் செலவு 16 காசிலிருந்து 17 காசு வரை ஆகிறது என்றாலும், நாம் தருவது 8¼ காசு என்ற அளவுக்குத் தருகிறோம். முழுவதும் கணக்குப் போட்டுப் பார்த்து, உற்பத்திச் செலவு ஆவதன் அளவுக்காவது கட்டணத்தைக் கூட்டுவது என்றால், அதன் மூலம் மின்சார வாரியத்திற்கு ரூ. 8 கோடி அதிகமாக வரும். இப்பொழுது 8¼ காசுக்கு தருவதால், மின்சார வாரியத்திற்கு 8 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகிறது அல்லது அந்தத் தொகையை அது மானியமாகத் தருகிறது என்றுதான் கொள்ள வேண்டும். அது கூட அதிகம் என்று நாம் சொல்ல முடியாது. மின்சார வாரியம் இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து, செலவினம் அதிகமாக ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து வருகிற தன்மையை வைத்து, 9 காசு, 10 காசு அளவுக்குக் கூட்ட வேண்டும் என்று யோசனை சொல்லப்பட்டது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வேளாண்மையைப் பொறுத்த வரையில் கட்டணத்தை நாம் எந்த வகையிலும் குறைக்காவிட்டாலும்கூட, உயர்த்தக் கூடாது என்ற கருத்தைத் தெரிவித்து, 8¼ காசு அளவிலே அது நிறுத்தப்பட்டிருக்கிறது.

மற்ற மாநிலங்களில் பார்த்தால்கூட, வேளாண்மைத் துறைக்கு இதை விட அதிகக் கட்டணம்தான் வசூலிக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் 8¼ காசு வசூலிக்கப்படுகிறது. ஆந்திராவில் ஒரு யூனிட்டுக்கு 12 காசு வசூலிக்கப்படுகிறது. மைசூரில் ஒரு யூனிட்டுக்கு 10 காசு வசூலிக்கப்படுகிறது. கேரளத்தில் மட்டும் தான் 8 காசு வசூலிக்கப்படுகிறது. பிற மாநிலங்களில் கணக்கெடுத்துப் பார்த்தாலும்கூட, அதிகமாகத்தான் வசூலிக்கிறார்கள். ஒரிஸாவில் 12 காசு வசூலிக்கிறார்கள். ராஜஸ்தானில் வேளாண்மைத் துறைக்குக் கொடுக்கப்படுவது 12 காசு என்ற அளவில் தான். உத்திரப்பிரதேசத்தில் பல்வேறு பயிர்களுக்குப் பல்வேறு திட்டங்களை வைத்து, 12 காசு முதல் 19 காசு வரையில் வசூலிக்கிறார்கள். வங்காளத்தில் 12 காசு வசூலிக்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில் 13 காசு வசூலிக்கிறார்கள். மகாராஷ்டிரத்தில் 13 காசு வசூலிக்கிறார்கள். அஸாமில் 14 காசு வசூலிக்கிறார்கள். அத்தனை மாநிலங்களையும் எடுத்துக் கொண்டு பார்த்தாலும் கூட, தமிழகத்தில்தான் குறைவாக 8¼ காசு வசூலித்துக்கொண்டிருக்கிறோம். இதை விடக் கேரளத்தில்தான் குறைவு. கேரளத்தில் 8 காசு என்ற அளவில் குறைவாக இருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று அனல் மின்சாரத்தை விட புனல் மின்சாரத்தின் மூலம் மின்சாரத்தைப் பெறுகின்ற வாய்ப்புக் கூறுகள் கேரளத்தில் அதிகமாக இருக்கின்றன. அனல் மின்சாரத்தைப் பொறுத்த வரையில் உற்பத்திச் செலவு அதிகம், புனல் மின்சாரத்திற்கு மிகக் குறைவு. குறைந்த அளவு செலவில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தைக் கேரளம் வைத்திருக்கிறது. அதனிடத்தில் இரண்டாவது காரணம், அந்த மாநிலத்தில் வேளாண்மைத் துறையில் மின்சாரம் தருகிற அளவு மிகவும் குறைவு. அங்கே குறைந்த அளவு இடங்களுக்குத்தான் மின்சாரம் தரப்படுகிறது. வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையிலும், தமிழகத்தில் வேளாண்மைத் துறைக்கு மொத்த உற்பத்தியில், 45 சத விகிதம் மின்சாரம் தருகிறோம். ஆகவே, யூனிட் ஒன்றுக்கு 8¼ காசு என்ற அளவுக்குக் கொடுப்பது, குறைந்த நிலைமையாக இருக்கிறதே தவிர, கூடுதலான நிலைமை என்பது அல்ல. இந்த மாநிலத்தில் வேளாண்மைத் றையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஓரளவுக்கு அவர்களுடைய நம்பிக்கையை காப்பாற்றுகிற அளவுக்கு தரப்படுகின்ற ஒன்றாகத்தான் இருந்து வருகிறது என்று இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். விசையேற்றங்களுக்கு அதிகமாக மின் இணைப்புத் தரவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இந்த அரசு பணியாற்றிக்கொண்டிருக்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 ஆகஸ்ட் 31

இறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதிகமான அளவுக்கு விசையேற்றங்களுக்கு மின் இணைப்புத் தரவேண்டும் என்று கோரினார்கள். ஆனால், தேவைகளைப் பல்வேறு தொகுதிகளைச் சேர்ந்த பேரவை உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். இதற்கு முன்னால், மெல்ல மெல்ல வந்து, நிதி வசதியை ஒட்டி, 25,000 மின் இணைப்புத் தருகிறது என்கிற திட்டங்களைப் போட்டு, நம் மாநிலத்திலே 9 லட்சம் கிணறுகள், வேளாண்மைப் பாசனக் கிணறுகளுக்கு வசதி கொடுக்கப்பட்டன. அதிலே 3½ லட்சம் விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புத் தந்திருக்கிறோம். சென்ற ஆண்டு வரையில் 25,000 என்ற அளவில் தொகை ஒதுக்கி, வசதி செய்ய முடிந்தது. ஆனால், இப்பொழுது, தேவை அதிகமாக இருப்பதாலும், அவசியத்தை உணர்ந்து, மெல்ல, மெல்ல அதை உயர்த்தி இப்பொழுது ரூ. 97 லட்சம் அளவில் உயர்த்தி, அதன் மூலமாக இன்றைக்கு 51,746 விசை ஏற்றங்களுக்கு இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டை விட இது இரண்டு பங்கு அதிகமாகச் செய்திருக்கிறதை காட்டுகிறது. அடுத்த ஆண்டில் இந்த அளவு குறையாத அளவிற்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இந்த சூழ்நிலை இருக்குமேயானால், மீதியிருக்கும் கிணறுகளுக்கும், இறைவைகளுக்கும் மின் இணைப்புத் தர வேண்டும் என்று இருக்கிறது. ஆண்டுக்காண்டு, நம்முடைய இலக்கை உயர்த்தி வைத்துக் கொண்டாலும், இன்னும் அத்தனை இடங்களுக்கும் மின் இணைப்பு தருவதற்கு இன்னும் 11 ஆண்டுகள் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது 3½ லட்சம் கிணறுகளுக்குத் தந்திருக்கிறோம். ஆண்டுக்கு 50,000 என்ற கணக்கு வைத்துக்கொண்டாலும் 11 ஆண்டுகள் ஆகும். அதே நேரத்தில் புதிய கிணறுகள் 20,000 என்ற அளவை எட்டிக் கொண்டு வருகிறோம். மின் இறவைகளின் எண்ணிக்கையை 50,000 என்பதிலிருந்து 75,000 என்ற உயர்ந்த இலக்கை வைத்துக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் எடுத்துச் சொன்னார்கள். நாம் நிதி வசதியைப் பெருக்கிக்கொண்டு, கடன்கள் வாங்கிக்கொண்டு வருகிறோம். மேலும் பெருக்க நிதி வசதி போதவில்லை என்கிற சாதாரண காரணத்தைச் சொல்லி, அமைச்சர் தப்பித்துக்கொள்ளப் பார்ப்பார்கள் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார்கள். இது சாதாரணக் காரணம் அல்ல, சுவையான காரணம்தான். நம்முடைய வாரியத்திற்குக் கிடைக்கும் கடன்களையும், ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனிலிருந்து கிடைக்கும் கடன்களையும்—நாம் கேட்கும் அளவைவிட அவர்கள் குறைவாகவே கொடுக்கிறார்கள்.—இன்னும் வேறு பல வகைகளிலும் கடன் பெற முயற்சிகள் செய்யப்படுகின்றன. மத்திய சர்க்காரையும் ரூ. 5 கோடி கேட்டிருக்கிறோம். அவர்கள் கூடுதலாகத் தந்தால் இந்தத் திட்டங்களுக்கு, இறைவைகளுக்கு, விசை ஏற்றங்களுக்கு அதிகமாகக் கொடுக்க முடியும்.

குறைபாடுகளையும், காலத்தாழ்வுகள் பற்றியும் சுட்டிக் காட்டினார்கள் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரும், மற்ற உறுப்பினர்களும். அப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லவே இல்லை என்று நான் சொல்லவே இல்லை. ஆனால், அவற்றைத் தவிர்க்க முழு முயற்சியையும், பொறுப்பையும் வாரியத்தின் அதிகாரிகள் ஏற்றுக்கொள்கிறார்கள். இது சம்பந்தமாக திட்டவட்டமான முறை வகுக்கப்பட வேண்டும் என்றும் சொன்னார்கள். அது சம்மந்தமாக உன்னிப்பாக இருக்கிறேன். மின்சார வாரியத்தின்மீது ஐயப்பாடே எழுவதற்கு வழியில்லாத வகையில் செயலாற்ற வேண்டும் என்று அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறேன். ஒரு சில உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். மோட்டார் வாங்கி, மற்றவைகள் செய்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. கடன் வாங்கிய வகையில் வட்டிகூடக் கட்ட வேண்டியதாக இருக்கிறது; கடனையும், திருப்பிக் கொடுக்கும், கேட்கும் நிலை ஏற்பட்டு விட்டது. ஆனால், இன்னமும் மின் இணைப்புக் கொடுக்கவில்லை என்கிற நிலைமைகளைச் சொன்னார்கள். அதிகாரிகளுக்குத் திட்ட வட்டமாகச் சொல்லியிருக்கிறேன். தேவைகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால், இயன்ற அளவில்தான் இணைப்புத் தர முடிகிறது. அதுவும் மாவட்ட வாரியாகத் தர வேண்டியிருக்கிறது. முக்கியமாகக் கணக்குப் பார்க்கும்போது, இணைப்புக் கொடுப்பதால், அதிகமான நீரை இறைத்து பலன் அதிகமாக வரக்கூடிய இடங்களுக்கு முக்கியத்துவம்



1968 ஆகஸ்ட் 31] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். எங்கே தண்ணீர் இருந்து, அதிகமான அளவிற்குப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறதோ, எங்கே அதனால் உற்பத்தி அதிகமாக வரும் என்று இருக்கிறதோ, அப்படிப்பட்ட நிலங்களுக்கு மின் இணைப்பு முன்னதாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மூன்று மாதத்தில் தண்ணீர் இறைக்கவும், அதன் பிறகு தண்ணீர் கிடையாது என்கிற நிலைமைகள் இருக்கும் இடங்களில் பலன் ஏற்படாது. அதையெல்லாம் மாவட்டங்களில் கண்டறிந்து முதல் சலுகை கொடுக்க வேண்டிய இடங்களுக்குக் கொடுக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும், அந்த வகைகளில் முறை வகுக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. நானும் அவ்வண்ணமே வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். முன்கூட்டியே தெளிவாகச் சொன்னால் நலமாக இருக்கும். இணைப்புக் கொடுக்க இந்த ஆண்டு முடியாது, இரண்டு ஆண்டுகள் ஆகும், இன்னின்ன நிலைமைகள் இருக்கின்றன, இன்னின்ன காரணங்களுக்காக இப்பொழுது கொடுக்க முடியாது, 1970-ல தான் உங்களுக்குக் கிடைக்கும் என்று தெளிவாகச் சொல்லிவிட்டால், மக்களுக்கு ஏமாற்றம் இல்லாமல் இருக்கும். முதலில் வரும் என்று நம்பிக்கையை ஊட்டுவிட்டு, பிறகு ஆண்டுக்கணக்காக தாமதம் ஆகும்போது மக்கள் படும் அவதியை உணருகிறோம். அந்த நிலைக்குப் போகக் கூடாது என்று வாரியத்தைக் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். வாரியத்தின் தலைவர் அவர்களும், தலைமை பொறியாளரும், மின்சாரத் துறை செயலாளரும் அதையெல்லாம் ஆராய வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். இணைப்புக் கொடுக்கும்போது, இத்தனைக் கம்பங்கள், ஒரு கம்பம், இரண்டு கம்பம் என்று இருக்கும் இடங்களுக்கு எவ்வளவு சீக்கிரம் இணைப்புக் கொடுக்க முடியுமோ அங்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். இடங்களைப் பார்த்து ஆளைப் பார்க்க வேண்டாம், பெயரைப் பார்க்க வேண்டாம், விண்ணப்பத்தில் இருக்கும் இடத்தில் இருக்கும் வசதிகளுக்கு ஏற்ப கொடுக்க வேண்டும்; அவர் பெயர் குப்புசாமியா, சுப்புசாமியா என்று பார்க்க வேண்டாம், அவர் காங்கிரஸ்காரரா, கழகக்காரரா, கம்யூனிஸ்டா அல்லது சுதந்திராக் கட்சியா என்று பார்க்காமல், செய்ய வேண்டும் என்றும் செய்கிறார்கள். கட்சியைப் பார்த்துக் கொடுக்கும் சூழ்நிலைகள் கிடையாது. அப்படிப்பட்ட முறையை வகுத்துக்கொண்டால், அந்த முறைப்படி 1, 2, 3 ஆண்டுகளில் கிடைக்கும் என்கிற நிலைமைகள் தெளிவாகும். மேலவை உறுப்பினராகட்டும், பாராளுமன்ற உறுப்பினராகட்டும், யாராக இருந்தாலும், இன்னின்ன காரணங்களுக்காக தாமதம் ஏற்படும் என்று தெளிவாகச் சொல்லிவிட்டால் நலம். அந்த வகையில் சொல்லிவிடுங்கள், அவர்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்வார்கள் என்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மேலவை, பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடைய சங்கடங்களையும் நான் உணர்வேன். நான் அமைச்சராக வருவதற்கு முன்னால், எதிர்க் கட்சித் தலைவனாகவும் இருந்திருக்கிறேன். என்னிடத்தில் பல்வேறு முறையீடுகள் வந்திருக்கின்றன. அந்த அந்தத் தொகுதிப் பிரச்னைகள் அந்த அந்தத் தொகுதி உறுப்பினர்களுக்குத்தான் கொடுப்பார்கள். பிரச்னைகளைத் தீர்க்க, நிவர்த்திக்க, உறுப்பினர்களைத்தான் அணுகுவார்கள். ஆகவே, உறுப்பினர்களுக்குத் தெளிவு படுத்திவிட்டால், அவர்கள் பொது மக்களுக்கு, தொகுதி மக்களுக்குத் தெளிவுபடுத்துவார்கள். இது சம்பந்தமாக, ஆண்டுதோறும், அந்தப் பகுதி உறுப்பினர்களை ஒரு குறிப்பிட்ட நாளிலே வரவழைத்து, மாநாடு கூட்டி, மாநாட்டிலே இருக்கும் சூழ்நிலைகளை ஆராய்ந்து, இன்னின்னவை இந்த ஆண்டு கொடுக்கலாம், இன்னின்னவை அடுத்த ஆண்டு என்று திட்டவட்டமாக அந்த மாநாட்டிலேயே சொல்லிவிடலாமா என்றும் எண்ணிக்கொண்டு இருக்கிறேன்.

கீழ்மட்டங்களில் குறைபாடுகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட இடங்களில் சூப்ரவைஸர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டு இருக்கிறார்கள். குற்றம் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. சிலர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். விசாரணை நடக்

இறது. பணம் கொடுத்தவர்கள், சலுகை கேட்டவர்கள் இப்படியெல்லாம் விசாரணை செய்து, குறைபாடுகளைப் பொறுத்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன். கீழ்மட்டத்திலே இருக்கும் குறைபாடுகளைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால், உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கக் கவனம் செலுத்தப்படும்.

மின்சார போர்டைப் பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். அதை ஒரு தனி நிறுவனமாக அமைத்து, வாணிக முறையில் செயல்படச் செய்து, அரசு தலையிடாமல் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். மின்சார வாரியம் ஒன்றில்தான் அரசு முழு முதலாளிகள் வேறு யாருக்கும் பங்கே கிடையாது. ஒரு தொழிலை முழு [illegible] தலாளியாக அரசு நடத்துகிறது என்றால் மின்சார வாரியம்தான். அரசு பணத்தை அவர்களிடம் கொடுக்கிறது ஆனால், அரிரசிடமிருந்து ஒவ்வொரு உத்தரவையும் பெறவேண்டும என்று ஏற்பட்டால், அதனால் காலதாமதம் ஏற்படும். உடனுக்குடன் ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்க அவர்களுக்கே உரிமை அளித்திருக்கிறோம். அப்படிப்பல வகைகளில் போர்டு முழு அதிகாரம் பெற்று இருக்கிறது. அவர்கள் போக்கிலே தனி நிறுவனமாக விட்டுவிட்டால், பணம் முழுதும் நாம் கொடுத்தும், உறுப்பினர்களுடைய சீரான யோசனைகளை நிறைவேற்ற எனக்கோ, அரசுக்கோ, தட்டிக்கேடக முடியாது போய்விடும். ஒரு பிடிப்பு, பிணைப்பு இருக்க வேண்டும், ஆனால் அதே சமயத்தில் அவர்கள் செயல்களைத் தடுக்கும் அளவிற்குத் தலையிடுவதில்லை என்கிற நிலைதான் இருக்கிறது. குறைபாடுகளையும் சுட்டிக் காட்டுவோம். மாண்புமிகு உறுப்பினர்களுடைய சீரிய யோசனைகளும் ஆலோசனைகளும் கூறி, அந்த முறையில் செயல்பட்டு வருகிறது. அதை வர்த்தகத் துறையில் இருப்பதுபோலச் செய்தால் அதனால் சில குறைகள் வரும். இப்பொழுது தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் மின் இணைப்பில் 11 சத விகிதம் வருகிறதா என்று பார்த்தால், வரவில்லை. தனியார் இணைப்புத் தரமாட்டார்கள். ஆனால் இப்பொழுது வாரியம் எடுத்துக்கொண்ட பிறகு லாப நஷ்டக் கணக்குப் பார்க்க முடியாது. வேளாண்மை வளர்ச்சிக்குத் தேவை என்று ஏற்படுகிறது என்பதைப் பார்த்து, இன்று ரூ. 114 லட்சம் தஞ்சை, திருச்சிக்காக ஒதுக்கி, தீவிர திடடத்திற்காக ஒதுக்கி, வடிமுனைக் குழாய்க் கிணறுகள் சம்பந்தமாகத் தனித் திட்டமாகப் போட்டு, அந்த முறைகளை மேற்கொண்டு, இருக்கிறார்கள். அந்த வகையில் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் பிற்பட்ட பகுதிகளையும் முற்பட்டவைகளாகக் கொண்டுவர வாரியம் முயற்சிகள் செய்து வருகிறது, நாம் யோசனைகளைச் சொல்ல வேண்டும். ஆகவே, நம்முடைய பிடிப்புத் தடைப்படும் நிலையில் இருக்கின்ற குறைபாடுகளைப் போக்கி, நிறைவுகளை உண்டாக்கும் வகையில் வழிவகைகளைச் செய்ய வேண்டும். மேலும் நாம் மின்சார வாரியத்தை வர்த்தகத் துறையில் நடத்தவில்லை. நஷ்டம் ஏற்படாத அளவுக்கு நடத்த முயற்சி செய்திருக்கிறோம். நஷ்டம் ஏற்படாமல் இருக்க எநத அளவிற்குச் செல்லலாம் என்பதைப் பாதுகாத்துக்கொள்பவர்களாக இருக்கிறோம்.

அடுத்தபடியாக, தெரு விளக்குகள் சரியாக எரிவதில்லை என்று உறுப்பினர்கள் பலர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஐந்தாறு மாதங்களுக்கு முன் நிலைமை மிகவும் கஷ்டமாக இருந்தது. அதற்குக் காரணம் பல்புகள் கிடைக்காமை. பல்புகளை கல்கத்தாவிலுள்ள ஒரு கம்பெனியிலிருந்து வரவழைத்துக் கொண்டிருந்தோம். கொஞ்ச நாட்களாக பல்புகள் சப்ளை கல்கத்தாவிலிருந்து வராமல் இருந்ததால், அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். சொருகு பல்புகளைப் போட்டதன் காரணமாக பல இடங்களில் திருட்டு வேலைகள் நடைபெற்று பல்புகள் திருடு போய்விட்டன. சொருகு பல்புகளுக்குப் பதிலாக திருகு பல்புகள் போடவேண்டுமென்ற நோக்கத்துடன் கல்கத்தா கம்பெனிக்கு ஆர்டர் கொடுத்திருந்தோம். பல்புகள் தயாரிப்பதற்கான செம்பு பித்தளை போன்ற உலோகப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து அந்தக் கம்பெனிக்கு இறக்குமதியாகிக் கொண்டிருந்தன. இறக்குமதி தடைப்பட்டதன் காரணமாக, பல்புகள் செய்யும் வேலையும் நடைப்பட்டு, நமக்கு வரவேண்டிய ஆர்டர்களும் காலாகாலத்தில் வந்து சேரவில்லை. சொருகு பல்புகளுக்குப் பதிலாக குமிழ்களைப் போடமுடிவு செய்தோம். கிட்டத்தட்ட ஒரு லட்சத்திற்கு மேலான குமிழ் விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.



நமது மின்சார வாரியம் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் மூலதனத்தில் நடைபெற்று வருகிற நிறுவனமாகும். நம்முடைய மின்சாரத் தேவைகளும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகின்றன. ஆகவே, பல்புகளை மின்சார வாரியத்தின் சார்பாக நாமே உற்பத்தி செய்து கொள்ளலாம் என்ற எண்ணம் இருக்கிறது. மின்சார வாரியத்திற்குட்பட்டோ, அரசின் அதிகாரத்திற்குட்பட்டோ பல்பு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நாமே ஏற்று நடத்தலாம் என்ற திட்டத்தை அரசு நல்ல முறையில் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. தொழில் துறையின் மூலமாக இந்தத் தொழிற்சாலையை அமைத்துக்கொள்ளலாம் என்று ஆராயப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருமானால் இப்படிப்பட்ட இடர்பாடுகள் இல்லாமல் போய்விடும். சில நகராட்சி மன்றங்கள் தாங்களே பல்புகள் வாங்கி போட்டுக்கொள்கிறோம் என்று கூறுகின்றன. திண்டுக்கல் நகராட்சியும் இது பற்றி எடுத்துக் கூறியது. சில இடங்களில் மின்சார பல்புகளை மார்க்கெட்டில் எங்களாலும் வாங்க முடியவில்லை என்று நகராட்சிகள் கூறுகின்றன. சில இடங்களில் பல்புகளை நாங்கள் வெளியே வாங்கி மின்சார வாரியத்தின் தொழிலாளர்களைக் கொண்டே போட்டுக் கொள்ளுகிறோம் என்று கூறுகிறார்கள். பொதுவாக பல்புகள் சப்ளை குறைந்ததன் காரணமாகத்தான் தெரு விளக்குகளில் சில எரிகின்றன. சில எரிவதில்லை. ஐந்தாறு எழு மாதங்களுக்கு முன்னால் இருந்த நிலைமை சமாளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் சில இடங்களில் ட்யூப் லைட்டுகள் போடலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இதற்குக் கொஞ்சம் அதிக செலவு ஆகிறது. இந்தச் செலவை நகராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை, பல்புகளாவது எரியும். இந்தக் குழாய் விளக்குகள் ட்யூப் லைட்டுகள் சில சமயங்களில் அழவே செய்யும். விட்டுவிட்டு எரியக்கூடிய நிலைமை இருக்கும். அதைத் தொட்டுத் தொட்டு வைத்தால்தான் எரியும். இங்கே இருக்கின்ற இரண்டு பல்பு கம்பெனிகளில் ஒன்று தரமுள்ளதாக இருக்கிறது. மற்றொன்று தரமில்லாமல் இருக்கிறது. நமக்குக் கிடைக்கின்ற சப்ளை போதுமான அளவில் இல்லை. நமது மாநிலத்தில் குழாய் விளக்கு தயாரிக்க யாராவது முன்வருவார்களானால், அதற்கு நல்ல கிராக்கி இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மின்சார வாரியத்தைப்பற்றி டாக்டர் ஹாண்டே, நண்பர் அ. லெ. சுப்பிரமணியம், நண்பர் ந. வீராசாமி போன்றவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

நமது மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், இந்தியாவைப் பொறுத்தவரையிலும் பரந்த அளவிலே கம்பிகளை இழுப்பதன் காரணமாக மின்சார இழப்பு ஏற்படுகிறது. கம்பிகளிலே செலுத்தும் மினசாரத்தை மறுபடியும் திரும்ப இழக்க முடியாது. வோல்டேஜை மாற்றும்பொழுதுகூட மின் இழப்பு ஏறபடும். இது பற்றி ஏற்கனவே ஒரு குழு ஆராய்ச்சி செய்து, 15 சதவீதம் வரையிலும் மின்சார இழப்பு ஏற்படலாம் என்றும், 15 சதவீதத்திற்கு அதிகமானால் அதை கீழே கொண்டுவரவேண்டும் என்றும் கூறியிருக்கிறது. மேலும் இடையில் சில இடங்களில் மின்சாரம் திருடு போகிறது. அப்படி திருட்டுத்தனமாக எடுத்துக்கொள்பவர்களைக் கண்டுபிடிப்பதில் ஆங்காங்கு இருப்பவர்கள் உதவி செய்யவேண்டும். மின்சார வாரியத்திற்குத் தெரியாமல் திருட்டுத்தனமாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் அதிகமாக இருக்கின்றன. அதைக் கண்டுபிடிப்பதற்கான வழிவகைகள் இயன்றவரையில் செய்யப்பட்டிருக்கின்றன.

மின்சார இழப்பு நமது மாநிலத்தில் மட்டும் ஏற்படவில்லை, எல்லா மாநிலங்களிலும் இந்த இழப்பு ஏற்படுகிறது. அண்டையிலுள்ள ஆந்திரப் பிரதேசத்தில் 26 சதவீதம் இழப்பு ஏற்படுகிறது. கேரளாவில் 26·2 சத

வீதமும், தமிழகத்தில் 17·4 சதவீதமும், ராஜஸ்தானத்தில் 17·37 சதவீதமும், உத்தரப் பிரதேசத்தில் 18·8 சதவீதமும் இழப்பு என்ற அளவிலே இருக்கின்றன. மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலத்தில் குறைவாகத்தான், இழப்பு ஏற்படுகிறது, ஆகவே இது சரி என்று நான் வாதிக்கவில்லை தனியார் நிறுவனமான கும்பகோணம் எலக்ட்ரிசிடி கார்ப்பரேஷனைச் சேர்ந்தவர்களும் இழப்பைப் பற்றிச் சொல்லும்போது, கிட்டத்தட்ட, 16 சதவீதத்திலிருந்து 26 சதவீதம் வரையில் இழப்பு ஏற்படுகிறது என்று குறிப்பிடுகிருர்கள். ஆகவே, 15 சதவீதம் என்பது நியாயமான இழப்பு. அதற்கு மேலே சென்ருல் அதைக் கீழே கொண்டுவர முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து, சாமான்கள் சேர்த்து வைப்பதைப்பற்றி திரு. ந. வீராசாமி அவர்களும் மற்றவர்களும் தங்களுடைய கருத்தைத் தெரிவித்தார்கள். 300 கோடி ரூபாய் மூலதனம் போட்டு நடத்துகின்ற மின்சார வாரியத்தில் கட்டுமானம் இயக்குதல், பேணுதல் இருப்புச் சரக்குகள் 1967–68-ல் 16 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்புள்ளவை. ஸ்பேர் பார்ட்ஸ் போன்ற சாமான்கள் மதிப்பு சுமார் $2\frac{1}{4}$ கோடி ரூபாய். ஸ்பேர் பார்ட்ஸ் போன்ற சாமான்கள் 10 சதவீதம் அளவுக்கு வைத்திருக்கலாம் என்பது நியதி. நம்மிடத்தில் இருக்கும் இருப்புச் சாமான்கள் அதிகம் என்று சொல்வதற்றில்லை. நான்காவது திட்டம் துவக்கப்பட்டிருக்குமாளுல் அந்தத் திட்டத்தின் அடிப்படையில் சிலபல பொருள்கள் செலவாகிபிருக்கும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் எதிர்பார்த்திருக்கிருேம், திட்டத்தின் அனுமதி வந்தவுட்னே இந்தச் சாமான்கள் செலவாகிவிடும். திட்டங்கள் காலாகாலத்தில் தொடர்ந்திருந்தால் நண்பர்கள் எடுத்துக் கூறிய குறைபாடுகள் கூட ஏற்பட்டிருக்காது. கோதையாறு, சோலையாறு திட்டத்திலே சொல்லப்படும் குறைகளும் ஏற்பட்டிருக்காது. மேலும், குந்தா போன்ற திட்டம் முடிந்தவுடன் அங்கு வேலை செய்த தொழிலாளர்களுக்கு உடனடியாக தொடர்ந்து வேலை கொடுக்க முடியவில்லை. திட்டங்கள் தொடர்ந்தால்தான் அவர்களும் வேலைவாய்ப்பைப் பெறமுடியும். சில இடங்களில் ஒரு மாதம், இரண்டு மாதங்கள் வரை சம்பளம் கொடுத்து வைத்திருக்கிருேம். அதற்கு மேலும் வைத்திருக்கக் கூடிய நிலையில்லாத காரணத்தால் அவர்கள் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, வீட்டிற்கு அனுப்பப்படுகிருர்கள். ஆகவே அவர்களுக்கு மாற்றுவேலை தரப்படவேண்டும் என்ற உத்தரவை நான் தந்திருக்கிறேன். ஆறு, ஏழு ஆண்டுகள் பணி புரிந்தவர்களை வீட்டுக்கு அனுப்புவது மனிதாபிமானத்துடன் பார்க்கும்போது சரியில்லை என்ருலும், பொருளாதார நோக்குடன் பார்க்கும்போது தவிர்க்க முடியாததாகிறது வேறு பல இடங்களில் கோதையாறு போன்ற இடங்களில்—வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் இவர்களில தகுதியுள்ளவர்களுக்கு முதற் சலுகை அளிக்க வேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. பல உறுப்பினர்கள் இது பற்றி என்னிடம் எடுத்துச் சொன்ன கருத்துக்களை எல்லாம் மின்சார வாரியத் தலைவரிடத்திலும் சொல்லியிருக்கிறேள். காலியேற்படுகிற இடங்களில் புதிதாக ஆட்களைக் கொண்டுவருவதைவிட இவர்களையே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் இந்த சுற்றறிக்கையைக் கண்டிப்பாக மீருத வண்ணம் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். 1968-69 ஆம் ஆண்டிலே கூட 32 கோடியில் புதிய திட்டங்களை மேற்கொள்ளவேண்டிவரும், இவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வழியேற்படக்கூடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றும் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ரயில் மூலம் வருகிற நிலக்கரியைவிட கப்பல் மூலம் அனுப்பப்படுகிற கரிக்கு அதிகச் செலவாகுமே என்ருர்கள். கப்பல் மூலம் அனுப்பப்படுவதற்கு அதிகச் செலவாளுலும் கூட அதை மத்திய சர்க்கார் மானியமாகக் கொடுத்துவிடுகிருர்கள். நம்மைப் பொறுத் வரையில் ரயில் மூல்ம் வந்தாலும், கப்பல் மூலம் வந்தாலும் ஒரே செலவுதான். அதனுல் நமக்கு பாதகம் ஏற்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** மத்திய சர்க்கார் இந்த இனத்தில் கொடுக்கிற மானியம் 45 லட்சத்தை வரவு கணக்கில் வைக்காமல் நஷ்டம் என்று கணக்குக் காட்டப்படுவதைத்தான் சொன்னேன். அமைச்சர் அவர்கள் லைன் லீக்கேஜ் பற்றிச் சொல்லும்போது மற்ற மாநிலங்களை எடுத்துக் காட்டிஞர்கள். விவசாயத்திற்கு அளிக்கப்படுவதைச் சொல்கிற போதும் ராஜ்யவாரியாக எடுத்துக் காட்டிஞர்கள். அலுமினியம் போன்ற தொழில்களுக்கு மிகக் குறைந்த அளவில் மின்விசை சப்ளை செய்து கொண்டிருக்கிருேமே, மற்ற ராஜ்யங்களில் எப்படி சப்ளை செய்யப்படுகிறது என்பதற்கு ராஜ்யவாரியாகக் காட்டும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த விவரம் இப்போது இல்லை. வேறு ஒரு தடவை அந்த விவரக் குறிப்புகளைச் சொல்கிறேன்.

அடுத்து ஆர். ஸி. கம்பங்களைப் பற்றிச் சொன்ஞர்கள். ஆர். ஸி. கம்பங்களை கூடுமானவரையில் நாமே தயாரித்துக்கொள்கிருேம். அதிகம் தேவைப்படுகிறபோது, நம்மிடம் இல்லாதபோது தனியாரிடம் இருந்தும் இதே விலைக்கு—அல்லது கொஞ்சம் குறைந்த விலைக்கு—தரம் இதைக் காட்டிலும் சிறிது கூடக் குறையாத நிலையில் நாம் கோரிப் பெறுகிருேம். இதுபோன்று சில சமயங்களில் வெளியில் இருந்து பெற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பொதுவாக நாமேதான் தயாரித்துக்கொள்கிருேம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எழுத்தர்களுக்கு மாநிலம் முழுவதற்கும் பொதுப்பட்டியல் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தை திரு. வீராசாமி போன்றவர்கள் தெரிவித்தார்கள். இதை மாவட்டவாரியாக வைப்பதா, மாநிலம் முழுவதற்குமாக வைப்பதாா என்பதில் சில சில சங்கடங்கள் இருக்கின்றன. அது பற்றி நல்ல முறையில் ஆய்வு செய்யப்பட்டு முடிவு ஏற்பட்ட பிறகு அது பற்றி எடுத்துச் சொல்லப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றும் திருமதி ஜானகியம்மாள் போன்றவர்கள் அங்கே ஒரு தொழிற்சங்கம் அமையும்படியாகச் செய்யவேண்டும் என்று சொன்ஞர்கள். இது அங்குள்ள தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டிய விஷயம். எந்தத் துறையாக இருந்தாலும் ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்று அமைவது நல்ல கருத்தாக இருக்க முடியும். அப்படி தொழிலாளர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும் ஒருமனப் பட்டு வந்தார்களாளுல் அதற்கு அரசும், மின்சார வாரியமும் ஆதரவாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து போனஸ் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். 1967–68 இல் 38 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1968–69-க்கு 40 லட்சம் ஒதுக்கப்படுகிறது. போனஸ் சட்ட விதிகளுக்கு உட்பட்டே வழங்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மின்சார வாரியத்தில் தமிழ் மூலமே நிர்வாகம் நடைபெற வேண்டும் என்பது பற்றியும் தெரிவிக்கப்பட்டது. இன்றைக்கே கீழ் மட்டத்தில் தமிழிலேயேதான் நிர்வாகம் நடைபெறுகிறது. மற்ற இலாக்காக்களைப் போன்றே படிப்படியாக மேல்மட்டத்திலும் தமிழில் நடைபெற நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தொழிலாளர்களுடைய குறைகளை, கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்பது பொதுவாக வற்புறுத்தப்பட்டது. இப்போதுதான் மூன்று ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மூன்று ஒப்பந்தங்களும் ஏற்படுவதற்கு தொழிலாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், மின்சாரவாரிய அதிகாரிகள் எல்லோரும் பேராதரவாக இருந்தார்கள். நல்ல முறையில் இந்த மூன்று ஒப்பநதங்களும் ஏற்பட்டிருப்பதற்கு எல்லோரையும் நாம் பாராட்ட வேண்டும். வேறு சில தகராறுகள், குறைபாடுகள் பேச்சு வார்த்தையில் இருக்கின்றன

அவைபற்றியும் ஒரு உடன்பாடு காண்பதற்கு தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்கள், மின்சார வாரிய அதிகாரிகள் பேருதவியாக இருப்பார்கள் என்றே நான் கருதுகிறேன். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகளும் எல்லாவற்றையும் குறிப்பு எடுத்து வைத்திருக்கிறார்கள். அவை முறைப்படி ஆய்வு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். விளக்கம் பெற விரும்புகிறவர்கள் நேரிடையாக மின்சார வாரிய அதிகாரிகளைச் சந்தித்தும் விளக்கம் பெறலாம். அவ்வாறு விளக்கம் பெற விரும்பினால் விளக்கம் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இந்த மின்விசைத்துறை வளர்ச்சியைப் பொறுத்தே மாநிலத்தின் எதிர்காலத் தொழில் வளம் நிற்கிறது. விளைவைப் பெருக்க எப்படி நீரைத்தேக்கி, கால்வாய்வழியே விட்டு ஆங்காங்கே நீர்வளத்தைப் பெருக்க வேண்டிய நிலையிருக்கிறதோ அப்படியே தான் தொழில் வளர்ச்சிக்கு ஆங்காங்கே மின்சார விஸ்தரிப்பு நடந்தாகவேண்டிய நிலை இருக்கிறது. இந்தக் கடமையை நன்கு உணர்ந்து உறுப்பினர்களும் மிகவும் பயன்தரத்தக்க கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மின்சார வாரியத்தின் முன்னாள் தலைவர் திரு. அப்பாதுரை அவர்கள் மிக நல்ல முறையில் தன் கடமையைச் செய்திருக்கிறார்கள். அது போன்றே இப்போதுள்ள தலைவர் அவர்களும் செம்மையான முறையில், விரைவான முறையில் தம் பணிகளை ஆற்றுவார்கள். ஆற்றவேண்டும். மின்சார வாரியத் தலைவர், செயலாளர், பொறியாளர்கள், சிப்பந்திகள் எல்லோரும் தங்கள் கடமையைச் செவ்வனே ஆற்றி வருவதற்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறபோதே, உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை நிறைவேற்ற மேலும் திறம்பட செயலாற்றவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் எல்லோரும் மிகவும் பயன்படக்கூடிய கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் நான் பதில் சொல்லவில்லை என்றாலும், எல்லாக் கருத்துக்களும் குறிப்பெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அவை நல்லமுறையில் ஆய்வுசெய்து முடிவு எடுக்க பயன்படும் என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

**Dr. H. V. HANDE:** Sir, I have got a few doubts for clarification.

With regard to giving electric connection to agricultural pump sets, my in ormation is that some years ago there was deficit of electricity. Electricity produced was less than what was required. So by and large there was a sort of convention in the Department to delay the giving of electric connection. If they hasten the giving of electric connection, they will not be able to cope with the demand. Whether there is such a convention or not, it is not our concern. Now that we have more electricity, we can issue a circular to all the departments that because we have more electricity, we can hasten the grant of electric connection to pumpsets.

Now about the transport of coal. Whether the extra expenditure of forty five laks of rupees is met by the Central Government or the State Government, it is a loss to the country. The best thing is that we should have a say in the matter. Even if the Central Government bear the cost, let us have a say and see that extra expenditure is not unnecessarily incurred. Ultimately there will be Central tax and we will have to pay.

There is a likelihood of many of the Civil Engineering Supervisors losing their job. Some assurance on the floor of this House that these supervisors will not be losing their job will be helpful.



There is no proper co-ordination between the Irrigation Department and the Electricity Department. Electricity Department wants a particular quantity of water and that is not let in. The Electricity Department complains. Better understanding could be there.

Finally, what is the policy of the Electricity Board for the next year ? Are we going to buy more power from Mysore ? My information is that they can give us power at a rate cheaper than that at which we are producing. There is surplus power in Mysore State. So we can buy powerl a litte cheaper from Mysore State. While even the nuclear power at Kalpakkam will not make the State self-sufficient, with the purchase of power from Mysore, you can make the State over-flow with power.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நிலக்கரியைக் கொண்டுவருவதிலே ஏற்படுகின்ற செலவிலே 45 லட்சம் ரூபாய் நஷ்டம் யாருக்கு ஏற்பட்டாலும் ஒன்றுதான் என்ற அளவிலே சொன்னார்கள். போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்துவதிலே குறைந்த செலவிலே இருக்குமானால் அவற்றைத்தான் பயன்படுத்துகிறோம். கப்பலையும் பயன்படுத்துகிறோம், ரெயில்வேயையும் பயன்படுத்துகிறோம். 45 லட்சம் ரூபாய் நஷ்டமாகியிருப்பதைப் பொறுத்தவரையில் நாம் ரெயில்வேகோனுக்காகக் காத்திருக்கவேண்டியிருக்குமானால் அதன்மூலம் மற்ற மற்ற இனங்களிலே ஏற்படுகின்ற செலவுகளின் காரணமாக இதைவிட அதிகமான நஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தால்தான் அந்த அடிப்படையில் அதிக நஷ்டத்தைத் தாங்காமல் இருக்கவேண்டுமென்பதற்காக இந்த நஷ்டத்தைத் தாங்கிக் கொள்கிறோம்.

அனல் மின்சாரத்திற்கும், மைசூரிலிருந்துபெறுகின்ற மின்சாரத்திற்கும் ஏற்படுகின்ற செலவு ஒன்றாக இருக்கிற காரணத்தாலே பேஸின்பிரிட்ஜிலிருந்து பெறுவதை நிறுத்திவிட்டு அதை வாங்குகிறோம். அவர்கள் தரவில்லையென்றால் பேஸின்பிரிட்ஜ் முழுவதையும் பயன்படுத்தலாம். இப்பொழுது வேறு இடத்தில் கிடைக்கிறபொழுது அதையே பயன்படுத்த முற்பட்டால் பொதுவாக நாட்டிலே உள்ள நிலக்கரி செலவாகும் என்பதால் தான் நாட்டிற்கே நிலக்கரி மிச்சப்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படக்கூடிய அளவிலே செய்கிறோம்.

நீர்ப்பாசன இலாகா, மின்சார இலாகா உறவு முறையைப்பற்றிச் சொன்னார்கள். மேட்டூர், பாபநாசம் திட்டங்களைப் பொறுத்தவரையில் இணைந்துதான் செயல்படுகின்றன. இருக்கின்ற நீரை மின்சாரம் உற்பத்தி செய்யவும் பயன்படுத்துகிறோம் நீர்ப்பாசனத்திற்காகவும் பாயவேண்டும் என்ற அடிப்படையில்தான் செய்துவருகிறோம். நீர்ப்பாசனத்திற்காக அவ்வப்பொழுது 9 மாத காலம், 7 மாத காலம் அளவுக்கு விட வேண்டியிருக்கிறது. அது ஒவ்வொரு மாதத்திலும் எவ்வளவு தண்ணீர் தேவை என்பதைப் பொறுத்து இருக்கிறது. ஒரேயடியாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகவே இருக்கின்ற நீரையெல்லாம் அவிழ்த்துவிட்டோமானால் நீர் நீர்ப்பாசனத்திற்கு இருக்காது. அனல் மின்சாரத் திட்டமாக இருந்தால் உற்பத்தி செய்துகொண்டேயிருக்கலாம். ஆகவேதான் இரண்டையும் அவ்வப்பொழுது கவனித்துவருகிறோம்.

மற்றபடி இரண்டு இலாகாக்களுக்கும் தொடர்பு இல்லாமல் இல்லை. நீர்பாசனமும், மின்சாரமும் அரசாங்க அளவிலே இரண்டு இலாக்காக்களும் ஒரே செயலாளரிடத்தில் தான் நல்ல வேலையாக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இரண்டையும் இரண்டு கண்களாகவே பாவித்து சரிசமமாக வைத்து சரிக்கட்டக்கூடிய நிலைமை இருக்கிறது. கீழ் அளவிலே அதிகாரிகள் மட்டத்திலே இலாக்காகளில் கோஆர்டினேஷன் இல்லாமல் இருப்பதாலும் அரசாங்க அளவிலே ஒருவர்தான் கவனிக்கிறார். அமைச்சர்கள் இரண்டு பேர்களாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் கலந்துபேசிக்கொள்கின்ற வாய்ப்புகள் இருப்பதாலும் அதிலும் ஒருவருக்கொருவர் பக்கத்தி

லேயே இருப்பதாலும் இன்னும் அதிகமான உறவை வைத்துக்கொள்ள கூடிய வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே செயலாளர் ஒருவராக இருப்பதால் என்ன என்ன செய்யவேண்டுமோ இவற்றையெல்லாம் அவ்வப்பொழுது செய்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** இந்த அளவோடு பேரவையின் நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் இப்பேரவையை ஒத்திவைக்கிறேன்.

பின்னர் பேரவை மீண்டும் கூடும் நாள்குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## 12 பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

*Nil.*

## B. Reports, Notifications and other papers.

73. List of Unstarred Questions and Answers from 85 to 145.





## இணைப்பு

15-ம் பக்கத்திலுள் 214.ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

(அ) சென்னை மாநகராட்சியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாநகரச் சாலைகளைப் பேணி வருவதற்காக கடந்த மூன்றுண்டுகளில் ஏற்பட்ட செலவு—

| | ரூபாய் |
|---|---|
| 1964-65 .. .. | 4,08,847 |
| 1964-66 .. .. .. | 2,40,685 |
| 1964-67 .. .. .. | 3,61,479 |

(இ) மாநகராட்சியிடமிருந்து பேணுதற்காக மேற்கொள்ளப்பட்ட சாலைகள் பற்றிய விவரங்கள்—

| தொடர் எண்ணும் சாலையின் பெயரும். (1) | (மைல் கணக்கில்) (2) | | |
|---|---|---|---|
| | மை. | பர். | அ. |
| 1. சென்னை மாநகர எல்லைகளுக்குள் புது ஆவடி சாலை கீழ்ப்பாக்கம் நீர்ப்பணி நிலையம் முதல் நகர் எல்லை வரை, சென்னை—எண்ணூர் சாலை. | 1 | 7 | 127 |
| 2. சென்னை மாநகர எல்லைகளுக்குள் அடியிற் கண்ட வழித்தடங்கள் இதில் அடங்கும்— | | | |
| **தலைமை வழித்தடங்கள்—** | | | |
| (1) வடக்கு கடற்கரைச் சாலை கஸ்டம் ஹவுஸ் முதல் வடக்கு ரயில்வே டெர்மினஸ் சாலை வரையில். | 0 | 5 | 155 |
| (2) வடக்கு ரயில்வே டெர்மினஸ் சாலை—வடக்கு பீச் சாலை முதல் மன்னார்சாமி கோயில் தெரு வரையில். | 0 | 3 | 20 |
| (3) மன்னார்சாமி கோயில் தெரு—வடக்கு ரயில்வே டெர்மினஸ் சாலை முதல் கல்மண்டபம் சாலை வரை. (4) சூர்யநாராயண செட்டித் தெரு கல்மண்டபம் சாலை முதல் நகர எல்லை வரை. | 2 | 4 | 380 |
| **துணை வழித்தடங்கள்.—** | | | |
| (5) கிழக்கு மாட மாதா கோயில் தெரு—வடக்கு ரயில்வே டெர்மினஸ் சாலை முதல் தெற்கு மாட மாதா கோயில் தெரு வரை. | 0 | 0 | 610 |
| (6) தெற்கு மாட மாதா கோயில் தெரு—கிழக்கு மாட மாதா கோயில் தெரு முதல் மேற்கு மாட மாதா கோயில் தெரு வரையில். | 0 | 0 | 540 |
| (7) பிரின்டன் காட்டன் பிரஸ் சாலை—மேற்கு மாட மாதா கோயில் தெரு முதல் மன்னார்சாமி கோயில் தெரு வரை. | 0 | 1 | 210 |
| **தேசிய நெடுஞ்சாலை நகர் இணைப்பு பகுதிகள்.** | | | |
| 3. சென்னை மாநகர எல்லைகளுக்குள் மவுண்ட் ரோடு (சென்னை-திருச்சி-திண்டுக்கல்-சாலை) தேசீய நெடுஞ்சாலை எண் 15.) | 7 | 4 | 0 |
| 4. சென்னை மாநகர எல்லைகளுக்குள் சென்னை—பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை (சென்னை—பெங்களூர்சாலை) தேசீய நெடுஞ்சாலை எண் 4.) | 5 | 4 | 0 |

| தொடர் எண்ணும் சாலையின் பெயரும். (1) | (மைல் கணக்கில்) (2) | | |
|---|---|---|---|
| | மை. | பர். | அ. |
| **தேசிய நெடுஞ்சாலைநகர் இணைப்பு பகுதிகள்—தொடர்ச்சி.** | | | |
| 5. சென்னை மாநகர எல்லைகளுக்குள் பெரிய வடக்கு டிரங்குசாலை (தேசிய நெடுஞ்சாலை எண் 5.) | 4 | 5 | 0 |

(*a*) Expenditure incurred during the last three years on the maintenance of the city roads taken over fromMadras Corporation—

| | RS. |
|---|---|
| 1964–65 .. .. .. | 4,08,847 |
| 1965–66 .. .. .. | 2,40,685 |
| 1966–67 .. .. .. | 3,61,479 |

(*b*) Details of the roads taken over from Corporation for maintenance—

| *Serial number and name of road.* (1) | *Mileage.* (2) | | |
|---|---|---|---|
| | M. | F. | FT. |
| 1. New Avadi Road from Kilpauk Water Works to City limits (within Madras City limits). | 1 | 7 | 127 |
| 2. Madras-Ennore Road within Madras City limits constituting the following routes :— | | | |
| *Main Routes—* | | | |
| (i) North Beach Road from Custom House to North Railway Terminus Road. | 0 | 5 | 155 |
| (ii) North Railway Terminus Road from North Beach Road to Mannarswamy Koil Street. | 0 | 3 | 20 |
| (iii) Mannarswamy Koil Street from North Railway Terminus Road to Kalmandapam Road. (iv) Suryanarayana Chetty Street from Kalmandapam Road to City limits. | 2 | 4 | 380 |
| *Sub-Routes—* | | | |
| (v) East Mada Church Street from North Railway Terminus Road to South Mada Church Street. | 0 | 0 | 610 |
| (vi South Mada Church Street from East Mada Church Street to West Mada Church Street. | 0 | 0 | 540 |
| (vii) Brunton Cotton Press road from West Mada Church Street to Mannarswamy Koil Street. | 0 | 1 | 210 |
| *National Highways Urban Links—* | | | |
| 3. Mount Road Madras Tiruchy-Dindigul Road, (N.H. 45) within Madras City limits. | 7 | 4 | 0 |
| 4. Madras-Poonamallee High Road (Madras-Bangalore Road (N.H. 4) within Madras City limits. | 5 | 4 | 0 |
| 5. Great Northern Trunk Road (N.H. 5) within Madras City limits. | 4 | 5 | 0 |



## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., ' Committee(s) ' ' Council(s) ', ' Corporation(s) ', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Ann. | ... | Announcement. |
| B.O.H. | ... | Business of the House. |
| C.A. | ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. St. | ... | Calling Attention Statement. |
| Consid. | ... | Consideration stage of a Bill. This stage includes : (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. |

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res. | ... | Resolution. |
| St. | ... | Statement. |

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

